The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 JAN 191[illegible]

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:17-14.)

புத்தகம். 12 } ஜனவரி 1914. { இலக்கம். 1

## NEW YEAR.
## வருஷப்பிறப்பு.

---

இதோ 1913-ம் வருஷம் பறந்துவிட்டது. 1914-ம் வருஷம் பிறந்துவிட்டது. பழய வருஷம் போக புதுவருஷம் வந்துவிட்டது. புது வருஷக் கொண்டாட்டங்கள், ஆரவாரங்கள், சிறப்புகள் எங்கும் நடைபெறுகின்றன. ஆயினும், இவை யெல்லாம் புதியவை யல்ல. இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் எத்தனை புது வருஷங்களைக் கொண்டாடி யிருப்போம்! நமக்கு புத்தி விவரம் தெரிந்தபிறகு, அதாவது நாம் காலத்தின் அருமையை அறிந்த பிறபாடு, நமக்குக் காலம் என்னத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொண்டபின் எத்தனை புது வருஷங்கள் போயின! அத்தனை வருஷங்களையும் எவ்வாறு போக்கினோம்? அவைகளை நாம் நமது ஆத்தும இலாபகரத்துடன் செலவழித்தோமா? அல்லது அவைகள் வீணுக்கு இறைத்த நீர்போலாயினவா?

புதுவருஷக் கொண்டாட்ட ஆரவாரச் சிறப்புகளின் மத்தியில் விவேகசாலிகள் இந்தக் கேள்விகளை வெகு நுணுநுணுக்கமாய் விசாரித்து, இதோ தயாபரக் கடவுள் தங்கள் மீது இரக்கம் வைத்துத் தந்தருளியிருக்கிற புது வருஷத்தை எவ்வாறு செலவழிக்கவேண்டுமென்று தங்களுக்குத் தாங்களே தீர்மானித்துக்கொள்வார்கள். நமது நண்பர்களெல்லோரும் சென்ற மாத சஞ்சிகையில் பிரசுரித்துள்ள "வருஷக் கடைசி" என்ற வியாசத்தை இன்னொருமுறை வாசித்து, அதில் அடங்கியுள்ள சிந்தனைகளை மறுபடியும் சிந்தித்து, நல்ல பிரதிக்கினைகள் செய்துகொண்டு, தக்க பிரகாரமாய் இந்த 1914௵-த்தை ஆரம்பிப்பார்களாக. "துவக்கம் எப்படியோ அப்படியே முடிவும்" என்பதோர் முதுமொழி. "நன்றாய் ஆரம்பிக்கப்பட்ட காரியம் அரைவாசி சித்தி" என்றோர் ஆங்கிலப் பழமொழியுண்டு. ஆகவே, நாமெல்லோரும் ஞான முயற்சியுடன் இவ்வருஷத்தை யாரம்பித்து சர்வேசுரனுக்கு உகந்தவர்களாய் நடக்கப் பிரயாசைப்படுவோமாக. சர்வேசுரனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது தந்தையாகிய அவருடைய மோட்ச ராச்சியத்துக்குச் சுதந்தரமுடையவர்களாயிருக்கிறோம் என்பதை எப்போ

161414



தும் ஏர்பாகத்தி லிருத்தி, இச் சுந்தரத்தை இழந்துபோகாதபடி எப்போதும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும்.

ஆம், நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகள்; சர்வேசுரன் நமது தந்தை. நாம் பிரதிதினமும் சொல்லுகிற பரமண்டல மந்திரம் இதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. "பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே!" என்று நாம் அன்போடு அழைக்கிறோமல்லவா? கடவுள் எப்படி நமக்குத் தகப்பனாகிறார் என்றால், ஞானஸ்நானத்தால் அவர் நம்மைத் தமது சுவீகாரப் பிள்ளைகளாக எடுத்துக்கொள்ளுகிறாரானதால், ஞானஸ்நானத்துக்கு முன், அஞ்ஞானிகளும், பசாசின் மக்களுமாயிருந்த நாம் அதற்குப்பின் சர்வேசுரனுடைய பிள்ளைகளாகிறோம். "சர்வேசுரனுடைய பிள்ளைகள்" என்கிற இந்த மகிமையுள்ள பட்டம் நமக்கு வீண் பெருமைக்கும் சலாக்கியத்துக்கும் அல்ல, மெய்யாகவே சர்வேசுரனுடைய பிள்ளைகளைப்போல புண்ணியமும், சீலமும், புனிதமுமான சீவியஞ் சீவிப்பதற்காகவே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த சுவிசேஷ முதற்கொண்டு எல்லா வேதப் புத்தகங்களும், படிப்பினைகளும், பிரசங்கங்களும் இதையே போதிக்கின்றன.

"சர்வேசுரனுடைய பிள்ளைகள்" என்பது எதில் அடங்கி யிருக்கிறதென்றால்: முழு இருதயத்தோடும், முழு ஆத்துமத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் சர்வேசுரனைச் சிநேகிப்பதிலேயே. நமது சொந்த மனதை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லா முன்னடிமை, எல்லா முன்னுடைமை, எல்லா முன்னுடைய செயலே என்று எண்ணி, "ஆம், ஆம், இல்லை, இல்லை" என்று சொல்வதேயன்றி வேறொன்றுஞ் சொல்லவும் செய்யவுங் கடவோமல்ல. மேலும் புறத்தியார் நமக்கு ஏதேது செய்யவேண்டும், ஏதேது செய்யப்படாதென்று நாம் விரும்புகிறோமோ, அவ்வண்ணமே நாமும் அவர்கள்மட்டில் நடந்துகொள்ளவேண்டும். நல்லோர்பேரிலும் தீயோர்பேரிலும் சூரியனை சமரசமாய்ப் பிரகாசிக்கச் செய்கிற சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்கு யோக்கியமானவிதமாய், நம்மைப் பகைத்து, விரோதித்து, நிந்திக்கிறவர்களாகிய நமது சத்துராதிகளையும் நாம் ஸ்நேகித்து, அவர்களுடைய தின்மைக்குப் பதில் நன்மை செய்தல் வேண்டும். அவர்கள் மனந் திரும்பும்படி அவர்களுக்காக சர்வேசுரனைப் பார்த்து மன்றாடவும் வேண்டும்.

இவ்வண்ணமாய், பத்துக் கற்பனைகள் போதிக்கிறபடி, எல்லாத்தையும் விட சர்வேசுரனைச் சிநேகித்து, நம்மைப்போல் நம் புறத்தியானையுஞ் சிநேகித்து, நமது சக்திக்குத் தக்க மற்ற புண்ணியங்களையுஞ் செய்து "சர்வேசுரனுடைய பிள்ளைகள்" என்ற பேருக்குப் பங்கம் வராமற்படி நடந்துகொள்ள வேண்டும். இப்படிக்கின்றி கண்டது காட்சி கொண்டது கோலமென்கிறதுபோல, சரீர ஆசாபாசங்கள் அலைக்கிறபடி யெல்லாந் திரிந்து, ஆத்தும காரியத்தை அசட்டை செய்து, ஆண்டவர் அருமையாய்க் கொடுக்கிற ஒவ்வொரு வருஷத்தையும், வீணாக்கிவிடுவோமானால் கடைசியில் நம் கதி யென்னவாகும்? அதோகதிதான் "நற் கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிற் போடப்படும்" என்றபடி என்றும் அவியாத நரகாக்கினியில் தள்ளப்படுவோ மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, நமது "நல்ல ஆயன்" சந்தாதார நண்பர்களில் ஒருவரும் இப்பேர்க்கொத்த நிர்ப்பாக்கியத்துக்கு ஆளாகாதபடி அவர்கள் எல்லோரும் என்றும் அழியா நித்திய மோட்சானந்த பாக்கியத்துக்குப் பங்காளிகளாகும் வண்ணம் தக்க பிரகாரமாய் இந்த புது வருஷத்தைப் பிரயோகிப்பார்களெனக் கோருகிறோம்.

"பரலோகத்தில் சர்வேசுரனுக்கு மகிமையும் பூலோகத்தில் சுத்த மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக" எனச் சம்மனசுக்கள் நமது திவ்விய கர்த்தரின் ஜனனமகோற்சவ தினத்தில் பாடி அகமகிழ்ந்ததுபோல, நாமும் நன்மனதுடையவர்களாய்ச் சமாதானத்தை நாடவேண்டும். இந்தப் புது வருஷத்தில் நமது உற்றார் பெற்றார் உறவினர் நேசரையுமே யன்றி, நம்முடன் மனத்தாங்கல் கொண்டிருப்பவர்களையுஞ் சந்தித்து, அவர்களுடன் சமாதானங் கோரவேண்டும். இப்படிச் செய்தால் தேவதூதர் கூறியபடி நம்மிடத்தில் சமாதானமும் தேவாசீர்வாதமும் முண்டாகி, இந்த வருஷமுழுதும் நமக்குச் சகல விதத்திலும் எல்லாம் அநுகூலமாகவே முடியும். உலகத்துக்கு சமாதானத்தைக் கொண்டுவந்து பிறந்த தேவசுதனின் திருவருளால் உகை மெங்கும் சமாதான முண்டாவதாக!

நமது "நல்ல ஆயன்" கையொப்பநேயர்களுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் நமது அன்பார்ந்த புது வருஷ சுப சோபன மங்களங் கூறுகிறோம். நமது நண்பர்கள் அனைவரும் சர்வேசுரனுக்குந் திருச்சபைக்கும் உகந்த பிள்ளைகளாய் பல்லாண்டு வாழவேண்டிய தேவானுக்கிரகத்தை அவர்களுக்கு நல்லஆயன் அருளுவாராக! இவர்களுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காக வழக்கம்போல் வருஷப்பிறப்பன்று நாம் செய்யும் பூசையை, சகல வரப்பிரசாதங்களின் ஊறணியும், தாரித்திரருடைய பிதாவும், கொடைகளைக் கொடுக்கிறவரும், இருதயங்களின் பிரகாசமுமாகிய திவ்விய இஸ்பிரீத்துசாந்து வாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்போம்.

கடைசியாய், நமது "நல்ல ஆயன்" பத்திரிகையை இதுவரையிற் சன்மானித்து வந்த கையொப்ப நேயர்களுக்கும், அதன் அபிவிருத்தியைக் கோரி சிறிதேனும் திரவியோபகாரஞ் செய்த நன்கொடையாளர்களுக்கும், சந்தாதாரர்களைச் சேர்த்துத் தந்த சகாய புருஷர்களுக்கும், அப்போதைக்கப்போது விஷயதானஞ் செய்த தருமோத்தமர்களுக்கும், இன்னும் வேறு விதமாயும் எமது பத்திராதிபர் தொழிலை நிறைவேற்றுவதில் இன்றியமையாத உதவி செய்த பரோபகாரிகளுக்கும் நமது உள்ளப் பூர்வமாய் நன்றியறிந்த வந்தனம் அளிக்கின்றோம். இத்தகையோர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உதவியை நிறுத்திவிடாமல் இப்புது வருஷத்திலும் புரிந்து, எம்மையும் எமது அலுவலையும் சன்மானிப்பார்களெனக் கோருகிறோம். யாதோர் திரவிய லாபத்தைக் கருதாது கிறிஸ்துவர்களின் ஆத்தும நன்மை யொன்றையே பிரதானமாகக் கொண்டு பரோபகாரமாய் நடத்தப்பட்டுவரும் இப்பத்திரிகைக்கு பலவாற்றானும் உதவிபுரிவது உத்தமகாரியமென்பதுசொல்லாமலே விளங்கும். இதை விருத்திபண்ணவேணுமென்ற நமது விருப்பத்தை நிறைவேற்றும் விஷயமாய் இப்புது வருஷத்திலாகிலும் நண்பர்கள் முயற்சி செய்து நன்மை செய்யப் பார்ப்பார்களெனக்கோருகிறோம். எல்லாம் வல்ல நல்ல தேவன் திருவருள் கடாட்சிப்பாராக!.



## VISUVASANATHAN.

## விசுவாச நாதன்.

(ஓர் நவகதை.)

விசுவாசம் நீ எங்கே போகிறாய்?

"காகிதத்தை தபாலில் போட்டுவிட்டு வரப்போகிறேன்?

"என்ன காகிதம்?"

"வேலைக்காக வெழுதிய (Application) மனுக்காகிதம்"

"இப்போதா கொண்டுபோகிறது? இன்று ஞாயிற்றுக்கிழமை யல்லவா? இப்போதுதான் 5 மணி; இராகுகாலமாச்சே. இன்னும் ஒரு மணி நேரஞ் சென்றபின் கொண்டுபோ. அல்லது நாளைக் காலையில் கருக்கலோடு போடலாம்."

"ஏன் சும்மா இராகுகாலம், கேதுகாலம் என்று மோசம் போகிறீர்கள். உங்களுக்கு இன்னும் அந்த அஞ்ஞானம் போகவில்லை. நாம் கிறிஸ்துவர்களா யிருந்தும் அந்த சாஸ்திரங்களெல்லாம் பார்க்கலாமா?"

"போதும் போதும் உன் பிரசங்கம். உன் பாட்டைப் போய்ப் பார். பெற்றவனுக்குப் புத்தி சொல்லப் போகிறாயோ? நீதான் அதிகப் பிரசங்கி யாச்சுதே. உன் உபதேசங்களை யெல்லாம் அடக்கிவைத்துக்கொள். இராகுகாலம் என்று உள்ளதைச்சொன்னால் நீ என்னவோ வேதம் ஓத வந்துவிட்டாய். நமது வேதத்திற்கு விரோதமாய் யார்செய்தார்கள்? இது நமது சாதியாசாரமாயிற்றே. நல்ல காலம் பார்ப்பதில் என்ன தோஷம்?"

"சாதியாசாரம் என்று இந்துக்கள் செய்வதையெல்லாம் முன்பின் பாராது நாமும் அநுசரித்தால் சீக்கிரம் ஈடேறிப்போகலாம். நான் காகிதத்தை யிப்போதேதான் கொண்டுபோகிறேன்."

OL6m211,N02NA

"அடேபாவி! கொண்டுபோகவேண்டாம்!. உன்னுடைய பிடிவாதத்தினாலேதான் குடி நாசமாய்ப் போகிறது. முன்னே செய்ததெல்லா மப்படித்தான். சங்கரய்யரிடம் வேலை கேட்கப் போனபோதும் இப்படி முரட்டுத்தனமாய், சொல்லுகிற பேச்சைக் கேளாதபோனதினாலே தானே, எல்லாம் விடிஞ்சுபோச்சுது. இன்றைக்கு வெள்ளிக்கிழமை; 12 நாழிகை வாரசூலை; மேற்கே போகக்கூடாது; மேற்கே யிருக்கும் அய்யரிடம் செல்லாதே என்று சொன்னேன். எல்லாம் கழுதைக் குபதேசஞ் சொன்னாற்போ லாயிற்று. ஏதோ ஒரு பெரிய கம்பனியில் வேலையிருக்கிறதென்று சொன்னபொழுது இன்று ஜூலை 25, கரிநாள், நாளைக் கெழுது அப்பிளிக்கேஷன் என்று சொல்லியும் சட்டை பண்ணவில்லை. வந்த லாபமென்ன? வைத்தியநாதய்யர் நமது நிலைமையை நன்குணர்ந்து, நீ வேலை கிடையாது அலைகிறதைக் கண்டு பரிதாபப்பட்டு தாயித்து ஒன்று கொடுத்து, கட்டிக்கொள்; க்ஷேமம் வரும் என்று சொன்னார். நீயோ அதிகப் படித்தவன். அவரைப் பெரியவரென்று மதியாது, கொண்டுவந்த தாயித்தை நஞ்செனப் பாவித்துத் தொடவேமாட்டேனென்றாய். அதுதான் மூதேவி யுன்னை அலைக்கழிக்கிறது. அதுதான் உன் வினையும் விதியும்."

"சும்மாவிருங்கள்; உங்களுக்கு எப்போதும் விதியும் வினையுந்தான். விசுவாசிகள் என்பது நமக்குப் பேர். அப்படியானால் சர்வேசுரன்மீது விசுவாசம் வையாது அவர் படைத்த சிருஷ்டிப் பொருட்களின்மேலா வைக்கிறது? அவரை நம்பினால் நம்மைக் கைவிடார். ஏதோ அற்ப சொற்ப துன்ப துயரங்களைக் கொடுக்கிறார். ஆனால் ஒருநாள் தக்க சம்பாவனை தருவார். நாம் அவர் ஒருவரையே தேடி நின்றால் எல்லாம் நமக்குக் கைகூடும். "நீ என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும்" என்று விளம்பினாரல்லவா? சேசுவின் திரு இருதயத்தின்மேல் முழு நம்பிக்கை வைத்து இந்தக் கடிதத்தை இப்போதுதான் கொண்டுபோடுவேன். வருகிறது வரட்டும்" என்று சொல்லிக்கொண்டே சட்டென வீட்டை விட்டுக் கிளம்பினான்.

"ஆச்சா, போச்சா, அப்படிச் செய்வாயா?" எனக் கோபங்கொண்டு வாய்விட்டு அலறினார். இப்படிச் செய்தவர் வெளியே போனவனின் தகப்பனார். அவர் பெயர் ரத்தினசாமிப் பிள்ளை. ஜனன நாடு புதுச்சேரி. நற்குலத்தில் பிறந்து வளர்ந்தவர். அதிகப் படிப்பில்லாததால் உத்தியோகத்தி லமரவில்லை. இருந்த திரவியத்தைக் கொண்டு நிலக்கடலை வியாபாரஞ் செய்துவந்தார். லாபம் எதேஷ்டமா யிருந்தது. இக்காலத்தில் உத்தம குடும்பத்தி லுதித்து நற்குணம் வாய்ந்த நட்சத்திரம்மாள் எனும் மாதைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டார். அவர்களுக்கு உதித்தது ஒரேயொரு ஆண் குழந்தை; அவன் பெயர் விசுவாசநாதன். அவனுக்குப் பன்னிரண்டு வயது நடக்குங்கால், படிப்பின்பொருட்டுப் பேர்போன திருச்சினாப்பள்ளி சூசையப்பர் கலாசாலைக்கு அனுப்பிவைத்தார். வியாபாரமோ நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. வரும்படியு மதிகம். சந்தோஷமெனுஞ் சாகரத்தி லமிழ்ந்தியிருந்தனர். 'சுக துக்கம் சுழல்சக்கரம்': இன்பமுந் துன்பமும் சகடக்கால்போல வருவது சகஜம். நிறை செல்வம் நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்போலிருக்கிறதல்லவா? ஆகையால் திரவியங்கள் குறையவும், துன்பங்கள் நிறையவும் ஆரம்பித்தன. கொஞ்சங் கொஞ்சமாய் போட்டி வர்த்தகர்கள் தழைக்க வியாபாரங் குன்றினது. பெரும் வாரியாய் விதைத்திருந்த வெள்ளாமை மழையின்றி பட்டுப் பாழாய்ப் போயிற்று. "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்றாற்போல் தனது பணமிருந்த "பாங்கு"ம் முறிந்து சிதறித் தவறிப்போயிற்று. இருந்த பணமெல்லாம் பறந்தன. காணி பூமிகளெல்லாங் கையை விட்டு விலகின. கடைசியாக கொடுக்கல் வாங்கல் கணக்கெல்லா முடித்தானபின் அவர் கையில் பணமில்லை. ஆனால் கடன்காரராகவில்லை மூன்று சிறுவீடுகள் மிகுதியாயின. சொந்த ஊரில் இனிமேலாக இருக்க மனங் கொள்ளாது, மூன்று வீட்டையும் மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் 15 ரூபாய்க்குக் குடிக்கூலிக்குக் கொடுத்துவிட்டுத் திருச்சினாப்பள்ளிக்குத் தன் குடும்பத்துடன் வந்துவிட்டனர். வியாகுலமாதா கோவிலுக்கு அருகாமையில், ஓர் சிறு இல்லம் அமர்த்திக் குடி யிருந்தார். வருகிற சொற்ப பணத்தைக் கொண்டு தான், தனது மனைவி, மனைவியின் தமயன் மகள் பாப்பாத்தியம்மாள், மகன் ஆகிய நால்வருங் காலங் கழித்து வந்தனர்.

அவரது மனைவி ஓர் பதிவிரதை; நற்குணசீலி; பிறர்மட்டில் இரங்கு முபகாரி; வருந்துவோர்க்கு ஆறுதலளிக்கும் தயாபரி; தாம் தனவந்தர்களா யிருந்தபோது கூட செருக்கடை



யாது சீராய் நடந்து வந்தவள். துன்ப மேலிட்ட காலத்தும் மனங் குலையாது நடந்து வருகிறாள். எல்லாவற்றிற்கும் ஈசனையே நம்பினவளாய் நிற்கிறாள். "மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம்போல் சாந்தனையும் சஞ்சலமேதான்" என்பதை நன்குணர்வாள். இவளுக்கோர் சகோதரர் இருந்தார். அவர் மணந்தபின் அவருக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதனுடைய நிர்ப்பாக்கியம், அது பிறந்த மூன்றாம் நாள் தன் தரிய தாயை யிழக்கலாயிற்று. அன்னையற்ற பிள்ளையை பிதா நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சீராட்டி வளர்த்து வந்தார். அதற்கு நான்கு வயது நடக்குங்கால் அவருக்கு அகோர வியாதியுண்டானது. எவ்வித பிரயத்தனமும் பரிகாரமுஞ் செய்துங் குணப்படவில்லை. வியாதியும் வரவர மேலிட்டது. தனது முடிவுகாலங் கிட்டிற்றென் றெண்ணி, அவர் தன் தங்கையை யழைத்துச் சொல்வார்: "தங்காய்! என்னை யாண்டவர் அழைக்கச் சித்தமா யிருக்கிறாப்போ லிருக்கிறது; நான் இவ்வுலகை விட்டு அகன்றுபோகிறேன். எனக் குன்னையன்றி வேறொருவருமில்லை. என்னேக குமாரத்தியை நீதான் வைத்துக் காப்பாற்றவேண்டும். உனக்கு ஒரு மகனிருக்கிறான். என் பிள்ளையை புறத்தியில் விடாது, ஒன்றுக்குள் ஒன்றாயிருக்கச் செய்துகொள். உன்னைச் சர்வேஸ்வரன் ஆசீர்வதிப்பாராக." என்று தனது மகளைக் கையால் பிடித்து தங்கையிடம் ஒப்புவித்தார். அவள் பிள்ளையை யணைத்து கண்ணீர் ததும்ப உச்சி முகந்து முத்தமிட்டாள்.. அவருக்கோ வியாதி மும்முரமாய் விட்டது. கடைசித் தேவத்திரவியானுமானங்களைப் பெற்று, "சேசு மரியே சூசை" யெனுஞ் சுகிர்த நாமங்களை யுச்சரித்த வண்ணமே உயிர் துறந்தார்.

அவர் மரித்தது முதல் அவரது குமாரத்தியாகிய பாப்பாத்தி யென்றழைக்கப்படும் மரிய சூசையம்மாள் நட்சத்திரம்மாளது குமாரியானாள். அவளைப் பெற்ற பிள்ளையிலும் பெரும் பிள்ளையாகப் பாவித்து வந்தார்கள். விசுவாசநாதன் தனக்கோர் சகோதரி கிடைத்தாளென அகமகிழ்ந்தான். இருவரும் அண்ணனுந் தங்கையும் போல் பேசி, விளையாடி காலத்தைக் கழிப்பார்கள். ஒருவரை யொருவர் சகோதர வாஞ்சையோடு நேசித்து வந்தனர். பாப்பாத்திக்கு எட்டு வயது நடக்கும்போது, தாய் அவளைக் கன்னியர் மடத்துக்கனுப்பிவைத்தாள். அங்கே அவள் கல்வியை மிகச் சுறுசுறுப்புடன் கற்றுக்கொள்வதோடு அடக்க ஒடுக்கம் மேரை மரியாதை முதலிய நல்லொழுக்கத்தையும் படித்துவந்தாள். கன்னியர்களுக்கு அவள்மீது மிக்கப் பிரீதி. செல்வம் செழித்தோங்கியகால் பிள்ளையின் செலவுக்கு ஏராளமா யளித்துவந்தார்கள். துன்புற்று திருச்சினாப்பள்ளிக்கு வருகையில், மடத்தில் விட்டுவர ஐவேஜு அற்றுப்போக, அவளையுங் கூட அழைத்து வந்துவிட்டனர். அவளைப் படிக்கவைக்க வகையில்லை. 'தந்தைமகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச் செயல்' என்பதற்கொப்ப மகனைமட்டும், வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி பி. ஏ. வரையில் கற்கச்செய்ய வேண்டுமென்பது தந்தையின் எண்ணம். அவ்வாறே யவனைக் காலேஜுக் கனுப்பினார். சிறு பெண் படிப்பிலாசை மிகுந்து மடமே முயன்றுங் கூடவில்லை. நட்சத்திரம்மாள் துயருற்றாள்; மனம் நொந்தாள். ஒருநாள் பிள்ளையை மடத்துக் கிட்டுக்கொண்டுபோய் முதலாளி யம்மாளிடம் அதன் சரிதையை ஆதியோடந்தமாய்ச் சொல்லி, சிறுமியை மடத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். பெண்ணென்றால் பேயுமிரங்குமல்லோ? அகத்தி னழகு முகத்தில் தோன்றுமே! ஆகச்சே பாப்பாத்தி யம்மாளின் வதனத்தில் விளங்கிய சோதியால் அவளின் நற்குணங்களைக் கண்ணுற்று, மடத்தில் வைத்துக்கொள்ள சம்மதித்தாள் முதலாளியம்மாள். பாப்பாத்தியம்மாள் சங்கதியைக் கேட்கவும் ஆனந்தங் கொண்டாளெனச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே அவள் மடத்திற்கு போனாள். செவ்வனே நாளுக்குநாள் படிப்பில் தேர்ச்சியும், பக்தியில் முதிர்ச்சியும் அடைந்துவந்தாள். லீவ் நாட்களில் வீடு வந்திருந்து போவது வழக்கம். அப்போது விசுவாசநாதனும் வீடு வருவான். இருவரும் மிக்கக் களிப்புடன் ஆடிப் பாடி விளையாடிக் குதூகல மடைவார்கள். விசுவாசநாதன் கண்ணுங் கருத்துமாய் ஊக்கமுடனுழைத்துப் படிப்படியாய் மெட்றிக்குலேஷன், எப். ஏ. பரிட்சை கொடுத்து பி. ஏ. பரிட்சையிலும் அரங்கேறிவிட்டான். முயற்சி திருவினையாக்குமென்பது பொய்யா? இது சங்கதி கேட்டு மனமகிழ்ந்தனர் பெற்றோர். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோ னெனக் கேட்ட தாய்' என்பதற்கு நட்சத்திரம்மாள் சான்றானாள்.

"உத்தியோகம் புருஷலக்ஷணம்" ஆதலால் இனிமேலாகப் பிதாவை வருத்துவது நன்றன்று என்றெண்ணி, எதாகிலும் உத்தியோகத்தில் அமருவதே யுத்தம மெனக்கொண்டு அதைத் தேடியலையத் தலைப்பட்டான் விசுவாசநாதன். எவ்வாறு முயன்றுங் கைகூட வில்லை. எம்மட்டு பிரயத்தனப்பட்டா னென்பது வெளிப்படை. கடைசியாய் ஓர் உத்தியோகத்திற்காக அப்பிளிக்கேஷன் அனுப்பின சம்பந்தமாய்த்தான் தகப்பனுக்கும் மகனுக்கும் நடந்தது மேற்கண்ட சம்பாஷணை. பிதாவோ, இராகுகாலம் பாராது செய்தது தப்பெனக்கூறிச் சபித்துவிட்டார் மகனை. நற்காலம் பிறக்குமென அவர் கனவிலுங் கொள்ளவில்லை. மகனோ, "கருப் பைக்குள் முட்டைக்குங் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கும்" மெய்யனை நம்பியிருந்தான். கடிதம்போய் ஒரு மாதமாயிற்று. ஒருநாள் தபால்காரன், பெரிய உரையிலிட்ட ஓர் காகிதம் கொண்டுவந்து விசுவாசநாதனிடம் அளித்தான். அப்பிளிக்கேஷனுக்கு விடை யதுவெனக் கண்டுகொண்டான். சமீபத்திலிருந்த தகப்பனும் அறிந்துகொண்டார். பார்த்தவுடனே அவனைப் பழித்து "உனக்கேது உத்தியோகம்" என்று நிந்தித்த வண்ணம் அதையே நோக்கியிருந்தார். மகன் விசுவாசத்துடன் உறையைப் பிரித்து, லிகிதத்தை வாசித்தான். இலவுகாத்த கிளிபோலானான்; மனஞ் சோர்ந்தான்; கவலைகொண்டான். தகப்பனு ரிதை யுணர்ந்து பதில் எவ்வாறிருக்குமென யூகித்துக்கொண்டார். ஆயினும் பையனை வினவினார். வேறொருவனைத் தெரிந்துகொண்டதாக வரைந்திருக்கின்றதென விடை பகர்ந்தான் மகன். இரத்தினசாமிப்பிள்ளை அடிபட்ட அரவம்போல சீறி, கோப வெறி கொண்டு, தாறுமாறாய் வாய்விட்டுப் பேசினார். இழிசொற்களையும் பழி சொற்களையும் வாய்கூசாது கூறினார். அவனைப் பிள்ளையெனக் கொள்ளாது பேயென நினைத்தோ எசிப்பேசி வைது திட்டினார். கிறிஸ்தவ குணங்களை மறந்து, பேய்கொண்ட மனிதனைப்போல் கூவிக் கூக்குரலிட்டு, "ஓடிப்போ, ஒழிந்துபோ, தூரப்போ, தொலைந்துபோ, பட்டுப்போ, பாழாய்ப்போ" எனச் சபித்து, வாயில் வந்தவாறு வசைச்சொல் பல சொல்லி நிந்தித்தார். கேட்டான் மகன் கொண்டான் கோபம். மறுத்துச்சொல்ல மனம் வந்தது. ஆயினும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' ஆதலால் எதிர்த்துப் பேசாது பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருப்பதே யுத்தமம். பின்னும் தற்சமயம் ஏதாகிலு முறைத்தால் எரிகிற கொள்ளியில் எண்ணெயிட்டாற்போலும், நோவுகிற புண்ணில் கோலையிட்டாற்போலும் ஆகுமே. சும்மா விருப்பதே சுகம். எப்பேர்க்கொத்த இடுக்கண்களிலும் அமைதியா யிருந்து பேற்றுக்கொள்வதே நன்று. 'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்' என்றிருத்தலால் ஒன்று மியம்பாது மௌனஞ் சாதிப்பதே உசிதமென உன்னியிருந்தான். தகப்பனாரோ தான் துவக்கிய ராமாயணத்தை முடிக்கவில்லை. "என் முகத்தில் விழிக்காதே, வீட்டில் கால் வைக்காதே" எனக் கத்திக்கொண்டே யிருந்தார். மனம் நொந்தான் விசுவாசம்; சட்டையை யெடுத்து மாட்டினான். உள்ளே போய்த் தாயைப் பார்த்தான். தாயா ரங்கில்லை. பாப்பாத்தியம்மாள் மட்டு மிருந்தாள்.

விசு.—பாப்பாத்தி! நான் போய்வருகிறேன்; அம்மாள் வந்தால் சொல்.

பாப்.—எங்கே போகிறீர்கள்?

விசு.—உனக்கேன் அதெல்லாம்? கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்ப மேன்?

பாப்.—அப்போ சொல்லமாட்டீர்களாக்கும்.

விசு.—வெளியே போகிறேன்.

பாப்.—மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்துவிடுவீர்க ளல்லவோ?

விசு.—இனிமேலிங்கு வருவதும் உன்னைப் பார்ப்பது மெப்போ! நாம் கடவுள் கற்பனைகளை சுமுத்திரையா யனுசரித்து, உத்தமர்களாயிவ்வுலகில் சீவிப்போமாகில், மறுஉலகில் சந்தித்துக்கொள்ளலாம்.

இவ்வார்த்தைகள் அவள் இருதயத்தில் கூரிய ஈட்டிபோல் பாய்ந்தன. மனங் கசிந்தாள்; கண்ணீர் சொரிந்தாள். அவளைச் சற்றே தேற்றிவிட் டேகும்படி சொல்வான்:

விசு.—பாப்பாத்தி! நீ என் கஸ்திப்படுகிறாய்? இங்கு உத்தியோகம் ஒன்று மகப்படாதால் அப்பா கோபித்துக்கொள்கிறார். ஆதலால் அயல்நாடு சென்றாகிலும் ஓர் அலுவல் தேடலாமென நினைக்கிறேன். 'திரைகடலோடியுந் திரவியந்தேட' வேண்டு மல்லவா?

பாப்.—எங்கேதான் போகிறீர்கள்?

விசு.—பினாங்கு, சிங்கப்பூர், என்று சொல்லுகிறார்களே, அங்கேயாவது போய்ப் பார்க்கலாமென்றுதான் யோசனை.



பாப்.—அடே யப்பா! அவ்வளவுதூரந் தன்னந் தனிமையாகவா போகப் போகிறீர்கள்?

விசு.—ஏன்? வாயிருந்தால் வங்காளம் போகலாமே, அகதிக்கு ஆகாயந் துணையல்லவா?

பாப்.—செலவுக்குப் பணமெங்கே?

விசு.—அதுதானா பிரமாதம்? அலைந்து திரிந்து இரந்துகொண்டாகிலும் போவேன்.

பாப்.—அப்படிச் செய்யாதேயுங்கள். இதோ என் கழுத்தில் அட்டிகை யிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டாகிலும் போங்கள்.

என்ச் சொல்லி முடியுமுன் கழற்றிவிட்டாள். அதைக் கொடுக்கக் கையை நீட்டினாள். விசுவாசம் அது வேண்டாமெனச் சாதித்தான். கடைசியாக அவளுடைய பிடிவாதத்துக் கிரங்கிப் பெற்றுக்கொண்டு வேறொன்றும் பேச எலாதவனாய் வெளியே புறப்பட்டான்.

அவன் போய் கொஞ்சநேரத்திற்குள், கோவில் சென்றிருந்த தாயானவள் வந்தாள். நடந்த சங்கதிகளை யெல்லாஞ் சொன்னார் ரத்தினசாமிப்பிள்ளை. கேட்டாள் செய்தியை, கொண்டாள் கவலை. அழுதாள், அலறினாள். "மகனே என் செல்வமே! என் கண்மணியே; எனக் கத்தித் தலையி லடித்துக்கொண்டு சாப்பாடில்லாது விரதமிருந்தாள். இரவெல்லாம் மகனையிட்டுப் புலம்பி நித்திரையின்றி சஞ்சலக் கடலில் மூழ்கினாள். மறுநாட்களில் இங்குமங்கும் அலைந்து திரிந்து தேடிப்பார்த்தாள்; கண்டடையவில்லை. இது கவலை யவளை வாட்டினது. ஊணுறக்கம் சரியாயின்றி உடல் மெலிந்தாள். தகப்பனாரோ, வந்தமாட்டைக் கட்டுவாருமில்லை, போனமாட்டைத் தேடுவாருமில்லை யென்றாற்போல் சும்மா விருந்தார். மனைவி இருந்திருந்து அழுது பிரலாபிக்கும்பொழுது "என் பயித்தியக்காரி வீணாய் அழுகிறாய்? அவன் தலையி லப்படி யெழுதியிருந்தது, நாம் என்ன செய்யலாம்? அவன் புறப்பட்டுப்போன நாளுங் கரிநாள். அவனது கேடுகாலம், அடாதது செய்தால் படாதது படத்தானே வேண்டும். "சனியன் தொலைந்தது, சாணியை மொழுகு தலையை முழுகு" என்றிருக்கவேண்டியதுதானே; விருதாவாய்க் கத்துவதில் என்ன பயன்?" எனப்பலவாறாகச் சொல்வார். ஆயினும் நாள் போகப்போக அவருக்குமே மகன் மட்டில் ஏக்கமுண்டாயிற்று. பெற்றமனம் பித்தல்லவா? ஒரு சமயத்தில் தன்செய்கையை யிகழ்ந்தும் மகனைப் புகழ்ந்தும், மற்றோர் சமயத்தில் மகனைத் தூற்றியும் தன்மனதைத் தேற்றியும்பேசுவார். பாப்பாத்தியம்மாளோ கஸ்தியின் கடலி லகப்பட்ட ஓடத்தைப்போல் தத்தளித்துக்கொண் டிருந்தாள். (தொடரும்.)

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

பத்துக் கற்பனையின்பேரில்

### 5-ம் பாடம்.

முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்;

### தேவ துரோகம்.

(முன் தொடர்ச்சி.)

---

**11. மகா பயங்கரத்துக்குரிய தண்டனை.**—கடைசி நூற்றாண்டில் பிரான்சில் குழப்பமுண்டானபொழுது ஆயிரங்கணக்கான பேர் கனத்த காயம் பட்டதுடன், செத்தவர்களுடைய கணக்கு அபரிமிதமாயிற்று. அந்தப் பயங்கரகாலத்தில் காயப்பட்டவர்களுக்கும் அவஸ்தையா யிருந்தவர்களுக்கும் குருமார் செய்த உதவி ஒத்தாசை நாவால் வர்ணிக்கும் தன்மையல்ல.

கனத்த காயம்பட்ட ஒரு சேவகனைப் பார்க்கும்படி ஒரு குருவானவர் அழைக்கப்பட்டதன்மேல் அவரும் அவனைப் பார்க்கப்போய் ஆறுதலான வார்த்தைகளால் அவனைத் தேற்றினார். அப்போது வியாதிக்காரன் குருவானவருக்கு நன்றி கூறி, சங்கைக்குரிய பிதாவே! என்மேல் விரித்திருக்குந் துப்பட்டியை நீக்கி, என் மார்பைப் பாரும் என்றான். அவ்வாறே குருவானவர் துப்பட்டியை நீக்கவே, அவனுடைய இரண்டு கரங்களுந் தோள் பட்டையுடன் துண்டிக்கப்பட் டிருப்பதைக் குருவானவர்கண்டு துக்க பிரமிப்பால் முகம் வெளுத்து பேசாமல் நிற்பதைக்கண்ட வியாதியஸ்தன், அவரை நோக்கி "ஸ்வாமி, என் கால்மாட்டி லிருக்குந் துப்பட்டியை நீக்கிப்பாரும்" என்றதன்மேல் அவர் அந்த வஸ்திரத்தை நீக்கின உடனே, அந் நிர்ப்பாக்கியன் கையுங் காலுமில்லாத முண்டமா யிருப்பதைக்கண்டு முன்னிலும் அதிக துக்க துயரங் கொண்டவராய் பேசாமல் மௌனமாய் நின்றார்.

அப்போது வியாதிக்காரன் குருவானவரை அமரிக்கையான முகத்துடன் நோக்கி, "ஸ்வாமி நான் இவ்வாறு தண்டிக்கப்பட்டதைப் பற்றி அதிசயப் படவேண்டாம். நான் குடி அரசைச் சேர்ந்தவன்; பல பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்டதுடன், சில நாளைக்குமுன், ஒரு பட்டாளத்துடன் பிரயாணஞ் செய்தபொழுது வழியிலிருந்த சிலுவை சுரூபத்தை நான் சமீபித்து என் வாளால் அதன் கை கால்களை நறுக்கின உடனே அத் திருச் சுரூபம் கீழே விழுந்தது. மறு சண்டையில் என் கைகால்கள் துண்டிக்கப்பட்டு முண்டமாய்க் கிடக்கிறேன். ஆனால் தேவ கிருபையால் அந்த தேவ துரோகத்துக்காக உத்தம மனஸ்தாபப் படுகிறேன். பாவசங்கீர்த்தனத்துக்குப்பின் என் நல்லசேசு, அகங்காரத்தால் கட்டிக்கொண்ட என் கணக்கற்ற பாவங்களையும், தேவ துரோகத்தையும் பொறுப்பாரென்று உறுதியாய் நம்பியிருக்கிறேன்" என்றான்.

(Avo Maria.)

## 6-ம் பாடம்.

## தேவமாதாவின் வணக்கம்.

சகல மனிதரும் சர்வேசுரனை ஆராதித்து வணங்க முதற் கற்பனையால் கடமைப்பட்டிருக்கிறார்கள். சம்மனசுக்களையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் திருப் பண்டங்களையும் வணங்குவது தப்பிதமில்லா திருப்பதுடன், அது சர்வேசுரனுக்குப் பிரியமான காரியமாயுமிருக்கிறது.

படைப்புண்ட சகல வஸ்துக்களுக்குள் கன்னிமரியாயி மகா சிறந்தவளாயிருப்பதால் சம்மனசுக்களுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் செல்லுமான மகிமை வணக்கத்தையும் விட தேவமாதாவுக்கு அதிக மகிமையும் வணக்கமும் செல்லுமென்பது நிச்சயம். மேலும் சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்டவர்களும் சர்வேசுரனுடைய ஊழியரும் ஸ்நேகிதருமா யிருக்கிறார்கள். கன்னிமரியாயோ கர்த்தருக்கு மாதாவாயிருப்பதால் அவர்களிலும் இவளுடைய சலுகும் வேண்டுதலும் அதிக பலனுள்ளவை. ஆகையால் நாம் தேவதாயார்மட்டில் அதிக பக்தி வைத்து அவளுடைய சலுகை எப்பொழுதுந் தேடுவோமாக.

1. **கோரியலானுசும் அவன் தாயாரும்.**—முன் காலத்தில் உரோமையில் கொரியலானுஸ் என்னும் சிறந்த போர்வீரனிருந்தான். ஒருநாள் ஏதோ ஒரு முகாந்தரத்தை முன்னிட்டு உரோமையரில் சிலர் இவனை நிந்தித்து அலக்ஷியமாய் பேசினதன் மேல் ஷெ தளக்கர்த்தன் அவர்களைப் பழி வாங்கும்பொருட்டு உரோமையரை விட்டுவிட்டு அவர்களுடைய சத்துராதிகள் பக்கஞ் சேர்ந்து உரோமையருக்கு விரோதமாய்ப் படையெடுத்தான். கொரியலானுசை எதிர்த்தால் தங்களுக்கு அபஜெயமுண்டாவது நிச்சயமென்று அறிந்து தங்கள் நகரின் சாஸ்திரிகளான 'பெரியவர்கள் மூலமாய் அவனுடன் உடன்படிக்கை செய்ய பிரயாசைப்பட்டும், தளக்கர்த்தன் சம்மதியாதபடியால் உரோமையி லுள்ள பிரபுக்களையும் வங்கிஷபதிகளையும் ஸ்தானாதிபதிகளாக அவனிடமனுப்பி, தங்கள் பிழையை மன்னிக்க மன்றாடியும் கொரியலானுஸ் அதற்குச் சம்மதித்தவனல்ல. கடைசியாய் உரோமையர் தளக்கர்த்தனுடைய தாயை அவனிடம் அனுப்பி, தங்கள் தப்பிதத்தை மன்னித்துத் தங்கள் நகரைப் பாழாக்காமல் காப்பாற்ற தன் மகனிடம் சலுகு பேசும்படி மன்றாடினார்கள். தன்மேல், கொரியலானுசுடைய தாயார் சத்துராதிகளுடைய பாளயம் இறங்கியிருந்த இடத்துக்குப் போனாள். கொரியலானுஸ் தன் தாயைப் பார்த்த க்ஷணமே, கண்ணீர் உகுத்துக்கொண்டு அவளுக்கு எதிராகச் சென்றான். அப்பொழுது அவள் மகனைப் பார்த்து, "மகனே! உன் தாயாகிய என் முகத்தைப் பார்த்து உரோமையருடைய தப்பிதத்தைப் பொறுத்துக் கொள்" என்ற க்ஷணமே, "அம்மா, நீங்கள் என்னை மெய்யாகவே வென்றீர்கள். உரோமையரே! என் பிரிய தாயின் முகத்தைப்பார்த்து உங்கள் பாதகத்தை மன்னிக்கிறேன்." என்று சொல்லி சத்துருக்களை விட்டு விட்டு உரோமைக்குத் திரும்பினான். இவ்வண்ணமே, தேவதாயார் தன் குமாரனை மன்றாடும் மன்றாட்டு எவ்வளவோ பலனுள்ளதாயிருக்கும். ஆகையால் பிள்ளைகளே! பாவாத்துமாக்களாகிய நாம் பாவிகளுக்கு அடைக்கலமாகிய பரமதேவதாயார் மூலமாய்க் கிறிஸ்துநாதருடைய சிம்மாசனத்தை அண்டுவோமாக. (உரோமைச்சரித்திரம்.)



2. **யூதனாய்ப்பிறந்த நான் யூதனாய்ச் சாவேன்**—1841ம் மிகவும் தனவந்தனும் சாஸ்திரியுமான ராடிஸ்போன் யென்னும் யூதனிருந்தான். இவன் யூத வேதத்தின் மட்டில் வைராக்கியங் கொண்டிருந்ததுடன் சத்தியவேத ஞாயங்கள் எவ்வளவு தெளிவுள்ளனவாய்க் காணப்பட்டும் அதை ஏற்றுக்கொள்ளாமலிருந்தான். புஸ்ஸியர் என்னும் ஒரு சத்தியவேத பிரபு இந்த யூதனுடன் வேத தர்க்கஞ் செய்து சத்தியவேதத்தின் உண்மையை விளங்கச்செய்தும், "யூதனாய்ப் பிறந்த நான் யூதனாய்ச் சாவேன்." என்று சொன்னானே யன்றி உண்மையை ஒத்துக்கொண்டவனல்ல. முன் சொன்ன பிரபு ஒருநாள் ஷெ யூதனை நோக்கி நீர் எனக்கு ஒரு உபகாரஞ் செய்யவேண்டும் என்றபோது ராடிஸ்போன் அதற்குச் சம்மதித்தான். அப்படியானால் இதோ என்று, ஒரு தேவமாதா சுரூபத்தைக் காட்டி இதைக் கழுத்தில் போட்டுக் கொள்ளவேண்டும், என்றதின் மேல் யூதனும் அதற்குச் சம்மதித்து அச் சுரூபத்தைத் தரித்துக்கொண்டான். இது நடந்த சில தினங்களுக்குப்பின் ராடிஸ்போன் வேறொரு துரையுடன் அர்ச். பிலவேந்திரர் கோவிலுக்குப் போனான். துரை கோவிலின் சோடினை அலங்காரத்தைப் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, யூதன் அர்ச். மிக்கேல் சம்மனசின் பீடத்துக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்துகிடப்பதை ஷெ துரை கண்டு அதிசயித்து அவனைப் பேர் சொல்லிக் கூப்பிட்டும் அசையாதிருந்ததைக் கண்டு, அவன் கையைப் பிடித்து அசைக்க, ராடிஸ்போன் சந்தோஷக் கண்ணீர் சிந்திக்கொண்டு எழுந்து, "மெய்யாகவே நான் பாக்கியவான். சர்வேசுரனை அறியாதவர்கள் எவ்வளவோ நிர்ப்பாக்கியர்" என்று சொல்லி தன் நெஞ்சில் தொங்கும் மாதா சுரூபத்தை கையிலெந்தி அதைக் கண்ணீருடன் முத்திசெய்து, உடனே ஒரு குருவானவர் சமுகஞ் சென்று, தனக்கு நடந்த அற்புத விருத்தாந்தங்களை அவருக்கு அறிவித்து, தேவமாதாவின் சுரூபத்தால் தான் மனந் திரும்பினதாக நிச்சயித்து, ஞானஸ்நானம் பெற்று, காலத்தில் குருவாகி இப்போது சத்திய வேதம் போதிப்பதுடன், தேவமாதாவின்



பக்தி பிரசித்தமாகும்படி மகா ஊக்கத்துடன் உழைத்துவருகிறார். (Noel.)

3. **தேவதாயார் சுரூபத்துக்குமுன். எரிக்கப்பட்ட சிறு வர்த்தி.**—புருஷனும் பெண்சாதியுமான இரு விருத்தாப்பியருக்கு அண்டை ஆதரவு இல்லாதிருந்தபடியால் கஷ்ட சீவனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். விருத்தாப்பியத்தால் வேலை செய்யக் கூடாதபோது தங்கள் வீட்டிலுள்ள தட்டு முட்டு முதலிய சாமான்களை விற்றுச் சீவனஞ் செய்தபின் விற்பதற்குச் சாமான் இல்லாதபடியால் இரண்டுநாளாய்க் கடின பசி தாகத்துக் குள்ளாகி மறுநாள் இராத்திரி புருஷன் பெண்சாதியைப் பார்த்து, "சர்வேசுரன் நம்மைக் கைவிட்டார். சீக்கிரத்தில் பசியால் சாவோம்" என்று கஸ்தியுடன் சொல்லும்போது, "ஸ்வாமி சித்தம் ஆகட்டும்" என்று கிழவி முறைப்பாடின்றி விடை கொடுத்தபின், தன் புருஷனைப் பார்த்து நாம் சாவதுக்குமுன் நம்மிடத்தில் இருக்கும் சிறு மெழுகு வர்த்தியை தேவதாயார் சுரூபத்துக்குமுன் எரிப்போம்" என்று சொல்லி அதைக் கொளுத்திவைத்து இருவரும் சுரூபத்துக்குமுன் வேண்டிக்கொண்டார்கள். அந்நேரத்தில் பக்கத்து வீட்டுக்காரி வியாதியாய்க் கிடந்த தன் குழந்தைக்கு மருந்து முதலியதைக் கொடுத்துக்கொண் டிருக்குஞ் சமையத்தில், கிழவர், வீட்டில் நடு இராத்திரி வேளையில் வெளிச்சம் இருப்பதைக் கண்டு, சிலவிசை அவர்கள் வியாதியா யிருப்பார்களென்று எண்ணி அந்த வீட்டுக்குப் போனாள். அவ்விடத்தில் கிழவர் இருவரும் பசியால் இளைத்துக் களைத்து அவஸ்தையா யிருப்பதைக் கண்டு பரிதாபங் கொண்டு, உடனே தன் வீட்டுக்குத் திரும்பி மீதியாயிருந்த போசனத்தைக் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்தாள். மறுநாள் நடந்த செய்தியை ஊரார் அறிந்து, அவ் விருவரும் உயிரோடு இருக்குமட்டும் பிழைப்பதற்கு அவசியமான உதவி சகாயத்தைச் செய்துவந்தார்கள். சுரூபத்துக்குமுன் வர்த்தி ஏற்றிவைக்காவிட்டால் இந்த உபகாரம் அவர்களுக்குக் கிடைத்திராது. (Daig Rewarg,)

(இன்னும் வரும்.)

# (GNANAMANI III. PART.)

# (ஞானமணி 3-ம் பாகம்.)

ஒரு நாவல் கதை.

---

## மூன்றாம் அதிகாரம்.

## புயல் ஆரம்பம்.

---

மறுநாள் ரூத்தம்மாளும் அபூர்வமணியும் தாங்கள் ஞானதீக்ஷைபெறப் போகிற சந்தோஷத்தால் நித்திரை கொண்டவர்களல்ல. மூன்று மணிக்கே எழுந்து, அதிகாலை செபத்தை முடித்துக்கொண்டு, வஸ்திரந் தரித்துக்கொண்டு தேவாலயத்துக்குப் போக இன்னும் ஒருமணி நேர மிருந்தபடியால் புஸ்தகம் எடுத்து ஞானஸ்நான சடங்குகளைப் பற்றிய வியாக்கியானத்தை வாசித்துக்கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் வாசற்படியில் யாரோ ஒருவன் கையுந் தடியுமாய் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட பவுல் போதகர் "அங்கே நிற்கிறதார்?" என்றார். அப்போது அவருடைய குமாரன் சலமோன் முன்னுக்குச் சென்று "ஆஞ், நீங்கள் ரோமான் கோவிலுக்குப் போகப்படாது" என்று ஆங்கார அதிகாரத்துடன் பயமுறுத்தலாய்ச் சொன்னான். அதற்கு,

பவு.—நீ யார் என்னை கோவிலுக்குப் போகப்படாதென்று சொல்வதற்கு?

சல.—நான் யாரென்று உமக்குத் தெரியாதோ? நானுமது குமாரன் சலமோன்.

பவு.—நீ யென் குமாரன்தான். ஆனால் தகப்பன் மட்டில் குமாரன் காட்டும் சங்கையும் விநயமும் இது தானோ? மகன் தந்தைக்கு கட்டளையிடுவதோ?

சல.—நானுமது குமாரனும் உமது சொத்துக்கு உரிமைக்காரனுமான ஜேஷ்ட புத்திரனல்லோ? உம்மேல் எனக்கு சர்வாதிகாரமுமுண்டு.

பவு.—நமது முன்னோர் சம்பாதித்த பிதிரார்ஜித சொத்து ஏதாவது இருந்தால் அதில் உனக்குச் சேரவேண்டிய பங்கு காலக்கிரமத்தில் சேராமல் போகாது. மற்றபடி உன் அதிகாரம் இங்கு செல்லாது.

சல.—சொத்தைப்பற்றிய நியாயங்களை பின்னால் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் ரோமான் கோவிலுக்குப் போகவேபடாது.

பவு.—(இதுவரையில் தனக்கு எதிராக நின்று பேசத் துணியாத தன் மகன் துர்ப்போதனையால் இவ்வாறு செய்கிறானென்று மனதில் நினைத்துக்கொண்டு மனதில் கிளம்பும் ஆத்திர கோபத்தை அடக்கிக்கொண்டு) மகனே கையுந் தடியுமாய் உன் தகப்பனை யிவ்வாறு முரட்டுத்தனமாய் பேசுவது ஒழுங்கல்ல! உன்னைப் பெற்று வளர்த்த தகப்பனுக்கு காட்டும் சங்கை வணக்கமிதுதானோ? சொல்வார் பேச்சைக் கேட்காதே. "நியாயமான விஷயத்தில் தவறுகிறதன் பெற்றோருக்கு மகன் புத்தி சொல்லும்போது கேட்க அவர்களுக்கு கடமை யில்லையோ?" என்று வெளியில் கூடியிருந்தவர்களில் ஒருவன் சொன்னான்.

சல.—நீர் போகக் கூடாது அந்த ரோமான் கோவிலுக்கு.

பவு.—சலமோன்! சும்மாயிரு. உன் துர்நடத்தையால் உனக்கு உண்டாகும் பொல்லாங்கை யறிந்திருப்பாயாகில் நீ இப்படி பேச மாட்டாய்!

சல.—உனக்கு இனிவர விருக்கும் கஷ்ட நஷ்டங்களையும், துன்ப துரிதங்களையும் அறிந்திருப்பாயாகில் நீ ரோமான் கோவிலுக்கு போக மாட்டாய். ("சபாஷ்" "சபாஷ்" என்று சிரிக்கிற சத்தம் வெளிவாசலில் கூடியிருந்த கும்பலிலிருந்து கேட்கப்பட்டது.)

பவு.—(தன்மகன் முகத்துக்கு முகமாய் இப்படி அவமரியாதையாய் பேசுகிறதைக்கண்டு மனதில் துக்கங்கொண்டு சற்று நேரம் மவுனமாயிருந்து) கெட்டுப்போகாதே மகனே! உன் நடத்தை தேவனுக்கும் மனிதனுக்கும் உகந்ததல்ல. வீணாய்க் கெட்டுப்போகாதே. உன் பெற்றோர் அநியாயமாய் கஸ்தியுற்று அழக் காரணமாயிராதே. உன் மட்டில் எனக்கு பக்ஷமில்லாவிட்டால் அநேக ஆபத்திலிருந்து காப்பாற்றியிருப்பேனா உன்னை? வீணாய் ஆத்திரப்பட்டுக் கெட்டுப்போகாதே.

சல.—இத்தனை காலமாய் மிஷன் வேதத்திலிருந்து இப்பொழுது ரோமான் மதத்துக்குப் போவது உமக்கு ஞாயந்தானா?



பவு.—நீயும் ரோமான் வேதத்தில் சேரவேண்டுமென்று உன்னைக் கட்டாயப் படுத்தினால் கேள்? நான் என் முழு இஷ்டப்படி என் மனச்சாட்சிக்கு காதுசாய்த்து எந்த வேதத்தில்போனாலுந்தான் உனக் கென்ன? இவ்விஷயத்தில் நமது இங்கிலீஷ் சர்க்கார் முதலாய் பிரவேசிப்பது சட்டத்துக்கு விரோதமா யிருக்குமென்று அறியாயோ?

சல.—நீர் ரோமானராய்ப் போவதாயிருந்தால் எனக்குச் சேரவேண்டிய பங்கைப்பிரித்துக்கொடுத்துவிட்டு எக்கேடுகெட்டாலும் கெடும்.

பவு.—நான் உனக்கு முன் சொன்னது போல பிதிரார்ஜித சொத்து இருந்தால் உனக்குச் சேராமல் போகாது. அதுவும் நான் எப்போது கொடுப்பேனோ அப்போது தான் கிடைக்குமே யன்றி தற்போது வராது.

சல.—எனக்கு இன்றைக்கே வேண்டும். இந்த க்ஷணமே அதைக் கொடுத்து விடவேண்டும். வீட்டிலும் எனக்கு சரிபாகம் கொடுத்து சுவரை யிடித்து கதவு வைத்தபின் நீர் வெளியே போகலாமே ஒழிய, அதற்குள்ளாக யாரும் வெளிப்படக் கூடாது.

அந்நேரத்தில் சிரிப்பும் நகைப்புங் கை கொட்டலும் வெளியில் கூடியிருந்த கூட்டத்திலிருந்து கேட்கப்பட்டன. ரூத்தம்மாளுக்கும் அபூர்வ மணிக்கும் ஞானத்தாய்மாராக இருக்க ஒத்துக்கொண்ட விஸ்வாச நாயகருடைய மனைவியும், ஈசாக் உபதேசியாருடைய குமாரத்தியும் ஆணும் பெண்ணுமான அனேகருடன் சேர்ந்து, மெழுகு திரியையும் வெண்மையான வஸ்திரத்தையுங் கையிலேந்திக்கொண்டு, ஞானஸ்நானம் பெறப் போகிறவர்களை கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போகும்படி பவுல் போதகர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் வீட்டு வாசற்படியில் நடக்கும் கோஷ்டங்களையும் சலமோன் தடியுங் கையுமாய் நிற்பதையும் கண்டு மலைத்து அங்கேயே நின்றார்கள். பவுல் போதகர் வீட்டில் நடக்கும் கலகத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட விஸ்வாச நாயகரும் ஈசாக் உபதேசியாரும் பெரிய மனுஷாளான பத்து பேருடன் கிராம முன்சீப்பு முத்துப் பிள்ளை வீட்டுக்குப் போய் அவரை யழைத்துக்கொண்டு பவுல் போதகர் வீட்டுக்குப் போனார்கள்.

முத்துப் பிள்ளை.—(சங்கதியை விசாரித்துக்கொண்டு, சலமோனைப்பார்த்து) தம்பி நீ செய்வது சிர்க்கார் ரூல்ஸுக்கு விரோதமானது; தடியுங் கையுமாய் நிற்கும் நீ கிரிமினல் தரப்புலாப் பிரகாரம் தண்டிக்கப்படுவாய்.

சல.—எனக்குச் சேரவேண்டிய பங்கை கேட்பது லாவுக்கு விரோதமா?

முத்.—எத்தனை காலமாய் உன் பங்கைக் கேட்டுக்கொண் டிருக்கிறாய்?

சல.—இன்றுதான்.

முத்.—உன் தகப்பன் என்ன சொன்னார்?

சல.—பிதிரார்ஜித சொத்து இருந்தால் காலம் வரும்பொழுது கொடுப்பதாகச் சொன்னார்.

முத்.—சரி. அவர் கொடுக்கும்பொழுது வாங்கிக்கொள்.

சல.—இவர் ரோமான் மதத்துக்குப் போகாவிட்டால் எப்போதாகிலும் கொடுக்கட்டும். அப்படி யவரதில் சேருவதா யிருந்தால் இந்த க்ஷணமே கொடுத்துவிடும்படி கேட்கிறேன்.

முத்.—பங்கு பிரிப்பது இச்சணத்தி லாகுமா? பத்திரந் தஸ்தாவேஜு வேண்டாமா? பட்டா கிட்டா முதலியவைகளைப் பார்க்கவேண்டாமா?

சல.—வீட்டில் பாதி விடச்சொல்லும்.

முத்.—புலத்தையும் வீட்டையும் அளக்காதபடி யெப்படி பிரித்துக் கொடுப்பது?

சல.—இப்போதே வீட்டை அளந்துவிட்டால் சரி. இல்லாவிட்டால் நானே சுவரை யிடிப்பேன்.

முத்.—நியாயத்துக்குஅடங்காதவனை என்ன செய்கிறது?

என்று போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ரிப்போர்ட்டு எழுதி, தலையாரி கையில்கொடுத்து, தக்ஷணமே போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு கொடுத்துவரும்படி யனுப்பினார். வெளியில் நின்றுகொண்டிருந்த கூட்டத்தில் சவுல்என்னும் பெயர்கொண்ட விருத்தாப்பியர் கிட்ட வந்து ஐயா போலீசுக்கு ரிபோர்ட்டு என்னத்துக்கு? நீரே பைசல் செய்துவிடும்.

முத்.—தடியுங் கையுமாய் நிற்கும் இந்தப் பிள்ளையாண்டான் காதுக்கு என் சொல் எட்டுமா? போலீசான் வந்தால்தான் புத்திவரும்.

சவு.—இல்லை யில்லை; உங்கள் பேச்சு கேட்காவிட்டால் விதியில்லை. நான் அதற்கு ஜாமீன்; கூப்பிடுங்கள் தலையாரியை.

முத்.—(தலையாரியை வரவழைத்து ரிபோர்ட்டை கையில் வாங்கிக்கொண்டு பவுல் போத

கரைப் பார்த்து) உம்மையும் உமது குமாரனையும் பற்றிய விஷயமாய் பஞ்சாயத்து செய்யப் போகிறேன். உமக்கு சம்மதந்தானா?

பவு.—அப்படியே ஆகட்டும்.

முத்.—நீ யென்ன சொல்லுகிறாயப்பா?

மவுனமாய் நின்றுகொண்டிருந்த சலமோன் கிட்ட சவுல் போய், ஆகட்டுமென்று சொல்லப்பா என்றதன்மேல், சலமோன் அப்படியே, நீங்கள் சொல்லுகிறபடி ஆகட்டும் என்றான்.

முத்.—சரி, இன்றைக்கு 8-ம்தேதி; 18ம்உ பஞ்சாயத்து ஏற்படுத்தி விசாரணை செய்துகொள்ளலாம்.

சல.—இவர் ரோமான் மதத்தில் சேரப் போகிறாரே?

முத்.—அவர் ரோமான் மதத்தில் அல்லது துலுக்க மதத்தில் அல்லது இந்து மதத்தில் சேர்ந்தால் உனக்கென்ன? உன் பங்குகூட ரோமான் மதத்தில் சேர்ந்துபோகுமா?

முரட்டுத்தனமாய் பேசிக்கொண்டிருக்கும் சலமோனுக்கு, சவுல் புத்திசொல்லி "பேசாதே, முனிசீப்புசொன்னபடி 18உவரைக்கும் பேசாமலிரு" என்றுசொன்னதன்மேல் சலமோன் வெளியே சென்றான். அங்கு கூடியிருந்த கும்பலுங் கலைந்தது. பவுல்போதகர் வீட்டைப் பூட்டிக்கொண்டு தமது மனைவி பிள்ளையுடன் சேர்ந்து தம்மையழைக்கவந்தவர்களைப் பின்சென்று தேவாலயத்துக்குப் போனார்.

அன்று காலை 9¾-மணிக்கு கோவிலில் ஆராதனை முடிவாக, விஸ்வாச நாயகர் பவுல் போதகரையும் ரூத்தையும் குழந்தையையும் தமது வீட்டுக்கு வரவழைத்து, அன்று தமது வீட்டில் உபவாசந் தீர்த்துப்போகும்படி கேட்டுக்கொண்டார். விஸ்வாசநாயகருடைய பிள்ளைகள் அபரூவமணியை கன்னியாஸ்திரீ மடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள்.

ஈசா.—(பவுல்போதகரைப் பார்த்து) நீர் சொன்னதுபோல இன்று காலை யடித்த புயல் மெய்யாகவே உக்கிரமமானதே.

பவு.—ஆனால் இந்த கோஷ்டமெல்லாம் என் குமாரனாலுண்டாகுமென்று நினைக்கவேயில்லை. ஆனால் பெருஞ் சங்கடமுண்டாகுமென்று எண்ணியிருந்தேன். மேலும் என் மகன் தன் சுயபுத்தியால் இப்படிச் செய்தவனல்ல.

ஈசா.—அதற்குச் சந்தேகமில்லை.

விஸ்.—ஒரு காரியத்தை முயலும்பொழுது இடறல் எதிரிடையுண்டாவது அந்த காரியம் அநுகூலமடைவதற்கு நல்ல அடையாளமென்று பெரியோர் எழுதிவைத்திருக்கிறார்கள்.

பவு—அந்த விக்கினங்கள் எவ்வளவு சுலபமாய் முடிந்தன! கர்த்தரும் அவருடைய மாதாவும் என்னையும் என் குடும்பத்தையுஞ் சகல ஆபத்தினின்று காப்பாற்றி இரக்ஷிப்பார்களென்று பூரணமாய் நம்பியிருக்கிறேன்.

ஈசா.—18-ம் தேதியில் என்ன சம்பவிக்குமோ?

பவு.—என்ன சம்பவிக்கும்? பஞ்சாயத்தார் பத்திரம் தஸ்தாவேஜு சாட்சி சம்மதம் முதலியவற்றை விசாரித்தபின் என்ன தீர்மானம் செய்வார்களோ அதற்கு ஒத்துக்கொள்ள ஆட்சேபனையில்லை. கண்ணை மூடிக்கொண்டு பாரபக்ஷமாய் செய்வார்களா?

விஸ்.—இனிமேல் எந்த சங்கடமும் வருமென்று நான் நினைக்கவில்லை.

பவு.—அப்படி சொல்லாதேயும் சார். அநேக கஷ்டங்களுண்டாகுமென்று எண்ணுகிறேன்.

விஸ்.—அது உமக்கு எப்படித்தெரியும்?

பவு.—நேற்று சாயரட்சை என் மைத்துனன் பேசின பேச்சாலும், அங்கு கூடியிருந்த கூட்டத்தில் கேட்கப்பட்ட சபதச் சொற்களாலும் கலகமெழும்புமென்று நம்பியிருக்கிறேன். இதற்குத் திருஷ்டாந்தமாக இன்று காலையிலேயே அது வெளிப்பட்டது.

விஸ்.—பயப்படவேண்டாம் தைரியமாயிரும். மலைபோலே எழும்புங் குழப்பம் பனிபோல் மறையும் சர்வேசுரனுடைய விசேஷ கிருபையால். திருச்சபை சரித்திரத்தை வாசித்துப்பார்த்தால் தெளிவாய் அறிந்துகொள்வீர். எஸ்தாக்கியாருக்கு வந்த துன்பத்திலும் உமது துன்பம் பெரிதல்ல.

பவு.—அற்புதமாய் என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றி இரக்ஷித்தவர், அவருக்குப் பிரமாணிக்கமாயிருக்குந் தாசரை கைவிடமாட்டார். சக்திக்கு மிஞ்சின விதமாய் சோதிக்கவுமாட்டார். எனக்கு வரவிருக்குஞ் சோதனைகளினின்று அவரே எங்களைக் காப்பாற்றுவார். சண்டையின்றி ஜெயமில்லை யென்பதுபோல, சோதனையின்றி ஞான ஆறுதலும், மனச் சந்தோஷமும் உண்டாகாது. எங்களுக்கு



உண்டாகும் கஷ்ட நஷ்டங்களிலும், சங்கட சோதனைகளிலும் தைரியத்தைக் கைவிடாமலிருக்கும்படி பராபரனைப் பார்த்து மன்றாடிவரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் சார்.

விஸ்.—சந்தேகமின்றி உங்களுக்காக சர்வேசுரனைப் பிரார்த்தித்து வருவேன்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மணி 12 அடித்தபின் போசனத்துக்கு உட்கார்ந்தார்கள். (தொடரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உத்தியோகம், ஜனசங்க நடமாட்டம்.

(முன் தொடர்ச்சி.)

---

1. தன் ஆத்துமகாரியத்தைக் கவனிக்க கால்மணி நேரங்கூட மீதிவைக்காமல் நாள்முழுதும் வேலையில் அமிழ்ந்திருப்பது ஒழுங்கல்ல.

2. பிறர் அயோக்கியமாய் நடப்பதைக் கண்டு தங்கள் மனச்சாட்சியைச் சமாதானப் படுத்திக்கொண்டு தாங்கள் அயோக்கியமாய் நடப்பது ஒழுங்கல்ல. (யோக்கியர்களை மாதிரியாகக் கொள்ளாமல் அயோக்கியர்களைப் பின்பற்றி நடத்தல் மதியீனமும் தன்னைத்தான் ஏய்க்கும் மதிமோசமுமாகும்.)

3. அநியாய வட்டிவாங்குவதும், பத்திரத்தின் தொகையை ஒரே தடவையாய் கொடுக்கும்படி நிர்ப்பந்திப்பதும் ஒழுங்கல்ல.

4. ஐசுவரியவான்களுக்கு ஒருவிதமாயும் ஏழைகளுக்கு ஒருவிதமாயும் நடந்துகொள்வது ஒழுங்கல்ல.

5. தனக்குப் பலமும் அதிகாரமும் உண்டென்று பேதைகளையும் ஏழைகளையும் நிர்ப்பந்திப்பது ஒழுங்கல்ல.

6. நியாயமோ அநியாயமோ என்று கவனிக்காமல் பணத்தை மாத்திரம் குவிக்கப் பார்ப்பது ஒழுங்கல்ல.

7. தனக்குச் சரியாய் வைத்தியம் தெரியாவிட்டாலும் சிறந்த வைத்தியனைப் போல் நடித்து யாதோர் வியாதிக்காரனுக்கு மருந்துகொடுக்க முன்வருவது ஒழுங்கல்ல. (இப்படி கொடுக்கும் மருந்தினால் வியாதி அதிகப்பட்டு ஒரு வியாதியிலிருந்து மற்றொரு வியாதிக்குக் கொண்டுபோக, பிணியாளிக்கு நேரிடும், கஷ்டம் துன்பம், ஒருவேளை மரணம், இவைகளுக்கெல்லாம் தானே தேவ சன்னிதியில் உத்தரிக்க வேண்டுமென்பதை உன்னி நடக்க வேண்டும்.)

8. யாராயிருந்தாலுஞ் சரி அவரவர் செய்யும் ஒவ்வொரு அக்கிரமத்திற்கும் ஒரு நாள் பழிவாங்கும் கடவுள் ஒருவர் உண்டென்பதை மறநது விடுவது ஒழுங்கல்ல.

9. அவசரமின்றி பல பல இடங்களுக்குப் போவதும் சம்பாஷணை செய்வதும் ஒழுங்கல்ல.

10. பெண் பிள்ளைகள் மனதில் கெட்ட கருத்தை வைத்துக்கொண்டு வெளிக்கு இல்லாத கூச்ச நாச்சம் காட்டி நடிப்பது ஒழுங்கல்ல.

(இது விஷயத்தில் ஐரோப்பியர் நமக்கு நன் மாதிரிகை. ஐரோப்பிய பெண்டுகளுக்கு இருக்கும் சுதந்திரம் நமது நாட்டுப்பெண்டுகளுக்குந் தேவை யென்பதல்ல. ஆனால் ஒரு நல்ல வாலிப ஐரோப்பிய ஸ்திரி யாராயிருந்தாலும் அவசரத்திற்குத் தக்கபடி பேசுவாள். அவளிடம் அடக்க ஒடுக்க முண்டு. இல்லாத கூச்சநாச்சமெல்லாம் காட்ட மாட்டாள்; பல்லைக் காட்டி சிரிக்க மாட்டாள். மிஞ்சினவிதமாய்க் கெஞ்சவு மாட்டாள். தனக்கு வேண்டிய விஷயத்தை இரண்டொரு வார்த்தையில் பேசுவாள். மேலும் அவள் முகத்தில் கடூரமும் இருக்காது. நய நயப்பும் தோணாது. சுபாவப்படி காணப்படுவாள். கொஞ்சம் தகாத சம்பாஷணை அல்லது நடத்தையைக் கண்டால் உடனே முகத்தைச் சுளிப்பாள். மேலும் அவளிடம் தன்மானம் உண்டு. இதைப்பற்றித்தான் அவள் பலபேரிடம் பேச நேர்ந்தாலும் அபாயமின்றியே திரும்பிவருவாள். நமது நாட்டு ஸ்திரீகள் அப்படியல்ல. அவர்கள் உத்தியோக விஷயமாயோ, வர்த்தக விஷயமாயோ, அல்லது என்ன காரணத்தை முன்னிட்டோ, ஆண் பிள்ளைகளிடம் அடிக்கடி பேச நேர்ந்தால் அபாயமில்லாது திரும்புவது கஷ்டம். அடக்க

ஒடுக்கமின்றி தம் வீட்டுக்காரியங்களையும் மற்றும் விஷயங்களையும் பேசுவார்கள். இல்லாத கூச்சம் நாச்சம் காட்டி, ஆண்பிள்ளைகளின் முகத்தை யென்றும் நோக்கியிராத பரம பத்தினிகளைப்போல் பாசாங்கு காட்டுவார்கள்; கெஞ்சுவார்கள்; பல்லைக்காட்டிச் சிரிப்பார்கள்; தகாத சம்பாஷணையைக் கேட்டால் உடனே முகத்தைச் சுளித்து அப்புறம் போகமாட்டார்கள். இப்படியே யிருக்க யிருக்க நாளுக்கு நாள் சுகிர்த நாணமிழந்துவிடுவார்கள். இவ்விதமாய் நம் நாட்டு ஸ்திரிகள் எல்லோரும் செய்கிறார்களென்று சொல்லவில்லை. ஆனால் ஆண் பிள்ளைகளிடம் பேசி புழங்கிவரும் பால்ய ஸ்திரீகளுக்கு அவ்வளவு ஆபத்துக்களுண்டு.)

11. கடன், தரித்திரம், கஷ்டம் இருந்தும் வேலை செய்யாமல் சோம்பேறியாயிருப்பது ஒழுங்கல்ல.

12. ஆண் பிள்ளைகள் சோம்பேறித்தனத்தினால் அல்லது குடி முதலிய துஷ்கிருத்தியங்களினால் சம்பாதனையைப் பாழ்ப்படுத்தி பெண் பிள்ளைகளை, விசேஷமாய் பால்ய பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவது ஒழுங்கல்ல.

13. கொஞ்சம் சம்பாதனையுள்ளவன் அதிக சம்பாதனைக்காரனைப்போல் நடிப்பது ஒழுங்கல்ல. (20 ரூபாய் வருமானமுள்ளவனும் இருநூறு ரூபாய் சம்பளக்காரரைப்போல உடுக்கவும் உண்கவும் உலாவவும் ஆசைப்படுகிறான். இந்த மிக மிஞ்சின ஆசையே அவனை சீக்கிரத்தில், தரித்திரத்திலும், துன்பத்திலும், பாவத்திலும், அவமானத்திலும் கொண்டுவந்து விட்டுவிடுகிறது. அந்தஸ்துக்கு மிஞ்சி அதாவது வரும்படிக்கு மேல் செலவழித்தலே வறுமையை வருவிக்கிறது. நமது ஜனங்களின் பெரும்பாலோரிடத்திற் காணப்படுகிற தரித்திரத்துக்குக் காரணம் வரும்படியை மிஞ்சின செலவே.)

14. இலஞ்சம் பரிதானம் வாங்குவது ஒழுங்கல்ல.

15. வழக்கு முதலிய விவகாரங்களுண்டாகும் பட்சத்தில் குருமார்களுடைய மேல்விசாரணையில் நடத்தப்படும் பஞ்சாயத்தில் தீர்த்துக்கொள்ளாமல் கோர்ட்டு கச்சேரி யேறுவது ஒழுங்கல்ல. (இதனால் அதிக பணச்செலவும், அலைச்சலுங் குறையும். இதுதான் நல்ல கிறீஸ்துவர்களுக் கழகு. இப்படியே நமது முன்னோர்களுஞ் செய்துவந்தார்கள்.

16. பெண் பிள்ளைகளுக்கு நகைப்பைத்தியத்தையுண்டாக்குவதும், பெண்டுகள் நகையோ நகை யென்று வாய் காய்ந்தலைவதும் ஒழுங்கல்ல. (தேகத்திற்கு அலங்காரமாய், தன் சக்திக்குத் தக்கபடி கூடிய பட்சத்தில் ஏதோ நல்ல நகைகள் சிலது தரிப்பதை விட்டு விட்டு, வயிற்றைக் குறைத்து, தான தருமத்தை நிறுத்தி, தன்னை நத்தியிருக்கும் பெற்றோரையும் சுற்றத்தாரையும் வெறுத்து, பிள்ளைகளுடைய படிப்பைத் தவிர்த்து, புருஷனை யலட்டி, உலோபத்தன்மையாய் நடந்து, எவ்விதமாயானும் சரி, நகையை மாட்டிக்கொள்ளத் தேடுவது மோசமும் பேராசையும் வீண் சலாக்கியமுமாகும். தன் அந்தஸ்தின் கடமைகளைச் சரியாய் நடத்திய பின், கூடுமான தானதர்மங்கள் செய்யவேண்டும், இதற்குப்பின் மீதியாயுள்ளதை, நகையின் பேரிலாவது, வீடு பூமி காணிகளின் பேரிலாவது பிற்காலத்துக்கு உதவும் பொருட்டு போட்டுவைப்பது கிரமம். இதுவே ஆதியில் நகை செய்ய ஆரம்பித்ததின் கருத்து.)

17. ஆத்துமத்திற்கு ஆபத்தாயிருக்கும் அலுவலி லிருப்பது ஒழுங்கல்ல.

18. இருபக்கத்திலும் விசாரணை செய்யாமல் எந்தக்காரியத்தையும் தீர்மானஞ் செய்வது ஒழுங்கல்ல.

19. தனக்கில்லாத குலப்பெருமையையும், அக்குலத்திற் கடுத்த பட்டப்பெயர்களையும் தனக்குத்தானே வகித்துக்கொண்டு தன் பெற்றோர் இன ஜன பந்துக்களை வெறுப்பது ஒழுங்கல்ல.

20. வாத்திச்சி, மருத்துவச்சி, செவிலித்தாய், பணிப் பெண் முதலிய வேலைகளிலும், மற்றும் ஜனசங்கத்தில் அதிகமாய் புழங்க வேண்டிய அலுவல்களிலுமிருக்கும் பெண்பிள்ளைகள் ஆபத்தைத் தவிர்க்காமல் நேர் நிதானமின்றி நடப்பது ஒழுங்கல்ல.

21. சிந்தனையில் முதலாய் பிறர்மட்டில் காய்மகாரம் கொள்ளுவது ஒழுங்கல்ல.

22. ஒருவருடைய சுக காலத்தில் அவர்களுடன் சலிக்காமல் சகவாசஞ்செய்து,



கஷ்டகாலத்தில் முகத்தை முதலாய் ஏறெடுத்துப் பார்க்காமற் போவது ஒழுங்கல்ல.

23. பிறருடைய ஆகாத கிருத்தியங்களைப் பற்றி மாத்திரம் விசேஷ அவசரமின்றி பன்னிப் பன்னிப் பேசுவது ஒழுங்கல்ல. ("பிறராற் பெருஞ்சுட்டுவேண்டுவான் யாண்டும் மறவாமே நோற்பதொன் றுண்டு- பிறர் பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து யார் யார்க்குந் தாழ்ச்சி சொல்ல்." என்பது பேரியோர்வாக்கியம் )

24. ஒருவர் செய்த உபகாரத்தை மறந்து நன்றிகெட்டத்தனமாய் நடப்பது ஒழுங்கல்ல. ("நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்பது ஓர் ஞானியின் வாக்கு )

25. குருக்கள் உத்தரவின்றி நாடகங்களை நடத்துவதும், அப்படி நடத்தப்படும் நாடகங்களுக்குப் போவதும் ஒழுங்கல்ல.

26. நாடகங்களுக்கு அதிகமாய்ப் போவதும் ஒழுங்கல்ல. (இதனால் உண்டாகும் கேடுகள் அனந்தம்.)

27. புருஷன் பெண்சாதிகள் காரணமின்றி வீணான காய்மகாரங்களுக்கு இடங் கொடுப்பது ஒழுங்கல்ல.

28. இரகசிய மென்று ஒருவர் தெரிவித்ததை, மற்றவருக்கு வெளிப்படுத்துவது ஒழுங்கல்ல. ("பத்திரம் யாருக்கும் சொல்லாதே உனக்கு மாத்திரம் சொன்னேன்" என்னும் எச்சரிக்கை வாக்கியத்துடன் அநேகர் இரகசியத்தை மறு நிமிஷத்திலேயே வெளிப்படுத்தி விடுவார்கள். "ஒருவர் அறிந்தால் இரகசியம். இருவர் அறிந்தால் இராச்சிய" மன்றோ.?)

29. கொஞ்சம் பரிட்சையானவுடன் அவனவனுடைய குடும்ப விவகாரங்களையெல்லாம் கேட்பது ஒழுங்கல்ல. (ஒருவனிடம் முதல் முதலாய்க் கொஞ்சம் பேச நேர்ந்தால், நீ யார், உன் ஊர், பேர், குலம் வருணம், உத்தியோகம் சம்பளம் என்ன? பெற்றோர், சகோதரருண்டோ? அவர்கள் உத்தியோக மென்ன? பெண் கொண்டதெவ்விடம்? உனக்கும் உன் பெண்சாதிக்கும் சமாதானந்தானோ? என்பன முதலிய அனாவசியமும், அனுசிதமுமான கேள்விகளையெல்லாம் கேட்பார்கள். இது இந்நாட்டின் அநாகரீகமான வழக்கம். இவ்வழக்கத்தை நிறுத்துவது நன்று.)

30. பேரடைய வேண்டும் கீர்த்தியடைய வேண்டும் நாலு பேர் மெச்சவேண்டும் என்றலைவது ஒழுங்கல்ல.

(அநேகருக்கு எங்கேயும் வீண் பெருமைவேண்டும்; வீட்டிலும், குடும்பத்திலும், உத்தியோகத்திலும், வீதியிலும், கடையிலும், கூட்டத்திலும், ஜனசங்கத்திலும், கோவிலிலும் வேண்டும். அவர்கள் எந்தக்காரியத்தைச் செய்தாலும், என்ன தருமமிட்டாலும், எந்தப்பேச்சு பேசினாலும், எந்த ஆடை தரித்தாலும், எவ்வகையாய் நடந்தாலும், பெருமை, சலாக்கியம், சிரேஷ்டத்துவம், நாலுபேர் மதிப்பு ஆகிய இவைபோன்றவைகளையே, உப்பைத்தின்றவன் தண்ணீரைத் தேடுவது போல் நாடித் தேடி, விளக்கையவிக்கத் தேடிய விட்டில் பூச்சியானது தானே அவ்விளக்கில் விழுந்து மடிவதைப்போல், நாலு பேருடைய காய்மகாரத்திற்கும், இகழ்ச்சிக்கும் உட்பட்டு இவர்களோடும் அவர்களோடும் எப்போதும் போராட்டமாயிருந்து, எவ்வளவுக்கு மதிப்பைத்தேடுவார்களோ, அவ்வளவுக்கு அவமதிப்பை யடைவார்கள். இப்படி தானே தேட பெருமை வராது. சிறுமைவரும். தேடாது வருவது பெருமை. தன்னைப் புகழுகிறவன், தன் பெருமையை நாடுகிறவன், அகலில் எண்ணெய்க்குப் பதில் தண்ணீர் விட்டு எரிக்க முயலுகிறவனுக்கு ஒப்பாகிறான் என ஒரு புலவர் பாடியிருக்கிறார்.)

31. எந்தக்காரியத்திலும் திருட்டு புரட்டு செய்வது ஒழுங்கல்ல. (இந்தியாவில் மோசமும் பொய்யும் பெருத்துப்போயிருக்கிறது. ஆகவே, இந்தியர்களே இந்தியர்களை நம்புவது கஷ்டமாயிற்று. இந்தியர்களுடைய பிழைப்புக்கடுத்த தொழில்களை அநேகமாய் ஐரோப்பியர்கள் கையாடிவர, பிரஜைகளும் அவர்களிடம் வியாபாரம் செய்யப் பிரியங் கொள்ளுகிறார்கள். பால்காரன் பாலிலும், தட்டான் பொன் வெள்ளியிலுல், சக்கிலி தோலிலும், தையற்காரன் துணியிலும், வண்ணான் வெளுப்பிலும் மோசம் செய்து, தவணைமீறி, இன்றைக்குநாளைக்கென்று இழுத்தடிப்பதினாலும், வர்த்தகன் ஆளுக்குத்தக்க வியாபாரம் செ

ய்து, அவனுடைய சாமர்த்தியத்திற்கும் வாங்க வந்தவன் சாமர்த்தியத்திற்கும் ஏற்றபடி விலையை ஏற்படுத்துவதினாலும், ஜனங்கள் இவர்களுடைய சகவாசமே வேண்டாமென்று சலித்து, இவர்களுடைய கை கஷ்டத்தை உபயோகித்து இலாபமடையும் ஐரோப்பியர்கள் அல்லது, ஜாதியேற்பாட்டின்படி அத்தொழிலுக்கும் வர்த்தகத்திற்கும் சம்பந்தப்படாத நம்பிக்கையுள்ள இதர ஜாதியாரிடம் வாணிபம் செய்து வருவதை நாம் கண்டுவருகிறோம். காரணம் அன்னவர்கள்மேல் நம்பிக்கை யின்மை. ஆயிரம் பொய்யாவதுசொல்லாத வர்த்தகம் என்ன வர்த்தகம்? என்னும் பழமொழியுமுண்டு. கிறீஸ்துவர்களாவது தாங்கள் செய்யும் தொழிலிலும், வர்த்தகத்திலும் நம்பிக்கையாய் நடந்து வந்தால் அதனால் அவர்களுக்கு நன்மையும் வேதத்திற்கும் பெருமையுமுண்டாம்.)

(தொடரும்.)

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடிதமெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இட்டு பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றன வென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்]

### பத்திரிகாபிவிருத்தி.

பல் வளங்களுஞ் செறிந்து விளங்குமிந்த சிந்து தேசமெங்கும் பறந்துலாவிவரும் சிறந்த "நல்லாய"னின் பத்திரிகாசிரியரே! நல்லாயனில் பேரன்பு கொண்டொழுகுந் தொண்டருக்குத் தொண்டனாகிய நான் பத்திரிகாபிவிருத்தி விஷயமாய் என் சிற்றறிவுக்குத் தோன்றிய சில பிரேரேபனைகளை இங்கு கூற விடை யளிக்க வேண்டுகின்றேன்.

நல்லாயனின் நல்லிருப்பில் சந்தோஷங் கொள்ளுங் கையொப்ப சகோதரர்காள்!

இம் மலர்தலை யுலகத்து மக்களுக்குள் ஏற்பட்டுள்ள பற்பல சமயங்களில் நமது கத்தோலிக்குச் சமயமே மெய்யங் கடவுளால் அருளப்பட்ட சத்தியவேதமென நாம் நன்குணர்ந்திருப்பதுடன் பிற மதஸ்தர் முதலாய் அதைச் சோதித்துப் பார்ப்பின் அஃ துண்மையென ஐயமற ஒப்புவார் என்பது திண்ணம். ஆயினும், அப்பிற மதஸ்தர், ஆசைக் குழாங்களின் வலையிற் சிக்குண்டவராய் நஞ் சத்திய மறையைக் கண்டுணர கவலை கொள்ளாது தம் குருட்டாட்டத்திலேயே வழுன்று நின்று, புத்தக மூலமாயும், பத்திரிகைகள், துண்டுப் பத்திரங்கள் மூலமாயும், பொதுப் பிரசங்கங்கள் மூலமாயும் தத்தம் சமயமே சத்தியமானதெனச் சாதித்துவரும் விஷயம் நாம் அறியாததன்று. இவ்வாறு வெளிப்பட்டுலாவிவரும் அசத்திய அச்சுப் பிரதிகளை அம்மதத்தினர் பேராவலுடன் வாங்கி வாசித்துப் பெருமை கொள்வதுடன், அவற்றைப் பரிபாலிக்குமாறு வேண்டிய பொருளுதவியையு மன்போடளித்து, சமையம் வாய்த்தபோதெல்லாம் அதற்கு ஆதாரமான பற்பல விஷயங்களையும் அவற்றின் ஆசிரியருக்கு வரைந்தனுப்பி, அத்தகைய பொய்ம் மதங்கள் பிரபலிக்குமாறு செய்விக்கின்றனர். இதுவன்றோ மதாபிமானம்? காரியம் இங்ஙன மிருக்க, சத்தியவேதத்தாராகிய நாம் நம் வேத விஷயமாய் எவ்வாறு நடந்துவருகிறோமெனச் சற்று சீர்தூக்கிப் பார்ப்போமாயின் காரியம் செவ்வனே விளங்கும். உண்மையில் நமது வேதத்தின்மீது நாம் பாராட்டி வருங் கவலையும், கரிசனமும் மிக சொற்பமே யெனவுணர்ந்து அப்புற மதஸ்தர் முன்னிலையில் நாம் வெகுவாய் வெட்கி சிரந் தாழவேண்டி வரும்.

கிருபா சாகரமாகிய கடவுள் நம்மில் அநேகருக்கு ஞானத்தையும் பொருளையுங் கொடுத்திருப்பதின் நோக்கமென்னோ? நமது ஆத்தும போஷணை சரீரபோஷணை இருவிஷயங்களுக்காகவே யல்லாது, சரீர போஷணைக்காக மட்டுமன்று. நமது ஜீவியத்தின் பின்னர், அவர் இவ்விரு கொடையையும் பற்றிக் கண்டிப்பான கணக்கு கேட்கும்போது நாம் யாது பதில் உரைக்குந் தன்மையி லிருப்போமெனத் தற்போதே சிறிது சிந்தித் துணர்வோமாயின் நம்மிடத்துண்டான அசமந்தத்தையும் அஜாக்கிரதையையும் களைந்துவிட்டு ஊக்கமும் விழிப்புமுடையோராக வெளிப்படுவோமென்பது திண்ணம். பிரிய சகோதரர்காள், இதோ அதற்கான பல்வழிகளில் சுலபமதாகிய வொன்று நம் கண்முன்னே நிற்கின்றது. அஃதியாதெனில்: சத்தியவேதத்தை அறிந்தவர்க்கும் அறியாதார்க்கும் பல அரிய விஷயங்களை விளக்கி, ஞான அமுதூட்டி வரும் 'நல்லாயன்' பத்திரிகையைச் சன்மானித்துப் பரிபாலிப்பதே. இத்தன்மையான பத்திரிகை யொன்றை கத்தோலிக்காராகிய நாமே ஏற்படுத்தி நடத்த ஏலாதவ ராயினும், அதை ஆரம்பித்து அதி ஊக்கமுடன் நடாத்திவரும் குருப் பிரசாதிகளுக்காவது நம்மாலான உதவி புரிந்து அவர்களுக்கு உற்சாகம் உண்டுபண்ண வேண்டாமோ? நம்மைத் தற்போது பெரும் புகழுடன் ஆண்டுவரும் நமது பரிசுத்த தந்தையரும், நம் மிரக்ஷக பெருமானின் பிரதிநிதியுமாகிய 10-ம் பத்திநாதரின் பெரு நோக்கமு மிதுவே யாகும். கத்தோலிக்கு வேத விரோதமும், அவ விசுவாசமும், அஞ்ஞானமும் நாஸ்திகமும் நிறைந்த பத்திரிகைகளும், புத்தகங்களும் எங்கும் பரவி நாசஞ் செய்துவரும் இக்காலத்தில், அவைகளின் ஆபாசத்தையும், அக்கிரமத்தையும், அநியாயத்தையும்அப்போதைக் கப்போது சகலருக்கும் விளக்கிக்காட்டி, நன்ஞானத்தையூட்டி, சத்தியத்தை நிலைநாட்டி வரும் பத்திரிகைகளை யாதரிப்பனதவிடச் சிறந்த பரோபகார புண்ணியம் வேறில்லை யென வற்புறுத்திப் போதிக்கிறார் பரிசுத்த பிதா. ஆகவே, பத்திரிகையைச் சன்மானிக்கும்படி அடுத்தடுத்து நம்மை வற்புறுத்தும் சங். பத்திராதிபருடைய பட்சமுற்ற இரட்டித்த வேண்டுகோளுக்கு இணங்காவிடினும், பட்சமுள்ள பரிசுத்த தந்தையரின் உசித போதனையைச் சிந்தித்தாவது நல்லாயன் பத்திராதிபருக்கு உதவி புரிவோமாக. எங்ஙனம் உதவி புரிவது? மீசுரமாகச் செய்யவேண்டுவது யாதொன்று மிலது. பத்திரிகைக்கான சந்தாவைச் சிறிதும் பாக்கி யின்றிச் செலுத்தி வருவதுடன் கூடியவரையில் புது சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்க முயலுவதே. மேலும் கூடுமானவர்கள் ஞான அறிவுக்கும் இலௌகிக ஞானத்துக்கும், நல்லொழுக்கத்துக்கும், சன்மார்க்கத்துக்கும், கல்விக்கும், இன்னும் இதர சத்விஷயங்களுக்குமான வியாசங்கள் எழுதி பத்திரிகைக்கு விஷய தானங்கள் செய்வதும் பத்திரிகையைச் சன்மானிப்பதாகும்.





இத் தென்னாட்டில் நடைபெற் றிலங்கும் கத்தோலிக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் வெகு சிலவெனயாவருமறிவார். இவற்றில் 'நல்லாயன்' ஒன்று. ஆதலின் இது க்ஷீணமடையாது, நாளுக்குநாள் விருத்தியாகி, தற்போது மாத மொருமுறை வெளிவருவது இருமுறை வெளிப்படுமாறு செய்ய முயலுவோமாக. இத் தென்னிந்தியாவி லிருக்கும் பெருந் தொகையான கிறிஸ்துவ சகோதரர்களுக்கு இது ஒருபெரு மலையா? மனம் ஒன்றே வேண்டும்.

சகோதரரே! கடவுளை முன்னிட்டு இவ்வுத்தம காரியம்இடையுறாது நடைபெறுமாறு, பாக்கி சந்தாவை கடிது செலுத்தியும், மற்றுமியன்ற உதவிகள் புரிந்தும் சங். பத்திராதிபரவர்கட்கு ஊக்கமு முற்சாகமு முண்டுபண்ணுவோமாக. இவ்வளவாக எடுத்துப் பேசும் அடியேன் இது விஷயத்திற் செய்ததென்ன வென்கிற கேள்வி பிறக்கலாம். இதற்கு யான் கொடுக்கும் விடை தாழ்மையான விருதயத்தோடு புகர்கின்றேனே யல்லது பெருமையை யொட்டிக் கூறுவதன்று. அதாவது 1914-ம் வருடத்து சந்தாவையும் சிறிது நன்கொடையையும் சங். பத்திராதிபருக்கு அனுப்புவித்திருப்பதுடன், என் புல்லறிவிற் கேற்றவாறு, நல்லாயனிற் பிரசுரிப்பதற்கென சில விஷயங்களையும் வரைந்தனுப்பியிருக்கின்றேன். அன்றியும், புது சந்தாதாரர்களையும் சேர்க்க முயன்றுவருகின்றேன். குறைந்த பட்சம் இப்படியே மற்ற சந்தாதாரர்களாகிய என் சகோதரர்கள் ஒவ்வொருவரும் செய்து, நல்லாயனை விருத்தி பண்ணவேண்டுமென்ற என் ஆசையே இதை எழுத என்னைத் தூண்டிற்று.

(17—10—13.) கோயமுத்தூர் வாசி.

## MISCELANEOUS NEWS.

## பற்பல வர்த்தமானம்.

இலவம் பஞ்சினால் பட்டு.—இலவம் பஞ்சினால் இதுவரையில் தலையணை, மெத்தை முதலியவை செய்யப்பட்டனவே யன்றி இவைகளைவிட அதிக பிரயோசனமான வஸ்துக்கள் செய்யப்படும் வகை தெரியாதிருந்தது. இப்போது இப்பஞ்சினால் ஜெர்மனி தேசத்தில் வெகு நேர்த்தியான பட்டு நெய்யப்படுகிறதாம். வெள்ளெருக்கு முதலிய செடிகளிலிருந்தும் பட்டு நெய்வதற்கேற்ற நார்கள் எடுக்கிறார்களாம்.

**ஓர் அதிசய பிறப்பு.**—சமீபத்தில் ஏடா ஜில்லா ஹைறவர் என்னும் ஊரில் ஓர் வெள்ளாடு குரங்கு முகமும் எட்டு காலுமுடைய ஒரு குட்டியை யீன்றதாம். குட்டி பிறந்ததும் இறந்து விட்டதாம்.

**புது ரேயிற் பாதை.**—கோலாருக்கும் பௌரிங் பேட்டைக்கும் ஏற்பட்டிருக்கும் இருப்புப் பாதை சென்ற மீ 15-ம் தேதி மைசூர் யுவராஜா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

**118-வயதுள்ள ஸ்திரி.**—ஜர்மன் தேசத்திலுள்ள டார்மோவா என்னும் ஊரில் ஹெட் விக்ஸ்ட் ராம்ஞ வென்னும் ஓர் பெண்பிள்ளை 118-வயதுடையவளாய் உருளைக்கிழங்கு பயிரிடுந் தொழிலைச் செய்து வருகிறுளாம். உருளைக்கிழங்கு விசேஷமாய் உண்டதனுல் வலிவு அதிகரித்து வயது நீடித்ததோ!

**ஒரு ஆகாயகமனியின் பிராண விபத்து.**—ஆகாய கமன வித்தையில் தனக் கிணையில்லை யென பேர் பெற்றவரும், இங்கிலாந்திலிருந்து 1117 மைலுக்கப்பாலுள்ள ருஷியாவுக்கு ஆகாய விமானமேறிப் பறந்து காண்பித்து பிரக்கியாதி யடைந்தவருமான மிஸ்டர் ஏ. இ. காட்ரின் என்பவர் சமீபத்தில் உயிர் துறந்தனராம்.

**ஞானவோடுக்கம்.**—சென்னை அதிமேற்றிராசனக் கோவிலில் சென்றமாதம், 15ந் தேதி குருக்களுக்கு ஞான வொடுக்கம் ஆரம்பித்து, 20-ம் தேதி முடிவு பெற்றது. வடபாகத்தி லிருக்கும் குருக்களுக் கெல்லாம் இன்னெரு ஒடுக்கம் இம் மாதம் முதல்வாரத்தில் பல்லாரியில் நடை பெறும்.

**விநோத பொருட்காட்சி சாலை.**—இந்தியாவில் இதுவரையில் காணுத ஓர் மகத்தான விநோத பொருட்காட்சி சாலை பொம்பாயில் 1914-15-ம் வருஷத்தில் ஏற்பாடு செய்யப்படப் போகிறதென்றும், அந்த காட்சி சாலையை, இந்தியாவிற்கு அக்காலையில் விஜயஞ் செய்ய உத்தேசித்திருக்கும் வேல்ஸ் இளங் குமாரர் திறந்துவைப்பாரென்றுஞ் சொல்லப்படுகிறது.

**இந்தியா சிலோன் இருப்புப்பாதை.**—இது கடைசியாய் தீர்மானிக்கப்பட்டபடி அடுத்த பெப்ரவரி மீ 24-ம் தேதி கனந்தங்கிய சென்னைக் கவர்னர் அவர்களால் திறக்கப்படுமென்று தெரியவருகிறது. அப்போது கனந்தங்கிய இலங்கைக் கவர்னர் அவர்களும் விஜயஞ் செய்வார்கள். இது சம்பந்தமாய் வெகு சிறப்பு ஆடம்பரங்கள் செய்ய முஸ்திப்பு செய்யப்படுகிறது.

**குருப்பட்டம்.**—சென்ற டிசம்பர் மீ 20உ யாகிய சனிக்கிழமை யன்று கண்டியிலுள்ள அர்ச். பாப்புவின் குருமடத்தில் 8 பெயருக்கு குருப்பட்டம் அளிக்கப்பட்டதென வறிந்து மிக்க சந்தோஷிக்கிறோம். இவர்களுக்குள் ஒருவர் சென்னை அதிமேற்றிராசனத்துக்கும், ஒருவர் வேராப்பள்ளி அதிமேற்றிராசனத்துக்கும், இருவர் திருச்சி மேற்றிராசனத்துக்கும், திருக்கொணமலை, பூனு, ஆஜ்மீர், டாபோ ஆகிய இந் நான்கு மேற்றிராசனங்களுக்கு ஒவ்வொருவர் குருப்பட்டம் பெற்றுர்கள் இவர்களுக் கெல்லோருக்கும் நம்முடைய உள்ளப் பூர்வமான வாழ்த்து கூறுவதோடுகூட இவர்கள் திடகாத்திரராய் பல்லாண்டு நமதாண்டவரின் திராட்சத்தோட்டத்தில் பாடுபட் டுழைத்து பல்லாயிரம் ஆத்துமங்களை இரட்சிக்கக் கிருபை பெறும்படி பிரார்த்திக்கிறோம்.

**ஓர் உயர்ந்த உத்தியோகம்.**—இங்கிலாந்திலுள்ள இந்தியா கவுன்சிலுக்கு சர் கிருஷ்ண குப்தா என்னும் இந்திய கனவானை வைஸ் பிரசிடெண்டாக நியமித்த நியமனம் இந்தியர்கள் எல்லோருக்கும் திருப்திகரத்தைத் தந்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆங்கிலேயருக்கும் தங்களுக்கும் இராஜாங்க உத்தியோக விஷயத்தில் சமத்துவம் கிடைக்கவேணு மென்று ஆவலுடன் விரும்பியிருக்கும் இந்தியர்கள் அச் சமத்துவ குறியை நோக்கிச் செல்லும் பிரயாணத்தில் இந்த நியமனம் இன்னெரு மைல் கல் அன்றோ?

**பாம்பு கடிக்குத் தண்ணீர் மருந்து.**—வட இந்தியாவிலுள்ள பாவ, நகரைச்சார்ந்த ரிப்டா என்னுமூர் போஸ்ட்மாஸ்டருக்கு சமீபத்தில் பாம்பு கடிக்க, அவர் ஸ்மரணை யற்று, கீழே விழுந்து வாயில் நொப்பும் நுரையுந் தள்ள எல்லாராலும் கைவிடப்பட்டாராம். அப்போது அவ்வூர் உபாத்தியாயர் ஒருவர் வந்து, அவர் தலையின் பேரில் 25 குடந் தண்ணீர் ஊற்ற அவருக்கு ஸ்மரணை கொஞ்சம் வந்து படிப்படியாய் சௌக்கிய முற்றுராம். இதற்கு முன்னேயும் இந்தத் தண்ணீர்ச் சிகிச்சையால் பாம்பு கடியுண்ட ஒருவர் குணப்பட்டாராம்.



OFFICE OF THE REGISTRAR ... 7 JAN 191.

**ஓர் படுபாவி.**—கோகலே என்பவர் ஒரு பெரிய கல்விமான், பரோபகாரி, சுதேசாபிமானி, சுயபரித்தியாகி என்பது யாவருக்குந் தெரிந்த காரியம். சுதேசாபிமானம் பூண்டவர்கள் அவரைத் தெய்வ மெனப் பூசிக்கிறுர்கள். இப்படிப்பட்ட மகானிடத்தில் அதிருப்தி கொள்பவன் எவனும் எக்காலத்திலுமிரான். ஆனுல், சமீபத்தில் அவருக்கு ஓர் அநாமதேயக் கடிதம் வந்தது. அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது: நீ இன்னும் ஒரு வருஷத்துக்குள் சட்ட நிருபண சபையை விட்டு நீங்க வேண்டும். அதன் பிறகு கவர்ண்மென்டோடு எந்த விவகாரமும் வைத்துக்கொள்ளக் கூடாது. இப்படிச் செய்யத் தவறுவையே யாகில் தப்பாமல் வெடி குண்டுக் கிரையாவாய்” என்பதே ஆ! என்ன பாதகம்! இப்படிப் பட்ட படுபாவியும் மிருப்பானு!

**ஸ்திரிகளுக்குத் தனி கோர்ட்டு.**—அமெரிக்காவைச் சேர்ந்த சிக்காகோ என்னு நகரில் ஸ்திரிகளுடைய வியாச்சியத்தை விசாரிக்க பிரத்தியேகமான ஒரு நியாயஸ்தலம் ஏற்படுத்தி யிருக்கிறுர்களாம். அதில் நியாயாதிபதிகளும் ஸ்திரிகள், நியாய வாதிகளும் ஸ்திரிகள்; குமஸ்தாக்கள், சேவகர்கள் முதலிய சகலரும் பெண்களே. ஆண்மக்கள் அங்கு போகப்படாதாம். ஸ்திரி, புருஷர் என்னும் தார தம்மியம் பாராமல் எல்லோரும் சமரசமாய் சஞ்சரிக்கும் அந் நாட்டிலேயே ஸ்திரிகளுக்கென்று ஓர் தனிக் கோர்ட்டு ஏற்பட்டிருக்கக்கொள்ள, கோஷா படுதாஎன வழங்கும் இவ்வூரில் ஏன் அவ்வண்ணம் செய்யக் கூடாது? ஆனுல் இவ்வூரில் ஸ்திரி வியாச்சியக்காரர்கள் வெகு சிலரேயெனிலோ பெண் கோர்ட் ஒன்று ஏற்படும் பட்சத்தில் பெண் வியாச்சியம் தானுய் உண்டாகிறது எனச்சொல்லலாமே.

**லண்டனில் பூஸ்திதி விற்பனை.**—லண்டன் நகரத்தில் “டியூக் ஆப் பெட்போர்டு” என்னும் பெட் போர்டு பிரபுவுக்குச் சொந்தமாயுள்ள “கவன்ட் கார்டன் எஸ்டெட்” என்னும் பூஸ்திதி சமீபத்தில் விற்கப்பட்டது. அதை முதலில் வாங்கின விலை கொஞ்சங் குறைய மூன்று லட்சம் ரூபாயாம். ஆனுல் இப்போது விற்ற விலையோ அபாரமானதொகை. அதன் விற்கிரய பத்திரம் எழுத முத்திரைக் கடுதாசி மாத்திரம் 35,000 பவுன் அதாவது 5,25,000 ரூபாய்க்கு வாங்கவேண்டிய தாயிற்றுனுல், அதன் விற்கிரயம் எவ்வளவென்று யூகித்துக் கொள்ளலாம். லண்டனுனது இப்போது அவ்வளவு பணம் பெருத்த வூராய் விட்டது. ஷெ பூஸ்திதி 19 ஏக்ரா கொண்டதும், 26 தெருக்கள் அடங்கியதும் அநேக பெரிய பங்களாக்கள் உள்ளதுமான பெரிய சொத்து.

**சமுத்திர ஜலத்தை நல்ல ஜலமாக்குதல்.**—வட அமரிக்கா தேசத்தைச் சேர்ந்த சான்பிரான்சிஸ்கோ என்னும் பட்டணத்தில் நல்ல தண்ணீர் கஷ்டமெத்த. இதைப் பரிகரிக்குமாறு அவ்வூரார் செய்த பல யோசனைகளில் சமுத்திர ஜலத்தைக் காய்ச்சி நீராவியாக்கி அதைக் குளிரவைத்து ஜலமாக்கி ஜனங்களுக்கு சப்ளை செய்வது ஒன்றுகும். அவ்வளவு பெரிய பட்டணத்துக்கு வேண்டிய அளவு ஜலம் உண்டு பண்ண அபார செலவு பிடிக்குமாதலால் சமுத்திர ஜலத்தைக் காய்ச்சுவதற்கு அநேக மயில்களுக்கு அப்பால் உள்ள எரிமலையை அடுப்பாக யுபயோகித்து, குழைகளின் வழியாய் நீராவியைக் கொண்டுவந்து ஜலமாக்க உத்தேசித்திருக்கிறுர்கள்.

**“புதுச் சைவம்.”**—இப்பெயர்கொண்ட துண்டுப் புத்தகம் ஒன்று, எமது அரிய நேசராகிய யாழ்ப்பாணத்து சங். சா. ஞானப்பிரகாச சுவாமிகளால் அனுப்பப்பட்டது. அவருக்கு நமது அன்பார்ந்த வந்தனஞ் செலுத்துகின்றோம். இப் புத்தகத்தில் “புலாலுண்ணுமை” “ருத்திரப் பிரசங்கம்” ஆகிய இவ்விரண்டு விஷயங்களைப் பற்றியும் சைவர்களுக்குள்ள பழைய கொள்கைகளுக்கும் புதிய கொள்கைகளுக்குமுள்ள வித்தியாசத்தை செவ்வனே விளக்கிக்காட்டி அவைகளின் ஆசாபாசத்தையும் வெளியாக்கி யிருக்கிறுர். இவர் வேத தர்க்க விஷயமாய் வெளியிட்ட அரிய புத்தகங்கள் அநேகம் இப்போது பேசப்படுகிற புத்தகம் அவைகளில் 15-வது இலக்கமுடையது. இவை ஒவ்வொன்றையும், இந்துக்கள் கக்கும் பல தப்பறைகளைக் கண்டிக்கத்தடக்க கிறிஸ்துவர்கள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தல் நன்று.

**போக்கவல்லது.**—சாராயத்தி லுள்ள மயக்கந்தரும் சத்துக்கு “ஆல்கோல்”

என்று பேர். இந்த சாராயச் சத்தானது துணிகளிலுள்ள கறைகளைப் போக்கி விடுகிறதென்று ஒரு பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. அது துணிகறைகளை மாத்திரமல்ல, துணிகளையே போக்கிவிடுகிறதென்றும், கறைப்பட்ட துணியையும், கறைப்படாத துணியையும், அதைக் குடிப்பவனுடையவும், அவன் பெண்சாதி பிள்ளைகளுடையவும் எல்லாத் துணிகளையும் போக்கி விடுகிறதென்றும் கிறிஸ்துவர்கள் அறியக் கடவார்கள். இன்னும் அவனது வீட்டிலுள்ள தட்டு முட்டு சாமான்களையும், சாப்பாட்டறையிலுள்ள உணவுப் பொருட்களையும், பெண்சாதியின் முகத்திலுள்ள சந்தோஷச் சிரிப்பையும், குடும்பத்திலுள்ள சமாதான சந்தோஷங்களையும் பற்றப்போக்கிவிடும். வஸ்துக்களைப் போக்கும் விஷயத்தில் சாராயத்துக்கு நிகரானது எதுவு மில்லை.

**ஜூடிஷியல் அதிகாரமும், எக்சேக்குயுடிவ் அதிகாரமும்.**—இப்போது நடந்துவருகிறபடி ஊர் ஆளும் அதிகாரமும், நியாய துரந்தரமும் ஒரே உத்தியோகஸ்தர் வகிக்கப்படாது; இவ்விரண்டும் தனித்தனியே பராமரிக்கப்படவேண்டு மென்ற வாதம் அநேக வருஷங்களாய் நடந்துவருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த வாத விஷயத்தில் தங்களுக்குள்ள அபிப்பிராயத்தை இந்தியா கவர்ண்மென்டார் இப்போதுதான் எழுதி இங்கிலாந்திலுள்ள இந்தியா ஸ்டேட் செக்ரெடரிக்கு அனுப்பியிருக்கிறார்களெனத் தெரியவருகிறது. அதிகாரஞ் செலுத்துகிறவனும், நியாயஞ் செலுத்துகிறவனும் ஒருவனாயிருந்தால் ஜனங்களுக்கு சரியான நியாயம்கிடைக்காதென்பது அநேகருடைய கொள்கை. இதுவிஷயத்தில் கூடிய சீக்கிரத்தில் ஒரு தீர்மானம் கிடைக்கும்போலும்.

**“அர்ச். சவேரியார் அம்மானை”.**—இப்பெயர் கொண்ட புத்தகம் ஒன்று வந்தனத்துடன் வரப்பெற்றோம். இது சிந்துதேசத்தில் சத்திய வேதம் வேரூன்றி தழைக்கச் செய்த நமது ஞானத் தந்தையாகிய அர்ச். சவேரியாரின் திருச்சரித்திரத்தை மெத்த விவரமாயும், தெளிவாயும், இனிமையான நல்ல தமிழில் இலங்கை, அச்சுவேலி, ம-ள-ள-ஸ்ரீ அ. சவரிமுத்து உபதேசியார் அவர்களால் இயற்றப்பட்டது. இவர் தம் பேர் கொண்ட அர்ச்சியசிஷ்டவர்மேல் பேரன்பு கொண்டவராய் அவரது சரித்திரத்தை வெகு சிரமப்பட்டு சாமார்த்தியமாய் எழுதியிருக்கிறார். இது மரிகிருதம்மாள் அம்மானை, கித்தேரியம்மாள் அம்மானை முதலியவைகளைப் போல மிகப் பிரியத்துடனும் லாபகரத்துடனும் வாசிக்கப்படத்தக்க அரிய புத்தகமென்பதிற் சந்தேகமில்லை. இதன் விலை முதலிய விவரங்களை அறிய விரும்புவர்கள் யாழ்ப்பாணம், அச்சுவேலி, ஞானப்பிரகாச யந்திரசாலை மானேஜருக்கு எழுதிக் கொள்க.

**எல்லா சந்தாதாரர்களுக்கும் இனாம்.**-சென்னை பந்தர் தெருவில் சுருட்டு சிகரட் முதலிய சாமான்களில் (Cigar Mart, Oilmanstores and Stationers) பாரிய வியாபாரஞ்செய்யும் கத்தோலிக்கு வியாபாரியாகிய ம-ள-ள-ஸ்ரீ, தி. ம. மாணிக்கம் பிள்ளையவர்கள் நமது “நல்லாயன்” அச்சியந்திரசாலையில் தம்முடைய சொந்த உபயோகத்துக்காக அச்சிட்ட காலண்டர்களில் நம்முடைய விசேஷ வேண்டுகோளின்படி, நமது சந்தாதாரர்களாகிய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலண்டர் இனாமாகக் கொடுக்க ஒருப்பட்டார்கள். இதற்காக நாம் அவருக்கு மிகுதியும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் காலண்டரும் இப் பத்திரிகையோடு ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நன்றிக்குப் பிரதி நன்றியாக, நமது நண்பர்களில் ஷை சாமான்கள் தேவையுள்ளவர்கள் எல்லாரும் அவருக்கு எழுதி தருவித்துக் கொள்வார்களென்று கோருகிறோம்.

**ஓர் கர்தினால் மரணம்.**—அர்ச். பாப்பானவரின் வத்திக்கான் ஆலயத்து பெரிய குருவாகிய பேர்போன “கார்டினல் ரம்போலா” என்பவர் சென்ற மீ 16-ம் தேதி திடீரென அசௌக்கிய முற்று அன்றிரவே மரண மடைந்தார். இவருடைய மரணம் நமது பரிசுத்த பிதாவை துக்க சாகரத்தில் அமிழ்த்தி விட்டது. இறந்த கர்தினாலின் சடலத்துக்கு சகல மரியாதையும் ஆடம்பரமும் செய்யும்படி கட்டளையிட்டார். இவருக்கு வயசு 70. இவர் பாப்பானவரிடத்தில் ஊழியம் வகித்த சென்ற 43 வருஷங்களாய்



பற்பல உத்தரவாதமும் கௌரவமும் பொருந்திய உத்தியோகங்களை மெத்த சாமர்த்தியமாய் நடத்திப் புகழ்பெற்றார். இவ்வாறு இவர் இகத்தில் உந்நத பதவியும் புகழும் பெற்றதுபோல பரத்திலும் இவருக்கு மேன்மையான இடம் கர்த்தர் கட்டளையிடுவாரெனக் கோருகிறோம்.

**இராயபுரம் ஆஸ்பத்திரி.**—இப்போது இராயபுரத்திலுள்ள கவர்ண்மென்ட் ஆஸ்பத்திரியானது சிறியதாயும், பல விஷயங்களில் சௌகரியக் குறைவுள்ளதாயு மிருப்பதை யுத்தேசித்து, பெரிய ஆஸ்பத்திரி ஒன்று இவ்விடத்தில் கட்டப்படவேண்டுமென்ற நெடு நாள் கருத்து சென்ற மீ 19-ம் தேதி நிறைவேறலாயிற்று. அன்று காலை மேன்மை தங்கிய கவர்னராகிய பெண்ட்லாண்டு பிரபு அவர்கள் ஷை கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நட்டார்கள். இக் கட்டிடத்துக்கு கவர்ண்மென்டார் ஏழு லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

**காலண்டர்கள்.**—கொழும்பு, புறக்கோட்டையில் வேதச்சாமான்கள் விற்பனை செய்யும், மிஸ்டர் ச. பி. பாய்வாவால் அர்ச். செபமாலை மாதாவின் அழகிய படம் அமைந்த ஓர் நேர்த்தியான சீர்மைசுவர் காலண்டர் நமக்கு அனுப்பப்பட்டது. இது தடித்த வழவழப்பான அட்டையில் ஷை படம் வர்னத்தில் அமைக்கப்பட்டும், அதைச் சுற்றி அழகான புஷ்பக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும், அதனடியில் ஒவ்வொரு தேதிக்குங் கிழித்தெறியத்தக்க தேதி காலண்டர்கள் இணைக்கப்பட்டுமுள்ளது. இந்த காலண்டர்கள் கிழிபட்டபின் அப்படத்தைச் சட்டத்திலிட்டு வீட்டில் மாட்டிவைத்துக் கொள்ளலாம். விலை அணா 8. இதைப்பற்றிய மற்றும்விவரம் அறிய விரும்புவர்கள் விளம்பரப் பக்கங்களை பார்த்துக் கொள்ளலாம். எவ்விதத்திலும் மேற்கண்ட காலண்டர் மாதிரியாகவே இன்னொரு காலண்டர், (ஆனால் கொஞ்சம் குறைந்த தடிப்புள்ளது) இருதயநாதர் படம் அமைக்கப்பட்டது, மெத்த அழகு வாய்ந்தது கொழும்பு, ஜாம் பேட்டா தெருவில், “கிழ்தேச அபூர்வ பண்டகசாலை” வைத்திருக்கும் மிஸ்டர் ஜே. எம். எம். பெர்நான்டோ விடமிருந்து வரப்பெற்றோம். இதன் விலை 7 அணா. இதைப் பற்றிய விவரத்துக்கும் விளம்பரப் பக்கத்தைப் பார்க்க.

**தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.**—இச் சங்கத்தின் 1913௵த்தின் வருஷாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 14-ந்தேதியாகிய புதன்கிழமையன்று கூடலூர் அர்ச். சூசையப்பர் கலாசாலையில், சென்னை யதிமேற்றிராணியா ராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும். இக்கூட்டத்தில் சங்கத்தின் ஒழுங்குகளில் சில முக்கியமான மாற்றங்களைப் பற்றி ஆலோசிக்கப் போகிறபடியால் அங்கத்தினர்கள் பெருந் தொகையாய் விஜயஞ் செய்வார்களென காரியதரிசி கோருகிறார். காரிய நிர்வாக சபையார் கூட்டமும் அத்தினத்திலேயே கூட்டப்படும் என அறிவிக்கப்படுகிறது. ஷை கூட்டத்திற்கு வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு வேண்டிய இடம் சாப்பாடு முதலிய சௌகரியங்கள் ஏற்கெனவே சித்தப்படுத்தவேண்டு மாகையால், கூட்டத்திற்கு விஜயஞ் செய்ய எண்ண முடையவர்கள் தங்கள் எண்ணத்தைக் காட்ட தேதிக்கு மூன்றுநாள் முன்னதாகவே, கூடலூர் அர்ச். சூசையப்பர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ, ஏ. பி. ஞானுசாமி நாயுடுகாருக்குத் தெரிவித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்.**-தென் ஆப்பிரிக்காவில் நமது இந்தியர்கள் எதிர்க்காமல் எதிர்ப்பதை விடாமல் பிடிவாதமாய்ச் செய்துவருகிறார்கள். இதுகாரணமாய் அநேக இந்திய கூலிகள் தங்களுடைய வேலைகளுக்குப் போகாமல் ஒரே கட்டாய் நின்றுவிடுகிறார்கள். சில வேலைத் துறைகளில் இந்தியர்கள் வேண்டுமென்று பொருட்சேதம் உண்டு பண்ணுகிறார்களென்றும், தங்களுடைய துராகிருத செய்கைகளால் ஐரோப்பியர்களுக்கு கோபமூட்டி, அடி, உதை, முதலிய குரூரங்களை வருவித்துக் கொள்ளுகிறார்களென்றும், இப்படி அடியுண்டதனால் நாகடு என்னும் ஒருவன் உயிர் துறந்தானென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அவ்வூர் வெள்ளையர்களோ தாங்கள் ஒருபோதும் இந்தியர்களுக்கு அநியாயமான வதை செய்ததில்லையென்றும், அடியுண்ட காரணத்தால் ஒருவனும்

இறந்ததில்லையென்றும் சாதிக்கிறார்கள். இதில் எது உண்மை, எது பொய்யென்று விசாரித்தறிய ஓர் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று நமது காருண்ய கவர்னர் ஜெனரலாகிய ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபடியே ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அக் கமிட்டியில் சேர்ந்துள்ளவர்களில் இருவர் இந்தியர்கள்மட்டில் ஏற்கெனவே துர் அபிப்பிராயங் கொண்டவர்கள் என்றும், இவர்கள் பட்சபாதகமல்லாத தீர்மானஞ் செய்யமாட்டார்களென்றும், அவர்களுக்கு பதில் வேறு இருவர் நியமிக்கப்படவேண்டுமென்றும், நெட்டாலிலும் இந்தியாவிலுங் கூட்டங் கூடிப்பேசி, மனு செய்துகொள்ளுகிறார்கள். ஆயினும் இதற்குள்ளாக ஷை விசாரணைக் கமிட்டி கூடிவிட்டது. இதன் அக்கிராசனாதிபதியாகிய ஜட்ஜி சாலமோன் அவர்கள் நெட்டால் இந்தியர்களுக்குத் தலைவர்களாகிய மிஸ்டர் காந்தி, போலக், கல்லன்மாக் முதலானவர்கள் உடனே காவலினின்று விடுதலை செய்யப்படவேண்டுமென்றும், விசாரணை திறந்த விடத்தில் செய்யப்படவேண்டுமென்றும், இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டுள்ள வாதி பிரதிவாதிகளைச் சேர்ந்த பிரதிநிதிக் கூட்டங்களுடையவும், பிரியமானால் இந்தியா கவர்ண்மெட்டினுடையவும் நியாயவாதிகளைக் கேட்டு, தீர்மானங்கள் செய்யவேண்டுமென்றும், கமிட்டியார் கவர்ண்மென்ட்டுக்கு சிபாரிசு செய்திருப்பதாக அறிவித்தார். இது எல்லோருக்கும் மெத்த திருப்திகாரத்தை உண்டாக்கக்கூடிய அறிவிப்பு என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கமிட்டி, மறுபடியும் டர்பனில், இம்மாதம் 12-ந்தேதி கூடிவிசாரணை ஆரம்பிக்கும்.

பேரம்பூர் வோர்க்ஷாப்பில் கலகம்.—சென்னைக்கடுத்த பெரம்பூரில் எம். அன். எஸ். எம். ரெயில்வே ஓர்க்ஷாப்பில் ஏறக்குறைய 5,000 வேலையாட்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுடைய வேலை விஷயமாய் சமீபத்தில் ஓர் உடன் படிக்கை எழுதி வாங்கிக் கொண்டார்கள் அதிகாரிகள். இதில் கண்ட ஷரத்துக்கள் பெரும்பாலும் வேலையாட்களுக்கு பிரதிகூலமாகவே இருந்தனவென்று சொல்லப்படுகிறது. ஆகையால் இவர்கள் உடன் படிக்கைக்குக் கையொப்பமிட்ட போதிலும் மிகவும் அதிர்ப்தியுடையவர்களாயிருந்தார்கள். இதனோடுகூட, காலையிலும், பகலிலும், வேலைத்துறைக்குள் பிரவேசிக்கும் காலவரையறை அரைமணி நேரமாயிருந்ததை கால் மணியாகக் குறைத்து உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அதாவது ஷை ஐயாயிரம் ஆட்கள் வேலை செய்யும் இடம் மெத்த விசாலமுள்ளது; அந்தந்தத் தொழிலாளிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பட்டறைகள் அனந்தம் வெவ்வேறாயிருக்கின்றன. இத்தனை பேரும் ஒரே வாசற்படி வழியாய்த்தான் உட் செல்ல வேண்டும். இந்த கேட், வேலை தொடங்கக் கால் மணி நேரத்துக்கு முன்னேதான் திறக்கப்படும். இந்த 15 நிமிஷத்துக்குள் எல்லோரும் உட்சென்று தங்கள் தங்கள் ஸ்தானத்தில் அமர்ந்து வேலையாரம்பிக்க வேண்டும். மணியடிக்கும்போது அங்கில்லாதவர்களுக்கு அரைமணி நேரத்துக்கூலி அபராதம் பிடிக்கப்படும் என்பது உத்தரவு. இதற்கு வேலையாட்கள் உடன்படவில்லை. ஆகையால் அதிகாரிகளை எதிர்த்துக் கலகம் பண்ண எல்லோரும் ஒருமிக்கத் தீர்மானித்துக் கொண்டார்கள் போலும். சென்றமீ 19-ம் தேதி பகல் சாப்பாட்டுக்குப்பின் தச்சப்பட்டறையாட்கள்வேலையுமென்று நேரஞ்சென்று போய் போர்மென்னுடன் எதிர்த்துப் பேசி அவன்மேல் மரத்துண்டையும், ஆயுதங்களையும், எறியத் தலைப்படவே, இவர்களுடன் ஒருவர்பின் ஒருவராய் மற்றவேலைக்காரர்களும் 300, 400 பேர்மட்டும் சேர்ந்து போர்மன், டிப்டிபோர்மன் முதலிய அதிகாரிகளை தாக்கத் தலைப்பட்டார்கள். இக் கலகம் அதிகரித்து பெரிய ஆபத்துக் குள்ளாவதை யறிந்து வாலன்டியர் படைகளில் சேர்ந்தவர்களிற் சிலர் துப்பாக்கிகொண்டு சுட்டார்கள். இதனால் ஒருவன் விழுந்து செத்தான்; நால்வர் சுனகாயம்பட்டார்கள். துப்பாக்கி சத்தங்கேட்கவே கல்லெறியப் பட்ட காக்கைக் கூட்டம் போல் கலகக்காரர்களெல்லாம் ஓடிப்போனார்கள். கலகம் ஒழிந்தது. பின்னும் அது மூளக்கப்போகிறதென றஞ்சி, போலீசுப் படைகளும் இராணுவப் படைகளும் அழைக்கப்பட்டன. இந்தக் கலகத்தினிமித்தம் ஷை ஓர்க்ஷாப்புகள் அடுத்த ஜனவரிமீ 2-ம் தேதி வரையிலும் மூடிவைக்கப்பட்டிருக்கின்றன.

---



# DOMESTIC OCCURRENCES.
# குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒரு போதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## நன்மரண அறிக்கைகள்.

### பாப்பாகுடி.

கனம். அ. மி. ஞானம் அவர்கள் மனைவியும் எனது அருமைக் குமாரத்தியுமாகிய மரியம்மாள், பெற்றோர் சகோதரர்கள் சகோதரிகளையும் இன்னு மற்ற பந்துமித்திரர்களையும் விட்டுவிட்டு இம்மாதம் 8-ந்தேதி பரலோக பிராப்தியடைந்தனள். ஒருபர. பிரி. திரி. வேண்டிக் கொள்க.

இப்படிக்கு,
20—12—13. அ. மி. அந்தோனி.

### கூடுதாழை.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கூடுதாழையில் என தருமைத் தமையனார் S. ரொஸேரியூ பெர்னாந்தவர்கள் நடப்பு வியாதியால் பீடிக்கப்பட்டு கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப் பெற்று, தமது இரண்டு சிறு புத்திரிகளையும் பந்துமித்திரர்களையும் பரதவிக்க விட்டு, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நவம்பர்மீ 10-ந் தேதி திங்கட்கிழமை அவர் கேட்டுக்கொண்டபடி பரலோக பிராப்தியானார். இதைக் கண்ணுறும் நண்பர்களே, இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
20—12—13. S. சைமன் பெர்னாந்து.

### திருநெல்வேலி.

திருநெல்வேலி அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் வசித்துவந்த என் அருமைத் தந்தை மி. அந்தோனி அவர்களுக் குண்டாயிருந்த நெடுநாள் நடைபிணியானது தக்க சிகிச்சைகள் செய்தும் குணப்படாமற்போக, அவர் கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் பூரணமாய்ப் பெற்று, 1913-ஆம் டிசம்பர்மீ 7-ந்தேதியாகிய பின்னேரம் 5 மணிக்கு சுமார் தமது 50-ம் வயதில் தமது மனைவி, இரு குமாரர், மருமகள் மற்றும் குடும்பத்தார்களையும் இக் கண்ணீர்க் கணவாயில் கலங்கிப் பரதவிக்கவிட்டு அவர்கள் மத்தியில் நமது திரியேக ஜெகத்ரக்ஷகராகிய கருணையங் கடவுளின் பரமபதம் சேர்ந்தனர். அவரின் சடலம் மறுதினம் 8-ம் தேதி ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த தேவமாதாவின் திருநாளாகிய திங்கள்கிழமை பகல் சுமார் 12 மணிக்கு அவருடைய குடும்பத்தாரும் மற்றும் திருச்சபையோர்களும் புடை சூழ, ஜெப ஆராதனைப் பாடல்களுடன் வெகு பூச்சியத்துடன் எடுத்தேகப்பட்டு, ஷை ஊர் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கனதனவான்கள் பந்துமித்திரர்கள் யாவரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக்கொள்ளத் தாழ்மையுடன் அவர்களை வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அர்ச். செபஸ்தியார் கோவில் தெரு, திருநெல்வேலி 17-12-13. } தந்தையை இழந்து பரிதபிக்கும் மகன், மி. அ. செபஸ்தியான்.

### கும்பகோணம்.

கும்பகோணம், அர்ச். சம்மனசுக்கள் மடத்தில் கன்னியாஸ்திரியாயிருந்த எனது பிரிய தங்கை மரி ஆரி சகோதரி என்னும் பட்டப் பெயர் பெற்ற அமுர்தம் சகோதரி, சில காலம் தேக அசௌக்கியமா யிருந்து அம்மடத்துப் பெரியோர்களால் எவ்வித பரிகாரம் செய்தும் குணமடையாமல், கடைசி தேவத்திரவிய அநுமானங்களை ஸம்பூரணமாய்ப் பெற்று, நிகழும் 1913ஆம் செப்டம்பர்மீ 22உ காலை 10½ மணிக்குத் தனது ஆத்துமத்தை ஆண்டவரின் திருக்கரங்களில் ஒப்புக்கொடுத்தனள்.

இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு ஸ்திரிபுமான்கள் ஷை ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

M. P. D. JOSEPH alias,
Duraisawmy Pillai,
*Cold Storage Co., Ltd.*
*Kuala Lumpur, 15-10-1913.*

**In Ever Loving Memory**

**of Our dear mother.**

MARIA IGANATIUS CRUZ SINNAMAL MACHADO.

(Beloved wife of Manuel Fernando.)

**Died on 19th November 1899.**

Oh! mother dear although passed 14 years
Yet we mourn your sorrowful death
Still we spend in tears
As long as we live on earth.
Leaving all the worldly vanity
you have gone to the sweet Eternity
Amidst the Angels choir,
Where you are praising God for ever.

---

(inserted by her sorrowing sons.)

19-11-1913. Tuticorin

---

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

---

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவர் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெயிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையாய் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய நாளது வரையில் கூடாமற்போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்துவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட ஏற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து; ஏறக்குறைய ரூ 2,500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவுசெய்ய உதவிபுரிய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கனதனவான்களும் சகல கிறிஸ்துவர்களும் தம்தம்மாலியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையா யிருக்கிறோம் நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பா ளென்பது திண்ணம்.

| | ரு. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை, | 450 | 4 | 0 |
| Mr. அந்தோனி, (பெரமச்சிப்பாளையம்) | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து, (கற்டுப்பாளையம்) | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து, (மயிலம்பட்டி) | 1 | 0 | 0 |
| ,, செல்வப்பன், ஷை | 1 | 0 | 0 |
| ,, இராயப்பன், தண்ணிதாசனூர் | 1 | 0 | 0 |
| ,, பாப்பண்ணன், (வால்கிணத்தூர்) | 1 | 0 | 0 |
| ,, ஆரோக்கியம், ஷை | 1 | 0 | 0 |
| ,, செல்வப்பன், (வேப்பமரத்துபட்டி) | 1 | 0 | 0 |
| Mrs. மதலையம்மாள், ஷை | 1 | 0 | 0 |
| ,, சின்னப்பன், (அம்மங்குட்டேர்) | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து, (நாச்சிப்பாளையம்) | 1 | 0 | 0 |
| ,, செல்வப்பன், ஷை | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து, (ஆவணியூர்) | 1 | 0 | 0 |
| ,, பெரியநாயகம், ஷை | 1 | 0 | 0 |
| ,, மதலைமுத்து, போடிநாயகன்பட்டி | 1 | 0 | 0 |
| ,, சின்னப்பன், ஷை | 1 | 0 | 0 |
| ,, சின்னப்பன், (சாவடிகாரனூர்) | 2 | 0 | 0 |
| ,, பெரியண்ணன், [சங்குப்பட்டி) | 1 | 0 | 0 |
| ,, செல்வப்பன், ஷை | 7. | 0 | 0 |
| ,, இராயப்பன் வெள்ளைக்கவுண் (டனூர் | 1 | 0 | 0 |
| ,, பெரியண்ணன், (காவடிகாரனூர்) | 5 | 0 | 0 |
| ,, சவரியப்பன், (ருயனூர்) | 5 | 0 | 0 |
| ,, பாப்பண்ணன், (கொல்லனூர்) | 5 | 0 | 0 |
| ,, A. R. குழந்தைசாமிப் பிள்ளை, (இராயப்பேட்டை) | 1 | 0 | 0 |
| ஆக மொத்தம். | 493 | 4 | 0 |



## "நல்லாயன்" அச்சுயந்திர ஆபீசுக்காக நன்கோடை.

---

"நல்லாயன்" அச்சுயந்திரசாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற ஜூன்மாதத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டு வரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்கு கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

நல்லாயன் அபிவிர்த்திக்காக Mr. F. C. தம்புசாமி பிள்ளை, Palaghat, Coromandel, Mr. A. பால்குரோஸ் நாயுடு, Champion Reef, Kolar, Mr. C. V. தாமஸ்பிள்ளை, Mount Road, Madras, ஆகிய இவர்கள் மூவரும் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்காக நாம் அவர்களுக்கு மிக்க நன்றியறிந்திருக்கிறோம். நல்லாயனுக்காக இந்த பரோபகார புருஷர் களிடம் யாதேனும் கொடுக்க ஆட்சேபனை யில்லை. இவர்கள் மூலமாயும், நமக்கு நேராயும் சேருந் தொகைகள் அப்போதைக் கப்போது இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 152 | 3 | 0 |
| Mr A. ஜான்பிள்ளை, மதுரை | 1 | 0 | 0 |
| ,, ம. சி. மர்த்தீன், பெங்களூர் | 0 | 4 | 0 |
| ,, பிலோமோன் குழத்தைசாமி, புதுவை | 0 | 8 | 0 |
| ,, S. சந்தியாகு. சரங்காரா | 0 | 8 | 0 |
| ,, A. R. குழந்தைசாமிப் பிள்ளை, இராயப்பேட்டை | 1 | 0 | 0 |
| ,, C. விக்டோரியா, கொளும்பு | 1 | 11 | 0 |
| ,, M. F. அந்தோனி, நியூராஎலியா | 0 | 15 | 0 |
| ,, மரியஜான்பெரோரா, ஹீயவெட்டா | 0 | 8 | 0 |
| ,, N. D. Deago Pillay, KulaLumpur. | 5 | 0 | 0 |
| ,, L. Johnson, Raipur | 0 | 12 | 0 |
| ,, D. அந்தோனி, பெங்களூர் | 1 | 11 | 0 |
| ,, S. Arokiasawmi Pillay, Retired Sheristadar, Trichinopoly. | 1 | 4 | 0 |
| ,, Devanayagam, Secundrabad | 0 | 15 | 0 |
| ,, S. Ponnooswamy Mudaly, Pensioner, Pondicherry | 0 | 8 | 0 |
| Rev. Fr. Paul yeruva, Kamptee | 1 | 8 | 0 |
| MrArland, Musician, Pudukotah | 0 | 4 | 0 |
| ,, S. A. Joseph, Lindula | 0 | 11 | 0 |
| இரங்கூன் கவர்ன்மெண்ட் பிரஸ் Section Holder. ம-ா-ா-ஸ்ரீ பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் மூலமாய் வசூலிக்கப்பட்ட தொகை. | 4 | 0 | 0 |
| *Total Rs.* | 175 | 2 | 0 |

---


## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு

*நெடுங்காலமில்லாதது!* **அதிமுக்கிய அறிக்கை.** *நெருங்கக்கிடைத்தது!!*

**யாவரும் தேடி யலையும் புத்தக மிதுவே யாதும்.**

## *அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை.*

இஃது எம்மால் பழைய கையேட்டுப் பிரதிகளைக்கொண்டு சென்னை திருமயிலை மேற்றிராணி ஆண்டவரவர்கள் அளித்த உத்தாரப்படி ஷை யூர் ஜார்ஜ டவுன் அர்ச். மோட்சராக்கினி மதாநாயகி மாதாவி ஞலய விசாரணைக் குரு சங். L. X பெர்னாந்தீஸ் சுவாமிகளால் நன்கு பரிசோதிக்கப் பெற்று, இலக்கண, இலக்கிய, சரித்திர வழுவில்லாமல் சுத்தப் பிரதியாக்கி நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட் டிருக்கிறது. இதில்,

அர்ச். அந்தோனியார் சரித்திர சுருக்கமும், சத்துரு சங்கார மாலையும், பதின் மூன்று தேவார மன்ருட்டும், சீட்டும், ஜெபமாலையும், அர்ச். மிக்கேயேல் சம்மனசானவருடைய சத்துரு சங்கார மாலையும், சத்துருவை ஜெயிக்கும் மந்திரங்களும், வேறு தனித்தனியான விஷயங்களும், நவமாய்ச் சிலதும் சேர்க்கப்பட்டு லோகோபகாரமாக சுலப விலைக்கு விற்கப்படுகிறது. இவ்வரிய புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. விலைஅணு, 4. வி. பி. போஸ்டில் அணு, 6.

☞ இன்னும் சில காப்பிகளே கையிருப்பு இருப்பதால் புத்தகம் வேண்டுபவர்கள் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளக்கடவார்கள்.

விலாசம், A. ஜோப்பிள்ளை. (A. Joe Pillai.)
நெ. 30, ஏழுகிணற்றுத் தெரு, ஜார்ஜ டவுன், சென்னை. E.

## அர்ச் அன்னம்மாள் மடம்,

மண்ணடி.

கத்தோலிக்குச் சகோதரர்களே!

சென்னை, மண்ணடி, அர்ச். சவேரியார் கோவிலைச் சேர்ந்த அர்ச். அன்னம்மாள் மடத்துக் கன்னியர் வசிக்கும் விடுதியானது போதுமான விசாலமும் சௌக்கியமுமில்லாததினிமித்தம், அவர்கள் அடுத்தடுத்துப் பல அசௌக்கியங்களுக்கும், சங்கடங்களுக்கும் உள்ளாகிறார்கள். தங்கள் இருப்பிடத்திலேயே இவர்களால் நடத்தப்பட்டு வரும் பெண்கள் பள்ளிக்கூடத்துக்கும் தக்க இடமில்லாமையால், பள்ளிச் சிறுமிகளும் இடைஞ்சல்பட்டு வருகிறார்கள். இவ்விருவகைக் குறைகளையும் பரிகரிக்க பாடசாலைக்கென்று ஒரு தனிக் கட்டிடம் கட்டுவதற்கு முயன்றதில், அதின் செலவுக்கு ரூ. 10,000 பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது. அண்டையயலில் இதர மதத்தினரால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்துக் கட்டிடங்களின் மத்தியில், கத்தோலிக்குப் பள்ளிக்கூடம் கேவலமாயிருக்க ஒண்ணாதாகையால், ஷை மதிப்பின்படியே ஓர் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு பரோபகாரமுள்ள கத்தோலிக்கு ஸ்திரி புமான்கள் அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற தொகை உதவி செய்து, இத்தரும காரியத்தை முடித்து வைப்பார்களென அவர்களை மெத்தவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இதற்கு ஒத்தாசைசெய்யும் விசுவாசிகளுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காக கன்னியரும், இவர்கள் கண்காணிப்பில் இருக்கும் ஏழைப் பிள்ளைகளும், பாடசாலைச் சிறுமிகளும் தங்கள் அனுதின செபத்தில் வேண்டிக்கொள்வார்கள்.

நன்கொடை எவ்வளவு சிறிதாயினும் நன்றியறிதலுடன் அங்கீகரிக்கப்பட்டு "நல்லாயனில்" பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 144 | 1 | 0 |
| Mr. N. J. Deago Pillai, (Kuelalumpur | 3 | 4 | 0 |
| Mr. K. J. இராசாச்சாரி, செவ்வாப் பேட்டை | 0 | 3 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 147 | 8 | 0 |

மடத்து முதலாளித் தாயாரம்மாள்.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் சருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 1,600. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்ப தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்கு பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டு கோலாயிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 1974 | 14 | 6 |
| Mr. K. J. Deago Pillai (Kuelalumpur | 5 | 0 | 0 |
| Mr. K. J. இராசாச்சாரி, செவ்வாப் (பேட்டை | 0 | 4 | 0 |
| Mr. A. ஆனந்தனுத பிள்ளை, | 2 | 0 | 0 |
| ,, M. மரியான், (புதுப்பேட்டை) | 2 | 0 | 0 |
| ,, மரியதாஸ், (சதராசன்பட்டி) | 1 | 0 | 0 |
| ,, ஞானப்பிரகாசம் ரெட்டியார், | 5 | 0 | 0 |
| ,, A. S. பிள்ளை, (கோலாலம்பூர்) | 1 | 11 | 0 |
| ,, பிரபலநாதன், ஷை | 1 | 11 | 0 |
| நன்கொடை, | 2 | 10 | 0 |
| ஷை | 5 | 13 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 2001 | 15 | 6 |




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம். 12 } பெப்ரவரி, 1914. { இலக்கம். 2

## THE HOLY SEASON OF LENT.
## பரிசுத்த தபசு காலம்.

நம்முடைய இரட்சணியத்தின் மட்டில் அதிக கரிசனமுங் கவலையுங் கொண்டிருக்கும் பரிசுத்த திருச் சபையின் படிப்பினைப்படி கர்த்தர் பிறந்த திருநாளுக்காக நாம் ஆகமன காலத்தில் ஆயத்தஞ் செய்து அத்திருநாளைக் கொண்டாடி முடித்தோம் அல்லவா? இப்போது இன்னொரு பெரிய திருநாளைக் கொண்டாட ஆயத்தஞ் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தத் திருநாள் கர்த்தர் உயிர்த்த திருநாள் அல்லது பாஸ்குப் பண்டிகையாம். இப்பண்டிகைக்கு ஆயத்த காலமாக தபசு காலத்தைத் திருச்சபை யேற்படுத்தி யிருக்கிறது. இந்தக் காலமும் நெருங்கிவிட்டது. இம் மாதம் 25உ விபூதித் திருநாளாகையால் அன்றைய தினம் தபசுகாலம் துவக்கமாகும்.

பூர்வீகக் கிறிஸ்துவர்கள் எவ்வளவு உயிருள்ள விசுவாசமுடையவர்களாயிருந்தார்களென்றால், விபூதித் திருநாளுக்கு முந்தியே பாஸ்கு பண்டிகைக்காக ஆயத்தஞ் செய்ய ஆரம்பிப்பார்கள். அதற்காக சிலர் எழுபது நாட்களாயும், சிலர் அறுபது நாட்களாயும், சிலர் ஐம்பது நாட்களாயும் ஆயத்தஞ் செய்வார்கள். ஆனதுபற்றியே விபூதித்திருநாளுக்கு முன்வரும் மூன்று ஞாயிறு வாரங்களும் 70-ம் நாள் ஞாயிறு-Septuagesima Sunday-என்றும், 60-ம் நாள் ஞாயிறு Sexagesima Sunday-என்றும், 60ம்-நாள் ஞாயிறு-Quinquagesima Sunday-என்றும் இன்னும் அழைக்கப்பட்டு வருகின்றன. இப்படிப் பூர்வீகக் கிறிஸ்துவர்கள் பாஸ்கு பண்டிகைக்கு 70, 60, 50 நாட்களாய் ஆயத்தஞ் செய்து அந்தத் திருநாளைக் கொண்டாடியிருக்கையில், அதற்காக நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற 40-நாட்களில் நாம் எவ்வளவோ சுறுசுறுப்பாயும், சுமுத்திரையாயும் ஆயத்தஞ் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், அந்தக் காலத்திலே நாம் செய்யவேண்டிய ஆயத்தம் எத்தன்மையானதென சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

பாஸ்குப் பண்டிகைக்காக நாம் செய்யவேண்டிய ஆயத்தம் இருவகையாகும். அதைச் சரீர ஆயத்தமென்றும், ஆத்தும ஆயத்தமென்றும் சொல்லத்தகும். சரீர

ஆயத்தம் எதில் அடங்கியுள்ளதென்றால், தபசு காலத்திலே கற்பிக்கப்படுகிற சுத்த போசனம், ஒருபொழுது ஆகிய இவைகளை யனுசரிக்கவேண்டிய நாட்களில் யனுசரித்து நம்முடைய சரீரத்தை ஒறுப்பதிலேயாம்.

மாமிச வகைப் பட்சணங்களை முற்றும் விலக்கி மரக்கறி பதார்த்தங்களைப் புசிப்பது சுத்தபோசனமாகும். ஆடு, மாடு, கோழி முதலிய சீவப் பிராணிகளால் நமக்குக் கிடைக்கும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், பாற்கட்டி, முட்டை இவைகள் முதலாய் சுத்த போசன பொருட்களாகமாட்டா. ஆகையால் பூர்வீகக் கிறிஸ்துவர்கள் இவைகளை யெல்லாம் தபசு காலத்தில் விலக்கி, மரக்கறி பதார்த்தங்களை மட்டும் புசித்து சுத்தபோசன மனுசரித்து வந்தார்கள். ஆனால் 13-ம் நூற்றாண்டில், திருச்சபையானது மனிதர்களுடைய க்ஷீணதசையையும், காலத்தையு முணர்ந்து அதுவரையிலும் கிறிஸ்துவர்கள் அனுசரித்துவந்த கடின சுத்தபோசனத்தை ஒருவாறு குறைக்க, பால், தயிர், மோர், முட்டை முதலான பொருட்களை சுத்தபோசன நாட்களிற் சாப்பிட உத்தரவளித்தது. ஆகையால், முழுதும் நாம் மாமிசத்தை சுத்தபோசன நாட்களில் விலக்கி, உத்தரவாயிருக்கும் உணவு பொருட்களையே சாப்பிட்டு, தபசுகாலத்தில் சுத்தபோசன மனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிக்கின்றி விலக்கப்பட்ட நாட்களில் மாமிசம் சாப்பிடுவோமானால், அப்படிச் செய்யும் ஒவ்வொருவிசையும் சாவான பாவத்துக்குள்ளாவோமென் றறியக்கடவோம்.

ஒருபொழுது பிடிக்கவேண்டிய நாட்களில் வழக்கம்போல முப்பொழுதிலும் சாப்பிடாமல் ஓரேபொழுது சாப்பிடுவதே ஒருபொழுது என எல்லோரும் அறிந்த விஷயம். இப்படி ஏறக்குறைய 14-ம் நூற்றாண்டுவரையிலும் ஒருபொழுது பிடிக்கும் கிறிஸ்துவர்கள் எல்லோரும் காலையிலிருந்து மாலைவரையிலும் சுத்த உபவாசமா யிருந்து, சூரியன் அஸ்தமித்த பிறகு ஒருவேளை மாத்திரம் சாப்பிடுவார்கள். இவ்வளவு கடுமையாய் ஒருபொழுது பிடிக்கும் வழக்கத்தையும் பிறகு திருச்சபை மாற்றி, மத்தியான சுமாருக்குத் திருப்தியாய் ஒரு விசை சாப்பிடலாமென்றும், மறுபடியும் இரவில் கொஞ்சமாய்-Collation-அதாவது, நாம் வழக்கமாய் சாப்பிடும் சாப்பாட்டில் மூன்றில் ஒரு பங்கு மாத்திரம் சாப்பிடலாமென்றும், உத்தரவளித்திருக்கிறது. இப்படி சுலபமாக்கப்பட்டிருக்கிற ஒருபொழுது கடமையை யனுசரிப்போர் எல்லோரும் அதை வெகு பிரமாணிக்கமாய் நிறைவேற்ற வேண்டியதல்லவா? ஆயினும் அநேகர் இதுவிஷயத்தில் தவறிப்போகிறார்கள். எப்படியெனில், தங்களுக்கு உத்தரவாயிருக்கும் சொற்ப சாப்பாட்டுக்குச் சிலர் உருசிகரமான பலகார வகைகளையும், சிலர் கிழங்கு, மொச்சக்கொட்டை, பயிறு இவைகளையும் வயிறுகொண்டமட்டும், மனங்கொண்டமட்டும் சாப்பிடுவார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் ஒருபொழுது கடனை நிறைவேற்றுகிறவர்களாவார்களா? மேற்சொன்ன உணவு பொருட்கள் வெகு சத்துவமுள்ளவைகளாகையாலும், அவைகளை உத்தரவாயிருக்கும் அளவுக்கு அதிகமாகவே இவர்கள் சாப்பிடுவதினாலும் ஒருபொழுது பிடிக்கத் தவறி, சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்களென்பது திண்ணம். தங்கள் சரீரத்தை ஒறுத்துத் தண்டிப்பதற்கு ஒருபொழுது பிடியாமல் அதற்கு நல்ல ஊட்டத்தையும் உரமையுங் கொடுத்து அதை உல்லாசிக்கப் பண்ணுவதற்காகவே இவர்கள் ஒருபொழுது பிடிக்கிறார்களென்று நாம் ஏன்சொல்லக்கூடாது? ஆகையால், வரும் தபசுகாலத்தில் ஒருபொழுது பிடிக்கக் கடமையுள்ளவர்கள் தங்களுடைய சொற்ப சாப்பாட்டைச் சரியானபடி உபயோகித்துக்கொள்ளப் பார்ப்பார்களாக. ஒருபொழுது பிடிப்பதனால் பலனடையவும், அதைப் பிடியாததினால் பாவத்துக்குள்ளாகாம லிருக்கவும் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வார்களாக.

தபசுகாலத்திலே நாம் செய்யவேண்டிய சரீர ஆயத்தம் இப்படியா யிருக்கக் கொள்ள, ஆத்தும ஆயத்தம் யாதென்று இப்போது பார்ப்போம். நம்முடைய ஆத்துமத்திலுள்ள பாவக் கறைகளைப் போக்கி, மேன்மேலும் அதைப் பரிசுத்தப்படுத்த பிரயாசைப்படுவதே ஆத்தும ஆயத்தமாகும். நாம் அனுசரிக்கும் சுத்த போசனத்தினாலும், பிடிக்கும் ஒருபொழுதினாலும்



பிரயோசனமடையவும், சர்வேசுரனுக்குப் பிரியப்படவும் ஆசிப்போமானால் பாவத்தை விட்டொழிப்பது மகா அவசியம். "நாம் பாவத்தை வெறுத்துத் தள்ளாமல் நமது சரீரத்தை உபவாசத்தினால் வெறுப்பது வீண்." என்று பெரிய சிங்க இராயரென்னும் பாப்பானவர் வசனித்திருக்கிறார். யூதர்கள் எவ்வளவோ கொடுமையான உபவாசம் பிடித்தார்கள். ஆனால் அவர்கள் பாவத்தின்மேல் பற்றுதலுள்ளவர்களா யிருந்தபடியால், அவர்களுடைய உபவாசம் சர்வேசுரனுக்குப் பிரியப்படாமற் போயிற்று. ஆகையால் அல்லோ அவர்கள் சர்வேசுரனை நோக்கி "நாங்கள் ஒருபொழுது பிடித்தோம்; நீர் ஏன்தான் கட்டாட்சிக்கவில்லை? நாங்கள் ஆத்துமாவை வதைத்தோம்; நீர் ஏன்தான் பராமுகமா யிருந்தீர்?" என்றுசொல்லி முறையிட்டார்கள். அதற்குச் சர்வேசுரன் "உங்கள் உபவாச நாளிலே உங்கள் சரீர இச்சை காணப்படுகின்றதே; உங்கள் கடன்காரரை யெல்லாம் இம்சித்து வருகிறீர்களே; நீங்கள் உபவாசஞ் செய்வது உங்கள் சகோதரரைச் சண்டையிட்டு கொடுமையாய் அடிக்கவுமே...... இதுதானா நமக்கேற்ற உபவாசம்? இதைத்தானா நீங்கள் உபவாசமென்றும், ஆண்டவருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுகிறீர்கள். அதைவிட அக்கிரமத்தின் சங்கிலியை அறுத்துவிடுங்கள்" (இசையாஸ் 58: 3, 4, 6.) என்று மறுமொழியாக வசனித்தார். நம தாண்டவரான சேசுக்கிறிஸ்துநாதரும் இம் முகாந்தரத்தைப் பற்றியே, பரிசேயர், வேதபாரகர்களுடைய உபவாசம் ஒறுத்தல்களையுங் கண்டனஞ்செய்து, அவைகள் வீணானவைகளெனத் திருவுளம்பற்றினார். ஆகையால் நாம் தபசுகாலத்திலே மெய்யான தவம்புரிய ஆசிப்போமானால் நம்மிடத்திலுள்ள பாவப் பழக்கங்களையும், துர்ப்பற்றுதல்களையும் வேரோடு அறுத்துத் தள்ளி, பாவப் பொறுத்தலடைந்து பரிசுத்தவான்களாவோமாக. நாம் கட்டிக் கொள்ளுகிற அநேக பாவாக்கிரமங்களுக்குக் காரணமா யிருக்கிற அகங்காரத்தை அருவருத்துத் தள்ளி, தாழ்ச்சியும் கீழ்ப்படிதலு முள்ளவர்களாவோமாக. இப்பிரபஞ்ச நன்மைகள்மட்டில் ஒழுங்கற்ற பற்றுதலும் பிரியமு முள்ளோராயிருப்போமானால் அவைகளை யெல்லாம் நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் ஒழுங்குபடுத்தி, சர்வேசுரனுக்குப் பிரியப்படும்படி உத்தம கிறிஸ்துவர்களாய் ஒழுக பிரயாசைப்படுவோமாக. சிற்றின்ப சுகபோகத்திற் சிக்குண்டு, அதற்கடிமைப்பட்டுக் கிடப்போமானால், அவ்வடிமைத்தனத்திலிருந்தெழும்பி கற்புடையோராய்ச் சீவிப்போமாக. இப்படிப் பாவத்தைவிட்டுப் பரிசுத்தர்களாவது எல்லோருக்கும் கடமை. ஒருக்கால் சில முகாந்தரங்களை முன்னிட்டு தபசுகாலத்தில் சுத்தபோசனம் ஒருபொழுது முதலியவைகளை யனுசரிக்க நமக்குக் கடனில்லாமலிருக்கலாம். ஆயினும் பாவத்தை விட்டொழித்து புண்யவான்களாவது எல்லோருக்குங் கடமையாம். ஆனபடியா லல்லோ திருச்சபையும் தபசுகாலத்தில், "ஓ! ஆண்டவரே! உபவாசத்தினால் தங்கள் சரீரத்தை ஒறுக்கும் உமது பிரஜைகள் புண்யத்தின்மேல் ஆவல் கொள்ளும்படி பாவத்தைவிட்டொழிக்கக் கிருபை புரிவீராக" என்று சர்வேசுரனை நோக்கிப் பிரார்த்திக்கின்றது.

நம்முடைய ஆத்துமத்தி லுள்ள பாவக்கறையைப்போக்க தபசுகாலத்தில் நாம் பாடுபடுவதுடன் நம்மிடத்திலுள்ள துர்க்குணங்களையும் ஜெயித்தடக்க முயல வேண்டும். ஜென்மப் பாவத்தின் பலனாக நம்மிடத்திற் குடிகொண் டிருக்கும் துர்க்குணங்கள் நமக்குப் பாவங்கள் அல்ல. ஆயினும் அவைகளினா லுண்டாகும் தந்திரசோதனைகளைச் செயித் தடக்காவிட்டால், பாவத்தைக் கட்டிக் கொள்வோ மென்பது உறுதி. ஆகையால் இத் துர்க்குணங்கள் மட்டில் நாம் வெகு விழிப்பும் ஜாக்கிரதையு முடையவர்களா யிருந்து, அவைகளுடன் போராடுவது அத்தியாவசியமே. இப்படிச் செய்யத் தவறினபடியால் அல்லவா தாவீதென்பவர் துர்ஆசைக்கும் துர்க் கிரியைக்கும் இடங்கொடுத்து அநேக பாவங்களைக் கட்டிக்கொண்டார்? தன்னிடத்திலிருந்த பணவாசையைச் செயித்தடக்காததினால் யூதாஸ் ஸ்காரியோத் என்பவன் குருத்துரோகியானான். மேலும் நம்முடைய துர்க்குணங்களின்பேரில் நாம் வெற்றிகொள்ளாவிட்டால் நம்முடைய சரீரஉபவாசமும் ஒறுத்தலும் வியர்த்தமாகும். இதைப்பற்றி அர்ச். கிறிசோஸ்தம்

வசனித்திருப்பதாவது:“கோபக்காரன் சாந்த முள்ளவனாகவும், காய்மகாரி சமாதானப் பிரியனாகவும், கர்மி உதாரகுணமுடையவனாகவும், காமாதுரன் கற்புடையவனாகவும் ஆகாவிட்டால் உபவாசமாயிருந்தும் என்ன பயன்?” என்பதாம்.

ஆகையால் நம்மிடத்திலுள்ள துர்க்குணங்களையும், விசேஷமாய், எந்தத் துர்க்குணத்தின்மேல் அதிகப் பற்றுதல் வைத்திருக்கிறோமோ அதையும் அடக்க முயலுவோமாக. நாம் புரியும் தபமுயற்சிகளுக்குள்ளே நமது துர்ச் சுபாவத்தை யடக்கி ஜெயிப்பதே சர்வேசுரனுக்கு அதிக பிரியமான முயற்சி. தபோதனர் ஒருவர் நாடோறும் மாலையில் தம்முடைய சீஷனுக்கு ஞானபோதகம் செய்து முடித்தானபின் நித்திரைசெய்யப் போகும்படி அவனுக்குவிடையளிப்பார். ஒருநாள் சிலர் அக்கம்பக்கங்களிலிருந்து இவருடைய ஞானபோதகத்தைக் கேட்க இவரிடம் வந்திருந்தபடியால், அவர்களுக்கு சாயந்திர மட்டும் புத்திமதி சொல்லியானபின், வழக்கம்போல் தம்முடைய சீஷனுக்குஞ் சொல்லத் துவக்கினார். ஆனால் அன்று அவர் மிகவுங் களைப்புற்றிருந்தபடியால், புத்தி சொல்லிக்கொண்டே நித்திரை போய்விட்டார். அப்போது ஞானசிரியருக்குத் தூக்கங் கலைந்து, தான் சயனிக்கப் போக உத்தரவாகுமட்டும் சீஷன் அவ்விடத்திலேயே காத்திருந்தான். ஆனால் வயோதிபரான தபோதனர் நடுச்சாம வரையிலும் கண்விழியாமல் அயர்ந்து தூங்குவதை சீஷன் கண்டு, இவரைத் தட்டியெழுப்பி சொல்லிவிட்டு நித்திரைக்குப் போகலாகுமோ, அல்லது சொல்லாமலே போய்விடலாமோ வென்று தனக்குள் சோதனைபட்டுக்கொண்டிருந்தான். இந்தச் சோதனையால் இவன் ஏழுதரம் அலைக்கழிக்கப்பட்ட போதிலும், ஒவ்வொரு விசையிலும் அதைச் செயித்து பொறுமையாய் விழித்துக்கொண் டிருந்தான். நடுச்சாமங் கழிந்து வெகுநேரமானபின் தபோதனர் நித்திரை விட் டெழுந்து, தன் சீஷன் இன்னும் கண்விழித்திருப்பதைப் பார்த்து, உடனே அவனை அனுப்பிவிட்டுத் தாம் ஜெபஞ் செய்யத் தொடங்கினார். அப்போது அவருக்கு ஒரு காட்சி யுண்டானது. அக்காட்சியில் ஒரு நேர்த்தியான சிம்மாசனத்தையும், அச் சிம்மாசனத்தின்மேல் ஏழு பொன் முடிகள் வைக்கப்பட்டிருப்பதையுங் கண்டார். உடனே அவர் தனக்கு அங்கு காணப்பட்ட சம்மனசானவரை நோக்கி, “இப் பொற் கிரீடங்கள் யாருடையவை?” என, சம்மனசானவர் “உம்முடைய சீஷனுடையவை. அவன் ஏழுதரம் தன்னைத் தானே ஜெயித்தபடியால் இவைகளை யவன் சம்பாதித்துக்கொண்டான்” என்றார். ஆனபடியால், நமது துர்க்குணங்களை யடக்கி நம்மைத்தானே ஜெயிப்பது மிக்க இலாபகரமா யிருப்பதுடன் சர்வேசுரனுக்கும் அது பிரியமான ஒறுத்தலாகும். நாம் ஜெயிக்கும் ஒவ்வொரு சோதனைக்கும் பலனாக உலக முடிவிலே ஒவ்வொரு கிரீடம் நமக்குத் தரிக்கப்படு மென்பது மெய்.

நம் மாண்டவருடைய திராட்சத் தோட்டத்தில் வருந்தி யுழைப்பவர்களே மோட்ச இராச்சியத்தைச் சம்பாதித்துக் கொள்வார்கள். அப்படிச்செய்யாதவர்கள் எப்படி “நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிற்போடப்படுமோ” (மத் 3: 19.) அப்படி நரகவக்கினியிற் தள்ளப்படுவார்கள். ஆகையால், தபசுகாலத்திலே மேற்சொன்னபடி ஒறுத்தல் உபவாசத்தினால் நமது ஆத்துமத்தை சுத்தப்படுத்துவதோடு, இன்னொரு காரியத்தையும் செய்யக்கடவோம். அஃதியாதெனில், நற்கிருத்தியங்களைச் செய்யவேண்டியதாமே. ஜெபத்தியானம், ஞானவாசகம், புத்திப்பிரசங்கம் கேட்டல், அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்தல், நன்மை வாங்குதல், ஒவ்வொருவருடைய சக்திக்கு இயன்றபடி தானதர்மங் கொடுத்தல், துன்பதுரிதங்களைப் பொறுமையாய்ச் சகித்தல் முதலிய நற்கிருத்தியங்களை பயிற்சிக்க பிரயாசைப்பட வேண்டும்.

பாஸ்குப் பண்டிகைக்காக நாம் செய்யவேண்டிய ஆயத்தம் என்னவென்று நாம் இப்போது அறிவோம். தபசுகாலத்தில் நமக்கு ஒருபொழுது சுத்தபோசனத்துக்காகக் குறிக்கப்பட் டிருக்கிற நாட்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு, அவைகளைச் செவ்வையாயும், சீராயும் அனுசரிக்கக்கடவோமாக! நாம் பாவத்தை நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் விட்டொழித்து, பரிசுத்த மாவதுமன்றி, மறுபடியும் பாவத்தில் விழாம லிருக்க நமது ஐம்புலன்களையும் அடக்கித் துர்க்குணங்களின்மேல் ஜெயங் கொள்வோமாக! நற் கிருத்தியங்களையுஞ் செய்து புண்யத்தில ஓங்கி வளர்வோமாக!



## VISUVASANATHAN.

## விசுவாச நாதன்.

(ஓர் நவகதை.)

(முன் தொடர்ச்சி.)

அவளது விடுமுறை நாள் முடிந்தது. மடத்துக்குப் போக முஸ்திப்பு செய்தாள். தாய் (அத்தையை எப்போதுந் தாயென்று அழைத்து வருவாள்) அவளை விட்டகல மனங் கொள்ளவில்லை. அவளோ, போய்த்தானாக வேண்டுமெனக் கேட்க, இசைந்தாள் தாய். மடம் போனபின் வீட்டுக்கே திரும்பி வருகிறதில்லையெனச் சாதித்தாள். சில காலமாய் வரவேயில்லை. ஆதலால் நட்சத்திரம்மாள் மட்டும் மாத மொருமுறை போய் பார்த்து வருவாள். பாப்பாத்தியு மவளது வரவை எதிர்பார்த்திருப்பாள். எனெனில், விசுவாச நாதனைப்பற்றி ஏதாகிலுஞ் சுப செய்தி கொண்டுவருவாளென்றே! ஆனால் இலவுகாத்த கிளிபோலானாள். இப்படியாக வருஷம் இரண்டு பூர்த்தியாயின. நட்சத்திரம்மாள் வழக்கம்போல் மடத்துக்குப் போனாள். பாப்பாத்தியம்மாள் வருகிறதற்குப் பதிலாய், மடத்து முதலாளியம்மாள் வந்தார்கள். புற்பல சங்கதிகளைப் பேசிவிட்டுச் சொல்வார்கள்: “அம்மா! சர்வேஸ்பரன் உங்களுக்கோர் பெரும் பாக்கியத்தைக் கொடுக்க எண்ணியிருக்கிறார். பெரும் ஆசீர்வாத மளிக்கப்போகிறார். ஏற்றுக்கொள்வீர்களா?

ஏதோ தன் மகனைப்பற்றிய சேதி சொல்லப்போகின்றனரெனக் கொண்டு “என்ன அம்மா அது?” என மிக ஆவலோடு கேட்டாள்.

‘அம்மா! உங்களுடைய மகன்...‘மகன்’ எனும் பதம் தனது செவியில் விழவே ‘என் மகன் எங்கே யிருக்கிறான் என்றாள் நக்ஷத்திரம். கொஞ்சம் பொறுங்களே—கடவுள் உங்கள் மகனை உங்களிடமிருந்து பிரித்துவைக்கச் சித்தமானார். அதற்குப்பின் உங்களுக்கு பாப்பாத்தியம்மாளே ஏக பிள்ளையாயிருந்தது. இப்போது அவளை சர்வேஸ்பரன் தமது பத்தினியாக்கிக் கொள்ள சித்தமா யிருக்கிறார். நீங்கள் அதற்குத்தடங்கல் செய்யக்கூடாது, “என்ன சொல்லுகிறீர்கள் தாயாரே? ஒன்றும் புலப்படவில்லையே!”

‘கன்னியாஸ்திரியாய் போகிறேனென்கிறாள் பாப்பாத்தியம்மாள்; அவ்வளவுதான்.’ இதைக்கேட்டு மனமருண்டு, உளம் நொந்து வாய் திறவாது சற்றே மௌனமானாள். ஆயினும், சர்வேஸ்பரனைச் சேவிப்பதில் பிரமாணிக்கமும், அவர் சித்தத்துக்குப் பணிந்து நடப்பதில் சுறுசுறுப்பும், வேதவைராக்கியமும் நிறைந்த உத்தமியாதலால் மனந் துணிந்து சொல்வாள்:-“தாயாரே! அவள் மடத்திலே யிருக்கப் பிரியங்கொண்ட போதே இப்படித்தான் ஆகுமென்று நினைத்தேன். என் மகன்போனபிறகு கண்ணுக்குக் கண்ணாயிருந்த அருமந்த பெண்ணும் என்னை விட்டுப் போகிறதென்றால் மனம்புண்ணாகிறது. ஆகிலும் அது தேவ திருவுளமானால் நாம் என்ன செய்யக்கூடும். திருவாக்குக்கு எதிர்வாக்குண்டோ? சேசுவின் திரு இருதயமே என் மனோவியாதியைத் தீர்க்கும்!”என்றாள். இதுவல்லவா உத்தமியின் வார்த்தை-தேவசித்தத்திற் கிசைந்து நடப்பவளின் குணம். கடவுளின் தாசர்களது நடத்தை. இதைக்கேட்டுச் சந்தோஷ மடைந்தார் மடத்துத் தாயார். அதிலு மதிக வானந்தங்கொண்டாள் பாப்பாத்தியம்மாள் என்று இயம்புவது பொய்யாகுமோ? “ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கைப்” போன்ற மங்கை இச்சுபசெய்தியைக்கேட்டு உள்ளம்பூரித்து உவகை பூத்தாள். இதுவிஷயத்தை ரத்தினசாமி பிள்ளைக்குத் தெரிவிக்க அவர் “போனால் போயிட்டு போகிறாள்” என்று மட்டுஞ் சொன்னார்.

இரண்டு மாதங்களுக்குப் பின், பாப்பாத்தி, நவகன்னிய நடை தரித்து சபை ஒழுங்குகளை யனுசரிக்க ஆரம்பித்துவிட்டாள். தேவ சினேகப்பெருக்கு கொண்டவளாதலால், ஒழுங்குகளை யணுப்பிசகா தனுசரிப்பதிலும், நாளுக்கு நாள் வளர் பிறைபோல் புண்ணியத்தில் வளர்ந்தோங்குவதிலும் அதிக சிரமமும் சிரத்தையுமெடுத்துவந்தனள். அவள் நடத்தையைப் பார்த்து மெச்சிப் பேசாதவ ரில்லை. பக்தியின் பீடம்

என்றும், புண்ணியக் களஞ்சியமென்றும் அர்ச்செர்சம்மாள் என்று மழைத்தார்கள். நவகன்னியாஸ்திரியாகி மூன்றுமாத முடியவில்லை; காய்ச்சலும் சுரமும் அவளை வாட்டினது. எவ்வித அவுஷதங்களைக் கொடுத்துங் குணப்படவில்லை இதை யறிந்த தாய் தன் வீட்டிற்குக் கொண்டு போய் சிகிச்சைசெய்ய வேண்டினுள். உத்தரவும் பெற்ருள். பாப்பாத்திக்குப்போக மனஞ் சற்றேனு மின்று. பெரியோர் ஆக்ஞாபனை யப்படியிருந்ததால் இல்லம் ஏகினுள். போய் மூன்று நாளைக்குள் சுரம் படிப்படியாய் விட்டகன்றது. பத்து நாட்களுக்குள் பூரண சுகமடைந்தாள். இனிமேல் வீட்டி லிருப்ப தேனெனக் கொண்டு மடமும் போய்விட்டனள். உடல் மெலிந்து பலங்குறைந்தது. இருந்தபோதிலும் தன் கடமைகள் கஷ்டமாயினும் அணுப்பிசகாது அவைகளை அநுஷ்டித்து வரப்பிசகாள். உடல்தேறி பலமடைந்திருக்குங்கால் எவ்வித வேலையையுஞ் செய்யத்துணிவாள். வெயிலென்றும் மழையென்றும் யோசியாள். சுவரிருந்தால்தானே சித்திர மெழுதலாம் எனும் ஆன்ஞேர் மொழியை யறிந்தும் அதைக்கவனியாததுபோல் நடப்பாள். ஆகையால் ஒரு நாள் ஏதோ வேலையினிமித்தம் மழையில் நின்று உடையெல்லாம் நனைந்து வரவும், அவளுக்கு ஜலதோஷமுண்டானது. இருமல் துவக்கிற்று. ஔஷதம் பலவித மருந்தியும் பலிக்கவில்லை. பெரிய வைத்தியர் ஒருவர் பரிசோதனையிட, காசநோய் தலைகாட்டுகிறதெனச் சாற்றிவிட்டார். இது செய்தியைத் தாய்க்குத் தெரிவிக்க அவள் பிள்ளையை வீடு கொண்டுபோய் பக்குவமாய்ப் பார்த்துவந்தாள். இதுவரையில் சரியான நித்திரையில்லாது இரவுமுற்றும் இருமிக்கொண்டிருப்பவள் அன்று நன்ருய்ச் சயனித்தாள். வரவர இருமல் குறைந்தது. முகம் களை பெற்றது. இரத்தப்புஷ்டியானது. அவளை வியாதியஸ்தியென வொருவரும் பகரார். ஆகவே "பூசை முடிந்தும் புதியடி காவலா? வியாதி தீர்ந்தது. நான் மடத்துக்குப் போகிறேன்" என்ருள். அப்படியே போய்விட்டாள். மடத்துக்குப்போய் சில தினங்களுக்குள் 'பழைய குருடி கதவைத் திறடி' என இருமல் திரும்பவும் தோன்றிற்று. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. தானும் நித்திரை கொள்ளாது, பிறரும் நித்திரைகொள்ள இடையூருயிருந்த் அவளை வீட்டிற்கு அனுப்பினுர் மடத்துத் தாயார். வீடு வந்து இரண்டொரு நாள்தான் மருந்து சாப்பிட்டாள். அதிசயத்திலும் அதிசயம்! வியாதி காற்றில் பட்ட பஞ்சுபோல் பறந்துபோயிற்று. கேட்டார் செய்தியை-அதிசயப்பட்டார் மடத்தார். இது கடவுளின் விசேஷ செயலா யிருக்கிறதெனக் கண்டு சிரேஷ்ட குருவானவரிட மறிவிக்க, அவர் சொன்னதாவது:- "-அழைக்கப்பட்டவ ரநேகர் தெரிந் தெடுக்கப்பட்டவர் சிலர்- பாப்பாத்தியின் விஷயத்தை நோக்கின் அவள் கன்னியாஸ்திரியாய்ப் போவது கடவுளது சித்தமல்லபோலும். அவள் உலகத்திலிருந்தே உத்தமியாக நடந்து முத்தி பெறுவாள்" என்பதே. இவ்வார்த்தைகள் பக்தியில் வளர்ந்து படிப்பில் தேர்ந்து அனுபவத்தில் முதிர்ந்த குருவானவர் மொழிகளானதால்-அவளது தேவ அழைப்பைப்பற்றி முடிவுரை கூறிவிட்டன. இதைக்கேட்டுக் கலங்கினுள், கஸ்திகொண்டாள், அழுதாள், அநுதாபப்பட்டாள் பாப்பாத்தி. ஆகிலும் என் செய்வாள்? தேவ திருவுள மப்படியிருக்க அவள் என் செய்யக்கூடும்? அன்று முதல் தாய்க்குதவியாகவும், இல்லத்திற் கலங்காரமாகவும் விளங்கி வந்தனள்.

இது யிப்படியிருக்க, இரத்தினசாமிப் பிள்ளையவர்கள் கவலையேற் கொள்ள, மதவிஷயத்தில் துவேஷமும், ஜெபத்தின்மீது வெறுப்பும், வேதகடமைகளின் மட்டில் இளமாப்புமுடையவரானுர். இம்மட்டு மன்று. தெய்வத்தையே பழித்துபலவாருய்ப்பேசவுந் துணிந்தார். இதைக்கண்டு கஸ்தியடைந்தனர் நட்சத்திரம்மாளும், பாப்பாத்தியும். என்செய்வர்? கடவுளைப்பார்த்துப் பிரார்த்தித்துவர மறக்கவில்லை. பாப்பாத்தி யிதுவரையில், தமயன் வரவுக்காக தனது ஜெப தபங்களை யெல்லாம் ஒப்புக்கொடுத்துவந்தாள். இப்போது தனது தந்தையின் மனந்திரும்புதலுக்காகவுஞ் செய்யத்துவக்கினுள். நாட்கள் போய் வாரங்கள் சென்று பலமாதங்களுங் கழிந்தன. அவர் இன்னு மிருளிலேயே யிருந்தார். ஆயினும் அவளது மனஞ் சோரவில்லை. நாள் தோறுஞ் செபிப்பாள். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற ஆப்த பதங்களை மேற்கொண்டு இடைவிடாது அல்லும் பகலும் அறுபது நாழிகையு மிரந்து மன்ருடுவாள். அண்டின அடியாளை ஆண்டவர் கைவிட்டவில்லை. எவ்வாறெனில், ரத்தினசாமிபிள்ளை சமயாசமயங்களில்



கோவிலுக்குப் போக ஆரம்பித்தார். இது பாப்பாத்தி மனதைக் குளிரச்செய்தது. ஒரு ஞாயிறுவாரம் பூசை காண தேவாலயம் ஏகினுர். அன்று திவ்விய இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் 14-ஞாயிறு. கடன் நாளாகையால் ஜனங்கள் ஏராளமாய் வந்து கூடினுர்கள். பூசையில், சுவிசேஷம் வாசித்தபின், அதிலுள்ள முதல் வசனத்தை மேற்கொண்டு அரிய பிரசங்கம் செய்தார் குருவானவர். அதன் சாரம் பின்வருமாறு:— பிரிய சகோதரர்களே! 'எவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்வது கூடாது. ஏனெனில் ஒன்றில் ஒருவனைப் பகைத்து மற்ருெருவனை நேசிப்பான். இல்லாவிடில் ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்ருெருவனை நிந்திப்பான்' என்பன நமதரிய இரட்சகரின் ஆப்த மொழிகள். ஆகையால் கடவுளொருவரையே சேவிக்கவேண்டியது நமது கடமையாகும். அவரே நமது ஏக கதியாம். இவ்வுலகில் முற்றுமுள்ள சர்வ சராசரங்களையும் அமைத்தவர் அவரே. சடப்பொருட்கள், தாவரவர்க்கங்கள் பட்சி பறவைகள் மிருகாதி ஜெந்துக்கள் யாவற்றையும் மனிதனுக்காகவே யுண்டாக்கினுர். அவைகளெல்லாம் மனிதனுக் குதவுவதிலேயே தங் கர்த்தனைச் சேவிப்பதாகச் சொல்லலாம்.

ஆத்துமத்தையும் தன்பாலுள்ள தத்துவங்களையு முடைத்தான மனுடனை தம்மைச் சேவிப்பதற்காகப் படைத்தார் கடவுள். "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தம்மை வணங்க" மனிதன் சர்வேஸ்பரனுக்குச் சொந்தம். சர்வேஸ்பரன் அவனுடைய கர்த்தர். அவன் அவருடைய அடிமை. அவர் அவனது எஜமான். அவன் அவரது ஊழியன். அவர் அவனுக்குத் தகப்பன். அவன் அவருக்குப் பிள்ளை. ஆகவே, மனிதன் அவரைச் சேவிக்கக் கடமைப்பட்டிருக்கிருன். மனிதனுடைய ஏக அலுவல் அவரை யல்லும் பகலும் அனவரதமும் சேவிப்பதே. கடவுளைச் சேவிப்பது நமக்கோர் மகிமை. கடவுளைச் சேவிப்பது அவரோடாளுவதற்குச் சமானம்! சர்வேஸ்பரனைச் சேவிப்பதென்ருல் அவரது கற்பனைகளை யனுசரிக்கிறதும், அவரது திருவுளத்திற்கமைந்து நடப்பதுமேயாம். 'என்னை அனுப்பினவருடைய சித்தப்பிரகாரஞ் செய்து, அவரது வேலையை குறைபற நிறைவேற்றுவதே என தமு தென வுரைத்தார் சேசுநாதர். இவ்வாருக சர்வேஸ்பரனையே சேவிக்க-அவரொருவருக்கே ஊழியம் புரியக் கடமைப்பட்டிருக்கிருேம். ஆனுல் இவ்வுலகின்கண் எண்ணற்றபேர் பேய்க்கூழியஞ் செய்கின்றனரே? ஈசனுக்குரிய ஆராதனை வணக்கத்தை பசாசினுக் களிக்கிருர்கள். அஞ்ஞானிகள், இந்துக்கள் முதலியோர் மட்டும் இவ்வாறு செய்யின், அஞ்ஞான அந்தகாரத்தி னிமித்தம் அறியாது புரிகிருர் என்கலாம். அந்தோ! பரிதாபம். ஞானதீட்சைபெற்று மெஞ்ஞான ஒளியால் மெய்ம்மறையைக் கண்டு உணர்ந்த கிறீஸ்துவர்களுமே பசாசுக் கூழியஞ் செய்கிருர்களே! ஆ! இதென்ன விபரீதம்!

பிரிய சகோதரர்களே! இதைக்கேட்டு ஆச்சரியப்படுகிறீர்கள் போலும். கிறீஸ்துவர்களும் பேய்க்காராதனை செய்கிருர்களாவெனச் சந்தேகங் கொள்கிறீர்கள். கிறீஸ்துவர்கள், பகிரங்கமாய் பேயாலயங்கள்போய், பூக்கள் சாற்றி, தீபதூபங்கள் காட்டி, நைவேத்தியங்கள் செய்து, பலியிட்டுப் பசாசைத் தொழுவதில்லையாயினும், அனந்தம்பேர் பழைய குருட்டாட்டத்தைவிட்டுவிடாது, மறைவாகப் பசாசிற்குப் பணிவிடை செய்கின்றனரோ? தமது ஞானஸ்நானத்தில், தாயாகிலும் தமது ஞானத்தாய் தகப்பன் மூலமாகிலும் வாக்களித்துவிட்டு, புதுநன்மை வாங்கியபின் அதைப் புதுப்பித்து, பசாசையும், அதன் காரியங்களையும், அதன் ஆரவாரங்களையும் விட்டுவிடுகிருேமென உறுதியாகச் சொன்னவர்கள் இப்போது பசாசையே நாடி, அதன் சலுகையைத் தேடி ஓடி யடைகிருர்களே. பசாசின் காரியங்களை யனுசரிப்பதில் பின்வாங்கார்கள். பிறந்நாளைக்கொண்டு சாதகம் பார்ப்பார்கள். குறி கோணங்கி கேட்பார்கள்-முகூர்த்த நாள், இராகுகாலம் முதலியவற்றை விசாரிப்பார்கள். ஆலாத்தி, திருஷ்டி, சாந்திசடங்குகள் செய்வார்கள். மூடப்புரோகிதரால் மந்திரிக்கப்பட்ட மஞ்சள் துணி, நூல் முதலிய கோலாகலங்களை யணிந்துகொள்வார்கள். அவர்களுக்குப் பல்லி கத்தினுல், விழுந்தால் சாஸ்திரம். காக்கை கத்தினுல் பறந்தால் சாஸ்திரம்-பூனைகுறுக்கே போனுல் சாஸ்திரம், மனுஷர் எதிரே வந்தால் சாஸ்திரம். இப்பேர்க்கொத்த அடாத கிருத்தியங்களை நாணமின்றி வீணுய்ச் செய்கிற கிறிஸ்துவர்களில்லையோ? இந்து சாஸ்திரிகளில்

ஒருவர் "சாஸ்திரப்பேய் நோய் கொள்ளாது சத்தி முத்தி சித்தியே" எனக் கண்டித்திருக்க, மெய்யங்கடவுள் பேரை வகிக்கும் கிறிஸ்தவர்கள் முன்பின் நோக்காது, படுகுழியில் போய் விழுவது ஆச்சரியமும் வியப்புமன்றோ? இவர்கள் இவ்வாறு பசாசைத் தொழுவதால் கடவுளைப் பகைப்பதாகும். எவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடும்? இவர்கள் மெய்யங்கடவுளையே தொழுவதெனச் சாற்றி, பொய்யம் பசாசிற்கு ஆராதனை காட்டிவருவது எம்மாத்திரம் மடமை! இருதாரத்தாரையும், பணிசெய்து கைக்கொள்ள எண்ணுகின்றனரோ? அது அறியாத்தன்மை. ஒருகால் மூதாட்டியொருவளிருந்தாள் ஓர் ஊரில். கிறீஸ்துவள். பொருத்தனைக்காக இரண்டு மெழுகுவர்த்திகளை விலைக்கு வாங்கிக்கொண்டு தேவாலயஞ் சென்றாள். அங்கே அர்ச். மிக்கேல் சம்மனசானவரது சுரூபம் அலங்காரமான சப்பரத்தின்மீது வைக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அன்று அதிதூதரின் திருநாள். வழக்கம்போல், வர்த்திகளைச் சுரூபத்தின் இருபுறத்திலும் வைக்காது, ஒன்றை மேலும், மற்றொன்றைக் கீழுமாக வைத்தனள் மூதாட்டி. இதைக் கண்ணுற்ற ஒருவர் வியப்புற்று, வயோதிப ஸ்திரியண்டை யணுகி கேட்டார்: 'அம்மா! என் இப்படி வைக்கிறீர்கள்.'

மூதாட்டி-ஏன்! ஒன்று சம்மனசானவருக்கு, மற்றொன்று அவர் காலின்கீழ் மிதிபட்டுக் கிடக்கும் லூசிபேருக்கு.

'அப்படிச் செய்யலாமா?'

மூதாட்டி- ஏன் செய்யக்கூடாது. மோக்ஷம் போனால் சம்மனசானவரெனக் குதவுவார். நரகம் போனால் பசாசாவது உதவாதா?

இந்தக் குருட்டாட்டத்தைக் கேட்டுப் பரிதாபங்கொண்டார் அவர். அதைக்கேட்டு நாமும் நகைக்கிறோம். ஆனால் நம்மில் எத்தனையோ பேர் அவ்விதஞ் செய்கிறார்கள். அஞ்ஞானக் காரியங்களில் தலையிடும்போது அதேவண்ணம் நாமும் புரிகிறோம். இது மதியீனர் செய்யுந் தொழிலே! பின்னர் உலகமானது ஓர் பெருஞ் சாகரம். தேர்ந்த மாலுமியையுடைத்தான ஓடத்திலேறி க்ஷேமத் துறையாகிய மோக்ஷம் ஏகவேண்டும். இதுவே நமது சீவிய அலுவல். அந்த ஓடமானது சத்தியவேதம். அதுவே பழுதில்லாக் கப்பல். அதிலிருப்பவர்கள்மட்டும் கரை சேர்வார்கள். வேறுசில கப்பல்களுமுள. அவைகள் ஓட்டைக்கல் உடைந்த கப்பல்களே. இவைகள் பொய் மதங்களும் அவற்றின் ஆசாரவனுசார ஆசாரங்களுமே. நற்கப்பலானது அலைகள் பல அடித்து மோதின போதிலும், காற்றும் புசலும் விசையாய் வீசினபோதிலும், அதற்கெல்லாம் அஞ்சாது தொடுத்த பயணத்தை முடித்துவிடும். அக்கப்பலிலிருப்பவர் துறைமுகம் போய்ச்சேர்வது திண்ணம். அதற்கு மாறாக வேறு கப்பலிலிருப்பவர்களோ கரை சேரார். ஏனெனில், பிரயாணத்தில், பொந்து சந்துகளின் வழி சன்னஞ் சன்னமாய்த் தண்ணீர் ஏற, கப்பல் மூழ்கிப்போம். அவ்வாறே, மானிட ஜன்மத்தில் அநந்தங் கோடிப்பேர், ஆகும் ஆகாதென்னுங் குறையைப் பகுத்தறியாது ஓட்டைக் கப்பலிலேயே பிரயாணஞ் செய்கிறார்கள். சிலர் தேவஒளியால் நன்கறிந்து நற்கப்பலிலிருக்கிறார்கள். வேறு சிலரோ நற்கப்பல் எதுவென நன்கறிந்து, அதிலேயிருக்க மனங்கொள்ளாது, ஒருகாலை நற்கப்பலிலும், மற்றொருகாலை தூர்க்கப்பலிலும் வைக்கிறார்கள். கப்பல்கள் பயணமாகின்றன. வெவ்வேறு துறை நோக்கிப்போவதால் ஒன்றாகப் புறப்பட்ட கப்பல்கள் பிரிகின்றன. இரண்டிலேயுங் கால்வைத்த மனிதனின் கதியேதோ கதிதான். கப்பல் பிரிந்துபோக, காலும் விரிந்துபோக வேண்டும். எவ்வளவு தூரந்தான் விரியும். சற்று நேரத்துக்குள் நிலையற்றுக் கடலில் விழுந்தான். விழுந்த மனிதன் மறைந்தான். இப்பேர்க்கொத்த மனிதனை மதியீனனென்று சொன்னால் பொய்யாகாதல்லவா? ஆயினும் கிறிஸ்துவர்களில் சிலர் இவ்வாறே செய்கின்றனர். மெய்ம்மறை எதுவெனவறிந்திருந்தும் அதன் கோட்பாடுகளை சுமுத்திரையா பருசரியாது, பொய்மறை யாசாரங்களை கைக்கொள்ள எண்ணுகிறார்கள். அஃதால் அவர்களடைவது அதோகதியே. ஆகையால், பிரிய சகோதரர்காள்! இனிமேலாக கடவுள் சித்தத்திற் கொத்து நடக்கவே கங்கணங் கட்டி நிற்கவேண்டும். அஞ்ஞான ஆசாரங்களை விட்டு விலக மனமின்றி; சாதியாசாரமென்று வீண் சாக்குப் போக்குகள் சொல்லிப் பிதற்றுவது அகமம். அவைகள் அஞ்ஞாசாரக் காரியங்களென மதித்து; அதில் தலையிடாதால் நமதான்மாவுக்கு விளைவது வினையென அவதானித்து நிற்பது உத்தமம். எவ்வித விஷயத்திலும் கர்த்தர் கருணையைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்தால் சர்வேஸ்பரனுக்குச் செவ்வனே ஊழியஞ்செய்கிறோம். அப்படியன்றில் அவரைப் பகைக்கிறோம். ஏனெனில், எவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்தல் கூடாது. ஒன்றில் ஒருவனைப் பகைத்து மற்றொருவனை நேசிப்பான். அன்றேல் ஒருவனைச்சார்ந்து மற்றவனை நிந்திப்பான்." எனசொற்சுவை, பொருட் சுவைகொண்டு கேட்போர்மனதைக் கவர்ந்து, இருதயத்தைப் பாய்ந்து திருவினையியற்றவல்ல அரிய பிரசங்கத்தைச் சொல்லி முடிவுரை கூறினார். அதுவரையில் ஆணும் பெண்ணுமடங்கலாக எல்லோரும் நீட்டிய கந்தரத்தோடும், நோக்கிய நேத்திரங்களோடும் உற்றுகேட்டுக்கொண்டிருந்தனர். பிரசங்கம் முடியவே குருவானவர் திவ்ய பூசையைத்தொடர்ந்து முடித்தார்.

(தொடரும்.)



## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக் கற்பனையின்பேரில்

### 6-ம் பாடம்.

### முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### தேவமாதாவின் வணக்கம்.

(முன் தொடர்ச்சி.)

4. ஓர் பெரும் அற்புதம்—590௵ உரோமை மாநகரில் பயங்கரத்துக்குரிய கொள்ளைநோயுண்டாக நாளொன்றுக்கு ஜனங்கள் ஆயிரக்கணக்காய் மடிந்துவந்தார்கள். அக்காலத்தில் திருச்சபையை யாண்டுவந்த பெரிய கிரகோரி பாப்பானவர் செபதப ஒரு சந்தி உபவாசஞ் செய்யும்படி கற்பித்தும் வியாதி தணியாதபடியால், அர்ச். லூக்காஸ் எழுதிய தேவமாதா படத்தை எடுத்துக்கொண்டு குருக்களும் மேற்றிராணிமார்களும் மற்ற விஸ்வாசிகளும் புடைசூழ்ந்து, பத்தி விஸ்வாசத்துடன் ஜெபித்துக்கொண்டு வீதிவீதியாய் பிரதக்ஷணஞ் செய்யக் கற்பித்தார். எப்பேர்ப்பட்ட அதிசயமென்கலாம்! திருப்படம் எழுந்தேற்றம் பண்ணப்பட்ட எல்லா இடங்களிலுங் கொள்ளைநோய் சடுதியில் நின்றதுடன், கொள்ளைநோயால் பீடிக்கப்பட்டவர்களும் அற்புதமாய்க் குணப்பட்டார்கள். மேலும் சுற்றுப்பிரகாரம் ஆதிரியான் கோபுரத்துக்கு அருகாமையில் வந்தபொழுது, அக் கோபுரத்தின் உச்சியில் ஒரு சம்மனசானவர் மனிதரூபமாய்க் காணப்பட்டு, இரத்தத்தால் நனைந்த வாளை உறையில் போட்டு, பாஸ்குக் காலத்தில் ஜெபிக்கப்படும் "பரலோகத்துக்கு இராக்கினியே! மனங்களிகூரும், அல்லேலுய்யா" என்னுங் கீர்த்தனையைப் பாடினார். அந்நேரத்தில் அங்கு நின்றுகொண்டிருந்த அர்ச். பாப்பானவரும் வாய்திறந்து "எங்களுக்காக சர்வேசுரனை மன்றாடும், அல்லேலுய்யா" என்று மகாபத்தி விஸ்வாசத்துடன் உச்சரித்தார்.

5. ஒரு கைதி செபம் அடங்கிய சீட்டை விழுங்கினது.—பெரும் பாதகங்களைக் கட்டிக்கொண்டுவந்த ஒரு துஷ்டன் பிடிபட்டு, சிரசாக்கினைக்கு தீர்மானிக்கப்பட்டு, சிறையில் இருக்குங்காலத்தில், பாவசங்கீர்த்தனஞ்செய்வதில்லையென்று மூர்க்கமாய்ச் சலஞ் சாதித்திருந்ததை அறிந்த பொர்நாது என்னுங் குருவானவர் சிறைக்குப்போய், பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி அவனுக்கு எப்பேர்ப்பட்ட புத்திகளைச்சொல்லியும் அவன் அதற்கு இணங்காமல் குருவானவரை நிந்திக்கத் தொடங்கினான். அப்போது ஸ்வாமியார் அவநம்பிக்கைப்படாமல் அவனைப்பார்த்து "தம்பி என்னுடன் முழங்காலிலிருந்து நான் சொல்லுகிற செபத்தைச் சொல்" என்ற "மிகவும் இரக்கமுள்ள தாயே"என்கிற செபத்தைச் சொல்லி முடித்தும், கைதி வாய் திறவாமலிருப்பதைக் கண்ட குருவானவர் மனஞ் சோராமல் அந்தச் செபம் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றை கையில் பிடித்துக்கொண்டு: நீ இந்தச் செபத்தை உச்சரியாவிடினும் வாயில் வைத்துத் தின், என்று அதை அவன் வாயில் வைத்துத் திணித்தார். அந்த க்ஷணமே மூர்க்கனான கைதி சடுதியில் வேறு மனிதனாகித் தன் பாவாக்கிரமங்களின் கனகனத்தையும், தேவ கோபத்தாலுண்டாகும் நித்திய தண்டனையையும் உணர்ந்தவனாய், தன் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு அழுது, தகுந்த முஸ்திப்புடன் பாவசங்கீர்த்தனஞ்செய்து, குறிக்கப்பட்ட நாளில் தூக்கப்பட்டு, நல்ல மரணம் அடைந்தான். தேவதாயாருடைய விசேஷகிருபை

யாலே இவன் இரக்ஷிக்கப்பட்டானென்று தெளிவாய் விளங்குகிறது. (Lempereur.)

6. அற்புதமாய் ஏற்றப்பட்ட விளக்கு.-- கசினே மடத்தைச் சேர்ந்த சில சந்நியாசிமார் கப்பல் யாத்திரை செய்யும்பொழுது துலுக்கரான கடல் கள்ளரால் பிடிக்கப்பட்டு, ஒரு சிற்றூருக்குக் கொண்டுபோகப்பட்டு அடிமைகளாக்கப் பட்டார்கள். இவர்கள் ரோஜர் என்னும் பிரபுவால் மீட்கப்பட்டு அவ்வூரில் வசிக்குங்காலத்தில், அவர்களுக்கு சிரேஷ்டராயிருந்தவர் மரித்தபடியால், அவர் கட்டி யிருந்த தேவமாதாக் கோவிலில் அவரை அடக்கஞ்செய்து, அதுமுதல் தேவதாயார் சுரூபத்துக்கு முன் இரவும் பகலும் விளக்கேற்றிவந்தார்கள். சத்தியவேத விரோதிகளான துலுக்கருக்குப் பெரியவன் ஷை கோவிலிற் விளக்கேற்றக் கூடாதென்று கண்டிப்பான கட்டளைகொடுத்தான். சந்நியாசிகள் அவன் கட்டளைப்படி விளக்கேற்ருவிடினும் அது தானாக எரிந்து கொண்டிருந்தது. இது கிறிஸ்துவர்களுடைய சூது என்று துலுக்கர் நிச்சயித்து அவர்களுக்குத் தெரியாமலே விளக்கிலிருந்த எண்ணெயை கீழே சாய்த்து விட்டு, அதை ஜலத்தால் நிரப்பிவிட்டுப் போனார்கள். அன்று இராத்திரியும் விளக்கு யதாப்பிரகாரம் எரிகிறதைப் பற்றிக் கேள்விப்பட்ட துலுக்க அதிகாரி கோபவெறிகொண்டவனாய், அது முதல் கிறிஸ்துவர்கள் கோவிலிற் பிரவேசியாதபடி கற்பித்ததுடன் கோவிலைச் சுற்றி துலுக்க சேவகரை பாராப் போடும்படி கற்பித்தான். அவ்வாறே நடக்கும்பொழுது அன்று இராத்திரி நடுச்சாமவேளையில் மகா பிரகாசமான நக்ஷத்திரம் ஒன்று கோவிலுக்குமேல் நின்றது. அந்த க்ஷணமே கோவிலில் விளக்கும் சுடர்விட்டு எரிவதைச் சேவகர் அறிந்து, அதிசயித்து, நடந்த சங்கதியை தங்கள் அதிகாரிக்குத் தெரியப்படுத்தினார்கள். அதிகாரியோ இதை நம்பாதவனாய், மறுநாள் இராத்திரி கோவிலுக்குமுன் போய் நின்று கொண்டிருக்குஞ் சமயத்தில் நடுச்சாமவேளையில் பிரகாசமான ஒரு நக்ஷத்திரம் கோவிலுக்குமேல் நிற்பதையும், உடனே பூட்டப்பட்டிருந்த கோவிலில் இருக்கும் விளக்கு பிரகாசமாய் எரிகிறதையுங் கண்டு அதிசயித்து, அதுமுதல் அவன் கிறிஸ்துவர்களை துன்பப்படுத்தாததுடன் அவர்கள் இஷ்டப்படி கோவிலுக்குப் போய் வேண்டிக்கொள்ளவும், இரவும் பகலும் அதில் விளக்கேற்றவும் உத்தரவு கொடுத்தான். (Mgr. Pavy.)

7. தேவமாதாவின் சிரேஷ்ட சபையாரின் வேண்டுதலால் நடந்த அற்புதம்.--பாரீஸ்பட்டணத்திலுள்ள ஜயமாதா ஆலயத்தில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை பங்கு ஸ்வாமியார் பெரிய பூசை செய்ய முஸ்திப்பாயிருக்கும் சமயத்தில், துரை ஒருவர் சங்கிஸ்தில் பிரவேசித்து பங்கு ஸ்வாமியார் எங்கே என்க, நான் தான் என்றார். கெட்ட கிறிஸ்துவனாய் நடந்து வந்த இம்மனிதன் அந்நேரத்தில் ஏராளமாய்க் கண்ணீர் சொரிந்து: எனது பிரிய மனைவி மூன்று சிறுகுழந்தைகளை விட்டுவிட்டு சாகக்கிடக்கிறாள். இன்று இராத்திரிக்கு உயிரோடு இருக்கமாட்டாளென்று வைத்தியர் கைவிட்டுப் போய்விட்டார்கள். இனி நான் என்ன செய்வேன்! நாங்கள் இருவரும் அந்நியோந்நியமாய் சிநேகித்து வந்தோம். என் பிரிய மனைவி செத்துப்போனால் நானும் என் குழந்தைகளும் போகும்வழி எப்படி? என்று சிறுகுழந்தைபோல் அழுதபின், மறுபடியுங் குருவானவரை நோக்கி: ஸ்வாமி நீங்கள் வியாதிக்காரரைக் குணப்படுத்துவதாக கேள்விப்பட்டு உம்மிடம் வந்தேன். தயவுசெய்து என் மனைவியை குணப்படுத்துமென்று கெஞ்சி மன்றாடினான். அதற்கு குருவானவர் "நீ சொல்லுகிறதுபோல் அநேகம் வியாதிக்காரர் தேவமாதாவின் சிரேஷ்ட சபையாரின் வேண்டுதலால் சௌக்கியப்பட்டு வருகிறார்களே யன்றி, என்னால் ஒன்றும் ஆகாது. இன்று சாயந்தரம் சபையார் இக்கோவிலில் கூட்டங் கூடும்பொழுது உமது மனைவிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்வோம்" என்றார். இரண்டு வாரத்துக்குப்பின் ஷை துரைகுருவானவரிடம்போய் சந்தோஷமுகத்துடன் அவரை நோக்கி "ஸ்வாமி தங்களுக்கு நன்றியறிதலான வார்த்தைசொல்லும்படி வந்தேன். இரண்டு வாரத்துக்குமுன் என் மனைவியின் கடின வியாதியைப்பற்றித் தங்களிடம் சொல்லிப்போன அன்று சாயந்தரத்துக்குள் அவள் மரிப்பாளென்று வைத்தியர் நிச்சயித்தபடியால் நான் மிகவும் துக்க



துயரங்கொண்டு அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். ஆனால் அதே இராத்திரி ஒன்பதுமணிக்கு அவளுக்கு ஒருவித மயக்கமுண்டாகி சிலமணி நேரத்துக்குப்பின் மயக்கந்தெளிந்து சௌக்கியமுற்றவளைப்போல காணப்பட்டாள். வைத்தியரும் அவளைப் பார்த்து அதிசய பிரமிப்புகொண்டார். இப்பொழுது அவள் பூரண சௌக்கியமா யிருக்கிறாள்" என்று சொன்னான். அப்பொழுது குருவானவர், "இது தேவதாயாரா லுண்டான அற்புதம் என்பதற்கு அற்ப சந்தேகமுமில்லை. ஏனெனில், நீர் கேட்ட பிரகாரம் அன்று இராத்திரி ஒன்பது மணிக்கு சபையார் உமது மனைவிக்காக செபித்தார்கள்" என்றார். "ஆம் ஸ்வாமி, மெய்யாகவே இது தேவகிருபையா லுண்டான அற்புதமே அன்றி சுபாவமுறையா லுண்டானதல்ல. மேலும் நானும் என் நடத்தையை முற்றும் மாற்றி, அந்த சபையில் பேர்கொடுக்க வந்தேன்" என்று சொல்லி சர்வேசுரனுக்கும் அவருடைய தாயாருக்கும் ஸ்தோத்திரம் புரிந்து போனான். (Abbe Mullois.)

(இன்னும் வரும்.)

---

# GNANAMANI III. PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

ஓர் நாவல் கதை.

(முன் தொடர்ச்சி.)

---

## நான்காம் அதிகாரம்.

## நரகத்திலுள்ள குட்டிப் பசாசுகள்.

---

பஞ்சாயத்துக்குக் குறிக்கப்பட்ட நாளில் முத்துப்பிள்ளை அநேக இந்துக்களுடன் வந்து சேர, பவுல்போதகரும், அவர் குமாரன் சலமோனுந் தங்கள் ஸ்நேகிதர்களோடு கூட வந்து சபை கூடினார்கள். மணியகார் கேட்டுக்கொண்டதன்மேல், பவுல் போதகர், ஈசாக் உபதேசியாரையும் விஸ்வாச நாயகரையுந் தமது பஞ்சாயத்து மெம்பர்களாகத் தெரிந்துகொண்டார். சலமோன், சவுல் என்பவரையும், அபிரகாம் போதகரையுந் தனக்குப் பிரதிநிதிகளா யிருக்கும்படி தெரிந்து கொண்டான். இருதாரத்தாரிடத்திலும் பஞ்சாயத்து முச்சிலிக்கா எழுதி பெற்றுக்கொண்டு, அடுத்த வியாழக்கிழமை காலை பத்துமணிக்கு எழுத்துமூல பத்திரம், பட்டா கிட்டா முதலிய தஸ்தாவேஜுகளுடனுஞ் சாட்சிகளுடனும் ஆஜராகும்படி சொன்னார்.

குறித்த நாளில் சகலருஞ் சேரவே கக்ஷிக்காரர் தெரிந்தெடுத்துக்கொண்ட நாலுபேரும், முத்துப் பிள்ளையும் ஆக ஐவருமாக சேர்ந்து, வழக்கை விசாரணை செய்தார்கள். பவுல்போதகருடைய நிலம், புலம், கொல்லை, வீடு, வீட்டுமனை, மனைபுழைக்கடை முதலியவைகளைப் பற்றிய கிரய பத்திரங்கள், பட்டா கிட்டா முதலிய எழுத்துமூல ஆதாரங்களை யெடுத்து ஒவ்வொன்றாய் வாசித்துப் பார்த்தார்கள். இருதாரத்து சாக்ஷிகளையும் அழைத்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். அந்நேரத்தில் இரு கக்ஷிக்காரருக்கும் பல வாக்குவாதங்களுண்டாக, இந்தியன் கோட் புஸ்தகத்தின் உதவியால் சகல ஆக்ஷேபனைகளும் முடிவு பெற்றன. பவுல்போதகருக்குள்ள நிலம், புலம், வீடு, புழைக்கடை முதலிய சொத்துக்கள் அவருடைய முன்னோரால் கொடுக்கப்படாமல் அவருடைய சுயார்ஜித மென்று ஏற்பட்டன.

மேலும் கிறிஸ்டியன்லா பிரகாரம், இப்பேர்ப்பட்ட சொத்தை பவுல்போதகர் இஷ்டப்பிரகாரம் உபயோகிக்கலா மென்றும், சலமோன் என்பவன் அப்பேர்ப்பட்ட சொத்தைப் பெற்றுக்கொள்ள உரிமைப்பட்டவ னல்லவென்றும் தீர்மானித்தார்கள். தாங்கள் செய்த தீர்மானத்தை பஞ்சாயத்தார் தாங்கள் கையொப்பத்துடன் நகல்கள் தயாரித்து, அவற்றில் ஒன்றை பவுல் போதகருக்கும், மற்றொன்றை அவர் குமாரன் சலமோனுக்குங் கொடுத்தார்கள். எந்த கோர்ட்டுக்குப் போன போதிலும் இந்தப் பஞ்சாயத்துத் தீர்மானம் செலாவணியாகாமற் போகாதென்று முத்துப்பிள்ளை சொன்னார்.

அப்பொழுது பவுல் போதகர் எழுந்து "கனவான்களே! உங்கள் தீர்மானத்தின்படி என் மகனுக்கு என் சொத்தில் பங்கு கொடுக்க கிறிஸ்டியன்லா பிரகாரம் கடமைப்பட்டவனல்லவென்று தெரியவருகிறது. ஆனால் அப்படிச் செய்யேன். சலமோன் என் மகனே, இதை மறுதல்

யேன். இவனும் ஒரு பெண் குழந்தையுந் தவிர வேறே யாரிருக்கிறார் எனக்கு? ஆகையால் என் குமாரனுக்கு கிறிஸ்டியன்லா ப்ரகாரம் என் சொத்தின் உரிமை பிறக்காவிட்டாலும் அவனுடன் பங்கு பிரித்துக் கொள்வேன். என் குமாரனாகிய சலமோன் இது முதல் எனக்குப்பணிந்து என்னைத் தன் பிதாவாக மதித்து பணிந்து நடப்பானாகில் என் ஆஸ்திபாஸ்தி யெல்லாம் அவனுக்கே சொந்தமாக்கி விடுவேன்.

சவுல்.—சலமோன் உமக்கு பணிந்து இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, அவனும் உம்மைப்போல ரோமான் மதத்தில் சேரவேண்டியது தானே?

பவு.—அது தப்பறையான கேள்வி; ஒருவனுடைய வேதக் கொள்கையை விட்டு விடும்படி கட்டாயப்படுத்துவது பெருந் தவறு. வேத விஷயத்தில் அவன் தன் மனசாக்ஷிப் பிரகாரம் செய்யலாம். மற்றபடி அவன் எனக்கு அமைந்து கீழ்ப்படிந்து வருவானேயாகில் என் சொத்துக்கு பாத்தியஸ்தனாவான். இது உண்மை.

முத்.—என்ன அப்பா, சலமோன்? உன் தகப்பனார் எவ்வளவு நல்லவரென்று இப்போதாவது அறிந்தாயா? இவர் சொற்படி நடந்தால் நீ சுகப்படுவாய்; இல்லாவிட்டால்........ என்று முடிப்பதற்குள்ளாக கோபத்தோடு எழுந்து, நல்ல தீர்மானம் செய்தீர்கள்! உங்கள் தீர்மானம் உங்களோடு இருக்கட்டும் என்று தனக்குக் கொடுத்த பஞ்சாயத்து தீர்மானச் சீட்டை இரண்டு துண்டாக கிழித்தெறிந்து விட்டு, ''என் சொத்து எனக்கு எப்படி வராதோ பார்க்கலாம். என் தகப்பன் எவ்வளவோ நல்லவராம்! ஆறாமத்த நல்லவர்தான். (மணியக்காரரைப் பார்த்து) என்னை யேமாற்றிக் கெடுத்தது நீரே.

முத்.—நான் எப்படியடா ஏமாற்றிக் கெடுத்தேன் உன்னை?

சல.—அன்று காலை நான் வாசற்படியில் உட்கார்ந்துகொண்டு சற்று நேரஞ் சாதித்திருப்பேனாகில் எனக்கு சேரவேண்டிய ஆஸ்தியும், நிலம்புலமும், வீடுவாசலும் அன்றைக்கே சேர்ந்திருக்குமே! நீரென்னைக் கபடமாய் ஏமாற்றிக் கெடுத்தீர்.

முத்.—ஏன்! இப்போதும் அப்படியே செய்துகொள்ளடா அப்பா. என் ரிப்போர்டு அன்றே போலீஸ் டேஷனுக்குச் சேர்ந்திருந்தால் பார்த்திருப்பாய் வேடிக்கையை! சரி; நீ யெப்படியாகிலும் கெட்டழிந்துபோ.

என்று அவ்விடத்தை விட்டு தம்மோடு வந்தவர்களுடன் தமது இல்லிடத்திற்குப் புறப்பட்டார்.

சல.—உன் மிரட்டலுக்குப் பயப்படுங் குட்டியா இது? எனக்குச் சேரவேண்டிய சொத்தைக் கைப்பற்றி, சுவரை யிடித்து, வேறு வாசற்கால் வைத்து, அதில் நான் வாசஞ் செய்யாவிட்டால் நான் சலமோனல்ல,

என்று வாய்க்கு வந்தபடி தன் தகப்பனையும், பஞ்சாயத்தாரையுந் திட்டிக்கொண்டு நடந்தான் சலமோன்.

அன்றைபதினம் இராத்திரி பவுல் போதகர் போசனஞ் செய்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஒன்றுக்குப்பின் ஒன்றாக அவர் வீட்டின்மேல் கல் விழுந்தது. அந்நேரத்தில் வெளியே போனால் தலைமேல் கல் விழுமென்று பயந்து வீட்டிலே தங்கிவிட்டார். ''நரகத்திலிருந்து குட்டிப்பசாசுக்கள் வெளிப்பட்டது போல் காணப்படுகிறது!'' என்று ருத்தம்மாள் சொன்னாள். ''எத்தனை பேய்கள் வந்தபோதிலும் அவைகள் நம்மை பொன்றுஞ் செய்யமாட்டா. திருச்சபைச் சரித்திரங்களை வாசித்துப் பார்த்தால் எந்தக்காலத்திலும் சத்தியத்துக்கு உட்படுகிறவர்களை பேய்கள் நேராக துன்பப்படுத்தாவிடினும் பொல்லாதவர்களை யேவிவிட்டு துன்பப்படுத்தி வந்தனவென்று தெரியவரும். எவ்வளவுக்கு இப்பேர்ப்பட்ட துன்பதுரிதங்களுண்டாகுமோ அவ்வளவுக்கும் நமது விஸ்வாசம் அதிகரிக்கு''மென்று போதகர் சொன்னார். அது முதல் இராத்திரி வேளையில் நாலில் ஒன்றில் வீட்டின் மேல் கல் விழுந்துகொண்டே இருந்தது. பவுல் போதகரும் அதை சட்டை செய்தவரல்ல.

பஞ்சாயத்து நடந்துவந்த 15-ம் நாள் போதகர் வீட்டுக்கு திருடர் கன்னம் வைத்தார்கள். சமையல் வீட்டுக்குள் சட்டிப்பானைகளை உருட்டுகிற சப்தங்கேட்டு போதகர் விளக்கு கொளுத்தி அதில் பிரவேசிக்கிறதற்குள்ளாக இரண்டொரு வெண்கலப் பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு ஓடிப்போனார்கள். மறுநாள் காலை போலீசார் விசாரணை செய்து, திருடர் அகப்படாதபடியால் யார் மேலாவது சந்தேகமிருந்தால் தெரிவிக்கும்படி கேட்டும் ஒருவர் மேலுஞ் சந்தேகமில்லையென்று போதகர் சொன்னதன்மேல் திருட்டு கேசு



தள்ளிவிடப்பட்டது. அது முதற்கொண்டு கத்தோலிக்கருடைய ஏற்பாட்டின்படி 3 வாலர் இராவில் போதகருடைய வீட்டில் நித்திரை செய்து வந்தார்கள்.

இரண்டாம் மாதம் நடு இராத்திரிவேளையில் போதகருடைய மாட்டுத் தொழுவம் தீப்பிடித்தபடியால். பெருங் கூச்சல் போட்டும் பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் ஒருவரும் உதவியாய் வராமலிருந்தார்கள். அங்கு படுத்திருந்தவர்கள் உதவியால் போதகர் மாடுகள் அவிழ்த்து விடப்பட்டு, ஜலத்தைக் கொண்டு நெருப்பை யவிக்க பிரயாசைப்பட்டும் முடியாமல் தொழுவ முழுவதும் நெருப்புக் கிரையாய் விட்டது. இப்பேர்ப்பட்ட துன்பகாலத்தில் முதலாய் பவுல்போதகரும், ருத்தம்மாளும் எவரையும் திட்டி தூஷணியாமல் பொறுமையை வல்லாயுதமாகக்கொண்டு அமைவுடன் நடந்து வந்தார்கள்.

ஒரு நாள் இராத்திரி வேளையில் பவுல் போதகர் வீட்டில் கல் விழுந்துகொண்டிருக்கும் பொழுது இரண்டு வழிப்போக்கரான மகம்மதியர் கல் விழும் வீதியில் நடந்து கொண்டு போனார்கள். போதகருடைய வீட்டுக் கருகாமையிலிருந்த மரத்திலிருந்து கல் புறப்படுவதைக் கண்டு தலை நிமிர்ந்து மரத்தை பார்த்த பொழுது அதில் ஒருவனிருப்பதைக் கண்டு, யாரடா, மரத்திலிருந்து கல் லெறிகிறதென்று சத்தமாய்ச் சொல்ல, ஒருவன் மரத்திலிருந்து சர சரவென்று கீழே இறங்கினான். இந்தச் சத்தத்தைக் கேட்ட போதகரும் வீட்டை விட்டு வெளியே வந்தபோது அந்த துஷ்டன் ஓட்டம் பிடித்தான். போதகரும் அவனைப் பின்தொடர்ந்து ஓட அவன் இரண்டாம் வீதியிலுள்ள வீட்டில் நுழைந்தான். போதகரும் அந்த போக்கிரி யின்னானென்று அறிந்துகொண்டு மறு நாள் மாஜிஸ்ட்ரேட்டிடம் பிரியாது செய்தார். குறித்த தவணையில் வாதியும் பிரதிவாதியுமாக கச்சேரியில் ஆஜரானார்கள். பிரதிவாதி இளைஞனாயிருந்தபடியால் இன்னொரு தவணைபோட்டு கோர்ட்டுக்குவரும்படி அவனுக்கு தாக்கீது செய்தார்.

குறித்த நாளில் பவுல் போதகர் ஈசாக் உபதேசியார் முதலிய சிலருடன் ஆஜரானார். 10 பிராயமுள்ள குற்றவாளி, தகப்பனார், மிஷனரி பாதிரியார், இன்னும் அநேக ஜனத்திரளுடன் கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

அப்போது குற்றவாளியினுடைய தகப்பனார் சீல் இடப்பட்ட ஒரு கடிதத்தை அதிகாரிக்குக் கொடுத்தார். அதிகாரி யதை வாசித்துப்பார்த்து, ''நான் சர்டிபிகேட் கேட்டேனே ஒழிய சிபாரிஸ் கடிதங் கேட்டேன் இல்லை. பையன் இளைஞனென்றும். அப்பேர்ப்பட்ட துஷ்ட வேலையை செய்திருக்க மாட்டானென்றும் பாதிரியார் எழுதியிருக்கிறார். இவர் இராத்திரியில் நித்திரை செய்யும்போது பையனுடைய நடத்தையை யெப்படி யறிந்தார்?'' என்ற பின் கேசை விசாரணை செய்தார். இந்த பையன் 10 பிராயத்துக்கு கீழ்ப்பட்டிருக்கிற படியாலும், சாக்ஷி ருஜு வில்லாதபடியாலும் கேசை டிஸ்மிஸ் செய்தபோதிலும் பையனை பயமுறுத்தி, இனி யிப்பேர்பட்ட வேலை செய்தால் ரிபர்மேட்டரி ஸ்கூலுக்கு(ஜெயிலுக்கு) அனுப்பப்படுவானென்று பயமுறுத்தினார். அவனுடைய தகப்பனைப் பார்த்து: ''உன் மகன் துடுக்கனெனத் தெரியவருகிறது. இனிமேல் இப்பேர்ப்பட்ட கேஸ் அவன் மேல் வரும்பட்சத்தில் அவன் தண்டிக்கப்படுவதுடன், அவனுடைய துஷ்ட வேலையாலுண்டாகும் நஷ்டத்தை நீயே கட்டிக் கொடுக்கும்படி நேரிடும்'' என்று சொல்லி கேசைத் தள்ளி விட்டார்.

(இன்னும் வரும்.)

---

## C. I. A. of Southern India.

## The 16 th., Annual General Meeting.

## தென் இந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

### 16-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம்.

---

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் 16-வது பொதுக்கூட்டம், சென்ற ஜனவரிமீ 14-ம் தேதி கூடலூர் அர்ச். சூசையப்பர் கலாசாலையில் மிகவந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணியாராகிய அருளப்ப ஆலன் ஆண்டவர் அவர்களது அக்கிராசனத்தின்கீழ், மிக வைபவத்துடன் நடைபெற்றது. தென்னிந்தியாவின் பற்பல நகரங்களினின்றும் பிரதிநிதிகள் இருநூற்றுக்கு அதிகமான பேர்கள் விஜயஞ் செய்தனர். கோயம்புத்தூரிலிருந்து விக்கர் ஜெனரல் கனந்தங்கிய ராண்டி சுவாமிகளும், தூத்துக்குடியிலிருந்து ஸ்ரீ

மான் ஜோசெப் பெரெரா, இ ஏ. ரூபின் முதலானவர்களும், திண்டுக்கல்லிலிருந்து மிராசுதார் ஐ. சந்தன கவுண்டர் முதலானவர்களும், மதுரையிலிருந்து தாசில்தார் ஏ. ஜெகராயப்பிள்ளை அவர்களும், பாலூரிலிருந்து ஜி. ஞானப்ரகாச ரெட்டியார் அவர்களும், சிதம்பரம் சப்கோர்ட்டு நாசர் பி. ஜே. ஜெகந்நாதப் பிள்ளையவர்களும், கீழ்ச்சேரி ராய்சாஹேப் காரசால அருளைய நாயுடுகாரும், மாயவரம் முனிசிபல் கவுன்சிலர் என். தாவீது நாடார், ச. அ. ரெத்தினசாமிநாடார், ஏ. ரெத்தினசாமி ரெட்டியார் முதலானவர்களும், திருச்சினாப்பள்ளியிலிருந்து பட்டாதார் செல்வநாதப் பிள்ளை, ராவ் சாஹேப் எஸ் ஆரோக்கியசாமி பிள்ளை, டி. ரூசைப்பிள்ளை முதலானவர்களும், சென்னையிலிருந்து ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுபிள்ளையவர்கள், டி. அருமைநாத பிள்ளை, வி. ஏ. அருள்சாமி பிள்ளை முதலானவர்களும் விஜயஞ் செய்தனர். அனேகர், தாங்கள் சில அசந்தர்ப்பத்தின் நிமித்தம் வரக்கூடாமையை தந்தி மூலமாய் தெரிவித்துக் கொண்டனர். அன்றுகாலை நிர்வாக சபைக் கூட்டம் நிறைவேறியது. அதில் சங்கத்தின் ஒழுங்குகள் புதிதாய் திருத்தப்பட்டபடி ஒவ்வொன்றாய் வாசிக்கப்பட சில புது திருத்தங்களுடன் அங்கீகரிக்கப் பட்டன. மாலை சரியாய்4-மணிக்கு மிகவந்திக்கத்தக்க அக்கிராசனாதிபதியவர்கள் பல குருப்ரசாதிகளுடன் வந்து தமதாசனத்தில் அமர, பாப்பரசரை கடவுள் ஆசீர்வதிப்பாராக என்ற பாடல் சபையோரால் பாடப்பெற்றது. அக்கிராசனாதிபதி அவர்கள் எழுந்து; சங்கத்தின் தற்கால நிலைமையைப்பற்றி சற்று விவரித்த பின், அதைப்பின்னும் விருத்தி செய்து வலிவுள்ளதாக்க அங்கத்தினர் அதிக ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் உழைக்க வேண்டுமென உற்சாகமாய் உபந்நியசித்தார்கள். அதன்பின் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு உபந்நியாசஞ் செய்ய ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருந்த புதுவைப் பிரபு ம-ள-ள-ஸ்ரீ சின்னையா லூயி ஞானப்பிரகாச முதலியார் அவர்கள் சில அசந்தர்ப்பத்தினால் வரக்கூடாதே போனதனிமித்தம், சங். எப். எச். பாரர் சுவாமிகள் எழுந்து ஷெ பிரபுக்குப் பதிலாக பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறினார்கள். பிறகு சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்களால் 1913 வது வருஷாந்த ரிப்போர்ட்டு வாசிக்கப் பெற்றது. அதன் பிரகாரம் சங்கத்தாரின் தொகை 1538 என்றும், சங்கநிதி ரூ. 5300 3-1 என்றும், இதில் சங்கவிடுதிக்காக வசூலித்தது ரூ. 1249 4 0 என்றும், தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்குப் பொது ஜன சமூகத்தின் பிரயோஜனத்துக்காகக் கருதப்பட்ட இந்த விடுதியின் நிதியானது அங்கத்தினரால் பெருக்க மடையாதிருப்பது மெத்த விசனத்துக்குரிய காரியமாயிருக்கிறதென்றும், அங்கத்தினர் இருவருக்கு கவர்ன்மெண்டாரால் கௌரதா பட்டங்கள் (கீழ்ச்சேரி மிராசுதார் ம-ள-ள-ஸ்ரீ காரசால அருளைய நாயுடுகாருக்கு ராய் சாஹேப் பட்டமும், தஞ்சாவூர் மாஜி சிரஸ்ததார் ம-ள-ள-ஸ்ரீ எஸ். ஆரோக்கியசாமிப் பிள்ளை அவர்களுக்கு ராவ் சாஹேப் பட்டமும்) அளிக்கப்பட்டனவென தெரியவந்தது.

அதன்பின் திருச்சினாப்பள்ளி எப். ஜி. நடேச அய்யர் அவர்கள் "கத்தோலிக்கு சங்கங்களின் ஐக்கியம்" என்பதை மகுடமாகக்கொண்டு மகாசாதுரியமான பிரசங்கஞ் செய்தார்கள். பிறகு கூடலூர் வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ, வி. ஜே. சாமுப் பிள்ளையவர்கள் "சங்கமும் அதன் புது ஒழுங்குகளும்" என்பதைப்பற்றி மிக விளக்கமாய் உபந்நியாசஞ் செய்தார்கள். இது முடிந்ததும், திருச்சினாப்பள்ளி அர்ச். ரூசையப்பர் காலேஜின் பிரதம தமிழ்ப்போதகராகிய பண்டிட் டி. சவரிராயப் பிள்ளையவர்களால், "தாய்மார்களின் கடமைகள்" என்பதை மகுடமாகக் கொண்டு ஓர் அரிய உபந்நியாசஞ் செய்யப்பட்டது. (இது நம்மனோரால் பயனுற வாசிக்கப்படத்தக்கதாதலால், கூடுமாயின் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க வருந்துவோம). கடைசியாக சபாநாயகர் அவர்கள், தமது முடிவுரையில் இரண்டு விஷயங்களை சபையோருக்கு வற்புறுத்தலானார். முதலாவது: எச்சபையும் நடைபெறுவதற்கு ஆதாரமாயுள்ள வரும்படி இச்சபைக்குப் பிரஸ்தாப வருஷத்தில் மிக்க குறைந்துபோனது மெத்த விசனத்துக்குரிய காரியமென்றும், அதை விருத்திசெய்ய அங்கத்தினர் முயற்சிசெய்



யாமற் போனால் சங்கம் யாதொரு நன்மையும் செய்ய இயலாதென்றும், அங்கத்தினர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சந்தாக்களைத் தவறாமல் கொடுக்கப் பிரயாசைப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினார். இரண்டாவது, சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகிய ஆனரபில் திவான் பஹதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளை யவர்களுடைய கல்வித்திறமை, நன்னடத்தை முதலியவைகளை கவர்ன்மெண்டார் சன்மானித்து, அவரைத் தமது சட்டநிரூபண சபையின் அங்கத்தினராக நியமித்தார்களென்றும், பின்னும், சென்னை சர்வகலாசாலை மாணவர்களுக்கு புத்திப்பிரசங்கம் செய்யும் கௌரவ அலுவலுக்கு அவரை இவ்வருஷம் தெரிந்துகொண்டார்களென்றும், இது கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கெல்லாமே ஓர் பெரிய கௌரவமென்றும், இத்தகைய கண்ய குணமுள்ள கனவானை மற்றவர்கள் விசேஷமாய் இளைஞர்கள் பின்பற்றி நடக்கவேண்டு மென்றும் விளம்பினார். சபாநாயகருக்கு வந்தனங் கூறியபின், அரசர் வாழ்த்துப் பாடவே கூட்டம் முடிவுற்றது. இக்கூட்டம் இவ்வாறு சம்பிரமமாய் நிறைவேற முக்கிய காரணகர்த்தா யிருந்தவர்கள் இருவர். இம்மகா ஜனக்கூட்டத்தை கூடலூரில் கூட்டுவதற்கு மிக்க சிரமப்பட்டு தக்க ஏற்பாடு செய்த சங். பாரர் சுவாமிகளும், இக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்த வெளியூர் ஜனங்களும் உள்ளூர் ஜனங்களுமாகிய சுமார் முந்நூறு பேர்களுக்கு மிக அன்புடன் சம்பிரமமான இராஜவிருந்தளித்த புதுவைப் பிரபு, ம-ள-ள-ஸ்ரீ லூயி ஞானப்பிரகாச முதலியாருமாவர். இவ்விரு மகான்களுக்கும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம பெரிதும் நன்றி பாராட்டக் கடப்பாடுடையது. இந்த ஸ்ரீமான் லூயி ஞானப்ரகாச வள்ளலைப் புகழ்ந்து ஒரு வாழ்த்துப்பாடலும் அச்சிடப்பட்டு ஷெ கூட்டத்தில் வழங்கப்பட்டது. இப்பாடல், சென்னைநகர் கிளைச் சங்கத்தினரிற் சிலருடைய வேண்டுகோளின்படி, மணப்பாடு சு. ஏ. சில்வேயிரா பண்டிதர் அவர்களால் இயற்றப்பெற்றது.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உபதேசி, நாட்டாண்மை, பண்டாரம், கோவில்பிள்ளை, மற்றும் கோவில் உத்தியோகஸ்தர்கள்.

(முன் தொடர்ச்சி.)

1. தாங் கரையேறத் தம்மைக் காத்தலும், பிறரைக் கரையேற்ற அவர்களை உணர்த்துதலும் கோவில் அதிகாரிகளின் தொழில் என் றறிந்திருப்பது ஒழுங்கு.

2. கோவில் அதிகாரிகள் பிறரைவிட நல்லவர்களாய் நடப்பது ஒழுங்கு.

(நீ குருடருக்கு வழி காட்டியாகவும், அறிவீனருக்குப் போதகனாகவும், பாலகர்களுக்கு உபாத்தியாயராகவும், வேதப்பிரமாண அறிவிலுஞ் சத்தியத்திலும் ஒழுங்கைக் கைக்கொண் டிருக்கிறவனாகவும் உன்னை எண்ணுகிறாய். ஆகிலும் மற்றவர்களுக்குப் போதிக்கிற நீயே உனக்குத் தானே போதிக்காமலிருக்கிறாய். களவுசெய்யக்கூடாதென்று போதிக்கிற நீயே களவு செய்கிறாய். விபசாரம் பண்ணக்கூடா தென்று சொல்லுகிற நீயே விபசாரம் செய்கிறாய். விக்கிரகங்களை அருவருக்கிற நீயேவேதத்துரோகியாய் இருக்கிறாய். பிரமாணத்தின் மட்டில் மகிமை பாராட்டுகிற நீயே பிரமாணத்தை மீறிச் சர்வேசுரனை நிந்தைப்படுத்துகிறாய். ஆகையால் எழுதியிருக்கிறபடியே சர்வேசுரனுடைய நாமம் உங்களாலே அஞ்ஞானிகளுக்குள்ளே தூஷணிக்கப்படுகின்றது. (உரோ 3—19—24) இவ்வாக்கியங்கள் கோவில் அதிகாரிகளுக்குஞ் செல்லும்.)

3. எண்ணப்படாத திரவியங்களை இரப்போருக்கு ஈவதைப் பார்க்கிலும் ஓர் ஆத்துமத்தைக் கரையேற்றுவது உத்தமமென்றும், அதற்குமேல் ஆண்டவருக்குப் பிரியமுள்ளது ஒன்றுமில்லை யென்றும் அறிந்திருப்பதுஒழுங்கு. (அர்ச். கிறிசோஸ்தோம்)

4. மனிதர் சரீரத்தின் புறத்தியிற் றோன்றும் சாதி வேற்றுமையையும், அந்

தஸ்து வேற்றுமையையும் பாராமல் அவர்கள் ஆத்துமத்தைப்பற்றி மாத்திரம் சிந்தித்து, அவர்களை ஈடேற்ற பிரயாசைப்படுவது ஒழுங்கு. (ஆத்துமத்திற்கு புண்ணியமேயொழிய வேறு செல்வமும் நன்மையுமில்லை. பாவமே யொழிய வேறே தரித்திரமுங் கேடுமில்லை. அர்ச். ஸ்நாபக அருளப்பர் அனுப்பின சீஷர்கள் ஆண்டவரண்டை வந்து, இரட்சகர் நீரோ? வேறொருவருண்டோ? வென்று கேட்டதற்கு, தாமே இரட்சகர் என்பதற்கு குன்றாத அடையாளமாக தரித்திரர் தமது வேதத்தில் சேர்வதாகச் சொன்னார். அவர் அவ்வளவு அன்புடன் நேசித்துப் பாராட்டிய தரித்திரர்களை, அவரைப் பின் சென்று அவர் அலுவலை நடத்த வந்தவர்கள் இகழ்ந்து தள்ளுவதோ?)

5 கோவில் அதிகாரிகள் யாவரோடும் அன்போடும், வாஞ்சையோடும் நடப்பது ஒழுங்கு.

6. கோவில் அதிகாரிகள் தங்கள் அந்தஸ்தின் கனகனத்தையறிந்து, தங்களுடைய ஒவ்வொரு செயலும் மற்றவர்களால் நுணுநுணுக்கமாய் கவனிக்கப்படுகிறதென்று தெரிந்து எப்போதும் கண்விழிப்புடன் தங்கள் அலுவலை நடத்துவது ஒழுங்கு.

7. சற்பிரசாதம் எழுந்தேற்ற மாகும்போது வெல்லம், கடலை இறைப்போர்களை உடனே கண்டிப்பது ஒழுங்கு. (ஆண்டவர் மோட்சத்திலிருந்து இறங்கிவரும் சமயத்தில், அனைவரும் அடிபணிந்து அவரை ஸ்தோத்திரிப்பதைவிட்டு, ஜனங்களுக்குப் பராக்குண்டாக்குவது விபரீதமான செய்கை. அநேகர் விசேஷமாய் கிழவர் கிழவிகளும், சிறு பிள்ளைகளும் வெல்லம் கடலைகளை வாரியெடுத்து முடிபோட்டு வைப்பதில் கருத்தாயிருப்பார்கள். சற்பிரசாதத்திற்கு ஆயத்தமாயிருக்கும் பிள்ளைகள் அவைகளில் கொஞ்சம் பொறுக்கித் தின்று உபவாசத்தைத் தவறி, பிறகு சற்பிரசாதம் உட்கொள்வதுண்டு. இவ்வழக்கத்தை அறவே ஒழிப்பது நன்று.)

8. செத்தவர்களைப் பூச்சியத்துடன் அடக்கஞ் செய்யுஞ் சடங்குகளைத் தக்க மரியாதை வணக்கத்துடனேயும், பக்தி ஆசையோடும் செய்து முடிப்பது ஒழுங்கு.

9. கோவில் அதிகாரிகள் செபங்களை மிஞ்சிய இராகத்தோடும் மெதுவாயும் வாசியாமல் சபைக்குக் கேட்கும் விதமாய் நிதானமாய் வாசிப்பது ஒழுங்கு.

10. கோவில் அதிகாரிகள் உபதேசம் செய்யும் தொழிலிலுள்ளவர்களாகையால், தங்களால் கூடியமட்டும் வேதகாரியங்களை நன்றாய் அறிந்திருப்பது ஒழுங்கு.

11. காலம் இடமறிந்து யாருக்கும் புத்திசொல்லுவது ஒழுங்கு.

12. சபையின் ஒழுங்கீனங்களை விசாரணை செய்து, பக்குவமாய் அவைகளைத் திருத்துப்பாடு செய்ய முயலுவது வது ஒழுங்கு.

13. குருவானவர் கையெழுத்திட்ட சபை வருமானங்களை ஒரு பட்டியிலெழுதி வைத்திருப்பது ஒழுங்கு.

14. தன் சபை வியாதியஸ்தர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதலளிப்பது ஒழுங்கு.

15. கோவில் உத்தியோகஸ்தர்கள் வேசித்தனம், குடி, உதாசின வார்த்தை கோபம், வர்மம், பழிவாங்குதல் முதலிய துர்க்குணங்களைத் தள்ளி நடப்பது ஒழுங்கு.

16. செபக்கூடங்களில் நடக்கும் சுற்றுப்பிரகார முதலிய பக்திக் கிருத்தியங்களைக் கிரமமாய் நடத்துவது ஒழுங்கு.

17. கோவில் உத்தியோகஸ்தர்கள் திருக்குடும்பத்தைப்போல் நல்லவர்களாய் நடந்து பிறருக்கு நன்மாதிரிகை காட்டுவது ஒழுங்கு.

18. தங்கள் தொழிலின் காரணத்தைப்பற்றி தங்களிடம் பேச வரும் பெண்களைச் சகோதரிகளைப்போல் பாவிப்பது ஒழுங்கு.

19. மகாராசராயிருந்தாலும், ஏழைகளாயிருந்தாலும் யாதோர் பாரபட்சமின்றி சகலரோடும் சமரசமாய் நடமாடுவது ஒழுங்கு.

20. கோவில் பிள்ளைகள் குறித்தநேரத்தில் கோவில் மணி அடித்து, அந்திசந்தி செபங்களைச் செபிப்பது ஒழுங்கு.



21 கோவில் பிள்ளைகள், சாவு வாழ்வு வேளைகளில் சபையாரிடம் போய் சபைக் காரியங்களைக் கிரமமாய் நடத்துவது ஒழுங்கு.

22. கோவில் பிள்ளைகள் வயதில் இளையவர்களாயினும், செல்வத்தில் எளியவர்களாயினும் அவர்களுடைய அந்தஸ்தைப் பற்றி யாவரும் மதிப்பது ஒழுங்கு.

23. சங்கிஸ்தன்மார் கோவில் பொருட்களை பத்திரமாய் காப்பாற்றுவதுடன் வேறு ஜனங்களுக்கு அவைகளை இரவலாய்க் கொடாதிருப்பது ஒழுங்கு.

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பேயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### பத்திரிகாபி விருத்தி.

I

*சங்கைக்குரிய பத்திராதிபர் அவர்களே!*

"நல்லாயன்" பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தி யடையவேண்டுமென்ற பேராவலுடைய நான் என் சிற்றறிவுக்குப் புலப்பட்டவாறு என் அவாகொண்டமட்டும் நீண்டதோர் நிருபம் எழுதிவிட்டேன். இதனில் காணப்படும் குறை நோக்கி இதைத் தள்ளிவிடாது, குணத்தையே கொண்டு அவசியம் இதைப் பிரசுரிக்கத் தயை புரிவீரெனப் பிரார்த்திக்கின்றேன்.

சர்வேசுரனுடைய நாமம் மகிமைப்படுவதற்கும், ஆத்துமாக்கள் குணப்பட்டு சர்வேசுரனுடைய பாதத்தண்டை சேருவதற்கும் காரணமாயிருக்கும் கருவிகள் விசேஷமாய் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்ட சத்தியவேத சாஸ்திரங்களும், பக்திக்கடுத்த நூற்களும், பத்திரிகைகளுமே. ஆகையினாலே திரவிய சம்பன்னரான பிரபுக்களும், கனதனவான்களும் நல்லாயன் அச்சுயந்திரசாலைக்கென்று சமயோசிதமாய் உதவி புரிந்து வருவார்களானால், அவரவர்களுக்கு இருக்கும் படியான நிதி கிஞ்சிற்றேனும் குறைவுபடாது; சர்வேசுரன் ஒன்றுக்கு பத்தாகக் கொடுத்து மேன்மேலும் ஆசீரவதிப்பதாக வாக்களித்திருக்கிறார். திரவியமின்றி சாதாரண நிலைமையிலிருப்பவர்களும் உற்சாகத்தோடும் விடாமுயற்சியோடும் சொற்ப உதவியாகிலும் செய்ய முன்வருவதுமல்லாமல், நல்லாயன் பத்திரிகையின் அபிவிர்த்தியைக்கோரி அதிக மதிகமாய் கையொப்பக்காரரை சேகரிக்கப் பிரயாசையுமெடுத்துக் கொள்வார்களானால் அவர்களும் சர்வேசுரனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். கோயம்புத்தூர் நிருபநேயரும் அவ்வாறே தம்முடைய அபிப்பிராயத்தை சென்றமாசத்தில் வெளிப்படுத்தி யிருக்கிறார்.

உலகத்திலே ஜீவிக்கும் சக்கரவர்த்திமுதல் நிர்ப்பாக்கிய அந்தஸ்தில் ஜீவிக்கும் ஏழைவரையில் சகலரும் சர்வேசுரனுடைய சமுகத்தில் ஒரே அந்தஸ்துடையவர்களா யிருக்கிறார்கள். தற்பெருமையையும், தற்புகழ்ச்சியும் தான்என்கிற மமதையும் கொண்டு உலகஆடம்பரங்களில் சிக்குண்டு, பிரபுக்கள், கனதனவான்கள், மேன்மக்கள் என்று மேன்மைபாராட்டி பெருமைகொண்டு ஜீவிக்கும் நமது கிறிஸ்துவ சகோதரர்கள் டிசம்பர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட வருஷக் கடைசி என்னும் வியாசத்தை அக்கறையோடும், கவனத்தோடும், பற்றுதலோடும் வாசித்தார்களானால் ஒவ்வொருவரின் அந்தரங்க ஜீவியமும், வெளியரங்க ஜீவியமும் பட்டப்பகற்போல் வெட்ட வெளிச்சமாய் நன்கு விளங்கும்.

ஆகவே, உலகத்திலே பிரபுக்கள் என்றும், கனதனவான்கள் என்றும் மேன் குலத்தவர் என்றும் மருள் கொண்டு மேன்மைபாராட்டும் கிறிஸ்துவ சகோதரர்கள் ஒவ்வொருவரின் ஜீவியம் எவ்வளவு கேவலமும், அற்பமும் என்று எண்ணும் எண்ணம் நமக்கு அடிக்கடி தோன்றி, நம்மை நாம் அற்பமாக எண்ணி நம்முடைய ஜீவியத்தை வெறுத்து, கபடமற்றவர்களாயும் பிறர் சிநேகமுடையவர்களாயும், இருதய சுத்தமுடை

யவர்களாயும் ஜீவிப்பதற்கு நல்லாயன் பத்திரிகை ஒருஞானவழி காட்டியா யிருக்கிறதல்லவா?

உலகமும் உலகத்திலுள்ள சுக செல்வ பாக்கியங்களும் அந்தஸ்தும் சாஸ்வதம் என்று எண்ணி மோசம் போய், உலக செருக்குடையவர்களாய் மமதைகொண்டு பெரிய பெரிய ஞான நூற்களையும், வேதசாஸ்திரங்களையும், கல்வி சாஸ்திரங்களையும், கணக்கற்றவைகளாய் வாசித்திருக்கிறோம் என்கிற தற்பெருமைகொண்டு, நல்லாயன் பத்திரிகையை அற்பமாக எண்ணி அசட்டையாக வாசித்து அதை விட்டெறியாதேயுங்கள். உலக ஆடம்பரங்களையும், மேட்டிமையையும் விரும்பி, தங்கள்ஜீவியத்தை மறந்து, உலகம், பசாசு, சரீரம் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடுத்து ஜீவிக்கிறவர்கள் நடை பிணத்துக்கும்; என்றும் அழியாத நரகத்தீயின் எரிகரும்புக்கும் ஒப்பாகிறார்கள்.

உலகத்திலுள்ள பலவிதமான வேதங்களில் கத்தோலிக்கு வேதமே சத்தியமானதென்றும் மெத்தவும் பத்தி வைராக்கிய முடையதென்றும், கணக்கிலடங்காத வேதசாட்சிகளின் இரத்தத்தினால் ஸ்திரமான முத்திரை யிடப்பட்டதென்றும் இதர மதஸ்தர்களால் வெளியரங்கமாய் ஒப்புக்கொள்ளப் படாவிட்டாலும் அந்தரங்கமாயாகிலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. இப்பேர்க்கொத்த உத்தம சத்தியவேதத்தை முன் காலத்தில் அப்போஸ்தலருங் குருக்களும் தேசங்கள்தோறும் சென்று பிரசங்கஞ் செய்து அதைப் பரவச்செய்தார்கள். இக்காலத்திலோ சத்தியவேத சாஸ்திரங்களும், சன்மார்க்க நூற்களும் அச்சிடப்பட்டு உலக மெங்கும் உலாவி, வர பொல்லாத கிறிஸ்துவர்களும் புற மதஸ்தரும், இந்துக்களும், துர்மார்க்கரும் அவைகளை வாசிப்பதினால் குணப்பட்டு, சத்திய வேதத்துக் குட்பட்டு சர்வேசுரனுடைய பாதத்தண்டை சேருகிறார்கள். இதற்கு முக்கியகாரணங்களாயிருப்பது அச்சியந்திர சாலைகளேயன்றோ?

குணப்படும் ஒரு பாவியி னிமித்தம் பரலோகத்திலுள்ள கோடாகோடி சம்மனசுக்கள் ஆனந்த சந்தோஷங் கொண்டாடும்போது, அச்சியந்திரசாலைகளில் அச்சிடப்படும் சன்மார்க்க நூற்கள், பத்திரிகைகள் முதலியவற்றை வாசித்து, மனந்திரும்பி குணப்படும் அனேக ஆயிரம் பாவிகளுக்காக பரலோகத்திலுள்ள அந்த சம்மனசுக்கள் எத்தனைக் கதிகமாய் சந்தோஷங் கொண்டாடுவார்கள்!

அநேகப் பிரபுக்கள், கனதனவான்கள் திருவிழாவிலும் உற்சவ காலங்களிலும் கத்தோலிக்கு வேதம் பெருங் கீர்த்தியு மடையவும், மேன்மைப்படவும், சர்வேசுரனுடைய நாமம் மகிமைப்படவும், உலகப் பிரசித்தமாய் மேன்மையாகவும், சிறப்பாகவும் அவ்விழாக்களைக்கொண்டாடும் பொருட்டும் உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் தங்கள்பிரியப்படி எத்தனைக் கதிகமாய் பணங்களை செலவழிக்க முயலுகிறார்கள். வலது கை செய்யும்படியான தர்ம கைங்கரியம் இடது கைக்குத் தெரியாதவண்ணம் அந்தரங்கமாய் செய்யும் பிரபுக்களும் அனந்தம்பேர் இருக்கிறார்கள். அதேவிதமாக நல்லாயன் அச்சுயந்திரசாலைக்கென்றும், நற்சிந்தையோடும், முகமலர்ச்சியோடும், திரவிய சகாயம் சமயோசிதமாய் செய்து வருவார்களானால், அவர்களுக்கு சர்வேசுரனுடைய தயவும், கிருபையும், ஆசீர்வாதமும் ஏராளமாய்க் கிடைக்கும்.

உலக ஆடம்பரங்களுக்கென்று செலவழிக்கும் திரவியம் மறுபடியும் நம்முடைய கைக்கு வராது. ஆனால் அச்சுயந்திரசாலைகளுக்கென்று உதவிபுரியும் பணங்களைக்கொண்டு அச்சுயந்திரங்களும், அச்சு எழுத்துககளும் வாங்கப்பட்டு, அவைகளினால் அச்சிடப்படும்புஸ்தகங்களும் பத்திரிகைகளும் நானாதேசங்களுக்குச் சென்று, எங்கும் பரவி துன்மார்க்கர் குணப்படவும், சர்வேசுரனுடைய நாமம் மகிமைப்படவும் காரணமாய் இருக்கும். இது எப்பேர்ப்பட்ட நல்ல காரியம்!

நான் நல்லஆயன் அச்சுயந்திரசாலையை நேரில் பார்த்திருக்கிறபடியாலும், நானே வேறொரு அச்சுயந்திரசாலையில் சம்பந்தப்பட்டிருக்கிறபடியாலும், நல்ல ஆயன் அச்சுயந்திரசாலைக்கு பல குறைகள் இருக்கின்றனவென்று எனக்கு விசிதமா யிருக்கிறது. அதற்கு பல பிரயோசனமான சாமான்களும், கருவிகளும் முக்கியமாய் வேண்டி யிருக்கின்றன. ஆகையினாலே தனவான்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அந்தஸ்துபிரகாரம் உதவிபுரிந்து நல்லாயன் அச்சுயந்திரசாலையை முன்னுக்கு கொண்டுவரும்படி பிரயாசைப் படுவார்களாக.

சர்வேசுரன் நல்லாயன் அச்சு யந்திரசாலையை ஆசீர்வதிக்கவும், அதற்கென்று உற்சாகத்தோடும்; உண்மையோடும் இரவு பகலாய் உழைக்கும் பத்திராதிபர் அவர்களுக்கு ஞானத்தையும், பூரணசுகத்தையும், பலத்தையும், நீடிய ஆயுளையும் தந்தருளும்படியாகவும் நம்முடைய அநுதின ஜெபத்தில் பிரார்த்திப்போமாக. அவருக்கு உதவிபுரிந்து அச்சியந்திரசாலையை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயாசைப்படும் ஒவ்வொருவரையும் சர்வேசுரன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

இந்நிருபத்தை எழுதவும், மேற் கூறியவைகளைப்பற்றி மற்றவர்களுக்கு ஞாபகப் படுத்தவும் என்னைத் தூண்டி எழுப்பினது நல்லாயன் பத்திரிகையின் டிசம்பர்மீ'த்து சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள வருஷக் கடைசி என்ற வியாசமே.

C. V. T.

## II

## மாதம் ரூ 100 வருமானமுள்ள கையொப்ப நேயர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

சென்னை ராஜதானியில் பற்பல மதஸ்தருக்கு மாதப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, தினப் பத்திரிகை என்று அநேக மிருந்தும் நம் கிறிஸ்துவசகோதரர்களுக்கு அவ்விதம் நம்முடைய திராவிடபாஷையில் ஓர் மாதப்பத்திரிகையாவது இல்லாத பெருங் குறையைப்போக்கி, அறிவைப் பரவச்செய்யும் அநேக அரிய விஷயங்களை யடக்கிய "நல்ல ஆயன்" என்னும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை புத்தகரூபமாக குறைந்தசந்தாவுக்கு நம்மில் உலாவிவருகிறதல்லவா? இப்பத்திரிகையில் பத்திக்குரிய சதவிஷயங்கள் மாத்திரமல்ல, நாம் மனது, வாக்கு, கிரிகை என்னும்திரிகரணங்களினால் செய்துவரும் தப்பிதங்களை பிரத்தியட்சமாய் கண்ணாடி போல் விளக்கிக்காட்டும்படியாகவும், மனதிற்கு ஆனந்தத்தை உண்டாகச்செய்யும்படியாகவும், தற்காலம் குப்பைபோல் எங்கு மலிந்துகிடக்கும் சிற்றின்பமே காரணமாகக் கொண்டு தோன்றும் நாவல்களை நாம் வாசியாமலிருக்கும்படியாகவும் இயற்றிப் பிரசுரித்த பணப்பை, கிறிஸ்தவ குடும்பம், ரோமான் கோவிலுக்குப்போகாதே என்னும் இனிய நாவல்களை நேயர்கள் வாசித்து ஆனந்தமடைந்திருப்பார்களென்று நம்புகிறேன். இப்புதிய வருடம் துவக்கியிருக்கும். "விசுவாசநாதன்" என்னும் நாவல் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது! நடந்த ஓர் சரித்திரத்தை நாம் எழுதும்போது எத்தனையோ தப்பிதங்கள் நேர்வது சகசமாயிருக்க, இனிமையையும், வியப்பையும் விளைவிக்கக்கூடிய விதமாய் நாவல் என்னும் கற்பனை கதைகளை துவக்கி முடிக்க அவைகளையெழுதின குருசுவாமிகள் எவ்வளவு மனோ முயற்சியும், கஷ்டமும் பட்டிருப்பார்களென்று கல்வியில் தேர்ச்சியுள்ள நேயர்கள் ஒவ்வொருவரும் நன்கறிவார்களே. இவ்வித நாவல்களை எழுதுவது எதற்காக? நாம் செய்யும் குற்றங்களை உணருவதற்காக வல்லோ? தம் சொந்த லாபத்தை கவனியாமல் நமது ஆத்தும ஈடேற்றத்துக்காக உழைத்துவரும் கனம் தங்கிய பத்திராதிபர் அவர்களுக்கு அதிக வருமானமுள்ளவர்களாவது பிரதி நன்றிகாட்டவேண்டாமோ? ஆகையால், நான் இதன்கீழ் வரையும் பிரேரேபனையை நேயர்கள் தயவு செய்து கவனிக்கும்படி தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். அதாவது "மெட்ராஸ் மெயில்" "Madras Mail" போன்ற அனேக பத்திரிகைகளுக்குச் சந்தா, கையொப்பக் காரர்களின் அந்தஸ்துக்கும் வருமானத்துக்கும் தக்கபடி ஏற்பட்டிருப்பதுபோல நம் நல்லாயனுக்கும், உத்தியோகத்திலாவது, வர்த்தகத்திலாவது, நிலவருமானத்திலாவது மாசம் ரூ 100 வருமானமுள்ளவர்கள் தாங்கள் கொடுக்கும் குறைந்த சந்தாவான ரூ 1-4-உடன் அணா 12 கூட்டி ரூ 2 இப்புது வருடமுதல் அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். மாசம் ரூ 100 வருமான முள்ளவர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ 2 கொடுப்பதினால் கஷ்டம் இருக்காதென்று நம்புகிறேன். மாசம் ரூ 10 அல்லது 12 வருமானமுள்ள ஒருவர் ரூ 1-4 கொடுக்கும்போது மாசம் ரூ 100 வருமானமுள்ள ஒரு உத்தியோகஸ்தராவது, ஓர் கம்பெனியாராவது, அல்லது ஓர் பண்ணையாராவது ரூ 1-4 கொடுப்பது அவர்கள் அந்தஸ்துக்கேற்றதல்லவே. கேவலம் பார்க்கக்கூடாத டிராமா அல்லது சர்க்கஸ் முதலிய வேடிக்கைகளைப் பார்க்க நேரிட்டால், தாழ்ந்தவருமானமுள்ளவர்கள் 4 அணா கொடுத்து தரைக்கு டிக்கட்டு வாங்குகையில், அந்தஸ்துள்ளவர்கள் இரண்டுரூபாயை வீசி ஈசிச்சேர்க்கு டிக்கட்டு வாங்குகிற தில்லையா? இன்னும் எத்தனையோ விஷயத்தில் தாழ்ந்தவருமான முள்ளவர்களுக்கும் உயர்ந்த வருமானமுள்ளவர்களுக்கும் அதிக வித்தியாச மிருக்கையில், அறிவை விருத்தி செய்யும் ஆயன் விஷயத்தில் மாத்திரம் அந்தஸ்தின்படி நடவாமலிருப்

பது சரியல்லவல்லவா? பத்திராதிபரவர்கள் "பழைய பாக்கி" "பழைய பாக்கி" என்று பத்திரிகைதோறும் எழுதும்போது பாக்கிதாரர்கள் அதை கவனியாமல் பத்திரிகை வந்துவிட்டதாவென்று மாத்திரம் போஸ்டு பியோனைக் கேட்கும் இக்காலத்தில் சந்தாதாரர்களிடம் எதாவது ஒரு புதுபிரேரபனையைப்பற்றி பத்திராதிபரவர்கள் எப்படி பேசுவார்கள்? ஆகையால் என் சிற்றறிவுக்கு எட்டியவாறு யான் செய்திருக்கும் இவ் விஞ்ஞாபனத்தை மாசம் ரூ. 100 வருமானமுள்ள நேயர்கள் அன்புடன் ஏற்றுக்கொண்டு அதின்படி ரூ. 2 சந்தாத்தொகை இப்புதுவருடமுதல் அனுப்பும்படி தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறேன். இந்த பிரேரபனைப்படி என் 1914௵த்து சந்தா ரூ. 2 இதனுடன் அனுப்பியிருக்கிறேன்.

Mary's Hall,
Sendamaram,
12—1—14.
*K. V. Francis Xavier.*

## MARIAN CONGRESS.
## மரியாயின் சங்கம்.

சென்ற சில காலமாய் இந்த மகத்தான சங்கத்தைக் கூட்டும் விஷயமாய் பல பிரேரபனைகள் செய்யப்பட்டு வந்ததை நண்பர்கள் அறிவார்கள். இப்போதுதான் இவ்விஷயத்தில் முடிவான தீர்மானம் செய்யப்பட்டது. கடந்த ஜனவரி௴ 8-ம் தேதி சென்னை யதிமேற்றிராணியார் இல்லத்தில் மயிலை மேற்றிராணியார், மங்களூர் மேற்றிராணியார், திருச்சினாப்பள்ளி உதவி மேற்றிராணியார், கும்பகோணத்து மேற்றிராணியாரின் பிரதிநிதி ஆக இவர்களும், சென்னை யதிமேற்றிராணியாரும் கூட்டங் கூடினதில் மரியாயின் சங்கம் இவ்வருஷம் திருச்சினாப்பள்ளியில் கூட்டப்படவேண்டுமென்றும், இதை நிறைவேற்றுவதற்கு மேற்படி நாலு மேற்றிராணிமார்களும், அதிமேற்றிராணியாருஞ் சேர்ந்து, நிர்வாக சபையாகவும், இந்த நிர்வாக சபைக்கு சங். எச். சோதியர் சுவாமிகளும் மகா-ா-ா-ஸ்ரீ, ஏ. ஜெகந்நாதப்பிள்ளை யவர்களும் காரியதரிசிகளாகவும் நியமிக்கப்படவேண்டுமென்றும், இவர்கள் இந்தியா, பர்மா, இலங்கையிலுள்ள மற்றெல்லா மேற்றிராணிமார்களுக்கும் எழுதி, அவர்களுடைய ஒத்தாசையையும் உடனுழைப்பையும் பெறவேண்டுமென்றும் தீர்மானஞ் செய்யப்பட்டதுடன், இந்தத் தீர்மானங்களை மேற்றிராணிமார்களுக்கும், பத்திராதிபர்களுக்கும் தெரிவித்து, இச்சங்கத்துக்கு வேண்டிய திரவிய சேகரம் செய்ய உடனே ஆரம்பிக்க அவர்களை வேண்டிக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கத்தின் நடவடிக்கைக் கிரமங்களைத் தீர்மானிக்கவும், சங்கத்தின் பல காரியங்களை நடப்பிக்கவும் வேண்டிய உப கமிட்டிகளை ஏற்படுத்த இம்மாதம் 22-ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை 10-மணிக்கு திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் காலேஜில் முன்னதாக ஒரு கூட்டம் கூட்டப்படும். இக்கூட்டத்திற்கு மேற்படி நிர்வாகசபை மெம்பர்களும், அந்தந்த மேற்றிராணிமார்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் விஜயஞ்செய்வார்கள். மரியாயின் சங்கம், எல்லாரும் விஜயஞ் செய்வதற்கு சௌகரியமாயிருக்கும் பொருட்டு கர்த்தர் ஜனனமகோற்சவ விடுமுறை நாட்களில் கூடவேண்டுமென்றும், அதில் மரியாயின் வணக்கம், மகிமை, வல்லபம் முதலியவைகளைப்பற்றியே யன்றி, இருதய சேசுநாதர், இருதய மாதாவின் பக்தியினால் கத்தோலிக்கருக் குண்டாகும் பக்தி விசுவாசம், செப அப்போஸ்தல சபை, ஞான ஒடுக்கங்கள், இந்தியாவின் மனந்திரும்புதல், கத்தோலிக்குப் புத்தகசாலை வாசகசாலை ஸ்தாபனம், இந்தியா, பர்மா, சிலோன் இவ்விடங்களிலுள்ள கத்தோலிக்கு சங்கத்தின் ஐக்கியம் முதலான விஷயங்களையும் பற்றிய, வியாசங்கள் வாசிக்கப்படவேண்டுமென்று பிரேரேபிக்கப்படுகிறது. இந்த சங்கத்தை சித்தி பெற முடித்துவைக்கப் பிடிக்கும் செலவு, சாப்பாட்டுச் செலவு நீங்கலாக, ரூபாய் 14,500 யாகுமென மதிப்பிடப்படுகிறது. இந்த அதியுன்னத பக்திக்கடுத்த காரியம் இனிது முடியுமாறு, கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் கூடிய பண உதவி செய்வார்களெனக் கோரப்படுகிறது. இது விஷயமாய் பணம் அனுப்ப விரும்புவர்கள் மேற்படி ஜோதியர் சுவாமியாருக்காவது திருச்சினாப்பள்ளி கண்டோன்மெண்ட், அர்ச் சூசையப்பர் தொழிற்சாலையிலிருக்கும், மகா-ா-ா-ஸ்ரீ ஏ. ஜெகந்நாதப்பிள்ளை யவர்களுக்காவது அனுப்பிக்கொள்ளலாம்.



## திருவிழா விளம்பரம்

இதனால் சகலமான கிறிஸ்தவர்களுக்கும் தெரிவிக்கிற தென்னவென்றால்:

திருநெல்வேலி ஜில்லா, சேர்ந்தமரத்துக் கடுத்த திருமலைபுரம் வரதாக்ஷிமலை மேற் கட்டப்பட்டிருக்கும் அர்ச். லூர்து மாதா கோவில் திருநாளுக்கு நவநாள் 1914௵ பிப்பரவரி௴ 2௳ திங்கட்கிழமை துவக்கி, 11௳ புதன்கிழமை காலை ரத உற்சவத்துடன் திருநாள் முடிவு பெறும். இக்கோவில் கட்ட வெளியிடங்களிலிருந்து பொருளுதவி செய்தவர்களும், மற்றக் கிறிஸ்தவர்களும் இத்திரு நாளின் பலனை வந்தடைந்து ஆனந்திக்கும்படி ஆசிக்கிறோம்.

Sendamaram,
3—1—14.
J. IGNATIUS, S. J.
Parish Priest.

சேர்ந்தமரமும் அதற்கடுத்த திருமலைபுரம் என்னும் கிராமங்களும் தென்காசி S. I. R. ரயில்வே ஸ்டேஷனுக்கு 13 மைல் தூரத்திலிருக்கிறது. அசல் இடங்களிலிருந்துவரும் திருயாத்திரைகாரர்கள் முன்னதாக அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்படும்.

K. V. FRANCIS XAVIER
Sendamaram,
*Via Tenkasi.*

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல வர்த்தமானம்.

**போத்தனூர்-பொள்ளாச்சி ரெயில்வே.** போத்தனூருக்கும் பொள்ளாச்சிக்கும் ஏறக்குறைய 26 மைல். இந்த இரண்டிடத்துக்கும் இருப்புப் பாதை போடுவதற்கு ரெயில்வே போர்டாரால் உத்தரவாகி விட்டது.

**பாளையங்கோட்டை ரிஜிஸ்டிரேஷன்.** பாளையங்கோட்டையிலிருந்த சப் ரிஜிஸ்டிரேஷன் ஆபீசு திருநெல்வேலி ஆபீசோடு சேர்த்துவிடப் பட்டது. இனி பாளையங்கோட்டையில் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய தஸ்தாவேஜுகள் எல்லாம் திருநெல்வேலிக்குக் கொண்டுபோகப்படவேண்டும்.

**அரிசிக்கீரே-மங்களூர் ரெயில்வே** — இந்த ரெயில்வே மார்க்கமாய் மைசூர் கவர்ன்மெண்டார் தமது சரக்குகளை மேல் கரைக்குக் கொண்டு சேர்த்து வியாபாரம் செய்ய இந்தியா கவர்ன்மெண்டாரது அநுமதியை யெதிர்பார்க்கின்றனர்.

**இந்தியா இலங்கை இருப்புப்பாதை.**- இது இம்மாதம் 24-ம் தேதி திறக்கப்படுமென்றும், அன்று தலைமன்னார் வரையில் சிலோன் வண்டித்தொடர் செல்லுமென்றும் அறிவிக்கப்படுகிறது. அங்கிருந்து பிரயாணிகள், ஸ்டீமரில் ஏற்றப்பட்டு தனுஷ்கோடிக்குக் கொண்டுவரப்படுவார்கள். இதற்கு ஒருமணி நேரஞ் செல்லுமாம்.

**சன்மார்க்க போதினி.**—நமது யாழ்ப்பாணத்து சகோதர பத்திரிகை இவ்வருஷத்தில் தனது முப்பதாம் வருட ஜீவியத்தை ஆரம்பித்ததெனக் கேள்வியுற்று சந்தோஷமாகிறோம். இது இன்னும் மேன்மேலும் தழைத்து ஓங்கிவளரும்படி கோரி இதற்கு பல்லாண்டு கூறுகிறோம்.

**ஒரு நல்ல வழக்கம்** —கத்தோலிக்கர்கள் தாங்கள் போகும் வழியில் இருக்கும் கத்தோலிக்குக் கோவில்களைக் காணும் பொழுது, அதில் இரவும்பகலும் நமக்காக அடைபட்டிருக்கும் திவ்ய சற்பிரசாத நாதரைத் தியானித்து தலை குனிந்து வணங்கும் வழக்கம் மெத்த நல்லது. இப்படி வணங்கும் ஒவ்வொரு விசைக்கும் 300 நாட் பலன் அளிக்கப்பட்டிருக்கிறது. இதையனேகர் அநுசரிக்கிறதில்லை. கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் இம்மாதிரியாய் சுலுவில் இலாபகரத்துடன் அநுசரிக்கக்கூடிய நல்ல வழக்கங்களை அநுசரிக்கப் பிரயாசைப்படவேண்டும்.

**கம்பியில்லாத் தந்தி** —கம்பி மூலமாயல்லாது ஆகாய மூலமாய் சமாசாரம் அனுப்பும் புதிய வழி கண்டுபிடித்ததில் அச்சமாசாரங்கள் எத்திசையிலிருந்து வந்தனவென்று தெரிந்துகொள்வதற்கு இதுவரையில் வகையில்லாதிருந்தது. இப்போது சமீபத்தில் லண்டன் பட்டணத்தில் கூடின பூதபௌதிக சாஸ்திர சங்கத்தின் முன்

னிலையில் கம்பியில்லாத் தந்தி வந்த திசை யறியும் வகை பரிட்சை செய்து காண்பிக்கப்பட்டது. இது மெத்த பிரயோசனமானது. இதனால் விசேஷமாய் சமுத்திரத்தில் பிரயாணஞ் செய்யும் யாதோர் கப்பல் மூடு பனியினாலாவது, காற்று மழையினாலாவது அகப்பட்டு, திசை தப்பி மலைப்பாறை முதலியவற்றால் அபாயமுற்றபோது அது இருக்கும் இடமறிந்து அதற்கு ஒத்தாசை செய்தல் கூடும்.

**ஜில்லா உத்தியோகஸ்தர்களும் குடிகளும்**.—சென்ற மாதத்தில் சட்ட நிரூபண சபையில் ஆனரபில் சுப்பராயலு ரெட்டியார் அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரேபணையின் காரணமாய், கவர்ண்மெண்டார், ஜில்லா உத்தியோகஸ்தர்கள் தாங்கள் ஜமாபந்தி போகையில், அங்கங்கே கிராமக் குடிகளுக்கு இருக்கக்கூடிய குறைகளையும், சங்கடங்களையும் அறியும் வண்ணம் அவர்களுடன் கலந்து பேசுவதினாலுண்டாகும் நன்மையை வற்புறுத்தி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆகையினால், கலெக்டர், டிப்டி கலெக்டர், தாசில்தார் முதலிய ஜில்லா உத்தியோகஸ்தர்கள் ஜமாபந்திக்கு வரும்போது குடிகள் தங்களுக்குண்டாகிய குறைகளை யவர்களிடம் தாராளமாய் நேரே பேசிக்கொள்ளலாம்.

**உயிரைக் காப்பாற்ற உற்ற கருவி**.—நடுச் சமுத்திரத்தில் கப்பல் உடைந்து முழுகிப்போகும் சமயத்தில் அதிலுள்ள ஜனங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, லண்டன் லீடன் ஹால் தெருவிலிருக்கும், மிஸ்டர். ஜி. என். பாடி என்பவர் ஒரு நூதன கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். இது ஒர் வித மரத்தைக் கொண்டு செய்யப்பட்ட சட்டையே யன்றி வேறல்ல. இந்தச் சட்டையைத் தரித்துக்கொண்டிருப்பவர்கள் தண்ணீரில் விழுந்தால் முழுகிப்போகாமல் மேலே மிதந்துகொண்டிருப்பார்களாம். இந்த சட்டைகளை அநேக கப்பல் அதிகாரிகள் பெருந்தொகையாய் வாங்கி கப்பலில் வைத்திருக்கிறார்களாம். இது கண்டுபிடிக்கப்பட்ட பின், "லைப்போட்டு" என்னும் உயிர்ப் படகுகளுக்கு அவ்வளவு அவசியம் ஏற்படாது.

**ரிப்பன் பிரபுவின் உருவச்சிலை**.—கவர்னர் ஜனரலா யிருந்தவரும், ஸ்தல சுய ஆட்சிக்கு வித்திட்டவருமான ரிப்பன் பிரபுவின் ஞாபகார்த்தமாய் தயார் செய்யப்பட்டிருக்கிற அவரது உருவச் சிலை சென்னை மவுண்ட்ரோட்டில் மெஸர்ஸ் மிஸ்குவித் கம்பெனிக்கு எதிரிலுள்ள விஜயநகரம் குழை வைத்திருக்கும் இடத்தில் வைக்கப்படவேண்டுமென்று ஒரு பிரேரேபணை யிருந்தது. இப்போது சென்னை இந்து பத்திரிகைக்கு ஒரு நிருபர் இது விஷயமாய் எழுதியிருக்கும் கடிதத்தில் மேற்படி சிலையை கார்பரேஷன் கட்டிடமாகிய ரிப்பன் பில்டிங்குகளிலேயே வைப்பது உரிமையாகுமென்றும், அதிகாரிகள் இது விஷயத்தில் ஆலோசனை செய்வது உசிதமாகுமென்றும் தெரிவித்திருக்கிறார். ரிப்பன் கட்டிடத்தில் ரிப்பன் சிலை இருப்பது உசிதமன்றோ? இதை நமது நகரப் பிதாக்கள் யோசிப்பார்களாக.

**ராவ் சாஹேபு எஸ் ஆரோக்கியசாமிப் பிள்ளை யவர்கள்**.—தஞ்சாவூர் கலெக்டர் ஆபீசு சிரஸ்ததாரா யிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெற்று, திருச்சினாப்பள்ளி, செண்ட் மேரீஸ் தோப்பி லிருக்கும் கத்தோலிக்குக் கனவானாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஆரோக்கியசாமிப் பிள்ளை யவர்கள் தமது உத்தியோக அலுவலைத் திறமையாகவும், குறை கூறுவதற் கிடமில்லாதபடி நடுவு நிலைமையாகவும் நடத்தி வந்ததற்குச் சன்மானமாக அவர்களுக்கு "ராவ் சாஹேபு" என்கிற கௌரதா பட்டம் கவர்ண்மெண்டாரால் அளிக்கப்பட்டதைக் கேள்வியுற்று, சந்தோஷமானோம். இவர் மெத்த சாது. தெய்வபக்தி, ஜீவகாருண்யம், பரோபகாரம், பொதுநலப் பிரியம். முதலிய சற்குணங்களுடையவர். இவருக்கு எமதன்பார்ந்த சுபசோபனங் கூறுகிறோம்.

**மைசூர் இந்திய கத்தோலிக்குக் குடும்ப பாது காப்பு நிதி**.—கத்தோலிக்கு ஏழைக் குடும்பத்தலைவர்கள் இறந்தபிற்பாடு அக்குடும்பங்கள் ஜீவிக்க வகையின்றி படும் கஷ்டங்களை ஒருவாறு நிவிர்த்திக்க ஏற்படுத்தப்பட்ட இந்நிதி கத்தோலிக்கரால் அவசியம் ஆதரிக்கப்படத்தக்க ஸ்தாபனமென்று இந்தப் பத்திரிகை மூலமாய் பன்முறை சந்தாதாரருக்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதோ இம்முறையும் சந்



தாதாரர்களுக்கு இந்நிதியை விசேஷ விதமாய் சிபாரிசு செய்கிறோம். இதுவரையில் இதைச்சேராதவர்கள் இவ்வருஷத்திலாகிலும் சேர்ந்து இதையாதரிப்பார்களென்று கோரப்படுகிறது. இதைப்பற்றிய விவரங்கள் யாவையும், இதனுள் வைத்தனுப்பப்பட்டிருக்கும் அனுபந்தத்தில் சவிஸ்தாரமாய்க் காணலாம். இந்த அனுபந்தத்தை ஒவ்வொருவரும் வாசிக்கும்படி கோருகிறோம். கத்தோலிக்கருடைய பொது நன்மைக்காக ஏற்படுத்தப்படுகிற ஒவ்வொரு தருமஸ்தாபனமும் அவர்களிடத்தில் தக்கவாறு ஆதரணை பெறுகிறதில்லை. இது மெத்த விசனத்துக்குரிய காரியம். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களே! உங்களை நீங்களே கவனிக்காவிடில் அயலார் உங்களை எப்படிக் கவனிப்பார்கள்? நீங்கள் கடைத்தேறி முன்னுக்கு வருவதெப்போ!

**அர்ச். பாப்பானவரால் இன்னொரு புதுமை**.—நார்வேயி லிருந்து நமது பரிசுத்த பிதாவாகிய பத்தாம்பத்தி நாதரைத் தரிசிக்க மிக்க ஆவலுடன் ஒரு துரைசானி உரோமாபுரிக்கு வந்தாள். அவள் அவரைப்பார்க்க குறிக்கப்பட்ட தினத்திற்குள்ளாக தன்னுடைய பிள்ளைகளி லொன்று நோயுற்று சாகப்போகும் ஆபத்தில் இருக்கிறதென்றும், உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும், தன் ஊரிலிருந்து தந்தி சமாச்சாரம் வந்தது. இதைக் கண்டதும், அந்தத் துரைசானியின் உள்ளம் பதைக்க, துடிதுடிக்க தன் பிள்ளையைப் பார்க்க உடனே ஊருக்குப் போகவேண்டுமென்கிற கவலையும், இவ்வளவு தூரம் வந்தும் பரிசுத்த பிதாவைப் பார்க்காமல் போகவேண்டியதா யிருக்கிறதே யென்கிற துக்கமும் இவளை வாதித்தன. இன்றைக்கு பரிசுத்த பிதாவைக் காணப்போகிற கூட்டத்துடன் நாமும் போகக்கூடியதானால் அவரையும் பார்த்துவிட்டு இன்றைக்கே ரெயிலில் புறப்படலாமென்று ஏக்கமுற்று, இப்படிச் செய்தாலாகுமோவென அர்ச். பாப்பானவரின் ராஜாங்கக் காரியதரிசியண்டைபோய் விவரங்களைச் சொல்லி வேண்டிக்கொள்ள, அவரும் அதற் கிசைந்து அன்று பேட்டிக்கு நியமிக்கப்பட்டிருந்தவர்களோடு இந்த துரைசானியையும் அழைத்துக்கொண்டுபோய் பரிசுத்த பிதாவினிடத்தில் விட்டு, அவளது பிள்ளையின் அசௌக்கியத்தைப் பற்றி அவருக்கு அறிவித்தார். இதை யறிந்த பரிசுத்த பிதா அந்த துரைசானியை வெகு அன்பாய் வரவேற்று, "அம்மா உனக்கு விசுவாசம் உண்டா?" என்க அவள் "உண்டு தகப்பனே" என்றாள். உடனே பரிசுத்த பிதா "உன் பிள்ளைக்கு ஆபத்தொன்றுமில்லை, சௌக்கியமாய்விட்டது." என்றார். அந்த துரைசானி ரெயிலேறி தன் வீட்டுக்குப்போய் பிள்ளையைப் பார்த்ததில், பாப்பானவர் என்றைக்கு பிள்ளை சௌக்கியமாய்விட்டது என்று சொன்னாரோ, அன்றுதானே குழந்தை ஆபத்தினின்று நீங்கி குணமடைந்ததாக அறிந்து ஆச்சரியப்பட்டாள். இன்னொரு புதுமை. 92-வயதுள்ளவரும், ஒரு காலும் ஒரு கையும் வழங்காத பாரிசவாய்வுள்ளவருமான ஒரு கிரேக்க பிரிவினைக்கார பிஷப்பு மனந்திரும்பினபின் பரிசுத்த பிதாவைப் பார்க்க விரும்பிக்கேட்க அவரிடம் அழைத்துக்கொண்டுபோகப்பட்டபோது, "பரிசுத்த பிதாவே என் கண்களின்மீது உமது ஆவியை விட்டு, புஜத்தின்பேரில் கையை வையும்" என்று கேட்டார். பரிசுத்த பிதாவானவர் அப்படியே செய்ய அந்த மேற்றிராணியார் அற்புதமாய் சௌக்கியப்பட்டு, கண் தெரிய, கை கால் வழங்க இப்போது பூசை செய்துகொண்டு வருகிறாராம்.

---

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

---

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒரு போதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

---

### நன்மரண அறிக்கைகள்.

---

### அநுதாபப் பிரகடனம்.

பெரிய தாழைவாசியும் பரதகுலத்தவரும் ஸ்ரீமத் யுவான் ரேவிஸ் பெர்னாந்தவர்களின்

குமாரருமாகிய எனது பிரியமாண்பிளே, ஜான் அலங்காரம் பெர்ளுந்து ராசல ஸ்ரீமத் எம். ஜெ. கர்வாலோ அவர்கள் வர்த்தகசாலையில் சென்ற டிசம்பர் மாதம் 25ௌ கர்த்தர் பிறந்த திருநாளோற்சவத்தை தம் திருநேத்திரங்களாற் கண்டு ஆனந்தித்திருந்து, அன்றிரவு தானே 12-மணிக்கு திடீரென பரலோக பிராப்தமானுர். பரிதாபம். !

உடனே ஸ்ரீமத் கர்வாலோ அவர்கள் இலங்கையில் பலவிடங்களிலுமிருந்த உறவினரனைவருக்கும் தந்தி மூலமாய் இப்பரிதாப செய்தியை யறிவிக்க அவர்கள் அனைவரும் இச்சடுதி மரணத்தையறிந்து ஹிதயம் நொந்து திடுக்கிட்டு அழுகைப் பிரலாபத்துடன் வந்து சற்றுமே உருமாறு திருந்த சரீரத்தை நோக்கி ஏங்கி அழுதனர். 27ௌ பகல் 2 அசுவங்கள் பூட்டிய பிரேதக் காத்தையில் வைத்து நிவுரேலியாவுக்குக் கொண்டுவந்து தேவாலயத்தில் வழக்கம் போல் அடக்கச்செபம், முதலியன சொல்லி முடிந்ததும் அச்சடலம் பூமி தானம் செய்யப்பட்டது.

அடக்கத்துக்கு புருக்சயிட், நிவுரேலிய, முதலிய இடங்களிலுள்ள பரத குலத்தாரனைவரும் விஜயம் செய்திருந்தார்கள்; இவர்கட்கும், அடக்கத்தின் பின்னர் பரதகுலவாசனின் மருமகராகிய ஸ்ரீமத் சின்னையா மோத்த அவர்கள் அடக்கத்திற்கு வந்த கனவான்களை உபசரித்தார்கள்; இவர்கட்கும், இறந்தவரின் எஜமானராகிய ஸ்ரீ. எம். ஜெ. கர்வாலோ அவர்கள் மிக அனுதாபப்பட்டு செலவு, சிரமம் இவற்றை பொருட்டா யெண்ணுது அடக்கத்தை வெகு சிறப்பாய் முடித்தார்கள்; இவர்கட்கும் நான் என் முழு இருதயத்துடன் நன்றியறிந்திருக்கிறேன்.

இதைக் கண்ணுறும் கத்தோலிக்க பக்தரே! என் சிநேகிதரே!! இவ்வான்மாவின் இளைப்பாற்றியின் பொருட்டு ஒரு பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ள உங்களைக் கெஞ்சி மன்றுடுகிறேன்.

மாண்பிள்ளையை இழந்து பரிதபிக்கும் நிர்ப்பாக்யன்.

Norwood, Ceylon. 10th, January 1914. } S. A. Fernando.

---

கூடுதாளை.

எனது அருமைச சகோதரர் சீ. மர்த்தீன் பெர்ளுந்து தனது 33-ம் பிராயத்தில் பக்கவாதத்தால் பீடிக்கப் பட்டு எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் 1913ஆ டிசம்பர்மீ 26ௌ வெள்ளிக்கிழமை உதயம் 11-மணிக்கு கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் யாவும் சரிவரப் பெற்று தனது நேச சகோதரர், தன் அருமைப் பத்தினி, கண்மணி மக்களையும, இன்னும் ஏராளமான பந்து மித்திரர்களையும் இக்கண்ணீர் கணவாயில் விட்டு பரமபதம் அடைந்தனர். அன்று மாலை 5-30 மணிக்கு அர்ச். தோமை யப்போஸ்தலர் கோவில் முகப்பில் நல்லடக்கம் நிறைவேறிற்று. இப்பரிதாபத்துக்குரிய செய்தியை கண்ணுறும் நேயர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு. பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அருமைச் சகோதரனை இழந்து பரிதவிக்கும்.

சீ. விசேந்திப் பேர்ளுந்து,

---

பெரிய நாரையில் எனது தமையனுர் தொம்மை ஜோன் பெர்ளுந்து அவர்களின் அருமை புத்திரியும் எனது ஞானப்புதல்வியுமாகிய மேரி பேத் ரோனீல்லா அம்மாள் சென்ற 1913ஆ அக்டோபர்மீ 31ௌ தனது நேய தந்தை தாயார் இரு சகோதரிகள் சிறிய தந்தை சிறிய தாய் மற்றும் சுற்றத்தார் யாவரையும் பாதபிக்கவிட்டு கர்த்தருள் நித்திரை யடைந்தனள். இதைக் கண்ணுறும் சகோதரர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிற,

Horana, 10-11-13. } தொம்மை நேவிஸ் பேர்ளுந்து.

---

வேம்பார்.

ஐயா, எனது பாட்டியாரும், என்து தந்தையின் தாயாருமாகிய மரிய அந்தோனியாள் தல்மேயிதா தனக்கு நேர்ந்த நடப்பு வியாதியால் 1913-வருடம் டிசம்பர் மாதம் 22-ந் திகதியாகிய திங்கட்கிழமை சுமார் பகல் 12-மணிக்கு சர்வேஸ்பரனுடைய ஏவுதல்படி தனது மகனையும், மருமகளையும், மகன் பிள்ளை பேரன் பேத்திகளையும், மற்றும் இன ஜன பந்துக்களையும் விட்டு பரலோக பிராப்தியானுர்கள். அவர்களது சடலம் சிறப்பாய் எடுத்து அடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படி வெகுவாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதனேடு இப்பத்திரத்தைக் கண்ணுருத தங்கள் சிநேகிதர் சிநேகிதிகளிடம் அறிவித்து இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படி வெகு விநயமாய்க் கேட்டுக் கொள்ளும் தங்களின் சகோதரனைப் போன்ற.

R. I. P. 12-1-14. } மனுவேல் சவியேர் தல்மேமிதா ஜே யல். கர்வாலியோ, கொளும்பு.



---

இரங்கூன்.

இரங்கூன் பர்மா ரயில்வே வாலண்டீயர் பான் சர்ஜன்டாய் (Rangoon-Burma Railway Volunteer Band Sergeant) நெடுநாளாய் வேலை செய்தவராகிய காலம் சென்ற எம் அம்புரோஸ் M. Ambrose அவர்களுடைய மனைவியும், Rangoon Town Band சொந்தக் காரராகிய Mr. Albert De Silva அவருடைய மாமியாரும், எனது தங்கையுமாகிய எம்மி அம்மாள் 1913-வருஷம் டிசம்பர் மாதம் 14-ம்தேதி ஞாயிற்றுக்கிழமை சாயரட்சை சுமார் 4-மணிக்கு தனது 46-ம் பிராயத்தில், தன்னுடைய ஏக குமாரத்தியையும் மற்ற சுற்றத்தாரையும் கண்ணீர் விட்டழவிட்டு பரமபதம் யடைந்தனள். மறுநாள் திங்கட்கிழமை சாயரட்சை 5-மணிக்குமேல் கத்தோலிக்க எம்மெலியா அம்மாள் கல்லறையில் நல்லடக்கம் செய்யலாயிற்று. இதை வாசிக்கும் சகோதிரர்களே.! இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரங்கூன், 14—1—1914. } இங்ஙனம். C. M. MICHAEL, Rangoon Medical Hall.

---

## "நல்லாயன்" அச்சுயந்திர ஆபீசுக்காக நன்கொடை.

"நல்லாயன்" அச்சுயந்திர சாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற ஜுன்மாதத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டு வரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்கு கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி, நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

நல்லாயன் அபிவிர்த்திக்காக Mr. F. C. தம்புசாமி பிள்ளை, Palaghat, Coromandel; Mr. A. பால்குரோஸ் நாயுடு, Champion Reef, Kolar; Mr. C. V. தாமஸ்பிள்ளை, Mount Road, Madras; ஆகிய இவர்கள் மூவரும் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்காக நாம் அவர்களுக்கு மிக்க நன்றியறிந்திருக்கிறோம். நல்லாயனுக்காக இந்த பரோபகார புருஷர்களிடம் யாதேனும் கொடுக்க ஆட்சேபனை யில்லை. இவர்கள் மூலமாயும், நமக்கு நேராயும் சேருந் தொகைகள் அப்போதைக் கப்போது இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 175 | 2 | 0 |
| Mr. ஆரோக்கியசாமி ஆசாரி, ஒத்தை. | 0 | 8 | 0 |
| ,, A. M. அந்தோனி, தலவாகல்லி. | 0 | 9 | 0 |
| ,, J. A. பெர்ளுந்து, கடுகனவா. | 0 | 6 | 0 |
| ,, D. J. ஜொவாக்கிம்பிள்ளை, கொளும்பு. | 0 | 11 | 0 |
| ,, A. மிக்கேல், ஊர்காம். | 0 | 4 | 0 |
| ,, A. மாணிக்க ஆச்சாரி, ஒத்தை. | 1 | 0 | 0 |
| ,, D. V. A. தேவபடையாச்சி, மாகி. | 1 | 0 | 0 |
| ,, ஜோசெப் அப்பாசாமிநாயுடு, மாகி. | 1 | 0 | 0 |
| ,, M. லாசர், இரங்கூன் | 1 | 0 | 0 |
| ,, J. மரியகுசை, இரங்கூன். | 2 | 0 | 0 |
| ,, Gorge Netto, Ceylon | 0 | 11 | 0 |
| ,, Rayappa Rodrigo, சிரிதங்க நல்லூர். | 0 | 8 | 0 |
| ,, J. J. பெர்ளுந்து, மணப்பாடு. | 0 | 8 | 0 |
| Rev. Fr. ............................ | 1 | 4 | 0 |
| Thro' Mr. தம்புசாமிப்பிள்ளை, பாலகாடு. | 7 | 0 | 0 |
| ,, P. V. ராஜ், இரங்கூன். | 14 | 15 | 0 |
| ,, B. பொன்னுசாமிப்பிள்ளை, நகரி. | 4 | 15 | 0 |
| ,, S. Martin, Bangalore. | 0 | 4 | 0 |
| ,, A. மரியசுந்தரம் பிள்ளை; சென்னை | 0 | 4 | 0 |
| ,, C. Y. Xavier, கோல்பட்டி | 0 | 15 | 0 |
| ,, M. S. Lazarus, ஊர்காம் | 0 | 6 | 0 |
| *Total Rs.* | 215 | 2 | 0 |

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவர் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெயிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும். பொருளுதவி யில்லாமையாய் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய நாளது வரையில் கூடாமற் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆகிலும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்துவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட ஏற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ 2 500 பெறும்படியான கட்டிடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவுசெய்ய உதவிபுரிய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கன தனவான்களும் சகல கிறிஸ்துவர்களும் தம்தம்மா லியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பா ரென்பது திண்ணம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுகொள்ளப்பட்ட தொகை. | 493 | 4 | 0 |
| Mr. கோ. அந்தோனிமுத்து உடையார், அக்கிராரம் | 1 | 0 | 0 |
| ,, அந்தோனிமுத்து உடையார், கி. மு. அக்கிராரம் | 2 | 0 | 0 |
| ,, சின்ன உடையார் ,, | 2 | 0 | 0 |
| ,, சி. அந்தோனிமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, இ. அந்தோனிமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, இ. மெய்யப்ப உடையார் ,, | 2 | 0 | 0 |
| ,, மிசகா உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, மலையப்பன் உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, மதலைமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, ரூ. தயிரிய உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, அருளப்பச் செட்டியார் ,, | 1 | 0 | 0 |
| Mr. மிக்கேல் உடையார். அக்கிராரம் | 0 | 8 | 0 |
| ,, ஆரோக்கியசாமி உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சவரிமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, ந. மோ. பெரியதம்பி உடையார் | 1 | 0 | 0 |
| ,, எ. சின்னப்ப உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, இராயப்ப உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, மி. சின்னப்ப உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, மலையப்ப உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சின்னப்ப உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, காதர் சக்கரை உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, காதர் சூசை உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, காதர் பெரியண்ணன் உடையார் | 0 | 8 | 0 |
| ,, பாப்பு உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, குழந்தை உடையார் ,, | 0 | 4 | 0 |
| ,, ராமதலை உடையார் ,, | 0 | 4 | 0 |
| ,, தோ. சக்கரை உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, அந்தோனிமுத்து உடையார் | 1 | 0 | 0 |
| ,, ஆரோக்கியசாமி உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சின்னிய உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, ஊர் துசாமி உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சிலுவைமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, பிச்சைமுத்து உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, ம. அந்தோனிமுத்து உடையார் | 1 | 0 | 0 |
| ,, க. மதலைமுத்து உடையார் ,, | 2 | 0 | 0 |
| ,, சி. மதலைமுத்து உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, வலங்கை சின்னப்பன் ,, | 1 | 0 | 0 |
| ,, பெரியதம்பி உடையார் ,, | 0 | 8 | 0 |
| ,, மலை பெரியண்ணன் உடையார் | 1 | 0 | 0 |
| ,, சின்னப்ப உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சி. மரியசூசை உடையார் ,, | 1 | 0 | 0 |
| ,, சின்னப்பன் ,, | 0 | 8 | 0 |
| ,, மலை அந்தோனிமுத்து ,, | 0 | 8 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 532 | 12 | 0 |

எடப்பாடி, கத்தோலிக்குக்கோவில் } ஜே. ஞானதிக்கம், விசாரணை குரு.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 1,600. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி. வருவாயிருக்கும்



The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 MAR 1914
MADRAS.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வே[illegible]களும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } மார்ச் 1914. { இலக்கம். 3.




மிகவும் வந்திக்கத் தக்க

## சென்னை அதிமேற்றிராணியா ரவர்கள்,

### தமது அதிமேற்றிராசனத்துக் குட்பட்ட குருப்பிரசாதிகளுக்கும் மற்ற கிறிஸ்துவ பிரஜைகளுக்கும் எழுதும் நிருபம்:

கிறிஸ்துநாதரில் நமக்குப் பிரிய முள்ளவர்களே!

நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதர் பாடுபடப் போவதற்கு முந்தின இராத்திரி தம்முடைய சீஷர்களுடன் பந்தி யமர்ந்து "அப்பத்தை யெடுத்து ஆசீர்வதித்துப் பிட்டு தமது சீஷர்களுக்குக் கொடுத்து: இதை வாங்கிப் புசியுங்கள்; என்சரீரமிதுவே" என்றார். (மத். 26:26.) "ஏனெனில், என் மாமிசம் மெய்யாகவே போசனமும், என் இரத்தம் மெய்யாகவே பானமுமா யிருக்கின்றன." (அருள. 6.) என்று திருவுளம்பற்றி, அவர் யூதர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை இவ்வாறு நிறைவேற்றலானார்.

நமக்குப் பிரியமுள்ளவர்களே, சேசுநாதர் தமது நேசர்களுக்குத் தம்மைத்தாமே போசனமாகத் தந்தருளிய பீடத்தின் பூஜித தேவத்திரவிய அநுமானத்தைப்பற்றி உ

களோடு இவ்வருஷம் பேச வேண்டுமென்பது நமக்குள்ள கோரிக்கை. இந்த பரிசுத்த தேவத்திரவிய அநுமானத்தை உண்டாக்கினதில் சேசுநாதரின் முக்கிய தாத்பரியம், தாம் அதில் ஆராதிக்கப்படுவதற்காக வல்ல, ஆனால் போசனமாக உட்கொள்ளப்படுவதற்காகவே. "என்னைப் புசிக்கிறவன் என்னால் ஜீவிப்பான்." (அருள. 6.) "நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப் புசியாமலும், அவனுடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலுமிருந்தால், உங்களிடத்தில் சீவியத்தைக் கொண்டிருக்க மாட்டீர்கள்." (இ-து) பரிசுத்த திவ்ய நற்கருணையில் சேசுநாதர் விசுவாசிகளால் உட்கொள்ளப்பட ஆசிக்கிறார் என்கிற சத்தியமானது, அவர் தாம் தெரிந்தெடுத்துக்கொண்ட வஸ்துவினால் விசிதமாகிறது. அப்பமானது நீளித்திருக்கக்கூடிய வஸ்துவல்ல. அது முக்கியமாய் உணவாக உண்டு செலவழிக்கப் படத் தக்கதே யொழிய விலையுயர்ந்த பொக்கிஷமாக க்ஷேமித்து வைக்கப்படத்தக்க பொருளல்ல. பரிசுத்த தேவ நற்கருணை நமது பிரதிதின உணவாக உதவ வேண்டுமென்பது சேசுநாதரின் கோரிக்கை. திவ்ய நற்கருணையானது நாடோறும் எல்லோருக்கும் வழங்கப்படத் தக்கதா யிருக்கவேணுமென்று விரும்பினார். ஆனதால், தேவ வசீகரத்துக்கு அப்பத்தையே தெரிந்துகொண்டார். ஏனெனில், அப்பமானது நாடோறும் எளிதில் கிடைக்கக்கூடிய சாதாரண ஆகாரமாயிருக்கிறது.

நமது பரிசுத்த பத்தாம் பத்திநாத பாப்பானவர், தினந்தோறும் நன்மை வாங்கும் சுகிர்த அப்பியாசத்தைத் தாரதம்மிய மின்றி எல்லோரும் அநுசரிக்கும்படி வெகுவாய் வற்புறுத்துகிறார். இந்த அப்பியாசம் திருச்சபைக்குப் புதிதானதல்ல. ஆதிக் கிறிஸ்துவர்கள் "அப்போஸ்தலர்களுடைய போதகத்திலும், அப்பத்தைப் பகிர்ந்து கொள்வதிலுஞ்செபத்திலும் நிலைத்துக்கொண்டிருந்தார்கள்."(அப்போ.நடவடி. 2:42.) பிரதிதினம் நன்மை வாங்குவது சேசுக்கிறிஸ்து நாதருடையவும் திருச்சபையினுடையவும் விருப்பமாமே.

தினந்தோறும் அல்லது அடிக்கடி நன்மைவாங்கும் சுகிர்த வழக்கத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படுகிற விக்கினங்களைப் பற்றி ஆராய்வது இப்போது நமது கருத்தல்ல. இந்த விக்கினங்களை நிவர்த்திக்க மிக சுருக்கமும் சாதாரணமுமானவழி, நமது பரிசுத்த தகப்பனாகிய அர்ச். பாப்பானவருடைய தீர்மானங்களை கபடற்ற விதமாயும், பத்திச் சுறுசுறுப்பாயும் பயப்படாமல் நிறைவேற்றுவதே. நாம் தேவ நற்கருணையின் மட்டில் பக்தி விசுவாசமுடையவர்களா யிருப்பதுமன்றி, அர்ச். பாப்பானவர் மட்டிலும் விசுவாசமுள்ளவர்களா யிருக்கக்கடவோமாக. இஸ்பிரீத்துசாந்துவின் ஞான வெளிச்சத்தைக்கொண்டு திருச்சபையை நடத்தும் அதன் தலைவர் ௸ தீர்மானங்களை வெளியிட்டபோது இந்த விக்கினங்களையும் இடையூறுகளையும் அறியாதிருந்தார் என்று நாம் எண்ணலாகுமோ?

இதுவிஷயத்தில் நாம் கண்டிதமான கொள்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் இடங்கொடா திருப்பது அத்தியாவசியம். 1905௵ டிசம்பர்௴ 16௳ உரோமையில் கூடின பரிசுத்த சங்கமானது, தினந்தோறும் நன்மை வாங்குவதற்கு முதலாய் இரண்டே நிபந்தனைகளை நியமித்தது. அவையாவன: முதலாவது ஆத்துமம் சாவான பாவமில்லாமல் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருப்பது. இரண்டாவது சரியான பத்தியுள்ள கருத்து கொண்டிருப்பது. இந்த முதல் நிபந்தனைக்கு வியாக்கியானம் வேண்டுவதில்லை இரண்டாவதாகிய சுத்த கருத்தைப்பற்றி பரிசுத்த சங்கம் சொல்லுவதாவது. "திவ்ய நன்மை வாங்கப்போகிறவர்கள் அந்தப் பக்திக் கிருத்தியத்தை, வாடிக்கைக்காவும் அல்லது வீண் பெருமைக்காகவும் அல்லது மனுஷருடைய முகதாக்ஷண்யத்துக்காகவும் வாங்காமல், சர்வேசுரனுக்குப் பிரியப்படுவதற்காகவும், தேவஸ்நேகத்தினால் அவரோடு அதிக பந்தனத்துடன் ஐக்கியப்படுவதற்காகவும், நமது குறைகளையும் பலவீனங்களையும் பரிகரிக்கும் பரம ஔஷதமாகவும் வாங்க வேணும்" என்பதே. இது விஷயத்தில் வேறு அபிப்பிராயத்துக்கு இடமில்லை. ஏனெனில் ௸ தீர்மானத்தின் கடைசியான ஒன்பதாவது பிரிவின்படி இவ்விஷயம் தீர்ந்ததும், முடிவானதுமாயிருக்கிறது. அதாவது: "இந்தத் தீர்மானம் பிரசுரிக்கப்பட்டபின் தினந்தோறும் அல்லது அடிக்கடி நன்



மை வாங்குவதற்கு செய்யவேண்டிய ஆயத்தங்களைப் பற்றிய விவாதங்களை வேதபாரகரெல்லாரும் விட்டுவிடக்கடவார்கள்" என்பதே.

அறியாத சிறு பிள்ளைகளுடைய இருதயங்களுக்கு நமது ஆண்டவரே எஜமானா யிருக்கிறா ரானதால், அவர்கள் அவரிடம் பிரதிதினம் போக வேண்டும். "சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்" (லூக்-18:16.) என்பது நமது திவ்ய இருதயசேசுநாதரின் அன்பு நிறைந்த கூக்குரல். தங்கள் பிள்ளைகளை அவரிடம் போகத்தடைபண்ணுகிற புத்தியில்லாத பெற்றோர்களை சேசுநாதர் தப்பாமல் கண்டிப்பார். பிள்ளைகள் இளைஞரா யிருக்கிறபடியினாலேதான் திவ்யநற்கருணையில் சேசுநாதரை அவர்கள் உட்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. உலகம், பசாசு, சரீரம் என்கிற முச் சத்துருக்கள் செய்யும் மாயதந்திரங்களினின்று லீலிய மலர்க்கொப்பான தங்களுடைய பரிசுத்தனத்தை பிள்ளைகள் காப்பாற்றிக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் இந்த பலத்த சத்துருக்களோடு எதிர்த்துப் போர் செய்ய வேண்டியவர்கள். "ஆகையினாலே, நாம் சேசுக்கிறிஸ்துநாதரின் திருச் சரீரமும் இரத்தமுமாகிய கேடயத்தை அவர்களுக்குத் தரிப்பிக்க வேண்டும்" என்று அர்ச். சிப்பிரியானுஸ் சொல்லுகிறார். "தினந்தோறும் வாங்கும் திவ்ய நன்மைக்கு முன், எந்த ஆசாபாசமும் அது எவ்வளவுதான் கொடியதானாலும், எதிர்த்து நிற்க முடியாது" என்கிறார் அர்ச். அல்போன்சுஸ் லிகோரியார். நமது பரிசுத்த பிதாவாகிய பாப்பானவரும், ஒரே வருஷத்தில் மும்முறை, "கூடுமானமட்டும், அடிக்கடியும் தினந்தோறும் பிள்ளைகள் திவ்ய நன்மை வாங்கும்படி விடுங்கள்" என்று கூறியிருக்கிறார். பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு இன்ன வயசென்றும், புதுநன்மை வாங்குவதற்கு இன்னவயசென்றும் நிர்ணயிப்பது தப்பிதமாகும். ஆகையினால், ௸ தீர்மானத்தில் பாவசங்கீர்த்தனத்துக்கும் புதுநன்மைக்கும் ஆக விரண்டுக்கும் ஏற்ற வயது பிள்ளைகள் புத்தி விவரம் அறியுங்காலமேயென்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துநாதர் அநுசாரத்தில் நாம் வாசிக்கிறதென்னவென்றால்: "மனிதன் தன் இளமை தொட்டே பாவத்தின்மேல் சார்புடையவனா யிருக்கிறான். அவனுக்கு தேவ ஔஷதத்தின் உதவியில்லாவிட்டால் அவன் சீக்கிரத்தில் கேட்டுக் குள்ளாகிறான். ஆனதுபற்றி, பரிசுத்த நற்கருணையானது நாம் கேட்டில் விழ வொட்டாமல் தடை செய்வதுந் தவிர புண்ணியத்தில் நம்மை பலப்படுத்துகிறது." என்பதே. ஆனதின் பொருட்டே, வந்திக்கத்தக்க "தேசேகூர்" என்பவர் சொல்வதாவது: "பிள்ளைகள், பெரியவர்களைப் போலவே அடிக்கடி திவ்ய நன்மை வாங்கலாம், வாங்கவும் வேண்டும். நமது ஆண்டவர், பிள்ளைகளிடமிருந்து அவர்களால் தமக்குக் கொடுக்கக் கூடியதற்கு மேல் அதிகமாய் ஒன்றுங் கேட்பதில்லை. அவர்களுக்குள்ள கவனக் குறைவைக் கண்டு நாம் பயப்படுகிறோம். ஆனால் சர்வேசுரனும் இதை அறிவார்; இதையு மன்றி, எல்லாப் பொக்கிஷங்களையும்விட மாசற்ற தனமானது அதிக விலையுயர்ந்ததென்றும், பசாசானது இதைப் பிள்ளைகளிடமிருந்து துவக்கத்திலேயே பறிக்கத் தேடுகிறதென்றும், இந்தப் பசாசின் தந்திரக் கண்ணியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற திவ்ய நற்கருணையே வல்லதென்றும் நம்மை விட அவர் அதிக நன்றாய் அறிவார். உத்தம விதமாய் நன்மை வாங்குவதற்கு நமது இரட்சகரை நல்ல மனதுடன் வாங்குவதே போதுமானது. இந்த நல்ல மனது பெரியவர்களுக்கு இருப்பது போலவே, சிறியவர்களுக்கும் இருக்கக்கூடியது: புதுநன்மை வாங்கின ஒருபிள்ளை சேசுக்கிறிஸ்துநாதரை நேசிக்கின்றது. அவரை உடைத்தாயிருக்க ஆசைப்படுகின்றது. அப்படியானால், அவரை ஏன் அதற்குக் கொடுக்கப்படாது? சேசுக்கிறிஸ்துநாதரை சிறுபிள்ளைகள் சிநேகிக்கும்படிப் பார்ப்பது நமக்குள்ள கடமையாமே; இதற்காக அவர்களை அடிக்கடி அவருடன் அந்நியோந்நியமாயிருக்கச் செய்யவேண்டும். அவர்களுடைய தவறுகள் எவ்வளவு மெய்யானவைகளா யிருந்தபோதிலும், அவைகள் நிலைமையானவையல்ல. இந்தத் தவறுகள் நாளாவட்டத்தல் ஸ்திரப்பட்டு பாவங்களாகாமற் றடுப்பது, அடிக்கடி நன்மை வாங்கும் சுகிர்த வழக்கமாமே. "பிள்ளைகளை வளர்க்கும் கடமையுடையவர்கள், அவர்கள் புது நன்மை வாங்கின பிறகு நமது திவ்விய நாதரும்,

திருச்சபையும் விரும்புகிறபடி, அடிக்கடி, கூடுமானால் பிரதிதினமும் திவ்ய சற்பிரசாதம் உட்கொள்ளும்படிக்கும், அதை யவர்கள் வயதுக்குத்தக்க பக்தியுடன் உட்கொள்ளும்படிக்கும் தங்களாலியன்ற ஜாக்கிரதையெல்லா மெடுத்துக்கொள்ள வேண்டு" மென்று ஷை தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "சிறுபிள்ளைகள் சாப்பிட அப்பம் கேட்டார்கள்; ஆனால் அதையவர்களுக்குக் கொடுக்க யாரு மிருந்ததில்லை" (ஜெரேமி. 4:4.) என்னும் ஜெரேமியாஸ் தீர்க்கதரிசியின் புலம்பலானது ஒருபோதும் நம்மைக் குறித்து சொல்லப்படாதபடியா யிருக்கக் கடவுள் கிருபை புரிவாராக.

"வருந்திச் சுமை சுமக்கிறவர்களே! என்னிடம் வாருங்கள்" என்று நமது திவ்விய கர்த்தர் நம்மை யழைக்கும் அழைப்பு எவ்வளவு அன்புடையதா யிருக்கிறது இவ்வழைப்பு துன்பதுரிதத்தி லகப்பட்டு, ஆறுதலை ஆவலோடு விரும்புகிற அனைவருக்கும் விசேஷ விதமாய் கருதப்பட்டது. பரிசுத்த திவ்ய நற்கருணை வழியாய் நம்மிடத்தில் வருகிற பாடுகளின் மனிதனனவரும், வருந்துகிற தமது மக்களின் துன்பங்களை நன்றாய் அறிபவருமான சேசுவை விட அதிகமாய் தேற்றுகிறவர் யார்? நமது பரிசுத்த பிதாவானவர் தமது மந்தையிலுட்பட்ட நோயாளிகளின் மேல் இரக்கம் வைத்து சில விஷயங்களில் அவர்களுக்காக சற்பிரசாத உபவாசத்தின் உக்கிரமத்தை மட்டுப்படுத்தி யிருக்கிறார். "ஆண்டவரே! நீர் நேசிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்." (அருள. 11:3) என்ற சமாசாரம் கேள்வியுற்று சேசுநாதர் தம்முடைய சிநேகிதனை லாசர் வீட்டுக்கு எழுந்தருளினது போல, நீங்கள் வியாதியாயிருக்கையில் அவரை யழைத்தால் - அவரை திவ்ய நற்கருணைவழியாய் உட்கொள்ள ஆசைகொண்டு அவ்வாசையை உங்களுடைய குருவானவருக்கு அறிவித்தால் - உங்களிடத்திற்கும் அவர் வருவார்.

நாம் இதுவரையிற் சொல்லியதிலிருந்து விசிதமாவது யாதெனில்: கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் பாஸ்குத் திருநாளின்போது கட்டாயமாய் வாங்கவேண்டிய திவ்ய நன்மையை மாத்திரம் வாங்குவார்களேயானால், அது திருச்சபைக்குத் திருப்தியாயிராதென்பதேயாம். வருஷத்துக்கு ஒருவிசையாகிலும் திவ்ய நற்கருணை யுட்கொள்ள வேண்டியதென்னும் கட்டளையானது, அசட்டைத்தனமுள்ள தன் மக்களுக்குத் திருச்சபை, தாய்க்குரிய தயவோடு எவ்வளவு தூரம் எளிதாக்கலாகுமோ அவ்வளவுக்கு எளிதாக்கிக் கொடுக்கப்பட்டதாகும். இதையும் இவர்கள் மீறி நடப்பார்களேயானால், கண்டனை தண்டனையைக்கொண்டு பயமுறுத்தி, தங்களுடைய கடமைகளை நிறைவேற்றச்செய்து இவர்களை நல்வழிக்குக்கொண்டுவர பிரயாசைப்படுகிறது. வருஷத்தில் ஒரே ஒருவிசை மாத்திரம் நன்மை வாங்குகிறது போதுமென்று பாஸ்குக் கடனைத் தீர்த்து திருப்தி யடைபவர்கள் தங்கள் ஞானசீவியத்தைக் கறைப்படாமல் காப்பாற்றிக் கொள்வார்களென்று நாம் நம்பிக்கைகொள்ள முடியாது. ஆனால், "என்மாமிசத்தை புசித்தாலொழிய நீங்கள் உங்களிடத்தில் சீவியத்தைக் கொண்டிருப்பதில்லை" (அருள. 6:54) என்ற நம்முடைய ஆண்டவரது வார்த்தைகள் எவ்வளவு பயங்கரத்துக் குரியவைகளா யிருக்கின்றன! இவ்வார்த்தைகளின் அர்த்தம் மிகத்தெளிவாயிருக்கிறது. அதாவது: திவ்ய சற்பிரசாதத்தை யுட்கொள்ளாத ஆத்துமம் செத்த சவத்துக்குச் சமானமாகிறது என்பதே. பிரியமானவர்களே, சர்வேசுரனுடைய அன்பானது எவ்வளவு வரைகடந்த மேரையாய் நமக்கு தயவு காண்பிக்கிறதென்று பாருங்கள். "என்னிடம் வாருங்கள்" என்ற அவருடைய பிரதிதின அழைப்பை உற்றுக் கேளுங்கள். இவ்வாறு அவர் பிரதிதினம் அழைக்கிற அழைப்புக்கு நீங்கள் வருஷத்துக்கு ஒரு விசை மாத்திரம் இசைவதினால், போதுமான அளவு செய்து விட்டீர்களென்று நினையாதீர்கள் அஜாக்கிரதையினாலாவது, அசட்டைத்தனத்தினாலாவது பாஸ்குக் கடனைத் தீர்க்காம லிராதேயுங்கள். இதுவே யுங்களுடைய ஆத்துமத்தின் ஞான உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வருவது. கடைசியாக, நாம் இந் நிருபத்தை பரிசுத்த வாளனை கூரேதார்ஸின் வார்த்தைகளைக் கொண்டு முடிக்கிறோம். அவையாவன: "தமது சீவியத்தில் ஒரு பங்கைக் கொடுத்து உயர்த்தியருளின ஆத்துமாக்களை போஷிக்க கட



வுள் விரும்பியபோது, படைக்கப்பட்ட சிருஷ்டிகளி லெல்லாம் தேடினார்; அவர்களுடைய போஷணைக்கேற்ற பொருள் ஒன்றும் அகப்படாமையால் சர்வேசுரன் தம்மைத் தாமே முழுமையுமே அவர்களுக்கு தத்தஞ் செய்தருளினார்" என்பதே.

திவ்ய சற்பிரசாதப் பலத்தினால் மாத்திரம் நீங்கள் உங்கள் ஆத்துமத்தில் தேவயிஷ்டப் பிரசாதத்தைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடுமாகையால், உங்களுடைய சொந்த தப்பிதத்தினால் ஒரு விசையாகிலும் திவ்ய சற்பிரசாத விருந்தை இழந்து போகாதபடி இன்றே சாதனைக்கடுத்த பிரதிக்கினை செய்துகொள்ளக் கடவீர்களாக.

அப்போஸ்தலர்களின் போதகத்திலும் செபத்திலும் அப்பத்தைப் பகிர்ந்து கொடுப்பதிலும் நிலைநிற்பவராகிய,

கிறிஸ்துவில் உங்கள் பத்தியுள்ள,

✠ அருளப்ப ஆலன்.
சென்னை யதிமேற்றிராணியார்

ஏ. மேர்க்கஸ்
வி. ஜி.
காரியதரிசி.

1914ஞ தேவமாதாவின் சுத்திகரத் திருநாளன்று சென்னையில் கொடுக்கப்பட்டு, சென்னை அதிமேற்றிராசனத்துக்குள்ளடங்கிய எல்லா விசாரணைக் கோவில்களிலும், செபக்கூடங்களிலும், சந்நியாச சந்நியாஸ்திரி மடத்துக் கோவில்களிலும் தபசுகாலத்தின் முதல் ஞாயிறன்று வாசிக்கப்பட நியமிக்கப்பட்டது.

---

# VISUVASANATHAN.

## விசுவாச நாதன்.

(ஓர் நவகதை.)

(முன் தொடர்ச்சி.)

பூசை முடியவும் ஜனங்களெல்லாரும் வெளியே போயினர். கோவில் வெறுமனாயிற்று. ஆனால் ஒரேயொரு மனிதன் குனிந்த தலையோடு, ஓர் குழந்தையைப்போல் விம்மி விம்மி யழுதுகொண்டிருந்தான். குருவானவர் தம் ஜெபத்தை முடித்து வெளியேகும் போது, இம்மனிதன் அவரண்டைபோய் ஏதோ பேசினான். குருவானவர் உடனே பாவசங்கீர்த்தனத் தொட்டியிலிருக்க, இவர் தன் குற்றங் குறைகளையும், பாவதோஷங்களையுஞ் சொல்லி, அவைகள் விமோசனமாக்கப்படவே தேவ ஆசீர் பெற்றுவந்தார்.

இதுவரையில் பெரும் பாரம்போல் தன்னை அமிழ்த்தித் தாழ்த்திவந்த பாரச் சுமை வரைவிட்டகன்றது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு வென்கு மன்றோ?

'தன்னெஞ்சு பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்'

என்றாற்போல் அவரது குற்றங் குறைகளவரையே வாட்டின. கேட்ட அரிய பிரசங்கமானது அவருக்குத் தேவவரப் பிரசாதத்தைப் பொழிந்த முகிலாகவிருந்தது. ஆகவே உத்தம மனஸ்தாபப்பட்டு, நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தூய்மையான விருதயத்தோடு பரிசுத்தராய் வீடுபோய்ச் சேர்ந்தார். இவர்தான் இரத்தினசாமிப்பிள்ளை. அன்றுமுதல் ஓயாது தன் பழய பாவ துரோகங்களுக்காகவும், விசேஷமாய் தான் தவறி அஞ்ஞானக் காரியங்களைச் செய்து வந்ததற்காகவும், மிக்க மன நொந்து பிரலாபித்துக்கொண் டிருப்பதே யவரது வழக்கமாயிற்று. அல்லும் பகலும் அழுத கண்ணுஞ் சிந்தின மூக்குமாகவே யிருப்பார்.

தம்முடைய பிடிவாதமே தன் னருமை மைந்தனை வீட்டைவிட் டோட்டினது, இல்லத்தில் இன்னலை ஈட்டினது, குடி நாசத்தைக் கூட்டினது என்று தன்னையே நிந்தித்து துயரப்படுவார். மகன் வாரானோ, வாரானோ வென வங்கி எதிர் பார்த்திருப்பார். சேசுவின் திரு இருதயத்தின் மட்டில் பத்தியுள்ளவன் அவன். அத் திரு இருதயம் அவனைக் கொண்டுவந்து சேர்க்குமென விசுவாசங் கொள்வார். அவருள்ளத்

தையெத்தவும்வாட்டிய கஸ்தியைஉத்தமவிதமாய்த் தேற்றியது இந்த நல்லெண்ணமே! இந்த நம்பிக்கையே! இப்படி யிருக்கையில் ஒருநாள் "பாப்பாத்தி! நீதான் ஆசீர்வாதம் கண்டு கொண்டு வந்துவிட்டாய். வீட்டிலே யிரு. நாங்கள் கோவிலுக்குப் போய்விட்டு வருகிறோம்." எனச் சொல்லிவிட்டு இரத்தினசாமிப் பிள்ளை தனது மனையாளோடு வெளியேகினார். அன்று ஞாயிறுவாரம். அவர் மனந் திரும்பி ஆறுமாத மாகின்றன. அதற்குள்ளாக அவர் மிகவும் மனம் நொந்து களை மாறி, முகம் வாடி, பலங் குறைந்து, தள்ளாடிப்போனார். ஆயினும் கோவில் விஷயத்தில் மட்டும் பின் வாங்கார். தினந்தோறும் பூசை காணுவதும், திவ்விய விருந் தருந்துவதும் அவரது நற்பழக்கமாயிருந்தன. தமது நற்கிரியைகளை யெல்லாம் சேசுவின் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்து, மகனைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கக் கெஞ்சி மன்றாடிவருவார். தாயோ பதின்மடங் கதிகமாக வேண்டிவருவாள் அப்படியே யின்றும் இவர்கள் திவ்விய நற்கருணைமுன் சாஷ்டாங்க தெண்டனிட்டு விண்ணப்பஞ் செய்கின்றார்கள். வீட்டில் பாப்பாத்தி என் செய்கின்றாள்? அன்னையும் பிதாவும் போனபின் கதவைச் சாற்றிவிட்டு, உள் அறை சென்று அங்கிருந்த பொம்பேய் ஜெபமாலை நாயகியின் படத்தின்முன் முழங்காலிட்டு நவநாள் செபம் பண்ணுகிறாள். இது தனது தமையன் வருகைக்காக அவள் செய்துவரும் ஆறாவது நவநாள். இதற்கு முன் ஐந்து விசை செய்தாய்விட்டது. இத்தினம் ஆறாவது நவநாளின் கடைசி நாள். புத்தகத்தை யெடுத்து ஜெபத்தை வாசித் தோதிய பின் தன் வேண்டுகோளை யெடுத்துக் காட்டி "தாயே உமது சனுகை நாடிவந்து கேட்கிறேன். எத்தனையோ தடவை கேட்டேன். இன்னுங் கேட்கிறேன். உமது அடைக்கலத்தைத் தேடினவர் ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதில்லை யன்றோ? மாதாவே! என் பால் கடைக்கண் ணோக்கியருளும், எனது தமயனின் வரவைத் தீவிரித்தருளு மம்மா" என்று மிக உருக்கமுடன் இரந்து மன்றாடுகிறாள்.

வீட்டுக் கதவு திடீரென திறக்கப்பட்டது. உள்ளே ஒருவர் பிரவேசித்தார். உயர்ந்த உடையும், தகுந்த நடையு முள்ளவர். சிரசில் தலைப்பாகை காட்டி, கால்சட்டையுங் கோட்டும்பூட்டி, காலில் சப்பாத்து மாட்டி, டக் டக் என முன் பழகினவிடம்போல் வெளியறையில் ஒருவருமில்லை யாதலால் பரபரவென்று உள் அறை புகுந்தார். மாதா படத்தின்முன் சாஷ்டாங்கமாக விழுந்து வேண்டிக்கொண்டிருந்த பாப்பாத்தி, திகில் கொண்டு முகத்தைத் திருப்பி எறெடுத்துப் பார்த்தாள். கண்டாள் ஓர் ஆடவனை, கொண்டாள் வெட்கம், யாரென வறியாள். அப்போது அவர் பேசினார். "பாப்பாத்தி நான் யாரென்று உனக்கு தெரியவில்லையோ? இன்னுங் கண்டுபிடிக்கக்கூடவில்லையோ? என்னை மறந்துவிட்டனையோ? சரி! அம்மா, அப்பா எங்கே?" என்றார். கேட்டாள் சப்தத்தை; உணர்ந்தாள் தொனியை; அறிந்தாள் ஆள் யாரென்று. ஓடினாள் கிட்ட, பிடித்தாள் கையை. உரைத்தாள், "அண்ணா! நீங்கள்தானா? நான் யாரோ என்று பார்த்தேன். வந்துவிட்டீர்களா? சர்வேசுரனுக்குத் தோத்திர முண்டாகக்கடவது."

விசு.—பாப்பாத்தி! நீ யின்னுஞ் சிறு பிள்ளையா? கையைப் பிடிக்கிறாயே!

இதைக்கேட்டுக் கூச்சமடைந்தாள். பெண்ணல்லவா? விசுவாசம் வெளியேக தேவமாதாவிற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் சொல்லி ஆனந்தத்தால் அழுதாள். வெளியே போன விசுவாசம் தான் கொண்டுவந்த சாமான்களை வண்டியினின்று இறக்கி உள்ளே கொண்டுவர ஏற்பாடு செய்தான். அதற்குள்ளாக பெற்றோர் வந்துவிட்டனர். ஆளைப் பார்த்தனர். பார்த்ததும் அறிந்துகொண்டனர். மகனை பெற்றோரைக் காணவும் ஸ்தோத்திரஞ் சொல்லி 'பிதாவே எனக் கிரங்கும். மாதாவே என்னை மன்னியும்' என்று வேண்டினான்; தகப்பனார்: 'என் னருமை மகனே, என் னாருயிர்க்காதலனே வாடா' வெனச் சொல்லி மகனைத் தழுவிப்பிடித்து ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தார். தாய்: 'என் கண்மணி மகனே, என் காதற் கிளியே எனவணைத்து இருகன்னத்திலு முத்தமிட்டு 'நீ வந்துவிட்டாயா? சேசுவின் திரு இருதயந்தான் உன்னைக் கொண்டு வந்து சேர்த்தது.' எனச் சொல்லி கண்ணீர் சொரிந்தாள். உடனே உள்ளே போய் சாப்பாட்டிற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய முயன்றாள். நல்ல பதார்த்தங்கள் அங்கில்லாததால், தமது கணவனிடஞ் சொல்லி ஒட்டெலிலிருந்தாகிலும் சாப்பாடு கொண்டுவர வேண்டுமெனக் கேட்டாள். இதை யறிந்த விசுவாசம் 'அதெல்லாம் அவசரமன்று. இருக்கிறதைக்



கொடுங்கள்; அதுபோதும். சும்மா வீண் சிரமமேன்' என விளம்பி. ஒட்டல் சாப்பாட்டை நிறுத்திவிட்டான். விசுவாசம் வீடு வந்த சேதி வெளியேறவே, அண்டை வீட்டார் அயல்வீட்டார் எல்லாரும் வந்து கூடினார்கள். கொஞ்சம் தூரத்திலிருந்த வைத்தியநாதய்யர் முதலாய் வந்துவிட்டார். இவர் வரவும், இரத்தினசாமிப்பிள்ளை கேட்பார். 'ஐயரவாள்! நீங்கள் உன் மகன் போனநாள் கரிநாள், அவனுக்குக் கேடுகாலம். அவன் பாடு திண்டாட்டம், வீடு வரமாட்டான்.' என்று சொன்னீர்களே! இப்போது வந்துவிட்டானே, எல்லாங் கொண்டாட்டமாயிற்றே! என்ன சொல்கிறீர்?

வைத்தி.—என்னத்தைச் சொல்றது இப்போ. ஈசன் எழுதின எழுத்து நமக்கு நன்றா புலப்படறதா?

இரத்.—உங்கள் சாஸ்திரமெல்லாம் வீணே மனுஷரை ஏய்க்குஞ் சூஸ்திரமே யொழிய வேறல்ல, முழுதும் அஞ்ஞானம்; நம்பவே கூடாது.

வைத்தி.—அப்படிச் சொல்லாதேயும்; ஆனைக்கும் அடி பிசகுமே?

இரத்.—தலைவிதி, தலையெழுத்து-கடவுள் கூறியது, தெய்வச்செயல், என்கிறீர்களே; சாஸ்திரம் தெய்வச்செயலானால் அது பொய்யாகுமா?

வைத்தி.—சாஸ்திரம் செய்வச்செயலோ? அல்லவோ யார்கண்டார்? நம்ம புத்தியைக்கொண்டு பேதையர்களை யேமாற்றிப் பிடுங்கித் தின்ன வழி தேடுகிறதுதான் முதல் சாஸ்திரம்.

இரத்.—"அப்படியா? அப்படித்தானிருக்கவேண்டும். இவ்வளவு காலத்துக்குப் பின்னல்லவா எனக்குப் புரிந்தது. இப்போதுதான் புத்தி தெளிந்தது"

விசுவாசம் சாப்பிட்டுவிட்டு வந்தான். இவர்கள் பேச்சை நிறுத்தினர். கூடியிருந்தவர்கள் யாவரும், அவன் எங்கே யிருந்தனன், என்ன செய்தனன் என்ற அவனது சரிதையைப் பிரீதியாய்க் கேட்க ஆவல் கொண்டு அவனை வேண்டினர். அவர்கள் பிரியத்திற் கிணங்கித் தன் வரலாற்றைச் சொல்வானாயினன்:—நான் என் இல்லம் விட்டேகினேன் என்பது உங்களுக்கு வெளிப்படை. வீட்டைவிட் டகலவும் எங்கு போவதென வறியாதிருந்தேன், ஊரில் ஒரு உற்ற சிநேகித ருண்டு; அவரைப் போய் பார்க்கப்போனேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல் அவரை வழியிலே கண்டேன். என் செய்தியைச் சொன்னேன்; உடனே அவர் என் மனதைத் தேற்றி "நீ ஒன்றுக்கு மஞ்சாதே உன்னைத் தேடியே நான் வருகிறேன். ஓர் சுபசெய்தியிருக்கிறது. 'பினாங்கு.போராக் எனனுமூர்களுக்கப்புறம் "ஈப்போ" என்ற ஓர் பட்டணமுண்டு. அவ்விடத்தில் என்னருமை மித்திரர் ஒருவ ரிருக்கிறார். அவர் பெயர் தோமாஸ் செல்வம்; இஞ்சினியர் ஆபீஸில் வேலை. நேற்று அவருடைய கடிதம் வரப்பெற்றேன். அங்குள்ள கோர்ட்டுக்குத் தகுந்த துவிபாஷியாக ஒருவர் அவசரமாம். நான் உன்னைப் பற்றி யவர்க்கு ஏற்கெனவே யெழுதியிருந்ததால் வரும்படி சொல்கிறார். நீ போகிறாயா', என வுரைத்தார் என் னரிய சிநேகிதர். நான் சொன்னேன்: 'தேடிப்போன மருந்து காலிலே தட்டுப்பட்டாப்போ லிருக்கிறது. வலியவந்த சீதேவியை காலால் தள்ளிப்போடுகிறதா? நான் உடனே போகிறேன். ஆனால் கையில் பணமில்லை. 'அதற்குப் பயப்படாதே. என் வீட்டுக்குவா' என்று அழைத்துப் போய் 50 ரூபாய் கொடுத்தார். அது நிற்க, அன்றிரவு என்னை யபசரித்து காலையில் ஸ்டேஷனுக்கு வந்து நாகப்பட்டணம்போகப் பயண மனுப்பிவிட்டார். அவருடைய சிநேகிதருக்கும் நான் புறப்பட்டதை யிட்டுத் தந்தி யடித்தார். நான் அவரைக் கேட்டுக்கொண்ட வேண்டுகோள் யாதெனில்: அவர் என் பெற்றோர்களைப் பற்றியும் வீட்டுச் சமாச்சாரங்களைப்பற்றியும், அடிக்கடி தெரிவிக்கவேண்டுமென்பதும் என்னைப்பற்றிய விபரம் யாதொன்றும் வீட்டிற்கு விளம்பலாகாதென்பதுவுமே. அப்படியே 7-வருஷகாலமாய் மௌனமா யிருந்தார். எனக்குமட்டும் இருமாதத்திற் கொருமுறைகடிதமெழுதத் தவறார். நானும் பதில்போட மறக்கவில்லை.

நாகப்பட்டணம் போய் சில சாமான்கள் வாங்கிக்கொண்டு வியாழக்கிழமை மாலை கப்பலேறி அடுத்தவாரம் பினங்கு போய்ச சேர்ந்தேன். அங்கிருந்து இன்னுமொரு கப்பலேறி பினங்கு போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து வேறொரு கப்பலேறி போராக் போய், அவ்விடமிருந்து ரெயில் ஏறி "ஈப்போ" போயடைந்தேன். ஸ்டேஷனில் தோமாஸ் செல்வம் அவர்

கள் என்னை வரவேற்று இல்ல மழைத்துச்சென்ருர். அங்கேயே சில மாதங்களா யிருந்தேன், அவருடைய மனையாள் மிகச் சாதுவானவள். பரோபகாரி என்று சொல்லாம். அவர்களுக்கு இரு சிறு குழந்தைகள்மட்டும் இருந்தன. நான் போய் 10 நாட்களுக்குள் வேலையி லமர்ந்தேன். மாதம் 150 ரூபாய்சம்பளம். இருக்கவிருக்க 175 200, 250, 300 ஆக ஏறினது. சொற்பமாகவுஞ் செட்டாகவுஞ் செலவுசெய்துமிஞ்சியதைச் சேர்த்துவைத்துவந்தேன். பணமிருந்தும் மனச்சந்தோஷமில்லை. எனது பெற்ருேர்மேலும் வீட்டின்மீதுமே என் னெண்ணமெல்லாஞ் சென்றது. அவர்களைப் போய் பார்க்கவேண்டு மென்ற அபிலாஷை கொண்டேன். அதற்காக சர்வேஸ்வரனைப் பிரார்த்தித்து வந்தேன். விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று மயிலுக்கப்பாலிருந்த கோவிலுக்குப் போய் திவ்ய நற்கருணையருந்தியிது கருத்திற்காக ஒப்புக்கொடுப்பேன். அவர் என் மன்ருட்டைக் கேட்டருளினுர். ஆகவே ஆறுமாதம் லீவ் பெற்றுக்கொண்டு இதோ உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன். இன்னுமதிகமாகச் சொல்லவேண்டுமா? நான் போன ஊர்களினது காட்சியின் மாட்சியையும், ஜனங்களின் நடையுடை பாவனைகளையும், அங்கு கண்ட விநோத வேடிக்கை விருத்தாந்தங்களையும், எனது உத்தியோகத்தில் விளைந்த நன்மை தின்மைகளையும் சொல்லப்புகுந்தால் பாரதமாகும். இனிமேலாக சமயம் வாய்த்தபோது கொஞ்சங்கொஞ்சமாய்ச் சொல்கிறே”னென முடிவுரை கூறினுன். வாயில் கை வைத்துக்கொண் டிருந்தவர்கள் “கடவுளை நம்பினவர் கைவிடப்படார்” என்று சொல்லிக்கொண்டே தத்தம் இல்லம் ஏகினர்.

இரவு பத்து மணிக்கு மேலாயிற்று. எல்லாரும் நித்திரை கொண்டனர். விடியற்காலம் ரத்தினசாமிப் பிள்ளை வழக்கம்போல பூசை கண்டுவிட்டு வருகிருர். அவரது சிநேகிதர் இருவர் வந்து அவருடைய மகனைப்பற்றி விசாரித்தார்கள்; பேசிக்கொண்டே வழிநடந்து வருகிருர்கள். அப்போது ஒருவர் சொல்வார். 'மகன் வந்துவிட்டான்; ஒருபெண்ணைப் பார்த்து கலியாணம் பண்ணிவைக்கிறதுதானே?'

இரத்.—ஆம் அதுதான் யோசனை. பூசையிலே முதலாய் சேசுவின் திரு இருதயத்தைப் பார்த்துக் கேட்டேன். பார்த்தால் நல்ல பெண்ணு யிருக்கவேண்டும். எங்கே யிருக்கிறது?

ஒருவர்.—அவனுக்கா பஞ்சம்? 'நான்வருகிறேன் தண்ணீர் எடுக்க; எங் கக்காள் வருகிருள் பிள்ளையை யெடுக்க' வென்று ஓடிவரமாட்டார்களா?

மற்றொருவர்.—நல்லாயிருக்கிறது நீங்கள் சொல்லுகிறது! வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறதா? அவன் மாமன் மகள் வீட்டிலே யில்லையா? ஏன் அங்கு இங்கும் போகவேண்டும்?

'ஆம், வாஸ்தவந்தான்' எனச் சொன்ருர். அதற்குள் வீடு வந்தது. விடை பெற்று உட்புகுந்தார் இரத்தினசாமிப்பிள்ளை. அன்று பின்னேரம் தனது மனையாளோடு பேசிக்கொண்டிருக்கும்போது சொல்வார். “நட்சத்திரம்! விசுவாசத்திற்கு ஒரு பெண்ணைப் பார்த்து முடித்துவைக்கவேண்டாமா? ஆறுமாதத்துக்குள் போகவேண்டுமெனப் பறக்கிருனே.”

நட்சத்.—நீங்கள் நல்லாசொல்லுகிறீர்கள்! தேடித்திரியவேணுமோ பெண்ணுக்கு? வீட்டிலே பாப்பாத்தியம்மா ளில்லையோ? எங்கண்ணன் சாகும்போது “என் பிள்ளையைப் புறத்தியிலே விடாதே” என்று சொல்லவில்லையா? கடவுளுடைய சித்தமும் அப்படித்தான் போலும். அதினுலல்லவோ அவள் மடத்தி லிருக்காமல் திரும்பத் திரும்பவீடு வரவேண்டியதாயிற்று, எல்லாம் நம்மிடமே யிருக்கிறது. வெளியே போய்ப் பார்ப்பானேன்? ஒரு நாளைக்குறித்து கலியாணத்தைநடத்துகிறதுதான் பாக்கி.

இரத்.—அப்படியானுல் எனக்கு சம்மதந்தான். விசுவாசம் சம்மதிப்பாளு?

நட்சத்தி.—சம்மதியாமலென்ன? சம்மதிப்பான். இது விஷயத்தை விசுவாசத்தினிடஞ் சொல்ல அவன் அதிகம் பேசாது 'உங்களிஷ்டம்' என்றுவிட்டான்.

கலியாணத்திற்காக முஸ்திப்புச்செய்ய ஏற்பாடாகிறது.முதன்முதல் பாப்பாத்திக்கு நகை செய்யவேண்டுமென விசுவாசத்துக்குச் சொல்லவே 1000 ரூபாயைப் பெற்ருேர்கையில் வைத்து, 'என்ன நகை சமைக்கப் போகிறீர்கள்? நகை நகை யென்று பாதாதிகேச பரியந்தம் பூட்டி, பொன்பூத்த மரம்போ லாக்கி விடாதேயுங்கள்' என்று சொன்னுன்.



தாய்.—எல்லா நகையுந்தான் செய்யவேண்டும். அவளுக்கிருக்கிறதெல்லாம், காலில் தண்டையும், கழுத்தில் அட்டிக்கையும்,காதில்கம்மலுந்தான். வேறென்ன விருக்கிறது? காலுக்குப்பாதசரம் வேண்டாமா? கைக்குப் போடகாப்பு, கொலுசு, மோதிரம், கழுத்திலணிய உட்கட்டுமணி, காசுமாலை, காதிற்கு கர்ணப்பூ, ஒன்னப்பூ, முருகு, சிரசில் தரிக்க உச்சிப்பிறை. நெற்றிப்பிறையில்லாதே போனாலும் கல்விழைத்த கொண்டைப்பூவாகிலும் வேண்டுமே.?

விசு.—சரி, உங்கள் பிரியம்போல் செய்யுங்கள். ஆனுல் கழுத்தில் அட்டிக்கை யிருக்கிறதெனச் சொன்னீர்களே, நான் பார்த்தேயில்லையே.

தாய்.—நீ, நல்லாச்சொல்லுகிருய். அவள் அம்மாளுடைய அட்டிகை அது, கழுத்திலேதானே யிருக்கிறது; கொஞ்சம் பொறு நான் கொண்டுவந்து காட்டுகிறேன் பாரெனச் சொல்லிவிட்டுப் பாப்பாத்தியிடம் போனுள். 'பாப்பாத்தி யிங்கே வா உன்னுடைய அட்டிகையைக் கழற்றிக்கொடு' என்று கேட்டாள்.பாப்பாத்தியோ ஒன்றும் பேசாது தலைகுனிந்தவண்ணம் பேசாது நின்ருள்.

தாய்.—உனக்கென்ன பேச முடியாதா? இங்கேவா, நான் கழற்றுகிறேன். அதற்குள்விசுவாசம் பெட்டியைத் திறந்து ஏதோ கையில் கொண்டுவந்தான் 'அம்மா! இங்கே வாருங்கள்' என்றழைத்தான்.! தாயும் வந்தாள். உடனே தன் கையிலிருந்த பொருளை அவள் கையி லளிக்கவே, பார்த்தாள் அதை; கொண்டாள் அதிசயம். விசுவாசநாதன் அந்நகை தன் கையிலெப்படிவந்ததெனச் சொன்னுன்.

தாய்.—அவள் ரொம்பத்தந்திரக்காரி. அவள் அம்மாளுக்குள்ள தந்திரமெல்லாமுண்டு. தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலையென்று சும்மாவா சொல்லுகிருர்கள்! இதை உனக்குக் கொடுத்ததினுலேதான் அவளுக்கு மடத்தில் இருக்கக்கூடவில்லை.

விசு.—அப்படிச்சொல்லாதேயுங்கள். மடத்திலேயிராதது கடவுள்செயல். அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்தெடுக்கப்பட்டவர் சிலர்தானே. அவள் தந்திரக்காரியல்ல. ஓர் புண்ணியவதி. அவளுடைய வேண்டுதலினுலல்லவா நான் இங்கு வந்தேன்.

தகப்பனுர்:—அதெல்லாமிருக்கட்டும். எப்போ கலியாணத்தை வைத்துக்கொள்வோம்?

விசு.—நீங்கள் எண்ணுகிறது போலாகட்டும். நான்ஆறுமாதத்திற்குள் திரும்பவேண்டும்.

தகப்.—இன்னும் இரண்டுமாதத்திற்குள்ளிருக்கட்டும், நாள்மட்டும் பிற்பாடு குறித்துக் கொள்ளலாம். இது தீர்மானமாகவே கலியாண வேலைகள் பலமாக நடந்தன. அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கெல்லாந் தெரியவந்தது. இது சேதிகேட்ட மொத்தைச்சோற்றிற்கு மேளமடிக்கும் மூடப்புரோகிதர்களில் ஒருவராகிய சாம்பசிவ அய்யர்வந்து சங்கதிகளை விசாரித்து, 'ஐயா! ஜூன்மீ 2௳ புதவாரம் நல்லநாள், அன்று முகூர்த்தம் நடக்கட்டும்' என்று சொன்னுர். இரத்தினசாமி பிள்ளை இதற்குமுன் புரோகிதர்கள் சொன்னதை வேதபிரமாணமாக உட்கொண்டவராயினும், இப்போது வெறுப்புகொண்டு சொல்வார்: 'ஐயரவாள் உங்கள் சாதகம் எனக்கு வேண்டியதில்லை. கலியாணத்துக்கு ஜூன்மீ 5௳ சனிவாரத்தை குறித்திருக்கிறது.

ஐயர்.—ஐயா அப்படிச்செய்யாதேயுங்கள். அன்று கரிநாளாச்சுதே. இச்சுபகாரியத்தை ஒருபோதும் அன்றைக்குச் செய்யலாகாது.

இரத்.—போதும், போதும். என்மகன் போனபின் வைத்தியநாதய்யர் சாதகம் சொன்னுர், அவன் போனது கரிநாள் வரமாட்டான். இப்போ என்னமாப்போச்சுது. ஐயரதைக்கேட்டு வெட்கிப்போனுர். அதுதான் இச்சமயம் வரவில்லை.! ஐயரவாள்! நீங்கள் கோபித்துக் கொள்ளவேண்டாம். இனிமேல் மூடப்புரோகிதர்கள் சொல்லும் அஞ்ஞான உபதேசங்களுக்குக் காது கொடுப்பதில்லை.இதுவரையில் ஏமார்ந்தது போதும். கர்த்தா யிருக்கிருர். அவர் திருவுளமே நடக்கும், அவரையே நம்பியிருக்கிறேன், தயவுசெய்து வெற்றிலை போட்டுக்கொண்டு போம்வாருங்கள்; இதைக்கேட்டு அடிபட்ட அரவம்போலானுர், ஐயர் நம்முடைய ஜெகஜாலம் பலிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு வெளியேகி விட்டார்.

நாள் கிட்டிவந்து விட்டது. கலியாணத்திற்கு செய்யவேண்டிய காரியங்கள் வீட்டுவிஷயமாகவோ கோவில் விஷயமாகவோ எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. திருமணச் சடங்குமட்டும் நடத்தப்படவேண்டும். ஜூன்மீ 1௳யன்று கோவிலில் ஏகஜனக்கூட்டம், வெகுஜனங்கள் கலியாண பூசைக்குவந்தனர். இரத்தினசாமி

பிள்ளையின் இனபந்துக்கள் அதிக மல்லர். அவரையறிந்தோர் அநேகர். விசுவாசநாதனின் விசுவாசத்தை வியந்து அவன் தன் மனையாளோடு, பூவும் மணமும்போல, மணியும் ஒளியும்போல நகமுஞ்சதையும் போல் மயிலுந்தோகையும் போல ஒன்றித்துப்பல்லாண்டு ஜீவிக்க கர்த்தர் கருணையை அவனுக்காக வேண்டவந்தவர் அனந்தம்பேர்.

மெய்விவாகம் முறையே நடைபெற்றது. எல்லாஞ்சிறப்பாக முடிந்தது. சுகமேயிருந்தார்கள். லீவ் நாள் குறுகிற்று. அலுவலுக்கும் போகவேண்டிய நாள் வந்தது. குடும்பசகிதமுமே எல்லோரும் சென்றார்கள். அண்டைவீட்டார் அயல்வீட்டார் மித்திரர்களெல்லாம் வாழ்த்திப் பயண மனுப்பினார்கள்.

ஈப்போவுக்குப்போய் 10 வருஷமாகிறது. நமக்கிப்போதெட்டிய சங்கதி யாதெனில், விசுவாசநாதனின் பெற்றோர் பரலோக ப்ராப்தியாயினர். அவனும் பாப்பாத்தியும் கரிநாளில் கலியாணஞ் செய்தாராயினும் வெகு க்ஷேமமாய் சேசுவின் திருவிருத்தயத்தினருளால் ஆறு அருமந்த மக்களைப்பெற்றுப் பெறு வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள் என்பதே. "சாஸ்திரம்பார்க்காதவீடு சமுத்திரம்" என்பார்கள். அதுபோல சாஸ்திரம், சகுனம் முதலியவைகளை சற்றும் பாராமல், எல்லாம் "தெய்வச்செயல்" என்று விசுவசித்து, நமக்குவரும் சுகதுக்கங்களை யெல்லாம் இருகையாலும்வாங்கி முழுமனதோடு ஒப்புக்கொண்டு, தேவதிருவுளத்துக்கு அமைந்து நடப்போமானால் நமக்கு இறுதியில் சுகமே கிடைக்கு மென்பதற்கு. விசுவாசநாதனே சாட்சி.

M. S. M.

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக்கற்பனையின்பேரில்

### 6-ம் பாடம்.

### முதற்கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### தேவமாதாவின் வணக்கம்

(முன்தொடர்ச்சி.)

8. வேறொரு அதிசயம்.— தேவமாதாவின்பேரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபையாரால் நடந்தேறிவரும் கணக்கில்லாத அதிசயங்களில் வேறொன்று: பிரான்சு தேசத்தில் அறுவது பிராயமுள்ள ஒரு கிறிஸ்துவனிருந்தான். இவன் சிறு பிராயத்தில் சற்குணனாய் நடந்தும் பிராயம் வர வர வேதகற்பனையை மீறி தேவத்திரவிய அனுமானங்களை அசட்டை செய்து கடைசியாய் ஒரு பதிதனைப்போல நடந்து வந்தான். இவனுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை இகழ்ந்து பரிகாசம் பண்ணுவான். இவன் வர்த்தகனாகையால் வர்த்தக விஷயமாக அடிக்கடி பரீஸ் நகருக்குப் போகும்படி நேரிட்டது. அக்காலத்தில் இவனையறிந்தவர்கள் இவனுடைய நிர்ப்பாக்கிய ஸ்திதியைக் கண்டு துக்கித்து அவனுக்குப் புத்திமதி சொல்லும்போது அவர்களை நிந்தித்துப் பரிகாசஞ் செய்வான். காரியம் இப்படி யிருந்தும் அவனுடைய சிநேகிதர் மனந்தளராமல் தேவதாயார்மட்டில் பூரண நம்பிக்கை வைத்து அவன் பெயரை சபை டாப்பில் வரைவித்து இவன் மனந் திரும்பும்படி சபையோரெல்லோரும் மகா உருக்கத்துடன் வேண்டிக்கொண்டு வந்தார்கள். இந்தச் சங்கதியைப்பற்றி யிக்கிழவன் கேள்விப்பட்டபொழுது அகடவிகடமாய்ப் பேசத்தொடங்கினான். ஒருநாள் இவனுக்கு உற்ற சிநேகிதனாயிருந்தவனுடைய வார்த்தையைத் தட்டக்கூடாதவனாய் அருகாமையிலிருந்த கோவிலுக்குப் போனான். அந்நேரத்தில் அங்கு மகா பக்தி உருக்கத்துடன் செபிக்கும் விஸ்வாசிகளைக் கண்டு பிரமித்தானேயன்றி, யாதொரு ஞானப்பலனும் அடைந்தவனல்ல. மறுநாளும் இவன் கோவிலுக்குப்போனபொழுது தேவதாயார் சுரூபத்துக்குமுன் முழங்காலி லிருக்கவே, இவன் முழுதும் வேறு மனிதனாகி கண்ணீர் சிந்தி அழ ஆரம்பித்தான். இந்த நிர்ப்பாக்கிய கிழவன் தேவதாயாருடைய விசேஷ கிருபையால் முற்றும் மனந் திரும்பி அன்றே நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்தான். இவனுக்கு அந்நேரத்திலுண்டான மிகுந்த துக்க மனஸ்தாபத்தையும், சிந்தின ஏராளமான கண்ணீரையும்பற்றி அடிக்கடி பாவசங்கீர்த்தனத்தை நிறுத்தி நிறுத்தி செய்யவேண்டியதாயிற்று. மறுநாள் மகா பக்தி வணக்கத்துடன் தேவநற்கருணை உட்கொண்டு அது முதல் உத்தம கிறிஸ்துவனாய் நடந்துவந்தான், ஆகையால் பிள்ளைகளே! எப்போதைக்குந் தேவமாதாமட்டில் பூரண நம்பிக்கை வைத்து வேண்டிக்கொள்வீர்களேயாகில், உங்களுக்கு வேண்டியதைத் தமது திருக் குமாரனிடத்தில் அடைந்தருளுவாள் என்பது தப்பாது. (Abbe Mullois.)



9. பெரும் பாவியானவள் மனந்திரும்பின வரலாறு.—எஜிப்து தேசத்தில் மரியம்மாள் என்னும் ஒரு ஸ்திரீயானவள் நாவால் உரைக்கத்தகாத பாவாக்கிரமங்களை வெட்கநாணமின்றிக் கட்டிக்கொண்டுவந்தாள். ஜெருசலேம் பட்டணத்தில் திருச்சிலுவையை வணங்கும்படி அனேகங் கிறிஸ்துவர்கள் திருயாத்திரையாகப் புறப்பட்டபொழுது, இவளும் புண்ய கருத்தின்றி தனது துஷ்ட ஆசாபாசத்தைத் திருத்திசெய்ய இது தகுந்த சமயமென்று எண்ணி திருயாத்திரைக்காரருடன் சேர்ந்து கப்பலேறி திருநகர் போய்ச் சேர்ந்தாள். சகலருந்தேவாலயத்தில் பிரவேசிப்பதைக் கண்டு இவளும் கோவில் வாசற்படியில் கால் வைக்கவே கண்ணால் பார்க்கமுடியாத ஓர் காணாக் கையால் பிடித்து வெளியே தள்ளப்பட்டாள். இவ்வாறு பலவிசை சம்பவித்ததைக் கண்டு கலங்கி தனக்கு எதிராக இருக்கும் தேவமாதா சுரூபத்தைக் கண்ணோக்கின க்ஷணமே, இவளுடைய அவலக்ஷணமான பாவதோஷங்களும், அவற்றாலுண்டாகும் தேவதண்டனையும் அவள் மனதில் தெளிவாய்க் காணப்பட்டன. அந்நேரத்தில் அவளிருதயத்தில் மகா துக்க மனஸ்தாபம் கிளம்பி அச்சுரூபத்துக்குமுன் முழந்தாட்படியிட்டு, ஏராளமாய்க் கண்ணீர் சிந்தி, தேவதாயாரை மனத்தில் தியானித்து, "என் ஆண்டவளே தாயே! இப்போது என் பாவாக்கிரமங்களின் கணக்கையுந் தோஷத்தையும் நன்றாய் அறிகிறேன். என் நல்ல தாயே! உமது திருக்குமாரனிடம் எனக்காக மனுப்பேசி, அவர் மரணமடைந்த திருச்சிலுவையை அபாத்திரவதியான அடியாளும் வணங்கச் செய்தருளும். மேலும் இதுமுதல் என் துர்நடத்தையை மாற்றுவதுடன் அவைகளுக்கரக சாகுமட்டுங் கடினதவஞ் செய்வேன்" என்று மகா உருக்க விஸ்வாசத்துடன் வேண்டினபின் எழுந்து அற்பதடையின்றி தேவாலயத்தில் பிரவேசித்து திருச் சிலுவையைச் சந்தித்து வணங்கி, வெகுநேரம் செபத்தியானம் செய்தபிறகு தேவ ஏவுதலால் பயங்கரமான ஓர் அடர்ந்த காட்டுக்குள் சென்று 47 வருஷம் யாதொரு மனிதருடைய முகத்தை முதலாய்ப் பாராமல் தன் பாவங்களுக்காக இரவும் பகலும் கடுந் தவத்துடன் ஜெபஞ் செய்து சாகுந்தறுவாயில் சர்வேசுரனால் அற்புதமாய் அனுப்பப்பட்ட சோசிமுஸ் என்னும் ஒருவனவாசியின் கையால் கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று, தன் விருத்தாந்தங்களை யெல்லாம் அவருக்கு அறிவித்து பாக்கியமான மரணமடைந்தாள். (இந்த அர்ச்சியசிஷ்டவள் சரித்திரம்.)

10. லூர்து நகர்.—பிள்ளைகளே! தேவதாயாரைப்பற்றி சொல்லப் பட்டவைகளை இப்புஸ்தகத்தில் வாசித்திருப்பதுடன் இன்னும் அநேகர் மூலமாயும் புஸ்தகங்கள் வழியாயும் கணக்கற்ற அற்புத சரித்திரங்களைக் கேட்டிருப்பீர்கள். அவைகள் நமது காலத்துக்குமுன் நடந்தவைகள். ஆனால் இக்காலத்தில் பிரான்ஸ் தேசத்திலுள்ள லூர்து என்னும் நகரில் 50 வருஷத்துக்குமுன் தேவதாயார் ஒரு சிறு ஏழைப்பெண்ணுக்கு தரிசனங்கொடுத்து அது முதல் இந்நாள்வரைக்கும் சகலவித ரோகங்களும் வைத்திய சாஸ்திரத்துக்கு அசாத்தியமான பயங்கர நோய்களும் சகலரும் அதிசயப்பட அற்புதமான விதமாய்க் குணப்பட்டு வருகின்றன. அத்திரு ஸ்தலத்துக்கு சகல தேசத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான பேர் நாடோறும் திருயாத்திரையாய் போகிறார்கள். சரீரவியாதியிலும் ஆத்தும வியாதியிலும் குணப்பட்டவர்களின் கணக்கு அபரிமிதமானது. லூர்து நாயகியின் தரிசனப் புஸ்தகத்தை வாசித்துப் பார்த்தால் தெரியவரும். ஆகையால் பிள்ளைகளே தேவதாயார்மீது நீங்கள் அதிகப் பக்தியை வைத்து அவள் சரணத்தை நாடுவீர்களேயாகில் அவள் உங்களுக்காகத் தமது திருக்குமாரனிடம் மனுப்பேசி நீங்கள் தர்ம வழியில் ஒழுகி சற்கதி சேரும்படி செய்வாளென்று அறிவீர்களாக.

(இன்னும் வரும்.)

# GNANAMANI III. PART.
# ஞானமணி 3-ம் பாகம்.

(ஓர் நாவல்) கதை.
(முன்தொடர்ச்சி.)

## ஐந்தாம் அதிகாரம்.
## புயல் அமர்ந்தது.

இந்த கேஸ் நடந்த 15-ம் நாள் காட்டுக்கு மேயப் போன போதகருடைய மாடுகள் வீட்டுக்குத் திரும்பாதபடியால், நாலாபக்கமும் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை. மறுநாளும் அதைத் தேடின பொழுது, ஒரு படி பால் கறக்கும் அந்தப் பசுவானது முன்காலும் பின்காலும் அறுக்கப்பட்டு எழுந்திருக்கக்கூடாமல் கீழேவிழுந்துகிடப்பதாகக் கேள்விப்பட்ட போதகருக்குச் சொல்லி முடியாத துக்க முண்டாயிற் றென்றாலும், வேதவிஷயமாக இந்நஷ்ட முண்டானபடியால், பூர்வ காலத்து ஜோபின் மாறாப்பொறுமையைப் பின்பற்றினவராய் "சர்வேசுரன் கொடுத்தார் அவரே அதையெடுத்துக்கொண்டார்" என்றார்.

இதையும் முன் நேர்ந்த நஷ்டங்களையும் பற்றிக் கேள்விப்பட்ட கத்தோலிக்கு குருவானவர், கலெக்டருக்கு ஒரு மனு எழுதி, வேத விஷயமாய் நடந்தேறிவந்த அநியாயங்களைப் பற்றித் தெரியப்படுத்தினார். கலெக்டரும் டிப்டி கலெக்டருக்கு தாக்கீது அனுப்பி, ஷை ஊருக்குப் போய் மனுவில் கண்டிருந்த சங்கதிகளை விசாரிக்கும்படி ஆர்டர் செய்தார். டிப்டிகலெக்டரும் புறப்பட்டுப்போய் சங்கதிகளை நிரவிசாரணை செய்து சந்தேகத்துக்குள்ளான நபர்களைக் கண்டித்து, இனிமேல் அப்பேர்ப்பட்ட அக்கிரமங்கள் நடக்குங்கால், குற்றவாளிகள் சட்டப்பிரகாரம் தண்டிக்கப்படுவார்களென்று எச்சரித்தார். மேலும் அடுத்த போலீசு ஸ்டேஷனிலிருந்து இரண்டு ஜவான்கள் நாடோறும் அங்கு நடக்கும் காரியாகாரியங்களை அறிந்து தமக்கு ரிப்போர்ட்டு அனுப்பும்படி ஆர்டர்கொடுத்தார்.

அதுமுதற்கொண்டு தப்பிலிகள் செய்து வந்த அக்கிரமங்கள் நின்றுபோயின. பவுல்போதகரும் சமாதானமாய் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் சலமோன் பஞ்சாயத்தார் செய்த தீர்மானத்தை பல வக்கீல்களுக்குக் காட்டி, தனக்கு ஏதாகிலும் பிரயோசன முண்டாகுமோ வென்று ஆலோசனை செய்தான். அவர்களும் கிறிஸ்டியன் ஆக்ட்டுகளையும், பஞ்சாயத்து தீர்மானத்தில் எண்பிக்கப்பட்ட நியாயங்களையும் தீர பரிசோதித்து, "உன் தகப்பனுக்கு விரோதமாய் கோர்ட்டுக்குப் போவதால் பயனில்லை. ஆனால் உன் தகப்பன் சொத்தில் ஏதாகிலும் பெற்றுக்கொள்ள உனக்கு மன முண்டானால் அவரை அனுசரித்துப் போவதே யுக்த மென்று சொல்லிவிட்டார்கள்.

ஆகையால், சலமோன் தன் உற்ற சிநேகிதருடன் தீர்க்க ஆலோசனை செய்தபின், ஒரு நாள் இராத்திரி பவுல்போதகர் தமது குடும்பத்துடன் இராச்செப முடித்து போசனத்துக்கு உட்காருவதற்குமுன் அவரிடஞ்சென்று, அவர் பாதத்தடியில் முழந்தாட்படியிட்டு, அவருடைய இரு பாதங்களையும் பிடித்துக்கொண்டு: "தகப்பனே," என்று விம்மி யழுவதைக் கண்ட போதகர் அதிசயப்பட்டு, "எழுந்திரு மகனே!" என்று கண்களில் கண்ணீர் ததும்ப, அவன் தோள்பட்டையை பிடித்து "எழுந்திரு" என்றார். ஆனால் சலமோன், முழங்காலி லிருந்துகொண்டே, "என் தகப்பனே! என் பிரிய தந்தையே! பைபிளிற் சொல்லப்பட்ட ஊதாரிப் பிள்ளை நானே; நீ ரென்னைப் பொறுக்காவிட்டால் வானமண்டலத்தி லிருக்கும் பராபரன் பொறுக்கார். கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டேன். என் தந்தையே, பிரிய தந்தையே! எனக்கு உமது சொத்து கிடைக்கவில்லை யென்று நான் துக்கப்படவில்லை. ஆனால் என் அரிய தந்தையாகிய உம்மோடு வாதாடி உமக்குத் துரோகம்புரிந்ததே எனக்குப்பெரிய மனஸ்தாபத்தை யுண்டாக்குகிறது. தேவரீர் தயவுசெய்து எனக்கு மன்னிப்புக்கொடுத்து, என்னை ஆசீர்வதித்தால் தான் எழுந்திருப்பேன்": என்று கண்ணீர் சிந்தி யழுதான். பவுல்போதகருடைய மனம் மெழுகு போல் உருக, 'மகனே; என் அன்புக்குரிய மகனே! நீ யெனக்குசெய்த தின்மையையும், அவமானத்தையும் உன் சொந்த புத்தியால் ஏவப்பட்டு செய்தவனல்ல. இது எனக்கு ஸ்பஷ்டமாய்த்தெரியும். மேலும் அவற்றையெல்லாம் அப்போதே



மன்னித்துவிட்டேன், எழுந்திரு அப்பா' என்றார். சலமோன் எழுந்து தன் சிறிய தாயார் பக்கமாய்ப் போய்: 'அம்மா உங்களுக்குமுன் நிற்பதற்கு வெட்கமா யிருக்கிறது. என் ஆகாத நடத்தையால் உங்களுக்கு மகா தீங்குகள்செய்தேன்' என்று பின்னும்பேச வாய்வராதவனாய் ரூத்தம்மாளுக்குமுன் முழந்தாள்படி யிட்டான். "எழுந்திரு அப்பா, உங்கள் ஆஜி சொன்னதுபோல துஷ்டருடைய கெட்ட ஆலோசனையால் நீ செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டோம். எழுந்திரு" என்று அவனைத் தூக்கிவிட்டாள். சலமோன் தன் துர்நடத்தைக்காக சற்றுநேரம் துக்கித்து அழுதுகொண்டிருந்தான்.

பிறகுபோசனந் தயாராயிருந்தபடியால் தகப்பனும் மகனும் கைகால் அலம்பிக்கொண்டு, போசனத்திற்கு உட்கார்ந்தார்கள். மறுநாள் போதகர் சலமோனுக்கு சொல்லவேண்டிய புத்திமதியெல்லாஞ் சொல்லி, பிரயாண செலவுக்கு வேண்டிய பணங்கொடுத்து தன் உத்தியோக வேலையை கவனமாய்ப் பார்க்கும்படி அனுப்பிவைத்தார்.

அந்நாள் முதற்கொண்டு சலமோன் வெகு யோக்கியனாய் ஒழுகினான். குடியை அடியோடு விட்டான். சூதாடுகிறவர்களோடு சேர்ந்தவனல்ல. எதார்த்த குணமுள்ளவனாய் தன் வேலையை சுறுசுறுப்பாய் செய்துவந்தான். தன் போசன செலவுக்கு வேண்டிய பணம் போக மீதி பணத்தை தன் தகப்பன் பேருக்கு மாதம் மாதம் மணிஆர்டர் செய்துவருவான். மாசந் தவறாமல் தன் தகப்பனாருக்குக் கடித மெழுதி, அதில் தன் சிறியதாயாருடையவும் தங்கையுடையவும் க்ஷேமங்களைப்பற்றி ஆவலாய் விசாரித்துவருவான். விஸ்வாசநாயகருக்கு மாசத்தில் இரண்டு கடிதந் தவறாமல் வரும். அதில் தனக்குள்ள வேத சந்தேகங்களைப் பற்றி யறிக்கை செய்து, சந்தேக நிவர்த்தி செய்துகொள்வதற்கான வழிப்பாடுகளைக் கேட்டுக்கொள்வான். ஈசாக் உபதேசியாருக்கும் மகா மரியாதை வாஞ்சனைக்குரிய கடிதங்கள் எழுதிவருவான்.

இவ்வாறு பத்துமாதங்கள் கடந்தபின், தன் சுய ஊருக்கு 3 மாத ரஜா எடுத்துக்கொண்டுவந்து சேர்ந்தான். ஒருநாளைக்கு 4, 5 மணிநேரம் செலவழிப்பான் விஸ்வாசநாயகர்வீட்டில். தன் வேத சந்தேகங்களை யெல்லாந் தீர்த்துக்கொண்டபின், தன்னையுங் கத்தோலிக்குவேதத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். விஸ்வாச நாயகரோ சந்தோஷ வெள்ளத்தால் பூரித்து, சில ஞானோபதேச புஸ்தகங்களைக் கொடுத்து அவனை வாசித்து வரும்படி சொன்னார்.

சத்திய வேதத்தை சரிவரக் கற்றபின், சலமோனுடைய தாய் தந்தையரும் ஈசாக் உபதேசியாரும் மற்ற கிறிஸ்துவர்களும் சந்தோஷிக்க, அவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. சில மாதத்துக்குப் பின் பாவசங்கீர்த்தனம் தேவநற்கருணை முதலிய தேவத்திரவிய அநுமானங்களையும் பெற பாக்கியம் பெற்றான்.

சலமோனுக்கு புரொடெஸ்டான்டான் ஒருவன் உற்ற சிநேகிதன். அவன் பெயர் சத்யநாதன். ஆனால் சலமோனுடைய உற்ற சிநேகிதனாயிருந்தும், அவனுக்குக் குடி, சூது முதலிய துர் அப்பியாசங்கள் கிடையா. சலமோன் கத்தோலிக்கன் ஆனபின் சத்தியநாதனோடு சேர்ந்து அடிக்கடி விஸ்வாசநாயகர் வீட்டிற்குப் போக்குவருத்தா யிருந்தான். அவனும் தன் வேத சந்தேகங்களை நாயகருக்கு தெரிவித்து, அவர் சொல்லும் நியாயங்களைக் கேட்டு வருவான். இவன் அடிக்கடி நாயகர் வீட்டிற்குப் போவதைப்பற்றி இவனும் கத்தோலிக்க னாவானென்று நினைத்தவர்தார்கள் அவனைப் பார்த்தவர்கள்.

ஒருநாள் சலமோனும் அவன் ஸ்நேகிதனாகிய சத்தியநாதனும் விஸ்வாசநாயகர் வீட்டில் பேசிக்கொண் டிருக்கும்பொழுது "என்ன ஐயா, சலமோன் கிழவனானபிறகுதானா அவருக்குக் கலியாணம் நடக்கும்? இவருடைய ஈடு வாலிபருக்கெல்லாம் கலியாணமாகி, குழந்தை குட்டியுமா யிருக்கிறார்களே" என்று விஸ்வாசநாயகரைப் பார்த்து சத்தியநாதன் சொன்னான். "அவருடைய தகப்பனாருடைய உத்தேசம் என்னவோ" என்று நாயகர் மொழிந்தார். "இதுவரையில் இவர் துர்ச்சனரோடு கூடி ஊதாரிப் பிள்ளைபோல் நடந்தபடியால் இவருடைய தகப்பனார் அதைப்பற்றி நினைத்தவரல்ல. ஆனால் இப்போது அந்த துஷ்ட ஆட்டத்தையெல்லாம் விட்டுவிட்டு சற்குணனாய் ஒழுகுவதால் நீரே இவருடைய தகப்பனாருக்கு சொல்லி, யெங்கே யாகிலும் ஒரு பெண் பார்க்கும்படி சொல்லவேண்டும்" என்று சத்தியநாதன் மொழியவே அதற்கு நாயகரும் சம்மதித்தார்.

மறுநாள் விஸ்வாசநாயகர் சத்தியநாதனுடன் சேர்ந்து பவுல்போதகரைக்கண்டு பேசினபோது, சலோமோனுடைய கலியாணத்தைப் பற்றியெச்சரித்தார். "நானும் அதே யோசனையாய்த்தானிருக்கிறேன். அவன் சற்குணனாய் நடந்திருந்தால் 3, 4 வருஷங்களுக்குமுன்னதாகவே விவாக முடிந்திருக்கும். அவனுக்குத் தகுந்த பெண்ணைப்பற்றி யோசித்து வருகிறேன்; ரூத்துக்கும் அதே எண்ணம்." என்றார் பவுல் போதகர்.

சத்தியநாதன்.—சலமோனுடைய கருத்தையறிந்தீர்களா?

பவுல் போ.—அவனை நான் கேட்கவுமில்லை, அவன் அதைப்பற்றி யெனக்குச்சொல்லவுமில்லை.

சத்தி.—அவருங்களுடன் பெண்ணைப்பற்றி யெப்படி பேசுவார்?

பவுல்போ.—உன்னுடன் பேசியிருக்கிறானே?

சத்தி.—ஒருவிசையல்ல அனேகந்தடவை.

பவுல்போ.—எந்தப் பெண் வேண்டுமென்கிறான்?

சத்தி.—ஈசாக் உபதேசியார் மகள்மட்டில் பிரியமாயிருக்கிறான்.

பவுல்போ.—அது மாளுமா?

விஸ்வாச நா.—ஆம், ஈசாக் உபதேசியார் சம்மதித்தபோதிலும், அவருடைய குமாரத்தியிணங்கமாட்டாள். நானும் எத்தனையோவிசை கலியாணஞ் செய்துகொள்ளும்படி புத்தி சொன்னேன். ஆனால் அந்தப் பெண் கலியாணந் தேவையில்லையென்றுவிட்டாள். ஈசாக் உபதேசியாரும் நேராகவும் மற்ற மனிதரைக் கொண்டும் பிரயத்தனப்பட்டும் அது அநுகூலப்படவில்லை.

சத்தி.—என்னவோ பாருங்கள்; சிலவிசை சலமோனை விவாகஞ்செய்துகொள்ள சம்மதிக்கலாம்.

பவுல்போ.—ஆனால் சலமோனுடைய பழைய நடத்தையெல்லாம் அந்தப் பெண்ணுக்குத் தெரியாதோ?

சத்தி.—தற்போதைய அவருடைய நடத்தையும் தெரியுமல்லவா? நீங்களிருவருஞ் சற்று முயன்றால் காரியம் அநுகூலப்படுமென்பதற்கு அற்ப சந்தேகமுமில்லை. உங்கள் வார்த்தையை தகப்பனும் மகளுந் தட்டமாட்டார்கள்.

விஸ்வாச நா.—என்னவோ எனக்கு சந்தேகம்! ஆகிலும் பார்க்கலாம்.

என்று வேறு சங்கதிகளைப் பேசினபின் தன் வீட்டுக்குப் போனார். சிலநாளைக்குப்பின் விஸ்வாசநாயகர் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப் போய் சிலநேரம் பேசினபின்: "என்ன? ஐயா உமது குமாரத்திக்கு இன்னந் தக்க மாப்பிள்ளை யகப்படவில்லையா?"

ஈசாக் உப.—நாலைந்துபேர் கேட்டார்கள். எனக்கு சம்மதந்தான்; ஆனால் அபிராமி அதற்கு சம்மதிக்கவில்லை.

விஸ்வாச நா.—இப்போது புதுமாப்பிள்ளை ஒருவர் அபிராமியை மணமுடித்துக்கொள்ள ஆசிப்பதால் சில்விசை சம்மதித்தாலுஞ் சம்மதிக்கலாம்.

ஈசாக் உப.—முன்கேட்டவர்கள் மட்டில் என் குமாரத்திக்கு பிரீதியில்லாததைப்பற்றி சம்மதிக்கவில்லையென்று நினைக்கவேண்டாம். கலியாணமே தனக்கு அவசரமில்லையென்று சொல்லிவிட்டாள். நீர் பேசும் புதுமாப்பிள்ளை யாரென்று நான் அறியலாமா?

விஸ்வாசநா.—அதற்கென்ன ஆட்சேபனை. உமக்குச் சொல்லாமல் முடியுமா? தாயறியாத சூல் உண்டா? பவுல்போதகருடைய குமாரன் சலமோன்தான்.

ஈசாக் உப.—அப்படியா! அபிராமி அதற்கு சம்மதிப்பாளென்று நான் நினைக்கவில்லை. அந்தப் பிள்ளையண்டானுடைய நடத்தை இந்த ஊருக்கு மாத்திரமல்ல, சுற்றுப்புறத்து கிராமங்களுக்கும் தெரிந்திருப்பதினால் அபிராமி இதற்கு சம்மதிப்பது துர்லபம்.

விஸ்வாச நா.—மனிதர் கலியாண வாழ்க்கையிலாவது சந்நியாச அந்தஸ்திலாவது இருப்பது நலம். ஆனால் இரண்டையும் விட்டுவிடுவது எப்படி?

ஈசாக் உப.—இரண்டுமில்லாதிருப்பது தப்பிதமா?

விஸ்வாச நா.—தப்பிதமென்று நான் சொல்லவில்லை.

ஈசாக் உப.—ஆயினும் இதைப்பற்றி அபிராமியை ஒரு வார்த்தை கேட்டுப்பார்க்கிறேன். இதுநிற்க சலமோன் யார்மூலமாய் உம்மைக் கேட்டான்?

விஸ்வாச நா.—அவனுடைய சினேகிதன் மூலமாய்த்தான். அப்பொழுது பவுல்போதகரும் கூட இருந்தார்.

ஈசாக் உப.—அவருடைய கருத்தென்ன?



விஸ்வாச நா.—இருவரும் மணமுடித்துக் கொள்வது அவருக்கும் இஷ்டந்தான். ஆனால் பெண் இந்தக் கலியாணத்துக்கு சம்மதிப்பது சந்தேகமென்றார்.

ஈசாக் உப.—சத்தியநாதனை நம்புகிறீர்களா?

விஸ்வாச நா.—அவனுடைய குணகுணங்களையும் நடத்தையையுஞ் சரியாய்த் தெரிந்தவரார்? ஆனால் சலமோன் சத்தியவேதத்தில் சேர்ந்தது முதற்கொண்டு அவன் என்னிடம் வந்துபோய்க்கொண்டு இருக்கிறான். தன் வேதத்தில் சந்தேகப்படுகிறதாகச் சொல்லி, பல சந்தேகங்களைக் கேட்டான். அதற்கான மறுமொழிகளையுஞ் சொன்னேன்.

ஈசாக் உப.—நான் அவனுடைய நடத்தையைப்பற்றி சந்தேகிக்கிறேன்.

விஸ்வாச நா.—அவன் அப்படியானால் நல்லவனல்லவோ?

ஈசாக் உப.—நல்லவனல்லவென்று சொல்லேன். ஆனால் இப்பேர்ப்பட்டவர்களை உடனே நம்பக்கூடாது.

விஸ்வாச நா.—இவனைப்பற்றி நமக்கென்ன? சலமோனுடைய நடத்தை யிப்பொழுது முழுதும் மாறிவிட்டது. அவனுக்குப் பெண் கொடுப்பதால் பாதகமில்லையென்று நினைக்கிறேன்.

ஈசாக் உப.—நல்லது என் மகளை விசாரித்துப் பார்க்கிறேன்.

இன்னும் வரும்.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உபதேசி, நாட்டாண்மை, கோவில்பிள்ளை, பண்டாரம், மற்றும் கோவில் உத்தியோகஸ்தர்கள்.

(முன் தொடர்ச்சி.)

---

1. கோவில் உத்தியோகஸ்தர்கள் சபையாரிடம் லஞ்சம் பெற்று குரு சுவாமியாரிடம் சிபாரிசு செய்வது ஒழுங்கல்ல.

2. அவர்கள் சபையாரிடம் நல்ல பேச்சு பேசிவிட்டு சுவாமியாரிடம் இல்லாததும் பொல்லாததும் சொல்லி தாங்கள் தப்பித்துக்கொண்டு சுவாமியாரை நடுத்தெருவில் இழுத்துவைப்பது ஒழுங்கல்ல.

3. கோவில் பிள்ளைகள் பணப்பேய் பிடித்துக்கொண்டு இல்லாத வீண் அர்த்தமற்ற ஆசாரங்களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளைக்கொண்டு பணம் சம்பாதிக்கத் தேடுவது ஒழுங்கல்ல. (இவர்களாலேயே எத்தனையோமுறை நமது வேதத்திற்கு அவமானம் உண்டாயிருக்கிறது.)

4. கோவிலுக்கடுத்த உத்தியோகங்களை கௌரதைக்குமாத்திரம் ஏற்றுக்கொண்டு அவைகளுக்குரிய கடமைகளை அசட்டை செய்வது ஒழுங்கல்ல.

5 கோவிலுத்தியோகஸ்தர்கள் தங்களுக்குத் தெரியவரும் குடும்ப இரகசியங்களை பகிரங்கப்படுத்துவது ஒழுங்கல்ல.

6. கோவிலுத்தியோகஸ்தர்கள் குடித்துவிட்டு ஜெபம் படிப்பது ஒழுங்கல்ல.

7. மசுவாதி முதலிய கெட்ட கிறிஸ்துவர்களுக்கு சமயத்திற்குத் தக்கபடி புத்திசொல்லாமல் அசட்டையாய் அவர்களை விட்டுவிடுவது ஒழுங்கல்ல.

8. உபதேசி, கோவில் பிள்ளைகள் வயிறு வளர்க்கும்படி ஏழைக் கிறிஸ்துவர்களை ஏமாற்றி அந்தோனியார் சக்கரம், சந்தியாகப்பர் சீட்டு முதலிய அக்கியான சம்பந்தமான சடங்குகளைச் செய்து காசு பறிப்பது ஒழுங்கல்ல.

9. கோவில் அதிகாரிகள் சமயம் வாய்த்தபோது பிறரை நிர்ப்பந்திப்பது அல்லது இகழ்வது ஒழுங்கல்ல.

10. கோவில் அதிகாரிகள் விவாகம் முதலிய சம்பவங்களுக்கும் அவைகள் சம்மந்தமான விருந்துகளுக்கும் போவதில் சுறுசுறுப்பு காட்டி, வியாதியஸ்தர்களை விசாரிப்பதிலும் மற்றும் இதைப்போலொத்த சுயநலமில்லாத காரியங்களில் அசட்டையாயிருப்பது ஒழுங்கல்ல.

11. மகராசர் வீட்டிலும் பசையுள்ளவர்கள் வீட்டிலும் நல்லது பொல்லது

ஆனால் மாத்திரம் துடைதட்டிக்கொண்டு போய் நாலு ஜாமமாயினும் காத்திருந்து காரியத்தை முடித்து, எளியவன் வீட்டில் பிராணன் போகிறதானாலும் எட்டிப்பார்க்காதிருப்பது ஒழுங்கல்ல.

12 கோவில் உத்தியோகஸ்தர்கள் தங்கள் எளிமையைப் பலரிடம் சொல்லி பல்லைக் காட்டிக் கெஞ்சுவது ஒழுங்கல்ல.

13 "பாப்பாத்தியம்மா மாடு வந்தது பார்த்துக்கொள்" என்றதுபோல் ஏதோ கடனைக் கழிக்க சில ஜெபங்களை உளறிச் சொல்லி, சில பேச்சைப்பேசி, வந்தமட்டும் வருமானத்தின்மேல் கண்ணாயிருப்பது ஒழுங்கல்ல.

14. தங்கள் சோம்பலை மறைக்க குருக்கள் முன்னே வெகு சாமர்த்தியம்பேசி செய்யாததைத் செய்ததாகச் சொல்லி செய்ததற்குமேல் அதிகமாகச் சேர்த்து சித்திரமாக வருணித்துப் பேசி அவர்களை ஏய்க்கத்தேடுவது ஒழுங்கல்ல.

15. அவஸ்தைக்குச் சுவாமியாரைக் கூப்பிட வந்தால் வியாதியஸ்தனைப் பற்றி இல்லாத கேள்விகளையெல்லாம் கேட்டு வந்தவர்களை முகமுறித்து அனுப்புவது ஒழுங்கல்ல.

16. ஞானஸ்நானத்திற்கு பிள்ளைகளைக் கொண்டுவந்தால் நாளைக், காகட்டும் பின்னைக்சாகட்டும் என்று விரட்டிவிடுவது ஒழுங்கல்ல.

(சாதாரணமாய் கொஞ்சம் ஐவேசு உள்ளவர்கள் ஞானஸ்நானத்தன்று தங்கள் பந்துக்களைத் தருவித்து ஏதோ தங்கள் வீட்டில் ஒரு விசேஷம் செய்வதுண்டு. இப்படியிருக்க இதைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருக்கும் கோவில் உத்தியோகஸ்தர்கள் அத்தருணத்தில் தக்க காரணமின்றி அவர்களை நாளை யாகட்டுமென்று சொல்லி அனுப்பிவிடுவது அவர்களுக்கு நஷ்டத்தையும மனோ சஞ்சலத்தையும் உண்டுபண்ணுமென்று அவர்கள் உணரவேண்டும்.)

17. பாவ சங்கீர்த்தனத்திற்கு வந்தவர்களை தக்க முகாந்தரமின்றி நாளைக்கு அல்லது வருகிற வாரமென்று அனுப்பி விடுவது ஒழுங்கல்ல.

(பாவ சங்கீர்த்தனத்திற்கு வருபவர்கள் உத்தம மனஸ்தாபமுள்ள இருதயத்தோடு வருகிறார்கள். பாவ சங்கீர்த்தனம் செய்ய அதுவே தருணம். அச்சமயம் தப்பினால் அவர்களுக்கு நல்ல பாவ சங்கீர்த்தனஞ் செய்ய தக்க சந்தர்ப்பம் நேராமலும் போகக்கூடும்.)

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டுமே எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றவையென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### சங்கைக்குரிய அல்போன்ஸோ நாதர் கல்லறைத் தரிசன யாத்திரை.

### சாத்தூர்.

பெப்ரவரி மீ 15 உ சங்கைக்குரிய அல்போன்ஸோ நாதர் கல்லறைத் தரிசன தினம் என்பதைத் தூத்துக்குடி சாத்தூர் முதலிய இடங்களிலுள்ள சமஸ்தரும் அறிவார்கள். இது விஷயத்தை எவரும் மறந்து போகாதிருக்கக் கூடிய விதமாய்த் தூத்துக்குடி முனிசிபல் சேர்மன் Mr. குரூஸ் பெர்னாந்தீஸ், விருதுபட்டி Mr. ஜே. என். கொறேர இவர்களிருவர் கையொப்பமிட்ட அறிவிப்புப் பத்திரம் சென்ற மாதம் 10-ம் தேதியிலிருந்து பிரசுரிக்கப் பெற்றது. தரிசன தினத்தில் சாத்தூர் கோவிலில் செய்யவேண்டிய திவ்ய பலிப்பூசை முதலிய திருச்சடங்குகளை யிட்டு சவ்வூர்ப் பங்கு விசாரணை கனம் தலான் சுவாமிகளுக்குஏற்கெனவே அறிவிக்கலாயிற்று. தூத்துக்குடிவாசிகள் 14-ம் தேதி மாலை வண்டியில் பிரயாணமாகி நள்ளிரவில் சாத்தூரை அடைந்தார்கள். இவர்கள் அவ்விடத்தில் சுவாமியார் ஆஸ்ரமத்திலேயே தங்குவதற்கு ஏற்பட்டதால் கல்லறைவழியாக ஆஸ்ரமத்திற்குப் போகும்படியாக இருந்தது. பனியின் குளிர் மிகுதியால் உடல் நடுநடுங்க வேண்டிய அந்நேரத்தில், தரிசனையை யொட்டிச் சுற்றுக் கிராமத்தினின்று வந்த கிறிஸ்துவர்கள் கல்லறையின் அருகாமையிலேயே வெறுந்தரையில் படுத்து நித்திரை செய்வதைக்கண்டு "குளிரின் கொடுமை உங்களுக்குத் தெரிகிலேயோ" வெனக்கேட்க, "அல்போன்ஸ் நாதரை அடுத்தவர்களுக்கு எவ்வித பொல்லாப்பும் இலகுவில் எய்புமாறில்லை" யென அவர்கள் மறுமொழி வழங்கினார்கள். இதுவே சுவாமியவர்கள் மேல் அவாது பக்தருக்கு ஏற்பட்டிருக்கும் உரிமையைக் காட்டுவதற்குப் போந்த சாட்சிய மாகிறது. பிறகு பொழுது புலர்ந்ததும், ஸ்ரீமான் ஜே. என். கொறேர அவர்களால் விருதுப்பட்டியிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவர்ண பரிமளப் புஷ்பங்களைக் கொண்டு கல்லறை அலங்கரிக்கப்பட்டது. கல்லறை அலங்கரித்தானதும் திவ்ய பூசை ஆரம்பிக்கப்பெற்றது. பூசையில் அநேகர் தேவநற்கருணைத் திருப்பந்தியில் அமர்ந்தார்கள். பூசை சிறப்பாய் முடிந்த உடனே பூஜா வஸ்திராலங்கிர்தராய் விளங்கிய பொன்னுக் குருக்கள் ஈராணியிலும் எரிகின்ற மெழுகுவர்த்திகளின் மத்தியில் நின்ற ஓர் பொன்சிலுவையை முன் நடாத்தி, கிறிஸ்துவர்கள் சகலரும் சூழ்ந்துவர எல்லோருமாக, அன்றலர்ந்த அழகிய மலர்களாலும் சுடர்கின்ற மெழுகுவர்த்திகளாலும் பிரகாசித்துக்கொண்டிருந்த கல்லறை யிடத்தை அணுக "லீபெராமே" என்னும் தேவ தோத்திரப் பாடல் ஆரம்பித்துக் கல்லறையை கனம் தலான் சுவாமிகள் மந்திரித்தார்கள். அப்புறம் ஸ்ரீமத் பண்டித் M. P. மஸ்கறீஞாஸ் அவர்களால் இயற்றப்பெற்றிருந்த தமிழ் பாடலைத் தூத்துக்குடி சென்ற் பிரான்சீஸ் சாவியேர் மதுவிலக்கு சபை அங்கத்தினர் Mr. ரைமண்ட் பெர்னாந்திஸ் என்பவர் மிகவும் இனிமையாகப் பாடினார். கிறிஸ்துவர் நின்ற அநுதாபநிலைமையையும், விஷயாம்சங்கள் நடந்த கீர்த்தியையும் கவனிக்கும்போது அல்போன்ஸ்நாத சுவாமிகள் அன்றைக்குத்தான் மரித்தது போலிருந்தது. இதன்பின்னால் ஆங்குக்கூடியிருந்த ஆதுலர் அனைவருக்கும் பிச்சை கொடுத்து, கனம் தலான் சுவாமிகள், Mr. குரூஸ் பெர்னாந்திஸ், Mr. கொறேர இவர்கள் ஆத்தும சரீரநன்மைக்காக வேண்டிக் கொண்டார்கள். சமுகம்தந்த கிறிஸ்துவர்களின் பெருந்தொகையையும், அல்போன்ஸ்நாதர் மட்டில் அவர்களுக்கிருக்கும் பற்றுதல் உரிமையையும் பார்க்குந்தோறும் சுவாமியவர்களின் வேண்டுதலால் கிடைத்து வரும் அரும்பெரும் பிரயோஜனங்கள் எத்தனை விஸ்தீரணமென்பது தெள்ளிதில் தெரிகிறது. தேவ தோத்திரப்பாடல்களெல்லாம் கோவிலில் அல்போன்ஸ்நாத சுவாமிகளால் பழக்குவிக்கப்பெற்ற மைந்தர்களே பாடுவாராயினர்.

இத்தனை சிறப்புடன் இந்தவருடயாத்திரை சித்திபெறமுடிவதற்கு முக்கிய காரணமாயிருந்த கனம் தலான் சுவாமிகளுக்கும், Mr. குரூஸ் பெர்னாந்திஸ், Mr. J. N. கொறேர முதலான கனவான்களுக்கும் யாத்திரிகர் பெரிதும் நன்றி பாராட்ட கடப்பாடுடையராகின்றனர்.

தூத்துக்குடி, 16—2—14. யாத்திரிகன்.

### அர்ச். செபஸ்தியார் பஜனை வெல்லிங்டன்.

நீலகிரி வெல்லிங்டன் ஆஸ்பத்திரிச்சேரியின்கண் ஸ்தாபகமாய் நடந்தேறிவரும் வேத சாட்சியான அர்ச். செபஸ்தியார் பஜனையோரால் அவருடைய திருநாள் 1914௵ ஜனவரி௴ 20௳ செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. இத்திருநாளை மற்ற வருஷங்களைவிட இவ்வளவு ஆடம்பரமாய் இவ்வருஷம் கொண்டாடியதற்குக் காரணம், நெடுநாளாய் அவர்களுக்குள் பிரிவினைப்பட்டு சிதறியிருந்த சங்கீதக்கூட்ட சிறுவர்களை நல்ல பங்கு சுவாமியார் வெகு பிரயாசை எடுத்து இந்த வருஷம் ஜனவரி௴ முதல் தேதியோடே ஒரே ஒற்றுமையாயிருக்கச் செய்து விட்டதேயாம். அதனால் இந்த வருஷம் பஜனையோர்களுக்கு வந்த சந்தோஷமும் சமாதானமும் இவ்வளவென்று சொல்ல முடியாது. அப்படி எல்லா பஜனையோரும் பங்கு சுவாமியார் உத்தேசப்படி ஒரு தாயின் பிள்ளைகள்போல் ஒற்றுமையாய் விட்டார்களென்பதற்கு உதாரணமாக 1914௵ ஜனவரி௴ 20௳ அர்ச். செபஸ்தியார் சுரூபம் ஸ்தாபித்திருக்கும் குருசடியை உதவி பங்கு சுவாமியார் மந்திரித்து பஜனை கோஷ்டங்களுடன் நகர்வலம்செய்து, பலவகைப்பட்ட அழகிய புஷ்பச் செடிகளால் அலங்கரித்திருந்த குருசடியில் சுரூபத்தைச் சிறப்புற வமைத்தனர். அன்றிரவு அர்ச். லூர்து மாதாவின் பஜனையோரும் அர்ச். உத்தரியமாதாவின் பஜனைக் கூட்டத்தாரும் அர்ச். ஆரோக்கிய

மாதாவின் பஜனைக் குழாமும் அர்ச். அந்தோனியார் பஜனை சமாஜமும் தங்கள் தங்கள் சங்கீத வாத்தியக் கருவிகளுடன் விஜயஞ்செய்து அர்ச். செபஸ்தியார் பஜனையோர்களுடன் கலந்து இனிய கீதங்களைப்பாடி, வேத சாட்சியான அர்ச். செபஸ்தியாரைப் பார்த்து, இவ்வெல்லிங்டன் பங்கிலுள்ள சகல கிறிஸ்துவ பிரஜைகளையும், பிளேக், வைசூரி, வாந்திபேதி முதலிய கொடிய நோய்களினின்றும் காப்பாற்றி ஆதரிக்கும்படி பஜனையோர் எல்லோருமாக ஏகோபித்து வேண்டிக்கொண்டனர். தமக்கும் மற்றவர்களுக்கும் சுகத்தைக் கொடுக்க வேண்டிக்கொண்ட அவ்வைந்து சபைச் சகோதரர்களுக்கும் அந்நாளை நன்னாளாகச் செய்த அர்ச். செபஸ்தியார் பஜனையோர்களுக்கும், அதற்குக் காரணமாகிய பங்கு சுவாமியார்களுக்கும் நோயற்ற வாழ்வையும், குறையற்ற ஆயுளையும், தங்கள் அலுவல்களில் தவறாத அநுகூலத்தையும் எல்லாம் வல்ல கடவுள் கிருபைகூர்ந்து அளிப்பாராக.

இங்ஙனம்:

28—1—14. கண்டு களித்தோன்,

## பத்திரிகாபிவிருத்தி

### ரூபாய் 100 வருமானமுள்ளவர்கள்

பட்சமுள்ள பத்திரிகாபிமானிகளே!

சென்ற மாதப் பத்திரிகையில் "பத்திரிகாபிவிர்த்தி" என்று தலைப்பிட்ட இரண்டு கடிதங்களையும் ஆசையுடன் வாசித்தேன். அவையிரண்டும் நான் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களையே விவரித்திருக்கின்றன வாகையால், என் மனதுக்கு பின்னும் வெகுவாய் உற்சாகமுண்டானது. நமது கத்தோலிக்குத் தமிழ் கிறிஸ்துவர்களுக்கு அருமையான புத்திமதிகளையூட்டி மகத்தான நன்மைகளைச் செய்துவரும் இத்தகைய பத்திரிகைகளுக்குச் செய்யப்படும் சகாயம் மெத்த உத்தமமானதென்று உள்ளங்கை நெல்லிக்கனியென உணருகிறேன். "கார்னகி" முதலிய கோட்டீசுவரர்களைப்போல் அல்லது அவர்களுக்கு இருப்பதில் அரைக்காற்பங்களவாவது எனக்குக் ஐஸ்வரியமிருந்தால், நமது அன்புள்ள "நல்ல ஆயனை" தினந்தோறுமாவது குறைந்தது வாரந்தோறுமாவது சந்தாதாரர்கள் கண்டுகொள்வதற்கான சகல பொறுப்பையும் நானே வகித்துக்கொள்ளலாமென்ற வீண் மனோராச்சியம் உதிக்கிறது. ஆயினும் "அப்படிக் கில்லாவிடினும் இப்போது உனக்குள்ள சக்திக்கேற்ற அளவாவது நீ உதவி செய்ய வொண்ணாதா" வென யாவரும் என்னை வினவலாம். ஆனால் நானோ பரம ஏழை. இந்த ஓர் ஏழையின் அற்ப உதவி உதவியாய்க் கருதப்படாது. யாதோர் பயனையுந் தராது. அது, ஓர் இராஜன் கடன் காரனாயிருக்கிறானென்று அவனது கடனைத் தீர்க்குமாறு அவன் வீட்டு வெள்ளாட்டி கஞ்சித்தண்ணீரைக் குடித்து காலங்கழித்ததை யொக்கும். பிரபுக்கள், பணக்காரர்களே இதற்கு முன்வரவேண்டும். அல்லது, நமது நண்பர் சேர்ந்தமரத்து கே. வி. பிரான்சிஸ்சவியேர் பிரேரேபித்து முன் மாதிரியை காட்டியது போல், ரூபாய் நூறு வருமான முள்ளவர்கள் ஒவ்வொருவரும், தங்கள் வரும்படியை ஒளிக்காமல், உள்ளபடியே ஒத்துக்கொண்டு ரூபாய் இரண்டாக தங்கள் சந்தாவை உயர்த்தித்தருவார்களானால் பலதுளி பெருவெள்ளமாவதுபோல அது பத்திராதிபருக்கு மெத்த உபகாரமாயிருக்கும். ஆனால், இப்படிச்செய்ய முன் வருபவர்கள் எத்தனைபேர் !!!

சென்னை, 10-2-14. } பரம ஏழை.

### காரக்பூர்

### பரிசுத்த லூர்தாண்டவள் பஜனையின் துவிதவருடோற்சவம்.

கடந்த பெப்ரவரிமீ 11உ காரக்பூரிலிருக்கும் கிறிஸ்துவர்களுக்கு ஓர் பெருத்த கொண்டாட்ட நாளாயிருந்தது. எவ்விதமெனில், அன்று அமோற்பவ லூர்தாண்டவள் தரிசனமான திருநாளும், மேற்குறித்த பஜனையின் துவித வருடோற்சவமு மானதால் இதற்குமுன் அறிக்கை பத்திரத்தில் தெரிவித்தவண்ணம், 3-ம் தேதியிலிருந்து ஷை பஜனைக்கூடத்தின் நவநாள் ஜெபம் துவக்கமாயிற்று. 11உ காலை பஜனைக்கூடத்தின் முகப்பில் விசித்திர அலங்காரமாய் ஜோடித்திருந்த மண்டபத்தில் 7-மணிக்கு சங். L. Lettens S. J. குரு ஸ்வாமியாரவர்கள் திவ்ய பலி பூசை செய்தார்கள். அநேகர் திவ்ய சற்பிரசாதமும் உட்கொண்டார்கள். அன்றுமாலை 4½-மணிக்கு ஜெபம் துவக்கி நவநாளை முடித்தபின், பார்ப்போர் கண்ணைப் பறிக்கும் படியான, சித்திர, விசித்திர, கொத்து, மஸ்லீன்வேலை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்த தேரில், அம



லோற்பவ லூர்தாண்டவளின் திருச் சுருபத்தை ஸ்தாபித்து, பரிசுத்த ஆரோக்கிய மாதாவின் பஜனையோரும், அர்ச். அந்தோனியார் பக்த பால்ய பஜனையோரும், பரிசுத்த லூர்தாண்டவளின் பஜனையோரும் பஜித்துக் கொண்டும், அநேக கிறிஸ்துவர்கள் ஜெபமாலை ஜெபித்து கொண்டும், அழகான உடைகள் அணிந்திருந்த சிறுமிகள் புஷ்பங்களை திருச் சுருபத்தின்மேல் தூவிக்கொண்டும் தங்கள் இனியகுரலால் பாடிக்கொண்டும் வர, வெடி குண்டுகள் டம் டமாரென்று சப்திக்க, ஆகாயவாணம் நட்சத்திரவாணம், மின்னலைப்போல் பளீச்சென்று மின்னி வெளிச்சம் கொடுக்க, பட்சமுள்ள சங். சுவாமியாரவர்கள் யாவரையும் ஒழுங்காக நடத்திக் கொண்டு, சுற்றுப் பிரகாரத்தின் சமீபத்தில் வரும் அந்நிய மதஸ்தர்களை, "தூர்ஜாவ், தூர்ஜாவ் சர்க்காவ்" என்று அவர்களைத் தூரப்படுத்தியும் வர, சுற்றுப்பிரகாரம் மிக்க விமரிசையோடு நடந்து பஜனைக்கூடத்தில் சேர்ந்தது. உடனே சங். சுவாமியாரவர்கள் நேர்த்தியான பிரசங்கஞ் செய்தபின், யாவரும் திருச் சுருபத்தின் பாத முத்தஞ்செய்து தங்கள் இல்லிடங்களுக்கேகினார்கள். பிறகு இரவு 10-மணிக்கு பஜனை ஆரம்பமானது. மூன்று பஜனையோரும் சேர்ந்து, தேவஸ்துதி பாடிய உடனே, பஜனையின். உபாத்தியாயராகிய பஸ்லாரி கனம் ஜே. இலா. பிராஞ்சீஸ்கு அவர்களின் கனிஷ்ட சகோதரனாகிய கனம் ஜே. இலா. செபஸ்தியான் அவர்கள், பஜனையோர் வேண்டுகோளுக் கிசைந்து, கல்கத்தாவிலிருந்து விஜயஞ் செய்து "அமலோற்பவியின் தரிசனம்" என்பதைப்பற்றி உபந்நியாசித்து, இரு தரிசனத்தின் ஒவ்வொரு அடையாளங்களின் குறிப்பை வியாக்கியானஞ்செய்ததுமன்றி, பதிதர்களுக்கு ஒரு வைரக்கோடாலியைப்போல, அவர்கள் கக்கும் ஆபாச ஆட்சேபனைகளை யெல்லாம் வெட்டித் தகர்த்து பின் தேவதாயாரின் அமலோற்பவத்தைப்பற்றி புகழ்ந்து பேசினார். பிறகு பஜனை உபாத்தியாயர் அவர்கள் இயற்றி அச்சிட்ட புதிய பாடல் பஜனையின் சட்டாம்பிள்ளை கனம் Y. K. மார்ட்டின் பிள்ளை யவர்களால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டு, அதன்பின் பஜனை பிள்ளைகள் தங்கள் பஜனையின் மூப்பர்களுக்கு வெகுமதிகள் செய்தார்கள். பஜனையின் உபாத்தியாயரவர்கள் எழுதி அநுப்பிவைத்த உபந்நியாசத்தையும் வாசித்தபின் பஜனையோரால் பாடல்கள் பாட ஆரம்பமாகி வரிசைப் பிரகாரம் பாடி கடைசியாக மங்களம் பாடி இந்த பெருந் திருநாளை சந்தோஷமாக முடித்தார்கள். வயது சென்ற அநேகர் இம்மாதிரியான உற்சவம் இவ்வூரில் எப்போதும் நடந்ததில்லை யென்று சொன்னார்கள். பரிசுத்த லூர்தாண்டவள் பஜனையின் மூப்பர்களும் பிள்ளைகளும், தங்களால் கூடுமான பிரயாசை யெடுத்து இந்த நாளை பத்தியோடு கொண்டாடியது சந்தோஷமே. ஷை பஜனையின் பிரதமகாரியதரிசி கனம் ஐ. சாலமோன் அவர்கள் பஜனையின் விர்த்திக்காகவும் பஜனையின் துவித வருடோற்சவத்தை பிரபல்யமாய் கொண்டாடவும் அதிகமாய் பிரயாசை எடுத்துக் கொண்டார். பஜனையின் ஒவ்வொரு முக்கிய திருநாளைக் கொண்டாட மிக்க சரீர பிரயாசை எடுத்துக்கொள்ளும் Railway Store keeper's Office Clerk ஆகிய கனம் ஜோசெப் மத்தேயு அவர்களுக்கு பஜனையோர் அனைவரும் மிக்க நன்றி பாராட்டக் கடவார்களாக.

இங்ஙனம்

கல்கத்தா 18-2-14. } F. M. ஜோசெப், Short hand Typist.

## பற்பல வர்த்தமானம்.

## MISCELLANEOUS NEWS & NOTES.

**ஐகோர்ட்டு ஜட்ஜி.**—காலஞ் சென்ற ஐகோர்ட்டு ஜட்ஜியாகிய பி. ஆர். சுந்தரமய்யர் ஸ்தானத்துக்கு கனந்தங்கிய டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**புஷ்பதினுசுகள்.**—நமது இந்தியாதேசத்தில், 15,000 தினுசு புஷ்யச் செடிகள் இருக்கின்றன வென்று மதிப்பிடப்படுகிறது.

**30,000 பவுன் விலையுள்ள படம்.**—பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்தை அரசாண்ட 8-வது ஹென்றி அரசனுக்கு முதல் மந்திரியா யிருந்த "தாமஸ் கிராம்வெல்" என்பவருடைய சாயலாய் எழுதப்பட்ட படம், சமீபத்தில் முப்பதினாயிரம் பவுனுக்கு விற்கப்பட்டது. பணத்தின் கொழுமை யென்னே!

**தேன் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள்.**- இவர்களுக்காக இப்போது கூடிப் பேசப்படும் விசாரணைக் கமிட்டியின் நிர்மானம் வெளிப்படுகிறமட்டில், இவர்கள் தங்கள் எதிர்த்தலை விட்டு அமைதியாயிருக்கத் நிர்மானித்திருக்கிறார்கள். இந்தியா கவர்ண்மெண்டாரால் சர். பென்ஜமின் ராபர்ட்சன் அங்கு அனுப்பப்பட்டிருக்கிறார். சட்டத்தை எதிர்த்ததற்காக சிறைப்படுத்தப்பட்ட காந்திமுதல் இந்தியர்களை யெல்லாம் விடுதலை செய்துவிட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்தியர்களுக்கு அநுகூலமாகவே காரியங்கள் தீர்மானிக்கப்படு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இரு செல்வத்துக்கு முள்ள பேதம்.**— கல்விச் செல்வம் பொருட் செல்வம் எனப்படும் இரண்டு செல்வத்துக்கு முண்டாகிய வித்தியாசம்: கல்வி புத்தியைக்கொடுக்கும், செல்வம் புத்தியைக் கெடுக்கும்; கல்விகொடுக்கக் கொடுக்க நிறையும், செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்; கல்வி யாவராலும் உபசரிக்கப்படும், செல்வம் கள்ளரால் அபகரிக்கப்படும்; கல்வி அழியாத ஆஸ்தி, செல்வம் சின்னாளில் நாஸ்தி; கல்விக்கு சென்றவிட மெல்லாஞ் சிறப்பு, செல்வத்துக்கு சொந்த விடத்திலே தான் சிறப்பு, மற்ற விடமெல்லாம் மறுப்பு.

**ஒரு பாம்பின் வயிற்றில் பன்றி**—சமீபத்தில் ஸாங்காங்கில் ஒரு இந்தியர் ஒரு பெரும் பாம்பைச் சுட்டுக் கொன்றார். அது 22 அடி நீள முள்ளதாயும் 14 அங்குலம் சுற்றளவு உள்ளதாயம் இருந்தது. அதன் வயிற்றில் 46 ராத்தல் நிறையுள்ள ஒரு பன்றி யிருந்தது. பன்றியும் பாம்பும் சேர்ந்து மொத்தம் 100 ராத்தல் நிறை யிருந்தனவாம்.

**சென்னையில் கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூல்.**—சென்னையில் பள்ளிக்கூட உபாத்தியாயர்களைத் தயார் செய்யும்படியாக ஒரு டிரெயினிங் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கும்படியாய் வித்தை இலாக்காத் தலைவருக்கு கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இப்போது இப்படிப்பட்ட பள்ளிக்கூடம் சென்னைக் கடுத்த சைதாப்பேட்டையி லிருக்கிறது.

**விலைபெற்ற படுக்கை யறை**—மெஸ்ஸடீவன் மார்ச்சன்ட் என்னும் ஒரு கோடீஸ்வரர் தமது மனைவியாருக்கென்று கட்டிய பள்ளியறையை சிங்காரிக்க 2 லட்சம் பவுன் செலவு செய்திருக்கிறார். அப் பள்ளியறையிலுள்ள கட்டிலின் விலைமாத்திரம் 38,000 பவுனும். அது முற்றும் பொன்னாலும் தந்தத்தாலும் செய்யப்பட்டதாம்.

**வெல்லமும் பாலும்.**—மாட்டுக்குப் போடும் ருசியற்ற தீனியோடு வெல்லம் அல்லது தேன் பாகைக் கலப்பதால் பாலின் அளவு விருத்தியாகுமா என்பதைப் பற்றி ஜெர்மனியில் சமீபத்தில் சில பரீக்ஷைகள் நடத்திப்பார்த்தார்கள். ருசியில்லாத தீனியில் வெல்லம் கலந்து மாடுகளுக்குக் கொடுத்ததில் பாலின் அளவு அரைமடங்கு அதிகமாக ஆயிற்றாம். இது நம்மூரிலும் பரிக்ஷித்துப் பார்க்கப்படத்தக்கது. ஒருபடி கறக்கும் பசுவிற்கு ஒரு அரை வெல்லங் கொடுத்தால் ஒன்றரைப்படி பால் கறக்கும்போலும். இப்படியானால் லாபந் தானே!

**உத்தம ரத்தினங்கள்.**—ஜெர்மன் தென்மேற்கு ஆபிரிக்காவில் சமீபத்தில் ஹெலேவியோடார் என்று மொரு ரத்தினக் கல் கிடைத்தது. இது சூரிய வெளிச்சத்தில் தங்கநிறமாகவும், விளக்கு வெளிச்சத்தில் பச்சைநிறமாகவுங் காணப்படுகிறது. இதை ஜெர்மன் சக்கரவர்த்தி யவர்கள் தமது பெருமாட்டிக்குப் பரிசளித்திருக்கிறார். ருஷியா தேசத்தில் சைபேரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஸாரீ யென்னும் மற்றொரு ரத்தினமு முண்டு. அது பகலிற் பச்சையாகவுங் காணப்படும்.

**அமெரிக்க வைத்தியரின் அற்புத சக்தி.** அமெரிக்காவில் ஓர் டாக்டர் ஓர் பெண்ணின் காது மூலமாய் வாயு ஸஞ்சாரத்தை நிறுத்தி அவள் உயிரைப் போக்கிப் பிணத்தைப் பெட்டியில் போட்டு மூன்று ஆள் ஆழமுள்ள பள்ளத்தில் வைத்து மூடினார். மூன்று தினங்களுக்குப் பிறகு டாக்டர் அப்பிரேதப் பெட்டியை வெளிப்படுத்தி பெண்ணின் காதில் காற்றைப் புகவிட்டு உயிர்பெறச் செய்தார். படுத்தவள் போல் எழுந்தாள் பிணப்பெண். இவ்விஷயத்தை அங்குள்ளவர்கள் கண்டு ஆச்சர்யத்துடன் பிரமித்தார்கள்.

**“ஜெபத்தோனி”**—ஒருவர் வீடு முழுவதும் அதிரத்தக்கதாக அவசியமற்ற பிரகாரம் சப்தம் போட்டுச் செபம் செய்கிறதைக் கண்ட ஒரு பெண் தன் தாயைப் பார்த்து, “அம்மா, இந்தப் பெரியவர் ஆண்டவரை அடுத்திருக்கிறார் என்று நான் நினைக்க இடமில்லை. அவர் சத்தம்பண்ணுகிறதைப் பார்த்தால், அவர் கடவுளுக்கு வெகு தூரத்தில் இருப்பதாகக் காணுகிறது” என்றாள். எங்கும் நிறைந்துள்ள அசரீரியாகிய கடவுளுக்கு தனிச் செபஞ் செய்கையில் சப்தமிட்டு கூவிச் செபிப்பதேனோ?

**ஓர் மனந்திரும்பின கள்வன்.**—இங்கிலாந்தில் கள்ளர் திருடர் முதலிய பஞ்சமா பாதகர்களைச் சேர்த்து அவர்களுக்கு நற்புத்தி போதகஞ்செய்து அவர்களை நல்வழிக்குத் திருப்புந் தொழிலை மேற்கொண்ட ஒரு சங்கம் நல்ல வேலைசெய்து வருகிறது. இச்சங்கம் மனந்திருப்பின கள்வரில் எட்வர்டு அரசரின் மகுடாபிஷேகத் தன்று 32 கைக்கடியாரங்களைத் திருடினவன் ஒருவனும். அவன் கடைசியில் பிடிபட்டு விசாரணை செய்யப்பட்ட போது “நமது அரசருக்கு பிரதிதினமும் பட்டாபிஷேகஞ்செய்யப்படவேண்டுமென்றுகோருகிறேன்” என்றானும். என்னத்துக்காக? பிரதிதினமும் 32 கடியாரங்களைத் திருடலாமென்றே! இவன் இப்போது ஷை சங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டு, உத்தமனாய் ஜீவனஞ்செய்து வருகிறானும்.



**ஐரோப்பிய துரைசானிகளும் இந்திய ஸ்திரீகளும்.**—நமது இந்திய ஸ்திரீகள் ஐரோப்பியர்களைக் கண்டால் ஒருவித பயமும் வெறுப்பும் துவேஷமுங் கொண்டிருந்தார்கள் வெகுநாளாய். இப்போது மேல்நாட்டுக் கல்வியும் நாகரீகமும் விர்த்தியாக ஷை பயம், துவேஷம் முதலிய குணங்கள் எடுபட்டுப்போயின; தைரியமும் அந்நியோந்நிய ஸ்நேகமும் ஏற்பட்டுவிட்டன. சென்றமீ 23-ந்தேதி சென்னைக் கவர்னர் மாளிகையில் மாட்சிமை தங்கிய லேடி பென்ட்லன்ட் பெருமாட்டியார் ஸ்திரீகளுக்கென்று ஒரு விசேஷக் கொண்டாட்டம் வைத்து அதற்கு ஐரோப்பிய ஸ்திரீகளையும் இந்திய ஸ்திரீகளையும் அழைத்தார்கள். சென்னையிலுள்ள முக்கிய உத்தியோகஸ்தர்கள், கனவான்கள் முதலியோர்களுடைய ஸ்திரீக ளெல்லோரும் வந்திருந்தார்கள். ஐரோப்பிய ஸ்திரீகளுடன் இந்திய சீமாட்டிகள் கலந்துறவாடிக் களித்தனர். இவர்களிற் சிலர் வீணை வாசித்தும், சிலர் சங்கீதம் பாடியும் சபையைக் களிப்பித்தனர். இப் பெருங் கூட்டத்தில் கத்தோலிக்கு இந்திய ஸ்திரீகள் ஒருவருங் காணப்படவில்லை. இவர்களுக்கு எப்போது ஈடேற்ற காலம் வருமோ!

**ஸ்திரீ சுதந்தர வாதிகள்.**—இவர்கள் பாடு ஒழிந்ததாகக் காணப்படவில்லை. சமீபத்தில் ஓர் ஸ்திரி, ஸ்திரிசுதந்தரத்தைப் பற்றி ஓர் வீட்டின் பலகணி வழியாய் பிரசங்கஞ்செய்து கொண்டிருந்து கடைசியில் “என்னைப் போலீசா ரடிக்க முடியுமா? ஒருபோதும் முடியாது இதோ வெளியே வருகிறேன். என்னைப் பிடிக்கட்டும் பார்க்கலாம்” என்று வாதம் பேசினாள். உடனே அவ்வீட்டிலிருந்து ஒரு ஸ்திரி வெளிப்பட போலீசார் அவள்மீது விழுந்து அவளைப்பிடிக்க எத்தனிக்கையில், இவர்களுக்கும் அவர்களுக்கும் பெருங் கலகம் உண்டானது. கலகத்தில் ஒருத்தியைப்பிடித்து ஸ்திரி சுதந்தரவாதிகளுக்குத் தலைவியாகிய மிஸ்ஸஸ் பாங்கெர்ஸ்ட் என்பவளைப் பிடித்து விட்டோ மென்று போலீசார் வீரம் பேசினார்கள். கடைசியில் அவள் பாங்கெர்ஸ்ட்டைப் போல உடுத்துக்கொண்டிருந்தவளே யன்றி உண்மையில் பாங்கெர்ஸ்ட் அவளல்லவாம். லிவர்பூல் பட்டணத்தில்அர்ச். அன்னம்மாள் கோவிலுக்கு தீமூட்ட அதன் கீழ்ப்பாகம் முழுவதும் சேதமாய்ப்போனது. ஆர்கன் என்னும் வாத்தியப்பெட்டி நாசமாக்கப்பட்டது. இவர்களால் இங்கிலாந்தில் சென்ற வருடத்தில் மாத்திரம் நேர்ந்த நஷ்டம் 5 லட்சம் பவுனுக்கதிகமாம்.

**மரியாயின் சங்கம்**—ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி சென்ற மீ 22-ம் உ அர்ச். மரியாயின் சங்கத்துக்கு ஆயத்தக் கூட்டம் திருச்சிறாப்பள்ளியில் செம்மையாய் நிறை வேறியது. கும்பகோணம், மங்களூர், திருச்சிறாப்பள்ளிஆக இம்மூன்று விசாரணை மேற்றிராணிமார்களும், கொழும்பு, திருச்சூர், சங்கனச்சேரி, எர்ணாகுளம், மைசூர், கோயம்புத்தூர், விசாகப்பட்டணம், பம்பாய், மயிலாப்பூர், புதுச்சேரி முதலிய மேற்றிராணி மார்களின்

பிரதிநிதிகளும், கொழும்பு, தூத்துக்குடி, சென்னை முதலிய பல விடங்களிலிருந்து விசுவாசிகளின் பெருங் கூட்டமும் விஜயஞ் செய்திருந்தார்கள். மரியாயின் சங்கம் வருகிற டிசம்பர்மீ 28, 29, 30-ம் தேதிகளில் கூட்டப்படுமென்றும் அது மரியாயின் தாசர்களால் மாத்திரமல்லாமல், மற்றெல்லா கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாலும் நடத்தப்பட வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மற்றபடி இந்த மகா சங்கம் ஜெயமுடன் நடைபெற வேண்டியதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இனி இது இனிது நிறைவேறுதற்கு இன்றியமையாதனவாகிய, கிறிஸ்துவர்களுடைய பக்தியுள்ள வேண்டுதலும், பண உதவியும் வேண்டும். இவைகளை தங்கள் சக்திக்குத் தக்கபடி உதவும்படி நமது சந்தாதாரநேயர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பரோடா தேசத்து தீவான்.**—வடமேற்கு இந்தியாவில், சுதேச ராஜாக்களுக்குள் சிறந்து விளங்கா நின்ற பரோடா தேசத்துக்கு திவானாக, சர். வி. பி. மாதவராவ் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த உந்நத பதவிக்கு நியமிக்கப்பட்ட தென்னிந்திய கனவான்களில் இவர் மூன்றாவதாவர். முதலிலிருவர், சர். டி. மாதவராவும், திவான்பஹதூர் எஸ் சீனிவாசராகவ ஐய்யங்காரும் ஆவார்.

**தண்டையார் பேட்டை ஸ்திரீகள் ஆஸ்பத்திரி.**--இராயபுரத்தில் சி. எம். எஸ். மிஷனைச் சேர்ந்த இரண்டு ஐரோப்பிய ஸ்திரீ டாக்டர்கள், ஸ்திரீகளுக்கு மாத்திரம் ஓர் சிறு ஆஸ்பத்திரி தங்கள் சொந்த இல்லத்திலேவைத்து, அநேகருக்கு சித்திபெற வைத்தியஞ் செய்துவரும் விஷயம் யாவருக்குந் தெரிந்ததே. இவர்களுடைய சிகிச்சையை நாடி வருபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவர தற்காலத்திய இடம் போதாமையால், தண்டையார் பேட்டையில் தக்க ஓர் இடம் வாங்கி அதில் பெரியதோர் வசதியான ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். அது சென்றமாதம் சென்னைக் கவர்னர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**அமிர்த பஜார் பத்திரிகையின் அறியாமை.**—சமீபத்தில் வெளிவந்த இப்பத்திரிகை ஒன்றில், நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதர் அக்காலத்தில் இந்தியாவி லிருந்த மகரிஷிகளிட மிருந்து உபதேசங் கேட்டாரென்றும், அதனால் தான் அவருக்கு அவ்வளவு ஞானம் உதித்ததென்றும், அதன்பின்தான் அவர் ஜனங்களுக்கு ஹிதோபதேசஞ் செய்யப் புறப்பட்டாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதென்ன புதுமை!! உபதேசமடைந்த சிஷ்யன் ஜெகத்பிரகாசமாய் விளங்க, உபதேசஞ் செய்த குரு எங்கோடி ஒளிந்தனர்? அவர் யார்? அவரைப்பற்றி இது வரையில் கேள்விப்பட்டதார்? இக்கேள்விகளுக்கு அப்பத்திராதிபர் விடையளிக்கட்டும்!

**சங்கீத கியானமுள்ள புஷ்பங்கள்.**—ஜெர்மனி தேசத்தைச்சேர்ந்த பவேரியாவின் தலை நகரமான மியூனிச்சி லிருக்கும் புரொபசர் ஹான்ஸ்டிஜன் என்பவர், சில ஸ்வரங்களைக் கேட்டால் வாடுகிற சுபாவமும், சில ஸ்வரங்களைக் கேட்டால் மலருகிற சுபாவமுமுள்ள புஷ்பங்கள் இருக்கிறதாகச் சொல்லுகிறார்.

**விலைகளின் ஏற்றம்.**—தற்காலத்தில் ஆகார சாமான்கள் உள்பட எல்லா சாமான்களுடைய விலையும் ஏறியிருப்பதற்குள்ள காரணங்களைப்பற்றி விசாரணை செய்யும்பொருட்டு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் விசாரணைசெய்து கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறது. ஆனால் கவர்ன்மெண்டார் அதன்பேரில் என்ன உத்தரவு செய்வார்கள் என்று வைசிராய் சட்ட நிரூபண சபையில் கேட்கப்பட்டபோது இப்போது அதைப்பற்றி ஒன்றும்சொல்ல முடியாதென்று பதில் அளிக்கப்பட்டது.

**மேய்ச்சல் நிலங்கள்.**—காட்டிலாக்கா கமிஷன் செய்த சிபார்சுபடி கால் நடை மேய்ச்சல் ஸ்தலங்களை பஞ்சாயத்தார்கள் மானேஜ்மெண்டு செய்து வரும்படியாக ரெவினியூ போர்டு மெம்பர்களுள் ஒருவராகிய மிஸ்டர் ஆர். சி. சி. கார் அவர்கள் கெங்கற்பட்டு, கெல்லூர், வடவேலூர், தென்சேலம் மத்திய கோயம்பத்தூர், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, கிருஷ்ணா ஆகிய இந்த ஜில்லாக்களில் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறார்கள். கால்நடைகளுக்கு



மேய்ச்சல் ஸ்தலங்களில்லை என்று முறையிட்டுக்கொண்டு வந்த மிராசுதாரர்களுடைய குறை நீங்கிப்போகுமென்று நம்புகின்றோம்.

**நிறை அளவு கமிட்டி.**—இந்தியா முழுவதிலும் ஒரே அளவும் ஒரே நிறையும் பிரயோகப் படுத்தும்படியான ஒரு அளவும் ஒரு நிறையும் கண்டுபிடிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஒருகமிட்டியார் இந்த பிரஸ்னையைப் பரிசீலனை செய்ய சென்னைக்குவந்து கொச்சி, கரூர், திருச்சி, தூத்துக்குடி, விருதுப்பட்டி, மதுரை, நாகப்பட்டணம், பன்ருட்டி முதலிய வர்த்தக ஸ்தலங்களுக்குப் போயிருக்கிறார்கள். பிரபலவியாபாரிகளுக்கு அவசியமாய்த் தோன்றுகிற எதையும் சொல்லிக்கொள்ளலாமென்று விளம்பரம் பயிரங்கப்படுத்தி இருக்கிறார்கள்.

**இந்து நாஷனல் பண்டும் கைத்தொழிற் கல்வியும்.**— வருஷாவருஷம் தீபாவளி பண்டிகை யன்று இந்துக்களால் வீடுவீடாய் செய்யப்பட்டுவரும் தண்டல் பணத்தைக்கொண்டு தேச விருத்திக்கான கைத்தொழிற் கல்விக்கு உதவி செய்யப்படுவதைக் கண்டு சந்தோஷ மடைகிறோம். சென்ற வருஷங்களிற்போல இவ் வருஷமும் பின்வரும் மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டன:—

| | |
|---|---|
| J. M. நடராஜா,<br>D. R. கிருஷ்ணராவ்,<br>M. V. ஜெகந்நாதம்,<br>M. V. சுந்தரேச ஐயர், | பம்பாய் விக்டோரியா ஜூபிலி கைத்தொழிற் கல்விசாலையில் படிக்க நபருக்கு ரூபா 180 |

கண்ணாடி செய்யும் வேலையில் பயிற்சியடைவதற்கு ஜப்பானுக்கு செல்லும் பிரயாண செலவுக்காக ரூபா 100.

D. வெங்கடராவ் நாயுடு, கிளாஸ்கோவுக்குப் போய் உயர்தர எஞ்சினீர் வேலை கற்கும் விஷயமாக ரூபா 720.

ஆந்திர ஜடீய குலசாலு—சிறுவர்களுக்குக் கைத்தொழில் பயிற்றுவிக்க ரூபா 360

இத்தகைய நன்மைகளை நம்மவர்களின் மாணாக்கர்களுக்குச் செய்ய எவரையும் காணோமே! கத்தோலிக்கு இந்தியர் சங்கமுதலிய சங்கங்கள் என்ன செய்கின்றன?

**கல்கத்தாவில் ஓர் படுகொலை.**—வங்காளத்தில் சென்ற சில காலமாக அந்தரங்க அராஜக கூட்டத்தாரால் நடந்த கொலைகள் அனந்தம். இப்போது சமீபத்தில் கல்கத்தாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர், பாபு றுருயேந்திரநாத்கோஸ் என்பவரை நிர்மல காந்தராய் என்னுமோர் பாதகன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். கொலைப்பாதகன் தன் கையில் துப்பாக்கி வைத்துக்கொண்டு, பிடிக்க வருகிறவர்களைச் சுடுவதாக பயமுறுத்தின போதிலும், இருவர் அவனைத் தைரியமாய்த் தொடர்ந்து ஓடிப் பிடித்து விட்டார்கள். இவன் போலீசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில், இன்னும் பல வங்காளி வாலிபர்கள் இவ்வித அராஜக சூழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொன்னதன்மேல் வேறு சில வாலிபர்களையும் கைது செய்திருக்கிறார்கள். இந்த அராஜகச் சூழ்ச்சிச் சபைகள் எப்போது தொலைந்து சமாதானமும் திருப்தியும் ஏற்படுமோ?

**இருப்புப்பாதையில் ஹிந்துக்களுக்கு தனி வண்டி.**—"உயர்தர ஹிந்துக்களுக்கும் ஹிந்து யாத்திரிகளுக்கும் அவர்கள் பிரயாணஞ்செய்யும் ஒவ்வொரு வண்டித் தொடரிலும், அவர்களுக்கென்றே தனியாக ஒன்று அல்லது இரண்டு மூன்றாவது வகுப்பு வண்டிகள் பிரத்தியேகமாய் வைத்து வைக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் இப்பொழுது ஜனநெருக்கமுள்ள ஒரு வண்டியில் ஜாதிவித்தியாசமில்லாமல், ஹிந்துக்கள் மற்றவர்களுடன் சேர்ந்து உட்காரும்படி நேரிடுகிறபடியால் அது அவர்களுடைய மதாசாரக் கொள்கைகளுக்கு நேர் விரோதமாயிருப்பதுடன், காலாகாலத்தில் நித்ய கர்மானுஷ்டானங்களை இழந்தும் போகிறார்கள்" என்று இத்தியாதி அசௌக்கியங்களை எடுத்துக்காட்டி பலபேர்கள் கையொப்பமிட்டு ஒரு மெமோரியல் வைஸ்ராயுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். ஹிந்துக்களுக்கென்று தனியாக ஒன்றிரண்டு வண்டிகளை இப்பொழுது இருப்புப் பாதையில் ஐரோப்பியர்களுக்கும் யுரேஷியர்களுக்கும் தனியாக கம்பார்ட்டுமெண்டுகள் ஏற்படுத்தி யிருக்கிறதுபோல் ஏற்படுத்தவேண்டும் என்ற விஷயத்தை மெமோரி

யலில் கண்டிருக்கிருர்கள். இப்படியாளுல் மகம்மதியர்களும் மற்ற மதத்தினர்களும் தத்தமக்கு பிரத்தியேகமான வண்டிகள் வேண்டுமென்று கேட்பதற்கு இடமாகும். இந்துக்களுடைய ஷை வேண்டுகோளுக்கு இசைவது யுக்தமானதல்லவென்று கருது கிரும்.

**சீதனமும் கலியாணப் பெண்களும்** - ஓர் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்போது நகை நட்டுகளையோ பணங் காசுகளையோ, சாமான் சட்டுகளையோ, அதற்கு ஸ்ரீதனமாகக் கொடுத்தனுப்புவது இந்தியாவில் சாதாரண வழக்கமாயிருந்து கொண்டிருக்கிறது. இது சாதாரணமாய் பிரபுக்களுக்கும் தனவந்தர்களுக்கும் அடுத்த வழக்கமானுலும் "புலியைப்பார்த்து பூனை சூடிக்கொண்டது" போல இவர்களைப் பார்த்து ஏழைகளும் அவ்வாறே தங்கள் பெண்களுக்கு பெருந்தொகைகளை சீதனமாகக் கொடுக்க எற்படுகிருர்கள். இம்மாதிரியான வழக்கங்களுக்கு ஈடுபட்டுக் கெட்டு நசிந்து போன குடும்பங்கள் பல. சமீபத்தில் சுசலதாதேவி என்னும் பெயருடைய வங்காளமாது ஒருத்தி, 14 வயதுள்ளவள் தன் கலியாணத்துக்கு சீதனங் கொடுக்க தன் தகப்பனுர் பட்ட சிரமத்தைச் சகிக்கமாட்டாமல் தனக்குத் தானே தீமூட்டிக்கொண்டு அக்கினிக்கு இரையாளுள். தன் உயிரைப் போக்கிக்கொள்ள தீர்மானித்ததற்கு காரணத்தைச் சொல்லி (அதாவது தன் கலியாணத்தி னிமித்தம் தன் தகப்பனுர் கடன்படுவதுதனக்கு இஷ்டமில்லையென்றும் அப்படி குடும்பம் கடன்படுவதற்கு தானே காரணமாயிருத்தலால் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதலே தகுதியென்றுஞ் சொல்லி) தன் தகப்பனுருக்கு ஒரு கடிதமெழுதி வைத்துவிட்டு தன்னைக்கொளுத்திக் கொண்டாள். இந்த சங்கதி வங்காளமுழுதும் ஓர்பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணி யிருக்கிறது. அங்கங்கே ஜனங்கள் விசேஷமாய் கலாசாலையில் கல்விகற்கும் இளைஞர்கள் கூட்டங்கள் கூடி "நாங்கள் கலியாணம் பண்ணிக் கொள்ளும்போது பெண்ணிற்காக சீதனம் யாதொன்றும் வாங்கமாட்டோ மென்று ஒவ்வொருத்தரும் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார்கள். ஷை பெண்ணானவள் தற்கொலை புரிந்துகொண்டது பாவமான செய்கையேயாயினும், "இன்மையினுல் சிலவேளைகளில் நன்மையும் விளைகின்றது" என்ற ஓர் ஆங்கிலப் பழமொழிக்கொப்ப, இந்த தற்கொலையினுல், நெடுநாள் வழக்கமாகிய சீதனம் கொடுப்பது தொலைந்து போகும் போலும்.

---

## "பாண்டிய வம்ச பாரம் பரை."

இப்து, எந்நாட்டிலுஞ் சிறந்த தென்னுட்டிலுயர்ந்த நன்னுடென யாவராலும் புகழப்பெற்ற பாண்டி வளநாட்டின் கண்: நமது சத்ய கத்தோலிக்கு திருச்சபையிற் றிலதம்போற் றுலங்கும் பரதகுல பாண்டியர்களது சரித்திரம்.

பராபரன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதன்: நிகழ்காலம் வரையுமுள்ள சரித்திரத்தை வெகுகால உழைப்போடொருங்கே திரட்டி, கரதலா கமலம்போலும், வெள்ளிடை மலை போலும் தெளிவாய் யாவர்க்கும் விளங்கும் பொருட்டு, தேனினுமினிய செந்தமிழ் வசன நடையில் வரையப்பெற்று, ரீமொன்றுக்கு இருபது பவுண் நிறைகொண்ட உயர்ந்த கிளேஸ் பேப்பரில், பாரமொன்றுக்கு எட்டுபேஜ்கொண்ட பெரிய லைவில் முத்தைப்போன்ற தெளிவான அச்சரங்களாற் பதிப்பிக்கப்பெற்று விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றது. இதன் விலை ரூபா 1–8–0. தபால் சார்ஜ பிரத்தியேகம். வேண்டுவோர் நமது நல்லாயன் ஆபீஸில் பெற்றுக்கொள்ளலாம்.

---

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ருபாய் முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ருபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ருபாயாகும். அரை ருபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.**

---

### நன்மரண அறிக்கைகள்.

---



#### ஏரல்.

எங்கள் மாமனுர் வ. பூபாலருயர் அவர்களின் அருமை புத்திரி சூசை மத்தேசியா பூபாலருய அம்மாள் நாளது வருஷம் பெப்ரவரிமீ 3-ந்திகதி செவ்வாய்க்கிழமை தனது 4-ம்பிராயத்தில் பெற்ருேர், சகோதரி, மற்றும் சுற்றத்தார் யாவரையும் பரிதபிக்கவிட்டு கர்த்தருள் நித்திரையடைந்தனள். இதைக் கண்ணுறும் சகோதரர்களே! சிறுமியை இழந்து பரிதபிக்கும் பெற்ருேர், சகோதரி, மற்றும் சுற்றத்தாருக்கும் ஆறுதல் கிடைக்க வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றனர்.

S. S. Poobalarayen Bros.

14. Febrcary. 1914. Panadura.

---

#### அம்மினி மலை தோட்டம்.

சிலோன், விளாத்தங்கொடை அம்மினி மலை தோட்டத்தில் வசிக்கும் கனம். எஸ். ஜான் பொன்னுசாமி கண்டக்டர் அவர்களுடைய புதல்வியும் எனது பௌத்திரியுமாகிய ரூத் மேரி வுலோரன்ஸ் அவர்களுக்கு உண்டாயிருந்த நெடுநாள் பிணியின் நிமித்தம் வேண்டிய சிகிச்சை செய்தும் பயன்படாமல், 1914-ம் வருஷம் ஜனவரிமாதம் 15-தேதி காலை 12-10-க்கு தமது 14-வது வயதில் தமது தந்தை, தாயார், சகோதரர், சகோதிரி, மற்றும் இனஜனத்தனைவர்களையும் இக்கண்ணீர் கணவாயில் கண்கலங்கி பரிதபிக்க விட்டுவிட்டு பரலோக பிராப்தியடைந்தனள். ஷையாருடைய சடலம் அன்று மாலை 4 ½-மணிக்கு அவர்களுடைய குடும்பத்தாரும் சனம் வனிகசேகரவும், டாக்டர் பொராவும், கருப்பன்பேட்டை கண்காணியும், அவருடைய 400 கூலியாட்களும், மற்றும் சிங்களாட்களும் புடைசூழ ஜெப ஆராதனைகளுடனும் வெகு கெம்பீரத்துடனும் எடுத் தேகப்பட்டு ஷை தோட்டத்தில் திருஅடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கனதனவான்களும் மித்திரர்கள் யாவரும் இவருடைய ஆத்தும இளைப்பாறுதலுக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக் கொள்ளும்படி தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

பௌத்திரியை இழந்து பரிதபிக்கும்

நிர்ப்பாக்கியன்,

கே. டேவிட்.

---

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 1,600. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்ப தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். எனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந்தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பக்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்கு பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

| | |
|---|---|
| புதுப் பேட்டை, சென்னை. | உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்; |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 2077 | 7 | 6 |
| Mr. அனந்தநாதபிள்ளை, | 1 | 0 | 0 |
| ,, S. P. சிபஸ்தியான், சிலோன் | 2 | 0 | 0 |
| ,, Rev. Paul Yeruva, Kamptee | 2 | 0 | 0 |
| ,, அந்தோனி, | 2 | 0 | 0 |
| ,, ஜான் பட்லர், பரேய்லி | 1 | 0 | 0 |
| ,, R. ஜான்மேரி, உடையார்; புதுச். | 0 | 12 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 2086 | 3 | 6 |

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மம்.

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நாம் உதார குணமுள்ள சகல நண்பர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—

எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின் திருவாலயத்திற்கு பிரதி வருஷமும் பாஸ்கு பண்டிகையின்போது திருயாத்திரைக்காரர் அவள் திருவடியைப் போற்றி, அவள் உதவியைக் கேட்கத் திரளாய் வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி வருகிறவர்களுக்குத் தகுந்த விடுதிகளும், சாவடி சத்திரங்களுமில்லாமையால் கடும் வெயிலின் வெப்பத்தினால் அவர்கள் தவித் தலைவதைக் கண்டும், பொருளுதவி யில்லாமையாய் நாம் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய நாளது வரையில் கூடாமற் போனதைப்பற்றி அதிக வியாகுலப்படுகிறோம். ஆயினும், அர்ச். செல்வநாயகி அம்மாளை நம்பி இப்போது இந்திய கிறிஸ்துவர்களுக்கு ஒரு சாவடியும், வெள்ளைக்காரர்களுக்கு மற்றொரு சாவடியும் கட்ட ஏற்பாடு செய்வதோடு, கோவிலை மராமத்து செய்யவும் துணிந்து, ஏறக்குறைய ரூ. 2 500 பெறும்படியான கட்டடங்களைத் துவக்கிவிட்டோம். தரும சிந்தையுள்ள மரியாயின் தாசர் உடனே நமக்கு கைகொடுத்து இந்த மேன்மையான வேலைகளைச் சீராய் முடிவுசெய்ய உதவிபுரிய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் கண்ணுறும் சகல கன தனவான்களும் சகல கிறிஸ்துவர்களும் தம்தம்மாலியன்றமட்டும் இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்வார்களென்று நம்பிக்கையாயிருக்கிறோம். நண்பர்களுடைய தர்மம் எவ்வளவு சிறியதேனும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். தேவதாயானவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாளென்பது திண்ணம்.

எடப்பாடி, கத்தோலிக்குக்கோவில் } ஜே. ஞானதிக்கம், விசாரணை குரு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 532 | 12 | 0 |
| Mr. F. A. Paul, ஏர்க்காடு | 5 | 4 | 0 |
| ,, தேவநாயகம், | 0 | 8 | 0 |
| ,, இன்னாசிமுத்து, | 0 | 4 | 0 |
| ,, சப்பிரமணி, | 0 | 8 | 0 |
| ,, R. Marshall, | 0 | 8 | 0 |
| ,, A. Ryall, | 0 | 8 | 0 |
| ,, Santos, | 1 | 0 | 0 |
| ,, Chas. Arctor, | 1 | 0 | 0 |
| ,, M. I. Issac, | 0 | 8 | 0 |
| ,, Pan Koube, | 1 | 0 | 0 |
| Rv. Marianader, Podanur | 10 | 0 | 0 |
| A servant of Mary, | 2 | 0 | 0 |
| A servant of Mary, | 5 | 0 | 0 |
| Rev. Angnisamy, D.D. (Pondicherry, | 5 | 0 | 0 |
| Rev. Thambousamy Nather, (Irundai, | 10 | 0 | 0 |
| Rev. Lazare, Pondicherry | 20 | 0 | 0 |
| | 595 | 12 | 0 |

## "நல்லாயன்" அச்சுயந்திர ஆபீசுக்காக நன்கொடை.

"நல்லாயன்" அச்சுயந்திர சாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற ஜனவரி மாதத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டுவரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்கு கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி, நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

நல்லாயன் அபிவிர்த்திக்காக Mr. F. C. தம்புசாமி பிள்ளை, Palaghat, Coromandel; Mr A. பால்குரோஸ் நாயுடு, Champion Reef, Kolar; Mr.C. V. தாமஸ்பிள்ளை, Mount Road, Madras; ஆகிய இவர்கள் மூவரும் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்காக நாம் அவர்களுக்கு மிக்க நன்றியறிந்திருக்கிறோம். நல்லாயனுக்காக இந்த பரோபகார புருஷர்களிடம் யாதேனும் கொடுக்க ஆட்சேபனை யில்லை. இவர்கள் மூலமாயும், நமக்கு நேராயும் சேருந் தொகைகள் அப்போதைக் கப்போது இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 215 | 2 | 0 |
| Mr. பிரான்சிஸ் ஜோசப், கோக்டேக் | 0 | 8 | 0 |
| ,, அந்தோனிமுத்து, எரையூர் | 0 | 4 | 0 |
| C. ஆரோக்கியம், ஏற்காடு, | 1 | 0 | 0 |
| சி. ஜெ. ஆரோக்கியசாமி, செக்கர். | 0 | 8 | 0 |
| K. K. அந்தோனி, பல்லாரி | 0 | 8 | 0 |
| ஸ்ரீமதி. மரியமிக்கேலம்மாள், சத்தாசன்பட்டி | 2 | 0 | 0 |
| ,, A. P. L. சின்னசாமிபிள்ளை, சுணங்கல்லூர் | 0 | 11 | 0 |
| *Total Rs.* | 220 | 9 | 0 |




15 APR 1914 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } ஏப்ரல் 1914. { இலக்கம். 4.

## GOOD FRIDAY.
## பெரிய வெள்ளிக்கிழமை.

அரசராகமம் நான்காவது புத்தகத்தின் மூன்றாவது அதிகாரத்திலே, எவரையுந் திடுக்கிடச் செய்யும் நிஷ்டூரச் செய்கையொன்று சொல்லப் பட்டிருக்கிறது. அது யாதெனில்: யூதா, இசராயேல், ஏதோம் ஆகிய இந்த மூன்றுதேசத்து அரசர்களும் ஒன்றுபடச் சேர்ந்து மோவாப் தேசத்திய அரசனுக்கு விரோதமாய்ப் பல த்த சேனைகளைத் திரட்டிக்கொண்டு அவன் பட்டணத்தின்பேரில் படையெடுத்துப் போய் அதை முற்றுகையிட்டுத் தாக்கினார்கள். அவனதை மீட்கத் தன்னாலான பிரயாசையெல்லாம் பட்டும் முடியாமற் போயிற்று. கடைசியில் இவனுடைய அரணை கோட்டைக் கொத்தளங்களைச் சத்துருக்கள் இடித்துத் தகர்த்து, இவனையுஞ் சிறைப்படுத்த எத்தனித்திருக்கையில், தன்னை அவர்கள் கையில் ஒப்படைக்க அவன் மனங்கொள்ளாமல் திடீரென ஒரு துணிகரச் செய்கையைச் செய்யத் தீர்மானித்தான். அதேதென்றால்: தன்னுடைய அரண்மனை சிகரத்தின்மேலேறி அதைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்த சத்துருக்களெல்லோரும் பார்க்கும்படி தன் அன்பார்ந்த பட்டத்துக் குமாரனை ஒரு கையால் செங்குத்தாய்த் தூக்கிப் பிடித்துக்கொண்டு மறுகையால் தன் இடையி லிருந்த வாளை யுருவி கோபாவேசத்துடன் தான் பெற்ற பிள்ளையின் மேல் சற்றும் இரக்கங் காட்டாமல் அவனுடைய இருதயத்தை யூடுருவக் குத்திப் பிளந்து, கண்ட துண்டமாய் நறுக்கி அவனைக் கொலைசெய்தான்: குலை நடுங்கச்செய்யும் இந்தக் குரூர கொலைப்பாதகத்தைக் கண்ட சத்துருக்கள் பயந்து நடுங்கி தன் சொந்த பிள்ளையையே இவ்வளவு நிஷ்டூரமாய்க் கொலை புரிந்த இந்தச் சண்டாளன் வேறென்னதான் செய்ய மாட்டானென்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டு தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பிப்போக எல்லோரும் புறப்பட்டு ஓட்டம் பிடித்தார்கள் என்பதாம்.

இந்த மோவாப் தேசத்து அரசன் புரிந்த நிஷ்டூரக் கொலையைவிட அதிக நிஷ்டூரமான கொலையை பிதாவாகிய சர்வேசுரன் யூதர்களால் பெரிய வெள்ளிக்கிழமையன்று புரிவித்தார். மேற்சொன்ன அரசன் தன்னை யெப்பக்கத்திலும் வளைந்துகொண்டிருந்த சத்துருக்களை எப்படி ஜெயிப்பதென்று தெரியாமல், அவநம்பிக்கைக்கும்

அதைரியத்துக்கும் இடங்கொடுத்து அக்கொலையைச் செய்தானேயன்றி, யுக்தியோசனையோடு செய்தவனல்ல. ஆனால் பிதாவாகிய சர்வேசுரனோ தம்முடைய அளவறுக்கப்படாத ஞானத்துக்கும் விமரிசைக்கும் கிஞ்சித்தும் பங்கம் நேராமல், தம்முடைய நீதியின் மகத்துவமும், மனுக்குலத்தின்மட்டில் தமக்குள்ள அணைகடந்த நேசமும் இரக்கமும் வெள்ளிடைமலை போல் விளங்கும் பொருட்டே அதைச் செய்வித்தார். அதேதெனில், மனுக்குலம் கட்டிக்கொள்ளும் பாவமே அவருடைய சத்துரு. பாவம் ஒன்றே அவரை எதிர்த்து அவரது மகத்துவத்தின் பெருமையைப் பங்கப்படுத்துவது. ஆகவே, இச்சத்துருவை ஓர் சமையத்தில் ஜலப் பிரளயத்தினாலும், மற்றொரு சமையத்தில் அக்கினி மழையினாலும், அப்போதைக்கப்போது பஞ்சம், படை, கொள்ளை நோய், பெருவாரி முதலானவைகளாலும் அவர் எதிர்த்துத் தாக்கினாராலும் அது தன் அரசாட்சியையுங் கொடுங் கோன்மையையும் விட்டதல்ல. இப்பேர்ப்பட்ட சத்துருவை முற்றும் நிர்மூலமாக்க—இச்சத்துருவினால் தம்முடைய மகத்துவத்துக் குண்டான அவமானத்தைப் பரிகரிக்க—அதற்கு அடிமைப்பட்டுக்கிடந்த மனுக்குலத்தை மீட்டு அது இழந்துபோன மோட்ச பாக்கியத்தை அதற்கு மறுபடியும் சுதந்தரித்துக் கொடுக்க—தம்முடைய தேவகுமாரனை கல்வாரி மலை மீது சொல்லொண்ணா விதமாய் நிஷ்டூரப் பாடுகள் பட்டு மரிக்கத் திருவுளமானார்.

ஆனபடியால் சுதனான சர்வேசுரன் மனிதனாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, ஓர் ஏழைத் தச்சனுடைய மகனாகப் பாவிக்கப்பட்டுத் தம்முடைய 30-ம் பிராயம் வரையில் வருந்தி யுழைத்துக் கஷ்ட ஜீவனம் செய்தார். பிறகு மூன்று வருஷமளவும் யூதேயா நாடெல்லாஞ் சுற்றித் திரிந்து மகாபிரயாசையுடன் ஜனங்களுக்குத் தம்முடைய சுகிர்த மாதிரிகையினாலும் போதகத்தினாலும் புத்திபுகட்டி, பாவத்தை விட்டுப் புண்ணியத்தைச் செய்யக் கற்பித்தார். கடைசியாக ஓர் பாதகனைப் போல் யூதரால் பிடிபட்டு சங்கிலி, சாட்டை, கசை, வார், முள் முதலிய கொடிய எத்தனங்களால் குரூரமாக வாதிக்கப்பட்டார். சகல விதமான நிந்தையவமானங்களுக்கும் உள்ளாகி, பெரியதோர் கள்ளனைப்போல் இரு கள்ளருக்கு நடுவில் சிலுவையில் அறையுண்டு, தம்முடைய இரத்தத்தையெல்லாஞ் சிந்தி உயிர் விட்டார்.

ஓ, சண்டாள பாவமே! சதிகாரச் சத்துருவே!! உன்னை நிர்மூலமாக்க தேவனே இப்பேர்ப்பட்ட சீறு மாறுகளுக்கு உள்ளாகி உயிர் துறக்க வேண்டியதாயிற்றே! உன் ஆணவத்தை யடக்கவும், உன் ஆட்சியைக் குலைக்கவும் நிர் அபராதியாகிய கடவுள் எவ்வித நிஷ்டூர அவமானங்களுக்கும், கேலி பரியாசம் ஏளனங்களுக்குந் தம்மை உள்ளாக்க வேண்டியதாயிற்றே! உன் விஷத்தினால் தீண்டப்பட்ட எங்கள் ஆத்துமத்தைச் சொஸ்தப்படுத்த அவர் தம்முடைய திரு இரத்தத்தையெல்லாஞ் சிந்த நேர்ந்ததோ! உன்னால் தம்முடைய பிதாவுக்குண்டான பங்கத்தைப் பரிகரிக்க அவர் இந்த நீச மரணத்துக்குள்ளானாரோ! உன்னால் நித்திய சாவுக்கும் நித்திய தண்டனைக்கும் உள்ளான எங்களை மீட்டிரக்ஷிக்க அவர் இவ்வளவு பாடுபட்டாரோ! உன்னால் அடைபட்டுக்கிடந்த மோட்சவாசலை எங்களுக்குத் திறந்து, எங்களுக்காகத் திறக்கப்பட்டிருந்த நரக வாசலையடைக்க அவர் தம்மைச் சிலுவை மரணமட்டும் தாழ்த்தினாரோ! ஓ, பாவமே! சபிக்கப்பட்ட பாவமே உன் நிஷ்டூரமும் ஆணவமும் எவரையும் திகைப்புற்றுப் பிரலாபிக்கச் செய்கின்றதே!!

ஓ, சேசுவே! மதுரம் பொருந்திய என் இரட்சகரே! நீர் இன்று மனோவாக்குக் கெட்டாத வாதனைக் குள்ளாகி மரணமடைந்ததற்குக் காரணம் என் பாவாக்கிரமங்கள்தானே. என் சிந்தனை, வாக்கு, கிரிகைகளினால் உமக்குப் பொருந்தாத துரோகங்களை நான் புரியாதிருந்திருப்பேனாகில் தேவரீர் இப்பேர்க்கொத்த கண்ணராவியான மரணத்துக்கு உள்ளாகி யிருக்கமாட்டீர். உம்முடைய பிதாவும் உம்மிடத்தில் இந்த இறைவரியைக் கேட்டிரார். ஆகையால், இதோ! நான் என் அனேகானேக பாவங்களுக்காக மரிய மதலேனாளைப் போல பச்சாத்தாபப்பட்டு நீர் மரணமடைந்த சிலுவையினடியில் விழுந்து கிடக்கிறேன். என் பாவங்களைப் பொறுத்தருளும். என் சீவியகாலத்தில் கட்டிக்கொண்ட சகல அக்கிரமங்களுக்கும் நான் மனஸ்தாபப்பட்டு அழுவதோடு என்னிடத்தில் குடிகொண்டிருக்கிற துர்வழக்கப் பழக்கங்களை யெல்லாம் இன்று அடியோடு வெறுத்துவிட்டு நான் இனிமேல் உமக்கு எந்த துரோகத்தையுஞ் செய்வதில்லை யென்று உறுதியான பிரதிக்கினை செய்கிறேன். என் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும்.



## MARIAN CONGRESS.
## மரியாயின் சங்கம்.

மரியாயின் சங்கமானது திருச்சினாப்பள்ளியில், வருகிற டிசம்பர்மீ 28-ந்தேதி சாயந்திரம் ஆரம்பமாகி 30-ந்தேதி சாயந்திரம் முடிவு பெறுமென்பது நமது சந்தாதார நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். இந்த இந்தியா தேசத்தில் இப்பேர்க்கொத்த மரியாயின் சங்கம் கூடுவது இது முதல்விசை யானதாலும், இதற்குப் பின் இம்மாதிரி சங்கம் கூடுவது எக்காலமோ என்பதினாலும், இது இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்களாலும் வெகு பத்தி விமரிசையோடு மிக்க ஆடம்பரமாய்க் கொண்டாடப்படுமாகையாலும், கத்தோலிக்கு விசுவாசிகள் அனைவரும் விசேஷமாய், மரியாயின் சனுகடைந்த தாசர்களெல்லோரும், இந்த அரிய பெரிய சமயத்தை மிக்க ஆவல் ஆசையுடன் கைக்கொண்டு, அதன் வைபவக் காட்சியைத் தரிசித்து ஆனந்திக்க பிரயாசைப்படுவார்களாக. இதற்காக மரியாயின் தாசர்கள் இப்போது முதற்கொண்டே மனசையும், மற்ற உபகரணங்களையும் சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, டிசம்பர்மீ எப்போது பிறக்குமோ, இருபத்தெட்டாந் தேதி எப்போது வருமோ வென்று அதி யாவலுடன் எதிர்நோக்கி யிருப்பார்கள். மரியாயின் அதிக தோத்திர மகிமைக்கும், விசுவாசிகளின் அதிக பத்தி நன்மைக்கும், புறமதத்தினரின் நன்மாதிரிகைக்கும், நல்லுபதேசத்திற்குமான இந்த மகா பெரிய சங்கம் நன்கு நடை பெறுவதற்கு இன்றியமையாச் சாதனமாகிய பொருளுதவி செய்வதில் சகல விசுவாசிகளும் ஒருவர் ஒருவரை மேற்கொள்ளப் பார்ப்பார்களெனக் கோருகிறோம். அதிகங் கொடுக்கக் கூடாதவர்கள் தங்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி, சிறிதேனும் மனப் பூரணமாய்க் கொடுப்பார்களாக. இந்த மரியாயின் சங்கத்துக்காக திரவிய சகாயத்தைக் கேட்டு, கனந்தங்கிய மயிலை மேற்றிராணி யாண்டவரவர்கள் தமது ஞானாளுகைக் குட்பட்ட குருப்பிரசாதிகளுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் உள்ளப்பூர்வமாய் எழுதிக்கொண்ட நிருபமானது அன்பும் பட்சமும் செறிந்து அதி யுருக்க நிறைந்துள்ளதும், அனைவராலும் ஆசையுடனும், இலாபகரத்துடனும் வாசிக்கப்படத் தகுந்ததுமாயிருப்பதால் அதை யிங்கு மொழி பெயர்த்துத் தருகிறோம். அது பின் வருமாறு:—

சர்வேசுரனுடைய இரக்கத்தினாலும் பரிசுத்த அப்போஸ்தோலிக்கு ஸ்தானத்தின் தயையினாலும், மயிலாப்பூர் விசாரணையின் மேற்றிராணியாராகிய டாம் தியொற்றோனியஸ் எம்மானுவல் ரிபெய்ரோ வியைரா டிகாஸ்ட்ரோ என்னும் நாமதேயமுடைய நாம், நமது ஞான ஆளுகைக்குட்பட்ட சங்கைக்குரிய குருப்பிரசாதிகளுக்கும், மற்ற கிறிஸ்துவர்களுக்கும், நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்து நாதரில், ஆரோக்கியமும் சமாதானமும், ஆசீர்வாதமும் உண்டாகும்படி வாழ்த்தித் தெரிவிப்பதாவது:—

(1) சேசுக்கிறிஸ்துநாதரில் அன்புள்ள மக்களே! பரிசுத்த கன்னிமரியாயி ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த விசேஷமானது விசுவாச சத்தியமாக உலகத்துக்கு ப்ரசித்தம்பண்ணப்பட்ட வஜ்ஜிர சூபிலீயின் கொண்டாட்ட மாசமாகிய நாளது டிசம்பர் மாதத்தில், மரியாயின் சங்கமொன்று திருச்சினாப்பள்ளியில் கூட்டுவதற்கு இந்தியாவிலுள்ள எல்லா மேற்றிராணிமார்களுடையவும் அங்கீகாரத்துடன் இப்போது முடிவானதென்கிற சங்கதியை மிக சந்தோஷத்துடன் உங்களுக்கு அறிவிக்கிறோம்.

(2) மரியாயின் சங்கமொன்று இந்தியாவில் கொண்டாடும் விஷயமாய்ச் சென்ற வருஷம், நமது அபிப்பிராயத்தைக் கே

ட்டபோது, நாம் அதை மிக அன்புடன் அங்கீகரிக்கிறோமென்றும், அதை முன்னுக்குக் கொண்டுவர பிரயாசைப்படுகிறவர்களையும் உடன் உழைக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கிறோமென்றும் மறுமொழி பகர்ந்தோம்

(3) அதன்பிறகு அச்சங்கத்தின் காரியதரிசிக்கு 1913 ௵ ஜூலை 29-ம் தேதி நாம் அனுப்பின கடிதத்தில் பின்வருமாறு எழுதினோம்:—"மரியாயின் சங்கம் ஒன்றைக் கூட்டுவதினால், மிகவும் பரிசுத்த தேவதாயாரைப்பற்றியவிசுவாச சத்தியங்கள் நமது கிறிஸ்துவர்களின் இருதயங்களில் ஆழமாய்ப் பதிந்து, அந்தத் தேவதாயார்பேரிலும், அவளது மிகவும் பரிசுத்த குமாரனும் நமது ஆண்டவருமாகிய சேசுக்கிறிஸ்துநாதர் பேரிலும் அதிக பக்தி நேசம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை."

(4) "இதுவுமன்றி சற்பிரசாத சங்கங்களில் நடப்பதுபோலவே இந்த மரியாயின் சங்கத்திலும் வேத சத்தியங்கள் சகலருமறிய பகிரங்கப்படுத்தப்படுவதால், சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரமாகிய விசுவாசமானது கத்தோலிக்கர் மனதில் நன்றாய்ப் பதிந்து பலப்படுவதற்கும், இந்தியாவிலுள்ள சகல கத்தோலிக்கரையும் அதிகமதிகமாய் ஒன்றுபடுத்தி இத்தேசத்தில் கத்தோலிக்குத் திருச்சபை மகிமையோடு துலங்குவதற்கும் வெகு பலத்த உதவியுமாகும்."

(5) "மரியாயின் பிள்ளைகள் என்ற சபையார் மாத்திரமல்ல, அப்பரம நாயகியின்மேல் பிள்ளைக்குரிய உருக்க நிறைந்த பத்தி நேசமுள்ள எல்லா குருக்களும் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் இந்த அதியுன்னத காரியத்துக்கு மனப் பூர்வமாய் உதவி புரிந்து ஒத்து உடனுழைப்பார்களென்பதில் நாம் சந்தேகங் கொள்ளவில்லை."

(6) இந்தச் சங்கத்தை நடப்பிப்பதற்கு வேண்டிய பணம் சேகரிக்கும் வகையை முந்த கவனிப்பது யுக்தமும், அவசியமுமாயிருந்தாலும் பண விஷயத்தைப்பற்றி நீரும் சங்கத்துக்காக உற்சாகத்தோடு உழைப்பவர்களும் சிறிதும் கவலைகொள்ள வேண்டுவதில்லை. ஏனெனில், நமது மோட்ச இராக்கினியானவள் தமக்கு அத்தியந்த பிரீதியும் மனோகரமுமான இந்தப் பிரயத்தனம் ஈடேறி இனிது முடிவதற்கு வேண்டிய பணத்தைத் தாராளமாய்க் கொடுக்கும்படி தம்முடைய அன்புள்ள மக்களாகிய கிறிஸ்துவ விசுவாசிகளுடையவும், குருக்கள் மேற்றிராணிமார்களுடையவும் இருதயத்தை இளகச்செய்வாள்" என்பதே.

(7) இதற்குப் பிற்பாடு, இந்த சங்கத்துக்காக நமது விசாரணையிலிருந்து எவ்வளவு பண உதவி எதிர்பார்க்கலாம் என நம்மை ஓர் மதிப்பு கேட்டபோது, நமது விசாரணைக்குள் 1000 ரூபாய் வசூல் செய்யக்கூடுமென விடை பகர்ந்தோம். நாம் இப்படி மறுமொழி யளித்தபோது அமலோற்பவ கன்னிகையின் ஆதரவினு மல்லாமல் எமது அன்புள்ள குருக்களே, விசுவாசிகளே, உங்களுடைய கிறிஸ்துவ பக்தியுள்ள நற் சிந்தையின் பேரிலும் நம்பிக்கை கொண்டு அவ்வாறு சொல்லலானோம்.

(8) ஆனதுகொண்டு சேசுக்கிறிஸ்துநாதரில் அன்புள்ள பிள்ளைகளே! இந்த மரியாயின் சங்கத்தைத் தக்கமேரையாய்க் கொண்டாடுவதற்கு அநுகூலமாய், உங்கள் உங்கள் பக்திக்கும் சக்திக்கும் ஏற்ற வண்ணம் யாதோர் சிறிய தொகையை யாவது காணிக்கையாகக் கொடுக்க முன்வருவீர்களாகவெனக் கேட்டு இதோ இன்று இந்த நிருபத்தை உங்களுக்கு எழுதலானோம். சத்திய திருச்சபையின் பேரில் உங்களுக்குள்ள நேசத்தின்மட்டிலும், மோட்ச இராக்கினியின்மீது உங்களுக்குள்ள பிள்ளைக்குரிய பக்தியின்மட்டிலும் உங்கள் மேற்றிராணியாராகிய நாம் எப்போதும் இப்போதும் பலத்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம். ஆனதினால் நீங்கள் இந்தியாவிலுள்ள எல்லா கிறிஸ்துவர்களுக்குமுன்பாக, இந்த நமது நம்பிக்கைக்கு ஏற்றவண்ணம் நடந்துகொள்வீர்களெனக் கோருகிறோம்.

(9) இந்தியாவில் முதன்முதல் கூடப்போகிற இந்த மரியாயின் சங்கமானது, இந்தியாவின் குருப்பிரசாதிகள் பேரிலும், மற்ற கிறிஸ்துவர்கள் பேரிலும், மோட்சத்திலிருந்து ஏராளமான வரங்களைப் பெறுவிக்கும்; ஆயினும் நமது விசாரணையைச்



சேர்ந்த ஓர் குருவானவர் சிலநாள்முன் நமக்கு எழுதி யனுப்பினதுபோல, நமது விசாரணை கிறிஸ்துவர்களுக்கு மெய்யான மாதாவாகக் காட்டியருளிய நமது ஆண்டவளுக்கு தோத்திரஞ் செலுத்தி நமது நன்றியைக் காட்டிக்கொள்ள இது மெத்தவுந் தக்க சமயமாமே. அர்ச். கன்னி மரியாயின் சபையைச்சேர்ந்தவர்கள் மாத்திரமே யன்றி கூடியமட்டும் எல்லா கத்தோலிக்கரும், கத்தோலிக்குப் பத்திக்குரிய சபைகளும் சேர்ந்து இந்த மகா சங்கத்தைக் கொண்டாடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(10) இந்த சங்கக் கொண்டாட்டத்தின் செலவுக்காக விசுவாசிகளின் காணிக்கைகளை எவ்வாறு வசூல் செய்வது என்னும் விஷயத்தை மிக உற்சாகமுள்ள நமது விசாரணைக் குருக்களுடைய புத்தியோசனைக்கு விட்டு விடுகிறோம். ஓர் ஊரிலுள்ள தேவதாயாரின் சபை மெம்பர்கள், தங்கள் தங்கள் வரும்படியில் ரூபாய்க்கு ஒரு அணு விழுக்காடு இந்தச் சங்க செலவுக்காகக் கொடுப்போமென்று தீர்மானித்த விஷயத்தை நாம் அறிவோம். இது மெத்த புகழ்ச்சிக் குரிய காரியந்தான். ஆயினும், ஒவ்வொருவரும் நபருக்கு ஒரு அணுவாவது, அல்லது அரையணுவாவது அல்லது குறைந்தது ஒவ்வொரு குடும்பத்துக்கு அரையணுவாவது கொடுத்தால் போதுமானது. ஆயினும், நாம் ஏற்கெனவே சொல்லியதுபோல், இந்த வசூல் செய்யும் பொறுப்பை உற்சாகமுள்ள நமது பங்கு சுவாமிமார்களுக்கு முற்றுமே விடுகிறோம். இப்படி வசூலிக்கப்பட்ட காணிக்கைத் தொகைகளை, நான்குமாதத்துக்குள்ளாக நமக்கு அனுப்பிவைக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(11) அர்ச். மரியாயின் மாசில்லா உற்பவத்தினால் அவளைத் தமது திருக் குமாரனுக்கு யோக்கியமான பீடமாக நியமித்தருளினபிதாவாகிய சர்வேசுரனானவர்—சேசுக்கிறிஸ்து நாதரில் பிரியமான பிள்ளைகளே—உங்கள் அனைவருக்கும் நித்திய சீவியத்தை யடைவதற்கு வேண்டிய நல்ல மனதையும் ஆசையையும் தந்தருளும்படிக்கு, பரிசுத்த கன்னிமரியாயின் மன்றாட்டைக்கொண்டு திருச் சபையோடு அவரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

✠ தியோற் ரேனியஸ்.

மயிலை மேற்றிராணியார்.

---

## A REVELATION.

## ஓர் காட்சி.

### அல்லது புரோட்டெஸ்டாண்டாரின் ஐக்கியக்கூட்டமும், தலையாட்டமும், தடுமாற்றமும்.

---

அருண ராஜன் தமது சிம்மாசனத்தைவிட்டிறங்கி பள்ளியறையை நோக்கிச் செல்கிறார். மிக மெதுவாகவும், கெம்பீரத்துடனும் நவரத்னங்களிழைத்த கம்பளத்தில் தமது மிருதுவான தாள்களை யூன்றி நடந்தேகுகிறார். அவரது முகவிலாசம் மறைந்தது. உள்ளே புகுந்துவிட்டார். அவரது பொன்னிறத்தோகை மட்டும் நிலத்தை அளாவி நின்று அங்கு மிங்கும் அசைந்தவண்ணம் பொற்சுடர் வீசிக்கொண்டிருக்கிறது. அதுவும் சீக்கிரம் மறைந்துபோகும். அரசன் களைப்பாற பள்ளியறை போய்விட்டனரே, நாங்கள் என் பள்ளிக்கூடத்திலிருக்கவேண்டுமென மாணாக்கர்கள் முணுமுணுத்துக்கொண்டிருந்தார்கள். மணியோசை கேட்டது. கேட்கவே அவர்களது ஆவல் பூர்த்தியானது. உடனே புஸ்தகங்களையெல்லாம் அவசரமாய சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆனந்த ஆரவாரத்துடன் வெளியேவந்து கலைந்துபோனார்கள். கஸ்பார், ஆரோக்கியம், ஈசாக் என்கிற மூவரும் ஒன்றாகக் கூடி பேசி விளையாடிக்கொண்டு இல்லம் நோக்கிச் செல்கிறார்கள். கஸ்பாரும் ஆரோக்கியமும், கத்தோலிக்குக் கிறிஸ்துவ சிறுவர்கள். ஈசாக் என்பவன் புரோட்டஸ்டாண்டு பாதிரியாரின் புத்திரன். பற்பல காரியங்களைப்பற்றிப் பேசிவருகையில் கஸ்பார் சொல்வான். "இங்கிலாந்திலிருந்து வந்த பத்திரிகைகளில் கிக்குயு சச்சரவு என்று சொல்லி யிருக்கிறதே அதென்ன உனக்குத் தெரியுமா ஈசாக்?"

ஈசாக்.—அதென்னவோ எனக்குத் தெரியாது. காப்பிரிகள் சண்டை போடுகிறார்களாக்கும்.

ஆரோக்கியம்.—காப்பிரியுமல்ல, கீப்பிரியுமல்ல; உங்கள் பிஷப்புமார்களும், பாதிரிமார்களுந்தானே வாதாடிச் சண்டைபோட்டு மாரடித்து மண்டையை யுடைத்துக்கொள்கிறார்கள்.

கஸ்பார். —ரொம்பப்பேருக்குக் காயமோ?

ஆரோ.—அல்ல, அல்ல; அவர்கள் கைக்குக் கை சண்டைபோட்டு மல் யுத்தம் செய்யவில்லை. ஆனால் வேதவிஷயத்தில் வார்த்தையாடி தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்தினது போதாதென்று கடுதாசியையும் மையையும் வீணாகச் செலவிடுகிறார்கள்.

ஈசாக்.—உனக்கு நாங்களென்றால் ஆகாது. நாங்கள் என்றால் துரும்பைத் தூலமாக்கி, அணுவை மேருவாக்கி, பேனைப் பெருமாளாக்கிப் பேசுவாய்.

ஆரோ.—நான் ஒரு பொய்யுஞ் சொல்லவில்லையே. பத்திரிகையை யெடுத்து வாசித்துப் பார். அதுவும் புரோட்டெஸ்டாண்டார் அச்சிடுகிற பத்திரிகையே. எல்லாம் பட்டப்பகலிலும் வெட்டவெளியாகும்.

ஈசாக்—ஆனைக்கும் அடி பிசகு மல்லவா? ஏதோ தற்செயலாய் அற்ப சொற்பமான வாக்குவாதங்கள் விளைந்திருக்கும். அவையெல்லாம் இதுவரையில் ஒழிந்து சமாதானமும் ஒற்றுமையும் உண்டா யிருக்கலாம்.

ஆரோ.—ஒற்றுமையா? முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற் போலல்லவா இருக்கிறது.

கஸ்பார்.—ஐயோ பாவம்! நீ அவனைப்போட்டுத் தொந்தரவு பண்ணாதே. எனக்கு சங்கதியென்னவென்று சொல் பார்ப்போம்.

ஆரோ.—என்ன கோபமா ஈசாக்? நான் சொல்லுகிறேன் நீயுங் கேட்பாயா? அல்லது எங்களை விட்டு ஓடிப்போவாயா?

ஈசாக்.—இல்லை சொல் பார்ப்போம்.

ஆரோ.—கீழ் ஆப்பிரிக்காவில் ஆங்கிலிக்கன் (Anglican) சபையைச் சேர்ந்த மூன்று பிஷப்மா ரிருக்கிறார்கள். உகண்டா, மெம்பேசா, சான்சிபார் பிஷப்களே. முந்தின இருவரும் கீழ் சபை (Low church) யைத் தழுவினவர்கள். பிந்தினவர் உயர்சபை (High church) யைத் தழுவினவர். இவர்கள் தத்தம் பாதிரிமார்களோடு கிறிஸ்துவேதத்தைச் சிலகாலங்களாகப் போதித்து வருகிறார்கள். அதற்கிடையில் பெருமாரி பொழிந்தாற்போல் புரோட்டஸ்டாண்டு சபையின் கணக்கில்லாப் பிரிவினைக்காரப் பாதிரிமார் வந்து நிறைந்தார்கள். ஒவ்வொரு சபையாரும் தந்தம் பிரியம்போல், கிறிஸ்துவின் கோட்பாடுகளை உருட்டிப் புரட்டி, கொண்டதே கோலம் கண்டதே காட்சியென, மனம்போன போக்குப்படி யெல்லாம் போதித்துவந்தார்கள். இதையெல்லாம் உற்றுப்பார்த்த அவ்வூர்வாசிகள், சந்தேகங் கொண்டு சமுசயப்பட்டு கேட்பார்:—"பாதிரிமார்களே, நீங்கள் கிறிஸ்துவேதத்தைப் போதிக்கவந்தீர்களெனப் பகருகிறீர்கள். உங்களில் எத்தனையோ பிரிவுகளிருக்கின்றன. எதுதான் உண்மையைத் திட்டி கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் காட்டுகிறது? நீங்கள் எல்லோரும் உத்தமர்களே; ஊக்கமுடனுழைத்துவருகிறீர்கள் அதுவும் வாஸ்தவமே! சேசுக்கிறிஸ்துநாதர் மனுமக்களுக்கு இரட்சணியங் கொண்டுவந்தார். நீங்களெல்லோரும் அவருடைய பிரதிநிதிகளென உரைக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கே அவர் எப்படி இரட்சணியங் கொண்டுவந்தாரெனப் புலப்படுகிறதில்லையே; நீங்களே அவர் காட்டிய இரட்சணிய மார்க்கம் எதுவென ஒன்றாகக் கூடி ஒத்துக்கொள்கிறீர்களில்லையே; நீங்களொவ்வொருவரும் தான் போதிக்கிறதே மெய்ம்மறையென உரத்துக் கூவி, போட்டி போட்டுக்கொள்கிறீர்கள். அப்படியானால் எங்களுக்கு நல்வழிகாட்ட வல்லவர்கள் நீங்களோ? குருடன் குருடனுக்கு வழிகாட்டக்கூடுமா?" என்று கேட்டார்கள் இவ்வித ஆட்சேபனைகள் புரோட்டஸ்டாண்டாரின் மனதைக் கலக்கி, வெட்கத்தை விளைவித்தன. மேலும், மனந்திரும்புகிறதற்கு வெகு இடையூறாகவிருந்தன வென்று சொல்லவும் வேண்டுமோ? இப்பேர்க்கொத்த இடுக்கண்களை யெல்லாஞ் சிதறடித்து, சுதேசிகளின் மனதில் நல்லெண்ணத்தை எழுப்பி, வேதவிதை விதைக்க உத்தேசித்தார்கள். இதுவிஷயமாக ஓர் பெருங் கூட்டம் சில மாதங்களுக்கு முன் கிக்குயு என்னு மூரில் நடந்தேறியது.

கஸ்பார்.—இதற்காகத்தான் கிக்குபு சச்சரவு என்றிருக்கிறதோ?

ஈசாக்—இப்போதுதானா தம்பிக்குத் தெரியவந்தது?

கஸ்பார்.—அந்தக் கூட்டத்தில் என்ன நடந்தது?



ஆரோ.—அதன் நோக்கம் என்னவென்றால், பொதுவில் தேவத்திரவியாநுமானங்களிலும், வேதக் கொள்கைகளிலும், ஒரு கருத்தான ஒற்றுமையை ஸ்தாபித்து பாதிரிமாரின் முயற்சியை உயர்ச்சியாக்க வேண்டுமென்பதே. பற்பலபேர் பலவாறாகப் பேசி யவதானித்து, ஏகோபித்து முடிவுரையாய் பிரமாணமாகக் கொண்ட தீர்மானங்களாவன:—

(1) ஓர் சபையைச் சார்ந்தோர் எல்லாச் சபையிலுஞ் சேர்ந்துகொள்ளலாம்.

(2) ஓர் சபையார் மற்றச் சபைகளில் பிரசங்கிக்கலாம்.

(3) ஓர் சபையில் உட்பட்டவர்கள் மற்றச் சபையாரை 'இராப்போசன' (Communion Service) த்திற் கழைக்க விக்கினமில்லை.

(4) கிறிஸ்துவர்களாக வர விரும்புவோரையும், பாதிரி பட்டத்திற்குக் கற்போரையும், எந்தெந்த சபையி லுட்பட்டவர்களாயினும் ஒரேவிதமாய் கற்பித்துவருதல். இவ்வாறு தீர்மானஞ் செய்யப்பட்டு, ஐக்கியத்தை நிலை நாட்டினார்கள். சபைப் பிதாக்களெல்லாம் ஆம் எனத் தலையாட்டினார்கள். ஒத்துக்கொண்டார்கள். பாதிரிமார்களெல்லாம் ஒன்றாகக் கூடினமையால் அவர்கள் மதக் கோட்பாடுகளெல்லாம் ஒருங்காய் அமையுமெனத் துணிந்தார்கள். ஆண்டியு மாண்டியும் கட்டிக்கொண்டால் சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும் என்று நினைத்தனர்போலும்.

ஈசாக்.—ஏன்? ஒற்றுமை வரவில்லையோ?

ஆரோக்.—கொஞ்சம் பொறு சொல்லுகிறேன்.

கஸ்பார்.—அவர்கள் ஒற்றுமையெல்லாங் கடுதாசியிற்றா னிருந்ததாக்கும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?

ஆரோக்.—அதனோடு போனால் பாதகமில்லையே.

கஸ்பார்.—பின் என்ன நடந்தது?

ஆரோ.—நாம் தீர்மானஞ் செய்துவிட்டோம். விளக்கைக் கொளுத்தி மரக்காலுக்குள் வைக்கலாகாது என மொழிந்தார்கள். தாங்கள் நிரூபித்துக்கொண்டதுபோல உடனேக்குடனே செய்கையில் காட்ட மனங் கொண்டார்கள். பிரெஸ்பிட்டேரியன் (Presbyterian) கோவிலில் கீழ்சபை பிஷப் ஆராதனை நடத்த மற்றொரு பிஷப் உதவி செய்தார். எல்லாச்சபையாருக்கும் பொதுவாக இராப்போசனம் நடத்தினார்கள். அமைதிக்குப் பின் புயல் வருவது சகஜமே. அதுபோல் இதுவரையில் ஐக்கியமும் அமைதியுமா யிருந்தவர்களுக்குள் குதர்க்கமுண்டானது. சான்சிபார் பிஷப் மேற்படி இராப்போசனத்திற் குடன்படவில்லை. அப்படிச் செய்வது சமயபேதமென்றும் அவ்வாறு செய்கிறவர்கள் சமயபேதிகளென்றுஞ் சொல்லிக் குற்றங் கூறலானார். ஆராதனை நடத்தினவர்களோ காலத்துக்குத் தகுந்த கோலம் போடவேண்டும். ஆதலால் காலத்துக்கும் இடத்துக்குந் தகுந்தாப்போல் நன்னோக்கத்தோடு செய்ததாக மாறுத்தர மளித்தார்கள்.

கஸ்பார்.—இதற்கு சான்சிபர் பிஷப் என்ன சொன்னார்?

ஆரோ.—அவர் சும்மா விட்டுவிட்டாரா? தகுந்த மூகாந்தரங்களோடு நல்ல கேள்வி கேட்டார். "குருத்துவமானது கிறிஸ்துவானவரால் ஸ்தாபிக்கப்பட்டு தொன்று தொட்டு அப்போஸ்தலர்கள், அவர்களைப் பின் தொடர்ந்து வருகிறவர்கள் மூலமாய் அபிஷேகம் பண்ணப்பட்டு வருகிறது. அப்படியானால் அப்போஸ்தலர்களைப் பின்பற்றிவருகிற ஆங்கிலிக்கன் சபையிலில்லாதவர்களுக்கு குருத்துவமேது? அவர்களுடைய ஆராதனை மெய்யாகுமா? அவர்களுடைய போலி இராப்போசனத்திற்கு ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர்கள் போகலாமா? பிரசன்னமா யிருக்கலாமா? இராப்போசன மருந்தலாமா?" என்று கேட்டார். இதெல்லாம் நோவுகிற புண்ணிற் கோலையிட்டதுபோ லிருந்தது. இச்சமய வாதத்தைச் சீர்படுத்த காண்டர்பரி ஆர்ச் பிஷப்புக்கு அப்பீல் செய்தார். ஆங்கிலிக்கன் சபை, அப்போஸ்தலர் ஸ்தாபித்த சபையின் பாகமா? அல்லது மனிதர்கள் தாம் ஒன்று கூடியுண்டுபண்ணின சங்கமா? முன்னதென்றால் ஆங்கிலிக்கன் சபையோர் எப்படிக் குருத்துவமில்லாத சபையில் ஆராதனை செய்யலாம்? ஆராதனைக்குப் போகலாம்? பின்னதென்றால் ஆங்கிலிக்கன் சபை கிறிஸ்துவானவரால் ஸ்தாபிக்கப்பட்ட சபையல்லவே, மெய்யான சபையல்லவே.

கஸ்பார்.—இதற்கு ஆர்ச் பிஷப்பு என்ன மறுமொழி யளிப்பார்?

ஆரோ.—ஈசாக்கினிடம் கோபமா? (ஈசாக் தலை குனிந்த வண்ணம் சும்மா யிருந்தான். அவர் என்ன செய்வார்! இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்புபோல நின்று வாடுகிறார். ஐயோ பாவம் வருந்துகிறார்!

கஸ்பார்.—ஈசாக் கேட்டாயா சங்கதியை?

ஈசாக்.—(தலை நிமிர்ந்து) இதெல்லாம் யார் நம்புகிறது? பத்திரிகையெல்லாம் கூட்டிப் பெருக்கிச் சொல்லும்.

கஸ்பார்.—அப்படியானால் நீங்கள் சும்மா விட்டுவிடுவீர்களா?

ஆரோ.—ஒரு பத்திரிகை, இரண்டு பத்திரிகைகளா! ஒருதடவை, இரண்டு தடவையா! ஒருவரிருவரோ பேசுகிறார்கள்? இங்கிலாந்து முழுமையும் ஏக முழக்கமா யிருக்கிறதே, இதையெல்லாம் நம்பாவிட்டால் நீ கண்ணிருந்தும் கபோதிதான்.

கஸ்பார்.— நீ சரியாய்ச் சொன்னாய் உன் வாயில் சர்க்கரை போடவேண்டும்.

ஈசாக்கோ செத்த நாய்போல் வாய் பேசாதிருந்தான்.

ஆரோ.—இதனால் நாம் அறியவேண்டியதென்னவென்றால்: முதலாவது ஆங்கிலிக்கன் சபையானது தனது சபையின் அஸ்திவார வேத கோட்பாடுகளின்படி மெய்யான சபையாயிருக்கிறதோவென வின்னுந் தீர்மானஞ் செய்துகொள்ளவில்லை.

ஈசாக்.—ஏன் செய்யவில்லை. செய்யாமற்றானிதுவரையி லிருக்கிறதோ?

ஆரோ.—ஏன் செய்யவில்லையென்கிறாயா? இதோ கேள். ஆங்கிலிக்கன் சபையானது கிறிஸ்துவானவரால் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வீக சபையென அச் சபையிலுள்ள ஒரு சார்பார் சொல்கிறார்கள். மற்றொரு சார்பார் "சபையும் அதன் கோட்பாடுகளும் ஆதி தொட்டு வழங்கி வந்ததில்லை. அப்போஸ்தலர் காலமுதல் பாரம்பரையாக வருகிறது. ஆனால் கடவுளால் ஸ்தாபிக்கப்பட்டதன்று. ஆதலால், சமயா சமயங்களில் அவசரத்தி னிமித்தம் வேத கோட்பாடுகளை, மாற்றிக்கொள்ளலா" மெனப் பகர்கிறார்கள். உதாரணமாக ஆங்கிலிக்கன் 'ஹூக்கர்' குருத்துவமில்லாத பாதிரியினிடமிருந்து பாவப்பொறுத்தல் பெற்றதாகவும், குருத்துவ மில்லாத பாதிரிமார் குருத்துவமுள்ள ஆங்கிலிக்கன் சபைக் கோவில்களில் விசாரணை பார்த்து, ஆராதனை நடத்திவந்ததாகவும் பிந்தின சார்பார் சொல்லுகிறார்கள். அதற்கு மாறாக ஆங்கிலிக்கன் சபைக் கோவில்களில் ஆராதனை நடத்தத்துணிந்த குருத்துவ மில்லாத பாதிரிமார் விலக்கப்படிருக்கிறார்களென முந்தின சார்பார் சாதிக்கிறார்கள். இப்பேர்க்கொத்த வாக்குவாதத்தில் ஓர் முடிவுரையும், இதுவரையில் கூறப்படவில்லை. ஆகையால் அச்சபையே - யார் உண்மை உரைக்கிறாரென்று - அதுவும் திருச்சபையின் ஸ்தாபகத்தைப்பற்றியே - சொல்லத் துணியவில்லை.

கஸ்பார்.—நீ ஓர் தத்துவ சாஸ்திரிபோலல்லவோ வாதாடுகிறாய். முதலாவது என்று துவக்கினாயே, இன்னுமேதாவ திருக்கிறதா?

ஆரோ.—ஆம், அப்படி முடிவு செய்ய அதற்குக் கூடாது. ஏனென்றால் மூன்றரை நூற்றாண்டுகளாக இதைப்பற்றி யதோர் முடிவும் ஆகவில்லை. ஆனால் இப்போது ஆகப்போகிறதா? அது அசாத்தியம். இதுவரையில் இருதரத்தாரும் கீழ் சபை, உயர்சபையென ஆங்கிலிக்கன் சபையி லிருந்து வந்தார்கள். இப்போது அவைகளில் ஒன்று மெய் மற்றொன்று பொய் யென்றால் வெட்டொன்றும் துண்டு இரண்டெனவுல்லோ முடியும். இதற்குப் பயந்து மெய் பொய் யெனத் தீர்மானிக்காது, காண்டர்பரி ஆர்ச் பிஷப்பு சாரமற்ற சமாதானஞ் சொல்லலாம். சான்சிபார் பிஷப்பு வேத காரியங்களில் இவ்வளவு நுணுநுணுக்கமாய் வித்தியாசங்கள் பார்க்கக்கூடா தென்பார். உகண்டா மொம்பேசா பிஷப்மார்கள் திடுதிப்பென நூதன காரியங்களை ஏற்படுத்துவது நல்லதல்லவென்று உரைப்பார்கள். இப்பிரயோஜனமற்ற மறுமொழியை ஆர்ச் பிஷப் கொடுத்தபோதிலும், அது இராஜ அதிகாரத்தின்முன் செல்லாதே. ஏனெனில் ஆங்கிலிக்கன் சபையி லுண்டாகும், வேத குழப்பத்திலும், சமயபேதத்திலும் "ப்ரிவி கவுன்சிலின்" (Privy Council) நீதி சபையோரே (Judicial Committee) தீர்ப்புக்கொடுக்கலாம். அவர்களது தீர்ப்பே கடைசி தீர்ப்பாகும். ஆனால் உயர் சபையோர் அதை விரும்பார். அதற்கிசைந்தால் அவர்கள் சபை கிறிஸ்துவால் உண்டாக்கப்பட்டதல்ல, ஆனால் இராசாங்கத்தால் சமைக்கப்பெற்றதென வெள்ளிடை மலைபோல் விளங்கும்.



கஸ்பார்.—அவர்கள் ஆழமறியாமல் காலையிட்டுக்கொண்டு திண்டாடுகிறார்களே. இவ்வளவுதானா: இன்னு மிருக்கிறதா?

ஆரோக்.—இன்னுமொன் றிருக்கிறது.

ஈசாக்.—சொல்லிமுடியப்பா, நீ வாயைத் திறந்தால்தான் மூடமாட்டாயே.

ஆரோக்.—மூன்றாவது: இச்சம்பவத்தினிமித்தம் ஜனங்களுக்கும் பாதிரிமார்களுக்கும் உள்ள ஒற்றுமை குறையும், அவர்களது குருத்துவத்தின்மட்டில் சந்தேகங் கிளம்பும். சென்ற ஐம்பது அறுபது வருஷங்களாக உயர்சபையோர், ஆராதனைச் சடங்குகளிலும் வேதக் கோட்பாடுகளிலும், கத்தோலிக்குச் சத்திய திருச்சபையைப் பின்பற்றிநடந்துவருகிறார்கள். அவர்கள் கத்தோலிக்கு சத்திய திருச்சபையைப் பார்த்து நடக்கிறதை ஐம்பது வருஷங்களுக்கு முன்னுள்ளோர் நோக்கின், எல்லோரும் ரோமான் கத்தோலிக்கர்களாகி விட்டனரெனப் பகர அச்சங்கொள்ளார். இப்பேர்க்கொத்த மாற்றத்தை ஜனங்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டபோதிலும், பாதிரிமார்களிற் பெரியோர் சிலர் அதை அவ்வளவு பிரீதியாய் அநுசரிக்கவில்லை. ஆகையால் இந்தத் தடுமாற்றத்தில் அவர்கள் அதிக ஊக்கத்துடன் பத்திரிகைகளுக்குத் தாறுமாறாய் எழுதுகிறார்கள். பின்னும் ஆங்கிலிக்கன் பாதிரிமார்கள் உண்மையாகவே குருக்களோ? அவர்களுக்கு குருத்துவமுண்டோவென்று சந்தேகிக்கிறார்கள். இப்படியாக விருக்கிறது கிக்குயு சமயவாதம். எப்படி முடியுமோ தெரியாது.

கஸ்பார்.—ஏதாகிலும் ஓர் முடிவுக்கு வரக்கூடாதா?

ஆரோக்.—எப்படி வரக்கூடும்? அவர்களுக்குள் எல்லாந் தடுமாற்றமே. அரசில்லா குடிகளுண்டா? அதிகாரியில்லா ஊருண்டா? அக்கிராசனாதிபதி யில்லாத சங்கமுண்டா? தலையில்லாத சரீரமுண்டா? புரோட்டெஸ்டாண்டாருக்குத் தலையில்லை. ஒவ்வொருவரும் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனச் சாதித்தால் விளையும் பலனென்ன?

கஸ்பார்.—இந்தத் தர்க்கத்தில், சிலர் பதித மதம் பொய்யென வறிந்து கத்தோலிக்கு வேதத்தைக் கைப்பற்ற வழியிருக்கிற தல்லவா?

ஆரோக்.—ஆம் அதற்குச் சந்தேகமில்லை. கடவுள் தின்மையி னின்று நன்மை விளைவிப்பதுண்டு. இது கொஞ்ச காலத்துக்குள் தெரியவரும்.

கஸ்பார்.—அவர்கள் மெய்ம் மறையைக் கண்டுணர்ந்து அதை யடையும்மாறு நாம் வேண்டிவரவேணும்.

ஆரோக்.—ஆம். ஆம்; நாம் வேண்டிக்கொள்ள மறக்கக்கூடாது. விசேஷமாய் ஈசாக்குக்காக வேண்டிக்கொள்ளவேண்டும்.

ஈசாக்குவின் வீடு வந்தது. அவன் வந்தனம் என்று சொல்லிவிட்டுப் போயினன். அன்றிரவு, அவனது தகப்பனார், தாயார், தமக்கையார் எல்லோரும் போஜன மருந்துகையில் ஈசாக் தான் பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் தனது சிநேகிதர்கள் சொன்னதைப்பற்றி யோசித்துக்கொண் டிருந்ததால், தகப்பனாரைப் பார்த்துக் கேட்டான். "அப்பா! கிக்குயுவிலே புரோட்டஸ்டாண்டாருக்குள் ஏதோ சமயபேத முண்டாயிருக்கிறதாம். அது இங்கிலாந்திலேயும் பரவ அவர்களுக்குள் மனக்கலக்கமும் தடுமாற்றமும் ஏற்பட்டிருக்கிறதாமே; அது உண்மைதானா?

தகப்பனார்.—அதெல்லாம் உனக்கேன்? கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்?

ஈசாக் இதைக்கேட்டு மௌனமா யிருந்துவிட்டான். அதிகம் பேசினால் கன்னத்தைத் துடைக்க நேரிடுமென்பதை யறிவான்.

M. S. M.

## A MIRACULOUS CURE BY POPE PIUS X.

## நமது பரிசுத்த பிதாவினால் பெல்காமில் நடந்த அற்புதம்.

தற்போது திருச்சபையை ஆண்டுவரும் பத்தாம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவரால் நம் இந்தியாவைச் சேர்ந்த பெல்காம் என்ற ஊரிலுள்ள அர்ச். சூசையப்பர் கன்னியாஸ்திரி மடத்து முதலாளியாகிய ஆஞ்செலா ஜொத்தேல் என்ற கன்னியாஸ்திரி அற்புதாரோக்கியம் அடைந்த விவரமாவது: இந்த முதலாளியம்மாள் பார்சி, துலுக்கர், இந்துக்கள், ஐரோப்பியர் முதலிய சகலராலும் நேசிக்கப்பட்டவளும், நன்குமதிக்கப்பட்டவளு

மா யிருந்தாள். ஆயினும் கடவுளது சித்தத்தினுல் இவளது வயற்றிலிருந்த ஓர் ஆருத இரணத்தினுல் 12 வருடமளவாக இயாதொரு ஆறுதலும் தேறுதலுமின்றி இடைவிடாத துன்பம் அனுபவித்து வந்தாள். அந்த அம்மாளைக் கண்ட அனைவரும் அவளுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படுவார்கள் என்றுலும், அவளுடைய நோக்காட்டை சற்றேனும் தணிக்கத்தக்க யாதொரு பரிகாரமும் எவராலுஞ் செய்ய முடியவில்லை. அவளுக்குச் சத்திரம் பண்ணி சௌக்கியப்படுத்தலா மென்று பல டாக்டர்களும் கூடி ஆலோசித்தவிடத்தில் அவளுடைய திரேகத்தின் துர்ப்பலமான ஸ்திதியைக் கண்டு, அதனுல் ஒருவேளை மரணம் நேரக்கூடு மென்று பயந்து கைவிட வேண்டியதாயிற்று. இந்த 12 வருட காலமாய் அவளுக்கு ஆகாரமாக ஏற்றுக்கொண்டது வெறும் பால்தான். வேறென்றும் ஏற்றுக்கொண்டதில்லை. மற்ற கன்னியாஸ்திரிமார்களின் அலட்டுதலைப்பற்றி ஒருவேளை யெப்போதாவது கொஞ்சம் லாசெஞ்சர் மிட்டாயாவது அல்லது ஒரு சிறுதுண்டு பிஸ்கோத்தாவது சாப்பிட்டுவிட்டாளோ, அன்றைக்கு முழுதும் பாயும் படுக்கையுமாய்க் கிடந்து அவள் அனுபவிக்கு நோக்காடு கொஞ்சமல்ல.

இப்படி இருக்கையில் இவள் மட்டில் அதிக பட்சமும் பற்றுதலுமுள்ள புரோட்டெஸ்டாண்டு ஐரோப்பிய துரைசானி யொருத்தி சுவிட்செர்லாண்டு தேசத்தில் சத்திர வைத்தியத்தில் பேர்பெற்ற டாக்டரிடம் போனுல், இவளுக்கு சௌக்கியமுண்டாகத்தக்க நல்ல ஆலோசனை அவர் சொல்லக்கூடு மென்றும், அப்படி அத்தேசத்துக்குப் போகிறதாயிருந்தால் போக வர வேண்டிய பணச் செலவு தன்னுல் உபகரிக்கப்படுமென்றும் இத்தேசத்திலிருக்கும்போது சொன்னதுமல்லாமல், சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின் இந்தத் துரைசானி ஐரோப்பாவிலிருந்து எழுதிய கடிதத்தில் திரும்பவும் ஷை கன்னியாஸ்திரி அம்மாளை சீமைக்கு வரும்படி வற்புறுத்தி யழைத்தும், வரப்போகப் பிடிக்குஞ் செலவைத் தாமே கட்டிக்கொடுக்கப் பிரியப்படுவதாகவும் குறித்திருந்தாள். ஆனுல் அவ்வளவு தூரப் பயணஞ்செய்ய இந்தக் கன்னியாஸ்திரியால் முடியாதென்று எண்ணப்பட்ட படியால் இப்படிச் செய்யலாகுமோவென பெங்களூரிலுள்ள கெட்டிக்கார டாக்டரொருவரிடம் ஆலோசனை கேட்கப் போனுர்கள். அவரிந்த அம்மாளை நன்றுய்ப் பரிசோதனை செய்ததில் இவளுடைய திரேக ஸ்திதி மெத்தவும் கேவலமாயிருந்ததைப்பற்றி இவளுக்கு இயாதொரு சத்திர வைத்தியமும் செய்தல் தகாதென்று மறுத்துவிட்டார்.

இவ்விதமாக எவ்வித அவிழ்தங்களாலும் வைத்தியர்களாலும் இந்த அம்மாளுக்கு இயாதொரு ஆறுதலுங் கிடைக்க ஹேதுவில்லாமற் போயிற்று. என்றுலும் கடவுளால் ஆகாதது யாதேனு முண்டோவென்று அவர் பேரில் தங்கள் நம்பிக்கையெல்லாம் வைத்து, அம்மடத்தைச் சேர்ந்த கன்னியரும் மற்றவரும் முதலாளியம்மாளுடைய சௌக்கியத்துக்காக விடா முயற்சியாய் வேண்டிக்கொண்டு வந்தார்கள். மேலும் இப்போதுள்ள பத்தாம்பத்திநாதரென்ற அர்ச். பாப்பானவரோ எவ்வித அவிழ்தங்களாலும் வைத்தியர்களாலுந் தீர்க்க முடியாத அனேகானேக ரோகங்களை அற்புதமாகக் குணப்படுத்துகிறுர் என்பதாக பற்பல பத்திரிகைகளிலே கன்னியாஸ்திரிமார்கள் அடிக்கடி பார்வையிட்டிருந்தபடியால், தங்கள் மடத்தில் அன்று புதுநன்மை வாங்கின ஆறு வயதுள்ள வொரு சிறு பெண்ணைக்கொண்டு அர்ச். பாப்பானவருக்கு தன் கைப்பட வொரு காகித மெழுதுவித்து அதில் தான் அன்று புதுநன்மை வாங்கினதாக அவருக்கு அறிவித்து, அவர் தனக்குக் கொடுக்கும புதுநன்மை வெகுமதியாக தானிருக்கும் மடத்து சிரேஷ்ட தாயாரவர்களுக்கு இருக்கும் பிணியை நீக்கி பூரணுரோக்கியம் கட்டளையிட அவரை மன்றுடும்படி செய்தார்கள். அந்தப்படி அந்தச்சிறுமியால் எழுதப்பட்ட கடிதம் சென்ற ஜனவரிமீ 23உ தபாலில் போடப்பட்டது. சீமைக்குத் தபால் கொண்டு போகப்படும் சாதாரண கால வரையறைப்படி அக்கடிதம் பிப்ரவரி மாதம் தலை வெள்ளியன்று பரிசுத்த பிதாவின் கைக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். அந்த முதல் வெள்ளிக்கு அடுத்த சனிக்கிழமை யன்று அந்தக் கன்னியாஸ்திரி மடத்து முதலாளியம்மாளுடைய நோய் அதிக பெலமாயிருந்தது. அதேதென்றுல் சென்ற ஐந்து நாளாக பரிட்சிதார்த்தமாய் வசிகரஞ்செய்யப்படாத வெறும் ஓஸ்தித் துண்டைகொஞ்சம்கொடுத்துப் பார்த்தார்கள். அந்த ஓஸ்தி முதலாய் செரிக்காததால் அவ்வளவுநோக்காடு உண்டாயிற்று. அப்படியானுலும் அவள் அன்றுடகம் தேவ நற்கருணை வாங்குகிறதில் மட்டும் இயாதொரு இடைஞ்சலும் நோயும் அவளுக்கு நேர்ந்ததில்லை. அந்த அம்மாளுக்கு நோக்காடு அதிகரித்து குமட்டலும் வாந்தியுமுண்டாகி இரத்தமுங்கூடக் கக்கினபடியால், உடனே காலை 7-மணிக்கு ஆத்தும குருவானவரை யழைப்பித்தார்கள். அப்போ தங்கிருந்த கன்னியாஸ்திரிகளி லொருத்தி நாமின்று பூரண சௌக்கியமுண்டாகுமென்று எண்ணி யிருந்ததுக்குப் பதிலாகத் திரும்பவும் நோய் வந்துவிட்டதே யென்று சொல்ல, அவ்விடமிருந்த குருவானவர் அவர்கள் அதைரியப்படாமல் விசுவாசமாயிருக்கப் புத்திசொன்னுர். அன்றைக்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை அந்த மடத்தின் ஆத்தும குருவாகிய சேசு சபை சுவாமியாருக்கு ரோமாபுரியில் அர்ச். பாப்பானவரின் இராஜாங்கக் காரியதரிசியாகிய "மெர்ரி டெல் வால்" என்ற கர்தினுலிடமிருந்து பின்கண்டபடி ஒரு தந்தி சமாசாரம் வந்தது.

"பரிசுத்த பிதாவானவர் நீங்கள் கேட்டுக்கொண்டபடி அப்போஸ்தல ஆசீர்வாதத்தை மனப்பூர்வமாக அளிக்கிறர்."

இந்தத் தந்தி வந்த அந்த நேரத்திலுங் கூட சிரேஷ்ட தாயாரவர்கள் நோயோடு படுக்கையில்தானிருந்தார்கள். ஆத்தும குருவானவர் தாமொரு கடிதமெழுதி அதில் தமக்கு வந்த தந்தியையும் வைத்து நோவாயிருந்த சிரேஷ்டதாயா ரவர்களுக்கனுப்பினுர். அந்தக் கடிதத்தி லெழுதியிருந்த தென்னவென்றுல்: "அவளுக்கு விசுவாசமிருந்து அவள் எழுந்திருப்பதினுல் சர்வேசுரனுக்கு மகிமை உண்டாகுமென்றிருந்தால் அவள் எழுந்திருக்கக் கட்டளை யிடுகிறேம்" என்பதே. படுத்த படுக்கையிலேயே கடிதத்தையும் தந்தியையும் வாசித்தவுடன் படுக்கையைவிட் டெழுந்திருந்தார்கள். அன்றையத்தினமே பயம் நீங்கி அற்பமேனும் விசுவாசந் தளராமல் கொஞ்சஞ் சூப்பும் அதன் பிறகு வெண்ணெய் தடவின டோஸ்ட் ரொட்டியுஞ் சாப்பிட்டார்கள். வழக்கத்துக்கு விரோதமாய் இவற்றைச் சாப்பிட்டபோதிலும் அவர்களுக்கு ஒன்றும் விபரீதமாய்த் தோற்றவில்லை. செரியாத குணத்தின் ஒரு அடையாளமுங் காணப்படவில்லை.

அன்று முதல் முதலாளியம்மாள் மற்றவர்களோடு யாதொரு வித்தியாசமு மில்லாமல் சகலத்தையுஞ் சாப்பிட்டுவந்தார்கள். அந்த அம்மாள் இப்படிச் சாப்பிடுகிறதைப் பார்த்த மற்ற கன்னியாஸ்திரிமார்களுக்கு அது ஒரு கனவுபோ லிருந்தது. இது புதுமைதா னென்று எல்லாருங்கண்டு ஆச்சரியங் கொண்டார்கள். இந்த அம்மாளை யறிந்தவர்களுந் தெரிந்தவர்களுமான சகல சினேகிதர்களுக்கும் அற்புதாரோக்கியமான இந்த சுப செய்தி ஆறுதலையும் ஆனந்தத்தையும் அளித்தது. இப்படியாய் நமது பரிசுத்த பிதாவாகிய பத்தாம் பத்திநாதரால் ஐரோப்பாவில் நடந்தபுதுமை அனேகமாயினும், நமது இந்தியாவிற்கு இதுவே முதற் புதுமையாகும். கடவுளுக்கும் உலகத்தில் அவரது ஸ்தானுபதியாய் விளங்கும் பத்தாம் பத்திநாதரென்ற பாப்பானவருக்கும் எல்லா மகிமையு முண்டாகக்கடவது.

---

## GNANAMANI, III. PART.
## ஞானமணி 3-ம் பாகம்.

(ஓர் நாவல் கதை.)

---

### ஆறம் அதிகாரம்.
### கலியாண ஆலோசனை.

---

சிலநாளைக்குப் பின் ஈசாக் உபதேசியார் தமது குமாரத்தியுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது என், அபிராமி? எத்தனை காலமாய் இப்படி யிருக்கப் போகிருய் என்றுர்! அப்போது அபிராமி தன் தகப்பனுடைய கருத்து இன்னதென்று அறியாதவளாய் "என்ன நாயனு, இப்படி பேசுகிறீர்கள்?" என்று அதிசயித்தாள்.

ஈசா.—உனக்கு பிராயம் 20 ஆகப்போகிறது. நீ மணமுடித்துக்கொள்வது நலமென்று எனக்குத் தோன்றுகிறது.

அபி.—நான் கலியாணத்தைப்பற்றி நினைக்கவே இல்லை நாயனே! மேலும் கலியாணஞ் செய்துகொள்ள எனக்கு சுத்தமாய் இஷ்டமில்லை.

ஈசா.—உன் தாய் செத்து 10-மாதமாகப் போகிறது. நமது குடும்பத்தை காப்பாற்றி யிரக்ஷித்த ஞானமணி மோக்ஷம் போய்ச் சேர்ந்தான். நீதான் இப்பொழுது உலகில் தனியாக விடப்பட்டிருக்கிறாய். நீ கலியாணஞ் செய்துகொள்ளாவிட்டால் நமது குடும்பம் நம்மோடு அழிந்துபோகும். நீ மணமுடித்துக்கொண்டால் சர்வேசுரன் உனக்குக் கொடுக்கும் சந்தானத்தால் நமது குடும்பம் வர்த்திக்கும்.

அபி.—நாயனே, என் கண்ணினும் பிரிய தந்தையே! இது வரைக்கும் கலியாணத்தைப் பற்றி நினைக்கவுமில்லை, அதன் மட்டில் எனக்குப் பிரியமுமில்லை. மேலும் நான் கலியாணஞ்செய்துகொண்டால் உங்களைப் பராமரிப்பவர் யார்.?

ஈசா.—என்னைப் பற்றி நீ சிந்தைப்படவேண்டியதில்லை, அம்மா. நீ செய்துகொள்ளும் மாப்பிள்ளை நமது வீட்டிலேயே இருக்கும்படி யேற்பாடு செய்துகொள்ளலாம்.

அபி.—நான் யாருக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று நினைக்கிறீர்கள்.?

ஈசா.—பவுல் போதகருடைய குமாரன் சலமோனை நீ அறியாயல்லவா?

அபி.—அந்த வாலனையா!

ஈசா.—இப்போது அவன் நல்ல பிள்ளையாய் நடக்கிறான். அவன் புரோடஸ்டாண்டனாயிருந்தபோது அவனுடைய நடத்தை திருப்திகரமாயிருந்ததில்லை. இப்போது சத்திய வேதத்தில் சேர்ந்திருக்கிறபடியால் வெகு நல்லவனாய் நடக்கிறான். அவனுடைய நன்னடக்கையைப்பற்றி பெரிய மனுஷரான அநேகர் நற்சாட்சி கூறுவதுடன், நமது உபதேசியார் விஸ்வாசநாயகரும் அவனைப்பற்றி மெச்சிக்கொள்ளுகிறார்.

அபி.—நாயனே, சலமோனுடைய குணங்களையெல்லாம் நான் உங்களைவிட நன்றாயறிவேன். நான் ஸ்கூலில் படிக்கும்போது அவ்வாலன் எப்பேர்ப்பட்டவனென்று எனக்கு நன்றாய்த் தெரியும். சலமோனுடைய தனிச் சீவியத்தைப்பற்றி நான் பேசுகிறதில்லை. ஆனால், அந்த பிள்ளையாண்டான் சூதாடுகிறதைப் பற்றியும் குடிக்கிறதைப் பற்றியும் நமது ஊரில் அறியாதவர்கள் ஒருவருமில்லை. கடந்த வருடத்தில் பவுல் போதகர் சத்திய வேதத்தில் சேர்ந்தபோது அந்த துடுக்கனால் நடந்த கலகம் உங்களுக்குத் தெரியாதா? தன்னைப் பெற்ற தகப்பனை யெதிர்த்து, தடியுங் கையுமாய் அவரை சின்னப் பேச்சால் நிந்தித்து அவமானப்படுத்தின மனிதனை கட்டிக்கொள்ளச் சொல்லுகிறீர்களே நாயனே! உங்களுக்கு இது நியாயமா?

ஈசா.—முன்னே அவன் நன்றாய் நடந்து நல்லபேர் எடுத்தானென்று நான் சொல்லுகிறதில்லை. ஆனால், இப்போது அவன் முழுதும் மாறினதாக தெரியவருகிறது. வேறு பெரிய மனுஷரும் இப்போது அவனுடைய நடத்தையைப் புகழ்ந்து பேசுகிறார்கள். பவுல் அப்போஸ்தலன் சத்திய வேதத்தில் சேருவதற்குமுன் எப்படி நடந்தான்? திருச்சபையில் சேர்ந்தபின் அவன் நடத்தை யெப்படி மாறுபட்டது.?

அபி.—அது சர்வேசுரனுடைய விசேஷபிரசாதத்தாலுண்டான காரியம். வேதத்துரோகியான ஜூலியான் உலக விஷயமாக கிறிஸ்துவனாகி, பிறகு எப்படி கெட்டுப்போனானென்று சகலரும் அறிவார்கள். சிறுபந்தொட்டு அநுசரித்து வந்த வழக்கத்தை விட்டு விட்டு நேர் விரோதமான வழக்கத்தைக் கைக்கொள்வது பராபரனுடைய விசேஷ செய்கையாலன்றி, சுலபமாய்ச் செய்யக் கூடிய காரியமல்ல.

ஈசா.—அபிராமி, என் கண்மணி! இவ்வளவு காலமாய் எனக்கு எதிர் சொல்லாமல் கீழ்ப்படிந்து வந்து, இப்போது என் சொல்லை மீறுகிறாயே.!

அபி.—என் நாயனே! ஒருபோதும் அப்படிச் சொல்லாதேயுங்கள் என்று கண்கலங்கி மௌனமாயிருந்தாள்.

ஈசா.—கஸ்திப்படாதே மகளே; உனக்கு கஷ்டமுண்டாக்கும்படி பேசுகிறேனென்று நினைக்கவேண்டாம். உன் நன்மைக்காகவும் நமது குடும்பத்தின் அபிவிர்த்தியைப் பற்றியும் இவ்வாறு பேசுகிறேனே ஒழிய மற்றப்படியல்ல.

அபி.—என் பிரிய தந்தையே! நீங்கள் எப்போதாகிலும் என்னைச் சங்கடப்படுத்தினீர்களென்று நான் சொன்னால் அது பெரும் அபத்தமாகும். என்னை சிறுபந்துவக்கி யிதுவரையிலும் மகா பக்ஷ அன்புடன் வளர்த்து வந்தீர்கள், உங்



களிலும் அதிக பட்ச நேசமுள்ள தகப்பன் அகப்படுவது அரிது. கலியாணஞ் செய்துகொள்ள கிஞ்சித்தென்கிலும் எனக்கு மனமில்லை. சமுத்திரத்தில் நீந்தினாலும் நீந்தலாம். ஆனால் சமுசாரத்தில் நீந்துவது அசாத்தியமென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இருந்தும், என் பிரிய தந்தையே, உமக்கு அசமாதான முண்டாக்க எனக்கு மனமில்லை.

ஈசா.—அப்படியானால் பவுல் போதகருடைய மகனுக்கு வாழ்க்கைப்பட உனக்கு மனந்தானே.?

அபி.—உங்களுக்கு மனவருத்த முண்டாக்காமல், உங்கள் இஷ்டப்படி நடக்க கலியாணஞ் செய்து கொள்கிறேன். ஆனால் பவுல் போதகருடைய மகனுக்கு வாழ்க்கைப்பட மாட்டேன்.

ஈசா.—பவுல் போதகர் எப்பேர்ப்பட்டவரென்று அறியாயோ அபிராமீ.?

அபி.—அவருடைய குணம் தங்கமான குணந்தான். ஆனால் அவருடைய குமாரனுடைய குணம் எப்பேர்ப்பட்டதென்று உங்களிலும் நான் நன்றாய் அறிந்திருக்கிறேன்.

ஈசா.—கெட்டவர்கள் நல்லவர்களாகிறதில்லையோ.?

அபி.—ஆகலாம்; ஆனால், இந்த வாலனுடைய துஷ்ட நடத்தையைப்பற்றியே, விசேஷமாய் குடிவெறியைப்பற்றியே இந்தக் கலியாணத்துக்கு எனக்கு மனமே இல்லை. சிலரைக்கொண்டு நான் அநுபோகத்தில் அறிந்திருப்பது போல, இந்த ஊரில் எத்தனையோபேர் குடியால் கெட்டு சகலவித பாவங்களுக்கும் உள்ளாகி, பெண்சாதி பிள்ளைகள் காது கழுத்திலிருந்த நகை நட்டை விற்றுக் குடித்து விட்டார்கள்! எத்தனையோ பெயர் தங்களுக்கிருந்த நிலத்தை அடமானம் வைத்துக் குடித்து அதைமீட்க வகையின்றி அலைகிறார்கள்! இந்த ஊரில் உங்களுக்குத் தெரிந்திருக்குமாப்போல் எத்தனை குடும்பங்கள் குடியினிமித்தம் அன்னாகாரமின்றி அஷ்ட தரித்திரரா யிருக்கிறார்கள்! கையில் நிர்வாகமில்லாதிருக்கும் ஏழைகள் கூலி வேலைக்குப்போனாலும் வருங் கூலியையெல்லாம் அல்லது அதில் ஒரு பாகத்தையாகிலும் குடியில் செலவழிக்கிறார்கள்! ஆகையால் என் பிரிய தகப்பனே, குடிகாரனை நம்பவே கூடாது.

இன்னும் எனக்கு தெரிந்தமட்டும் அநேக குடிகாரர்கையில் ஒன்றுமில்லாதிருக்கும்போது குடி நினைப்பு வரவே, திருட்டுக்கும் அஞ்சாமல் பெரும் பாதகங்களைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்! இப்பேர்ப்பட்ட குடியில் பழகினவர்கள் அந்த வழக்கத்தை விடுவது அசாத்தியம். இந்த காரணங்களைப்பற்றி பவுல்போதகருடைய மகனுக்கு வாழ்க்கைப்பட எனக்கு மனமில்லை.

ஈசா.—அப்படியானால்.....................

அபி.—என் பிரிய தந்தையே! என் மட்டில் கோபங் கொள்ளாதேயுங்கள். எனக்கு கலியாணத்தின் மட்டில் இஷ்டமில்லாதபோதிலும் உங்களுக்குப் பிரியப்படும்படி யதற்குச் சம்மதித்தேன். ஒருவன் எவ்வளவு ஏழையாயிருந்தாலும் அவனை மணமுடித்துக்கொள்வேன். ஆனால் ஒருவன் லக்ஷாதிபதியாயிருந்தாலும், அவன் குடியனாயிருப்பானேயாகில் அந்தவனுக்கு நான் ஒருபோதும் வாழ்க்கைப்படேன், படேன்.

அபிராமியுடைய நியாயங்களைக் கேட்டபின் ஈசாக் உபதேசியார் அவள் தன் கருத்துக்கு இணங்கும்படி கட்டாயப்படுத்தாமல், நல்லது இதைப்பற்றி பிறகு பேசிக்கொள்ளலாமென்றார்.

மறுநாள் ஈசாக் உபதேசியார் விஸ்வாச நாயகர் வீட்டுக்குப் போய், தனக்கும் தன் குமாரத்திக்கும் நடந்த சம்பாஷணையைப்பற்றி தெரியப்படுத்தினபோது; அபிராமியுடைய புத்தித்திறமையை நாயகர் புகழ்ந்து பேசினாரே ஒழிய அபிராமியை இந்த கல்யாணத்திற்கு கட்டாயப்படுத்தும்படி சொன்னவரல்ல.

தன்னை மணமுடித்துக்கொள்ள அபிராமி சம்மதியாததைப் பற்றி விஸ்வாச நாயகர் மூலமாய் கேள்விப்பட்ட சலமோன் அதைரியப்படாமல் பலபேருடன் பேசி, எப்படியாகிலும் அபிராமியைக் கலியாணஞ் செய்துகொள்ள, கூடிய பிரயாசைப்பட்டு வந்தான். சலமோனுடைய உற்ற சினேகிதனாகிய சத்தியநாதன் அடிக்கடி பவுல்போதகரைச் சந்தித்து வருவான். விஸ்வாசநாயகரிடஞ் சென்று சலமோனை கைவிடாமல் காப்பாற்றி இரக்ஷிக்கும்படி சிபாரிசு செய்வான்.

சலமோனுடைய நடத்தை முழுது மாற, சகலராலும் மெச்சிப் புகழப்பட்டான். அபிராமியுடைய அசம்மதத்தைப்பற்றிக் கேள்விப்படவே, வேறுமனிதனாகி, ஞாயிற்றுக்கிழமை மாத்

திரமல்ல, நாடோறும் அதிகாலையில் கோவிலுக்குப் போய் பூசை காணுவான். சாயந்தர வேளையில் தவறாமல் கோவிலுக்குப்போய் தேவநற்கருணை சந்திப்பான். வாரத்தில் தவறாமல் ஒருவிசையும், முக்கியமான திருவிழாக்களிலும் நன்மை வாங்குவான். அந்த ஊர் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் பெயர்கொடுத்து ஒழுங்கு பிரகாரம் நடப்பான்.

ஒருநாள் விஸ்வாசநாயகருடன் வெகு நேரந் தனியாகப் பேசினபின், முன் தான் தாறுமாறாய் நடந்ததைப் பற்றி. விசேஷமாக குடியைப் பற்றிச் சொல்லி, இனி செத்தாலும் அந்த துர்வழக்கத்தைக் கையாடுவதில்லையென்று தான் செய்துகொண்ட பிரதிக்கினையை அவருக்கு அறிவித்து, குருவானவருக்குமுன் குடிப்பதில்லையென்று உறுதிமொழி கொடுக்க ஆசித்ததின்மேல், நாயகர் சலமோனை குருவானவரண்டைக்கு அழைத்துக்கொண்டுபோய், அவன் வந்த காரணத்தை யவருக்குத் தெரியப்படுத்தினார். ஸ்வாமியாரும் இதைப்பற்றி கேள்விப்படவே, சந்தோஷித்து, குடியால் வரும் தின்மைகளைப்பற்றி விஸ்தாரமாய் விவரித்துக்காட்டி, குடிப்பதில்லையென்று உறுதிமொழி கொடுத்து அந்த தீர்மானத்தை பிரமாணிக்கமாய் அனுசரிப்பதினால் வரும்பிரயோசனத்தையுந் தெரியப்படுத்தினபின், சலமோன் பாடுபட்ட சுரூபத்திற்குமுன் முழங்காலிலிருந்து தான் சாகுமட்டுங் குடிப்பதில்லையென்று செய்துகொண்ட உறுதிமொழியை அங்கீகரித்து, அவனை ஆசீர்வதித்து அனுப்பிவிட்டார்.

சலமோனுடைய நடத்தை யெவ்வளவு முழுதும் மாறிப்போனதென்றால், அந்த ஊர் வாலிபருக்கு அவனுடைய நடத்தை ஓர் மேல்வரிச்சட்டமாயிருந்தது. இவனை பார்ப்போரும், இவன் நடத்தையைப்பற்றிக் கேள்விப்படுவோரும் அதிசயிப்பார்கள். சலமோன் அபிராமியை மணமுடித்துக் கொள்ளும்பொருட்டு, தன்னால் கூடிய பிரயத்தனமெல்லாம் பட்டதுடன் அவன் சிநேகிதரும் விடா முயற்சியுடன் அதற்காக உழைத்துவந்தார்கள்.

ஈசாக் உபதேசியார் சலமோனுடைய நன்னடத்தையைப் பார்த்ததுடன், மற்றவர்களாலும் கேள்விப்பட்டு, சந்தோஷித்து அவனுக்குத் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து தன் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் இருந்தார். அப்போதைக் கப்போது ஈசாக் உபதேசியார் சலமோனைப்பற்றி அபிராமியுடன் பேசும்போது, அவள் முன்போல ஆக்ஷேபனை கூறாமல் மவுனமாயிருப்பாள். மௌனத்தின் அருத்தம் சம்மதமென்று உபதேசியார் நினைத்து மனத் திருப்தி யடைந்தார்.

செப அப்போஸ்தல சபையாருக்கு சலமோன் தலைமையாக நியமிக்கப்பட்ட சங்கதி கோவிலில் பிரசித்தப்படுத்தப்பட்டது. அன்று இராத்திரி ஈசாக் உபதேசியார் புசித்துக்கொண்டிருக்கும்போது, அபிராமியை நோக்கி: சலமோன் சிறுபத்தில் நடந்த நடத்தையைப்பற்றி குறை பிடித்து வந்தாயே; இன்று அவனை சபைக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டதைப்பற்றி யென்ன சொல்லுகிறாய் அம்மா?

அபி.—நான் என்ன சொல்வேன் நாயனே?

ஈசா.—இல்லை, அவன் முன்போல--குடி, சூது, திருட்டு முதலிய துர்நடத்தை யுள்ளவனா யிருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறாயோ தற்போது?

அபி.—நான் அப்படி கேள்விப்படவில்லை.

ஈசா.—செப அப்போஸ்தல சபைக்கு தலைமையா யிருப்பது லேசா? எவ்வளவோ நன்னடத்தையும் வேண்டியது! இப்பேர்க்கொத்த நற்குண சாலியை மணமுடித்துக்கொள்ள என்ன சொல்கிறாய் மகளே?

அபி.—பேசாமல் மௌனமா யிருந்தாள்.

ஈசா.—என்செல்வ புத்திரியான அபிராமி! இந்தக் கலியாணத்துக்கு உன்னை கட்டாயப்படுத்துகிறேனென்று நினைக்கவேண்டாம். என் இஷ்டத்தை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். இப்பேர்ப்பட்ட நற்குணசாலியான மாப்பிள்ளை அகப்படுவது அரிது. இந்தக் கலியாணம் அநுகூலப்படுமாகில் எனக்கு சந்தோஷ ஆறுதலும், உனக்குச் சுகச் செல்வமும், நமது குடும்பத்துக்கு கீர்த்தியுமுண்டாகுமென்பதற்கு சந்தேகமில்லை, என்ன சொல்லுகிறாய் மகளே?

அபி.—நாயனே, நீர் எனக்குப் பிதா, நான் உமது பிள்ளை. உங்களுடைய விருப்பத்திற்கு எதிரிடை செய்ய நானார்? ஆனாலிது கனத்த விஷயமா யிருப்பதால் நான் தீர்க்க இதைப்பற்றி ஆலோசனை செய்து தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.



ஈசாக் உபதேசியார் தன்மகளுடைய வார்த்தையைக் கேட்டபோது தன் கருத்துக்கு இணங்கி வருவாளென்று நினைத்து உள்ளத்தில் சந்தோஷங் கொண்டார்.

(இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### சிநேகம்—சம்பாஷணை.

1. அற்ப சகவாசம் பிராண சங்கடமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

2. ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதனை மதித்து நடத்தும் சிநேகந்தான் நீளித்திருக்குமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

3. ஒருவனை அறிமுகமுள்ளவனாய்த் தெரிந்து கொள்ளுவதில் எச்சரிக்கை யாயும், சிநேகிதனாய்த் தெரிந்துகொள்ளுவதில் அதிக எச்சரிக்கையாயும், பிராண நேசனாய்த் தெரிந்துகொள்ளுவதில் விசேஷ எச்சரிக்கையாயு மிருப்பது ஒழுங்கு.

4. அறிமுக முள்ளவர்கள் பலராயும் சிநேகிதர்கள் சிலராயு மிருப்பது ஒழுங்கு.

5. இன்றைக்குப் பகையாளியா யிருப்பவன் நாளைக்குச் சிநேகிதனாயும், இன்றைக்குச் சிநேகிதனாயிருப்பவன் நாளைக்குப் பகையாளியாயும் ஆகக்கூடு மாகையால், யாவரோடும் எச்சரிக்கையாய் நடந்துகொள்ளுவது ஒழுங்கு.

6. பேச்சு வெள்ளிக்குச் சமானமென்றும், மவுனமோ தங்கத்திற்குச் சமானமென்றும் அறிந்திருப்பது ஒழுங்கு.

7. பெரியவர்களும் புத்திசாலிகளும் பேசும்போது நாம் வினயத்துடன் காது கொடுத்து கேட்பது ஒழுங்கு.

8 வில்லம்பின் விஷத்தைவிட சொல்லம்பின் விஷமே கொடியதாகையால், பேச்சில் எச்சரிக்கையாயிருப்பது ஒழுங்கு.

9. பலபேர் பல சுபாவ முள்ளவர்களாகையால், அவரவர்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளுவது ஒழுங்கு.

10. பேச்சினால் பாவங் கட்டிக்கொள்ளாதவனே சாங்கோபாங்க முள்ளவனென் றறிந்திருப்பது ஒழுங்கு.

11. பிறருடைய கெட்ட விஷயங்களைப் பற்றிப் பேசாமல் நல் விஷயங்களைப் பற்றிப் பேசி தனக்குப் பிரிய மற்ற காரியங்களின் மட்டில் மவுனமா யிருப்பது ஒழுங்கு.

(சுபாவத்திலேயே துர்நாட்டம் கொண்டிருக்கும் மனிதனானவன் ஊரில் நடக்கும் கெட்ட விஷயங்களைக் கேட்டால், விசேஷமாய் பெரியவர்கள், புத்திசாலிகள் இப்படி, அப்படி விபரீதமாய் நடக்கிறார்களென்றறிந்தால், இப்படியோ! நான் மாத்திரம் ஏன் ஐம்புலன்களையும் கட்டிக்காத்து கேவலம் பெண் பிள்ளையைப்போல் பயந்து சாகவேண்டியதென்று மனத்தளர்ச்சி யடைந்து, தானும் அவர்களைப்போல் நடக்க ஆவல் கொள்ளுவான். நல்விஷயங்களைக் கேட்டால் ஐயோ! நான் அப்படி யில்லையே என்று துக்கித்து தன் நடத்தையைச் சீர்திருத்த வருந்துவான். ஆதலால், எவ்விதமான சம்பாஷணை நன்று? ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்.)

12. கற்புக்கு விரோதமான வார்த்தை, ஈரர்த்தமுள்ள பேச்சு, தூஷணம் இப்படிப்பட்டவைகளை யாராவது பேசக்கண்டால் உடனே முகத்தைச் சுழித்துத் தன் வெறுப்பைக் காட்டுவது ஒழுங்கு.

13. பெரியவர்களிடம் வணக்கத்தோடும், சிறியவர்களிடம் பட்சத்தோடும், சரிசமானமுள்ளவர்களிடம் மரியாதையோடும் பேசுவது ஒழுங்கு.

14. சாதாரண சம்பாஷணையில் வேதக்காரியங்களைப் பேசுவது பயனல்ல வென் றறிந்திருப்பது ஒழுங்கு:

15. தான் பேசும்போது கேட்பவர்களுடைய முகத்தைக் கவனித்து அவர்களுக்குப் 'பிரியமில்லாத சம்பாஷணையை உடனே நிறுத்துவது ஒழுங்கு.

16 நெடுநேரம் பேசுகிறவனைப் பிறர் மதிக்கிறார்களென்று நாம் நினைப்பது போலவே, பேசுங்காரியங்களைக் காது கொடுத்

து கேட்கிறவனையும் பிறர் மதிக்கிறர்களென் றறிந்திருப்பது ஒழுங்கு.

17. பிறர் மனம் நோகும்படி நிந்தையும் பரியாச முமான வார்த்தைகளைப் பேசுகிறவர்களும், உரத்த சத்தமாய்க் கூச்சல் போடுகிறவர்களும், ஒருவர் பேசும்போது குறுக்கே பேசுகிறவர்களும், வீண் வம்பு வளர்க்கிறவர்களும், பேச்சு பேச்சுக்கு சத்தியமாய்ச் சொல்லுகிறேன், வேண்டுமானல் கேட்டுப்பார் என்கிறவர்களும் தாழ்ந்தவர்கள், நீசர் என் றறிந்திருப்பது ஒழுங்கு.

18. பிறருடைய காரியங்களைப்பற்றி வீண் சம்பாஷணை செய்யாமல், புஸ்தகம், வாத்தியம், சிற்பம், குடும்ப சம்பவங்கள், இராஜாங்க காரியங்கள், நடை, உடை, பாவனைகள்; புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் படித்த விஷயங்கள் ஆகிய இவைகளைப்பற்றி சம்பாஷிப்பது ஒழுங்கு.

19. பகலில் பக்குவம் பார்த்துப் பேசி இரவில் அது தானும் பேசாதிருப்பது ஒழுங்கு.

20. சாந்தமுள்ள மறுமொழி கோபத்தைத் தணிக்குமென் றறிந்திருப்பது ஒழுங்கு. (இன்னும் வரும்.)

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### மைலாப்பூர் அர்ச். தோமையார் கல்லறைக்குத் திருயாத்திரை.

சென்ற மார்ச்ச மாதம் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சென்னையைச் சேர்ந்த பார்க்டவுன் அர்ச். அந்தோனியார் கோவிலைச் சேர்ந்த கிறீஸ்துவர்களும் ஷை ஆலயத்தின் விசாரணை குருவாகிய சங். J. J. Houbaer குருசுவாமிகளின் பக்தியுள்ள முயற்சியால் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற இருபது புதுக்கிறீஸ்துவர்களும் ஒன்றுசேர்ந்து அர்ச். அந்தோனியார் கொடியைப் பழையவுபதேசியார் ம-ா-ா-ஸ்ரீ அப்பாதுரை பிள்ளை கையிலேந்தி முன்செல்லு எல்லோரும் ஜெபமாலை, பிரார்த்தனை முதலிய ஜெபங்களை உருக்கத்துடன் ஜெபித்துக்கொண்டு வெகு ஒழுங்காக பீச் ரோட் மார்க்கமாய் நடந்து மைலாப்பூரிலுள்ள அர்ச். தோமையார் கோவிலுக்குத் திரு யாத்திரையாய்ச் சென்றார்கள். அவர்கள் கோவிலைச் சமீபிக்கவும் அக்கோவில் மணிகளெல்லாம் இவர்களை வாருங்கள், வாருங்களென்று அழைப்பதுபோல் வெகு அக்களிப்போடு சப்தித்தன. அவர்கள் கோவிலுக்குள் சேர்ந்ததும் மேற்படி அப்போஸ்தலர் கல்லறையின் மேல் அமைந்துள்ள பீடத்தில் மேற் சொன்ன குருசுவாமியாரால் ஏறக்குறைய 9½-மணிக்குப் பூசை ஆரம்பமானது. திருயாத்திரையாய்ச் சென்ற இந்த கிறிஸ்துவர்களில் அநேகர் திவ்விய சற்பிரசாதம் அருந்தினர்கள். அந்தப் புதுக் கிறிஸ்துவர்களுடைய பக்தி யுற்சாகத்தை மேலுந் தூண்டத்தக்கதாக இனிமையான வாத்தியமும், ஆத்தும இரட்சிப்பின் மட்டில் அதிக ஆவலும் ஊக்கமுங் கொண்டிருக்கும் ஷை குரு சுவாமியாரால் தமிழில் சிறந்த ஒரு பிரசங்கமும் நடந்தேறியன. பூசைக்குப்பின் தருமவாளரானவொருவரால் தங்களுக்குக் கிடைத்த சிற்றுண்டியை இவர்கள் அருந்தி, வெகு முகமலர்ச்சியோடு தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முன்னின்று உதவி புரிந்த மைலாப்பூர் அர்ச். தோமையார் ஆலயத்து விசாரணை குருவானவர் சங். பின்ரோ சுவாமியாருக்கும், பூசை நேரத்தில் தங்களுக்குப் பக்தி யுற்சாகத்தை யுண்டுபண்ணும்படியான பலவித இனிய சங்கீதங்களை வாசித்த சங். ஐலிகர்ஸ் சுவாமியாரவர்களுக்கும் தங்கள் நன்றி யறிதலைச் செலுத்தித் தங்கள் தங்கள் இல்லிடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இப்புது கிறிஸ்துவர்கள் தாங்கள் கைப்பற்றிய சத்தியமறையில் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு நம்முடைய தேசத்தின் அப்போஸ்தலரான அர்ச். தோமையாருடைய உதவியை இரந்து கேட்டுக்கொள்ளும்படியாக இத்திருயாத்திரை நடந்தேற காரணமாயிருந்த சங்.



J. J. Houbaer சுவாமியாரை சர்வேசுரன் ஆசீர்வதிப்பாராக. இவரால் இன்னும் அநேக ஆத்துமங்கள் இரட்சண்ய பேறுபலன்களுக்குப் பங்காளிகளாக இவருக்கு நீடிய ஆயுளையும் நல்ல சௌக்கியத்தையுஞ் சர்வேசுரன் கட்டளையிடுவாராக.

ஓர் திருயாத்திரி.

### தூத்துக்குடியில் சென்னை கவர்னர்.

சென்னை கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் அவர்கள் நிகழ் மாதம் 4-ம் தேதி இவ்வூருக்கு விஜயம் செய்தனர். இவர் அன்றுகாலை 7¼ மணிக்கு ஆஷ் மெமோரியல் ஹாலில் எமது முனிசிப்பல் செயர்மன் ஸ்ரீமான் குரூஸ் பெறுனாந்திஸ் அவர்களால் வரவேற்கப்பெற்று, சபாமண்டப மேடையில் தமது பிரைவெட் செக்ரெற்றரி, மிலிற்றெரி செக்ரெற்றரி, டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், முனிசிப்பல் செயர்மன் இவர்கள் புடைசூழ ஆசனத் தமர்ந்தனர். செயர்மன் தமது கவுன்சிலர்களை கவர்னர் பெருமானுக்கு அறிமுகம் பண்ணிவைத்ததும், நகர்வாசிகளின் சோபனப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார். பத்திரத்திற் கண்ட மூன்று முக்கிய பாகங்கள்: இந்திய மண்டலத்தின் தென்கோடி வாசலாகிய தூத்துக்குடியின் மட்டில், தனுஷ்கோடி தலை மன்னாரின் நூதன போக்குவரவை யொட்டித், துரைத்தனத்தார்க்கு ஏதேனும் கவனக்குறைவு தோன்றுதல் உசிதமல்லவென்பதும், போதுமான குடிதண்ணீர் வசதிக்குப் போந்த ஏற்பாடு பண்ணவேண்டுமென்பதும், ஈங்கு ஓர் கம்மியர் சாலை ஸ்தாபித்துச் சாஸ்திர முறையில் கைத்தொழிற் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்பதுமே. இரண்டாவது பத்திரம் ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனியாரால் வாசிக்கப்பட்டது. இதன் பிரதான குறிப்புகள், பாளையங் கோட்டையைப்போல இங்கும் ஒரு ஐரோப்பிய டாக்டரை நியமிக்க வேண்டுமென்பதும், நாள் முழுதும் வேலை பார்க்கக் கூடியதாய் முனிசிப்பாலிட்டிக்கு "பேயிட் செயர்மன்" ஒருவரை ஏற்படுத்த வேண்டுமென்பதும், தங்கள் பிரதிநிதிகளில் ஒருவர் நகரசங்கத்தில் மெம்பராயிருக்க இடந்தரவேண்டுமென்பதுமே. மேற் சொன்ன இருபத்திரங்களுக்கும் கவர்னர் ஒரு சேர பதில் வழங்கினர்.

நகர சங்கத்தின் வேண்டுகோளுக்கு துறைமுகத்தை யொட்டிய கவனம் துரைத்தனத்திற்கு லவலேசமுங் குறையாதென்றும், குடிதண்ணீர் வசதிக்குக் குறையற்ற ஏற்பாடு பண்ணுவதாகவும், கைத்தொழிற் சாலையை யொட்டி இப்போது திட்டமாய்ச் சொல்ல முடியாதென்றும், வர்த்தகக் கம்பெனியின் வேண்டுதலுக்கு, ஐரோப்பிய டாக்டர் விஷயம், இலங்கை அரசாட்சியாரால் உதவப்பெற்றுள்ள டாக்டரை அவர்கள் திரும்ப அழைத்துக் கொள்ளுங்காலத்தில் கவனிக்கப்படுமென்றும், முனிசிபாலிட்டிக்கு இலவசமாய் உழைக்க இவ்வளவு திராணியும் யோக்கியதா பட்சமுமுள்ள ஒருவர் கிடைத்திருக்கும் இந்தக் காலத்தில் இதற்கு மிஞ்சியோர் "பெய்ட் செயர்மன்" வேண்டுமென்பதின் கருத்துத் தமக்குப் புலப்படவில்லையென்றும், நகர சங்கத்துள் வியாபாரிகளின் பிரதிநிதியை வைத்துக் கொள்வதற்கு, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரைக் கேட்டுக்கொள்வதே முறையென்றும் சொல்லலாயினர்.

அப்புறம் 8½மணிக்குத் தமது பரிவாரங்களுடன் புறப்பட்டுக் கடலில் சிப்பிப்பார்களைச் சோதிக்கப்போய் மாலை 4½மணிக்குத் திரும்பி வந்ததும், "கால்ட்வெல்" ஹைஸ்கூலைப் பார்வையிட்டுக்கொண்டு, 6மணிக்கு நகரசங்கத்தால் ஏற்படுத்தப்பெற்ற தோட்டகச்சேரிக்கு வந்தனர். இதிற் கூடியிருந்த சர்வத்திராளும் சிற்றுண்டி அருந்திக் கொண்டபின்னல், ஸ்ரீமான் குரூஸ் பெறுனாந்திஸ் அவர்கள் கவர்னர் பெருமானுக்கு, ஸப்ஜட்ஜ், முனிசிப், பென்ச்மாஜிஸ்ட்ரேட்கள், வக்கீல்கள், வியாபாரிகள் முதலிய பெருந்தனக்காரரில் ஏறக்குறைய இருநூறுபேரை அறிமுகம் பண்ணிவைத்தனர். இந்நேரத்தில் பலவித வாத்தியங்களும், வாண வேடிக்கைகளும், ஜால வித்தைகளும், விலங்கு, பறவை அபிநயங்களும் தத்தம் அலுவல்களை ஜரூராய் நடாத்திக் கொண்டிருந்தன. அப்புறம் கவர்னர் பெருமான் எல்லோரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு ஸ்ரீமான் குரூஸ் பெறுனாந்திஸ் அவர்களோடு பீச்ரோட்டு மார்க்கமாய்க் கால்நடையாய் நடந்து புகைரதம்புக்கி நள்ளிரவில் மணியாச்சியை அடைந்து, காலையில் ஆங்கு பருத்திப்பயிர் சாகுபடி செய்பவரைக்கண்டு சுகக்ஷேமம் விசாரித்துத் திரும்பவும் தூத்துக்குடி சேர்ந்து, பகல் 11மணிக்கு ஸ்ரீமான் குரூஸ் பெறுனாந்திஸ், சுந்தரம் ஐயர், அநந்தராமராவ், தொன் ஜி. மோத்த இவர்களுக்கு பேட்டி கொடுத்தனர். பரதர், கிறிஸ்துவேதம் பெற்றுக்கொண்ட வரலா

று அத்தனையும் கவர்னர் பெருமான் ஸ்ரீமான் குருஸ் பெறுநாந்தில் அவர்கள் மூலமாய் அறிந்திருப்பாரென்று தெரிகிறது.

அதன்பின் மாலை நேரத்தில் பிரான்சிஸ் சவியேர் கலாசாலை, ஆஸ்பத்திரி, முனிசிப்பல் பெண்பாடசாலை இவைகளைப் பார்வை யிட்டனர். ஆஸ்பத்திரியில் முனிசிப்பல் கவுன்சிலர் அனைவரையும் வரவழைத்து ஸ்ரீமான் குருஸ் பெறுனாந்தில் அவர்களைத் தமது வலது புறத்தில் உட்காரவைத்துப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். பின், செயர்மன் அவர்கள் சகிதம் மோட்டார்வண்டியில் புறப்பட்டுக் கோரம் பள்ளத்தைப் பார்த்துக்கொண்டு, இரவு 7½-மணிக்குத் திரும்பிவந்து ஸ்டேஷனை அடைந்து நகரின் பிரிவுபாசாரத்தைச் செயர்மன் அவர்கள் வழியாகப் பெற்றுக்கொண்டு நேரே சென்னைக்குப் புறப்பட்டனர்.

இத்தனை அருமையான கவர்னரை இந்நகர்வாசிகள் என்றைக்கேனும் பார்த்திருக்க மாட்டார்களென எல்லோரும் ஒருவாய்ப்படப் பேசிக்கொள்கின்றனர். கவர்னர் பெருமான் நீடு வாழ்க! விஷயாம்சங்கள் சர்வமும் குறையற நடைபெறுவதற்கு ஏதுகரமா யிருந்த எமது முனிசிப்பல் செயர்மன் ஸ்ரீமான் குருஸ் பெறுநாந்தில் அவர்களும் பல்லாண்டு வாழ்க்கடவர்.

மந்திரநகர்வாசி.

## கொன்னைக் குடியில் கும்பகோணத்து மேற்றிராணியார் விஜயம்.

சென்ற 1914ஆம் பெப்ரவரிமீ 28உ சனிக்கிழமை காலை கும்பகோணத்து மேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ஷப்புயி என்னும் நாமதேயங்கொண்ட மேற்றிராணி யாண்டவரவர்கள் இரண்டு குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஆயிரக்கணக்கான சனங்கள் விருதுகளைக் கையிலேந்தி தம்மைச் சூழ்ந்துவர, மேளவாத்தியங்கள் ஏராளமாய் முழங்க, அதிர் வெடிகள் தொனிக்க குருமார்களும் நால்வரோடு எங்கள் ஊர் கொன்னைக் குடியின்கண் வந்திறங்கினர். ஆண்டவரவர்கள் ஊரின் அருகாமையில் வந்தவுடன் அவருக்காக அமைக்கப் பட்டிருந்த அழகிய புஷ்பப் பந்தலில் ஓர் உயர்ந்த சிம்மாசனத்தின்மீது தமிழ்ட்னிருந்த குருக்கள் நால்வரும் தம்மைச் சுற்றிலும் வீற்றிருக்க, தமது செங்கோலைக் கையிலேந்திச் சிரசில் கிரீடத்தை அணிந்து உட்கார்ந்தார். உடனே நவமான சங்கீதம் பாடி ஆண்டவரவர்களுக்கு மாலை சூட்டி சால்வைமுதலியது சாத்தி அச்சிற்பதிப்பித்த சிறந்த வந்தனோபசாரப் பத்திரிகைகள் இங்கிலீஷிலும் தமிழிலும் வாசிக்கப்பட்டன.

வாசித்தானதும் ஆண்டவரவர்கள் கூடியிருந்த ஆயிரக்கணக்கான சனங்களையும் ஆசீர்வதித்தபின் மிக்க ஆரவாரத்தோடும் வைபவத்தோடும் தோரணங்களாலும் பலபாஷை வந்தனோபசார மொழிகளாலும் அலங்கரிக்கப் பட்டுள்ள வீதிகள் வழியாகச் சென்று கோவிலுள் பிரவேசித்தனர். அன்றையத்தினம் கொன்னைக் குடியின் அப்பெரிய கோவிலின் அலங்காரத்தைக் கண்டவர்கள் இது மோக்ஷமோ என்று சொல்லும்படி அவ்வளவு மனோகரமாயிருந்தது. ஆண்டவரவர்கள் கோவிலுள் பிரவேசித்துக் கூடியிருந்த சனங்களுக்கு ஓர் அமிர்த பிரசங்கம் செய்து தமது அப்பஸ்தோலிக்கு ஆசீர்வாதம் அளித்தார். ஆண்டவரவர்கள் தாமிருந்த 12 நாள் பரியந்தம் இக்கொன்னைக் குடிப்பங்கின் விசாரணை இடங்களெல்லாம் தாமே சென்று ஆங்காங்கு தேவத்திவ்விய அநுமானங்களைத் தந்து தம்மை உபசரித்துக்காண விரும்பிய சகல ஊர்களிலுமுள்ளவர்கள் இந்துக்கள் அனைவரையுமே அன்போடு வரவேற்றுக்கொண்டு, அவர்க ளெல்லோருக்கும் தமது ஆசீர் அளித்தார். இந்த நல்ல மேய்ப்பன் இக் கொன்னைக் குடிப்பங்கிலிருந்த 12 நாளையில் பாவ சங்கீர்த்தனம் செய்தவர்களின் தொகை 2037, உறுதிப் பூசுதல் பெற்றவர்களின் தொகை 626. தயை நிறைந்த சர்வேஸ்பரன் இந்த நல்லமேய்ப்பனுக்கு நீடிய ஆயுளைத் தந்து பல்லாண்டு ஆத்துமரக்ஷண்ணிய அலுவலை நிறைவேற்றிவரக் கிருபை புரிவாராக!

## வராதாக்ஷிமலை அர்ச். லூர்துமாதா கோவில் திருவிழாச் சிறப்பு.

திருநெல்வேலி ஜில்லா சேர்ந்தமரத்துக் கடுத்த திருமலைபுரம் "வராதாக்ஷிமலை" என்றழைக்கப்படும் மலையின்மேல் புதிதாய்க் கட்டப்பட்டு சென்றஆம் மார்ச்சுமீ 30உ பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவாலயத்தில் 1914-ஆம் பிப்ரவரிமீ 2உ துவஜாரோஹணஞ் செய்து நவநாட்களில் காலை, மாலை, ஜெபம், பிரார்த்தனை முதலிய நற் கிரியைகள் நடத்தப்பட்டன. 10உ இரவு 7-மணிக்கு சுகந்த பரிமள மலர்களாலும், நானாவித புஷ்பச்செண்டுகளாலும் வெகு விசித்திரமாய் சிங்காரிக்கப்பட்ட பீடத்தில் சங்கைக்குரிய அடைக்கலநாத சுவாமி யவர்களால் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டபின் நாகசுரமுதலிய பேன்று வாத்தியங்கள் முழங்க அதிர்வெடி, மத்தாப்பு, முதலிய பலவித வாண வேடிக்கைகளுடன் பிரகாசமான தீவர்த்தி வெளிச்சத்தில் அர்ச். லூர்துமாதா சுரூபம் அழகிய ஓர் ரதத்தில் எழுந்தேற்றஞ் செய்து சுற்றுப்பிரகாரம் நடந்தது. பல திசைகளி லிருந்து ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களும் இந்துக்களும் வந்திருந்தபடியாலும் மலையின்மேல் கற்பாறையில் நித்திரைசெய்யவசதியில்லாததினாலும் நித்திரை செய்தாலும் திரளான கூட்டத்தில் இராத்திரிகாலங்களில்மலைமேல் பலவித அபாய மிருக்குமென்றும் நேரப்போக்குக்காக சேர்ந்தமரம் R. C. ஸ்கூல் எட்மாஸ்டர் மிஸ்டர். S. சத்தியநாததேவர் அவர்களின் முயற்சியால் அந்நேரின் மாணவர்களால் "தர்மமே ஜெயம்" என்பதைப்பற்றி ஓர் டிராமா வெகு நவரச அலங்காரத்துடன் நடிக்கப்பட்டது. 11உ காலை திவ்ய பூசைக்குப் பிறகு திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு சப்பர சுற்றுப் பிராகாரத்துடன் உற்சவம் முடிவு பெற்றது. மலையின் உச்சியில்விஸ்தாரமான சமதளத்தில் இவ்வளவு நேர்த்தியான தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டதைப் பற்றியும் கோவிலின் பக்கத்திலிருக்கும் சுனைபோன்ற தெப்பத்தின் ஜல மகத்துவத்தைப் பற்றியும் கண்டு ஆனந்தமடையாதார் ஒருவரு மில்லை. மாதந்தோறும் முதல் சனிவாரம் இங்கு திவ்விய பூசை நடக்கிறது. இத் தேவாலய விஷயமாக மிகுந்த முயற்சி எடுக்கும் திருச்சி ம-ள-ள-ஸ்ரீ தி. ச. அமிர்தசாமி பிள்ளை யவர்களுக்கு தேவதாயார் வேண்டிய சகாயஞ் செய்வாளாக. கோவிலின் முன் பக்கம் ஓர் மண்டபமும் தெப்பத்தின் ஓரம் செபிப்பும் கட்டவேண்டியது அத்யாவசியமா யிருப்பதால் இதை வாசிக்கும் நண்பர்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தால் நலமாயிருக்கும்.

Mary's Hall
Sendamaram.
16—2—14. } K. V. Francis Xavier.



# MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல வர்த்தமானம்.

—

**தேவமாதாவின் விலையேற்ற படம்.**—பேர்போன சித்திரக்காரனான இரபேல் என்பவரால் எழுதப்பட்ட அர்ச். தேவதாயாரின்படம் ஒன்றை அமேரிக்கர் ஒருவர் 140,000 பவுன் விலை கொடுத்து வாங்கினார்.

**நாயின் விசுவாசம்.**—பிரான்சு தேசத்துள்ள பாரிஸ் நகரத்தில் ஒரு நாய் தன்னை வளர்த்தவர் இறந்தமைக்குச் சகியாது அவரைப் புதைத்துள்ள விடத்தில் ஒருவாரம் உணவு கொள்ளாதிருந்து இறந்துபோயிற்று. நன்றியறியா மக்கள் நாயினுங் கடையரென்பது பிசகோ?

**ஜப்பான் தேசத்தில் சேசு சபைப் பாடசாலை**—உயர்தரக் கல்வி விர்த்திக்காக சேசு சபையாரால் ஜப்பான் தேசத்து இராஜதானி நகராகிய டோக்கியோவில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் பாடசாலையை அத்தேசத்து அதிகாரிகள் அங்கீகரித்துக் கொண்டார்கள்.

**ஆகாய கமனம்.**—ஹெர் பொல்லிஞ்செர் என்ற ஒரு இஞ்சினியர் டிட்டெர் பெல்ட் என்ற ஊரிலிருந்து புறப்பட்டு யூரல் மலை வரையில் ஒரே நெட்டாய் ஒரு இடத்திலும் இறங்காமல் பறந்துபோனார். இவர் பறந்துபோன தூரம் 1875 மைல். இதுவரையில் ஒருவரும் இவ்வளவு தூரம் ஒரே தடவையில் போனதில்லையாம்.

**கட்டிட கிராண்டு.**—வேப்பேரி பிரசன்டேஷன் கன்னியாஸ்திரிமார்களின் கண்காணிப்பிலிருக்கும் மிடில் ஸ்கூல் மாணாக்கரின் பள்ளிக்கூடங் கட்டுவதற்காக ரூ. 31,178-ம், பெரம்பூரில் அர்ச். சூசையப்பரின் மிடில் ஸ்கூல் கட்டும்பொருட்டு ரூ. 7,600-ம் சென்னை கவர்ன்மெண்டாரால் உபகரிக்கப்பட்டிருக்கிறது.

**பிரிவினை பிஷப்பும் அர்ச்.வர்கள் வணக்கமும்.**—லண்டன் பட்டணத்தின் புரொடெஸ்டாண்டு பிஷப்பு சென்ற வருடம் ஆங்கிலிக்கன் சபைக்கூட்டத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் வணக்கமும் மன்றாட்டும் தங்கள் சபையிலும் ஏற்படுத்தவேணுமெ

ன்று பிரேரேபித்தார். பிரிவினை மதங்கள் சத்திய வேதத்தின் வழிக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் வந்துகொண்டிருக்கின்றன.

**ருசியாவில் சண்டமாருதம்.**—அஸோப்கடலில் கடும்புயல் அடித்துக் கடல் தண்ணீர் பொங்கிக் குபன்மாகாணத்தில் பல ஊர்களை அமிழ்த்தினது. டாம்ர்ஜக் என்ற ஊரில் ஓர் அணை உடைந்துபோனபடியால் நூற்றுக்கணக்கான ஜனங்கள் மாண்டார்கள். ஸ்டனிட்ஸ, அய்ஷ்டிர்ஸகாஜா என்ற இடங்களில் ஆயிரக்கணக்காய் ஜலத்தில் அமிழ்ந்திச் செத்தார்கள். யாசன்காஜாவில் 150 பேருக்குமேல் இறந்தார்கள்.

**ஜப்பானில் பயங்கரமான பூமி அதிர்ச்சி.**—அக்கிட்டாவில் கடுமையான பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. ஒருமணி நேரத்துக்குள் ஆறுமுறை அதிர்ச்சிகள் உண்டாயின. ஜனங்கள் திகிலடைந்தார்கள். வீடுகள் இடிந்து விழுந்தன. ரயில்பாதைகளும் தந்திக்கம்பிகளும் அநேக இடங்களில் சேதப்பட்டன. ஓமாகிரி, காரிவானோ வென்ற இடங்களில் பதினொருபேர் செத்தார்கள். அஸாமாவென்ற இடத்தில் ஓர் அக்கினிமலை கக்கி பிரமாதமான சேதம் உண்டாக்கிற்று.

**காவேரி மத்தியஸ்த கோர்ட்டார்.**—மைசூர் சமஸ்தானத்தில் காவேரியில் கன்னியம்பாடி அணை போடுவதால் அந்நதி பாயும் இடங்களில் தண்ணீர் வசதி குறைவுபடுமென்று ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விசாரித்து, ஏற்படும் தகராறை மத்தியஸ்தஞ் செய்து தீர்க்க ஒரு போர்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த போர்டு இதுவரையில் மைசூரில் கோர்ட்டு நடத்தி விசாரணை செய்துவந்தார்கள். மார்ச்சு மாதம 15-ந் தேதி முதல் சென்னையில் விசாரணை நடத்திவருகிறார்கள்.

**100 வயதுடையவர்.**—பல்கேரியாவில் 3888, ருமேனியாவில் 1074 ஸெர்வியாவில் 573, ஸ்பெய்னில் 410, பிரான்ஸில் 213, இத்தாலியாவில் 146, இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் 92, ருஷ்யாவில் 89, ஜர்மனியில் 76, நார்வேயில் 28, ஸ்வீடனில் 10, பெல்ஜியத்தில் 5, டென்மார்க்கில் 2 பேர் நூறு வயதுடையவராக விருக்கின்றனரென்று ஜர்மன் தேசத்தில் வெளியிட்ட கணக்கினால் தெரியவருகின்றது. வயது மிகுதியானது அந்தந்த தேயத்து சீதோஷ்ணாதி இயற்கை யமைப்புகளால் மட்டுமல்லாமல், அவரவர்களுடைய உண்டி, இல்லறவாழ்க்கை, அநுஷ்டான முதலியவற்றாலும் நிச்சயிக்கப்படுகிறது.

**தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்.**—இந்தியருடைய விவகாரங்களை விசாரிக்க உட்கார்ந்த கம்மிஷன் இப்போது தன்னுடைய ரிப்போர்ட்டை முஸ்திப்பு செய்திருக்கிறது. அதன் பிரகாரம் மூன்று பவுன் தலைவரி எடுபட்டுப் போமென்றும், கலியாணசங்கட்டங்களும் ஒழுங்குபட்டுப் போமென்றுஞ் சொல்லப்படுகிறது. "கம்மிஷனுடைய ரிப்போர்ட் பிரகாரம் நடந்தால் இருசாராருக்கும் கீர்த்தி உண்டாகுமென்றும், தென்னாப்பிரிக்காவின் செழுமைக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நன்மைக்கும் மிக அநுகூலமா யிருக்குமென்றும்" லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

**காலஞ் சென்ற லார்டு மின்ரோ.**--லார்டு ஹார்டிஞ்சுக்கு முந்தி இந்தியாவில் வைசிராயாக இருந்த லார்டு மின்ரோ அவர்கள் இங்கிலாண்டில் ஒருவாரம் வரையில் நோயாயிருந்து இம்மாதம் இறந்துபோய்விட்டதைக் கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். இவர் வைசிராயாக நியமிக்கப்படுவதற்கு முந்தி இராணுவத்தில் பாரி உத்தியோகங்களை வகித்துவந்தார். இவருடைய நிர்வாககாலத்தில்தான் வைசிராய் நிர்வாக சபையிலும் லோக்கல் கவர்ன்மெண்டு நிர்வாக சபையிலும் சுதேச மெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவருடைய காலத்தில் தான் சட்ட சபைகளும் விஸ்தரிக்கப்பட்டன. இவருடைய பேர் இந்தியர்களுடைய இருதயத்தில் ரிப்பன் பிரபுவுக்கு இரண்டாவதாக பதியப்பட்டிருக்கிறது.

**முளகு மூடு.**—கனந்தங்கிய கொல்லம் மேற்றிராணியாரவர்கள் சென்றமார்ச்சு மீ 2-ம் தேதி முளகுமூட்டுப் பங்கு விசாரணைக்குப் போய் அன்று காலை 7-மணிக்குப் பூசை யாரம்பிக்கிறதற்கு முன் மனதைக் கவரத்தக்க வுருக்கமான ஒரு பிரசங்கஞ் செய்தார். பின் பூஜை யாரம்பித்து 1800 பேர்களுக்குத் தமது கரத்தாலேயே



சற்பிரசாத மளித்தார். மறுநாளும் அதே மாதிரி 2100 பேருக்கு சற்பிரசாதமளித்து அர்ச். பாப்பானவரின் நாமத்தால் பரிபூரண பலனுள்ள ஆசீர்வாதத்தையுங் கொடுத்ததுமல்லாமல், அன்றையத்தினமே தமது சிரமத்தைச் சற்றும் சட்டை செய்யாமல் $10\frac{1}{2}$ மணிக்கு ஆங்கு ஆயத்தமாயிருந்த 1229 கிறிஸ்துவர்களுக்கு உறுதிப் பூசுதலென்ற தேவத்திரவியாநுமானத்தை நிறைவேற்றினார். அன்றுமாலை $3\frac{1}{4}$ மணிக்கு கிறிஸ்துவேத போதகசபையொன்று கூடிற்று. அதில் அக்கிராசனாதிபதியாய்மேற்றிராணியாரவர்கள் வீற்றிருந்து அச்சபையாருக்குத் தக்கப் புத்தியைப் போதித்து அவர்களெல்லோரையும் மிக்க அன்போடு ஆசீர்வதித்தருளினார்.

**திருயாத்திரையாய்ச் செல்லுகிறார்கள்.**-பின் குறிக்கப்பட்ட கத்தோலிக்கு இந்திய கனவான்கள் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு, ஜெருசலேம், பெத்லேகேம் முதலிய புண்ணிய பூமிகளையும், உரோமை, லூர்து முதலிய திவ்ய க்ஷேத்திரங்களையும், பாரிஸ், லண்டன் முதலிய விநோத நகரங்களையும் தரிசித்துவர யோசித்து, இம்மாதம் 26-ம்வ கொழும்பில் கப்பலேறத் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்கள் குறித்த விடங்களுக்கெல்லாஞ் சென்று கோரிய நன்மைகளையடைந்து சிந்தாத்திரையாய்த் திரும்பிவருமாறு, நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறே நமது நல்லாயன் சந்தாதார்களெல்லாரும் வேண்டிக்கொள்ளக் கோருகிறோம். இவர்கள் நாம தேயங்களாவன: மெஸர்ஸ். ஏ. புஷ்பநாதப் பிள்ளை, மாஜி டிப்டி கலெக்டர், குரும்பாகரம்; டி. ஏ. குசையாப்பிள்ளை, திருச்சினாப்பள்ளி; எஸ். தேவ பக்தி கவுண்டர், திண்டுகல்; ராய்சாஹேப் காரசால அருளைய நாயுடு, கீழ்ச்சேரி; எச். டி. பந்துலு, கீழ்ச்சேரி.

**இங்கிலாந்து மனந் திரும்புதல்**—இங்கிலாந்து சபையைவிட்டு மனந் திரும்பி குருப்பட்டத்துக்குப் படித்த மூன்று பாதிரிமார்களுக்கு சென்ற டிசம்பர் மீ 20ந் திகதியில் வெஸ்ட்மினிஸ்டரி லுள்ள கத்தோலிக்கு அதிமேற்றிராசன ஆலயத்தில் குருப்பட்ட மளிக்கப்பட்டது. தற்காலத்தில் இங்கிலாந்தில் மனந்திரும்புகிறவர்களின் தொகையைப் பார்க்கும்போது பிராஞ்சுதேசமும் போர்த்துகால் தேசமும் தங்களுடைய அநியாய சட்டத்தினால் தங்களுக்கு வேண்டாமென்று நிராகரித்த தேவ இஷ்டப்பிரசாத வூற்றானது எங்கே பாயலாமோவென்று வழிதேடி தனக்கேற்ற நிலங்களாகிற இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பாயத்தொடங்கி ஏராளமான பலன்களை அவ்விடங்களில் விளைக்கின்றது என்று சொல்லலாம். அதற்குத்தாட்சியாக ரோமாபுரியில் உள்ள பேடாவென்ற பேர்போன கலாசாலையில் பற்பல தேசத்தாரும் குருப்பட்டத்துக்குப் படிக்க வருவார்கள். தற்போது அதில் படிக்கிறவர்கள் அத்தனை பேரும் சில வருடங்களாய் மனந்திரும்பின இங்கிலாந்து சபை பாதிரிமார்களாம். மற்றவர்கள் அதில் போய்ச் சேர இடமில்லையாம். சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாகக்கடவது!

**உயிருள்ள சிசு புதைக்கப்பட்டது.**—இந்திய ஐக்கியமாகாணங்களிலுள்ள அஜாம்கார் என்ற ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒருமாத வயதுள்ள ஒரு பெண் குழந்தையை உயிருடன் புதைத்ததாக போலீசாருக்குக் கேள்விபட்டினதும் மசானத்துக்கு ஓடிப்போய்ப் பார்க்க, அவ்விடத்தில் நாலுபேர் நின்றுகொண்டிருக்கக் கண்டு போலீஸ் அதிகாரி அவர்களைச் சமீபித்துப்போய்ச் சாதுரியமாக இரண்டொரு கேள்வி கேட்கவே பூமிக்குள்ளிருந்து "மா, மா" வென்று ஒரு சத்தங் கேட்டது. அங்கிருந்த நால்வரையுங் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு துரிதமாய் குழியைத் திறந்து பார்க்கவே குழந்தை குற்றுயிராய் அகப்பட்டது. வேண்டிய சிகிச்சை யெல்லாஞ் செய்து பார்த்தும் அக்குழந்தை சிறிது நேரத்தில் இறந்துபோயிற்று. அந்நால்வரையும் விசாரணை செய்ததிலிருந்து தெரியவருகிற தென்னவென்றால்: அக்குழந்தை பிறக்கும்போதே ஒரு பல்லோடு பிறந்ததாம். அதினால் அந்தக் கிராமத்தாருக்கு அநேக இடையூறுகள் நேர்ந்ததுமன்றி அக்குழந்தையின் தகப்பனும் ஜுரத்தில் விழுந்தான். அதைக்குறித்து ஒரு பிராமண மாந்தரீகனை அழைப்பித்துப் பார்வையிட்டதில் கிராமத்துக்கு வந்த துன்பங்களெல்லாம் அந்தக்குழந்தையால் தான் நேர்ந்ததென்றும் அந்தக் குழந்தை

யொரு ராக்ஷசப் பிறவியென்றுஞ் சொன்னதுமல்லாமல் தனக்கொத்தவெகுமானஞ் செய்தால் எல்லாவற்றையும் ஒழித்துவிடுகிறேனென்றுஞ் சொன்னான். அப்படியே தன்னாலானதெல்லாஞ் செய்துபார்த்தான்: ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாய் அக்குழந்தையைத் தொலைத்துவிடுகிறதே கருமமென்று தீர்மானித்து, அக்குழந்தையை வெட்டிக்கொல்லுகிறது சரியல்ல, அதை யுயிரோடு புதைத்துவிடுகிறது அவ்வளவு பாவமாகமாட்டாதென்று தங்கள் மனதை யொருவாறு தேற்றிக்கொண்டு அதை அவ்விதமே புதைத்துவிட்டார்களாம். என்னே இவர்களுடைய அறியாமையும் அஞ்ஞானமும்!!

**தைரியசாலியான நியாயாதிபதி.**—இஸ்பாஞ்ஞிய தேசத்தில் "வில்லாகார்தோ" என்ற பட்டணத்தில் நியாயாதிபதி உத்தியோகம் வகித்த "சினோர் ஆதிரியானோ ஜெர்னெனெஸ் இ பெர்ராகர்" என்ற ஒருவரிருந்தார். நாஸ்திகரான தேச குழப்பக்காரரால் தற்போது ஏற்பட்டுள்ள தேசச் சட்டப்படிக்குத் தங்களுக்குக் கலியாணம் முடித்துவைக்க வேணுமாய்க்கேட்டு இரு கத்தோலிக்கர் இவருடைய கோர்ட்டுக்கு வந்தார்கள். இந்த நியாயாதிபதி பத்தியுள்ள கத்தோலிக்கரானதால் அக்கலியாணத்தை முடித்துவைக்க மறுத்துவிட்டார். இதனிமித்தம் இவர் அபராதம் போடப்பட்டு உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டார். இவரது பக்திக்கடுத்த தைரியச் செய்கையை மெச்சி ஜனங்க ளெல்லோரும் சேர்ந்து வெகு திறமையாய்ச் சித்திரிக்கப்பட்டவொரு படத்தை அவருக்கு வெகுமதி யளித்தார்கள். அந்தச் சித்திரத்தின் விவர மென்னவென்றால்: ஒரு சம்மனசு தனது இடது கரத்தில் நித்ய சட்டமாகிய வேத புத்தகத்தையும் வலது கரத்தில் ஒரு தராசையும் பிடித்த பாவனையாய் எழுதியிருந்தது. இந்த வெகுமதி இன்ன காரணமாக இன்னின்னாராலே அளிக்கப்பட்டதென்று அந்தப் படத்தைச் சுற்றிலும் வரைந்திருந்தது. நன்மை செய்வோர்க்கு மறுமையில் மாத்திரமல்ல, இம்மையிலுங்கூட பலமுறை புகழ்ச்சி யுண்டாகின்றது. இந்த நியாயாதிபதி தன் உத்தியோகத்தையும் அதனால் "தன்னுத்துமத்துக்கு வரவிருந்த பொல்லாப்பையும் சந்தோஷமாய்விட்டு நீங்கி இப்போது வர்த்தகஞ்செய்து சீவித்துவருகிறார். இப்பேர்க்கொத்த தைரிய சீலரான புண்ணியவான் சகலராலும் கண்டு பாவிக்கப்படத்தக்கவர்.

**இராஜ குடும்பத்து கன்னியாஸ்திரிகள்.**—ஆஸ்திரியா தேசத்துச் சக்கரவர்த்தியாய்ப் பட்டஞ் சூட்டப்படப் போகும் ஆர்ச் டியூக்கின் சகோதரியானவள் பிறசல்ஸ் பட்டணத்திலுள்ள திரு இருதயக் கன்னியாஸ்திரிகளின் சபையிலே சேர்ந்திருக்கிறாள். இதுபோல் இசபேலா என்ற ஸ்பானிய இராச குமாரத்தியும் வியன்னா நகரத்திலுள்ள தருமச்சபைக் கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந்து அவர்களைப்போல் தாமும் யாசகஞ் செய்து எளியவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறாள். இதுவல்லவோ மெய்யான ஞானம்! உலகத்துக்கு ஞானம் பேய் என்பதுபோல் உலகத்தார் பணத்தைச் சம்பாதிக்க எத்தனையோ அக்கிரமங்களைக் கட்டிக்கொள்ளத் துணிகிறார்கள். அதற்கு மாறாக ஞானவான்கள் தங்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட சொத்து சுதந்தரங்களை முதலாய்த் தங்களாத்துமலாபத்தினிமித்தம் கைவிட்டுத் துணிகிறார்கள்.

**கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் தொகை.**—கடைசி விசை வத்திக்கானில் எடுத்த கணக்குப்படி உலக முழுமையிலுமுள்ள கத்தோலிக்கர் இருப்பதாறு கோடியே நாற்பது இலட்சம். இவர்களில் பன்னிரண்டு கோடியே தொண்ணூறு இலட்சம் ஐரோப்பாவிலும், ஒரு கோடியே எண்பது இலட்சம் ஜெர்மனியிலும், ஒரு கோடியே பத்து இலட்சம் ருஷியாவிலும், ஒருகோடி ஆசியாகண்டத்திலும், முப்பது இலட்சம் ஆப்பிரிக்காவிலும், பத்து இலட்சம் பேர் தென் பசிபிக் திவுகளிலும், பன்னிரண்டு கோடி பேர் தென் வட அமெரிக்காக் கண்டங்களிலும் வசிக்கிறார்கள். உலக முழுமையுமுள்ள சகல ஜாதி ஜனங்களுடையவும் மொத்தத் தொகை 146 கோடியென்பதாகக் கணக்கிடக்கப்பட்டிருக்கிறது. இதில் 26 கோடி கத்தோலிக்கர் போக மீதமுள்ள 120 கோடி ஜனங்கள் சத்தியவேதத்துக்குப் புறம்பா யிருக்கிறார்கள்.



161414

இவர்கள் இதற்கு சீக்கிரம் வந்து சேரும்படி வேண்டிக் கொள்ளுவோமாக.

**புலித்தோல் உடுப்பு.**—பிரான்சு தேசத்தில் வசிக்கும் ஒரு அமெரிக்கா தேச துரைசானி பாரிஸ்நகரத்தில் நடந்த ஒரு பந்தயத்திற்கு வேடிக்கை பார்க்க வந்தபோது 6 ஆயிரம் டாலர் விலை மதிப்புள்ள புலித்தோல் ஆடை உடுத்திக்கொண்டுவந்தனளாம்.

**பிரமாண்டமான தேவாலயங்கள்.**—ஒரு சதுர கெஜத்துக்கு ஒரு ஆள் இருக்கும்படியான கணக்குப்படி மிலான் பட்டணத்தின் தேவாலயம் 37,000 பேரைக் கொள்ளுமானது. அர்ச். இராயப்பர்தேவாலயம் 32,000 பேரையும், அர்ச் சின்னப்பர் ஆலயம் 25,000 பேரையும், புலோஞா ஆலயமும், புளோரென்ஸ் பட்டணத்தின் தேவாலயமும், ஆன்ற்வெர்ப் தேவாலயமும், ஒவ்வொன்றும் 24,000 பேரையும், கொன்ஸ்தாந்திநோப்புள்ளி அர்ச். சோபியா ஆலயம் 28,000 பேரையும், ரோமாபுரியிலுள்ள ஜாண்லாத்தெரான் தேவாலயம் 22,000 பேரையும், பரீஸ்பட்டணத்திலுள்ள நோத்ருதாம் என்ற ஆலயம் 21,000 பேரையும் கொள்ளுமானது. இந்த ஆலயங்களுமல்லாமல், பைசா பட்டணத்து ஆலயமும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேறே பல ஆலயங்களும் 12,000 பேர் கொள்ளக்கூடியவையா யிருக்கின்றன.

**சிசுக்களுக்கு ஸப்ளை செய்யப்படும் பால்.**—சிசுக்களுக்கும்குழந்தைகளுக்கும் சப்ளை செய்யப்படும் பாலிலிருக்கும்படியான அசுத்தத்தையும் கலப்படத்தையும் நீக்கி அந்த பரிசுத்தமான பால் செய்துவிடவேண்டுமென்று இப்போது லிவர்ப்பூல் நகர முனிசிபாலிட்டியார் மின்சார உபாயத்தைக்கொண்டு பரிசுத்தம் செய்து சப்ளை செய்துவருகிறார்கள். பாலிலிருக்கக்கூடிய எல்லா அசுத்தங்களும் பூச்சிகளும் நீக்கப்பட்டுப் போகின்றன. பாலும் ருசி குன்றிப்போகாமலும் மாறாமலிருக்கிறதாம்.

**பிரான்சு தேசமும் கன்னியர்களும்.**—பிரான்சுதேசத்தைச் சேர்ந்த பரீஸ், மார்சேல், லியோன், [illegible]ர், ஆங்கொர்ஸ் [illegible]ய அனேகம்பட்டணங்களி லிருந்து [illegible] வருடங்களின்முன் [illegible]டரால் [illegible]பட்ட அர்ச். அகுஸ்தீன் [illegible]யாஸ்திரிகளைத் திரும்ப த[illegible]வேண்டுமென்று ஜனங்க ளெல்லோருங் கையொப்பமிட்டு குடியரசைச் சார்ந்த அதிகாரிகளுக்கு அனேகானேகமுறை மனுச்செய்துகொண்டதன்பேரில் அநுகூலமான உத்தரவு கிடைக்க, இப்போது அவர்களில் முப்பது பேர் ஷெர்புர்க் அர்ச். இராயப்பர் கோவிலைச்சேர்ந்த (தாங்கள்முன் வசித்திருந்த அதே) மடத்துக்குத் திரும்ப வந்து முன்போல் தங்கள் அலுவல்களைப் பார்த்து வருகிறார்கள். அவர்களைக் காட்டுமிருகங்களைப்போல் வேட்டையாடி ஆறு வருடங்களின்முன் துரத்தி அவர்கள் வசித்திருந்த மடங்களையும் மற்ற சொத்துக்களையும் ஏலம்போட்டு எடுத்துக்கொண்ட அந்த முனிசிபாலிட்டியார்தானே இப்போது அதே கன்னியாஸ்திரிகளை வெகு மரியாதை ஆரவாரக் கொண்டாட்டத்தோடு தருவித்தார்கள். இதன் காரண மென்னவென்று பார்க்கும்போது இந்தக் கன்னியாஸ்திரிகளால் தேசத்துக் குண்டான நன்மையின்னதென்று இப்போதுதான் கண்டுபிடித்தார்கள். வெயிலிற் போனால்தானே நிழலின் அருமை தெரியும்!

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

எனது சகோதரியும், நல்ல ஆயனின் கையொப்ப சேயருள் ஒருவருமாகிய Mr. F.

NO2112

Brenard என்பவரின் பிரிய மனைவியாகிய மரி இருதய ஜெயபூஷணியம்மாள், திருக்குடும்பத்தின் அணைகடந்த ஆசீராலும், புதுமையுள்ள அர்ச். அந்தோனியாருடைய பேருதவியின் பலனாலும் 1914ஆம் பெப்ரவரிமீ வெள்ளிக்கிழமை காலை 9 மணி தியாலத்தில் தனது ஐந்தாம் பேறான ஓர் ஆண் மகவை யாதொரு அபாயமின்றி ஈன்றனள். இன்னும் 2—3—14 திங்கட்கிழமையன்று பெங்களூர் சூளை, சேசுவின் திரு இருதயநாதர் ஆலயத்தின் விசாரணைக் குரு Revd. V. M. Jacqumin தேசிகரால் அக்குழந்தைக்கு மரிய சூசை அந்தோனி என்னும் நாமகரணம் சூட்டப்பட்டது. Choolay Police Clerk Mr. Dorayswami Pillai அவர்கள் ஞானத் தந்தையாகவும், மேற்படியாரின் மனைவி ஷூர்து செல்வநாயகியம்மாள் ஞானத் தாயாராகவும் அங்கீகரிக்கப்பட்டார்கள் தாயும் சேயும் சுகம்.

இங்ஙனம்,

Bangalore. } S. Iyadoray, Temporary Maistry P. W. D.

## நன்மரண அறிக்கைகள்.

### மணவைநகர்.

மணவைநகர்வாசியும் பரதகுலத்தவருமாகிய ஸ்ரீமத் ரொசாரி ரொதிரீகு (ஸ்றீடோர்) அவர்களின் மருமகனும் எனது நேய சிறிய தந்தையுமாகிய ஸ்ரீமத் S. A. மொருயிஸ் அவர்கள் கொழும்பு செக்குவீதி 79-நெ. வீட்டில் சென்றமாதம் 13-ந்தேதி வெள்ளிக்கிழமை இரவு சுமார் 12-மணிக்கு தனக்கு நேர்ந்த இருதய வியாதியால் திடீரென மரணமான துக்க செய்தியை தந்திமூலமாயறியலானேன். எனது நேய சிறியதந்தையை இழந்து பரிதபிக்கும் நேய சிறிய தாயாருடனும், தங்களுடைய நேய தந்தையை இழந்து பிரலாபிக்கும் சகோதரன் சகோதரிகளுடனும் நானும் மிகவாய் கஸ்தியடைகிறேன். மறுதினமாகிய 14-ந் தேதி மாலையில் பந்து மித்திரர் புடைசூழ்ந்துவர இவரது பிரேதமானது இருகுதிரை பூட்டிய காத்தையில் பொறளை கத்தோலிக்க சிமித்தேரிக்குக் கொண்டுபோகப்பட்டு, கனம் பங்குசுவாமியாரவர்களால் திருச்சபைச்சடங்குகளனைத்தும் நிறைவேற்றப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இப்பரிதாபத்திற்குரிய துக்க செய்தியைக் கண்ணுறும் கத்தோலிக்க பக்தரே! என் சகோதரரே! சிநேகிதரே! தயையுள்ள ஆண்டவரில் மரணித்த இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருள வேண்டிக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. I. P.

பிரிய சிறிய தந்தையை இழந்து பரிதபிக்கும் நிர்ப்பாக்கிய மகன்

S. A. Costa,

தெத்தவளை, 17. 3. 1914.

---

### பெரியதாழை.

பெரிய தாழைப் பாண்டிய வம்சத்தினரும் எனதன்பார்ந்த சிறிய தந்தையுமாகிய ஸ்ரீமத் கோ. வஸ்தியன் பெர்னாந்து அவர்கள் கொழும்பில் மூன்றுமாத காலமாய் நடப்பு வியாதியால் பீடிக்கப்பட்டு, கடைசி தேவத்திரவிய அனுமானங்களனைத்தையும் குறைவறப்பெற்று "ஜேசுவே என்னை இரக்ஷியும், ஜேசுவே எனதாத்துமத்தை உமது கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன்" என்ற மனவல்லய ஜெபங்களைப் பல முறையுமுச்சரித்து 10ந் யாகிய மங்கள்வாரத் தன்றிரவு 12-30-க்கு (புதவாரத் துவக்கத்தில்) மரணித்தார்கள். 11ந் மாலை 3-மணிக்கு இரு அஸ்வங்கள் பூட்டிய ரதமீது மிக்க வழகிய ஓர் பெட்டியினுள் வைத்திருந்த சரீரத்தை ஏற்றி பேண்ட் வாத்தியங்களுடனும் இடைக்கிடையே லத்தீன் பிரலாபக் கீதங்களுடனும், இவர்கள் மட்டில் அநுதாபங்கொண்டு பிரலாபித்து வந்த திரண்ட பெரும் ஜனக் கும்பல் கொட்டாஞ்சேனை தேவாலயம் சென்று (Office) ஆபிஸ் ஜெபம் பாடி முகிந்ததும் பொரளைக் கல்லறைக்குக் கொண்டுபோக ஆங்கு எம்மெய்ம்மதாச்சார ஒழுங்குகளனைத்தும் பூர்த்தியான பின்னர் சொர்ணவடிவுடைய எனது நேசத் தந்தையின் சரீரம் பூமிதானம் செய்யப்பட்டது. இதை நோக்கும் கத்தோலிக்கு நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்க மன்றாடுகிறேன்.



எனது இப்பெரிய நஷ்டத்தில் என்னோடு அநுதாபப்பட்டு தந்திகளும் கடிதங்களும் அனுப்பிய சகல கனவான்கட்கும் எனது மனப்பூர்வமாய் நன்றியறிந்த தோத்திரம் சமர்ப்பிக்கிறேன.

இப்படிக்கு
தந்தையை இழந்து பரிதபிக்கும்

பெரியதாழை, 19—3—14. } அ. குருஸ்மலை பிச்சை பெர்னாந்து.

### பாப்பாகுடி.

பாப்பாகுடி, அர்ச். அந்தோனியார் கோவில் உபதேசியாரும் என் அருமைத் தந்தையுமாகிய அ. அந்தோனி அவர்களுக் குண்டாயிருந்த நெடுநாள் நடைப்பிணியானது, என் தாயாராலும் மற்றும் பெரியோர்களாலும் எவ்வித பரிகாரம்செய்தும் குணமாகாததினால் அவர்கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சம்பூரணமாய்ப் பெற்று 1914ஆம் பெப்ரவரிமீ 14ந் சனிக்கிழமை முன்னேரம் 7½ மணிக்கு சுமார் தமது 65-ம் வயதில் தம்முடைய மனைவி அன்னம்மாள், குமாரர்கள் குமாரத்திகள் அ. அ. சந்தனமரியான், டானியேல், ஜெயசீலியம்மாள், தெரெசம்மாள், மிக்கேல் அம்மாள், சூசைமாணிக்கம், எசுபின்னை, அந்தோனி, மருமக்கள் பேரப்பிள்ளைகள், மருமகள் அ.ச. மிக்கேல் அம்மாள், மருமகன் சி. மி. அந்தோனியவர்கள், பேரப்பிள்ளைகள் சவரி அந்தோனி, சவரி பாக்கியம் மற்றும் இன பெந்து குடும்பத்தார்களையும் இக்கண்ணீர்க் கணவாயில் கலங்கி பாதவிக்க விட்டு, அவர்கள் மத்தியில் நமது திரியேக ஜெகத் ரக்ஷகராகிய கருணையங் கடவுளின் பாமபதஞ் சேர்ந்தனர். அவரின் சடலம் 14ந் தேவதாயாரின் நாளாகிய சனிக்கிழமையன்று சுமார் 3-மணிக்கு அவருடைய குடும்பத்தாரும் மற்றும் திருச்சபையோர்களும் புடைசூழ ஜெப ஆராதனை பூசல்களுடன் வெகு பூச்சியமாய் பெட்டியினுள் வைத்து எடுத்தேகப்பட்டு ஷை ஊர் மையவாடியில் நல் அடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு ஸதிரி புமான்கள் பந்து மித்திரர்கள் யாவரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பா. பிர். திரி. வேண்டிக்கொள்ள மிகவும் தாழ்மையுடன் கெஞ்சிக் கேட்டுகொள்கிறேன்.

அர்ச். அந்தோனியார் கோவில் தெரு, பாப்பாகுடி. } தந்தையைஇழந்து பரிதபிக்கும் மகன் அ. அ. சந்தனமரியான் புது நாகலந்தை தோட்டம்.

### பாப்பாகுடி.

எனது மாமனார் யேசுப்பிள்ளை அந்தோனியவர்கள் பக்ஷவாதமென்னும் கொடிய வியாதியினால் சிலகாலமாய் பீடிக்கப்பட்டு எவ்வித சிகிச்சை செய்தும் குணப்படாமல் கடைசியாய் தேவத்திரவியானுமானங்களில் 5-வதாகிய அவஸ்தைப் பூசுதலைக் குறையறப்பெற்றுத் தமது 72-ம் வயதாகிய 1914-ஆம் பெப்பிரவரிமீ 14ந் சனிவாரம் காலை 7½-மணிக்குத் தமது மனைவியையும் 4 குமாரர்களையும் 4 குமாரத்திகளையும் மருமகன் மருமகள் பேரன் பேத்தி மற்றும் சுற்றத்தாரனைவரையும் இக்கண்ணீர்க்கணவாயில் பாதவிக்கவிட்டு பரலோக பிராப்தி யடைந்தனர். அன்றுதானே பின்னேரம் 4-மணிக்கு ஷை சடலம் துர் அழகிய பெட்டியில் வைக்கப்பட்டுச் சகல கிறிஸ்தவர்களும் புடைசூழ்ந்துவர ஷை யூர் மையவாடியில் பூஸ்தாபிதம் செய்யப்பட்டது.

இதைக் கண்ணுறும் ஆத்தும சகோதரர் அனைவரும் இவ்வான்மாவின் இளைப்பாற்றியின் பொருட்டு ஒரு பா. பிரி. திரி. வேண்டிக்கொள்ளக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

மாமனாரை இழந்து பரிதபிக்கும் மருமகன்

லக்ஸபானுத் தோட்டம், மஸ்கேலியா போஸ்ட், சிலோன். 3—3—14. } சி. மி. அந்தோனி.

### கர்நூல்.

சென்னை ஆயிரம் விளக்கை அடுத்த துங்கன் தோட்டத்தில் வசித்து காலஞ்சென்ற பென்னன் அவர்கள் குமாரரும் மேற்படி யூரில் வசிக்கும் அர்ச். செபஸ்தியார் பஜனை பிள்ளையுமாகிய P. ஆரோக்கியசாமி, 1914 வருடம் மார்ச் மாதம் 3-ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு மேற்படி பஜனை அடியாரையும் இரு தமக்கைமாரையும் பந்து மித்திரரையும் பாதவிக்க விட்டு, பெரியசேரியில் தனது 18 வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். மறுநாள் 4-ந் திகதி புதன்கிழமை வண்ணாரப்பேட்டையில், மேற்படி பஜனையோடும் பக்தர்களோடும் நல்லடக்கம் செய்தோம். இதைக்கண்ணுறும் கனவான்கள் இந்த ஆத்துமத்துக்காக ஒரு பா. ஒரு பிரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கிறவனும்,

மேற்படி பஜனை அடியானுமாகிய

17—3—14. கர்நூல். } D. சர்புவேல் ஜேடீமணி.

## பெங்களூர்.

காலஞ்சென்ற கஜானுபக்ஷி ம-ா-ா-ஸ்ரீ ஆ. ம. அப்பாதுரைப்பிள்ளையவர்களின் பவுத்திரியும் எனது பாரியாளுமாகிய சௌ. (லூர்து மரி) கனகரத்தினம் முதற்பேறுன குழந்தையைப்பெற்று, 8-மாதமாக பல வியாதிகளினுல் துன்புற்று, வைத்தியர்களால் கைவிடப்பட்டு கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று பெப்பிரவரி மீ 2 உ திங்கட்கிழமை இரவு 2 ½-மணிக்கு மோக்ஷப்பிராப்தி யடைந்தனள். மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு அர்ச். சூசையப்பர் தேவாலய விசாரணைக் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக எம் நேசர்களை ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

62, Broadway, Bangalore Cantt. } V. D. Swamy Pillay.

## பாசீன்.

பர்மா, பாசீனில், நெடுநாள் வசித்தவரும் அர்ச். இராயப்பர் சின்னப்பருடைய தேவாலயத்தின உபதேசியுமான ச. சந்தனம் என்பவருடைய 11-வது அருமை குமாரன் ச. ச. மரிய ரோசாரி பென்பவர் தமர்வாயுவு என்கிற வியாதியினுல் சிலநாள் பீடிக்கப்பட்டு வியாதி அதிகரிக்கவே, வைத்தியர்களால் கைவிடப்பட்டு கடைசி தேவத்திரவியானுமானமாகிய பாவசங்கீர்த்தனமும் அவஸ்தைப்பூசுதலும் சரிவரப்பெற்று 1914-வருஷம் பெப்ரவரிமாசம் 2-ம்தேதி திங்கள் கிழமை மாலை 11-மணிக்கு திருக்குடும்பத்தின் நாமத்தை யுச்சரித்துக்கொண்டே தமது 13-வருஷம் 10-மாசம் 9-நாள் பிராயத்தில் தமது தந்தையையும் சகோதரர்களையும் மாமன்மார்களையம் மற்றும் குடும்பத்தார்களையும் இக் கண்ணீர்க் கணவாயில் பரதவிக்கவிட்டு பரலோகபதவி சேர்ந்தார். மறுநாள் 3-ம்தேதி செவ்வாய்க்கிழமை மாலை 1 ½-மணிக்கு குடும்பத்தாரும் மற்றும் திருச்சபையோர்களும் புடைசூழ அர்ச். இராயப்பர் சின்னப்பருடைய தேவாலயத்தின் கல்லறைக்குள் அவர் சடலம் திருச்சபை சடங்குகளுடன் பூச்சியமாய் இராஜரிஷி Rev. Fr. Provost குருசுவாமியார் அவர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் கனதனவான்கள் மித்திரர் யாவரும் மேற்படி மரியரோசாரியுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. I-திரி. வேண்டிக்கொள்ளும்படியாகத் தாழ்மையுடன் மன்றாடி நிற்கும் மேற்படி மரிய ரோசாரியின் தந்தை.

February, 4th. 1914. } ச. சந்தனம் உபதேசியார் பாசீன்.

## மணப்பாடு.

எனது பிரிய மனைவி மரிய ரோசம்மாள் விக்டோரியா 1914ஆ பிப்ரவரிமீ 10உ பெண் குழந்தை ஒன்றைப்பெற்று அதன் வேதனையால் 28உ ஜன்னிகண்டு எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் மார்ச்மீ 1உ ஞாயிற்றுக்கிழமை உதயம் 5-மணிக்குக் கடைசி தேவத்திரவிய அனுமானங்கள் யாவும் சரிவரப்பெற்று 7 ½ மணிக்கு என்னையும் எனதருமை மக்கள் இருவரையும் இன்னும் தனது தமயனர் தமக்கையார்கள் மற்றும் சுற்றத்தார் யாவரையும் பரதவிக்க விட்டு பரமபதவி யடைந்தனள். இப்பரிதாபத்துக்குரிய செய்தியை வாசிக்கும் நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்: அருமை மனைவியை

12—3—14. மணப்பாடு. } இழந்து பரதவிக்கும் சல்வதோர் கூஞ்ஞ.

## அரக்கோணம்.

கடந்த 1913-ஆ ஏப்ரல்மீ 10-உ வியாழக்கிழமை காலை 6-மணிக்கு என்னருமை மனைவி ஸ்ரீமதி சாலோமி அம்மாள் பரலோக பிராப்தி யடைந்த ஒருவருஷம் இம்மாதத்தோடு பூர்த்தியாகிறபடியால் அந்த வருஷோற்சவ தினமாகிய நிகழும் 1914-ஆ ஏப்பிரல்மீ 10-உ வெள்ளிக்கிழமைகாலை 6 ½-மணிக்கு அரக்கோணம் அர்ச். வியாகுலமாதா ஆலயத்தில் சங்கைக்குரிய Rev. Fr. Mayer அவர்களால் ஷை சாலோமிஅம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக திவ்விய பலி பூசை நடத்தப்படும். இதைக் கண்ணுறும் கிறிஸ்துவநண்பர்கள் ஷை ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லி வேண்டிக்கொள்ளும்படியாக தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

Engine Driver. M. S. M. Ry. Arkonam. 10—3—14. } C. A. Anthony Pillay.



## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 2162-8-6. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந்தொகை யாகும். ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்கு பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்;

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 2086 | 3 | 6 |
| Mr. அநந்தநாத பிள்ளை, | 3 | 0 | 0 |
| ,, ஜான் பிள்ளை, (கல்கத்தா) | 2 | 0 | 0 |
| ,, S. பிரான்சிஸ், (சிலோன்) மூலமாய் | 15 | 0 | 0 |
| ,, S. S. V. சூசை அந்தோனி, (ஹொராரு) | 10 | 0 | 0 |
| ,, G. D. பெரைரா, (சிலோன்) | 1 | 0 | 0 |
| ,, S. அந்தோனிசாமி பிள்ளை, (கோலாலம்பூர்) | 25 | 0 | 0 |
| ஸ்ரீமதி ரோஸ் மேரி, (சென்னை) | 2 | 0 | 0 |
| ,, P. G. அந்தோனி(வட இந்தியா) | 1 | 0 | 0 |
| ,, S. அந்தோனிசாமி பிள்ளை, (கோலாலம்பூர்) மூலமாய் | 15 | 13 | 0 |
| Mr. B. அந்தோனி பிள்ளை, (திருநெல்வேலி) மூலமாய் | 1 | 8 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 2162 | 8 | 6 |

## "நல்லாயன்" அச்சுயந்திர ஆபீசுக்காக நன்கொடை.

"நல்லாயன்" அச்சுயந்திரசாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற ஜூன்மாதத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டுவரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்கு கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி, நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 220 | 9 | 0 |
| Mr. C. V. பீட்டர் பிள்ளை, சிங்கப்பூர் | 1 | 12 | 0 |
| ,, A. சந்தியாகப் பிள்ளை ,, | 0 | 14 | 0 |
| ,, A. R. அம்ப்ரோஸ் பிள்ளை, | 0 | 14 | 0 |
| ,, A. S. இஸ்ரயேல் பிள்ளை, ,, | 1 | 12 | 0 |
| ,, K. R. லாசர் பிள்ளை (மூலமாய்) Fort St. George, சென்னை | 2 | 0 | 0 |
| ,, A. மிக்கேல் பிள்ளை, Interpreter (மூலமாய்) Oorgaum | 6 | 0 | 0 |
| ,, C. A. அப்பாதுரை, பெங்களூர் | 1 | 0 | 0 |
| ,, A. F. சாலமோன் முதலியார், கோலாலம்பூர் | 3 | 0 | 0 |
| ஓர் நண்பர், | 2 | 0 | 0 |
| Mr. A. சவியேல், முல்டான், | 0 | 8 | 0 |
| ,, P. G. மாணிக்கம் பிள்ளை, Sub. Asst. Surgeon, Vepery | 5 | 0 | 0 |
| ,, K. A. ஆரோக்கியம், தரங்கம்பாடி | 0 | 4 | 0 |
| Messers Cardoza Bros. Mathura (Ceylon.) | 2 | 8 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 248 | 1 | 0 |

## அதிமுக்கிய அறிவிப்பு.

"அமலோற்பவப் போக்கிஷம்" என்ற 4 அணு விலையுள்ள சிறு ஜெபப்புஸ்தகம் வேண்டியவர்கள், "திருச்சினாப்பள்ளி உலக இரட்சகர் கோவில் அர்ச். ஞானப்பிரகாசியார் சபைத்தலைவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதில் அர்ச். ஞானப்பிரகாசியார் சபைக்கு வேண்டிய ஒழுங்குகளும் மந்திரமாலையும் அனேக பக்திக்குரிய வழக்கமானதும் சுருக்கமானதுமான பலனுள்ள ஜெபங்களும் புது செபங்களும் அடங்கியிருக்கின்றன. 10 புஸ்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு 1 புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். 7-ம்பதிப்பு புஸ்தகம் 1-க்கு விலை அணு 4.

## எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய விர்த்தியும் அவளது 1914-ம் வருஷத்திய மகோற்சவ அறிவிப்பும்.

நண்பர்களே,

சென்ற வருஷம் உதாரகுணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும், எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மமென்று அறிக்கையிட்டு செய்து கொண்ட எமது வேண்டுகோளுக்கிணங்கி, எமக்குதவியாகவந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்கும் பங்காளிகளான நேயர்களுக்கு அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1913-ஆம் எப்ரல் மாதமுதல் 1914-ஆம் மார்ச்சு மாதம் 31௳ வரையில் நேயர்களால் வரவேற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடை ரூபாய் 600-0-0. சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்கள் கட்டவும், விசாரணைக்குரு வசிக்கும் பங்களாவை மராமத்து செய்யவும், கோவில் கட்டிட விர்த்திக்காக தண்டவாள நூலங்கள் வாங்கவும் செலவான தொகை ரூபாய் 2017-11-6. தற்காலம் எமக்குக் கடனாயிருப்பது ரூபாய் 460-0-0.

நண்பர்களே, தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி, சத்திரங்கள் ஏறத்தாழ முடிவாய்விட்டன. ஆகிலும், பழைய சத்திரத்தை மராமத்து செய்யவும், கோவில் வேலைகளை முடிவிற்குக் கொண்டுவரவும் குறைந்தது நாமிட்ட மதிப்பிற்குமேல் இரண்டுபங்கு அதிகமாகிறபடியால், அதைரியத்திற்கு இடமாயினும், புதுமையுள்ள அர்ச். செல்வநாயகி அம்மாளையே நம்பி விடாமுயர்சியுடனும் அதிக ஊக்கத்துடனும் வேலைசெய்து வருகிறோம். தர்ம சிந்தையுள்ள அவளது ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள் பேரில் பூரணமாய்ப் பொழிய கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதின வேண்டுகோள்.

1914-ஷை த்திய மகோற்சவ கொண்டாட்டம் வழக்கமாயிருப்பதுபோல் எமது கோவிலில் நடத்தப்படும். குருத்து ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின நாள் கொடியேற்றமாகும். அர்ச். வாரத்தின் சகல சடங்குகளும் திருச்சபையின் ஆசாரமுறைப்படி பூர்ணமாய் நிறைவேற்றப்படும். பெரிய வியாழக்கிழமை முழுமையும் எமது கோவில் பீடத்தில் சற்பிரசாத நாதர் சிறப்பாய் வீற்றிருந்து தமது அன்பர்களை ஆசீர்வதிப்பார். வெள்ளிக்கிழமை இரவு பெரிய பிரசங்கம் செய்யப்படும். சேசுவின் திருப்பாடுகளின் பாவனைகள் பக்தியுடனும் அதிக உருக்கத்துடனும் பார்ப்போர் மனதைக் கவரக்கூடிய விதமாகவும் காட்டப்படும். ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த சுரூபம் மகிமைச் சாவடியில் வந்தமர்ந்தவுடன் திருப் பூசைப்பலி நடத்தப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளின் தாசர்கள் தங்கள் பரோபகாரியாகிய அந்த அம்மணிக்கு நன்றி செலுத்துவார்கள். அன்றிரவு பார்ப்போர் கண்களை பறிக்கும்படியான சித்திர விசித்திர வேலையுடன் அலங்கரிக்கப்பட்ட தேரில் அர்ச். செல்வநாயகி அம்மாள் ஸ்தாபிக்கப்பட்டு ஊர்வலஞ் செய்வாள். திங்கட்கிழமை காலையில் பலிப் பூசையுடன் திரு நாள் முடிவு பெறும்.

நேயர்களே, அர்ச் செல்வநாயகி அம்மாளைக்குறித்து திருயாத்திரை செய்து அவளது திருவடியை நாடினவர்கள், அவளால் ஆசீர்வதிக்கப்பட்டு பலவித நன்மைகளை அடைந்தார்களென்பதற்கு எமது பதினொரு வருஷத்திய அநுபோகமே சாக்ஷியம். ஆனபடியால் திருயாத்திரைக்காரர் திரளாய் வந்து அவளைத் தரிசித்து, சிறப்பித்து அவளுடைய பேருதவியை அடையவேண்டுமென்பதே எமது கோரிக்கை.

இப்படிக்கு,
எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனுகிய விசாரணைக் குரு
ஜே. ஞானதீக்கம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 595 | 12 | 0 |
| Mr. R. S. டேவிட் பிள்ளை, ஊர்காம் | 3 | 0 | 0 |
| ,, குருஸ் பிள்ளை, ,, | 2 | 0 | 0 |
| ,, Th. Brass, ,, | 1 | 0 | 0 |
| ,, A. Michael, ,, | 1 | 0 | 0 |
| ,, D. Patton, ,, | 1 | 0 | 0 |
| ,, J. A. Fernandez, ,, | 1 | 0 | 0 |
| ஓர் நண்பர், ,, | 1 | 0 | 0 |
| ஸ்ரீமதி மரியாரத்தினம்மாள், ,, | 1 | 0 | 0 |
| Mr. F. A. Deshelva ,, | 0 | 8 | 0 |
| ,, V. M. Vogt, ,, | 0 | 8 | 0 |
| ,, அருள்தாஸ் பிள்ளை, ,, | 0 | 8 | 0 |
| ,, M. ஆரோக்கியசாமி பிள்ளை, | 0 | 8 | 0 |
| ,, R. ஆரோக்கியசாமி பிள்ளை, | 0 | 8 | 0 |
| ,, R. அருள்சாமி முதலியார், செவ்வாப்பேட்டை, | 3 | 0 | 0 |
| | 612 | 4 | 0 |



The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } மே 1914. { இலக்கம். 5.

## MONTH OF MAY.

## மே மாதம்.

இன்று மே மாதப் பிறப்பு. நம்முடைய சீவிய காலத்தில் இம்மாதத்தை இன்னொரு முறை நாம் காண இரக்கம் நிறைந்த சர்வேசுரன் திருவுளங் கொண்டதற்காக அவருக்கு அனந்தங் கோடி துதியும் தோத்திரமும் நமஸ்காரமு முண்டாகக்கடவதாக. அதேனென்றால். மே மாதம் நம்முடைய தாயாரான அர்ச். கன்னிமரியாயின் வணக்க மாதம். இவ் வணக்கமாத கொண்டாட்டம் கிறிஸ்துவர்களனைவருக்கும் மிக்க ஆதாயமான பக்திக் கிருத்தியமெனச் சொல்லத்தேவையில்லை. சர்வப் பிரசங்கி ஆகமம் III- அதிகாரம், 5-வது வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, தன் தாயை நேசிக்கிறவன் தன் களஞ்சியத்தில் ஐசுவரியங்களைச் சேர்க்கிறவனுக்கு ஒப்பாகிறான். அப்படியானால், நம்முடைய நேச தாயாராகிய அர்ச். கன்னிமரியம்மாளை இம்மாசத்தின் ஒவ்வொருநாளிலும் விசேஷ விதமாய்ப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுகிற நாமும் எவ்வளவோ திரண்ட ஐசுவரியங்களை சம்பாதித்துக்கொள்ளுகிறோம்!! அன்றியும் இம்மாதம் நமக்கு மிக்க லாபகரமான மாதமெனச் சொல்ல இன்னொரு நியாயமுமுண்டு. அஃது யாதெனில், நம்முடைய நன்மாதிரிகையை மற்றவர்களுங் கண்டுபாவித்து அதனால் அவர்களும் நல்லவர்களாக ஹேதுவாகுமென்பதேயாம். நாம் தேவதாயாரைக்குறித்து இம்மாதத்தில் பயிரங்கமாய் பற்பல பக்திக் கிருத்தியங்களை அநுஷ்டித்து வருவோமானால், "மனிதருங்கள் நற் கிரியைகளைக் கண்டு பரமண்டலங்களிலேயிருக்கிற உங்கள் பிதாவை ஸ்துதிக்கும்படியாய் உங்கள் ஒளி அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (அர்ச். மத். 5-ம் அதி 18 வச.) என்று நமதாண்டவர் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய போதனைக்கொப்ப, நாம் நடப்போமல்லவா? அதனால் மற்றவர்களும் மனந் திரும்பி நல்லவர்களாக அது ஒரு தூண்டுகோலாயிருக்குமல்லவா? இப்படி இம்மாதம் நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனகரமான மாதமாயிருக்கும்படியாய்க் கவனிக்கத்தக்கது யாதெனில்: நம்முடைய சீவியமானது அர்ச். கன்னி மரியாயினுடைய பரிசுத்த சீவியத்

துக்கு ஒத்ததா யிருக்கும்படிச்செய்ய பிரயாசைப்படுவதேயாகும்.

இம்மாதத்தில் மரியாயின் பக்தர்கள் ஒவ்வொருவரும் தம்தம் சத்காரத்துக்கும் ஐவேசுக்கும் அலுவலுக்கும் ஏற்றபடி பற்பல பக்திக் கிருத்தியங்களை அப்பியசித்து, தங்க ளாண்டவளுக்கு மகிமையும் பெருமையும் உண்டாக முயலுவார்களென்பது வாஸ்தவம். உண்மையில் நம்முடைய் ஆண்டவளுக்கு இது பிரியமான கிருத்தியமாகவே யிருக்கும். ஆயினும், இதை விட அதிக பிரியமானதும் அதிக மகிமையானதும் யாதெனில், அவ்வாண்டவளுடைய சீவியத்தை நமக்கு முன் ஒரு நிலைக் கண்ணாடியைப்போல் வைத்துக்கொண்டு அவளுடைய புண்ணியங்களை நாம் கண்டுபாவிப்பதேயாம். "கன்னிமரியாயின் புண்யங்களைக் கண்டுபாவித்து நடக்க எவன் ஒருவன் பிரயாசப்படுவானோ, அவனே அந்த ஆண்டவளின் உண்மையான தாசன்" என அர்ச். அமிர்தநாதர் வசனித்திருக்கிறார். அர்ச். கன்னிமரியாயின் சீவிய முழுமையும் இரண்டொரு வார்த்தையிலேயே அடங்கியுள்ளது. அவள் பாவம் என்னப்பட்டதெதையும் விலக்கி, பரிசுத்தத்தனத்தில் மேன்மேலும் அதிகரித்து விளங்க ஓயாத புண்ய முயற்சியைச் செய்துகொண்டே வந்தாள்.

நமதாண்டவரான சேசுக்கிறிஸ்துநாதருடைய புண்ணிய பேறுபலன்களை முன்னிட்டு, சர்வேசுரன் அர்ச். கன்னிமரியம்மாளுக்கு அளித்த விசேஷ சுதந்தரங்களாலும் அரிய வரங்களாலும் அவள் எவ்வித பாவதோஷத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டிருந்தாள். ஆத்துமத்தைக் கொலை புரியும் கிஷ்டூர சண்டாளமான சாவான பாவத்தை அவ் வாண்டவள் முற்றுமே விலக்கி வந்தது மல்லாமல் ஒருசிறிய அற்ப பாவத்தை முதலாய் அறிந்தவளல்ல. இஷ்டப் பிரசாத அந்தஸ்தில் தாம் உற்பவித்த க்ஷண முதற்கொண்டு நிலைத்திருந்தபடியால், அவள் எந்தப் பாவத்தையும் கட்டிக் கொள்ளக் கூடியவ ளல்ல. சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் ஆண்டவர் அவளை இடைவிடாமல் தம்முடைய அடைக்கலத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தபடியால் பாவமானது அவளை அணுகக் கூடவில்லை. சர்வேசுரன் இவளை பாவத்திலிருந்து இப்படி காத்துக் காப்பாற்றி வந்தபோதிலும், இவளுந் தனக்குள் பாவத்துக்கு எவ்வளவோ அஞ்சி சீவித்துவந்தாள்!! அதன்மட்டில் சொல்லமுடியாத அருவருப்பும் பகையுங் கொண்டிருந்தாள். சர்வேசுரன் விலக்கின சகலத்தையும் திரஸ்கரித்துத் தள்ளுவதற்காக "அகந்தையையும், ஆங்காரத்தையும், தீய வழியையும், ஈரர்த்தமாய்ப்பேசும் நாவையும் பகைத்து வந்தாள்." (பழமொழி. VIII. 13)

ஆகையால் மரியாயின் பக்தர்களே! இம்மாதத்தில் நம்மா லானமட்டும் கன்னிமரியாயைக் கண்டுபாவித்து பாவத்தை வெறுக்கக்கடவோமாக. நமது சீவியகால முழுமையும் பாவத்தை விலக்கி புண்ணியவான்களாய்ச் சீவிக்க நாம் கடமைப்பட்டுள்ளவர்களாயினும், இம்மாதத்தில் இன்னும் அதிக பரிசுத்தமாய்ச் சீவித்துவர நமக்குக் கடன் உண்டாயிருக்கிறது. அதேதென்றால், அவ்வாண்டவளுடைய மகிமைக்கும் தோத்திரத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் இம்மாதத்தில் அவளுடைய மகிமையும் கீர்த்தியும் அதிகமதிகமாய்விளங்கும்பொருட்டு, நீங்களும் பாவத்தின்மட்டில் அதிக வெறுப்பும் பகையுங் கொண்டு, அதிக பரிசுத்தமாய்ச் சீவிக்க வேண்டிய நியாயம் ஏற்படுகின்றதன்றோ? ஆகையால் பாவத்தை விலக்க நாம் அதிக விழிப்பாயும் ஜாக்கிரதையாயு மிருக்கவேண்டியதாமே. அப்படிக் கின்றி வழக்கப்போல் பாவத்தின் மட்டில் பற்றுதலுற்று ஆத்துமத்தைக் கறைப்படுத்துவோமானால் அப்பரம ஆண்டவளுடைய பட்சத்தையிழந்து போவதோடுங்கூட இம்மாதத்தின் பரிசுத்தநாட்களையும் அசுசிப்படுத்துபவர்களுமாவோம். தான் சாதாரணமாய் அணிந்துகொள்ளும் வஸ்திரங்களை சுத்தமாயுப் சுசிகரமாயும் வைத்துக்கொள்ளும் வழக்கமுடைய ஒருவன் தான் ஒரு திருநாள் பெருநாளில் உடுத்திக்கொள்ளும் விலை உயர்ந்த ஆடைகளின்மட்டில் இன்னும் எவ்வளவோ கவலை கொள்வானென்பதைச் சொல்லவேண்டுவதில்லை? இப்படியே நாமும் எப்போதும் பரிசுத்தமாய்ச் சீவிக்க வேண்டியவர்களா யிருந்தாலும் தேவமாதாவின் வணக்கத்துக்கான இம்மாதத்தில் அவ்வாண்டவளுடைய புண்யங்களைக் கண்டுபாவிக்க இன்னு மதிக பரிசுத்தமாய்ச் சீவிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம்.

பாவத்தை விலக்க அர்ச். கன்னிமரியம்மாளை நாம் மேல்வரிச்சட்டமாகக் கொள்வோமானால் நம்முடைய ஒவ்வொரு கிருத்தியத்தையும் செவ்வையாய்ச் செய்து முடிக்க ஆவல் கொள்வோமென்பது வாஸ்தவம். அன்றியும் நம்முடைய ஒவ்வொரு கிருத்தியமும் மோட்ச சம்பாவனைக் குரியதாகவே செய்துகொள்வோம். பக்தி பற்றுதலோடு பரிசுத்தமாய்ச் சீவிப்பவர்கள் முதலாய் தங்களுடைய கிருத்தியங்கள் அனைத்தையும் சரிவரச் செய்து புண்ய பேறுபலன்களைச் சம்பாதித்துக் கொள்ள கவலை கொள்ளாமல் போகிறார்களென்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. மறுமைக்கு வேண்டிய அழியா ஆஸ்தியான புண்யப் பேறுபலன்களைச் சேகரிக்கக் கவலைப்படுவது மகா முக்கியமான காரியமாகையால்; அதற்காக நாம் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அக்கறையோடு வருந்தி உழைப்பது அத்தியாவசியமாமே. ஆனபடியால், தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்துகொண்டு நாம் செய்யும் பாவமற்ற எந்தக் கிருத்தியத்தையும், காலத்துக்கும், இடத்துக்கும், அந்தஸ்துக்கும் ஏற்றபடி, சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கும் மகிமைக்கும் சீராயும் செவ்வையாயுஞ் செய்து வருவோமானால், அவைகளெல்லாம் நமக்குப் புண்யங்களாகி மோட்சசம்பாவனைக்குரியவைகளாகும். "சூட்சத்திலே உண்டு மோட்சம்" என்பதற்கொப்ப, நம்முடைய ஒவ்வொரு கிருத்தியத்தையும் புண்ய பேறுள்ளதாக்கிக்கொள்ளக் கூடுமாயிருக்கையில், இதுகாறும் நாம் இப்படி சீவித்துவந்தோமா? இல்லையாயின் மரியாயின்மாதமான இம்மாதத்திலாவது நாம் இப்படி சீவிக்கப் பிரயாசைப்படுவதுமல்லாமல், நம் ஆயுள் பரியந்தமும் இவ்வாறே சீவிக்கும்படியாய் அவ் வாண்டவளுடைய உதவிசகாயத்தை இரந்து கேட்போமாக!



## SOCIAL LIFE & EDUCATION.

## "கூட்டுறவாடல் கல்வித்தேற்றத்திற்கு ஓர் முக்கியாம்சம்."

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர்சங்கத்தின் சென்னைநகர்க் கிளைச் சங்கத்து 5-வது வருஷாந்தப் பொதுக் கூட்டத்தில் திருமயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய கர்வாலோ சுவாமிகள் "கூட்டுறவாடல் கல்வித்தேற்றத்திற்கு ஓர் முக்கியாம்சம்" என்பதை மகுடமாகக்கொண்டு செய்த உபந்நியாசம் அருமையும் பிரயோசனமும் பொருந்தியதா யிருந்தமைபற்றி அச் சுவாமிகளின் அனுமதி பெற்று நமது சந்தாதாரர்களுக்கு பயன்படுமாறு அதை யிங்கு பிரசுரிக்கலானோம். அது பின் வருமாறு:

சபையோர்களே!

"எழுத்தறியார் கல்வி பெருக்கமனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்"

என்ற நன்னெறியை இயற்றியவராகிய சிவப்பிரகாச சுவாமிகள் கூறிய வார்த்தைகளை நினைத்து, முதலில் இச்சபையில் பேச முடியாது. என்று சொல்லிவிட்டோம். பின்னும் இச்சங்கத்து கௌரவ காரியதரிசி நம்மை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதன்மேல் தமிழ்ப் பாஷையில் நமக்குண்டான அற்ப அறிவைக்கொண்டு இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லுவோமென்று ஒருவாறு உடன்பட்டு உங்கள் மத்தியில் இன்று மாலை நிற்கலானோம்.

கூட்டுறவாடல் கல்வித்தேற்றத்திற்கு ஓர் முக்கியாம்சம் என்று சுருக்கமாய்க் காண்பிப்போம். இதன்பொருட்டு கல்வியில் தேர்ச்சி அடைவது என்றால் என்னவென்றும், அதை அடைவதற்குக் கூட்டுறவு எப்படி அத்தியாவசியம் என்றும் அறியவேண்டும்.

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் —
மன்னனுக்குத்
தன்றேய மல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு."

கல்விப்பயிற்சி என்றால் மனிதரின் மனதிலும் புத்தியிலும் அறிவையும் மனி

ரின் இருதயத்தில் நல்லொழுக்கத்தையும் உணர்த்துகிறதென்று அர்த்தமாகும். ஆகையால் மெய்யான கல்வித்தேற்றம் அடையவேண்டுமானால் புத்தியும் மனதும் இரண்டும் தேர்ச்சி பெறவேண்டும். புத்தியைமட்டும் அறிவினால் நிரப்பி தன் மனதின் ஆசாபாசங்களை ஆளத்தெரியாதவன் கல்வியில் தேர்ந்தவனல்ல; கல்வியில் குறைவுள்ளவனைப் பற்றி, அதிவீரராம பாண்டியன் சொல்லியதாவது:

"அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கில்லை" என்பதே. இதையே வெகு நேர்த்தியான உவமானத்தால் சிவப்பிரகாச ஸ்வாமிகள் விளக்கிக் காட்டி யிருக்கிறார்.

"அறிவுடையாரன்றி யதுபெறார் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறிதும் —
வண்ணஞ்செய்வாள்விழியே யன்றி மறை [குருட்டுக்
கண்ணஞ்சுமோ விருளைக் கண்டு.

அதாவது: முகத்திற்கு அழகினைச் செய்கின்ற ஒளி பொருந்திய கண்களே யல்லாமல் ஒளி மறைந்த குருட்டுக்கண்கள் இருளிற்குப் பயப்படா. அதுபோல அறிவுடையோரே யல்லாமல் அதாவது தங்கள் புத்தியையும் மனதையும் பூரணமாய் அறிவாலும் நல் ஒழுக்கத்தாலும் பக்குவப்படுத்தி யிருக்கிறவர்களே யல்லாமல் அறிவில்லாதவர் தம்மிடத்து நெருங்கும் பழிக்கு எள்ளளவும் பயப்படார் என்பதே.

தற்காலத்து மனிதர்களில் அனேகர் புத்தியறிவை மட்டும் விருத்தி பண்ணிக் கொள்ளுவதையே கல்விப்பயிற்சி யென்று எண்ணுகிறார்கள். ஆனால் நம்முடைய முன்னோர் அவ்வாறு நினையாமல் புத்தி யறிவோடுகூட தங்கள் மனதையும் நல்வழியில் பயிற்றாமல் நல்லொழுக்கம் அற்றிருப்போரை அறிவீனர் என்று எண்ணினார்கள்.

"பேரறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கி
வீரமொடு காக்க விரைகுவார் —
மெய்சென்று காக்கும் வியங்கோலடி
தன்மேல் கை சென்று தாங்குங்கடிது"

அதாவது, அறிவுடையவர் பிறர் துன்பத்தை தமது துன்பமாக வெண்ணி அதை நீக்க விரைந்து செல்லுவார் என்பதே. தாழ்மையோடு விளங்கினாலன்றி எவ்வளவு மிகுந்த கல்வியாயினும் சிறப்படையாதென்று, குமரகுருபர சுவாமிகள் எனச் சொல்லப்பட்ட வேறொரு புலவராற் சொல்லப்பட்டிருக்கிறது.

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்
றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்.
இல்லார் குறை யிரந்து தம்முன்னர்
நிற்பபோல் தாமும் தலைவணங்கி தாழப் பெ [றின்"

ஆகையால் அறிவுடையோர் ஆகவேண்டுமானால் புத்தியை அறிவிலும், மனது அல்லது இருதயத்தை நன்மையிலும் பயிற்றவேண்டும். இவ்வித கல்வியைப்பற்றியே "கல்வி யழகே அழகென்றும்" இவ்வித கல்விநலம்பெற்றவனையே மன்னனின் சிறப்புடையன் என்றுங் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைப்பட்ட கற்றோர்க்கே சென்றவிடமெல்லாம் சிறப்பு.

நமது புத்தியை அறிவில் பயிற்றுவதெப்படி? மனதை நல்லொழுக்கத்தில் பயிற்றுவதெப்படி? கல்வி கற்பிக்கும் சாலைகளுக்குப் போய் கற்றுக்கொள்ளுவதாலும், புஸ்தகங்களைப் படிப்பதாலும் பத்திரிகைகளை வாசிப்பதாலும் புத்தியை அறிவில் பயிற்றலாம். ஆனால் நாம் இவ்வாறு பலவிதத்திலும் அடையும் அறிவானது பள்ளிக்கூடத்தோடும் புஸ்தகங்களைப் படிப்பதோடும் பத்திரிகைகளை வாசிப்பதோடும் முடிந்துபோமானால் கல்வியில் தேற்ற மடையோம். நம்முடைய வீட்டறைக்குள்ளும் கல்விச்சாலைக்குள்ளும் உலக அறிவு தேடினால் கிடைக்காது. உலக அறிவு வேண்டுமானால் வீட்டை விட்டு வெளியே போகவேண்டும்; உலகத்துக்குள்ளே போகவேண்டும், பிறரோடு கூட்டுறவாடவேண்டும். வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நாம் அடையக்கூடிய குறைவுள்ள அறிவானது ஒருவரோடு ஒருவர் கூடி உறவாடுவதனால் நிறைவாக்கப்படும். மனுஷ சுவாபம் இத்தன்மையானது; இவர்கள் இப்பேர்க்கொத்தவர்கள்; அவர்கள் அப்பேர்க்கொத்தவர்கள் என்று புஸ்தகங்களினின்று அறிவதற்கும் நாமே மனிதர்களோடு உறவாடி அவர்களின் இயற்கைக் குறைகளையும், விக்கினங்களையும், நற்குண ஒழுக்கங்களையும் அநுபோகத்தினால் அறிந்துகொள்வதற்கும் எவ்வளவோ தூரபார வித்தியாசம் உண்டு. "மனிதன்" என்னும் பதத்திற்கு சில சாஸ்திரிகள் "கூட்டுறவாடுவோன்" எனப் பொருள் கூறுகிறார்கள். மனித ஜாதிக்கும் மிருக ஜாதிக்கும் உண்டான வித்தியாசம் மனிதனின் கூட்டுறவாடும் இயற்கை அல்லது தன்மை யென்பார்கள். முற்றும் இப்படி இல்லாவிடினும் மனிதன் வனவாசியாயிராமல் தன் இனத்தோடு கூட்டுறவாடும் பொருட்டுத் தான் கொண்டிருக்கும் சுவாபமும், இயல்பும் தன்னைச் சிருஷ்டித்த சர்வாதிகர்த்தரால் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும் சொல்லக்கடவோம். இதற்காக வல்லவா நாகரிகத்திலும் கல்வியிலும் சிறந்த ஒவ்வொரு தேசத்திலும், தேசத்தின் ஒவ்வொரு நகரிலும் சபைகளும் சங்கங்களும் கணக்கற்றவிதமாய் ஏற்படுத்தப்பட்டு அச் சபைகளைச் சேர்ந்த சகலரும் கல்வியிலும் நாகரிகத்திலும் தேர்ச்சியடைந்து வருகிறார்கள்.



இந்த அவசியத்தைக் கண்டுணர்ந்த நீங்களும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம் ஒன்றை ஸ்தாபித்து நடத்தி வருகிறீர்கள். இந்தச் சங்கத்தின் பலனை முற்றும் சபையோரும் பொதுவில் கத்தோலிக்கு இந்தியரும் அடைவதற்கு ஒருவ ரொருவருக்குள் இருக்கக்கூடிய பேத வித்தியாசங்களையும், வேற்றுமை விகற்பங்களையும் கவனியாமல் ஒவ்வொருவரும் தான் பெற்றும் அடைந்தும் இருக்கும் கல்வியையும் அறிவையும் பிறருக்குக் கொடுக்கவேண்டும். ஒரு கூட்டத்தில் சகலரும் கல்வி கற்றவருமல்ல, சகலரும் சகலத்திலும் கற்றவருமல்ல; சகலரும் அறிவீனர்களுமல்ல. ஆகையால் அறிவோர் அறியோருக்குக் கற்பிக்கவேண்டும்.

"ஆக்குமறிவா னலது பிறப்பினால்
மீக்கொள்ளுயர் விழிவு வேண்டற்க—நீக்கு
பவராரரவின் பருமணி கண்டென்றும்
தவாரார் சடலின் கடு.

அதாவது, பாம்பினிடத் துண்டாகிய பருத்த மாணிக்கத்தைப் பார்த்து இது பாம்பினிடமுண்டானதென்று எடுக்காமல் விட்டுவிடுவோர் ஒருவருமில்லை. ஆதலால் நற்குணங்களை உண்டாக்கும் அறிவினாலல்லாமல் பிறப்பினாலேயே மேலாக்கும், உயர்வையும் கீழாக்கும் இழிவையுஞ் செய்யாதிருக்கக் கடவீர்களாக. இவ்விதமாய் கத்தோலிக்கு இந்தியருக்குள் உங்கள் சங்கத்தின் கருத்துக்களுள் முக்கியமானதாகிய அதிக அன்னியோன்னிய உறவு உண்டாகும். ஒவ்வொரு விசாரணையில் இருக்கும் குருக்களும் விசாரணைக் கிறிஸ்துவர்கள் சகலரோடும் வித்தியாசமின்றி உறவாடவேண்டும். கத்தோலிக்கு இந்தியரும் அவ்வண்ணமே குருக்களுடன் செய்யக்கடவார்கள். ஏனெனில்,

"கற்றோர் முன் கல்வி உரைத்தல் மிகவினிதே
மிகமாண மிக்காரை சேர்தல் முன் இனிதே"

---

## MARIAN CONGRESS.
## மரியாயின் சங்கம்.

அடுத்த டிசம்பர்மீ திருச்சினாப்பள்ளியில் கூடப்போகிற மரியாயின் சங்க விஷயமாய் மயிலை மேற்றிராணி யாண்டவரவர்கள் தமது விசாரணைக் கிறிஸ்துவர்களுக்கு எழுதிய நிருபத்தை சென்றமீ பத்திரிகையில் பிரசுரித்தோம். இம்மாதம் ஷை மகா சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாய் விளங்கும் திருச்சினாப்பள்ளி மேற்றிராணியாராகிய சரியாய் வந்திக்கத்தக்க அகுஸ்தீன் பெசாந்தியர் ஆண்டவரவர்கள் அதே விஷயமாக எழுதிய நேர்த்தியான நிருபத்தை இதன் பின்னால் வரைந்து தருகிறோம். கத்தோலிக்கு கிறிஸ்துவர்களின் ஆத்தும நன்மைக்கான இம்மகா சங்கம் நன்குநடை பெறுவதற்கு நமது சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும், தம்தம்மால் ஆன உதவி யெல்லாம் செய்ய வேணுமென்று பின்னும் வற்புறுத்திக் கூறுகிறோம். ஷை ஆண்டவர் அவர்களின் நிருபம் பின் வருமாறு :—

தேவகிருபாகடாக்ஷத்தாலும் அப்போஸ்தல
ஸ்தானத்தின் அனுமதியாலும்
திருச்சிராப்பள்ளி மேற்றிராணியாரான
சேசுசபை அகுஸ்தீன் பெசாந்தியர்
ஆண்டவர்
நமது விசாரணைக்குட்பட்ட குருக்களுக்கும்
கிறிஸ்துவர்களுக்கும் சௌபாக்கியமும்
ஆசீர்வாதமும் உண்டாவதாக !

சேசுக்கிறிஸ்துவினிடத்தில் நமக்கு மிகவும்
பிரியமுள்ள சகோதரர்களே, பிள்ளைகளே

தபசுகால நிருபம் அனுப்பி சிறிதுகாலந் தானாயிற்றென்றாலும் இன்னொரு நிருப

அடுத்தாப்போலே அனுப்புவதற்குக் காரணம் என்னவென்றால், இந்த வருஷம் பரிசுத்த கன்னிமரியாயின் அமலோற்பவம் விசுவாச சத்தியமாகக் கூறப்பட்ட வஜ்ஜிர ஜூபிலி வருஷமென்றும், நாளது வருஷம் டிசம்பர்மீ 8-ம் தேதி அவ் வுற்சவத்தின் அறுபதாம் வருஷாந்தர சுபதினமென்றும் ஞாபகப்படுத்தி, தேவதாயின் பேரிலுள்ள பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதே. இவ்வருமையான பெருஞ் சம்பவமானது மரியாயின் பிள்ளைகள் அனைவருக்கும் மங்களகரமான விசேஷம் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்த வஜ்ஜிர ஜூபிலி வருஷத்தை எவ்வாறு ஏற்றவண்ணம் இந்தியாவிற் கொண்டாடுகிறதென்று யோசித்து பார்த்தவிடத்தில், ஐரோப்பாவில் பற்பல இடங்களில் நடந்தேறி வருகிறாப்போலே மரியாயின் சங்கம் ஒன்று நடைபெறுமானால், இதைப் பார்க்கிலும் மேலான காரியம் வேறில்லையென்று பத்தி ஊக்கமுள்ள மரியாயின் மைந்தர்கள் அநேகருக்குப் புலப்பட்டது. இவர்கள் இந்த நல்லெண்ணத்தை வெளியிடவே இந்தியா இலங்கை பர்மா இவ்விடங்களிலுள்ள குருக்களும் கிறிஸ்துவர்களும், விசேஷமாய் மாதா சபையார்கள் அனைவரும் ஆவலுடன் இதை அங்கீகாரம் பண்ணினதுமன்றி, இதற்கென்று நாற்றிசையிலுமிருந்து வந்து கூடிய பிரதிநிதிகள் இம்மகா சங்கம் திருச்சினாப்பள்ளியில் இந்த வருஷம் டிசம்பர் மாதம் 28-ம் தேதி சாயந்திரம் ஆரம்பமாகி 30-ம் தேதி சாயந்திரம் முடிவுபெறவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

சேசுக்கிறிஸ்துநாதரில் நமதன்பார்ந்த பிள்ளைகளே! இவ்வருஷமானது உங்கள் எல்லோருக்கும் மரியாயின் வருஷமாயிருக்கக்கடவது. அதெப்படியெனில் தேவதாயாரின் அர்ச்சியசிஷ்டதனத்தையும் அந்த ஆண்டவளின் சுதந்தரங்களையும் அதிகம் அதிகமாய் அறிந்து, அந்த அன்னையின்பேரிலுள்ள நம்பிக்கையும், சிநேகமும் பத்தியும் மேன்மேலும் அதிகரிக்கவேண்டும். இதற்காக நமது மேற்றிராசனத்திலுள்ள சங்கைக்குரிய குருமார்கள் விசேஷ கவலையெடுத்து மாதாவின் செல்வ மாசமாகிய மே மாசத்தையும், அவளுடைய பிரதானமான திருநாட்களையும்சிறப்புடன் கொண்டாடவும், உத்தரீயத்தை கிறிஸ்துவர்கள் பக்தியுடன் தரித்துக்கொள்ளவும், சுகந்த வாசனை பரிமளிக்கும் வாடாமாலையாகிய ஜெபமாலையை நாடோறும்ஜெபித்து மாதா பாதத்தில் சூட்டவும், முக்கியமாய் நம்முடைய நேசத்தாயாருடைய சுகந்த புண்ணியங்களைக் கண்டுபாவிக்கவும் தூண்டுவார்களாக. கிறிஸ்துவஜீவியத்திற்கு அர்ச். கன்னிமரியாயி மேல்வரிச் சட்டமாயிருக்கிறபடியால் சகல சந்தர்ப்பங்களிலும் தேவமாதாவைக் கண்டுபாவிப்பது சகல பக்தி முயற்சிகளிலும் மேலான முயற்சியென்பதற்குச் சந்தேகமில்லை. இது தவிர பங்கு சுவாமிமார்கள் தங்கள் பங்குகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தேவமாதா சபைகளுக்கு இவ்வருஷம் அதிக ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதோடு கூட சபைகள் ஏற்படாத இடங்களில் கூடுமானால் புதிய சபைகளை ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

ஆனால் அன்பான பிள்ளைகளே! நீங்கள் உங்கள் பங்குசுவாமிமார்களுடைய புத்திமதிகளுக்கும் நல்ல ஆலோசனைகளுக்கும் காதுகொடுத்து அதன் பிரகாரம் நடக்கக் கொஞ்சமாகிலும் பிரயாசை யெடுத்துக் கொண்டாலொழிய மற்றப்படி அவர் எடுத்துக்கொள்ளும் சிரமமெல்லாம விழலுக்கிறைத்த நீர்போல் வீணாய்ப்போகும். ஆகையால் நீங்கள் உங்கள் பங்குசுவாமியார்களோடு ஏகோபித்து தேவமாதாவின் பேரிலுள்ள பத்தியானது அதிகரிக்கும்படி உங்களால் இயன்றமட்டும் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும்.

ஆனால் இந்த மரியாயின் வருஷத்தின் பிரதான கொண்டாட்டம் மரியாயின் சங்கம் என்கிறபடியால் இந்நாள் வரையில் இந்தியாவில் நடைபெறாத இந்த முதல் சங்கம் பூரண சித்திபெறும்படி நீங்கள் எல்லோரும் வெகுவாய்ச் சிரமப்படவேணுமென்பது எல்லோருக்கும் நன்கு விளங்கவேண்டும்

இச்சங்கத்தின் பற்பல காரியங்களை முன்னுக்கு நின்று ஒழுங்காய் நடத்துவதற்கு உழைப்பாளிகள் அவசரம் அப்பேர்ப்பட்டவர்கள் உற்சாகத்துடன் தே



OFFICE … 12 JUN 1914 MADRAS

வதாயாரின் தோத்திரத்துக்காக உழைப்பார்களாக. இவ்வருஷம் இந்த சங்கம் அநுகூலமாய் நடைபெற்று இதனால் விசுவாசிகள் மேன்மேலும் புண்ணியத்தில் வர்த்திக்கவும், அஞ்ஞானிகள் பதிதர் மனந்திரும்பவும் அடிக்கடி பக்தி உருக்கத்துடன் வேண்டிக்கொள்ளுங்கள்.

இதுதவிர மரியாயின் சங்கம் சிறப்பலங்காரத்துடன் நடக்கவேணுமானால் ஏராளமான பொருளுதவி அத்தியாவசியம். இதற்கு வேண்டிய தொகை ஏறக்குறைய 15,000 ரூ. எனக் கணித்திருக்கிறார்கள். இதுமெய்யாகவே பெருத்ததொகைதான். இவ்வளவு பெரிய தொகையை வசூலிக்கக் கூடுமோவென்றுசிலர் துவக்கத்தில் ஆக்ஷேபித்தார்கள். ஆனால் நமது அபிப்பிராயமோவென்றால் இது எளிதான காரியம். இந்தியா, இலங்கை, பர்மா இத்தேசங்களிலுள்ள மரியாயின் பிள்ளைகளிடத்தில் மாதாவின் பேரைக் குறித்து ஒவ்வொரு குடும்பத்தாரும் குறைந்த பட்சம் ஒரு அணா கொடுங்கள் என்றால் இல்லையென்று யாராகிலும் சொல்லுவார்களா! ஒருக்காலும் மாட்டார்கள். அப்படியானால், நமது மேற்றிராசனத்திலுள்ள ஒவ்வொருகுடும்பமும் ஒரு அணா கொடுத்தாலுமே பல துளி பெரும் வெள்ளம் என்கிறாப்போல பெருத்த தொகை சேருமென்பது திண்ணம். ஆனால் மரியாயின் நேசப்பிள்ளைகள் ஒரு அணா மாத்திரமல்ல. தங்களால் கூடியது எவ்வளவோ அவ்வளவு தாராள குணத்துடனும் சந்தோஷத்துடனும் கொடுப்பார்களென்று நாம் நிச்சயமாய் அறிந்திருக்கிறோம்.

ஆகையால் சகல கிறிஸ்துவர்களும் முக்கியமாய் மரியாயின் சபைப்பிள்ளைகள் அனைவரும் தங்களால் ஆகக்கூடிய உதவி புரிய வேணுமென்று மரியாயின் நாமத்தினால் கேட்கிறோம். பிள்ளைகளே! மாதாவின் மட்டில் தாராள குணமுள்ளவர்களாயிருங்கள். மாதாவும் உங்கள் மட்டில் தாராள குணமுள்ளவளாயிருப்பாள்.

மரியாயின் சங்கம் கூடுவதற்கு நமது மேற்றிராசனப்பட்டணமாகிய திருச்சினாப்பள்ளியையே தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறபடியினால் உதார குணத்திலும் உற்சாகத்திலும் மற்றவர்களுக்கு நீங்கள் முன்மாதிரிகையாயிருக்கவேண்டுமென்பது ஞாயமல்லவா?

ஆயினும் இது விஷயத்தில் நீங்கள் ஓர் காரியம் நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும். அதாவது தேவதாயாரின் பேரால் அந்த ஆண்டவளின் தோத்திரத்துக்காக மனசார ஒவ்வொருவரும் தம்தம்மால் கூடிய ஒத்தாசை செய்ய வேணுமென்று நாம் கேட்கிறோமொழிய மற்றப்படியல்ல. இவ்வாறு ஏன் எச்சரிக்கிறோமென்றால் சிலர் இந்த வேண்டுகோளை விபரீதமாய் அருத்தப்படுத்தி இது ஓர் புதுவரி யென்று அபத்தமாய்ச் சொல்லி முறுமுறுக்கக்கூடும். இது ஓர் வரியல்ல. ஆனால் மாதாவின் மகிமைக்காக மக்கள் மனசாரக் கொடுக்கும் காணிக்கை.

இக்காணிக்கையை எவ்வாறு உத்தம விதமாய் வசூல்செய்து அதை நமக்கு அனுப்பவேணுமென்கிற விஷயத்தை நமது பங்கு சுவாமிமார்களுடைய பொறுப்பில் விட்டுவிடுகிறோம். ஆனால் யாராகிலும் நேரே நமது பேருக்கென்கிலும் அல்லது மரியாயின் சங்கத்தின் காரியதரிசிகளுக்கென்கிலும் காணிக்கைகளை அனுப்ப இஷ்டமானால் அப்படிச் செய்வதற்குத் தடையில்லை. ஜூன் மாசம் முடியுமுன்னே இந்தக் காணிக்கைகளை அனுப்ப வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

நம்முடைய விசாரணைக் குள்ளிருக்கும் சகல கோவில்களிலும், செபக்கூடங்களிலும், இந்த நிருபம் வந்து சேர்ந்த நாளுக்குப்பின் வரும் முதல் ஞாயிற்றுகிழமையில் இது பிரசித்தமாய் வாசிக்கப்படவும்.

நாம் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கிறதுபோல அமலோற்பவ நாயகியும் அவளுடைய திருக்குமாரனும் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பார்களாக!

திரிச்சிராப்பள்ளி 1914-ம் ௵ ஏப்பிரல்-மீ 14-உ இந்த நிருபத்தை நமது கையொப்ப முத்திரையோடு எழுதித் தந்தோம்.

✠ அகுஸ்தீன் பெசாந்தியர், சேசுசபை,

திரிச்சிராப்பள்ளி மேற்றிராணியார்.

இந்த மரியாயின் சங்கத்துக்காக நன்கொடையளிக்க விரும்பும் நண்பர்கள், திருச்சினாப்பள்ளி கண்டோன் மென்ட் அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீஸிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஏ. ஜெகந்நாதப் பிள்ளையவர்களுக்காவது, நல்லாயன் ஆபீசு மானேஜருக்காவது அனுப்பிக்கொள்ளலாம். இதற்காக இது வரையில் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பற்பல இடங்களினின்றும் வெவ்வேறு காரியதரிசிகள் வழியாய் ஏற்கெனவே சேர்ந்த தொகை | 1713 | 10 | 0 |
| ஆகிரா பட்டணத்து அதிமேற்றிராணியார், சார்லஸ் கெந்திலி அவர்கள் | 300 | 0 | 0 |
| மங்களூர் ஆண் பிள்ளைகளின் சபை | 100 | 0 | 0 |
| மோட்ச இராக்கினிமாதா சபை | 24 | 0 | 0 |
| Mr. ஜோசெப் ஜங்கென், கெம்மென்டைன், பர்மா- முதல் பாகமாக | 20 | 0 | 0 |
| ,, A. அந்தோனிமுத்து முதலியார், கூடலூர் | 10 | 0 | 0 |
| ,, P. P. பார்த்திலோ, அர்ச். வின்சென்ற் பால் சபை செக்ரடெரி, பத்திகோலா, முதல் பாகமாக | 10 | 0 | 0 |
| நல்லாயன் அச்சாபீஸ் மானேஜர் சங். ஜான் சுவாமியார் வழியாய் மரியாயின் பக்தர் ஒருவர், பர்மா ரூ. 20; Mr. P. A. துரைசாமி, நந்திதுருக்கம் ரூபாய். 1-0-0; Mr. M. தம்புசாமி ரூ. 1-8-0.— | 22 | 8 | 0 |
| Mr. D. புஷ்பநாதபிள்ளை, ஆரணி, முதல் பாகமாக | 5 | 0 | 0 |
| ,, அகஸ்தின் ரெபேப்ர, மலையாளம் | 10 | 0 | 0 |
| ,, A. தம்புராஜு நாயுடு, குளத்தூர் | 3 | 0 | 0 |
| ,, A. ஞானுசாமி முதலியார், கூடலூர், முதல் பாகமாக | 5 | 0 | 0 |
| ,, J. சாமுபிள்ளை B. A., B. L., ஷை | 5 | 0 | 0 |
| மரியாயின் மைந்தர் ஒருவர், கண்டி, முதல் பாகமாக | 5 | 0 | 0 |
| Mr. B. ஹோம்ஸ், மையிற்கீனு, பர்மா | 5 | 0 | 0 |
| ,, T. A. ரெத்தினசாமி பிள்ளை வேலூர் | 1 | 0 | 0 |
| ,, பிரான்சிஸ் அடைக்கலம், தலவாகல்லி, இலங்கை, | 1 | 0 | 0 |
| Rev. K. ரெத்தினசுவாமிநாதர், கொன்னைக்குடி | 15 | 0 | 0 |
| Mr. P. துரைசாமிப்பிள்ளை, திருவள்ளூர், செங்கல்பட்டு | 5 | 0 | 0 |
| Rev. A. நியுட் S. J. சுவாமியார் மூலமாய் கல்கத்தாவி லிருந்து: அர்ச். வியாகுலமாதாவின் சபையார் ரூ. 200; அர்ச். திரேசம்மாள் சபை பெண்பிள்ளைகளின் சபையார் ரூபா 50; ஷை ஆண்பிள்ளைகளின் சபையார் ரூ. 25; மூன்றுஞ் சபையார், ரூ. 25; சேசுநாதருடைய திரு இருதயச் சபையார், மோட்ச இராக்கினி சபையார், ரூ. 33; தேவமாதா ஜென்மப்பாவமில்லாம லுற்பவித்த சபையார், ரூ. 25; லொரேட்டா ஸ்கூல் மாணுக்கர் சபையார், தரும்தோலா ரூ. 25; அர்ச். பிரான்சிஸ் சவேரியாரின் ஆண்பிள்ளைகளின் சபையார், ரூ. 30; ஆண் குழந்தைகளின் சபையார், ரூ. 40; பெண்பிள்ளைகளின் சபையார், ரூ. 30; அர்ச். அருளப்பர் ஆண்பிள்ளை சபையார், ரூ. 30; பெண்பிள்ளை சபையார், ரூ. 30; அர்ச். தோமையார் பெண்களின் சபையார், ரூ. 50— ஆ. | 593 | 0 | 0 |
| திவான் பஹதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை, M. A.; B. L.; L. L. B. முதல் பாகமாக | 36 | 0 | 0 |
| மிகவும் வந்திக்கத்தக்க தியோனிசியுஸ் விஸ்மாரா, ஹைதிராபாக்கத்து மேற்றிராணியார் அவர்கள் | 100 | 0 | 0 |
| | 2988 | 2 | 0 |

GNANAMANI, III. PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## ஏழாம் அதிகாரம்

## ஆலோசனை.

மறுவாரத்தில் ஒருநாள் அபிராமி தன் வேலையை யெல்லாம் முடித்துக்கொண்டு, வழக்கப்படி விஸ்வாச நாயகர் வீட்டுக்குப் போனுள். அங்கு அவருடைய தாயாரும் மனைவியும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களுக்கு மங்களவார்த்தை கூறி, உட்கார்ந்து பேசத்தொடங்கினுள். பலவிஷயங்களைப்பற்றி பேசினபின், கோவிலைப்பற்றியும், நடக்கப்போகிற திவ்விய நற்கருணை திருவிழாவைப்பற்றியும், திரு இருதயத் திருவிழாவைப் பற்றியும் பேசினபின், திரு இருதயத் திருநாள் சபையாருக்கு விசேஷ பண்டிகை நாளாயிருந்தபடியால், அதன் செலவுக்காக தாங்கள் கொடுத்தத் திருநாள் வரியைப்பற்றி பேச்சுண்டானது. அப்போது மதுரநாயகி அம்மாள் "இப்போது ஆண்பிள்ளைகளுடைய சபைக்கு புதிதாய் நியமிக்கப்பட்ட தலைவர் இந்த வருஷம் திருவிழாவை யெப்படி நடத்துவாரோ?" என்றாள்.

"என்? நன்றாய் நடத்துவார். இதற்காக ஒரு மாசத்திற்கு முன்பதாகவே முயற்சித்ததாக உபதேசியார் சொன்னார்" என்று விஸ்வாசநாயகருடைய மனைவியாகிய கமலமரி யென்பவள் சொன்னாள்.

ம. நா. அம்மாள்.-(அபிராமியைப்பார்த்து,) சபையின் புதுத் தலைவருடைய பெயரென்னம்மா?

அபி.—சலமோன்.

கமலமரி.—அவரை உனக்கு நன்றாய்த் தெரியுமே!

அபி.—சிறுபிராயமுதல் நாங்களிருவரும் ஒரே ஸ்கூலில் படித்தோம்.

மதுர.—அப்போது அவர் இவ்வளவு நல்ல பேர் எடுக்கவில்லை.

அபி.—சிறு பிராயத்தில் மகா துஷ்டன். சத்திய வேதத்தில் சேர்ந்தபின் மாறுபட்டது போலும்.

கமல.—ஆனால் அவருடைய தாய் தகப்பனும் பிள்ளையும் ஞானஸ்நானம் பெற இருந்த நாளில் அந்த வாலன் பேசின பேச்சும், ஆடின துர்ப்பாஷையும் இன்றைக்கே பேசினாப்போலிருக்கிறது!

மதுர.—என்ன அவ்வளவு துஷ்டனு?

கமல.—அதுகூட கேட்கவேண்டுமா? அப்பப்பா! அவர் அன்று செய்த கோஷ்டம் கொஞ்சமல்ல. தன் தகப்பனை தகப்பனுக பாவித்துப் பேசவில்லை. பாட்டுக்கு மத்தளம் அடிப்பது போல வெளியில் கூடியிருந்த கூட்டத்தில் சிலர் சிரித்துக்கொண்டு, "சவாஸ்! சவாஸ்! அதுசரி! தைரியமாயிரு" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்போது பவுல் போதகர் கஸ்தியால் முகம்வாடி யாதொருவருடைய உதவியின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்ததை நான் பார்த்தபோது எனக்குப் பயமூர்ந்திகிலுமுண்டாகி, பேச வாய்வராமல் கம்பம்போல் நின்று கொண்டிருந்தேன். அந்நேரத்தில் ரூத்தம்மாளும் அவள் குமாரத்தி அபரூபமணியும் என்கிட்ட வந்து நின்றுகொண்டு "இது என்ன அநியாயம்? புரோடஸ்டாண்டருடைய படிப்பினை யிது தான்" என்று சொன்னாள். அப்போது கிராம முனிசிப்பு அங்கு வந்திராவிட்டால் என்ன நடந்திருக்குமோ தெரியாது.

மதுர.—நீ கூட அன்றைக்கு பவுல் போதகர் வீட்டுக்கு போனாயோ அபிராமி?

அபி.—நான் திருச்சபையில் சேர்ந்தபின் அந்த வீட்டுக்குப் போனதில்லை.

மதுர.—அவர் சிறுபத்திலகூட மூர்க்க குண முடையவர்தானே?

அபி.—அந்தப்பிள்ளை யாண்டான் ஸ்கூலில் படிக்கும்போது நடத்தின துர்க்கிருத்தியம் கொஞ்சமல்லபாட்டி! பிள்ளைகளை அடித்து சண்டை போடுவதுடன், உபாத்திமாரையும் எதிர்க்கிறதுண்டு. எத்தனைவிசை யிப்பேர்பட்ட ஆகாத நடத்தயைப்பற்றி போர்டிங்கிலிருந்து தள்ளப்பட்டுப்போக போதகரைப்பற்றி திரும்ப சேர்த்துக் கொள்ளப்படுவார்? இரா வேளையில் சுவர் ஏறிக் குதித்து வெளியேபோய் கூத்து, நாடகம் பார்த்து வருவதால் எத்தனையோ விசை தண்டிக்கப்பட்டார்!

மதுர.—ஆமாம், சிறுவத்திலே துடுக்கனுயிருந்தாலும் பெரியவன் ஆனபின் அந்த குணமெல்லாம் மாறிப்போம். எனக்குத் தெரிந்த வரையில், அநேகர் சிறுபிராயத்தில் சுடடித்தனமாய் நடந்து பல தப்பிதங்களைக் கட்டிக்கொண்டவர்கள் பிராயம் வந்தபின் நற்குண சாலிகளாய் நடந்தார்கள். இன்னும் சிலர் சிறு பிராயத்தில் எவ்வளவு துஷ்டராய் நடந்தார்களென்றால், அப்பேர்ப்பட்டவர் சற்குணராவது அசாத்தியமென்று மற்றவர்கள் எண்ணியிருந்தும், அவர்களுக்குப் பிராயம் வந்தபின் முன்னிருந்த நடத்தையெல்லாம் போய் நல்லவர்கள் ஆனதுமுண்டு. நாம் சிறுவர்களா யிருந்தபோது எவ்வளவு சுட்டிகளாய் நடந்தோம்! ஆகையால் யாதாமொருவர் சிறு பிராயத்தில் யாதொரு தப்பிதத்தைக் கட்டிக்கொண்டு வந்தால், அவர்கள் ஒருபோதும் திருந்தாமல் துர்ச்சனராயிருப்பார்களென்று சொல்லலாகாது.

கமல.—என்னம்மா அபிராமி? நீ சலமோனை மணமுடித்துக்கொள்ளப் போகிறதாக பிரஸ்தாபம், அது வாஸ்தவந்தானு?

அபி.—என் தகப்பனுருடைய கருத்து அது தான். ஆனால் எனக்குச் சம்மதமில்லை.

மது ர.—என்டி அம்மா, அவரைச் செய்து கொள்ளக்கூடாது? நமது ஊரிலுள்ள வாலிபரில் அவரைப்போல் நற்குணசாலி இல்லையென்கிறார்களே ஒரு சபைக்கு தலைமையாகிறது சொற்பக் காரியமா? பதிதனுயிருந்து,சத்திய வேதத்தில் சேர்ந்து சகலருக்கும் ஞானக் கண்ணுடியாக விளங்கும் அந்த மாப்பிள்ளைக்கு நீ வாழ்க்கைப் படாவிட்டால், வேறே எந்த மாப்பிள்ளை அகப்படுவான் உனக்கு?

அபி.—நான் சொன்ன தெல்லாம் மறந்து விட்டீர்களோ பாட்டி?

மது ர.— ஒருவன் ஒருவிசை தெரிந்தோ, தெரியாமலோ திருடினுல், அவன் எப்போதும் திருடனு? மேலும் இப்போது அந்த பிள்ளையாண்டான் எவ்வளவு சற்குணனு யிருக்கிறுன்? உன்னைப்போல அவனும் படிப்பாளி! 20 ரூபா சம்பளக்காரன். முன்னும் பின்னும் பார்க்காதபடி உன் தகப்பனுருடைய கோரிக்கைப்படி கலியாணஞ் செய்து கொள்ளம்மா.

அபி.—என்ன பாட்டி, பணம் பெரிதா, குணம் பெரிதா?

மது.-இரண்டு மிருக்கவேண்டியது தான்.

அபி.—பணத்திலும் குணம் பெரிதென்று நான் நினைக்கிறேன்.

மது.—நீ சொல்லுகிறது சரிதான். அந்த போதகருடைய மகன் மனந்திரும்பி சத்திய வேதத்தில் சேர்ந்தபின், நீ சொன்ன துர்க்குணங்கள் அவனிடத்தில் உண்டா ?

அபி.—இல்லை; இப்போது மெத்த யோக்கியராய் நடக்கிறுர். ஆனால் இனிமேல்.....(என்று தன் கண்ணைத் துடைத்தாள்.)

கமல.—ஏன் அம்மா விசனப்படுகிறுய்?

அபி.—இந்த கலியாணத்தைப்பற்றி நினைக்கும்போது என் மனதில் அவ்வளவு விசனமுண்டாகிறது அக்கா.

கமல.—இப்போது அத்தை சொன்னது போல போதகருடைய மகன் குணம் முழுதும் மாறி யெவ்வளவோ நற்குண சாலியாயிருக்கிறுர்!

அபி.—ஒரு விஷயத்தைப்பற்றி நினைக்கும் போது என் அங்கம் பதைக்கிறது.

கமல.—அது என்ன விஷயம் அம்மா ?

அபி.—இப்போது பாட்டி சொன்னதுபோல யாதா மொருத்தர் சிறுவயதில் தெரிந்தோ தெரியாமலோ துடுக்கு வேலையை நடத்தினபிறகு, பிராய மானபின், நல்லவர்களாய் ஆகிறதுண்டு. ஆனால் யாதாம் ஒருவனுக்கு கள், சாராயம் குடிக்க வழக்கமிருந்தால், பிராயம் வரவர அந்த துர்ப்பழக்கமும் அதிகரிக்குமே அன்றி குறையாது.

கமல.—என்ன அவர் குடிக்கிறுரா?

அபி.—அக்கா! உங்களையும் பாட்டியாரையும் என் தாயாக பாவித்துப் பேசுகிறேன். ஒருவருடைய துர்க்குணத்தையும் ஆகாத நடத்தையையும்பற்றி பேசுவது சரியல்ல. பல சமயங்களில் அது தப்பிதமாகும். ஆனால் நான் அவரைக் கலியாணம் செய்துகொள்ளவேணுமென்று தகப்பனுர் கோருகிறபடியால், உங்களுடைய ஆலோசனையைக் கேட்க வந்தேன். இல்லாவிட்டால் அவருடைய நடத்தையைப்பற்றி உங்களோடு பேசேன்.

கமல.—அவர் குடிக்கிறதுண்டோ.?

அபி.—7-8 வருஷகாலமாய் அவருக்கு இந்த துர்வழக்கம் உண்டு.

மது.—என்ன ? இப்போது கூட குடிக்கிறுரா ? அப்படி குடிக்கிற வழக்கமிருந்தால் எப்படி சபைத் தலைவராகலாம் ?

அபி.—கடந்த இரண்டுவருஷகாலமாய் குடிக்கிறதில்லையென கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் சத்திய வேதத்தில் சேருவதற்குமுன் அவர் ஆடின ஆட்டம் கொஞ்சமல்ல.

மது.—அது இருந்தாலும் இருக்கலாம், ஆனால் இப்போது இவ்வளவு நற்குணசாலியாய் நடப்பவர் மறுபடியும் அந்த துர்ப்பழக்கங்களுக்கு உட்படுவாரென்று நான் நினைக்கவில்லை. கக்கிவிட்டதை மறுபடி வாயில் போட்டுக்கொள்வாருண்டோ ?

அபி.-பாட்டியம்மா! குடியரைப் பார்க்கும் போதும், அவர்களுடைய செய்கையைப் பற்றி மற்றவர்கள் மூலமாய் கேள்விப்படும்போதும் எனக்கு உண்டாகும் அருவருப்பு கொஞ்சமல்ல.

கமல.—குடிகாரனுடைய முகத்தில் விழிக்கக் கூட எனக்கு மனமில்லை.

அபி.—அக்கா ! நான் இங்கிலீஷ் புஸ்தகத்தில் சில குடிகாரருடைய சரித்திரத்தை வாசித்திருக்கிறேன், அதில் அவர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டால்



என்ன சொல்வீர்களோ ! புத்தியில்லா மிருகமும் குடிகாரனும் ஒன்று என்கலாம். இன்னும் அதிலும் இவன் நீசமானவனுகிறுன்.

மது.—நீ வாசித்த சரித்திரத்தில் ஒன்று சொல்லு பார்க்கலாம்.

அபி.—ஒரு சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள் ஒரு ஊரில் ஒரு வாலிபனிருந்தான். பணக்காரனே; படிப்பிலும் கேவலமில்லை; நிலபலம் ஏதேஷ்டமா யிருந்தது. தோட்டம் துரவுக்கும் குறைவில்லை, கௌரவமும், செல்வாக்கும் ஆஸ்திபாஸ்தியுமுள்ள பந்துக்கள் அனேகர் இருந்தார்கள். அவனும் நன்றுய்ப்படித்து புத்திசாலியாயிருந்தான். படிப்பை முடித்தபின் மொட்டைப் பசங்களுடன் சகவாசஞ் செய்யத்தொடங்கி கள்,சாராயக்கடைகளுக்கு அவர்களுடன் இவன் போனபோதிலும் அவன் மதுபானம் செய்யாததுடன், அத் துர்க்குணமுள்ளவர்களைப் பழிப்பான். குடிக்க வேண்டாமென்று புத்தி சொல்வான்.

ஒருநாள் இவன் ஸ்னேகிதருடன் உலாவப்போய், சந்தோஷ உல்லாசத்துடன் பேசிக்கொண்டு வீட்டுக்குப் போகும்போது பிராந்தி ஷாப்பில் மற்றவர்களுடன் பிரவேசித்தான். மற்றவர்கள் ஆசை தீரக் குடிப்பதைக்கண்டு, அது எப்படியிருக்கும் பார்க்கலாமென்று கொஞ்சங் குடித்தான். குடித்தபின் வாந்தியெடுத்து விட்டான். மறுநாளும் குடித்தான்; ஆனால் வாந்தியெடுத்தவனல்ல. இதன்பின் தன் மித்திரரோடு சேர்ந்து போகும்போதெல்லாம் குடிக்கத் துவக்கினுன். இவன் குடிக்கக் கற்றுக்கொண்டபின், அனேக சிநேகிதர் சேர்ந்தார்கள் இவன் கூட்டத்தில். ஆகையால் இவன் சாயந்திர வேளையில் வெளிப்படும்போது 3, 4 ரூபாயை மடியில் சொருகிக்கொண்டு போவான்.

மதுர.—அவன் தகப்பன் அவனைக் கண்டிக்க வில்லையோ ?

அபி.—அவனுடைய தகப்பன் இறந்துபோனுர். இவனுடைய துர்நடத்தையைப்பற்றி அவனுடைய தாய் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாயிருந்தாள்.

மதுர.—பந்துக்கள் ஒன்றுஞ் சொல்ல வில்லையா ?

அபி.—யார் பேச்சையும் அவன் காதில் போட்டுக்கொண்டவனல்ல.

கமல.—அவன் கலியாணக்காரன் தானு?

அபி.—ஆம், மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பன். அவன் பெண்சாதி யிதைப்பற்றிப் பேசினுல் கையில் எடுத்துக்கொள்வான் பெருந் தடியை. ஒரு வருஷத்திற்குள் பெருங் குடியனுகி, வீட்டிலிருந்த பணமெல்லாம் பாழாக்கி விட்டான். எதார்த்தவாதியும் நற்குணசாலியுமான இந்த மனிதன், பேர்போன தப்பிலியும் பித்தலாட்டக்காரனுமாகி, அவ்வூரில் ஒருவரும் அவனை ஒரு காசுக்கு முதலாய் நம்பவில்லை. பல சமயங்களிலும் குடியால் வெறிகொண்டு மரத்தடியில் படுத்திருக்கும்போது, மடியிலிருந்த பணத்தையும் பாங்கு நோட்டுகளையும் பறி கொடுத்தான். மயக்கம் தெளிந்தபின் அதைப்பற்றி சற்றேனுஞ் சிந்தைகொண்டவனல்ல. வேறொரு சமயத்தில் பட்டப் பகலில் தன் கையில் போட்டிருந்த பொன் காப்பையும் காதி லணிந்திருந்த வைரக் கல் கடுக்கனையும் பறி கொடுத்தான். உன் காப்பு கடுக்கன் எங்கே என்று கேட்பவர்களுக்கு தட்டான்கையில் கொடுத்திருக்கிறேனென்று புளுகுவான். வெறியெடுக்கக் குடித்துவிட்டு நடுச்சாம வேளையில் வீட்டுக்குப்போனபோது, அங்கு பெண்சாதி பிள்ளைகள் படுத்திருப்பதைப் பார்த்து, கைக்கு அகப்படுவதை யெடுத்து, பாவம்! தன் பெண்சாதியைக் குரூரமாய் அடிப்பான். வீட்டிலிருந்த ரொக்கப் பணமெல்லாம் செலவானபின், நிலங்களை ஒவ்வொன்றுயும், அரைகுறையாயும், அடமானம் வைக்கவும், அரிதிக்கிரயத்திற்கு விற்பனை செய்யவும் ஆரம்பித்தான். 10-ம்ஞூ இரண்டு அடுக்கு மெத்தை வீட்டை ஒற்றிவைத்தான்.

மதுர.—அவ்வளவு சீக்கிரத்தில் ரொக்கமும் நிலமும் செலவாய் விட்டதோ?

அபி.—சாப்பாட்டுக்கு ஊறுகாய் வேண்டியிருப்பது போல மதுபானத்துக்கு நன்றுய் சமைக்கப்பட்ட இறைச்சி அவசியம் தேவை. அதற்காக இராவேளையில் யாருக்குந் தெரியாதபடி ஓட்டெல்களில் திருட்டுத்தனமாய்ப் போய்ச் சாப்பிடுவது வழக்கம்.

கமல.—திருட்டுத்தனமாய்ப் போய்ச் சாப்பிடுவானேன் ?

அபி.—ஓட்டெல்களில் சமையல் செய்கிறது யாரென்று உங்களுக்குத்தெரியாதா ? பறையர் தானே. ஐயர், முதலியார், பிள்ளை, நாயுடு என்று காட்டிக்கொண்டு, என்குலம் உயர்ந்தது, உன் குலம் தாழ்ந்தது என்று வீம்பு பாராட்டி,

பறையனைத் தொட்டால் தீட்டு, அவன் நிழல் பட்டாலே தோஷமுண்டாகும் என்று பிதற்றுகிறவர்கள் இராவேளையில் ஓட்டெலுக்குப் போய் அங்கு சமையல் செய்திருக்கும் போசன பதார்த்தங்களை வயிறு புடைக்க உண்டுவருவார்கள்.

மதுர.—இப்படி குடித்து சாப்பிட்டால் ஜல்தியில் பணம் கரையும் மெய்தான்.

அபி.—இன்னுங் கேளுங்கள் : குடிகாரன் தாராளக் குணக்காரனென்று சொல்வது நிசம். அவன் எவ்வளவுதான் துர்க்குணனானபோதிலும் வழியில் போகிறவர்களையும் வருகிறவர்களையும் அழைப்பான் தன்னோடு குடிக்க. தன் கணக்கில் வார்க்கும்படி சொல்லுவான் கடைக்காரனுக்கு. நான் குறித்துப் பேசும் மனிதன் கள் சாராயத்தில் இறங்கினவன் அல்ல. ஆனால் உயிஸ்கி, பிராந்தி, பீர், சோடா முதலிய விலை உயர்ந்த சரக்குகளை அருந்துவதில் கைதேர்ந்தவன். 10, 12 பேருக்கு அதிகமான சினேகிதர் இருந்தார்கள் இவனுக்கு. ஒரு புட்டி உயிஸ்கி ரூ.3. குடியில் தேர்ந்தவன் ஒருநாளைக்கு 1, 2 புட்டி தாராளமாய்ப் போட்டுக்கொண்டு, பெரும் ஏப்பம் விடுவான். ஒரு மாதத்துக்கு எவ்வளவு செலவாகும் நீங்களே சொல்லுங்கள்.

மதுர.—நூறு ரூபாய்க்கு குறையாது என்பது என் உத்தேசம்.

அபி.—அவனுடைய பெண்சாதி, அவன் குடிக்க ஆரம்பிக்கிறதற்கு முன், காது கழுத்து நிறைய நகை நட்டு பூண்டு, பட்டுச் சரிகைச் சேலைகள் கட்டுவாள். பிள்ளைகளும் அவ்வாறே செல்வமாய் வளர்ந்து ஒன்றுங்குறைவின்றி இராஜப் பிள்ளைகளைப்போல வளர்ந்து வந்தார்கள்.

இவன் குடிக்க ஆரம்பித்த 15-ம் வருஷம் அவனுடைய பெண்சாதி பிள்ளைகளுடைய காதும் கழுத்தும் மூளியாகி, கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு, அனேக நாள் பட்டினியாய், எலும்புந் தோலுமாய் நாவால் சொல்லக்கூடாத சங்கடப்பட்டு வந்தார்கள்.

இந்த குடும்பத்தின் நிர்ப்பாக்கியத்தைக் கண்டவர்கள் மனங் கரைந்து தங்களாற் கூடிய சொற்ப உதவி செய்துவருவார்கள். இவனுடைய நிர்ப்பாக்கிய பெண்சாதி, தான் மணமுடித்துக்கொண்ட நாளைச் சபித்து, ஒருநாளாகிலும் கண்ணீர் விட்டு அழாதிருந்ததில்லை.

வீட்டை அடைமானம் வைத்துக்கொண்டவன் குடிகாரன்மேல் தாவாசெய்து அதை தன் வசமாக்கிக்கொண்டான். இது நடந்த சில காலத்துக்குப்பின் இந்த நிர்ப்பாக்கிய மனிதன் தின்ன ஆகாரமும் கட்ட வஸ்திரமுமின்றி வெகு ஹீனஸ்திதியிலிருக்கும்போது, அவனால் மகாராசனான அவன் சினேகிதர்கள் அவனுக்கு அற்ப உபகாரம் செய்யாததுடன், தங்கள் வீட்டுக்கு முதலாய் அவன் வரச் சம்மதிக்கவில்லை.

ஒரு நாள் எப்படியோ இவன்கையில் அகப்பட்ட ஒருரூபாய்க்கு பூர்த்தியாய்க் குடித்து வெறிகொண்டு, வாய்க்கு வந்தபடி உளறிக்கொண்டு நடந்துபோகும்போது, நாகதாளியில் விழுந்தான். அந்த வழியே நடந்துபோனவர்கள் அவன் இன்னானென்று அறிந்து, அவனை அவன் வீட்டுக்கு தூக்கிக்கொண்டுபோனார்கள். அப்போது அவனால் துன்பதுரிதத்துக்குள்ளாக்கப்பட்ட அவனுடைய மனைவி, அவனை இந்நிர்ப்பாக்கிய கோலத்தில் பார்க்கவே துக்கத்தால் அலறி புலம்பி, தன்னால் கூடுமான உதவியெல்லாஞ் செய்தும் மறுநாள் இராத்திரி உயிர் துறந்தான்.

இதிலும் துக்கம் வருவிக்கத்தக்க கணக்கற்ற சரித்திரங்களுண்டு; உங்களுக்கு இஷ்டமிருந்தால் இரண்டொன்றைச் சொல்லுகிறேன். மேலும், நான் ஆஸ்பத்திரிக்குப்போய் வேலை பார்க்கிறேன் அல்லவா? குடியால் பல வியாதிக்குள்ளாகி, ஆஸ்பத்திரியில் சங்கடப்படும் அனேக வியாதியஸ்தரை அங்கே பார்க்கலாம். மதராசில் பைத்தியக்காரருக்கு ஒரு ஆஸ்பத்திரி உண்டு. அதிலிருக்கப்பட்ட பைத்தியம் பிடித்தவர்களில் 100-க்கு 80 பேர் குடி வெறியால் பைத்தியம் பிடித்தவர்களென்று வைத்திய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பரிதாபம்!

மதுர.—நீ யிப்பேர்ப்பட்ட சரித்திரங்களையெல்லாம் வாசித்து அறிந்தாய்; நானோ கண்ணால் பார்த்து இருக்கிறேன். இப்போது நாமிருக்கிற இந்த வீடு நம்முடையதல்ல. இது ஒரு ஜமீன்தார் வீடு. இவர் கீர்த்தி மகிமையுடனே வாழ்ந்துவந்தவர். இவருக்கு ராமராவு என்னும் ஒரே ஒரு பிள்ளையிருந்தான். இவனை அவர் மகா செல்வமாய் வளர்த்தாரே அன்றி, அவனுடைய நடத்தையையும், அவன் கூடும் சகவாசக்காரர் இன்னாரென்றும் கவனித்தவரல்ல. அவன் குற்றங் குறை செய்வதை யிவர் கண்டிருந்தும் அவன்மீது வைத்த மிதமிஞ்சின அன்பு பக்ஷத்தால் அவனைக் கடிந்துகொண்டவரல்ல.



OFFICE OF ... REGISTERED 12 JUN 1914 MADRAS

சில காலத்திற்குள் ராமராவு பெருங் குடியனாகி, அனேக துஷ்டவேலைகளைச் செய்துவந்தான். இதைப் பார்த்த அவனுடைய தகப்பன் விசனத்தால் அகால மரணமானார். கிழவன் செத்தவுடனே, ராமராவு ஆடல் பாடலிலும் விருந்திலும் குடியிலும் ஏராளமான பணத்தை செலவழித்தான். நிலம், வீடு முதலியவற்றை யீடுவைக்கவும் விற்கவும் ஆரம்பித்தான். கிழவனார் செத்த 15-ம் வருஷத்தில் பெருங் கடன்காரனானான்.

ஒருநாள் வெறியெடுக்கக் குடித்து, நடுச்சாம வேளையில் வீட்டுக்குப்போன சமயத்தில், அவனுடைய பெண்சாதி நித்திரை செய்வதைக் கண்டு, வாய்க்கு வந்தபடி அவளைத் திட்டி அடிக்கும்போது, அவளுக்குங் கோபமுண்டாகி திட்டத் துவக்கினாள். அப்போது அவன் குடி வெறியினால் மூர்க்க கோபங்கொண்டு, வீட்டிலிருந்த சூரிகத்தியை யெடுத்து தன் மனைவியின விலாவில் குத்தினான். உடனே அவள் கீழே விழுந்தாள். பக்கத்து வீட்டுக்காரர் கூக்குரல் சத்தத்தைக் கேட்டு, அந்த வீட்டில்போய் பார்த்தபோது, பாவம்! அவனுடைய பெண்சாதி குற்றுயிராய்க் கிடப்பதைக்கண்டு, அவளை ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டுபோனார்கள். அங்கு செய்யக்கூடிய சிகிச்சையெல்லாம் செய்தும் குணப்படாமல் மூன்றுநாள் ஆஸ்பத்திரியிலேயே இறந்துவிட்டாள்.

அபி.-அவளுக்கு பிள்ளை குட்டிகளுண்டா?

மதுர.—ஒரு பிள்ளையுமில்லை. இவன் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய கிஸ்தியை கட்டாதபடியால், அவனுடைய நில புல மெல்லாம் சர்க்கார் வசமாக்கப்பட்டது. இந்த வீட்டை அடமானம் வாங்கி வைத்துக்கொண்ட கறுப்பஞ் செட்டி, கொலைநடந்த அந்தவீட்டில் வாழ்ந்தால், பல துன்பங்களுண்டாகுமென்று எண்ணி, இந்த வீட்டைப் பிரித்து சாமான்களை யெல்லாம் விற்றுவிட்டு, மனையைப் பாழாக விட்டுவிட்டான். அப்போது விஸ்வாசத்தின் தகப்பனார் 50ரூ.க்கு அதை வாங்கி வீடு கட்டிவிட்டார்.

கமல.—அந்தக் குடிகாரனுடைய கதி யென்னாச்சுது?

மதுர.—சர்க்காரால் [illegible] செய்யப்பட்டு, மரண பரியந்தம் மண்ணுக்குப் போடப்பட்டான்.

கமல.—பாவம்! குடியினால் உலகில் எத்தனை தின்மை விளைகின்றது! எத்தனை குடும்பங்கள் க்ஷீணித்து குடிப்பெயர் கோத்திரப்பெயரின்றி மறைந்துபோகின்றன!

மதுர.—இப்படிக் கெட்டுப்போன குடும்பங்கள் எனக்கு தெரிந்தமட்டும் நூற்றுக்கு அதிகமானது! விசேஷமாக ஏழைக்கு இந்த துர்ப் பழக்கமிருந்தால், அப்பேர்ப்பட்டவர்களுடைய குடும்பங்கள் படுந் துன்ப துரிதமும் பசி தாகமும் நாவால் வர்ணிக்குந் தன்மையல்ல.

அபி.—இவ்வூரில் அத்தனை குடும்பங்கள் கெட்டுப்போயினவா பாட்டி?

மதுர.—இல்லை, இல்லை. எனக்கு இப்போது 84 பிராயமாகிறது. நான் குடியிருந்த ஊர்களில் நான் கண்ணாரக்கண்டதைச் சொல்லுகிறேன்.

அபி.—இப்பேர்ப்பட்ட குடிகாரரில் யாராகிலும் நல்லவர்கள் ஆனதுண்டோ?

மதுர.—வெகு அரிது. நூற்றில் ஒன்று இருக்கலாம்.

அபி.—எந்தப் பாவப்பழக்கத்துக்கும் திருத்துப்பாடுண்டாகும்; ஆனால் குடியர் திருந்துவது அசாத்தியமென்று பல புஸ்தகத்தில் வாசித்திருக்கிறேன்.

மதுர.—ஆனால் குடியில் பழகின கிறிஸ்தவர்களில் சிலர் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குவதால் குடியை விட்டதாக அறிவேன்.

அபி.—இருந்தாலு மிருக்கலாம். ஆனால் அதுவும் வெகு அரியதாயிருக்கும்.

கமல.—என்? இப்போது பவுல்போதகருடைய குமாரன் குடியை முழுதும் விட்டுவிட்டது நம்மெல்லோருக்குந் தெரிந்த காரியமே.

அபி.—ஆனால் அதில் எப்போதைக்கும் நிலைக் கொள்வாரென்பது என்ன நிச்சயம் அக்கா?

மதுர.—இவ்வளவு தெய்வபக்தியுள்ளவன் கெட்டால் வெளிவேஷக்காரன், கபடன், வஞ்சகன் என்றே பேர் கிடைக்கும் அவனுக்கு.

கமல.—இவ்வளவு நல்ல குணமுள்ளவர் அப்பேர்ப்பட்ட பேர் எடுப்பார் என்பதை ஆர் நம்புவார் அத்தை?

மதுர.—அவர் மறுபடி, அபிராமி நினைப்பதுபோல, அத்துர்ப்பழக்கத்துக்கு உள்ளானால் கள்ள வேஷக்காரனென்பேனே ஒழிய மற்றப்படியல்ல.

கமல.—இவ்வளவு தங்கமானகுணமுள்ளவர் பழய கெட்ட வழக்கத்துக்கு உட்படமாட்டார்.

மதுர.—இதைப்பற்றித்தான் நீ அவருக்கு வாழ்க்கைப்பட மனமில்லாமல் இருந்தாயோ அபிராமி?

அபி.—ஆம், பாட்டி.

மதுர.—இனிமேல் அந்த பிள்ளையாண்டான் கெடமாட்டான்; மேலும் சிலவிசை கெட்டவர்களுடைய துர்ச்சகவாசத்தால் அந்த துர்ச்பழக்கத்துக்கு உள்ளான போதிலும் படித்தவளான உன் புத்தியைக்கேட்காமல் இருப்பானோ?

கமல.—அபிராமியை அவர் கலியாணஞ்செய்தபின் முன்னிலும் நல்லவராவாரே ஒழிய கெட்ட வழியில் நடக்கமாட்டார்.

இப்படியே பேசிக்கொண்டிருக்கையில் விஸ்வாச நாயகர் வீட்டில் சடுதியில் பிரவேசித்து, யார் கெட்டவழியில் நடக்கமாட்டாரென்று தன் பெண்சாதியைப் பார்த்துக் கேட்டார்.

கமல.—தங்களுக்குள் நடந்த சம்பாஷணையை சுருக்கமாய் தன் புருஷனுக்கு அறிவித்தாள்.

விஸ்.—அபிராமியை நோக்கி, அம்மா அபிராமி, சலமோனை கலியாணஞ்செய்துகொள்ளத் தத்தளியாதே; நீ அவரைக் கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்று அபிலாஷை கொள். சலமோனும் உன்மட்டில் மெய்யான பக்ஷங்கொண்டு உன்னை மணமுடித்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்.

மதுர.—அந்தப் பிள்ளையாண்டானுக்கு குடிக்கிற வழக்கமிருக்கிறதைப்பற்றி அபிராமிக்கு அவனுக்கு வாழ்க்கைப்பட இஷ்டம் இல்லையாம்.

விஸ்.—சிறுபத்தில் குடித்தது வாஸ்தவந்தான். அது எனக்குத் தெரியும். ஆனால் கடந்த இரண்டு வருஷகாலமாய் அந்த விஷயத்தில் பரிசுத்தனாயிருக்கிறான் என்று தாட்டிகமாய்ச் சொல்வேன்.

கமல.—கலியாணத்துக்குப்பின் அந்தத்துர் வழக்கத்துக்கு உட்படுவாரென்று பயப்படுகிறாள்.

விஸ்.—இவ்வளவு சற்குணசாலி அப்படிக் கெடுவதாயிருந்தால் உலகத்தில் எப்பேர்ப்பட்ட எதார்த்த வாதியையும் நம்பக்கூடாதுதான்.

அபி.—அப்பேர்ப்பட்ட துர் வழக்கத்தை விட்டவர்கள் மறுபடியும் குடிக்கமாட்டார்களா, உபதேசியாரே?

விஸ்.—சலமோனைப் பற்றி நான் சொல்லமாட்டேன் அம்மா. இவர் திருச்சபையில் சேருவதற்கு முன் நடந்த நடத்தையும் இப்போது உள்ள நடத்தையும் எனக்கு நன்றாய்த்தெரியும். அவர் அப்பேர்ப்பட்ட மனிதன் அல்ல.

இதற்குப்பின் அபிராமி எழுந்து தன் வீட்டுக்குப்போனாள்.

(இன்னும் வரும்.)

## CORRECT THINGS FOR CATHOLICS.
## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### சிநேகம், சம்பாஷணை.

1. பசப்பான வார்த்தைகளைப் பேசி பிறரை மயக்குவது ஒழுங்கல்ல.

2 அன்ன மிட்டவர்கள் வீட்டில் கன்னமிடுவதுபோல், நமக்கு நன்மை செய்கிறவர்களைப் பற்றியே இரண்டகமாய்ப் பேசுவது ஒழுங்கல்ல.

3. கிட்ட இருந்தால் முட்டப்பகை என்பதை மறந்து, மெத்தவும் அடுத்து நேசம் செய்வது ஒழுங்கல்ல.

4. சிநேகிதர்கள் அந்தந்த காலத்தில் செய்த உபகாரத்தை மறந்து, அவர்கள் அறிந்தும் அறியாமலுஞ் செய்த அற்ப சொற்ப கெடுதிகளை மாத்திரம் மனதில் வைப்பது ஒழுங்கல்ல.

5. வாலிப ஆண் பிள்ளைகள் பால்ய பெண் பிள்ளைகளுடன் சிநேகம் செய்வது ஒழுங்கல்ல.

6. தன் அந்தஸ்திற்கு மேற்பட்டவர்களோடும் துஷ்டரோடும் சிநேகம் செய்வது ஒழுங்கல்ல.

7. "இட்டால் உறவாடும் ஏகாலிக் கூட்டம், வார்த்தால் உறவாடும் வண்ணாரக் கூட்ட" மென்பதுபோல், கொஞ்சம் கொடுக்கிறவர்களைக் கண்டால் அட்டை பிடிப்பதுபோல் பிடித்து பொய் நேசம் பாராட்டுவது ஒழுங்கல்ல.

8. சம்பாஷணையின் கோர்வையைக் கவனியாமல் வாயில் வந்தவாறெல்லாம் பேசுவது ஒழுங்கல்ல.

9. பிறரைப்பற்றிப் பரிதாபப்படுகிறவர்களைப்போல் பாசாங்கு செய்து அவர்கள்மேல் இல்லாததும் பொல்லாததும் சொல்லித் திரிவது ஒழுங்கல்ல.

(நேசனே! அந்நியர் செய்யும் அக்கிரமங்களைப்பற்றி ஆண்டவர் உன்னைக் கணக்கு கேட்கப்போகிறதில்லை. அவர்கள் குற்றத்துக்காக நீ அங்கலாய்த்துத் தவிக்காதே. அவரவர் குற்றம் அவரவர்களுக்கு. நீ உன் வழியைப்பார்த்து நேராய் நடந்தால் போதும். பிறரைப்பற்றி உனக்கென்ன கவ்வை?)

10. சிறு பிள்ளைகள் முன்னும், வாலிபர்கள் முன்னும் சமுசாரத்திற்கடுத்த காரியாதிகளைப்பற்றியும், அங்கங்கு நடக்கும் அக்கிரம விஷயங்களைப்பற்றியும் பேசுவது ஒழுங்கல்ல.

11 ஓர் அற்ப சிரிப்புக்காக பிறருக்கு மனவருத்தம் உண்டாக்கும் பேச்சு பேசுவது ஒழுங்கல்ல.

12. மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு வாயால் ஒன்று பேசுவது ஒழுங்கல்ல.

12. பிறர் முன்னிலையில் அவர்களுடைய பூர்வீகம், குலம், மதாசாரம், அந்தஸ்து, படிப்பு, குடும்ப விஷயம், கடன், நடத்தையில் உண்டான விசேஷம் ஆகிய இப்படிப்பட்டவைகளைப்பற்றி அவர்களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணத்தக்க பேச்சுகளைக் கவனமின்றி பேசிவிடுவது ஒழுங்கல்ல.

13. திருச்சபைக்கு விரோதமான பேச்சு வந்தபோது அதை உடனே கண்டித்தடக்காமல் முகத் தாட்சண்யத்திற்காக பல்லை இளித்துக்கொண்டு செவிடனைப்போலிருப்பது ஒழுங்கல்ல.

14. அற்ப சொற்ப காரியத்திற்கெல்லாம் கடூரமாய்ப் பேசுவது ஒழுங்கல்ல.

15. தானே நன்றாய் அறியாத விஷயத்தைப் பிறருக்கு வியாக்கியானம் செய்யப் புகுந்து உளறி வழிவது ஒழுங்கல்ல.

16. பிறருடைய காரியங்களை யறிய அவர்களுடைய வேலைக்காரர் மற்றும்பேர் வழிகளிடம் துப்பு கேட்பதும், அவர்களுடைய கடிதங்களைத் திருட்டுத்தனமாய்ப் படிப்பதும் ஒழுங்கல்ல.

17. "கண்ணால் கண்டதை முதலாய் மண்ணால் மறை" என்றிருக்க, பிறரைப் பற்றிக் காதில் விழுந்ததையெல்லாம் வாயால் பறை யறைந்து பகிரங்கப் படுத்துவது ஒழுங்கல்ல.

(ஒரு காதின்வழியாய்க் கேட்டதை மறுகாதின்வழியாய் விட்டுவிடுவதே உசிதம். அவர்கள் சொன்னதை யிவர்களிடமும் இவர்கள் சொன்னதை அவர்களிடமும், இன்னம் அதோடு கொஞ்சம் கூட்டிப் பெருக்கிச் சொல்வது கலகக்காரர்களுடைய அலுவல். யாவரோடும் சமாதானமாயிருக்கப் பிரியங்கொள்பவர்கள் தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களைமாத்திரம் கவனித்து மற்றவர்களுடைய காரியங்களைப்பற்றிக் கொஞ்சமுங் கவலை கொள்ளாதிருப்பது தகுதி. இப்படி ஒவ்வொருவரும் செய்துவந்தால் உலகத்தில் ஒவ்வொருநாளும் நடந்துவரும் கணக்கிலடங்காத சண்டை, பிணக்கு, சச்சரவு, காய்மகாரம், பகை, வர்மம் முதலியவைகள் தலைகாட்டாமல் ஒழிந்துபோகும்.)

18. "கள்குடித்தவாய்க்குக் கருவாடு" என்பதுபோல் எப்போதும் எளியவர்களையும் பேதைகளையும் இகழ்ந்துபேசி ஏளனஞ் செய்வது ஒழுங்கல்ல.

இன்னும் வரும்.

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பக்கத்தில் நாலு விரற்கடை இடம் விட்டே எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலா

சங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

## நாடக லோலரும் நங்கையர் விலாசமும்.

சகோதரிகாள் !

நன்மைக்கும் தின்மைக்கும் நங்கையரே காரணம். இது, பரமதாய் மரியாளாலும் பண்டைத்தாய் எவாளாலும் ருஜுவாகிறது. அப்படியே நம் ஜன சமூகத்தின் ஏற்றமும் தாழ்வும் உங்கள் கையிலிருக்கின்றது. உங்களில் ஜெப அப்போஸ்தலசபை, அமலோற்பவசபை, உத்தரீயசபை, நன்மரணசபை, குமரிகள் கூட்டம், வாழ்வரசிகள் சங்கம், விதவைகள் ஆஸ்சிரமம் என ஏற்பட்டு இவைகள் நமது தாய்ச்சங்கமாகிய ஜன சமூகத்திற்குத் துணை அங்கங்களாய் நின்று இன்றுகாறும் அநேக ஒத்தாசைகளைச் செய்துவருகின்றன. ஆனால் மேற்சொன்ன சபைகள் இன்னமும் விர்த்தியாகி புஷ்பித்துப் பரிமளிப்பதற்குப் பற்பல வேளைகளில் பற்பல நிமித்தங்கள் இடைஞ்சலாய் வந்து சேருகின்றன. அந்நிமித்தங்களில் தகப்பன் அல்லது புருஷன் அல்லது அண்ணன் தம்பி முதலியோர் குடியர்களாய் இருப்பது ஒன்று. அவர்களே சில வேளைகளில் கூத்தாடிகளாய்த் திரிவது மற்றொன்று.

குடியால் வரும் கெடுதிகளையிட்டுப் போதுமான அளவு பிரசங்கங்கள் உபந்நியாசங்கள் மூலமாய்ப் புத்தகங்கள் பத்திரிகைகள் வழியாய் நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். ஆனால் கூத்தாட்டத்தினால் விளைகின்ற அனர்த்தங்களைப் பற்றியோவென்றால் சிலவேளை அத்தனை விரிவாகத் தெரிந்திருக்கமாட்டீர்கள். சகோதரிகளே, கவனமாய்க் கேளுங்கள்.

நாடக ஆசையால் குபேரர் கோவணாண்டியாய்ப் போயிருக்கிறார்கள்; சக்கரவர்த்திகள் சிம்மாசனத்தை இழந்திருக்கிறார்கள்; அந்தோ! ஒழுக்கமுள்ள குடும்பத்திற் பிறந்த உத்தமஸ்திரீகள் ஒழுங்கீனருடைய கோட்டிக்கு உட்பட்டுப் போனார்கள்; ஓ! நாடகப்பித்தில் அடிபட்ட சிறுவன் தன் ஒருவன் பெற்றோரின் வீட்டை விலைப்படுத்திய பொருளைக்கொண்டு இலங்கையில் வர்த்தகம் பண்ணப்போய், எடுத்துச்சென்ற முதல் அத்தனையும் நாடகமோகத்தில் தோற்றுக் கடைசியாய் ஓர் உடைந்த கின்னரத்தோடு ஊருக்குத் திரும்பியது உங்களில் அநேகருக்குத் தெரியாதிராது. மேலும், சிறிது நாள்களுக்கு முன் ஜெர்மானிய தேசத்து அரசிளங் குமாரிகளில் ஒருத்தி நாடகம் பார்க்கப் போனவிடத்துத் தன் அந்தஸ்திற்குக் கீழ்ப்பட்ட ஓர் காளையின் வசப்பட்டு அவனையே மணம் பண்ணிக் கொள்வதாய்த் தனது பெற்றோர்களை வருத்தியும் பெற்றோர் இந்த முறைகெட்ட ஒப்பந்தத்திற்கு இணங்காமைகண்டு, ஓர் கைத்துப்பாக்கியைக்கொண்டு தன்னையே சுட்டுக் கொண்டிறந்து போனதை மேனாட்டுப் பத்திரிகைகள் மூலமாய் நீங்கள் வாசித்திருப்பீர்கள். சென்னைமாநகரத்திலுங்கூடக் கொஞ்சக்காலத்திற்கு முன்னால் ஒரு நீதவானுடைய மனைவி நாடகப் பசங்களோடு ஓடிப்போன சேதி யாவரும் அறியக் கிடந்த விஷயம். இன்னனைய சம்பவங்கள் இன்னும் அநேகம் உள. என்? போனவருடம் நம் ஊரில் அந்தக் குப்பைக்கிடங்கு நாடகத்தையொட்டி உண்டான ஒழுங்கீனப் பற்று வரவு இன்னும் ஒழிந்தபாடில்லையே. இதனை யெவர் பொய் என்பர்? இடதுகையை நெஞ்சிலும் வலதுகையில் ஓர் சுவிசேஷமும் வைத்துக்கொண்டு தமது மனச்சாட்சியைத் தட்டி ஒவ்வொருவரும் நன்றாய் ஆராய்ந்து பார்க்கட்டும். அப்போது தான் அவ் ஒழுங்கீனப் பற்றுவரவின் உண்மை தெரியும். ஆகையால் அவர் இன்னின்னாரென நானே பேர்குறித்துச் சொல்லவேண்டியது இப்போது அவசரமில்லை. அவர்களும் நமது சகோதரிகள் தான்.

யார் எப்படிப் போனால் இவருக்கென்ன வென்கிறார்கள் சிலர். எவர் எப்படிப்போனால் நமக்கென்னவென் றிருப்பது கிறிஸ்துவ நேசமல்ல. அஃதல்ல கிறிஸ்துநாதர் போதனை. சத்தியவேதப் பத்திரிகைகளும் குருப்பிரசாதிகள் போன்ற பெரியவர்களும் இஃதைக் கவனிக்கக் கூடாதோவென்கிறார்கள் மற்றும் சிலர். நஸ்லாயன், சர்வ வியாபி, பாதுகாவலன், சுதேசமித்திரன் பத்திரிகைகளும் குருக்களும் எத்தனையோதடவை இந்தக் குடும்பப்பாரந் தெரியாத கூத்தாடிச் சிறுவர்களைத் தடுத்திருக்கிறதை நாம் அறிவோம். அப்படியானால், இந்தத்தடவையும் ஏன் தடுக்கவில்லை யென்பீர்களோ?



இற்றைக்கு ஏற்பட்டிருக்கும் நமது துர் அதிர்ஷ்டமே ஒருக்கால் இதற்குக் காரணமெனகலாம். மேலும் சில வருடங்களுக்குமுன் போர்த்துகீஸ் மிஷனில் கனம். M. C. கொயெல்யோ சுவாமிகள், கனம். A. J. M. கர்வாலோ சிரேஷ்ட சுவாமிகள், சேசு சபையில் கனம். எம்மானுவேல் சுவாமிகள் கனம். சந்தியாகு சுவாமிகள் போன்ற குருப்பிரசாதிகள் பகிரங்கமாய்ப் பிரசங்க மேடையில் நின்றுகொண்டு நாடகங்களைக் கண்டனம் பண்ணி கட்டுவரை எச்சரித்தே யிருக்கிறார்கள். ஆனால் இக்காலத்தில் அத்தனை வெளியரங்கமாய் நமது குருப்பிரசாதிகள் இப்போர்க்கொத்த தீய காரியங்களை விலக்க முன் வராமைக்கு மேற் சொன்னதுபோல ஏதோ நம் துர் அதிர்ஷ்டமே காரணமா யிருக்கக்கூடும்.

சகோதரிகளே! இந்த தபசுகாலத்தில் நாம் உண்மையாகவே நன்றாய்த் தபசு பண்ணுகிறோம். ஆனால் நமது தபசைக்குலைத்து நம்மை ஜகசண்டிக ளாக்குவதற்குக், "குடியரும் கூத்தரும் கொண்டாலவிடார்" என்னும் பழமொழிப்படி, பாபம், குடும்பப்பாரந் தெரியாத அந்தக் கூத்தாடிச் சிறுவர் கொட்டகைபோட்டுக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது தபசு உத்தம தபசாய்ப் பிரயோசனமுள்ள தபசாய், மெய்யான வோர் கிறிஸ்துவ தபசாய் இருக்கவேண்டுமாயின் தபசுகால முடியுமட்டும் காத்துக்கொண்டிருந்து அதற்குமேல் தனது காட்சியைக் காட்டநினைத்திருக்கும் அந்த பல வேஷக் கூத்தரின் பாப வலையிலுள் பட்டுக்கொள்ளுவதில்லையென இப்பொழுதே நாம் பிரதிக்கினை பண்ணிக் கொள்ளுவோமாக.

நமது குருப்பிரசாதிகளும் நம் பிரதிக்கினைக்குத் தங்களால் கூடுமான ஒத்தாசை செய்திருவார்களாக.

இங்ஙனம்,

தூத்துக்குடி. 15—3—14.

சிற்றின்பக் கூத்தரின் சிக்கறுத்து வைத்துத் தங்கள் க்ஷேம லாபத்தையே விரும்பி நிற்கும்
பேரின்பப் பிரியன்.

## மரியாயின் சங்கம்.

ஐயா,

ஷை சங்கமானது நாளது வருஷம் டிசம்பர் மீ 28, 29, 30 இம்மூன்று தினங்களிற் கூட்டப்படவேணுமென்று ஷை சங்கத்தின் நிர்வாக சபையார்களால் சென்ற பிப்ரவரி மீ 22-ந்தேதியில் திருச்சிராப்பள்ளியில் ஆயத்தக் கூட்டத்தில் முடிவு செய்திருப்பதாக அநேக கத்தோலிக்குப் பத்திரிகைகள் மூலமாகவும், பல அதிமேற்றிராசனங்களைச் சேர்ந்த பங்கு ஆலயங்களிலும் சகல மேற்றிராசனங்களைச் சேர்ந்த விசாரணைக் கோவில்களிலும் வாசிக்கப்பட்ட நிருபங்களாலும் தெரியவருகிறது. மேலும் ஷை சங்கமானது எல்லா கிறிஸ்துவர்களுக்கும் விசேஷமாய் மரியாயின் தாசர்களுக்கும் மிகப் பிரயோசனத்தைத் தரத்தக்க அவசியமான விஷயம் என்று வற்புறுத்திப் பேசப்படுகிறது. இத்தகைய சங்கத்தின் அவசியத்தைப்பற்றி ஆட்சேபிப்பார் ஒருவருமிரா ரென்று நம்புகிறேன். ஷை சங்கத்தைச் சிறப்பித்துக் கொண்டாடுவதற்காக சாப்பாட்டுச் செலவு நீங்கலாக ரூபாய் 14,500 பிடிக்குமென்று நிர்வாகச் சபையோர்களால் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஷை தொகையை இலகுவில் வசூல் செய்யலாகும். 3-பைசா கொடுக்க முடியாத ஒருவரிடத்தில் 31 பைசாவை வெகு சுலபமாக வசூல் செய்து விடலாம். இதன் விஷயமாய் என் சிற்றறிவுக்குத் தோன்றிய சில சாதனங்களைப் பிரேரேபிக்கிறேன். அவைகள் பின் வருமாறு :—

(a) ஒவ்வொரு பங்கிலும் மரியாயின் சங்கத்தின் சப் கமிட்டி 10 மெம்பர்களுக்கு குறையாமல் ஏற்படவேண்டும்!

(b) அந்த சப்கமிட்டியார்களின் கடமை ஏதெனில்: தங்கள் பங்கு கோவிலைச் சேர்ந்த கிராமத்தை, பட்டினத்தை, இத்தனை வார்டுகள் (Ward) என்று பிரித்து, ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு மெம்பர் தலைமையாகவும் அவருக்கு உதவியாக 4 அல்லது 5 பேர்களை உதவி மெம்பர்களாகவும் ஏற்படுத்த வேண்டும்.

(c) ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு உண்டிப் பெட்டி தயார் செய்து கொடுக்கவேண்டும்.

(d) ஒவ்வொரு வார்டிலுள்ளவர்களும் தங்கள் வார்டிலுள்ள கிறிஸ்துவர்கள் யாவர் வீட்டிலும் ஷை சங்கத்தின் அவசியத்தையும் உபயோகத்தையும் விபரப்படுத்திச் சொல்லி, உண்டியில் போடப்படும் தொகைகளை வாரத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமையில் வசூல் செய்து சப்கமிட்டியாரிடம் வாரம் ஒரு தரம் சேர்த்துவிடவேண்டியது.

(e) ஷை சப் கமிட்டியார்கள் வாரத்திற்கு ஒரு முறை வசூல் செய்த தொகைகளை கவர்ண்மெண்டு போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கில் போட்டுக்கொண்டாவது அல்லது ஷை சங்கத்தின் நிர்வாக சபை காரியதரிசிகளுக்கு அப்போதைக்கப்போது அனுப்பிக்கொண்டாவது வரவேண்டும்.

(f) நாளது 1914ஞ மேமீ 1உ முதல் வருகிற நவம்பர்மீ 30உ வரையில் 31உ ஞாயிற்றுக்கிழமைகள் உண்டு. ஒவ்வொரு கிறிஸ்துவரும் 1 பைசா கொடுத்து வருவார்களானால் 31 வாரத்திற்கும் தலைக்கு 31 பைசாவாகிறது. ஒரு பங்கில் 500 கிறிஸ்துவ சகோதரர்களிருக்கும் பக்ஷத்தில் 15,500பைசா, அதாவது ரூ. 242-3-0 8 வசூலாகிறது என்று மதிப்பு வைத்துக்கொள்வோம். இவ்விதம் 1000 பங்குக்கு எவ்வளவு தொகை வசூலாகிவிடும்!

சரியான கணக்குப்படி ஒரு பங்கில் 500 கிறிஸ்துவர்கள் தானா யிருக்கிறார்கள்! இதைக் கேட்பவர்களுக்கும் வாசிப்பவர்களுக்கும் கேவலமாய்த் தானிருக்கும். ஆனால் சகல கிறிஸ்துவர்களிடத்திலும் வசூல் செய்ய இது ஓர் நல்ல உபாயம்.

மரியாயின் சங்க விஷயத்தில் அக்கறை கொள்ளும் அதிகாரிகளும் மற்றும் கிறிஸ்துவர்களும் ஷை பிரேரபணைகளை ஆலோசித்து அவைகளை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தால் வெகு எளிதில் வேண்டிய தொகை வசூலாய் விடுமென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,

தஞ்சாவூர்
24. 3. 14. } A. T. D.

ஐதராபாக்கம்.

கடந்த 10-ம் தேதியாகிய அர்ச். வாரத்தின் பெரிய வெள்ளிக்கிழமை யன்று பெரிய கோவிலை யடுத்தாப்போ லிருக்கும் அர்ச். லூர்து மாதாவின் கோவிலாகிய (பான்ட் லேயின்ஸ்) என்னுமிடத்தில் ஷை விசாரணை சங். குரு. ஐ. பகானி சுவாமி யவர்களது நன்முயற்சியால் இவ்விடத்தில் சாமான்ய ஜனங்களுக்கு பக்தியை மூட்டும் ஓர் சாதனமாக வியாகம் என்னும் கர்த்தருடைய திருப்பாடுகளில் சிலவற்றின் பாவனைகள் காட்டப்பட்டன. அவைகளில் கர்த்தரை யூதர்கள் பிடிக்கிறதும் கற்றூணில் கட்டி யடிக்கிறதுமான பாவனைகள் மற்றவைகளைவிட அதிக மன உருக்கத்தை விளைவித்தன. ஷை சுவாமியாரவர்கள் இவ்வரிய பாடுகளின்பேரில், தமிழில் அருமையாய்ச் செய்த பிரசங்கமானது பாவிகளுடைய கல் மனதையும் உருக்கிவிட்டது. இதைக் கண்ணுற்ற இதர மதஸ்தருடைய பிரயோசனத்துக்காக மூன்று வாலர்களால் இந்துஸ்தானியில் முக்கியமான சில பாடுகளைப்பற்றிய ஓர் பிரசங்கம் செய்யப்பட்டது. இது இத்தேசத்திற்கு முக்கிய பிரயோசனமா யிருந்தது மல்லாமல், இந்துக்களும் மகம்மதியர்களும் தங்கள் தங்கள் விசனத்தை அழுகைக் குரலினால் காட்டினார்கள்.

கொடிய மதவைராக்கியங் கொண்ட மகம்மதியர்கள் தேசமாகிய இந்த ஐதிராபாக்கத்தில் இதர மதஸ்தரும் கண்டு கண்ணீர் சிந்தத்தக்க விதமாய்ச் செய்யப்பட்ட இந்த திருப்பாடுகளின் பாவனைகள் மூலமாய் அவர்கள் சத்தியவேதத்தைக் கைக் கொள்ளக்கூடுமாகையால், இவைகளை அடுத்த வருஷங்களிலும் இம்மாதிரியே செய்விப்பது நலமெனக் கருதுகிறேன்.

இப்படிக்கு,
கண்டு களித்தோன்.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல வர்த்தமானம்.

**பிராஞ்சும் துர்க்கியும்.**--பிராஞ்சுக்கும் துருக்கிக்கும் நடந்த பண உடன்படிக்கைப் பிரகாரம் 3,54,00,000 துர்க்கிய பவுன் துர்க்கிக்குக் கடன் கொடுக்கப் பரீஸ் பட்டணத்தில் ஏற்பாடாயிருக்கிறது.

**நவீன கருவி.**—நித்திரை அளவைக் காட்டும் கருவியொன்று இத்தாலிய வைத்தியர் இருவரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

**திருடனைக் காட்டும் யந்திரம்.**—இவ்வியந்திரம் இந்தியாவிற்கு வந்துவிட்டது. இது யாதொருவர் தொட்டவுடன் சத்தமிடுமாம்.

**தீயின்றி பற்றும் சுருட்டு.**— அமெரிக்கர் ஒருவர் சுருட்டின் முனையைத் தேய்த்தால் உடனே தீப் பற்றிக்கொள்ளும் படியான சுருட்டுகள் செய்யும் வகையைக் கண்டுபிடித்திருக்கிறார்.



**சங்கனாச்சேரி மேற்றிராணியார்.**—சங்கனாச்சேரி மேற்றிராணியாராகிய வந்திக்கத்தக்க தோமாஸ் குரியலாச்சேரி மேற்றிராணியாரவர்கள் சென்ற மார்ச்சு மாதம் 21-ம் தேதி ரோமாபுரிக்குப் பிரயாணமாய்ப் போயிருக்கிறார்கள்.

**ஆப்பிரிக்காவில் சுழல் காற்று.**—ஏப்ரில் 15உ மொசாம்பிக்கில் போர்ட் அமெலி என்ற துறைமுகத்தில் கடும்புயலடித்து அப்பட்டணம் நாசமாயிற்று. சுதேசிகள் பலர் மாண்டார்கள். ஐரோப்பியர்களுக்குள் சேதமில்லை. ஐரோப்பியர்கள் ஐபோ என்ற பட்டணத்திற்குப் போய்விட்டார்கள்.

**ட்ரிப்போலியில் சண்டை.**-ட்ரிப்போலியில் புகுசால் என்ற ஊரிலிருந்த இத்தாலிய காபந்து படையை 600 அரேபியர் தாக்கினார்கள். ஆனால் இத்தாலியர் அவர்களைத் தோற்கடித்து 100 பேர்வரையில் கொன்று அல்லது காயப்படுத்தி விட்டார்கள். இத்தாலியர் பக்கத்தில் 9 பேர் சேதம்.

**அல்பேனியாவும் கிரீஸும்.** — பிரெமெட்டி, லெல்கோவிக்கீயென்ற பட்டணங்களுக் கிடையிலுள்ள சிற்றூர்களை யெல்லாம் அல்பெனியர் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் எர்பைரஸ் ஜனங்கள் அவர்களைத் தாக்கின்போது, கனத்த நஷ்டத்தோடு அவைகளை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

**ஒரு விநோதமான மீன்.**—அமெரிக்காவிலுள்ள நியுயார்க்கின் மியூஸியத்தில் ஒரு விநோதமான மீன் இருக்கிறது; அது ஆறுமாதகாலம் ஜலத்திற்குள்ளிராமல் ஜலத்துக்கு வெளியே வசித்துவந் திருக்கிறதாம்.

**நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தி பிறந்த நாள்.**— 1914-ஞ ஜூன்மீ 22-ம் தேதி திங்கட்கிழமை யன்று நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி யவர்களின் ஜனனோற்சவம் இந்தியாவில் கொண்டாடப்படும்.

**இந்து மார்க்கத்தின் குறைவு.**—சென்ற பத்து வருடங்களுக்கிடையே 40,000 இந்துக்கள் மகம்மது மார்க்கத்தைத் தழுவ இதைப்போல் மூன்று பங்கு கொண்ட இந்துக்கள் கிறிஸ்துவர்களானார்கள். இப்படியே நாளுக்குநாள் இந்துமார்க்கம் க்ஷீண தசை யடைந்துகொண்டே போகின்றதென்று குடி மதிப்புக் கணக்கிட்ட மிஸ்டர் கேயிட் என்பவர் சொல்லுகிறார். "அக்கியானங் குறையவும், சத்யவேதம் பரம்பவும்" என்கிற வேண்டுதலின் பலனன்றோ இது?

**நமது சென்னை அதிமேற்றிராணியார்.**-அதிமேன்மைதங்கிய நமது சென்னை அதிமேற்றிராணியாராகிய வந்திக்கத்தக்க ஆலன் ஆண்டவர் அவர்கள் தமது செக்ரடெரியாகிய சங். மெர்க்ஸ் சுவாமிகள் சகிதமாய் உரோமாபுரிக்கு சென்ற ஏப்பிரல் மாதம் 11-ம் தேதி சனிவாரம் பிரயாணமானார்கள். இவரும் ஷை சங்கனாச்சேரி மேற்றிராணியாரும் தாங்கள் கோரிய அலுவல்களை முடித்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் தங்கள் தங்கள் மேற்றிராசனத்துக்கு சுகக்ஷேமமாய் திரும்பிவரும்படி சர்வவல்லபமுள்ள சர்வேசுரன் கிருபை செய்யுமாறு நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக.

**ஜப்பான் மாஜி இராணியின் மரணம்.**-ஜப்பானிய மாஜி சக்கரவர்த்தினி இறந்து போய்ச் சிலதினங்கள் ஆனபோதிலும் இப்போது தான் அந்தச் சமாசாரம் கவர்ன்மெண்ட் பத்திரிகைகள் மூலமாய்ப் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இராச்சியமுழுவதும் ஒரு வருஷத்திற்குத் துக்கம் அநுசரிக்க வேண்டுமென்று கட்டளைபிறந்திருக்கிறது. ஏப்ரில் 12உ இராணியின் சவம் மிகுந்த ஆடம்பரத்துடன் டோக்கியோ பட்டணத்தின் தெருக்கள் வழியாய் ஊர்கோலமாய்க் கொண்டுபோகப்பட்டது. ஜப்பானிய இராணிக்காகப் பிரிட்டிஷ் அரண்மனையார் எட்டுநாளைக்குத் துக்கம் அநுசரிக்க வேண்டுமென்று ஜார்ஜ் அரசர் கட்டளையிட்டிருக்கிறார்.

**வாழை மா.**—வாழைக்காயைக் காயவைத்து மாவா யிடித்துப் பலகாரஞ் செய்கிறார்கள். இந்த மாவைப்பற்றி லான்செண்ட் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது.—இந்த மா தேகத்தைப் புஷ்டியாக்கக் கூடியது. விரைவாய் சீரணமாகக்கூடியது. வாசனையிலும் உருசியிலும் புதிய வாழைப்பழத்துக்குச் சமானமானது. இந்

த மாவினால் செய்த ரொட்டி மனுஷருக்கு விசேஷ உணவுப்பொருளாகிறது. அதைப் பாலுடன் கலந்து சாப்பிட்டால் தனிப் பால் சீரணமாவதைவிட சீக்கிரம் சீரணமாகி விடுகிறது. ஆப்பிரிக்காவிலும் மேலிந்திய தீவுகளிலும் வாழைக்காய் மா அதிகம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

**தத்துவ சாஸ்திரியாகிய பேகன் பிறந்த நாள்.**-கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் மகா சாஸ்திரியாய் விளங்கின ரோஜெர் பேகன் என்பவரின் 700-வது ஜனனோற்சவத்தை வெகு பிரபல்லியமாய் நாளது வருடம் ஜூலை மாதத்தில் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் கொண்டாடப்போகிறார்கள். இந்த பேகன் என்பவர் அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ்கு சபையின் ஒரு சந்நியாசி. இவர் அந்தச் சந்நியாச சபைக்குமாத்திரமல்ல, ஆனால் திருச்சபையனைத்துக்கும் வெகு மகிமையாய்ப் பிரகாசித்தவர். O. F. M. சபையைச்சேர்ந்த சங். பாஸ்கால் ராபின்சன் என்ற குருவானவரால் கொண்டாடப்படப்போகிற ஷை பேகன் என்பவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு அமெரிக்காவிலுள்ள கத்தோலிக்கு சர்வ கலாசாலையிலிருந்தும், அத்தேசத்திலுள்ள ஐந்துகாய பிரான்சீஸ்கு சபையிலிருந்தும் அனேகர் சமூகமாயிருப்பார்களென்று தெரியவருகிறது.

**ஓர் மனந்திரும்புதல்.**—(ஓர் நேயர் எழுதுகிறார்) திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நெய்யாற்றங் கரையில் நாயர் வம்சத்தில் பிறந்தவரும், திருவாங்கோடு என்ற ஊரில் சர்க்கார் எலிமெண்டரி பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரும், 30 பிராயமும் உள்ளவருமான ஐயப்பன் பிள்ளை என்பவர் கத்தோலிக்கு மதத்தை நன்றாய் ஆராய்ச்சிசெய்து, அதுவே ஆத்தும இரட்சணியத்துக்கு வேண்டிய சத்திய வேத மென்று உணர்ந்து, தன் குடும்பத்தார் முதலானவர்களை வெறுத்து நாளது 1914௵ ஏப்ரல்மீ 11உ பெரிய சனிவாரத்தன்று கோட்டாறு அர்ச். சவேரியார் ஆலயத்தில் சங்கைக்குரிய பெர்னார்டயின் சுவாமி அவர்களால் தேவசகாயம் பிள்ளை என்ற நாமந்தரிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். இவரைக் கண்டுபாவித்து இவரது பந்துக்களும் மற்றவரும் சத்திய சபையில் சேர திரியேக சர்வேசுரன் திருவுளமிரங்குவாராக!

**மூன்று கேள்விகள்.**—ஒருவன் ஓர் சந்நியாசியிடம் போய் மூன்று கேள்விகளைக் கேட்டான்: முதலாவது, தேவன் எங்கும் நிறைந்தவரென்று ஜனங்கள் என் சொல்லுகிறார்கள்? நான் அவரை எந்த இடத்திலும் பார்த்ததில்லை; அவர் இருக்கிற இடத்தை எனக்குக் காட்டவேணும் என்பது; இரண்டாவது, மனுஷன் தன் பாவத்திற்காகத் கண்டிக்கப்படவேண்டியதேன்? அவன் செய்வதெல்லாவற்றிற்குந் தேவனல்லவோ காரணர். மனுஷருக்குச் சுயாதீனமேது? தேவசித்தத்துக்கு விரோதமாய் அவனொன்றும் செய்யமுடியாதே; மனுஷனுக்குச் சுயாதீனமிருக்குமானால் தன் சொந்த நலத்தையல்லோ தேடுவான் என்பது; மூன்றாவது, ஐம்பூதங்களில் ஒன்றான நெருப்பினால் உருவாக்கப்பட்ட சாத்தானை தேவன் நரகாக்கினியில் என் தண்டிப்பார், அந்த அக்கினியானது சாத்தானுக்கு என்ன செய்ய முடியும் என்பது. இவையெல்லாம் கேட்டிருந்த சந்நியாசி அவனுக்கொன்றும் பதிலுரையாமல் தன்னருகில் கிடந்ததோர் பெரிய மண்ணாங்கட்டியை எடுத்து அவன் தலையில் அடித்தார். அடிபட்டவன் மகம்மதிய குருவாகிய காஜியினிடத்தில் ஓடி, குருவே! நான் சந்நியாசியை மூன்று கேள்வி கேட்டதற்கு எனக்கொன்றும் பதில் உரையாமல் மண்ணாங்கட்டியினால் என் தலை நோகும்படி என்னை அடித்தார் என்று முறையிட்டுக்கொண்டான். இதைக் கேட்ட காஜியானவன் சந்நியாசியை யழைப்பித்து: அவன் கேட்ட கேள்விக்குத் தக்க உத்தரவு கொடுக்காமல் அவன் தலையில் என் அடித்தீர்? என்று கேட்க சன்னியாசி: அவனென்னைக் கேட்ட மூன்று கேள்விகளுக்கும் நானடித்த மண்ணாங்கட்டியே பதிலுத்தரவு. அது எப்படியென்றால், முதலாவது அவன் தலை நோகிறதென்கிறான்; அந்த தலைநோவை யெனக்குக் காட்டினால் தேவனை நான் அவனுக்குக் காட்டுவேன். இரண்டாவது, அவன் என்னைப்பற்றித் தங்களிடத்தில் பிராது பண்ணவேண்டியதேன்? நான் செய்த யாவும் தேவச்செயலல்லவோ? தேவசித்தமில்லாமல் நான் அவனை



அடிக்கவில்லை. மேலும் எனக்கு என்னவல்லமை யிருக்கிறது? கடைசியாய் அவன் மண்ணாலேயே உருவாக்கப்பட்டவனா யிருக்க மண்ணாங்கட்டி எப்படி அவனுக்கு நோவுண்டாக்கும்? என்று பதிலுரைத்தான். அடிபட்டவன் வெட்க மடைந்தான். காஜி அதிசயப்பட்டார்!

**"சப்த ஞானிகள்".**—கி. மு. 6-ம் சகாப்தத்திலே கிரேக்க தேசவாசிகளுள்ளே 'சப்தஞானிகள்' என் றழைக்கப்பெற்ற ஏழுபெயர் விவேகசாதுரியராய் விளங்கி யிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் விருதுவாக்கியஞ் சொல்லி வருவது வழக்கம். அவையாவன:

1. "உன்னை அறிந்துகொள்" என்பார் சோலன் ஞானி.

2. "உன் முடிவைச் சிந்தித்துக்கொள்" என்பார் சில்லோ ஞானி.

3. "உன் சமயத்தை அறிந்துகொள்" என்பார் பித்தாக்கஸ் ஞானி.

4. "மனிதருட் பெரும்பாலார் தீயவர்" என்பார் பியாஸ் ஞானி.

5. "முயற்சியா லாகாததொன் றில்லை" என்பார் பெரியாந்தர் ஞானி.

6. "மிதங் கடப்பதை விலக்கு" என்பார் கிறயோப்பியலஸ் ஞானி.

7. "பிணைநிற்றல் அழிவுக்கு முன்னோடி" என்பார் தேலிஸ் ஞானி.

பூச்சக்கரவாளத்திலே தோன்றிவிளங்கிய, விளங்குகிற, விளங்க இருக்கிற முதன்மையான ஞானிகட் கெல்லாம் ஞானமும் மதிநிட்சணியமும் பாலித்தவரும், பாலிக்கிறவரும், பாலிக்கப் போகிறவரும், நித்திய ஞானமானவரும், மனுவடிவந் தாங்கிய தேவசுதனானவருமான சேசுநாத சுவாமி என்னும் திவ்விய மோட்ச ஞானியானவர் ஞான சாரம் அடங்கியுள்ள எத்தனையோ ஞான வாக்குகளை திருவாய்மலர்ந்தருளிச் செய்திருக்கின்றார். அவற்றுள் ஒன்று "மெய்யாகவே மனிதன் உலக மெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டாலும் ஆத்துமஞ் சேதப்படில் அவனுக்குப் பிரயோசனமென்ன"? என்பதாம். ஓ! இந்த இரட்சணிய விருது வாக்கியம் எத்தனை நர சீவாத்துமாக்களுக்கு நித்திய சீவியஞ் சித்திக்கச் செய்வதாயிற்று! நேசனே, இந்தத் திருவாக்கின் அர்த்தத்தைச் சிந்தித்துப்பார்! நன்றாய் மனமூன்றிச் சிந்தித்துப் பார்! மரித்த தமதுடலம் அழியா வரம்பெற்ற அர்ச். சவேரியாரை அவ்வளவு சுத்தவாளராயும், நமது இந்துதேச அப்போஸ்தலராயும் ஆக்கினது, சேசுநாதர் சுவாமி திருவுளம்பற்றியருளிய இந்த ஒரு ஞானமிர்தம் பொருந்திய வாக்கியமன்றோ?

**சேசுசபையின் முதலாம் நூற்றாண்டுக் கொண்டாட்டம்.**-அர்ச். இஞ்ஞாசியாரால் 1534௵ ஸ்தாபிக்கப்பட்ட சேசு சபையானது ஐரோப்பாவில் அச்சபையாருக்கு விரோதமாய் கிளம்பின பற்பல கலாபனைகளின் நிமித்தம் 1763-ம் ௵ ஜூன்மாதம் 21-ம் தேதி, பதினாலாம் கிளமெந்து என்னும் அர்ச். பாப்பானவரால் கட்டாயமாய் கலைக்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவைச் சேர்ந்த ஏறக்குறைய எல்லா இராச்சியங்களிலும் அச்சபையார் அங்கங்கே கலைந்து சிதறிப்போனாலும் இரண்டாம் கத்திரின் என்ற இராக்கினியின் சனுகினால் ருஷியாவில் மாத்திரம் சேசுசபையார் எப்போதும் போல இருந்துவந்தார்கள். திருச்சபையை ஆண்டுவந்த ஏழாம்பத்திநாதரென்ற அர்ச். பாப்பானவர் அச்சபையாரால் உலகத்துக் குண்டாகும் நன்மைகளை நன்குணர்ந்தவராய் 1814ம் வருஷம் ஆகஸ்டுமாதம் ஏழாந்திகதி ஷை சபையைப் பழயபடி ஸ்தாபிக்கச் சித்தமானார். அல்லாமலும் 1886-ம் வருஷம் ஜூலைமாதம் 13-ம் தேதியில் அர்ச். பாப்பவர்கள் ஷை சபைக்களித்த நிருபத்தைக்கொண்டு முன் அச்சபையா ரனுபவித்து வந்த சகல சுதந்தரங்களையும் திரும்பவும் புதுப்பித்தருளினார்கள். ஆகையால் இப்படி இரண்டாமுறை சேசுசபை ஸ்தாபிக்கப்பட்டு இப்பொழுது நூறுவருடமாகிறது. இதன் ஞாபகமாக அடுத்த வருடம் ஷை சபையார் நூறாவது வருடோற்சவங் கொண்டாடப்போகிறார்கள். அர்ச். சவேரியாராலும் அவரைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற சேசுசபை காரணக் குருப்பிரசாதிகளாலும் உலகத்தின் பற்பல திசைகளிலும் விசேஷமாய் நாம் வசிக்கிற இவ்விந்தியாவிலும் விளைந்து வருகிற நன்மைகள் கொஞ்சமல்ல. ஆகையால் நாமெல்லோரும் அவர்களுக்கு நன்றியறிந்தவர்களாயி

ருக்க வேண்டியது மல்லாமல், அச்சபையைக் கொண்டு சேசுவின் திரு இருதயமானது உலகத்துக்குச் செய்துவருகிற எண்ணிலடங்காத பேருபகாரங்களுக்காக விசேஷ தோத்திரஞ் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோமென்பதை நாம் ஒருபோதும் மறக்கவேகூடாது.

**கோப்பேர்னிக்கஸ் என்ற சத்தியவேத குருவானவர்.**—இவர் ஜனனமான 440-ம் வருடமானது சென்ற மார்ச்சுமாதம் 19ம் தேதியன்று நிறைவேறியது. இவரொரு ரோமான் கத்தோலிக்குக் குருவானவராகையால் இவர் அன்றுடம் திவ்விய பூசை செய்து, தம்மிடம் ஆயத்தமாய் வருகிறவர்களுக்குப் பாவசங்கீர்த்தன முதலிய தேவத்திரவியானுமானங்களை யளித்து குருக்கள் அனுதினம் செபித்துவருகிற "பிரேவியரி"யிலுள்ள ஜெபங்களைத் தாமுஞ் செபித்து வந்தார். உலகத்திலுள்ள பேர்போன சகல கல்விச்சாலைகளிலும் போதிக்கப்பட்டு வருகிறவான சாஸ்திரத்தை, அதாவது சூரிய சந்திர நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலிய வான சோதிகளின் நிலமை, அவ்வவற்றின் பரிமாணம், ஓட்டம், மாறுபாடுகள் முதலிய சகலத்தையும் இன்னின்னபடி யென்று தாமே கண்டுபிடித்து நிச்சயித்து உலோகோபகாரமாக முந்தமுந்தத் தெரிவித்தவர் இவரே. இவருடைய வான சாஸ்திரத்தைத் தானே ஏறக்குறைய எல்லாக் கல்விச் சாலைகளிலும் இற்றையவரைக்கும் படித்து வந்தாலும் அவரை யின்னாரென்று கண்டுபிடித்த மாணாக்கர் மகா சொற்பமானபேர். அதற்குக் காரணமென்ன வெனில்: இவர் கத்தோலிக்குத் திருச்சபையைச்சேர்ந்த மிகவுஞ் சங்கைக்குரிய கொப்பேர்னிக்கஸ் குருசுவாமிகள் என்பதாக புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தைச் சார்ந்த கல்விச்சாலைகளில் சாஸ்திரங்களைப் படிப்பிக்கிற உபாத்திமார்கள் தங்கள் மாணாக்கருக்கு வெளிப்படுத்தினால், தங்கள் மார்க்கதத்துக்கு அதனால் குறையுண்டாகுமென்று நினைத்து அவர்கள் உண்மையைச் சொல்லத் துணிவதில்லை. அவர்கள் எவ்வளவுதான் உண்மையை மறைக்கத் தேடினாலும் நாளுக்குநாள் அது அதிகம் அதிகமாகப் பிரகாசித்து வருகிறதேயல்லாமல் கடைசியாய் பொய்யருக்கு அவமானத்தையும் சத்தியவான்களுக்குக் கீர்த்தியையும் உண்டுபண்ணுகின்றது. உலகத்திலுள்ள பேர்போன சகல கல்விச்சாலைகளையும் முந்த முந்த ஸ்தாபித்தவர்கள் கத்தோலிக்கரே. அவைகளில் சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கொடுத்து வந்தவர்களுங் கத்தோலிக்கரே. அக்காலமுதலிக்காலம் வரையிலுமுள்ள ஏறக்குறைய எல்லா சாஸ்திரங்களையுங் கண்டுபிடித்து அவற்றை முன்னுக்குக் கொண்டு வந்தவர்களுங் கத்தோலிக்கரே.

**மிஸ்டர் ச. பி. பாய்வ கோளும்பு.**—வேதத்துக்கடுத்த நானாவித வியாபாரியாகிய மிஸ்டர் ச. பி. பாய்வ என்னும் நண்பரால் பலவித வர்ணமிடப்பட்ட கடுதாசி விளக்கு ஒன்றும், அழகிய விசித்திரக் கடுதாசிப் பூமாலை யொன்றும், தகதகவென ஜொலிக்கும் தங்கரேக்கு வேலை செய்யப்பட்ட வேதப்படப் போஸ்டுகார்டுகள் மூன்றும் நம்முடைய பார்வைக்கு அனுப்பப்பட்டன. இவைகள் கண்ணுக்கு மிக்க நேர்த்தியானவைகளா யிருக்கின்றன. இந்த மரியாயின் மாதமாகிய மே மாதத்தில், அப்பரம ஆண்டவள் கோவிலை, செபக்கூடத்தை, பீடத்தை அலங்கரிக்க ஆசை கொள்ளும் அன்பர்கள் இவைகளை ஆவலோடு அடையப் பிரயாசைப்படுவார்கள். இவைகளைப்பற்றிய விவரந் தெரிந்துகொள்ள விரும்புவோர்கள் நமது விளம்பரப் பக்கங்களைப் பார்க்க.

**ஒரு பிள்ளை.**—திருச்சிநாப்பள்ளியைச் சேர்ந்த உரையூரில் புலியின் வடிவம் பெற்ற ஒரு குழந்தை பிறந்திருக்கிறதாம். அதற்கு 32 பற்களும் கைகால்களில் புலியினுடைய நகங்களும் இருக்கின்றனவாம். உடம்பெங்கும் புலி யுடம்புபோன்று வரிவரியாக விருக்கின்றதாம். ஆனால் குழந்தை அமைதி யுள்ளதாக இருக்கின்றதென்று சொல்லப்படுகிறது.

**புருஷனைக் கொன்ற பூவை**—தவாயில் யாதன் என்னும் பர்மியஸ்திரீ சில தினங்களுக்குமுன் தனது புருஷனைக் கோடாரியால் வெட்டிக் கொன்று ஓடிவிட போலீசார் அவளைத் தேடித் திரிகின்றனர்.

---



## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### நன்மரண அறிக்கைகள்.

#### பெங்களூர்.

பெங்களூர் பிளாக்கிப்பள்ளியில் வசித்து காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ T. தெய்வசகாயம் மாணிக்கம் அவர்களின் எட்டாவது புத்திரரும் எங்களின் பிரிய சகோதரரும், (Loyal North Lancashire) என்னும் ஐரோப்பிய பட்டாளத்து ஆபீசர்ஸ் மேசையில் எட் பட்ளர் உத்தியோகம் வகித்து, தற்போது அல்சூர் எல்லமன் கோவில்வீதி, 15-வது நெம்பர் கிரகத்தில் வசித்து சகலராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தவருமாகிய சிரஞ்சீவி D. M. மரியான் பிள்ளை நிகழும் 1914-ஆம் மார்ச்சு மீ 2-ந்தேதியாகிய ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4-30 இயாலத்தில், வைசூரி யென்னும் கொடிய பிணியால் பீடிக்கப்பட்டு கடந்த பதினொரு நாட்கள் வரையும் எவ்வித அவுஷதங்களை உபயோகித்தும் கிஞ்சித்தும் பயன்படாமல் கடைசி தேவதிரவிய அநுமானங்கள் யாவையும் சரிவரப்பெற்று சம்மனசுக்களின் பூஜித அப்பமாகிய திவ்ய நற்கருணையை அருந்தி, தனது சின்னஞ் சிறுவயதாகிய 28-ம் பிராயத்தில் தன் நேச மனைவி காணிக்கை மரியையும், சிறு குமாரன் துரைராஜனையும், மாமி அம்மாளையும், நான்கு சகோதிரரையும் மூன்று சகோதிரிகளையும் மற்றும் இனஜன பந்துக்கள் எல்லோரையும் இக்கண்ணீர்க் கணிவாயில் மாறுத் துயரத்தால் பரிதபித் தழவிட்டு, சேசு மரி சூசை என்னும் உருக்கம் நிறைந்த வசனங்களை பன்முறை யுச்சரித்து, சகலரும் புடை சூழ்ந்திருந்து கண்ணீர் சிந்தி நிற்க திடீரென்று தன் ஆன்மாவை கர்த்தருக்குக் கையளித்து பரலோக பிராப்தியாயினர். அவர் சடலம் அடுத்த தினமாகிய திங்கட் கிழமை 28-ந்தேதி 10-30 மணிக்கு ஒசூர்ரோட் கல்லறையில் சகல கிறிஸ்துவ விசுவாசிகள் முன்னிலையில் பூஸ்தாபகஞ் செய்யப்பட்டது.

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பரலோக இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்பதுபோல எல்லாம் வல்ல ஈசன் செயலின்படியே ஆகுவதாக.

இந்த பரிதாபகரமான சம்பவத்தை வாசிக்கும் சகோதரரே, சகோதரிகளே, மற்றுமுள்ள விசுவாசிகளே, மரித்த இந்த அடியானின் ஆத்துமம் நித்திய பரகதியில் இளைப்பாறும் பொருட்டு ஆக்க, அளிக்க, அழிக்க அருள்புரியும் கருணாம்பர கடவுளின் திருச்சமுகத்தில் ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள ஆவலோடு கெஞ்சி கேட்டுக் கொள்ளும் சகோதரன்.

இங்ஙனம், தமையனை விட்டுப்பிரிந்த துக்கத்தால் பதறி அழும் சகோதரன்,

பெங்களூர், 15—4—14 } D. M. சந்தியாகு, சேசுவின் திரு இருதய ஆலயம்.

#### ஆரணி.

எனது நமையனார் காலஞ்சென்ற பாக்காலா அசிஸ்டெண்ட் சர்ஜன் D. ஞானதிக்கம் பிள்ளை அவர்களின் ஜேஷ்ட குமாரத்தியும் M. S. M. Ry., Apothecary மிஸ்டர் A. M. அழகிய சுவாமிப் பிள்ளை அவர்களின் பிரிய மனைவியுமாகிய சௌ-தெரசம்மாள் 10-2-14. முதற்பேறான ஒரு பெண் குழந்தையை சர்வேஸ்வரனருளால் பெற்றெடுத்து மறுதினமே விஷசுரம் (Typhoid) கண்டு எவ்வித சிகிச்சையாலும் குணப்படாமல் கடைசி தேவத்திரவிய அநுமானங்களை சம்பூரணமாய்ப் பெற்று 3-3-14 மாலை 2-45-க்கு தனது 23 நாளைய சிசுவையும் பந்து மித்திரர்களையும் இந்த கண்ணீர் கணவாயில் பரிதபிக்க விட்டுத் தனது ஆத்துமத்தை ஆண்டவரின் திருக்கரங்களில் ஒப்புக்கொடுத்தனள். அவ்யாரின் சடலம் வேலூருக்கடுத்த ஆரணி அர்ச். காணிக்கை மாதா தேவாலயக் கல்லறையில் Rev. Fr. Dequidt M. A. அவர்களால் திருச்சபை சடங்குகளுடன் மறுநாள் நல்லடக்கஞ்

செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் யாவரும் ஷெ தெரசம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ள தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும் நிர்ப்பாக்கியசிறிய தந்தை.

ஆரணி } டி. புஷ்பம் பிள்ளை,
16-4 14. } 1st. Grade Sub. Asstt. Surgeon.

பின்மேனு.

எனது பிரிய மனைவியும் சென்னை பெரியச்சேரி வாசியும் இரங்கூனில் வசித்து காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ மாணிக்கம்பிள்ளை குமாரத்தியுமாகிய "மாதரசு மரியம்மாள்" 1914-வரு எப்பிரல்மீ முதல்தேதி பின்மெனுவில் பிரசவ காலத்தில் வியாதியுற இரண்டு டாக்டர்களைக் கொண்டு செய்த எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் எப்பிரல்மீ முதல் தேதி புதன் கிழமை காலை 8-மணிக்கு தனது 3?-வது வயதில் என்னையும் எனதருமை ஆறு மக்களையும் இன்னும் தனது சுற்றத்தார் யாவரையும் பரதவிக்கவிட்டு பரமபதவி யடைந்தனள். அவள் சரீரம் மறுநாளாகிய வியாழக்கிழமை 2-ந் தேதி இராஜரிஷி Rev. Fr. A. Sellos குருசுவாமியாரால் வீட்டில் மந்திரிக்கப்பட்டு 'இரங்கூன் தாம்புவே' கல்லறையில் திருச்சபையோர்கள் புடை சூழ, நல்லடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர-பிரி-திரி வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்:

பின்மெனு, } மனைவியை இழந்த
9—4—14. } சி. மே. சாமிநாதன்.
ஸ்டேஷன் மாஸ்டர்,
பர்மா இருப்புப்பாதை

---

அர்ச். சூசையப்பர் கலம்பகம்.

இதனால் தெரிவிப்பது, முற்காலத்திலே சத்தியவேத குருப்பிரசாதியா யிருந்த நமது வீரமா மூனிவர், தேவமாதாவுக்குத் தோத்திரமாகத், திருக்காவலூர்க் கலம்பகமென ஒரு கலம்பகம் இயற்றியுள்ளா ரென்பதும், அதன்பின், புதுவை மகா வித்துவான் சாமிநாதப் பிள்ளை அவர்கள் நசரை யூராளுகிய நமது சேசு பிரானுக்குத் தோத்திரமாகத், திரு நசரைக் கலம்பகம் என ஒரு கலம்பகம் இயற்றியுள்ளா ரென்பதும், உலகப் பிரசித்தம். ஆனால் சேசுமரி சூசையென்னும் திருக்குடும்பத்திலே, தாய்க்கும் பிள்ளைக்கும் மாத்திரம் ஒவ்வோர் கலம்பகமிருக்க, அந்தத் திருக்குடும்பத்துக்குக் கைத்தாதையும், பாது காவலருமான சூசை யெம்பெருமானுக்கு ஒரு கலம்பகமு மில்லாதிருப்பது உசிதமல்லவே யென்று, பலநாளாக நினைத்து இக்காலத்தில் அந்த மகா முனிவருக் கென்று இராயபுரம் வித்துவான், A. S. ஜெகராவு முதலியாரவர்கள் "சூசையப்பர் கலம்பகம்" என்னும் திரு என்னூர்க் கலம்பகம் எனஒன் றியற்றியுள்ளார். இது சூசையப்பருடைய திருநாமம் உலக முழுவதுந் துதிக்கப்படுங் காரணமாக இயற்றியதால் விலை ஒரு அணுவாகவும் தபாற் செலவு அரையணு வாகவும் ஏற்படுத்தப்பட்டது. உண்மையாகச் சூசையப்பர்மீது அன்பு கொண்டவர்கள் ஒவ்வொருவரும் இக்கலம்பகத்தை வாசித்தறிவார்களென நம்புகிறேன். புத்தகம் வேண்டியவர்கள் "நல்லாயன்" பத்திராதிபருக்காவது எனக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

ஆ. சூசை-அன்னதுரை,
6. Appavoo Pillai Lano,
Royapuram, Madras.

அதிமுக்கிய அறிவிப்பு

---

அமலோற்பவ பொக்கிஷம்: — இச்செப புஸ்தகம் திருச்சிறாப்பள்ளி உலக இரட்சகர் கோவில் அர்ச். ஞானப்பிரகாசியார் சபையில் அச்சிட்டு இதுவரையில் ஏறக்குறைய 15,000 புஸ்தகம் விற்பனையாகி யிருக்கிறது. இப்புஸ்தகம் சிறியோர்களுக்கும் பெரியோர்களுக்கும் வெகு பிரயோசனமும் கைக்கடக்கமுமானது; என்றாலும் அனேக ஜெபங்களடங்கிய புஸ்தகம். இப்புஸ்தகமிருந்தால் ஜெபம் செய்வதற்கு வேறு புஸ்தகம் வேண்டுவதில்லை. இப்போது 7-ம் பதிப்பு அச்சிட்டு விற்பனையாகி வருகிறது.

கலிக்கோகட்டடம். இதன்விலை அணு 4.

10 புஸ்தகம் ஒரேதடவையில் வாங்குவோருக்கு ஒரு புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். தபாற் சார்ஜ் பிரத்தியேகம். வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

அர்ச். ஞானப்பிரகாசியார் சபைத்தலைவர்
உலக இரக்ஷகர் கோவில்,
திருச்சிறாப்பள்ளி.




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } ஜூன் 1914. { இலக்கம். 6.

## DEVOTION TO THE SACRED HEART OF JESUS.
## சேசுவின் திரு இருதயப் பக்தி.

பிராஞ்சு தேசத்தைச்சேர்ந்த பாரலேமோனியால் என்னுமூரில் ஒரு புண்ணிய கன்னியாஸ்திரி இருந்தாள். அவளுடைய பெயர் மரிய மர்கரீத்தம்மாள். இவள் ஒருநாள் திவ்ய நற்கருணைக்கு முன்பாக மகா பத்தி விநயத்துடன் ஜெபித்துக்கொண் டிருக்கையில், இவளுக் கோர் காட்சி யுண்டாயிற்று. அக் காட்சியில் நமதாண்டவரான சேசுநாதர் தம்முடைய திரு இருதயத்தின் சாயலை இவளுக்குக் காண்பித்தருளினார். இத் திருஇருதயம் எவ்வித சாயலாய்த் தோன்றிற்றெனில்: இதன் மத்தியிலிருந்து அக்கினிச்சுவாலை கிளம்பி நாலாபக்கத்திலும் சுடர்விட் டெரிந்துகொண் டிருந்தது மல்லாமல், அப் பரிசுத்த விருதயத்துக்கு மிக்க வேதனையை யுண்டுபண்ணும்படியான ஓர் முண்முடி யதைச் சூழ்ந்திருந்து, கூரிய முட்களால் அதை எப்பக்கத்திலும் ஊடுருவிப் பாய்வதாகக் காணப்பட்டது. ஷெ கன்னியாஸ்திரிக்கு நம தாண்டவர் தம் இருதயத்தை இம்மேரையாய்த் தோற்றுவித்ததின் தாற்பரிய மென்ன? மனிதர்களான நம்மை அவர் அவ்வளவு அளவு கடந்தவிதமாய் நேசிக்கையில், நாம் மாத்திரம் அவரது நேசத்துக்குப் பிரதி நேசஞ் செலுத்தாமல், அவருக்கு விரோதமாய் அனேக துரோகங்களைப் புரிந்து அவருடைய திரு இருதயத்தை நோகச் செய்கிறோமென்று நமக்குத் தெளிவிப்பதற்காகவே யன்றி மற்றப்படி யல்ல.

நம்மட்டில் நம்மாண்டவருக் குண்டாயிருக்கும் நேசபாசத்தை யாரால் விவரித்துச் சொல்லலாகும்!! சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டிகளுக்குள், சம்மனசுக்கள் அதிக மேன்மையானவையும் விசேஷித்தவையுமா யிருந்தபோதிலும், அவைகளை விட நம்மையே அவர் அதிகமாய்ச் சிநேகித்திருக்கிறார். எப்படியென்றால், நம்முடைய ஆதித்தாய் தந்தையைப்போல சில சம்மனசுக்கள் மோட்ச பேரின்ப பாக்கியத்தைப் போக்கடித்துக்கொண்டபோது அவைகளுக்காகத் தாம் பாடுபட்டு மரிக்கச் சித்தமிரங்காமல், நமக்காக மட்டும் மனிதனாய்ப்பிறந்து பாடுபட்டு மரித்து நம்மை

நித்திய பாக்கியத்துக்கு சுதந்தரவாளர்களாகச் செய்திருக்கிறார். "அவர் சம்மனசுக்களோடு ஒருபோதும் ஐக்கியமானவரல்ல; ஆனால் அபிரகாமென்பவருடைய சந்ததியோடு ஐக்கியமானார்." (எபிரே. 11. 16.) நம்மைப் பெற்ற தாய் தகப்பன் நம்மை நேசிப்பதைப் பார்க்கிலும் அவர் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். பெற்றோர் எவரேனும் தம் பிள்ளைகளுக்காக உயிர்கொடுத்ததாக உலகில் கேள்விப்பட்டதில்லை. இன்னும்சரியாய்ச் சொல்லவேண்டுமானால் நாம் நம்மையே நேசிப்பதைவிட அவர் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். அதெப்படியென்றால், நம்முடைய க்ஷேம லாபங்களின்பேரில் நாம் கவலை கொள்வதைப்பார்க்கிலும்—அவைகளுக்காக நாம் வருந்தி உழைப்பதைப் பார்க்கிலும்-அவரே அதிக கவலையோடு அவைகளுக்காக வருந்தி பாடுபட்டிருக்கிறார். ஆனதைப்பற்றி யல்லவோ, "நாம் சீவனை இழந்துபோகாதிருக்க அவர் தம்மையே பகைத்து, தம்மையேபழி வாங்கிக்கொண்டார்" என்றுசொல்ல அர்ச். பொனவெந்தூர் பின்வாங்கவில்லை. நம்மட்டில் நம் ஆண்டவருக்குள்ள நேசப் பெருக்கத்தை எண்பிக்க அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருப்பதாவது: "நாம் ஒவ்வொருவரும் தம்மைவிட அதிக பெரிய கடவுளாயிருந்தாற்போல், அவர் நம் மெல்லோரையும் நேசிக்கிறார்." ஆ! இது எப்பேர்ப்பட்ட நேசம்! ஆ! இது எவ்வளவோ அணைகடந்த பாசம்!!

மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமான நம்மாண்டவர் இந்த அணைகடந்த நேசத்தை இடைவிடாமலும் எப்பொழுதும் நமக்குக் காட்டிவருகிறார். நாம் பிறவா முன்னமேயே அவருடைய நேசம் நம்மேல் இருந்தது மல்லாமல், இப்போதும் நம்மேல் அது மாறாதிருந்து வருகிறது. நாம் அவருக்கு ஏராத துரோகங்களைக் கட்டிக்கொள்ளும்போது முதலாய், நம்மேலவருக்குள்ள பட்சம் மாறுகிறதில்லை. ஏனெனில், நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு தவம் புரிவோமென்னும் நம்பிக்கையால் தூண்டப்பட்டு அவர் தம்முடைய நீதியின் பிரகாரம் நம்மைத் தண்டியாமல் பொறுமையாயிருக்கிறார். தம் குமாரன் அப்சலோம் விஷயத்தில் தாவீதுராஜா எப்படி நடந்துகொண்டாரோ, அப்படியே அவர் நம் விஷயத்திலும் நடந்துகொள்கிறார். அப்சலோம் தன் தகப்பனுக்கு விரோதமாய் ஜனங்களுக்குள் குழப்பத்தை யுண்டுபண்ணி, அவர்களெல்லோரையும் தன்வசமாக்கிக்கொண்டு, தன் தகப்பனைக் கொல்ல யத்தனித்த போதிலும், தாவீது இராசா அவனுக்கு யாதோர் கெடுதியையும செய்ய நினையாததுபோல, நம் ஆண்டவரும் நமக்கு யாதோர் கெடுதியையும் செய்ய மனங் கொள்ளுகிறதில்லை

நம்மட்டில் நமதாண்டவருக் குள்ள நேசம் அவருடைய வாக்கிலும் உள்ளத்திலு மாத்திரம் தோன்றாமல், கணக்கற்ற உபகார சகாயங்களை நமக்குச் செய்வதிலேயும் நன்கு விளங்குகின்றது. இதைப்பற்றி அர்ச். அகுஸ்தீன் வசனித்திருப்பதாவது: "நீயும் உனக்குள்ள சகலமும் சர்வேஸ்வரனிடமிருந்துதான் என்பதை, ஓ மனிதா! யோசித்துப்பார். பரலோகத்தையும் பூலோகத்தையும் அவைகளிலடங்கிய சகலத்தையும் நன்றாய் நிதானித்துப்பார். நம்மை பாக்கியவர்தர்களாக்கவே சர்வேஸ்வரன் அவைகளை யெல்லாம் நமக்கு உபகாரங்களாகத் தந்திருக்கிறாரென்று நாம் அறிந்து கொள்ளலாம்" என்பதேயாம். ஆம் சொல்லொண்ணா விதமாய் நமக்கு நன்மைகளைச் செய்வதினாலே சர்வேஸ்பரன் நம்மை நேசித்துவருகிறார். மனிதர் மட்டிலுள்ள அன்பின் நிமித்தம் சர்வேஸ்வரன் மனிதனாய்ப் பிறப்பாரென்று நினைக்கக் கூடியதா? இல்லையே; என்றாலும் சர்வேஸ்பரன் மனிதனானார். சர்வேஸ்வரன் மனிதனுக்காகப் பிணையாயிருந்து பாடுபட்டுச் சிலுவையில் மரிப்பாரென்று யாராகிலும் நினைத்ததுண்டா? அதுவுமில்லை. ஆயினும், அவர் மரணத்தையு மடைந்தார். தம்முடைய மரணத்துக்குப் பிறகு முதலாய் மனிதர்களை யின்னும் விட்டுப்பிரிய மனங்கொள்ளாமல், பீடத்தின் தேவத்திரவிய அனுமானமாகிய திவ்விய நற்கருணையை உண்டாக்கி, அதில் அல்லும் பகலும் எழுந்தருளி யிருந்து "வருந்திச் சுமை சுமக்கிறவர்களாகிய எல்லோரும் என் அண்டைக்கு வாருங்கள். நான் உங்களுக்குத் தேற்றரவாயிருப்பேன்" (மத் XI. 28) என்று நம்மைக் கூப்பிட்டழைத்து, நமக்கு உபகார



சகாயங்களைச் செய்ய நம்முடன் கூடவே வாசஞ் செய்துவருகிறார். மேலும் தம்முடைய சிலுவைப் பலியை நமது பீடங்களில் நாடோறும் நடந்தேறும் நற்கருணைப் பலியினால் புதுப்பித்துக்கொண்டும் வருகிறார். இதனால் நமக்கு விளையும் நன்மைகள் அனந்தங்கோடி. நம்மட்டிலுள்ள நேசப்பெருக்கத்தினால் நம்முடைய லாபத்தை நாடியே, நமதாண்டவர் இப்பேர்க்கொத்த உபகார சகாயங்களை யெல்லாஞ் செய்துவருகையில், நாம் அவருக்கு எவ்வளவோ நன்றியறிதலுள்ளவர்களாயும், அவர்பேரில் எவ்வளவோ நேசமுடையவர்களாயு மிருக்கவேண்டிய தென்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஜீவ ஜெந்துக்கள் முதலாய்த் தங்கள் உபகாரிகளுக்கு அவ்வளவு நன்றி பாராட்டி அவர்களை நேசித்து வருகையில் புத்தியறி வுள்ளோராகிய நாம் நமது சர்வ உபகாரியாகிய கடவுளை நேசிக்க எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். நம்மாண்டவர் நம்முடைய நேசத்தையே, தாஞ்செய்துவருகிற சகலவுபகாரங்களுக்கும் கைம்மாறாக நம்மிடத்தில் எதிர் பார்ப்பதுமன்றி, நாம் தம்மை நேசிக்கவேண்டுமென்றும் கற்பித்து மிருக்கிறார். "என் கற்பனை யென்னவென்றால் நீங்கள் என்னை நேசிப்பதேயாம்" (அருளப். XV). ஆகையால், நாம் இரு விதத்திலும் அவரை நேசிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த நம்முடைய கடமையை நாம் சுலபமாய் நிறைவேற்றுவதற்காக ஒருவழியுண்டு. அது யாதெனில்: சேசுநாதருடைய திரு இருதயத்தின் பேரில் பக்தி வைப்பதேயாம். அதேதெனில், நம்முடைய ஆண்டவர் மனுமக்கள்பேரிற் கொண்டிருக்கிற அணைகடந்த நேசத்தைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்திக் கொண்டாடுவதிலேயும், அவருடைய நேசத்துக்குப் பிரதி நேசம் காட்டுவதிலேயும், அவருடைய நேசத்துக்கு இருப்பிடமாயும் அடையாளமாயு மிருக்கும் ஆராதனைக்குரிய அவருடைய மனுஷீக இருதயத்துக்கு தேவாராதனை செய்து நமஸ்கரிப்பதிலேயும், அதற்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்கு பரிகாரஞ் செய்வதிலேயுமே திரு இருதயப்பக்தி அடங்கியுள்ளபடியால், இப்பக்தி கிருத்தியமானது அவருக்கு எவ்வளவோ சந்தோஷத்தையும், ஆறுதலையும், மகிமையையும் வருவிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. மனுக்குலத்துக்காக தாம் எண்ணிறந்த உபகார சகாயங்களைச் செய்திருந்தும், அவர்களுக்குள் பெரும்பாலோர் அவைகளை யெல்லாம் சட்டை செய்யாமல், அவைகளைத் தங்களுக்கு வியர்த்தமாக்கிக் கொள்ளுகிறார்களென்பதைப் பற்றியும், அன்பின் தேவத்திரவிய அனுமானமாகிய திவ்ய நற்கருணையில் முதலாய் தமக்கு அநேகர் அவசங்கை, நிந்தை, அனுசாரம் செய்கிறார்களென்பதைப்பற்றியும், தம்முடைய ஊழியத்துக்கென்று விசேஷ விதமாய் வசீகாம்பண்ணப்பட்டவர்களிடத்திலும் முதலாய், இப்பேர்க்கொத்த துரோகங்கள் காணப்படுகின்றனவென்பதைப் பற்றியுமே நம்மாண்டவர் வியாகுலமுற்று, அவர்கள் எல்லோர் இருதயத்திலும் தேவ சிநேகம் பற்றியெரியச் செய்வதற்காகவே தம்முடைய திரு இருதயப்பக்தியை முத்திபேறுபெற்ற மரிய மர்கரீத் அம்மாள் மூலமாய் ஏற்படுத்தத் திருவுளமானார். இப்பக்தியினால் மனிதர்கள் நித்தியகேட்டுக் குள்ளாமல் காப்பாற்றப்படுவார்களென்று நம்மாண்டவரே அப்புண்ய கன்னியாஸ்திரிக்கு வாக்குமளித்திருக்கிறார். ஆகையால் பாவ வழியில் குடிகொண்டிருப்பவர்களும், அடிக்கடி பாவத்தில் விழுந்து அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கிறவர்களும், புண்யவழியில் விரைவாய் நடக்க சோம்பிக்கிடக்கிறவர்களும், பற்பல சோதனை துன்பங்களால் பீடிக்கப்படுகிறவர்களும், சாங்கோபாங்கத்தின் கொடுமுடியை அடைய ஆசிக்கிறவர்களும் இத்திருவிருதயப்பக்திக் கிருத்தியத்தினால் பலனடைவார்களென்பது திண்ணம்.

தொடங்கியிருக்கும் இம்மாதம் சேசுவின் திரு இருதயப் பத்தியை நம்மிடத்தில் அதிகமாய் எழுப்பக் குறிக்கப்பட்ட மாதம். தன் இடத்திலுள்ள சிநேக அக்கினியை அடக்க முடியாமல் சுடர் விட்டெரியும் அத் திரு இருதயம் அத்தேவ அக்கினியை இம் மாசத்தில் விசேஷித்த விதமாய் நம் எல்லோருடைய இருதயங்களிலும் மூட்ட ஆசிக்கிறபடியால், அவ் வாசைக்கிணங்க, அத்திரு இருதயத்துக் கடுத்த பக்தி முயற்சிகளை சுருசுருப்பாயும் ஆவலாயும் அனுஷ்டிப்பது நமக்கு புத்தி யல்லவா?

நாம் எவ்வளவு ஆசையோடும் உருக்கத்தோடும் அப்பக்தி முயற்சிகளை அனுசரிப்போமோ அவ்வளவுக்கும் தேவசிநேகம் நம்மிடத்தில் உண்டாகும். ஆனபடியால் இம்மாதத்தையும் விசேஷமாய் இம்மாதத்தில் 19உ வரும் அத்திரு இருதயத்தின் திருநாளையும் சரிவரக்கொண்டாட, நாம் அனுஷ்டிக்கவேண்டிய முயற்சிகள் எவையென்று கவனிப்போமாக: பிரதானமாய் நமது ஆண்டவர் நமக்குச் செய்திருக்கிற உபகார சகாயங்களை நினைவுகூர்ந்து அவைகளுக்காக அவருக்கு நன்றி பாராட்டுவது, அவருடைய திரு இருதயத்தில் விளங்கிய தாழ்ச்சி, சிநேகம், பொறுமை முதலிய புண்ணியங்களைக் கண்டு பாவிக்க முயலுவது, நமக்கு அன்றாடம் வரும் துன்பம், கஸ்தி, சஞ்சல முதலானவைகளில் முறைப்படாமல் அத்திரு இருதயத்துக்கு அவைகளை ஒப்புக்கொடுப்பது, கூடுமானவரையில் நாடோறும் பூசை காணுவதோடு அடிக்கடி தேவநற்கருணை சந்திப்பது, அதுபோலவே அடிக்கடி அல்லது பிரதிதினமும் நன்மை வாங்கி அத்திரு இருதயத்துக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானத்துக்குப் பரிகாரஞ்செய்வது முதலியனவாம். இப்பேர்க்கொத்த பக்திக் கிருத்தியங்களை நாம் அனுசரித்து வருவதுமல்லாமல் மற்றவர்களிடத்திலும் இப்பக்தியை எழுப்பப் பிரயாசைப்பட்டு இவ்விதமாக அத்திரு இருதயத்துக்கு ஆறுதலையுஞ் சந்தோஷத்தையும் வருவித்து அதன் ஆசீரை நிரம்பப் பெற்றுக்கொள்வோமாக.

---

## AN APPEAL IN AID OF THE MARIAN CONGRESS.

## மா மரியாயின் சங்கம்.

*(By a Sodalist.)*

---

அதிநுபவதி நீ—மரியாயே,
அமலோற்பவி நீ!

அவனவன் தனக்குத் தனக்கென்று உழைத்த காலம் போய், பொது சங்கங்கள், மகா ஜன சபைகள் யேற்பட்டு, பொது நன்மைக்காக உழைக்கும் காலம் வந்திருக்கிறது. ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் தங்கள் மதம் செழிப்புற்றோங்கவும், ஒவ்வொரு ஜாதி வகுப்பினரும் தங்கள் தங்கள் குல அபிவிர்த்திக்கவும் உழைக்கத் தலைபட்டிருக்கிறார்கள். ஐரோப்பாக் கண்டத்திலும் இவ்வித சங்கங்கள் ஆங்காங்கு காணலாம். நமது கத்தோலிக்குத் திருச்சபையில் திவ்விய சற்பிரசாதத்தின் மகிமையை உலகப் பிரசித்தம் செய்ய சற்பிரசாத சங்கங்கள் ஏற்பட்டு, வருஷத்திற் கொருமுறை பற்பல தேசங்களில் சங்கங்கள் கூடி மானிட இரட்சண்ணியத்துக்காக மனிதாவதாரமெடுத்த இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனால் உண்டாக்கப்பட்ட அத்திவ்விய சற்பிரசாதத்திற்கு அநேக கத்தோலிக்கு அரசர்களாலும் குருப்பிரசாதிகளாலும் விசுவாசிகளாலும் ஆராதனையும் மகிமையும் செலுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்தவிஷயமே. இவ்விந்திய தேசமாகிய நமது நாட்டிலும் அச்சங்கம் கூட்டப்பட்டு வருகிறது. ஆனால் மானிட இரட்சண்ணியத்திற் குதவியாய் அச்சுதனாகிய சர்வேசுரனைப் பத்துமாதம் தன் கருப்பத்தில்சுமந்திருந்து பெற்றெடுத்த அத்தெய்வ திருக்கன்னிகையின் மகிமையை நாம் பிரசித்தப்படுத்த வேண்டாமோ? "இனி எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி யென்பார்கள்" என்று கூறிய அவளின் வார்த்தையை அவள் மக்களாகிய நாம் நிலைநிறுத்தவேண்டாமோ? அவ்வளவு வணக்கம் அவளுக்கு என்னத்திற்கு என்று புரட்டஸ்டாண்டாரைப்போல் சிலர் கேட்பார்களாக்கும். சகோதரர்களே, அவளன்றோ நமக்கு இரக்ஷண்ணியத்தைக் கொண்டுவந்த ஆண்டவரை ஈன்றெடுத்தவள்? நமது இரக்ஷண்ணியத்தின் பொருட்டு சிலுவை மரத்தில் சிந்தப்பட்ட உதிரம் அவளுடையதன்றோ? அம்மகத்தான கன்னிகைக்கு நாம் செய்யும் வணக்கம் தகாது, குற்றமுள்ளது என்பீராகில், நமதாண்டவராகிய சேசுக் கிறிஸ்துவே முதல் குற்றவாளியென்று சொல்லவேண்டியிருக்கும். இது தகுமா? அவரன்றோ முதலில் அவளை மகிமைப்படுத்தி அவளுக் கூழியஞ்செய்து அவள் சொற்படி கேட்டு நடந்தவர்? அவருக்குப்பின்னால் அவருடைய சீஷர்களும் அவளைக் கனப்படுத்தி அவள் உயிரோடிருக்கும் வரையில் தங்களுக்கு ஆலோசனை தருபவளாகப் பாவித்து வந்ததாக வறிகிறோம். பிறகு திருச்சபைக்குத் தலைவராக வந்த அநேக பாப்பரசர்களும் அக்கன்னிகையை ஸ்துதித்து அவளுக்கு அநேகாநேக சிறந்த நாமங்களை யிட்டிருக்கிறார்கள். இவைகளை தேவமாதா பிரார்த்தனையில் காணலாம். கடைசியாய், இப்புவியிலுள்ளோர்களுக்கு மாத்திரமல்ல, பரலோகத்திலுள்ள சகல சம்மனசுகளுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்குமே இராக்கினியாய் முடிசூட்டிய பிதாவாகிய சர்வேசுரனுமன்றோ குற்றவாளியாவார்? ஆகையால் சகோதரர்களே, அத்திருக் கன்னிகைக்கு நாம் செய்யும் மேலான சங்கையும் வணக்கமும் அவளுக்கு முற்றும் பொருந்தும். அவளை வணங்கி மகிமைப்படுத்தும்போது, பிதாவாகிய சர்வேசுரனையும் சுதனாகிய சர்வேசுரனையுமே பின்பற்றுகிறோம்.



மரியாயின் மக்களாகிய நாம் அவளுடைய புகழைப்பிரசித்தம் செய்யாமற்போனால் வேறு யார் செய்யப் போகிறார்கள்? நாமல்லோ மரியாயின் சங்கம் ஒன்று ஏற்படுத்தி அவள் புகழைத் தேசம் எங்கும் சென்று பிரசித்தப்படுத்திவரவேண்டும். ஐரோப்பா கண்டத்தில் இவ்வித சங்கம் ஒன்று உண்டாகி, 1900-ம் வருஷத்தில் லியோன்ஸ் நகரத்திலும், 1912-ம்௵ ஆகஸ்டு மாதம் ஒலாந்து இராச்சியமாகிய மாஸ்டிரிக்டிலும் கூடியதாகக் கேள்விப்படுகிறோம். இவ்வித சங்கம் கூடுவதால் தேவதாயின் பக்தி பரம்பி, ஐரோப்பா கண்டத்தில் எங்கும் சத்திய கத்தோலிக்குத் திருச்சபை அபிவிர்த்தி யடைகிறதாகவும் அறிகிறோம். தேவதாயின்பேரில் துவேஷங் கொண்ட பதித நாட்டில் இச் சங்கம் நற்பயனைத் தருமேயாகில், அவ்வித இடையூறுகளுக்கு ஏதுகரமில்லாது எளிதில் நற் போதனைகள் சாகுபடி செய்யக்கூடிய நமது நாட்டில் என்ன பயனைத் தராது?

1914ம் வருஷ இறுதியில் தேவதாயின் அமலோற்பவம் வேத சத்தியமாகக் கூறப்பட்ட 60-ம் வருஷ வைர ஜூபிலி மகோற்சவத்தன்று, தென் இந்தியாவில் மாமரியின் சங்கமொன்று கூட்ட அத்தாயின் மைந்தர்கள் அநேகரால் ஏற்பாடு செய்யப்பட்டு, அநேக மேற்றிராணிமார்களாலும் அதிமேற்றிராணிமார்களாலும் அங்கிகாரம் செய்யப்பட்டிருக்கின்றதெனக் கேட்கச் சந்தோஷப்படாதவன் யார்?

மாமரியின் சபையி லுட்பட்ட சகோதரர்களே! அத்திருத்தாயின் பேரில் பக்தியுள்ள கிறிஸ்துவர்களே! அச்சங்கம் தடைபடாமல் நன்கு நடந்தேற நம்மாலியன்ற முயற்சி செய்யாமலிருப்போமோ?

மாமரியின் மைந்தர்களான நாம் இவ்விஷயத்தில் செய்யக்கூடிய உதவி யாது? நம்மாலியன்றமட்டும் அச்சங்கம் கூடும் தினத்தில் ஆஜராகி சரீரப் பிரயாசை எடுத்துக்கொண்டு உதவி செய்வதன்றியில், அதற்காக ஏற்படும் செலவிற்கு நாமும் பங்காளியாவது நமது கடமை. திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலையிலிருக்கும் அ. ஜெகந்நாத பிள்ளை அவர்களே தற்போது இச்சங்கத்தின் முக்கிய காரியதரிசியாக உழைத்துவருகிறார்.

சகோதரர்களே, ஒவ்வோர் பங்கிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேவதாயின் சபைக் காரியதரிசிகளே, உங்கள் சபை அங்கத்தினரை கூட்டி, மாமரியின் சங்கம் கூட்டப் பிரயாசை எடுத்துக்கொள்ளும் முக்கிய காரியதரிசியாகிய ஜெகநாத பிள்ளை அவர்களுக்கு, உங்களுக்கு இது விஷயத்திலுள்ள விருப்பப் பற்றுதல்களைத் தெரிவிப்பதுடன் உங்களால் கூடிய பொருளுதவியையும் செய்வீர்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஷை சங்கத்துக்காக பற்பல இடங்களினின்றும் வெவ்வேறு காரியதரிசிகள் வழியாய் ஏற்கெனவே சேர்ந்த தொகை— | 2988 | 2 | 0 |
| சென்ற். ஜோசேப்ஸ் காலேஜ் செமிபோர்டிங் மாணுக்கர், முதல் பாக மாக | 10 | 0 | 0 |
| கும்பகோணம், Revd. Huysman சுவாமிகள் வழியாய் முதல்பாகமாக | 20 | 0 | 0 |
| Mr. C. கெல்லி, கௌவெட். புஷ்ஷபர், பார்சிக குடாக்கடல் | 3 | 0 | 0 |
| Mr. A. சுவாமிக்கண்ணுப்பிள்ளை, சப். அஸிஸ்டான்ட் சர்ஜன் 2-ம் பாகமாக | 10 | 0 | 0 |
| Mr. V. அடைக்கலம்பிள்ளை, அசிஸ்டான்ட் ஜேய்லர், பல்லாரி | 3 | 0 | 0 |
| Mr. ஜோவானெஸ் பாப்திஸ்தா சால்வாதோர் மசேதோ, ஹமதாபாட் | 2 | 0 | 0 |
| Mr. S. திவ்யநாதபிள்ளை வழியாக, இலங்கை தலைமன்னாரிலிருந்து தாமும் தமது சமுசாரமும் ரூ. 25; கத்தோலிக்கு கூலிகள் ரூ. 18-அணு 4; இந்து கூலிகள் ரூ. 9. ஆ | 52 | 4 | 0 |
| கும்பகோண மேற்றிராசனத்தைச் சேர்ந்த புரத்தாகுடி பங்குவிசாரணை Revd. M. A. Xavier சுவாமி அவர்கள் | 10 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அவரது பங்கு விசாரணைக் குறிஸ்துவர்கள் | 5 | 0 | 0 |
| Mr. M. புத்தூர் அந்தோனிதேவாசி புத்தம்பேட்டை, திருச்சூர் | 1 | 0 | 0 |
| Rev. A. H. Fluchere, சுவாமிகள், மாயவரம் | 20 | 0 | 0 |
| Mr. A. தைரியநாதபிள்ளை, புக்கித் மெர்தாஜம் | 5 | 0 | 0 |
| Rt. Rev. Mgr. J. M. Jegorel V. G. Kumbakonam | 10 | 0 | 0 |
| Mr. S. டேவிட் பிள்ளை, கும்பகோணம் | 3 | 0 | 0 |
| Very. Rev. H. Grange S. J., சிரேஷ்ட சுவாமியார், பாளையங்கோட்டை | 100 | 0 | 0 |
| Revd. Vincent, O. C. செக்ரடரி, கத்தோலிக்க சங்கம், லாகூர் | 50 | 0 | 0 |
| பாளையங்கோட்டை, தேவமாதாவின் மாசில்லாத உற்பவ சபையார் 2-வது பாகமாக | 15 | 0 | 0 |
| Mr. K. இன்னைய ரெட்டியார், பி. ஏ. பல்லாரி, முதல்பாகமாக | 5 | 0 | 0 |
| Mr A. குழந்தை சாமி முதலியார், முத்துப்பேட்டை, தஞ்சாவூர் ஜில்லா | 10 | 0 | 0 |
| Mr. F. A. பால், ரங்கூன் | 2 | 0 | 0 |
| Mr. P. A. ஜெகநாத பிள்ளை, சிதம்பரம், முதல் பாகமாக | 5 | 0 | 0 |
| Mr. தேவபத்தி கவுண்டர், திண்டுக்கல் | 50 | 0 | 0 |
| காரைக்காலைச் சேர்ந்த செடுங்காடு கிராமம் Mr. C. S. ஆரோக்கியசாமி பிள்ளை வழியாய் Rev. Regis சுவாமியார் ரூ. 5, Mr. R. குழந்தைசாமிபிள்ளை, ரூ. 10, Mr. C. S. ஆரோக்கியசாமி பிள்ளை, ரூ. 5, Mr. டேவிட்ராய பிள்ளை, ரூ.1. அபிராமி அம்மாள் ரூ.1, மார்கிருதம்மாள்ரூ.1, சில்லரையில்ரூ.2, ஆ | 25 | 0 | 0 |
| Mr. T. அந்தோனிசாமி பிள்ளை, கடலூர் | 1 | 0 | 0 |
| Mr. A. அருளானந்தம் பிள்ளை, அசிஸ்டாண்டு இஞ்சினியர், ராணிப்பேட்டை | 20 | 0 | 0 |
| Mr. H. D. ரோசாரியோ, சிவில் அப்பாத்திகெரி, எல்லூர் | 15 | 0 | 0 |
| Mr. S. A. ஜெகராயமுதலியார், குன்னூர் | 5 | 0 | 0 |
| Mr. G. செல்வராஜ பிள்ளை B.A., ஆரணி, முதல்பாகமாக | 10 | 0 | 0 |
| Mr. A. P. ஆரோக்கியசாமி பிள்ளை, 78-வது பட்டாளம்; திருச்சிருப்பள்ளி | 2 | 0 | 0 |
| Rev. P. E. Bachelard, பால்காட் | 5 | 0 | 0 |
| நல்லாயன் பத்திரிகை மானேஜர் Rev. John சுவாமியார் வழியாய் Mr. A. R. குழந்தைசாமி ரூ. 2-9-7 Mr. M. இராயப்பன் பிள்ளை, லாகூர் ரூ. 1-8-0 Mr. மரிய ஜூசை, கண்டி ரூ. 1-0-0 Mr. C. M. முத்துசாமி பிள்ளை ஜாவட்டா, கொழும்பு ரூ. 1. Mr. ஜான் ஆசீர்வாதம், மூலேயா, யூவாபேட்டா ரூ. 5. ஆ ரூ. | 11 | 1 | 7 |
| Revd. Fr. Aloysius சுவாமிகள், கும்பகோணம் | 15 | 0 | 0 |
| Mrs. கொன்சால்வெஸ், ராயபுரம், மதராஸ் | 5 | 0 | 0 |
| பெண் பாலகர்களின் மாதாசபையார் மணப்பாடு, | 20 | 0 | 0 |
| Un Hospitalier de Lourdes, Agra | 50 | 0 | 0 |
| Mr. M. Brun, கபிரியேல்புரம், கும்பகோணம் | 10 | 0 | 0 |
| 75-வது கர்நாடக காலாட் படையின் சபையார், கன்னனூர் | 20 | 0 | 0 |
| Mr. P. F. வாஸ், சங்கிலி | 4 | 0 | 0 |
| ,, Y. இன்னைய ரெட்டியார், ஆத்மகூர் | 10 | 0 | 0 |
| Mr. K. S. சந்தியாகு, பஸ்ஸீன் | 1 | 0 | 0 |
| ,, J. N. கொரோரா, விருதுப்பட்டி | 15 | 0 | 0 |
| Mr. G. A. லூவீஸ் பிள்ளை, மதனப்பல்லி | 5 | 0 | 0 |
| Mr. ஜூசை நாயுடு, புதுச்சேரி | 10 | 0 | 0 |
| Revd. Fr. Marshal Presentaceo, கள்ளடி, கொல்லம் | 10 | 0 | 0 |
| Mr. D. ஆரோக்கியசாமி பிள்ளை. லாலாபேட்டை | 5 | 0 | 0 |
| Mr. Rawcliffe, ராவல் பிண்டி | 5 | 0 | 0 |
| ,, S. T. பொன்னுசாமி பிள்ளை, ஆல்வாயி | 5 | 0 | 0 |
| Rev. Fr. S. M. Vellanthangal, புதுச்சேரி | 10 | 0 | 0 |
| குரும்பகரம் கத்தோலிக்கர்,—இரண்டாவது பாகமாக | 24 | 12 | 0 |
| திருச்சிருப்பள்ளி மேற்றிராசனத்தைச்சேர்ந்த மணப்பாட்டு பங்கு கிறிஸ்துவர்களால் | 500 | 0 | 0 |
| ஷை மேற்றிராசனத்தைச் சேர்ந்த தாத்துக்குடி கிறிஸ்துவர்களால் முதல் பாகமாக | 160 | 0 | 0 |
| | 4858—3—7 | | |



## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### பத்துக்கற்பனையின்பேரில்

### 7-ம் பாடம்.

### முதற் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்.

### மோக்ஷவாசிகள் வணக்கம்.

அர்ச்சியசிஷ்டவர்களை வணங்குவதும் அவர்களைப் பார்த்து வேண்டிக்கொள்வதும் சத்தியவேதத்துக்கு விரோதமான படிப்பினையல்ல. அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் விஸ்வாசிகளுக்கு எழுதிய நிருபத்தில் தமக்காக வேண்டிக்கொள்ளும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். விஸ்வாசிகளுடைய வேண்டுதல் நமக்கு அவசியமாயின் அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதல் எவ்வளவோ அதிக அவசியமாயிருக்கும். மேலும் அர்ச்சியசிஷ்ட பண்டங்களை வணங்குவதும் பாவமல்ல.

1. மோசேஸ் என்பவருடைய செபம்.—மோசெஸ் என்பவர் தேவ கட்டளைப்படி வேத கற்பனை பலகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி சீனாயி மலைக்குப்போன சமயத்தில், இசரேலித்தார் ஒரு பொற்கன்றைச் செய்வித்து அதை ஆராதித்தார்கள். அப்போது சர்வேசுரன் கோபங்கொண்டு அந்த நன்றிகெட்ட ஜனத்தை நிர்மூலமாக்கும்படி சித்தங்கொண்டதை அறிந்த மோசெஸ் சர்வேசுரனைப் பார்த்து அவர்களுக்காக மகா விநயத்துடன் மன்றாடினபோது, அவரும் தமது கோபத்தை அமர்த்தி மோசெசின் வேண்டுதலைப்பற்றி அந்தக் கெட்ட யூதருக்கு மன்னிப்பு கொடுத்தார்.

சிலகாலத்துக்குப் பின் இசரேலித்தாருக்கும் அவர்கள் சத்துருக்களுக்கும் சண்டை யுண்டான காலத்தில் மோசெஸ் கைவிரித்து சர்வேசுரனை மன்றாடினபோதெல்லாம் இசரேலித்தாருக்கு ஜய முண்டானது.

(மோசெஸ் ஆகமம்.)

2. அர்ச். சீயேனா கத்தரீனம்மாளுடைய செபம்.—1370-ஞ சீயேனா என்னும் ஊரில் ஒரு பெரும்பாவி யிருந்தான். இவன் அனேக பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்டுவந்ததுடன் பொய்யாணையிட்டுத் தேவதூஷணங் கக்கி துாமார்க்கனாய் நடந்துவந்தான். இவனுக்கு மரணகாலம் நெருங்கிச் சாகக் கிடக்கும்பொழுது முதலாய்த் தெய்வ பய மற்றவனாய், குருவானவர் வந்து தனக்குத் தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றச் சம்மதியாம லிருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்ட கத்தரீனம்மாள் மகா துக்கங்கொண்டு, அந்தப் பெரும்பாவி மனந் திரும்பும்படி சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொண்டாள். இவன் தமக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் விசேஷமாய்த் தமது கன்னித்தாயாருக்கும் விரோதமாய்த் தூஷணஞ்சொல்லி கல்நெஞ்சனா யிருப்பதால் அவனுக்குப் பொறுத்தல் அகப்படாதென்று நமது திவ்விய கர்த்தர் அறிவித்தார். அர்ச்சியசிஷ்டவளோ நம்பிக்கையைக் கைவிடாமல் வெகுவாய்க் கண்ணீர் சிந்தி மகா துக்க துயரத்துடன் அப்பாவிக்காக வேண்டிக்கொண்டாள். ஒருநாள் அந்தப் பாவி சடுதியில் மனந்திரும்பி குருவானவரை வரவழைத்து சேசுநாதர் தனக்குக் காணப்பட்டு பாவசங்கீர்த்தனஞ் செய்யச்சொன்னதாக அறிவித்துத் தன் பாவங்களுக்காக மனஸ்தாபத்துடன் சங்கீர்த்தனஞ் செய்து மரித்தான்.

(ஷை அர்ச்சியசிஷ்டவளின் சரித்திரம்.)

3. அர்ச். தோமினிக்குடைய செபத்தின் பலன்—சிமோன் என்னும் பிரபு துலூஸ் பட்டணத்துக்கு முற்றுகையிட்ட காலத்தில், அர்ச். யாகப்பருடைய கல்லறையை சந்திக்கும்படி 40 இங்கிலீஷ் காரர் திருயாத்திரையாகப் புறப்பட்டுவந்தபொழுது, துலூஸ் நகர் முற்றுகையிடப் பட்டிருந்தமையால், அந்நகருக்குள் செல்ல சாத்தியப்படாமல், அங்கிருந்து ஒரு ஆற்றைப் படகேறி கடக்கும்படி நேரிட்டது. ஆனால் அவர்கள் ஏறினபடகு சிறிதானதால், அது கவிழ்ந்து சிலர் தண்ணீரில் அமிழ்ந்தினார்கள்; மற்றவர்சள் ஆற்றுடன் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். இந்த விசனத்துக்குரிய சங்கதியைப்பற்றிக் கேள்விப்பட்ட அர்ச். தோமினிக் என்பவர் ஆற்றண்டை ஓடிப்போய் முழங்காலிலிருந்து மகாபக்தி உருக்கத்துடன் வேண்

டிக்கொண்டபின். எழுந்து ஆற்று அருகாமையிற் சென்று, "ஆற்றில் விழுந்தவர்களே, எழுந்திருந்து வரும்படி சர்வேசுரன் பேரால் உங்களுக்கு கட்டளையிடுகிறேன்" என்றார். அவர் இந்த வார்த்தைகளை உச்சரித்த க்ஷணமே, என்ன ஆச்சரியம்! ஆற்றில் விழுந்து சேதமான 40 பேரும் தண்ணீரினின்று வெளிப்பட்டு கரையேறினார்கள். அர்ச். தொமினிக் என்பவருடைய செபத்தாலடைந்த இப்பெரும் அற்புதத்துக்காக திருயாத்திரைக்காரர் அனைவரும் முழங்காலிலிருந்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் புரிந்தார்கள்.

(அவருடைய சரித்திரம்.)

4. காணிக்கைப் பணம்—பூர்வீக இங்கிலீஷ்க் காரருக்குள் யாருக்காகிலும் வியாதியோ, சஞ்சல இக்கட்டு இடையூறோ உண்டாகுந் தருணத்தில், சர்வேசுரனைப் பார்த்து தங்கள் துன்பத்தைப் போக்கும்படி மன்றாடுவதுடன், தேவதாயார் முதலிய அர்ச்சியசிஷ்டவர்களைப் பக்தி விநயத்துடன் வேண்டிக்கொள்வார்கள். இவ்வாறு செபிக்கும் சமயத்தில் தங்கள் கையில் பொன் அல்லது வெள்ளிக் காசைப் பிடித்துக்கொண்டு, தங்களுக் குண்டான வியாதி அல்லது துன்பதுரிதம் நீங்கினால், ஷெ அர்ச்சியசிஷ்டவரின் கோவிலுக்கு திருயாத்திரை செய்து தங்கள் கையிலுள்ள பணத்தைச் செலுத்துவதாக பொருத்தனை செய்வார்கள்.

5 ஆர்தென்தேஸ் நகரில் நடந்த அதிசயம்.—1129ஹு ஆர்தென்தெஸ் நகரில் பயங்காத்துக்குரிய கொள்ளை நோய் உண்டாக, அதனால் கணக்கற்றபேர் மாண்டார்கள். இந்த நூதனநோய் வைத்திய சாஸ்திரத்தை மிஞ்சிப்போனபடியால் அவ்வூரார் துக்கித்துக் கலங்கி பிரலாபிக்குஞ் சமயத்தில், அந்தப்பட்டணத்தின் மேற்றிராணியாரானவர் மகா புண்யவாளனானபடியால், செப தபங்களைச் செய்யும்படி கற்பித்தும் அந்நோய் சற்றேனுந் தணியவில்லை. அத்தருணத்தில் மேற்றிராணியார் அர்ச். ஜெனவியேவ் உடைய திருப்பண்டத்தை மகா ஆரவாரத்துடன் பிரதக்ஷணம் செய்யும்பொழுது அப்பெருங் கொள்ளை நோய் சடுதியில் அற்புதமாக நின்றுபோனது.

(Bollandus.)

6. இப்போநகரில் பாசுஸ் என்பவன்.—இந்நகர் கோவிலில் அர்ச். முடியப்பரின் திருப்பண்டம் மகா பூச்சியத்துடன் வணங்கப்பட்டு வந்தது. அவ்வூரானான பாசுஸ் என்பவனுடைய குமாரத்தி கனமான வியாதியால் பீடிக்கப்பட்டு வந்தபடியால், தகப்பனானவன் கோவிலுக்குச்சென்று தன் குமாரத்தி குணப்படும்படி அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து வேண்டிக் கொண் டிருக்கையில் அவனுடைய குமாரத்தி மரணமானாளென்று சிலர் அவனுக்கு அறிவித்தார்கள். அப்போது பாசுஸ் நம்பிக்கையைக் கைவிடாமல், அவன் முன்னதாகக்கோவிலுக்குக் கொண்டுவந்திருந்த தன் குமாரத்தியின் வஸ்திரத்தால் அர்ச்சியசிஷ்ட பண்டத்தைத் தொட்டபின் அந்த வஸ்திரத்தை இறந்துபோன தன் குமாரத்தியின் பிரேதத்தின்மேல் போட்டக்ஷணமே அவளுக்கு உயிர் உண்டாயிற்று.

(அர்ச். அகுஸ்தீன்.)

7. வேதாகம அத்தாட்சிகள்.—எலியாஸ் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையில் வேறொருவனுடைய பிரேதம் வைக்கப்படவே, செத்தவனுக்கு அந்தக்ஷணமே உயிர் வந்தது.

(4. அரசர்ஆகமம் 13. 21.)

நமதாண்டவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ வுடனே சொஸ்த மடைந்தாள்.

(மத். 9. 21.)

அர்ச். இராயப்பருடைய நிழலால் வியாதியஸ்தர் சொஸ்தப்பட்டார்கள்.

(அப்போஸ்தலர் நடபடி 5. 15.)

அர்ச். சின்னப்பருடைய வஸ்திரத்தால் நோவாளிகளும் பேய் பிடிக்கப்பட்டவர்களும் குணப்பட்டார்கள்.

(அப்போஸ்தலர் நடபடி. 19. 12.)

8. அர்ச். பபிலாசுடைய திருச் சரீரம்.—அந்தியோக்கியாபுரியின் அதிமேற்றிராணியாரான அர்ச். பபிலாஸ் என்பவர் கி. பி. 251ஹு மரித்து அவ்விடத்தில் அடக்கம்பண்ணப்பட் டிருந்தார். 100 வருஷத்திற்குப் பின் சக்கரவர்த்தியாய் சிம்மாசனம் ஏறின வேதத் துரோகி என்னப்படும் ஜூலியான் என்பவன் அந்நகரியின் அப்பாலோ என்பவன்பேரால் பலியிட தீர்மானித்து அதற்காகச் சகலமும் முஸ்திப்பானபின் வழக்கப்படி பூசாரிகள் உடுக்கடித்து விடை கேட்டபோது, பசாசு மௌனஞ் சாதித்தது. அதன் மௌனத்தின் காரணத்தைப்பற்றி வினாவினபொழுது "வேதசாட்சியான அர்ச். பபிலாசுடைய சரீரம் அருகாமையிலுள்ள கல்லறையில் வைக்கப்பட் டிருப்பதால் தன்னால் விடை கொடுக்க சாத்தியப்படாது" என்றது. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட ஜூலியான் கிறிஸ்துவர்களை வரவழைத்து அர்ச்சியசிஷ்டவருடைய சரீரத்தை எடுத்துக் கொண்டுபோகும்படி கற்பித்தான். கிறிஸ்துவர்களோ வெகுவாய்ச் சந்தோஷித்து, அத் திருச் சரீரம் அடங்கிய பெட்டியை மகா ஆரவாரச் சிறப்புடன் கொண்டுபோன கொஞ்சநேரத்துக்குப் பின் ஆகாயத்தினின்று அக்கினி புறப்பட்டு, பலிக்குச் சித்தஞ் செய்யப்பட்டிருந்த பசாசின் கோவிலையும் எரித்துவிட்டதுடன் விக்கிரகத்தையுஞ் சாம்பலாக்கிவிட்டது.

(Sozomenes.)

(இன்னும் வரும்.)

---



## GNANAMANI, III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### எட்டாம் அதிகாரம்

### பிற்றர் பயப்படாதே;
### உன் மன்றாட்டு கேட்கப்பட்டது.

---

விஸ்வாச நாயகர் வீட்டில் நடந்த சம்பாஷணைக்குப் பிறகு அபிராமி கலியாண விஷயத்தைப் பற்றி யாரோடும் பேசாம லிருந்தாள்.

இந்தச் சம்பாஷணை நடந்த எட்டாம்நாள் ஈசாக் உபதேசியார் தன் மகளை நோக்கி: யென்ன, அபிராமீ! நான் கேட்டகேள்வி ஒரு மாதத்திற்கு மேலே ஆகிறது. அதற்கு மாறுத்தரம் உன் வாயினின்று இன்னும் புறப்படவில்லையே!

அபி.—உங்கள் கருத்துக்கு நான் இணங்காவிட்டால், யாருடைய சொல்லுக்குச் சம்மதிப்பேன், நாயனா?

ஈசா.—மெத்த சந்தோஷம் மகளே! கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுசெய்ய ஆக்ஷேபனையில்லையே?

அபி.—வேறொரு மாப்பிள்ளையைப் பார்க்கக் கூடாதா?

ஈசா.—சலமோன் மட்டில் உனக்கு இஷ்டமில்லையோ?

அபி.—இஷ்டமில்லையென்று சொல்லேன்; ஆனால், அந்த வாலனுடைய பழய துர்க்குணம் உங்களுக்குத் தெரியாத காரியமல்ல.

ஈசா.—இப்போது அவனுடைய குணத்தைப்பற்றி கேள்விப்படவில்லையோ?

அபி.—கேள்விப்பட் டிருக்கிறேன். ஆனால்,

.........................

ஈசா.—இதைப்பற்றி யாருடைய ஆலோசனையாவது தேடியிருக்கிறாயா?

அபி.—விஸ்வாச நாயகருடைய தாயார், அவருடைய மனைவி முதலியவர்களுடன் இதைப்பற்றி பேசினேன்.

ஈசா.—நல்ல இடத்தில் போய் ஆலோசனை கேட்டாய். இவர்களுடைய ஆலோசனையைப் பின் சென்றால் நீ சுகமடைவாய் அபிராமி. நல்லது, சலமோனுக்கு வாழ்க்கைப்படச் சொன்னார்களா, அல்லது வேறே மாப்பிள்ளை பார்க்கச் சொன்னார்களா?

அபி.—நீங்கள் சொன்னதுபோலச் சொன்னார்கள்.

ஈசா.—அபிராமீ! என் செல்வ புத்திரீ! இந்தக்கலியாணத்தைப்பற்றி நானாய்ப் பேசுகிறேனென்று நினைக்கவேண்டாம். விஸ்வாச நாயகர் முதலிய பத்தியிலும் புத்தியிலும் சிறந்த மனிதருடன் நான் தீர்க்க ஆலோசனை செய்து உனக்குத் தெரியப்படுத்தினேன். நீ அநேகம் விசை சொன்னதுபோல, கலியாண விஷயம் சொற்பக்காரியமல்ல, நன்மையோ, தின்மையோ, மரண பரியந்தம் அனுபவிக்கவேண்டியது வாஸ்தவமே. ஆனால், சலமோனுடைய நடத்தையைப்பற்றி நான் சொல்லிக் கேளாத மனிதரில்லை; மேலும் மிஷன்காரரைக்கூட இவ்விஷயத்தைப்பற்றி விசாரித்தபோது, சகலரும் ஒரே வாய்ப்பட்டாற்போல அவன் யோக்கியன் என்று சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் தீர்க்க அறிந்தபின் மாத்திரம் உன் சம்மதத்தைக் கேட்கலானேன்.

மேலும் என் கண்மணியாகிய அபிராமீ, தற்போது சலமோன் வாஸ்தவத்தில் தூர்யார்க்கனும் குடியனும் தாறுமாறுக்காரனுமா யிருப்பதாக நான் அறிந்திருந்தால் அல்லது மற்றவர்கள் மூலமாய்க் கேள்விப்பட்டிருந்தால் உன்னை அவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுப்பேனோ? சிலவிசை நீயே அப்பேர்பட்டவனுக்கு வாழ்க்கைப்பட கருத்தாயிருந்தாலும் அதற்கு நான் சம்மதிக்கவே மாட்டேன்.

அபி.—என் பிரிய தந்தையே! நீங்கள் குறித்துப் பேசும் வாலிபனை நான் கட்டிக்கொள்ளவேண்டுமென்று ஆசிக்கிறீர்களோ?

ஈசா.—என் முழு இருதயத்துடன் ஆசிக்கிறேன்.

அபி.—இந்த ஐக்கியத்தால் உங்களுக்குச் சுகமுண்டாகுமென்று நினைக்கிறீர்களோ?

ஈசா.—எனக்கும் உனக்கும் சுக சந்தோஷமுண்டாவதுடன் சலமோனும் நல்ல கிறிஸ்துவனாய் நடந்து நமது கோத்திரத்துக்குக் கண்ணியமும் உண்டாகச் செய்வானென்பது எனது அபிப்பிராயம்.

அபி.—அப்படியானால், என் பிரிய தந்தையே! உமது அன்புக்குரிய அபிராமியும் உங்கள் கருத்துக்குச் சம்மதிக்கிறாள், (என்று, அவள் தன் தகப்பனுக்கு முன் முழங்காலிட்டாள்.)

ஈசா.—என் செல்வபுதல்வீ! எழுந்திரு, (என்று சொல்லி மிகுந்த சந்தோஷ மகிழ்ச்சியுடன் தன் மகளை இரண்டு கரங்களாலும் பிடித்துத் தூக்கிவிட்டார்.)

அன்று மாலையே, ஈசாக் உபதேசியார் விஸ்வாசநாயகர் வீட்டிற்குப்போய், சலமோனை மணமுடித்துக்கொள்ள தன் மகள் சம்மதித்ததைப்பற்றி தெரியப்படுத்தினர். இதைக் கேட்ட விஸ்வாசநாயகரும் அவர் தாயாரும் வெகு சந்தோஷங்கொண்டார்கள். விஸ்வாச நாயகருடைய மனைவி ஈசாக் உபதேசியாரை நோக்கி: உமது குமாரத்தியின் குணகுணங்கள் எனக்கு நன்றாய்த் தெரியும். அவள் உமது எண்ணத்துக்கு விரோதம் செய்யமாட்டாளென்று பூரணமாய் நம்பி யிருந்தேன், என்றாள். உடனே மதுரநாயகம் என்கிற விஸ்வாசநாயகருடைய தாயார் ஈசாக் உபதேசியாரைப் பார்த்து இவ்வாறு சொல்வாள்: ஐயா, உமது குமாரத்தி வயதில் சிறியவளாயினும், அறிவில் அறுபோகப்பட்ட முதியோரைப்போல் பேசுகிறாள். குடியென்கிற நாமதேய முதலாய் உதவாது அந்த பெண்ணுக்கு. எத்தனை நியாயங்களைக் கொண்டுவருகிறாள் மதுபானத்தால் உண்டாகுந் தின்மைகளை யெடுத்துக்காட்ட!. கஸ்திக்குரிய சில சரித்திரங்களையும் சொல்லியிருக்கிறாள்.

விஸ்.—அபிராமி மெய்யாகவே புத்திசாலியான பெண். எவ்வளவுக்கு புத்திசாலியானவளோ அவ்வளவுக்குந் தேவபக்தியும் விஸ்வாசமு முள்ளவள்.

மதுர.—ஆனால் அவள் ஒரு காரியத்துக்கு பயப்படுகிறாள்.

ஈசா.—அது என்னகாரியம் அம்மா?

மதுர.—சிலவிசை சலமோன் என்கிற பிள்ளை யாண்டான் மறுபடியும் குடிக்க ஆரம்பிப்பான் என்கிற பயம் மெத்த உண்டு அவளுக்கு.

கமல—அதைப்பற்றித் தான் இத்தனை நாளாய் அந்த வாலனை மணமுடித்துக்கொள்ள இஷ்டமில்லாதவளா யிருந்தாள்.

ஈசா.—ஆமாம், மெய்தான்; இன்னும் இந்தபயம் பூர்த்தியாயிருக்கிறது அவளுக்கு. என்ன நாயகரே, சலமோன் கெடுவானு? உமக்கு எப்படித்தோன்றுகிறது?

விஸ்.—சலமோனுடைய தற்கால நடத்தையைப்பார்த்தால், பழய வழக்கத்துக்கு திரும்புவானென்று சொல்வதற்கில்லை. இப்போது, அவர் ஒரு துறவியைப்போல் நடக்கிறார்!

ஈசா.—நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

மதுர.—அப்படியவன் பழய வழக்கத்துக்கு உட்படுவதாயிருந்தால், அபிராமி சம்மா இருப்பாளா?

விஸ்.—அதற்குச் சந்தேகமா? அது அப்படி சம்பவியாது. சிலவிசை சம்பவித்தபோதிலும் உமது குமாரத்தியினுடைய புத்தி விவேகத்தால் அவரைச் சீக்கிரத்தில் வழிக்குக் கொண்டுவருவாள்.

ஈசா.—நாம் நன்மையைக் கோரி காரியங்கள் செய்கிறோம். ஆகையால், சர்வேசுரன் சகலத்தையும் ஆசீர்வதிப்பாராக, என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

இந்தக் கலியாணத்தைப்பற்றி மதுரா ஊரார் எல்லோருக்குந் தெரியவந்தது. எல்லோரும் இது நல்ல காரியமென்றார்கள். கலியாணத்திற்குப்பின் துஷ்டனான சலமோன் என்னசெய்வானோவென்று சிலர் மாத்திரம் சமுசயங்கொண்டார்கள். புரோடஸ்டாண்டாரோ, இந்தக் கலியாண உடன்படிக்கையைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சந்தோஷித்து மகிழ்ந்தார்கள்.



சத்தியநாதன் என்பவன் விஸ்வாசநாயகர் வீட்டுக்குப்போய்க் கலியாண விஷயத்தைப்பற்றிய உண்மையை அறியவே, நாயகருக்கு அநேக வர்தனங்களைப்புரிந்து, அவராலேயே இக்கலியாணங் கூடினதென்று நிச்சயித்தான்.

கலியாணத்திற்கு முன் மூன்றுநாள் பரியந்தம் அபிராமி செப தபத்தில் செலவு செய்ததுடன், தன் சிநேகிதர் பந்துக்களையும் தன் கருத்துக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொண்டாள். அவ்வூர் கன்னியாஸ்திரி மடத்துக்கு அடிக்கடிபோய், அவர்களுடன் பேசி வரும் வழக்கம் இவளுக்கு இருந்தபடியால், இந்த உந்நத தேவத்திரவிய அநுமானத்தைத் தகுந்தவிதமாய்ப் பெற்றுக்கொள்வதற்கான விசேஷ இஷ்டப்பிரசாதத்தை தனக்குச் சர்வேசுரன் அளிக்கும்படி மனறுடிவா அவர்களையுங் கேட்டுக்கொண்டாள்.

சகலமும் சித்தமானபின்பு, குறித்தநாளில் சலமோனும் அபிராமியுமாக ஆரவாரச் சிறப்புடன் பந்துமித்திரர், சேர்ந்தார், சிநேகிதர் முதலிய சகலராலும் புடை சூழப்பட்டவர்களாய் தேவாலயஞ் சென்று திருமணவார்த்தைப்பாட்டைக் கொடுத்து, குருவானவர் செய்த பெரிய பாட்டுப் பூசையை மகா பக்தி வணக்கத்துடன் கண்டு, சின்ன தோபியாசின் கலியாணத்திற்கு உண்டாயிருந்த விக்கினங்களை யெல்லாம் சர்வேசுரன் சம்மனசுவின் உதவியால் அகலச் செய்ததுபோல, தனக்கும் உதவி புரியும்படி மகா பக்தி விஸ்வாசத்துடன் அபிராமி வேண்டிக்கொண்டு, தன் கணவனுடன் சம்மனசுக்களின் விருந்தாகிய பரமதேவ நற்கருணையை உட்கொண்டு, சகலரும் களித்து மகிழக் குதிரை இரதத்திலேறி, கணக்கற்ற பிரஜைகளால்புடை சூழப்பட்டு, பாண்டு, மங்கலமேள முதலிய வாத்திய கோஷ்டத்துடன் பவுல்போதகருடைய இல்லிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

இவ்விவாக உத்ஸவத்தில், திருச்சபையால் விலக்கப்பட்ட அற்பசடங்கு சாங்கிய முதலாய் நடத்தப்படவில்லை. காலை முதல் மாலை வரைக்கும் அங்குவந்து பந்தியில் அமர்ந்தவர்களுக்கு அறுவகை சுவையுடன் திருப்தியாய்ப் போஜனம் விசாரிக்கப்பட்டு, தாம்பூலம், பன்னீர் முதலிய மரியாதைகள் நடத்தப்பட்டன. அநேக ஏழை ஜனங்களுக்கு வஸ்திரதானமும் செய்யப்பட்டது. அவ்வூரிலிருந்த கன்னியர் மடத்திற்கும் அநாத பிள்ளைகள் சாலைக்கும் ஏராளமான போஜன வர்க்கங்கள் அனுப்பப்பட்டன. இக்கலியாணத்திற்கு சத்தியநாதன் ஒருவன் தவிர மற்ற எந்த புரோடஸ்டாண்டாரும் வரவில்லை. இந்துக்களும், மகம்மதியரும் சகல ஜாதி ஜனங்களும் வேற்றுமையின்றி கலியாணத்திற்கு வந்து தம்பதிகளுக்கு வாழ்த்துதல் கூறினார்கள். அந்நாள் முழுவதும் பாண்டுவாத்தியம் முதலிய வாத்தியங்கள் முழங்கிவந்ததுடன், சாயங்காலம் 4-மணிமுதற்கொண்டு இரவு 9-மணிவரைக்கும் பாட்டுக்கச்சேரி முதலிய காலக்ஷேபங்கள் நடந்தேறின.

பாட்டுக்கச்சேரி ஆரம்பிக்கிறதற்கு முன் விருந்தாடிகள் எல்லோரும் கல்யாண பந்தலில் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக்கொண்டு, சம்பிரமமாக சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது, தபால் பியூன் அங்கிருந்தவர்களில் அநேகருக்கு வந்திருந்த கடிதங்களைக் கொடுத்தபின், ஈசாக் உபதேசியாருக்கும் பவுல்போதகருக்கும் பல கடிதங்களைக் கொடுத்தான். 2½-அடி நீளமும் 2-அடி அகலமுள்ள ஒரு சருளை ஈசாக் உபதேசியாருக்குக் கொடுத்தான். ஈசாக் உபதேசியாருக்கு எழுதப்பட்ட கடிதங்களில் ஒன்று, மதராசில் படித்துக்கொண்டிருக்கும் விஸ்வாசநாயகருடைய குமாரன் தேவதாஸ் என்பவனிடத்திலிருந்து வந்தது. அதில் உபதேசியாருடைய குமாரத்தியின் கலியாணத்தைச் சர்வேசுரன் ஆசீர்வதிக்கும்படி கோரினதுடன், அவருடைய குமாரத்திக்கு ஒரு ஞாபக அடையாளம் அனுப்ப நினைத்து, ஒரு சித்திரப்படத்தைத்தானே சித்திரித்து அனுப்பக்கருதி, திருக்குடும்பப்படம், தேவதாயாரின் திருக்கல்யாணப்படம், இன்னும் பல படங்களை யெழுதப் பிரயத்தனித்தும், ஒன்றும் அநுகூலப்படாமல், தபால் மூலமாய் அனுப்பப்பட்ட படமே தனக்கு திருப்தியாய் முடிந்ததென்று எழுதியிருந்தான். அந்தச் சருளைப் பிரித்துப்பார்த்தபோது, சேசுநாதசுவாமி சிலுவை சுமந்த மேரையாய்ச் சித்தி

சிக்கப்பட்டிருந்தது. அதன் அடியியில்: "உன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின் செல்." என்று எழுதப்பட்டிருந்தது. இந்தப் படத்தை பார்த்தவர்கள் அதிசயித்து, உயிருள்ள படம்போலிருக்கிறதென்று ஆச்சரியப்பட்டார்கள்.

அபிராமி யிந்தப் படத்தைப் பார்த்தவுடனே நேர்த்தியான படம், பாரமான சிலுவையைச் சுமந்த நமது திவ்விய கர்த்தர் எனக்கும் இன்றைக்கு ஒரு லேசான சிலுவையை என் தோளில் சுமத்தினார் என்று கண்கலங்கி மொழிவதைக் கண்ட மற்ற இந்துக்கள்: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?என்று வினவினபோது, அபிராமி சொல்வாள்: கலியாண அந்தஸ்து லேசானதல்ல. அதில் அநேக துன்பமுங் கஷ்டமும் வராமற் போகாது. சிலுவையாகிய அந்தக் கஷ்ட துன்பங்களை மனது இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொறுத்துதான் தீரவேண்டும், என்றாள். மறுநாளே அந்தப் படத்துக்குச் சட்டம் போட்டு தான்படுக்கும் இடத்துக்கு எதிராக அதைமாட்டி, அதிகாலையில் எழுந்தவுடனே அப்படத்துக்கு எதிராக முழங்காலிலிருந்து, "ஆண்டவரே, என் சிலுவையைச் சுமந்து பொறுமையுடன் உம்மைப் பின்செல்ல அனுக்கிரகம் புரியும்" என்று மன்றாடுவாள்.

அந்தப் பெருங் கூட்டத்திலிருந்த அநேகருக்கு வந்த கடிதங்களை வாசித்துக்கொண்டிருக்கும்போது, பவுல்போதகருந் தமக்கு வந்த கடிதங்களை ஒவ்வொன்றாய்த் திறந்து வாசித்தபின், கடைசி கடிதத்தின் மேல்விலாசத்தைப் பார்த்து "ஓ! ஓ! என் மைத்துனன் பீற்றர் போதகருடையகாகிதம்" என்று அதை ஆவலுடன் உடைத்து வாசித்தார். இரண்டொருவரி வாசித்தபின் அவருடைய முகம் மாறினதைக் கண்டார்கள். அவர் பக்கத்திலிருந்தவர்கள் "ஏதேனும் துக்க சங்கதியுண்டோ ஐயா?" என, "துக்க சங்கதி ஒன்றுமில்லை, எல்லாம் சுப செய்தியே" என்று அந்தக் கடிதத்தை தன் பக்கத்திலிருந்த விஸ்வாசநாயகருக்கு வாசித்துப் பார்க்கும்படி கொடுத்தார். விஸ்வாசநாயகர் அதைப் படித்தபின் "பெரியமனுஷன் இப்படி யெழுதுவது ஒழுங்கல்ல" என்றார். இதைக் கேட்ட மற்றவர்கள்: அது என்ன சங்கதி ஐயா, என்றார்கள். "அதை வாசியும், இதைப்பற்றி யிங்கு கூடி யிருப்பவர்கள் பீற்றர் போதகர்மட்டில் என்ன அபிப்பிராயப்படுவார்களோ பார்க்கலாம், யாரிடத்தில் தப்பிதமுண்டென்று இவர்களே சொல்லட்டும்" என்று பவுல் போதகர் விஸ்வாசநாயகருக்குச் சொன்னார்.

உடனே விஸ்வாச நாயகர் கடிதத்தை வாங்கி இவ்வாறு வாசிப்பார்:—

(Dear Paul) பிரிய பவுல்,

உன் குமாரன் சலமோனுடைய கலியாணத்திற்கு வரும்படி யெழுதி யனுப்பிய அழைப்புக் கடிதமும் திருமணப் பத்திரிகையும் வந்து சேர்ந்தன. துக்க துயரத்தால் நொந்து உருகும் என் ஆத்துமாவின் கஷ்ட சங்கடங்களை விவரிப்பது அசாத்தியமே!

என் தங்கை ரூத்தை உனக்கு ஏன் மணமுடித்துக்கொடுத்தேன்? சுக செல்வத்துடன் வாழும்படிக்கே யன்றி, விக்கிரக ஆராதனைக்காரருக்கு அவளை விற்கும்படிக்கல்ல. நீ யிப்பேர்ப்பட்ட வஞ்சகனென்று எனக்குத் தெரிந்திருந்தால், நீ ஊசிமே லிருந்து தவம் புரிந்திருந்தாலும் உனக்கு ரூத்தைக் கொடுத்திரேன்.

இரண்டு வருஷத்திற்குமுன் உன்னுடன் பேசின பிறகு நாடோறும் பராபரனை உனக்காக மன்றாடி வருகிறேன்: பரிசுத்த ஆவியானவர் உங்கள் குடும்பத்தில் இறங்கி, பரிசுத்தமான புரோடஸ்டாண்டுமதத்தில் திரும்பி வரும்படிச் செய்வாராக.

பத்துநாளைக்குமுன் உன் கடிதம் எனக்கு எட்டினபின் நான் மகா துக்கதுயரத்தில் மூழ்கி, பைபிளை எடுத்து வாசித்துப் பார்த்தபோது, ஒரு அதிசயமான காரியம் நடந்தது. அதென்னவெனில், நான் பைபிளை விரித்தபோது, தானியேல் எழுதிய வரலாறு என் கண்ணுக்குப் புலப்பட்டது. அதைக் கடைசிமட்டும் கவனத்துடன் வாசித்துக்கொண்டிருக்கும்போது சடுதியில் எனக்கு நித்திரை யுண்டாக, ஒரு சொர்ப்பனங் கண்டேன். அதில் தானியேலைத் தட்டிஎழுப்பின சம்மனசே, என்னையுந் தட்டி எழுப்பி: "பீற்றர் பயப்படாதே; உன் மன்றாட்டு கேட்கப்பட்டது. இன்னும் எழுவாரம். அந்தஏழாம் வாரமுடிவில் உன் தங்கை ரூத்தும், அவள் மகளும், அவள் கணவன் பவுலும் அவனுடைய மகன் சலமோனும் நீ ஆசித்துக் கோரும் புரோடஸ்டாண்டு மதத்தில் சேருவார்கள். இந்தப் பெரும் மாற்றம் சலமோனால் உண்டாகும். கவனமாய்க் கேள் இன்னும் ஏழே ஏழு வாரம். இதை மனத்தில்



வைத்துக்கொண்டு மனச் சஞ்சலத்தை விட்டுவிட்டு சமாதானமா யிரு என்று சொன்னார்.

இதற்குப்பின் நித்திரையினின்று எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு, பைபிளைப் பார்த்தபோது என் கண்ணுக்கு எதிர்ப்பட்ட வாக்கியமாவது: "7 வாரத்துக்குள் கிறிஸ்து கொல்லப்படுவார்" என்பதே.

ஆ, பவுல்! என் நேசமுள்ள பவுல்! எனக்குச் சொர்ப்பனத்தில் சொல்லப்பட்டதற்கும் என் கண்ணுக்கு எதிர்ப்பட்ட தேவ வாக்கியத்திற்கும் எவ்வளவோ தொந்தார்த்தம் உண்டென்று நீயே பார்த்துக்கொள். இப்போது என் ஆத்மா கர்த்தரில் சந்தோஷிக்கின்றது. தேவதூதன் வசனித்த 7 வாரம் $7 \times 7 \times 7 = 343$ நாளாகும். இந்த 11 மாதத்திற்குள் உன்னையும் என் தங்கையையும் அவள் குழந்தையையும் உன் மகன் சலமோனையும் கட்டி யரவணைத்து முத்தங் கொடுக்கக் காத்துக்கொண் டிருக்கிறேன். அந்தப் பாக்கியமான நாளுக்காக இரவும் பகலும் ஏங்கித்தவித்து எதிர்பார்க்கிறேன்.

சலமோன் கட்டிக்கொண்ட பெண் நமது வேதத்தில் வந்தால் சரி, வராவிட்டால் அவளை கவனிக்கவேண்டிய தில்லை. நமது கோட்பாடு பிரகாரம் டைவோர்ஸ் செய்துகொள்ளலாம்.

என் நேசத்துக்குரிய பவுல், நான் சொன்னவை, விசேஷமாய் சொர்ப்பனத்தில் கண்ட காக்ஷி ஒருவித தீர்க்கதரிசனம் என்கலாம். (என்றவுடனே அங்கிருந்தவர்களில் அனேகர் கொல்லென்று சிரித்தார்கள். முன்காலத்திலே தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். அவர்களைப் பார்க்கும் பாக்கியம் நமக்கு இல்லை. ஆனால் இப்போது அந்த குறை தீர்ந்துபோய்விட்டது) என்று ஒருவர் சொன்னார். "சற்று பொறுங்கள், இன்னுங் கொஞ்சந்தா னிருக்கிறது. வாசித்து முடித்துவிடுகிறேன்" என்றார் விசுவாசநாயகர்.

எனது அன்புக்குரிய பவுல், நீ ரோமன் மதத்தைவிட கருத்துக்கொள்ளும்போது எனக்கு ஒரு கார்டு போடுவாயாகில், நானே அங்கு வந்து உங்களை யிவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவந்து யாதொரு குறைவின்றி உங்களுக்குச் சவரக்ஷணை செய்வேன். நமது மிஷனெறி நாடோறும் உங்களுக்காக எதிர்பார்க்கிறார். உங்கள் அனைவோருக்கும் உத்தியோகம் அகப்படும். ரோமானரைப் போல உங்களைக் கைவிடமாட்டார் நமது மிஷனெறி.

இந்தக் கடிதத்தை தங்கை ரூத்துக்கும் என் மருமகன் சலமோனுக்குங் காட்டி தைரியமாயிருக்கச்சொல். நீங்கள் நமது வேதத்தை விட்டு ரோமன் மதத்தில் சேர்ந்தபோது உண்டான துன்பங்கள், நீங்கள் நமது வேதத்திற்கு திரும்பிவரும்போது உங்களுக்கு நேரிடாது. ஊதாரிகளான உங்களை அன்புடன் அரவணைக்கும்படி நமது மிஷனெறி நாடோறும் ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கிறார். நானும் அவரினும் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன். முன்னிலும் அதிக சம்பளம் கிடைக்கும். சுகச் செல்வமாய் பிழைக்கலாம். மறக்கவேண்டாம்.

கர்த்தரில் அன்புள்ள,
பீற்றர்.

"புதுத் தீர்க்கதரிசியைப் பார்க்க எனக்கு மெத்த ஆவல். அவர் இருக்கும் ஊர் ஏதோ?" என்று ஒருவாலன் சொல்வதைக் கேட்ட சத்தியநாதன்: "என்ன சார்? பீற்றர் போதகர் இன்னாரென்று நீர் அறிந்திருந்தால் இப்படிக் கேலியாகப்பேசமாட்டீர்" என்றான். "நான் அவரைக் கேலி செய்யவில்லையே. தீர்க்கதரிசியைப்பார்ப்பது நலமல்லோ?" "அவருடைய கல்வி சாஸ்திரத்தையும் வேதத் தர்க்கத்தையும் அறிந்திருந்தால் அகடவிகடமாய்ப் பேசமாட்டீர்." "நீர் சொன்னதுபோல புத்திசாலியும் படிப்பாளியும் வேத தர்க்கத்தில் தேர்ந்தவருமா யிருக்கலாம். ஆனால் தீர்க்கதரிசன வரம் பெற்றதாகச் சொல்வது நகைப்புக்குரியதே!" "அவர் சொன்னது மெய்யோ பொய்யோ வென்று சீக்கிரத்தில் அறிந்துகொள்வீர்" "பதினொரு மாதத்திற்குள் இந்தத் தீர்க்கதரிசனம் சம்பவியாவிட்டால்?" "11 மாதங்கூடத் தேவையில்லை, அதிலுங் குறைவான காலத்தில் இது சம்பவிப்பதைப் பார்ப்பீர்." அப்போது சத்தியநாதன் சலமோனுடைய தோளைத் தட்டி, "பிரதர், நமது பீற்றர் போதகருக்கு உன்னாலேயே கவரவம் உண்டாகவேண்டியது" என்றதைக் கேட்ட சலமோன் புன்னகையுடன் பேசாமலிருப்பதைக்கண்ட விஸ்வாசநாயகர் சலமோன் பக்கமாய்த் திரும்பிப்பார்த்து அதிசயப்பட்டார்.

நேரம் ஆய்விட்டது, பாட்டுக்கச்சேரி துவக்குங்கள் என்று மணியக்காரர் முத்துப்பிள்ளை

சொல்லவே, சம்பாஷணை நின்றுவிட்டது. உடனே பஜனைக்காரர் ஒன்பது மணி வரையில் வாத்தியங்களுடன் நேர்த்தியான பாட்டுகளைப் பாடி முடிக்கவே வாண வேடிக்கையுடன் சகலரு மகிழ்ந்து களிகூற திருமண உத்ஸவம் முடிவானது. (இன்னும் வரும்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.
## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### உடுப்பு.

சரியான உடுப்புக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் மூன்று என்றும், அவைகளில் முதலாவது, நாணயம், 2-வது சுத்தம், 3-வது உடம்புக்குச் சரியாய்ப் பிடித்திருத்தல் என்றும் அறிந்திருப்பது ஒழுங்கு.

2. அவனவன் சக்திக்கும் அந்தஸ்திற்கும், அந்தந்தச் சமயத்திற்கும் தக்கபடி உடுத்துவது ஒழுங்கு.

3. உடை சுத்தமாயும் 'சாதாரணமாயுமிருப்பது ஒழுங்கு.

4. வீண் டம்பமான உடுப்பு ஆங்காரத்தின் அறி குறியென்றறிந் திருப்பது ஒழுங்கு.

5. உண்ணுமல் ஒன்பது வீடு போகலாம், உடுக்காமல் ஒரு வீடும்போக முடியாதென்றறிந்திருப்பது ஒழுங்கு.

6. யாதொரு ஜனசங்கம் அல்லது கூட்டத்திற்குப் போக நேரிட்டால், அக்கூட்டத்தாருள் பெரும்பாலரின் அந்தஸ்திற்குத் தக்க உடைகளைத் தரித்துப்போவது ஒழுங்கு.

7. பற்பல பெரிய மனுஷர்களுடன் நடமாட வேண்டியிருப்பவர்கள் எப்போதும் அத்தகையோர்களது ஒழுக்கத்துக்கேற்ற உடைகளைத் தரித்திருப்பது ஒழுங்கு.

8. சரீரம் இஸ்பிரீத்து சாந்துவின் ஆலயமா யிருக்கிறபடியால் அதை எப்போதும் தக்க மரியாதையுடன் உடுத்திவைப்பது ஒழுங்கு.

9. வீட்டுக்குள் தனியா யிருக்கும்போதும் மரியாதை அடக்க ஒடுக்கத்துடன் உடுத்தியிருப்பது ஒழுங்கு.

10. சிறு குழந்தைகளை நிர்வாணமாய்த் திரிய விடாமல் அவர்களுக்கு எப்போதும் நீளச்சட்டையைப் போட்டுவைப்பது ஒழுங்கு.

11. பெண்பிள்ளைகள் தங்கள் தேகம் முழுதும் மூடும்படியாயும், தேகத்தின் உருவப் பரிமாணம் புறத்தியாருக்குத் தெரியாதபடி தளர்த்தியாயும் உடுத்துவது ஒழுங்கு.

12. பெண்பிள்ளைகள் இரவுக்கைக்கு மேல் எப்போதும் கமிஸ் அல்லது ஜாக்கட் தரிப்பது ஒழுங்கு. (மெத்தவும் மரியாதையான இவ்வழக்கத்தை நமது தென்னாட்டு கிறிஸ்துவர்கள் அனுசரிப்பது நன்று.)

13. இந்திய பெண்பிள்ளைகள் ஐரோப்பிய மாதர்களைப்போல் உடுத்தவும் நடிக்கவும் தேடாமல் சுதேச ஆசாரப்படி உடுத்துவதும் ஒழுகுவதும் ஒழுங்கு.

(இந்தியஸ்திரிகள் தற்கால நாகரிகமென்று சொல்லி, இந்திய உடுப்பிலும் அல்லது ஐரோப்பிய உடுப்பிலும் கூட்டில்லாத நவீன உடைகளைத் தரிப்பதிலும், தங்கள் தேகம் வெளிக்குத் தோன்றும்படிக்கான மெல்லிய வஸ்திரங்களைத் தரிப்பதிலும், தலையில் முக்காடின்றி அடக்க ஒடுக்கமின்றி, நிமிர்ந்த முகத்தோடு நடமாடுவதிலும் ஆவல் கொள்ளுவார்கள். இது நாகரிகமல்ல, அநாகரிகம். ஐரோப்பாவிலும் விசேஷமாய் அமெரிக்காவிலும் ஸ்திரிகள் விசேஷமாய் செல்வாக்குள்ள ஸ்திரிகள் அலங்கோலையான உடைகளைச் சற்றும் மானமின்றி தரித்துவருகிறார்களென்றும், இவ்வக்கிரமத்தை அடியோடு நிறுத்துவது அவசியமென்றும் பத்திரிகைகள் ஓலமிடுகின்றன. ஆதலால் நமது ஸ்திரிகள், ஐரோப்பிய சீமான்களால் முதலாய் மெச்சிப் புகழப்படும் தங்கள் சுயநாட்டு உடைகளைத் திரஸ்கரிக்காமல் காலத்திற்கேற்றபடி சற்று நாகரிகமாய் உடுத்துவது கிரமம்.)

14. தேவநற்கருணை உட்கொள்ளப் போகும்போது தன் உடை கந்தையானாலும் அதைக் கசக்கிச் சுத்தமாய் உடுத்திக்கொண்டு போவது ஒழுங்கு.—(ஆத்தும ஆயத்தத்திற்குப் பிறகு சரீர ஆயத்தம். சுத்தமான உடைகளைத் தரிக்கவேண்டுமென்பது சரீர ஆயத்தத்தி லடங்கியிருக்கிறது. இதை மறந்து, சுவாமி யென்ன! தள்ளிவிடுவாரா? அவருக்கு உள்ளந்தானே தேவை, யென்று கற்றகல்வியெல்லாம் பேசுகிறவர்கள் யாரென்றால், சாட்சாதி கடவுள் பிரசன்னமாய் எழுந்தருளியிருக்கும் தேவநற்கருணையின் மட்டில் தக்க பக்தியும் பட்சமுமில்லாதவர்களே!)

15. ஸ்நானம் செய்யும் போது விசேஷமாய்க் குளம் குட்டை ஏரிகளில் குளித்து நீந்தும்போதும் அவசியமான வஸ்திரந் தரித்திருப்பது ஒழுங்கு. (சிலர் விசேஷமாய் ஸ்திரிகள், வீட்டுக்குள் குளிக்கும்போது அங்கே யிருக்கும் மற்ற ஸ்திரிகள், சிறுபிள்ளைகள் குடிகள் மத்தியில் தேகத்தின்மேல் யாதோர் வஸ்திரமின்றி நிர்வாணமா யிருப்பார்கள். இது மகா கெட்ட துர்மாதிரிகையான வழக்கம்.)

(இன்னும் வரும்)

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### கூத்தாடிகளும் குருப்பிரசாதிகளும்

---

சிறிது நாள்களுக்கு முன் நண்பரொருவர் ஆங்கோர் வீட்டை நோக்கிப்போய் வாசலில் நின்று கொண்டிருந்த ஆறுவயதுச் சிறுவனிடத்தில், உன் ஐயா எங்கேயெனக் கேட்கப் பையன் தாதை கொல்லத்திருற்குப் போயிருக்கிறதாகச் சொன்னான், நண்பர் திரும்பவும், எதற்காகப் போயிருக்கிறாரென்று கேட்டார். எங்கள் ஐயா கூத்தாடப் போயிருக்கிறார் என்றான் பாலன். ஆகவே கூத்தாடிகள் கூத்தாடிகள் தான் என்பது அவரது குமாரர் வரைக்கும் தெரிந்த சத்தியம்.

கூத்தாடி யென்னும் நாமம் கேள்விக்கும் கூத்தாடிர்தொழில் பார்வைக்கும் மிகவும் இகழ்ச்சியே யென்பதோடு நில்லாமல் கூத்தாட்டத்தால் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் ஊனமேரிடுகிறது தப்பாதென்று பூர்வத்திலேயே ஏற்பட்டதாயிருக்கிறது.

ஆத்ம சரீரத்திற்குக் கூத்தாட்டம் எப்படி அநர்த்தத்தை விளைவிக்கின்ற தென்பதைச் சமீபத்தில், பெரிய வெள்ளிக்கிழமை முதலாய் நம் சத்தியவேத குருப்பிரசாதிகள் பற்பல உபமான உபமேயங்களைக்கொண்டு நமக்கு வித்தரித்துச் சொல்லியிருக்கின்றனர்.

பூர்வ கடவுளின் பொய்யாத பிரதிநிதிகளாய் விளங்கும் நமது உத்தம குருக்களின் உபதேசம் கேட்டொழுகும் நங்கத்தோலிக்கர் சகலருமே 'எவ்வழி குரு அவ்வழி சிஷ்யர்" என்னும் ஆன்றோர்மொழிக்கொப்ப நடந்து, சிற்றின்பக்கூத்தரின் தீவழிவிட்டு விலகி நமது தேசிக சிரோமணிகளுக்கு நம்பாலுள்ள செல்வாக்கு எத்தகைதார மென்பதைச் சரியாய் உறுதிப்படுத்தினார்கள். ஆம் நம்பேரில் நமது குருப்பிரசாதிகளுக்கிருக்கும் நிர்வாகத் திறமையும் அநுகூல ஆட்சியும் இந்தக்களை பிரமிக்கச் செய்தது. மகமதியர்களை ஆச்சரிய முறவைத்தது வாஸ்தவம் தான். மக்கள் தகப்பனுக்குச் செய்கிறவுபகாரம் தகப்பனுடைய சுகிர்த கட்டளைகளை மக்கள் ஒப்புக்கொண்டு அவைகளை வெகு பிரமாணிக்கமாய் அநுசரித்து வருவதே யொழிய மற்றப்படியல்ல.

"உலகமுழுவதையும் ஒருவன் தனக்கு ஆதாயமாக்கிக் கொண்டாலும் அவன்தன் ஆத்து

மாவை மாத்திரம் இழந்து போவானேயானால் என்ன பிரயோஜனம்?'' இது தேவவாக்கு நமக்கு ஞானத் தந்தையாய் வந்த அர்ச். சவேரியாராகிய அந்த அந்தண சிரேஷ்டரின் பரிசுத்தத்தனத்திற்கு மேற்சொன்ன நன்னயவாக்கே காரணமாயிருந்தது.

கூத்தாட்டத்தால் நமது ஆத்மா கெட்டுப் போமென்பதும், அதனால் நாம் மோட்ச சாம்பிராஜ்யத்தை இழக்க நேரிடுமென்பதும் குருக்கள் வாக்கு. அஃதல்ல, கூத்தாட்டத்தால் நாகரீகம் முதிருமென்பதும் நன்மைகள் உண்டாகுமென்பதும் கூத்தர் கூற்று. கிறிஸ்துவர்களாகிய நாம் கிறிஸ்துவர்களாயிருக்கிறவரையில் குருக்கள் வாக்கினை நம்புவதா? கூத்தர் கூற்றினை நம்புவதா? கூற்று அக்கூத்தருக்கே ஓர் கூற்றாயிருக்கட்டும். ஆத்மா கெட்டுப்போவதாயிருந்தால் அதனைச் சீர்படுத்துங் கடமை குருக்களைப் பொறுத்தது. பாவவழியிலிருக்கிற ஆத்துமாவை நல்வழிக்குக்கொண்டு வருதல் குருக்கள் கடமையாகவு மிருப்பதால்தான், அவர்கள் நம் விஷயத்தில் இவ்வளவு தூரம் சிரமப்படுகிறார்கள். குருக்களை எளனம் பண்ணுகின்றனர் சிலர். இஷ்டமானால் இன்னமும் எளனம் பண்ணட்டும். ஓ! சத் குருக்களைப் பரிகசித்த சக்ராதிபத்தியங்களும் தரைமட்டமாய்ப் போனதறிவோம். எளனக்காரரும் எளனம் பண்ணப்பெறுகிறவர்களும் இப்போது ஈஸ்வரன் கையில் இருக்கின்றனர். மேலும், இறுதியில் சிரிக்கிறவன் சரியாய்ச் சிரிக்கிறான். இற்றைக்குச் சிரிப்பதில் பிரயோஜனமில்லை. குரு கோபம் குல நாசம்.

ஆங்கோர் விதவை தனது பிரகாசமான முகவசிகரத்தைப் பெட்ரோலியம் லைற்றில் தீட்டுவதற்காக, ஈங்கோர் மடவாள் தன் வாழைப் பூக்கொண்டையின் வடிவலங்காரத்தைக் காட்டுவதற்காக, ஆங்கோர் விடலை தன் விபசார மார்க்கம் எல்லையின்றி நடை பெறுவதற்காக, ஈங்கோர் சிதடன் கூத்தருள் பிரதமக் கூத்தன் தனது பண்டைய வழக்கப்படி தன் சகோதரக் கூத்தரின் ஆயிரக்கணக்கான தொகையைச் சூறையாடுதற்கு எசியம் கிட்டுவதற்காக, நமது ஜனசமூகம் பூராவுமே இத்தனை சஞ்சலப்பட வேண்டுமென்பது அவசியமா?

ஜன சமூகம் ஒன்றிருந்தால், அதில் நல்லவர்களும் உண்டு; கெட்டவர்களும் உண்டு. அருபிகளில் சில அலகையாய்ப்போனதும் அப்போஸ்தலரில் ஒருவன் அக்கிரமத்தைக் கையாடியதும் அன்றைக்கே சமாசாரம். அப்படியே இன்றைக்கும், சிலர் நம்மைவிட்டுப் பிரிந்து, கேவலம் கூத்தர்களாய்த் திரிகிறார்களாக்கும். திரியட்டும். எதற்குத் துவக்கமுண்டோ, அதற்கு முடிவுண்டு. ஆனால் நாம் இப்போது செய்யவேண்டியதெல்லாம் கூத்தர் ஒழிந்த மற்றைய சகோதரர்களையாவது நம்மால் கூடுமான மட்டும் பாதுகாக்க முயலவேண்டும்.

அங்ஙனம் முயலுவதில் சிலவேளை கூத்தரால் நமக்கு மோசமிருந்தாலும் இருக்கும். ''உலக ஜீவியத்தில் மோசம் அடுத்தடுத்திருக்கிறது'' என்னும் நினைவே நம்மை இவ்வளவு தூரம் உத்தமராக்கி வைத்திருக்கிறது. அந்த உத்தம முடி யாருக்குக் கிடைக்கும்? நாமும் கடவுளின் அநுக்கிரகத்தால் நமக்கு இதுவரையில் கிடைத்த அனைத்தையும் அக்கடவுளின் மகிமைக்காகவும் அவரது தோத்திரத்திற்காகவும் தத்தம்பண்ணி, வேண்டுமாயின் நன்மைக்காக உயிரையும் இழக்க தயாராயிருக்கிறோமென்பது பொய்யல்ல. ஆயினும் தேவ சித்தத்தையெவர் அறியக்கூடும்? அது பரம இரகசியம். நன்மையை விதைப்போம்; கடைசிவரையில் நன்மைபெறலாம்.

நன்மையே சொரூபமாய் வந்த சேசுக்கிறிஸ்துநாத சுவாமிகளுக்கும் இவ்வுலகத்தில் துன்பம் இருந்தது. என்றாலும், நன்மை நன்மை பயக்கும் என்பது ஒருபோதும் பொய்க்காது. ஆகவே நாம் நமது குருசிஷ்ய பாரம்பரியத்தைக் கைநெகிழவிடா அந்த ஔதாரிய குருக்களின் அரும்பெரும் ஆக்ஞைகளைச் சிரமேற்கொண்டு அக்கட்டளைகளை சமுத்திரையாய் அநுசரித்து வருவதே நம்பிரதான கடமையாகக் கொள்வோம்.

''வேத விரோதிகளை வெட்டி ஜெயங்கொள்ளும் வேல்களையும் வாள்களையும் ஆசீர்வதித்தார்கள் நமக்கு முன்னிருந்த பாப்பரசர்கள்; நாமோ வென்றால் தேவதூஷணிகளைத் திருத்த முயற்சிக்கும் பத்திரிகா லிகிதரின் எழுதுகோலை ஆசீர்வதிக்கிறோம்'' என்கிறார் நமது ஞானப்பிதா பத்தாம் பத்திநாதர்.

9—4—14 குருசிஷ்ய பாரம்பரியன்.



## பரதஜாதியாருக்கோர் விண்ணப்பம்.

நேசம் நிறைந்த எம் பரதஜாதி மஹான்களே! அற்ப அறிவுடைய நான் உங்கள் யாவரிடத்தும் தாழ்மையான ஓர் சங்கட விண்ணப்பம் சொல்லத் துணிந்தனன்.

இப்போது எழுதிய விண்ணப்பத்தினால் எம் ஜாதி பரதர்களுக்கு என்மீது ஒருவித மனவருத்தத்தைக்கொடுத்து, பலவாறு என்னை நிந்தனை புரிவார்களென்ப துண்மையாயினும், எம் ஜாதி பரதர்கள் கொஞ்ச ஆண்டுகளாய் அடைந்திருக்கின்ற நிர்ப்பாக்கிய நிலைமையைப்பற்றி பலநாளாய் எழுதும்படி நினைப்புற்ற நினைவை இத்தடவை இங்கு எழுதலாயினன். ஆகையால், இதில் யாதேனும் குறறமிருப்பின் அதை எம் பரதஜாதி கனவான்கள் மன்னித்தென்மீது குறை கூறாதிருக்க தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறேன்.

அன்பான என் பரத நண்பர்காள்! நம் பரத ஜாதியார் முற்காலத்தில் இந்தியாவில் அநேகம் நாடுகளை அரசாட்சி புரிந்ததாகவும் நாம் பரதகுல பாண்டிய வம்சமென்றும், சந்திர குலத்தாரென்றும் இராஜவம்சத்துதித்தோரென்றும் மேன்மக்களென்றும் சொல்லிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் பூர்வீகத்தில் புகழ்பெற்ற நம் பரத ஜாதியார். இக்காலத்தில் மாத்திரம் ஏன் இவ்வகையான கேவல அந்தஸ்தில் இருக்கின்றார்களென் நினைவுகொண்டு, எம் பரத ஜாதினர் வசிக்கின்ற ஒவ்வொரு ஊர்களையும் நேரில் சென்று பார்க்கும்படியாய் ஆசையுற்று, ஆங்காங்கு பார்க்கும்போது, புராதீன காலத்திய புராணங்களின் புகழ்வையும் இக்காலத்திய செய்கையின் இழிவையும் உற்று நோக்கில் விந்தையை விளைவிக்கின்றன.

எங்ஙனமெனில், மற்றும் ஜாதியாரைப் பார்க்கிலும் நம் ஜாதியார் ஆணும் பெண்ணும் பலவிதமான கைத்தொழில் புரிந்து ஒவ்வொரு நாளும் சம்பாத்தியம் செய்கின்றனர். இப்படித் தொழில்புரியும் எம் ஜாதியார் மற்றுஞ் சாதியாரைவிட அதிக வறுமையுடையோராயிருக்கின்றனர்.

ஏனெனில், நம் பரத ஜாதியார் பகல்இராவென்றும் வெயில் மழையென்றும் பாராது தினந்தோறும் செய்கின்ற கைத்தொழிலால் கிடைக்கும் பணங்களை மற்றும் ஜாதியாரைப் போல் கிரமமாய்ச் செலவு செய்யாது, அளவுக்குமிஞ்சின விதமாய்ச் செலவுசெய்கின்றனர். வேறு சிலர் சம்பாத்தியத்தில் சொற்பம் அல்லது, மூன்றில் ஒரு பாகத்தை மனைவி மக்களுக்கும் தனக்கும் சாப்பாட்டிற்குக் கொடுத்துவிட்டு சேஷம் பணத்தை கள்ளு அல்லது சாராயக்கடைக்குக் கொண்டு சென்று அளவுமிஞ்சிக் குடித்து, உடுத்திய ஆடைகள் உரிந்தோட கண் மருண்டு, தெருக்களில் வருவார் போவாரோடு மல்லுக்கட்டி வலியச் சண்டையிட்டு போலீஸ் போவார் பலர்.

தெருக்களிலும் சாக்கடைகளிலும் உருண்டு புரண்டு விழுந்து, நாறிய வாயினால் அன்னங்கள் கக்கவும், நாய்கள் கூடி விருந்தென நக்கவும் நடப்பார் பலர். சொந்த வீட்டிற்குச் சென்று மனைவியையும் மக்களையும் அடித்துதைத்து, பானை சட்டிகளையும் உடைத்து, சோறு கறியையும் தெருக்களில் வீசி விடுகின்றார் பலர், குடியாத வீடு விடியாது என்ற பழமொழிபோல ஒருநாளைக்குக் கையில் பணமில்லையானால், பெண்சாதி பிள்ளைகள் ஒதுக்கிப் பதுக்கிவைத்திருந்ததை; அல்லது அவர்கள் நகை நட்டுக்களை ஏமாற்றி, அனேக சத்தியங்கள் செய்து வாங்கிக் கொண்டு குடிப்போர் பலர். கடன் கொண்டு குடியாதவன் கழுதை என்பதுபோல சிலகுடியர் தம் முன்னோர்களின் காணி பூமிகளை ஈடு வைத்துக் குடித்து அழிக்கின்றனர்.

இங்ஙனம் குடித்து வறுமை அடைவதனால் எத்தனையோ குடும்பங்களில் பக்குவ மடைந்த குமர்கள், தாம் வாழ்நாள் முழுதும் தம் பெற்றோர்கள் வீட்டில் பெரு மூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வித குடியர் எம் ஜாதியாரில் மாத்திரமென்று நினைக்கவேண்டாம். இக் குடியர் பல ஜாதிகளிலும் உண்டென்பது உங்கள் யாவருக்குந் தெரியுமன்றோ?

என் நேச ஐயாமார்களே! இதுதானா சந்திர குலத்தாராகிய நம் பரத ஜாதியார்க் கழகு? இதுதானா ராஜ வம்ஸம்? இதுதானா உயர்குலம்? இங்ஙனம் மதுபானத்தைச் செய்து திரிவதனால் நம் ஜாதியாரைப் பல்லவரென்றும் பரிகாசஞ் செய்வதை பகுத்தறிவுள்ள நம் சந்ததியார் உணராதிருப்பதேன்?

சந்தை நிறைந்த பரத நண்பர்காள்! இனியாகிலும் குடியைச் சற்றே கவனித்து அதனால் வரும் துர்விஷயங்களைக் கண்டுகொண்டால் இவ்வளவுநாளும் நம் ஜாதியா ரடைந்திருந்த அந்தகார இருள் நீங்கிவிடுமென்பதுண்மையே.

எம்பரத சகோதரர்களே! தயவு செய்து தூத்துக்குடி ம-ா-ா-ஸ்ரீ கனம் பூரண மஸ்க்ரேஞ்ஞு அவர்களுக்கு அரைஅணா ஸ்டாம்பு அனுப்பினால், குடியால் வரும் சகல தீங்குகளைப்பற்றிய அநேகம் விஷயங்களை அறிவீர்களென்பதுண்மை.

S. M. D. C. பாண்டியன்.

## கத்திவாக்கம் அர்ச். சூசையப்பர் திருநாள்.

சென்ற எப்ரல்மீ 23உ வியாழக்கிழமையன்று கத்திவாக்கத்திலுள்ள அர்ச். சூசைமாமுனீந்திரரின் ஆலயத்தில், துவஜாரோகண உச்சவந்தொடங்கி, அடுத்த மேமீ 3உ அவருடைய அடைக்கலத் திருவிழா வரையுமுள்ள நவநாட்களில் ஒவ்வொரு நாளிலும் காலையில் பூஜை பிரார்த்தனையும் மாலையில் தேர் சுற்றுப்பிரகாரமும் பிரார்த்தனையும் கிரமமாய் நடந்தேறிவந்ததுமல்லாமல், திருநாளுக்கு முந்தின நாளாகிய சனிவாரத்தன்று, மாலையில் வெஸ்பர்சும், அர்ச். சூசையப்பரின் மான்மியத்தைப்பற்றி தமிழில் பிரசங்கமும் செய்யப்பட்டுக் கடைசியாய்ச் சற்பிரசாத ஆசீர்வாதமு முடிந்தவுடன், அத்திருநாளுக்கென்று பட்டணத்தினின்றும் பற்பல வெவ்வேறு ஊர்களினின்றும் திருயாத்திரையாய் வந்திருந்த திரளான ஜனங்கள் புடைசூழ, வெடிகளதிர, மேளவாத்தியங்களும் பாண்டுவாத்தியங்களு முழங்க, மத்தாப்பு, வாணவேடிக்கை முதலிய சகல வைபவங்களோடு ஐந்துதேர்கள் எழுந்தேற்றம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. திருநாளான மறுநாளன்று பெரிய பாட்டுப் பூசையும் இங்கிலீஷில் பிரசங்கமும் பிறகு சற்பிரசாத ஆசீர்வாதமும் கொடுத்துத் திருநாள் முடிவுபெற்றது.

இவ்வித சிறப்பான கொண்டாட்டமெல்லாஞ் செய்வதற்கு முக்கிய காரண கர்த்தரானவர் ம-ா-ா-ஸ்ரீ துரைசாமி பிள்ளை தான். இவரே ஜனங்களுடைய வசதிக்கேற்றபடி தோப்புத்துரவுகளைச் சுத்திசெய்து, சகல வுதவியும் வருஷா வருஷம் செய்துவருகிறார். இப்பேர்க்கொத்த பேருபகாரத்துக்கும் திருநாளின் சிறப்பலங்காரத்துக்கும் முன்னின்றுழைக்கும் தம் தாசனான இவரையும் இவருடைய குடும்பத்தையும் அர்ச். சூசையப்பர் ஆசீர்வதிப்பாராக.

உண்மை விளம்பி.

# MISCELLANEOUS NEWS & NOTES.
# பற்பல வர்த்தமானம்.

**கத்தோலிக்கர் தொகை.**—இங்கிலீஷ் பேசப்படும் நாடுகளிலேயுள்ள கத்தோலிக்கர் 3,75,76,506 பேர். உலக மடங்கலுமுள்ள கத்தோலிக்கரின் மதிப்பு 29,87,34,824 பேர்.

**ஒரு ஆங்கிலிக்கன் பாதிரியார் மனந்திரும்புதல்.**—இங்கிலாந்து தேசத்தின் லீட்ஸ் நகரில் பேர் பெற்று விளங்கிய பர்லீ என்பவர் திருச்சபையில் பிரவேசித்திருக்கிறார். இவரை இழந்தது இவருடைய பதித சபையாருக்குப் பெரும் வருத்தத்தை உண்டு பண்ணுகிறதாம்.

**அமெரிக்காவில் புது ஜாதி மனிதர்.**—ரூஸ்லெட் எக்ஸ்புளோரெஷன் கம்பெனியார் பிரசில் தேசத்தில் இன்னுங் கண்டுபிடிக்கப்படா இடங்களைப் பரிசோதித்துக் கொண்டு போகையில், இதுவரையிலும் அறியப்படாத ஒருபுது ஜாதி மனிதரைக் கண்டார்கள். அவர்கள் முற்றும்நிருவாணிகளான காட்டு மிருண்டிகளாயிருக்கிறார்கள்.

**உயர்குல இந்துக்கள் மனந்திரும்புதல்.**—நாகப்பூர் மேற்றிராசனத்தில் பிலாஸ்பூர் ஜில்லா, பாரகாட் நகரில் உயர்குல சாதி இந்துக்கள் 800 பேர் ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்திருப்பதாகவும், இன்னும் அநேகம் பேர் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாயிருக்கிறதாகவுந் தெரிவருகிறது.

**சித்திரப்பட மண்டபங்கள்.**—அமெரிக்கா ஐக்கிய தேசத்திலே (United States) முப்பதாயிரம் சித்திரப்பட மண்டபங்கள் உண்டு. தினந்தோறும் 72 லக்ஷஞ் ஜனங்கள் அவைகளைப் பார்க்கப் போவார்கள். இக் காட்சிக்காக வருஷாவருஷம் 5 கோடியே 52 லட்சம் பவுன் செலவு செய்யப்பட்டு வருகிறது.



**ஓர் அற்புதமான மாங்கனி.**—கல்குத்தாவிலிருந்து கொண்டுவந்து வைத்துவளர்த்த மாமரத்தில் ஐந்து இராத்தல் நிறையுள்ள ஓர் மாம்பழம் பழுத்ததாம்.

**அந்துப் பூச்சிகளை யழிக்கும் வழி.**—அந்துப் பூச்சிகள் நெல் முதலிய தானியங்களை அழிக்காதிருப்பதற்கு நண்டைச் சுட்டு மேற்படி தானிய வுறை முதலியவற்றின்மீது நேரே கட்டித் தொங்கவிட வேண்டுமாம்.

**ரோமாபுரியிலுள்ள அர்ச். இராயப்பர் ஆலயம்.**—உலகத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் மகா பிரமாண்டமானதாய் ரோமாபுரியில் விளங்குகின்ற அர்ச். இராயப்பர் ஆலயத்திலே 46 பலிபீடங்களும் அவைகளுக்கு முன்பாக இராப்பகல் ஓயாதெரிகிற 121 விளக்குகளும், வெண்கலத்தாலுஞ், சலவைக் கல்லாலும் அமைந்த 748 ஸ்தம்பங்களும், 396 சுரூபங்களும், 280 சன்னல்களும் உண்டாம்.

**புராதனக் கோவில்:**—இங்கிலாந்திலேயுள்ள கிளாட்ஸ்றன்பெறி என்ற மாகாணத்திலே தேவமாதாவின் நாமத்தினாலே ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கின்றது. அது கட்டி இப்போது 1851 வருடங்களாகிறதாம். அதைக் கட்டியவர் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவராம். அவர் கிறிஸ்து பிறந்த 63-ம் ஆண்டில் பிரித்தானியாவுக்குப் போயிருந்தாராம்.

**ஆப்பிரிக்காவின் ஓர் பெரிய மாகாணத்திற் திருச்சபை விருத்தி.**—ஆப்பிரிக்காகண்டத்தில் நியூசர்லாண்டு என்ற ஓர் பிரமாண்டமான மாகாணம் உண்டு. அது பிரான்சு தேசத்தைவிடப் பெரிது. 15 வருடங்களுக்குமுன் அத்தேசத்தில் ஒரு கத்தோலிக்குக் கிறிஸ்துவனு மிருக்கவில்லை. இப்பொழுது அம் மாகாணத்தில் பதினாயிரம் கத்தோலிக்கரும், ஐயாயிரம்பேர் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாக மந்திரக் குறிப்பிடம் படிப்போரும், 500 உபதேசிமார்களும் 55 குருக்கள் 2 மேற்றிராணிமார்களும் இருக்கிறார்கள்.

**இங்கிலாண்டுக்கும், இந்தியாவுக்கும் தந்தி விகிதங்கள்.**—நாளது ௵ மேமீ முதல் இங்கிலாண்டுக்கும் இந்தியாவுக்கும் தந்திகளின் விகிதங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை ஆர்டினரி தந்திகளுக்கு ஒரு வார்த்தைக்கு ரூபாய் 1 அணா 8 வீதம் வாங்கப்பட்டுவந்தது. இந்த ௵ மேமீ முதல் ஒரு வார்த்தைக்கு ரூபாய் 1 அணா 1 வீதம் கட்டணம் வாங்கப்படும். இதுவரை டிபர்ட் தந்திகளுக்கு ஒரு வார்த்தைக்கு 12-அணா வீதம் வாங்கப்பட்டு வந்தது. சென்ற மேமீ முதல் ஒரு வார்த்தைக்கு 10-அணா வீதம் கட்டணம் வாங்கப்படுகிறது. இதைத்தவிர வாரக் கடைசி நாட்களில் 70 வார்த்தைகளடங்கிய கடிதமொன்று தந்தி கடிதமாக மிகவும் குறைந்த விகிதத்துக்கு அனுப்பப்படும். இக்கடிதங்கள் வாரந்தோறும் சனிக்கிழமையிலிருந்து திங்கட்கிழமை வரையிலும் அனுப்பப்படும்

**ரயில்வண்டிக்குப்புதுமாதிரியான பூட்டு.**—தற்காலம் ஏற்பட்டிருக்கிற விதிப்படி ரயில் வண்டிகளை யொவ்வொன்றாய்த் திறக்கவும் அல்லது பூட்டவும் வெகுகாலதாமதமாகிறது. இதற்காக இப்போது நூதன கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு ரயில் ஓட்டுபவன் வேண்டியபோது, அதாவது ரயில் புறப்படுமுன் எல்லா வண்டிகளையும் ஏக காலத்தில் பூட்டிவிடவும், வேண்டியபோது திறந்துவிடவுங் கூடும். இந்த சூட்சமான யந்திரத்தைக்கண்டு பிடித்தவருக்கு இங்கிலாந்திலுள்ள வொரு ரயில்வே கம்பெனியார் 2,85,000 ரூபாய் விலை கொடுத்திருக்கிறார்கள்.

**உருக்கி வார்க்கப்பட்ட போர்வீரரைப் போன்ற சிலைகள்.**—இது டென்மார்க்கிலுள்ள ஒரு இஞ்சினீயரால் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. யுத்த காலத்தில் இந்தப் பதுமைகளை உபயோகப்படுத்துவதினால் சாதாரணமாய் சைனியங்களுக்கு நேரும்படியான எவ்வித அபாயமும் நேரிடாதாம். இப் பதுமையில் ஒரு பெரிய உருக்குக் குழாய்க்குள், இன்னொரு சிறிய உருக்குக் குழாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதை யுத்தகளத்தில் அமைத்துவிட்டு தூரத்திலிருந்துகொண்டு தந்திக் கம்பியில்லா மின்சாரத்தால் வெடிசுடும்படி செய்துவிட்டால், அதிலுள்ள

சிறுகுழாய் 5 அடி உயரம் எழும்பி, 400 குண்டுவரையில் சுடுமாம். ஷை பதுமையிருக்கிற இடத்துக்கு 5 மைல் தூரத்துக் கப்பால் இருந்துகொண்டும் சுடும்படி செய்யலாமாம். ஏதாவது ஒரு இடத்தைக் காக்கவேண்டுமானால் இந்தப் பதுமைகளை வைத்துவிட்டால் எப்பேர்க்கொத்த தைரியமான காலாட்படையாலும் அந்த இடத்தைக் கைப்பற்ற முடியாதாம். அந்தச் சிலையை யுடைத்து நாசமாக்கினாலல்லாது, அந்தப் பதுமைகள் சுடுவதை நிறுத்தமுடியாது. இது இப்படி யிருக்க இன்னுங் கொஞ்சகாலத்தில் குண்டு மருந்து மில்லாமலே மின்சார சக்தியினால் ஆயிரமாயிரமான படைகளையும் க்ஷணத்திலே சங்கரித்துவிட இன்னொரு தேசத்தான் கண்டுபிடிப்பான்போலும். நிலையற்றதான இப் பூமியை அவனவன் சுதந்தரித்துக்கொள்ள இவ்வளவான சூட்சாதி சூட்சங்களைக் கண்டு பிடிக்கையில், இப்பூலோக வாழ்வே சதமென்று இருந்துவிட்டால் வேறென்ன தான் செய்யமாட்டான்!!

**தபாற்காரன் செய்த மோசம்.**—காராச்சியிலுள்ள மூன்று ஐரோப்பிய ஸ்திரிகள் தமக்கு வரவேண்டிய கடிதங்கள் சரிவர வந்து சேரவில்லை யென்று போஸ்ட்மாஸ்டருக்கு எழுதி யிருந்தார்கள். அந்த மூன்று ஸ்திரீகளுக்கும் தபால்கொண்டுபோய்க் கொடுப்பவன் ஒரே தபால்காரன்தானாம். போஸ்ட்மாஸ்டர் ஒரு தபாற்காரன் மீது சந்தேகித்து அவனுக்குத் தெரியாவண்ணம் வாரண்டு வாங்கி, அத் தபாற்காரனுடைய வீட்டைச் சோதனை போட்டதன்மேல் முன் சொல்லிய மூன்று மாதர்களுக்குச் சேரவேண்டிய கடிதங்கள் கிடைத்ததோடு வேறு பல காகிதங்களும் ஆங்காங்கு இறைந்துகிடந்தனவாம். அன்றியும் சுமார் இருநூறு கார்டுகளும் அங்கிருந்தனவென்றாக தெரிவந்தது. தபாற்காரனை பந்து செய்துவைத் திருக்கிறார்கள். நமது சந்தாதார நேயர்களனைவரும் இதனை நன்றாய் கவனிக்கும்படி கோருகிறோம். தங்கள் தங்கள் பத்திரிகைகள் தங்களுக்குக் கிடைக்காவிட்டால் எம்பேரில் குறைகூறுவது நியாயமல்ல. நம்முடைய பத்திரிகைகளைக் கிரமமாய்க் கணக்கோடு குறித்த நாளில் தபாலாபீசில் செலுத்திப்போடுவதால், ஒரு பத்திரிகையாவது தவறிப்போக ஏதுவில்லை. பத்திரிகை சேரத் தவறினால் தபாலாபீசு வேலைக்காரரின் கவலையீனமே யொழிய வேறில்லை. ஆகையால் பத்திரிகை வரப்பெறாதவர்கள் தபாலாபீசில் அதைப்பற்றி விசாரிப்பது யுக்தமாயிருக்கும்.

**திருட்டுப்பொருளை விற்பத்தில் திறமை.**—ஒரு துரைசானி அழகியவோர் நாயை வளர்த்துவந்தாள். வெகு நாளாய் அந்த நாயைத் திருடிக்கொண்டு போக வேண்டுமென்று யோசித்திருந்த ஓர் பேர்வழி நல்ல சமயம்பார்த்து அந்த நாயைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். பிறகு பட்டணத்தின் வேறோர் பகுதியில் அதைக்கொண்டுபோய்ப் பலரிடத்தில் விற்பனைக்குக் காட்டினான். அவன் சொன்ன விலைக்கு ஒருவரும் ஒப்பவில்லை. இப்படி இரண்டுநாள் சுற்றித்திரிந்து கடைசியாய் மறுபடியும் தான் திருடின துரைசானி யிடத்திலேயே அதைக் கொண்டுவந்து "அம்மா உம்முடைய நாய் காணமற் போய்விட்டதென்றும் அது காணமற்போன நாள் முதற்கொண்டு நீர் மிக கஸ்தியாயிருக்கிறதாகவும் கேள்விப்பட்டேன். இதோ ஒருநாய் தெருவி லகப்பட்டது. இது ஒருவேளை உம்முடையதுதானோ பாருமென்று நாயைக்காட்டினான். துரைசானி மிகவுஞ் சந்தோஷப்பட்டு ஒரு பவுனை யெடுத்து அவன் கையிற் கொடுத்தனுப்பினாள். பிறகு அவன் தன் கூட்டாளிகளில் ஒருவனைக் கண்டு "அப்பா, யோக்கியபக்ஷந்தான் சிறந்த நடத்தையென்று சொல்லுகிறார்களே, அது மெய்தான். இதோ நான் திருடின அந்த நாயை இரண்டுநாள் வரையில் எங்கும் அலைந்து விற்கப்பார்த்தேன். ஐந்து ஷில்லிங்குக்குமேல் எவருங் கொடுக்கப் பிரியப்படவில்லை. கடைசியாய் நான் திருடின கிழவியிடத்திலேயே அதைக்கொடுத்து ஒரு பவுன் வாங்கிக்கொண்டு வந்தேன். பார்த்தாயா?" என்றான். இப்படித் தான் பொல்லாதவர்கள் தங்கள் துர்க்கிருத்தியங்களால் சம்பாதித்துக்கொண்ட ஊதியங்களைக்குறித்து தங்களைத் தாங்களே சலாக்கித்துக்கொள்ளுவார்கள்.

**கண்மாரி.**—சென்ற ஏப்பிரல் மாதம் 27-ம் தேதி திங்கட்கிழமையன்று காலையில் சுமார் 7-மணிக்கு தென் மலையாளம் ஜில்லா அடங்கலும் கரேலென்று ஆகாயமுழுதும் மந்தாரம்போட்டு மூடிக்கொண்டதுமல்லாமல், இடிமுழக்க மின்னலோடு ஆகாயம் எல்லாம் வெகு நேரங் கர்ச்சித்துக் கொண்டேயிருந்தது. இதைக்கண்ட ஜனங்கள் எவ்விடத்திலோ பெரும் புயலடித்திருக்குமென்று எண்ணிக்கொண்டார்கள். பிற்பாடு சம்பவித்ததென்னவெனில், தென் மலையாளம் ஜில்லாவின் பற்பல இடங்களில் ஆகாயத்திலிருந்து அநேகாநேக பெரிய பெரிய கற்கள்மழை பொழிவதுபோல் வெகு வேகத்தோடும் விசையோடும் பூமியில் வந்து விழுந்தன. அக்கற்கள் ஆகாயவிரிவில் சுற்றித்திரிந்து கடைசியாய்ப் பூமியின் கவர்ச்சியினாலிழுக்கப்பட்டுப் பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்தில் சேர்ந்தமாத்திரத்தில் தீப்பற்றி எரிந்துக்கொண்டே பூமியில் வந்துவிழுகின்றனவாம். இந்தக் கற்களெல்லாம் செவ்வாய்க்கும் வியாழனுக்கும் மத்தியிலிருந்ததும், ஏதோ வொரு காரணமாயுடைந்துபோனதுமான வொரு பெரிய கிரகத்தின் துண்டுகள் என்பதாக வானசாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படிவிழுகிற இதைத்தான் நாம் விண்வீழ் கொள்ளி என்கிறோம். இவ்வளவு அபரிமிதமாக தென்மலையாளம் ஜில்லாவில் மேற்படி கல்லுகள் மழைபோல் வருஷித்ததானாலும் அவை கட்டிடங்களின் பேரிலாவது மனிதர் மிருகமுதலிய எவ்வித பிராணிகளின் பேரிலாவது விழுந்து ஒன்றையுஞ் சேதப்படுத்தினதில்லை. இந்தக் கற்களைக்காண பிரியமுள்ளவர்கள் மியுசியம் (Museum)என்ற காட்சி சாலையில் பார்வையிடலாம்.

**பரிசுத்த பண்டங்கள்.**—மந்திரிக்கப்பட்ட சுரூபம், ஜெபமாலை முதலியன பின்வரும் காரணங்களால் தங்கள் பலன்களை இழந்துவிடும் 1-வது தேய்ந்து உருவழிந்து போவதினாலும், 2-வது அவற்றை விற்பதினாலும், கிரயங்கொடுத்து வாங்குவதினாலும்; 3-வது அவற்றை இரவலாகக்கொடுப்பதினாலும் அல்லது புறத்தியாருக்கு சொந்தமாய்க் கொடுத்து விடுவதினாலும் ஆக இந்த மூன்று காரணங்களினால் அவற்றின் பலன்களையிழந்து விடுகின்றன.

1-வது வட்ட சுரூபங்கள், பாடுபட்ட சுரூபங்கள் முதலியவை தேய்ந்து போனால், விசேஷமாய் சேசுநாதரின் உருவங் கண்டு பிடிக்கக்கூடாத வண்ணமாய்த் தேய்ந்துபோனால், அவைகளுக்குப் பலனில்லை. பாடுபட்ட சுரூபங்களில் கர்த்தருடைய வுருவத்துக்கே பலனல்லாது சிலுவைக்கல்ல. ஆகையால் சிலுவை ஏதாவது ஒரு காரணத்தால் சேதப்பட்டுப் போனாலும், வேறு சிலுவையில் ஷை சேசுநாதரின் உருவத்தைப் பதித்து வைத்துக்கொள்ளலாம். அதுபோலவே ஜெபமாலையை மந்திரிக்கும்போது ஜெபமாலையின் மணிகளுக்கே பலன்களுண்டு. அதுகள் கட்டப்பட்டிருக்கிற கம்பிகளுக்கல்ல. ஆகையால் ஜெபமாலையை எத்தனை தரம் பிரித்துக்கட்டினாலும் திரும்பத் திரும்ப மந்திரிக்க வேண்டியதில்லை.

2-வது மந்திரிக்கப்பட்ட சாமான்களைப் பணத்துக்குவிற்கவே கூடாது. வேறே பண்டங்களுக்கு மாறவும் படாது.

3-வது குருக்களானாலுஞ் சரி, கிறிஸ்துவர்களானாலுஞ் சரி தாங்களுபயோகப்படுத்தாத மந்திரிக்கப்பட்ட சுரூபங்கள் ஜெபமாலைகளைப் புறத்தியாருக்குப் இலவசமாய்க் கொடுக்கலாம். முன்னாடி தாங்களுபயோகித்த ஜெபமாலையைப் புறத்தியாருக்குக் கொடுத்தால் அதை வாங்கினவன் திரும்ப மந்திரித்துக்கொள்ள வேண்டும். நோயாளியின் வசதிக்காக தன் ஜெபமாலையைக் கொடுத்து ஜெபித்தபின் வாங்கிக் கொள்ளலாம். சொந்தக்காரனுடைய உத்திரவில்லாமல் வேறொருவன் திருட்டுத்தனமாய் அவனுடைய ஜெபமாலையை யெடுத்து ஜெபித்தால், அதினால் சொந்தக்காரன் தன் ஜெபமாலையின் பலன்களை யிழந்து போகமாட்டான்.

**இந்தியா முழுமைக்கும் சௌகார் சட்டம்.**—நம இந்தியாவில் வட்டிக்குக் கடன் கொடுக்கும் சௌகார்களைப்பற்றிய சட்டமொன்று ஏற்படுத்த இந்தியா கவர்ன்மெண்டார் யோசித்துக்கொண் டிருக்கிறார்களென்று தெரியவருகிறது. இந்தியர்களில் பெரும் பாலார் தங்களுடைய அவசரச் செலவுகளுக்கெல்லாம் சௌகார்களிடம் கடன் வாங்கவரவே, அச்சௌகார்கள்

தாங்கள் கொடுக்கும் தொகைக்கு அதிக வட்டி விதிப்பதுமன்றி, தங்களுக்குச் சேரவேண்டிய வட்டியைத் தாங்கள் கடன் கொடுக்கப்போகிற தொகையில் முன்னாலேயே பிடித்துக்கொண்டு பாக்கித் தொகையை மட்டும் கடனாகக் கொடுக்கும் வழக்க முடையவர்களா யிருக்கிறார்கள். சௌகார்களிடம் கடன் வாங்கியவர்கள் அநேகமாய்த் தங்கள் சொத்துக்களைப் பிறருக்கு விற்றோ, அல்லது தாங்கள் கடன் வாங்கியிருக்கும் சௌகார் வசமே ஒப்புவித்தோ, தங்களுடைய கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டியவர்களா யிருக்கிறார்கள். சௌகார்களிடம் அளவு கடந்த வட்டி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு கடன் வாங்கியவர்கள் பின்னால் கொடுக்க முடியாமல் கஷ்டப்படும்போது நியாயாதிபதியா யுள்ளவர்கள் குறைந்த வட்டிதான் கொடுக்கப்படுமென்று தீர்ப்புச்சொல்ல முடியாதவர்களா யிருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் யோசித்து இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு தர்மவட்டி விகிதம் ஏற்படுத்தி அதற்கு மேற்பட்ட வட்டிக்கு சௌகார்கள் கடன் கொடுக்கக் கூடாதென்று சட்டஞ் செய்துவிடுவார்களானால், ஏழை இந்தியர்களுக்கு கவர்ன்மெண்டார் பேர் உபகாரிகளாவார்க ளென்பதில் சந்தேகமில்லை.

**ஜோனாப் ஆர்க் மணி.**—அன்னெசி (Annecy) பட்டணத்தில் இப்போது வார்க்கப்போகிற இந்தப் பெரிய மணிக்குச் சமஞை மணி பிராஞ்சு தேசத்திலேயே கிடையாது. இது (4,40,000) நாலு லட்சத்து நாற்பதினாயிரம் பவுண்டு எடையுள்ளது. இப்போதுள்ள பத்தாம் பத்திநாதரென்ற அர்ச். பாப்பவர்கள் (Rouen) ருவென் என்ற பட்டணத்திலுள்ள மேற்றிராசனக் கோவிலுக்கு இதைத் தமது பேரால் நன்கொடையாக அளிக்கப்போகிறார்கள். இந்த பாப்பவர்கள் ஜோனாப் ஆர்க்(Joan of Arc) என்ற புண்ணியவதிக்கு முத்திப்பேறு பெற்ற பட்டங் கொடுத்ததுமல்லாமல், அவள் பேரில் தமக்குள்ள பக்தி பட்சத்தைக்காட்டும் பொருட்டு அந்த புண்ணியவதியின் நாமதேயத்தையே அந்த மணிக்கு இடவேண்டுமென்றும், அந்த மணிக்கு ஞான தீட்சை கொடுக்கும்போது தாந்தாமே அதற்கு ஞான தந்தையாய் நிற்போமென்றுந் தெரிவித்திருக்கிறார்கள். முன் சொன்ன "ருவென்" பட்டணத்தின் தேவாலயங் கட்டப்பட்டிருக்கிற அதே ஸ்தலத்தில் ஜோனாப் ஆர்க்கு என்ற புண்ணியவதி தமது உயிரை ஆண்டவருக்காக கொடுத்தபடியால், அதேஸ்தலத்தில் அந்த அம்மாளைப் பெருமைபடுத்த அர்ச். பாப்பவர்கள் ஆசித்தாரென்னலாம். மேற்படி தேவாலய முகப்பின் இருமருங்கிலும் உன்னதமான இரண்டு கோபுரங்கள் நிற்கின்றன. அவற்றுள் ஒரு கோபுரத்தில் இப்போது சொல்லிய மணியையும் மற்றொரு கோபுரத்தில் அம்மேற்றிராசனத்தைச் சேர்ந்த வொரு தனவந்தரான பிரபுவினால் ஷை கோவிலுக்கு நன்கொடையா யளிக்கப்பட்டதும் காதுக் கின்பத்தைக் கொடுக்கத்தக்க வெவ்வேறு தொனியுள்ள பத்தொன்பது மணிகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டதுமான மற்றொன்றையுங் கட்டப்போகிறார்கள். இந்த மணிகளின் எடையானது ஜோனாப் ஆர்க் மணியின் எடைக்குச் சரியாயிருக்குமென்று தெரியவருகிறது.

**கொசுக்கள்.**—கொசுக்களில் 400-விதங்களுண்டு என்று சொல்லப்படுகிறது. வேட்டை நாய்க்கும் அச்சு நாய்க்கு முள்ள வித்தியாசத்தைப்போல கொசுக்களில் வித்தியாச மேறபட்டிருக்கிறது. கொசுக்களில் பெண்ஜாதிகள்தான் கடிக்கும். ஆண்ஜாதிக் கொசுக்கள் சாக பட்சணிகள், புல் பூண்களிலுள்ள ரசத்தைக் சாப்பிடுவதினாலேயே அவைகள் திருப்தி யடைகின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உறிஞ்சின பிறகுதான் முட்டையிடும்.

**முப்பத்திரண்டு சகோதரர்கள்.**—சமீபத்தில் இங்கிலாண்டில் இறந்துபோன மிஸஸ் ஜான் ஸ்மித் என்னும் 84 வயதுள்ள ஸ்திரீக்கு 32 ஸகோதரர்கள் பிறந்திருந்தார்களாம். இவருடைய தகப்பனார், லெப்டினண்ட் ஜேம்ஸ் ரோபர் என்பர். ட்ராபால்கர் சண்டையில் யுத்தம் செய்தவராம். அவருக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். முதல் மனைவிக்கு 16 பிள்ளைகளும், இரண்டாவது மனைவிக்கு 16 பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தார்களாம். இந்தப் பெண்தான் மிஸஸ் ஜான் ஸ்மித் என்பவர்.



**லியோன் பட்டணத்தின் வீதி.**—பிராஞ்சு தேசத்தைச் சார்ந்த லியோன் பட்டணத்தில் உள்ள "ரிப்பப்ளிக்கு" என்ற வீதி முழுமையும் எட்டு அங்குலமுள்ள சதுரக் கண்ணாடிகளால் தளமிடப்பட்டிருக்கின்றது மல்லாமல், எவ்வளவு மழை பெய்தாலும் கொஞ்சமேனும் மழைத்தண்ணீர் மேற்படி கண்ணாடிகளின் சந்துவழியாய் இறங்காதபடிக்கு அவைகள் அவ்வளவு நெருக்கமாய்ப்பொருத்தப்பட்டிருக்கின்றனவாம்.

**தீவிர ஆகாய கமனம்.**—ஆகாய கமனத்தில் இப்போது அதிக தேர்ச்சியுண்டாயிருக்கிறது. அமெரிகா தேசவாசியான ஒரு ஆகாய கமனி இந்த ஜூன் மாதத்தில் நியுபவுண்ட்லாண்டிலிருந்து ஐர்லாண்டு வரையில் அத்லாந்திக் சமுத்திரத்தின்மேல் 1600 மயில் தூரம் ஒரே பகல் 12-மணி நேரத்துக்குள் பறந்துபோகத் தீர்மானித்திருக்கிறான். ஒரு மணிக்கு 134 மைல் மேனிக்குப் பறந்துபோவது லேசான காரியமா!

**கைதி கோர்ட்டிலிருந்து ஓடிவிட்டான்.**—பட்டாணி ஜாதியைச் சேர்ந்த ஒரு வாலிபன்மீது ஏற்பட்ட திருட்டுக் கேஸ் பூனா மாஜிஸ்டிரேட்முன்பாகச் சென்ற ஏப்பிரல் 22-ம் தேதி புதன்கிழமை விசாரணையாய்க்கொண்டிருந்தது. அப்பொழுது கோர்ட்டில் பலர் கூடியிருந்தார்கள். கைதியைக் காவல் காத்திருந்த போலீசார் கேசை மிகவுங் கவனித்துக்கொண்டிருந்தார்களே யொழிய, அக் கைதியின்மீது அவ்வளவு கருத்தோ டிருக்கவில்லை. இதையறிந்த அக்குற்றவாளி ஒருவரு மறியாமல் ஓடிப்போய்விட்டான். அவன் ஓடிப்போன விஷயம் அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் போலீசாருக்குத் தெரியவந்தது. உடனே அங்குமிங்குந் தேடிப்பார்த்தார்கள். ஆயினும் அவன் அகப்படவில்லையாம்.

**கனடாவில் ரோமான் கத்தோலிக்கர்.** ஏப்ரில் 17:—உவின்னிப்பெக்கில் ஓர் விருந்துக்குக் கவர்னர், நகராதிகாரி, முதலான பெரிய உத்தியோகஸ்தர்கள் போகவில்லை. ஏனெனில் அந்த விருந்து ரோமான் கத்தோலிக்கர்களால் கொடுக்கப்பட்டபடியால் அதில் பிரிட்டிஷ் அரசருடைய சுகத்துக்குமுன் அர்ச். பாப்பானவருடைய சுகத்துக்குப் பானம் பண்ணுவார்கள் என்று ஷை உத்தியோகஸ்தர்கள் போகவில்லையாம்.

**வருஷத்திற்கு 291 முட்டைகள்.**—ஒரு கோழி வருஷத்திற்கு 72-முட்டைகளிட்டால் அதுவே மிகவும் அதிகமாமென்று சொல்லப்படுகிறது. ஆயினும், புரொபஸர் ஜேம்ஸ் டிரைடன் என்பவர் ஒரு கோழி வருஷம் ஒன்றுக்கு 291 முட்டைகளுக்குக் குறையாமல் இட்டிருக்கிறதென்று கூறுகிறார். சுத்தமாய் வளர்க்கப்பட்ட ஒரு கோழி 365 நாளையில் 282 முட்டைகளிட்டிருக்கிறதென்று கானடாவில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

---

## விசேஷ அறிவிப்பு.

---

மரியாயின் சங்கவிஷயமாய் நன்கொடையளிக்கப் பிரியமுள்ளவர்கள் எமக்காவது, திருச்சினாப்பள்ளி கண்டோன்மென்ட், அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, ஏ. ஜெகநாதப் பிள்ளையவர்களுக்காவது அதை அனுப்பிக்கொள்ளலாமென்று நாம் அறிவித்திருந்த போதிலும், இனிமேற்பட எமக்கு அனுப்பாமல் ஷை ஏ. ஜெகநாதப் பிள்ளைக்கே நேராய் அனுப்பிக்கொள்ளும்படியாய் நம்முடைய சந்தாதார் அனைவருக்கும் இதனால் அறிவிக்கிறோம்.

தமிழ்ப்பாஷையைச் சரியாய் எழுதப் படிக்கத் தெரியாதவர்களும், தமிழிலணக்கண விலக்கியம் சற்று முணராத பாமரனும், கத்தோலிக்கு வேதத்தின் சத்தியங்களையும், கொள்கைகளையும் அறியாதவர்களும் தங்களைத் தாங்களே யுயர்ந்த பண்டிதர்களென்றும், மகா வித்வான்களென்றும் கருதி, தப்பும் தவறுமான சில வரிகளை யெழுதி, "இந்தப்பாட்டை அச்சிடும்" என்று எமக்கு எழுதியனுப்பினால், அது சற்றேனும் கவனிக்கப்படமாட்டாது. இவர்கள் வேதத்திற்கும், கிறிஸ்து வித்வான்களுக்கும், தமிழ்ப் பாஷைக்கும் அவமானம் விளைக்கிறார்களென்று உண்மையாய்ச் சொல்லுகிறோம். வேதத்தையடுத்த பாட்டுகள் மேற்றிராணியார் அனுமதியின்றி அனுப்பப்பட்டால், கவனிக்கப்படமாட்டா.—ப. ர.

---

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ருபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ருபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ருபாயாகும். அரை ருபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

*சென்னை.*

*காலஞ்சென்ற பென்ஷன்ட் சப். அசிஸ்டெண்ட் சர்ஜன் ஜான் பிரான்சீஸ் பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் எனது மனைவியுமாகிய பாப்பாத்தி என்றழைக்கப்படும் மாதரசுமரியம்மாளுக்கு 1914ஞு மேமீ 7உ வியாழக்கிழமை பகல் 11-மணிக்கு சேசுவின் திரு இருதய ஆசீரால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. 17உ-யாகிய ஞாயிறுவாரமன்று ஷை குழந்தைக்கு கிரகோரி (Gregory) எனும் நாமதேயமிட்டு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. தாயும் சேயும் சுகம். சேசுவின் திரு இருதயத்திற்கு சதாகாலமும் நமஸ்காரமுண்டாவதாக.*

No. 47, Portuguese Church Street, G. T. MADRAS. } S ஞூசை நாதன்.

### நன்மரண அறிக்கை.

**மண்ணடி.**

*சென்னை, மண்ணடி வாசியும், கவர்ன்மெண்ட் பிரஸ் கம்பாஸிடரும், "கத்தோலிக் சோஷியல்" சங்கத்தின் ஸ்தாபகரும், பொக்கிஷாதாரருமாகிய வீ. தனசாமி பிள்ளை அவர்கள் 1914ஞு ஏப்ரல்மீ 16உ காலகதியானதைப்பற்றி, இம்மாதம் 16உ சனிக்கிழமை காலை 6½-மணிக்கு அர்ச். சவேரியார் ஆலயத்தில் ஷை சங்கத்தின் அங்கத்தோரால் அவருடைய ஆத்துமம் சதானந்த மோட்ச பதவி அடையும்படியாக பூசை செய்வித்து, பூசைக்குப் பிறகு பிரார்த்தனையும் நிறைவேற்றுவிக்கப்பட்டது. இதை கண்ணுறும் கத்தோலிக்குச் சகோதரர்கள் யாவரும் மரித்தவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

R. I. P.

Madras, 11-5-14. } E. Christodoss, *Secretary*, Cath. Social Club.

### குடியர்களை குணமாக்கும் அற்புத "லிக்கோரின்"

*"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபின் தின்போருக்கும் இரகசியமாகத் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் அபினையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். நூற்றுக்கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது.* 25, 27, 30, *வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதே யில்லை,* 40 *நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டி விலை ருபா* 1-8-0, *தபால் கூலி முதலியவை அணா* 5, *பிரத்தியேகம்.*

ஜே. எப். டி. டேவிட், கோட்டை, சேலம். } J. F. D. David, Fort, Salem.

### அறிக்கை.

#### மக்கள் சன்மார்க்க வளர்ப்புக்குரிய பெற்றோர் ஒழுக்கம்.

*கூடிய சீக்கிரத்தில் இதன் இரண்டாவது பதிப்பு அச்சிட எண்ணியிருப்பதால் அதற்குள்ளாக தற்காலம் கையிலிருக்கும் கொஞ்சம் புத்தகங்களையும் ஒழித்துவிட கருதி, முன் ஒரு ருபாயாக விருந்த அதன் விலையை 12 அணாவாக குறைத்திருக்கிறோம். ஆதலின், வேண்டுபவர் சீக்கிரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளவும், புஸ்தகங்கள் செலவாய் விட்ட பிறகு எழுதிக் கொள்வதில் பிரயோஜனமிராது.*

இங்ஙனம்,
ஆக்கியோன்.

The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
3 -JUL 1914
MADRAS.

*"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்"* (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } ஜுலை 1914. { இலக்கம். 7.

## DIAMOND JUBILEE.
## வைர ஜுபிலி.

பாவத்தால் கெட்டழிந்த மனுக்குலத்தை மீட்டிரட்சிக்கக் கருதின கருணாகரக்கடவுள், அதன் காரணமாய்த் தமது திருக்குமாரன் மனுஷாவதாரஞ் செய்வதற்கு யோக்கியமான பீடமாக ஏற்படுத்திய கன்னிகா ரத்தினத்தின் கன்னியப் பெருமையைப் பற்றி பேசுவது யாரராலாகும்! அத்திருக் கன்னிகையின் அமலோற்பவம் விசுவாச சத்தியமாக உலகத்துக்குப் பிரசித்தம் பண்ணப்பட்ட தினத்தின் அறுபதாம் வருஷோற்சவமாகிய வைர ஜுபிலி கொண்டாடப்படுகிற இவ்வருஷத்தில் அவளது மகிமையின் விசேஷியங்களில் சிலவற்றை இம்மாதமுதல் எம்மால் கூடியவரையில் நமது சந்தாதாரர்களுக்கு விவரிக்க விரும்புகிறோம்.

**அர்ச். மரியாயின் கன்னிமைத்தனத்திற்கு அத்தாட்சி.**

ஜந்துகாய பிரான்சீஸ்கு சபை சந்நியாசிகளில் மிகப்புண்ணியவாளனான எஜீடியன் என்பவர் சிறந்து விளங்கினார். இவர் ஷை அர்ச். பிராஞ்சீஸ்குவின் மூன்றாம் சீஷனீ. இவரிடத்தில் விளங்கின புண்ணிய சாங்கோபாங்கத்தின் நிமித்தம் இவரை புண்ய எஜீடியன் எனச் சொல்லுவார்கள். இவர் காலத்தில் அதாவது 1208ஞு த்தில் மேற்படி சபையில் இருந்த போதக சந்நியாசியார் ஒருவர் பரிசுத்த தாயாரான மரியாயின் கன்னிமைத்தனத்தைப்பற்றி சந்தேகத்தால் மனங் கலக்கமுற்றபோது புண்ணிய எஜீடியன் சகோதரரைத் தமக்கு வந்த சந்தேகத்தை நிவர்த்திக்கும்படி கேட்க, அவர் இருந்த இடத்திற்குப் பிரயாணப்பட்டுப் போனார். இவர் போகுமுன்னதாகவே இவருடைய சந்தேகத்தைச் சர்வேஸ்வரன் மூலமாய் அறிந்துகொண்ட எஜீடியன் உடனே எழுந்து எதிர்கொண்டுபோய், அவரை இவ்விதமாக வினவுதல் செய்தார்: "சகோதரரே! மரியம்மாள் பாலனைப் பெறுமுன்னும் கன்னிகைதான்; அவள் பாலனைப் பெறும்போதுங் கன்னிகைதான்; அவள் பாலனைப்

"பெற்றபின்னுங் கன்னிகைதான்" என்று சொல்லிக்கொண்டே மும்முறை தரையைத் தமது ஊன்றுகோலால் அடிக்க, அவருடைய வாக்கின் சத்தியத்திற்கு அத்தாக்ஷியாக மூன்று துல்லிய லீலிய புஷ்பங்கள் பூமியினின்று புறப்பட்டு சுகந்த வாசனை வீசின. அத்தினத்திலிருந்து அந்தச் சகோதரர் தேவமாதாவின் கன்னிமைத்தனத்தின் பரம இரகசிய மகத்துவத்தையறிந்து திட விசுவாசத்தோடு நம்பினதுமல்லாமல், தமது வாக்கின் சாதுரியத்தால் அதைப்பற்றி ஜனங்களெல்லோருக்கும் வெகு உற்சாகமாய்ப் போதித்து அத்தேவதாயாரைத் தமது ஆயுசு பரியந்தம் போற்றி வாழ்த்திவந்தார்.

**அர்ச். கன்னிமரியாயி காலாகாலத்துக்கு முன்னே தேவதாயாராக நியமிக்கப்பட்டவள்.**

நமது ஆண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதர் மனிதாவதாரஞ் செய்யுமுன்னமே வெகுகாலமாக உரோமை யிராச்சியமானது அஞ்ஞானச்சக்கரவர்த்திகளால் வெகு பிரபலமாக ஆளப்பட்டுவந்தது. அச்சக்கரவர்த்திகளுள் மகா பேர் பெற்றவனான காயுஸ் ஜூலியுஸ் செசார் ஒக்தாவியானுஸ் என்பவனுடைய வீரபராக்கிரம செயல்களைக் கண்டறிந்த அவனுடைய மந்திராலோசனைச் சபையோர்கள் அவனுக்கு "அகுஸ்துஸ்" அதாவது அதியுன்னத பிரதிஷ்டன் என்ற ஒரு பட்டத்தைச் சூட்டினார்கள். அதன்பின் அவன் இன்னும் அநேகம் இராச்சியங்களையுந் தேசங்களையும் வென்று, தனக்குக்கீழ்ப்படுத்தி ஜெயசீலனாய்த் தனது இராச்சியத்துக்குத் திரும்பிவரவே, அவ்விடத்துப் பெரியோர் சிறியோரனைவரும், அவனை வெகு ஒட்டோலகமாய் எதிர் சென்றழைத்துவந்து, சகல ராஜோபசாரங்களையும் அவனுக்குப் புரிந்து, நம்மிந்து தேசத்தார் பூர்வம் நளன், ராமன் முதலிய ராசாக்களைத் தங்களுக்குத் தெய்வமாக்கிக்கொண்டதுபோல் இவர்களும் இந்த இராசாவின்பேரில் தங்களுக்குள்ள பட்சப் பற்றுதலை யவனுக்குக் காட்ட, தேவ வணக்கத்தை யவனுக்குச் செலுத்தத் தாங்கள் பிரியப்படுவதாகத் தெரிவித்துக்கொண்டார்கள். அதற்கவன் உடனே அவர்களுக்கு ஒரு உத்தரவும் பகராமல், அப்பேர்க்கொத்த மகிமை பூசை வந்தனைகளைத் தான்பெறத்தக்கவனு, அல்லவா வென்று தீர்மானிக்க, தன்னரசாட்சிக்குள் அடங்கின தூபார் என்ற ஊரில் வசித்திருந்த பேர்போன காலக்கியானியான ஓர் ஸ்திரீயைத் தருவித்து, அவளுடைய வாக்கால் தன் தேவர்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிய வேணும் என்ற தன் கருத்தை யவர்களுக்கு வெளியிட்டான். அரசனின் அபிப்பிராயப்படியே, அவளைக் கொலுமண்டபத்தில் தருவித்தபோது, செசார் சக்கரவர்த்தி தனது மந்திராலோசனைக் கர்த்தாக்களுடைய அபிப்பிராயத்தை அவளுக்குத் தெரிவித்து, இவ்விஷயத்தில் தேவர்களின் சம்மதம் என்னவென்று தனக்கு அறிவிக்க அவளை மன்றாடினான். அவள் தனக்கு மூன்றுநாள் கெடு கேட்டதற்கு இராசா சம்மதித்தான். அப்பிரகாரமே நாலாம் நாள் காலையில் கபித்தோலின் என்னுங் குன்றின்மேல் செசார் சக்கரவர்த்தி காத்திருக்க, முன்சொன்ன மந்திரவாதியானவள் அங்கு வந்து சேர்ந்தாள். அரசன் அவளைச் சகல உபசார மரியாதையோடு வரவேற்று "அம்மணி, நான் தெய்வாராதனையைப் பெறத் தகுமோ, சொல்லு" மென்று கேட்க, உடனே அவள் பரவசங் கொண்டவளைப்போல் இரு நேத்திரங்களில் நின்று பிரகாசஞ் சொலிக்க, ஏதோ ஓர் தரிசனையைக்காண்பவள்போல் உடல் நடுக்கத்தோடு எழுந்துநின்று மிகவுந் தாஷ்டீகமாய்த் தன் கரத்தைவானத்துக்குயர்த்தி: "ஓ செசார் வேந்தனே! மிக்க வைபவங்களையும் பிரதாபங்களையும் வகித்தசீலனே! நீர் ஒருபோதும் தெய்வ மகிமைக்குப் பாத்திரவானல்ல. அத்தகையான மகிமைக்குரியவர் அக்ஷயமானவரா யிருக்கவேண்டும். அக்ஷய சுபாவம் உமக்கில்லையென்று அறியீரோ? தாமா யிருப்பவரும், கடவுளாகவும் மனிதனாகவும் இருப்பவருமான உத்தமருக்கே தெய்வாராதனை செல்லுமொழிய வேறல்ல. அவ் வுத்தமோத்தமரான கடவுள் ஓர் கன்னிகையினின்று உற்பவிக்கவேண்டியிருக்கிறது. அவரே சகல யுகங்களுக்கும் இராசா வாகவும் சகல மனிதருக்கும் இரட்சகராகவு யிருக்கப் போகிறார்," என்று வசனித்தபின் தனது கரத்தை வானத்தி லுயர்த்திச் சுட்டிக் காட்ட அவ்விடத்தி



னின்று பொன்மயமான பிரகாச கிரணமொன்று புறப்பட்டுப் பூமிக்கிறங்கினது. அப்போது வான மண்டலந் திறக்கப்பட அதினின்று மிகவுஞ் சுந்தரவதியான ஓர் கன்னிகை தனது வலது கரத்தில் மிக்க வடிவு சோபனமுள்ள ஓர் பாலகனை யேந்தின மேரையாய்த் தரிசனமானாள். அப்பரம கன்னிகையும் பாலகனும் ஓர் பீடத்தின்பேரில் வீற்றிருக்க, அது மகா பிரகாசத்தோடு அந்தரத்தில் அசைவதைக் கண்டார்கள். இக்காட்சியால் செசார் இராயன் புத்தி தடுமாறி பூமிமீது குப்புறவிழுந்து, சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்தான். அப்போது ஓர் இனிய குரலொலி புறப்பட்டு, "சர்வேசுரனுடைய குமாரனும் மனிதருடைய இரட்சகருமானவர் இக்கன்னிகையின் உதரத்தில் அவதரிக்கப் போகிறார்; அவரொருவருக்கே இப்பீடம் நிர்ணயிக்கப்படும்," என்று சப்தித்தபின் அக்காட்சி மறைந்துபோனது.

இதற்கப்பால் செசார் இராயன் பயப்பிராந்தனாய் எழுந்துபோய், தனது இராசாங்க ஆலோசனைக் கர்த்தாக்களை வரவழைத்துத் தனக்குத் தெய்வ ஆராதனை எவ்வளவுந் தகாதென்றும், தானறியாத ஒருதேவனால் எச்சரிக்கப்பட்டதாகவும், அவரை யின்னாரென்று அறிந்துக்கொள்ளாமலே தானவரை ஆராதித்ததாகவுந் தெரியப்படுத்தினான்.

இம்மகா தரிசனை சம்பவித்த அதேஸ்தலத்தில் அநேக ஆண்டுகளுக்குப் பின் அர்ச். கன்னிமரியாயின் பேரால் தேவாலயம் ஒன்று கட்டப்பட்டு அதில் உத்தம தேவாராதனை நாளதுவரை நடந்தேறி வருகிறது.

**அமலோற்பவியின் ஜனனம்.**

சர்வேஸ்வரன் மனித இரக்ஷணியத்திற்காக குறித்துவைத்த நாலாயிரம் வருடங்கள் முடிந்தும் முடியாதிருக்கையிலே கலிலேயா நாட்டில் நசரேத்தென்னும் ஊரில் தாவீதன் இராசகுலத்தினரும் திட விசுவாசத்தில் நிலைத்தவர்களும், புண்ணியமே நரவுரு வெடுத்ததென்று சொல்லப்படத்தக்க உத்தமர்களுமான சுவக்கீன் அன்னம்மாள் என்னும் இருவர் வாலிபத்தில் மெய்விவாகம் செய்து, நீதிநெறி தவறாது வாழ்ந்து, சகலருக்கும் நன்மாதிரிகையாக நடந்துவருங்காலையில், புத்திரசந்தானமென்கிற பாக்கியத்தை யடையாமுன் முதுமைப் பருவத்தை யடைந்து, இனி குழந்தை பிறக்குமென்ற ஓர் நம்பிக்கையுமில்லாமல்

"மக்களில்லாத பாக்கியம்-எங்கட்கு
இருந்தென்ன சலாக்கியம்"

என்று மனங்கலங்கிப் பரிதவித்திருந்தார்கள். ஆயினும், சர்வேஸ்வரனுடைய தயையைப் பெற்றோமானால் சகலமும் கைகூடிவருமென்ற திட விசுவாசத்தால் தூண்டப்பட்டவர்களாகி பூர்வம் மலடியான அன்னாள் தேவாலயத்திற்கேகி தெய்வ சன்னிதியில் விழுந்து அழுது பிரலாபித்து பிள்ளை வரம்பெற்றதை நினைவுகூர்ந்து, சர்வேஸ்வரன் மனதை பலி தானங்களால் இளகச்செய்ய, தங்களுக்கிருந்த ஏராள ஆஸ்திபாஸ்திகளை ஏழை எளியோருக்கு தானம் செய்தார்கள். அதன் பிறகு காணிக்கைகளை எடுத்துக்கொண்டு ஜெருசலேம் பட்டணம்போக தம்பதிகள் இருவரும் புறப்பட்டு நெடும்வழிகடந்து தேவாலயத்திற்குப்போய்ச் சேர்ந்தார்கள். வேத நியமப்பிரகாரம் சுவக்கீன் தன்காணிக்கைகளை கையிலேந்தி பெரியகுருவுக்குக்காணிக்கையிடக் கொண்டுபோய்க் கொடுக்க, அவர் சினங்கொண்டுக் கதறி, "புத்திரபாக்கியமற்ற மனிதா! தெய்வ சமுகம் நிற்க உடன்பட்டதேது? உன் காணிக்கைகளை வைத்துவிட்டு யாதோர் தண்டனை நேரிடாமுன் தெய்வ சமுகம் விட்டு ஓடிப்போகக் கடவாய்" என்றார்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட உடனே சுவக்கீன், செக்கிலிட்ட எள்ளுபோலாகி, மனங்கலங்கித் தட்டுக்கெட்டுத் தடுமாறி தேவாலயத்தை விட்டு வெளியேவந்து, சாஷ்டாங்கமாக விழுந்து திருவடிகளைப் போற்றி கண்ணீர் தாரை தாரையாகச் சொரிந்து அழுது, சர்வேஸ்வரன் தயையைப்பெறும்படியாக அன்னம்மாளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தான் வனத்திற்புகுந்து கொடியதபஞ் செய்யப்போனார்.

அன்னம்மாளும் தன் மனைசென்று துன்பசாகரத்தில் அமிழ்ந்தி தலையெடுக்க மாட்டாதவளாய் சிந்தைவாடிக் கஸ்தியால்

மெலிந்து, தப ஒறுத்தல்களால் தெய்வ தயையை மன்றாடிவந்தாள். புண்ணிய தம்பதிகளுடைய தபசைக் கண்ணோக்கின தயையுள்ள ஆண்டவர் ஒருநாள் வானவனை அன்னம்மாளிடம் அனுப்பி “உன் வேண்டுதல் தபசைக் கண்ணோக்கினோம், நீ நாளையத்தினம் புறப்பட்டு ஜெருசலேம் பட்டணம் போவாயாக. அப்பட்டணத்தின் கனகவாயலண்டை உன் பத்தாவைச் சந்திப்பாய். உன் கருப்பத்திலோர் அமல கன்னிகை ஜனனமாவாள். அச்சிரோமணி நமது வாக்குத்தத்தத்தால் சர்வஜாதி ஜனங்கள் எதிர்பார்க்கும் இரக்ஷகருடைய தாயாராவாள். அவளுடைய திவ்விய நாமம் உனக்கு அறிவிக்கப்படு”மென்ற சுபசெய்தியைச் சொல்லி மறைந்தார். அன்னம்மாள் தலையை ஏறெடுத்துப்பார்க்க வீட்டுச் சுவற்றின்பேரில் மிகவும் பிரகாசமாக ஜொலிக்கும் “மரியா” என்ற நாமதேய அக்ஷரங்களைக் கண்ணுற்று ஆநந்திக்க, பரலோகத்தினின்று ஓர் சத்தம் “உன் குமாரத்திக்கு இவ்வுத்தம நாமத்தை யிடுவாயாக” வென்று சப்தித்தது.

இத்தரிசனையால் புண்ணிய அன்னம்மாள் பரவசானந்தங்கொண்டு சர்வேஸ்வரனைத் துதிசெய்து இரவைப்போக்கினாள். சூரியோதயத்திற்குமுன் பிரயாணப்பட்டு ஜெருசலேம் பட்டணம்போக, கனகவாசலில் தன் பத்தாவும் சம்மனசின் உத்தரவின்படி எதிர்கொண்டுவர இருவரும் சந்தோஷ வாநந்தத்தோடு சந்தித்துக்கொண்டு தெய்வ தயையைப் புகழ்ந்து தேவாலயத்தில் காணிக்கைகளைச் சமர்ப்பித்து வீட்டுக்குத் திரும்பினார்கள்.

சர்வேஸ்வரனுடைய விசேஷ கிருபையால் அற்புதமாகக் கருப்பந்தரித்த அன்னம்மாளுக்கு ஒன்பது மாதங் கழிந்தானபோது.அவள் ஓர் நாள் பரவசமாயிருக்கையிலே பிரசவ வேதனை ஒன்றுந் தோன்றாமல் சம்மனசுக்கொத்த மகா ரூபலாவண்யத்தைக்கொண்ட சுந்தரியான ஓர் பெண் குழந்தையைப்பெற்றாள். பிறந்த உடனே ஆச்சரியப் பிரகாசம் அவ்வறையில் ஜொலிக்க, சூழ்ந்திருந்த பந்து மித்திரர்களான ஸ்திரிகள் பயப்பிராந்தியினால் மதிமயங்கித் திகைத்து நின்றதுமல்லாமல் தாயையும் பிள்ளையையும் ஏறெடுத்துப்பார்க்க மனந் துணியாமல் தலைகவிழ்ந்து நின்றார்கள். சிறிது நேரத்திற்குள் பயந்தெளிந்து பாலகியைக் கையிலேந்தி சுவக்கீனுக்குக்காட்ட, அவர்,ஆயிரஞ் சூரியன் உதயமானாற்போல் சுடரொளிவிட்டுஜொலிக்கும் பெண் உத்தமியைக் கண்ணாரக்கண்டு ஆநந்தங்கொண்டு பரவசத்தில் மூழ்கி தயாசாகரக் கடவுளைப் போற்றித் துதித்தார்.

சம்மனசு வாக்கிட்டபடி அப்பாலகிக்கு மரியாள் என்ற பெயரிட்டார்கள். இந்தப்பெண் உத்தமிதான் அமலோற்பவி. மேலும் இரக்ஷிக்கவந்த சேசுநாதருக்குத் தாயான பாக்கியவதியாம்.

அர்ச். அமலோற்பவ மரியே! மாசில்லாத உமது உற்பவம் துதிக்கப்படக் கடவதாக!

---

## MARIAN CONGRESS.

## மரியாயின் மகா சங்கத்தைப்பற்றி மகாகனந்தங்கிய கும்பகோணம் மேற்றிராணியார் அவர்கள் எழுதிய நிருபம்.

நமது ஞானதிகாரத்தில் அடங்கிய சமஸ்த குருக்களுக்கும் விசுவாசிகளுக்கும் திவ்விய இரட்சகரிடத்தில் வாழ்த்தும் ஆசீர்வாதமும்.

மிகவும் பிரிய சகோதரரே!

1854-ம் வருஷம் 9-ம் பத்திநாதர் என்னும் பாப்பாண்டவர், கத்தோலிக் உலகமனைத்துக்கும் பெருஞ் சந்தோஷப் பூரிப்புண்டாக, மிகவும் பரிசுத்த கன்னிமரியானவள் கடவுளாது விசேஷித்த அநுக்கிரக உரிமையால் அவளுற்பவமான முதற்க்ஷணத்திலேயே ஜென்மப்பாவம் நீங்கினளெனவும், அவள் தேவனின் தாயாக வேண்டியிருந்தமையால், ஒருக்காலும் ஒரு கணப்பொழுதென்கிலும் பசாசின் வல்லமைக்கு உட்பட்டிருந்தனளில்லையெனவும் பகு ஆரவாரப் பிரகடனஞ் செய்தருளினர்.

இவ்வருடம் அம்மகிமை தங்கிய பிரகடனத்தின் அறுபதாம் வருஷமாதலின், பரிசுத்த கன்னிகைக்கு அறுபதாம் வருஷத்திய ஜூபிலி கொண்டாடவும், அதற்கான உற்சவங்களுஞ் சபைக் கூட்டங்களும் நடத்தப்படவும் இந்தியா, சிலோன், பர்மா முதலிய பாகத்திலுள்ள மேற்றிராணிமார்கள் தீர்மானித்திருக்கின்றனர்கள்.



இவ்வுற்சவங்களுஞ் சபைக் கூட்டங்களும் டிசம்பர் மாதம் 28, 29, 30 தேதிகளில் திருச்சினாப்பள்ளியில் சகல வைபவங்களுடன் நடைபெறும். இந்தியா சதுர்முகங்களிலுமிருந்து மேற்றிராணிமார்களும், குருப்பிரசாதிகளும், கிறிஸ்துவர்களும் இவ்வரிய உற்சவத்தில் கூட்டுறவு கொள்ளத் திரள் திரளாய் ஓடிவருவார்களென்பதற்குக் கிஞ்சித்தும் நமக்குச் சந்தேகமில்லை.

இக்கும்பகோண மேற்றிராசனப் பங்கானது திருச்சினாப்பள்ளி மேற்றிராசனப் பங்கைத் தொட்டுக்கொண்டிருத்தலின் அங்கு அமலோற்பவக் கன்னிகைக்கு ஸ்தோத்திரமாக நடைபெறும் உற்சவக் கொண்டாட்டங்களில் விசேஷித்த உரிமைப்பாடு கொள்ள ஏவப்பட்டதாய்த் தோன்றுகிறது.

அதாவது, நமது பிரிய சகோதரரே! மேற்கண்ட தேதிகளில் கொண்டாடப்படும் உற்சவங்களுக்கு நீங்கள் பெருந் திரளாய் விஜயஞ் செய்து அவைகளைச் சிறப்பிக்க நம் முழு இருதயத்துடன் உங்களை அழைக்கின்றோம், தூண்டுகின்றோம்!

கிற்க, நீங்கள் உங்கள் பங்குகளில் தேர் திருநாள் பார்த்திருக்கின்றீர்கள், நடத்தியுமிருக்கின்றீர்கள், அதற்குப் பணவிரையம் எவ்வளவாகிறதெனவும் அறிந்திருக்கின்றீர்கள். இப்போது திருச்சினாப்பள்ளியில் பரிசுத்த கன்னிகைக்கு ஸ்தோத்திரமாகக் கோரியிருக்கும் உற்சவக் கொண்டாட்டத்திற்கு செலவாகக்கூடியது எவ்வளவு?

15,000 ரூபாயென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தொகை பார்வைக்குப் பிரமாதமாய்த் தோன்றினும், கிறீஸ்துவர்கள் யாவரும் பல துளி பெருவெள்ளமென கொஞ்சம் பொருளுதவி செய்யச் சுலபமாய்ப் பூர்த்தியாகும்.

ஆகலின் நமது பிரிய சகோதரரே! பரிசுத்த கன்னியின் மட்டில் உங்களுக்குண்டான பக்தியும், அவளது மகத்துவத்துக்கிணங்க அவளை மகிமைப்படுத்த உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆசையும் மரியாயி மஹா சங்கத்துப் பெருஞ் செலவுக்கு உங்களை உடன்படுத்துவதன்றி, கத்தோலிக் திருச்சபையில் அர்ச். கன்னிமரியானவள் எந்த ஸ்தானம் வகித்திருக்கின்றனளெனக் காட்டுதற்காக நீங்கள் பெருந்தொகையாய் உற்சவக் கூட்டத்துக்கு விஜயஞ் செய்யும்படிக்கும் உங்களைத் தூண்டுமென்பது திண்ணம். பரிசுத்த கன்னியின் மட்டில் நமக்குண்டாகிய பக்தியைப் புதுப்பித்து விருத்திசெய்ய, மரியாயி மஹாசங்கம் நடைபெறும் இச்சமயத்தை உதவிக்கொள்ளக்கடவோம்.

இதுவிஷயத்தைக் குறித்து அநந்தமுறை நீங்கள் கேட்டிராத காரியம் நாம் என்ன சொல்லவிருக்கின்றது! மிகவும் பரிசுத்த கன்னியானவள் சர்வேசுரனால் மனுஜென்மத்துக்குத்தாயாகவும், இராக்கினியாகவும், எஜமானியாகவும் ஏற்படுத்தப்பட்டனள்; ஆதலின் மாதாவாகவிருந்து நமது அன்புக்குப் பாத்திரவதியாகின்றாள். இராக்கினியாயிருந்து நமது கீழ்ப்படிதலுக் கருகியாகின்றாள்; எஜமானியாயிருந்து நமது நம்பிக்கைக்கு உகந்தவளாகின்றாள். நாம் அவளைத் தக்கபடி நேசிக்கின்றோமாகில், அவளுக்கு ஆழ்ந்த சிநேகம் நிறைந்த புதல்வராயிருக்கின்றோமாகில், நாம் அவளது அடியராயிருத்தற்பற்றி பெருமை கொண்டாடி, கிருபை தயாப இராக்கினியின் மகிமையை எங்கணும் பிரஸ்தாபிக்கக்கடவோம். Salve Regina Mater Misericordiæ. நமது அவசரங்களில் அவளை உதவிக்கு அழைக்கக்கடவோம். அவளது தேவகுமாரனிடத்தில் நமக்காகப் பரிந்து பேச அவளை மன்றாடக்கடவோம். Ad Jesum per Mariam.

அவள் மகிமைக்குரித்தான பக்திக் கிருத்தியங்களிவையென நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அவையாவன: ஜெபமாலை ஜெபித்தல், உத்தரீயந் தரித்துக்கொள்ளல், திரிகாலச் செபஞ் செய்தல், வாரச்சனிக்கிழமைடோறுஞ் சிந்தித்தல், அவள்பேர் தரித்த சபைகூடுதல் முதலியனவாம். இப்பக்திக் கிருத்தியங்களை அறிந்திருக்கின்றோமெனினும், அவைகளை நமது ஜீவியத்தில் பிரயோகிக்க முயற்சி செய்யாது, அறிந்தமட்டிலேயே நாம் வெறுமனே நின்றுவிடுகிறதில்லையோ? அல்லது பரிசுத்த கன்னியின்மட்டில் நமக்கேற்பட்ட பக்தியானது இன்று வேகமுள்ளதாகவும், நாளை வெதுவெதுப்புள்ளதாகவு மிருக்கின்றதில்லையோ?

நமது பிரிய சகோதரரே! பரிசுத்த கன்னியைச் சார்ந்த பக்தியானது வான்றலத்துக்கதவு என மறவாதிர்கள். Honorare Mariam

est thesaurizare vitam æternam (Richard de St. Laurent.)

*மேற்கூறிய பக்திக் கிருத்தியங்களோடு நீங்கள் கவனியாத சகிருத்தியமொன்று சேர்க்கிறோம். அதாவது: அஞ்ஞானிகளையும் பதிதரையும் மனந்திருப்பச் சிரமமெடுத்து, பரிசுத்த கன்னிக்குப் புது மக்களை அழைத்துவர உழைத்தலாம்.*

*அங்ஙனமே உங்கள் மக்களிலொருவன் வீட்டைவிட்டு வெளிகிளம்பித்திரிய, அவனை மறுபடியும் உங்களுக்குக் கீழ்ப்படியவும், உங்களன்புக்குப் பாத்திரனாயிருக்கவும் ஒருவன் மனந் திருப்புவானேயாகில், அந்த ஊதாரிப்பிள்ளை மனந்திரும்பிய விஷயமாய் எவ்வளவு பூரிப்புக்கொள்வீர்கள்! நிற்க, பரிசுத்த கன்னியானவள் மானிடர் யாவருக்குமே மாதாவாகவும் இராக்கினியாகவும் ஏற்படுத்தப்பட்டு, செப்பிற்கரிதாகிய அன்போடு அவர்களை நேசிக்கின்றாள். ஆனதுபற்றியே ஒருபக்கம் தம்மக்களில் பெரும்பான்மையோர் இன்னும் அஞ்ஞானிகளாயிருப்பதைப்பார்த்து எவ்வளவு வருத்தமடையவேண்டியவளாகிறாள். மறுபக்கம் நாம் அவர்களை மனந்திருப்பி அவள் பீடத்துப் படிகள்முன் கூட்டிவரும் பட்சத்தில் அவள் எவ்வளவு பூரிப்புக்கொள்ளும்படியாகிறது! இத்தகைய சந்தோஷம் அவளுக்குண்டாகும்படி நாம் செய்யத்தான்வேண்டும்.*

*இப்போது துவக்கி அஞ்ஞானிகளை மனந்திருப்பப் பிரயத்தனஞ் செய்யக்கடவோம். இச்சிறந்த வேலையைக் கையேற்றுக்கொள்ளக்கடவோம். அதற்கான வழிப்பாடுகள் நமக்கு மூன்றுளது: பிரபோதம், ஜெபம், நன்மாதிரிகை. அஞ்ஞானிகட்குப் பிரபோதஞ் செய்து, அவர்களுக்கு நன்மாதிரிகை தந்து, அவர்களுக்காக மன்றாடிவரும் பட்சத்தில், பரிசுத்த கன்னியானவள் பதிதத்தனத்தினின்றும், அஞ்ஞானத்தினின்றும் மனந்திருப்பி, தமக்கு புது மக்களை அழைத்துவந்தவர்களை மிகவும் நேசிப்பாள், ஆசீர்வதிப்பாள், ஆதரிப்பாள்.*

*மேற்றிராணியாராகிய*

✠ அகுஸ்துஸ்.

---

## CHRISTIAN DOCTIRNE.

## ஞானோபதேசம்.

### பத்துக்கற்பனையின்பேரில்

### 7-ம் பாடம்.

### மோக்ஷவாசிகள் வணக்கம்.

(முன்தொடர்ச்சி.)

---

9. அர்ச். தோமாசுடைய திருப்பண்டம்.—*லண்டன் பட்டணத்தில் காண்டர்பரி அதிமேற்றிராணியாரான அர்ச். தோமாஸ் என்பவர் திருச்சபையின் முகாந்தரமாக தேவாலயத்திலேயே வேத சாட்சியாக துஷ்டரால் கொல்லப்பட்டார். பீடத்தின் படியில் சிந்தப்பட்டிருந்த வேத சாட்சியின் இரத்தத்தை குருக்கள் பூச்சியமாய்ச் சேர்த்து பாத்திரங்களில் பத்திரப்படுத்தி யிருந்தார்கள். பெரும் பாத்திரங்களை ஜலத்தால் நிரப்பி அதில் வேத சாட்சியின் இரத்தத்தில் ஒரு துளி விட்டு வியாதிக்காருக்குக் கொடுத்தபோது அவர்கள் அற்புதமான சௌக்கியம் அடைந்தார்கள்.* (Rock.)

10. அர்ச். ரோசாலி அம்மாள்.--*பலேர்மோ நகரத்தார் அர்ச். ரொசாலி அம்மாள்மீது அதிகப் பக்தி வைத்து அந்த ஊர் கோவிலிற் பூச்சியத்துடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அந்த அர்ச்சியசிஷ்டவளுடைய திருப்பண்டத்தால் விசேஷ உபகார நன்மைகளைப் பெற்றுவந்தார்கள். 1837-ஷு அந்த ஊரில் விஷபேதி உண்டாகி நாடோறும் நூற்றுக்கணக்கான பேர்கள் மாண்டுவந்தார்கள். இப்பெரும் துன்பகாலத்தில் அவ்வூரார் தங்கள் பாதுகாவலாளியான அந்த அர்ச்சியசிஷ்டவளைப் பார்த்து மன்றாடி அவளுடைய திருப்பண்டத்தை சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுபோன நாள் முதற் கொண்டு அவ்வியாதியால் ஒருவருஞ் சாகாமல் காப்பாற்றப்பட்டார்கள்.* (Howe.)

11. அர்ச். எரோணிமுஸ்.—*இந்த அர்ச்சியசிஷ்டவர் பெருந் தபசியும் திருச்சபையில் சிறந்த வேதபாரகருமானவர். இவரால் கல்வி பயிற்றப்பட்டிருந்த பவுலினாள் என்பவள் மகா புண்யவதியாய் ஒழுகி*



*பாக்கியமான மரணம் அடைந்தாள். இப்புண்யவதி தன் பேறுபலனால் மோக்ஷ பதவியை அடைந்ததாக நிச்சயித்த அர்ச். எரோணிமுஸ் அவளை நோக்கி: "ஓ! பரிசுத்த பவுலினாளே! பிரமாணிக்கமுள்ள என் பிள்ளையே! உன் விருத்தாப்பிய உபாத்தியாயரான என்னை மறவாமல் எனக்காக சர்வேசுரனைப் பார்த்து நீ வேண்டிக்கொள். உன் விஸ்வாசமும் பத்தியும் உன்னை உன் ஞானப் பத்தாவோடு ஒன்றித்துவிட்டதென்று நம்புகிறேன். மேலும் நீ இப்பொழுது அவருடைய சந்நிதியிலிருப்பதால் நீ எனக்காக அவரிடம் கேட்கும் மன்றாட்டை எளிதில் பெற்றருளுவாய்" என்று மன்றாடினார்.* (இவர் சரித்திரம்.)

12. ஓர் கல்லறையில் காணப்பட்ட காக்ஷி.—*தூர் நகருக்கு அருகாமையில் ஓர் பூர்வீக கல்லறை யிருந்தது. அநேகர் அவ்விடத்துக்குத் திரு யாத்திரையாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். மேலும் இக்கல்லறையில் ஒரு வேத சாட்சியின் சரீரம் இருப்பதாகச்சிலர் சொன்னதன்மேல் அவ்விடத்தில ஒரு பீடங் கட்டப்பட்டிருந்தது. அந்த நகரின் மேற்றிராணியாரான அர்ச். மர்த்தீன் என்பவர் சிலருடைய வார்த்தையை நம்பாமல் கோவிலிலுள்ள தஸ்தாவேஜுகளைத் தேடிப்பார்த்தும், விருத்தாப்பியரான கிறிஸ்துவர்களையும் குருக்களையும் இதைப்பற்றி விசாரித்துப் பார்த்தும் உண்மை தெரியாதபடியால், மனச்சஞ்சலங் கொண்டு, இதைப்பற்றி தேவவுதவியை மன்றாடினபின் ஏராளமான விஸ்வாசிகள் புடைசூழ அநேக குருக்களுடன் அந்தக் கல்லறைக்குப் புறப்பட்டுப்போய், அங்கே ஒரு பக்கத்தில் முழங்காலிலிருந்து இந்தக் கல்லறையில் புதைக்கப்பட்டிருப்பது யாரென்று தமக்கு அறிவிக்கும்படி சர்வேஸ்வரனைப் பார்த்து மகா பத்தி விஸ்வாசத்துடன் மன்றாடினார். உடனே அவ்விடத்தில் அவலக்ஷணமான ஒரு பூதம் காணப்பட்டது. அப்போது அர்ச்சியசிஷ்டவர் பூதத்தைப்பார்த்து "நீ யார்? உன் வரலாறு என்ன?" என்று வினவினார். பூதம்: சனங்கள் தப்பறையாய் எண்ணியிருக்கும் வேத சாட்சியல்ல நான். நான் ஒரு திருடன், என் பாவாக்கிரமங்களைப்பற்றி சர்க்காரால் தண்டிக்கப்பட்டு கொலையுண்டு, இவ்விடத்தில் க்ஷேமிக்கப்பட்டு தற்போது நரகத்தில் இருக்கிறேன் என்றது. உடனே அர்ச். மர்த்தீன் அங்கு கட்டப்பட்டிருந்த பீடத்தைத் தகர்த்துவிட்டு அவ்விடத்துக்கு ஒருவரும் போகாதபடிக்கு விலக்கஞ்செய்தார்.* (அர்ச். மர்த்தீன் சரித்திரம்.)

*பிள்ளைகளே! இப்பேர்ப்பட்ட வரலாறு பல உண்டு. நமது தேசத்தில் சிலர் ஓர் இடத்தில் ஒரு கல்லறை கட்டி இது மரியான் கல்லறை, அது கித்தேரியம்மாள் கல்லறை யென்று சொல்லி, அதில் பல வியாதிகள் குணமாகிறதென்றும், பசாசு ஆடுகிறதென்றும் சனங்களை ஏமாற்றி இந்தக் கல்லறையில் போடப்பட்ட சாம்பிராணி, பூ, எண்ணெய் முதலியவற்றால் காய்ச்சல் தலைநோவு முதலிய பல வியாதிகள் போய் விடுமென்றும், இதை அடிக்கடி சந்திப்பதால் பிள்ளை வரமுண்டாகுமென்றும் பிதற்றி அச்சனங்கள் கொடுக்கும் பணங் காசு முதலியவைகளால் முன் சொல்லப்பட்ட பித்தலாட்டக்காரர் வயிறுவளர்த்து வருகிறார்கள். ஆகையால் பிள்ளைகளே! இதை நம்பாதேயுங்கள். இதனால் பாவமும் பொருள் நஷ்டமும் உண்டாகுமே யொழிய ஒரு நன்மையும் உண்டாகாது. குருக்களால் விலக்கப்பட்ட ஸ்தலத்துக்குத் திருயாத்திரை செய்யாதிருப்பீர்களாக.*

13. சில அர்ச்சியசிஷ்டவர்கள் சர்வேஸ்வரனுடைய விசேஷ உத்தரவால் சில வியாதியை அல்லது தின்மையைப் போக்க வரம் பெற்று வருகிறார்கள்:—

சுரம் அர்ச். அந்தோனினுஸ், மே. 10

தலைநோய்: அர்ச். கத்தரீனம்மாள், ஏப். 30 அர்ச். பெர்நர்து.

கொள்ளைநோய்: அர்ச். ஆரோக்கியநாதர், ஆகஸ்டு 16.

பாரிசவாய்வு: அர்ச். பிரதிரிக், ஜூலை. 18.

குழப்பம்: அர்ச். கிறிஷ்டப்பர், ஜூலை. 25.

அவதூறு. அர்ச். நிக்கொலாஸ், டிசம்பர் 6.

நெருப்பு: அர்ச். அந்தோனியார். ஜன. 17. அர்ச். ஆகத்தம்மாள், பெப். 5.

காணமல்போன வஸ்து: அர்ச். அந்தோனியார், ஜூன் 13.

கீழ்கண்ட அர்ச்சிய சிஷ்டவர்கள் பின் வருபவைகளுக்கு விசேஷ பாதுகாவலராவார்கள்.

மிருகங்களுக்கு: அர்ச். அந்தோனியார், ஜனவரி 17.

படைக்கு: அர்ச். பார்பரம்மாள், டிசம்பர் 4.

உபதேசிமாருக்கு: அர்ச். சிறில், மார்ச், 18.

சிறுவருக்கு: அர்ச். நிக்கொலாஸ், டிசம்பர் 6.

புதுநன்மை: மு. இமெல்தா.

புது கிறிஸ்துவர்களுக்கு: அர்ச். சின்னப்பர், ஜன. 25.

ஊமைகளுக்கு: அர்ச். பெர்நர்து, ஆகஷ்டு. 20.

தோட்டக்காரருக்கு: அர்ச். செரேனுஸ், பிப்ர, 23.

தட்டாருக்கு: அர்ச். டன்ஸ்டன்; மே, 19.

நல்ல மரணத்துக்கு: அர்ச். சூசையப்பர், மார்ச். 19.

வேலைக்காரருக்கு: அர்ச். சூசையப்பர், இசிதோ, மே. 10. அர்ச். சித்தா, ஏப். 27.

கடைசித் தேவத்திரவிய அநுமானங்களுக்கு: அர்ச். பார்பரம்மாள், டிசம், 4.

கப்பலோட்டிகளுக்கு: அர்ச். தெலியுஸ்,

சமுசாரிகளுக்கு: அர்ச். பிரான்சீஸ்க்கம்மாள், மார்ச், 9. அருளாயி ஆக. 21.

வாத்தியக்காரருக்கு: அர்ச். செசீலியம்மாள், நவ. 22.

சித்திரக்காரருக்கு: அர்ச். லூக். ஒக்டோபர் 18. மெதோடியஸ், ஜூலை 5.

வைத்தியருக்கு: அர்ச். கோஸ்மாஸ் தமியானுஸ், செப்ட். 27.

அச்சடிக்கிறவர்களுக்கு: அர்ச். அருளப்பர், மே:6.

கற்புக்கு: அர்ச். தோமாஸ், மார்ச். 7; ஞானப்பிரகாசியார் ஜூன் 21.

இடையருக்கு: அர்ச். இசிதோர், மே. 10 வென்தெலின்.

சிப்பாய்களுக்கு: அர்ச். செபஸ்தியார், ஜனவரி, 20. ஜியார்ஜ் ஏப். 23.

மாணக்கருக்கு: அர்ச்: ஞானப்பிரகாசியார், ஜூன் 21.

உபாத்தியாயருக்கு: அர்ச். கலாசான்சியு ஜோசெப், ஆகஸ்டு 27.

கன்னியருக்கு: அர்ச். ஆக்நேசம்மாள், ஜனவரி 21; ரோஸ் ஆகஸ்ட். 30.

போர்: அர்ச். பார்பரம்மாள், டிச. 4.

விதவைகளுக்கு: அர்ச். பவுலா, ஜன. 26; மோனிக்கா, மே. 4.

(Howe.)

---

## GNANAMANI, III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 9-ம் அதிகாரம்

மிஷன் வேதமே அனுசரிப்பதற்குச் சுலபமான வேதம்.

---

மறுவாரத்தில், விஸ்வாச நாயகரும் ஈசாக் உபதேசியாரும் பேசிக்கொண்டிருக்கையில், "என்ன ஐயா, கலியாண நாளில் சத்தியநாதன் சொன்ன வார்த்தையை நீங்கள் கவனித்தீர்களோ?" என்று ஈசாக் உபதேசியார் வினவினார்.

விஸ்.—கவனித்தேன்; அன்றைக்குமூன்று பேர்மேல் எனக்குக் கோபமுண்டானது.

ஈசா.—யாரார்?

விஸ்.—முதலாவது பீற்றர்போதகர், இரண்டாவது அந்த சத்தியநாதன், சலமோனுகிய இவர்கள்தான்.

ஈசா.—அவர் கெட்டார் பீற்றர் போதகர். விமரிசை யின்றி அந்தக் கடிதத்தை யெழுதினார்.

விஸ்.—பெரிய மனிதனுன இவருக்குக் கிஞ்சித்தென்கிலும் ஞானமில்லை.

ஈசாக்.—அதனால் தகாதா இல்லை; அவர் சொன்னதுபோல பவுல் போதகர் குடும்பம் மிஷன் வேதத்துக்குப் போவார்களா? கனவில் முதலாய் அதைப்பற்றி நான் நினைக்கவில்லை. ரூத்தம்மாள் தன் தலையைக் கொடுக்கவேண்டியதா யிருந்தாலும் கொடுப்பாளே யன்றி, மிஷன் வேதத்தைப் பற்றி நினைக்கவேமாட்டாள்.

விஸ்.—சந்தேகமா அதற்கு?

ஈசா.—அந்த பீற்றர் போதகர் மெய்யாகவே பைத்தியக்காரர். எனக்கு எற்கெனவே தெரிந்திருப்பதுபோல அம்மனிதன் ஆத்திரக்காரன். முன்னறிவு மட்டு அவருக்கு. என்ன சம்பவிக்குமென்று அறியாமல் வாயால் வருவதெல்லாம் உளறிவிடுவார். மேலும் அக் கடிதத்தில் சொல்லப்பட்டவை எவ்வளவு அறிவற்றவை? அந்த குடும்ப முழுவதும் 7 வாரத்திற்குள் மிஷன்வேதத்தில் உட்படுவதும், டைவோர்சும், தீர்க்கதரிசனமும் இதெல்லாம் அறிவின்றி எழுதப்பட்டவைகளே யன்றி, புத்தியுள்ள எவனும் அவ்விதம் எழுதமாட்டான். ஆனால் சத்தியநாதனுடைய வார்த்தையை நான் யோசிக்கும்பொழுது மெத்த சமுசய முண்டாகிறது.

விஸ்.—என்ன விஷயத்தைப்பற்றி யவன் மட்டில் உமக்கு சமுசய முண்டாகிறதோ?

ஈசா.—அவன் அன்று சொன்னதை நீங்கள் கேட்கவில்லையோ?

விஸ்.—(ஆழ்ந்த யோசனையோடு இருக்கும்போது.)

ஈசா.—"பதினொருமாதந் தேவையில்லை, இதிலுங் குறைவான காலத்தில் (அந்த தீர்க்கதரிசனம்) நிறைவேறுவதை அறிவீர்" என்றதை நீர் கவனிக்கவில்லையோ?

விஸ்.—சந்தேகமா? நான் அதை கவனித்தது மாத்திர மல்ல, அதைப்பற்றி அந்த இராத்திரியே என் தாயாருக்கும் அறிவித்தேன். மேலும் சத்தியநாதனுடைய நடத்தையைப்பற்றி எனக்குச் சந்தேகம் உண்டாகிறது. ஏனெனில் கடந்த இரண்டு வருஷ காலமாய் அவன் என் வீட்டிற்கு அடிக்கடி வருவதுடன், கடந்த ஆறுமாதகாலமாய் நாடோறும் என்னிடம் பல காரியங்களைப் பற்றிப் பேசி, சலமோனுக்கு அபிராமியை கலியாணஞ் செய்து வைக்கும்படி அவன் பட்ட பிரயாசை கொஞ்சமல்ல. ஆனால் கலியாணம் முடிந்து 8 நாளாகிறதல்லவா? இந்த எட்டுநாளில் ஒருநாளாகிலும் என் வீட்டு வாசற்படியிற் கால் வைத்தவனல்ல. இந்த இரண்டு விஷயத்தைப்பற்றி யான் யோசிக்க யோசிக்க, அவன் யோக்கியனென்று சொல்ல நியாயம் காணேம்.

ஈசா.—பீற்றர் எழுதின கடிதத்தையும் சத்தியநாதன் சொன்ன வார்த்தையையும் மிஷன் காரர் எல்லோரும் அந்த கலியாணத்துக்கு வராமல்போனதையும் பற்றி நான் நினைக்கும்போது ஏதோ ஒரு துர்கருத்து அவர்களுக்குள் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்.

விஸ்.—அதைப்பற்றி உடனே நாம் யாதொரு தீர்மானமுஞ் செய்யக்கூடாது.

ஈசா.—ஆனால் ஏதாவதொரு தின்மை யுண்டாகுமென்று நான் பயப்படுகிறேன்.

விஸ்.—அப்படி நீர் வீண் பயத்துக்கு இடங்கொடுக்கவேண்டாம் ஐயா. நாம் நல்ல கருத்துடன் சலமோனுடைய நடத்தையைக் கோரி, உமது குமாரத்திக்குத் துவக்கத்தில் அப்பிரீதி உண்டானபோதிலும் காரியத்தை முடித்துவிட்டோம். அப்படி துரதிஷ்டமாய் யாதொரு தின்மை யுண்டானபோதிலும் ஸ்வாமி நம்மைக் கைவிடமாட்டார். உமது குமாரன் ஞானமணியின் வேண்டுதலால் சகலமும் அநுகூலமாய் முடியும். தம்மை நம்பினவர்களை சர்வேஸ்வரன் கைவிடமாட்டார். அபிராமி சத்தியநாதன் சொன்னதைப்பற்றி உம்மை ஒரு கேள்வியுங் கேட்கவில்லையோ?

ஈசா.—இல்லை, ஒன்றுங் கேட்கவில்லை. ஆனால் உமது குமாரன் அனுப்பிய படத்தை பெரும் பொக்கிஷமாகப்பாவித்து அடிக்கடி அதைப் பார்த்து வாய்க்குள் என்னமோ சொல்லிக்கொள்ளுகிறாள். ஆனால் அவளுக்கு என்ன துர்க்காலமுண்டாகுமோ!

விஸ்.—அதற்கெல்லாம் பயப்படவேண்டாமையா.

ஈசா.—நான் பயப்பட வேறொரு காரணமுண்டு. அதென்னவெனில்; அன்றையத்தினம் சத்தியநாதன் சலமோனுடைய தோளைத் தட்டி, "பிரதர் நமது பீற்றர் போதகருக்கு நீரே கவரவம் வரச் செய்யவேண்டும்" என்றபோது, சலமோன் புன் சிரிப்பு காட்டினனே அன்றி அவனை மறுத்தவனல்ல.

விஸ்.—அப்படிச் சொன்னுனு சத்தியநாதன்?

ஈசா.—பவுல்போதகரைக் கேட்டுப்பாரும் அவன் அப்படிச் சொன்னதற்குச் சலமோன்

ஒன்றுஞ் சொல்லாமல் சிரித்துக்கொண்டிருந்தான்.

*விஸ்.*— அப்படியா! (என்று யோசித்துக்கொண்டிருக்கையில்)

*ஈசா.*—நடந்த 8 நாளாய் கலியாணத்தைப் பற்றி நான் யோசிக்க யோசிக்க, மகா துக்கத்துக்குள்ளாகி, என் பிள்ளைக்கு என்ன தீங்கு உண்டாகுமோ என்று சிந்தை யுண்டாகிறது.

*விஸ்.*—என்ன, ஈசாக் உபதேசியாரே? இப்படி நீர் சிந்தையும் பயமுங் கொள்வதைக் கண்டு எனக்கு அதிசயமுண்டாகிறது. அந்த பயத்தையெல்லாம் விட்டுவிடும். அப்படி யாதொரு தின்மை நேரிட்டபோதிலும் உமது நன்மைக்குக் காரணமா யிருக்குமே ஒழிய மற்றப்படி யல்ல, (என்று அவருக்கு ஆறுதலான வார்த்தைகளையும் தைரியம் வருவிக்கத்தக்க வசனங்களையு முரைத்து எழுந்து வெளியே போனார்.)

சலமோனும் அபிராமியும் அன்னியோன்னியமுள்ள ஸ்திரீ புருஷாளாய் ஒருவரை யொருவர் நேசித்து, நல்ல கிறிஸ்துவர்களாய் ஒழுகி வந்தார்கள். அதிகாலையில் எழுந்தவுடனே இருவரும் தேவதாஸ் அனுப்பின படத்திற்கு முன் சற்றுநேரம் வேண்டிக்கொண்டு கோவிலுக்குப் போய் திவ்விய பூசை கண்டு வருவார்கள். சாயங்கால வேளையிலும் இருவரில் ஒருவர் யாதொரு ஞான புஸ்தகத்தை யெடுத்து ஞானவாசகமாய் வாசிப்பார்கள். ஞாயிறு வாரங்களிலும் பெரிய திருநாட்களிலும் இருவரும் பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளுவார்கள். தனக்குக் கலியாணமான எட்டாம் நாள் சலோமோன் சர்க்கார் வேலையை ராஜீனுமா கொடுத்துவிட்டார்.

இதெல்லாங் கண்ட ஈசாக் உபதேசியார் தமது சமுசய மெல்லாவற்றையும் நீக்கி, ஆறுதலடைந்து சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரஞ் செய்துவருவார். ஒருநாள் ஈசாக் உபதேசியார் வெளியூருக்குப் போயிருந்தார். அன்று இராத்திரி சலமோனும் அபிராமியும் போசனத்திற்குமுன் பேசிக்கொண்டிருக்கும்போது,

*சல.*—அபிராமி! நீ யென்ன காரணத்தைப் பற்றி மிஷன் வேதத்தை விட்டுவிட்டு ரோமான் மதத்தி லுட்பட்டாய்?

*அபி.*—என் அருமை தம்பிக்கு நடந்த விருத்தாந்தத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட தில்லையா?

*சல.*—அதெல்லாம் புரளியே.

*அபி.*—புரளி யென்று சொன்னதார்?

*சல.*—ஏன்? மிஷனெறிதான்.

*அபி.*—அவர் சொல்லி யிருக்கலாம். நான் ஒருவர் சொன்னதைக்கேட்டுப் பேசுகிறேனில்லை. என் கண்ணாரக் கண்டு பேசுகிறேன்.

*சல.*—என்னத்தைக் கண்டு பேசுகிறாய்?

*அபி.*—ஞானமணி புது நன்மை வாங்கின போது நடந்த அதிசயத்தைக் கண்ணாரக் கண்டுதான்.

*சல.*—அது இருக்கட்டும், மிஷன் வேதம் ரோமான் மதமாகிய இவ்விரண்டில் எது நல்ல வேதம் சொல் பார்க்கலாம்?

*அபி.*—ரோமான் கத்தோலிக்கு வேதமே மெய்யான வேதமாகையால், அதே நல்ல வேதம்.

*சல.*—இரண்டையும் ஏசுக்கிறிஸ்து உண்டாக்கினதுதானே?

*அபி.*—ஏசுக்கிறிஸ்து உண்டாக்கினது ஒரு வேதந்தான். இரண்டில்லை. ஆனால் மிஷன்காரரில் எத்தனையோ வகுப்புகளுண்டு. அத்தனை வகுப்பாரும் வேத சத்தியபோதனையில் வேறுபட்டிருக்கும்போது, எது சத்தியவேத மென்று அறிவது புத்தி?

*சல.*—மிஷன்காரரும் ரோமானரைப்போல் கிறிஸ்துவை வணங்குகிறதில்லையோ?

*அபி.*—வணங்கினால் போதுமா?

*சல.*—இன்னம் என்னவேண்டும்?

*அபி.*—எனக்கு வேதத்தைப்பற்றிய நியாயங்கள் தெரியாது. அவர் உண்டாக்கின தேவத்திரவிய அனுமானங்களை மிஷன் வேதத்தார் அனுசரிக்கிறார்களா?

*சல.*—மோக்ஷம் அடைவதற்கு அது அவசரமோ?

*அபி.*—நீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் ஸ்வாமியார் இதைப்பற்றித் தெரிவிக்கவில்லையோ? பாவசங்கீர்த்தனத்தால் பாவம் பொறுக்கப்படு மென்றும், அப்படி பொறுக்கப்படாவிட்டால் அவனவன் செத்தபின் அவனுக்கு மோக்ஷம் கிடைக்காதென்றும் அறியீரோ?

*சல.*—ஒரே கடவுள்தானே?

*அபி.*—இருவர் என்று யார் சொல்லுவார்? இக்காலத்தில் படிப்பாளிகளான இந்துக்களும் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.



*சல.*—ஒரே கடவுள் இருந்தால், அந்தந்த வேதத்தி லிருந்துகொண்டு அவரை வணங்கக்கூடாதோ?

*அபி.*—அப்படியானால், நாம் இந்து வேதத்திலும், மகம்மதியர் வேதத்திலும் சேர்ந்து அவரைத் தொழலாமே?

*சல.*—கிறிஸ்துவேதத்தைப் பற்றி சொல்லுகிறேனொழிய மற்ற வேதத்தைப்பற்றிப் பேசுகிறதில்லை.

*அபி.*—இப்பேர்ப்பட்ட கேள்வியெல்லாம் நமக்கு என்னத்துக்கு? தேவையானால் நாயனு வந்தபின் அவரைக் கேட்டால் சொல்லுவார்.

*சல.*—அதெல்லாம் இருக்கட்டும். நமக்குச் சுமக்கக்கூடிய சுமையை சுமப்பது நலமா? அல்லது சுமக்கக் கூடாததை தலையில் போட்டுக்கொண்டு அவதிப்படுவது நலமா?

*அபி.*— வேதத்தைப் பற்றி சொல்லுகிறீர்களோ?

*சல.*—ஆம். எந்தவேதம் நமக்கு சுலபமாயும் பிரியமாயும் இருக்குமோ அதைக் கையேற்றுக்கொள்வது நலமோ? அல்லது தன் சத்துவத்துக்கு மிஞ்சி கற்பனை கற்பித்து கொடூரமான போதனைகளைப் போதிக்கும் மதத்தை அநுசரிப்பது நலமோ?

*அபி.*—(சிரித்துக்கொண்டு) என்ன! சத்தியவேதத்தைப்பற்றி யுமக்கு சந்தேகமா?

*சல.*—எனக்குச் சந்தேகமில்லை. உனக்கு வேதம் எவ்வளவு தெரியுமென்று பார்க்கும்படி யிவ்வாறு பேசுகிறேன்.

*அபி.*—சத்தியவேதத்தைப்பற்றி கஷ்டமான விஷயங்களைக் குறித்து அறிய எனக்கு என்ன அவசரம்? திருச்சபை விஸ்வசித்துப் படிப்பிப்பது சத்திய சுரூபியான சர்வேசுரனால் போதிக்கப்பட்டதென்று விஸ்வசித்து நம்புகிறேன். சத்திய வேதத்தின் எந்தப்போதனையைப் பற்றியும் எனக்கு அற்பச் சந்தேகமு மில்லை.

*சல.*—நான் கேட்ட கேள்விக்கு மறுமொழி கொடுக்கவில்லையே!

*அபி.*—எந்தக் கேள்விக்கு?

*சல.*—அனுசரிப்பதற்கு எது லேசான வேதம்; மிஷன் வேதமா? அல்லது கத்தோலிக்கு வேதமா?

*அபி.*—எனக்கு அது தெரியவில்லை; நீங்களே சொல்லுங்கள்.

*சல.*—மிஷன் வேதமே சுலபமான வேதம்.

*அபி.*—என்னத்தைப்பற்றி?

*சல.*—மிஷன் வேதத்தில் கட்டு இல்லை; காபந்தில்லை; ஒருசந்தி யுபவாசமில்லை; பாவசங்கீர்த்தனமில்லை; ஞாயிற்றுக் கிழமையில் பூசை காணவேண்டுமென்கிற சட்டமுமில்லை இஷ்டமுள்ளதை நம்பலாம். இஷ்டமில்லாததைத் தள்ளிவிடலாம். புருஷன் பெண்சாதிக்கு விவாதமுண்டாகும்போது ஒருவர் ஒருவரைத் தள்ளிவிட்டு வேறு விவாகஞ் செய்துகொள்ளலாம். இராப்போசனமின்றி செத்தால் கல்லறை கிடைக்கும். இதெல்லாம் எவ்வளவு சுலபமானது! சகலரும் இப்பேர்ப்பட்ட வேதத்தைச் சந்தோஷமாய் அனுசரிக்கலாம்.

*அபி.*—அப்படியானால் நீங்கள் சொல்லுகிற மிஷன்வேதத்திலும் இன்னொரு மிகவும் லேசான மார்க்கமுண்டு.

*சல.*—எந்த மார்க்கம்?

*அபி.*—நாஸ்திக மார்க்கமே.

*சல.*—நாஸ்திகர் கடவுள் இல்லையென்கிறார்கள்; அது சரியல்ல.

*அபி.*—நல்லது நீங்கள் மிஷன் வேதத்திலிருந்தபோது, ஒருசந்தி, உபவாசம் பாவசங்கீர்த்தனம் முதலியவைகள் இல்லையே; அப்போது இருந்ததற்கும் இப்போது சத்திய வேதத்தின் போதனைப்படி நடப்பதற்கும் யாதொரு வித்தியாசமு மில்லையா?

*சல.*—நீயும் இரண்டு வேதத்தையும் ருசி பார்த்தவளாச்சே; நீ சொல் பார்க்கலாம் இவ்விரண்டு வேதத்திற்கு முண்டாயிருக்கும் வித்தியாசத்தை.

*அபி.*—நரகத்திற்குக் கூட்டிப்போகும் வழி விசால முள்ளதென்றும் மோக்ஷத்திற்குக் கூட்டிப்போகும் வழி நெருக்கமானதென்றும் சேசுக்கிறிஸ்து சொல்லி யிருக்கிறார். மோக்ஷவழியாகிற செபம், தவம், பாவசங்கீர்த்தனம், ஒருசந்தி யுபவாசம், திவ்விய நன்மை முதலியவைகளை யனுசரிப்பது மனித சுபாவத்திற்குச் சரிப்படாது; நெருக்கமான வழியாய் நடப்பதற்குச் சரியாகும். ஆனால் இதெல்லாவற்றையும் விட்டுவிட்டு சுவாமி யிருக்கிறார் என்று நம்பினால் மாத்திரம் போதும் இரக்ஷணிய மடையலாமென்று நினைப்பது விசாலமான வழியில் நடப்பதற்குச் சரியாகும்.

இது நிற்க, அடிக்கடி செபஞ் செய்யும்போதும், ஒரு சந்தி உபவாசமா யிருக்கும்போதும், பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்கும் போதும் மனதில் சந்தோஷ ஆறுதல் உண்டாகிறது. உங்கள் அபிப்பிராயமென்ன?

சல.—என் அபிப்பிராயத்தை இப்போது தெரிவிக்கமாட்டேன். (என்று பேசிக்கொண்டிருக்கும்போது போசனந் தயாரானபடியால் அபிராமி சலமோனுக்குப் போசனம்பரிமாறி யிருவருஞ் சாப்பிட்டபின் செய்யவேண்டிய செபங்களைச் செய்து முடித்துவிட்டு நித்திரைக்குப் போனார்கள்.

(இன்னும் வரும்.)

## CORRECT THINGS FOR CATHOLICS.
## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

### உடுப்பு (முன் தொடர்ச்சி.)

1. உண்பதிலும் குடிப்பதிலும் வீண் செலவுசெய்து உடுக்க உடையின்றி யிருப்பது ஒழுங்கல்ல.

2. விசேஷ தினங்களில் யாரொருவர் நல்ல வஸ்திரங்களைத் தரித்திருந்தால் அதைக்கண்டு பொறாமைப்படுவதும் ஆவலாதி பேசுவதும் ஒழுங்கல்ல.

3. நல்ல உடைகளிருந்தும் அவைகளைக் கோவிலுக்குத் தரித்துக்கொண்டு போகாமல் சுத்தபத்தமின்றி போவது ஒழுங்கல்ல.

(யாதொரு பெரிய மனுஷரைப் பார்க்கப் போகும்பொழுது எப்படி நமது சக்திக்கேற்றபடி சுத்தமாயும் மரியாதையாயும் போவோமோ, அப்படியே எல்லாம் வல்ல சர்வேசுரனுடைய ஆலயத்திற்குச் சுத்தமாய்ப்போவது அவசியமன்றோ?)

4. புது உடுப்புகள் இருக்குமட்டும் கோவிலுக்குப்போய், அவைகள் பழசானவுடனே கோவிலை மறந்துவிடுவது ஒழுங்கல்ல.

5. நல்ல உடுப்பில்லையென்று கோவிலுக்குப் போகாதிருப்பது ஒழுங்கல்ல.

6. சொற்ப சம்பாதனையுள்ளவர்கள் 500, 1000 சம்பாதிக்கும் ஐரோப்பியர்களைப்போல் உடுத்தவும் நடிக்கவும் தேடுவது ஒழுங்கல்ல.

7. தன் அந்தஸ்திற்கும் வருமானத்துக்கு மிஞ்சிய உடைகளைத்தரித்து வெளிக்கோலங் காட்டித்திரிவது ஒழுங்கல்ல.

8. உடுப்பு கெட்டுப்போகிறதென்று ஆராதனை சமயங்களில் மரியாதை யின்றி நிற்பது ஒழுங்கல்ல. (ஜாதியிலும், அந்தஸ்திலும், படிப்பிலும், உத்தியோகத்திலும் பொதுவாய்க்கிறிஸ்துவர்களை விட மேம்பாடுள்ள பிராமணர்கள், கேவலம் பேய்ச்சிலைகள் முன்னும் அப்பேய்களுக்குச் செய்யும் ஆராதனை சமயங்களிலும் எவ்வளவோ அச்சபயத்தோடேயும், விநயமரியாதையோடும் நடந்துகொள்வதாயிருக்க, கிறிஸ்துவர்களுள் சிலர், விசேஷமாய் ஆங்கிலேயஉடை தரித்திருக்கும் வாலிபர்கள் தங்கள் சூட் (Suit) கெட்டுப்போகிறதென்று சொல்லி, ஆராதனை சமயங்களில், முக்கியமாய்ப் பரம திவ்விய நற்கருணையின் சந்நிதானத்தில் அற்பமும் மரியாதையின்றி நிற்பது அவிசுவாசத்தினாலோ, அசட்டைத் தனத்தாலோ அல்லது ஆங்காரத்தாலோ அறியோம்.)

9 சாதாரண உடைகளைத் தரித்திருக்கும் எளியவர்களைக் கோவிலில் கண்டால், இல்லாத சீலம் காட்டுவது ஒழுங்கல்ல.

10. பெண் பிள்ளைகள் கோவிலில் ஜெபம் செய்யாமல் பிறருடைய நகைகளையும் உடைகளையும் பார்த்து எண்ணமிட்டுக்கொண்டிருந்து வீடுவந்தவுடன் தங்கள் புருஷன்மாரை அவைகளைப்பற்றி நிர்ப்பந்திப்பது ஒழுங்கல்ல.

11. பெண் பிள்ளைகள் தங்களது நகைகளைப் பிறர் கண்டு வியக்கத்தக்கதாக அடிக்கடி தங்கள் முக்காட்டுத்துணியை எடுத்தெடுத்துத் தலையை மூடுவது ஒழுங்கல்ல.

12. பெண்பிள்ளைகள் தங்கள் உள்ளாடையை வெளிக்குக் காட்டுவது ஒழுங்கல்ல.

13. பெண்பிள்ளைகள் வெளிப் புறப்படும்போதும், பொது ஸ்தலங்களிலும், தாங்கள் கால்விரலில் தரித்திருக்கும் மொட்டினாலும், கையில் தரித்திருக்கும் வளையலினாலும் சப்தம் செய்வது ஒழுங்கல்ல.

14. பெண் பிள்ளைகள் நெற்றியில் பொட்டிட்டு கண்ணுக்கு மையிட்டு, இரு கன்னத்தில் நல்லெண்ணையோடு மத்தித்த மஞ்சள் பூசிக்கொண்டு அல்லது பௌடர் தடவிக்கொண்டு வாயில் தாம்பூலம் மென்றுகொண்டு, யாரைச் சோதனைக் குட்படுத்திக் கெடுக்கலாமோவென்று அலைந்து திரியும்பேயைப்போல், மினுக்குக் குலுக்குடன் தேர் திருநாட்களுக்குப் போவது ஒழுங்கல்ல.

15. குழந்தைகளுக்குக் காப்பு, அரைஞாண் கயிறு, அரைமூடி, சலங்கை, தண்டை, தடயம் தரித்து கடைசியாய் ஒரு வஸ்திரமுமின்றி நிர்வாணமாய்விடுவது ஒழுங்கல்ல.

16. சுதேச உடைதரிப்பவர்களை கர்னாடகர் என்று இகழ்வது ஒழுங்கல்ல.

17. "ஐயா கும்பகோணத்தில் கோதானம்செய்ய, அம்மா குடிவைக் கூழுக்குக் கோதண்டம் போடுகிறாள்" என்கிறபடி, தான்மாத்திரம் சொகுசாய் உடுத்து ஜம்பங்காட்ட, தன் பெற்றோரையும் தன்னை நத்திய மற்றோரையும் அவசிய ஆடையின்றி அலையவிடுவது ஒழுங்கல்ல.

18. ஆண் பிள்ளைகள் தங்கள் தலைமயிரின்மட்டில் அதிக கவனம் செலுத்துவது ஒழுங்கல்ல.

19 ஆத்துமாக்கள் திருநாளன்று, மரித்தவர்கள் தரித்திருந்த உடுப்புகளை கல்லறைகளின்மேல் பரப்பிவைப்பது ஒழுங்கல்ல.



## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளிவிடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### மயிலை காட்டுக் கோவில்.

ஐயா, பத்திராதிபரே,

ஷை விஷயத்தைப்பற்றி இங்கு சுருக்கியெழுதும் கடிதத்தை தங்கள் அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்கத் தயை புரிவீரென் தங்கள் மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை மாநகரைச் சேர்ந்த திரு மயிலாப்பூரின்கண் காட்டுக்கோவில் என்றழைக்கப்படும் அர்ச். பிரகாசி மாதாவினாலய மொன்றிருக்கிறது. இது மெத்த புராதனக்கோவில். இக்கோவில் வீற்றிராநின்ற இடமானது பூர்வத்தில் அடர்ந்த காடா யிருந்ததாகவும், அப்போஸ்தலராகிய அர்ச். தோமையார் தமது சத்துருக்களால் துரத்தப்பட்டபோது இக்காட்டகத்தே வந்து அநேக நாள் ஒளிந்துகொண்டிருந்ததாகவும், கடைசியில் அவர் அங்கேயே யாவருக்குந் தெரியாமல் மரித்துக்கிடந்ததாகவும், மரித்த சில நாட்சென்ற பின்பு கடற்கரை யோரமாய்ச் சென்றுகொண்டிருந்த ஓர் ஐரோப்பிய கப்பலிலிருந்தவர்கட்கு, இவர் மரித்த இடத்தில் ஓர் பெரிய பிரகாசந்தோன்ற அந்தப் பிரகாசத்தை அவர்கள் கண்டு அது காணப்பட்ட இடத்தைத் தேடியடைந்தபோது அங்கே மரித்துக்கிடந்தவர், அர்ச். தோமையாரென தேவ அருளால் தெரிந்து, அப்பிரேதத்தை வெகு பூச்சியமாய் எடுத்துக்கொண்டுபோய், மயிலாப்பூரில் இப்போது அர்ச். தோமையார் கோவிலிருக்கிற இடத்திலே பூஸ்தாபகஞ்செய்ததாகவும் ஓர் கன்ன பரம்பரையுண்டு. இவ்விதமாய் அவ்விடத்தில் பிரகாசந் தோன்றினதினால் அக்கோவிலுக்குப் பிரகாசி மாதாக்கோவில் எனப் பெயர் வழங்குகிறதெனவும் சொல்லப்படுகிறது. இது மெய் என்பதற்காகவாவது அல்லது பொய் யென்பதற்காகவாவது யாதோர் ஆதாரம் அகப்படுவதாயில்லை. இது எப்படியாயினும் ஆகுக. ஆனால் ஷை கோவில் மிகப் புராதனமான கோவில் என்பதற்கையமின்று. இந்தக் கோவிலைச் சேர்ந்த கிறிஸ்துவர்களுக்கு, சென்ற ஜுன் மீ 10உ யானது வைபவ மிகுந்த ஓர் பெரிய திருநாளாயி

ருந்தது. எப்படியெனின் அன்று அவர்களின் அரிய விசாரணை குருவாகிய சங். ஜி. எப். பாய்ஸ் (The Revd. Father G. F. Paes.) சுவாமிகளின் 72-வது ஜனன மகோற்சவம் வெகு ஆரவாரச்சிறப்பு அலங்காரத்துடன் கொண்டாடப்பட்டது. இத்தகைய சிறப்பு கொண்டாட்



Rev. Father G. F. PAES.
Vicar, B. V. M. of Snow, Luz Church, Mylapore, Madras.

டம் இதற்கு முன்னே அக்கோவில் கண்டிராதென்றே சொல்லல் வேண்டும். ஏனெனில், அவ்விசாரணையைச்சேர்ந்த கிறிஸ்துவர்கள் எல்லோரும், சிறியோரும், பெரியோரும், புருஷரும், ஸ்திரீயரும், உள்ளபடியே அந்நாளைச் சிறப்பிக்கவேண்டுமென்ற அதி ஆசை ஆவலுடன் ஏகோபித்து உழைத்தார்கள். சாதாரண ஓர் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு இவ்வளவு ஆரவாரமேன் எனச் சிலர் வினவலாம். காரணமிது. சென்ற ஏறக்குறைய இருபது வருஷமளவாய் எங்களுக்கு ஆத்தும விஷயத்திலுஞ் சரி, சரீர விஷயத்திலுஞ் சரி, எல்லா விதத்திலும் உற்ற தந்தைபோலிருந்து, உள்ளன்போடு உதவிவந்த எங்கள் அரிய தகப்பனாகிய ஷை பாய்ஸ் சுவாமிகள் சிறிதுநாளைக்கு முன்னே மிகவும் ஆபத்துக்குரிய விதமாய் கடின வியாதிக்குட்பட்டு, யாவராலும் கைவிடப்பட்டு, இந்த ஜனனோற்சவ நாளைக் காண்பார் என்ற நம்பிக்கையில்லாமல் இருந்து, சர்வேசுரனுடைய கரை காணாக்கருணையால் சிறுகச் சிறுகத் தேறி வந்து புனர் ஜென்மமெடுத்ததுபோல் பிழைக்கலுற்றார். இவ்வாறு செத்துப்பிழைத்த எங்கள் தந்தையை அந்நாளில் நாங்கள் காணக் கொடுத்துவைத்த பாக்கியத்துக்காக சந்தோஷிக்கவும், இவ்வளவு தயவுசெய்த சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திர நமஸ்காரங்கள் புரியவும், தெரிந்துகொண்ட நாள் அதுவேயாகும். ஆகவே அன்றையத்தினம் ஷை கோவில் புஷ்பங்களாலும், புஷ்ப தோரணங்களாலும், இலைகளாலும், மூன்று பீடங்களும் அநேக மெழுகு வர்த்திகளாலும் வெகு நேர்த்தியாய் சிங்காரிக்கப்பட்டன. முதல் பூசை சங். G. F. பாய்ஸ் சுவாமியாரால் காலை 6-மணிக்குச் செய்யப்பட்டது. அந்தச் சமயத்தில் மயிலை மேற்றிராசனம் வைகர் ஜெனரல், சிரேஷ்ட J. லோபஸ் சுவாமியார் அவர்கள் விஜயம் செய்திருந்தனர். பிறகு இரண்டாவது பூசை சங். பிரான்சீஸ் டியுராங்தோ டிசோஸா சுவாமியாரால் 7-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 8-மணிக்கு முடிந்தபின் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

சங்கை G. F. பாயஸ் சுவாமியார் அவர்களை எல்லாவிதமான ஆபத்துக்களினின்றும் காப்பாற்றி இரட்சித்து அவருக்குப் பூரண சுகத்தைத் தந்தருளின சர்வேசுரனுக்குந் துதி, தோத்திர நன்றி அறிந்த காணிக்கைகளைச் செலுத்திய பிறகு, சங்கை பிரான்சீஸ் டியுராங்தோ சுவாமியாரையும் சங்கை G. F. பாயஸ் சுவாமியாரையும் Mr. A. A. ஏபிராம் என்பவர் அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்தில் அமர்த்தினர். சபையாரால் ஏற்கெனவே ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த G. F. பாயஸ் சுவாமியாரின் 72-வது வருஷ ஜனன வாழ்த்து வந்தனோபசார பத்திரத்தை டெலிகிராப் டிபார்ட்மெண்ட் Mr. ஜேமஸ் காரி என்பவர் வாசித்தார். மெத்தடிஸ்ட் பிரஸ் ஜெனரல் போர்மன் Mr. C. V. தோமாஸ் பின்னை இரண்டு நேர்த்தியான கண்ணாடி சட்டங்களில் பதிவு செய்யப்பட்ட G. F. பாயஸ் சுவாமியாரின் போட்டோ படங்களையும், சுவாமியாரின் 72-வது வருஷ பிறப்பின் வாழ்த்துப் பத்திரத்தையும் அவருக்கு ஞாபகச் சின்னமாக அளித்தார். கவர்ன்மெண்ட் பிரஸ் கான்பிடென்ஷியல் டெண்ஷன் போர்மன் Mr. A. A. ஏபிராம் சங்கை சுவாமியார் அவர்களுக்கு புஷ்ப மாலை சூட்டினார்.

யாதொரு காரியத்தையும் எதிர்ப்பாராத தமக்கு சபையார் இவ்வித அன்பையும் விசுவாசத்தையும், நன்றி அறிதலையும் காட்டி செய்வித்த சகல காரியங்களையும் சுவாமியார் கண்ணுற்று ஆனந்த சந்தோஷமடைந்து, மரணத்தை எதிர்ப்பார்த்திருந்த தமக்கு அமலோற்பவ கன்னிகையும் தேவதாயுமாகிய அர்ச். பிரகாசி மாதாவின் மன்றாட்டு வேண்டுதலினாலும் சபையாரின் ஜெப தவ வேண்டுதலினாலும் தமக்கு நேரிட்ட ஆபத்தான வியாதியைப்போக்கி பூரண சுகத்தை தந்தருளின சர்வேசுரனுக்கு சதாகாலமும் மகிமையும் துதி தோத்திரமும் உண்டாவதாக என்று தோத்திரங்களைச் செலுத்தி, சபையாரையும் கூடி வந்திருந்த சிநேகிதர்களையும் நோக்கி தமக்கு நேரிட்ட ஆபத்தையும், தமது ஜீவிய சரித்திரத்தையும் சுருக்கமாய் தெரிவித்து உலகத்திலே ஜீவிக்கும் நாம் ஒவ்வொருவரும் சர்வேசுரனுக்குப்பயந்து, பாவத்தைத் தள்ளி புண்ணியத்தைச் செய்து, சர்வேசுரனுக்கும், திருச்சபைக்கும் உகந்தவர்களாய் தேவதாயின் உதவிபெற்று நடப்போமாகில் இவ்வுலகத்திலிருக்குமளவும் எவ்வித துன்ப சோதனை நேரிட்டபோதிலும் பாக்கியமாய் ஜீவிக்கலாம், கடைசியாக மரித்த பிறகும் அந்த மோட்ச பரகதி வாழ்வை ஆனந்த சந்தோஷமாய்ப் பெற்று அடையலாம் என்று அவர்களுக்குப் போதித்து அனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்து அந்நாளின் ஞாபகக்குறியாக வைத்துக்கொள்ளும்படி தம்முடைய உருவப் படத்தை வந்திருந்த சிநேகிதர்களுக்கும், சபையோருக்கும் ஒவ்வொரு காப்பி கொடுத்தார்.

சங்கை G. F. பாயஸ் சுவாமியாரிடம் காணப்படும் சிறந்த குணங்களில் முக்கியமானவை.

1. முகதாட்சண்ணியம் கிஞ்சித்தேனும் பாரார்.

2. யாராலும், எப்பேர்க்கொத்த அந்தஸ்துடையவராலும் சரி; யாதொரு வித்தியாசமின்றி சிநேகிக்கும் அன்புடையவர்.

3. அவரவர்களின் அந்தஸ்தையும் கஷ்டநிலைமையையும் இட்டமாய் அறிந்து சமயோசிதமாய் உதவிபுரியும் தயாள குணமுடையவர்.

4. யாதொருவர் திருச்சபைக்கு விரோதமாய் தவறுதலான காரியங்களைச் செய்துவந்தால் அவர்களுக்குப் பலமுறையும் புத்தி சொல்லுவார். குணப்படாமல் பிடிவாதமா யிருப்பாரானால் சபை முன்னிலையில் பகிரங்கமாய், கோபமாய்ப் பேசி யாதோர் தாட்சண்யம் பாராமல் கண்டிப்பார்.

இத்தகைய சிறந்த குணங்கள் அமைந்த சற்குருவானவர் பல்லாண்டு வாழவும், எங்களுக்கு இன்னும்பல ஞான நன்மைகள் செய்து எங்களை ஈடேற்றுவிக்கவும் எல்லாம் வல்ல ஈசன் கிருபைபுரிவாராக. இங்ஙனம்,

C. V. தோமாஸ் பிள்ளை.

---

## தூத்துக்குடித் துறைமுகம்.

சென்னை இராஜதானியில் இத் துறைமுகமானது பிரதானத்தில் இரண்டாவதாக மதிக்கப்பட் டிருக்கிறது. பாம்பன் மன்னார்ப் போக்கு வரவினால் இப்போது சில மாதங்களாகக் கொழும்புப் பிரயாணிகள் வரத்துக் குறைந்து துறைமுகம் சிறிது வளங் குன்றியதுபோல் காணப்பட்டாலும், சரக்குக் கப்பல்கள் இடைவிடாது வந்தும், பண்டக சாலைகளில் ஓயாது வேலை நடந்தும் இந்நகரை அடிக்கடி உற்சாகப்படுத்துகின்றன. இம்மேரையான நிமித்தங்கள் விசேஷமாய் மே, ஜூன் மாதங்களில் மிகவும் நெருக்கமாய்க் கோஷிப்பன.

துறைமுக வேலைகளில் முக்கியமான பாகம் இன்றைக்கும் இங்கு கத்தோலிக் பரதர் கைவசமிருக்கின்றது. தோணி முதலாளிமாரும் கப்பல் வேலைக்காரரும், கரையில், பாலத்தில் மற்றும் சாதாரண அலுவல் புரிந்து வருகிறவர்களில் அநேகரும் கத்தோலிக்கர்தான். கொஞ்சக் காலத்திற்கு முன்போலில்லாமல் இப்போது முதலாளிமார்களில் சிலர் இங்கிலீஷ் வாசிப்புடையவர்களாயு மிருக்கின்றனர். வாசிப்பின் பயனால் முதலாளிமார்கள் தங்கள் தோணிகளுக்கோ வேலைகளுக்கோ அடுத்தடுத்து மோசம் வாராது காத்துக்கொள்ள வேண்டுமாயின் மதுப்பழக்க மில்லாதவரே சரியெனக் கண்டு அவ்வவ் வலுவல்களுக்குக் குடியரல்லாத மற்றவர்களைப் பொறுக்கித் தண்டல்களாகவும லஸ்கர்களாகவும் வைத்துக்கொள்ளுகின்றனர். ஆயினும், என்ன?

விஷயங்களை அடுத்து யோசிக்கும்போது துறைமுகத் தொழில்கள் இன்னும் சில வருஷத்தில் நமது கத்தோலிக்கர் கையை விட்டு இதர மதஸ்தர் வசத்தில் போய்விடும்போல் தோன்றுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தீவிரமான முற்போக்கை இவர்கள் கஞ்சித்தும் கவனியாது இவர்களில் அநேகர் இப்போது ஒருவித டாம்பீக உடைகளுக்கும், சொகுசான தீன்களுக்கும் ஆடல் பாடல்களுக்கும் ஈடுபட்டு உடுத்துகிறதும் தின்கிறதும் ஆடுகிறதும் பாடுகிறதுமே முந்தின வேலையாய் எண்ணித் திரிகின்றனர். பற்பல நிர்நிமித்தமான காரியங்களினால் ஒருவனுக்கு ஆத்தும கேடே அநேகமா யிருக்க இப்போது மேற்சொன்ன காரணங்களினால் இனி, சரீர போஷணையையுங் கூட இவர்கள் இழந்து போவார்கள்போல் தெரிகிறது. இதுகண்ட

திவ்ய சேசுசபைக் குருப்பிரசாதிகள் இற்றைக்குச் சில மாதங்களாக அடுத்தடுத்து ஞான வொடுக்கங்கள் கொடுத்து வருவதோடுகூடக், கோவில்களில் பகிரங்கமாய் ஞானோபதேசங்களும் நடாத்தி வருகிறார்கள். ஞான வொடுக்கங்களும் ஞானோபதேசங்களும் சேசுசபைக் குருக்களுக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள தென்றாலும், இவ்வூரில் இத்தனை மும்முரமாக இவைகள் இதற்குமுன் ஒருபோதும் நடைபெறவில்லை. இன்னவற்றிற்குக் காரணகர்த்தாக்களா யிருக்கும் சேசுசபை கனம். தன ஸ்வாமிகளுக்கும் கனம். மார்ட்டின் ஸ்வாமிகளுக்கும் பரத ஜன சமூகம் மிகவும் கடப்பாடுடையதா யிருக்கின்றது.

ஒருவன் தனக்கு ஏற்பட்டிருக்கும் நல்லலுவல்மேல் பாராமுகமா யிருந்து அதுவே காரணத்தால் அவன் வேலையை இழந்துபோவதற்குப் பெரும்பாலும் அவனுடைய ஒழுங்கீனமே காரணமா யிருக்கின்றது. ஒழுங்கீனத்தை ஒழிக்க வேண்டிய ஒருவன் ஞான ஒடுக்கத்தையும் ஞானோபதேசத்தையும் அநுசரியாமல் முடியாது. ஞான ஒடுக்கமே ஞானோபதேசமே ஒருவனை ஒழுங்கீனத்திற்கு ஆஸ்பதமாகிய குடி, கூத்து, டாம்பீகம் இவைகளிலிருந்து அப்புறப்படுத்தும். தெய்வ பக்தியும் பெரியோர் வணக்கமும் வேலையைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையும் ஒருவனுக்கு வேதோபதேசத்தால் உண்டாகக்கூடியதே யொழிய மற்றப்படியல்ல.



இதை யறிந்த முதலாளிமார், குருக்கள் தியானத்திற்காகப் பறை சாற்றுவிக்கும்போது ஏற இறங்கப் பார்க்கிறார்கள். தியானத்திற்கு ஆள் சேகரிக்கும் பிரயாசிகளைக் கடிந்துகொள்ளுகிறார்கள். நாலைந்துநாள் வேலைக்காரன் தியானத்திற்குப் போய் விடுவதால், ஞாயிறு வாரந்தோறும் பூசைக்குப் போவதால், தங்கள் பிரமாத வேலை கெட்டுப்போகுமெனப் பயப்படுகிறார்கள். குடியர், கூத்தர், டாம்பீகப் பிரியர் இவர்களை வேலையில் அமர்த்திக்கொள்வதால் மாத்திரம் ஒருவனது வேலைக்குக் கெடுதி வருமேயொழிய தியானம் கேட்கின்ற, திவ்ய பூசை காண்கின்ற எவராலும் அலுவல் அனர்த்தத்திற் குள்ளாகுமென்று நினைத்தல் இலவலேசமும் பொருந்தாத காரியம்.

நகரின் மத்தியில் தவறணைகள் அபரிமிதமா யிருக்கின்றன. இதுவே காரணத்தால் அநேகர் குடிகாரராய்ப் போய் வேலைக்கு ஒழுங்கர் கிடையாமல் கேவலம் ஒழுங்கீனரை அமர்த்திக்கொள்ள நேருகிறது. அஃதால் வேலை கெட்டுப்போகிறது. ஆனால் தவறணைகள் நகர் மத்தியில் வேண்டாமென்று சொல்ல ஒரு முதலாளியையுங் காணோம். அவன் ஒழுங்கீனன். அல்லது ஒழுங்கீனத்தில் உற்பத்தியானவன். அஃதால் அவனுக்கு நிரம்பவும் அவமான மிருந்துகொண் டிருக்கிறது, இன்னும் பல குடும்பங்களிலும் இத்தகையாம் ஒழுங்கீனத்தை பலப்படுத்திவிட்டால் எல்லோரும் ஒழுங்கீனரே யென்பதில் தனக்கிருக்கும் அவமானம் நீங்கக்கூடும் என்பதாய் ஆழ யோசித்து இது நிறைவேறுவதற்குப் பெண்களையும் ஆண்களையும் நள்ளிரவில் அவர்கள் சொந்த இல்லத்தை விட்டுப் பிரித்துக் கொண்டுபோகக்கூடுமான நாடகமே சரிப்படுமென நடாத்தும் கூத்தர் கோட்டியால் வேலைக்காரர் தூக்கத்தையொறுத்துச் சோம்பிப் போகிறார்கள். இதனால் தமது வேலை முழுதும் கெட்டுப்போகிறதே யென்று முதலாளிமார் கொஞ்சங்கூட நினைக்கின்றாரில்லை. 1913-ம் வருடம் ஆகஸ்டு மாதம் துவக்கிய நாடகம் 1914-ம் வருடம் ஆகஸ்டு மாதம் வரையும் நடாத்துவதாய் இதிலும் தங்களது வேலைக்காரரில் அநேகர் கூத்தாடும்போதெல்லாம் போய்வருவார்களானால் எந்தத் தொழில்தான் அந்த வேலைக்காரரால் முன்னுக்கு வரும்? கஷ்ட வேலைக்காரன் தூக்கத்தை வெறுத்து, அதுவும் ஓர் இரவு, ஈர் இரவு அல்ல, வாரத்தில் மூன்றிரவு நாலிரவு விழித்திருப்பானானால், அவ்வேலைக்காரன் எவ்வேலைக்கு உதவுவான்? அந்தோ!

வேசிமார்க்கத்தை வீடுவீடாய் விதைத்துவிட நினைத்து ஏற்படுத்திய இக்கூத்தினால் விளைந்துவிட்ட நஷ்டம் ஒன்றா? இரண்டா? எண்ணிறந்தன. ஆம், நாடகம் மதுப்பழக்கத்தை விர்த்தி பண்ணிவிட்டது. சீமான்வீட்டுக் கைம்பெண்களையும் சீர்கெட வைத்து, மனைவியைப் புருஷனிடத்திருந்து பிரித்துப்போட்டது. பெண்களுக்கு இயற்கையி லுள்ள நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு உத்தம குணங்களையும் குடி யோடச்செய்தது. குடித்தன மக்களைத் தடித்தன காளையராக்கிப் போட்டது. இறுதியாய்க் கத்தோலிக்கர் கைவசமிருந்த துறைமுகத்தை இதர மதஸ்தர் கொள்ளை கொண்டு போகும் வரை எம்மவர் அசமந்தமா யிருக்கும்படி செய்துவிடும்போ லிருக்கிறது. இப்படி யிருக்கிறது தூத்துக்குடித் துறைமுகம்.

10. 6. 14. } M. P. Mascarenhas.

---

## பண்ணூர் கிராமத்தில் அர்ச். ஆரோக்கியமாதா திருநாள்.

செங்கல்பட்டு ஜில்லா, திருவள்ளூர் தாலுக்காவைச் சேர்ந்த பண்ணூர் கிராம மொன்றுளது. அதில் சுமார் ஆயிரத்துக்கு அதிகமாக வேதகிறிஸ்துவர்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் அர்ச். ஆரோக்கியமாதா பேரால் ஒரு பெரிய ஆலயம் சமீபகாலத்தில் கட்டி முடிவா யிருக்கிறது. அந்தக் கிராமத்தில் பிரதி வருஷமும் அப்பரம தாயாரைப் பற்றி வெகு விமரிசையாய் உற்சவம் கொண்டாடுகிற வழக்கம். வழக்கம்போலவே சென்ற வைகாசிமாசம் 10௳ சனிக்கிழமைக்குச் சரியான 1914-ம் வருஷம் மே௴ 22-ந்தேதி யை உற்சவத்தின் நவநாள் ஆரம்பிக்கப்பட்டு, அன்று சாயந்திரம் 5½-மணிக்கு அர்ச். ஆரோக்கியமாதாவின் கொடி மந்திரிக்கப்பெற்று ஆரோகணஞ் செய்யப்பட்டது. உடனே திவ்யநற்கருணை ஆசீர்வாதமுங் கொடுக்கப்பட்டது. மறுநாள் முதல் பிரதிதினமும் காலையில் திவ்ய பூசைகளும் சாயந்தரம் பிரசங்கமும், அர்ச். தேவதாயாரைக் குறித்துக் கொண்டாட்டமும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறின. பண்ணூர்

சாரணை குருசுவாமியார் ராஜரிஷி D. தோமாசநாத சுவாமியாரவர்களுக்குத் துணையாக வந்திருந்த செல்லம்பட்டடை விசாரணை சுவாமியார் ராஜரிஷி சின்னப்பநாதர் என்னும் சங். P. M. அலாஷியஸ் சுவாமியார் அவர்களால் வெகு நேர்த்தியான பிரசங்கங்கள் செய்யப்பட்டன. கிறிஸ்துவர்கள் காலைமாலை கோவிலுக்கு வந்து பிரசங்கப் பலனை அடைந்தார்கள்.

மே மீ 29,30-ம் தேதிகளில் அர்ச். அந்தோனியார் இந்தக்கிராமத்தில் வைசூரி பிரவர்த்தித்த காலத்தில் கிறிஸ்துவர்களுக்குச் செய்த சகாயத்துக்காக அவருடைய தேர் சுற்றுப்பிரகாரம் செய்யப்பட்டு காணிக்கைகள் செலுத்தப்பட்டன.

மே மீ 31உ காலை 7-மணிக்கு ஷை ராஜரிஷி சின்னப்பநாத சுவாமியாரால் பெரிய பாட்டுப்பூசை செய்யப்பட்டது. அதில் வெகு கிறிஸ்துவர்கள் சற்பிரசாதம் உட்கொண்டார்கள். பிறகு இராத்திரி 12-மணிக்கு புஷ்பங்களால் வெகு அலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட ஐந்து தேர்கள் தீவட்டி, மத்தாப்பு, பாணவேடிக்கை, அதிர்வெடி அவுட்டுகளுடன் சுற்றுப் பிரகாரமாய் ஊர்வலம் வருகையில் கிராமத்தில் அப்பாமதாயார் பிள்ளைகளால் அலங்கரிக்கப்பட்ட வேத விசித்திரப் பூப்பந்தல்களில் சுற்றுப்பிரகாரம் நிறுத்தப்பட்டு பாட்டுகளும் கீர்த்தனைகளும் பாடிவர 4-மணிக்கு சுற்றுப்பிரகாரம் திரும்பக் கோவிலையடைந்தது. இந்தத் திருவிழாவுக்குச் சுமார் 20,000 ஜனம் விஜயஞ் செய்தார்கள்.

அர்ச். ஆரோக்கியமாதா என்றென்றைக்கும் உலகமெங்கும் புகழப்படுவாளாக.

பண்ணூர். 5-6-1914. } இப்படிக்கு, B. பாப்பைய நாயுடு.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல வர்த்தமானம்.

**அந்நிய நாடுகளிலுள்ள இந்தியரின் தொகை.**—பிரிட்டிஷ் கயானாவின் ஜனத்தொகை 809,000; அதில் 125,000 பேர் இந்தியர்கள். கீழ் ஆப்பிரிக்காவின் ஜனத்தொகை 65,00,000; அதில் 18,000 பேர் இந்தியர்கள். பீஜித் தீவுகளின் ஜனத்தொகை 140,000; அதில் 80,000 பேர் இந்தியர்கள். மலாயா நாடுகள், ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில்மெண்டு ஆகிய இவ்விரண்டின் ஜனத்தொகை 1,750,000; அதில் 255,000 பேர்கள் இந்தியர்கள்.

**உலகத்தில் பிறக்கும் குழந்தைகள்**—இவ்வுலகத்தில் வருடமொன்றுக்கு சுமார் (3,60,00,000) மூன்றுகோடியே அறுபது லட்சம் குழந்தைகள் பிறக்கின்றனவாம். அதாவது நிமிஷம் ஒன்றுக்கு 70 குழந்தைகளும், செக்கண்டு ஒன்றுக்கு ஒரு குழந்தைக்குக் கொஞ்சம் அதிகமாகவும் பிறக்கின்றனவாம். ஒரு வருஷக் குழந்தைகளையெல்லாம் ஒரே வரிசையில் தொட்டில்களில் அமைத்துவைத்தால், அத்தொட்டில்கள் இப்பூமண்டலை முழுமையுஞ் சுற்றியிருக்குமாம். அதாவது அத்தொட்டில்களெல்லாஞ் சேர்ந்து 25,000 மைல் நீளமிருக்குமாம்.

**ஒரு ஸ்திரி முனிசிபல் கமிஷனர்.**—பஞ்சாபைச்சேர்ந்த டார்ஜீலிங்க் முனிசிபாலிடியில் மிஸஸ் 'ஹேம் லாலா ஸர்கார்' என்ற இந்தியமாது ஒரு கமிஷனராயிருந்து வருகிறார். அம்மாது டார்ஜீலிங்க் முனிசிபாலிடியில் ஒரு கமிஷனர் ஸ்தானம் வகிக்க ஆரம்பித்தது முதல் அந்த முனிசிபாலிடி நடத்திவரும் நடவடிக்கைகளில் ஒருவித மறுசுறுப்புக் காணப்பட்டு வருகிறதென்றும், அந்த அம்மாள் அவ்வூர் முனிசிபல் கமிஷனர்களில் ஒரு முக்கியஸ்தராயிருந்து வருகிறாரென்றும் கல்கடா பத்திரிகையொன்று கூறுகிறது. அந்த அம்மாள் பண்டித சிவநாத் சாஸ்திரி வங்காள நாட்டு சமஸ்கிருத வித்வானின் குமாரத்தியாம்.

**உலகத்தில் பெருஞ் செல்வமுடைய ஸ்திரீகள்.**—தென்னமெரிக்காவிலுள்ள 'சிஞோராகசின்' என்னும் ஸ்திரீக்குள்ள சொத்துக்கள் 40 கோடி பவுண்டு மதிப்புடையனவாம். ஜெர்மனியிலுள்ள 'ப்ரூ' என்னும் ஸ்திரீக்கு வாரமொன்றிற்கு 10,006 பவுண்டு வரும்படியுள்ள சொத்துக்கள் இருக்கின்றனவாம். வட அமெரிக்காவிலுள்ள 'மிஸ்ஹெட்டி கிரீஸ்' என்னும் ஸ்திரீக்கு 12,000,000 பவுண்டு மதிப்புள்ள ஆபரணங்கள் இருக்கின்றனவாம். மெக்சிக்கோவிலுள்ள 'மிஸ்க்ரீஸ்' என்னும் ஸ்திரீக்கு வருஷத்தில் 50,000,000 டாலர் வரும்படியுள்ள சொத்தும், 600,000 கால்நடைகளும் (குதிரை, பசு முதலியனவும்) இருக்கின்றனவாம்.



**காகிதத்தால் செய்யப்பட்ட மரம்.**—காகிதத்தினால் அநேகர் அநேகவிதமான சாமான்களைச் செய்கிறார்கள். ஆனால் மரத்துக்குப்பதிலாய்க் காகிதத்தை யுபயோகிக்கலாமென்பதை இதுவரையில் எவருங் கண்டுபிடிக்கவில்லை. மரம் எப்படிக் கெட்டியாயிருக்கிறதோ அப்படியே காகிதத்தையுஞ் செய்யலாமென்றும், பார்வைக்கு மரத்தைப்போலவே காணும்படி செய்யலாமென்றும், மரங்கள் எந்தெந்த வேலைகளுக்கு உபயோகப்படுமோ அவ்வேலைகளுக்கெல்லாம் இக்காகித மரங்களை வித்தியாசமின்றி உபயோகிக்கலாமென்றும் ஒருவர் நூதனமாயிப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார். இயற்கை மரத்தைவிட இச்செயற்கை மரம் விலையில் குறைவாயும் பலனில் அதிகமாயும் இருக்கிறதென்று அவர் சொல்லுகிறார்.

**பூகம்பம்.**—சிசிலி தேசத்திலே பெரிய பூமி நடுக்கமுண்டாகி நாலு நாடுகள் முழுதும் நாசமுற்றன. வேறு நாலு நாடுகள் பாதிக்குச்சேதமாயின. பரிசுத்த பாப்பரசர் இது செய்தியறிந்து பரிதபித்துத் துன்பப்படுவோருக்குச் சகாயமாக நானூறு பவுன் அனுப்பினார். இன்னும் உதவி புரிவதாகச் சொன்னார். எல்லாமாக மொத்தத்தில் இருபதினாயிரம் ஊர்கள் சேதமாயின. வீடுகள் இடிந்துவிழுந்து அமுங்கியிறந்தவர்கள் பெருந்தொகை யானோர். சிசிலிதேசத்துக்குள் விசேஷ செழிப்புள்ள நாட்டில் தான் இந்த பூமியதிர்ச்சி அதிக சேதஞ் செய்துவிட்டது. நாட்டு ஜனங்களிலே ஆண்பிள்ளைகள் தோட்டங்களிலே வேலைசெய்து கொண்டிருக்க, பெண்பிள்ளைகள் வீட்டுக்குப் போயிருக்கும்போது இந்தப் பூகம்பம் உண்டானபடியால், சேதமானவர்கள் அனைவரும் பெண்பிள்ளைகளே. தோட்டம் வயல்களில் வேலை செய்திருந்த ஆண்பிள்ளைகளுக்கு ஒரு சேதமுமில்லை.

**போர்க்குறி.**—துருக்கிக்கும் கிரேக்குக்கும் இடையே பழயபடி போர் எழும்பும் போல் காணப்படுகின்றது. கிரேக்கோடே போராட துருக்கிக்குவேண்டிய போர்வீரர் உண்டானாலும், துருக்கிக்குப்போதுமான போர்க்கப்பல்களில்லை. கிரேக்குக்கு தற்போது வேண்டிய போர்க்கப்பல்களிருக்கின்றன. ஆகையால் தனது குறையை நிவர்த்திக்க துருக்கியிப்போது புதியபோர் கப்பல்களை வாங்கியிருக்கின்றது. அவை தம் தேசம்வந்து சேரவும் யுத்தந்தொடங்கும் போலும். இதற்கிடையில் துர்க்கியர் பால்கன் நாட்டினின்றும் மத்திய ஆசியாவினின்றும் கிரேக்கரை நெருக்கித் துரத்துகிறார்கள். இப்படித்துரத்தப்பட்ட ஜனங்கள் தங்கள் தலை நகருக்கோடி அடைக்கலம் புகுகிறார்கள். இச்சனங்களைக்காணவும், இச்சனங்களுக்குத் துருக்கியர் செய்துள்ள அனியாய அக்கிரமங்களைக்காதாற் கேட்கவும், கிரேக்கருக்கு உண்டாயிருக்கும் கோபமும் ஆத்திரமுங் கொஞ்சமல்ல. எப்படியுங் கூடிய சீக்கிரத்தில் இருதாரத்தாருக்கும் யுத்தம் மூண்டுகொள்ளும் போலிருக்கிறது.

**ஒடென்பாச் என்ற சேசுசபைக் குருவானவர்.**—அமெரிக்கா தேசத்தைச்சார்ந்த ஐக்கிய மாகாணத்திலுள்ள கிளிவ்லன்டு பட்டணத்தில் அர்ச். இஞ்ஞாசியார் சர்வகலாசாலையில் ஒடென்பாச் என்ற சேசுசபை சுவாமியார் தத்துவ சாஸ்திரத்தைக் கற்றுக் கொடுக்கும் போதகாசிரியர். இவர் தெரிவிக்கிறதென்னவெனில்: "ஒருவன் பைசிகளில் எவ்வண்ணம் ஒரு பக்கமுஞ் சாயாமல் நின்று எவ்வளவு சுலபமாய்ச் சவாரி செய்வானோ, அதுபோல் தண்ணீர் மேலும் அவ்வளவு லேசாய் ஒருவன் நடக்கக்கூடு" மென்கிறார். இந்தச் சாஸ்திரமானது பதினெட்டாம் நூற்றாண்டுக்குப்பின் மறைந்து கிடந்ததென்றும், தாம் அதைத் திரும்பவும் புதிதாய்க் கண்டுபிடித்தோமென்றுங் கூறுகிறார். அந்த சாஸ்திரமென்னவெனில் மனிதன் சரீரமானது தண்ணீரைவிட பதினொருபங்கி லொருபங்கு லேசாயிருப்பதால் அதைத்தண்ணீரில் அமுங்காமல் மிதக்கச் செய்யலாமென்பதே. அவர் பலபேர்கூடின சபையில் தண்ணீர் மேல் நடக்கலாமென்று தெரிவித்தபடியே தம்முடைய தலையையும் கைகளையும் உடலையும் அக்கம்பக்கஞ் சாயாமல் மையமாய் வைத்து ஒரு வேகமான வாய்க்காலின் மேல் தாமே நடந்து காட்டினார்.

**பரித்தியாகம்.**—கொளும்பைச் சேர்ந்த பகுதியில் குஷ்டரோகிகளுக்கென்று கெலனியாற்றங் கரையில் பெரியதோர் ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கின்றது. அதில் குஷ்டரோகிகள் 400 பேருக்குமேல் கவர்ண்மெண்டாலும் பரோபகாரரான பிரபுக்களாலும் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களான டாக்ட்டர்களால் அந்த ஆஸ்பத்திரியில் தங்களுக்கு மனதிருத்தியாய் வேலை நடக்கவில்லை யென்று பார்த்த ஜனங்கள் "யாட்பாண சத்திய கத்தோலிக் பாதுகாவலனில்" தெரிவித்திருப்பதுபோல் வெவ்வேறே ஆஸ்பத்திரிகளில் சென்ற 30 வருடங்களாக நோவாளிகளைப் பராமரித்து வருகிற கன்னியாஸ்திரீகளின் அலுவல்களை நன்குணர்ந்தவர்களாய் அவ்விடத்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் நோவாளிகளை விசாரித்துவரும் அர்ச். பிராஞ்சீஸ்கு சபை கன்னியாஸ்திரீகளை இந்த குஷ்டரோகிகளின் ஆஸ்பத்திரி விசாரணையை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கன்னியரும் அந்த மேலான பிறசினேகவிசாரணையை மிகவாஞ்சையோடு கையேற்று தக்க பரீட்சை கொடுத்த பத்துப் பேர் கொளும்புக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய இல்லிடம் சாமான்கள் முதலியவை சித்தமானதின் பேரில் தங்கள் அலுவல்களைத் தொடங்குவார்கள். தங்கள் ஆயுசு முழுமையும் குஷ்டரோகிகளோடு வசிக்கவும், அவர்களுடைய சகிக்கமுடியாத நாற்றமுள்ள புண்களைத் தங்கள் கரங்களால் கழுவவும், சகல வுலக மனிதரின் சம்பாஷணைகளை முற்றுமே நீக்கி தாங்கள் தெரிந்துகொண்ட கூட்டாளிகளான குஷ்டரோகிகளோடு சீவித்துவரவும் இவர்களை உடன்படுத்திய தேவ சினேகம் எப்பேர்க்கொத்த தென்னலாம்! இதுவல்லோ மெய்யான பரித்தியாகம்! இதுவல்லோ உண்மையான பிறசினேகம்!

**நமது சென்னை அதிமேற்றிராணியார்.**—உரோமைக்குப் புறப்பட்டுப்போன மகா கனந்தங்கிய சென்னை அதிமேற்றிராணியாராகிய ஆலன் ஆண்டவர் அவர்களும், அதி சங். மெர்க்கஸ் சுவாமிகளும் சென்ற மேமீ 10உயாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று, நமது பரிசுத்த பிதாவாகிய பத்தாம் பத்திநாதருடைய பேட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். பரிசுத்தபிதா இவர்கள் இருவரையும் அன்பாய் வரவேற்று, பாத முத்தி செய்யப்போன அவர்களைத் தடுத்துப் பட்சத்துடன் அவர்களைத் தமது பக்கத்தாசனத்திருத்தி க்ஷேமம் விசாரித்தார். சென்னை யதிமேற்றிராசனத்தைப் பற்றிய விருத்தாந்தங்களைக் கேள்வியுற்று நிரம்பவும் திருப்தியடைந்தார். இந்த அதிமேற்றிராசன விசாரணைக்குள் ளடங்கிய பல கோவில்கள், பள்ளிக்கூடங்கள், மடங்கள் முதலிய இடங்களின் பொட்டோகிராப் படங்கள் பல அடங்கிய ஓர் படப் புஸ்தகத்தையும், அரிய சித்திர வேலைகளமைந்த அழகிய சிறு சந்தன மரப்பெட்டகத் துள் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த கத்தோலிக்கு இந்தியர் சங்கத்து வந்தனோபசார பத்திரத்தையும் கொடுக்க, அவைகளை அவர் அதியாசை ஆவலுடன் ஏற்றுக்கொண்டு, அவைகளை அந்த விஜயத்தின் ஞாபகச் சின்னமாக பதனமாய் காப்பாற்றுவதாகச் சொல்லி, சென்னை அதிமேற்றிராசனத்தைச் சார்ந்த குருக்களையும், கிறிஸ்துவர்களையும், பள்ளிக்கூடங்கள் மடங்கள் முதலியபொது நலஸ்தாபனங்களையும் ஆசீர்வதித்தார். கையெழுத்துப் போடும்படி அவரிடம் காண்பித்த சில தஸ்தாவேசுகளை கையொப்பமிட்டவுடன், அவைகளை சுருட்டிவைக்கப்போன மெர்க்கஸ் சுவாமிகளை மறுத்து அவைகளையெல்லாம் தம் கையாலேயே சுருட்டிக் கொடுத்தார். கோரிய காரியமெல்லாம் முடித்துக்கொண்டு பரிசுத்த பிதாவினிடம் முழுங்காலிலிருந்து விடைகேட்டபோது, அவர் கடைசியாய் திருவாய் மலர்ந்தருளினது பின்வருமாறு:—"என் பிரிய மக்களே! நீங்கள் இதுவரையில் செய்துகொண்டுவந்த நல்ல வேலையைத் தொடர்ந்து நடத்துங்கள். சர்வேசுரனுடைய ஆசீர்வாதம் உங்கள் பேரிலும், சென்னை யதிமேற்றிராசனத்தைச் சார்ந்த கிறிஸ்துவர்கள், குருப்பிரசாதிகள், சந்நியாசிகள் கந்நியாஸ்திரிகள் பேரிலும் வரக்கடவது. எல்லாம் ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாயிருக்கும்படி சர்வேசுரனுடைய நேசத்தையும் அவரது இராச்சியத்தையும் அஞ்ஞானிகள் அறியும்படிச் செய்யுங்கள். பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே ஆமென் சேசு" என ஆசீர்வதித்தார்.



**செவ்வாய்க்கிழமையானது அர்ச் அந்தோனியாருக்கென்று ஏற்பட்டதன் காரணமென்ன?**—1231ஸ்ரீ ஜூன்மீ 17உ செவ்வாய்க்கிழமை யன்று அர்ச். அந்தோனியாருடைய திருச் சடலமானது புதைபட்டிருந்த இடத்திலிருந்தெடுத்து வேறிடத்துக்கு வெகு ஆடம்பரத்தோடு எழுந்தேற்றமாய்க் கொண்டுபோகப்பட்டது. அன்றையத்தினம் பதுவா பட்டணமானது வெகு சிறப்பலங்காரமாய் விளங்கியது. எழுந்தேற்றச் சுற்றுப்பிரகாரத்தின்போது மேற்றிராணிமார்களுங் குருக்களும் அந்தப் பட்டணத்திலுஞ் சுற்றுப்பக்கங்களிலுமுள்ள சகல சந்நியாசிமார்களும் வரிசை வரிசையாய் முன்னே நடக்க, அவர்களுக்குப்பின் கவர்னரும், பிரபுக்களான வங்கிஷபதிகளும், தேச அதிகாரிகளும், கடைசியாய் ஜனங்களுடைய பிரதிநிதிகளும் பின்தொடர்ந்து போனார்கள். அந்தப் பட்டணத்தின் முக்கிய பிரபுக்களான பெரியவர்கள் அந்த அர்ச்சிய சிஷ்டவருடைய பிரேதத்தைத் தங்கள் தோளின்பேரில் சுமந்துபோவது தங்களுக்குமேலான கண்ணியமாக மதித்து வெகு மரியாதையோடு அதையெடுத்துச் சென்றார்கள். அவர்களுக்கு முன்னணியில் ஆணும் பெண்ணுமான எண்ணிக்கையிலடங்காத கிறீஸ்துவர்கள் எரிகிற மெழுகுவர்த்திகளைத் தங்கள் கரங்களில் பிடித்துச் சென்றார்கள். தெருக்களெல்லாம் தேவசங்கீதங்களின் ஆர்ப்பரிப்பினால் நிறைந்திருந்தன. இவ்வித சிறப்பலங்காரங்களோடு. இரத்தின கம்பளங்களும் புஷ்பங்களும் விரிக்கப்பட்டிருந்த வீதிகளின் வழியாய் நடந்துபோய் அர்ச். மரியம்மாளின் ஆலயத்திற் சேர்ந்து அவ்விடத்தில் அந்த அர்ச்சிஷ்டவரை அடக்கஞ் செய்தார்கள். அத்தினத்தில் தமது ஊழியனுடைய புண்ணிய பேறுகளையும் மகத்துவத்தையும் மறுக்கப்படாத எண்ணிறந்த அற்புதங்களைக்கொண்டு ஆண்டவர் பிரகாசிக்கச்செய்தார். அதெப்படியென்றால் அந்தத் திருப் பெட்டகத்தைத் தொடப் பாக்கியம்பெற்ற அத்தனை நோயாளிகளும் உடனே பூரண சுகம் அடைந்தார்கள். ஜன நெருக்கத்தால் தொடக்கூடாதிருந்தவர்கள்முதலாய் அத்திருப் பெட்டியைக் கண்ணால் தரிசித்த க்ஷணமே அல்லது அவருடைய நாமதேயத்தை உச்சரித்தவுடனே சுகமடைந்தார்கள். அவர்கள் அத்திருப் பிரேதத்தைச் சுமந்து நடந்துபோக காலடி எடுத்துவைத்த ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வொரு அற்புதம் நடந்துகொண்டேபோனது. இதைக்கொண்டு அர்ச்சிய சிஷ்டவர்களுக் குள்ளே இவரெவ்வளவு மேன்மை யடைந்திருக்கிறாரென்று உலகத்துக்குத் தெரிவிக்கும் பொருட்டே சர்வேசுரன் அத்தனை அற்புதங்களை இவரைக்கொண்டு செய்ய கருணை கொண்டாரென்று தெரிகிறது. இத்தனை அற்புதங்கள் நடந்தேறிய அந்தச் செவ்வாய்க்கிழமையானது கிறிஸ்துவ விசுவாசிகளுடைய ஞாபகத்தினின்று ஒருக்காலும் நீங்கினதல்ல. அதினிமித்தமே செவ்வாய்க் கிழமையை அர்ச். அந்தோனியாருக்கென்று நியமித்து விசேஷ ஜெபதவம் தானதரும முதலான நற்கிருத்தியங்களை அத்தினத்தில் செய்து வருகிறார்கள்.

**உயிருடன் புதைத்தல்.**—நெல்லூர் ஜில்லாவைச் சார்ந்த வெங்கடகிரியில் இரண்டு மூன்று தினங்களின் முன் ஓரிரவில் ஒரு உபதேசியார் படுத்த படுக்கையிலிருந்தபடியே தனக்கு உதவி புரியும்படியாக பக்கத்திலிருந்தவர்களை வெகு அவசரமாய் அழைத்தார். அவர்கள் விளக்கைக் கொளுத்திவந்துபார்த்ததில் ஏதோ விஷந்தீண்டிவிட்டதாகத் தீர்மானித்து அதைத் தேடிப்பார்த்ததில், ஒரு நல்ல சர்ப்பம் அவருடையதலைமாட்டிலிருந்தது. அதையுடனே கொன்றுவிட்டு, கடித்தவாயில் தக்க மருந்தைப் போட்டார்கள். அப்படியானாலும் அவருக்கு மயக்கம்போட்டு அப்போதே செத்துப்போவார் போலிருந்ததால் நெல்லூரிலிருந்த உபதேசியாரை உடனே அவரண்டை அழைத்துவந்தார்கள். அவர் வந்து பார்த்தபோது கடிபட்டவர் மூர்ச்சையாய்க் கிடந்ததால் அவர் இறந்துபோனாரென்று தீர்மானித்து, தக்க சம்பிரமமாய் அவரை அடக்கஞ்செய்வதற்கு வேண்டிய முஸ்திப்புகளை யெல்லாஞ் செய்தார்கள். கல்லறை வெட்டியானதுமல்லாமல் மெழுகுவர்த்திகள் கொளுத்திவைத்து அடக்கத்

தின் போது ஜெபிக்கிற சங்கீதமும்பாடி முடிந்தது. பிரேதத்தைக் குழியில் வைக்கப்போகிற சமயத்தில் மூர்ச்சையாய்க் கிடந்தவருக்குச் சற்று பிரக்கினையுண்டாகிச் சூழ நின்றவர்களைப் பார்த்து அவர்களெல்லோரும் வந்து கூடியிருப்பதற்கும் மெழுகுவர்த்திகள் எரிகிறதற்குங் காரணமென்னவென்று வினவினர். இவருக்கு மூர்ச்சை தெளிய இன்னம் இரண்டொரு நாழிகை சென்றிருந்தால் அன்றைக்கே அவர்பாடுமுடிந்து போயிருக்கும். கூடின அத்தனைபேரும் பரமார்த்த குருவின் சீஷரே. அடக்கத்துக்கு அத்தனை அவசரமென்னத்திற்கு? செத்த பிரேதம் வீட்டிலிருக்கும் வரையில் ஒருத்தரும் சாப்பிடப்படாது, பானம்பண்ணப்படாது. இதற்காகவே கூடிய சீக்கிரத்தில் பிரேதத்தை வெளியேற்றப் பார்க்கிறார்கள். விஷந்தீண்டினவர்களை அறுபது நாழிகை வைத்துப் பார்க்கவேணு மென்று வைத்திய சாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன.

அப்படியே தேரையர்:—

காயங்கார மரிதாரம், கடிய இரதம் இந்துப்பு,
பேயின் பீர்க்குச்சாறு விட்டு, பிடித்து அரைத்து வுண்டைசெய்து
மாயமான விஷந்தீண்டி மடிந்தார் தங்கள் கண்ணிலிட
வேகும் பிணமும் எழுந்திருக்கும்; விறகிட்டெரிக்க வேண்டாமே.

என்று சொல்லியிருக்கிறார்.

## நோட்டீஸ்.

### மரியாயின் சங்கம்.

இந்தியா, பர்மா, இலங்கை.—1914-ஸ்ரீ டிசம்பர் 28, 29, 30உ களில் மரியாயின் சங்கம் திருச்சினாப்பள்ளியில் கூடப்போகிறபடியால், சமஸ்தமான கத்தோலிக்கு விசுவாசிகளுக்கும் விசேஷமாய் காலேஜுகளை, கன்னிகாமடங்களை, கல்விச்சாலைகளை வைத்து நடத்துகிறவர்களுக்கும் கத்தோலிக்குப் புத்தகசாலைகளை வைத்திருப்பவர்கள், அல்லது வேத புத்தகங்களை அச்சிட்டுப் பிரசுரிப்பவர்களுக்கும், சுரூப வேலை செய்பவர்கள், கோவில் உடுபாவனைகள் அல்லது கோவிலுக்குபயோகமான பாத்திரங்களைச் செய்பவர்களுக்கும், இச்சங்க விஷயத்தில் பாசாயிருக்கிற 9-ம் நிபந்தனையை ஞாபகப்படுத்த வேண்டி இந்த நோட்டீசை விடுக்கிறோம்.

9-ம் நிபந்தனை அர்ச். கன்னிமரியாயின் மகத்துவத்தை விளக்கும்படியான வேலைத்தரமான சுரூபங்கள் சித்திரங்கள், புகைப்படங்கள், புத்தகங்கள், கவிகள் அல்லது சங்கீதங்கள் முதலியன சங்கத்தின்போது தங்கள் சொந்தச் செலவில் கொண்டு வந்து காட்சிக்கு, வைக்கலாம், விற்கலாம் என்பதே.

ஆகையால் தங்கள் தங்கள் சாமான்களைக்கொண்டு வந்து காட்சிக்குவைக்கப் பிரியமுள்ளவர்கள் முன்னுடியே நாளொன்றுக்கு ஒரு ரூபாயாக பணங்கட்டி கேட்டுக்கொள்ளுபவர்களுக்கு இடம் சவுதரித்துக் கொடுக்கப்படும்.

இவ்விஷயமான மனுக்களெல்லாம் நாளது வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள்ளாக செக்ரடெரி அவர்களுக்குச் செய்து கொள்ள வேண்டியது.

*Secretaries:*—

(Signed) Rev. H. Sauthier, S.J.,
St. Josph's College Teppakulam, Trichy.
A. Jeganatham,
St. J. I. S. Cant., Trichinopoly.

---

✠

## திருவிழா விளம்பரம்

இதனால் சகலமான கிறீஸ்துவர்களுக்கும் அறிவிப்பதென்னவெனில்:—

திருச்சினாப்பள்ளிக்கு கிழக்கே திருவரம்பூர் ஸ்டேஷனுக்கு மூன்று மைலில் தூரத்திலுள்ள அய்யம்பட்டி கிராமத்தில், மனந்திரும்பும் பாவிகளுக்கு பாதுகாவலும், உத்தம மனஸ்தாபத்தின் வழிகாட்டியுமாகிய அர்ச் மதலேமரியம்மாள் பேரால் கட்டப்பட்டிருக்கும் தேவாலயத்தில் இந்த வருஷம் மிக்க சிறப்போடு திருநாள் கொண்டாடப்படும்.

ஜூலை-மீ 13-ம் தேதிக்குச் சரியான தமிழ் ஆனி-மீ 30-தேதி திங்கட்கிழமை கொடியேற்றம்.

ஜூலை-மீ 21-ம்தேதியாகிய ஆனந்த-ஸ்ரீ ஆடி மீ 6-ம்தேதி செவ்வாய்க்கிழமை சாயந்திரம் வெஸ்பர்ஸூம் திவ்யநற்கருணை ஆசீர்வாதமும், அதற்குப்பின் மிக்க ஆடம்பர சிறப்போடு தேர் சுற்றுப்பிரகாரமும் நடத்தப்படும்.



ஜூலை-மீ 22-ம்உ புதன் கிழமை காலை தேர் எழுந்தருளப்படியும் பின் பாட்டுப் பூசையும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடக்கும்.

அர்ச். மதலேமரியம்மாள் பேரால் நடைபெறும் இத்திருநாளுக்கு சகல கிறீஸ்துவர்களும் வந்திருந்து மேற்படி திருநாளைச் சிறப்பிக்கும்படியாக ஆசிக்கிறோம்.

பங்கு விசாரணை
அந்தோனியார் சுவாமி.
30—6—1914) A. Fernando.

---

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

ஸர்வ ஸாக்ஷாத் ஜெகதீஸனின் திருவருளால், பெரியதாழை பரதகுலத்தாராம் ஸ்ரீமத் ஜெ. எ. லேன் அவர்கள் மனைவி ஸ்ரீமதி மேரி லூர்தம்மாள் பெற்றுத்து, சென்ற "மே" எனப் பேர் வாய்ந்த தாய்மாதம் 20உயாகிய புதவாரம் காலை 8-மணிக்கு ஓர் ஆண் மகவைப் பயின்றனள். குழந்தைக்கு "ஜோஸெப் ஸெலஸ்தின்" என்ற நன்னாமஞ் சூட்டி தேவதாயின் மாதக் கடைசித்தினமன்று ஞானதீக்ஷை கொடுக்கப்பட்டது. தாயும் சேயும் சுகமேயிருக்கின்றனர்.

"தேவதாய்க்கு ஸதா ஸ்துதி யுண்டாக"

### ஜனனம்.

எனது மதனியாரும், நல்ல ஆயனின் கையொப்பகாரருக்குள் ஒருவருமாகிய எனது தமயனார் Mr. M. V. Doraswamy என்பவரின் பிரிய துணைவியுமாகிய அன்னம்மாள் திருஇருதய சேசுவின் அனைக்கடந்த ஆசிராலும் அமலோற்பவ அர்ச். லூர்து நாயகியின் பேருதவியின் பலனாலும் 1914-ஸ்ரீ மேமீ 11உ திங்கட்கிழமை காலை நாலரை மணி வேளையில் தனது முதற்பேறாக ஓர் ஆண் மகவை யாதொரு அபாயமின்றி யீன்றனள். இன்னும் 13-5-14 புதன்கிழமையன்று மைசூர் அர்ச். சூசையப்பர் ஆலயத்தின் கண் விசாரணைக்குரு Revd. J. A. Pinto தேசிகரால் அக்குழந்தைக்கு லூர்துநாதன் என்னும் நாமகரணம் சூட்டப்பட்டது. தென்குடகு Polli betta-வைச்சேர்ந்த Hope தோட்டத்தின் கண் Mr. R. Joseph Writer அவர்கள் ஞானத் தந்தையாகவும் மேற்படியாரின் மனைவி மரியம்மாள் ஞானத் தாயாராகவும் வகிக்கப்பட்டார்கள். தாயும் சேயும் சுகம்.

இங்ஙனம்,
பிள்ளையின் சிறிய தகப்பன்,
M. V. Arockiaswamy Pillai,
O. S. No, II, B. Land &
Polli betta.

---

### "நல்லாயன்" அச்சுயந்திர ஆபீசுக்காக நன்கொடை.

---

"நல்லாயன்" அச்சுயந்திரசாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற ஜூன்மாதத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டுவரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்கு கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி, நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 261 | 3 | 0 |
| தேவனும்பேட்டை, Mr. Y. M. ஜான்பிள்ளை வழியாக | 4 | 9 | 0 |
| ஓர் நண்பர். | 2 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 267 | 12 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனு

கூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 2233-1-6 ஆயினும், தப்பாமல் அநுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். எனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந்தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்கு பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

| | |
|---|---|
| புதுப் பேட்டை, சென்னை. | உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில் |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 2.233 | 1 | 6 |
| Mr. A. C. அப்பாசாமி, (சிக்மக்ளூர்) | 1 | 0 | 0 |
| ,, T. S. மதலைமுத்து, (குவாலாலம்பூர்) | 1 | 14 | 0 |
| ,, D. மரியஜுசை, (குவாலாலம்பூர்) | 1 | 14 | 0 |
| ஓர் நன்கொடை, | 6 | 0 | 0 |
| ,, அநந்தநாதபிள்ளை, | 1 | 0 | 0 |
| ,, பெரியநாயகம்பிள்ளை, (புத்தம்பட்டி) | 2 | 0 | 0 |
| ,, X. P. Cruz, (குவாலாலம்பூர்) | 1 | 0 | 0 |
| ,, A. Savial, Multan, | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 2,248 | 5 | 6 |

## எடப்பாடி,
## அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே,

சென்ற வருஷம் உதாரகுணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும், எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மமென்று அறிக்கையிட்டுச் செய்து கொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவியாகவந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்கும் பங்காளிகளான நேயர்களுக்கு அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1913-ஆம் எப்ரல் மாதமுதல் 1914-ஆம் மார்ச்சுமாதம் 31உ வரையில் நேயர்களிடமிருந்து வரவேற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடை ரூபாய் 600-0-0. சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்கள் கட்டவும், விசாரணைக்குரு வசிக்கும் பங்களாவை மராமத்து செய்யவும், கோவில் கட்டிட விர்த்திக்காக தண்டவாள தூலங்கள் வாங்கவும் செலவான தொகை ரூபாய் 2017-11-6. தற்காலம் எமக்குக் கடனுயிருப்பது ரூபாய் 460-0-0.

நண்பர்களே, தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி, சத்திரங்கள் ஏறத்தாழ முடிவாய்விட்டன. ஆகிலும், பழைய சத்திரத்தை மராமத்து செய்யவும், கோவில் வேலைகளை முடிவிற்குக் கொண்டுவரவும் குறைந்தது நாமிட்ட மதிப்பிற்குமேல் இரண்டுபங்கு அதிகமாகிறபடியால், அதைரியத்திற்கு இடமாயினும், புதுமையுள்ள அர்ச். செல்வநாயகி அம்மாளையே நம்பி விடாமுயற்சியுடனும் அதிக ஊக்கத்துடனும் வேலைசெய்து வருகிறோம். தர்ம சிந்தையுள்ள அவளது ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள் பேரில் பூரணமாய்ப் பொழிய கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதினவேண்டுகோள்.

இப்படிக்கு,
எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனுகிய விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக எற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 674 | 12 | 0 |
| Mr. A. சாமிக்கண்ணு பிள்ளை, S. A. S. கனிகிரி. | 3 | 0 | 0 |
| ,, ஆரோக்கியசாமி செட்டியார், செவ்வாப்பேட்டை. | 10 | 0 | 0 |
| ,, சவரியப்பன், எடப்பாடி | 5 | 0 | 0 |
| ,, A. Savial, Multan. | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 693 | 4 | 0 |



The Good Pastor

# நல்ல ஆயன்

REGISTERED 7-AUG 1914 MADRAS.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } ஆகஸ்டு 1914. { இலக்கம். 8.

## DIAMOND JUBILEE.
## வைர ஜுபிலி.

(முன் தொடர்ச்சி.)

### அமலோற்பவ கன்னித் தாயார்.

அர்ச். கன்னியாகிய தேவதாயாரை முட்களின் நடுவில் முளைத் தெழுந்த லீலி புஷ்பச் செடிக்கு வேதத்தில் ஒப்பிட்டிருக்கிறது. லீலி புஷ்பத்தை அர்ச். கன்னித்தாயாருக்கு ஒப்பனை யிடுவானேன்? அந்தச் சிறந்த புஷ்பச் செடி கண்களுக்கு வெகு அலங்கார லக்ஷண முள்ளதாய்த் துலங்குவ துடன், அதன் மணம் சகல பூமலர்களிலும் சிறந்தது. இவ்வரிய பூண்டு சகல முட்செடிகளுக்குள் முளைத்ததே ஆயினும், அதன் லக்ஷண வடிவும் சுகந்த பரிமளமும் சற்றுங் குன்று திருப்பதுடன் அதனுடைய சுகந்த நறுமணம் நாலா திக்கிலும் வீசிப் பரவும்.

அவ்வாறே அமலோற்பவ கன்னித் தாயும் ஜன்ம தோஷத்தால் கறைப் பட்ட மனுக்குலத்தி லுதித்து அவர்களுடன் சஞ்சரித்திருந்தும், இப்பரம ஆண்டவளுக்குச் சர்வேசுரன் அளித்திருந்த விசேஷ தேவ இஷ்டப்பிரசாதங் குறைவுபடாமல் இருந்ததுமன்றி, மேலான புண்ணியமும் பேறுபலனும் நாளுக்குநாள் அவளிடம் அதிகரித்து சுகந்த பரிமளத்துடன் பிரகாசித்துத் துலங்கினது.

மனுக்குலத்தாராகிய நாம் எல்லோரும் ஜென்மதோஷத்தில் உற்பவித்ததைப் பற்றியும், பலமுறை சாவான பாவத்தால் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்துக்கொண்டதைப்பற்றியும், கசப்பும் விஷமுமுள்ள பூவைக் கொடுக்கும் முட் செடிகளா யிருக்கிறோமென்பது நிச்சயம். ஆனதினால், நாம் மேலானதும் சிறந்ததும் பரமானந்தமுமாகிய மோக்ஷ லீலி புஷ்பமென்னும் அர்ச். கன்னித்தாயாரின் அலங்கார சோபனமும் சுகந்த பரிமளமும் நமது பேரில் வீசும்படிக்கும், நம்மிலுள்ள பாவக் கசப்பையும் விஷத்தையும் போக்கிச் சர்வேசுரனுக்குப் பிரியமான லீலி மலராகும்படிக்கும் ஆன வழிப்பாடுகளைத் தேடுவோமாக.

இப்பரம இராக்கினியின் சரணமடைந்த அர்ச்சியசிஷ்டவர்களை நாமுங் கண்டு

பாவித்து, இவ்வாண்டவளை இவ்வாறு வாழ்த்திப் புகழ்ந்து தொழுது தோத்திரிப்போமாக:—களங்கமு மாசுமற்ற லீலிய புஷ்பமே வாழ்க, மனிதனாகிய கடவுளைச் சுமந்த வுதரமே வாழ்க, கன்னி மலர்க்கொடா கனியைத் தந்த வுதரமே வாழ்க, எங்கண் மகிழ அரூபியானவரை உருவாக்கினவளே வாழ்க, எம்மை இரட்சிக்கச் சிந்தின குருதியைத் தந்தவளேவாழ்க, வானுலகழகே வாழ்க, பூவுல குயிரேவாழ்க, வேதம் விளக்குஞ் சுடரே வாழ்க, உயிரைப் புரக்கும் அருட்கடலே வாழ்க, நோய்தீர் அமிழ்தே, மருடீரொளியே, கதிர்கரையே, புவி துணையே, கருணாகரியே, தாயே, அருளே, அமுதே வாழ்க, எங்கும் புகழப்படுந் தாயே வாழ்க, எங்குஞ்சரியாய்ப் புகழக்கூடாத தாயே வாழ்க, பரமதேவதாயே வாழ்க, பரலோக இராஜேஸ்வரியே வாழ்க, வாழ்க. தேவரீரை யிவ்வளவு உன்னத அந்தஸ்துக்கு உயர்த்தின கற்பு, தாழ்ச்சி, கீழ்ப்படிதலாகிய சிறந்த புண்ணியங்களில் தேவரீரை நாங்கள் கண்டு பாவிக்கவும், லீலியபுஷ்பத்துக்கொப்பான புண்ணிய மணம் எங்களிடத்தில் வீசவும் கருணை கூர்ந்தருளும் ஆண்டவளே என்று சதா மன்றாடுவோமாக.

## அமலோற்பவி சம்மனசுக்களின் இராக்கினி.

சர்வேசுரன் பரலோகத்திலே ஆதிகாலத்தில் சம்மனசுக்களை உண்டாக்கிச் செல்வம் பொழியும் ஓர் ஸ்தலத்தில் ஸ்தாபித்து வைத்தபோது, எல்லா பாக்கியங்களிலும் மேலான பாக்கியமாகிற தெய்வ தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தவரல்ல. இப் பாக்கியத்தை அடைய அவர்களுக்குச் சர்வேசுரன் ஓர் காட்சியைத் தந்தருளினாரென்று வேதபாரகர்களில் சிலர் எழுதிவைத்திருக்கிறார்கள். அதென்னவெனில்: பூமண்டலத்திலே மனுக்குலமும், மனுக்குலத்தில் உதித்த ஒரு ஸ்திரீயும், அந்த ஸ்திரீயானவள் ஓர் சிறு பாலகனை மார்போடு தழுவிக் கட்டி அரவணைத்துக் கொண்ட பாவனையாகத் தோன்றச்செய்து தமது திருவாய்மலர்ந்தருளியதாவது: "நீங்கள் காணும் இந்தப் பெண்ணரசி அர்ச். கன்னிமரியம்மாள்; அவள் தன் கையிலேந்திய பாலகன் இனிமேல் அவளிடத்தில் அமலமாய் உற்பவித்துச் சிலுவையில் அவலமாக மரித்து மனுக்குலத்தோரை அற்புதமாக இரட்சிக்கவிருக்கும் சுதனாகிய சர்வேசுரனேயாம். இவரை நீங்கள் சாஷ்டாங்க தண்டனிட்டு ஆராதிப்பீர்களாக என்க, சம்மனசுக்கள் அனைவரும் குப்புற விழுந்து சேசுநாதரைத் தொழப்போகிறவேளையில், கணக்கற்ற சூரியர் நடுவில் ஒருவித சூரியன் பிரகாசித்தால் எப்படியோ அப்படியே அதிக காந்தி பிரதாபத்தோடு துலங்குபவனும் தலைமையானவனுமான லூசிப்பேர் என்னும் வானோன் எழுந்து முன்னின்று, தனது தோழர்களைப்பார்த்து "கேளீர் சகோதரர்களே! மனுஷ ரென்னும் ஈன ஜாதியில் தெய்வம் பிறக்கிறதும், இருக்கிறதும், இறக்கிறதும், பரிச்சேதந் தகாது. சுதனாகிய சர்வேசுரன் அப்படிச் செய்வாரானால் நான் அவரை ஆராதிக்கவும், அவரைப் பெற்றெடுப்பவளை வணங்கவுமாட்டேன்; உங்களுடைய கருத்தென்ன? சொல்லுங்கள்" என்று கேட்க, வானோர் கணங்களில் மூன்றிலொரு பாலார் லூசிப்பேருடைய பேச்சினாலே புத்தி மயங்கி, ஆங்காரத்தினால் அறிவழிந்து, "இதுவே சரி" யென்று பேரிரைச்சலிட்டு அவனோடு சேர்ந்துகொண்டு குழப்பஞ் செய்தார்கள்.

அத்தறுவாயில் அமல மனதுடைய மிக்கேலென்னும் அதிதூதனானவர் அந்தத் துரோகிகளை எதிர்த்தெழுந்து மகா காம்பீரத்தோடு, "சர்வேசுரனுக்கு நிகரானவர் யார்?" என்று கர்ச்சித்துக் கூறி, மற்றுமுள்ள நல்ல சம்மனசுக்களை அணிவகுத்துச் சேசுநாதரையும் தேவ தாயாரையும் பற்றிச் சமர் தொடுத்தார். அப்போர்க்கொத்த யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் நீதிபரரான தேவன் லூசிப்பேரையும் அவன் துணைவரான சமஸ்த துரோகிகளையும் அக்கணமே அக்கினிச் சமுத்திரமாய் கொந்தளித் தெரியும் நரகத்தில் விழத் தாட்டி, ஊழியுள்ளகாலமும் அளவில்லா வேதனை அவர்கள் அனுபவித்துவரக் கட்டளையிட்டு, தமக்குப் பிரமாணிக்கமாய் நின்று சமர்புரிந்து புண்ணியபேறடைந்த சம்மனசுக்களுக்குச் சம்பாவனையாக நித்திய தேவ தரிசனையை அளித்து வெகுமானித்தார்.



அக்காலத்திலிருந்து நல்ல சம்மனசுக்கள் மிகுந்த அபேக்ஷ ஆவலோடு அமலோற்பவியின் வருகைக்கு எதிர் பார்த்திருந்து, அவள் பிறந்தபோது சந்தோஷானந்தத்தாற் பூரித்து, அகமகிழ்ந்து, அவள் கிடத்தப்பட்டிருந்த தொட்டிலைச் சூழ்ந்து, தங்கள் இராக்கினியாக அக்குழந்தையைப் போற்றித் துதித்து வாழ்த்தி நமஸ்கரித்தார்கள். அர்ச். கன்னிமரியாயிக்கு மங்களஞ் சொல்லவந்த அதிதூதரான கபிரியேல் சம்மனசானவர் முதலாய் அத்தேவதாயாருடைய மாக்ஷிமை பொருந்திய நாமகரணத்தைத் தமது நாவால் உச்சரிக்கப் பயந்தவராய்ப் "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே" எனப் புகழ்ந்து தோத்திரிக்கலானார். கடைசியாக அமலோற்பவ இராக்கினியான அப்பரமதாயார் மரணமடைந்த மூன்றும் நாளில் ஆத்துமசரீரத்தோடு எழுந்தருளினபோது வானோரான நவவிலாச சம்மனசுக்களும் அவ் வாண்டவளுக்குச் சேவகஞ் செய்து மோக்ஷத்துக்குக் கூட்டிப்போனார்களென்று அறிவோமாக.

## அமலோற்பவி பசாசை வெல்லும் வல்லப இராக்கினி.

அரூபியான தேவதூதர்களுக்கு ஆதியில் சர்வேசுரன் பரீட்சார்த்தமாகக் கொடுத்தருளிய தோர் காட்சியில் முன் தெரிவித்தபடி லூசிப்பேர் என்னுந் தலைவனும் அவனுடைய துற் புத்தியை யேற்றுக்கொண்டு 'இனி மனிதாவதாரஞ் செய்யப்போகும் சுதனாகிய சர்வேசுரனையும், அவரைக் கன்னிமை குன்றாது பெற்றெடுக்கப்போகும் கன்னிசுத்த தேவதாயாரையும் ஒருபோதும் வணங்கவேமாட்டோமென்று சலஞ்சாதித்த அவனுடைய தோழர்களும் ஒரு க்ஷணத்தில் சர்வேசுரனுடைய முனிவென்கிற கோபாவேஷ இடியால் தாக்கப்பட்டு நரக பாதாளத்தில் தள்ளுண்டு போனார்கள் அல்லவா?

பிற்பாடு, வேதாகமத்தில் கண்டபடியே ஆறு நாளில் சகலத்தையுஞ் சிஷ்டித்துக் கடைசியாய் ஆதி மனிதனையும் மனுஷியையும் பரிசுத்தமான அந்தஸ்தில் உண்டுபண்ணி சகல சுக செல்வங்களும் நிறைந்த சிங்காரத் தோட்டத்தில் அவர்களைச் சகல சிஷ்டிகளுக்கும் மேலாக அரசாட்சி பண்ணத்தக்க இராசாக்களாய் ஸ்தாபித்தருளினார். இவ்வித மேலான பதவியில் உயர்த்தப்பட்ட மண்ணாலான மனுஷரைப் பார்த்து லூசிப்பேருக்கும் அவனுடைய துஷ்ட தோழர்களுக்கும் பொறுக்கமுடியாத ஆங்காரமும் பொறாமையும் பொங்கித் தாங்கள் இழந்துபோன மோக்ஷ பதவியில் இவ்வளவு நீசரான மானிடர் சேரத்தக்கவரோ? பார்ப்போம் ஒருகை என்று சபதங்கூறி ஒருமுகமாக மனிதரைக்கெடுத்து அவர்களையும் தங்களோடு நரகத்தில் வீழ்த்தத்தக்க உபாயம் இன்னதென தீர்மானித்துக்கொண்டு, அவர்களின் தலைமையானவனான லூசிப்பேரென்ற சாத்தானே பாம்பின் வேஷமெடுத்து, ஆதிமனுஷியை முந்த முந்த வஞ்சித்துப் பின் அவளைக்கொண்டு ஆதி மனிதனையுங் கெடுத்து இருவரையும் தேவகோபத்துக்கு ஆளாக்கிப்போட்டது.

மண்ணாலான மனிதனுடைய சுபாவத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்த தயாபரரான கர்த்தர், கெட்டுப்போன தேவதூதரை ஒருக்ஷணத்தில் நரகத்தில் தள்ளிவிட்டதுபோல் செய்யாமல், அவர்களைக் கைதூக்கி யிரட்சிக்கச் சித்தங்கொண்டு, தம்மால் சிஷ்டிக்கப்பட்ட ஆதி மனிதனையும் மனுஷியையும் வஞ்சித்துக் கெடுத்தப் பசாசாகிற வலுசற்பத்தைச் சபித்து "உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை யுண்டாக்குவோம்; அவள் உன் சிரசை நசுக்குவாள், நீ யவளுடைய குதி காலைக் கடிக்கப் பார்ப்பாய்" என்று திருவுளம்பற்றினார்.

இவ்விதமாக வானோர் கணங்கள் சிஷ்டிக்கப்பட்ட முகனையிலே சுதனாகிய சர்வேசுரன் ஒரு ஸ்திரீயினிடமாய் மனிதனாய்ப் பிறக்கப்போகிறதாகவும், தம்மையும் தம்மைக் கன்னிமைக்குன்றாது பெற்றெடுக்கப்போகும் அந்த அமலோற்பவியையும் வணங்கி நமஸ்கரிக்க வேணுமென்றும் கட்டளைக்கொடுத்தாரென்று முன்னே பார்த்தோம். இப்போதும் அந்தத் தலைமையான பசாசையும் மனுக்குலத்துக்குத் தலைமையானவர்களாகிய ஆதி மனிதனையும் ஆதி மனுஷியையும் வைத்துக்கொண்டு முன் சொன்ன அதே ஸ்திரீயைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறார். இப்படியாக இடைவிடாமல் பிதாவின் சித்தத்தில் குடிகொண்டிருந்த

அமலோற்பவ ஸ்திரீயாகிய அர்ச். கன்னிமரி யம்மாளுடைய அதியுன்னத மேன்மையை யென்னென் றெடுத்துரைப்போம். அந்த அம்மாளையும் அவள் பெறப்போகும் தேவ திருக்குமாரனையும் முன் வணங்க மாட்டோமென்றதினால் சபிக்கப்பட்ட அப்பேய்கள் இப்போது அந்தத் தேவ திருநாமத்தைக் கேட்டமாத்திரத்தில் நரகபாதாளத்திலுருண்டு விழுந்து ஒளித்துக்கொள்ளுகின்றன. இதையறிந்த நாம் நமக்கு வருகிற சகல தந்திரசோதனைகளிலும் அதைரியப்படாமல்,குழந்தை ஆபத்துநேரத்தில் தன் தாயைக் கூப்பிடுவதுபோல் நமது பரிசுத்த அமலோற்பவியின் திருநாமத்தை யுச்சரிப்போமானால் தப்பாமல் அவளுடைய உதவியை அடைவோமென் றறியக் கடவோம்.

---

## TRANSMIGRATION & FATE.

## மறுபிறப்பும் தலைவிதியும்.

பிராஞ்சு தேசத்திலுள்ள பாசீ என்னு மூரின் ஆஸ்பத்திரியில் வெகு காலம் வேலைசெய்து வந்த “லாரிரேனு” என்னும் ஓர் மாது தான் ஏற்கெனவே ஒருதரம் பிறந்து, 19-வது வயதில் காசரோகத்தால் இறந்ததாக டாக்டரிடம் கூறினாள். அதன் உண்மையை அறிய அந்த டாக்டர் அவள் கூறியவற்றைக்கொண்டு, அவள் பிறந்த ஊர் இத்தாலியாவிலுள்ள லீனு என்னும் ஊராக இருக்குமென யூகித்து, அவ்வூரின் விசேஷ படங்களைத் தருவித்துப் பார்க்க, அவள் வர்ணித்ததற் கிசைந்திருந்தது. ஆனதினால், அவளை இட்டுக்கொண்டு டாக்டர் அவ்வூருக்குப் போனபோது, அவள் முன் தான் வசித்த வீட்டில் சென்று, பிறகு அவரைக் கல்லறைக்கு அழைத்துப்போய் மரண ரிஜிஸ்டரை எடுத்துப் பரிசோதிக்க,அவள்1810-ம் வருஷத்தில் காசநோயால் இறந்ததாகத் தெரியவந்ததாம். பிறகு தன்னை புதைத்த கல்லறையின் சமீபம் சென்றபோது அவள் மூர்ச்சையாகி கீழே விழுந்து விட்டாளாம். இவள் பிறந்தது முதல் வெளி நாட்டிற்குச் சென்றதில்லையாம்.

பொய்யைச்சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும் என்று பழமொழியுமிருக்க, யாரை யேய்க்கலாமென்று இவ்வித கற்பனைபண்ணிக் கட்டிவிட்டார்களோ தெரியவில்லை. லாரிரேனுவென்னும் மாதை மெச்சுவோமா? அவளுக்கு உடன்பங்காளியான டாக்டரை மெச்சுவோமா? இம்மாது மேற்சொல்லிய ஆஸ்பத்திரியில் வெகு காலமாய் வேலைசெய்திருந்தாள் என்று சொல்லப்படுகிறபடியால் அவள் வயது சென்றவளாயிருக்க வேணுமென்று தெரியவருகிறது. அவளுக்கு மெய்யாகவே முற்பிறப்பின் ஞாபகம் இருந்திருக்குமானால் இத்தனை வயதாகுந்தனையும் அவளேன் சும்மாவிருந்தாள்? தனக்கு புத்தி விவரமும் பேசுந்திறமையும் உண்டானவுடனே தனது விருத்தாந்தத்தையும், தன் தாய்தந்தையோரின் வருக்கத்தையும், மற்ற மற்ற நடபடிக்கைகளையுந் தெரியப்படுத்தியிருப்பாளானால், ஒருக்கால் என்னவோ ஏதோ என்று சந்தேகிக்க ஹேதுவுண்டு. இத்தனை வயதுக்குமேல் இந்தக் கற்பனை யிவளுக் கென்னத்திற்கு? இதனா லிவளடையும் பலன்தா னென்ன? ஒவ்வொரு தேசத்திலும் மனிதர் பற்பல நோயாலுஞ் சாகிறது சகஜம். இவள் காச ரோகத்தால் செத்தாளாம். எந்தெந்த கல்லறையில் போய் விசாரித்தாலும் காசநோயால் மரித்தவர்கள் எத்தனையோ பேர்களிருப்பார்கள்! அவர்களுக்குள் இந்த மனுஷிதான் அந்த நோயால் அந்தக் காலத்தில் மரித்தாளென்று நாம் நிச்சயிக்க நமக்கு வழி யென்ன?

வேலையும் கவலையுமற்ற சிறு குழந்தைகள் காலப் போக்காக மணலால் வீடுகளைக் கட்டி அவற்றை அழித்துத் திரும்பவும் வேறே வீடுகளைக் கட்டி விளையாடிச் சந்தோஷிப்பார்கள். கடவுளும் அவ்வண்ணமே மனிதரைச் சிருஷ்டிப்பதும் அவர்களைச் சாகச்செய்வதும் திரும்பவும் அவர்களைப் பிறக்கச்செய்வதுமென்றால் அவருடைய ஞானந்தானென்ன? அவரவருக்கும் சாவு தலைமேலேயென்று நன்றாய்த் தெரிந்திருந்தும் வால வயதுள்ளவர்களி லனேகர்: தங்களுக்கு இன்னுங்காலம் இருக்கிறது, சாகிறதற்கு முன்னே சன்மார்க்கத்தைத் தேடிக்கொள்ளலாம், என்று மனப்பால் குடித்து, என்ன சொல்லியுந் திருந்தா திருக்கிறார்கள். இதற்குமேல் இன்னும் மறு பிறப்பு என்பதாக ஒன்று இருந்துவிட்டால் மனிதன் எந்தத் தின்மைக்குத்தான் அஞ்சுவான்? அடுத்த பிறப்புக்குப் பார்த்துக்கொள்ளுவோம், இப்போது கையிலுள்ள காலத்தையேன் வீணாய் ஜெபதபத்திலும், ஒரு சந்தியுபவாசம், தான தருமம், துறவறம், தபசு முதலியவைகளில் செலவழிக்க வேணும்? இதெல்லாம் வேண்டாம்; அடுத்த விசை என்ன பிறப்போ? எந்த அந்தஸ்தோ? நமக்குத் தெரியாது. ஆகையால், நம்முடைய இச்சைகளைத் திருப்திசெய்ய இதுவே காலம் என்பதாகச் சகல துன்மார்க்கங்களுக்கும் துணியலா யிருக்கும்.



இப்போதனை சகல பாவங்களுக்கும் ஊற்றாயிருப்பதால் மனுக்குலத்தின் ஜென்மச் சத்துராதியான பேயே இப் போதனைக்குத் தகப்பன் என்று ஸ்திரமாய்ச்சொல்லலாம். இறந்துபோனவர்கள் திரும்பவும் பிறக்கிறது உண்மையானால் அப்படிச் செத்தவர்களைக்குறித்துச் செய்யப்படுகிற ஜெபதபம், ஒரு சந்தி யுபவாசம் எல்லாம் வீணே. செத்தவர்களுக்காகக் கிறிஸ்துவர்கள் மாத்திரமல்ல, மகம்மதியர், இந்துக்கள், சீனர் முதலிய எல்லா ஜாதியரும், எல்லா மதத்தினரும் (இறந்தவர்களைக் குறித்து) தானஞ் செபம் பூசை முதலியவற்றை நிறைவேற்றுகிறார்கள். மறு பிறப்பை யேற்று நடக்கிற இந்துக்களும் இறந்துபோன தங்கள் பிதிர்க்களைக் குறித்துத் திவசம் கொடுக்கிறார்கள், எள்ளுந் தண்ணீரும் இறைக்கிறார்கள். மறு பிறப்பை ஒப்புக்கொள்ளாத புற மதஸ்தர்கள் நடக்கிற சகல நடபடிக்கைகளையும் இவர்களுங் கைக்கொண்டு நடந்துவந்தாலும் மறு பிறப்பையும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய போதகத்துக்கும் நடபடிக்கைக்கும் வேற்றுமையா யிருக்கிறது. இப்போதனையானது பிற்காலங்களில் உண்டான இந்துக்களின் புராண பிரபந்தங்களில் வெகு விஸ்தாரமாக ஜோடித்து எழுதப்பட்டிருந்தபோதிலும் இப்புராணங்களுக்கு வெகு காலத்துக்கு முன்னதாயுள்ள இவர்களுடைய நாலு வேதங்களிலும் அப்படி யொருவார்த்தையும் எழுதியிருக்கக் காணோம். அப்படியானாலும் மறு பிறப்பையும், தலை விதியையும் முக்கிய சத்தியம் போல் விஸ்வசித்து நடந்து வருகிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லுகிற காரணமென்னவென்றால்: “கடவுள் கோணாத நீதிபரர். அப்படியிருக்கச் சிலவேர் வங்கிஷபதிகளாய்; குபேர சம்பன்னராய், இராஜாதிமகுட மன்னராய், பேர் போன சாஸ்திரிகளா யிருக்கச் சிலபேர் அஷ்டதரித்திரராய், அடிமைகளாய் வெகு நிசிதமான ஊழியஞ் செய்பவராயிருக்கக் காரண மென்ன? முற்பிறப்பில் அவரவர்செய்த நல்வினை தீவினைக் கேற்றாப்போல் இப்பிறப்பில் அவரவருக்கும் வெவ்வேறு அந்தஸ்து கடவுளால் கொடுக்கப்பட்டுவருகிறதினால் கடவுள் பேரில் கிஞ்சித்துங் குறைகூற காரணமில்லை. முற் பிறப்பு இராதே போனால் மனிதர்களின் வெவ்வேறு அந்தஸ்துக்கும் அவர்களனுபவிக்கிற துன்பவருத்தங்களுக்கும் கடவுளே காரணரென்றும், அதினிமித்தம் அவர் முழுதும் அநீதரென்றுமே முடியுமாகையால், முற் பிறப்பு இருக்க வேண்டியதே சரி” என்கிறார்கள். இதற்குத் தக்க சமாதானம்ஆயிரம் விதமாய்ச் சொல்லலாமாயினும் பத்திரிகை விரியுமென்றஞ்சி யித்தருணத்தில் ஒன்றேயொன்று மாத்திரம் போதுமென்று கருதுகிறோம். அதாவது:-கடவுள் ஒருவரே நித்தியர், மற்றுங்காணப்பட்டனவும் காணப்படாதனவுமாகிய அனைத்தும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டவைகளே. காணப்பட்டவையெல்லாம் அழியப்பட்டவை. இந்த உலோகமும் அதிலுள்ள சீவ அசீவபொருட்கள் யாவுங் காணப்பட்டவை யாதலால் அவை எல்லாம் அழிவுக்குரியவை. அழிவுக்குரிய வஸ்து எதுவோ அது நித்தியமல்ல. ஆகையால் அனாதிவஸ்துவாகிய கடவுளாலேயே சகலமுஞ் சிருஷ்டிக்கப்பட்டன. மனிதனைச் சிருட்டிக்கு முன்னமேயே இந்த வுலகத்தையும் அதிலுள்ள சகல சராசரங்களையும் கடவுள் சிருட்டித்தருளினார் என்பதே புத்திக்கிசைந்த காரியம். இவ்விதமாக பரலோக பூலோகத்தையும் சிஷ்டித்து முகித்துக் கடைசியாய் மனிதனை உண்டாக்கினார். இப்படி முந்த முந்த சிருட்டிக்கப்பட்ட அம்மனிதனுக்கு அதுவே முதற் பிறப்பாகையால் அதற்குமுன் அவனால்செய்யப்பட்ட யாதொரு பாவபுண்ணியமும் அவனுக்கில்லை, பாவ புண்யம் அவனுக்கில்லாத போதே, அவனுக்குத் தலையெழுத்தும் இல்லை யென்றே தீர்மானமாய்ச் சொல்லலாம். அதேதென்றால், அவனவன் முற்பிறப்பிற் செய்த கருமத்துக்குத் தக்கது பிரமா அவனவன் தலையில் எழுதுகிறதாகச் சொல்லுகிறபடியால், இந்த முதல் மனிதனுக்கு பிரமா எழுதக்கூடியது ஒன்று மில்லை. ஆகையால் இந்தப் பிரதம சிருஷ்டிப்பான முதல் மனிதனுக்கு முற்பிறப்பு மில்லை;

தலையெழுத்து மில்லை. இம்முதல் மனிதன் உயிரோடிருந்து பிள்ளைகளைப் பெற்றிருந்தால் அப்பிள்ளைகளுக்கும் அதுவே முதற் பிறப்பானதால் அவர்களுக்கும் முற்பிறப்பாவது தலையெழுத்தாவது கிடையாது. இன்னும் அந்த முந்தின ஆதி மனிதன் உயிரோடிருந்து தன் பேரன்மாரைக் கண்டிருந்தானானல், அந்தப் பேரன்மார்களுக்கும் அதுவே முதற் பிறப்பானபடியால் அவர்களுக்கும் முற் பிறப்பாவது தலையெழுத்தாவது உண்டென்று சொல்லக் காரணமில்லை. இப்படியே முந்தின மூன்று தலைமுறைகளிலும் உதித்தவர்களுக்குத் தலையெழுத்தாவது முற்பிறப்பாவது இருக்கவேயில்லையென்று இவ்வளவு தெளிவாயிருக்க, இக்காலத்துள்ள நமக்கு மாத்திரம் அவை எங்கிருந்து வந்துவிட்டது? நாம் வேறே வழியில் உதித்தோமா? இல்லையே; அந்த ஒரே வழியில் பிறந்தவர்கள்தானே? பாவபுண்ணியத்துக்குத் தக்கபடி மறுபிறப்பில் ஐசுவரியம் அல்லது தாரித்திரம் அவரவர்க்குச் சித்திக்கிறதென்றால் மோக்ஷ நரகத்தைப் பற்றிச் சிந்திப்பானேன்? சகலமும் தலைவிதியின்படி நடக்கிறதென்றிருந்தால், சன்மார்க்கத்தைப் போதிக்க குருக்கள் முதலிய பெரியவர்கள் என்னத்திற்கு? காரியங்கள் இப்படி யிருப்பதால் மாய்மாலம் பண்ணுகிறவர்களுடைய வார்த்தைகளை நம்பிக் கையிலுள்ள நல்ல காலத்தை வீணாய்ப்போக்கிக் கடவுளின் நீதிவசஞ் சிக்கிக்கொள்ளா திருப்பதே நம்மெல்லோர் பேரிலுஞ் சுமந்த கடமை.

A. P.

## CHRSTIAN DOCTIRNE.

## ஞானோபதேசம்.

### பத்துக்கற்பனையின்பேரில்

### 8-ம் படம்.

### சம்மனசுக்களின் வணக்கம்.

(முன்தொடர்ச்சி.)

அர்ச்சியசிஷ்டவர்களைப்போல சம்மனசுக்களும் சர்வேசுரனுக்கு உகந்தவர்களுமா யிருப்பதுடன் நமக்குத் துணையுமாயிருக்க நியமிக்கப்பட் டிருப்பதால் அவர்களை வணங்கி நமக்கு அவசரமானதை அவர்கள் மூலமாய் சர்வேசுரனிடம் கேட்பது வேதகற்பனைக்கு விரோதமானதல்ல. மேலும் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒரு சம்மனசு காவலாக நியமிக்கப்பட் டிருப்பதால் அவர்கள்மட்டில் சங்கை வணக்கத்துடன் நடந்து சகல பொல்லாப்பினின்று நம்மைக் காத்து இரக்ஷிக்கும்படி நாடோறும் அவர்களை மன்றாடுவோமாக.

**1. காவலான சம்மனசுவின் சகாயம்.**—ப்ரேக் என்னும் பட்டணத்தில் நாலு வயதுள்ள ஒரு சிறு குழந்தை இரண்டாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்தது. அதன் தாய் துக்கத்தால் பைத்தியங் கொண்டவள்போல மேலே யிருந்து ஓடி வந்து குழந்தையைக் கையால் வாரி எடுக்கும் சமயத்தில் அது சாகாததுடன் அற்பக் காயமுமின்றி இருப்பதைக் கண்டு அதிசயித்து, இது காவலான சம்மனசால் உண்டான அற்புத மென்று அவளும் அங்கு கூடின திரளான ஜனமும் நிச்சயித்தார்கள்.

Baxter.

**2 பெரும் அதிசயம்.**—பிரான்சியர் போர்த்துக்காலுக்கு விரோதமாய்ப் படையெடுத்து அனேகப் பட்டணங்களைப் பாழாக்கி, ஊரைத் தாக்கி அதைப் பீரங்கிகளால் சுட்டுக்கொளுத்தினபின் அதில் சேவகர் பிரவேசித்தபோது, ஒரு வீடு குண்டுகளால் இடிந்து பாழாகிக் கிடக்க, அதில் ஒரு தொட்டிலில் ஒரு சிறு பாலகன் யாதொரு காயமின்றி சுகமே நித்திரிக்கிறதைக்கண்டு அதிசயித்து அக்குழந்தையை அவர்கள் எடுத்து மகா பக்ஷத்துடன் வளர்த்து வந்தார்கள். பிரான்சுபடை தங்கள் சுயதேசத்துக்குத் திரும்புங்காலத்தில் அக்குழந்தையின் பந்து ஜனத்தைக் கண்டுபிடிக்க சாத்தியப்படாதபடியால், அத்தேசத்திலிருந்த ஒரு ஸ்திரீக்கு அக்குழந்தையையும் அதை வளர்ப்பதுக்கான செலவையும் கொடுத்தார்கள். இக்குழந்தை அதன் காவலான சம்மனசால் காப்பாற்றப் பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை.

Schmid.

**3. குழந்தையின் காவலான சம்மனசே! அதைக்காப்பாற்றி இரட்சியும்.**—திரோல் தேசத்தின் ஒரு கிராமத்தில் பெரும்மரத்தூலங்களை ஒன்றின்மேல் ஒன்றை



வைத்து அடுக்கினபின் அதன்மேல் சாத்தியிருந்த உயரமான ஏணியை மரக்குவியலினின்று எடுத்த உடனே, பெரும் போராக அடுக்கப்பட்டிருந்த மரங்கள் எல்லாம் கீழே சாய்ந்து விழுந்தன. இரண்டு பிராயமுள்ள தச்சனுடைய குழந்தை அங்கு விளையாடிக்கொண்டிருந்தபடியால் சாய்ந்த மரக் குவியலுக்குள் அகப்பட்டுக்கொண்டது. இதை அறிந்த அதன் பெற்றோர் எவ்வளவு கஸ்தி வியாகுலப்பட்டிருப்பார்களென்று சொல்லத் தேவையில்லை. குழந்தையை மீட்க யாதொரு உபாயத்தைப் பற்றி நினைப்பதற்குள்ளாக "குழந்தையின் காவலான சம்மனசே! இப்பாலகனைக் காப்பாற்றி இரக்ஷியும்" என்று உருக்கத்துடன் மன்றாடினார்கள். சாய்ந்த மரங்களை ஒவ்வொன்றாய் அப்புறப்படுத்தியபின், அடியில் குழந்தை சொற்ப காயமுமின்றி சுகமே இருப்பதைக்கண்டு அதிசயித்தார்கள்.

J. Sadlier.

**4. இடியினின்று காப்பாற்றப்பட்ட சிறுவர்.**—பொயேமியாவுக்கு, சமீபத்திலிருந்த ஊர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உலாவும்படி அருகாமையிலிருந்த காட்டுக்குப் போய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சடுதியில் இடிமுழக்கம் உண்டாகி காற்றும் மழையும் அடித்தபடியால், அங்கு கூடியிருந்த 31 பிள்ளைகளும் ஓட்டமாய் ஓடிப்போய் ஒரு பிரமாண்டமான மரத்தடியில் ஒண்டினார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு பையன் யாதொரு காரணமுமின்றி அம்மரத்தினின்று அப்புறம் ஓடுவதைக் கண்ட மற்றப் பிள்ளைகளும் அவனைப்பின் தொடரவே, அந்தப் பெரிய மரத்தின் மேல் இடி விழுந்து கீழே சாய்ந்தது. அவ்வூரார் இச்சங்கதியைப் பற்றிக் கேள்விப்பட்டபொழுது, பிள்ளைகள் தங்கள் காவலான சம்மனசுக்களின் உதவியால் பிராணபத்தினின்று காப்பாற்றி இரக்ஷிக்கப்பட்டார்களென்று நிச்சயித்து, அதன் ஞாபக குறியாக அவ்விடத்தில் ஒரு சிலுவையைச் செய்து நாட்டிவைத்தார்கள்.

Baxter.

**5. அவஸ்தைக்காரனும் காவலான சம்மனசும்.**—அர்ச். பிரான்சிஸ் ரேஜிஸ் என்பவர் தன் காவலான சம்மனசுமட்டில் விசேஷ பக்தி வைத்ததுடன், தம்மிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படிவரும் கிறிஸ்துவர்கள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும்பொருட்டு அவர்களுடைய காவலான சம்மனசுக்களைப் பார்த்து வேண்டுவார். இவர் ஒருநாள் வீதியில் நடந்துபோகும்போது அவர் அங்கேயே காணுக்கையால் நிறுத்தப்பட்டார். அந்தச்சணத்தில் அருகாமையிலிருந்த மெத்தை வீட்டின் திட்டிவாசல் திறக்கப்பட்டு, இந்த வீட்டில் ஒருவன் அவஸ்தையா யிருக்கிறான் என்ற சப்தம் இவர் காதில் விழுந்தது. உடனே அந்த வீட்டில் பிரவேசித்து அதில் சாகக் கிடக்கும் ஒருவனுக்கு கடைசி தேவத்திரவிய அனுமானங்கள் நிறைவேற்றினார். இதுவும் சந்தேகமற காவலான சம்மனசுவின் செய்கையே!

இவர் சரித்திரம்.

**6. அர்ச். ஆகினேஸ் அம்மாளுக்கு துணையாக வந்த சம்மனசு.**—அஞ்ஞான இராசா வேதத்தினிமித்தம் ஆகினேசம்மாளைச் சிறைப்படுத்தி, சத்திய வேதத்தை விடாவிட்டால் கொடிய ஆக்கினைக்குள்ளாகி சிரச்சேதப்படுத்தப்படுவாளென்று பயமுறுத்துகிறதைக் கண்ட வேதசாக்ஷி, சற்றேனும் பயப்படாமல் கொடுங்கோலனை புந்நகையுடன் நோக்கி "என் சத்திய தேவனுடைய வல்லப மகத்துவத்தை அறிந்தால் நீர் இவ்வாறு பேசமாட்டீர். மேலும் எனக்குத் துணையாக ஒரு சம்மனசை அவர் கொடுத்திருக்கிறார். ஆகையால், உமது மிரட்டலுக்கு அஞ்சமாட்டேன்" என்று தைரியமாய்ச் சொன்னாள். அஞ்ஞான அதிகாரியின் குமாரனான சிம்ரோணியுஸ் என்பவன் ஆக்னேசம்மாளை கற்பழிக்குங் கருத்துடன் அவளை அணுகின க்ஷணமே வேதசாட்சியின் காவலான சம்மனசானவர் அவனை அடித்துச் சாகடித்தார்.

திருச்சபை சரித்திரம்.

**7. அர்ச். பிரான்சீசும் காவல் சம்மனசும்**—அர்ச். பிரான்சீஸ் ரேஜிஸ் என்பவர் இராப்பகலாய் பாவசங்கீர்த்தனம் கொடுத்து பிரசங்கஞ் செய்வதற்காக வேறொரு ஊருக்குப் போக நேரிட்டதானபடியால் அவர் இரவில் கால்நடையாய்ப் பிரயாணஞ் செய்யும்பொழுது பல நாளாய் நித்திரையின்றி இருந்ததைப்பற்றி அன்று இரவு நித்திரை மயக்கத்துடன் நடந்து போனார். இவ்வாறு நடந்து பே

குந்தறுவாயில் சடுதியில் காணுக்கையால் பிடித்து நிறுத்தப்பட்டார். அந்நேரத்தில் இவர் திடுக்கிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தபொழுது, தாம் ஒரு படுங் குழியின் ஓரத்தில் இருப்பதாக அறிந்துகொண்டு, அங்கேயே முழங்காலிலிருந்து, சர்வேசுரன் தன் காவலான சம்மனசுவின் மூலமாய் இப்பெரும் ஆபத்தினின்று காப்பாற்றினதற்காக நன்றியறிந்த தோத்திரம் புரிந்தார்.

இவர் சரித்திரம்.

பிள்ளைகளே! இவ்வாறு நெருப்பு, தண்ணீர், காட்டு மிருகம், விஷப் பூச்சி முதலியவைகளால் நேரிட்ட மரண ஆபத்தினின்று கணக்கற்றவிசை நீங்கள் உங்கள் காவல் சம்மனசுகளால் காப்பாற்றப்பட்டிருக்கிறீர்களென்பது உண்மை. மரணாவஸ்தையிலிருந்தவர்களும் தங்கள் சம்மனசுவின் உதவியால் கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றார்களென்பதற்குக் கணக்கற்ற அத்தாட்சிகள் உண்டு. ஆகையால், பிள்ளைகளே! எப்போதும் உங்கள் காவலான சம்மனசுவின் மட்டில் அதிக பக்திவைத்து, அவரை நாடோறும் விசேஷமாக நித்திரைக்குமுன் அவரைப் பார்த்து வேண்டிக்கொள்ள மறவாதேயுங்கள்.

---

## GNANAMANI, III. PART.
## ஞானமணி 3-ம் பாகம்.
### 10-ம் அதிகாரம்.
### இந்த நல்ல பிள்ளையைப்போல நீங்களும் நடக்கவேண்டும்.

---

விஸ்வாச நாயகர் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு அநேக புத்திர சந்தானத்தை யடைந்தவராய், சர்வேசுரன் ஆசீர்வதித்த பிள்ளைகளைச் சன்மார்க்கத்தில் வளர்த்துவந்தார். அநேகர் தங்களுக்குச் சர்வேசுரன் கொடுத்த பிள்ளைகளுக்கு வஸ்திர போசனங் கொடுத்து வளர்ப்பதே தங்கள் கடமையென்று நினைப்பார்களொழிய அவர்களுடைய நடத்தையைக் கிஞ்சித்தென்கிலும் கவனிக்கமாட்டார்கள்.

தமது பிள்ளைகளுக்கு விஸ்வாசநாயகரும் அவருடைய மனைவி கமலமரி யென்பவளும் நற்புத்தி புகட்டி, தப்பிதஞ் செய்யும்போது கண்டித்தோ தண்டித்தோ அவர்களைத் திருத்துவார்கள். போகக்கூடாத இடங்களுக்கும் வீடுகளுக்கும் அவர்கள் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ளுவார்கள். கெட்ட பிள்ளைகளுடன் சகவாசஞ் செய்யாதபடிக்குப் புத்தி சொல்லுவார்கள்.

4, 5 பிராயமான பிள்ளைகளைக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய், அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் மேரை மரியாதையா யிருக்கும்படி கற்பிப்பார்கள். விஸ்வாசநாயகர் தனது பிள்ளைகளைத் தவறாமல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதுடன், அவர்கள் மாலைப்பொழுது வீட்டுக்குத் திரும்பினபின் அடிக்கடி அவர்கள் படித்த பாடங்களைப்பற்றி விசாரிப்பார். ஞானோபதேசத்திற்குப் பிள்ளைகளை அனுப்பி வீட்டிலும் மந்திர குறிப்பிடங்களைத் தாமே கற்பிப்பார்.

விஸ்வாசநாயகருக்கு 5 ஆண் குழந்தைகளும் 3 பெண் குழந்தைகளு மிருந்தார்கள். மூத்தவன் பெயர் தேவதாஸ். இவன் முதல் முதல் தன் ஊரிலிருந்த கன்னியர் மடத்தில் படித்தபின், திருச்சி காலேஜில் வாசித்து எப். ஏ. (F. A.) பரிக்ஷையில் தேறி, மதராஸில் School-Of Fine Arts என்னும் பள்ளிக்கூடத்தில் சில்பி சாஸ்திரம், சிங்காரவித்தை, சித்திரவேலை முதலியவற்றில் பயின்றுவந்தான். அழகியநாதன், தேவராயன், மனுவேல் ஆகிய இம் மூவரும் திருச்சி காலேஜில் உட் பிள்ளைகளாக வாசித்து வந்தார்கள். புஷ்பமரி, பூங்கொடி, இருதயம் என்கிற பெண்களும் சிங்கராயன் என்னும் 4 வயதுள்ள சிறுவனும் உள்ளூரிலுள்ள கன்னியர் மடத்துப் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்தார்கள்.

தமது ஜேஷ்டபுத்திரனாகிய தேவதாஸ் என்பவன் தேவஊழியம்புரியவேண்டுமென்று விஸ்வாச நாயகர் மிக்க ஆவல் கொண்டவராயினும் பையனுக்கு அது இஷ்டமில்லாமற் போய்விட்டது. தன் ஆண் குழந்தைகளிலும் பெண் குழந்தைகளிலும் இரண்டொருத்தராவது துறவிகளாய்ப் போகும்படி நாயகரும் அவர் மனைவியும் ஆசித்து, அந்தக் கருத்துக்காக நாடோறும் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடிவந்தார்கள். ஆனால் இதுவரையிலும் அவர்களுடைய கோரிக்கை அநுகூலப்படவில்லை.



நாயகருடைய பிள்ளைகள் 6, 7 பிராயமுள்ளவர்களா யிருக்கும்போதே, முன் சொன்னதுபோல அவர்களுக்குத் தர்ம வழியைக் காட்டி திருட்டு, பொய் முதலிய பாவங்களை விலக்கி, தேவனுக்கு உகந்த பிள்ளைகளாய் நடக்கும்படிக்கான புத்திமதிகளைப் போதித்து வருவார்கள்.

தமது சாதாரண வழக்கப்படி பள்ளிக்கூடத்திலிருந்துவந்த பூங்கொடி, இருதயம், சிங்கராயன் என்கிறவர்களைத் தமது அண்டைக்கு நாயகர் வரவழைத்து, அவர்கள் பள்ளிக்கூடத்தில் படித்த பாடங்களைப்பற்றி விசாரித்தபின்,

விஸ்.—பூங்கொடி, நீ ஜெபிக்கும்பொழுது யாரைப் பார்த்து ஜெபிக்கிறாய்?

பூங்.—சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

விஸ்.—நீ, இருதயம்? நீ யின்று கோவிலில் ஜெபித்தபோது, சர்வேசுரனைப் பார்த்து என்ன கேட்டாய்?

இரு.—உங்களுக்கும் அம்மாளுக்கும் எனக்கும் தேவையானதைக் கொடுக்கும்படி கேட்டேன்.

விஸ்.—ஆம், பிள்ளைகளே! உங்களுடைய ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய உபகாரங்களை சர்வேசுரன்மூலமாய் மன்றாடிப் பெறவேண்டும். சகலருக்கும் செபம் அவசரம். இருதயம்? விளக்கில் எண்ணெய் இல்லாவிட்டால் அது எரியுமா?

இரு.—எரியாது, அவிந்துபோம்.

விஸ்.—அப்படியே செபம் இல்லாத பிள்ளையின் ஆத்துமத்துக்கு பலம் வராது. சிங்கராயா! நீ சாப்பிடாவிட்டால் பேசுவாயா? நடப்பாயா?

சிங்.—இல்லை, ஆண்டி.

விஸ்.—பார்த்தீர்களா பிள்ளைகளே! நம்மெல்லோருக்கும் ஜெபம் மெத்தஅவசரம். 2, 3 நாளைக்கு நாம் சாப்பிடாவிட்டால் பலம் குறைந்து வியாதி உண்டாகிச் செத்துப்போவோம். அப்படியே நாம் ஜெபம் செய்யாவிட்டால் நமது ஆத்துமத்துக்கும் சம்பவிக்கும்.

வேறொரு நாள் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தபோது விஸ்வாச நாயகர் அவர்களைத் தம்மிடத்திற்கு வரவழைத்து, இருதயத்தைப்பார்த்து இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு ஞானோபதேசம் சொன்னதார்?

இரு.—மரியதிரேஸ் சகோதரி.

விஸ்.—மரியதிரேஸ் சகோதரி என்னத்தைப்பற்றி புத்தி சொன்னார்கள்?

இரு.—யோசித்துக் கொண்டிருக்கையில், நாலாங் கற்பனையைப்பற்றிச் சொன்னார்கள் என்று, பூங்கொடி சொன்னாள்.

விஸ்.—நல்ல பாடம் இது. பிதா மதாவென்றால் யார்?

பிள்ளைகள்.—நம்மைப் பெற்ற தாய் தகப்பன்மார்.

விஸ்.—அவர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டியது?

பிள்.—அவர்கள் சொற்படி கீழ்ப்படிய வேண்டியது.

விஸ்.—அவர்கள் பொய் சொல்லச் சொன்னால்?

சிங்.—சொல்ல வேண்டும்.

விஸ்.—நீ இருதயம்?

இரு.—சொல்லக்கூடாது; அதுபாவமாகும்.

விஸ்.—பாவமான காரியம் செய்யும்படி யார் சொன்னபோதிலும் செய்யக்கூடாது.

தாய் தகப்பன் சொற்படி கேளாவிட்டால் பாவமாகும்; அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர்களுக்குக் கஸ்திவருத்தக்கூடாது. பரிகாசஞ் செய்யக்கூடாது. அவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.

நாலாம் கற்பனையால் இன்னும் யாருக்கு நாம் சங்கை காட்டவேண்டும்.

பிள்.—குருக்களுக்கும், வயதில் முதிர்ந்தவர்களுக்கும் சங்கை காட்டவேண்டும்.

விஸ்.—தாய் தகப்பனைச் சங்கியாமல் அவர்களை அடிக்கும் துஷ்டப் பிள்ளையை எப்படித் தண்டிக்கும்படி சர்வேசுரன் முன் காலத்தில் கற்பித்தார்?

பூங்.—கல்லால் எறிந்து கொல்லும்படி கற்பித்தார்.

விஸ்.—ஆம் பயங்கரத்துக்குரிய தண்டனை! நீங்கள், பிள்ளைகளே! இப்போதும், பெரியவர்கள் ஆன பிறகும், உங்கள் பெற்றோருக்குச் சங்கை காட்டி, அவர்கள் விருத்தாப்பியானபின் அவர்களைச் சம்ரக்ஷணை செய்து காப்பாற்றுவது உங்கள் கடமை. இன்றைக்கு இவ்வளவு போ

றும்; போய் விளையாடுங்கள் என்கவே, நால்வரும் புஸ்தகங்களை வீட்டில் வைத்துவிட்டு விளையாடத் துவக்கினார்கள்.

ஒருநாள் விஸ்வாச நாயகர் வெளியே போயிருந்து வீட்டிற்கு வந்தபோது, தன் மேசைமேலிருந்த மை புட்டி கவிழ்ந்து சில புஸ்தகங்களின் மேல் விழுந்திருப்பதை யறிந்து, இதைப் பற்றித் தமது மனைவியை விசாரித்தபோது, அது தனக்குத் தெரியா தென்றாள். உடனே தமது பிள்ளைகளை வரவழைத்து, "பிள்ளைகளே! இதோ மேசைமேலிருந்த இங்கி பெட்டியை உங்களில் யாரோ தொட்டிருக்கிறார்கள். அதிலிருந்த மை புஸ்தகங்களின் மேல் விழுந்து புஸ்தகங்கள் எல்லாம் மையாய்ப்போயின. இதைச்செய்தது யார் என்று தெரியவில்லை. உங்களில் ஒருவர் செய்திருக்கவேண்டும். உள்ளதைச் சொன்னால் ஒன்றுஞ் செய்யமாட்டேன். பொய்சொன்னால் மோக்ஷத்திலிருக்கிற சர்வேசுரனுக்குக் கோபமுண்டாகும். எனக்கும் அப்பேர்ப்பட்ட பிள்ளைகள் மட்டில் பிரியமிராது. ஆகையால் உண்மையைச் சொல்லுங்கள். யார் மை புட்டியை கவிழ்த்தது?" என்றார்.

அப்போது பூங்கொடி தன் தகப்பனைப் பார்த்து "நான் மை புட்டியைத் தொடவில்லை ஆஞ்சி," என்கும்போது, சிங்காரயனும் "நானும் தொடவில்லை" யென்றான். இருதயமோ, பயந்து கண் கலங்கி, "நான்தான். ஆஞ்சி, மையைச் சிந்தினேன்" என்றான். அப்போது விஸ்வாசநாயகர் இருதயத்தைக் கிட்ட வரச்சொல்லி, அவனுக்கு முத்தங்கொடுத்து, மூவரையும் நோக்கி "நீங்கள் ஒருபோதும் பொய் சொல்லாதேயுங்கள். என்ன நஷ்டம் வருவதாயிருந்தாலும் பொய் சொல்லாமல் மெய் பேசினால், உங்கள் மட்டில் எல்லோரும் பிரியப்படுவார்கள். பொய் சொல்லுகிறது இழிவானகாரியம். சிறு பிராயத்தில் இந்தக் கெட்ட வழக்கத்துக்கு உள்ளாகிற பிள்ளைக்கு அந்தக் கெட்ட வழக்கம் சாகுமட்டும் போகாது. சிறுபத்தில் மெய்பேசுகிற பிள்ளை யெப்போதும் மெய் பேசுவான். அவன் மட்டில் சர்வேசுரன் பிரியமாயிருப்பார். மனிதரும் அவனை நேசிப்பார்கள். இப்போது போய் விளையாடுங்கள்" எனவே, பிள்ளைகள் வெளியே விளையாடப் போனார்கள்.

சில வாரத்துக்குப்பின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போனபோது விஸ்வாசநாயகர் அவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்து இன்றைக்குக் கன்னியாஸ்திரியம்மாள் என்ன புத்தி சொன்னார்கள் என்றார். அதற்கு இருதயம் "திருட்டைப்பற்றிச் சொன்னார்கள்" என்றான். திருடும்படி சொன்னார்களா? என்றதற்கு, இல்லை, திருடுவது பாவம், ஆதலால் யாருடைய பொருளையும் திருடக்கூடாதென்று பிள்ளைகள் சொன்னார்கள்.

விஸ்.—நமது பக்கத்துவீட்டுக்காரர் தோட்டத்திலிருக்கிற மாம்பழத்தைப் பறித்துக்கொள்ளலாமா?

இரு.—பறிக்கக்கூடாது.

விஸ்.—பறித்தால்?

பூங்.—பாவமாகும்.

விஸ்.—வழியில் காலணா அகப்பட்டால்?

சிங்.—அதற்கு ஆப்பம் வாங்கிச் சாப்பிடுவேன்.

விஸ்.—நீ இருதயம்?

இரு.—அதை அம்மாகையில் கொடுப்பேன்.

விஸ்.—உனக்கு அந்த காலணா அகப்பட்டால் என்ன செய்வாய் பூங்கொடி?

பூங்.—என் பையில் போட்டுக்கொள்வேன்.

விஸ்.—நீங்கள் மூவரும் சரியான மறுமொழி சொல்லவில்லை. அதைச் சொந்தக்காரனுக்குக் கொடுத்துவிடவேண்டியது.

பூங்.—சொந்தக்காரர் இன்னாரென்று தெரியாவிட்டால்?

விஸ்.—அதைக் கோவில் உண்டிப் பெட்டியில் போட்டுவிட வேண்டும்.

புறத்தியாருடைய எந்தப் பொருளையும் அவர்கள் உத்தரவு இன்றி யெடுத்துக்கொள்வது பாவம். இந்த விஷயத்தில் பிள்ளைகளே! எச்சரிக்கையாயிருங்கள். பிள்ளைகளுக்குச் சாதாரணமாக பொய் சொல்லவுந் திருடவும் வழக்கமுண்டாகும் சிறு பிராயத்தில், இப்பேர்ப்பட்ட தப்பிதங்களில் பழகாவிட்டால் அந்தப் பிள்ளைகள் எப்போதும் நல்ல பிள்ளைகளா யிருப்பார்கள். சிறு பிராயத்தில் பொய் சொல்லவுந் திருடவும் பழகினால் அவர்கள் பெரியவர்கள் ஆனபிற்பாடுங் கூட அந்த வழக்கம் அவர்களுக்கு உண்டாகும். இப்போது ஜெயிலில் அநேக திருடர்கள் இருக்கிறார்கள். ஜெயில் என்றால் தெரியுமா பூங்கொடி?

பூங்.—திருட்டு முதலிய பொல்லாத கிருத்தியங்கள் செய்தவர்கள் வைக்கப் பட்டிருக்கும் இடமே ஜெயில் என்னப்படும்.



விஸ்.—நீ சொன்னது சரி. அந்த ஜெயிலில் போய் விசாரித்தால் அந்த விலங்குக்காரர் சிறு பிராயத்திலேயே பொய் சொல்லவும் திருடவும் பழகி யிருந்தபடியால், அந்தக் கெட்ட வழக்கத்தைப்பற்றி யிப்போது பயமின்றி திருடிச் சிறையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் கல்லவர்களுக்குப் பிரியம் உண்டாகாது. அப்பேர்ப்பட்டவர்களை மற்ற நல்ல மனிதர்கள் நம்பமாட்டார்கள். பத்திரம் பிள்ளைகளே! எச்சரிக்கையாயிருங்கள். ஒருபோதும் திருடவேண்டாம்.

இரு.—பொய் சொல்வதைப்பற்றி கன்னியாஸ்திரி அம்மாள் ஒரு கதை சொன்னார்கள்.

விஸ்.—அது கதையா பூங்கொடி?

பூங்.—கதையல்ல, சரித்திரம்.

விஸ்.—அதைச் சொல் பார்க்கலாம் இருதயம்?

இரு.—ஒரு பையன் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது வழியிலிருந்த வீட்டுப் பிழக்கடையில் ஒரு நெல்லி மரம் இருந்தது. அந்த மரத்திலிருந்து சில கனிகள் கீழே விழுந்து கிடந்தன. அங்கே அந்தப்பையன் நின்றுகொண்டு அதை யெடுக்க மனதுவந்து, அதை யெடுக்கும் போது, அது சரியல்ல; ஊரார் பொருளைத் திருடுவது 7-ம் கற்பனைக்கு விரோத மென்று அந்தக் கனியை அங்கேயே போட்டுவிட்டான்.

விஸ்.—மீதியை நீ சொல் பூங்கொடி.

பூங்.—பக்கத்து வீட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்திருந்த ஒரு மனிதன் இதைக்கண்டு அந்தப் பையனிடம் போய், ஏன் அந்தக் கனியை எடுத்துக்கொள்ளவில்லை யென்று வினவினபோது, "அதை யெடுக்க மனதுண்டானது. ஆனால் அது பாவம் என்று நினைத்து அதைத் திரும்ப கீழே போட்டுவிட்டேன்" என்றான். அப்போது அந்த மனிதன் அவனைத் தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய், "குழந்தாய் நீ யெதார்த்தவாதியும் கிறிஸ்தவனுமா யிருப்பதாகத் தோன்றுகிறது. நீ எப்போதும் இப்படி நல்ல பிள்ளையாயிருந்தால் சுவாமி உன்னை ஆசீர்வதிப்பார்" என்று சொல்லி, நெல்லிக் கனி நிறைந்திருந்த ஒரு கூடையைக் காட்டி உனக்குத் தேவையானதை யெடுத்துக்கொள் என்றான்.

விஸ்.—அப்போது அந்தப் பையன் என்ன செய்தான் சிங்காரயா?

சிங்.—அவன் காயை யெடுத்துக் கொண்டான்.

விஸ்.—இந்த நல்ல பிள்ளையைப்போல நீங்களும் நடக்கவேண்டும். பிள்ளைகளே ஒருபோதும் திருடாதேயுங்கள். உங்களுக்குத் தேவையானதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். இது நல்ல பிள்ளைகளின் குணம். எப்போதும் அவர்கள் நல்ல பிள்ளைகளா யிருப்பார்கள். சர்வேசுரன் அவர்களை நேசிப்பார். மனிதரும் அவர்களை நம்பி அவர்கள் மட்டில் பிரியங்கொள்வார்கள். நல்லது இப்போது போய் விளையாடுங்கள்.

சிலநாளைக்குப் பின், விஸ்வாசநாயகர் கடிதம் எழுதிக்கொண் டிருக்கும்பொழுது, பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்துவந்து. தங்கள் புஸ்தகங்களை வீட்டில் வைத்துவிட்டு, விளையாட ஆரம்பிக்கும்போது, வாசற்படியில் அழுகைச் சத்தத்தைக் கேட்டு, நாயகர் தமது வேலையை விட்டுவிட்டு வெளியே போனார். அப்பொழுது அழும் 5 வயது குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு நிற்கும் பெண்பிள்ளையைப் பார்த்து: "ஏன் பிள்ளை அழுகிறான் அம்மா?" என்று விஸ்வாசநாயகர் கேட்டார். அதற்கு அந்த ஸ்திரீ "பாருங்க ஐயா, உங்கள் பிள்ளை இவனை யெப்படி அடித்தது" என்றாள். உடனே நாயகர் தமது பிள்ளைகளை வரவழைத்து, "யார் இந்தக் குழந்தையை அடித்தது?" என்றார். அதற்குப் பூங்கொடி, "நானும் இருதயமும் நடந்து போகும் பொழுது சிங்காரயனும் அந்தப் பையனும் எங்களுக்குப் பின்னால் விளையாடிக்கொண்டு வந்தார்கள். சிலநேரத்துக்குப் பின் அழுகைச் சத்தத்தைக் கேட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தபோது, இந்தச் சிறுவன் அழுதுகொண்டுநிற்க, சிங்காரயன் எங்கள் அண்டைக்கு ஓட்டமாய் ஓடிவந்தான். இவன் அவனை அடித்திருக்கவேண்டும்" என்றாள்.

விஸ்.—சிங்காரயனைப் பார்த்து, ஏன் அவனை யடித்தாய்?

சிங்.—பேசாமல் நின்றான்.

விஸ்.—உள்ளதைச் சொல் மகனே! நீ இந்த குழந்தையை அடித்தாயா?

சிங்.—அவன் என் புஸ்தகத்தைப் பிடுங்கினான், நான் அவனை அடித்தேன்.

விஸ்.—நல்லது; முழங்காலிலிரு. நீ அவனை அடித்தது உன்பேரில் தப்பிதந்தானே?

சிங்.—(அழுகையுடன்) ஆம்.

விஸ்.—இனிமேல் அப்படிச் செய்வாயோ?

சிங்.—செய்யமாட்டேன்.

அப்போது, பிள்ளைகளுக்குள் உண்டாகும் சண்டையையும் தர்ப்பாஷையையும் பற்றி சில புத்திமதிகளை விஸ்வாச நாயகர் சொன்னபின், சிங்கராயனைப் பார்த்து "எழுந்துபோய் உன் தாயாரிடத்தில் ஒரு வாழைப்பழம் வாங்கிக் கொண்டுவா" என்றார். உடனே சிங்கராயன் பழத்துடன் நாயகரிடம் வரவே, "அதை அந்தக் குழந்தை கையில் கொடு" என்றார். அவ்வாறே கொடுத்தான். உடனே அடிபட்ட பையனுடைய அழுகையும் அமர்ந்ததுடன், அவனுடைய தாய் சிங்கராயனைத் தூக்கி அவனுக்கு முத்தங் கொடுத்து, "உபதேசியார் தமது பிள்ளைகளை வளர்ப்பதுபோல ஊராரும் தங்கள் பிள்ளைகளை வளர்த்தால், இவ்வூரார் எவ்வளவோ சன்மார்க்கரா யிருப்பார்கள். குடும்பத்தி லுண்டாகும் சண்டை சச்சரவுக்கும் மனஸ்தாபங்களுக்கும் பிள்ளைகளே காரணம்" என்று தன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போனாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை பூசை முடிந்து விஸ்வாசநாயகரும் பிள்ளைகளும் வீட்டுக்குப் போனபின், சிங்கராயன் பூசை நேரத்தில் பேசி விளையாடிக்கொண் டிருந்தான் என்று இருதயமும் பூங்கொடியும் தங்கள் தகப்பனிடம் சொன்னார்கள். அப்போது நாயகர் தமது மூன்று பிள்ளைகளையும் தமது பக்கத்தில் நிறுத்திக்கொண்டு, கோவில் தேவஸ்தலமென்றும், அதில் மேரை மரியாதையுடன் இருக்கவேண்டுமென்றும், பூசை நேரத்தில் சர்வேசுரன் பீடத்தில் இறங்கி வருவதைப்பற்றி பக்தி வணக்கத்துடன் அவரைப் பார்த்து தன் ஆத்துமசரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைக் கேட்கவேண்டுமென்றும் சிறு பிள்ளைகள் கண்டுபிடிக்கக்கூடுமான புத்திகளைச் சொன்னார்.

விஸ்வாச நாயகரும் கமல மரியம்மாளும் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய் வளர்ப்பதைப் பற்றி யறியும் தாய்தந்தையோர் அவர்களைப் புகழ்ந்து தங்கள் பிள்ளைகள் தப்பிதஞ் செய்யும்போது "உபதேசியார் பிள்ளைகளைப் பாருங்கள், எவ்வளவு நல்ல பிள்ளைகளா யிருக்கிறார்கள். பொய் வராது அவர்கள் வாயில். திருடமாட்டார்கள். திட்டமாட்டார்கள். தங்கள் தாய் தகப்பனுக்கு எப்படி கீழ்ப்படிகிறார்கள்!" என்று தங்கள் பிள்ளைகளுக்கு திஷ்டாந்தப்படுத்திச் சொல்வார்கள்.

(இன்னும் வரும்.)

# CORRECT THINGS FOR CATHOLICS.

# கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

## கல்வி

1. எண் சாணுடம்பிற்குச் சிரசே பிரதான மென்பதுபோல, இக்காலத்தில் ஒரு சமுகத்தார் முன்னுக்கு வரவேண்டியதானால், கல்வியைக் கையாடுவதே அத்தியாவசியம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

2 பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அவசியம் (Primary Education) பிரதம கல்வியையாவது, அதென்னவெனில் தங்கள் சொந்தபாஷையைப் படிக்கவும், எழுதவும், கூட்டல் கழித்தல் முதலிய கணக்குகளைச் செய்யவும் அவர்களுக்குத் தப்பாமல் படிப்பிப்பது ஒழுங்கு.

3. தாழ்ந்த நிலைமையிலும் தரித்திர அந்தஸ்திலும் இருந்த பலர் படிப்பு ஒன்றைக்கொண்டு நல்ல ஸ்திதியடைந்து, சிறப்பாய் வாழ்ந்து வருவதைக் கவனித்து பெற்றோர் எப்படியாவது பாடுபட்டு தங்கள் வீண் செலவைக் குறைத்துத் தங்கள் மக்களுக்குப் படிப்பைக் கொடுப்பது ஒழுங்கு.

(கேவலம் சேமக்கலத்தட்டிகளாயும், அர்ச்சகர்களாயும், கக்கத்தில் பஞ்சாங்கச் சுருளும் கையில் செம்பும் வைத்துக்கொண்டு தட்சணைக்காக நாலுகாதமாயினும் நடந்து திரிந்து, வயிற்றை வளர்த்துக்கொண்டு வந்தவர்களுமான பிராமணர்களின் தற்காலத்திய நிலைமையும், உத்தியோகச் சிறப்பும் படிப்பு ஒன்றையே காரணமாகக் கொண்டிருக்கின்றன. இதை ஒவ்வொரு கிறிஸ்துவ பெற்றோரும் கவனித்துத் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தக்க படிப்பை யூட்டிவந்தால் கிறிஸ்துவ ஜனசமூகம் முன்னுக்கு வருமென்பதற்குச் சந்தேகமில்லை.

4. தங்கள் மக்களுடைய மன நாட்டத்தைக் கவனித்து அவரவர்களுக்குத் தக்கபடி உயர்தரக் கல்வியையாவது கைத்தொழிலையாவது கற்பிப்பது ஒழுங்கு.



5. உத்தியோக விஷயமாய் ஊர் ஊராய்த் திரியவேண்டிய பெற்றோர்- பொதுவாய் ஐவேஜுள்ள பெற்றோர்—தங்கள் மக்களைக் குருமார்களால் ஒழுங்குடன் நடத்தப்படும் போர்டிங் ஸ்கூல்களில் உட்பிள்ளைகளாக விடுவது ஒழுங்கு. (இப்படிப்பட்ட ஸ்தலங்களில் நல்ல சகவாசமும், வைதிக லௌகிக கல்விப் பயிற்சிக் கடுத்த சாதனங்களும் இருத்தலால், பிள்ளைகள் நல்ல கிறிஸ்துவர்களாயும், நல்ல படிப்பாளிகளாயும் வளர்ந்து வரக்கூடும்.)

6. ஆண் பிள்ளைகளைப் போலவே, பெண் பிள்ளைகளுக்கும் குறைந்தது பிரதம படிப்பாவது தப்பாமல் கொடுப்பது ஒழுங்கு.

7. அந்தந்த குடும்பத்தின் பொது அந்தஸ்தையும் இன ஜன பந்துக்களின் நிலைமையையும் கவனித்து பெற்றோர் தங்கள் பெண்மக்களுக்கு (Secondary Education) உயர்தரப் படிப்பு கொடுப்பது ஒழுங்கு. (சில பெற்றோர்கள் தங்கள் பெண்மக்கள் மட்டில் கொண்டிருக்கும் பட்சத்தின் மிகுதியால், அவர்களுக்குத் தங்கள் அந்தஸ்துக்கு மிஞ்சிய இங்கிலீஷ் படிப்பைக் கொடுத்து, பரிட்சையில் தேர்ச்சிசெய்து பெருமை கொள்வார்கள். ஆனால் அம்மக்கள் வயதடைந்த பிறகு, தங்கள் படிப்புக்கும் படிப்பினால் உண்டான நாகரிக சீவியத்திற்கும் ஏற்ற கணவன் கிடையாதகுறையால் திண்டாடித் தெருவில் நிற்பதுண்டு. ஆனதால் ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் அந்தஸ்தைக் கவனித்து தங்கள் பெண்மக்கள் நல்ல சமுசாரிகளாகவும் நல்ல தாய்மாராகவும், நல்ல கிறிஸ்துவர்களாகவும் சீவிக்க வேண்டிய அளவு படிப்பு கொடுப்பது உத்தமம்.)

8. சக்தியுள்ள பெற்றோர் தங்கள் மக்களைக் கன்னிகா மடங்களில் உட்பிள்ளைகளாக விடுவது ஒழுங்கு

9. பெண்பிள்ளைகளுக்கு பலவித தையல் வேலையைக் கற்பிப்பது ஒழுங்கு.

10. பெண்பிள்ளைகள் தாங்கள் கற்ற தையல் வேலையை யெப்போதும் அப்பியசித்துக்கொண்டு வருவது ஒழுங்கு. (இளவயதில் தங்கள் புருஷர்களைப் பறிகொடுத்த பால்ய விதவைகளும், பொதுவாய்த் தங்கள் சீவனத்திற்காக வருந்தியுழைக்க வேண்டிய பெண்பிள்ளைகளும் இப்படிப்பட்ட தையல் வேலையை அடக்கமாய் வீட்டில் செய்து, மரியாதையாய்ச் சீவித்துவரக்கூடும். எத்தனையோ ஐரோப்பிய ஈரேஷியன் பெண்பிள்ளைகளும், புரோட்டெஸ்டாண்டு இந்திய பெண்பிள்ளைகளும் தையல் வேலையொன்றினால் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் சவரட்சணை செய்து வருகிறார்கள். புருஷன் ஆதரவில் சுகமாய் வாழ்ந்து வந்த கத்தோலிக்கு இந்திய பெண்பிள்ளைகள் ஏன் அப்படிச் செய்யாமல் அநேக சமயங்களில் பணிப்பெண்களாகவும், அடிமைகளைப்போல் பாடுபட்டும் வரவேண்டும்?)

11. பெண் பிள்ளைகளுக்குச் சுகாதார சாஸ்திரம் சிக்கன சாஸ்திர முதலிய குடும்ப சுகத்திற்கடுத்த வித்தைகளைக் கற்பிப்பது ஒழுங்கு.

12. பிள்ளைகளை யெப்போதும் கத்தோலிக்குப்பள்ளிக்கூடங்களுக்கேயனுப்புவது ஒழுங்கு. (பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் விட்டதோடு தங்கள் கடமை தீர்ந்ததென்றெண்ணாமல், வீட்டில் கிரமத்துடன் படித்து வருகிறார்களா வென்று விசாரிப்பது ஒழுங்கு.

13. பிள்ளைகள் தங்கள் உபாத்திமார் மட்டில் நன்றி பாராட்டுவது ஒழுங்கு (வாத்திமைத் தொழில் நன்றி கெட்ட தொழில் என்பது ஒரு முது மொழி.)

14. சத்திய வேதப் பயிற்சியை ஆதாரமாய்க் கொண்டிருக்கும் படிப்பே ஓர் கிறிஸ்துவனுக்குத் தக்க படிப்பென்றறிந்திருப்பது ஒழுங்கு.

15. ஆண்களும் பெண்களும் பள்ளிக்கூடம் விட்டதோடு வாசிக்கும் அப்பியாசத்தையும் கூடவே விட்டுவிடாமல், தினந்தோறும் ஏதாவது ஒரு நல்ல புஸ்தகத்தை அல்லது பத்திரிகையை வாசித்து வருவது ஒழுங்கு. (இப்படி வாசிக்கும் அப்பியாசம் மிகவும் அவசியம். அநேக பட்டணங்களில் படித்தவர்கள் பலரிருந்தும் வாசக கூடங்கள் இல்லாதிருப்பதேன்? அநேக இடங்களில் வாசக கூடங்

களிருந்தும் எட்டிப் பார்க்க எவருமில்லாதிருப்பதேன்? வருஷந்தோறும் புதுப் புத்தகங்கள் பிரசுரமாகி வந்தும், அவைகள் அச்சடித்த விடத்திலேயே அடுக்கடுக்காய் அந்துப் பூச்சிகளுக்கு இரையாவதேன்? சில பத்திரிகைகளாவது கிரமமாய் நடைபெற்று வந்தாலும், போதுமான சந்தாதார்களில்லையென்றும், இருக்கும் சந்தாதார்கள் முதலாய்த் தங்கள் வீதத்தைச் செலுத்துகிறதில்லையென்றும் அப்பத்திரிகைகள் ஒவ்வொரு சஞ்சிகையிலும் ஓலமிடுவதேன்? வாசிக்கும் அப்பியாசம் இல்லாத குறையால் தான் என்று ஒருவாய்ப்பட பதில் சொல்லக்கூடும்.)

16. தினந்தோறும் நூற்றுக் கணக்கான புஸ்தகங்கள் உலகத்தில் பிரசுரமாகி வருவதால், கண்ட புஸ்தகங்களுக் கெல்லாம் காசை யிறைக்காமல், பெரியோர் ஆலோசனையை நாடி, சிறந்த புஸ்தகங்கள் சிலவற்றைத் தெரிந்துகொண்டு அவைகளைத் திருத்தமாய்த் திரும்பத் திரும்பப் படிப்பது ஒழுங்கு.

17. எப்போதும் பூர்வீக கிரந்தகர்த்தாக்கள் எழுதிய புஸ்தகங்களையே வாசிப்பது ஒழுங்கு.

18. வேதாகமத்தில் விசேஷமாய், புது ஏற்பாட்டில் ஒரு அதிகாரத்தையாவது, தினந்தோறும் வாசித்து வருவது ஒழுங்கு. (உலகத்தின் ஆதி துவக்கி பிரசுரிக்கப்பட்ட சகல புஸ்தகங்களிலும் அதிமேன்மையான இத் திருப் புஸ்தகத்தின் சிறப்பை வருணித்துக் காட்ட எவராலாகும்! நாஸ்திகர்களுள்ளும் அக்கியானிகளுள்ளும் இதனை வாழ்த்தாதவரில்லை. இதைப் பக்திப் பற்றுதலுடன் வாசித்து வருபவர்களுக்குத் திருச்சபையும் பரிபூரண பலனை அளித்திருக்கிறது. ஆதலால் படிப்பாளிகளுள் கிறிஸ்துவர்கள் இத் திருப் புஸ்தகத்தைக் கையாடுவது அவசியம். மேலும், குருமார் பிரசங்கம் செய்யும்போது அடிக்கடி வேத வாக்கியங்களையும், வேதாகமச் சரிதைகளையும் எடுத்துப் பேசுவார்கள். இதுவுமன்றி கிறிஸ்துவ பள்ளிக்கூடத்தில் படித்து வேதாகமங்களைக் கையாடிவந்த அக்கியானிகள் முதலாய் நமது வேதசங்கதிகளைப்பற்றி பேசுவார்கள், கற்றவர்கள் என்று பெருமை பாராட்டும் கிறிஸ்துவர்கள் இச்சமயங்களில் ஆந்தைகளைப் போல் விழிப்பது என்ன வெட்கக் கேடு.)

19. தான் வாசித்த புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் கண்ட அருமையான விஷயங்களை யொரு குறிப்புப் புஸ்தகத்தில் எழுதிவைப்பது ஒழுங்கு.

20. சத்தியவேத புஸ்தகங்களையும் சரிதைகளையும், பத்திரிகைகளையும் வாசித்து, திருச்சபையின் கொள்கையையும் மேன்மையையும் அறிந்துகொள்வது ஒழுங்கு. (ஒன்றை அறிய அறியத்தான் அதன் மேல் நேசமும் பாசமும் உண்டாகும்.)

21. படிப்பாளிகள் கத்தோலிக்குப் பத்திரிகைகளுக்கு விஷயதானங்கள் செய்வது (எழுதியனுப்புவது) ஒழுங்கு.

22. படிப்பாளிகள் தங்கள் குடும்பங்களிலிருக்கும் படிப்பறியாதவர்களுக்கு ஒழிவான நேரங்களில் ஒரு நல்ல புஸ்தகத்தை வாசித்துக் காட்டுவது ஒழுங்கு.

23. கொஞ்சம் படிப்புள்ள ஆண் பெண்கள் முதலாய் சத்தியவேதத்தை சரியாயறிந்துகொண்டு, அதன் அநுஷ்டான முறைமைகளைத் தக்கபடி நடத்தி முடிக்கக் கூடுமென்றறிந்திருப்பது ஒழுங்கு.

24. புத்திசாலிகளான எளிய பிள்ளைகள் எவ்வர்தஸ்தினராயினும் அவர்கள் படிப்பில் தேர்ச்சியடைய, செல்வாக்குள்ளவர்கள் உதவி செய்வது ஒழுங்கு. (இது சிறந்த தருமம்.)

25. "கற்கக் கசடற, கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் குறள் வாக்கியப்படி படிப்பாளிகள் பிறரைவிட உத்தமர்களாய் நடப்பது ஒழுங்கு.

26. வேதாகமத்தை வாசிக்கு முன்னும் பின்னும் அதை முத்தமிடுவது ஒழுங்கு.

27. கெட்ட பதார்த்தங்களையும் பாஷாணத்தையும் உட்கொள்வதினால் சரீரத்திற்குக் கெடுதியுண்டாகுமாப்போல், வேதத்திற்கு விரோதமான புஸ்தகங்களையும், சிற்றின்பக் கதைகளையும் வாசிப்பதினால் மனதும் புத்தியும் கெட்டுப்போகுமென்றறிந் திருப்பது ஒழுங்கு (வெறும் நூதனப் பிரியத்தினால் அவைகளை வாசிப்பதாக



சொல்லத்தகாது. விஷத்தின் உருசியையறிய அதை நக்கிப்பார்ப்பவர்களு முண்டோ?)

28. ஒருவன் பேசிப்புழங்கி வரும் நேசர்களைக்கண்டு அவனது குணத்தையும் நடத்தையையும் அறிந்துகொள்வதுபோல் ஒருவன் கையாடி வரும் புஸ்தகங்களைக் கொண்டு அவனது மனநாட்டத்தை யறிந்துகொள்வது ஒழுங்கு.

29. கெட்ட புஸ்தகங்களைத் தன் வசம் வைத்திருப்பதும், பிறருக்கு அவைகளை யிரவலாய்க் கொடுப்பதும் பாவம் என்றறிந்திருப்பது ஒழுங்கு.

30. தன் வசமிருக்கும் மதவிரோதமான புஸ்தங்களையும் கெட்டபுஸ்தகங்களையும் நெருப்புக் கிரையாக்குவது ஒழுங்கு.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

புதுப்பேட்டை.

ஐயா,

இக்காலங்களில் எங்கு பார்த்தாலும் காலராவென்ற விஷநோய் பரவி அநேகரைக் கொள்ளை கொள்ளுகின்றது.

சென்ற மாதத்தில் தூத்துக்குடியில் அகோரமாக நடந்ததில் ஐந்தாம் தொன் கபிரியேல் ஜாதித்தலைமோர் அவர்கள் மரண மானதாகக் கேட்டு மிக்க விசனிக்கிறோம். இக்கொடும் நோய்க்கோர் அருமையான மருந்தை கொஞ்சக் காலத்துக்குமுன் நம்மாயனில் பிரசுரித்திருந்ததை அநேகர் கையாடி வெற்றி கொண்டதாக நன்றி செலுத்தி யிருக்கிறார்கள். அம்மருந்தை தற்போது நாமே தயார் செய்து, ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு சிறு சைஸ் புட்டி யொன்று இனாமாக அனுப்ப ஏற்பாடு பண்ணி யிருக்கிறோம். ஜனம் பெருத்த சன்னியாச, கன்னிகா மடங்களுக்கும், ஸ்கூல்களுக்கும் பெரிய சைஸ் புட்டி யனுப்பிவைப்போம்.

இந்த நோய் உண்டான காலத்தையும் காரணத்தையும் அதற்கு வேண்டிய சிட்சைகளையும் விதிகளையு மின்னும் கொஞ்சக் காலத்தில் வெளியாக்குவோம். விஷநோய்க் கோர் பூட்டு என்ற புஸ்தகத்தில் விபரமாக அறியலாம்.

மருந்து வேண்டியவர்கள் கீழ்க்கண்ட அட்ரஸுக்கு எழுதிக்கொள்ளவும்.

The American Original & Co.,
*42, 2nd Street,*
Pudupet
*Madras.*

## வேளாங்கண்ணி திரு யாத்திரை.

---

நமது நாட்டி லெங்கும் மிகப் பிரசித்தி பெற்றிலங்கும் வேளாங்கண்ணி அர்ச். ஆரோக்கியமாதாவின் திரு வாலயத்தில் வருஷா வருஷம் செப்டெம்பர் மாதம் 8-ம்தேதியில் கொண்டாடப்படும் தேவதாயாரின் மகோற்சவத்திற்கு, திரு யாத்திரைக்காரர் அவளை இரந்து மன்றாடி அவள் உதவியைக் கேட்கவும், அவள் திருவடியைப் போற்றித் துதித்துத் தங்கள் நன்றியறிதலைக் காண்பிக்கவும் நானா திசைகளினின்றும் திரள் திரளாய் வருவது யாவரும் அறிந்த விஷயமே.

திருவிழாக்காலங்களில் விசேஷமாய்த் திருநாளன்று திவ்ய பலிபூசை நடக்கும் சமயத்தில் காணிக்கைகள் செலுத்துபவர்கள் செய்யும் சந்தடியானது, 1-வது திருப்பலிபூசைக்கு வணக்கக் குறைச்சலாகவும், 2-வது திவ்வியநற்கருணை பெட்டியி லெழுந்தருளி யிருக்கும் சற்பிரசாத நாதருக்குச் சங்கையீனமாகவும், 3-வது பூசை காண்கிறவர்களுக்கும், திவ்ய் நற்கருணை வாங்க ஆயத்தமாயிருக்கிறவர்கள் சனக்கும்பலை விலக்கிக்கொண்டுபோக சக்தியற்றவர்களா யிருப்பதற்கும், பக்திக்குறைச்சலுக் கேதுவா யிருப்பதற்குங் காரணமா யிருக்கிறதுமல்லாமல், தங்கள்

பேய்க் கோவிலுக்குள் பிரவேசிக்கிறதுபோல யாதொரு மேரை மரியாதையின்றி அஞ்ஞானிகள் நமது கோவிலுக்குள் பிரவேசிப்பதற்கும், இந்த ஆலயத்தில் தேவாராதனை நடக்கும் சமயத்தில் சனங்கள் கூட்டங் கூட்டமாய் மெழுகுவர்த்திகளையும், தென்னங்கன்றுகளையும், தங்கள் தங்கள் கைகளிலேந்திக்கொண்டு ஒருவர்மேலொருவர் விழுந்து சந்தடி செய்வதை பதிதர் பார்த்து திருச்சபையைப்பற்றி குறைவா யெண்ணுவதற்கும், கேலி பண்ணுவதற்கும், நகைப்பதற்கு மிடமா யிருக்கிறது மிகவும் விசனத்துக் குரியது.

இவ்வுற்சவத்திற்கு வருகிற சனங்களுக்கு குடி வெறியினால் பக்திக்குறை உண்டாகாதபடி சாராய முதலான லாகிரிவஸ்துக்களின் குத்தகையை சர்க்கார் அவ்விடத்தில் ரத்து செய்ததினாலுண்டாகும் நன்மை கொஞ்ச மல்ல. இவ்விதமே காணிக்கை செலுத்துபவர்களா லுண்டாகிற குறைகளையும் நிவர்த்திக்க ஒரு வழி ஏற்பட்டால் நலமாயிருக்கும். 1-வது திவ்யபூசை நடக்கும் நேரங்களில் காணிக்கை செலுத்தாமலும், அல்லது காணிக்கை செலுத்துவதற்கென்று பிரத்தியேகமான ஒரு இட மேற்பாடு செய்தாகிலும், 2-வது திருவிழாக்காலங்களில் விசேஷமாய்த் திருநாளன்று திவ்யநற்கருணை ஸ்தாபகமில்லாமலு மிருந்தால் மேற்சொன்ன குறைகளுண்டாகாம லிருப்பது மன்றி, திரு யாத்திரைக்காரர் தங்கள் பக்திக்கிருத்தியங்களை சரிவரச்செய்யவும், தேவதாயாரின்மேல் அதிக பக்தி வைராக்கியங் கொள்ளவும், அஞ்ஞானிகள், பதிதர் முதலான இதர மதஸ்தர்களுக்கு நன்மாதிரிகையாயிருக்கவும் உதவும்.

கத்தோலிக் வேதம் பெரும் கீர்த்தியுமடையவும், அதினால் சர்வேஸ்பரனுடைய நாமம் மகிமைப்படவும், தேவதாயாரின் வல்லமை உலகமெங்கும் பரம்பவும், உலகத்திலுள்ள எண்ணிடங்காத வேதங்களில் கத்தோலிக் வேதமே சத்தியமானதென்றும், மெத்தவும் பக்தி வைராக்கிய முடையதென்றும் புறமதஸ்தர்கள் கண்டு பிடிக்கவும், குணப்பட்டு சர்வேஸ்பரனுடைய பாதத்தண்டை சேரவும், அதினால் திருச்சபை விருத்தியடையவும் வேணுமென்கிற ஒரே கருத்துடன் இக் கடிதத்தை எழுதத் துணிந்தேன்.

ஆதலால் இத்திருவிழா உலகப்பிரசித்தமாய் மேன்மையாயும், சிறப்பாயும் கொண்டாடப்படும்பொருட்டு சில கனதனவான்கள் உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் தங்கள் பொருள்களை செலவழிக்கிறார்கள். இவர்கள் மேற்சொல்லப்பட்ட காரியத்தையும் கவனித்து அதற்கேற்ற வழிப்பாடுகளை குருமார்களைக் கொண்டு சீர்திருத்தம் செய்தால் அநேக நன்மையாயிருக்கும். திவ்ய நன்மை வாங்குவதானது காணிக்கைச் செலுத்துவதைக் காட்டிலும் அதிமுக்கிய காரியமாதலாலும், கொஞ்சம் பொறுத்து திவ்விய பூசைமுடிந்தபின் அதைச் செலுத்திக்கொள்ளலாமாதலாலும், திவ்ய நற்கருணைவாங்க ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு எவ்விதமான இடைஞ்சலுண்டாகாத படிக்குத் திருயாத்திரையாய் போகிற கிறிஸ்தவர்களும் திவ்யபலிபூசை நடக்கும் சமையங்களில் தங்கள் காணிக்கைகளைச் செலுத்தாமலும், அஞ்ஞானிகள் உற்சவ நாட்களில் தங்கள் கோவிலில் செய்யும் ஆரவாரத்தை போல் செய்யாமலும், சுத்தகருத்தின்றி பக்திகுறைவினிமித்தம் தேவ கோபாக்கினையால் விஷபேதி, காய்ச்சல், தண்ணீர் விபத்து முதலான ஆபத்து உண்டாகாதபடிக்கும், நாகரிக முதிர்ந்த இந்தகாலத்தில் இதரமதஸ்தர்களுக்கு நமது வேதத்தின் மட்டில் பயபக்தி யுண்டாக்க கூடியவிதமாய் மேரை மரியாதையுடன் நடக்கவும் தங்களால் கூடியமட்டும் பிரயாசை எடுப்பார்களாக.

கொல்லம் } இங்ஙனம்,
2-7-14. } கண்டு விசனித்தோன்.

## சுதேச குருக்கள்.

சுதேச கிறிஸ்தவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதற்கு சுதேச குருக்கள் அத்யாவசியம் என்பது காலஞ்சென்ற நமது ஞானப்பிதா பரிசுத்த பதின்மூன்றும் சிம்மராயப் பாப்பரசருக்கு, அவர் மரணமாவதற்கு அனேக வருடங்களுக்கு முன்னேயே தெரியவந்தது. பூர்வக் தொட்டுத் திருச்சபை சொற்படி கேட்டுவந்த மேனாட்டுத் துரைத்தனங்களிற் சில, காலவித்தியாசத்தால் ஒருவித மமதையுள் ஆழ்ந்து திருச்சபையை விட்டுப் பிரிந்து அந்நாட்டில் குருக்களின் அபிவிர்த்திக்குக் குந்திரம் விளைக்க, அஃதால் இன்றளவும் வந்துகொண்டிருந்த ஐரோப்பியக் குருக்கள்தொகை இனிக் குறைந்துபோகுமென்று தேவாதீனமாய் சிம்மராயர் அறிந்துகொண்டே மேற்சொன்ன சுதேச குருக்கள் அத்தியாவசியத்தை யிட்டு அவர் நினைக்கக் காரணமா யிருந்தது. இதை எண்பித்த மேரையாய் இலங்கையில் கண்டிமாநகரத்தில் தமது சொந்தச் செலவிலேயே "பேப்பல் ஸெமினெரி" யென்பதாய் ஓர் குரு மடத்தை ஸ்தாபித்தார். ஸ்தாபித்த சில வருடங்களுக் கெல்லாம் தம் தீர்க்கதரிசனம் நிறைவேறும் காலம் அணுகிவந்தாற்போலத் திருச்சபையின் தலைச்சன் பிள்ளையாகிய பிரான்ஸிய துரைத்தனம் திருச்சபையை விட்டுப் பிரிந்துகொள்ளவேண்டு மென்கிற போலிக் கொள்கையை நிலைநாட்ட எண்ணியது. எண்ணியதுபோலப், பரிசுத்த தாதை பத்தாம்பத்தி நாதர் காலத்தில் அது பிரிந்தேபோனது.



பிரிந்தபின் அது நமது சத்திய தாய்க்குச் செய்து வரும் நிர்ப்பந்தமும் நிஷ்டூரங்களும வாய்விட்டுச் சொல்ல எவர் தரம்! திருச்சபைச் சொத்துக்களில் அநேகத்தைப் பறிமுதல் செய்து அந்தோ! தேவாலயங்களை நாடகசாலையாக்கினது. கன்னியர் என்ன, சந்நியாசிகள் என்ன இவர்களெல்லோரும் துக்குடி துக்குடியாய்த் தூரத்திற் கொன்றுகினர். மடங்களில் அநேகம், சபைகளில் அநேகம் பாழாக்கப்பட்டன. குருக்கள் எண்ணிக்கை வரவரக் குறைந்தேபோகின்றது. இப்போது ஏதோ சிறிது மாற்றம் அடைந்திருக்கிறதுபோலவும், நல்ல திசை கிட்டி வருகிறதுபோலவும் சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள். என்றாலும் என்ன? இது நெல்லின் உமியைச் சிறிது பிளந்து பிளந்ததைத் திரும்பவும் பிணைத்து முளைக்க வைத்ததுபோலும்.

பிரான்சிய துரைத்தனத்தின் கதி சமீபத்தில் போர்த்துக்காலுக்கும் பிடித்தது. போர்த்துக்காலோ குருக்கள்விஷயத்தில் பிரான்ஸைப் பார்க்கிலும் வெகு கேவலமாய் நடந்துகொண்டது. இன்னும் கொஞ்ச காலத்திற்குள் இஸ்பானியாவின் கதியெப்படியோ கடவுள்தான் அறிவார்! கத்தோலிக் நாடுகளாகிய பெல்ஜியம், ஆஸ்திரியா இவைகளைப்பற்றி தீர்க்கமாயச் சொல்ல இப்போது ஒன்றும் வழியில்லை. இத்தாலியாவை யிட்டோ சொல்லத் தேவையில்லை. இந்தப்படி யிருக்கிறது மேனாட்டுச் சிறப்பு. ஆயினும், உலகமுடியு மட்டும் உங்களோடிருப்போம் என்னும் தேவ திருவாக்குப் பொய்யாகப் போகிறதில்லை. நல்லது, இப்போது இந்திய மக்களின் ஈடேற்றம் இந்தியக் குருக்களால் நிறைவேற வேண்டியிருக்கிறது. இது காரியத்தில் பாரதகுல கிறிஸ்துவர்களாகிய நாம் செய்ய வேண்டியதென்ன? சகோதரர்களே, நமக்கு எவ்வளவோ காலத்திற்குப் பின் வேதத்திற்கு வந்த வேளாள சகோதரர்கள் இதுவரை எண்ணிறந்த குருக்களைக் கொடுத்து விட்டார்கள். நாமோவென்றால், வேதங் கிடைத்த இந்த நானூறு வருடத்தில் ஏறக்குறைய பத்துக் குருக்களைமாத்திரம் நம்குலத்தில் கண்டிருக்கிறோம். சகோதரர்களே, இது எவ்வளவு கொஞ்சமான தொகை! நம் குலத்தில் குருக்கள் தொகை இவ்வளவு குறைந்திருக்கக் காரணமெல்லாம் நம்மில் சின்னஞ் சிறுவர்களுக்கு இளமையிலேயே சன்மார்க்கப் படிப்பைக் கற்றுக்கொடாமல், அவர்கள் இஷ்டம்போல நடக்கவிட்டுவிடுவதே யொழிய மற்றப்படியல்ல. நம்பிள்ளைகளில் அநேகர் தாழ்ச்சியில் வெகு பூஜ்ஜியமா யிருக்கிறார்கள். கத்தோலிக் வேளாளரோ அப்படியல்ல; எந்த இடத்தில் போனாலும் தங்கள் தாழ்ச்சியைக் கைசோர விடுகிறதில்லை. தாழ்ச்சியென்கிற புண்ணியத்தை வேளாண் சிறுவர்கள் தங்கள் தாய் தகப்பனிடத்திலேயே கற்றுக்கொள்ளுகிறார்கள்.

அஸ்திவாரம் தாழத் தோண்டினால் கட்டிடத்தை வெகு உயரமாய் எழுப்பலாம் "பணியுமாம் என்றும் பெருமை" என்பது நமக்குப் பள்ளிப் பாடமாய் கொடுபட வேண்டும். நமக்குப் பின் வந்த வேளாளர் உலக விவகாரத்தில் நம்மைப்பார்க்கிலும் மேலான திசையில் இருப்பதற்கு "இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலாதவர்" என்னும் ஆதாரத்தைக் கொண்டு, வேளாண்குல க்ஷேமலாபத்திற்காக வேண்டுதல்செய்து தபசு பண்ணுவதற்கு அவ்வேளாண்குலத்தில் எண்ணிறந்தகுருக்கள் இருப்பதும் நம் குல ஈடேற்றத்திற்காக வேண்டிக்கொள்வதற்குப் போதுமான குருக்கள் இல்லாமற்போனதுமே காரணம். சகோதரர்களே, மேற்சொன்ன வசனம் ஏதோ இங்கு நேரப்போக்கிற்காக அல்லது இவ்வியாசத்தின் இடம் நிரம்புதற்காகச் சொன்ன வசனமல்ல. உண்மையை உண்மையாகச் சொன்னவசனம். ஜாதிவித்தி

யாசம் கெட்டதுதான். ஆனால் ஜாதியபிமானம் பாவம் அல்ல. இவ் வபிமானம் சர்வத்தையும் பரித்தியாகம் பண்ணிய சற்குணவான்களுக்குங் கூட அவரது இருதய கமலத்தின் அந்தரங்க பாகத்தில் மூர்ந்தின பொருளாயிருக்கும். ஆகையால், சகோதரர்களே, நம் குல ஈடேற்றம் நம் குலத்திலிருந்து எழுகின்ற குருப்பிரசாதிகளாலும் தபோதனர்களாலும் சித்திபெறற்பாலதாயிருக்கின்றது.

நம் குலத்திலிருந்து இன்னும் அநேக குருக்கள் உற்பத்தியாகி அவர்கள் எல்லோரும் நமது ஆத்தும இரக்ஷணிய அலுவலில் வெகு உற்சாகத்தோ டுழைக்க நாம் இப்போதே முயற்சியெடுக்க வேண்டும். நம் குலக் குருக்களை நம் மத்தியில் பார்ப்பது மட்டும் போதாது. மஹா வந்தனைக்குரிய செலஸ்கி ஆண்டவனவர்கள் சொன்னதுபோல நம் குலக் குருப்பிரசாதிகள் தூர தேசங்களுக் கெல்லாம் அப்போஸ்தொலிக் ஸ்தானாபதிகளாய் நியமிக்கப்படுகிறவரையில் நாம் இடைவிடாது வேலை செய்யவேண்டும். பொருளுடையார் பொருளையும் புத்திரபாக்கிய முடையார் சற்புத்திரர் பலரையும் தத்தம் பண்ணி நமக் கிப்பொழுது அத்யாவசியமாய் வேண்டியிருக்கிற சுதேச குருக்கள் தொகையை அதிகப்படுத்த முயற்சி செய்வார்களாக.

M. P. Mascarenhas.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல வர்த்தமானம்.

---

**சென்னை ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ்.**-சென்னை ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ்ஸான ஆனரெபில் ஸர் சார்லெஸ் ஆர்னலட் வைட் ரஜாவில் போயிருக்கிறபடியால், அவருக்குப் பதிலாக ஆனரெபில் ஸர் ஜான் எட்வார்ட் வாலிஸ் என்பவர் சீப் ஜஸ்டிஸாக வேலை பார்த்து வருகிறார். இவர் ஒரு கத்தோலிக்கர்.

**ஓர் பிரபலஸ்தர் மனந் திரும்புதல்.**—சில வருடங்களுக்கு முன்னர் நம் இந்தியாவில் கவர்னர் ஜெனரல் என்ற தலைமை உத்தியோகத்தை வகித்த லார்ட் ஆக்லாண்ட் பிரபுவின் குமாரர் திருச்சபை மடியில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாரென்று கேள்விப்பட்டுச் சந்தோஷமடைகிறோம்.

**பால் ஸ்நானம்.**—அமெரிக்காவிலுள்ள பல ஸ்திரிகள் ஸ்நானத்திற்கு பாலை உபயோகித்து வருகிறார்கள். நியூயார்க் என்ற நகரில் பால் ஸ்நான கட்டிடங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன பால் ஸ்நானம் செய்தால் அழகை அதிகரிக்கச் செய்கிறதென்றும் அவர்களுக்குள் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம். இது வெல்லாம் பணச்செருக்கே!

**அந்தரத்தி லோடும் ரையில்.**—பூமியில் ஓராதாரமு மின்றி அந்தரத்தி லோடக்கூடிய ரையில் வண்டி யொன்றை பாச்சலெட் என்னும் பிராஞ்சியர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த வண்டியானது மின்சாரத்தின் உதவியால் செல்லுமென்றும், அலுமினியத்தினால் செய்யப்பட்டிருக்கிறதென்றும், மணி யொன்றுக்கு 300 மைல் வீதம் ஓடுவதாகவும் கூறப்படுகிறது. இன்னுஞ் சில காலத்தில் சந்திர மண்டலத்தையும் எட்டிவிடலாம்போலும்!

**சோளத்தின் உபயோகம்.**—கிரீசிலும் அமெரிக்காவிலும் மக்காச்சோளக் கதிரில் நின்று தொங்கும் பட்டுநூல் குஞ்சம்போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக்கொடுத்தால், நீரடைப்பு, நீர்ச்சுருக்கு முதலான வியாதிகள் குணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக்காச்சோளக் கதிரிலுள்ள தானியத்தை உதிர்த்த பின்னுள்ள கத்தையை எரித்த சாம்பலுடன் சாதாரணமாக உப்பு கலந்து கொடுத்தால், நெஞ்சுச் சளியும், அதனால் உண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம்.

**ஐந்து அடி நீள தலைமயிருள்ள ஸ்த்ரீ.**-சீன மொட்டகிராப் வேடிக்கையை நடத்தும் மிஸ்டயேன் ஒஸ்ட் என்பவளுடைய தலை மயிர் 5 அடி நீளம் இருக்கிறதாம். அதில் 3 அடி மயிரை ஓர் பாரிஸ் வர்த்தகனுக்கு 1000 பவுனுக்கு விலைக்குக் கொடுக்கப்போகிறதாகவும், அந்தமயிரை கத்தரிப்பதற்கு தங்கத்தினால் ஓர் கத்தரிக்கோல் செய்யப்பட்டிருக்கிறதாகவும், அந்த மயிரைக் கத்தரிக்கும்போது அனேக சிநேகிதர்கள் விஜயம்செய்யப் போகிறதாகவும் வதந்தி. அந்தக் கத்தரிக்கோலை அவளுக்கே பரிசாகக் கொடுத்து விடுவார்களாம். இக்காலத்திலே மயிருக்கும் யோகம் பிறந்திருக்கிறது!



**பரதவர்ம பாண்டிய னவர்களின் மரணம்:**-ஸ்ரீவல் ஸ்ரீ மதுரைத் தட்டுடன் சேர்ந்த எழுகடற்றுறைக்கும், பரதகுல பாண்டியர்க்கும் அதிபராகிய சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் கபிரியேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தா வாஸ் பரதவர்ம பாண்டியனவர்கள் நிகழும் 1914-ம் ௵ ஜூலை ௴ 5-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் தூத்துக்குடியில் தமது அரண்மனையில் மரணமான செய்தியை அறிந்து துக்கிக்கலானோம். இவருடைய அருமை சகோதரரான மயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். மோத்தா வாஸ் சுவாமிகளுக்கும், இன்னுமற்ற இன ஜனங்களுக்கும் நம்முடைய மனப்பூரண அநுதாபம்.

**போலீசு உத்தியோக ஸ்திரீகள்.**—பெண் பாலார் போலீஸ் உத்தியோகத்துக்குத் தக்கவரா என்ற கேள்வி வெகுநாளாகப் பிறந்திருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணம், கானடா, ஜெர்மனி, ஒலாந்து, டென்மார்க்கு நார்வே, சுவீடன், ஆஸ்டிரியா, ருஷியா, ஆகிய இத் தேசங்களி லெல்லாம் பெண்கள் போலீஸ் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் அலுவல்களை வெகு திருத்திகரமாய்ச் செய்து வருவதினால் தேசத்துக்கு அனேக நன்மைகளுண்டாகின்றன வென்று பயோனீர் என்ற பத்திரிகை கூறுகின்றது.

**ஒரே சாயலான இரு சகோதரர்கள்.**-பிராஞ்சு தேசத்திய பட்டாள மொன்றிலே ஒரே சாயல், நிறம், உயரம், தேகக்கட்டு, சரீர அமைப்பு முதலிய சகலத்திலும் ஒற்றுமையுள்ளவர்களான இரு சகோதரர்கள் ஒரே பட்டாளத்தில் சோல்ஜர்களா யிருந்தார்கள். பல சமயங்களில் இவர்களுக்கு மேலதிகாரிகளா யுள்ள ஆபீசர்கள் இவர்களில் ஒருவனுக்கு இட்ட கட்டளையைப்பற்றி தடுமாற்றமாய் மற்றொருவனை விசாரிப்பார்கள். அதற்கவன் அவர்கள் சொல்லுகிற விஷயத்தைக் குறித்துத் தனக்கொன்றுமே தெரியாதென்று விழிப்பான். இப்படி நடந்துவரும்போது ஏதோ ஒரு குற்றத்தினிமித்தம் இச் சகோதரர்களில் ஒருத்தனைத் தண்டித்துச் சிறையிலடைத்தார்கள். குற்றஞ் செய்யாத மற்ற சகோதரன் வேண்டிய போதெல்லாம் தன் சகோதரனை விடுவித்துத் தான் சிறையிலிருந்துகொள்வான். இதை மேலதிகாரிகள் வெகுநாளாகக் கண்டு பிடிக்காதிருந்து கடைசியா யொருநாள் இவ்விரு சகோதரர் செய்து வருகிற மோசத்தைக் கண்டுகொண்டு, ஒரு சகோதரனை மீசையுந் தாடியும் வைத்துக்கொள்ளும்படிக்கும் மற்றொருவனை ஒன்றுமே வைக்கக் கூடாதென்றும் உத்தரவு செய்தார்கள். இதுவும் காலத்துக்கேற்ற கோலம் போலும்!

**ஓர் பாமரன்.**—ஒருவன் தன் சிநேகிதனிடத்தில் தன் பெண்சாதிக்குப் பணத்தாசை அதிகமென்றும், அதைப் பற்றி தான் என்ன புத்தி சொன்னாலும் அவளுக்கு ஏறுவதில்லையென்றும், மூடத்தனமான காரியங்களைச் செய்வதாகவும் முறையிட்டுக்கொண்டான். சிநேகிதன் அவனைப் பார்த்து அவளென்ன செய்தாள் என்று கேட்க, அவனதற்கு, "நேற்றையத்தினம் நான் ஊருக்குப் போயிருந்த வேளையில் என் குழந்தை யொன்று கால் ரூபாயை விழுங்கிவிட, அதற்கு என் பெண்சாதி வைத்தியன் ஒருவனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்து, பிள்ளையின் தொண்டையிற் சிக்கிக்கொண்டிருந்த கால் ரூபாயை எடுக்க வைத்தாளாம். அவளுக்கு என்ன மதியீனம்! அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதுபோல கால் ரூபாய்க்கு ஆசைப்பட்டு ஐந்து ரூபாய் நஷ்டமடைந்தாள்" என்றானாம். பிள்ளையின் உயிரைவிட பணத்தையே அதிகமாய்ப் பாவித்த பாமரன் இவன் தானன்றோ?

**லேடி ஆர்டிஞ்சின் மரணம்.**—நமது இந்திய இராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்டிஞ்சு பிரபு அவர்களின் அரிய பத்தினியாகிய லேடி ஹார்டிஞ்சு பிராட்டி அவர்கள், லண்டன் நகரத்துக்கு தேகாரோக்கியத்தின் பொருட்டு போனவிடத்திலே அசௌக்கியமுற்று சென்ற௴ 11-ந் தேதி தேக வியோகமானதைக் கேட்டு மிக்க விசனமுற்றோம். இவருக்கு நேர்ந்த இந்த அகால மரணத்தினிமித்தம் இவ

ருடைய பர்த்தாவுக்கு நாம் நமது மனப்பூர்வமாய் அநுதாபங் கூறுகின்றோம். இவ்வாறே இவருக்கு இந்தியாவின் எப்பக்கத்திலிருந்தும் வந்த அநுதாபத் தந்திகளுக்கு கணக்கில்லை. நமது தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியன் சங்கத்தாராலும், சென்னை கத்தோலிக்குகிராடியுவேட்ஸ் யூனியன் சங்கத்தாராலும், சென்னை, மயிலை முதலிய மேற்றிராசனங்களாலும் அநுதாபத் தந்திகள் அனுப்பப்பட்டன. இவைகளுக்குத் தக்க பதில் தந்திகளுங் கிடைத்தன.

**சிங்கத்தைப் புலி கொன்றது:**—நியுயார்க்கென்ற பட்டணத்தில் காட்சி சாலையில் வைத்து வளர்க்கப்பட்டிருந்த ஒரு சிங்கமானது தானடைபட்டிருந்த கூண்டைவிட்டு வெளியேறி தனக்கு அடுத்தாப்போல் அடைபட்டிருந்த ஒரு பங்காளப் புலிக் கூண்டின் கதவு திறந்திருக்கக் கண்டு, அதனுள் பிரவேசிக்கப் போகையில் இரண்டு மிருகங்களுக்கும் கோரமான சண்டை மூண்டுகொண்டது. அச் சண்டையை நிறுத்தி அம் மிருகங்களிரண்டையும் பிரித்து அதனதன் கூண்டுகளில் அடைக்க ஜனங்கள் பட்ட பிரயாசையெல்லாம் நிஷ்பலமாயின. அதேதென்றால் ஒரு மணி நேரம் இரண்டும் வெகு பராக்கிரம கோபாவேசத்தோடு சண்டை செய்து கடைசியாய் ராஜா என்ற பங்காளத்துப் புலியானது சிங்கத்தின் கழுத்தை முறித்து அறைந்து கொன்றுவிட்டது. இப்படித்தான் ஒருகாலத்தில் பிரக்யாதி பெற்றிருந்தவர்கள் அதினால் மமதை யடைந்து நிஷ்காரணமாய் அண்டை அயலார்களுடன் சண்டை யிட்டுக் கடைசியாய்த் தங்களுக்கிருந்த கீர்த்தியையும் சொத்தையும் இழந்து பங்க மடைகிறார்கள். தன் வலியும் மாற்றான் வலியுந் தெரிந்து யுத்தந் தொடுப்பதே விவேகம்.

**ஓர் எச்சரிப்பு**—மைசூரில் வசிக்கும் ஒரு ஹிந்து சிறுவன் தானிருந்த மாடி வீட்டுக்கு அருகில் போடப்பட்டிருந்த தந்திக் கம்பியைத் தொட்டால் என்னமாயிருக்குமோ பார்ப்போமென்று நினைத்து, அதை யெட்டித் தொட்டான். அக்ஷணமே பிரக்கினை யற்று கீழே விழுந்துவிட்டான். அவனுடைய கை நன்றாய் வெந்துபோய்விட்டது. அந்தக் கையை வெட்டி யெறிந்தா லல்லாது அவன் பிழைக்கிறது கடினமாம். மின்சாரம் அவன் தொட்ட நேரத்தில் அதிகமில்லாததால், அவன் கையோடு போயிற்று. மேற்படி மின்சார சத்து அதிகமாயிருந்திருக்குமானால் பையன் தொட்டவுடனே இறந்துபோ யிருப்பான். முன்காலத்தில் நிழல் தரத்தக்க மரங்கள் ஒவ்வொரு வீதிகளிலும் சாலை சாலையாக வைத்து பயிராக்கி ஜனங்களுக்குக் காற்றுக்கும் நிழலுக்கும் வெகு சௌகரியமாயிருந்தது. இக்காலத்திலோ அம் மரங்க ளெல்லாம் மறைந்துபோக அவற்றி னிடமாய்த் தூண்கள் மிகவும் நெருக்கமான சந்து பொந்துகளிலுங் கூட நாட்டப்பட்டு, அவைகளின் பேரில் தந்திக்கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. இதனால் வர்த்தக முதலிய சில விஷயங்களுக்கு அநுகூலமே யானாலும் இப்போது சொல்லப்பட்டபடி அநேக துன்பகளுக்குங் காரணமாயிருக்கிறது. உலகத்தில் நன்மை கலப்பில்லாத தின்மையும் தின்மை கலப்பில்லாத நன்மையுமில்லை.

**மரித்தவன் உயிர்த்தான்.**—மாண்டலே நகரில் ஒருவனுக்குப் பேதிகண்டு ஸ்மாரணையற்றுப் போனதினால் அவன் இறந்தானென்று நினைத்து அவனை ஆற்றங்கரை மணலிலே புதைத்துவிட்டார்கள். இறந்த பதின்மூன்றாம் நாள் அவன் ஆத்துமாவுக்கான கிரியைகள் நடத்தி பிராமண போசனஞ் செய்துகொண்டிருக்கையில், இறந்தவன் வந்தானாம். எல்லாரும் அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டு எப்படி பிழைத்து வந்தானென்றுகேட்க, அவன் தனக்கு அறிவு வந்தவுடனே குழியிலிருந்து தட்டி முட்டி எழும்ப,மேலிருந்த மணல் விலகிக்கொடுத்ததென்றும், வெகு பிரயாசத்தோடு பக்கத்து ஊருக்குச் சென்று அங்கே இத்தனை நாளும் செய்துகொண்ட வைத்தியத்தினால் குண முண்டாயிற் றென்றுஞ் சொன்னான். சென்ற மாதப் பத்திரிகையில் விஷக்கடியினால் ஒருவன் மூர்ச்சையாய்க் கிடக்கவே, அவன் மரித்தா னென்று அவனுடைய சவச் சேமத்துக்கு ஆயத்தமா யிருக்கும்போது திடீரென அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தானென்று தெரிவித்தோம். இப்பவும் பேதி அதிகமாகிக் களையுற்றுக்கிடந்தவனைச் செத்துப்போனானென்று தீர்த்து, புதைத்துவிட்டார்களென்று தெரியவருகிறது. நல்லவேளையாய் அவனை மணலில் ஆழமில்லாக் குழியில் புதைத்திருந்தபடியால் தப்பித்து வெளியே வந்தான். நமது சென்னையில் நடப்பதுபோல் அவனை மூன்று கெஜ ஆழமான குழியில் போட்டு அடக்கிவிட்டிருந்தால், அவன் பாடு முடிந்தேபோயிருக்கும் என்பதற்குச் சந்தேகமென்ன? காலக்கிரமப்படி உலக முழுமையிலும் நாளொன்றுக்கு இலட்சத்து இருபதினாயிரம் பேர் சாகிறதாக கணக் கேற்பட்டிருக்கிறது. இத் தொகை போதாதென்றாற்போல், நோயாளி யெந்த க்ஷணம் கண்ணை மூடுவானோவென்று பக்கத்திலிருந்து பார்த்திருந்து உயிரோடேயே புதைத்துவிடுகிற இந்த யமதூதரை நினைக்கும்போதே பயமாயிருக்கிறது. கண்மூடி தூங்குகிற நோயாளிகள் இவ்விஷயத்தில் எச்சரிக்கையா யிருப்பார்களாக!



**சென்னை அதிமேற்றிராணியார்,**—நமது சென்னை அதிமேற்றிராணியா ரவர்களைப் பற்றி நாம் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி இவர் அர்ச். பாப்பானவருடைய பேட்டியைப் பெற்றுக்கொண்டபின் தமது மேற்றிராசனத்தின் அலுவலாய் ஐரோப்பாவின் இன்னும் பல இடங்களைச் சந்தித்து வரும்போது, ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்துகொள்ள நேரிட்டது. அவருக்குச் சத்திரம் வைக்க ஒன்றரை மணி நேரம் பிடித்ததாம். ஆண்டவருடைய தயவால் இப்போது அவருக்கு நோய் குணப்பட்டு வருகிறதென்று கேள்வி யுற்று சந்தோஷிக்கிறோம். கூடிய துரிதத்தில் இவருக்குப் பூரண சுகமுண்டாகித் தமது ஸ்தானத்துக்குச் சிரஞ்சீவியாய்த் திரும்பி வரும்படி வேண்டிக்கொள்ள நம்முடைய சந்தாதாரர்க ளெல்லோரையுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**சீனத்தில் வேதவிர்த்தி**.--சென்ற ஒரு வருடத்துக் குள்ளாக சீனா தேசத்தின் இராஜதானியாகிய பெக்கின் பட்டணம் ஒன்றில் மாத்திரமே 34,000, பேர் ஞானஸ்நானம் பெற்றார்களாம். இன்னும் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு 32,000 பேர் மந்திர குறிப்பிடம் படித்து வருகிறார்கள். போதுமான குருக்கள் இருந்தால் வேண்டியபேர் மனந் திரும்புவார்க ளென்றும் சொல்லப்படுகிறது. வேதசாட்சிகளுடைய இரத்தமானது அஞ்ஞானிகள் சத்திய கிறிஸ்துவர்களாக வித்தா யிருக்கிற தென்பதற்கொப்ப சென்ற நூற்றாண்டுகளிற் சீனாதேசத்தில் வேதசாட்சிகளால் ஏராளமாய்ச் சிந்தப்பட்ட இரத்தமே இக் காலத்தில் அத் தேசத்தின் பேரில் ஆண்டவருடைய கிருபைக் கண் திரும்ப காரணமாம்.

**கோவிலில் நடந்த ஒரு திருட்டு.**—சில தினங்களுக்குமுன் பெஸ்வாடா வென்ற ஊரிலுள்ள நமது தேவாலயத்தில் தேவதுரோகமான திருட்டொன்று நடந்தது. இத் திருட்டில் சம்பந்தப்பட்ட படுபாவிகள் கோவில் கதவை இரவில் உடைத்து உள்ளே பிரவேசித்து, தேவ நற்கருணை பெட்டியையும் உடைத்து, அதனுள்ளிருந்த 200 தேவநற்கருணை ஒஸ்திகளடங்கிய இரண்டு பாத்திரங்களையும், சற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது கதிர்பாத்திரத்தில் வைக்கிற நற்கருணை ஒஸ்தியின் விமானத்தையும் கவர்ந்துகொண்டு ஓடிவிட்டார்கள். மறுநாட் காலையில் தேடிப் பார்த்ததில், தலை வெட்டி வேதக்காரரென்று சொல்லப்படுகிற இரகசிய சபையார் கட்டிடத்தின் எதிரே சில சில தேவ நற்கருணை ஒஸ்திகள் சிதறிக்கிடந்தன. இக் கொடிய தேவ துரோகத்தைக் கட்டிக்கொண்டவர்கள் இன்னாரென்று இது வரையிலும் கண்டு பிடிக்கப்படவில்லை. அக் கோவில் விசாரணைக் குருவானவரும் அங்குள்ள கன்னியாஸ்திரீமார்களும் மற்றுமுள்ள கிறிஸ்துவர்களும் ஒன்று சேர்ந்து சற்பிரசாத நாதருக்குச் செய்யப்பட்ட இந்த நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக சற்பிரசாதத்தை எழுந்தேற்றஞ் செய்து வெகு ஆடம்பரத்தோடும் பக்தி வணக்கத்தோடும் சுற்றுப் பிரகாரஞ் செய்தார்கள்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிர

சுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறேம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

## நன்மரண அறிக்கைகள்.

### தீத்தாங்குளம்.

எனது பிதா, யோவான் உபதேசியார் 1850-ம் வருஷம் பிறந்து, 1886 வரை புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்திலிருந்து வட திருநெல்வேலியின் அப்போஸ்தலராகிய, Late, Revd. Fr. J. B. TRINCAL, S.J., சுவாமிகளால் சத்திய திருச்சபை உபதேசியாராக்கப்பட்டு, கடைசி தேவத்திரவிய அநுமானங்களெல்லாம் சரிவரப்பெற்று 19-7-1914 ல் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். நித்திய இளைப்பாற்றியை ஆண்டவர் கொடுப்பாராக.

His sorrowing son,
J. M. Louis.

### இரங்கூன்.

இதனால் சகல நண்பர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

நிகழும் 1914-ஞு ஜூலை-மீ 5-உ ஞாயிற்றுகிழமை காலை 5 மணிக்கு, எனது அருமை தாயாராகிய, இராஜாத்தி அந்தோனியம்மாள், தனது 50-வது பிராயத்தில் பரலோக பிராப்தி அடைந்தனள். அன்று மாலை 5-மணிக்கு கீமன்டைன் கத்தோலிக்கு கல்லறையில் சங். இராஜரிஷி எச். டிசெல் (Revd. Fr. H. Dessalle) குருசுவாமியாரால் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் யாவரும் மரித்தவளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கின்றனன்.

Rangoon, 10th. July, 14. — இப்படிக்கு, R. L. மனுவேல்,
Financial Commission clerke's Office.

### வட ஆற்காடு ஜில்லா—ஆரணி.

இந்தியா, பர்மா முதலிய இராச்சியங்களில் மிலிட்டேரி டாக்டராகவும், அதன் பிறகு தென் இந்தியா, சென்னை தென் மருட்டா இருப்புப்பாதை கம்பனிகளில் அசிஸ்டன்ட் சேர்ஜனாகவுமிருந்து பாக்காலா ஜங்ஷனில் தேகவியோகமான எனது தமையனார் டாக்டராது ஞானதிக்கம் பிள்ளையவர்கள் சிரேஷ்ட குமாரத்தியும், சென்னை, மண்ணடி மாணிக்கம்பிள்ளை குமாரர், சென்னை தென் மருட்டா இருப்புப்பாதை கம்பனி அப்பாத்திகிரி அழகிய சாமிப் பிள்ளை பத்தினியாருமாகிய சௌ. தீரசம்மாள் என்னும் சிறுமாது தனது 22-ம் பிராயத்தில் தனது முதல் பேற்றில் ஒருபெண் குழந்தையைப்பெற்று, மறுநாள் விஷஜுரம் கண்டு இருபது நாள் கடின வியாதியுற்று, டாக்டர்மார்களாகிய தனது சிறிய தகப்பனார்மார் இருவரும் தனது பத்தாவும் செய்துவந்த எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல், சென்ற மார்ச்சு மாதம் 3-ம் தேதி பாவசங்கீர்த்தனம், நற்கருணை, அவஸ்தைப் பூசுதல் முதலிய கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைப் புத்தி தீட்சண்யத்துடனும் பத்தி மனஸ்தாபத்துடனும் சரிவரப் பெற்றுக்கொண்டு தனது நேச பத்தா, தான் பெற்றெடுத்த சிசு, தனது மாமனார் மாமியார், தனது அத்தை, சிற்றப்பன்மார், சிற்றன்னைமார், தம்பி தங்கைமார், தன்னைச் சூழ்ந்துநின்ற மற்ற சுற்றத்தார் யாவரும் கண்கலங்கி துக்கித்தழ, இந்த கண்ணீர் கணவாயில் தன் வாழ் நாளை முடித்துக்கொண்டு, "சேசுவின் திருஇருதயமே என்மேல் இரக்கமாயிரும்" என்கிற மதுரவாக்கியத்தை தனது கடைசி வார்த்தையாக உச்சரித்து, பார்த்தவர்கள்யாவரும் ஆச்சரியப்படும்படியாய் தெய்வசித்தத்துக் கமைந்து, தன்னைச் சிருஷ்டித்த கர்த்தாவிடம் தனது ஆத்துமத்தை ஒப்புவித்து அவர் திருவடியைப்போய்ச் சேர்ந்து விட்டனள். இந்த பிரலாபத்துக்குரிய சம்பவத்தை வாசிக்கும் பிரிய சகோதரரே, சேசுவின் திருவிருதயம் இவளது ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியை துரிதத்தில் தந்தருளவேண்டுமென்று அவரை மன்றாடி ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படியாய்த் தங்களை கெஞ்சி கேட்டுக்கொள்ளும் தங்கள் நிற்பாக்கிய தாசன்.

ஏழை பரதேசி.

### "பரதகுல பாண்டிய ராஜனின் பரலோக பிராப்தம்."

எமதிராஜகுலசேகரன் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தோன் கபிரியல் தெதருஸ் லாசர் மோத்தா வாஸ் பரதவர்ம பாண்டியன் அவர்கள் நிகழும் வருடம் ஜூலை மாதம் 5-ந் திகதி யாகிய ஞாயிறு வாரம் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடியில், மரணமான பரிதாப விஷயத்தைக் கேள்வியுற்று மிகவும் துக்கிக்கின்றோம்.



இவர் காலஞ்சென்ற துயரச் சம்பவம், இக்கொழும்பின் பாரிய வர்த்தக ஸ்ரீமான்களாகிய மனுவேல்பர்னாந்தீஸ் அவர்களுக்கும், ஜே. எக்ஸ், பெறேரா அவர்களுக்கும் தந்தி சமாசாரத்தால் அறிவிக்கப்பட்டது.

அந்தோ! பரத வாசகசாலையில் எமதிராஜனின் மரண பரிதாபத்தை யிட்டு ஓர் சபை கூடப்பட்டது. மறுநாள் இந்நகர்ப் பரத குலத்தவரின் வர்த்தக சாலைகளெல்லாம் பூட்டப்பட்டன. தேவாலயத்தின் மணிகளெல்லாம் அவரது பரலோக பிராப்தத்தைத் துயரச்சப்தத்துடன் தொனித்துக்கொண்டிருந்தன. கார்மேகத்தைப் பழிக்கும் கருப்புத் துவஜங்கள் மீனத்துவஜம் படைத்த எமதிறைவனின் மரணத்தை நினைந்து புலம்பும் பரத ருள்ளம்போல் அங்குமிங்கும் "மெல்லென" வர்த்தக சாலைகளின் சிகரத்தில் நின்றாடிக்கொண்டிருந்தன.

> "சந்திப னெம் மாண்டகை யாதி யாளரச [ருட்
> சற்குண மிகுந்து பொறையைச்
> சதுர் பெருகு கலனுக வேய்ந்தொளிரு [நாம வேற்
> றுங்கு தொன் கபிரியல் மோத்தா."
>
> (திருமணமாலை)

எமது மூதாதையாகிய சந்திரன் ஆதியாக வாண்டு வரும் பரதகுல கோமான்களில், பொறுமையைப் பூஷணமாகக் கொண்டு அச்சத்தைத் தரும் வேலாயுதத்தைத் தாங்கிய தொன் கபிரியல் மோத்த அவர்கள் என இன்ப கவிராயர் சிஷியன் கூறியதுபோல், மஹா நல்ல வரசனுகிய இம்மகிபதியின் மரணம் பரதகோத்திரத்தவராகிய பாண்டியன் மக்கள் அனைவரையும் துயரக் கடலில் வீழ்த்தியது.

இவர் இரக்ஷண்யாப்தம் 1864-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி ஜனனமானார். 1891-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ந் திகதி கிரீடாபிஷேகமானார். அந்தோ! பரிதாபம்!!

நீதி முறைவழுவாது ஜாதிமுறையோடு எம்மையாண்ட எமதிறைவன், அவரது இல்லாளையும் புத்திரர். சகோதரர், சகோதரிகளையும், பிதா மாதாவையும் அவரின் பட்டத்திற்குரிய சிரேஷ்ட புதல்வனுகிய "இளவரசனையும்" விட்டகன்றார்; பரிதாபம்! பரிதாபம்!!

சாக்ஷாத் சர்வலோகாதிபன் எமது பரத குலாதிபனின் ஆன்மாவிற்கு நித்ய சமாதானத்தை யருள்வாராக!

> "குடம்பை தனித்தொழியப் புட்பறந் [தற்றே
> யுடம்போ டுயிரிடை நட்பு"
>
> (குறள்)

Colombo. 6—7—14. — M. X. Rubeen Varma.

### ரத்தினபுரி.

திருநெல்வேலி ஜில்லா உபரியிலிருக்கும் எனது பிரிய மித்திரர் இ. ச. அந்தோணிக்குருஸ் பர்னாந்து அவர்களின் பிரிய மனைவியாகிய அந்தோனிதுருஸ் பர்னாந்தாள் நாளது ஜுன் மீ 2உ செவ்வாய்க்கிழமை கழுத்துவலி உண்டாகி அதின்பேரில் ஜன்னி துவக்கி 3உ புதன்கிழமையன்று இவ்வுலக சுகபோக இன்பங்களையெல்லா மறவே யொழித்து, தனதருமை பத்தாவுக்கும் உறவினர் சுற்றத்தார் பந்துகட்கெல்லாம் ஆற்றொண்ணு துயர பிரலாபத்தை விடுத்து கடைசி அவஸ்தைப் பூசுதலுடன் திவ்யநற்கருணை உட்கொண்டு இரவு 12 மணியளவில் தனது சரீரத்தை மண்ணுக்கு இரையாகவிட்டு இவ்வுலக ஜீவிய கணக்கை ஒப்புவிக்க திவ்ய ரட்சகப்பெருமான் சமுக மேகினள். இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக இதை வாசிக்கும் கத்தோலிக்குக் கிறிஸ்துவ நண்பர்கள் 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

ரத்தினபுரி, 23—6—14. — இங்ஙனம், T. Santiago Fernando.

### தூத்துக்குடி.

தெய்வ பக்தியும், குலாபிமான தர்மமும் மிக்கு விளங்கிய ஸ்ரீமான் கயித்தான் மச்சாது அவர்களின் அருந்தவப் புதல்வியாகிய மரிய மிக்கேல் பொன்னம்மாள் மச்சாது என்னும் பெண்மணி சென்ற 1867-ம் வருஷம் ஜுன் மீ 7-ந்தேதி ஜனனமாகி, 1884-ம் வருஷம் செப்டம்பர் மீ 8-ந்தேதி மகா-ள-ள-ஸ்ரீ பிலிப்பு பெர்னாந்தீஸ் அவர்கள் சிரேஷ்டகுமாரர் ம-ள-ள-ஸ்ரீ X. A. பெர்னாந்தீஸ் அவர்களை மணஞ் செய்

இல்லற தருமத்தில் எள்ளளவும் வழுவாது புண்ணியமே இப் பெண்ணுருவானதோ என்று யாவரும் புகழும்படி நங்கையர்க் காபரணமாகிய நாண், மடம், அச்சம், பயிர்ப்பாதிய லக்ஷணங்களை நன்கு நிர்வகித்துவருவாளாயினள். அன்றியும் "மாமியாள் மெச்சிய மருமகள் இல்லை" என்னும் பண்டைப் பழமொழியை வழுமொழியென நிரூபித்து, தன்னுடைய பதிமுதல் சுற்றத்தாரனைவரும் இவள் எங்கள் குல விளக்கென்று கொண்டாடும் பெரும் புகழும் அணிவாளாயினள். இன்னனைய குண பூஷணி தெய்வானுக்கிரஹத்தால் புத்திரப் பேற்றையும் மிக்கடைந்து, தான் புகுந்த இடத்துக்கோர் கொழுகொம்பாய் நின்று, தன்னை மணஞ் செய்துகொண்ட நாயகனின், சிறிய தந்தையின் மக்களையும் பேரன், பேத்தி, மருமக்களையும், தினையளவு தாரதம்ய மில்லாமல் தன்னுடைய மக்களைப் போலவே, பக்ஷமாகவும் அன்பாகவும் பராமரித்து, குடும்ப பாரத்தை மிக்க பொறுமையாகவும் மன ஒருமையாகவும் பராமரித்துவந்த பதிவிரதா சிரோமணிக்கு ஜுரங் கண்டு எவ்வித ஔஷத சிகிச்சைகளாலும் பயன்படாமல், நாளுக்குநாள் அதிகரித்து தனது அந்தியகால தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப் பெற்று தன்னுடைய மக்களாகிய புதல்வர் 4, புதல்வி 4 ஆக எண்மரும், நாயகனும், சகோதர சகோதரி, பந்து வர்க்கத்தினர் யாவரும் பரிதவித் தழுது நிற்க, அடிக்கடி மங்கை பொருந்திய சேசுவின் திருநாமத்தையே உச்சரித்து தெய்வ சித்தத்திற் கமைந்து சென்ற ஜூன்மீ 30-ந்தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6½ மணியளவில் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலக பிராப்தியாயினள். அடுத்தநாள் காலை 6½ மணிக்கு மிகவும் அலங்காரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த பெட்டியில் வைத்து யாவத் ஜனங்களும் புடைசூழ, பேண்ட் வாத்தியம். அதிர்வெடி, கொடி முதலிய வைபவங்களுடன் அர்ச். பனிமயமாதா ஆலயஞ், சென்று கனம். பின்றோ, மரிய ஜோசெப், லாரென்ஸ் பொனுந்தீஸ் ஆகிய மூன்று குருக்களால் "ரெக்குயிம்" பூசை பாடி, அர்ச். சம்பேதுரு ஆலயத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இதைக் கண்ணோக்கும் என தன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இந்த பத்தியுள்ள அம்மாளின் ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியை கொடுக்கும்படி 1-பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ள தங்கள் பாதத்தை நிரம்பவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தூத்துக்குடி 30-6-1914. } அநுதாபி.

## ஆரம்பாக்கம் திருவிழா.

ஆரம்பாக்கத்து பொருத்தனைக் கோவிலின் பாதுகவாலராகிய சம்மனசுகளின் மிக்க பரிசுத்த விராக்கினியின் வருஷாந்திர திருநாள் ஆரவார சிறப்பாய் நவநாள் ஜெபத்துடன் இம் மாதம் 23உ கொண்டாடப்படும்.

1. 13உ வியாழக்கிழமை கொடியேற்றம்.
2. நவநாட் பூசை, காலை 6½ மணி.
3. நவநாட் ஜெபம், மாலை 6½ மணி.
4. 22உ சனிக்கிழமை வெஸ்பெர்ஸ், மாலை 6½ மணி.
5. வெஸ்பெர்ஸுக்குபின் பிரசங்கம்.
6. அன்றிரவு தேர் சுற்றுபிரகாரம் 9½மணி.
7. சுற்றுப்பிரகாரத்துக்குபின் சுரூப ஆசீர்வாதம்.
8. 23உ ஞாயிறு, பாடல் பூசை 7 மணி.
9. பாடல் பூசைக்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்.
10. அன்று கொடியிறக்கம். ஜெபம், மாலை 6½ மணி.

விபரம்.—கத்தோலிக்கர் அனைவரும் இப் பொருத்தனை கோவிலில் நமது பரம ஆண்டவளைக் கொண்டாட திருயாத்திரையாய் இத்திருநாளுக்கு வரவும், இதற்கு உதவி புரியவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவர்கள் வேண்டினவைகளை அந்தத் தேவதாய் அளித்தருளுவாள்.

☞ பொருத்தனைக்காகவும் தருமத்துக்காகவும் பணம் அனுப்புவோர் கீழ்கண்ட எமது விலாசத்துக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1st August 1914. } Rev. S. M. F. Ignatius, Priest in charge.

*Arambakam Ry. Stn.*
*38th mile from Madras.*
*N. E. Line M. & S. M. Ry.*

---



# The Good Pastor

# நல்ல ஆயன்

OFFICE OF THE ... BOOKS 7-SEP 19.. MADRA... 161417

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு... அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10. 11-16.)

புத்தகம். 12. } செப்டம்பர் 1914. { இலக்கம். 9.

## DEATH OF HIS HOLINESS THE POPE.
## அர்ச். பாப்பானவரின் மரணம்.



நமது பரிசுத்த பிதாவாகிய 10-ம்பத்திநாதர் சென்ற ஆகஸ்டுமாதம் 20உ வியாழக்கிழமை அதிகாலையில், 1-மணிக்கு தம்முடைய வத்திக்கான் அரண்மனையில் மரணமானாரென்று கேள்விப்பட்டு மிகவும் விசனிக்கிறோம். இவருடைய மரணமானது உலகத்திலுள்ள கத்தோலிக்கருக்கு மாத்திரமல்ல, எல்லோருக்குமே பிரமிப்பையும் பரிதாபத்தையும் உண்டுபண்ணுமென்பதற் கையமில்லை. அதேதென்றால், நம்முடைய பரிசுத்த தந்தை சிலகாலமாக அப்போதைக் கப்போது அசௌக்கிய முற்ற நிலைமையிலிருந்து வந்தாரென்றாலும், இவ்வளவு சீக்கிரத்தில் அவர் மரணம் அணுகி வருமென்று யாரும் நினைத்தவரல்லர். நிறைந்த சுகத்தோடிருந்து சென்ற மாசத் துவக்கத்தில் முதலாய்த் தம்முடைய அப்போஸ்தலிக்கு ஸ்தானத்துக் கடுத்த கடமைகளையெல்லாஞ் சமுத்திரையாய் நடத்திவந்தார். இப்படியா யிருக்கக்கொள்ள எல்

அமை 24 No 3 No
No 3-12

யாவரும் திடுக்கிடும்படி இவ்வளவு சடுதியில் இவர் மரண மடைந்ததற்குக் காரணம் யாது? அந்தோ! பரிதாபம்!! தற்போது ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தமே அதற்குக் காரணமென்று ரூட்டர் தந்திமூலமாய்த் தெரியவருகிறது. ஜீவகாருண்யரும் சமாதானப் பிரியருமான இவர், இந்த யுத்தத்தை யடக்கி, அதில் ஆயிரம் ஆயிரமாய் மடியவிருக்கும் அத்தனை பேருடைய உயிரைக் காப்பாற்றத் தாம் எவ்வளவுதான் முயன்றபோதிலும் பயன்படவில்லையே என்று மனமுடைந்து, துக்க மிகுதியினாலேயே மரணத்துக் குள்ளானார். அவர் மரணாவஸ்தையா யிருக்கும் வேளையில் தமக்குக் கொஞ்சம் புத்தித் தெளிவு உண்டான போதெல்லாம் நிகழும் யுத்தத்தைப் பற்றியே பேசி, பரிதாபப் பட்டார். இப்பேர்ப்பட்ட தருணங்களில், ஒருவிசை அவர் "நமக்கு முடிவு நெருங்கிவருகிறது; சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன் தம்முடைய அளவறுக்கப்படாத நன்மைத்தனத்தினால் தற்போது ஐரோப்பாவில் நடந்துவருகிற பயங்கரமான யுத்தத்தின் கொடூரத்தைக் கேள்விப்படும் நிர்ப்பாக்கியத்தினின்று நம்மை விலக்கி இரட்சிக்கச் சித்தங்கொண்டிருக்கிறார்." என்றார். இன்னொரு வேளையில் அவர் சொல்லி அங்கலாய்த்ததாவது, "பூர்வகாலங்களி லிருந்த பாப்புமார்கள் யுத்த சங்காரத்தை நிறுத்த வல்லப முடையவர்களா யிருந்தார்கள், இப்போது நாம் அவ் வல்லமை யற்றவரா யிருக்கிறோமே" என்பதே. ஆகையால் சுக க்ஷேமத்துட னிருந்த நம்முடைய பரிசுத்த தந்தை இந்த யுத்தத்தை முன்னிட்டே உயிர் துறக்கலானா ரென்று ஏற்படுகிறது.

நமது பரிசுத்த பிதாவானவர் மரண ஆராட்டத்துக்கு உள்ளா யிருந்த அந்த இரவெல்லாம் அநேக கர்தினால்மார்களும் குருப்பிரசாதிகளும் பேட்டி கொடுக்கும் சிம்மாசன அறையில் காத்துக்கொண்டிருந்து, அவருடைய அசௌக்கிய நிலைமையைப்பற்றி ஆவலாய் விசாரித்துக்கொண் டிருந்தார்கள். இத்தாலியா தேசத்து அரசரும் அவருடைய தேவியாரும் உருக்கம் நிறைந்த விசனத்தோடு பாப்பானவருடைய தேகநிலைமையைப்பற்றி விசாரித்துக்கொண் டிருந்தார்கள். மரண நேரத்தில் பாப்பானவருடைய சகோதரிகளும், அவர்களுடைய பிள்ளைகளும், மெர்ரிடெல்வால், மிஸோயிற்றெல்லி என்னும் கர்தினால்மார்களும் அவர் அருகே இருந்தார்கள். கடைசியாய் இந்த மகாப் பெரிய பாப்பானவர் தாம் தம் சீவியகாலமெல்லாம் மிகப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்துவந்த உத்தம சர்வேசுரனது திருக் கரங்களில் தமதாத்துமத்தை யொப்புவித்து, சமாதானத்தோடும், அமைதியோடும் உயிர்விட்டார். இவர் சடலம் இவர் வழக்கமாய்த் தரிக்கும் வெள்ளைப் பட்டு அங்கியாலும், சிவப்புக் காப்பாவாலும் உடுத்தப்பட்டு, வத்திக்கான் மாளிகையில் கிடத்தப்பட்டிருக்கிறது. அதை நாள்தோறும் விசுவாசிகள் பெருங் கூட்டங் கூட்டமாய் வந்து ஆவல் ஆசையுடனும், சங்கை மரியாதையுடனும் தரிசித்துச் செல்லுகிறார்கள். இவரெழுதிவைத்த மரண சாசனத்தில் பின் வருமாறு கண்டிருக்கிறது. "நாம் தாரித்திரத்தில் பிறந்தோம், தாரித்திரத்தில் சீவித்தோம், தாரித்திரத்தில் மரிக்க ஆசிக்கிறோம். நாம்மரித்தபின்பு நமது சரீரம் அதிக ஆடம்பரமின்றி அர்ச். இராயப்பர் கோவிலில் அடக்கம்செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறோம்." இந்த அபீஷ்டப்படியே இவர் பிரேதத்தை அடக்கஞ் செய்வார்களென்பதற்கு ஆட்சேபனை யில்லை. இவருக்குப் பதில் பாப்பானவரைத் தெரிந்துகொள்ளும் கர்தினால்மார்கள்-கூட்டம் (Conclave) அடுத்த செப்டம்பர்௴ 8-ம் தேதி கூட்டப்படும். பாப்பானவரைத் தெரிந்துகொள்வதில் அநுசரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குகளைப் பார்ப்பவர்களுக்கு கர்தினால்மார்களுடைய சொந்த மனோ சுதந்தரத்தால் அல்லாமல், தெய்வ ஏவுதலாலேயே திருச்சபைத் தலைவர்



தெரிந்துகொள்ளப்படுகிறா ரென்பது விசிதமாகும். ஆகவே, இந்த அதியுன்னத பூஜிதமான பதவிக்கு எல்லா விதத்திலும் தக்க யோக்கியதை யுள்ளவரைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு சர்வ ஞானமுள்ள சர்வேசுரன் தமது ஞான வொளியை கர்தினால்மார்களுக்குப் பிரகாசிக்கச் செய்யவேணுமென்று அவரை அநுதினமும் மன்றாடிவரக் கடவோமாக.

## 10-ம் பத்திநாதருடைய சீவியம்.

இவர் 1835-ம்வ ஜூன்௴ 2-ந் தேதி இத்தாலியாவைச்சேர்ந்த ரியஸ் என்ற பட்டணத்தில் புண்ணிய தம்பதிகளிடத்தில் ஜனனமானார். 1858-ம்௵ செப்டம்பர்௴ 18-ம்வ குருப்பட்டம் பெற்றார். 1875-ம்௵ தம்மேற்றிராணியாருக்கு ஆலோசனை கர்த்தராகவும் வேதசாஸ்திரமடத்துக்கு அதிபதியாகவும் நியமிக்கப்பெற்று 1884-ம்௵ நவம்பர்௴ 10-ந்தேதி மாந்துவாபட்டணத்து மேற்றிராணியாராகவும், 1893-ம்௵ ஜூன்௴ 12-ந்தேதி கர்தினாலாகவும், அதற்கு மூன்றுதினங்களுக்குப்பின் வெனிஸ் நகரத்துக்குப் பிதாப்பிதாகவும் உயர்த்தப்பட்டார்.

கடைசியாய் 1903-ம்௵ ஆகஸ்டு௴ 4-ந்தேதி பாப்பானவராகத் தெரிந்துகொள்ளப்பட்டார். இவருக்குமுன் காலஞ்சென்ற பதின்மூன்றாஞ் சிங்கராயரென்ற பாப்பானவரைப்போல் இவருக்கும் இச்சிம்மாசனத்துக்கு வந்தபோது வயது 68 என்றாலும், சிங்கராயரைவிட இவர் அதிக இளமையாகவும் திடகாத்திரராகவும் காணப்பட்டார். சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் விளங்கியிருந்த அர்ச். மலக்கியார் என்பவர் உலகமுடியும் வரையில் இனிவர இருக்கும் அர்ச். பாப்பானவர்கள் இத்தனைபேர்களென்று அறிவித்திருப்பதுமல்லாமல் ஒவ்வொரு பாப்பானவரை ஒவ்வொரு விசேஷ அடைமொழியால் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியே ஒன்பதாம் பத்திநாதரைச் "சிலுவையின்பேரில் சிலுவை" யென்றார். உள்ளபடி இந்த அர்ச்சியசிஷ்ட பாப்பானவர் திருச்சபையின் சத்துராதிகளால் அநுபவித்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. பதின்மூன்றாஞ் சிங்கராயரை "வானலோகத்தின் பிரகாச" மென்ற பெயரால் குறிப்பிட்டார்; இவரும் அந்தப்படியே திருச்சபையில் மாத்திரமல்ல, உலகத்தின் எல்லா இராச்சியங்களிலும் பெரிதும் நன்கு மதிக்கப்பெற்று விளங்கினார். இப்போது மரித்த பத்தாம் பத்திநாதரை "உக்கிரமான நெருப்பு" என்று குறித்தார். உண்மையாகவே அவ்வார்த்தை இவருக்கு முழுதும் பொருந்தும் என்பதாக இவருடைய சீவியத்தைக் கொஞ்சமேனும் ஆராய்ந்து அறிந்தோர் சந்தேகமன்றி அங்கீகரிப்பார்கள்.

இவர் பாப்பானவர் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டபோது அதிசயப்படாதவரொருவரு மில்லை. ஏனென்றால், இவரைவிட கல்வி சாஸ்திரத் தேர்ச்சி அடைந்தவர்களும், மன்னவான்களும், மகான்களும் அநேக ரிருந்தார்கள். அவர்களை யெல்லாம் விட்டு, இவரைத் தெரிந்துகொண்டதானது சர்வேசுரன் செய்தருளிய ஓர் அற்புத மென்னலாம். ஆதியில் தமது வேதத்தை உலக முழுதும் போதிக்க தமக்குச் சீஷராக மீன் பிடிக்கிற செம்படவரையல்லோ தெரிந்துகொண்டார். அதுபோல் இப்போதும் தமது வல்லமையை விளங்கச் செய்ய வெகு எளிய குடும்பத்தில் பிறந்த இவரைத் தெரிந்துகொள்ளச் சித்தமானாரென்னலாம். இந்தப் பாப்பானவரும் தம் திறமையினாலே தாமாக வொன்றுஞ் செய்ய நினையாமல் தமது நம்பிக்கையை யெல்லாம் சர்வேசுரனிடத்தில் வைத்துவந்தார். அவர் முதன்முத லெழுதிய பொது நிருபத்தில் "சேசுக் கிறிஸ்துநாத சுவாமி சகலரிடத்திலும் சகலமுமா யிருக்கும்படி சகலத்தையும் சேசுக்

கிறிஸ்துநாதரிடத்தில் சேர்படுத்தவேண்டும் என்பதே நமது ஏக நோக்க" மென்று எழுதி யிருக்கிறார். அவர் சொல்லியபடியே தமது கைடையியர் தம் செய்துமுடித்தார். அதெப்படியென்றால் முந்தமுந்த கோவில் சங்கீதங்களை இன்னவிதமாய்ப் பாடவேண்டுமென்று நிர்ணயித்தார். குருக்களின் பத்திக்கிருத்தியங்களைப் பற்றியும், ஞாயிறுதோறும் கோவில்களில் சுவிசேஷம் வாசிக்கப்படவும், அதைக்கிறிஸ்துவர்களுக்கு வியாக்கியானித்துப் புத்திப்புகட்டவும் வேணுமென்று ஆக்கியாபித்தார். சிறுபிராயத்தில் வேதம் சரியாய் படிப்பிக்கப்படாததினாலேயே அநேகர் பெரியவர்களாகும்போது கெட்டுப்போகிறார்களானதினால் சிறுகுழந்தைகளுக்கு மந்திரங் குறிப்பிடங் கற்றுக்கொடுத்து வேதத்தை யவர்களுக்கு நன்றாய்ப் படிப்பிக்க வேண்டுமென்றும், வயது குறைவா யிருந்தாலும், புத்திவிவரம் தெரிந்த குழந்தைகளுக்குச் சற்பிரசாதங் கொடுக்கவேண்டுமென்றும், அடிக்கடியும் கூடுமானால் அநுதினமும் நன்மை வாங்க ஜனங்களைத் தூண்டவேண்டுமென்றும் உத்திரவுசெய்தார். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் ஞானாதிகாரிகளின் உத்தாவின்றி குருக்களைக் கோர்ட்டுக்கு இழுக்கப்படாதென்றும், அவ்விதம் சட்டத்துக்கு விரோதஞ் செய்கிறவர்கள் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவார்களென்றும் நிரூபித்திருக்கிறார். எல்லா தேசங்களிலும் அந்தந்தத் தேசத்துப் பாஷைகளில் சத்யவேதத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் அடுத்த பத்திரிகைகளையும் பிரசுரங்களையும் அபிவிர்த்தி செய்யவேணுமென்று பலகால் வற்புறுத்திப்பேசியிருக்கிறார். ஒரு பாப்பானவருக்குப்பின்மறு பாப்பானவரைத் தெரிந்துகொள்ளுதலைப்பற்றிய ஒழுங்குகளையும் சட்ட திட்டங்களையும் மிக்க கண்டிதமான வகையாய் சீர்திருத்தஞ்செய்திருக்கிறார். உலகமெங்குமுள்ள மேற்றிராணிமார்கள் ஒவ்வொருவரும் பத்து வருஷத்துக்கொருவிசை அர்ச். பாப்பானவரை வந்து கண்டுகொண்டு போகவேணுமென்றிருந்ததை இவர் ஐந்துவருஷத்துக்கு ஒருமுறை வந்து காணவேண்டுமென்றும், அச்சமையங்களில் அவர்கள் தங்கள் தங்கள் மேற்றிராசனத்திலுள்ள கிறிஸ்துவர்களின் ஞானத்தேர்ச்சி, வேதவிருத்தி முதலிய விஷயங்களை விளக்கிக்காட்டும் குறிப்புப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டு மென்றும் திட்டஞ்செய்தார். நமது அன்பிற்குரிய பத்தாம் பத்திநாதராகிய பாப்பானவர் திருச்சபையை அரசாட்சி செய்தது பதினொரு வருடங்களே யாயினும் இந்தச் சொற்ப காலத்துக்குள் இவர் செய்த சீர்திருத்தங்கள் அநேகம். அவைகள் அனைத்தையும் இங்கு விவரிப்ப தென்றால் ஏடிடங்கொள்ளாது.

இவருடைய அர்ச்சியசிஷ்ட தனத்தை யொப்பிக்க இவரால் நடந்தேறிய அற்புதங்கள் பல. இவைகளில் சில அப்போதைக்கப்போது நமது நல்ல ஆயனில் பிரசுரிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று: நம்முடைய தேசத்திலுள்ள பெல்காமில் சென்ற வருஷம் ஒரு கன்னியாஸ்திரீ யம்மாளுக்கு அற்புதமாக உண்டான ஆரோக்கியம். இவர்காலத்தில் அஞ்ஞானத்தி னின்றும் பதிதமார்க்கத்திலின்றும் மனந் திரும்பிச் சத்திய திருச்சபையில் வந்து சேர்ந்தவர்களின் தொகை மெத்தவும் ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டுபண்ணத்தக்கதாயிருக்கிறது. ஒரே வார்த்தையில் சொல்லவேண்டு மாகில் திருச்சபையின் நன்மைக்காக இவ ரெடுத்துக்கொள்ளாத பிரயாசையுமில்லை; இவர் கவனிக்காது விட்ட தேசமுமில்லை; செய்யாதுவிட்ட அலுவலுமில்லை. இப்பேர்க்கொத்த சகல சற்குணங்களும் வாய்ந்த நமது நல்ல தந்தை யவர்களுக்கு நம்மால் செய்யப்படக்கூடிய கைம்மாறென்ன? அவரிடத்தில் விசேஷித்துவிளங்கின புண்ணியம் [illegible] தாழ்ச்சியையும் ஆத்துமாபேடேற்றத்தின் பேரில் அவருக்கிருந்த ஆவலையும் [illegible]ண்டு பாவித்து நடப்பதுமல்லாமல், இவரது அர்ச்சியசிஷ்ட சீவி



யத்தால் தப்பாமல் நேரே மோட்சத்துக்குச் சென்றிருப்பாரென்ற நம்பிக்கை நமக் கெவ்வளவுதா னிருந்தாலும், கோணாத நீதிபரனுடைய அதி நுணு நுணுக்கமான தீர்வை யெப்படி யிருக்குமோ வென்று பயந்து, தமது பிரியமும் உண்மையுமுள்ள ஊழியனாகிய இந்த அர்ச்சியசிஷ்ட பாப்பானவரின் ஆத்துமத்துக்கு, நித்தியசமாதான இளைப்பாற்றியைத் தந்தருளும்படியாக சர்வ வல்லவரான ஆண்டவரை யனுதினம் மன்றாடுவோமாக.

"ஆண்டவரே, அவருக்கு
நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.
முடிவில்லாத பிரகாசம்
அவருக்குப் பிரகாசிக்கக்கடவது"

## DIAMOND JUBILEE.

## வைர ஜூபிலி.

(முன்தொடர்ச்சி.)

### [illegible]லோற்பவி நமது நேசத்திற்குரிய தாயார்.

சர்வ வல்லப முடைத்தான சர்வேசுரன் ஆகட்டும் என்று சொல்லிய வல்லமையுள்ள தமது ஏக வாக்கால் மாத்திரமே பரலோக பூலோகங்களையும் அவற்றிலுள்ள சகல சராசரங்களையும் சிருஷ்டித்து முடித்தபின், தமது பிரதியும் பூலோக சிருஷ்டிகளுக்கு ஏக நிதியார்த்தவும் இருக்கும்படி வேண்டிய நாயகனாகவும் மனோச் சுதந்திரனான முள்ளவனும் மனோச் சுதந்திர முள்ளவனுமான ஒரு மனிதனைச் சிருஷ்டிக்கும்படி திருவுளங்கொண்டு, தமது திருக்கரத்தால் மண்ணைப் பிசைந்தெடுத்து மனித உருவை வனைந்து அதன் மேலூதி என்றைக்கும் அழியாததோர் சீவாத்துமத்தைக் கொடுத்து அதை சீவிக்கச் செய்தார்.

இந்த அழியாத ஆத்துமம் சரீரத்தில் இருக்கும்வரையில் மனிதன் சீவிக்கிறான். ஆத்துமம் சரீரத்தை விட்டு எந்த க்ஷணத்தில் பிரிந்துபோமோ அந்தக்ஷணமே பிணமாகிறான். நோஞ் செல்லச் செல்ல அது அதிகமான துர்மணம் வீசிக் கொண்டேயிருக்கும். மனிதர் கிட்ட அண்ட அசங்கியப்படுவார்கள். அவ்வண்ணமே தேவ இஷ்டப்பிரசாதம் ஆத்துமாவி லிருக்குந்தனையும் அந்த ஆத்துமம் சீவிக்கின்றது. பாவத்தால் தேவ இஷ்டப் பிரசாதத்தை யிழந்துபோன ஆத்துமம் செத்த சவம்போலாகிறதுமல்லாமல், ஆண்டவருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் அருவருப்பை யுண்டாக்கும்.

சகோதரரே, நம்முடைய சரீர சீவியத்துக்கு நமது தாய் தந்தையர் எவ்வண்ணம் மூக்கிய காரண கர்த்தர்களா யிருக்கிறார்களென்று சொல்லக் கூடுமோ அதுபோல, நமதாத்தும சீவியத்துக்கு முந்த முந்த நமது பிதாவுந் தந்தையுமாகிய சர்வேசுரனும், அவரால் மனுக்குல மனைத்துக்குந் தாயாராகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த கன்னித்தாயாரும் முக்கிய காரணஸ்தரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் நம்முடைய ஆத்தும சரீர சீவியத்துக்குப் பிரதான காரணரான கர்த்தாதி கர்த்தனை நமது பிதாவென்றும் ஆண்டவரென்றும் சர்வேசுரனென்றும் அழைப்பதுபோல், பரிசுத்த கன்னியாகிய தேவமாதாவை நம்முடைய தாயாரென்றும், இராக்கினி யென்றும், ஆண்டவளென்றுங் கொண்டாட வேண்டியது நியாயந்தானே.

சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குப் படிப்பித்துக் கொடுத்ததும், நாம் அநுதினஞ் செபித்து வருவதுமான பரமண்டல மந்திரத்தின் வழியாக சர்வேசுரனைத் தம்மைப் பிதாவென்றழைக்கும் சுதந்தரத்தை நமக்குக் கொடுத்தருளினார். அவ

சிலுவையி லறையுண்டு உயிர்விடப்போகுந் தருணத்தில், தம்மைக் கன்னிமைகுன்றாது பெற்றெடுத்த தமது தாயாரை சிலுவையடியில் காத்து நின்ற தமது பிரிய சீஷன்வழியாக சமஸ்த மனிதருக்கும் தாயாராகக் கட்டளையிட்டார். இப்போது நடந்துவருகிற யுத்தங்களுக்குக் காரணமாய் சரஜீவோ என்ற பட்டணத்தில் நேர்ந்த கொலையும் இதை நமக்கு நன்கு விளக்குகின்றது. அதெப்படியென்றால், ஆஸ்டிரியா தேசத்துப் பட்டத்து இள அரசரான பிரான்ஸ் பெர்டினந்தும் அவரது மனைவியும் பாதகனான மாணுக்கனால் சுட்டுக் கொல்லப்பட்டு உயிர் விடப்போகுந் தருணத்தில், இள அரசர் தமது தேவியாரைப் பார்த்துச் சொன்ன கடைசி வார்த்தைகள் மெய்யாகவே யெப்போர்க்கொத்த கன்னெஞ்சையும் கரையச்செய்யத் தக்கவை. அவை யென்னவெனில் தனது மனைவியின்பேரைச் சொல்லியழைத்து "நீயாவது என் பிள்ளைகளின் பொருட்டுச் சீவித்திரு" என்று சொல்லி சற்று நேரத்துக்கெல்லாம் உயிர் துறந்தார். தமது மக்கள் மட்டில் அம்மன்னனுக்கிருந்த ஆசை, பாசம் எப்போர்க் கொத்ததென்னலாம்! தமது மக்களைத் தமது மனைவியரின் வசம் ஒப்படைத்தபோது அவளும் இன்னுஞ் சற்றுப் போதைக்கெல்லாம் தம்மோடு மரிக்கப்போகிறாளென்றதை யறியாதிருந்தார். சேசுநாதரும் தாம் சிலுவையி லுயிர் விடுமுன்னே "தாம் மனுமக்களோடு வசிப்பதே தமது அபிலாசை" யென்று திருவுளம்பற்றி வந்தபடியே, அத்தருணத்திலும் விட்டுப்பிரிய மனங் கொள்ளாமல் அவர்களைப்பற்றிக் கவலைகொண்டு தமது சிலுவையடியில் துயரமா யழுது நின்ற தமது கன்னித்தாயை யழைத்து, அருளப்பர் வழியாக நம் மொவ்வொருவரையுஞ் சுட்டிக்காட்டி, இதோ உன்னுடைய மகனென்று திருவுளம்பற்றினார். ஆஸ்டிரியா தேசத்தின் இளவரசர் தம்மக்களை தமது பாரியாள்வசம் ஒப்படைத்தபோது அவர் வைத்த நம்பிக்கை அவலமாய்ப்போனதுபோல், சேசுநாதர் தம்மக்களாகிற நம்மெல்லோரையும் தமது தாயின் வசம் ஒப்படைத்தபோது, அவர் மாதாவின் பேரில் வைத்த நம்பிக்கை வியர்த்தமாய்ப்போகவிடவில்லை. அத்தேவதாயார் பூவுலகி லுயிருடன் சீவித்திருக்கும் வரையில் தமது திருக்குமாரனுடைய பிரிய சீஷனாகிற அருளப்பரை மாத்திரமல்ல, மற்றுமுள்ள அப்போஸ்தலர்களையும், சீஷர்களையும், அவர்கள் வழியாய் ஞானஸ்நானம்பெற்றுச் சத்திய சபையில் சேர்ந்த எல்லா கிறிஸ்துவர்களையும் தமது சொந்த மக்களைப்போல் பேணி யாதரித்து வந்ததுமல்லாமல், அவள் மோக்ஷத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னும், தம்மிடத்தில் பிள்ளைகளாக வொப்படைக்கப்பட்ட நம் ஒவ்வொருவருடையவும் ஆத்தும சரீர நன்மைகளைக் கோரி கவலை யுள்ளவளாகவே யிருந்து வருகிறாள்.

பிரபாந்து தேசத்தின் அதிபதியுடைய குமாரத்தியான அர்ச். ஜெர்த்ருத்தம்மாள் கர்த்தர் பிறந்த திருவிழாவன்று தேவாலயத்தில் திவ்விய பூசை காணும்போது குருவானவர் அந்நாளையச் சுவிசேஷத்தில் "தேவமாதா தன் தலைச்சன் பிள்ளையாகிற சேசுநாதரைப் பெற்றாள்" என்று வாசிக்கக்கேட்டு அவள், தனக்குள்ளே ஆலோசிக்கத் தொடங்கி அர்ச். கன்னிமரியாயி சேசுநாதர் சுவாமியை யல்லாதே வேறே பிள்ளையைப் பெறவில்லையே; அப்படியிருக்க தலைச்சன் குமாரனை யீன்றாள். என்றெழுதாமல், அவள் தமது ஏக குமாரனைப் பெற்றாளென்று எழுதுவதல்லவோ நியாயமாயிருக்கும். இதிலேதோ வோர் தேவ இரகசியம் அடங்கி யிருக்கிறதென்று சந்தேகித்து, இதைக்குறித்து தனக்குத் தெளிவுறுத்துமாறு சர்வேசுரனை யனுதினம் மிகவும் மன்றாடிவந்தாள். அப்படியிருக்க ஓர்நாள் சடுதியில் இருந்தாப்போல், இதோ அழகு, தயவு, பிரகாசம் இம்மூன்றும் ஒன்றுசேர்ந்து ஓர் பெண்ணுருவெடுத்தாப்போல் அமல கன்னியுத்தமி ஜெர்த்ருத்தம்மாளுக்குத் தரிசனையாகி மிக்க சாந்தமான இனியகுரலோடு "மகளே, சுவிசேஷகர் சேசுநாதரை என் ஏக குமாரனென்று சொல்லாமல் என் தலைச்சன் புத்திரனென்று எழுதினதே சரி. ஏனெனில், என்னுயிருக்குயிரான சேசுநாதரை நான் பெற்றதுமல்லாமல், கபாலமலையிலே மிகவும் வியாகுலத்தோடு கிறிஸ்துவர்களெல்லோரையும் ஞானவிதமாகப் பெற்றேன். அதுமுதல் அவர்கள் எல்லோரும் எனக்குப் பிள்ளைகளும் சேசுநாதருக்குச் சகோதரருமானார்



கள்" என்று விடையளித்து அதரிசனமானாள்.

சகோதரரே அர்ச். கன்னித் தாயார் சேசுநாதரை பெத்திலேமி லுள்ள மலைக்குகையில் மாட்டுத் தொழுவத்தில் பெற்றெடுத்தபோது மற்ற ஸ்திரீகளுக்குள்ள அம்பாயம், பிரசவ வேதனை முதலிய எவ்வித நோக்காடுமின்றி, ஓர் கண்ணாடியை யாதொரு சேதமும் படுத்தாமல் எப்படி சூரியனுடைய கதிர் ஊடுருவிச் செல்லுமோ அதுபோல் தமது முதல் பேறான சேசுநாதரைப் பெற்றெடுத்தாளென்று சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். இதுநியாயந்தானே; ஏனெனில் ஏவாள் கட்டிக்கொண்ட பாவத்துக்கு ஆக்கினையாக ஆண்டவரிட்ட தண்டனை சமஸ்தமான ஸ்திரீ ஜாதிகளுக்கு நாளதுவரையில் பலித்துவந்தாலும், மனுக்குலத்தை யீடேற்றும்பொருட்டுத் தாம் ஆதியிலே குறித்துப்பேசிய அவ் வுத்தம ஸ்திரீயான தேவ கன்னியானவள் அச்சாபத்துக்கு முழுதுமே நீங்கினவளென்று தெரிவிக்க, அற்ப வேதனையு மின்றி பிரசவித்ததே நியாயம். பாவிகளாகிய நம்மைக் கபாலமலையில் பெற்றெடுத்தபோதோ அவள் ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் அநுபவித்த துன்ப வருத்தங்களிம்மாத்திரமென்று அளவிட யாராலும் முடியாது. உலகத்திலுள்ள சகல தாய்மார்களும் பிரசவ காலத்தில் பட்ட வருத்த கஷ்டங்களையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி யெடுத்தாலும் வியாகுல கன்னித்தயார் அவ்வேளையிலனுபவித்த வேதனைகளுக்குமுன் ஒன்றுமில்லையென்று சொல்லலாம். ஓர் தாயானவள் எந்தப் பிள்ளையைப் பெறும்போது அதிக வேதனை துன்பங்களை யனுபவித்துப் பெற்றாளோ அந்த பிள்ளையின் மட்டில் விசேஷ பட்சமா யிருக்கிறாளென்றும் அந்தப் பிள்ளையை அதிக கவலையுடன் பராமரித்து வருகிறாளென்றும் நாம் அறிகிறோம், ஏனெனில், எந்தப் பொருளைச் சம்பாதிப்பதில் அதிக கஷ்டமும் வருத்தமும் நேருமோ அந்தப்பொருளை யிழந்துபோகாதபடிக்கு அதிக கண்ணுண்டா யிருப்பதே சகஜம். அர்ச். கன்னித்தாயாரான தேவ மாதாவுக்குத் தமது திருக்குமாரனாகிய சேசுநாதர் மட்டில் உள்ள பட்சமும் நேசமும் அணைகடந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியானாலும் தாம் கபாலமலையில் சேசுநாதருடைய வாக்குக்கு அமைந்து தமது சுவீகாரப் பிள்ளைகளா யேற்றுக்கொண்ட சகல கிறிஸ்துவர்கள் மட்டிலும் அத்தேவ தாயாருக்குள்ள பட்சமும் நேசமுங் கொஞ்சமல்ல. அவளுக்குள்ள மிதமிஞ்சின பட்சத்தினாலல்லோ உலகத்திலுள்ள சமஸ்த மனிதரும் கரையேறும்பொருட்டுத் தமது ஏக திருக் குமாரன் பாடு படவும் மரிக்கவும், பூரண மனதாய் விடைகொடுத் தனுப்பினாள். அவள் தம்முடைய திருக் குமாரனுடைய விலை மதியாத திரு இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து மீட்ட ஆத்துமங்களின் கரை யேற்றத்தினிமித்தம் எவ்வளவோ கவலையோடாசித்துக்கொண் டிருக்கிறாள். நமது மட்டில் அவளுக்குள்ள பட்சத்தில் ஆயிரத்தில் ஒரு பங்காவது நாமவள் மட்டில் வைப்போமானால் தப்பாது கரையேறுவோம். "உம்மை அண்டினவர்கள் ஒருபோதும் கை விடப்பட்ட தில்லை" என்று பெர்நர்தென்பவர் அந்த ஆண்டவளை நோக்கி வசனித்ததுபோல நாமும் நமது தாயாரைப் போற்றிப் புகழ்ந்து ஆசித்து நேசித்துப் பூசித்து வருவோமானால் அவள் நமக்குப் பிரியாத துணையாக நின்று நம்மைக் காப்பாற்றுவாள்.

ஆனழைத்தால் கன்று வாராதிருப்பினு மந் [தக் கன்று
தானழைத்தாலுடன் வாராத தாயிலை சால [முற்ற
மானழைத்தாலென நானழைத்தேன் எனை [வந்து வந்தே
னழைத்தா யெனக் கேளாதிருப்ப தென் [னிங்கிதனே.

ஓர் பசுவானது தனது கன்றை யழைக்கும்போது அது துள்ளிவிளையாடிக் கொண்டு பசு கூப்பிட்ட சத்தத்தை முதலாய்ச் சட்டைபண்ணாது திரிவது சகஜம். ஆனால் கன்று தன் தாயைக் கூப்பிட்டமாத்திரத்தில் அதுகட்டிவைத் திருந்தாலுங்கூட அக்கட்டை அறுத்துக்கொண்டு தன் கன்றுக்கென்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று அதைத் தேடிஓடிவரும். அப்படியே நாமும் பலமுறை ஆண்டவர் கொடுத்த நல்ல விசாரங்களைத் தட்டிப்போட்டுப் பாவ வழியில் துள்ளி விளையாடித் திரிந்தோம். தேவ தாயாருக்கு மனோவியாகுலத்தை யுண்டு

பண்ணினோம். ஆயினும் மெய்யான மனஸ்தாபத்தோடு தேவதாயாருடைய உதவி சகாயங்களைத் தேடி அவளை அழைப்போமாகில் தப்பாமல் அவளுடைய சகாயத்தை யடைவோ மென்றறியக்கடவோம்.

---

# WAR.

## ஐரோப்பாவில் யுத்தம்.

பயங்கரமான யுத்தம் இப்போது ஐரோப்பாவில் நடந்து வருகிறதென்று அறியாதார் இல்லை. அன்றாடம் கூலிவேலை செய்து பிழைக்கும் ஏழை ஸ்திரீ முதல் மகாராசன் வரையில் ஒவ்வொருவரும் இச் சண்டையைப்பற்றி கவலையுடன் பேசி வருகிறார்கள். இது சற்றேறக்குறைய உலக முழுவதையுமே கவலைக் குட்படுத்தும் யுத்தமாயிருக்கிறது. இம் மாதிரியான யுத்தம் ஒன்று 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அதாவது 100-வருஷங்களுக்கு முந்தி நடந்தது. அப்போது நப்போலியன் போனபார்ட் என்னும் பிராஞ்சு போர்வீரன் தனது பெருஞ்சேனைகளைக் கொண்டு உலக முழுவதையுமே ஜெயித்துவிட வேண்டுமென்று எத்தனித்து, போர் புரிந்துவந்தான். ஐரோப்பாவிலுள்ள இங்கிலாந்து, ருஷியா இவ்விரண்டு இராச்சியங்களையுந் தவிர மற்ற தேசங்களை யெல்லாம் இவன் பிடித்துக்கொண்டான். நேரிட்ட சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டு இவ்விரண்டு இராச்சியங்களையும் பிடிக்க அவனுக்கு இயலாமற் போனது. தோர்வை யடைந்த ஜெர்மனி பெல்ஜியம் முதலிய தேசத்தார் பிறகு ஆங்கிலேயருடைய ஒத்தாசையினால் பிராஞ்சுகாரரை எதிர்த்து, 1815-௵-த்தில் வாட்டர்லூ என்னும் ஊரில் நடந்த சண்டையில், நப்போலியனையும் பிடித்து எலினு என்னுந் தீவில் சிறைப்படுத்தி வைத்தார்கள். அவனும் அவ்விடத்திலேயே தனது அந்தியகாலத்தை முடிக்க நேரிட்டது. இந்த யுத்தத்துக்குப் பிறகு சென்ற 100 வருடங்களுக்குள் ஐரோப்பாவில் அங்கங்கே சில யுத்தங்கள் நடந்தேறினவென்றாலும் இப்போது துவக்கி யிருக்கும் யுத்தத்தைப்போல அவைகள் ஐரோப்பாவை முழுவதுமே தழுவினவை யல்ல. இவ்வளவு பயங்கரமானவைகளுமல்ல. இந்த யுத்தமோ ஐரோப்பாவிலுள்ள ஏறக்குறைய எல்லா இராச்சியங்களையும் ஒன்றோடொன்றை முட்டவிட்டு, கண்டத்தை முழுமையுமே பாழாக்கிவிடும்போலிருக்கிறது.

பூர்வம் நப்போலியன் உலகத்தை யெல்லாம் கட்டி ஆளவேண்டுமென்று யுத்தம் தொடுத்ததுபோல, இப்போது ஜர்மனி சக்கரவர்த்தியும் ஐரோப்பாவை யெல்லாம் தன் வச மாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் பேராசையோடு யுத்தம் துவக்கியிருக்கிறான். நப்போலியனால் ஆரம்பித்த யுத்தம் 1815-௵ ஜூன் ௴-த்தில் முடிவாயிற்று. இந்த யுத்தமும் அதே மாதத்தில்தான் தொடங்கி யிருக்கிறதென்று சொல்லலாம். எப்படியெனில், ஆஸ்டிரியாவின் அதிகாரத்துக்கு அடங்கிய செர்வியா என்னும் ஒரு சிறிய இராச்சியத்தைச் சார்ந்த மகாணமான போஸ்னியாவின் மாணாக்கன் ஒருவன் ஷை ஆஸ்டிரியாவின் இளவரசன், ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினந்து என்பவரையும் அவருடைய துணைவியாரையும் என்றைக்குச் சுட்டுக் கொன்றானோ அன்றே இந்த யுத்தமும் ஆரம்பித்தது. இந்த பரிதாபத்துக்குரிய கொலைப்பாதகம் சென்ற ஜூன் ௴ இறுதியில் சராஜிவோ பட்டணத்தில் சம்பவித்தது. நப்போலியன் தொடுத்த சண்டைகள் முடிவானபிறகு, ஐரோப்பாவின் இராச்சியங்களை யெல்லாம் இப்போது இருக்கிற சீராக பங்கிட்டு அந்தந்த இராச்சியத்தாருக்கு எல்லைகளைக் குறித்து, ஒழுங்குபடுத்தினது ஆஸ்டிரியா தேசத்தின் இராஜதானியான வியன்னா பட்டணத்திற் கூடிய சங்கத்தாரே. மேற் சொன்னபடி தங்களுடைய இளவரசனை சேர்வியா நாட்டார் கொன்றதின் நிமித்தம் இப்போது யுத்தத்துக்கு முந்த முந்த கிளம்பியிருக்கிறவர்களும் ஆஸ்டிரியா தேசத்தாரே. முன் நடந்த யுத்தத்தில் பிராஞ்சியருக்கு விரோதமாய் ஆஸ்டிரியரும் ஜெர்மனியரும் ஒன்று சேர்ந்து யுத்தந் தொடுத்தார்கள். இப்போதும் அத் தேசங்கள் இரண்டுமே ஐரோப்பாவின் மற்ற தேசங்களுக்கு விரோதமாய்க் கிளம்பியிருக்கின்றன. இவற்றை யெல்லாங் கொண்டு நாம் யூகிக்கக்கூடிய தென்னவெனில், நப்போலியன் காலத்தில் நடந்த யுத்தத்தைப்போலவே இதுவும் தேசத்துக்கு அநேக கேடு பாடுகளை வருவித்து முடிவாகும்போலும் என்பதேயாம்.



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 7 - SEP 1914

ஒருக்கால் இந்த யுத்தம் அதைவிட அதிக சேதத்தை விளைவிக்கும். அதேனென்றால், சத்துருக்களை இலேசாய்க் கொன்று ஜெயித்துவிட நூதனமான ஆயுதங்களும், யந்திரங்களும் நப்போலியன் காலத்தி லிருந்ததைவிட பதின்மடங் கதிகமாய் இக்காலத்திற் கண்டுபிடிக்கப்பட்டு யுத்த தளவாளங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெரிய பீரங்கிகளென்ன! சின்ன பீரங்கிகளென்ன! சட்டி பீரங்கிகளென்ன! குட்டி பீரங்கிகளென்ன! கைத் துப்பாக்கிகளென்ன! பெரிய துப்பாக்கிகளென்ன! பட்டாகத்திகளென்ன! பாம்ஸ் வெடிகளென்ன! ஈட்டிகளென்ன! சமுதாடுகளென்ன! எறிவல்லையங்களென்ன! ஆகாய விமானத்தைச் சுடுவதற்கு முதலாய் ஒரு விசித்திரமான நூதன யந்திரங் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. முன் நடந்த சண்டைகளெல்லாம் பூமியிலும் சமுத்திரத்திலும் நடந்தன. இப்போது நடக்கப்போகிற யுத்தமோ பூமியிலும் சமுத்திரத்திலு மாத்திரமல்ல, ஆகாயத்திலும் சமுத்திரத்துக் குள்ளும் நடக்கும். ஆகையால் எத்தனை பெயர் மடிவார்களோ! எத்தனை பெயர் காயப்படுவார்களோ! எத்தனைபெயர் வீடுவாசலை யிழந்து, இருக்க இடமின்றி தவித்து நிற்பார்களோ! எத்தனை பெயர் அநாதிகளாவார்களோ! கைம் பெண்சாதிகளாவார்களோ! அண்ணன், தம்பி, தகப்பன் இவர்களை இழந்தவர்களாவார்களோ!

இவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் ஏன்? பேரும், கீர்த்தியும், பிரதாபமு மடையவல்லவா? ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தைப் பிடித்து அவர்களை அடக்கி அரசாளவல்லவா? ஆனால் எவ்வளவு காலத்துக்குச் சிரஞ்சீவியர்களாய் ஜீவிக்கப் போகிறார்கள்! மகா வல்லமை வகித்த ரோமைச் சக்கரவர்த்திகளான செசார்களெங்கே? படைத்தலைவனான வீர பராக்கிரமம் பொருந்திய ஜூலியஸ் செசாரெங்கே? உலகத்தை யெல்லாம் ஏகச் சக்ராதிபதியா யாண்டு, மணிமகுடம் பூண்டு, ரத, கஜ, துரக, பதாதிகளென்று சொல்லப்பட்ட சதுரங்க சேனைகளையுஞ் சேர்த்து, அஞ்சாத தைரியத்தோடும் எஞ்சாத நெஞ்சத்தோடும் போர் புரிந்து பல வெற்றி கொண்ட மகா அலெக்சாந்தரெங்கே? சென்ற நூறு வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பா தேசங்களைச் சென்ற சென்ற இடங்களி லெல்லாம் சின்னா பின்னமாய்ச் சிதற அடித்து மகா வெற்றி [illegible] பேரோங்கி விளங்கின மகா நப்போலியன் போனப்பார்ட்டெங்கே? எல்லோரும் மறைந்தே போனார்கள்! படைத்தலைவனான ஜூலியஸ் தன் சொந்த சிநேகிதனாலேயே குத்துண்டு செத்தான். பெரிய அலெக்சாந்தரோ தன் சுய நாட்டுக்குப் போகிற வழியில் கூடாரத்தில் தங்கி யிருக்கும்போது, தன் சொந்த சிநேகிதனொருவன் நம் மிந்து தேசத்தைப்பற்றி வெகு சலாக்கியமாய் வருணித்ததைக் கேட்டு: ஐயையோ! அந்தத் தேசத்தை முழுதும் கைப்பற்றாமற் போனேனே, என்று அழுது உயிர்விட்டான். பெரிய நப்போலியனுடைய முடிவு இன்னதென்று எல்லோருக்குந் தெரியும். உலக வாழ்வுகள் சதமல்லவென்று நிச்சயமா யறிந்திருக்கிற இவர்களெல்லோரும் இவ்வளவு ஆக்குரோஷத்துடன் ஒருவரோ டொருவர் முட்டி மல்லுயுத்தஞ் செய்வார்களென்றால், உலகமே சதமென் றிருந்துவிட்டால் என்னதான் செய்யமாட்டார்கள்! சென்ற காலங்களின் சம்பவங்களப்படி யிருக்கத் தற்போது தொடங்கி யிருக்கும் யுத்தம் எப்பேர்ப்பட்டதென்று சற்று யோசிப்போம்.

உலகத்தில் எத்தனையோ துப்பாக்கிகளிருக்கின்றன. அதினா லெத்தனையோபேர்கள், இன்னவன் இன்னானைச் சுட்டுப்போட்டான். இன்னவன் இன்னானை மாய்த்துவிட்டானென்பதாக ஏறக்குறைய ஒவ்வொருநாளும் வெவ்வேறே பத்திரிகைகளில் வாசித்து வருகிறோம். அதனால் அவனவன் உயிரிழந்தானல்லாதே மற்றவர்க் கொரு கெடுதலும் உண்டாகவில்லை. ஆனால் ஆஸ்டிரியா தேசத்து இளவரசரையும் அவரது பாரியாளையுஞ் சுட்டு வீழ்த்தின படுபாவியான மாணாக்கன் கையில் வைத்த துப்பாக்கியின் வல்லமையை யென்னென்று சொல்லுவோம்!! இந்த ஒரு துப்பாக்கி எத்தனை கோடி துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கிளப்பிவிட்டிருக்கிறது. இன்னும் என்னென்ன அனர்த்தங்களை விளைவிக்க இருக்கிறதோ நாமறியோம். நாம் பற்பல பத்திரிகைகளில் பார்த்தமட்டில் முற்சொல்லிய கொலையானது செர்வியாவிலுள்ள சில அதிகாரிகளின் தூண்டுகோலாலேயே நடந்தேறினதென்றும், அப்பேர்க்கொத்தவர்களை யுத்தியோகத்தினின்று நீக்கிவிடுவதுமல்லாமல் இக்கொலை விஷயமான கேசை விசாரிக்கும்போது ஆஸ்டிரியா சக்கரவர்த்தி யவர்களால் அனுப்பப்

டமும் உத்தியோகஸ்த ரொருவர் சமுகமாயிருக்க
இடங் கொடுக்கவும் வேண்டுமென்றும், இவை
முதலிய சில நிபந்தனைகளை ஆஸ்டிரியா சக்கர
வர்த்தி யவர்கள் செர்விய அரசனைக்கேட்டு அ
னுப்பினர். செர்விய அரசனே சரியான பதிலுத்
தரவு கொடாமையால் ஆஸ்டிரியா சக்கரவர்த்தி
யுத்தந் தொடுக்கக் காரணமானதெனச் சொல்
லப்படுகிறது. ஆஸ்டிரியாவும் செர்வியாவும் யுத்
தந் தொடுத்ததை யப்படியே விட்டிருந்தால்
ஒரு சீராய்ப்போயிருக்கும். மற்ற அரசர்களும்
அந்த நோக்கந்தோடேயே பாடுபட்டார்கள்.
ஆனால் ருஷியா மாத்திரம் சும்மாயிராமல் தனது
சேனைகளை யெல்லாம் ஆஸ்டிரியா தேசத்து
எல்லையிலும் ஜெர்மன் தேசத்து எல்லையிலும்
ஆயிரம் ஆயிரமாய்த் திரட்டிக்கொண்டே யிருந்
தது. அது எதற்காக வென்றால், ஆஸ்டிரியாவி
னால் செர்வியா தோல்வி யடைய அந்த இராச்
சியத்தையெல்லாம் ஆஸ்டிரியா வசப்படுத்திக்
கொண்டால், ஒருவேளை தனக்குப் பொல்லாப்பு
உண்டாகலாம் என்ற முகாந்தரத்தை யிட்டு அவ்
வாறு சேனைகளைச் சேர்த்துவந்தது. ஜெர்மனி
யும் இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்து ஆஸ்டிரிய
ருக்கும் செர்வியருக்கும் உண்டான சண்டையை
அம்மட்டோடே நிறுத்திவிடவும், சண்டையை
மற்ற நாடுகளில் பரவ விடாமல் தடுக்கவும் தம்
மாலான பிரயாசை யெல்லாம் பட்டது மல்லா
மல், ஜெர்மன் சக்கரவர்த்தி ருஷிய சக்கரவர்த்
திக்கு ஓர் காகிதமெழுதி, அவன் தன் தேசத்
தெல்லையிலும் ஆஸ்டிரியதேசத்தெல்லையிலும் அ
பரிமிதமாகப் படைகளைத் திரட்டிவருவதுயாது
முகாந்தரத்திற்கென்று தனக்குஅறிவிக்குமாறு
கேட்டனுப்பினன். இக் கடிதத்தை வரப்பெற்ற
ருஷ்ய சக்கரவர்த்தி ஒன்றும் பதி லுரையாமல்
முன்னிலும் அதிகமான சேனைகளைத் திரட்டிச்
சேர்த்துக்கொண்டேயிருந்தான். இதை யறிந்த
ஜர்மன் சக்கரவர்த்தி தானுஞ் சும்மா விருப்
பது சரியல்ல வென்று, தன்னுடைய சேனை
களையும் ருஷியரின் எல்லையில் திரட்ட ஆரம்
பித்து, இனி என்ன நடக்கும் பார்ப்போம் என்
றாற்போல் காத்துக்கொண் டிருந்தான். உடன்
படிக்கைப்படிக்கு ருஷியருக்கு உதவி செய்ய
வேண்டியவர்களான பிராஞ்சியர், ஒருக்கால் ஜர்
மனிக்கும் ருஷியாவுக்கும் சண்டை தொடங்
கிக்கொண்டால், தாங்களும் அதற்குத் தயாரா
யிருக்க வேண்டுமென்று உத்தேசித்தார்கள்;
படைகளைத் திரட்டினார்கள். இதை யறிந்த ஜர்
மனியர் தங்கள் ஜன்ம சத்துருக்களான பிராஞ்
சியர்மேல் ருஷியருக்கு விரோதமாய் எழுப்
பின படைகளை யெல்லாந் திரட்டிக்கொண்டு
யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். ஆனால் பிரா
ஞ்சு தேசத்துக்குள் பிரவேசித்துவிடுவது அவ்வ
ளவு சுலப மல்ல. ஏனென்றால், மலைகளும் கோட்
டைக் கொத்தளங்களும் பிராஞ்சுதேசத்தின் கீழ்
எல்லைகளா யிருப்பதினால் அவைகளைக் கடக்க
முடியாது. இதற்காக ஜெர்மானியர் வடபக்கமா
ய் பிராஞ்சுக்குள் வெகு லேசாய் மாத்திரமல்ல
திடும்பிரவேசமாயும் நுழைந்து விடலாமென்று
எண்ணி, பெல்ஜியத்தைக் கடந்தாலல்லாது வே
றே மார்க்க மில்லாமையால், அதனூடே சைன்
யங்களை நடத்திச்செல்ல பெல்ஜிய அரசனை
அனுமதி கேட்டார்கள். தாங்கள் கேட்டபடி
உத்தரவு கொடுபடவில்லையென்று கண்ட ஜெர்
மானியர் அக்கிரமமாய் அங்கே பிரவேசிக்கவே,
பெல்ஜியருக்கும் ஜெர்மனியருக்கும் கடும்போர்
தொடங்கிக்கொண்டது. இப்படி யெவ்வளவு கா
லம் ஜெர்மனியர் பெல்ஜியரோடு யுத்தத்தினால்
தடுக்கப்படுவார்களோ அவ்வளவுக்கும் பிராஞ்சி
யர் தங்கள் தேசத்தில் வேண்டிய படைகளை
யெல்லாம் ஒன்று சேர்க்கவும், அன்ன ஆகா
ராதிகளைச் சேர்த்துக்கொள்ளவும், கோட்டைக்
கொத்தளங்களைச் செப்பனிடவும் வேண்டிய
சாவகாசம் அடைவார்கள்.

ஒரு பெரிய கட்டிடத்தில் தீப் பற்றிக்கொள்
ளுமானால் அண்டை அயலாரான மற்றவர்கள்
கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கைப்பார்த்து
நிற்பார்களோ? அில்லையே; உடனே பற்றின
தீயை மூந்த மூந்த அணைக்கத் தேடுவார்கள்.
அது முடியாதென்று தெரிந்த மாத்திரத்தில்
அவரவரும் தம் தம் வீடுகளைக் காபந்து செய்யப்
பார்ப்பார்களல்லவா? அதுபோல செர்வியா
வால்பிடித்த யுத்த நெருப்பை நமது ஆங்கிலே
யர் அவ்வளவோடே நிறுத்திவிட வேண்டிய
முயற்சி யெல்லாஞ் செய்து பார்த்தும் அது நா
ளுக்கு நாள் ஒவ்வொரு தேசமாக ஐரோப்பா
முழுவதையும் பற்றிக்கொண்டு, தங்கள் தேசத்
துக்கும் நெருங்கி வருகின்றதென் றறிந்து
கொண்டபடியாலும், ஏற்கெனவே ஏற்பட்டி
ருக்கிற உடன்படிக்கைப்படி தாங்கள் பிராஞ்
சியருக்கும் ருஷியருக்கும் உதவி செய்ய வேண்
டியவர்களாயிருக்கிற படியாலும், காலதாமதம்
பண்ணாமல் தங்கள் சுயநாட்டை மாத்திரமல்ல,
தங்களாதரவை நம்பியிருக்கும் பூலோக மடங்



கலு முள்ள தங்கள் சொந்தமான எல்லா தேசங்
களையும் பாதுகாக்குமாறு வேண்டிய முயற்சி
களை யெல்லாஞ் செய்து வருகிறார்கள். இப்
போது ஜர்மனியருக்கு விரோதமாய் பெல்ஜிய
ருக்கும் பிராஞ்சியருக்கும் உதவியும் புரிந்து
வருகிறார்கள்.

1870-ம் வருடம் பிராஞ்சியருக்கும் ஜெர்
மானியருக்கும் நடந்தேறிய யுத்தத்தில் தாங்
கள் அடைந்த வெற்றியினால் செருக்கடைந்தி
ருக்கிற ஜெர்மானியர் முன்பின் யோசியாமல்
இப்போது மகா வில்லங்கத்தில் போய் மாட்
டிக்கொண்டார்கள். ஜெர்மன் சக்கரவர்த்தி
தன்னையும் நப்போலியன் போனப்பார்ட்டை
யொத்தவனாகப் பாவித்துக்கொண்டான்போல்
காண்கிறது. அப்படியானால் அவனுக்குக் கிடை
த்த முடிவே இவனுக்கும் கிடைக்கும்போலும்.
ஒரு பக்கத்தில் ருஷியரோடும் செர்வியரோடும்
சண்டை. ஒரு புக்கத்தில், பிராஞ்சியரோடும்
பெல்ஜியரோடும் யுத்தம். மற்றொரு பக்கத்தில்
"சும்மா இருக்கிறேன் சாமி, நா னொரு பக்கத்
திலுஞ் சேரமாட்டேன்" என்று சொல்லிக்
கொண் டிருக்கிற இத்தாலியாவை வலிய கூப்
பிட்டு "என்னோடு சேருகிறாயா அல்லது உன்பே
ரில் போர் தொடுக்கட்டுமா"வென்று சண்டைக்
கிழுக்கிறான். ஆ, இவனது பெலன்தானென்ன!
எத்தனைதான் சேனைக ளிருந்தாவ தென்ன?
முப்பதினாயிரம் பிலிஸ்தியரை மூந்நூறு இஸ்ரு
யேலித்தார் ஜெயிக்கவில்லையா? ஆண்டவருடை
ய ஆசீ ரிருந்தா லல்லாது தன் தன் சுய வல்ல
மையினால் ஒன்றுமே நடவாது.

சென்ற பல நாளாய் ஜெர்மானியர் பெல்ஜி
யத்தி லுள்ள லீஜ் என்னுங் கோட்டையை முற்
றுகை யிட்டுக்கொண் டிருக்கிறார்கள். பெல்ஜி
யர்கள் மகா வீரத்தோடு எதிர்த்து அதைக் கா
வல் செய்து வருகிறபடியால் ஜெர்மானியர்
ஜெயம் அங்கு ஒன்றுஞ் சாயவில்லை. ஆயினும்
"நாமூர்" என்னும் வேறோர் பலத்த கோட்
டையை இவர்கள் பெல்ஜியரிட மிருந்து பற்றிக்
கொண்டார்க ளென்று சமாச்சாரம் எட்டுகி
றது. ஆங்கிலேயரும் பிராஞ்சியரும் ஒரு பக்க
மும், ஜெர்மனியர் மறு பக்கமுமாக நின்று நா
மூருக்கு அருகாமையில் மான்ஸ் என்னுமிடத்
தில் ஓர் பலத்த சண்டை செய்து வருகிறார்கள்.
இதன் முடிவுதெரிய பலநாள் செல்லும்போலும்.
நமது ஆங்கிலேயர் நல்ல தரப்பி லிருந்துகொ
ண்டு மகா வீரத்துடன் சண்டை செய்கிறார்க
ளெனத் தெரியவருகிறது.

கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களாகிய நா
மனைவரும் இப்போது தொடங்கி யிருக்கும் இச்
சண்டையினால் நமது காருண்ணியரான ஆங்கி
யலேருக்கு எவ்வித பொல்லாப்பும் நேராமல்
ஆண்டவர் அவர்களைக் காப்பாற்றவேணுமென்
றும், யுத்தம் இன்னும் வேறே தேசங்களில் பர
வாமுன்னே எல்லா இராசாக்களுள்ளும் நித்
தியசமாதான முண்டாகத் தயை செய்ய வேண்
டுமென்றும் அவரை அனுதினமும் மன்றாடு
வோமாக. யுத்தத்தில் மடிகிறவர்கள் அநேக
மாய் நமது கத்தோலிக்குச் சகோதரர்களாகை
யால், அவர்களெல்லோருக்கும் நல்ல மரணத்
தைக் கட்டளையிடும்படியாக பின்வரும் ஜெபத்
தை யநுதினம்காலை மாலை ஜெபித்துவருவோ
மாக. "ஆத்தும அன்பனுமாய் மகா தயாபரரு
மாயிருக்கிற சேசுவே! மிகவும் பரிசுத்தமுள்ள
உமது இருதயம் பட்ட மரணவஸ்தையையும்
மாசில்லாத உமது மாதா அனுபவித்த வியாகு
லத்தையும் பார்த்து, இப்பொழுது மரணவஸ்
தையா யிருக்கிறவர்களுமாய் இன்றையதினத்
தில் மரிக்கவேண்டியவர்களுமான உலகிலுள்ள
சகலரையும் உமது திரு இரத்தத்தால் சுத்திகர
மாக்க வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகி
றோம். மரணவஸ்தைப்பட்ட சேசுவின் திரு
இருதயமே இன்றுமரிக்கிறவர்கள் பேரில் இரக்
கமாயிரும். ஆமென் சேசு."

## CHRISTIAN DOCTRINE.
## ஞானோபதேசம்.

முதற் கற்பனை
9-ம் பாடம்.
சுரூப வணக்கம்.

திருச் சுரூபம், பட முதலி
யவைகளுக்குத் தேவ
ஆராதனை செலுத்து
வது மகா பாவமாகும்.
ஆனால் தேவ தாயாரு
டையவும் அர்ச்சியசிஷ்
டவர்களுடையவும் சுரூபத்துக்கும் படத்
துக்கும் முன் வேண்டிக்கொள்வதும்

அவைகளுக்குச் சங்கை செய்வதும் முதற் கற்பனையில் விலக்கப்படாததுடன் அதனால் ஞான நன்மையும் உண்டாகும். மேலும் நாம் சுரூபங்களுக்கு முன் வேண்டிக் கொள்ளும்பொழுதும் அவைகளுக்கு வணக்கங் காட்டும்பொழுதும், அவைகள் யாருடைய பாவனையாக அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த அர்ச்சியசிஷ்டவர்களைப் பார்த்து மன்றாடுகிறோம் என்றும், அவர்களுக்கு வணக்கஞ் செலுத்துகிறோம் என்றும் மறக்கக்கூடாது.

1. பித்தளை சர்ப்பம்.—மோசேஸ்காலத்தில் இசரேலித்தார் செய்த பாவாக்கிரமங்களுக்கு ஆக்கினையாக கணக்கில்லாத பேர் அக்கினி சர்ப்பத்தின் கடியால் சாகும்படி சர்வேசுரன் சித்தமானார். மோசேஸ் தேவ அறிக்கையின்படி பித்தளையால் ஒரு சர்ப்பம் செய்வித்துத் தமது கோலில் அதைத் தூக்கிவைத்து, அக்கினி சர்ப்பத்தால் தீண்டப்பட்டவர்கள் இப்பித்தளை சர்ப்பத்தை நோக்குவார்களேயாகில் குணப்படுவார்களென்று அறிவித்தார். அவ்வாறு சர்ப்பத்தால் கடிபட்டவர்கள் ஷை பித்தளை சுரூபத்தைக் கண்ணோக்கவே குணப்பட்டார்கள். அந்தப் பித்தளை சுரூபம் பாடுபட்ட சுரூபத்திற்கு அடையாளமென்று அறிக.

(மோசேஸ் ஆகமம்.)

இது நிற்க, தேவ கட்டளைப் பிரகாரம் வேத கற்பனை அடங்கிய பெட்டகத்தில் சம்மனசுக்களின் சுரூபங்கள் செய்து வைக்கப்பட்டிருந்தன.

2. சுரூபம் உடைக்கும் பதிதர்.—அப்போஸ்தலர் கால முதற்கொண்டு விஸ்வாசிகள், சேசுநாதர், தேவமாதா அர்ச்சியசிஷ்டவர்கள் முதலியவர்களுடைய திருச்சுரூபங்களைச் செய்தும், படங்களைச் சித்திரித்தும் அவைகளைக் கோவில்களிலும் தங்கள் வீடுகளிலும் வைத்து வணங்கியும் வந்தார்கள். ஆனால் எட்டாம் நூற்றாண்டில் இருந்த லேயோ (Leo) என்பவன் சுரூபங்களை உடைத்துத் தகர்க்கும்படி கற்பித்தான். அக்காலத்திலிருந்த குருக்களும் விஸ்வாசிகளும் அந்த அநியாயக் கட்டளைக்கு உடன்படாதபடியால் கொடுங்கோலனான இராயனால் உபாதிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள், கொன்ஸ்தாந்திநோப்பள்ளி மேற்றிராணியாரான அர்ச். ஜெர்மன் என்பவர் அந்த முரட்டு இராயனுக்குத் திருச்சுரூப வணக்கமானது திருச் சபையின் பாரம்பரையான படிப்பினையென்றும், அப்போஸ்தலர் கால முதற்கொண்டு இக்காலமட்டும் இதைத் திருச்சபை போதித்துவருகிறதென்றும், திருச்சபை ஆரம்பத்தில் சுரங்கங்களில் சுரூபம், படம் முதலியவைகள் செய்யவும் சித்தரிக்கவும்பட்டு வந்ததென்றும் அறிவித்தார். மேலும் சுரூபங்களை வணங்கும்பொழுது, அவைகளையல்ல, ஆனால் அவைகளால் குறிக்கப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களையே வணங்குகிறோம் என்று எவ்வளவு தெளிவாய் விவரித்துக் காட்டியும் முரடனான லேயோ அந்த ஞாயங்களுக்கெல்லாம் காது கொடாமல், அப்பரிசுத்த மேற்றிராணியாரைப் பிரதேசத்துக்கு அனுப்பிவிட்டு மற்ற மேற்றிராணிமாரையுங் குருக்களையும் விஸ்வாசிகளையும் குரூரமாய் உபாதித்துக் கொன்றுவிட்டு, அவன் துவக்கின தேவதுரோக வேலையைத் தொடர்ந்து நடத்தி, சில காலத்துக்குள் நிர்ப்பாக்கியனாய்ச் செத்தான்.

(திருச்சபை சரித்திரம்.)

3. அர்ச். ஸ்டீபன்.—திருச் சுரூபங்களுக்கு விரோதமாய்ப் போர் பொருதின லேயோ என்னும் துஷ்ட இராயன் காலத்தில் அர்ச். ஸ்டீபன் என்பவர் இராயனுக்குப் பயப்படாமல் சுரூபவணக்கத்துக்கு அநுகூலமாய்ப் பிரசங்கித்துவந்தார். அரிய புதுமைகளால் அவர் பிரசங்கத்தை உறுதிப்படுத்தினார். ஒருநாள் இந்த அர்ச்சியசிஷ்டவர் பிறவிக் குருடனான ஒருவனை வரவழைத்துச் சிலுவை சுரூபத்தைக்காட்டி: இப் பரிசுத்த சுரூபத்தில் நீ ஆராதிக்கும் சேசுக்கிறிஸ்துநாதருடைய பெயரால் உனக்குப் பார்வை உண்டாவதாக, என்ற க்ஷணமே அவன் கண்கள் திறக்கப்பட்டன.

இன்னொருநாள் ஒரு ஸ்திரீ ஆவேசங் கொண்ட தன் மகனை அர்ச். ஸ்டீபனண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனைக் குணப்படுத்தும்படி மன்றாடினாள். அப்போது அர்ச்சியசிஷ்டவர் ஒரு சிலுவை சுரூபத்தை அவனுக்குக் காட்டி அதை முத்தி செய்யும்படி சொல்லவே, அவனும் அதை முத்தி செய்த க்ஷணம் சொஸ்தப்பட்டான்.



பாரிச வாய்வால் பீடிக்கப்பட்ட ஓர் போர்ச்சேவகன் அர்ச். ஸ்டீபனை அண்டித் தன்னைக் குணப்படுத்தும்படி மன்றாடினான். அப்போது அவர் சேசுநாதருடையவும் தேவமாதாவுடையவும் திருச் சுரூபங்களை வணங்கி வேண்டிக்கொள்ளும்படி கட்டளையிட்டார். வியாதிக்காரனும் அவ்வாறு செய்தவுடனே அற்புதமாய்ச் சௌக்கியம் அடைந்தான். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட இராயன் ஷை போர்ச்சேவகனை வரவழைத்து அவனைக்கோபவெறியுடன் 'நீ இன்னும் சுரூபங்களை வணங்குகிறது மெய்தானோ?' என்று கொர்ச்சிப்பதைக் கேட்ட சேவகன் பயந்து நடுங்கி இராயன் பாதத்தில் விழுந்து, "இனி அப்படிச்செய்யமாட்டேன்" என்றதின்மேல் கொடுங்கோலன் சந்தோஷங் கொண்டு அவனுக்குப் பெரிய உத்தியோகங் கட்டளையிட்டான். பாவம்! இந்த நிர்ப்பாக்கியன் இராயன் சமுகத்தை விட்டு குதிரைமேலேறித் தன் வீட்டுக்குப் போகும் நேரத்தில் குதிரைமேலிருந்து விழுந்து அம் மிருகத்தின் காலால் மிதிபட்டு அவலமாய் மாண்டான்.

(அர்ச். ஸ்டீபன் சரித்திரம்.)

4. கர்த்தருடைய படம்.—இத்தாலியாவில் ஒரு குருவானவர் நமது கர்த்தர் சிலுவையில் கட்டப்பட்ட மேரையாய்ச்சித்தர்...

பொழுது கர்த்தருடைய திருப் பாடுகளைப் பற்றித் தியானிக்க இப்படம் என் ஞாபகசக்திக்கு உதவியாயிருக்கிறதே ஒழிய மற்றப்படியல்ல. மேலும் நான் அந்தப் படத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துநாதரின் ரூபத்தையல்ல, ஆனால் அந்த ரூபம் காட்டுகிற கற்றாணில் கட்டுண்ட கர்த்தர்மீது என் கருத்தை நிறுத்தித் தியானிக்கிறேன். உமது மனதில் யாதொன்றையும் ரூபித்துக்கொள்ளாமல் ஜெபிக்கக்கூடுமோ? கூடாது. அவ்வாறே யாதொரு சுரூபம், படத்துக்கு முன் செபிக்கும்பொழுது அதில் இருக்கும் உருவத்தையல்ல, ஆனால் அது குறித்துக் காட்டும் அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து மன்றாடுகிறோம்" என்றார். இதை அந்த புரோட்டஸ்டாண்டான் கேட்டு, இந்த ஞாயம் மெய்யாகவே என் புத்திக்குச் சரிப்படுகிறதென்று ஒத்துக்கொண்டான்.

(Schmid.)

---

# GNANAMANI, III. PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 11-ம் அதிகாரம்.

### இது உங்களுக்கு மிகவும் பாக்கியமான நாள்.

ஒரு நாள் விஸ்வாச நாயகரும் அவர் தாயாரும் பேசிக்கொண்டிருக்கும்போது நாயகருடைய பிள்ளைகள் வீட்டுக்குள் ஓடிவந்து, புஷ்பக்காள் வருகிறதென்று ஒரே சத்தமாய்ச் சொன்னார்கள். சற்றுநேரத்துக்குள் புஷ்பமரி யென்னும் 17 பிராயமுள்ள பெண் வீட்டில் பிரவேசித்தாள்.

விஸ்வாச நாயகருக்கு இருந்த எட்டுப் பிள்ளைகளில் புஷ்பமரி யென்பவள் மூன்றாவது பிள்ளை. இவள் சிறுபந்துவக்கி, கன்னியாஸ்திரிகள் அவ்வூரில் வைத்திருந்த பள்ளிக்கூடத்தில் உட் பிள்ளையாக படித்துவந்தாள். இவள் மகா நல்ல பிள்ளையாய் நடந்துவந்ததுடன், கல்வி வித்தைக்களை மகா திறமை சாமர்த்தியத்துடன் படித்துவந்தாள், அவளுக்கு துறவற அந்தஸ்தில் பிரவேசிக்க மனமிருந்தபடியால், விஸ்வாச நாயகராகி

னும் அவருடைய தாயாராகிலும் அவளுடைய மேலான கருத்துக்கு விக்கினஞ் செய்தவர்கள் அல்லர்.

இன்னும் இரண்டு மாதத்திற்குள் புஷ்பமரி கன்னியர் சபையின் உடுப்புப் பெற்றுக்கொள்ள இருப்பதால், இந்த பாக்கியமான செய்தியை தன் பெற்றோருக்கு அறிவித்து, அவர்களுடைய ஆசீர்பெற்றுப் போகும்படி, பெரிய தாயாரால் அனுப்பப்பட்டாள். விஸ்வாச நாயகர் தமது நேச குமாரத்தியை 4, 5-நாள் தமது வீட்டில் நிறுத்திக்கொண்டு, தன் பந்துக்கள் வீடுகளை தன் தாயுடன் சந்திக்கச் சொன்னார். அபிராமியும் அபுரூப மணியும் புஷ்பமரியின் விசேஷ சிநேகிதர்களா யிருந்ததைப் பற்றி, வெகுநேரம் அன்னியோன்யமாய்ப் பேசிவருவார்கள்.

ஐந்தாம்நாள் புஷ்பமரியைப் பார்த்து இவ்வாறு சொல்வார் விஸ்வாச நாயகர்: இப்போது, என் பிரிய குமாரத்தியே சர்வேசுரனுக்கு ஊழியம் செய்யும்படி கன்னியாஸ்திரியாகப் போகிறாய்; ஆனால், மடத்தில் சுகமும் சந்தோஷமும் இருக்குமென்று நினைக்கவேண்டாம். உன் மனதின்படி நடவாமல் வேறொருவருடைய இஷ்டப்படி நடக்கவேண்டி யிருக்கும். உன் உள்ளிந்திரியங்களையும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஒறுக்க வேண்டியது. அந்தந்த நேரத்தில் ஒழுங்கின்படி மனமிருந்தாலும் மனமில்லா விட்டாலும் குறிக்கப்பட்டவேலையைச் செய்யவேண்டும். யாதொரு சொற்ப தப்பிதங் காணப்பட்டால் அதைத் திருத்த அநேகர் இருப்பார்கள். சிலுவையில் அறையுண்ட நமது கர்த்தரை இடைவிடாமல் பின்சென்று நாளுக்கு நாள் உத்தமதனத்தில் அதிகரிப்பது உன் கடமை.

சர்வேசுரனுக்குத் தன்னை முழுதும் ஒப்படைத்த ஆத்துமத்திற்கு ஞான சந்தோஷம் இடைவிடாம லுண்டாயிருக்கும். துன்ப துரிதங்கள் அனுபவிக்க அந்த ஆத்துமத்திற்கு அபேக்ஷை யுண்டாகும். ஒரே வார்த்தையில் உலகத்துக்குச் செத்து சர்வேசுரனுடைய காரியங்களில் ஜீவித்திருப்பதில் துறவற அந்தஸ்து அடங்கியிருக்கிறது. இதுகளை யெல்லாம் நீ யேற்கெனவே அறிந்திருப்பதால் இவைகளை யுனக்கு இப்போது சொல்ல அவசரமில்லை. சாகுமட்டும் துறவற அந்தஸ்தில் நிலைத்திருக்க மனமிருந்தால் சந்தோஷமாய்ப் போய், அதில் பிரவேசி, இல்லாவிட்டால் இங்கேயே நின்று போவது உத்தமம் என்று வெகுநேரம் புத்திசொன்னார்.

அப்போது புஷ்பமரி தன் தகப்பனைப் பார்த்து: மடத்தில்வரும் துன்ப துரிதங்களைப் பற்றி ஏற்கெனவே அறியவே அறிவேன். அதில் சேரும்படி வெகுகாலமாய்ப் பூரண மனசு இருக்கிறது. நான் சாகுமட்டும் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்ய கருத்து கொண்டிருக்கிறேன். எனக்காக நீங்களும் பாட்டியாரும் தாயாரும் வேண்டிக்கொள்ள கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் உங்களுடைய உத்தரவு பெறும்படி வந்திருக்கிறேன், என்று அவர்களுக்கு முன் முழங்காலிலிருந்தாள். அப்போது, "எப்போதும் சர்வேசுரனுக்கு நல்லபிள்ளையாய் இரு அம்மா" என்று, மதுரநாயகம் புஷ்பமரியின் நெற்றியில் சிலுவை வரைந்தாள். அதன் பிறகு விஸ்வாச நாயகரும் சிலுவை போட்டார். பெண்ணின் தாயாராகிய கமலமரியம்மாளுடைய கண் கலங்கி, கஸ்தியால் பேச வாய் வராமல் அவளுடைய நெற்றியில் சிலுவை யடையாளமிட்டுப் பிறகு தன் மகளைத் தூக்கிவிட்டு, கண்ணீர்ததும்ப அவளுக்கு முத்தமிட்டாள். அதன்பிறகு, அங்கு கூடியிருந்த அவள் பந்துஜனங்களும் அவளுக்கு நல்வாக்குக் கூற, புஷ்பமரி தன் தம்பியையும் தங்கைமாரையும் ஒவ்வொருவராய் முத்தமிட்டாள். அவள் வீட்டை விட்டு மடத்திற்குப் போகும்போது, விஸ்வாச நாயகர்: புஷ்பமரி, நீ கன்னியர் உடுப்பு தரித்துக்கொள்ளும் நாளில் உன் தங்கைகளிருவரும் புதுநன்மை வாங்க குறிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப்பின் அவர்களை உட்பிள்ளைகளாக மடத்தில் விட நினைத்திருக்கிறேன். மேலும் நமது குடும்பத்தில் 2,3 பேராகிலும் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யவேண்டும் என்பது என் இடைவிடா கோரிக்கை. உன் சகோதரன் தேவதாஸ் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வா னென்று ஆசையுடன் எதிர்பார்த்தேன். ஆனால் என் ஆசை அனுகூலப்பட வில்லை. நீ முதல்முதல் காட்டும் வழியில் வேறு சிலர் நடப்பார்களாக, என்றார்.

உடனே புஷ்பமரி அங்கு கூடியிருந்தவர்களுக்கு மங்களவார்த்தை சொல்லி வெளியே புறப்படும்போது அவளுடைய தாயாரும் அவளுடன் மடத்துவரையில் போனாள். சிங்கராயனும் பூங்கொடியும் இருதயமும் தங்கள் அக்காள் கையைப் பிடித்துக்கொண்டு மடத்துக்குப்போய்ச் சிலநேரம் பெரியதாயாருடன் பேசினபின் வீட்டுக்குத் திரும்பினார்கள்.



புதுநன்மைக்குக் குறிக்கப்பட்டநாள் நெருங்கிவரவர விஸ்வாசநாயகருடைய இருகுமாரத்திகளும் ஞானோபதேசத்தைத் தெளிவாகக் கற்றுக் கொண்டு, கன்னியாஸ்திரிகளும் தங்கள் தகப்பனாரும் சொல்லும் புத்திமதிகளை நன்றாய் உற்றுக்கேட்டு மனதில் பதியும்படிச் செய்தார்கள்.

நாயகர் ஒருநாள் வழக்கம்போல புத்திமதிகளைச் சொன்னபின், "பிள்ளைகளே நீங்கள் சேசுநாதரை உங்கள் இருதயத்தில் உட்கொள்ள இன்னும் 2-நாள் மாத்திரமிருக்கின்றன. உங்கள் இருதயம் எவ்வளவு பரிசுத்தமாயிருக்குமோ அவ்வளவு சந்தோஷத்துடன் கர்த்தர் உங்கள் இருதயத்தில் இறங்கிவருவார். அவர் உங்கள் இருதயத்தில் எழுந்தருளும்போது அவருக்குத்தூபங்காட்டவேண்டும்; அவருக்குப்பிரியமான காணிக்கை ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது அவர் உங்கள் மட்டில் அதிகபிரியங் கொள்வார். நீங்கள் விரும்புவதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என்றார்: அப்போது பூங்கொடி, "சோதர் நமதுகண்ணுக்குத் தென்படமாட்டார் என்றார்கள் தாயார்அம்மாள், அப்படியானால் அவருக்கு எப்படித் தூபங்காட்டுவது" என்றுசொல்லி முடிப்பதற்குள்ளாக, "என்ன காணிக்கைகொடுப்பது சேசுநாதருக்கு ஆஞி" என்று இருதயம் வினவினாள்.

"தூபம் என்பது, பிள்ளைகளே! சாம்பிராணி தூபமல்ல. நீங்கள் பத்தியோடுங் கவனத்தோடுஞ் செய்யுஞ் செபம் கர்த்தருக்கு நேர்த்தியான பரிமளம்போல அவர் சமுக மட்டும் செல்லும். காணிக்கையாவது என்ன? பணங்காசல்ல, துணி மணியல்ல, பொன் வெள்ளியல்ல. இருதயம், பள்ளிக்கூடத்திற்குப்போகும்போது வழியில் வாத்தியத்துடன் பாடுவதை நீ கண்டால் அதைப்பார்க்கும்படி ஆசிப்பாயல்லவா?" "ஆம்." "ஸ்வாமியைப் பற்றி அதைப்பார்க்காமல் போவாயாகில் அது ஒருகாணிக்கையாகும். உனக்குத் தாகம் உண்டாகிறது; உடனே தண்ணீர்குடிக்கப்போகிறாய். அப்போது சற்றுநேரம் ஸ்வாமியைப்பற்றி தாகத்தை யடக்கிப் பிறகு தண்ணீர் குடித்தால் அதுவும் ஒருகாணிக்கையாகும். காலையில் நீங்கள் தூங்கும்போது மணிச்சத்தம் காதில் விழுந்தபோதிலும் அதைச் சட்டைசெய்யாமல், இன்னுங் கொஞ்சநேரம் தூங்க ஆசையுண்டாகிறது. உடனே தூக்கத்தை விட்டு எழுந்திருப்பதும் ஸ்வாமிக்குப் பிரியமான காணிக்கையாகும். பூங்கொடி, நீயும் இருதயமும் விளையாடும்போது ஏதோஒருகாரணத்தைப் பற்றி அவள் மட்டில் உனக்குக் கோபமுண்டாகி, அவளைத் திட்டவோ, அல்லது அடிக்கவோ மனது உண்டாகிறது. அப்போது நீ ஸ்வாமியைப்பற்றி கோபிக்காமலும் அடிக்காமலும் இருந்தால் அதுவும் ஒருகாணிக்கையாகும். நீங்கள் செபஞ்செய்யும்போது உங்களுக்குப் பல பராக்குகள் உண்டாகின்றன, அப்போது ஸ்வாமியை நினைத்து அந்தபராக்கைத் தள்ளுவீர்களேயாகில் அதுவும் ஒருகாணிக்கையாகும்.

இப்படியே ஒருநாளில் அநேகவிதமான ஞானகிருத்தியங்களைச் செய்து நன்மைவாங்கும்போது அவைகளைச் சேசுநாதஸ்வாமிக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கலாம். இப்போது இருதயம்? நான் சொன்னதைக் கண்டு பிடித்தாயா "கண்டுபிடித்தேன்." நீ பூங்கொடி? "ஆம், தெரிந்து கொண்டேன் ஆஞி."

புதுநன்மைகாலத்தில் துணி மணியையும், நகைநட்டையும், புஷ்பங்களையும்பற்றி நினைக்க வேண்டாம். இதுகளில் கவனமாயிருக்கிற பிள்ளை நல்ல ஆயத்தத்துடன் புதுநன்மை வாங்க மாட்டாள். அதனால் சேசுநாதஸ்வாமிக்குக் கஸ்தி உண்டாக்குவாள். இன்றுசாயந்திரம் கோவிலுக்குப்போய்க் கடைசிப் பாவ சங்கீர்த்தனம் செய்யுங்கள், என்று பிள்ளைகளை அனுப்பிவிட்டார்.

மறுநாளாகிய ஆகஸ்டுமாதம் 15உ தேவமாதா மோக்ஷத்திற்கு எழுந்தருளின திருவிழா இவ்வூரில் மற்றவருஷங்களைவிட வெகு ஆரவார சிறப்புடன் கொண்டாடப்பட்டது. ஏனெனில் மேற்றிராணி ஆண்டவர்பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்துக் கன்னியாஸ்திரிகளாகும் பெண்களுக்குத் துறவற வஸ்திரம் கொடுக்க வந்ததைப்பற்றி அவ்வூரில் அன்று சிறப்பு அலங்காரமும் கோவில் சோடினை கொண்டாட்டமும் உண்டாயிருந்தது.

திருவிழாவன்று காலை 7-மணிக்கு மேற்றிராணியாண்டவர் 6-பெண்களுக்குச்சபைவஸ்திரங் கொடுத்து, 4-கன்னியருடைய வார்த்தைப்பாட்டைப் பெற்றுக்கொண்டார். அந்த ஆறுபேருக்கும் சபைவஸ்திரங்கொடுப்பதற்கு முன் அவர்களை ஆண்டவர் பல கேள்விகளைக் கேட்டும்

போது, அங்கு கூடியிருந்த கிறிஸ்துவர்களுக்கு ஒருவித உருக்கம் உண்டாயிருந்தது.

ஆனால் அந்த 6-பேரும் விரிக்கப்பட்ட கருப்புத்துணியின்மேல் சாஷ்டாங்கமாக விழுந்து சர்வேசுரனைப் பிரார்த்திக்கும்போதும் சாவு மணியடிக்கப்பட்ட போதும் தேவாலயத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விஸ்வாசிகளுக்குத் துக்கங் கிளம்பினதுடன், பந்துக்கள் கண்ணீர் விட்டு அழத்தொடங்கினார்கள்.

இதற்குப்பின் 80-பிள்ளைகளுக்கு மேற்றிராணியார் உறுதிப்பூசுதல் கொடுத்துவிட்டு, பூசை துவக்கினார். பூசைநேரத்தில் புதுநன்மைக்கு முஸ்திப்பாயிருந்த 66-சிறுவரும் சம்மனசுக்குரிய பக்தி வணக்கத்துடன் கிராதிபக்கத்தில் முழங்காலிலிருந்து, சகலரும் அதிசயிக்க மோக்ஷவிருந்தாகிய தேவநற்கருணையை முதல்விசையாக தங்களிருதயத்திலுட்கொண்டு மேரைமரியாதையுடன் தங்கள் இடத்துக்குப்போய், தங்கள் இருதயத்தில் எழுந்தருளியிருக்கும் கர்த்தருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினார்கள். அதற்குப்பிறகு பிள்ளைகள் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்ச்சேர்ந்து தங்கள் பெற்றோராலும் பந்து மித்திராராலும் பக்ஷ அன்புடன் அரவணைக்கப்பட்டு, தயார்செய்திருந்த புஸ்தகமோ, செபமாலை சுருபமோ, படமோ புது நன்மை அடையாளமாகப் பெற்றுக் கொண்டார்கள். இனி அவர்கள் நடக்கவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றியும் போதிக்கப்பட்டார்கள்.

விஸ்வாச நாயகருடைய பிள்ளைகளாகிய பூங்கொடியும் இருதயமும் கோவிலிலிருந்து வீடுபோய்ச் சேரவே, தங்கள் பாட்டியாருக்கும் பெற்றோருக்கும் முன்பாக முழங்காலிலிருந்து அவர்களுடைய ஆசீரைப் பெற்றுக்கொண்டார்கள்.

பிள்ளைகளிருவரும் எழுந்திருந்தஉடனே, நாயகர் அவர்களைப்பார்த்து இவ்வாறு மொழிவார்: என் பக்ஷ அன்புக்குரிய பிள்ளைகளே! இது உங்களுக்கு மிகவும் பாக்கியமானநாள். சேசுக்கிறிஸ்துநாதர்உங்கள்இருதயத்தில்முதல் விசை யெழுந்தருளி வந்ததைப்பற்றி மெய்யாகவே நீங்கள் பாக்கியவதிகள். உங்கள் இருதயம் அவருக்குச் சிம்மாசனமாயிருப்பதால், அதில் வேறொருவருக்கு இடம் கொடாதேயுங்கள். பசாசு ஒருபக்கத்திலும் உலகம் ஒருபக்கத்திலும் உங்கள் சொந்தச் சரீரம் வேறு ஒருபக்கத்திலும் உங்கள் இருதயத்தைப் பலவந்தமாய் பறிக்கப் பார்க்கும். அதைச் சேசுநாதருக்குப் பிரியப்படாத இடமாக்கும்படி பிரயாசைப்படும். ஆனால் அந்தக் கெட்ட சத்துருக்களுடைய பிரேரேபனைக்கு இடங்கொடாதேயுங்கள். ஒரே வார்த்தையில், நீங்கள் பாவத்துக்குச் சம்மதியாமல் இருந்தால் உங்கள் இருதயம் எப்போதும் சுத்தமாயிருக்கும். அதில் நமதாண்டவர் சந்தோஷத்துடன் வீற்றிருப்பார். புதுநன்மை வாங்கினவுடனே சகலமும் முடிந்துபோனதென்று சிலபிள்ளைகள் நினைத்து, முன் அவர்கள் நடத்திவந்த நற்கிருத்தியங்களை விட்டுவிடுவார்கள். ஞானோபதேசத்துக்குப் போகமாட்டார்கள், அடிக்கடி பூசைகாணமாட்டார்கள், வருஷத்தில் இரண்டொருவிசை நன்மைவாங்கினால் போதுமென்று சொல்லுவார்கள்.

புத்தியில்லாத இப்பேர்ப்பட்ட பிள்ளைகளை நீங்கள் பின் செல்லவேண்டாம். ஒருவன் படித்தபின், தான் முன் படித்த சாஸ்திரத்தை மறவாமல் இருந்தால் மாத்திரம் தனக்குக் கிடைக்கும் உத்தியோகத்தைச் சரிவர செலுத்துவான். இல்லாவிட்டால் அவனுக்கு யாதொரு உத்தியோகமும் அகப்படாது. அதுபோல, நீங்கள் இதுவரையில் கேட்டுக் கற்றுக் கொண்ட புத்திமதிகளின்படி நடந்தால் மாத்திரம் நீங்கள் பயன் அடைவீர்கள். இல்லாவிட்டால் இத்தனை காலமாய்ச் சுவாமியாரும் கன்னியரும் சொன்ன புத்திமதிகளெல்லாம் சபலமாய் விடும்.

நாடோறும் பூசைகாண மறவாதேயுங்கள். உங்கள் குருவானவருடைய உத்தரவுடன் ஞாயிற்றுக் கிழமைகளிலும் பெரியதிருவிழாக்களிலும் பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குங்கள்.

உத்தரியசபை, செபமாலைசபை, செப அப்போஸ்தலசபை முதலிய சபைகளில் பேர் கொடுத்து, அவைகளின் ஒழுங்குபிரகாரம் நடவுங்கள்.

குருக்கள், பெற்றோர், கன்னியர் முதலிய பெரியோருக்குச் சங்கைகாட்டி நடக்கவேண்டும்.

துஷ்டப்பிள்ளைகளோடு சேரவேண்டாம். விசேஷமாகத் துற்பாஷைசொல்லி திட்டி வையவும் கெட்ட பிள்ளைகளுடைய சகவாசத்தைத் தேடவும் வேண்டாம்.



ஒருபோதும் பொய்சொல்லாதேயுங்கள். என்ன கஷ்டநஷ்டங்கள் வந்தபோதிலும் பொய்சொல்லவே வேண்டாம். நீங்கள் பொய் சொன்னால் ஒருவரும் உங்களை நம்பமாட்டார்கள். மெய்பேசினால் உங்களை யெல்லோரும் நம்பி, உங்களை நேசிப்பார்கள்.

சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாய் நடப்பீர்களாக. அப்போது நல்லபிள்ளைகளாயிருப்பீர்கள். சர்வேசுரனும் மனிதரும் உங்களை நேசிப்பார்கள். கடைசியாய் நல்ல மரண மடைந்து செர்ந்த தேசமாகிய மோக்ஷராச்சியம் போகலாம் என்று சொன்னபின், ஒவ்வொருவருக்கும் நேர்த்தியாய்க் கட்டப்பட்ட செபப்புத்தகத்தையும், என் புதுநன்மைஅடையாளம் என்னும் வேறொரு புஸ்தகத்தையும் கொடுத்து, இதை யிந்த பெரும் நாளின் ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள் என்றார். புஸ்தகக் கடையில் உங்கள் பெயரையும் நீங்கள் பிறந்த வருஷம், மாதம், தேதியையும், வெற்றுப்பாவ சங்கீர்த்தனம், புதுநன்மை, உறுதிப்பூசுதல்பெற்ற தேதியையும் அதில் வரைந்து கொள்ளுங்கள் என்றார்.

பிள்ளைகளின் பாட்டியாரும் இரண்டு வெள்ளிச் சுருபங்களை இருவருக்கும் கொடுத்தாள். அவர்களுடைய தாயார், இரண்டு நேர்த்தியான ஜெபமாலையைக் கொடுத்தாள். மற்ற பந்து மித்திரரும் முன்னதாக தயாரித்திருந்த சாமான்களைக் கொடுத்தார்கள்.

அபிராமியும் அபுருபமணியும் தாங்கள் கொண்டுவந்திருந்த பிராக் சட்டைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள்.

நாயகர் வீட்டார் காலை போசனம் செய்த பின் எல்லோரும் புஷ்பமரி சகோதரியைப்பார்க்கும்படி கன்னியாஸ்திரி மடத்துக்குப் போனார்கள்.

---

## CORRESPONDENCE.-
## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### பெரிய தாளை.

என்னன்றி கொன்றார்க்கு
முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

நம்மூர் சென்ற ஐந்து வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது சகல காரியங்களிலும் விசேஷமாய் பக்தியில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதற்கெல்லாம் காரணம் நமது சங்கைக்குரிய தர்மநாத சுவாமிகளே.

கடந்த 1910-வருடம் முதல் அவரால் செய்யப்பட்ட நன்மைகளாவன:—முதலாவது: நம்முடைய எத்தனையோ தலைமுறை தலைமுறைகளாய் இவ்விடத்தில் பங்கு விசாரித்துவந்த குருக்கள் ஒருவராலும் எண்ணாத ஓர் எண்ணத்தை இவர் எண்ணி, அதை நிறைவேற்றியிருக்கிறார். அதென்னவென்றால், மலைபோல் குமிந்திருந்த மணல்மேட்டை தம்முடைய கடும் பிரையாசத்தால் வெகுசீக்கிரத்தில் பனிபோலக் கரையச்செய்து உபயோகமற்ற அந்த இடத்தில் பிராஞ்சு தேசத்தின் லூர்து கெபியைப்போல், இத்தென் இந்தியாவில் எவ்விடத்திலும் கட்டப்படாத பிரமாண்ட வடிவு உள்ளதும், பத்தியை உண்டு பண்ணக்கூடிய சிறப்பானதுமான ஓர் கெபியை அத்தாய்க்கு மகிமைதங்கும் ஸ்தலமாகச்செய்து, அதில் அத் தாயின் சுருபத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

மண்மேடிட்டு, மாடுகளடையவும் உபயோகமற்ற அந்த இடத்தை அனேக ஆயிரம்பேர் பூசிக்கும்படியான தேவாலயமாகச் செய்ததற்கு நன்றியறிதலாக அந்த நல்ல தந்தை கேட்ட வசவுகளெத்தனை! சாபங்களெத்தனை!!

இரண்டாவது: உபயோகமற்றதும் இடைஞ்சலுள்ளதும் சுகர்தாரத்துக்கு விக்கினமாயுமிருந்த பங்களாவை அநேகர் இருக்கும்படி விஸ்தீர்ணமுள்ளதாயும் நற்சுகத்தைக்கொடுக்கக்கூடியதாயும் தமது மிஞ்சின பிரயாசத்

தால் கட்டிமுடித்திருக்கிறார். இதைக் கட்டிய சிலநாளைக்குள்ளாக அவருக்கு வருவித்த கஸ்தி எம்மட்டென்று இங்குவரைய இடம்போதாது.

மூன்றாவது: எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்னுள்ளதும், அதிக பழைமைப்பட்டதுமான பலிபீடத்தை மெய்ஞ்ஞான அருள் தங்கும்படியாய்த் தம்முடைய சொந்தப்பிளான்படிக்கு ஓர் சிறந்த பிர்மாண்டமான பீடமாக மார்பிள் கல்லால் அமைத்ததுபோலவே கட்டிமுடித்திருக்கிறார். அன்றுமுதல் அதைக் காணும் யாவரும் அதை மார்பிள் பீடமென்றே மதித்து இவ்வெளிய ஊருக்கு இவ்வளவு மகிமையான பீடம் வாய்ந்திருக்கிறதே என்று ஒருவாய்ப்பட பேசி வருகிறார்கள்.

நான்காவது: இவ்வூரின் சுகாதாரத்துக்கு விக்கினமாயிருக்கிறதையும், வீடுகட்ட நிலமில்லாமல் குடிகள் படும் கஷ்ட நஷ்டங்களையும் கண்டுணர்ந்து, தம் பிள்ளைகளின்மட்டில் கொண்ட விசேஷ பட்சத்தால் அவர்கள் நாளடவில் செய்துவருகிற குற்றங்களைப் பாராட்டாமல் யாராலும் நினைக்கக்கூடாத விதமாயும் மனிதர் குடி இருப்புக்கு ஒவ்வாத விதமாயுமுள்ள ஓர் பெரும் காட்டைவெட்டிச் சீர்திருத்தி அதை ஓர் பெரிய ரதவீதியாக்கியும் அதில் வீடுகள் கட்ட போதுமான நிலமும் கொடுத்திருக்கிறார். அவ்வீதியே இப்பொழுது பிரதானமான ரதவீதியாயிருக்கிறது. முன்னர் முக்கோண வடிவமைந்து பார்வைக்கு அவலக்ஷணமாயிருந்த தெருக்களை சதுரப்பட செய்து, மலைபோல் குமிந்திருந்த குப்பைக் கிடங்குகளை வெட்டி பார்வைக்கு அழகமையும்படியாய்ச் சீர்படுத்தி இருக்கிறார். இதனாலும் அவர் அடைந்த அவமானம் கொஞ்சநஞ்சமன்று.

ஐந்தாவது: ஆத்தும ரட்சணியத்துக்கு மிகப் பிரயோசனமான முயற்சிகளில் ஞானஒடுக்கம் முக்கியமானது. இதைச் செய்வதற்காகத் தக்க இடமில்லாததைப் பற்றி அநேகர் ஊர் ஊராய்த் திரிகிறார்கள். இவ்வூரிலோ தியானமென்கிற பேச்சையே நான் என் ஆயுசிலும் கேட்டதில்லை. இப்படியாயிருக்க இவ்வூருக்கு இந்த நல்ல தந்தை வந்த சில காலத்துக்குள் தியானசாலை ஒன்று நியமிக்கவேண்டுமெனக் கருதி, பாழடைந்து கிடந்த ஓர் பழைய கட்டிடத்தைப் பெரிதாக்க, அன்னியரிடம் யாசகம் வாங்கி; அதைச் சீர்படுத்தி எத்தனையோ ரூபாய் செலவுசெய்து கட்டி முடித்த கட்டிடத்தைப் போல் அதைக் கட்டி, அதற்குத் தியானசாலையென்று பெயரும் கொடுத்து, இந்தக் கொஞ்சக் காலத்துக்குள் அதில் மூன்றுவிசை தியானமும் நடைபெறும்படி செய்துவிட்டார். இத்தியானங்களுக்குப்பின் எத்தனையோ துஷ்ட ஆத்துமங்கள் மனந்திரும்பி நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணி தேவதுரோகச் செய்கைகளை விட்டுவிட்டு, நாடோறும் திவ்விய நன்மை வாங்கி வருகிறார்கள். இன்னும் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணத் தெரியாதவர்கள் முதலாய் அன்று முதல் அடிக்கடி நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணி நாடோறும் திவ்வியநன்மை வாங்கி வருகிறார்கள். முன் நாள் பூசையில் திவ்விய நன்மை வாங்குபவர்கள் ஏறக்குறைய 10-அல்லது 12-பேர் மாத்திரமே. திருநாள் காலங்களிலும் சராசரி 100-அல்லது 150-பேர் மட்டும் திவ்விய நன்மை வாங்குவது வழக்கம். இப்பொழுது நாள் பூசையில் 50-அல்லது-60 பேர்கள். திருநாள் பூசைகளில் 300–400-பேர் மட்டும் திவ்விய நன்மை வாங்கி வருகிறார்கள்.

ஆறாவது: ஏறக்குறைய 12-வருடங்களுக்குமுன் அஸ்திவாரமிடப்பட்டுக் கட்டி முடியாத கன்னியர் மடத்தை ஆறுமாதத்துக்குள் தமது விடா முயற்சியால் தமக்குண்டான அநேக சுகவீனங்களைக்கவனியாமல் கட்டிமுடித்து, கடந்த பெப்ரவரி மாதத்தில் நான்கு கன்னியர்களைக் கொண்டுவந்து அம்மடத்தில் வைத்து பெண்களுக்கான காரியாதிகள் ஒழுங்காய் நடைபெறும்படி செய்துவருகிறார்.

ஏழாவது: எத்தனையோ தலைமுறைகளாய் கொளும்பு, தூத்துக்குடி, பெரியதாழை யென்கிற மூன்று ஊர்களுக்கும் சம்பந்தப்பட்ட பொக்கிஷங்களால் ஏற்பட்டு வந்த சண்டை சச்சரவுகளை இவர் ஒற்றுமைப் படுத்தி ஷை பொக்கிஷத்தை நம்மூரிலேயே வைத்து நாளதுவரையிலும் அதற்கு யாதொரு பொல்லாப்பும் இடையூறும் வராதபடிக்குப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். இவர்காலத்தில் நடந்த எல்லா அலுவல்களிலும் இதுவே இராக்ஷத அலுவல்.

எட்டாவது: இவ்வூருக்குவந்த சுவாமிமார்கள் எவர்களாவது ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருபூசையைத்தவிர இரண்டு பூசை செய்ததே கிடையாது. இவ் வன்புள்ள தந்தையோ இவ்வூரவரின் வரியஸ்திதியைக் கண்ணுற்று தம்முடைய எவ்வித சுகவீனத்தையும் வருத்தத்தையும் கவனியாமல் ஞாயிற்றுக் கிழமைகளில் 5-மணிக்கும் 7-மணிக்குமாக இரண்டு பூசை செய்துவருகிறார்.

ஓர் ஊருக்கு சிறப்பும் கீர்த்தியும் எதனால் உண்டாகிறது? விஸ்வாசமும் பக்தியும் அதிகரிப்பதினாலேயேயன்றி மற்றப்படியல்ல. நம்முடைய ஊரும் தற்போது அடையப் பெற்றிருக்கும் பிரதாப மகிமைக்காக நாம் சந்தோஷங்கொள்ள வேண்டியதல்லவா? அதை இவ்வந்தஸ்துக்கு உயர்த்த காரணராயிருந்த நம்முடைய நல்ல தந்தையான சங். தருமநாத சுவாமிகளுக்கு நாம் எவ்வளவோ நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்படி இருக்க, நம்மில் சில மடையர்கள் குருமார்களை நிந்திக்கவும் அவர்களை மதியாமல் பேசவும் தாங்கள் அவர்களுக்கு மேற்பட்டவர்களென்றும் அவர்களைவிட மிஞ்சின புத்திமான்களென்றும் தாங்கள் வைத்த ஆள் என்றும் நினைத்து குருமார்களுக்கு விரோதமாய் நடந்து அவர்களை அவமானப்படுத்தி அவர்கள் மனதுக்கு ஓயா சஞ்சலத்தை யுண்டு பண்ணுகிறார்கள். இது எவ்வளவும் சரியல்ல. ஆகையால், எத்தனையோ நன்மைகளை நமக்குச் செய்து வருகிற இந்த நல்ல தந்தைக்கு நம்முடைய நன்றியறிதலைக் காட்டுவதுடன் நீடிய ஆயுளையும் நல்ல சௌக்கியத்தையும் இவருக்கு சர்வேசுரன் கட்டளையிடுமாறு அனுதினமும் மன்றாடி வருவோமாக.

தாழை நிவாசி.



---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல வர்த்தமானம்.

---

மரகத கற்கள்.—கன்னம்பாடியில் காவேரி நதிக்கு அணை கட்டுவதற்காக அதற்குச் சமீபத்தில் பூமியைத் தோண்டுகையில், விலை யுயர்ந்த சிறந்த பச்சைக் கற்கள் அகப்பட்டனவாம்.

ஜெர்மனிக்குப் பணமுடை.—யுத்தச் செலவுக்காகப் பணம் வேண்டும் ஆதலால் ஜனங்கள் சேவிங்க்ஸ் பாங்கில் சேர்த்து வைத்திருக்கும் ஒரு கோடி 50 லக்ஷம் பவுனை முதன் முதலில் யுத்தத்திற்கு வாங்கப்பட்ட கடனாக எண்ணப்பட வேண்டுமென்று பர்லினில் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

கிரேட் பிரிட்டனும் ஜெர்மனியும்.—தற்கால யுத்தத்தை முன்னிட்டு மேற்கு ஆபிரிக்காவிலிருக்கும் ஜெர்மன் டோகாலாண்டை பிரிடிஷார் பிடித்துச் சேர்த்துக் கொண்டதால் உலகத்திலிருக்கும் கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷன்களுக்குள் மகா பெரிய ஸ்டேஷனை பிரிடிஷார் அடைந்திருக்கிறார்கள். 3 ஆயிரம் மயில் தூரத்திற்கு இந்த ஸ்டேஷனிலிருந்து தந்தி மூலியமாகப்பேச முடியும்

நீரிழிவு நோய்.—சென்னைக் கவர்ன்மெண்டார் இத் தென்னிந்தியாவில் பல பேரைத் தாக்கிவரும் நீரிழிவு நோயைப் பற்றி விசாரணை நடத்தப்போகிறார்களென்று தெரியவருகிறது. மிதமான சாப்பாடு சாப்பிட்டு நல்ல தேக அப்பியாசமுள்ளோருக்கு இவ்வித நோய் அணுகாதென்றும், இதனால் பீடிக்கப்படுகிறவர்கள் காலையிலும் மாலையிலும் இரண்டொருமாதம் சமுத்திர ஸ்நானம் செய்து வருவார்களேயானால் குணப்படுவார்களென்றும் அநுபோகமுள்ளவர்கள் சொல்லுகிறார்கள்.

வெள்ளாட்டுப் பால்.—வெள்ளாட்டுப் பாலுக்கு பசும்பாலுக்குள்ள எல்லா குணங்களும் இருப்பதுடன், வெள்ளாடுகள் உடல் சிறுத்து, காரம் கசப்பு முதலிய பல சுவையுள்ள உணவுகளை மிதமாக உண்பதாலும், மிதமாக நீரைப் பருகுவதாலும், ஓடித்திரிவதாலும் அவற்றின் பாலுக்கு, பசும்பாலுக்கில்லாத வேறு விசேஷ குணங்களுமுண்டு. அவையாவன: பசி தீபனமுண்டாகும், எளிதில் ஜீரணமாகும், அஜீரணத்தைப் போக்கி பேதியைக் கட்டும். சுவாஸகாசம், ரத்த பித்தம் இவற்றைப் போக்கும். க்ஷயரோகிகளுக்கு ஹிதமாயிருப்பதே இதற்குண்டான விசேஷகுணமாகும்.

இங்கிலீஸ் பாஷையின் அபிவிருத்தி-இங்கிலீஷ் பாஷையில் 1657-வது வருஷத்தில் 13,000 வார்த்தைகள் தானிருந்தன; 1706-வது வருஷத்தில் 20,000 வார்த்தைகளாயின; 1800-வது வருஷத்தில் 50,000 வார்த்தைகளாயின; 1828-வது வருஷத்தில் 105,000 வார்த்தைகளாயின; பிறகு 1830-வது வருஷத்தில் 160,000 வார்த்தைகளாகப் பெருகிற்று, கடைசி

யாக 1894-ம் வருஷத்தில் அச்சிடப்பட்ட அகராதியில் 318,000 வார்த்தைகளிருந்ததாக ஏற்பட்டது. இப்போது 450,000 வார்த்தைகளிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**ஜர்மனியரும் ஆஸ்டிரியரும்.**—பெங்களூரிலுள்ள ஜர்மனியரும் ஆஸ்டிரியரும் நடக்கும் யுத்தத்தைப்பற்றி ப்ரிகேட் ஆபீசுக்கு வந்து ரிப்போர்ட்டு செய்து போகவேண்டுமென்று போலீசு அதிகாரிகள் அவர்களை எச்சரித்திருக்கிறார்கள். ஸ்டேஷன் ஸ்டாப் ஆபீசர் முன்பாக 6 பேர் ரிப்போர்ட் செய்து கொண்டனர்; ஒருவர் வரவில்லை; உடனே அவரையும் அழைப்பித்து, அவருடைய பூர்வோத்தரங்களை விசாரித்துப் பதிவு செய்துகொண்டார்கள். அதற்குப் பிற்பாடு எல்லோரிடமிருந்தும் கிரேட் பிரிடனுக்கு விரோதமாக அவர்கள் ஆயுதம் எடுப்பதில்லையென்றும் துருப்புகளின் போக்குவரத்துகளைக் குறித்து யாதொரு தகவல்களும் சொல்வதில்லையென்றும் ஒரு உறுதி மொழிச் சீட்டெழுதி அதில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள்.

**கத்தோலிக்குப் பத்திரிகைகள்.**—ஜெர்மனி, ஆஸ்டிரியா, சுவிட்செர்லாந்து ஆக இந்த மூன்று தேசங்களிலும் பிரசுரிக்கப்படுகிற கத்தோலிக்கு வர்த்தமானப் பத்திரிகைகள் 1241 என்றும், அவைகளில் அதிக பழைமையானது 1655-௵ ஆக்ஸ்பர்கர் போஸ்ட் சீடங் என்ற பட்டணத்தில் ஆரம்பமாயிற்றென்றும், 1714-ம்வருஷத்தில் இன்னொன்றும், 1750-ம் ஆண்டில் மற்றொன்றும் தோன்றினவென்றும் தெரியவருகிறதுமல்லாமல், அவற்றை இருபத்திரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம்பேர் வாங்கி வாசித்துவருகிறார்களென்றும் தெரியவருறது. இத்தென்னிந்தியாவில் இத்தனை கத்தோலிக்குப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படாவிடினும், பிரசுரிக்கப்பட்டு வரும் இரண்டொரு பத்திரிகைகளையும் வாங்கி வாசிக்க யாரையுங் காணோம், இப்பேர்ப்பட்ட பத்திரிகைகள் அப்பேர்ப்பட்ட பத்திரிகைகள் இருக்க வேண்டுமென்று பேசுவோர் மாத்திர மிருக்கிறார்களே யன்றி, பிரசுரமாகும் பத்திரிகைகளுக்குச் செலுத்தவேண்டிய சந்தாவைச்செலுத்தி அவைகளை விருத்தியாக்க பார்ப்போர் எத்தனைபெயர்!!

**சேசுசபை அதிசிரேஷ்டரின் மரணம்:** சேசுசபைக்கு அதிசிரேஷ்டராயிருந்த "பிரான்சிஸ் சாவியெர் வெர்ன்ஸ்" என்றவர் சென்ற ஆகஸ்டு௴ 21-ம்தேதியில் மரணமானாரென விசனிக்கிறோம். (இவர் 1842-ம் ௵ பிறந்து, 1857-ம் ௵ சேசுசபையில் பிரவேசித்து 1905-ம் ௵ சேசுசபை அதிசிரேஷ்டராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்.) சேசுசபை அதிசேஷ்டரை "கருப்பு பாப்பு" என்று சொல்லுகிற வழக்கமுண்டு. ஏனென்றால், அர்ச் பாப்பானவருடைய அதிகாரம் உலகமடங்கலும் பரவியிருப்பதுபோல் இந்தச் சேசுசபை அதிசிரேஷ்டருக்குள் ளடங்கின சேசுசபையா ரில்லாத தேசங்களில்லை. அர்ச் பாப்பானவருக்கு சேசுசபையானது ஒரு வலதுகரத்தைப் போலிருந்து வருகிறது. ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி மரித்த அர்ச். பாப்பவர்களும் ௸ ௴ 21-ந் தேதி மரித்த இந்த அதிசிரேஷ்டரும் சீவியத்தில் பிரியாத தோழர்களா யிருந்து வந்தது போலவே மரணத்திலும் பிரியாதிருக்க ஆண்டவருக்குத் திருவுளம் போலும்.

**ஓர் புத்தக விளம்பரம்.**—மறு பிறப்பு என்ற பொய்யான இந்து மதக் கொள்கையை மறுக்கும்படியான ஓர் தர்க்க நூலை விழுப்புரத்திலுள்ள உபதேசிமார் பாடசாலையை நடத்தி வரும் சங். மேத் சுவாமியாரவர்கள் தமிழ்ப் பாஷையில் பிரசுரித்திருக்கிறார். இது எல்லோருக்கும் இலேசாய்ப் புலப்படுமாறு, அஞ்ஞானி ஒருவனுக்கும் கத்தோலிக்குக் கிறிஸ்துவன் ஒருவனுக்கும் மறுபிறப்பைப்பற்றி நடக்கும் சம்பாஷணையைப்போல் எழுதப்பட்டிருக்கிறது. இதில் இந்து வேதங்களினின்றும் புராண சாஸ்திரங்களினின்றும் போதுமான உதாரணங்களை யெடுத்துக் காட்டி மறு பிறப்பைத் தக்க நியாயங்களால் மறுத்திருக்கிறார். எப்பக்கத்திலும் அஞ்ஞானிகளால் சூழப்பட்டுள்ள கிறிஸ்துவர்களாகிய நமக்கு இந்த அந்தகாரத்தை யோட்ட இது ஒரு நல்ல பலமான ஆயுதமாகும். தமிஷ்ப் பாஷையில் இவ்வித நூல் இதுவரையிலும் பிரசுரிக்கப்பட வில்லை. இந்த அரிய புத்தகம் நம் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். இதன் கிரையம் அணா 5, பை 6.

**யுத்தமும் குருக்களும்.**—நீலகிரியிலுள்ள குன்னூர் பங்குவிசாரணை சங்கை. பெக்குசுவாமியாரும் கோயம்புத்தூரிலுள்ள சங். தூனியேர் சுவாமியாரும் வேறே பனிரண்டு சுவாமிமார்களும், பெங்களூரிலிருந்து ஆறு சுவாமிமார்களும் பிராஞ்சுக்கு யுத்தத்துக்காக வரும்படி உத்திரவாயிருக்கிறதென கேள்வியுற்று விசனப்படுகிறோம். இவர்கள் கொளும்புக்குப் போய் இவர்களுக்கென்று வரவிருக்கும் புகைக்கப்பலிலேறி போய்ச் சேருவார்கள். இவர்களும் பிராஞ்சு பட்டாளத்தார் தரிக்கிற உடைகளைத் தரிக்கவேண்டுமென்றும், இவர்களைக் குருக்களென்று காட்ட இவர்களுடையின் பேரில் சிலுவை யடையாளம் போடப்பட்டிருக்குமென்றும், இவர்கள் சண்டை ஆயுதங்களொன்றையும் தரிக்க வேண்டியதில்லையென்றும், சண்டையில் காயம்பட்டவர்களுடைய ஆத்தும காரியங்களை விசாரிக்கவேண்டியதே யிவர்களுடைய அலுவலென்றும் உத்திரவு செய்திருப்பதாக தெரியவருகிறது. ஐயோ! இந்த நிர்ப்பாக்கியயுத்தத்தை முன்னிட்டு அஞ்ஞான தேசமாகிய நம்முடைய இந்தியாவில் சத்தியவேத பரம்புதலுக்காக உழைத்துவரும் குருக்கள் கூட போக நேரிட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லா மேற்றிராசனங்களிலும் இன்னுங் குருக்கள் தேவையா யிருக்கக் கொள்ள இருக்கிற குருக்களும் நம்மை விட்டுப் போகவேண்டிய தென்ன நிர்ப்பாக்கியம்!! யுத்தத்துக்குப் போகும் குருக்களெல்லோரும் க்ஷேமமாய்த் திரும்பிவரவும் கூடிய துரிதத்தில் சமாதானம் உண்டாகவும் வேண்டிக் கொள்வோமாக.



**வியாபார நிலைமை.**—இந்த யுத்தகாலத்தில் வியாபாரம் எப்போதும் போல நடந்துவர இந்திய கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய பிரயத்தனங்கள் எல்லாம் செய்துவரத் தீர்மானித்திருக்கிறார்கள். திருச்சினாப்பள்ளியில் ஆகாரத்திற்கு வேண்டிய சாமான்களின் விலை யுத்தத்தினால் சமீபத்தில் அதிகமாய் ஏறிவிட்டது. இவ்விடத்திய கலெக்டர் மிஸ்டர் லயனல் வைபர்ட். ஐ. ஸி. எஸ். யுத்தத்தினால் சாமான் விலைகளை அதிகமாக்கக்கூடாதென்று பறையடித்து, பிறகு, டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் இவர்களோடு கடைகளுக்குப் போய் வியாபாரிகளை விலைகளை ஏற்றக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டு வந்தார். மேற்குக் கரையில் ஏற்றுமதி இரக்குமதி வேலை சரியாய் நடக்கவில்லை, ஏனெனில் மற்ற இடங்களிலிருந்து கப்பல்கள் வருவது மிகவும் சொற்பமா யிருக்கிறது. கொப்பரை விலை எண்ணெய் விலைகள் மிகவும் குறைந்துவிட்டன. ஆகையால் இவ்விடத்திய வரும்படியும் குறைந்துவிட்டது. சில விடங்களில், வியாபாரிகள் யுத்தமென்கிற பாசாங்கு வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு சாமான்களை அதிக விலைக்கு விற்கிறார்கள். இவைகளையெல்லாம் அடக்க நம் கவர்ன்மெண்டார் முயன்று வருகிறார்கள்.

**ஒரு துணிச்சலான கொள்ளை.**—வட ஆற்காடு ஜில்லா கூபம் தாலுக்கா செங்கன் பள்ளியில் 4000 ரூபாயை சில திருடர்கள் ஒரு தனவானாகிய ரெட்டி வீட்டில் கொள்ளை யடித்தார்கள். அந்த ரெட்டி, வைக்கோல் அருகாமையாயிருந்த படியால், அதைப் பத்திரப்படுத்திவிட்டு, பணம் நகைகள் இவைகளை யெல்லாம் பத்திரமில்லாத இடத்தில் வைத்திருந்தான். இரவில் பதினைந்து மனிதர் வீட்டு வாயிலில் வந்து உள்ளே நுழைய முயன்றார்கள். அப்பொழுது வீட்டுக் காவற்காரன் எதிர்த்ததினால், அவன் மண்டையில் அவர்கள் அடி பலமாயடித்தார்கள். உடனே கூச்சலைக் கேட்டு ஒரு கிழவி கதவைத் திறந்தாள். அப்பொழுது திருடர்கள் உள்ளே நுழைந்து, அங்கிருந்த ஸ்திரீகளையும் ஒரு பையனையும் கால் கைகளைச் சேர்த்துக்கட்டி, அவர்கள் கூச்சலிட்டால் அவர்களைக் கொன்றுவிடுவதாக பயமுறுத்தினார்கள். திருடர்கள் உடனே வீட்டிலிருந்த சில துணிகளை யெடுத்து தீவட்டியாகக் கட்டி நெருப்பில் கொளுத்திக் கொண்டு வீட்டைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு கேழ்வரகு களஞ்சியத்திலிருக்கிற தானியத்தைக் கொள்ளையடித்து, அதன் கீழிருந்த 1000 ரூபாயுள்ள 2-பையையும், 2000 ரூபாய்க்குச் சரியான நகையையும் கொள்ளையடித்துக் கொண்டு திருடர்கள் போய் விட்டார்கள்.

**ஒரு அதிசயமுட்டை.**—ஈஜிப்ட் தேசத்தில் ஒரு குழந்தையின் கல்லறையிலிருந்து 1800 வருஷங்களுக்குமுன்னால் புதைக்கப்பட்டிருந்த ஒரு முட்டை கொஞ்ச நாளைக்குமுன் தோண்டி யெடுக்கப் பட்டதாம். இது எந்தமட்டும் உண்மையோ!

## "நல்லாயன்" அச்சியந்திர ஆபீசுக்காக நன்கொடை.

"நல்லாயன்" அச்சுயந்திரசாலைக்காக நாம் பட்டிருக்கும் கடனை ஒழிக்க சென்ற வருஷத்திலிருந்து நம்மால் செய்யப்பட்டு வரும் மனுவை நமது சந்தாதார நேயர்கள் அறியாதவர்கள் அல்ல. பிரதி மாதத்திலும் இதற்காக நமக்குக் கைகொடுத்து உதவினவர்களுடைய நாமதேயங்களை இப் பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். இவர்களைப் போல மற்ற நண்பர்களும் சிறிய தொகையாவது கொடுத்து உதவி, நம்மைக் கடன் என்னும் நிர்ப்பாக்கியத்தினின்று மீட்பார்களெனக் கோருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை. | 273 | 12 | 0 |
| Mr. சூசைமரியான், (திருநெல்வேலி) | 1 | 0 | 0 |
| ,, இன்னாசிமுத்து, (திருநெல்வேலி) | 1 | 0′ | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 275 | 12 | 0 |

நீங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,310 | 5 | 6 |
| ஓர் நன்கொடை, | 5 | 0 | 0 |
| Mr. A. Emmanuel, (மன்னூர் ஜங்ஷன்) | 5 | 0 | 0 |
| ,, V. M, A. சுவாமி, (மைசூர்) | 3 | 0 | 0 |
| ,, M. ஜோசேப் தனசிங், (சிம்லா) | 5 | 0 | 0 |
| ,, V. அடைக்கலசாமி, (பெல்லாரி) | 2 | 0 | 0 |
| ,, அநந்தநாதபிள்ளை, | 1 | 0 | 0 |
| ,, K. E. செபஸ்தியான், (உதகமண்டலம்) | 2 | 0 | 0 |
| ,, S. பிரான்சிஸ் மூலமாய் (இலங்கை) C. V. Force Band. | 7 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 3,340 | 5 | 6 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுக்கூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3,310-5-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்கு பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்

நண்பர்களே,

சென்ற வருஷம் உதாரகுணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும், எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மமென்று அறிக்கையிட்டுச் செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவியாகவந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்கும் பங்காளிகளான நேயர்களுக்கு அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1913-ஸு எப்ரல் மாதமுதல் 1914-ஸு மார்ச்சுமாதம் 31வ வரையில் நேயர்களிடமிருந்து வரவேற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடை ரூபாய் 600-0-0. சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்கள் கட்டவும், விசாரணைக்குரு வசிக்கும் பங்களாவை மராமத்து செய்யவும், கோவில் கட்டிட விர்த்திக்காக தண்டவாள தூலங்கள் வாங்கவும் செலவான தொகை ரூபாய் 2017-11-6. தற்காலம் எமக்குக் கடனுயிருப்பது ரூபாய் 460-0-0.

நண்பர்களே, தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி, சத்திரங்கள்



The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளுமுண்டு அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } அக்டோபர் 1914. { இலக்கம். 10.

OFFICE OF THE REGISTRAR 2-OCT 1914 MADRAS

## THE NEW POPE.
## புதிய பாப்பரசர்.

உலகம் உண்டானது முதற்கொண்டு எத்தனையோ தேசங்களும் இராச்சியங்களும், அவைகளின் இராசவம்ச வரிசைகளும் எழுந்து விழுந்து அழிந்தும்போயின. ஆனால் கத்தோலிக்குத் திருச்சபையோ, அது உண்டானது முதற் கொண்டு இதுவரையிலும் அநேக இக்கட்டு இடையூறுகளுக்கும், இகழ்ச்சி புரட்சிகளுக்கும் உள்ளாகாமல் இருந்ததில்லையென்றாலும், அழியாது எழுந்து நின்று சிறப்புற் றிலங்குகின்றது. அதன் அரசர்களான பாப்புமார்களும் ஒரு சங்கிலித்தொடர்போல் ஒருவருக்குப் பின் ஒருவராய் அதை அரசாட்சி செய்து வருகிறார்கள். ஆனபடியால் "சீமோன் மரித்தாலும் இராயப்பர் மரிப்பதில்லை" யெனும் சிறந்ததோர் சுலோகமும் திருச்சபையில் வழங்கி வருகிறது.

சென்ற 11 வருடங்களாய் மகா பிரதாபத்தோடு திருச்சபையைப் பரிபாலித்துவந்த 10-ம் பத்திநாதரெனும் பரிசுத்த பாப்பரசர் சமீபத்தில் பரலோக பிராப்தியாகவே, அவருக்குப் பின் அரசாள இதோ! 15-ம் ஆசீர்வாதப்பரெனும் புதிய பாப்பானவர் ஒருவர் வந்துவிட்டார்!! திருச்சபைக்குப் பிரத்தியட்சத் தலைவராய் நமதாண்டவரான சேசுநாதசுவாமியின் ஸ்தானத்தை வகிக்கும் இவரைப்பற்றி நாமெல்லோரும் அகமகிழ்ந்து ஆக்களிப்போமாக. இவருக்கு சுபசோபனங் கூறுவதோடுகூட இவரை கிறிஸ்துவ உலக முழுமைக்கும் ஞானத் தந்தையாக கொடுத்தருளிய காருண்ய கடவுளுக்கு என்றுந் தோத்திரம் புரிவோமாக.

கர்தினல் ஜியாகோமோ டேல்லா சீயேசாவெனும் நாமதேயங்கொண்டிருந்த நமது புதிய பாப்பரசர் இத்தாலியாவிலுள்ள பொலோஞ்ஞா பட்டணத்தின் அதிமேற்றிராணியார் ஆவர். இவர் ஜினோவா மேற்றிராசனத்தைச்சேர்ந்தபெக்லிநகரில், 1854 ஆண்டு நவம்பர்மீ 21-ந்தேதி மார்க்குயிஸ் பட்டம் வகித்திருக்கும் பிரபுக்கள் கோத்திரத்தில் பிறந்தவர். இப்போது இவருக்கு வயது சுமார் 60 ஆகையால் அவ்வளவு விருத்தாப்பியரல்லர். 36 வருடங்களுக்குமுன் குருப்பட்டம் பெற்றார். இலௌகீக படிப்பையும் ஞான படிப்பையும் ஜயந்திரி

பறக்கற்றுணர்ந்து பாண்டித்திய மடைந்தவர். இவருடைய கல்வி, சாமர்த்தியம், சமயோசித யோசனை, யுத்தி, தேவதாபக்தி இவைகளை நன்குணர்ந் திருந்த பரிசுத்த பிதாவான 13-ம் சிங்க இராயர் இவரைத் தம்முடைய(Secretary of State) சமஸ்தான காரியதரிசியாகிய கர்தினல் ரம்போலா என்பவருக்கு (Under Secretary) உபசம்பிரதியாக நியமித்திருந்தார். இந்த உத்தியோகத்திலேயே 10-ம்பத்திநாதரின் காலத்திலும் காயப்படுத்தப்பட்டு இந்தப் பாப்பரசரின் சமஸ்தான காரியதரிசியாகிய கர்தினல் மெர்ரிடெல்வால் என்பவருக்கும் உபசம்பிரதியா யிருந்துவந்தார். பிறகு இவரை 10-ம்பத்திநாதர் தம்முடைய (Nuncio) ஸ்தானுதிபதியாக ஸ்பெயின் தேசத்துக்கு அனுப்பிவைக்க அபிலாஷை கொண்டிருந்தார், என்றாலும் அச்சமையத்துக் காரியாகாரியங்களின் நிலைமைக்கேற்றபடி பொலோஞ்ஞா பட்டணத்துக்கு இவரை அதிமேற்றிராணியாராக நியமகஞ் செய்ய உத்தேசித்துத் தம்முடைய கரங்களாலேயே இவரை ஷை பட்டணத்தின் அதிமேற்றிராணியாராக 1907-ஹு டிசம்பர்மீ 16-ந்தேதியன்று அபிஷேகஞ்செய்தார். அன்றியும் தாம் மரணமடைவதற்கு ஏறக்குறைய இன்னும் மூன்றுமாச காலமிருக்கையில்தானே இவருக்குக் கர்தினல் பட்டமுங் கொடுத்தருளினர். இவர் தமக்குப் பிறகு பாப்பாசர் ஆவாரென பத்தாம்பத்திநாதர் அறிந்திருக்கமாட்டாரென்றாலும் தெய்வ திருவுளத்துக்கும், தெய்வ ஏவுதலுக்கும், தெய்வ பராமரிப்புக்கும் இசைந்தே இவரை அதிமேற்றிராணியாராகவும் கர்தினலாகவும் உயர்த்தினரென்பது விசிதமாகிறது. இப்படி தெய்வ சித்தத்தின்படி திருச்சபையை அரசாளத் தெரிந்து கொள்ளப்பட்ட 15-ம் ஆசீர்வாதப்பர் மகா மகிமைப்பிரதாபத்துடனும் சாதுர்ய திறமையுடனும் அதில் செங்கோல் செலுத்துவாரென்பதற் கையமில்லை. இவருடைய கல்வித் திறமையையும் புத்தி சாமர்த்தியத்தையும் அனுபோகத்தையும் யோசிக்கும் அளவில் இவரும் 13-ம் சிங்கராயரைப்போல் உலகத்தில் மகா கீர்த்திபெற்று இராஜ தந்திர நிபுணராய் விளங்குவாரென நம்ப இடமுண்டு. இவர் தமக்கு 15-ம் ஆசீர்வாதப்ப ரென்னும் நாமகரணத்தைத் தெரிந்து கொண்டதில் ஒரு விசேஷமுண்டென்னலாம். அதென்னவெனில்: கர்தினல் லம்பெர்தினி என்பவர் 1740-ம் ஹு பாப்பானவராகத் தெரிந்துகொள்ளப்பட்டபோது இவரைப்போலவே பொலொஞ்ஞா பட்டணத்தின் அதிமேற்றிராணியாராயிருந்தாரென்றும், அவர் தமக்கு 14-ம் ஆசீர்வாதப்பரென்னும் நாமதேயத்தைத் தரித்துக்கொண்டபடியினால் இவரும் தமக்கு 15-ம் ஆசீர்வாதப்ப ரென்னும் நாமதேயத்தைத் தெரிந்து கொண்டா ரென்பதேயாம்.

அர்ச். மலக்கி என்பவர் சொல்லியிருக்கிற தீர்க்கதரிசனப்படி (Ignis Ardens) "உக்கிரமான நெருப்பு" எனும் காரணப் பெயர் வகித்துத் திருச்சபையை ஆண்ட பத்தாம்பத்திநாதருக்குப் பிறகு வருவதாகக் கூறப்பட்டிருந்த (Religio Depopulata) "சத்தியக் கிறிஸ்துவர்களின் சம்மாரம்" எனும் பாப்பானவர் அர்ச். 15-ம் ஆசீர்வாதப்பரே ஆவர். அதெப்படி யெனில், நமக்கெல்லாருக்குந் தெரிந்திருக்கிறபடி தற்போது ஐரோப்பாவில் நடந்துவருகிற பயங்கரமான யுத்தத்தில், பெல்ஜியம், பிரான்சு, ஆஸ்திரியா, செர்வியா, ஜெர்மனி, ருஷ்யா, இங்கிலாந்து முதலிய தேசங்கள் சம்பந்தப்பட் டிருக்கின்றன. முதற்கூறின நான்கு தேசங்களும் முற்றுங் கத்தோலிக்கு தேசங்கள். பிறகு கூறியவைகளிலும் இலட்சக்கணக்கான கத்தோலிக்கர் இருக்கிறார்கள். இந்த யுத்தத் தீ பற்றியெரியும்பரியந்தம் இவர்களுக்குள் ஏராளமான பேர்கள் இதற்கு இரையாவார்களென்பது திண்ணம். ஆகவே, கிறிஸ்துவர்களுடைய தொகையும் நாளுக்குநாள் குறைவுபட்டு வருமென்பது மெய். இக் காரணத்தை முன்னிட்டு "சத்திய கிறிஸ்துவர்களின் சம்மாரம்" எனும் காரணப் பெயர் 15-ம் ஆசீர்வாதப்பருக்கு முற்றும் பொருந்துமென்பதற்கு ஆட்சேப மென்ன?

நம்முடைய பரிசுத்தபிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் பற்றியெரியும் யுத்தத்தீயை அணைத்துப்போடத் தம்மாலியன்றமட்டும் பிரயாசைப்பட்டுவருகிறாரென்றும், அதை ஒருமுடிவுக்குக் கொண்டுவர ஏற்கெனவே நிருபம் ஒன்று எழுதி விடுத்திருக்கிறாரென்றும், அந் நிருபத்தில் தமது உயிரைக்



கொடுக்கவேண்டி யிருந்தாலும் அதைக் கொடுத்து, போராடிக்கொண் டிருக்கும் அரசர்களுக்குள் சமாதானத்தை உண்டாக்கத் தீர்மானித்திருக்கிறாரென்றும் தெரியவருகிறது. "சமாதான இராயர்" ஆன சேசுக்கிறிஸ்துநாதரின் பிரதிநிதியாகிய நம்முடைய பாப்பரசர் தம்முடைய ஆளுகையின் ஆரம்பத்திற்றானே தம் உயிரைக்காட்டிலும் அதிகமாய்க்கோரும் அந்தச் சமாதானம் உண்டாகவும், இவர் நீடிய ஆயுள் உள்ளவரா யிருந்து திருச்சபையை ஆளவும், இவருடைய அரசாட்சி காலத்தில் அஞ்ஞானங் குறையவும், பதிதர் பிரிவினைக்காரர் ஒழிந்து சத்திய வேதம் பரம்பவும் சர்வேசுரன் கிருபை செய்வாராக.

---

## DIAMOND JUBILEE.

## வைர ஜுபிலி.

(முன்தொடர்ச்சி.)

---

### அமலோற்பவி வரப்பிரசாதத்தின் கால்வாய்.

ஆதி ஸ்திரீயினால் வந்த கேட்டை யொழிக்க ஒரு அமல ஸ்திரீயினால் உலகத்துக்கு இரட்சிப்பை யருள்வோமென்று ஆண்டவர் திருவுளம் பற்றினபடியே, முப்போதுங் கன்னிமை கெடாத நமது அமலோற்பவ தாயின் உதரத்தில் தேவசுதன் எந்தச் சணத்தில் ஜென்மித்தாரோ, அந்தச் சணமே சகல நன்மைகளின் ஊற்றாகிய ஆண்டவரிட மிருந்து மனுக் குலத்தோர் எல்லோர் மேலும் வழிந்தோடுகிற எவ்வித உபகார சகாயங்களுக்கும் இஷ்டப் பிரசாதங்களுக்கும் அத்தேவதாயார் கால்வாயாளென்பதற்குச் சந்தேகமில்லை. பிதாவாகிய சர்வேசுரன் நமது ஆதித் தாய் தந்தையரைச் சபித்தபோது "உங்கள் நிமித்தம் பூமி சபிக்கப்பட்டிருக்கும்" என்று திருவுளம் பற்றினாரல்லவா? அச்சாபத்தைத் தீர்க்க கன்னிமரியாயின் திருவுதரத்தில் தேவன் எந்த க்ஷணத்தில் மாம்ஸைக்கியஞ் செய்தாரோ அந்தச்சணமே அச்சாபமும் நீங்கினது மல்லாமல், சேசுநாதர் தேவமாதா ஆகிய "உங்கள் நிமித்தம் பூமி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்" என்று சர்வேசுரன் சொன்னாற்போலும் ஆகிறதல்லவா? பூமியெங்கும் பரவிய அந்தகாரத்தை யோட்டிப் பிரகாசத்தையும் உஷ்ணத்தையுங் கொடுத்துச் சகல சராசரங்களையும் சுபிக்ஷப்படுத்துகிறது சூரியனுடைய தொழிலா யிருக்கிறதுபோல், நமது புத்தியின் அந்தகாரத்தை யோட்டி நமக்கு ஞானப்பிரகாச வொளியாகிற திரு அருளையும், நமது மனதின் குளிரைப் போக்கி ஞானவுஷ்ணமாகிற தெய்வ சிநேகத்தையுங் கொடுத்து நம்மைப் பாக்கியவந்தராகச் செய்வது சர்வேசுரனுடைய அலுவலாமே. சர்வேசுரன் இக்கிருபைகளை நமக்குச் சேசுநாதர் மூலமாகத் தந்தருளுகிறார். சேசுநாதரோ தமது உறுப்புகளாகிற திருச்சபை யெங்கும் அவைகள் பாய்ந்தோடும் வாய்க்காலாகத் தமது மாதாவைத் தெரிந்து கொண்டிருக்கிறாரென்பது நிச்சயம்.

இச் சத்தியத்தை அமல கன்னிகையான நமது ஆண்டவளே அர்ச். இயசிந்து என்பவருக்குத் தெளிவிக்கச் சித்தங் கொண்டாள். அதெப்படி யென்றால், ஓர் நாள் அந்தப் புண்ணியவான் அர்ச். கன்னிமரியாயின் திருநாமத்தினாலே சர்வேசுரனைப் பிரார்த்தித்துக் கொண் டிருக்கும் போது பிரகாசத்தையே ஆடையாய்ப் பூண்டவளும், தயாளத்தையே கண்ணாடிபோல் விசிதமாகக் காட்டும் வடிவுள்ள முகத்தைக் கொண்டவளுமாக அர்ச் கன்னிமரியம்மாள் அவருக்குத் தரிசனையாகி "பிரிய மகனே! சந்தோஷானந்தங்கொள்; உலகத்தை மீட்டிரக்ஷித்த மெது குமாரனை சேசுநாதர் சுவாமி உனது விண்ணப்பத்தை நிராகரித்துத் தள்ளாமல் தயவோடே அங்கீகரித்துக்கொண்டார். இனி நமது பேரைச்சொல்லி அவரிடத்தில் நீ ஏதேது மன்றாடிக் கேட்டாலும் அவைகளை யெல்லாம் அடைவதற்கு தடைகிடையாது" என்று திருவாய் மலர்ந்தருளி வானோர் புடைசூழ அதரிசனமானாள்.

சகோதரரே! மழை பொழிந்த நீரெல்லாம் ஏரிகளிலே போய்ச் சேர்ந்து பி பாடு வெவ்வேறு கால்வாய்களின் வழியா.

ஓடி, அந்தந்தக் கிராம நிலங்களுங்குப் பாய்ந்து, ஒருபோகம், இருபோகம் முப்போகம் விளைவு வுண்டாவதற்கு ஏதுவாகிறதல்லோ? அவ்வண்ணமே பிதாவாகிய சர்வேசுரனிடத்தினின்று வருகிற ஞான நன்மைகளெல்லாம் சேசுநாதரிடத்தில் ஒன்று கூடிப் பிறகு அமலதாயாரின் மூலியமாய் நமது ஆத்துமமென்னுஞ் சிங்காரத்தோட்டத்தில் பாய்ந்து புண்ணிய பயிரை விளைவிக்கின்றது.

இதனாலல்லோ நமது நேசம்பொருந்திய தாயாரை "வரப்பிரசாதத்தின் மாதாவே" என்று தினமும் புகழ்ந்து கொண்டாடி வருகிறோம்.

ஆதலால் ஒருவன் எவ்வளவு தான் பாவியாயிருந்தாலும், அவன் பேய் பில்லிச் சூனியங்களைப் பிடித்திருந்தாலும், பசாசுக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்திருந்தாலும், நூறு நூறான பட்டணங்களையே தீயிட்டுக் கொழுத்தி நாசமாக்கியிருந்தாலும், இன்னமும் பெருத்த அநேக தோஷங்களைக் கட்டிக் கொண்டிருந்தாலும் அதனிமித்தம் அவன் அவ நம்பிக்கைப்படக் காரணமில்லை. அவன் இந்த அமல கன்னிகையான கிருபாகரியின் சரணாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து அவளுடைய திருப்பாதங்களைச் சிக்கெனப் பிடித்து மெத்தவுங் கஸ்தி மன்ஸ்தாபத்தோடு பிரலாபித்து அவளுடைய வுபகார சகாயத்தைத் தாழ்மையுடன் இரந்து மன்றாடுவானாகில், மோக்ஷ இராக்கினி அவனைத் தமது இருகரங்களினாலும் அணைத்துச்சேர்த்து அவனுக்காக மன்றாடிப் பொறுத்தலடைந்து அவனைப் பாதுகாப்பாளென்பது திண்ணம்.

ஆகையால், பிரிய சகோதரரே! கிருபைக்கு மாதாவும் வரப்பிரசாதத்திற்குக் கால்வாயுமான அர்ச். அமல கன்னிகையை நாம் அனுதினமும் அதிவாஞ்சையோடு நேசித்துத் துதித்துத் தோத்திரித்து வருவோமாக.

அமல கன்னிகையே! கிருபாகரியே! வரப்பிரசாதத்தின் தாயே! எங்களை யுமது கரங்களில் வைத்துப் பாதுகாத்தருளும்.

---

## THE INTERMENT OF POPES.
## பாப்பரசர்களின் சவச்சேமம்.

கடந்த மாதப் பத்திரிகையின் வாயிலாக நமது அன்பார்ந்த பாப்பாண்டவர் பத்தாம்பத்திநாதரின் சிவிய வரலாற்றையும் அவருக்கு நேர்ந்த மரணத்தின் காரணத்தையும் பற்றி சுருக்கமாய்த் தெரிவித்தோம். ஒவ்வொரு பாப்பானவரும் மரணவஸ்தையா யிருக்கும்போதும், மரண மடைந்தபிறகும், சேமிக்கப்படும்பொழுதும் திருச்சபையின் பாரம்பரிய சட்டப்படி கற்பிக்கப்பட்டுள்ளவைகளை இம்மாதப் பத்திரிகையில் எடுத்துரைப்பது தகுதியாமே.

அர்ச். பாப்பு அவர்களுக்கு வந்துற்ற நோய் அவரை மரணத்துக்கே இரையாக்குமென்று அறிந்துகொண்டவுடனே, அவருடைய (Secretary of State) சமஸ்தான காரியதரிசியாயிருக்கப்பட்ட கர்தினாலானவர் மூத்த மூத்த (Cardinal Dean) விசாரணைக் கர்தினால் அவர்களுக்கு அதைத் தெரிவித்து அவரைக் கொண்டு மற்றக் கருதினால்மார்களெல்லோரும் வத்திக்கான் அரண்மனையில் வந்து கூடும்படி திட்டஞ் செய்வார். அதன்பிறகு அவர் அதை (Cardinal Vicar) வத்திக்கான் ஆலயத்தின் விசாரணைக் கருதினால் அவர்களுக்குத் தெரிவிக்கவே, அவர் உரோமாபுரியிலுள்ள சகல தேவாலயங்களிலும் அர்ச். பாப்பானவரின் சுகத்துக்காக விசேஷ வேண்டுதல் நடந்தேற கட்டளையிடுவார். மற்ற இராச்சியங்களி லிருந்து பாப்பானவரிடம் வந்திருக்கும் ஸ்தானாபதிகளுக்கும் இச்சமாச்சாரம் தெரியப்படுத்தப்படும். பாப்பானவரோடு வத்திக்கான் மாளிகையில் வசித்துவரும் மேற்றிராணிமார்களும் மற்று முண்டான அரண்மனை உத்தியோகஸ்தர்களும் உடனே வந்துகூடுவார்கள். (The Grand Penitentiary) பிராயச்சித்தம் விதிக்கிறவர்களுக்குத் தலைமையானவரும் இன்னும் பாப்பானவருடைய ஆத்தும குருவும் அவஸ்தையாயிருக்கும் அவரண்டைக்கு வந்து காத்திருப்பார்கள். வழக்கமாய் பாப்பானவர் பூசை செய்யும் கோவிலில் சக்கிரிஸ்து உத்தியோகஞ் செய்யும் மேற்றிராணியார் அவஸ்தை நன்மை கொண்டுவந்து கொடுத்து அவஸ்தைப் பூசுதலையும் நிறைவேற்றுவார். இவையெல்லாம் முடிந்தபின்னிட்டு பிராயச்சித்தம் விதிக்கிறவர்களுக்குத் தலைமையானவர் மரண அவஸ்தையா யிருக்கும் பாப்பானவருடைய விசுவாச உச்சாரணையைக் கேட்பார். ஏற்கெனவே அழைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு சன்னியாச சபையின் அதிசிரேஷ்டர்களும் தத்தமக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு மரணத்தருவாயி லிருக்கும் பாப்பானவருக்கு விசேஷ பரிபூரண பலனுள்ள ஆசீர்வாதங் கொடுப்பார்கள். மரண ஆராட்டம் அதிகப்படவே அரண்மனை காவல் உத்தியோகஸ்தர்கள் சாக்கிரதையாயும் விழிப்பாயும் காவற் காக்கக் கற்பிக்கப்படுவார்கள்.

பாப்பானவர் மரணமடைந்த மாத்திரத்தில் அது செய்தியை (Camerlengo) கர்தினால் மார் சங்கத்திலே முதன்மையானவரான 'கமர்லிங்கோ' எனப்படும் கர்தினாலானவருக்கு அறிவிக்கப்படும். மகா துக்கத்துக்குரிய இச் செய்தியை இவர் கேள்விப்பட்டதும் துக்க உடை தரித்துக் கொண்டு மரித்த பாப்பானவரின் சடலம் கிடத்தப்பட் டிருக்கும் அறைக்குப் போவார். அப்போது அவ்விடத்திலுள்ளவர்கள் மரித்தவர்களுக்காகச் செபிக்குஞ் செபத்தை செபித்துக் கொண் டிருப்பார்கள். இந்தத் தலைமை கர்தினால் வரவே அவரை எதிர்கொண்டு அழைத்துக் கொண்டுபோய்ச் சடலத்தண்டை விடுவார்கள். அப்போது அவர் அவ்விடத்தில் கிடத்தப்பட்டிருக்கும் வெண்ணிற பஞ்சணையின்மேல் முழங்காலில் நின்று சிறிதுநேரஞ் செபித்தபின்னிட்டு, மரித்துப்போன பாப்பானவரின் முகத்தை மூடியிருந்த ஒரு சிறு வெள்ளை வஸ்திரத்தை வேறொருவர் எடுக்க, பாப்பானவர் மரித்துப்போனது உண்மைதானவென நிச்சயிக்கும்பொருட்டுக் கட்டிலின் அருகில் வந்து வெள்ளியினால் செய்யப்பட்ட ஒரு சிறு சுத்தியலைத் தமது கரத்தில் வாங்கி, மரித்த பாப்பவர்களின் ஞானஸ்நானப் பேரைச் சொல்லிக்கொண்டு மூன்று முறை அவருடைய நெத்தியில் மெதுவாகத் தட்டி, மிகவும் உரத்த சத்தத்தோடும் வியசனகரமான தொனியோடுங் கூப்பிடுவார். மறுமொழி கிடையாதிருக்க, அங்கு கூடியிருந்த சகலரையும், பார்த்து மெய்யாகவே பாப்பவர்கள் இறந்துபோனாரென்று சொல்லவே, சகலரும் மரித்தவர்களுக்காகச் செபிக்கப்படும் (De Profundis) "ஸ்வாமி பாதாளத்தில் நின்று" எனும் ஜெபத்தை ஜெபிக்கத் தொடங்குவார்கள். உடனே வேறொரு உத்தியோகஸ்தர் தேகத்தை யணுகி "செம்படவரின் மோதிரம்" எனப்படும் பாப்பானவரின் கணையாழியை கைவிரலில் நின்று கழற்றி, கமர்லிங்கோவின் கையில் கொடுக்க, அவர் அதையும் பாப்பானவரின் அதிகார முத்திரையையும் அங்கு கூடின கருதினால்மார்களின் சமூகத்தில் உடைத்துப்போட உத்தரவு செய்வார். அதன் பிறகு "புரோ நோற்றேரியோ" எனும் லிகிதர் அதுவரையிலும் நடந்தேறியவற்றையும் பாப்பாவர்கள் மெய்யாகவே மரித்தாரென்ற விஷயத்தையும் ஓர் சாசனமாக வரைவார். கமர்லிங்கோ ஆன கருதினால் மரித்த சடலம் இருந்த அறையை விட்டு வேறோர் சாலையி லிருந்துகொண்டு ரோமாபுரி அரசருக்குப் பாப்பானவரின் மரண விஷயத்தைப்பற்றித் திருமுகமொன்று அனுப்புவார். ரோமாபுரியிலுள்ள எல்லா தேவாலயங்களிலுந் துக்க மணிகள் தொனிக்கப்படவே அர்ச். பாப்பரசரின் மரண சங்கதி அப்பட்டண முழுவதும் மின்னல் வேகமாய்ப் பரவும்.

பாப்பானவரின் மரணத்துக்குப் பிறகு கர்தினால் மார்கள் எல்லோருந் திருச்சபையை ஆள அதிகாரம் வகித்தவர்களாவார்கள் என்றாலும் கமர்லிங்கோ வெனும் கர்தினால் அவர்கள் தான் பொறுப்புக்குரியவர் ஆவர். கர்தினால் மார்களுக்குள் மூன்று பிரிவுகளுண்டு. மேற்றிராணி கர்தினால் மார், குருக்கள் கர்தினால் மார், டீக்கன் கர்தினால்மார் என மூன்று பிரிவு. இந்த முப்பிரிவிலும் முதன்மையா யிருக்கப்பட்ட மூவரும் முதல் மூன்று நாளைக்கு கர்தினால் கமர்லிங்கோவுக்கு ஆலோசனை சங்கத்தாரா யிருப்பார்கள். அடுத்த மூன்று நாளைக்கு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒருவராக வேறு மூன்று பெயர் அவர்களுடைய கர்தினால்பட்டத்தின் மூப்பு வரிசைப்படி ஆலோசனைக்காரர் ஆவார்கள். இப்படி புதிய பாப்பானவரைத் தெரிந்து கொள்ளுமட்டும் திருச்சபையின் காரியாகாரியங்களை கர்தினால் கமர்லிங்கோ மூன்று தினங்களுக்கு ஒரு விசை மாறி மாறி வரும் மூன்று ஆலோசனை சங்கத்தாரோடு நடத்திவருவார். பாப்பரசரின் அரண்மனை காவலாளரும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தரும் கமர்லிங்கோ என்றவரைப் பாப்பானவரைப்போல் பாவித்து அவரைக் காபந்து செய்து சங்கை செய்து வருவார்கள்.

அறையினின்று கமர்லிங்கோ வெளியேறினவுடனே பாப்பானவரின் சரீரத்தைப் பாடம் பண்ணும் பொருட்டு குடல் முதலியவைகளை யெடுத்துப் பரிமளமூட்டி ஓர் சலவைக்கல் பாத்திரத்திலே வைத்து அவைகள் மூடப்பட்டுப்புறம்பாக அடக்கஞ் செய்யப்படும். தேகத்தைச் சுகந்தங்கலந்த வெந்நீரால் குளிப்பாட்டி இருபது மணி நேரஞ் சென்றபின் பரிமளவர்க்கங்களைப் பொதிந்து அதற்கு மேற்றிராணிமாருக்குரிய உடுப்பு பாப்பாண்டவருக்குரிய தொப்பி, உத்தரீயம் இவைகளைத் தரிப்பித்துக் கால்களுக்குச் சிவப்பு நிறமான பாதரட்சைத் தொடுப்பித்து இருண்ட சிவப்பு மரக் கட்டிலில், பாப்பரசரின் அறைக் கடுத்தாப்போல் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது மன்னியில், அக்கட்டிலின் மேற் கட்டியானது இரத்தாம் பரமானதும் கரைக்குப் பொற் சரிகை யுள்ளதுமா யிருக்கும். கட்டிலின் இரு மருங்கிலும் நாலுமெழுகு வர்த்திகள் எரிந்து கொண்டிருக்கும்.

இவையெல்லாம் நடந்தேறியபின் பூமியின்கண் சேசுக்கிறிஸ்துநாதரின் ஸ்தானுபதியாய் விளங்கின அவரைக் கடைசிவிசையாகத் தரிசிக்கும் வண்ணம் ஜனங்களுக்கு அநுமதி கிடைக்கும். "சுவிஸ்காவலரும்" "பெனிற்றென்சியெறி வற்றிக்கானி" என்னும் இரு வகுப்பாரும் அத்தேகத்துக்கு மெய்க் காப்பாளராய் நின்று காவல் செய்வார்கள். திருச்சபை யதிகாரிகளான கருதினல்மார்கள், மேற்றிராணிமார்கள், பிதாப்பிதாக்கள், குருக்கள் முதலியவர்களும், அந்தந்தப் பிரதேச மந்திரிகளும் மூன்று நாள் பரியந்தம் பந்திபந்தியாய் வந்து தரிசித்து வணக்கஞ் செய்து, ஜெபித்துக்கொண்டிருப்பார்கள்.

மூன்றுநாளைக்குப் பின் அத்தேகமானது சுற்றுப்பிரகாரமாக எடுத்துக்கொண்டு போகப்படும். இப்படிச்செய்வதற்கு முந்தி அதற்கு பாப்பானவருக்குரிய உடுபாவனை தரிக்கப்பட்டுத் தூம்பாவில் வைக்கப்பட்டிருக்கும். செவப்புடை யணிந்த "செடாறியி" என்போர் ஆசந்தியைச் சுமந்து செல்ல, சுவிஸ் காவலர் இருவரிருவராய் முன் செல்ல, அவர்களின்பின் கருதினல்மார்களும், மேற்றிராணிமார்களும், ஆசந்திக்குமுன் நடந்துபோவார்கள். ஆசந்தியின் பின்னல் பரிசுத்த ஸ்தானத்தின் சகல உத்தியோகஸ்தர்களும் தொடர்ந்துபோவார்கள். இவ்வித ஆடம்பரச் சிறப்போடு போகும் ஆசந்தி அர்ச். இராயப்பர் தேவாலயத்துக்குள் கட்டப்பட்டிருக்கிற பக்கத்துப் பீடமொன்றினெதிரே சமைக்கப்பட்ட ஒரு மேடையின்பேரில் ஸ்தாபிக்கப்படும். அதைச் சுற்றி ஆயிரக் கணக்கான மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருக்கும். இப்படிச் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு ஒன்பதுநாள் வரையிலும் பாட்டுப் பூசை நடக்கும். விசுவாசிகள் வந்து சடலத்தை தரிசித்து ஜெபித்து பாதம் முத்தி செய்வார்கள்.

ஒன்பதாம் நாள் மரித்த பாப்பானவருடைய சடலம் எழுந்தேற்றமாய் அடக்கஞ் செய்யவேண்டிய இடத்துக்குக் கொண்டுபோகப்படும். அர்ச். இராயப்பரின் பிரமாண்டமான ஆலயத்தினுள்ளேயே ஒரு பக்கத்தில் தளவரிசை மட்டத்துக்குக் கீழ் ஒரு அறைபோல் கட்டப்பட்டிருக்கிறது. அந்த அறையில்தான் அடக்கஞ் செய்வார்கள். தேகத்தை முந்த முந்த "சிப்பிறெஸ்" மரத்தால் செய்யப்பட்ட பெட்டியில் வைத்து அடக்கி, அதை யொரு ஈயப்பெட்டியில் வைத்துக் கடைசியாய் "ஓக்" மரப்பெட்டிக்குள் வைத்து ஆணி தைக்கப்படும். தேகம் உட்பெட்டியில் வைக்கும்போதே இறந்த பாப்பானவர் காலத்தில் அச்சடிக்கப்பட்ட பொன், வெள்ளி, செப்புப் பதக்கங்களில் ஒவ்வொன்றும் அதனோடு வைக்கிறதுமல்லாமல், அவருடைய ஆளுகையில் நடந்தேறிய வர்த்தமானங்களை ஓர் தோல் பத்திரத்திலெழுதி அதை யோர் சிமிழில் அடக்கிவைப்பார்கள். வெளிப் பெட்டியின் மேல், கமர்லிங்கோ, மஜியோர் டோமோ எனும் தலைமை குரு இவர்களுடைய முத்திரைகள் பதிக்கப்படும். கடைசியாய் ஒரு சலவைக் கல்லில் பாப்பாண்டவரின் பேர், முத்திரை முதலியவையும், ஓர்குருசும் செதுக்கி மேலே வைக்கப்படும். இவையெல்லாம் முடிந்தானபின் சவப்பெட்டி கல்லறைக்குள் இறக்கப்பட்டு ஒரு சலவைக் கல்லால் மூடப்படும். இக்கல்லின்மேல் பாப்பானவருடைய பேர் மாத்திரம் வரையப்பட்டிருக்கும். அதன் பிறகு கோவிலில் போடப்பட்டிருக்கும் சவமேடைக்கு முன் மற்றச் சடங்குகளை நிறைவேற்றி கடைசியாக இறந்த பாப்பானவரைக் குறித்து ஓர் பிரசங்கஞ் சொல்லப்படும். இவ்வளவு ஆரவாரச் சிறப்புகளோடு அடக்கஞ் செய்த அந்த இடமும் சாசுவதமல்ல. ஏனெனில் இறந்த பாப்பானவருக்கென்று ஒரு சமாதி கட்டி முடிவாகும் வரையில் மாத்திரம் இப்போது அடக்கஞ் செய்த அந்தப் பெட்டி அவ்விடத்தி லிருக்கும். கட்டி முடிவானதும் அது அவ்விடத்திற்குக் கொண்டுபோகப்படும். வழக்கமாய் வேறே சமாதி கட்டுவதற்கு ஒரு வருஷமாவது செல்லும்.



---

## CHRISTAN DCTRINE.
## ஞானோபதேசம்.
### பத்துக் கற்பனையின்பேரில்
### முதற் கற்பனை.
(முன் தொடர்ச்சி.)
### 9-ம் பாடம்.
### சுரூப வணக்கம்.

---

5. இராயனுடைய ரூபம் அடங்கிய நாணயம்.— லேயோ சக்ரவர்த்தி திருச்சுரூபங்களைத் தகர்ப்பதில் வேலையா யிருந்தகாலத்தில் அநேகங் குருக்களும் மேற்றிராணிமாரும் புத்திப்பிரசங்கத்தால், நமது திவ்விய கர்த்தர், தேவதாயார், அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருச் சுரூபங்களை வணங்குவதும் அவைகளுக்குமுன் வேண்டிக்கொள்வதும் திருச்சபையால் கற்பிக்கப்பட்ட பத்தியுள்ள வழக்கமும் சர்வேசுரனுக்குப் பிரியமான காரியமு மென்றும், அவைகளுக்குமுன் வேண்டிக் கொள்ளும்பொழுது அச் சுரூபங்களால் குறிக்கப்பட்டவர்களுக்கே சங்கை வணக்கஞ் செய்கிறோ மென்றும், திருச் சுரூபங்களுக்கு சங்கையீனஞ் செய்யும்போது அவைகளால் குறிக்கப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களை அவசங்கைப்படுத்துகிறோ மென்றும் தெளிவாய் விளக்கிக் காட்டினதினால் அநேகர் தைரியத்துடன் வேதசாட்சிகளானார்கள். இந்தப் புண்யவாளரில் அர்ச். ஸ்டீபன் சிறந்தவர். அதெப்படி யெனில், இவர் சுரூப வணக்கத்தைப்பற்றிப் பிரசங்கித்துத் திருச் சுரூபங்களால் அநேக புதுமைகளை நடத்திவந்ததைப்பற்றிக் கேள்விப்பட்ட இராயன் மூர்க்க கோபங் கொண்டவனாய் அவரைத் தன் சமுகத்துக்கு வரவழைத்து அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து இவ்வாறு மொழிவான்: என்னிராச்சியத்தி லுள்ள சகல பிரஜைகளும் எனக்குக்கீழ்ப்படிந்துநடக்க இவன்மாத்திரம் என் கட்டளையைத் திரஸ்கரித்து என்னைப் பதிதன் என்று சொல்லியிருக்கிறான், என்று கோபத்துடன் கர்ச்சித்தான்.

அப்பொழுது அர்ச்சியசிஷ்டவர் இராயனை நோக்கி: இராஜேந்தரனே! திருச்சபை ஆரம்ப முதற்கொண்டு நமது முன்னோர் திருச்சுரூபங்களை வணங்கி வந்தார்கள். அப்படி அவர்கள் வணங்கும்போது அச்சுரூபங்களால் குறிக்கப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களை வணங்கினார்களே அன்றி, அவைகள் செய்யப்பட்ட கல் மண் முதலிய கண்டிப்பான வஸ்துக்களை வணங்கினார்கள் இல்லை. இப்பேர்ப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுருபங்களை நீர் பொய்த்தேவர்களுடைய விக்கிரகங்க ளென்று தப்பறையாய்ச் சொல்லுவதுடன் அவைகளைக் காலால் மிதிக்கவுந் துணிந்தீர்! என்றார். இதைக்கேட்ட இராயன் "பைத்தியக்காரா! இச்சுருபங்களை மிதிப்பதினால் அவை குறிக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கு என்ன அவமானம் உண்டாகும்?" என்றான். அப்போது அர்ச்சியசிஷ்டவர் சற்று நேரம் மௌனமாய் நின்று இராயனுடைய உருவம் அமைந்த ஒரு நாணயத்தைத் தரையிற் போட்டு காலால் மிதித்து "இவ்வாறு செய்வதால் இராயனை அவமானப்படுத்துகிறேனோ?" என்றார். உடனே அங்கு கூடியிருந்தவர்கள் அர்ச. ஸ்டீபன் மேல் பாய்ந்து அவரைக் கொல்ல எத்தனிக்குஞ் சமயத்தில் இராயன் அவர்களை நிறுத்தி, அர்ச்சியசிஷ்டவரைச் சிறைக்கு அனுப்பி சிலகாலத்துக்குப் பின் அவரை சிரசாக்கினை செய்வித்தான்

(அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம்.)

### இரண்டாங் கற்பனை.
### 10-ம் பாடம்.
### சர்வேசுரனுடைய நாமத்தை சுவீகரியாதிருப்பாயாக.

---

இந்தக் கற்பனை சர்வேசுரனுடைய பெயரைப் பக்திவணக்கத்துடன் உச்சரிக்கக் கற்பிக்கிறது. மேலும் சர்வேசுரனையாவது, அர்ச்சியசிஷ்டவர்களையாவது, வேதத்தையாவது இகழ்ந்து நிந்திப்பதும் கோவில் கல்லறைமுத

லிய பரிசுத்த ஸ்தலங்களை அசுசிப்படுத்துவதும், தேவ ஊழியரான குருக்கள், சன்னியாசிகள் கன்னியர் முதலியவர்களை நிந்தித்து அவர்களை அடிக்கக் கையோங்குவதும் பாவமாகும்.

1. சர்வேசுரனை அப்படி அவமரியாதையாய் இவ்வாறு பேசுவது சரியல்ல.—அநேக வழிப்போக்கர் மத்தியான வேளையில் போசனம் அருந்தும்படி ஒரு சத்திரத்தில் இறங்கினார்கள். எல்லோரும் ஒரே பந்தியில் அமர்ந்து புசிக்கும் சமயத்தில் இரு வாலர் தூர்ப்பாஷை யாடிக்கொண்டு சுவாமியின் பெயரை அசாரத்துடன் உச்சரித்துத் தமாஷாய்ச் சிரிக்கத் துடங்கினார்கள். பந்தியில் அமர்ந்தவர்களுக்குள் ஒரு புண்ணியஸ்திரீயும் நாலு வயதுள்ள அவளுடைய குமாரத்தியும் இருந்தார்கள். இச் சிறு குழந்தை அந்தத் துஷ்டருடைய துர்ப்பேச்சைக் கேட்டபோது, மனக்கிலேசங் கொண்டு அந்தக் கூட்டத்தில் யாராகிலும் அந்தக் கெட்ட வாலரைக் கண்டிப்பார்களென்று எண்ணி, அங்குமிங்கும் பார்த்தபொழுது சகலரும் மௌனமா யிருந்தார்கள். அந்நேரத்தில் இச் சிறு குழந்தை எழுந்து அந்த இரு வாலருக்கு முன் நின்றுகொண்டு "நீங்கள் சர்வேசுரனுக்கு விரோதமாய் இவ்வாறுபேசுவது சரியல்ல. அது பாவமான காரியம்" என்றதைக்கேட்ட அவ் விரு வாலரும் வெட்கி நாணி உடனே பந்தியை விட்டு எழுந்திருந்தார்கள். பிள்ளைகளே! நீங்களும் சமயம் நேரிடும்போது இச் சிறு குழந்தையின் மாதிரிகையை பின்செல்லவேண்டும். (Hauterive.)

2. பயங்கரத்துக்குரிய ஆக்கினை.—ஒரு குருவானவர் அநேகம் பிள்ளைகளை புதுநன்மைக்கு முஸ்திப்பு செய்துகொண்டுவந்தார். அவர்களுக்குள் இரண்டு பெரிய வாலர் மந்திர குறிப்பிட்டம்படியாமலும் ஞானோபதேசத்துக்குச் சரியாய் வராமலுமிருந்தபடியால் அவர்களைக் கண்டித்து, அதுமுதல் ஞானோபதேசத்தைக் கவனமாய்க் கேட்காவிட்டால் வெளியே துரத்திவிடுவதாக சொல்லி பயமுறுத்தினார். வாலரோ சிரித்துக்கொண்டு பரியாசம் பண்ணினபின்மேல். அவ்ர்க ளிருவரையும் வெளியே வெளிப்படவே, வாய்க்கு வந்தபடி வண்டற் சொற்களைக் கக்கி, தூர்ப்பாஷையாடி சர்வேசுரனுடைய நாமத்தையும் இகழ்ந்து நிந்திப்பதைக் கண்ட ஒரு வேலைக்காரன் அவர்களைக் கண்டித்து தேவ தூஷணத்துக்குரிய வார்த்தைகளைச் சொல்லாமல் இருக்கும்படி புத்தி சொல்லியும் அவர்கள் அதிகமாய்த்திட்டித் தூஷணிப்பதைக் கண்டு துக்கித்துத் தன் வழியே நடந்து போனான். சற்றுநேரத்துக்குப் பின் தனக்குப் பின்னால் என்னமோ பொத்தென்று கீழே விழுவதைக் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்தபொழுது அருகாமையி லிருந்த ஒரு சுவர் அவ் விரு வாலர்மேல் இடிந்து விழுந்தபடியால் அவ் விருவரும் கதறி அழுவதைக் கேட்டு அவர்களுக்கு உதவி புரியும்படி ஓட்டமாய் ஓடினான். அதற்குள்ளாக அநேகர் அவ்விடத்திற் கூடி கல்லையும் மண்ணையும் அப்புறப்படுத்திப் பயங்கரமான காயப்பட்ட வாலரை பக்கத்துவீட்டுக்குக்கொண்டுபோய்ச் சோதித்துப்பார்த்தபொழுது இருவரும் மரித்ததாக அறிந்துகொண்டார்கள். (Chisholm.)

3. ஓர் துரோகி.—சத்திரக் (ஓட்டல்) காரனான ஒருவன் பேருக்குமாத்திரம் கிறிஸ்துவனா யிருந்து சர்வேசுரனுக்கும் வேதத்துக்கும் விரோதமாய்த் தூஷணஞ்சொல்லி வருவான். "நான் ஸ்வாமியை மறந்து அவரைப்பற்றிக் கேவலமாய்ப் பேசியிருந்தும் எனக்கு ஒன்றும் குறைவின்றி திரவியம் அதிகரித்து வருகிறது. இந்த வீடு நெருப்பால் வெந்தபோதிலும் லக்ஷியமில்லை. வேண்டிய திரவியம் இருக்கிறது." என்று அகந்தையாய்ப்பேசுவது அவனுக்கு வழக்கம். சில காலத்துக்குப்பின் அவன் குடியிருந்த வீட்டின்மேல் இடி விழுந்து சகலமுஞ் சாம்பலாக்கப்பட்டன. ஆனால் இந்த துரோகி அந்நேரத்தில் உயிருடன் தப்பித்துக்கொண்டபோதிலும் அவனுக்கு உண்டான அந்தப் பெரும்விபத்தால் சடுதியில் பைத்தியங்கொண்டு சிலநாளைக்குள் அவலமாய்ச் செத்தான். (Chisholm.)

4. அர்ச். பிரான்சிசும் சர்வேசுரனுடைய நாமமும்.—இந்த மகா அர்ச்சியசிஷ்டவர் ஸ்வாமியின் பெயரை மகா பூச்சிய வணக்கத்துடன் உச்சரிக்கு வந்ததுமன்றி



தம் கீழே கிடப்பதைக் கண்டால், அதை யெடுத்து ஒரு மூலையில் வைப்பார். மற்றவர்களும் அவ்வாறு செய்யும்படி புத்திசொல்லுவார். (இவர் சரித்திரம்.)

---

## GNANAMANI, III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 12-ம் அதிகாரம்.

### சகோதரி, மெய்யாகவே நீங்கள் பாக்கியவதி!

---

விஸ்வாசநாயகர் தமது குடும்ப சமேதமாய் மடத்து வாசற்படியில் சேர்ந்தபோது பெரியதாயார் உத்தரவுடன் புஷ்பமரி சகோதரி தன் பாட்டியார், பெற்றார், பந்துக்களைப் பார்க்கும்படி வரவே, மகாசந்தோஷத்துடன் அங்கு வந்திருந்தவர்களுக்கு மங்களவார்த்தைக் கூறி, தன் தம்பியையும் தங்கைகளையும் கிட்ட வரச்சொல்லி, அன்போடு அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, மடத்தில் அடிக்கப்படும் மணிச்சத்தத்தைக் கேட்டு, இன்னும் கால்மணி நேரமாத்திர மிருக்கிறது செபத்துக்குப் போக என்கவே, விஸ்வாசநாயகர் எழுந்து தன் மகளைப் பார்த்துச் சொல்வார்: இன்றைக்கு என் இருதயம் சந்தோஷித்து மகிழ்ச்சி கொள்ளுகிறது. ஏனெனில், சர்வேசுரன் ஆசீர்வதித்த எட்டுப் பிள்ளைகளில் நாலுபேர் சர்வேசுரனுடைய ஊழியத்தில் வேலையாயிருப்பார்களென்று ஆசையுடன் எதிர்பார்த்திருந்தேன். என் ஆசை இன்று கொஞ்சம் நிறைவேறினது. என் விருப்ப முழுவதும் எப்போது நிறைவேறுமோ சர்வேசுரனுக்குமாத்திரந் தெரியும்.

என் பிரியகுமாரத்தி! நீ தெரிந்துகொண்ட அந்தஸ்து உந்நதமானது! நமது இரக்ஷகர் மார்த்தா மரியம்மாள் வீட்டி லிருந்தபோது, "மார்த்தா, நீ அநேக காரியங்களில் கவலையாயிருக்கிறாய். மரியம்மாளோ உத்தமமானதைத் தெரிந்துகொண்டாள்" என்று திருவாய் மலர்ந்து உச்சரித்த வண்ணம் உன்னுடைய அந்தஸ்து மெய்யாகவே சிறந்தது! உலக கவலை யின்றி, சமுசாரச் சங்கடமின்றி, உன் மோக்ஷ பத்தாவோடு ஐக்கியமா யிருக்கப்போகிறாய்!

ஆனால் அதில் உண்டாகுந் தந்திர சோதனைகளுக்கு இடங்கொடுக்க வேண்டாம். இன்றையத்தினம் எப்படி செபஞ் செய்தாயோ, எப்படி மடத்துத் தாயாருக்கு கீழ்ப்படிந்தாயோ, மற்ற சகோதரிகள் மட்டில் எவ்வளவு வாஞ்சனை நேசமாயிருந்தாயோ அதே பிரகாரம் நாளைக்கும், எப்போதைக்கும் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் உன் பரிசுத்த அந்தஸ்தில் நிலைக்கொள்வாய். கடைசியாய் உனக்கு மோக்ஷத்தில் சர்வேசுரன் முஸ்திப்பு செய்திருக்கும் நித்திய முடியைப் பெறுவாய்.

உன் பெற்றோராகிய எங்களை மறக்கவேண்டாம். உன் ஜெப தபத்திலும் பூசை யியான நேரத்திலும் எங்களுக்காக வேண்டுவது உன் கடமை. உன் பாட்டியார், சகோதரர், சகோதரிமாருக்காகவும் பந்துக்களுக்காகவும் வேண்டிக்கொள்ள மறவாதே.

அதோ, அங்கு நின்றுகொண்டிருக்கிற அபிராமி, அபுரூபமணிக்காகவும் வேண்டிக்கொள். அவர்கள் உன் பிரிய சிநேகிதர்களா யிருந்தார்கள். விசேஷமாக அபிராமியை மறவாதே என்றதைக்கேட்ட அபிராமி, புன் நகையுடன் புஷ்பமரியை நெருங்கினாள். அந்நேரத்தில் விஸ்வாசநாயகரும் அவருடைய மனைவியும் பிள்ளைகளும் வீட்டுக்குப் புறப்பட்டுப் போகும்போது, அபிராமி புஷ்பமரி சகோதரிக்கு சயிக்கினை காட்டி, இருவரும் தனியாக இருக்கும்போது, "சகோதரி உங்கள் பிரிய தகப்பனார் என்னைப் பற்றி சொன்ன வார்த்தையை மறவாதேயுங்கள்" என்றார்.

புஷ்.-சந்தேகமா? உங்களை யெப்படி மறப்பேன்? இன்றைக்குப் பூசைநேரத்தில் முதலாய் உங்களுக்காக வேண்டிக்கொண்டேன்.

அபி.—மெய்யாகவே, சகோதரி, நீங்கள் பாக்கியவதி! ஆனால் நானோ? ஐயையோ! (என்று கண் கலங்கி முகம் துக்கித்து விம்மி நிற்கும்போது, அவளுடைய கண்களிலிருந்து இரண்டொரு கண்ணீர்த்துளி முத்துப்போல அவள் வஸ்திரத்தில் விழுந்தது.)

புஷ்.—(இதைக் கண்டு துக்க முண்டாகி) என் அக்கா துக்கப்படுகிறீர்கள்? உங்களுக்கு ஏதாகிலும் துன்பம் உண்டானதோ?

அபி.—பெருந் துன்பம்!

புஷ்.—உங்களுக்கும் உங்கள் புருஷனுக்கும் ஏதாகிலும் விவாத முண்டானதுண்டோ?

அபி.-யாதொரு சங்கடமும் இப்போது உண்டாகாவிட்டாலும், சில காரியங்களை நான் பார்க்கும்போது, துன்பதுரிதங்கள் வெகு தொலைவிலிருக்கிறதென்று சொல்வதற்கு இடமில்லை. ஆகையால் நீங்கள் இன்று தெரிந்து கொண்ட பரிசுத்த அந்தஸ்தைப் பற்றி நினைத்தபோது...

புஷ்.—நீங்கள் இருவரும் சந்தோஷ சமாதான முள்ளவர்களா யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். மேலும் உமது புருஷன் நல்ல கிறிஸ்துவனாய் நடந்துவந்ததுடன், சபைத்தலைவனாகக் கேள்விப்பட்டேன். அதற்குள்ளாக அவருடைய குணம் எப்படிக் கெட்டுப்போனது?

அபி.—சகோதரி, உலகத் தொல்லை உங்களுக்கு வேண்டியதில்லை. இந்தத் துன்பத்தால் உங்கள் இருதயத்தை கலக்கப்படுத்திக் கொள்ளவேண்டாம். ஆனால் உங்கள் மூத்த சகோதரன், நான் கலியாணஞ் செய்துகொண்டபோது ஞாபக அடையாளமாக அனுப்பிவைத்தாரே அதே எனக்கு பெரும் ஆறுதல்.

புஷ்.—அது என்ன அடையாளம்?

அபி.—தன கையால் எழுதப்பட்ட படத்தை யனுப்பினார்...சேசுநாதஸ்வாமி சிலுவை சுமந்த பிரகாரம் எழுதப்பட்டிருக்கிறது. எனக்குத் துன்பதுரிதங்கள் உண்டாகும்போது, அந்தப் படத்துக்கு முன் முழங்காலிலிருந்து அவருடைய கஷ்டத்தைப்பற்றி நினைக்கும்பொழுது எனக்கு ஆறுதலும் சமாதானமு முண்டாகிறது.

புஷ்.— அவர்கூட வந்திருக்கிறாரா?

அபி.—உங்களைப்பற்றித்தான் வந்தார்.

புஷ்.—ஆமாம், அவர் வருவதாக போன மாசத்தில் எனக்கு எழுதியிருந்தார்.

அபி.—ஆனால் நீங்கள் எனக்கொரு உபகாரஞ் செய்யவேண்டியது.

புஷ்.—நான் மடத்தில் சேர்ந்தபடியால் என்னால் என்ன கூடும் அக்கா?

அபி.—நீங்கள் செய்யக்கூடிய உபகாரத்தையே கேட்கிறேன்.

புஷ்.—சொல்லுங்கள்.

அபி.— உங்கள் ஜெபத்தையே கேட்கிறேன்.

புஷ்.—சந்தேகமா? நாடோறும் மறக்கமாட்டேன் அக்கா உங்களுக்காக வேண்டிக்கொள்ள, என் ஜெபத்தைக் கேட்டுக்கொண்டவர்களுடைய பெயர்களை ஒரு சிறு புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். உங்கள் பெயரையும் அந்தப் புஸ்தகத்தில் தலைப்பில் எழுதுகிறேன்.

அபி.—அநேக வந்தனம் சகோதரி; உங்கள் உதாரகுணத்துக்கு என்ன கைம்மாறுபுரிவேன்.

அந்நேரத்தில் ஜெபத்துக்காக மடத்து மணி அடிக்கக்கேட்ட அபிராமி, புஷ்பமரி சகோதரியின் வலது கையைப்பிடித்து, அதைப் பக்ஷத்துடன் முத்தி செய்து கண்ணீரால் நனைத்து "என்னை மறக்கவேண்டாம் சகோதரி" என்று துக்கத்துடன் மடத்தை விட்டுத் தன் வீட்டுக்குச் சென்றாள்.

அன்றையத்தினம் மடத்தாருக்கும் குருக்களுக்கும் விஸ்வாசநாயகர் விருந்துகொடுக்க மனதுகொண்டு அதற்குப் பிடிக்கும் செலவை முன்னதாகக் கொடுத்துவிட்டார்.

விஸ்வாசநாயகருடைய ஜேஷ்ட குமாரனாகிய தேவதாஸ் என்பவர், தன் சகோதரி கன்னியாஸ்திரியாவதைப் பற்றி கேள்விப்பட்டு மதராசிலிருந்து இவ்விடம் வந்திருந்தார்.

தேவதாஸ் சுபாவமாக நற்குணசாலியாயினும் முன்கோபியும் காரியத்தைத் தீர்க்க ஆலோசனை செய்யாமல் படபடப்பாய் நடத்தும் ஆத்திர குண முள்ளவர். ஆனால் தன்னை நம்பினவர்களைக் கைவிடார். தன் தலைபோனாலும் அற்பப் பொய்யும் சொல்லார். ஏழைகள்மட்டில் மகா இரக்கதயாள முள்ளவர். இவர் குருப்பட்டம் பெறுவாரென்று இவருடைய தகப்பனாராகிய விஸ்வாசநாயகர் பூரண எண்ணங்கொண்டிருந்தார். ஆனால் அதெல்லாம் சபலமாய்விட்டது.

பி. எ. பரிட்சைமட்டும் படிக்கத் தன் பெற்றோர் கோரினபடி திருச்சி காலேஜில் படியாமல், யப். எ. பரிக்ஷை முடிந்தவுடனே தனக்கு மெத்த பிரியமான சித்திர வித்தைகளைக் கற்கும்படி ஸ்கூல் ஆவ் ஆர்ட்ஸ் (School of Arts.) என்னுங் கல்விச்சாலையில் சேர்ந்தார். படம் எழுதுவதில் மகா விற்பன்னர். ஆனால் வாத்தியங்களை வாசிப்பதிலும் பாடுவதிலும் அதிக அபேட்சை கொண்டு, ஐரோப்பிய, இந்திய வாத்தியங்களை வாசிக்கக் கற்றறிந்து, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். பிட்டில் என்னும் வாத்தியக் கருவியைக் கையில் எடுத்தாரானால், மனித சப்தம்போல பேசும். ஆர்மோனியம், பாஞ்சோ, கிளாரனெட், புளூட் முதலிய ஐரோப்பிய வாத்தியங்களையும் பிட்டில், வீணை, முக வீணை முதலிய இந்திய வாத்தியங்களை வாசிப்பதில் அவருக்கு இணையானவர்கள் ஒருவருமில்லை அக்காலத்தில்.

இவர் வாத்திய வித்தையில் பாண்டித்திய முள்ளவரா யிருந்தபடியால், அநேக வாலர் இவரிடம் வந்து சிஷர்களாய் அமர்ந்தார்கள். மதராசில் கலியாணங் காக்ஷியோ, பண்டிகை முதலிய பெருநாளோ, நாடகம் வாசாப்பு முதலியவை நடக்கும்போதோ, தேவதாஸ் தம்து சிஷர் சமேதராய் அழைக்கப்படுவார். இக்காரணங்களைப் பற்றி யிவருக்கு எதேஷ்டமாய்ப் பணங் கிடைத்தது.

இவர் திருச்சி காலேஜை விட்டு மதராசுக்குப்போன மூன்று வருஷத்திற்குள் அவருடைய குணம் சற்று மாறுபட ஆரம்பித்தது. தன் இளம் பிராயத்தில் தன் பெற்றோர் தனக்குச் சிறுகச் சிறுகப் பயிற்றுவித்து வந்த புத்திமதிகள் பிரகாரம் நடந்துவந்தபோதிலும் தனக்கு உண்டான உலகப் பராக்காலும், இராப்பகலாய் படித்தவர்களோடும் பணக்காரரோடும் சேர்ந்து பழகிப் பேசிவந்தபடியாலும் சிறு பிராயத்தில் அவருக்கு உண்டாயிருந்த நல்ல வழக்கங்கள் சன்னஞ் சன்னமாய் அவரை விட்டு அகன்றன.

பொய்ப்புரட்டு, துற்பாஷை, திருட்டு, வஞ்சக முதலிய பாவங்களை அவர் துவேஷித்ததன்றியும், நாடோறும் பூசை காணுதல், அந்திசந்தி ஜெபஞ்செய்தல், திவ்வியநற்கருணை சந்தித்தல், வாரத்துக்கு ஒருதடவை நன்மை வாங்குதலாகிய புண்ணிய வழக்கங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுவிட்டார். ஞாயிற்றுக்கிழமைகளில் பூசை காண தவறுவிடினும் முந்தின இராத்திரி நடுச்சாமமட்டும் விழித்திருந்ததைச் சாக்காக எண்ணி அப்போதைக் கப்போது பூசை காண தவறுவார். வருஷத்திற்கு ஒரு தடவை பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்குவாரே அன்றி, மற்ற எந்த பெரிய திருவிழாவிலும் நன்மை வாங்கினவரல்ல. அதிக வேலையைச் சாக்கு வைத்துக்கொண்டு இராச்செபத்தை முழுதும் ஜெபியாமல் கொஞ்சமாத்திரம் சொல்லுவார். காலையில் எழுந்தபின் ஐம்பத்துமூன்றுமணி ஜெபமாலை செய்து ஒப்புக்கொடுப்பார்.

பலதடவை தபசுகாலத்திலும் மற்ற வெள்ளிக்கிழமையிலும் ஒரு சந்தி பிடியாமலும் சுத்த போசனத்தை அனுசரியாமலும் இருப்பார். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அவருடைய தகப்பனார் நிருபமூலமாய் புத்திமதி சொல்லுவார்.

இவர் ஞானவிஷயத்தில் இவ்வளவு அசமந்தங் கொண்டிருந்தபோதிலும் ஏழைகளுக்கு உதாரகுணத்துடன் தர்மஞ் செய்வார். கோவில்களுக்கும் கன்னியர் மடங்களுக்கும் அநாத பிள்ளைகள் மடங்களுக்கும் இன்னும் பரோபகார விஷயங்களுக்கும் தாராளமாய்த் தருமஞ் செய்வார். மேலும் முன் கூறப்பட்ட விஷயங்களுக்காகப் பாட்டுக் கச்சேரி வைத்து அதனால் கிடைக்கும் பணத்தை அந்தந்த இடத்துக்கு அனுப்பிவைப்பார்.

தன் தங்கையாகிய புஷ்பமரி கன்னியாஸ்திரியான அன்று இராத்திரி பெரியவர்களுடைய உத்தரவுடன் மடத்து பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு நாடகம் போட்டார். நாடகம் ஆடுவதற்கேற்ற வேஷக்காரரை மதராசிலிருந்து கூட அழைத்துவந்திருந்தார். அந்தோனியோ ஷைலாக் என்று வழங்கப்படும் நாடகம் வெகுநேர்த்தியாய் நடிக்கப்பட்டது. அப்போதைக்கப்போது, பிடில், பாஞ்சோ வீணை முதலிய வாத்தியக் கருவிகளை கையில் பிடித்துக்கொண்டு தேவதாஸ் பாடுவதைக் கேட்ட ஜனங்கள் சந்தோஷானந்தங் கொண்டு, 'இது நரதொனியல்ல, சம்மனசு பாடும் பாட்டுபோ லிருக்கிறது" என்று அவரைக் கொண்டாடினார்கள்.

அந்த நாடகத்தில் கிடைத்த 158 ரூபாயையும் மடத்தார் கையில் கொடுத்து, அப்போதைக் கப்போது அவர்கள் மடத்தை மறவாமல் பணத்தொகை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். அவ்வூராரும் அயலூராரும் தேவதாஸ் நாயகருடைய பாட்டுச் சாமர்த்தியத்தைப் பற்றி புகழ்ந்து ஆனந்த பரவச முண்டாக்கும் இப்பேர்ப்பட்ட சங்கீத கீர்த்தனைகளைக் கேட்டதில்லை யென்று நிச்சயித்தார்கள்.

இதைப்பற்றிக் கேள்விப்பட்டு பத்துமையில் தூலையிலிருந்த டிப்டி கலெக்ட்டர் தேவதாஸ் நாயகருக்கு கடிதமெழுதி தமது ஊருக்கு வந்து அந்தோனியோ ஷைலாக் நாடகத்தை ஆடும்படி கேட்டுக் கொண்டதன்மேல், தேவதாஸ் நாயகர் அந்தவூருக்குப் புறப்பட்டு, டிப்டி கலெக்டருடைய விருப்பப்படி நாடகத்தை ஆடி முடித்தார். அந்த ஊராரும், நாடகத்தை விட தேவதாஸ் பாடும் பாட்டையும், அவருடைய

யிலிருக்கும் வாத்தியக் கருவிகளின் பேச்சுத் தொனியையுங் கேட்டு அதிசயித்து அவரைப் புகழ்ந்து கொண்டாடி சிறந்த வரிசைகளுடன் அவரையும் அவருடைய கூட்டத்தாரையும் தங்கள் ஊருக்கு அனுப்பினார்கள்.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### கல்வி.

1. தன் மூடத்தனத்தைக் கிறிஸ்துவர்கள் அறிந்துகொள்ளுவார்களென்று பயந்து திருச்சபையானது அவர்கள் வேதாகமங்களைப் படிக்க விடுகிறதில்லையென்று பதிதர்கள் பிதற்றுவதை நம்புவது ஒழுங்கல்ல.

("காக்கை வெளிதென்பா ரென்சொலார்—தாய்க்கொலை சால்புடைத் தென்பாரு முண்டு"

என்றபடி, அங்ஙனம் அவர்கள் பிதற்றுவது அதிசயமன்று.

கத்தோலிக்குத் திருச்சபையானது வேதாகமங்களையும் வேதாகமங்களென்று வழங்கப்பட்டு வந்தவைகளையும் அதி பிரயாசையோடு மூலபாஷைகளில் ஆராய்ச்சி செய்து, திவ்விய ஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலினால் எழுதப்பட்டவைகள் இன்னவையென்று தன் வழுவாவரத்தின் சக்தியினால் தீர்மானித்து, அவைகளை யொன்றுதிரட்டி அத் திரட்சிக்கு பைபில் அல்லது விவிலியம் என்னும் நாமதேயத்தை யளித்தது.

மேலும் அச்சியந்திரம் இல்லாத அக்காலத்தில், தன் சந்நியாசிகள் தங்கள் முதுகு வளைய, கழுத்து நோக, கண் பார்வைமங்க ஒரு எழுத்தும் பிசகாமல் அதனைப் புஸ்தகம் புஸ்தகமாய்ப் பேர்த்தெழுத ஏற்பாடு செய்து, அப்படி யெழுதிய புஸ்தகங்களைக் கிறிஸ்துவர்களின் உபயோகத்திற்காக கல்விச்சாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும், மடங்களுக்கும், கோவில்களுக்கும் அனுப்பிவைத்தது. அப்படிப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை ஐரோப்பாவின் வாசகச்சாலைகளில்நாளைக்கும்பார்க்கலாம்.

இதுவு மன்றி, அத் திருப் புஸ்தகத்தை யுபயோகிப்பவர்கள் "தாங்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்றபடி தங்கள் மனம்போனபடி யர்த்தம்பண்ணிக்கொண்டு நாயும் பூனையும்போல் சண்டையிட்டு ஒவ்வொருத்தரும் ஒன்றற்கொன்று நேர்விரோதமான போதனைகளைக் கைக்கொண்டு பல பிரிவுகளாய்ப் பிரிந்து பங்கமடையாமல், சிறந்த பத்திமான்களைக்கொண்டும் வேத விற்பன்னர்களைக் கொண்டும் அத் திருப் புஸ்தகத்திற்கு உரை யெழுதுவித்து அவ் வுரையை ஆராய்ந்து அங்கீகரித்து, கிறிஸ்துவர்கள் யாவரும் அதனைத் திருவிளக்காகக் கொள்ளும்படி யேற்பாடு செய்தது.

மேலும் கிறிஸ்துவர்கள் வேதாகமங்களை வாசிக்கும்படி தூண்டி ஏவுவதுடன் அப்படி வாசித்துவருபவர்களுக்குத் திருச்சபை தன் ஞான பொக்கிஷத்தைத்திறந்து பரிபூரண பலனை யளிக்கின்றது.

ஆனால், உண்மை யென்ன வென்றால் பதிதர்கள் பிரசுரிக்கும் வேதாகமங்களை வாசிக்கத் தகாதென்று விலக்குகின்றது. அது ஞாயந்தானே. "நாம் என்றும் உன்னோ டிருக்கிறோம், நரகத்தின் வாசல்கள் உன்னை மேற்கொள்ளாது" என்று திருவாய் மலர்ந்தருளிய சாட்சாதி கடவுளாகிய சேசுக்கிறிஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட சத்திய திருச்சபையானது தாய் தன் பிள்ளையைப் பாதுகாக்கும் கவனவிசாரத்திற்கு மேற்பட்ட கரிசனையுடன் பாதுகாத்துவரும் வேதபோதனைகளடங்கிய ஆகமங்களில், பதிதர்கள் சிலது சேர்த்தும், சிலதை யெடுத்தும் சிலதை மாற்றியும் பிரசுரித்தால் அப் பிரசுரங்களைத் தன் மக்கள் வாசித்துக்கெடப்பார்த்திருப்பதெப்படி?

வேதாகமங்களுக்குத் தான் கொடுத்த உண்மையே கிறிஸ்துவர்கள் திருவிளக்காகக் கொள்ளவேண்டியதென்று போதிக்கிறது. லௌகீக காரியங்களில், சிற்ப சாஸ்திர சம்பந்தமாய் சிற்ப சாஸ்திரியின் அபிப்பிராயத்தையும், வைத்திய சம்பந்தமாய் வைத்தியனின் அபிப்பிராயத்தையும், சைன்ய சம்பந்தமாய் சேனாதிபதியின் அபிப்பிராயத்தையும், அப்படியே ஒவ்வொரு விஷயமாயும், அவ் வவ்விஷயத்தின்தேர்ச்சியடைந்தவர்களின் அபிப்பிராயத்தை நாம் மதித்து அங்கீகரிப்பதா யிருக்க, சர்வத்திற்கும் மேலான வேத விஷயமாய் மாத்திரம், நாம் அவ் வேதாராய்ச்சியில் தங்கள் சீவனையே கழித்து, சாஸ்திர சம்பிரதாயங்களில் தேர்ச்சியடைந்த விற்பன்னர்களுடைய அபிப்பிராயத்தை மதிக்காமல், "நான் பிடித்த முசலுக்கு மூன்றே கால்" என்று சலஞ் சாதிப்பது சரியோ?



வேதாகமங்களைக் கட்டாயம் ஆண் பெண் குழந்தை விருத்தர் பாலியர் அனைவரும் கட்டாயம் வாசிக்காவிட்டால், அவர்களுக்கு இரக்ஷண்யமே கிடையாதென்று அது போதிக்கிறதில்லை. இதுவும் ஞாயமே. உலகத்தில் படிக்கக்கூடியவர்கள் எத்தனைபேர். படிக்க கெதியுள்ளவர்கள் எத்தனைபேர்; அதுவும் ஆழ்ந்த வேத சாஸ்திரத்தை. இதைக் கண்டு ஆயிரம் வருஷத்து அநுபவ முள்ளதும் அதி விவேகமுள்ளதுமான கத்தோலிக்குத் திருச்சபையானது வேதாகமங்களைச் சுயமாய்ப் பல பாஷைகளில் பிரசுரிப்பதன்றி, சாமான்ய ஜனங்களும் அதை அறிந்துகொள்ளும்படி அதன் சாராம்ஸத்தைச் சரித்திரரூபமாயும், கதா ரூபமாயும் பிரசுரித்து வருகின்றது. பிரசங்கவாயிலாய் அதை வெளிப்படுத்தி வருகின்றது. சுரூபங்கள் படங்கள் சடங்காசாரங்கள் மூலியமாய் அநுதினமும் அறிவித்து வருகிறது. சிறு பிள்ளைகளுக்கு முதலாய் அது அத்தனை அக்கறையோடும் கவன விசாரத்தோடும் கற்பித்துவரும் மந்திரங்கள் குறிப்பிடமென்பது வேதாகமங்களின் சங்க்ஷேபமேயன்றி வேறென்ன?.)

2. வாசிக்கத் தெரிந்திருந்தும் ஜெப புத்தகமின்றி கோவிலுக்குப் போவது ஒழுங்கல்ல.

3. வேத புஸ்தகங்களை வாசிப்பது தவராவக் குறைவென்றெண்ணுவது ஒழுங்கல்ல.

4. யாவரும் மூடராயிருக்கத் திருச்சபை பிரியங்கொள்ளுகிறதென்றெண்ணுவது ஒழுங்கல்ல.

5. சத்திய வேத தூஷணைகளடங்கிய புஸ்தகங்களை வாசித்து, எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் மனக் கலக்கங்கொள்வது ஒழுங்கல்ல.

6. மோட்சத்திற்குப் போகப் படிப்பு வேண்டியதில்லையென்று ஞாயம் பேசுவது ஒழுங்கல்ல.

7. தாழ்ந்தவர்களுக்கும் எளியவர்களுக்கும் கல்வி கொடுத்தால் தனக்குமேற்பட்டுப்போவார்களென்று பொறாமை கொள்வது ஒழுங்கல்ல. (இது நீசருக்கடுத்த செய்கை.)

8. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்திற்கு என்று தர்க்கமாடுவது ஒழுங்கல்ல.

9. கொஞ்சம் முன்னுக்கு வந்தவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கட்டுதிட்டத்தில் வைக்காமல், அதிக செல்லங் கொடுத்துக் கெடுப்பது ஒழுங்கல்ல.

(இப்படிச் செய்வதினால் கொஞ்சம் நல்ல ஸ்திதிக்கு வந்த குடும்பங்கள் வந்த வழியே திரும்பிப்போய் முன்னிலு மதிக கேவல மடைகின்றன.)

10. பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்கச் சக்தியிருந்தும் பிணங்குவது ஒழுங்கல்ல.

11. மெத்தவும் மன அப்பியாசத்தைக் கையாடி, தேகாப்பியாச மின்றியிருப்பது ஒழுங்கல்ல.

12. இங்கிலீஷ் கற்ற பெருமையால், தாய் பாஷையாகிய தமிழ்ப் பாஷையை நிராகரிப்பது ஒழுங்கல்ல.

13. நாலெழுத்து கற்றதைப்பற்றி கர்வம் பாராட்டுவது ஒழுங்கல்ல. (நிறை குடம் தளம்பாது குறை குடம் தளம்பும்.)

14. படிப்பு ஏற ஏற கடவுள் மட்டில் விசுவாசத்திலும் பெரியோர்கள் மட்டில் வணக்கத்திலும் குறைவடைவது ஒழுங்கல்ல.

15. ஏதோ கிழப்பிணங்கள்தான் புத்தகமுங் கையுமா யிருக்குமென் றெண்ணுவது ஒழுங்கல்ல.

16. கத்தோலிக்குப் பத்திரிகைகளை யலட்சியம் செய்வதும், அவைகளின் சந்தாக்களைச் செலுத்தத் தவறிப்போவதும் ஒழுங்கல்ல.

17. பிள்ளைகளைப் பன்றியைப்போல் கொழுக்கவைத்து மயிலைப்போல் சிங்காரித்து அவர்களுக்குக் கல்வி கொடாதிருப்பது ஒழுங்கல்ல.

18. போர்டிங் பள்ளிக்கூடங்கள், கன்னியர்மடங்கள் மட்டில் பிள்ளைகள் சொல்லுங் குறைகளை ஆத்திரமாய் நம்புவது ஒழுங்கல்ல.

19. பிள்ளைகளைப்புரேட்டெஸ்டாண்டு, இந்து பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது ஒழுங்கல்ல.

(படிப்பிற்கு மேற்பட்டது கத்தோலிக்குவேத விசுவாசம்.)

20. படித்தவர்கள் முதலாய் வாசிக்கும் அப்பியாசமின்றி யிருப்பது ஒழுங்கல்ல.

21. நல்ல புஸ்தகங்களை வாசித்தான பிறகு விற்று விடுவது ஒழுங்கல்ல.

22. எப்போதும் சமாச்சார பத்திரிகைகளையே வாசிப்பது ஒழுங்கல்ல. (நல்ல புஸ்தகங்களையும் வாசிப்ப தவசியம்.)

23. காசுக் குதவாத நாவல்களையும் கதாப் புஸ்தகங்களையும் படித்துக் காலத்தைக் கழிப்பது ஒழுங்கல்ல.

(இக்காலத்தில் ஞானமென்றும், விவேகமென்றும், சிந்தாமணி யென்றும், விநோதமென்றும் இப்படி பற்பல நவீனபெயர்களையிட்டு மனிதனுடைய கீழாங்கிஷத்திற்கு திருப்தி யுண்டாகும்படியான விதமாய் ஆங்காங்கு நடந்த விபசாரம், துரோகம், கொலை, திருட்டு, புரட்டு முதலிய அக்கிரமங்களைக் கதாரூபமாய்த் திரட்டிப் பிரசுரித்து உலகத்திற்கு ஞானம் போதிக்கிறோமென்று பெருமை பாராட்டி, காசுபணஞ் சம்பாதிக்க வழி தேடுகிறார்கள். வாலிபர்களும் ஏனையோரும் அவைகளை யதி ஆவலுடன் வாசித்து மனக்கிளர்ச்சி அடைந்து, வாசித்த துர் விஷயங்கள் அவர்கள் மனதில் சித்திரம்போல் பதிய, கேட்டுக்கு ஆஸ்பதமாகிறார்கள்.)

24. புரேட்டெஸ்டாண்டு, அக்கியான புஸ்தகங்களை வாசிப்பது ஒழுங்கல்ல.

(புரேட்டெஸ்டாண்டு புஸ்தகங்களில் அவிசுவாச விஷமும், அக்கியானபுஸ்தகங்களிற் மோக விஷமுமுண்டு.)

---

# THE WAR.

## ஐரோப்பாவில் யுத்தம்.

ஐரோப்பாவில் தற்காலப் நடந்துவரும் யுத்தத்தைப் பற்றிய தந்திச் சமாச்சாரங்களைப் பார்க்கையில் இந்தயுத்தமானது இப்போதைக்கு ஒரு முடிவுக்கு வராமல் சிலகாலம் நீடிக்கும்போல் தோன்றுகிறது. சமாதானத்தைப் பற்றிய சமாச்சாரங்கள் எட்டினபோதிலும் அவைகள் நம்பத்தக்கவைகளல்ல. அப்படிச் சமாதானம் உண்டாக யாதோர் வழியுங்காணோம். சமீபத்தில் லண்டன் பட்டணத்திலே குயின்ஸ் ஹாலில் சைந்யத்திற்காக ஆள் சேர்ப்பதைப் பற்றி கூடின ஒரு சங்கத்தில் சான்செஸ்லரான லாய்ட் ஜார்ஜ் அவர்கள் செய்த ஒரு உபந்நியாசத்தில்: நமது தேசத்துக் குள்ள கௌரதைக்கு யாதோர் பங்கமும் வந்து நேராதபடி அதைக் காப்பாற்றிக் கொள்ள நமக்குக் கடமை உண்டென்கிற நியாயத்தைப் பற்றியும், உடன்படிக்கையின் விதிகளுக்கு ஜர்மனியர் கட்டுப்படாமல் அவைகளை மீறி நடப்பதினால் அவைகளுக்கு அடங்கி நடக்கும்படி அவர்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்கிற நியாயத்தைப் பற்றியும் நாம் தொடங்கியுள்ள யுத்தத்தை நிறுத்தாமல் நடத்தவேண்டியதே" யென்று வற்புறுத்தி பேசினாராம். ஐக்கிய கட்சியார், அதாவது, ஆங்கிலேயர், பிராஞ்சியர், ருஷியர், ஜப்பானியர், பெல்ஜியர், செர்வியர், மோண்டநிகரோவர் இத்தனை தேசத்தாருஞ் சேர்ந்து ஜர்மனியருடைய கொட்டத்தை யடக்கவும், அவர்களுக்குப்புத்தி புகட்டவும், அவர்கள் மற்றதேசத்தியரை மதிக்கும்படிசெய்யவும் அவர்களை நையப் புடைப்பதே நியாயம். அமெரிக்காவிலுள்ள ஜர்மன் ஸ்தானபதி சமாதானத்தை யொட்டி பின்வருமாறு கூறியிருக்கிறாராம். அதேதெனில்: இருகட்சியிலும் ஜெயமும் அபஜெயமும் இல்லை யென்று ஒப்புக்கொண்டு ஜர்மனி தேசத்தை சின்னபின்னப்படுத்தாமல் முன்போலவே அதை ஒரு வல்லரசாகப் பாவிப்பார்களே யானால், அது சமாதானத்துக்கு உட்பட்டு யுத்தத்தை நிறுத்து மென்ப [illegible]



எல்லோரும் அறிந்திருக்கிறபடி ஜர்மனியர் நியாயம் எதுவென்றும் அனியாயம் எதுவென்றும் பாராமல், தங்களுக்குள்ள ஆண்மை, பெருமை வலிமை, பகை, வைராக்கியம், குரோதம், செல்வச் செருக்கு, யுத்தத்தளவாடங்கள், கலரப்படை, கடற்படை இவைமுதலிய வைகளைப்பாராட்டி, மற்றதேசத்தாரை அபிமானியாது துராகிர்தமாய் சண்டைக்குப் போயிருக்கையில் மற்றவர்கள் சும்மா விருப்பார்களா? இவர்களுடைய இஷ்டப்படி ஆட சம்மதிப்பார்களா? இவர்கள் வைத்ததே சட்டமென்று ஒப்புக்கொள்ள யார் உள்படுவார்? பரிச்சேதமும் அப்படியாகாது.

"மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்" என்பதுபோல் இந்த யுத்தத்தில் வெற்றியடையும் பொருட்டு ஜர்மனியர் செய்திருந்த யுக்தியோசனைகளும், ஏற்பாடுகளும் பலிதப்படாமற் போனதினால், தற்போது தட்டுகெட்டு தடுமாறி தவித்து நிற்கிறார்கள். தங்களை மிஞ்சின பராக்கிரமசாலிகள் இல்லை யென்றும் தங்களை யெதிர்க்கத்தக்க வல்லவர் கிடையாதென்றும் எண்ணி பரபரப்பாய் ஓடி பரீஸ் பட்டத்தைப் பிடிக்கப் பார்த்தார்கள். ஜம்பஞ் சாயவில்லை. சென்ற மாசப் பத்திரிகையில் நாம் சொல்லி இருப்பதுபோல், பெல்ஜியர் இவர்களைத்தங்கள் தேசத்தின் மார்க்கமாய் பிரான்சுக்குள் போக விடாமல் எதிர்த்து நின்றார்கள். பெல்ஜியரை மீறிக்கொண்டு இவர்கள் பிரான்சுக்குள் நுழைந்து விட்டார்களென்றாலும், இவர்களை யெதிர்க்க பூரண ஆயத்தஞ் செய்துகொண்டு பிராஞ்சியர் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயரும் பெல்ஜியரும் இவர்களைப் பின்தொடர்ந்து போராட பிரான்சுக்குள் போயிருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் முன்னும் பின்னும் எதிரிகளால் சூழப்பட்டு மூன்னும் பின்னும் எதிரிகளால் சூழப்பட்டு மடிந்தாக்கப்படுகிறபடியால் ஆயிரம்ஆயிரமாய் மடிந்தும், மறியலாக்கப்பட்டும், பீரங்கிகள், மருந்து குண்டுகள் இவைகளைப் பறிகொடுத்தும், தக்க ஆகாரம் அகப்படாதபடியால் பசியால் பீடிக்கப்பட்டு காட்டில் கிடைக்கும் கிழங்கு வகைகளைச் சாப்பிட்டுக் கொண்டும் திண்டாடி நிற்கிறார்கள். இந்நிலைமையிலுள்ள இவர்களா பரீஸ் பட்டணத்தைப் பிடிக்கத் தக்கவர்கள்! அப்படி அவர்களுக்குள்ள வீரியம் பராக்கிரமம் இவைகளை முன்னிட்டு அதைப் பிடிப்பார்களென்று வைத்துக் கொண்டாலும் அவர்களால் அங்கு ஆகப்போகிறது ஒன்றுமில்லை. பாரீஸ் நகருக்குள் இப்போது அரசில்லை. அதுபோர்தோ நகருக்கு மாற்றப் பட்டிருக்கிறது. பரிஸ் நகருக்குள் நுழைவார்களேயானால், நுழைந்தவர்கள் வெளியேவரக் கூடாமற் எப்பக்கத்திலும் தங்கள் சத்துருக்களால் சூழப்பட்டு, பசியும் பட்டினியுமாய்க் கிடந்து சாகவேண்டியதாகும், அல்லது தங்களைச் சத்துருக்கள் கையிலே ஒப்படைக்க நேரிடும்.

இவர்கள் பிரான்சுதேசத்தில் படும்பாடு இப்படியாயிருக்கக்கொள்ள, தங்கள்தேசத்தைப் பிடிக்கவரும் ருஷியரையும் எதிர்த்து மடக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். இன்னும் செர்வியரோடு சண்டை தொடுக்கும்படி தட்டிக் கொடுத்து எழுப்பி விட்ட ஆஸ்திரியருக்கும் இவர்கள் உதவிபுரிய வேண்டியவர்கள். ஆஸ்திரியாவோ செர்வியாவாலும் ருஷியாவாலும் சீர் குலைந்து க்ஷீணதசைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதற்கு உதவிபுரியபோன ஜர்மனியரும் மடிகிறார்கள். இவர்கள் யுத்தஞ் செய்யும் போர்க்களத்தின் பக்கமா யோடும் ஆற்றில் ஜர்மனியர் ஆஸ்திரியர் இவர்களுடைய பிரேதங்கள் அனேகமாய் அடித்துக்கொண்டு போவதாகச் சொல்லப்படுகிறது.

ஜர்மனியர் இந்த யுத்தத்தைத் தொடங்கினபோது தாங்கள் இப்படி சீரழிந்து நிர்ப்பார்களென்று எண்ணினார்களா? இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கிய நிலைமையி லிருக்கிற இவர்கள் வெகு ஆக்ரோஷத் துடனும் வீரியத்துடனும் யுத்தஞ்செய்து வருகிறார்களென்பது வாஸ்தவம். ஆயினும் இது எவ்வளவு காலத்துக்கு அவர்களாலாகும்! வரவர பலன் குன்றி எப்பக்கத்திலும் தங்களைத் தாக்கும் எதிரிகளான ஐக்கிய கட்சிக்காரரால் மேற்கொள்ளப்பட்டு அபஜெயமடைவார்களென்பது திண்ணம்.

ஆணவமும் அகந்தையும் படைத்த இந்த ஜர்மனியர் யுத்தந் தொடங்கினது முதற் கொண்டு தாங்கள் சென்ற விடங்களில் கண்ட பட்டணங்களையும் ஊர்களையும் அவைகளிலுள்ள சிறந்த தேவாலயங்களையும் முதலாய் விட்டு விடாமல், பீரங்கிகளைப் பிரயோகித்து இடித்துத் தகர்த்தும், அக்கினிக்கு இரையாக்கியும் வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட சேதபாதங்களைச் சமீபத்தில் நம்முடைய இந்தியாவிலும் செய்யத் துணிந்துவிட்டார்கள். அதெப்படி யென்றால்: வங்காள குடாக்கடலில் "எம்டென்"

எனப் பேர்வாய்ந்த ஜெர்மானிய போர்க் கப்பலொன்று நாலாதிக்குகளிலும் திரிந்தலைந்து, அங்கங்கே வர்த்தக விஷயமாய் ஓடிக்கொண்டிருந்த ஐந்து கப்பல்களை வழிமறித்து அவைகளிலிருந்து தனக் குபயோகப்பட்டவைகளைக் கைப்பற்றிக்கொண்டு உயிருக்குச் சேதம் வருவிக்காதபடி அதிலுள்ள ஜனங்களை வேறொரு கப்பலில் ஏறச்செய்து ஷை கப்பல்கள் 5-யும் அவற்றிலுள்ள மற்ற ஏராளமான சாமான்களோடு கடலில் ஆழ்த்திவிட்டது. "பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையினருமை" என்றபடி அக்கப்பலுக் குடையவனுக்குத் தெரியும் அதனுடைய மதிப்பு. அக்கப்பலிலேற்றிய சரக்குகளினது கிரயம், அதைப் பணம்போட்டு வாங்கினவனுக்குத் தெரியும். அப்படியிருக்க எவ்வித தேவையுமும் மனிதர் பயமும் யாதுமில்லாது கடலில் ஆழ்த்திவிட்டது எவ்வளவு குரூரமென்னலாம். இன்னும் இரண்டொரு நாட் கழித்து வேறிரண்டு கப்பல்களையும் பிடித்து மனிதர்களை மாத்திரம் வேறொரு கப்பலில் ஏற்றிக்கொண்டு அக்கப்பல்களையும் கடலில் ஆழ்த்திவிட்டது. தான் இப்படி சேர்த்துவைத்திருந்த ஜனங்களை மாத்திரம் தனக் கெதிர்ப்பட்டதும் சண்டையில் சம்பந்தப்படாததுமான வேறொரு கப்பலிலேற்றி ரங்கூனுக்கும் கல்கத்தாவுக்கும் அனுப்பிப் போட்டதாம். இவ்வித அக்கிரமங்களோடு திருத்தியடையாமல் சென்ற செப்டம்பர்மீ 22 தேதி செவ்வாய்க்கிழமை மாலை 9 ½ மணியளவில் திடீரென இருந்தாப்போல் சென்னையில் அந்த போர்க்கப்பல் தோன்றி சுமார் 25 குண்டுகள் வரையிலும் போட்டு ஊரை முழுதும் அல்லோல கல்லோலப் படுத்தி விட்டதுமன்றி இரண்டு மண்ணெண்ணெய் டாங்குகள் தீபற்றிக் கொள்ளச்செய்து, ஜெனரல் போஸ்டாபீசு, ஹைகோர்டு முதலிய கட்டடங்களிற் சில விடங்களை இடித்தும் போட்டது. ஐந்து பெயருக்கு உயிர்ச்சேத முண்டானதுடன் ஐந்து பெயருக்குக் காயமும்பட்டது. இதற்குள்ளாக சமுத்திரக்கரை யோரத்திலிருந்து பீரங்கிகளைப் பிரயோகிக்கவே அப்போர்க்கப்பல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு புதுச்சேரிக்கு அதிகாலையிற் போனதாகவும் அவ்விடத்தில் ஒன்றும் செய்யாமல் ஒரு மணி நேரமிருந்துவிட்டு அப்புறம் போய்விட்டதாகவும்தெரியவருகிறது. "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்ற முதுமொழிப்படி வெகுசீக்கிரத்தில் ஆங்கிலேயர் கையில் சிக்கிக்கொள்ளும். இந்தப் போர்க்கப்பல் தன் தேசத்துக்குத் திரும்பிப் போகவும் மார்க்கமில்லை. அதைப் பிடிக்கும் நோக்கமாக ஜப்பானியர் போர்க்கப்பலொன்று புறப்பட்டு வருவதாக வதந்தி.

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடித மெழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், காகிதத்தின் ஒரே பக்கத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன் தங்கள் பெயர் விலாசங்களையும், தெளிவாய் எழுதல் வேண்டும். பெயர், விலாசங்கள் வெளிப்படுத்துவதற்கல்ல, கடிதத்தின் உண்மைச் சங்கதிகளைப் பத்திராதிபர் உறுதிப்படுத்திக் கோள்வதற்கே. வெளிப்படுத்துவதற்கு தகுதியற்றனவென்று தள்ளி விடப்பட்ட கடிதங்கள் திரும்பவும் வாப்பஸ் செய்யப்படமாட்டா. ப—ர்.]

### "பரதர்குல சகோதரர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்."

---

அர்ச். பாப்பாண்டவரின் அங்கீகாரத்தின்படி கொளும்பு அதிமேற்றிராணியாண்டவரவர்கள் அனுமதியோடு, நம்குல அநாதப்பிள்ளைகளைத் தாபரித்தற்கென்று அர்ச். லூர்து நாயகியின் பேரால் மக்கோனவில் ஓர் மடம் ஏற்படுத்தியிருக்கின்றோம். இம்மடம் அர்ச். லூர்து நாயகியின் தருமச் சபையோராய் விளங்கும் நம்குல பரோபகாரிகள் சிலராலே தாபரிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அநாதச் சிறுவர்கள் தமிழ், இங்கிலீஷ், சிங்களம், இம்மூன்று பாஷைகளையும், தையல், தச்சு, அச்சடித்தல், புத்தகங்கட்டுதல், முதலிய கைத்தொழில்களையும் கற்றுவருகிறார்கள். சகோதரரே! நம்குலத்தாரின் அநேக பிள்ளைகள் அநாதர்களாயும், ஒரு தொழில் துறை தெரியாதவர்களாயு மிருப்பது நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். இவர்களை ஆதரிக்கவும் நற்பயிற்சிக்குக் கொண்டுவரவும் நாம் எல்லோரும் பிரயாசப்பட வேண்டியது. இது எமது மேற்கூடன் அல்ல, ஆனால் எளியவர்களாகிய இவர்களுக்குச் செய்யப்பட்டதெல்லாம் தமக்கே செய்யப்பட்டதென்று நமது இரக்ஷகராகிய சேசுக்கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றிருப்பதினால் இவ் வநாதப் பிள்ளைகளுடைய விருத்திக்கு உதவி செய்வதின் பொருட்டு நம்குலத்தாரான நீங்களெல்லோரும் உங்களால் கூடிய உபகாரத்தைச் செய்ய வெகு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எப்படி ஓர்தேர் சிறுச்சுள்ளாணியிற் தங்கி நிற்கின்றதோ, அப்படியே நீங்கள் தினம் ஐந்து சதமாவது கொடுத்துவந்தால், இப்பெரிய வேலையும் நடைபெறும், இச்சபையில் சேர்ந்திருக்கும் மெம்பர்மாருக்காக மாதம்தோறும் முதல் சனிக்கிழமை நம்குலத்தவர்களால் கட்டப்பட்ட அர்ச். லூர்துநாயகியின் திருக்கோவிலில் திவ்விய பூசை நடத்தப்பட்டு அநாதச் சிறுவர்களால் தேவநற்கருணை உட்கொண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது.

அர்ச். லூர்து தேவதாயின் பக்தியுள்ள எம் குலச் சகோதரர்களே! இச்சபைக்கு உதவி செய்ய விரும்புவோர் கூடிய சீக்கிரத்தில் உங்கள் நாமங்களை எமக்கு அனுப்பிவைக்கப் பிரார்த்திக்கிறோம்.

உங்களுக்காக தேவதாயை மன்றாடும்
பிரதர் ஜோசப் கோன்சால் F. B.

Our Lady of Lourde's Benefit Society
for Barather Orphans,
MAGGONA.

---

### சங். J. M. கோம்ரேத் குருசுவாமியாரின் தேகவியோகம்.

தென்னாடுகளில் பொன்னூடென வழங்கப் பெறும் மைசூர் சமஸ்தானத்திற் குட்பட்ட பெங்களூர் நற்பதியின் கண் ஸ்தாபகமா யிலங்கும் சேசுவின் திருவிருதய ஆலயத்தின் ஸ்தாபகரும், விசாரணை குருவுமாயிருந்த சங். J. M. கோம்ரேத் குருசுவாமியார், சட்டலி யென்னும் கிராமத்தில் நிகழும் 1914ஆம் செப்டம்பர்மீ 15உ செவ்வாய்க்கிழமை இரவு 10-மணிக்கு தேகவியோகமானதை யறிந்து ஷை ஆலய விசாரணைக் கிறிஸ்துவர்களனைவரும், மாறாத்துயரத்துக் குள்ளாகினர். ஞான மேய்ப்பனுக்குரிய விவேகமும் சாதுரியத் தன்மையும் வாய்க்கப்பெற்ற இவ்வுத்தம குரு, மிக வந்திக்கத்தக்க J. A. செவாலியர் ஆண்டவர் காலமுதல், மிக வந்திக்கத்தக்க L. கிளேய்னர் ஆண்டவர் காலம்வரை (1874–1896) இப் பெங்களூரின் கண் வசித்துத் தமது விசாரணைக் குள்ளடங்கிய விசுவாசிகளைப் பரிபாலித்து ஞானவாளுகைச் செலுத்திவந்தனர். மேலும் அக்காலத்தில் ஷை விசுவாசிகளுக்குச் சௌகரியமான ஆலயம் இல்லாமையால், படும் கஷ்ட நஷ்டங்களைக் கண்டிரங்கி, மிக்கக்கவலையும், பிரயாசையு மெடுத்து சேசுவின் திருவிருதய பெயரால் ஓர் சிறந்த ஆலயத்தையுங் கட்டிச் சீர்திருத்தி வருங்காலையில், திடீரென மிக வந்தனைக்குரிய L. கிளேய்னர் ஆண்டவரால் சட்டலியென்னு மூருக்குச் சில காலத்திற்காக வென்று அனுப்பப்பட்டனர். ஆனால், இவ்வுத்தமப் போதகரின் இடைவிடா முயற்சியால் அவ்வூரடைந்த புதிய மாற்றமே, இதுவரையும் அவர் அங்கு தங்கி நிற்கஏதுவானது. என்றாலும் ஷை விசுவாசிகள் தங்களை யாதரித்து வந்த ஞானத் தந்தையை அவரின் அந்திய காலத்தில் காணவாவது, அத்திருமுனியின் திருச்சடலம் ஷை ஆலயத்தில் பூஸ்தாபகஞ் செய்யப்பட விருந்த பெருமையைக் காணவாவது பாக்கியம் பெறாமல் போனது மிக்கத் துயரத்துக்குரியதே! ஆயினும் மறுமையில் அவரைக்கண்டு பேரின்பங்கொள்ள ஆதிபரனின் திருவுளமாமென வறிந்து, அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிய நற்கிரியைகளைச் செய்து, கருணை நிறைந்தத் திருவிருதயத்திற்குச் சமர்ப்பித்து ஆறுதலடைவதே உச்சிதமானதாகும். ஆகையால் இதைக் கண்ணுறும் சகோதரர்களும் அவராத்துமம் நித்திய ஒளியில் பிரவேசித்து இளைப்பாறும்படி திரியேகாதிபரனைப் பிரார்த்திப்பார்களாக.

18-9-14.
Bangalore.

M. A, A.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

---

அறிக்கை.—மறுபிறப்பு எனும் புத்தகத்துக்காக எமக்கு எழுதுவதில் பிரயோசனமில்லை. புதுச்சேரி மிஷன் அச்சியந்திரச் சாலைக்கு எழுதி பெற்றுக் கொள்ளவும்.

பிடிபட்ட கப்பல்கள்.— ஐரோப்பாவில் யுத்தந் தொடங்கினது முதற்கொண்டு

சென்ற மாசக் கடைசிவரையிலும் ஆங்கிலேயரால் பிடிபட்ட ஜர்மனியருடைய கப்பல்கள் 92. வர்த்தக விஷயமாய் நாலா பக்கத்திலும் ஓடித்திரிகிற ஆங்கிலேயருடைய கப்பல்களின் தொகை 4,000. இவைகளுக்குள் இதுவரையிலும் ஜர்மனியர் வசமானது 12 கப்பல்களேயாம்.

**ஜர்மனியரின் சம்மாரம்.**—பிரான்சில் சில தினங்களுக்குமுந்தி மாபூஞ் எனுமிடத்தில் நடந்த சண்டையில் மடிந்தவர்களின் தொகை இவ்வளவென்று சரிவரச் சொல்லமுடியாதென்றாலும், கண்ணாலே கண்ட சாட்சிகளால் எண்பதாயிரத்துக்குக் குறையாதென மதிப்பிடப்படுகிறது. ஏறக்குறைய ஒன்பதுமைல் விஸ்தீரணத்துக்குப் பிணங்கள் விழுந்து கிடந்தனவாம். என்னே இந்தச் சண்டையின் கொடூரம்!!

**நர்சுவேலை செய்யும் இராணி.**—பெல்ஜியத்தில் சண்டை துவக்கின உடனே ஷை தேசத்தின் இராணி லண்டன் பட்டணத்துக்குத் தம்முடைய குழந்தைகளுடன்போய் அவ்விடத்தில் முந்தி நம்முடைய தேசத்தில் வைசிராயாக விருந்த லார்ட் கர்சன் என்பவரின் விருந்தினராயிருந்து வந்தார். இப்போது அவர் தம்முடைய சொந்த தேசத்துக்குத் திரும்பி வந்து அவ்விடத்தில் வைத்தியசாலையில் யுத்தத்திற் காயப்பட்டவர்களுக்கு நர்சுவேலை செய்துகொண்டு வருகிறார்களாம். இந்த இராணியின் காருண்யமும் பெருந்தன்மையும் மிக்க மெச்சத்தக்கதே!

**புருஷியரும் பவேரியரும்**—இவ்விருதரத்தவரும் ஜர்மனிசக்ரவர்த்தியைச் சேர்ந்தவர்கள். நடந்துவருகிற சண்டையில் கைதிகளாய்ப் பிடிப்பட்ட பிராஞ்சியர்களை ஆறு டிரெயின் நிறைய அனுப்பி வைத்திருக்க, அவர்கள் எல்லோரையும் பவேரிய காவலர்கள் விட்டு விட்டார்களாம். இன்னொரு சமயத்தில் பெல்ஜியருடைய ஆகாயக் கப்பலைச் சுடமாட்டோமென்று மறுத்து விட்டார்கள். இப்படி இந்த யுத்தகாலத்தில் ஜர்மனியருக்குள் அந்நியோந்நியமும் ஒருமிப்புமின்றி புரட்சிகளும் சச்சரவுகளும் உண்டாகுமானால் ஜர்மனிபாடுகேடாக முடியுமென்று சொல்லவும் வேண்டுமோ?

**டம்டம் குண்டுகள்.**—ஜர்மனியர் "டம் டம்" என்னும் பாஷாணங்கலந்த குண்டுகளை யுத்தத்திற் பிரயோகித்து வருகிறார்களாம். இக்குண்டுகளை உபயோகிக்கக்கூடாதென நாலு தேசத்தாருக்குள்ளும் ஒரு உடன்படிக்கை உண்டு; ஆயினும் ஜர்மனியர் அதைமீறி ஷை குண்டுகளை உபயோகிக்கிறார்கள். இக்குண்டானது மேலே இலேசாய்ப் பட்டபோதிலும், தரித்திருக்கிற உடைகளைச் சாம்பராய் எரித்து விடுவதோடுகூட, சர்வாங்கத்தில் பயங்கரமான காயத்தையும் உண்டுபண்ணி விடுகிறதாம். ஒரு பிராஞ்சிய போர்சேவகன் இக்குண்டுபட்டு பொறுக்க முடியாத அவஸ்தை நிலைமையிலிருந்ததைப் புகைப்படம் பிடித்து ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு அனுப்பியிருக்கிறார்களாம்

**ஒரு பொருத்தனைக் கோவில்.**—சென்னைக்கு வட கிழக்கில் சுமார் 80 மைல் தூரத்திலுள்ள ஆரம்பாக்க ரயில்வே ஸ்டேஷனில், சம்மனசுக்களின் மிக்க பரிசுத்த விராக்கினியின் பேரால் கட்டப்பட்டுவந்த பொருத்தனைக்கோவில் முடிவாகி தேவாராதனைக்குச் சித்தமாயிருக்கிறது. இம்மாசம் 11௳ ஞாயிற்றுக்கிழமை இக்கோவில் மந்திரிக்கப்பெற்று அதில் முதற்பூசை சிறப்பாய் நடந்தேறும். ஆகவே, இக்கோவிலைக் கட்டிமுடிக்க உதவிபுரிந்த கிறிஸ்துவ நேயர்களும் இன்னுமற்றக் கிறிஸ்துவர்களும் அந்தத் திருநாளுக்கு விஜயஞ்செய்து, அதை ஒரு பெருநாளாகக் கொண்டாடிப்போக ஷை கோவில் விசாரணைக்குரு சங். S. M. F. இஞ்ஞாசிநாதர் அவர்களாற் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாணுக்கர்களுக்குப் பண உதவி.**—தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தைச் சேர்ந்த சென்னை நகர்க்கிளைச் சங்கத்தாரால், அந்தக் கிளைச் சங்கத்தைச் சேர்ந்துள்ள ஒருவரின் மகனும் யாதொரு கத்தோலிக்குப் பள்ளிக்கூடத்தில், ஆறுவது பாரத்தில் வாசிப்பவனுயு மிருக்கும் தக்க மாணுக்கன் ஒருவனுக்கு, ஸ்காலர்ஷிப் என்னும் பண உதவி, மாதம்மாதம் ஐந்து ரூபாய் விழுக்காடு ஒரு வருஷத்துக்குக் கொடுக்கப்படும். இதை யடைய விருப்பமுள்ளவர்கள், சென்னை, வேப்பேரி,



வடமலைப்பிள்ளை வீதி, 2வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ எம். பி. ஏ. தம்பிப் பிள்ளையாகிய, ஷை கிளைச் சங்கத்துக் காரியதரிசிக்கு நாளது அக்டோபர்மீ 31-ம் தேதிக்குள் எழுதிக் கொள்ளவேண்டும்.

**பத்தாம் பத்திநாதரும் திருச்சபையும்.** நாளது வருடம் ஆகஸ்டுமாதம் முதல் தேதியில் பிரசுரமான கணக்குப்படி நமக்கு காருண்ணிய தந்தையாயிருந்த அர்ச். 10-ம் பத்திநாத பாப்பானவரின் காலத்தில் புதிதாக ஏற்படுத்தப் பட்ட அதிமேற்றிராசனங்கள் 20; மேற்றிராசனங்கள் 55; சந்நியாச ஆசிரமங்கள் 6; விகாரிகள் அப்போஸ்தொலிக் 40-க்குமேல். இவ்விதமாக இவர் காலத்தில் முன் இருந்ததை விட 100-க்கு 10-வீதமாக மேற்சொன்னவைகள் விருத்தியடைந்திருக்கின்றன. மூன்றுகோடியே நாற்பது இலட்சம் கிறிஸ்துவர்களடங்கிய இத்தாலியா தேசத்தில் 274 மேற்றிராசனங்களிருந்தன. இவற்றுள் சில மிக்க எளிமை ஸ்திதியிலிருந்தனவாகையால், அப்போர்ப்பட்டவைகள் ரத்து செய்யப்பட்டு பக்கத்து மேற்றிராசனங்களோடு சேர்க்கப்பட்டன.

**குண்டூர் கன்னியாஸ்திரி மடம்.**-குண்டூரிலுள்ள, அர்ச். சூசையப்பர் கன்னியாஸ்திரிமடத்து சிரேஷ்ட தாயாராகிய சங். மரிய ஸ்தனிஸ்லாஸ் தாயார் அவர்கள் கன்னியாஸ்திரி பட்டம்பெற்று, சென்ற செம்டம்பர்மீ 12ம் தேதி யன்று 25 வருடம் பூர்த்தியானபடியால், அன்று பெரிய பாடற்பூசை, பொது நன்றியறிந்த தோத்திரம், வந்தனோபசாரப் பத்திரங்கள், பள்ளிக்கூடத்துச் சிறுமிகளுக்கு விருந்து, அவர்களுக்கு ஆடல்பாடல் முதலியவைகள் வெகு சிறப்பு, ஆடம்பரத்துடன் நடைபெற்றன. இந்தப் பெரிய தாயாரம்மாள் உலாந்து தேசத்தில் பிறந்துவளர்ந்து, கன்னியாஸ்திரியாகி, இத்தேசத்துக்கு 12 வருஷங்களுக்கு முன்னே வந்து, குண்டூரில் ஒன்றும், கர்நூல், நெல்லூர் இவைகளில் ஒவ்வொன்றுமாக மூன்று கன்னியாஸ்திரி மடங்களையும், அவைகளைச் சேர்ந்த பல பள்ளிக்கூடங்களையும் சித்திபெற நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுக்குச் சர்வேசுரன் நீடிய ஆயுளைக் கட்டளையிடுவாராக!

**ஓர் கன்னியாஸ்திரியின் மரணம்.**—சென்னை யதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த இராயபுரம், அர்ச். அன்னம்மாள் மடத்துக் கன்னியாஸ்திரியான அந்தோனித் தாயாரம்மாள் கடந்த சிலமாதங்களாக நோயுற்றிருந்து, சென்ற செப்டம்பர்மீ 17ம் தேதி, அம்பரன் திருவடி யடைந்ததைக் கேள்வியுற்று விசனிக்கிறோம். சில வருடங்களுக்கு முன்னே, சென்னைப்புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் ஆலயத்து விசாரணைக் குருவாயிருந்து காலஞ்சென்ற சங். சவரிநாத சுவாமியார். இந்த அம்மாளது தாய்மாமன் ஆவர். இந்த அம்மாள் தமது 15ம் பிராயத்திலே உலகத்தை வெறுத்து கன்னியாஸ்திரி அந்தஸ்திலுட்பட்டு, அதில் 32 வருஷம் தக்க பக்தி, புத்தி, ஒழுக்கம், வாஞ்சை, விமரிசை முதலிய சற்குணங்களுடன் நடந்து வந்தார்கள். ஆகவே, இவர்களுக்கு வயது 47. இவர்களுடைய ஆத்துமம் நித்திய இளைப்பாற்றி யடையும்படி ஒரு பர, பிரி, திரி வேண்டிக்கொள்வோமாக.

**மரியாயின் மகா சங்கம் நிறுத்தப்பட்டது**—அடுத்த டிசம்பர்மீ திருச்சினுப்பள்ளியில் நடை பெறுவதாய் நியமிக்கப்பட்டிருந்த மரியாயின் மகா சங்கம், தற்காலம் நமது இராஜாங்கத்தார் சம்பந்தப்பட்டிருக்கிற ஐரோப்பிய யுத்தக் காரணத்தால் நிறுத்தப்பட்டதென்று கேள்விப்பட்டு வெகுவாய் விசனிக்கிறோம். இந்த யுத்தக் கலாபனைகள் அடங்கி, ஊரெங்கும் சமாதானம் நிலைத்தபிறகு, சகலருக்கும் சௌகரியமான காலத்தில், அது நடத்தப்பெறுமென்றும், அதற்காக இதுவரையில் கத்தோலிக்கு விசுவாசிகள் அன்பாய் கொடுத்திருக்கிற நிதியனைத்தும் தக்கபடி காப்பாற்றப்பட்டிருக்குமென்றும், சீக்கிரத்தில் உலகமெங்கும் சமாதானம் உண்டாகி, இந்த மரியாயின் சங்கக் கொண்டாட்டம் நிறைவேறச் சர்வேசுரன் கிருபை செய்யும்படி, பரிசுத்த கன்னிமரியாயிடை நாமெல்லாரும் வேண்டிக்கொள்ள வேண்டுமென்றும், ஷை சங்கக் கமிட்டிக்கு அக்கிராசனுதி பதியாகிய திருச்சினுப்பள்ளி மேற்றிராணியாரவர்கள் கோருகிறார்.

**சென்னை அதிமேற்றிராணியார்.**—மி வும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலவ

எனும் எமது அதிமேற்றிராணியார் தற்காலம் ஐரோப்பாவிலிருக்கிறார் என்பதையும் அவ்விடத்தில் அவர் சமீபத்தில் மிகவும் அசௌக்கிய முற்றிருந்தார் என்பதையும் நமது பத்திரிகை நேயர்கள் ஏற்கெனவே அறிவார்கள். இப்போது அவர் ஏறக்குறைய பூரண சௌக்கியமுற்று ஹொலாந்திலுள்ள ரோசண்டால் எனும் இடத்தில் இருக்கிறார். இவ்விடமானது தற்கால யுத்தத்திற் சம்பந்தப்பட் டிருக்கும் பெல்ஜிய தேசத்துக்கு அருகாமையிலுள்ளது. ஆகவே, அப்போதைக்கப்போது யுத்தக்களத்திற் சுடப்படும் பீரங்கிகளின் தொனியும் அதிர்ச்சியும் அவ்விடத்திற்கூட கேட்கப்படுகிறதாம். ரோசண்டாவில் குருப்பட்டத்துக்காகப் படிக்கிற வித்தியார்த்திகளின் கலாசாலை தற்காலம் மூடப்பட்டிருக்கிறபடியால், அக்கலாசாலைக் கட்டிடம் யுத்தத்திற் காயப்பட்டு வருகிற போர்ச்சேவர்களுக்குச் சிகிச்சை செய்யப்படும் வைத்தியசாலையாக உபயோகிக்கப்பட்டுவருகிறது. யுத்தத்தினால் மிகவும் அமளியாயிருக்கும் ஐரோப்பாவிலிருந்து எமது அதிமேற்றிராணியார் நிறைந்த சுகத்தோடு தமது மேற்றிராசனம் வந்து சேர கருணையங்கடவுள் கருணை புரிவாராக.

திருச்சபையின் சமஸ்தான புதிய காரியதரிசி.-தற்போது பாப்பானவரா யிருக்கும் 15-ம் ஆசீர்வாதப்பரின் (Secretary of State) சமஸ்தான காரியதரிசி, தொமினிக்கோ பெர்ராத்தா என்னும் கர்தினால். இவர் 1847-ம் ௵ மார்ச்சு ௴ 4௳ இத்தாலியாவைச் சேர்ந்த கிராதொலி என்ற பட்டணத்திற் பிறந்தவர். வியெற்றோ நகரிலிருந்த சேசுசபை காலேஜில் துவக்கத்தில் வாசித்துக் கொண்டிருந்து, பிறகு குருபட்டத்துக்குப் படிப்பதற்காக மோன்றேபியாஸ் என்னும் தேவாலயத்துக் கருகிலுள்ள குருமடத்துக்கு அனுப்பப்பட்டார். அவ்விடத்தில் யாவரும் அவரை மெச்சிப் புகழும் வண்ணம் தர்க்க சாஸ்திரத்தைப் படித்து முடித்துவிட்டு வேத சாஸ்திரத்தைப் படிப்பதற்காக ரோமாபுரிக்குப்போய் அதிலும் பாண்டியத்தியமடைந்து, இரண்டு கோல்டு மெடல்கள் பரிசளிக்கப்பட்டார். இவர் பாப்பானவருக்கு சமஸ்தான காரியதரிசியாக நியமிக்கப்படுவதற்கு முந்தி திருச்சபை சரித்திராசிரியராகவும், பரிசுத்த சுவிசேஷ போதகாசிரியராகவும் விசுவசிக்கவும் அனுசரிக்கவும் வேண்டிய சத்தியங்களையும், வேத சட்டங்களையும் வியாக்கியானிக்கும் பண்டிதராகவும் புரோபோகாந்தா காலேஜில் நியமகம் பெற்றிருந்தார்.

---

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்;

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாய் முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா வென்பதை நண்பர்கள் கவனிக்கக் கோருகிறோம். அரைக் கலத்துக்கு மேற்பட்டு முக்கால் கலத்துக்கு உட்பட்டால் 1—8—0 ரூபாயாகும். முழுக்கலத்துக்கு 2 ரூபாயாகும். அரை ரூபாய்க்கு இவ்விளம்பரங்கள் ஒருபோதும் பிரசுரிக்கப்பட மாட்டா.

### ஜனன அறிக்கை.

எனது சகோதரியும் Mr. R. Joseph Writer அவர்களின் பிரிய துணைவியுமாகிய சௌ. மரியம்மாள், 1914-௵ August 30௳ ஞாயிற்றுக் கிழமை இரவு 9½-மணிக்குத் திரு இருதய சேசுசுவாமியின் கருணைக் கடாக்ஷத்தாலும், அமலோற்பவியான அர்ச். லூர்துநாயகியின் பரிபூரண ஆசீராலும் தனது ஆறுவது பேறான ஓர் ஆண்மகவை யாதொரு அபாயமுமின்றி ஈன்றனள். September, 12-9-14. சனிக்கிழமை யன்று தென்குடகு பாளிபெட்டாவில் எழுந்தருளி யிராநின்ற அர்ச். லூர்துநாயகியின் ஆலயத்தின்கண், விசாரணைக்குரு Rev. T. J. Pinnatto தேசிகரால் அக்குழந்தைக்கு லூர்துமரியதாஸ் என்னும் நாமகரணம் சூட்டப்பட்டது. மேற்படி Grove Estate Writer M. V. Doraswami Pillai ஞானத் தந்தையாகவும் மேற்படியாரின் மனைவி ரு. அன்னம்மாள் ஞானத்தாயாராகவும் அங்கீகரிக்கப்பட்டார்கள். தாயுஞ் சேயும் சுகம்.

இங்ஙனம்,
பிள்ளையின் தாய் மாமன், D. S.



### நன்மரண அறிக்கைகள்.

இதனால் சகல நண்பர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: தைப்பிங்கில், (Taiping) வசிக்கும் கனம் யெம்பராம் அவர்களின் சிரேஷ்ட குமாரத்தியும் கன்னியாஸ்திரி மடத்தில் வாசித்துக்கொண்டிருந்தவளு மாகிய சௌபாக்கிய வதி அந்தோனி அம்மாளை காலஞ் சென்ற D: J. டேவிட் அவர்களின் சிரேஷ்ட குமாரன் D. Simon, ஆகிய நான் 1913 வருஷம் அக்டோபர் ௴ 30௳ வியாழக்கிழமை அர்ச். ஞானப்பிரகாசியார் ஆலயத்தில் மெய்விவாகம் செய்துகொண்டேன். எனது அருமை பத்தினியாகிய சௌபாக்கியவதி அந்தோனி அம்மாள் தனது 16 வயதில் முதல் பேறாக ஒரு பெண் குழந்தையை 7 மாதத்தில் பெற்று, மறுநாள் விஷஜுரங் கண்டு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து அவஸ்தைப்பூசுதல் பெற்றுக்கொண்டு 1914௵ ஜூலை ௴ 20௳ திங்கட்கிழமை பகல் 12-மணி 5-நிமிஷத்துக்குத் தன்னைச் சிருஷ்டித்த கர்த்தாவிடம் தனது ஆத்துமத்தை ஒப்புவித்து அவர் திருவடிபோய்ச் சேர்ந்துவிட்டனள். இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக இதை வாசிக்கும் கத்தோலிக்குக் கிறிஸ்தவ நண்பர்கள் 1 பர., 1 பிரி., 1 திரி. வேண்டிக்கொள்ளும்படி கெஞ்சி கேட்டுக்கொள்ளும் நிர்ப்பாக்கியதாசன்,

D. Simon,
Taiping, F. M. S.

---

சென்னை சேப்பாக்கப் புராதீனரும், மலையாளத்தைச் சார்ந்த கன்னனூர் வாசரும், பெங்களூர் பிளாக் பள்ளியின்கண் பிரபலமாக வாழ்ந்தவரும், எமதாப்த ரத்தினம் செயின்ற் மேரீஸ் ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும், வித்வஜன சேகரருமாகிய ஸ்ரீமான் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்கள் அருந்தந்தையுமாகிய ம-ள-ள-ஸ்ரீ C. சகாதேவம் பிள்ளை (சாமிநாதம்) திருச்சபை யாசாரத்தின்படி கடைசி தேவத்திரவியானுமானங்களைக் குறைவறப் பெற்று, மரணத்துக் கெதிர்ப் பார்த் திருந்தபடி தமது விருத்தாப்பிய தசையில் இரக்ஷண்யம் 1914௵ செப்டம்பர் ௴ 17-ம்௳ வியாழக்கிழமை யதி காலை ௫-மணிக்குத் தமதாத்துமத்தைதேவ நீதிக் கொப்படைத்து, கண்களைமூடி உயிர் விட்டனர். அன்றுமாலை அவரது சடலம் விசேஷாலங்கிருதப் பெட்டியி லடக்கி, இருபுரவி பூட்டிய அழகிய இரதத்தின்கண் ஆரோஹணித்து, பெருந் திரளான ஜனங்கள் புடைசூழ்ந்து பின்றொடர, அர்ச். காணிக்கை மாதா பஜனை, அர்ச். செல்வநாயகியன்னை பஜனைகுழாங்கள் தம்தம் விருதுக் கொடிகளுடன் அணிவகுத்து பஜித்துவர, கோவில்மணிகள் துக்கக்குறியுடன் விட்டு விட்டொலிக்க, அர்ச். காணிக்கை மாதா கோவிலுக்குக் கொண்டுபோகப் பெற்று, சங். இராஜருஷி A. ரேத்திரோர் குருஸ்வாமி யவர்களால் பாடக சங்கத்தார் லிபராமே டோமினே என்னும் சங்கீதம் பாட ஆசீர்வதிக்கப் பெற்றபின், அலங்கார ஊர்வலமாய்க் கல்பள்ளிக் கல்லறைக்குக் கொண்டுபோ யடக்கஞ் செய்வதற்கு முன், அவரது சிரேஷ்ட குமாரர் ஸ்ரீமான் C.S. ஞானப்பிரகாசம் பிள்ளை தந்தை செய் நன்றியை சிந்தனைசெய்து அவ ரந்திய கால வந்தனையாக அநுதாபித்துப் பாடிப் பிரசுரித்திருந்த சஞ்சலப்புஞ்ச பஞ்சகம் என்னுந் தொடையலை வழங்கி, அதனை அத்தியந்த உருக்கமாய்ப்பாடி சுருக்கமாக வியாக்கியானித்தபின் சூளை நிஸ்சலப்பிரகாஷ் என்னும் ஸ்ரீமான் ச.மு. நாராயணசாமி பிள்ளை யவர்கள் சரம மாட்சித்வனி என்னுஞ் செய்யுளைப் பாடி, அதனை விரிவாகப் பிரசங்கிக்கப் போந்த சமயம் மின்மையையாங்கு குழுமி யிருந்த அன்பர்களுக்கு விவரமாயெடுத்துக் கூறிய பின்னர், ம-ள-ள-ஸ்ரீ, மி. ஞானப்பிரகாச நாவலரவர்க ளியற்றிய சரம கவியை அவரது ஆப்தர் கனம் அ. பூ. ஜோஸேப் பிள்ளை அவர்கள் பாடி முடித்தபின், கடைசி ஜெபம் செய்ய, அடக்கஞ் செய்யப்பட்டு மாலை 7-மணிக்கு அன்பர்கள் தங்கள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினர். இதைக் கண்ணுறு மன்பர்கள் அவராத்தும இளைப்பாறுதலடைய வேண்டிக்கொள்ள வேண்டு மென்று பெரிதுங் கோரும்,

ஷையார் புத்திர சம்பந்தம்
பிரான்சீஸ், சி. தம்புசாமி பிள்ளை.
அர்ச். அன்னம்மாள் மதுவிலக்கு சபை
கொரமாண்டல்,
கோலார் தங்கவயல்.

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்

நண்பர்களே,

சென்ற வருஷம் உதாரகுணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும், எடப்பாடி அர்ச். செல்வநாயகி அம்மாள் ஆலய தர்மமென்று அறிக்கையிட்டுச் செய்து கொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவியாகவந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்கும் பங்காளிகளான நேயர்களுக்கு அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1913-ஞு ஏப்ரல் மாதமுதல் 1914-ஞு மார்ச்சுமாதம் 31உ வரையில் நேயர்களிடமிருந்து வரவேற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடை ரூபாய் 600-0-0. சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்கள் கட்டவும், விசாரணைக்குரு வசிக்கும் பங்களாவை மராமத்து செய்யவும், கோவில் கட்டிட விர்த்திக்காக தண்டவாள தூலங்கள் வாங்கவும் செலவான தொகை ரூபாய் 2017-11-6. தற்காலம் எமக்குக் கடனுயிருப்பது ரூபாய் 460-0-0.

நண்பர்களே, தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி, சத்திரங்கள் ஏறத்தாழ முடிவாய்விட்டன. ஆகிலும், பழைய சத்திரத்தை மராமத்துச் செய்யவும், கோவில் வேலைகளை முடிவிற்குக் கொண்டுவரவும் குறைந்தது நாமிட்ட மதிப்பிற்குமேல் இரண்டுபங்கு அதிகமாகிறபடியால், அதைரியத்திற்கு இடமாயினும், புதுமையுள்ள அர்ச். செல்வநாயகி அம்மாளையே நம்பி விடாமுயற்சியுடனும் அதிக ஊக்கத்துடனும் வேலைசெய்து வருகிறோம். தர்ம சிந்தையுள்ள அவளது ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள் பேரில் பூரணமாய்ப் பொழிய கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதினை வேண்டுகோள். இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின்
ஊழியனுகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதீக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 733 | 8 | 0 |
| Mr. குசையப்பன், கிடையூர் | 5 | 0 | 0 |
| ,, S. P. ஞார்து, தைப்பிங் | 2 | 0 | 0 |
| ,, தாவீது, வாஸ்கிணைத்தூர் | 5 | 0 | 0 |
| மரியாயின் தாசன் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 746 | 8 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,310-5-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "சிறுதுளி பெருவெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்தவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,340 | 5 | 6 |
| Mr. D. ரோஸ், (சென்னை) | 2 | 0 | 0 |
| ,, L. V. கோம்ஸ், (கிலோர் எலியா) | 1 | 0 | 0 |
| ,, B. F. தோமாஸ், (ஒத்தை) | 5 | 0 | 0 |
| ,, A. ஐத்தேரிமுத்து பத்தர், (இராயப்பேட்டை) | 10 | 0 | 0 |
| ,, அனந்தநாதப் பிள்ளை, | 1 | 0 | 0 |
| Messrs. ரோடிர்கஸ் அண்டு கோ., | 30 | 0 | 0 |
| Mr. M. S. சுவாமிக்கண்ணு (ரங்கூன்) | 1 | 0 | 0 |
| ஒருவரின் நன்கொடை | 2 | 0 | 0 |
| Mr. A. டேவிட், (பெஸ்காம்) | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 3,393 | 5 | 6 |

The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத [illegible] அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனும் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1914 MADRAS.

புத்தகம். 12. } நவம்பர் 1914. { இலக்கம். 11.

## DIAMOND JUBILEE.

## வைர ஜுபிலி.

(முன்தொடர்ச்சி.)

### ஜெபமாலைதான் அமலோற்பவிக்கு அதிக பிரியமானது.

சுமார் 700 வருடங்களுக்கு முன் தம்முடைய காலத்திலே அதிகமாய்ப் பரவிவந்த அல்பிஜென்சேஸ் என்னும் பதித மதத்தை அடியோடு அழித்துப்போட அர்ச். சாமிநாதர் தம்மாலான மட்டும் போராடிவந்தார். அப்பதித மதத்தில் மிகவும் வைராக்கியங்கொண்டிருந்த ஒருவனை மனந்திருப்ப இவர் எவ்வளவு புத்திமதிசொல்லியும் அவன் கேளாமையால், ஓர் கானகத்துக்குட் சென்று அவ்விடத்தில் தம்முடைய கடின தவத்தாலும் இடைவிடாத ஜெபத்தாலும் நரக சர்ப்பமாகிற பேயின் தலையை நசுக்கும் வல்லபமுடைத்தான அமலோற்பவ இராக்கினியின் சலுகையைத் தேடத் தொடங்கினார்.

இவர் ஓர் நாள் இப்படி ஜெபத்தியானத்தி லிருக்கும்போது தேவ கன்னிகையான அமலோற்பவ இராக்கினி தம்மோடு கூட மூன்று இராஜ ஸ்திரீகளிருந்த பாவனையாகவும், அந்த ஸ்திரீகள் ஒவ்வொருவனையும் ஐம்பது கன்னியர் புடைசூழ்ந்து அணியணியாய் நின்ற பாவனையாகவும் தரிசனை கொடுத்தாள். முதல் வகுப்பைச் சேர்ந்த ஐம்பதுபேரும் வெண்டாமரை மலரிலும் அதிக வெண்ணிறமுள்ள பட்டுப் பீதாம்பரங்களையும், இரண்டாம் வகுப்பினர் செம்பரத்தம் பூவிலும் காந்தியான செந்நிறப் பட்டாடைகளையும், மூன்றும் வகுப்பினர் பொன்னிறமுள்ள ஜரிகைப் புடவைகளையும் உடுத்திக் கொண்டு ஜெகஜ்ஜோதியாக துலங்கினார்கள்.

இதைக் கண்ட அர்ச். சாமிநாதர் மெய்மறந்து பரவசமாகவே, அமலகன்னியாகிய தேவதாயார் 150-மணிகளடங்கிய ஒரு ஜெபமாலையை அர்ச்சியசிஷ்டவருக்குக் காண்பித்து "மகனே! நீ காணும் இந்த ஜெபமாலையில் மூன்று மாலைகள் அடங்கியிருக்கின்றனவென்று உனக்குத் தெரிவிக்கவே, நம்முடன் மூன்று இராஜ ஸ்திரீகள்

வந்திருக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு ஜெபமாலையிலும் 50-பிரியதத்த மந்திரங்களுண்டென்று காட்டும்படி, அவர்கள் ஒவ்வொருவரையும் 50-கன்னியர் புடைசூழ்ந்திருக்கின்றனர். முதல்வகுப்பின் கன்னியர் அணிந்திருக்கும் வெள்ளை வஸ்திரத்தால் சந்தோஷத் தேவஇரகசியங்களையும், இரண்டாம்வகுப்பினர் தரித்திருக்கும் சிகப்பு ஆடையால் துக்கத் தேவஇரகசியங்களையும், மூன்றும் வகுப்பினர் உடுத்தியிருக்கும் பொற்சரிகை யாடையால் மகிமைத் தேவ இரகசியங்களையும் நீ தியானித்து ஜெபிக்கக்கடவாய்'' என்று உரைத்து இப்படி ஜெபமாலை ஜெபிக்கும் முறையைத்தாமே அவருக்குக் கற்றுக்கொடுத்தாள்.

காட்சி மறையவே, இவர் பரவசந் தெளிந்து அமலகன்னி தமக்குத் திருவுளம்பற்றின அத்தனையும் அத்தனைமாணிக்கங்களென மதித்துச் சந்தோஷத்தை அடக்கமுடியாமல் தக்ஷணமே தாம் வசித்த காட்டினின்று புறப்பட்டு துலூஸ் நகரத்தை நோக்கிச்சென்று ஆண்டவருக்குத் துதிசெலுத்த அவ்வூர்கோவிலுக்குப் போனார். இவர் கோவிலுக்குள் பிரவேசிக்கவே, கோவில் மணிகளெல்லாம் ஆவைகள் பாட்டுக்கு அற்புதமாக சப்திக்கத் தொடங்கின. அதைக்கேட்ட அவ்வூர் வாசிகள் ஆச்சரியப்பட்டு அதைப் பார்க்கும் பொருட்டுக் கும்பல் கும்பலாய் வந்து தேவாலயத்தில் நிறைந்துவிட்டார்கள். இப்படி கோவில்நிறைந்திருப்பதைப்பார்த்த அர்ச். சாமிநாதர் கால தாமதம் பண்ணாமல் பிரசங்கத் தொட்டியிலேறித் தமக்குத் தேவ கன்னிகைக் கற்பித்தபடி ஜெபமாலையை ஜெபிக்க வேண்டிய உததம முறையைச் சகலருக்குங் கற்றுக்கொடுத்து ஷை பதித மதம் அழியும்படி அதை ஜெபித்துவரக் கேட்டுக்கொண்டார். அப்பதித மதமும் நாசமாய்ப் போனது. அந்நாள்முதல் பத்தியுள்ள விசுவாசிகள் எல்லோரும் 153 மணி ஜெபஞ் சொல்லப் பழகி, அதன் மூலமாய் அந்தத் தேவ தாயாரை மன்றாடிவருவதால் இவ்வுலகில் நடந்தேறிய அற்புதங்களுக்கும் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் உண்டாகிய நன்மைகளுக்கும் கணக்கு வழக்கில்லை.

ஆகையால், சேசுநாதர் நமது இரக்ஷண்ணியத்துக்காக மனுஷாவதாரமெடுத்துப் பாடுபட்டு மரித்து உயிர்த்த வேத சத்தியங்கள் எல்லாம் அடங்கிய ஜெபமாலையை நாமனுதினஞ் செபித்து, அதிலுள்ள சத்தியங்களைத் தியானித்து வருவோமானால் அர்ச். கன்னித்தாயாருக்கு நமதுபேரில் பிரியமும் அன்பும் உண்டாகும்படி செய்துகொள்வது மல்லாமல் நமது சத்துருக்களைச் செயிக்க நமக்கு வேண்டிய திடனையும் அடைவோமென்பதற்குச் சந்தேகமில்லை.

### அமலோற்பவியைச் சேவிக்கிறவர்கள் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து சீக்கிரம் மீட்கப்படுவோர்கள்.

அமலோற்பவியான தேவதாயார் ஓர் நாள் அர்ச். விரிச்சித்தம்மாளுக்குத் தம்மைக் காண்பித்து ''உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்கு நான் தாயாராயிருக்கிறேன். என் வேண்டுதலாலும் வெவ்வேறே உதவிகளாலும் அவர்களுடைய வேதனைகள் தணியும்படி செய்து வருகிறேன்'' என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

இதற்கிசைய அர்ச். தமியான் இராயப்பர் எழுதிவைத்திருக்கிறதாவது: மரோசியம்மாள் என்ற ஒரு புண்ணியவதி தான் மரணித்த சில நாளுக்குப்பின் தன் சிநேகிதர்களில் ஒருத்திக்குத் தன்னைக் காண்பித்து, தெரிவித்ததாவது: ''சமீபத்திற் கொண்டாடிய மோக்ஷ இராக்கினிமாதாத் திருநாள் அன்றைக்கு அர்ச். தேவமாதா உத்தரிக்கிற ஸ்தலத்தில் இறங்கி என்னையும் வேறனேகம் பேர்களையும் மீட்டுக் கொண்டாள். உரோமாபுரி பட்டணத்தில் எத்தனை ஆயிரங் குடிகளுண்டோ அத்தனை ஆயிரம்பேர் அத்திருநாளன்று மோக்ஷபாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்'' என்பதேயாம்.

இதைக்குறித்து இன்னும் தெனிஸ் கார்த்தூசியான் ''நமதாண்டவள் முன் சொல்லிய திருநாளிலே மாத்திரமல்ல, கர்த்தர் பிறந்த திருநாளிலும், பாஸ்குத் திருநாளிலும் கணக்கில்லாத ஆத்துமாக்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று விடுவித்து மோக்ஷத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறாள்'' என்று எழுதிவைத்திருக்கிறார். ஆகையால், அத்திருத்தாயாரைப் பட்சத்தோடு அண்டி அவளுடைய



பாதாரவிந்தத்தைக் கெட்டியாய்ப் பிடித்தவர்கள் ஒருபோதுங் கைவிடப்படார்கள் என்பது சத்தியம்.

பிரிய சகோதரரே, அமல தாயான கன்னி மரியாயை நேசித்துச் சேவித்தால் அவளுடைய வேண்டுதல் மூலமாய் நமது சிவிய நாளில் இக்கட்டு இடையூறு நேராமலும், மரணத்துக்குப்பின் நரகத்தில் விழாமலும், உத்தரிக்கிற ஸ்தலத்தில் வெகுநாள் விடப்படாமல் மீட்கப்பட்டும் பரலோக பேரின்பப் பாக்கியங்களைச் சுகித்தனுபவிக்கப் பாத்திரவான்களாவோமென்று உறுதியாக நம்பக்கடவோம்.

---

## ALL SOULS DAY.

## உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாள்.

---

பிராஞ்சு தேசத்தின் (Cluny) குளூனி என்னும் பேர்போன பட்டணத்தில் அர்ச். ஆசீர்வாதப்பருடைய பிரபல்மான மட மொன்று உண்டு. அம்மடத்துச் சிரேஷ்ட மடாதிபதியான அர்ச். ஒதிலோன் (St. Odilon) என்பவர் முதல் முதல் மரணித்தவர்களுடைய ஞாபகத் திருநாளை ஏற்படுத்தி அதை எல்லோரும் கொண்டாட ஒரு தூண்டுகோலா யிருந்தாரென்று பூர்வ கிரந்த கர்த்தா ஒருவர் எழுதிவைத்திருக்கிறார்.

இத்திருநாளை அவர் ஏற்படுத்தக் காரணமாயிருந்த அற்புத சம்பவமேதெனில்:- பிரான்சுதேசச் சுதேசியும் சன்னியாச அந்தஸ்தில் உள்ளவருமான ஓர் சகோதரர் ஜெருசலேம் பட்டணத்துக்குத் திருயாத்திரையாய்ப் போய்த் திரும்பிவருகிற வழியில் அவர் ஏறியிருந்த மரக்கலம் கடும் புயலில் அகப்பட்டு உடைந்துபோக, சிசிலி தீவுக்கு அருகாமையிலுள்ள ஓர் தீவில் அற்புதமாகக் கரையேறினார். மனித சஞ்சாரமற்ற அந்த அத்வான காட்டில் நுழைந்து அங்கும் இங்கும் சுற்றித் திரிகையில், ஓர் மலைக்குகையில் முனிவர் ஒருவர் கடுந்தபசு அனுஷ்டித்து வருவதைக் கண்டார். வனவாசியானவர் அற்புதமாக உயிர் தப்பிவந்த சகோதரரை மிக்க நேசப்பட்சத்தோடு வரவேற்றுத் தம்மால் கூடிய உபசரணை உதவிகளைப் புரிந்து அவர் பிரான்சுதேசச் சுதேசியென்று அறிந்து மிகவுஞ் சந்தோஷப்பட்டார். இப்படியாக சிலநாள் சகோதரர் முனிவரோடு தங்கியிருக்கும்போது ஓர் நாள் சம்பாஷணைவேளையில் குளூனி மடத்தையும் அதில் உள்ள புண்ணியோத்தமனாகிற ஒதிலோன் மடாதிபதியையும் பற்றிப் பேச்சு உண்டாக, முனிவர் அவருடைய சுகக்ஷேமங்களைக் கேட்டறிந்தபின் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பேரில் அர்ச். ஒதிலோனுக் கிருக்கும் நேசப்பற்றுதலை தாம் நன்றா யறிந்தவராதலால், அவ்வாத்துமங்களுக்கு உதவிசெய்யும்படி அவரை இன்னும் அதிகமாய் யுற்சாகப்படுத்த பின்வருவதை சகோதரருக்குத் தெரியப்படுத்தினார்.

''சகோதரரே, நான் தபசுசெய்யும் இம்மலைச் சார்பில் மகா விசாலமானதும் ஆழமானதுமான பாதாள லோக மொன்றுண்டு. அதின் கருப்பத்திலிருந்து பயங்கர அக்கினிச் சுவாலைகள் இத்தீவை முழுதுஞ் சாம்பலாய்த் தகித்து விடும்படியாய்க் கிளம்புவதையும், அவ்வகோர அக்கினிமத்தியில் ஆத்துமங்கள் தாங்கள் கட்டிக்கொண்ட ஏராளமான பாவங்களுக்குப் பரிகாரமாகச் சொல்லி முடியாத வேதனைகளை அனுபவித்து வாடி வதங்கி மெலிந்து உருகுவதையும், அபயம் அபயம் என்று ஓலமிட்டழுவதையும் கண்ணாரக் கண்டேன். ஐயோ, பரிதாபம்! அவர்களைப் பின் தொடர்ந்தோடிவரும் துர்நாற்றம் வீசும் விகார பயங்கர ரூபங்கொண்ட பசாசுக்களின் கர்ச்சனைகளையும் கேட்டு நடுநடுங்கினேன். விசுவாசிகளும் விசேஷமாக குளூனிமடத்தாரும் மடாதிபதியும் நேசப்பற்றுதலோடு செயதுவரும் ஏராளமான ஜெபதப பூசைபலன்களால் அநேக ஆத்துமங்கள் அவரவர்களுக்குக் குறிக்கப்பட்ட காலம் முடியாமுன் விடுதலையடைந்து மோக்ஷத்துக்குப் போகிறார்களே என்று பார்க்கச்சகியாத வர்மங்கொண்ட அப்பசாசுகள் சிங்கங்களைப்போலே கர்ச்சித்து ஆர்ப்பரித்து

முறையிட்டு கூக்குரலிடுவதையும் செவியாறக் கேட்டேன்.”

“ஆதலால் என்பிரிய சகோதரரே இன்னும் அதிகாதிகமாக அர்ச். ஒதிலோன் சர்வேசுரனை இரந்து மன்றாடிவர நான் கேட்டுக்கொண்டதாக அவருக்குச் சொல்லு” மென்று விண்ணப்பஞ்செய்து அனுப்பினார்.

சந்நியாசியாரோ வெனில் பிரான்சுதேசம் போய்ச் சேர்ந்தவுடனே தபோதனர் சொல்லிய மனுவைப் புண்ணிய மடாதிபதியான அர்ச். ஒதிலோனுக்குத் தெரிவிக்கவே, அவர் மிகவுஞ் சந்தோஷ உற்சாகமடைந்து, தம் சபையாருடைய சகல மடங்களுக்கும் திருமுகம் எழுதியனுப்பி நவம்பர் மாதம் 2-ம் தேதியை உத்தரிக்கிற ஆத்துமாக்களுடைய நாளாகக் குறித்து, அத்தினத்தில் சகலவித புண்ணிய தவக்கிரியைகளையும் ஜெப தவங்களையும் புரிந்து, உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காக ஒப்புக்கொடுக்கும்படி உத்தரவளித்தார்.

பிறகு இந்த மகாநாளை அர்ச். பாப்புமார்கள் அங்கீகரித்துத் திருச்சபை முழுதும் அதைக்கொண்டாடி வரும்படி திட்டஞ்செய்தார்கள். நம்மைத் தங்கள் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து நம்மைப் போஷித்து நேசித்து மரணத்தை யடைந்த நமது தாய்த்தந்தையரையும் பந்து மித்திரரையும் அன்றையத் தினமாவது மறவாமல், ஜெபதபம் தானதர்மம் முதலிய புண்ணியக்கிரிகைகளால் அவர்களுடைய வேதனையை நீக்கப் பிரயாசப் படுவோமாக. விசேஷமாய் சமீபத்தில் காலஞ்சென்ற நம்முடைய நேச தந்தை 10-ம் பத்திநாதர் இந்த உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளுக்கென்று அளித்திருக்கிற அபூர்வ பலனை நாமெல்லோரும் அடைந்து அவ்வாத்துமாக்களுக்கு உதவிபுரிய முயலுவோமாக. அப்பலன் யாதெனில்: உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளன்று கிறிஸ்துவர்கள் நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்து திவ்விய நன்மை வாங்கி எத்தனை விசை கோவிலைச் சந்திக்கிறார்களோ அத்தனை விசையும் பரிபூரணப்பலன் அடைந்து அப்பலனை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு மாத்திரம் ஒப்புக்கொடுக்கலாம் என்பதே.

---

## PIUS X & THE WAR.

## காலஞ்சென்ற 10-ம் பத்திநாதரான பாப்பாண்டவரும் ஐரோப்பிய யுத்தமும்.

நமது பாப்பாண்டவர் 10-ம் பத்திநாதர் தமது மரணப்படுக்கையில் இருக்கும்போது இவருடைய எண்ணமும் கருத்தும் எல்லாம் தற்காலம் நடந்துவரும் ஐரோப்பிய யுத்தத்தின் மீது சார்ந்திருந்ததான விஷயம் யாவருக்கும் நன்றாய்த் தெரியும். இவர் தம் மரணப்படுக்கையில் இருந்துகொண்டு உரைத்த வசனங்களில் “ஐயோ! என் பிள்ளைகள் முற்காலத்தில் பாப்புவின் சொல்லைக் கேட்டு துவக்கின சண்டையை நிறுத்துவார்கள். இப்போது பாப்புவின் வார்த்தையில் பலமில்லை” என்னும் வசனங்கள் நாம் நன்றாய் ஆராய்ந்து உணரவேண்டிய வெகு முக்கியமான வசனங்கள்.

அக்காலத்தில் சகல ராஜாக்களும் நமது பாப்பரசருக்கு அடங்கியவர்களாய் அவர் வார்த்தையைத் தெய்வ வாக்கெனக்கொண்டு நடந்துவந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர் வார்த்தையில் கர்வங்கொண்டவர்களாய் அகங்கரித்து ஒவ்வொருவராய் அவருடைய வார்த்தைகளை அலக்ஷியம்செய்ய ஆரம்பித்து, இறுதியில் அவருடைய வார்த்தைகளை முற்றிலும் பலனற்றுப்போகப் பண்ணிவிட்டார்கள். இவருடைய வார்த்தையைக் கேட்கவேண்டாம், இவருடைய அனுமதியன்னியில் நாமே நமது காரியாதிகளை நடத்திக்கொள்ளலாம் என்பதாகத் தீர்மானித்தனர். இவர்கள் இங்ஙனஞ் செய்ததின் காரணம் எல்லாம் இவருடைய அதிகாரத்தைக் குறைத்து அந்தவிதமாய்த் திருச்சபையைத் தொலைத்துவிடவேணுமென்பது மாத்திரம் இவர்களுடைய அந்தரங்க எண்ணமாக விருந்தது. பாப்பரசர்கள் பூலோக அதிகாரங்களைக் கொண்டிருந்த காலமெல்லாம் இவ்வதிகாரத்தைத் தங்களுடைய சுயநலத்திற்காகவாவது அல்லது திருச்சபைக்கு அத்தியாவசிய மென்றாவது இவர்கள் கொண்டிருந்ததில்லை. அவ்வதிகாரங்களை வகித்ததெல்லாம் ஜனங்களுடைய நன்மைக்கென்றே வகித்திருந்தார்கள். இதை ஜனங்கள் கண்டுபிடித்தார்களில்லை. அவருடைய அதிகாரத்தையெல்லாம் அவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்



கள், பிடுங்கிக்கொண்டபின், திருச்சபையானது தன்னுடைய வலியிழந்ததா? கற்பாறையின்மீது கட்டப்பட்ட கட்டிடம் கடவுளால் கண்காணிக்கப்படும் வீடு. இதை உடைக்கவோ தகர்க்கவோ எவராலும் கூடுமோ? கூடவே கூடாது. இது இங்ஙனம் நிற்க அதிகாரத்தைப் பிடுங்கிய அரசர்கள் பாடு என்னவாயிற்று? “அரசன் அன்று கேட்பான் தெய்வம் நின்றுகேட்கும்” என்ப துண்மையல்லவா? இதோ பாருங்கள், ஐரோப்பாக்கண்டமானது என்ன நிலைமையில் இருக்கின்றது என்று கவனியுங்கள். இராஜ்ஜியம் இராஜ்ஜியத்தோடு எதிர்த்துப் போராடுகின்றது. எத்தனையோ மைல் தூரத்திற் இலக்ஷக் கணக்கான ஜனங்கள் அணியணியாய் நின்று போர்புரிகிறார்கள். இரவும் பகலும் ஒரே போர்தான். எங்குபார்த்தாலும் குத்தும் வெட்டும் பழியும் பாதகமுமே தவிர வேறு யாதாமொன்றையுங் காணோம். நாடெல்லாம் காடாய் மாறுகின்றது. பட்டணம் எல்லாம் பாழாய்ப் போகின்றது. மனிதர்கள் சிந்தும் இரத்தமே ஆறாய் ஓடுகின்றது. எங்கு பார்த்தாலும் பிணங்கள் குவியல் குவியலாய்க் கிடக்கின்றது. “தந்தையை இழந்தோம் மைந்தரை இழந்தோம் தமையனைத் தம்பியை இழந்தோம், எந்தமின் சுற்றம் தன்னையுமிழந்தோம் தங்குமோர் இடமும் தனத்தையும் இழந்தோம்” என்பதாய் ஏங்கி ஏங்கி அழுகின்ற கூக்குரலையன்றி இனிய வார்த்தைகள் ஏதேனும் கேட்பதற்கு இடமில்லை. ஆயிரக்கணக்கான அழகுவாய்ந்த சுமங்கிலிகளெல்லாம் அமங்கிலிகளாய் மாறிவிட்டார்கள். அருமையும் பெருமையுமாய் வாழ்ந்த அருமருந்தன்ன மக்கள் இப்போது ஆருமற்ற அனாதிகளாய்விட்டார்கள். அந்தகோ! இதைக் கிரகிக்குந்தோறும் எவர் மனம் தளராது நிலைநிற்கக் கூடும்? இதுவே பாப்பரசரின் வார்த்தைகளை முற்றிலும் பலனற்றுப்போகச் செய்ததின் பலனன்றி வேறென்ன? இதினால்தான் நமது நேசதந்தை 10-ம் பத்திநாதர் தமது மரணப் படுக்கையில் இருந்துகொண்டு “ஐயோ! என் பிள்ளைகள் முற்காலத்தில் பாப்புவின் சொல்லைக்கேட்டு துவக்கின சண்டையை நிறுத்துவார்கள். இப்போது பாப்புவின் வார்த்தையில் பலமில்லை” என்று மனம்பதைத்து வெகு உருக்கத்துடன் உரைத்த பின்னர் “எனது வயோதிப திசையில் நான் இந்தச் சண்டையினால் உலகத்திற்கு ஏற்படவிருக்கும் கொடுமைகளையெல்லாம் பார்த்து வருந்தாதபடி கடவுள் என்னைத் தமதண்டைக்கு அழைக்க இரக்கம் புரிந்தார்” என்று சொல்லி சண்டையின் பலியாகத் தனதுயிரைத் துறந்தனர். இதை வாசிக்கும் சகோதரர் சகோதரிகளே, திருச்சபை யதிகாரத்தைத் தவிர்த்திராதிருந்தால் இத்தனை சேதமும் நாசமும் துன்ப துயரமும் உலகத்திற்கு வராமல் இலகுவாய்த் தடுத்திருக்கக்கூடுமல்லவா? ஆம் மெய்யாகவே தடுத்திருக்கக்கூடும். ஆதலால், திருச்சபை அதிகாரத்தை தவிர்த்தே தற்காலம் உலகில் நிகழும் அனர்த்தத்திற்குக் காரணம் என்பது வெளிப்படை. ஆகையால் நாம் திருச்சபை யதிகாரத்தை எதிர்க்கவோ, குறைக்கவோ, தவிர்க்கவோ எண்ணுவதெல்லாம் மகா மதியீனம் என்பதை மறந்துவிடப்படாது. இது மகா பாதகமானது. திருச்சபையை எதிர்க்குந்தோறும் நாம் கடவுளை எதிர்க்கிறோம் என்பதை நினைவுகூர்ந்துகொள்வது மிகவும் இலாபகரமானது. திருச்சபை யதிகாரிகள் இப்படிச் செய்யலாமா? அப்படிச்செய்யலாமா? என்று கேள்விகள் புறப்படுகிறது. அவர்கள் இப்படியோ அப்படியோ செய்யுந் தவறுதலான காரியங்களுக்கு நம்மிடமிருந்து கடவுள் கணக்குக் கேட்கப்போகிறாரா? பரிச்சேதமில்லையே. அப்படியானால் அது விஷயங்களில் நாம் கலந்துகொள்ளுவது முற்றிலும் அனாவசியமன்றோ? கணக்குக் கொடுக்கவேண்டியவர்கள் அவர்களாயிருந்தாலும், தற்போது கஷ்டப்படவேண்டியவர்கள் நாமாகவல்லோ விருக்கிறோம் என்பதாகப் பதிலளிக்கப் பார்ப்பார்களாக்கும். இவர்கள் சொல்லுவது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதாகவன்றோ விருக்கின்றது. ஏனெனில், இவ்வுலகத்தில் உண்டான கஷ்டத்தை நீக்குவதற்கென்று மறுவுலகத்தில் நித்திய கஷ்டம் அனுபவிக்கத் தங்களை ஆளாக்கிக்கொள்கிறார்கள். இது புத்திமான்கள் செய்யத்தக்க செயலாகுமோ? இவ்வுலகத்தில் நாம் சர்வேஸ்பரனுக்கென்று செய்கின்ற செயல் ஒவ்வொன்றுக்கும் பரலோகத்தில் பாக்கியத்தையும் பேறுபலன்களையும் அடைவோமென்பது உறுதியான ஓர் விஷயம். ஆதலால் சர்வேஸ்பரனுக்கென்று நமக்கு வருகின்ற கஷ்ட நஷ்டங்களை ஏன் நாம் சகிக்கப்படாது? அத்தகைய நற்குணம் நம்மிடத்தில் இன்னும் ஏற்படாமலிருப்பது மிக்க விசனகரமான காரியம். ஆனால், பெரும்பாலும் குற்றஞ் சாட்டப்படுகிறபடி

திருச்சபை அதிகாரிகள் அத்தனை தூரம் தவறுகிருர்கள் என்பது அபத்தமான அவதூறேயன்றிப் பிறிதெதுவுமல்லவென்பதை நடுவுநிலைமை குன்ருது விசாரிக்கப் புகும் ஒவ்வொருவருக்கும் நன்ருய்ப் புலப்படும். ஒவ்வொருவர் கொண்டுவரும் புகாரும் ஆவலாதியும், அவரவர்களின் மனம்போன போக்கெல்லாம் போவதற்குத் திருச்சபை யதிகாரிகள் இடங்கொடாத காரணத்தையே அஸ்திவாரமாகக்கொண்டிருப்பதை நாம் நன்ருய்ப் பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட தாறுண்மைக்காரரின் பேச்சையும் பிதற்றுதலையும் நம்பிப் பொது ஜனங்கள் பெரும்பாலும் மோசம்போகிருர்கள். இவர்களுடைய வலைகளில் சிக்கி நாம் மோசம்போகாதபடி வெகு ஜாக்கிரதையாக இருக்கவேணும். நாம் ஜாக்கிரதையாக இராவிடில் நம்மையும் வேதவிரோதிகளாகவும் தேவதுரோகிகளாகவும் செய்து திருச்சபை யதிகாரிகளுடைய சாபத்திற்கும், தேவ கோபாக்கினைக்கும் ஆளாக்கிவிடுவார்கள். ஆதலால் நாம் எக்காலத்திலும் எக்காரணத்தையிட்டும் திருச்சபை யதிகாரிகளை எதிர்க்காமலும், எதிர்ப்பவர்களோடு சேராமலும், உதவிபுரியாமலும், திருச்சபை அதிகாரிகளுக்கு எப்பொழுதும் அடங்கி நடப்பதுவே நமது மீதில் சார்ந்த கடமையென்பதை நாம் மறவாமல் இருக்கவேண்டுமென்பதே எமது தாழ்மையான விண்ணப்பம்.

A. மாசில்லாமணி பிள்ளை,
29—9—14. தூத்துக்குடி.

---

CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்

### 10-ம் பாடம்.

**சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவிகரியாதிருப்பாயாக.**

(முன் தொடர்ச்சி.)

---

**5. குருவானவரும் காவலான சம்மனசும்.**—அர்ச். பிரான்சீஸ் சலேசியுஸ் ஒருநாள் ஒரு புண்யவாளருக்கு குருப்பட்டங் கொடுத்தார். சகலமும் முடிந்தபின் புதிதாய் பட்டம்பெற்ற குருவானவர் கோவிலை விட்டு வெளியே போகுஞ்சமயத்தில் கோவில் வாசற்படியில் சற்றுநேரம் நின்று பிறகு வெளிப்பட்டதைப் பற்றி ஷை மேற்றிராணியார் அவரை வினவினதற்கு அக்குருவானவர் மறுமொழியாக "சர்வேசுரனுடைய விசேஷ கிருபையால் என் காவலான சம்மனசானவரை அடிக்கடி தரிசிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். நான் குருப்பட்டம் பெறுவதற்கு முன் சம்மனசானவர் என் வலது பக்கத்தில் இருந்து என் முன் நடந்து போவார். இன்றையத்தினமோ எனது இடதுபக்கத்தில் இருந்து எனக்குப் பின்ருல் நடந்துவரத் துவக்கியிருக்கிருர். இதைப் பற்றியே நான் வாசற்படியில் சற்று தாமதிக்க வேண்டியதாயிற்று" என்ருர். "ஒரு குருவானவருக்கும் சம்மனசானவருக்கும் எதிராகப் போக நேரிடுமாகில், முந்த முந்த குருவானவருக்கு முழந்தாற்படியிட்டு வணக்கஞ் செய்து, பிறகு சம்மனசானவருக்கு வணக்கஞ்செய்வேன்" என்று அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ் சொல்லியிருக்கிருர்.

(அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம்.)

---

### 11-ம் பாடம்.

### தேவதூஷணம்

சர்வேசுரனை யாவது, மோக்ஷ வாசிகளையாவது வேதத்தை அல்லது தேவத் திரவிய அனுமானம் முதலியவற்றை யாவது நிந்தித்து அவசங்கையாய்ப் பேசுவது தேவதூஷணமாகும். இது மகாப் பாதகமாகையால், இப்பேர்ப்பட்ட பாவத்தை சர்வேசுரன் பயங்கரமான விதமாய்த் தண்டிக்கிருர்.

**சுவாமியேது? பூதமேது?**—அநேகர் ஒரு வண்டியிலேறி பிரயாணஞ் செய்யும்போது தமாஷாய்ப்பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் சுவாமி ஏது? பூதம் ஏது? என்று சரமாய்ச் சொல்லவே, அந்த வண்டியிலிருந்தவர்களில் பெரும்பாலோர் தெய்வ பயமற்றவர்களானதால் கொல்லென்று சிரிக்கத் தொடங்கிஞர்கள். வண்டி மூலையிலிருந்த வேலைக்காரன் ஒருவன் மாத்திரஞ் சிரியாமல் கோபமுகத்துடன் அந்தச் சண்டாளனை வெறித்துப் பார்த்தான். இதைக்கண்ட தேவதுரோகி "என்ன அப்பா! நீ கடவுளை



நம்புகிருயோ?" என்றதின்மேல், "சர்வேசுரன் இருக்கிருரென்று நான் நம்புகிறதுடன், அவருக்கு பயந்தும் நடந்து வருகிறேன். தேவனைத் தூஷணிப்பவர்களுக்கு உண்டாகும் பயங்கரத்துக்குரிய தண்டனையைக்குறித்தும் நடுங்குகிறேன்" என்ருன். இதைக் கேட்ட அந்த தேவதூஷணனும் மற்றவர்களும் வெட்கி அவர்கள் துவக்கின துற்சம்பாஷணையை நிறுத்திவிட்டார்கள். (Chisholm)

**2. சர்வேசுரனோடு சபதங்கூறின சண்டாளன்.**—பிரான்சில் குழப்பமுண்டான காலத்தில் துர்ச்சனரானக் கலகக்காரர் கணக்கற்ற பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்டு வந்தார்கள். இப்பேர்ப்பட்ட சில துர்மார்க்கர் சம்பாஷித்துக்கொண்டு இருக்குங்காலத்தில், அவர்களுக்குள் மகா துஷ்டனை ஒருவன் "மெய்யாகவே சர்வேசுரன் இருந்தால் தமது இடியால் என்னைக் கொல்லட்டும் பார்க்கலாம்" என்று சபதங் கூறினதைக் கேட்ட அவனுடைய தோழர் சிரித்து மகிழ்ந்தார்கள். இது நடந்த சிறிது காலத்துக்குப்பின் இந்தத் தேவதூஷணன் எதிர்கக்ஷிக்காரரால் பிடிபட்டுக் கொலைகளைத்துக்குக் கூட்டிக்கொண்டுப் போகப்படுவதைப் பார்த்தவர்கள் "இந்தச்சண்டாளன் தான் கடவுளில்லையென்று பிதற்றினன். அவன் ஆசித்தபடி தேவகோப இடி அவன்மேல் விழுந்தது" என்று சொன்னர்கள். (Hausfreund.)

**3. செபத்தால் பிரயோசனம் என்ன?**—இரு சிப்பாய்கள் ரஜா பெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்குப் பயணமாய்ப் போகும் வேளையில் சடுதியில் ஆகாயம் கருத்து பயங்கரத்துக்குரிய இடி முழக்கத்துடன் பெருங்காற்று வீசினது. இருவருந் துரிதமாய் நடந்து போகும்பொழுது வழியில் ஒரு இடைப்பையன் முழங்காலிலிருந்து தன்னையும் தன் ஆட்டுமந்தையையும் இப்பெரும் ஆபத்தினின்று காப்பாற்றும்படி சர்வேசுரனை நோக்கி உருக்கமாய் வேண்டுவதைக் கண்ட சிப்பாய்கள் "அடே பைத்தியக்காரப் பையா என்ன செய்கிருய்? மந்திரத்தால் மாங்காய் விழுமா? செபத்தால் பிரயோசனம் என்ன? தொப்பியைத் தலையில் போட்டுக்கொண்டு மந்தையுடன் சவாரிசெய்" என்று சொல்லி பத்து அடிதூரம்போகவே, தேவதூஷணஞ் சொன்னவன்மேல் இடிவிழுந்து அவன் அங்கேயே மாண்டான். மற்றவன் மூர்ச்சை தப்பிகீழே விழுந்து வெகுநேரத்துக்குப்பின் தெளிவு உண்டாகி, எழுந்திருந்து தேவநீதியின் தண்டனையை அறிந்து மனந்திரும்பி அதுமுதல் சன்மார்க்கனாய் நடந்துவந்தான். (Chimani)

**4. தேவ தூஷணனான தளக்கர்த்தன்.**—சீரியா தேசத்து அரசன் தன் தளகர்த்தனான நீகோனூர் என்பவனை யூதேய தேசத்தின்மேல் பெரும் படையெடுத்துப் போகும்படி கற்பித்தான். இந்தத் தளக்கர்த்தன் யூதருடையவும் அவர்கள் வேதத்தினுடையவும் பெருஞ் சத்துரு. இவன் யூதேயா தேசம் போய்ச் சேர்ந்தவுடனே யூதரை நிந்தித்து அவர்களுடைய சத்தியக்கடவுளை இகழ்ந்து தேவதூஷணங்களைக் கக்கினதுடன் தேவாலயத்தை அனுச்சாரஞ்செய்து அதை அழித்துப்போட முஸ்திப்பாயிருக்குஞ் சமயத்தில் குருப்பிரசாதிகள் பீடத்துக்குமுன் சாஷ்டாங்கமாக விழுந்து இந்தத் தேவதுரோகியின் கையினின்று தங்களையும் தங்கள் தேவாலயத்தையும் காப்பாற்றும்படி மகா உருக்கத்துடன் மன்ருடினர்கள். இதற்குப்பின் சீரியருடைய பெரும்படை அணிவகுத்து யூதரைத் தாக்கினபோது நீகோனூர் தளக்கர்த்தன் தேவகோபத்தால் கொலையுண்ணப்படவே, அவனுடைய படை தோர்வை அடைந்து ஓட்டம் பிடித்தது.

(வேதாகமம்.)

**5. சாராயப்புட்டிக்கு பந்தயம் கூறினவன்.**—பிரான்சிலுள்ள ஓர் ஊரில் தெய்வ பயமற்ற அனேக வாலர் கூட்டமாய்க் கூடிக்கொண்டு வேஷாக்காய்ப் பேசி சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் வேதத்துக்கு விரோதமான புஸ்தகங்களையும் கெட்ட கதைப் புஸ்தகங்களையும் வாசித்துவந்ததினுல், தெய்வ பயமின்றி மிருகத்தைப்போல் நடந்துவந்தார்கள். இவர்கள் ஒருநாள் வேதத்தைப் பழித்து கேலி பரியாசமாய்ப் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் "நான் கோவிலுக்குப்போய் பாவசங்கீர்த்தனஞ்செய்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று அக்கூட்டத்தில்

ஒருவன் சொன்னதைக்கேட்டவர்கள் சிரித்து மகிழ்ந்து "இங்கே எத்தனைபேர் இருக்கிறோமோ அத்தனை புட்டி சாராயம் கொடுப்போம்" என்றார்கள். இதற்கு அந்தத் துஷ்டன் சம்மதித்து மறுநாள் சாயந்திரம் கோவிலுக்குப் புறப்பட்டுப்போய் அங்கு பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருந்த குருக்களில் ஒருவரிடம் இவ்வாறு சொல்வான்: சுவாமி நான் உண்மையான பாவசங்கீர்த்தனஞ் செய்யுங் கருத்துடன் இங்கு வரவில்லை: நான் போட்ட பந்தயத்தைக் கெலிக்கும்படியாகவே இங்கு வந்தேன். நான் இன்னின்ன பாவத்தைச் செய்திருக்கிறேன். ஆனால் அதைப்பற்றி அற்ப சிந்தனையும் எனக்கு இல்லை. இந்தப் பாவத்தைச்செய்தேன். அதற்கும் நான் விசனப்படுகிறதில்லை. இன்னும் இந்தப் பாவத்தையுங்கட்டிக்கொண்டேன் அதற்காகவும் எனக்கு யாதொரு விசனமில்லை: என்று சொல்லி பாவசங்கீர்த்தனத்தை முடித்தான். அப்போது குருவானவர் அவனைப்பார்த்து "நல்லது உன் பந்தயத்தைக் கெலித்தாய். நீ இப்போது பாவசங்கீர்த்தனஞ் செய்தபடியால் அதற்கான அபராதம் கொடுக்கிறோம். கவனமாய்க்கேள்: நான் ஒருநாள் சாவேன். அதற்காக நான் விசனப்படமாட்டேன். செத்த உடனே தீர்வை நடக்கும். அதைப்பற்றி எனக்கு அற்ப சிந்தனையும் இல்லை. பாவிகள் நரகத்துக்குப் போவார்கள். அதனால் எனக்கு கவையில்லை." என்னும் இந்த வார்த்தைகளை மூன்று நாளைக்கு ஒவ்வொரு நாளைக்கும் மூன்றுதடவையாக காலை மத்தியானம் இராத்திரி வேளைகளில் சொல்லிவரும்படி கற்பித்தார்.

இந்த வாலிபன் கோவிலைவிட்டு நேராய் தன் தோழர் இருந்த வீட்டுக்குப் போய் "பந்தயம் கெலித்தேன். சாராயப் புட்டி எங்கே?" என்றுகேட்டுப் பாவசங்கீர்த்தன சமயத்தில் தனக்கும் குருவானவருக்கு நடந்த சம்பாஷணையைப்பற்றி விவரித்தபோது எல்லோருந் தமாஷாய்ச் சிரித்துக்கொண்டு நீ பாவசங்கீர்த்தன அபராதத்தைத் தீர்த்தபின் மாத்திரம் புட்டியைப் பெற்றுக் கொள்வாயென்றார்கள். இவன் முதல்நாள் தன் அபராதத்தைத் தீர்த்தபோது யாதொரு கவனமின்றி குருவானவர் சொன்ன வார்த்தைகளை உச்சரித்தான். மறுநாளோ அந்த வார்த்தைகளைக் கவனமாய் உச்சரித்தபடியினால் மரணத்தையும் தீர்வையையும் நரகத்தையும்பற்றி யோசனைகொண்டு பயப்படலானான். ஆகையால் முன் பாவசங்கீர்த்தனங் கொடுத்தசுவாமியாரை அண்டிப் போய் தன் சரித்திரத்தை அவருக்கு அறிக்கையிட்டு பிறகு நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்து துஷ்டருடைய சகவாசத்தை விட்டுவிட்டு முற்றும் நல்லகிறிஸ்துவனாய் நடக்கத் துவக்கினான். (Rodez.)

---

# GNANAMANI, III. PART.
# ஞானமணி 3-ம் பாகம்.
## 13-ம் அதிகாரம்.

---

### அவன் ஜோசியனோ? போலிசானோ?

தேவதாஸ் நாயகர் தமது ஜனங்களையும் ஊரையும் விட்டு மதராசுக்குப் புறப்படுவதற்கு ஐந்து நாளைக்குமுன் சைதாப்பேட்டையிலிருந்த போலீஸ் இனிஸ்பெக்டர் வைத்தியநாத நாயகர் தமது மகனுக்குப் பெண் பேசும்படி அவ்வூருக்கு வந்திருந்தார்.

அவ்வூரில் பெரிய குடும்பஸ்தனும், நிலபலத்திலும், தவசதானியத்திலும், பணங் காசிலும் பெருத்த ஆசாமியுமானவன் குமாரத்தி ருக்மணியென்பவளைத் தன் குமாரன் மணவாளனுக்குக் கொடுக்கும்படி கேட்டபோது, பெண்ணின் பெற்றோர் நெருங்கின பந்துக்கள் வரும் வரையில் உறுதிமொழி கொடாதபடியால், இன்ஸ்பெக்டர் அந்த ஊரில் சிலநாள் தங்கவேண்டியதாயிற்று.

இன்ஸ்பெக்டர் மகன் மணவாளன் போர்டு ஆபீசில் 18-ரூபா உத்தியோகத்தில் அமர்ந்திருந்தான். சில மாசங்களுக்கு முன் அவன் சைக்கல் சவாரி செய்யும்போது ஒரு பள்ளத்தில் விழுந்து கால் முறிந்து கண்ணில் பட்ட காயத்தால் முக்கால் பார்வை யிழந்து அந்தமின்றி விகார தோற்றமும், 4½-அடி உயரமுள்ள குள்ளனுமா யிருந்தபடியால் அவனுக்கு எவரும் பெண்கொடுக்கச் சம்மதிக்கவில்லை. பையனுக்கு சம்பவித்த விபத்து இவ்வளவு தூரத்திலுள்ள ஊராருக்குத் தெரியாதென்று எண்ணின இன்ஸ்பெக்டர், இந்தப் பெண் வெகுதூர பந்துவாயிருந்தும், பெண்ணின் ரூபலாவண்யத்தைப் பற்றியும் அவளுடைய பெற்றோரின் நல்ல ஸ்திதியைப்பற்றியும் இன்ஸ்பெக்டர் இவர்களுடன் சம்பந்தஞ் செய்யக் கருத்துகொண்டார். மேலும் தன் குமாரன் மூன்று பாஷைகளைக் கற்று, தற்போது மதராஸ் போர்டு ஆபீசில் உத்தியோகமா யிருப்பதைப்பற்றி யிந்தப் பெண் அற்பத் தடையின்றித் தன் மகனுக்கு வாழ்க்கைப்படுவாள் என்று உறுதியாய் நினைத்திருந்தார். பெண்ணின் தாய் தகப்பனும் இது நல்ல தருணம்; இது தப்பினால் இதிலும் சிறந்த மருவராதென்று நினைத்து, தங்கள் குமாரத்தியை இன்ஸ்பெக்டர் குமாரனுக்கு விவாகஞ் செய்துகொடுக்க மகா ஆவல் கொண்டிருந்தார்கள்.

இதைப்பற்றி கேள்விப்பட்ட தேவதாஸ் நாயகர் அந்தப் பெண்ணைத் தான் விவாகஞ் செய்யக் கருத்து கொண்டவராய் ருக்மணியின் தாய் தகப்பனிடம் தன் ஸ்நேகிதரையனுப்பி தன் கருத்தை யவர்களுக்கு வெளிப்படுத்தும்படி சொன்னார். இதைப்பற்றி கேள்விப்பட்ட பெண்ணின் பெற்றோருடைய மனம் மாறுபட்டது.

பெண்ணின் நெருங்கின பந்துக்கள் ஊர் வந்துசேரவே, கலியாண விஷயத்தைப்பற்றி பேசினபோது, தன் பெற்றோரால் இரகசியமாய்ப் போதிக்கப்பட்ட பெண்ணானவள், தான் தன் சொந்த ஊரில் யாருக்காகிலும் வாழ்க்கைப் படுவேனே ஒழிய அசலூருக்குப் போகமாட்டேனென்று சண்டித்தனஞ்செய்ய ஆரம்பித்தாள். பெண்ணின் பந்துக்களும், சேர்ந்தார் சினேகிதரும் எவ்வளவு புத்திமதிசொல்லியும் பெண் சம்மதிக்கவில்லை.

ஒருநாள் பந்துக்கள் எல்லோருங்கூடியிருக்கும்போது இன்ஸ்பெக்டர் தாம் பெண்ணுக்கென்று தம்முடன் கொண்டுவந்திருந்த கற்கள் இழைக்கப்பட்ட விலை உயர்ந்த நகைகளை யெடுத்துக் காட்டினார். அதைக் கண்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்போது ருக்மணியை அங்கு வரவழைத்து நகையைக் காட்டினபோது அந்த நகைகள் எனக்கு வேண்டியதில்லை, இந்த ஊரைவிட்டு வெளியே நான் போகவேமாட்டேன் என்று சொல்லி வீட்டுக்குள் நுழைந்து கொண்டாள்.

தேவதாஸ் நாயகர் அந்தப் பெண்ணை விவாகஞ் செய்ய விரும்பினதாகவும், அந்தப் பெண்ணும் அவளுடைய தாய் தகப்பன்மாரும் அதற்குச் சம்மதித்து இருப்பதாகவும் அறிந்த இன்ஸ்பெக்டர், மகா கோபங்கொண்டவராய், தமது பந்துக்கள் கூடியிருக்கும்போது, பெண்ணின் பெற்றோரை நோக்கி: நீங்கள் குல அபிமானமும் மத அபிமானமும் கெட்டவர்கள் என்று நான் முன்னதாக அறிந்திருந்தால் இங்கு வந்திருக்கமாட்டேன். மேலும் உங்கள் பெண் கிறிஸ்து வேதத்தில் சேராவிட்டால் அந்தக் கூத்தாடி அவளைக் கலியாணஞ் செய்து கொள்ளமாட்டான். இந்து மதத்தில் பிறந்து வளர்ந்து, குலதேவர்களை வணங்கி ஆராதித்து புதுவேதத்தில் விழுவது உங்களுக்குத் தர்மமா?

என் மகன் மணவாளனோ மதராசில் போர்டாபீசில் உத்தியோகஞ் செய்கிறான். சில வருஷத்திற்குள் தாசில்தார், டிப்டிகலெக்டர் உத்தியோகத்துக்குப் போகப்போகிறான். இதிலும் உயர்ந்த உத்தியோகம் உண்டோ? இப்பேர்ப்பட்ட தருணத்தை யிழப்பது என்ன முட்டாள் தனம்! பட்டணவாசிகளானால் தெரியும். ஆனால் நாட்டுப்புறத்தாருக்கு இப்பேர்ப்பட்ட அருமை தெருயுமா?

இது எப்பேர்ப்பட்ட மதிகேடு! நமது பூர்வமும் சிறந்ததுமான மதத்தை விட்டுவிட்டு புது மதத்தில் குதிக்கும் கர்மத் துரோகம் காசிக்குப்போனாலும் விமோசனமாகுமோ? அடடா! மூப்பத்து முக்கோடி தேவர்களும் தேவதைகளும் இதைப்பார்த்துச் சும்மா இருப்பார்களா?

பாருங்கள், அந்தப் பெண் என் மகனைக் கலியாணம் செய்துகொண்டால் சரி, இல்லாவிட்டால் அவள் வாயிலும் மண், அவளைக் கட்டிக்கொள்ளுகிறவன் வாயிலும் மண். இது நிசம். நானோ போலீஸ் உத்தியோகஸ்தன். எனக்கோ மனுஷாளுடைய குறைகுணங்களையும் அவர்கள் மனதையும் அறிய சக்தியுண்டு. இவர்கள் இருவருடைய முகத்தைப்பார்த்து அதிலுள்ளதையும் அவர் மனதையும் வாசித்து அறிந்துகொண்டேன். அவர்களுக்கு விவாகமான கொஞ்சகாலத்துக்குள்................பார்க்கப் போகிறீர்கள் என்று சொல்லி மௌனமாயிருந்தார். இவர்கள் நாட்டுப்புறத்தாரா யிருப்பதைப்

பற்றி யாரும் தமக்கு எதிரிடை செய்யமாட்டார்கள் என்கிற கருத்துடன் இவ்வளவு தாட்டிய தைரியத்துடன் இன்ஸ்பெக்டர் பேசினார்.

உடனே, அங்கிருந்த கிழவி ஒருத்தி, "இது என்ன, சிரிப்பாயிருக்கிறதே! யாராகிலும் பெண்கேட்க வரும்போது, பெண்காரர் கொடுத்தால் மகராசராய்க் கலியாணஞ் செய்துகொள்ளட்டும். கொடுக்க சம்மதமில்லாவிட்டால், அவன் வாயிலே மண்ணு இவள் வாயிலே மண்ணு என்று சொல்வதை யெந்த ஊரிலும் கேட்டதில்லை. இவர் ஒருத்தர்தான் அருமையாய்ப் பெண்தேட வந்தாராக்கும். எனக்கு 80-பிராயத்துக்கு அதிகமாகிறது. எத்தனையோ கலியாணங்களைக் குதிர்ப்படுத்தினேன். எத்தனையோ கலியாணங்களைச் செய்வித்தேன்! ஆனால் இப்பேர்ப்பட்ட கண்ராவியை நான் பார்க்கவே இல்லை. சுபகாரியத்துக்காக வந்து கர்மத்தை நடத்துவது நன்றா?" என்கவே.

பெண்ணின் பெரியதாய் இவ்வாறு சொல்வாள்: நாங்கள் எங்கள் பெண்ணை யாருக்காவது கொடுக்கிறோம்; அவள் யாரோடு வாழவேண்டுமென்று அவளுடைய தலையெழுத்தோ அவர்களோடுதானே வாழவேணும்? அப்படி யிருக்க, ஏன் ஒருவர் ஒருவரை சபிப்பது? அந்தப் பெண் எந்த வேதத்துக்குப் போனாலும் யாருக்கு என்ன? நாளைக்கு நானே கிறிஸ்து வேதத்தில் போய்ச் சேர்ந்தால் என்னை யார், என்ன செய்யக்கூடும்? கலியாணத்துக்குச் சம்மதமில்லாவிட்டால், அவன் வாயிலே மண், இவன் வாயிலே மண் என்கலாமா? என்கவே, கூட்டத்திலும், இன்ஸ்பெக்டர் பேசின வார்த்தைகளைப்பற்றி வெறுப்பு கொண்டவர்களாய் வாய்க்குள் முணங்கிக்கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கோபத்தைத் தணித்து, தொனியைத் தாழ்த்தி பெண்ணின் பெற்றோரை நோக்கி: என் மகனுக்குப் பெண் இல்லையென்று உங்களிடம் வந்தவனல்ல நான். ஆனால் நமது வெகுகால சம்பந்தம் அற்றுப்போகாமல் எப்போதைக்கும் நீடிக்கும்படிக்கு உங்களுடன் உறவாட வந்தேனென்று அறிந்து கொள்ளுங்கள். சர்க்கார் உத்தியோகஸ்தரான எத்தனை பேர் தங்கள் குமாரத்திகளை யென் குமாரனுக்குக்கொடுக்க ஆசைகொண்டு, வலிய என்னைப் பலதடவை கேட்டிருக்கிறார்கள். ஆனால் உங்களைத் தள்ளிவிட எனக்கு மனமின்றி அவர்களுடைய கருத்துக்கு நான் சம்மதிக்கவில்லை. என் குமாரனுக்கு உங்கள் பெண்ணைக்கொடுக்க இஷ்டமிருந்தால் கொடுங்கள். இப்போதே தாம்பூலம் மாற்றிக்கொள்ளலாம். இஷ்டமில்லாவிட்டால், உங்கள் பேரில் எனக்கு ஒரு விரோதமுமில்லை. நாளைக்கே நான் இவ்வூரைவிட்டு புறப்பட்டுப் போகிறேன் என்று எழுந்து, ஆனால்..........

......எவன் இந்தப் பெண்ணைக் கட்டிக்கொள்வானோ அவன் ஒரு மாசகால முதலாய் அவளோடு வாழமாட்டான். தன் சட்டையில் அணிந்திருந்த ஒரு மெடலைக் கையில் பிடித்துக்கொண்டு, பாருங்கள், இது நமது மாட்சிமை தங்கிய இராணியவர்கள் உத்தரவின் மேல் என் நல்ல சர்விசைப்பற்றியும் கெட்டிக்காரத்தனத்தைப்பற்றியும் நமது கவர்னர் கையால் எனக்குக் கொடுக்கப்பட்டது. இந்த மெடலை கையில் பிடித்துக்கொண்டு, நான் சொல்லுகிற கடைசி வார்த்தையைக் கேளுங்கள். என் மகனுக்குக் குறிக்கப்பட்ட ருக்மணியின் கழுத்தில் தாலி கட்டுகிறவன் ஒரு வருஷத்துக்குள் வைகுண்டம் சேருவான். இதை நீங்களே கண்ணாரப் பார்க்கப்போகிறீர்கள், என்று தன் மீசையை முறிக்கிக்கொண்டு, தன் சிநேகிதரான இரண்டொரு மனுஷாளுடன் வெளியே புறப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் வெளியே போகவே, அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் அவரைத் தூஷணிக்கத் தொடங்கினார்கள். "பொட்டைக் கண்ணனும் நொண்டியு மானவனுக்கு என் பெண்ணைக் கட்டிக்கொடுக்க எனக்கென்ன கிராச்சாரமா?" என்று பெண்ணின் தாயார் சொன்னாள். அங்கிருந்தவர்களில் "ஒருவன் 2, 3, வருஷத்துக்கு முன் பையன் நன்றாயிருந்தானே! எத்தனை காலமாய் அவன் குருடனும் முடவனுமா யிருக்கிறான்?" என்கவே, வேறொருவன் இவ்வாறு மொழிவான்: "ஒன்பது மாதத்துக்குமுன் பைசைகில் வண்டி ஏறி சவாரி செய்யும்போது ஒரு பள்ளத்தில் விழுந்து கால் முறிந்து, கண்ணில்பட்ட காயத்தால் பார்வையிழந்து சங்கடப்படுகிறான். இன்னும் ரஜாமேல் இருக்கிறான். ஆனால் மறுபடியும் அவனை முன் வேலையில் சேர்த்துக்கொள்வார்களோ என்னவோ சந்தேகம்" என்றான்.

"ஓகோ! அதைப்பற்றித்தான் இவ்வளவு தூரம் பெண்கேட்கவந்தார் போலும். சென்னைப் பட்டணத்தில் இல்லாத பெண்களா நமது ஊரில் அகப்படும்? போலீஸ்காரனுடைய புத்தியை விடவில்லையே! குருடனும் நொண்டியுமானவன்தானா சீக்கிரத்தில் தாசிலும் டிப்டிகலெக்டருமாவான்?" என்று இன்னொருவன் சொன்னான். இவ்வாறு சற்று நேரங்கழிந்த பின், அங்கு கூடியிருந்த கூட்டம் கொஞ்சங் கொஞ்சமாய்க் கலைந்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.



பெண் வீட்டில் நடந்த சங்கதியைப்பற்றி கேள்விப்பட்ட தேவதாஸ்நாயகருக்கு அதிக ஆக்ரோஷம் பொங்கி, "என்னைக் கூத்தாடி யென்றானல்லோ அந்தப்போலீஸ்காரன்! மேலும் அந்தப் பெண்ணைத் தன் மகன் தவிர, அவளைக் கட்டிக்கொள்ளுகிற வேறு எவனும் மறுவருஷத்துக்குள் வைகுண்டம் சேருவதாக சொன்னானல்லோ அந்தப் படுக்காளிப்பயல்! அவன் ஜோசியனோ? அல்லது போலீசானோ? பார்க்கலா" மென்று எழுந்து இன்ஸ்பெக்டர் இருக்கும் வீட்டுக்குப் போவதைக் கண்ட அவருடைய ஸ்நேகிதர் தேவதாஸ் நாயகருக்கு நல்ல வார்த்தை சொல்லி அவர் கோபத்தைத் தணித்து, "நாங்கள் போய் அந்த மனிதனைக் கேட்டுவருகிறோம்" என்று 10-பேர்வரையில் புறப்பட்டுப் போனார்கள்.

தேவதாஸ் நாயகரைக் கேவலமாய்ப் பேசினதற்குக் காரண மென்னவென்று போனவர்கள் இன்ஸ்பெக்டரைக் கேட்டபோது, "அவரை யார் கேவலமாய்ப் பேசினது? அவரை நான் அப்படிப் பேச எனக்குக் கிராச்சாரமா? உங்களுக்கு இதைச் சொன்னவர்களை நாளைக்கு இங்கே கொண்டுவாருங்கள் பார்க்கலாம்" என்று வெகு தாட்டியாய்ப் பேசுவதைக் கேட்ட பத்துப் பேரும், "இன்னொரு சங்கதி; உமது குமாரன் தவிர, வேறே யாராவது அந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்தால் ஒரு வருஷத்துக்குள் அந்த மாப்பிள்ளை வைகுண்டம் போய்ச் சேருவான் என்றீராம், அது வாஸ்தவந்தானா?" என்றதற்கு இன்ஸ்பெக்டர் சொல்லுவார்: இந்தவூருக்கு நான் வந்ததற்கு இது லாபமா? பரவாயில்லை. இவ்வூரார் இப்பேர்ப்பட்டவர்களென்று அறிந்திருந்தால் இங்கு காலடியே வைத்திருக்கமாட்டேன். யார் செய்த கட்டுக்கதை யிது? சம்பந்தஞ் செய்யவந்த பெரிய மனுஷனை வெகு கவரதையுடன் அனுப்புகிறார்களே இந்த ஊரார்? அடமா, ராமா! இதென்ன சிறுபிள்ளைகள் விளையாட்டா யிருக்கிறதே! கடந்த 20-வருஷ காலமாய் நமது மாட்சிமை தங்கிய மகாராணியின் சர்வீஸில் இருக்கிறேன். இப்பேர்ப்பட்ட அகடவிகடத்தைப்பற்றி கேள்விப்படவில்லை யென்று போலீஸ் முருக்குடன் தாட்டியாய்ப் பேசுவதைக் கண்ட அந்தப் பத்துப்பேரும் பிரமித்து ஒன்றும் பேசாமல் அவ்விடத்தைவிட்டு தேவதாஸ் நாயகரிடம் சென்று இன்ஸ்பெக்டர் பேசின பேச்சைக் கேட்டால் மகாயோக்கியராகக் காணப்படுகிறார் என்றார்கள்.

அப்போது தேவதாஸ் நாயகர்: ஐயமாரே, போலீசாரை நம்பாதேயுங்கள். நமக்கு ஒரு நாக்கு, இரண்டு கண். போலீசாருக்கு இரண்டு நாக்கு, மூன்று கண். போலீசாருடைய நடத்தையை அறிந்தவர்கள்மாத்திரம் இதன் அருத்தத்தை அறிவார்கள். அந்த மனிதனை நம்பவேண்டாம். இதோ! இங்கே இருக்கிற இந்த மூன்று பேரையும் கேளுங்கள். இவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள்தான் நல்லது காலைக் காலை ஊர் மணியக்காரர் முன்னிலையில் இதைப் பற்றி அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கேட்போம். என்ன சொல்லுவாரோ பார்க்கலாம் என்று பேசினபின் போசனத்திற்கு உட்கார்ந்தார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே போலீஸ் இன்ஸ்பெக்டரான வைத்தியநாதநாயகர் தமது ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டதைப்பற்றி, அவர்மேல் கூறப்பட்ட குற்றம் பஞ்சாயத்துக்கு முன் வரவில்லை.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### குடி, கடன், சேட்டு.

1. சுத்த ஜலமே சிறந்த பானமென்றறிந்திருப்பது ஒழுங்கு

2. குடி குடியைக் கெடுக்குமென்றறிந்திருப்பது ஒழுங்கு.

3. குடியாததினால் ஒரு தீங்கு முண்டாகாதென்றறிந்திருப்பது ஒழுங்கு.

4. குடி முதலில் தாட்சண்யக் குடியாய்த் துவக்கி, ஆசைக் குடியாய் வளர்ந்து, அவசரக்குடியாய் முடிந்து, ஒருவனை மா

னங்கெட்டவனுக்குமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

5. உலகத்திலிருக்கும் நிர்ப்பாக்கியங்களுக் குண்டான பல காரணங்களுள் குடி ஒரு முதன்மையான காரணமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

6. மொத்தத்தில் ஏழைகளாயும் கேவலமானவர்களாயு மிருக்கும் கிறிஸ்துவர்கள், குடிப்பழக்கத்தைக் கைபாடுவதினால் அதிக ஏழைகளாயும் அதிக கேவலமானவர்களாயும் ஆகிறார்களென் றறிந்திருப்பது ஒழுங்கு.

7. குடியினால் அசௌக்கியமும் அஷ்ட தரித்திரமுமே யுண்டாகுமென் றறிந்திருப்பது ஒழுங்கு. (ஐயோ! நான் பரம ஏழை. கருமஞ்செய்ய என்றால் எப்படி இயலும்? பிள்ளைகளுக்குச் சம்பளங் கட்ட முடியுமா? இதை அதை எப்படிச் செய்யக் கூடும்? என்று நீலிகளைப்போல் பிரலாபிக்கும் குடியர்கள், குடிக்குத் தினம் தாங்கள் செலவிடும் தொகை யெவ்வள வென்பதைக் கவனியார்கள்.)

8. குடிவிஷயமாய்ச் சலோமோன் ஞானி சொல்வதையும், விவேகிகள் வரைந்திருப்பதையும் கவனிப்பது ஒழுங்கு.

(யார் வீட்டில் நிர்ப்பாக்கியம், யார் வீட்டில் துக்கம், யார் வீட்டில் சண்டை, யார் வீட்டில் மனதிற்கு அலுப்பைத்தரும் வீண் பேச்சுகள், யார் முகத்தில் காரணமில்லாத படுகாயங்கள், யார்கண்கள் சிவந்திருக்கும்? வெறிக்கக் குடிப்பவர்களுக்குத்தான். மேலும் குடிவெறியானது, புத்தியைக் கெடுத்து, ஞாபகசக்தியைப் பழுதாக்கி, தேகத்தைச் சுகீனப்படுத்தி அழகைக் குலைத்து, பலத்தைக் குறைத்து, இரத்தத்தை அசுத்தப்படுத்தி, ஈரலைப் பெருக்கச்செய்து, மூளையைப் பலவீனப்படுத்தி, மனிதர்களை நடைப் பிணங்களாக்கும். உள்ளிலும் புறத்திலும் சுகப்படுத்தக் கூடாத காயங்களை யுண்டாக்கும். புத்தியை வசப்படுத்தும் குடியானது ஆத்துமத்தைப் பறிக்கும் பிசாசு; பணப்பையை அபகரிக்கும் திருடன்; தாரித்திரனின் கூட்டாளி; மனைவியின் பிரலாபம்; மக்களின் வியாகுலம். குடியானது மனிதர்களை மிருகங்களாக்கும். குடியன் பிறருடைய சந்தோஷத்திற்காகக் குடித்து, இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் தன்னைப் பெருத்த நஷ்டத்திற்குட்படுத்திக் கொள்ளுகிறான்.)

9. மட்டோடு குடிப்பதைவிட முற்றிலும் குடியை விலக்குவது நல்லதென் றறிந்திருப்பது ஒழுங்கு.

10. தான் கற்றுக்கொண்ட அப்பியாசத்தினால், குடி தனக்கு அவசரமாகத் தோன்றுகிறதென் றறிந்திருப்பது ஒழுங்கு.

11. ஒவ்வொரு விசாரணையிலும் மதுவிலக்குச் சங்கங்கள் ஸ்தாபிப்பது ஒழுங்கு.

12. குடியின் கெடுதியைப்பற்றிப் போதிப்பதற்கு முன் தான் அதை விட்டிருப்பது ஒழுங்கு.

13. தன் நன்மாதிரிகையினால் அநேகரை அச்சபையில் சேர்ப்பது ஒழுங்கு.

14. தனக்கு அச்சபை அவசரமில்லாவிட்டாலும், தன் பலஹீனமுள்ள சகோதரனுக்கு நன்மாதிரிகை தரவாவது அதில் சேர்வது ஒழுங்கு.

15. குடியை விடுவதினால் துர்ப்பழக்கங்களும், துர்சிநேகங்களும், அநேகமாய் ஒழியுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

16. குடியைக் கையாடாதவர்களுக்குத் தைரியங் கொடுப்பது ஒழுங்கு.

17. படிப்பாளிகள் குடிவிஷயமாய்ப் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதும், துண்டு சீட்டுகள் அச்சடிப்பதும் ஒழுங்கு.

18. குடியை முற்றிலும் விடக்கூடாதவர்கள் அளவோடாவது அருந்தி வருவது ஒழுங்கு.

19. குடியினுண்டாகும் வீண் செலவைக் குறைத்து உத்தமர் மத்தியில் குடியிருப்பது ஒழுங்கு. (இது விருத்திக்கு வழி.)

20. குடிக்கிறவர்களை குடியாதவர்களை மதிக்கிறார்களென் றறிந்திருப்பது ஒழுங்கு.

21. கடனில்லாமல் வாழ்வது ஒழுங்கு.

22. கடன் முதலில் கொஞ்சங்கொஞ்சமாயிருந்து குப்பைப் போரைப்போல் குவிந்துவிடுமென் றறிந்திருப்பது ஒழுங்கு.



23. தான் கொடுக்கவேண்டிய கடன்களை யெல்லாம் விவரமாய் எழுதி ஒவ்வொன்றாய்த் தீர்த்துவிடுவது ஒழுங்கு.

கடனை நீக்க உதவியாயிருக்கும் விதிகள்:—(a) நாளைக்கென்று கொஞ்சம் சேர்த்துவைப்பது. (b) வரவுக்குத் தகுந்த செலவு செய்வது. (c) வரவு செலவு கணக்கு எழுதிவைப்பது. (d) ஒரே தீர்மானமாய்க் கடன் வாங்காதிருப்பது. (e) வீண் செலவை விலக்குவது. (f) யாருக்கும் ஜாமீனாய் இராதிருப்பது.

24. யாருக்கு என்ன கொடுப்பதானாலும் கையிலிருந்தால் கொடுப்பதும், என்ன வாங்குவதாயிருந்தாலும் கைமேல் துட்டு கொடுத்து வாங்குவதும் ஒழுங்கு.

(இப்படிச் செய்தால் எல்லாம் தன் தன் சக்திக்கேற்ற அளவு பிரமாணப்படி நடக்கும். கடனென்றால் கண்ட கண்ட பொருளுக்கெல்லாம் கைநேந்த நேரிடும்.)

25. யாருக்காவது கடன் கொடுப்பதைவிட கேட்ட தொகையில் சொற்பம் தருமமாய்க் கொடுத்து ஒழித்துவிடுவது ஒழுங்கு.

26. கடன் கொடுப்பதினால் பிறகு உண்டாவது மனவருத்தமென் றறிந்திருப்பது ஒழுங்கு.

27. கலியாணமுதலிய விஷய சம்பவங்களுக்குப் பணம் சேர்த்துவைத்து அளவுப்படி செலவுசெய்வது ஒழுங்கு.

28. விரலுக்குத்தக்க வீக்கம் என்றபடி ஒவ்வொருவனும் அவனவன் சக்திப்படி செலவுசெய்வது ஒழுங்கு

29. முன்னுக்கு இன்னின்ன செலவுகள் உண்டாகும் என்பதைக் கவனித்து, மாதாந்திர சம்பளத்தில் கொஞ்சமாவது மீத்துவைப்பது ஒழுங்கு. (பலதுளி பெருவெள்ளம்.)

30. ஒவ்வொருத்தரும் சேவிங்ஸ் பாங்கில் பணம் போடும் வழக்கம் ஏற்படுத்திக்கொள்வது ஒழுங்கு.

(போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கில் குறைந்தது 4-அணாகூட ஏற்றுக்கொள்ளுகிறார்கள். மனதிருந்தால் ஒரு மாசத்தில் அவ்வளவுகூட மீக்கமுடியாதா?)

31. பிரதிதினமும் வரவு செலவு கணக்குகளை யெழுதிவைப்பது ஒழுங்கு. (இதனால் உண்டாகும் பயன் மெத்த. வாஷிங்டன் என்னும் கமாண்டர் இன் சீப் ஆனவர் அமெரிக்க யுத்த காலத்தில் முதலாய் இப்படி யெழுதிவைக்கத் தப்பவில்லை.)

32. சக்தியுள்ளவர்கள் வருஷத்திற்கு வேண்டிய அளவு தானியதவசங்களை அவ்வவ்விளைவு காலத்தில் குறைந்த விலைக்கு வாங்கிப் பத்திரப்படுத்திக்கொள்வது ஒழுங்கு.

33. பத்து ரூபாய் சம்பளம் வாங்கி ரூபா 9–12–0 செலவு செய்து. 4 அணா ஆபத்துக் கென்று மீத்துவைக்கும் குடும்பம் கிரமமுள்ள குடும்பமென்றும், பத்து ரூபாய் சம்பளம் வாங்கி ரூபா 10–2–0 செலவு செய்யும் குடும்பம் கிரமமற்ற குடும்பமென்றும் அறிந்திருப்பது ஒழுங்கு.

"ஆன முதலில் அதிகம் செலவானால், மானமழிந்து மதிகெட்டுப்-போனதிசை, யெல்லார்க்குங் கள்ளனாய் எழுபிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லானாய் நாடு"

34. ஒரு மாசத்தில் சாராயம், சுருட்டு, புகையிலை, தாம்பூலம், மூக்குத்தூள் இவைகளுக்கு எவ்வளவு செலவாகிறதென்று கணக்கு செய்வது ஒழுங்கு.

35. பணத்தில் மாத்திரமல்ல, ஆனால் நேரத்தைக் கழிப்பதிலும், தேக பலத்தைச் செலவிடுவதிலும், உடுப்பு, சாமான் முதலியவைகளை உபயோகிப்பதிலும் செட்டுத்தனமா யிருப்பது ஒழுங்கு.

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### பழயகாயலும் திருச்சிறுப்பள்ளி மேற்றிராணியாரும்.

இளஞ் சூரியனின் தெளிந்த கிரணங்கள் உஷ்ணமின்றிக் கீழ்த்திசையில் தேஜோமயமாய்ப் பிரகாசித்தன. அக்காலையில் ஆலய மணிகளெல்லாம் டாம் டிமென அசைந்தொலிக்க அதிர்வெடி படீர் படீரென வெடிக்க இதைக்கேட்ட சிறுவர் முதல் விருத்தர்வரையும் வெகு பரபரப்புடன் கண் விழித்தனர். அவர்கள் முகமானது

மிகுந்த சந்தோஷமுடையதாய் விளங்கிற்று. எங்கு பார்த்தாலும் ரமணியமான தோற்றம்; வீதிகள்தோறும் மகா தோரணங்களும் விவித துவஜங்களும் அசைந்தாடி விளையாடின. சிறிது நேரம் சென்றதும் தங்கள் தங்கள் சபைத்தலைவர்களின் ஆஞ்ஞைப்படி கூட்டங்கள் கூடினார்கள். கார்மெல் சபைத்தலைவர் எழுந்து, இன்று 4½-மணிக்கு மகா சங்கைக்குரிய நமது மேற்றிராணியாண்டவர் நமது ஊருக்கு எழுந்தருளி வருகிறபடியால் சபைச் சகோதரர் சகலரும் 4 மணிக்கே தவறாமல் வந்து சேரவேண்டியதெனத் தெரிவிக்க, அதையெல்லாரும் சந்தோஷமாயாமோதித்தார்கள். திருக்குடும்பச் சபைத்தலைவியும் அவ்விதமே சபைச் சகோதரிகளுக்குத் தெரிவிக்க அவர்களும் அதை யானந்த மனதுடன் ஆமோதித்துத் தங்கள்தங்க ளில்லமேகினார்கள்.

சுகந்த மலரின் நறுமணம் வீசுகின்றது. சந்தோஷமாகிய கும்பல் தெரிகின்றது. மேளவாத்தியத்தின் மதுரமான கானம் தொனிக்கின்றது. ஓரிடத்தில் கார்மெல் சபையார் தங்கள் சபையின் ஆடைகளை யணிந்துகொண்டு துவஜத்தைக் கையிற் பிடித்து மிகுந்த சிறப்பாய் விளங்கினார்கள். மற்றோரிடத்தில் திருக் குடும்பச் சபைச் சகோதரிகளும் தங்கள் சபையின் திருநாடாவைக் கழுத்திலணிந்து கொடியைக் கரத்திற் பிடித்துக்கொண்டு அதி யலங்காரமாய்த் துலங்கினார்கள். பாடசாலைச் சிறுவர் சிறுமிகள் நானாவித ஆடை யலங்கிர்தர்களாய் நேத்திரானந்தத்தைத் தந்து மனோகரமாய்த் தோன்றினார்கள். இந்தச் சமயத்தில் பழயகாயலென்னும் ஊரானது ஓர் நவீன தோற்றத்தைப் பெற்றிருந்த தெனச் சொல்லுவது பொய்யாகாது. குறிக்கப்பட்ட நேரமானதும் பாடசாலைச் சிறுவர் சிறுமிகள் முன்னும், திருக்குடும்பச் சபைச் சகோதரிகள் மத்தியிலும், கார்மெல் சபைச் சகோதரிகள் பின்னுமாக அணிவகுத்து வெகு மரியாதையோடு ஆண்டவரவர்கள் வருகையை எதிர் நோக்கிச் சென்றார்கள். இவர்களைக் கண்டதும் ஆண்டகை அன்பாய்த் தமது ரதத்தினின்று இறங்கி அங்கு சுந்தரமா யமைத்திருந்த பந்தரின்கண் தங்கித் தமது திரு ஆடைகளை யணிந்துகொண்டு நக்ஷத்திரக் கூட்டங்களின் மத்தியிற் பூரணச் சந்திரனானது ஜ்வலித்தாற்போலத் தோன்றி, பரிசுத்த பரிபூரணத்தாயின் ஆலயம் போய்ச் சேரவே, ஆங்கு சங்கீதக் கூட்டத்தாரால் தேதேயும் என்னும் தேவ தோத்திரப் பாடலைக் கர்ணாமிர்தமாய்ப் பாடி முடிக்க, பிரியதந்தை ஓர் மதுரமான பிரசங்கம் சொல்லி, விஸ்வாசிகள் சகலரையும் ஆசீர்வதித்து, கோவிலின் முற்றவெளியில் அதி விசித்திரமா யமைத்திருந்த பந்தரின்கண்ணே சிங்காரித்திருந்த பொன்னாசனத்தில் வீற்றிருக்க, ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அதில் இவ்வூருக்கு ஆகவேண்டிய முக்கியமான காரியங்களைப்பற்றி தெரிவித்து அவற்றைத் தேவரீரவர்களின் வருகையின் பலனாகச் செய்தே தீரவேண்டுமென்று மிகுந்த உருக்கத்துடன் விண்ணப்பஞ் செய்திருந்ததை வாசிக்கும்போது அங்கு கூடியிருந்த சகலருடைய இருதயங்களும் இளகி நேத்திரங்களில் நீர் ததும்பின. ஆண்டவரவர்கள் வந்தனோபசாரத்தை யேற்று ஊரார் வேண்டுதலுக் கிரங்கி திருப்தியும் அனுகூலமுமான பதிலைக் கனிந்தமனதுடன் சொல்ல ஆங்கு கூடியிருந்த எல்லோருடைய மனமும் ஆனந்தத்தால் மகிழ்ந்து கரகோஷ்டம் செய்தார்கள். அதன்பின் அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் ஜூபிலி வாசகசாலை மெம்பர்கள் தங்கள் வாசகச்சாலையில் ஆண்டகையை வரவேற்றுபசரித்து ஓர் வந்தனப் பத்திரம் வாசித்தார்கள். அன்புள்ள தந்தை வாசகச் சாலையைப் புகழ்ந்து அதனாலாகும் பிரயோசனத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி சமுகரா யிருந்த மெம்பர்களையும் சமுகரா யில்லாத மெம்பர்களையும் ஆசீர்வதித்து, இவ் வாசகசாலைக்கு ஒரு நற்சாக்ஷிப் பத்திரமும் ஐந்து புத்தகங்களும் நன்கொடையாக ஈந்தார்கள். இதன்பின் நாலுநாள்மட்டில் இவ்வூரிலிருந்து தமது ஞான விசாரணையை நடப்பித்து விசுவாசிகளுக்கு வேண்டும் புத்திமதிகளைச்சொல்லி உறுதிப் பூசுதலென்னுந் தேவத்திரவிய அனுமானத்தை நிறைவேற்றி பிரியாவிடைகொடுத்தேகினார்கள். திரியேகதேவன் இந்த நல்ல மேய்ப்பவனுக்குத் தீர்க்க ஆயுளையும் திரேக சௌக்கியத்தையும் கொடுத்துத் தமது ஞான மந்தையையாளக் கிருபை புரியுமாறு பிரார்த்திப்பதோடு இவ் வரவேற்பின் கொண்டாட்டத்திற்கு அதி முக்கியமாய் நின் றுழைத்த எங்களாத்தும குருவாகிய சங்கைக்குரிய மரிய அதிசயநாத சுவாமிகளுக்கு கருணாநிதியாகிய கடவுள் நீடிய ஆயுளைத் தந்து பல்லாண்டு எங்கள் மத்தியிலிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஜூலைமீ 21உ 1914. } பாண்டியன்.



## தூத்துக்குடி.

### பரதகுல ஐக்யசங்கம்.

எங்கள் முநிசிபல் சேர்மன் ஸ்ரீமான் குருஸ் பெறுனாந்தீஸ் அவர்களின் சபாநாயகத்தில் நிகழும் மீ 18உ மாலை 7-மணிக்குத் தூத்துக்குடி ‘‘பரதகுல ஐக்ய சங்கம்,, என்பதாய் ஓர் சங்கம் கூட்டப்பெற்றது. சங்கத்தின் நோக்கம் மேனாட்டு யுத்தமுகாந்தரமாக இவ்வூரில் தக்க பிழைப்பில்லாமல் கஷ்டப்படும் கூலிஜனங்களுக்கு ஒருவாறு உதவி செய்யவும், பரதகுலப் பிள்ளைகளில் வறுமை நிமித்தம் பள்ளிக்கூடப் படிப்பிற்கு இயலாதவர்களுக்கு இலவசத்தில் படிப்பு கொடுக்கவும், உயர்தரப் படிப்பிற்கு லாய்க்கில்லாதவருக்குக் கைத்தொழில் முயற்சியில் சகாயம் செய்யவும், ஏழைக் கன்னிப்பெண்களுக்கு அவர்களது கல்யாணமுதலிய விஷயங்களில் ஒத்தாசை பண்ணவும், மற்றும் அநாதப் பிள்ளைகளுக்கும் ஆதரவற்ற ஏழை விதவைகளுக்கும் அன்னவஸ்திரம் முதலானவை கொடுத்து ஆதரித்தலுமாகும்.

சங்கத்தின் தீர்மானப்படி முதலில் இங்குள்ள தோணி முதலாளியார் சங்கத்திற்குத் தோணி நடையொன்றிற்கு எவ்வளவு கொடுக்கிறதென்பதை ஆலோசிப்பதற்கு நிகழும் மீ 25உ மாலை ஓர் கூட்டம் கூடுவார்களெனத் தெரிகிறது. அப்புறம் லஸ்கர்கள், மீன் வள்ளக்காரர், கல் வள்ளக்காரர், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள் இவர்கள் அப்போதைக்கப்போது மேற்சொன்ன பரதகுல ஐக்யசங்கத்தின் ஆதீனத்தில் கூடி, சங்கநிதிக்குக் கொடுக்க வேண்டியதை ஏற்படுத்துவார்கள்.

பொதுநிதியின் கமிட்டி மெம்பர்களாக மேற்சொன்ன முதலாளிமார்கள் முதல், உத்தியோகஸ்தர்வரையிலுமுள்ள இவர்களில், பிரதிநிதிகள் தெரிந்துகொள்ளப்படுவார்கள். காரியதரிசிக்கும் பொக்கிஷதாரிக்குமாக இருவர் மேற்படிக் கமிட்டியில் ஏற்படுத்தப்படுவார்கள். மற்றும் விஷயங்கள் சமயோசிதம்போல் நடத்தப்படும்.

நல்லது இப்போது இன்னனைய சங்கங்களால் பொதுவிற்கு சாலவும் பிரயோஜனம் இருக்கிறதென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அநாகரீகர் மதுவுண்டு களிப்பதற்கும், சூதாடுவதற்கும், பேருண்டிப் பந்திகளுக்கும் ஆட்களைச் சேகரிப்பார்கள். ஆனால் நாகரீகரோவென்றால் பொதுஜன முன்னேற்றத்திற்காக மாத்திரம் ஏற்படுவார்கள். அநாகரீகர் தம்மையும் தம்மை அடுத்தவர்களையும் அவலட்சண காரியங்களில் மாட்டி வைக்கிறதுமாத்திரமல்ல, மற்றவர்கள் இலட்சணமான காரியங்களைச்செய்வதிலுங்கூட, தாங்களே வலியப்போய்த் தங்கள் தலைகளை மாட்டிக்கொண்டு பரமசங்கடப்படுகின்றனர். ஆயினும், நல்லகாரியத்தில் பிடிவாதமுள்ளவர்கள். ‘‘அடுத்தடுத்து முயன்றால் எடுத்த காரியம் சித்தியாகு’’ மென்பதற்கிசைய, தாங்கள் பிரவேசித்த நல்ல கருமங்களை எந்தப்படியும் ஸ்தாபிப்பார்கள். சிலவேளை துற்கிருத்தியரால் நல்லவர்கள் அவமானப்படவுங்கூடும்; வீண் ஆவலாதிக்கு ஆளாயிருக்கவுங்கூடும். என்றாலும், ‘‘மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையு மேற்கொள்வார், செவ்வி—அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்’’ என்பதற்கிசைய நல்லவர்கள் சத்கிருத்தியங்களில் சலஞ்சாதிப்பார்கள்.

இவ்வுலகத்தில் நல்லகாரியத்தை ஸ்தாபிக்கிறது எளிதான கருமமல்ல. நன்மையைச் செய்ய வந்த சாக்ஷாத் தேவசுதனே மானிடமாக்களால் நிரம்பவும் பரிகசிக்கப்பட்டார். ஆம் இறுதியாய்க் கொல்லவும்பட்டார். மனுஷ சுபாவத்தில் அவர் இறந்தும் இன்னும் ஜெயசீலராய் எங்கும் பிரகாசிக்கிறார். எப்போதும் பிரகாசிப்பார். ஆகையால் எதுகாரியத்திலும் அவை நல்ல காரியமெனத்தெரிந்தால் அவற்றை நடாத்துவதற்குச் சித்த வயிராக்கியம்வேணும். நல்லகாரியங்களை ஸ்தாபிப்பதற்குப் பணமும் படிப்பும் அவசியமே; ஆனால் சித்தவயிராக்கியம் இவ்விரண்டிலும் முந்தினது. ஜனசமூகம் படிப்பாளிகளையும் பணக்காரரையுமல்ல, சித்தவயிராக்கிய சொரூபிகளையே முதல்முதல் விரும்புகிறது.

இவ்விருப்பம் கைகூடிய மேரையாய் இப்போது எமது முதலாளிமார்களில் அநேகர் சேர்ந்து ‘‘பரதகுல ஐக்யசங்கத்தின் ஆதீனத்தில் ஓர் பொதுநிதி ஏற்படுத்தப் போகிறதாகச் சொன்னேன். நிதியின் பிரயோஜனத்தை எந்த மேரையாய் விளக்கிக்காட்டினாலும்’’ பணம் சேர்த்து என்ன செய்கிறது, என்ன செய்கிறதெனச்சிலர் திரும்பத்திரும்பக் கேட்கின்றனர். இஃதோர் வெறுங் கேள்வியென்று நினைக்கி

றேன். ஏனென்றால் பணம் நம் கைவசமிருந்தால் நாம் அதைக்கொண்டு என்ன செய்யக்கூடாது? ஆனால் அப்பணம் நல்ல யோக்கியர்வசம் ஒப்படைத்திருக்கிறதாவென்று மாத்திரம் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். யோக்கியர் உறவைக்கொண்டு அநேக நன்மையான காரியங்களை நமக்கும் நம்பின்சந்ததிகளுக்கும் அனுகூலமாய்ச் செய்துகொள்ளலாம்.

மேலும். எவ்வித அதிகாரமும் ஒழுங்கரிடத்தில் இருந்தால் பயமில்லை. ஒழுக்கமுடையார் ஒழுங்கான துறைகளில்மட்டும் இறங்கி வேலைசெய்வார்கள்; எல்லாம் ஒழுக்கமாயிருக்கும். ஒழுங்கீனரோவென்றால் அப்படியல்ல. அவரிடத்தில் பணமிருந்தாலும்சரி, படிப்பிருந்தாலும் சரி, ஒன்றையும் கவனியாமல் கண்ணை மூடிக்கொண்டு கடகடவென ஒழுங்கீனக் குப்பையை உண்டு ஆனந்திப்பார்கள். ஆயினும் ஒழுங்கீனம், அயோக்கிய மாகிய இவைகள் ஒழுக்கம் யோக்கியமாகியவற்றை ஒருநாளும் ஒருபோதும் மேற்கோள்ளப் போகிறதில்லை. ஒழுக்கமே! நின்னைக் கடவுள் நிரம்பவும் ஆசீர்வதிப்பாராக.

பரதன்.

---

## THE WAR.
## ஐரோப்பாவில் யுத்தம்

சென்ற மூன்று மாதங்களாக ஐரோப்பாவில் நடந்துவருகிற பயங்கரமான யுத்தம் இன்னும் முடிந்த பாடில்லை நாளுக்கு நாள் அது மும்முரமாகிக்கொண்டே வருகிறது. எவ்வளவு காலத்துக்குத்தான் அது நடந்தபோதிலும் ஒரு காலைக்கு முடிவாகு மென்பது வாஸ்தவம். அதன் தற்காலத்திய நிலைமையைக் கவனிக்குங்கால் ஐக்கிய கட்சிக்காரருக்கே ஜெயமாகுமென்று யூகிக்கப்படுகிறது.

ஏற்கெனவே நாம் அறிவித்திருக்கிறபடி பாரீஸ்பட்டணத்தைப் பிடிக்கப்போன ஜெர்மனியர் இன்னும் அதைப் பிடிக்க முடியாமல் ஆங்கிலேயரோடும் பிராஞ்சியரோடும் சண்டைசெய்துகொண்டிருக்கிறார்கள். பிராஞ்சுக்குள் பொறுப்பான ஒரு இடத்தில் அரண்செய்து தங்களோடு கொண்டுவந்த பெரிய பீரங்கிகளை யெல்லாம் வைத்துக்கொண்டும், குழிகள் பறித்தும் [illegible]கள் வெட்டியும், சத்துருக்களுடைய குதிரைப் பட்டாளங்கள் தங்களை இலேசாய்த் தாக்காதபடி முள்ளுக் கம்பிகளினால் வேலியிட்டுக்கொண்டும் சண்டை செய்கிறார்கள். ஆங்கிலேயரும் பிராஞ்சியரும் இவர்களை எப்பக்கத்திலும் பலமாய்த் தாக்குகிறார்கள். ஆகையால் இருதரத்தவர்களுக்கும் கொடியபோர் நடக்கிறது. ஒரு பக்கத்துச் சேனைகள் சிலதருணங்களில் மற்றொருபக்கத்துச் சேனைகளை எதிர்த்து முன்னுக்குப்போய் அவைகளை விரட்டியடிக்கிறதாயும் ஒவ்வொரு சமயத்தில் பின்வாங்கி யோடுகிறதாயும் இருக்கின்றன. இந்தச் சண்டை நடக்கும் இடம் பிராஞ்சின் வடகிழக்கிலுள்ள எய்ன் பிரதேசம். இரு பக்கத்திலும் மடிகிறவர்கள் அநேகர். சில விடங்கள் பிணங்களால் குவியப்பட்டும் சில விடங்கள் இரத்தக்காடாயு மிருக்கின்றன. இன்னும் ஒருபக்கத்துக்கும் வெற்றியில்லை. இப்போதைய தந்திச் சமாசாரங்களினால் ஜெர்மனியர் பாடு நாளுக்குநாள் ஒடுங்கிப் போகிறதென்றும், எப்பக்கத்திலும் துரத்தப்படுகிறார்களென்றும் கூடிய சீக்கிரத்தில் அவர்கள் பிராஞ்சை விட்டே ஓடிப்போய்விடுவார்களென்றுந் தெரியவருகிறது.

பிராஞ்சில் நடக்கும் சண்டை யிப்படியாயிருக்கக்கொள்ள, ஆஸ்டிரியருக்கு உதவியாக ருஷியரை எதிர்க்கப்போன ஜெர்மனியர் ருஷியாவுக்குள் படையெடுத்துப் போனார்களென்றாலும், அவர்களால் அங்கு ஆனது ஒன்றுமில்லை. ருஷியரால் 10,000 பேர் வரையிலும் சிறையெடுக்கப்பட்டும் 24 பெரிய பீரங்கிகள் பிடிபட்டும் பின்வாங்கி ஓடச் செய்யப்பட்டார்களெனச் சங்கதி யெட்டுகிறது. ஆஸ்டிரியரோ வெகு கேவலமாய்ச் சண்டை செய்கிறார்களென்றும் எவ்விடத்திலும் அபஜெயமடைகிறார்களென்றும் தெரிய வருகிறது.

பாரீஸ் பட்டணத்தைத் திடீரெனத் தாக்கிப் பிடித்துக்கொள்ளலாமென்ற எண்ணம் பூண்டு, பிராஞ்சுக்குள் நுழைய ஜெர்மனியர் பெல்ஜியரை வழிவிடக் கேட்டார்களென்றும், அதற்குப் பெல்ஜியர் இணங்காததினால் அவர்கள் துராகிர்தமாய் பெல்ஜியத்துக்குள் நுழைந்து வழியில் கண்ட பட்டணங்களையும் நாடு நகரங்களையும் சிறந்த கட்டிடங்களையும் இன்னும் பிரமாண்டமான தேவாலயங்களையும் இடித்தும் தகர்த்தும் அக்கினியால் சுட்டெரித்தும் பாழாக்கினார்களென்றும் நாம் முன் அறிவித்திருக்கிறோம். இப்போது ஜெர்மனியர் பெல்ஜியம் முழுவதையுமே தங்கள் வசப்படுத்திக்கொண்டார்களாம் பெல்ஜியர் தங்களாலான மட்டும் எதிர்த்து நின்றார்கள். ஆயினும் கடைசியில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு உலாந்து, இங்கிலாந்து, பிராஞ்சு முதலிய தேசங்களுக்குப் போய் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இவர்களுடைய அரசும் பிராஞ்சிலுள்ள ஹாவெர் என்னுமிடத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி இவர்கள் பரதேசிகளானார்களென்றாலும் இப்போது சும்மாயில்லை. ஆங்கிலேயருடைய உதவியினால் தங்கள் தேசத்தை மறுபடியும் கைப்பற்றிக்கொள்ள ஜெர்மனியரை எதிர்த்துத் தங்கள் தேசத்தின் மேற்பாகத்தில் இழந்துபோன சில விடங்களைப் பிடித்துக் கொண்டார்களென சமாசாரம் எட்டுகிறது.

இங்கிலீஷ்க் கால்வாயிலுள்ள டோவர்ஜலசந்தியைப்பற்றி ஜெர்மனியர் கலேயென்னும் துறைமுகப் பட்டணத்தை நோக்கிப் போனார்களானாலும், ஐக்கியக் கட்சிக்காரரால் பின்வாங்கும்படி துரத்தியடிக்கப்பட்டார்கள். வடகடலில் பிரிட்டிஷ் கடற்படைகளுக்கும் ஜெர்மனிய கடற்படைகளுக்கும் பலத்த சண்டை நடந்து கொண்டிருக்கிறது. துருக்கியானது இரண்டு யுத்தக் கப்பல்களை ஜெர்மனியரிடமிருந்து விலைக்கு வாங்கினதாகச் சொல்லி, அவைகளில் ஜெர்மனிய உத்தியோகஸ்தர்களையும் வேலைக்காரரையும் வைத்துக்கொண்டிருந்தபடியால் அவர்களை நீக்கும்படியாக பிரிட்டிஷார் துருக்கியைக் கேட்க, அப்படிச் செய்யமுடியாதென்று துருக்கி மறுமொழி சொல்லிவிட்டதாம். துருக்கி ஜெர்மனியைச் சேருமாயின், பல்கேரியாவும் ரொமேனியாவும் இட்டலியும் இங்கிலாந்தைச் சேருமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

யுத்தத்தைப்பற்றிய சமாசாரங்கள் இப்படியா யிருக்கக்கொள்ள, கடைத்தெருக்களிலும் ஊர் வீதிகளிலும் தப்பு புகார்களும் பொய் வதந்திகளும் பரவுகின்றன. ஐக்கிய கட்சிக்காரருக்குச் சொற்ப அபஜெயமாவது, ஆபத்தாவது, நஷ்டமாவது நேர்ந்தால் அவைகளைச் சில காலாட்டிகளும் போக்கிரிகளும் ஜாஸ்தியாக எடுத்துக்காட்டி, பாமர ஜனங்களுக்கு பயத்தையும் விசாரத்தையு முண்டு பண்ணி விடுகிறார்கள். இது பெரும் மோசமான காரியம். ஜெர்மனியர் ஆக்குரோஷத்துடனும் ஆண்மை யுடனும் சண்டை செய்கிறார்களென்பது வாஸ்தவமே. அவர்கள் எவ்வளவு பராக்கிரம மாய்ச் சண்டை செய்தபோதிலும், வெற்றியடையப் போகிறதில்லை. அதேனென்றால் இவர்களுக்கு விரோதமாய்ப் பலதேசத்தவர் ஒன்றாய்ச் சேர்ந்து இவர்களை எதிர்த்து நிற்கையில் வரவர பலங்குன்றி தோல்வி யடைவார்களென்பது திண்ணம்.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**லண்டனும் ஜெர்மன் சக்கரவர்த்தியும்.**—லண்டன் நகருக்குள்ளே முதன்முதல் வெடிகுண்டு போடுகிற ஆகாயகமனிக்குத் தாம் கித்தாப்புப்பட்டம் கட்டுவதாக ஜெருமன் சக்கரவர்த்தி சொல்லுகிறாராம்.

**இப்பொழுது பெல்ஜியர்களுக்கு அரசன் யார்?**—பொதுத்தன்மை வாய்ந்த தேசங்கள் தன்னை பெல்ஜியதேசத்தின் அரசனாக ஒப்புக்கொள்ளுமாவென்று ஜெர்மன் சக்ரவர்த்தி விசாரித்துக்கொண்டிருப்பதாக வாஷிங்டனிலுள்ள ராஜ தந்திரிகளுக்குள் ஒரு பேச்சு நடந்துகொண்டிருக்கிறது.

**ஜெர்மனியர் அடைந்த அவமானமும் தோல்வியும்.**-டோவர் ஜலசந்திக்குச் செல்லவேண்டுமென்று ஜெர்மனியர் செய்த முட்டாள்தனமான முயற்சி அவர்களுக்கு அவமானத்தையும் தோல்வியையும் பலனாக அளித்து வருகிறதென்று பிரான்ஸிலுள்ள 'டெயிலி மெயில்' பத்திரிகையின் நிருபர் கூறுகின்றார்.

**ஆஸ்டிரிய ஜெர்மனிய கைதிகள்.**—ருஷியர்களால் யுத்தத்திற் பிடிக்கப்பட்ட ஆஸ்டிரியக் கைதிகளும் ஜெர்மனியக் கைதிகளும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள். ஆதலால் இவ்விரு ஜாதிக் கைதிகளையும் வெவ்வேறாக வைக்க நேர்ந்திருக்கிறதாம்.

**ஜெர்மனியருடைய கைதிகள்.**—ஜெர்மனியர் தாங்கள் பிடித்த 18,000 கைதிகளை உலாந்து அரசின் எல்லையில் உவீசேல் என்னுமிடத்திற் சுற்றிலும் உயர்ந்த கம்பிவேலிகளிட்டு அதனுள் வைத்திருக்கி

றார்களாம். பிராஞ்சிய கைதிகளை நெருக்கி வேலைவாங்கிக் கொண்டு, பிரிட்டிஷ் கைதிகளைக் காலடிபந்து விளையாட விட்டுவிடுவதாக வதந்தி. இதனால் பிராஞ்சியர்மேல் தங்களுக் குள்ளப் பகையைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள் போலும்.

**தோல்விக்குமேல் தோல்வி.**—பிராஞ்சிலுள்ள வில்லி யுத்தம் முதல், சென்ற இரண்டு வாரங்களாக ஜெர்மனியர் எங்கு பார்த்தாலும் தோல்வியடைந்து வருகின்றனர். ஏய்னின் தென்புறமிருக்கும் அவர்களுடைய பாதிப்படை உடைந்துவிட்டது. ஜெர்மனியர்களுக்கு ஜெர்மனியிலுள்ள கடைசி மனிதன் உள்பட எல்லாரும் பின்பலமாக வந்திருக்கின்றனர். ஆயினும் ஜெயமில்லை.

**ஜெர்மனியருடைய பீரங்கிகள்.**—ஜெர்மனியர் சண்டையில் நூதன விதமான பெரிய பீரங்கிகளை உபயோகித்து வருகிறார்களாம். அவைகளுக்கு வெடிவைக்க அப்பீரங்கிகளைச் செய்தவர்களே வேண்டியதென்றும், வேறு யாருக்கும் அவைகளைச் சுடத்தெரியாதென்றும் அவைகளைச் சுடும்போது உண்டாகிற சத்தமும் அதிர்ச்சியும் சேதமும் இடி பூகம்பங்களினால் உண்டாகிறவைகளைப் போலிருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

**கேய்ஸரின் பீதி.**—ஜர்மெனி சக்ரவர்த்தியாகிய கெய்ஸரின் உயிருக்காக பற்பலமாதிரி பந்தோபஸ்து செய்யப்பட்டு வருகிறது. கெய்ஸரைச் சுற்றி சதா தீரர்களான காவல்காரர்களும், வேவுகாரர்களும் இமைகொட்டாமல் காவல் புரிகின்றனர். சுற்றுப்பிரயாணஞ் செய்யுங்காலத்திலும், ரெயில் மார்க்கமாய்ப் போகையிலும் ருஷிய ஆகாய விமானம் குண்டு எய்யாதிருக்குமாறு மேலே பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவாக கெய்ஸரை பாதுகாக்கின்றனர்.

**ஜேர்மனியர்களின் தீச்செயல்**—லோவெயின் பட்டணத்திலுள்ள குதிரைசவாரி பழகும் பள்ளிக்கூடத்தில் சுமார் 8,000 பெல்ஜியர்களை ஓரிரவெல்லாம் அடைத்து வைத்ததில் அநேக ஸ்திரீகள் ஸ்மரணை தப்பினர். குழந்தைகள் தாய்மார்களின் கையிலேயே மாண்டனர். வீசா என்னுமிடத்தைப் பூர்த்தியாக ஜெர்மனியர் கொளுத்தினர். அநேக நகர்வாசிகளையும், நிராயுதபாணிகளையும் ஜெர்மனியர் இரக்கமின்றிக் கொன்றனர். என்ன நிஷ்டூரம்!

**பிரிட்டிஷ் இராணுவம்.**—பிரிட்டிஷ் போர்வீரர்கள் செய்த யுத்த தீரத்தையும், வல்லமையையும், அஞ்சா நெஞ்சுத் துணிவையுங்கண்ட டென்மார்க் பத்திரிகைகள் வெகு குதூகலத்துடன் ஆர்ப்பரிக்கின்றன. இத்துடன் பிரிட்டிஷரின் குதிரைப் படைகள் நிர்ப்பயத்துடனும், சாமர்த்தியத்துடனும் செய்த விநோதமான எதிர்ப்பைப்பற்றியும் "நாஷனல் டிமோல்" என்னும் பத்திரிகை ஆச்சரியப்படுகிறது.

**ஈஜிப்து தேசத்தில் சண்டை உளவுக்காரர்கள்.**—இப்போது ஈஜிப்து தேசத்திலிருக்கும் ஜெர்மனிய ஆஸ்ட்ரியா உளவுக்காரர்களைத் தவிர துருக்கியர்களே அவ்விரு தேசத்தாரைவிட அபாயமுள்ளவர்களாயிருக்கின்றனரென்றும், அவர்கள் உள்நாட்டில் நடக்கும் முக்கிய சமாசாரங்களைத் துருக்கி தேசத்தைச் சேர்ந்த கான்ஸ்டாண்டிநோபிளுக்குத் தந்திரமாய் அனுப்புவதாகவும், கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து ஜெர்மனிக்குச் சமாசாரம் சுலபமாய் எட்டிவிடுவதாகவும், மேலும் அவ்விடத்திய உளவுகளும் யாவருமறியாத சொந்த தந்தி மூலமாய் நடந்துகொண்டிருக்கின்றனவென்றும் 'பயனியர்' பத்திரிகை கூறுகிறது.

**பத்தாம் பத்திநாதரின் மரணசாசனம்.** நம்முடைய பரிசுத்தபிதா மரணமடைந்த மூன்றும் நாள் அவருடைய மரணசாசனம் வாசிக்கப்பட்டது. தாம் தரித்திரராய்ப் பிறந்ததாகவும், தரித்திரராய்ச் ஜீவித்ததாகவும், தரித்திரராய் மரணமடைவதாகவும், நடக்கும் வழக்கப்படி தம்முடைய சடலம்பாடம்பண்ணப்படாமலும் ஆரவாரச் சிறப்பின்றி சாதாரணமாகவும் அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் அடக்கஞ் செய்யப்பட தாம் ஆசிப்பதாகவும், அந்த மரணசாசனத்திற் கண்டிருந்தது. மேலும் தமக்குக் குற்றேவல் புரிந்துவந்த சிறுவனுக்கு மாதம் ஒன்றுக்கு 48-ஷில்லிங் கொடுக்கவும், 1908௵ சிசிலித்தீவில் நேர்ந்த பூமியதிர்ச்சியின் விபத்தில் அநாதரவாய் விடப்பட்ட 400 பிள்ளைகளைத் தக்கபடி ஆதரிக்கவும் அவர்களுக்கு கல்வியூட்டவும் போதுமான நிதிக்கும் அதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மரண



சாசனம் 1911௵ எழுதப்பட்டது. இவர் தமது ஜீவனார்த்தமாய் நாலாயிரம் பவுன் இன்ஷூரன்சு செய்திருந்தபடியால் இத்தொகையானது இவருடைய சகோதரிகளுக்குச் சேருமாம்.

**சனியன்களும் குண்டுகளும்.**—ஜெர்மனியர்கள் குண்டு எய்வதில் கைதேர்ந்தவர்களாயிருந்தபோதிலும் சனியன்களைப் பற்றி வெகு பயப்படுகிறார்கள். இச்சனியன்களில் ஆங்கிலேயர்களும் பிராஞ்சுக்காரர்களும் வெகு சமர்த்தர்கள். சனியனை எடுத்தவன் சமர்த்தன். குண்டைப் பிடித்தவன் முண்டன் என்பதாக ருஷியர் கூறுவர். ஆனதுபற்றியே ஐக்கியப்படைகளின் சனியனைப்பற்றி ஜெர்மனியர் பயப்படுவது சகஜமே. ருஷியர்கள் ஏனைய படைகளைக் காட்டிலும் சனியனில் வெகு சமர்த்தர்கள். இப்பொழுது ஜனரல் ஜாப்ரியின் கட்டளைப் பிரகாரம் படைகள் சனியனையே பிரயோகிப்பார்போல் காண்கிறது.

**இந்தியப் படைகளின் வீரம்.**-ஐரோப்பாவில் இப்போது நிகழ்ந்துவரும் யுத்தத்துக்கு நம்முடைய தேசப்படைகள் கூட போயிருக்கின்றன. இப்படைகள் வெகு வீரியமாய்ச் சண்டை செய்கிறதென்று "எக்ஸ்பிரஸ்" என்னும் பத்திரிகை கூறுகிறது. அப்பத்திரிகை சொல்வதாவது: "இந்தியப்படை எதிரிகளைக் கண்டதும் அவர்களை எதிர்க்கத் தாங்கள் இந்தியாவில் பரேடுக்குப் போவது போலவே போனார்கள். இவர்களுக்குமுன்னே எதிரிகளின் பெருங்குண்டுகள் இவர்களிருந்த இட முழுவதையும் பிளந்துகொண்டு போனாலும் இவர்கள் கண்ணைக்கூட சாய்க்கவில்லை. ஜெர்மனியரை நெருங்கி மடக்கியடிக்க இடங்கொடுக்கப்படவில்லையே யென்றுதான் இவர்கள் வருந்துகிறார்கள். ஆனால் குதிரைப் படைமாத்திரம் நெருங்கி யடித்தது. இதனால் அவர்களுக்கு அளவற்ற சந்தோஷம் பிறந்தது" என்பதேயாம்.

**துப்பறியும் ஜேர்மனியர்கள்.**—மூன்று ஜெர்மன் போர்வீரர்கள் பிராஞ்சு வீரர்களைப்போல் உடைதரித்துக்கொண்டு மோட்டார் ரதத்தில் ஏறிக்கொண்டு போகையில் செயிண்டிண்ட் என்னுமிடத்தில் பிடிக்கப்பட்டனர். இவர்களுடன் நாலாம் ஜேர்மன்போர்வீரன் பெண்வேடங் கொண்டு துவிச்சக்ர வண்டியில் வந்தான். இவனையும் பிடித்து வாக்குமூலம் கேட்கையில், மற்றொரு ஜெர்மன் வீரன் பிராஞ்சு ஆபீசரைப்போல வேடந்தரித்து குதிரைச் சவாரி செய்துகொண்டு ஜெர்மன் துப்பறிவோர்களைப் பிடித்துப் பிராஞ்சுக்காரர்களை மெச்சி உற்சாகப்படுத்தினான். உடனே பிராஞ்சு வீரர்கள் குதிரை சவாரி செய்பவன்மேல் சந்தேகங்கொண்டு பாஸைக் கேட்கவே, பிழையான தப்பு பாஸைக் காண்பித்தான். உடனே உண்மையையறிந்த பிராஞ்சுக்காரர்கள் இத் துப்பறியும் 5 ஜெர்மனியர்களையும் சுட்டார்கள் என்று பாரிஸ் பத்திரிகை வரைகிறது. இப்பித்தலாட்டக்காரருக்கு ஏற்ற தண்டனையே கிடைத்தது.

**சென்னை ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ்.**-ரஜாவில் போயிருந்த சென்னை ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸான ஆனரபில் ஸர் சார்லஸ் ஆர்னால்ட்வைட் என்பவருக்குப் பதிலாக ஆனரபில் ஸர் ஜான் எட்வர்ட் வாலிஸ் என்பவர் சீப் ஜஸ்டிஸ் வேலையைப் பார்த்து வந்தாரென்றும், இவர் ஒரு கத்தோலிக்கரென்றும் நாம் முன் அறிவித்திருக்கிறோம். இப்போது இவர் இந்த உயர்ந்த உத்தியோகத்திலேயே நமது காருண்ணிய சக்ரவர்த்தியவர்களால் காயப்படுத்தப்பட்டாரென்று அறிந்து அகமகிழ்கிறோம். இவர்பேரில் பொது ஜனங்களுக்கும், வக்கீல் முதலியவர்களுக்கும் முழு நம்பிக்கை உண்டு. ஓர் சீப் ஜட்ஜிக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்களாகிய சாந்தம், பொது நன்மையின்பேரில் கவனம், காரியா காரியங்களை ஊன்றிப்பார்த்து முடிவு செய்தல், இராஜதானி காரியங்களில் நோக்கம், சட்ட சம்பந்தமான தெளிந்த அறிவு, குணவிசேஷம் முதலியவைகளெல்லாம் இவரிடமுண்டு. இவர் பல்லாண்டு இந்தத் தானத்திலிருக்க சர்வேசுரன் கிருபை கூர்வாராக.

**10-ம் பத்திநாதருடைய மரணமும் ஒரு பதிதப் பாதிரியாரும்.**--ஜான் ஹோல்ம் என்னும் ஆங்கிலிக்கன் பாதிரியார் ஒருவர் கத்தோலிக்குப் பத்திராதிபர் ஒருவருக்கு நம்முடைய பிதா காலஞ்சென்ற 10-ம் பத்திநாதரைப்பற்றி பின்வருமாறு எழுதியனுப்பி யிருக்கிறார். "பாப்பானவரான 10-ம் பத்திநாதர் மரணமானதைக் கேள்வியுற்று நானும் என்னுடைய சபையாரும்

மிகவும் அனுதாபப்படுகிறோம். பாப்புமார்களுக்குரிய சுதந்தர அதிகாரங்களை நாங்கள் ஒப்புக்கொள்ளோமென்றாலும் அவ்விஷயமானது மரித்த பாப்பானவர் மட்டிலும் அவருடைய உந்நத பட்டத்தின் மட்டிலும் எங்களுக்கிருக்கும் அன்பு வாஞ்சனையை எவ்வளவும் குறைக்கத் தக்கதல்ல. தற்காலம் எல்லோருடைய புத்தியும் சிந்தனையும் நிகழும் யுத்தத்தின் பேரிலேயே கவர்ந்திருக்கையில், என்னுடைய எண்ணமெல்லாம் 10-ம் பத்திநாதரைப்பற்றி 'காமன் பிரேயர் புக்கி' லுள்ள பின்வரும் வாக்கியத்தின்பேரிலேயே ஊன்றிநிற்கிறது. 'நான் சமாதானத்துக்காக உழைத்தேன். சமாதானத்தைப்பற்றி நான் பேசப்போனால், அவர்கள் சண்டைக்கு ஆயத்தப்படுகிறார்கள்'. அவர் சமாதானத்தில் இளைப்பாறக்கடவாராக."

**கான்கிளேவ் சங்கம்.**—புதுப் பாப்பானவரைத் தெரிந்துகொள்வதற்காக இச் சங்கம் சென்ற ஆகஷ்டுமீ 31௳ யில் கூடினது. இதற்காக ஆஜரான கர்தினால்மார்கள் 57 பேர். இவர்களுக்குள் 31-பேர் இத்தாலிய தேசத்தவர்கள். மற்ற 26-பேரும் இதர வெளி தேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களெல்லோரும் அர்ச். சின்னப்பர் கோவிலில் ஷை தேதியில் வந்து சேரவே, காலை 9-மணிக்கு கர்தினால் பெர்ராத்தா என்பவர் இஸ்பிரீத்துசாந்துவைக் குறித்துப் பூசைசெய்யத் தொடங்கினார். மொன்சிஞ்ஞோர் கல்லி என்பவர் புதுப்பாப்பானவரைத் தெரிந்துகொள்ளும் விஷயமாய்ப் பிரசங்கஞ்செய்தார். பாப்பானவரைத் தெரிந்துகொள்ளுந் தருணத்தில் கர்தினால்மார்களுடைய கூட்டத்துக்கு யாதோர் இடைஞ்சலும் மற்றவர்களால் வந்துறாதபடி காபந்து செய்வோமென்று தாங்கள் கொடுத்திருந்த வாக்குறுதியின்படி, இத்தாலிய அரசாட்சியார் தங்கள் இராணுவ வீரரைக்கொண்டு வத்திக்கான் மாளிகையையும் அர்ச். இராயப்பருடைய தேவாலயத்தையும் காவல் காக்கும்படி செய்வித்தார்கள். முதல் தடவை சீட்டு போட்டதில் கர்தினால்மார்களுக்குள் யாருக்கும் மூன்றில் இரண்டுபங்கு சீட்டு விழவில்லை. இரண்டாவதாகப் போட்டதில் கர்தினால் மவ்பி (Maffi) என்பவருக்கு 30-சீட்டும், கர்தினால் பெர்ராத்தா (Ferrata) என்பவருக்கு 18-ம், மீதியான 9-சீட்டு வெவ்வேறு கர்தினால்மார்களுக்கும் விழுந்தன. ஆகையால் இப்போதும் ஒருவருக்கும் சரியாய்ச் சீட்டு விழவில்லை. மறுதடவையில்தான் செப்டம்பர்மீ 3-௳ யன்று கர்தினால் டெல்லா செய்சா வென்பவர் பாப்பானவராகத் தெரிந்துகொள்ளப்பட்டாரெனத் தெரியவருகிறது. இவருக்கு முடிசூட்டுங் கொண்டாட்டம் அவர் பாப்பானவராகத் தெரிந்துகொள்ளப்பட்ட தினத்தை யடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கம்போல் வெகு ஆரவாரச் சிறப்புடன் நடந்தேறாமல், இப்பொழுது நிகழும் கொடூர யுத்தத்தினிமித்தம் அத்தகைய ஆரவாரத்தை யெல்லாம் நிறுத்திவிட்டு மிகவும் சாதாரணமாகவே அடுத்த நாளாகிய செப்டம்பர்மீ 7-ம் ௳ நிறைவேறினது.

**எம்டன் சேஷ்டைகள்.**—ஜெர்மன் போர்க் கப்பலான எம்டன் மறுபடியும் சென்ற மாதத்தில் கொளும்புக் கருகிலும் கொச்சிக் கருகிலும் 10 வர்த்தகக் கப்பல்களைச் சமுத்திரத்தில் அமிழ்த்தி விட்டது. இதனால் இதுவரையிலும் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் 15. நேர்ந்த நஷ்டம் சுமார் 20 லட்சம் பவுனும். எம்டனைப் போல் இன்னொரு ஜெர்மன் கப்பல் அத்லாந்திக் மகாசமுத்திரத்தில் வேறு 15 கப்பல்களை அமிழ்த்திப் போட்டதாம். இதனால் உண்டான நஷ்டமும் 20 லட்சம் பவுனென மதிப்பிடப்படுகிறது. இப்படி சமுத்திரத்தில் அங்கங்கே அலைந்து திரிகிற 9 ஜெர்மன் கப்பல்களையும் பிடிக்க 70 பிரிட்டிஷ் போர் கப்பல்கள் புறப்பட்டிருக்கின்றன. இனி மேல் பயமில்லை.

**நன்மரணம்.**—முத்தமிழ் வித்வ சிரோன்மணிகளால் மிகவும் மேன்மையாய்ப் புகழ்ந்து பாடப்பெற்றவரும், பரதகுலத்தின் அபிவிர்த்தியைக் கருதி அதி ஊக்கத்துடன் உழைத்து வருபவருமாகிய தூத்துக்குடி ம-ா-ா-ஸ்ரீ சுவர்ணம் எட்வர்ட் அவர்களின் நேச குமாரன்: மகாராஜா எட்வர்ட் விஷ சுரத்தால் நிகழும் 1914ம்-௵ அக்டோபர்மீ 5௳ திங்கட்கிழமை காலை 6-மணிக்கு சென்னைப் பட்டணத்தில் காலஞ்சென்ற பரிதாப மரண செய்தியை யறிந்து துக்கிக்கிறோம்.



## "பரதகுலச் சகோதரர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்"

அன்பார்ந்த சகோதரரே! கடந்த மாதப் பத்திரிகையில் நாம் எழுதியதை, நம் குலத்தாரான நீங்கள் எல்லோரும் பார்வையிட்டிருப்பீர்களே!

தற்சமயம் தூத்துக்குடி, வீரபாண்டியன்பட்டணம், மணப்பாடு, பெரிய தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உபரி, கன்னியாகுமரி இவ்வூர்களைச் சேர்ந்த அநாதச் சிறுவர்கள் 12-பேர் இவ்விடம் வைத்து தாபரிக்கப்படுகிறார்கள். நாம் துவக்கியிருக்கும் இம் மடத்தை நம் குலத்தவர்களனேகர், கவனியாதிருத்தல் நமக்குப் பிரமிப்பாயிருக்கிறது.

ஏனெனில் இவ் இலங்கைத் தீவில் ஷாப்புகள் வைத்து நடத்திவரும் பரதகுலப் பிரபுக்களாகிய நீங்கள் தினம் ஐந்து சதமாவது கொடுத்து, இச்சிறிய உபகாரத்தினால் அநாதப் பிள்ளைகளைத் தாபரித்துச் சீர் திருத்த உங்களால் கூடாதது அல்ல! நீங்கள் ஓர் வருஷத்தில் ஆயிரக் கணக்காக வியாபார விஷயத்தில் நிலுவைக்குக் கொடுத்து, அநேகமாய் அதை வசூல்செய்துகொள்ளக் கூடாமற் போகின்றது. அப்படியாயிருக்க, உங்கள் குல விருத்திக்காக ஓர் வருஷத்தில் சிறிது தொகையைச் செல விட்டாலென்ன!

வர்த்தகம்செய்துவரும் அன்புள்ள பிரபுக்களான சகோதரரே! உங்கள் குலம் மேன்பாடின்றி இருப்பதைச் சற்று ஆலோசித்து நாம் துவக்கியிருக்கும் இச் சபையைத் தாபரித்துவரும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நிற்க, ஷாப்புகளில் சம்பளத்திற்கு இருக்கும் பரத குலத்தவர்களும் தினம் ஒரு சதமாகச் சேர்த்து உதவிசெய்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இவர்களையும் அநாதப் பிள்ளைகளின பாதுகாப்பு மெம்பர்களாகப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்படும். இவ்வாறு அநேகர் இச் சபைக்கு உதவி புரியும்படிக்குத் தினம் ஒரு சதமாகச் சேர்த்ததைக்கொண்டு மாதக் கடைசியில் ஸ்டாம்புவாங்கி நமக்கு அனுப்பி வருகிறார்கள்.

சகோதரரே! வீண் காரியங்களில் செலவிடாமல், உங்கள் குல அநாதப் பிள்ளைகள் மடையர்களாயும் யாதொரு தொழில்துறை தெரியாதவர்களாயு மிருப்பதை நிவர்த்திக்கும்படி சற்றுக் கிருபைக் கண்ணோக்கியருளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்பார்ந்த சகோதரரே! இச்சபையில் சேர்ந்து தாபரித்துவரும் மெம்பர் மாருக்காக மாதந்தோறும் முதல் சனிக்கிழமையில் நம் குலத்தவர்களால் கட்டப்பட்ட, அர்ச். லூர்து நாயகியின் திருக்கெபியில் திவ்விய பூசை நடத்தப்பட்டு, அநாதச் சிறுவர்கள் திவ்விய நன்மை உட்கொண்டு, மெம்பர் மாருடைய கருத்துக்காக ஒப்புக்கொடுத்து வருகிறார்கள்.

பரதகுலச் சகோதரரே! இச் சபைக்கு உதவிசெய்ய விரும்புவோர் கூடிய சுருக்கில் தங்கள் நாமங்களைத் தெரிவிக்க வெகு தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்.

உங்களுக்காகத் தேவதாயை மன்றாடும்
பிரதர். ஜோசப் கோன்சால், F. B.
Our Lady of Lourde's Benefit
Society for Barather Orphans.
MAGGONA.

---

### சங். பிரதர் ஜோசப் கோன்சால், F. B. அவர்களும் மக்கோனை சன் வின்சன் டி போல் மடமும்.

---

சங். பிரதர் ஜோசப் கொன்சால் அவர்கள் பிரான்சிஸ்கன் சந்நியாசக் கூட்டத்தில் உட்பட்டு 13-வருஷமாகிறது. இம்மடத்தில் சிங்கள அநாதப் பிள்ளைகளைத் தாபரித்து வருகின்றமையால் இவ் வனுதைகளுக்காக, அநேக பிரபுக்களிடத்தில் சகாயம் எடுத்துக் காணிகளை இவர்களுக்காக சேகரித்ததுமன்றி, இக்காணிகளை விருத்தி செய்யுமாறு வெயிலை வெயிலென்றும், மழையை மழையென்றும் பாராமல் வெகு ஊக்கமுடன் உழைத்துச் சீர்படுத்தினார்கள். இம்மடத்திலுள் மிக்கப் பிரமாண்டமான கல் மலையில், அர்ச். லூர்து நாயகியின் கெபியைக்கட்டியிருக்கிறார்கள். இத் திருக் கெபியினருகில், மலையைத் துளைத்துத் திவ்விய பூசைப்பலி பீடமும் அமைத்து இருப்பது மல்லாமல், மலைக்கு ஏறிச் செல்ல ஐந்து பெரிய படிகள் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. கெபியின் உச்சியில், தண்ணீர்ச்சுனை பொங்கிக்கொண்டோடுகின்றது. இக் கெபியைக் கட்டி முடிக்க, இம்மடத்தில் இருந்து சிறியதோர் உதவியும் பெறாமல், பாதகுல பிரபுக்களிடம் யாசகம் எடுத்து, எல்லாத் தலைமுறைகளிலும் அவர்கள் தேவதாயின் ஆசீர் பெறவும், அவர்களுடைய ஞாபகச் சின்னமாகவும் இத் திருக்கெபியை அமைத்தார்கள். இம்மடத்தின் எதிரே உள்ள கற்பாறைக் கு முன்னால் பெரியதோர் பத்திக்குரிய பாடுபட்ட சுரூபம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. திருப்பாடுகளின் ஸ்தலங்கள் இல்லாமையால் வந்திக்கத்தக்க கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர்களிடம் உத்தரவு பெற்று, ஜெருசலேம் கல்வாரி மலையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திரு ஸ்தலங்களைப் போல் இதில் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இந்த ஸ்தலங்களைப் பாதகுல வர்த்தகப் பிரபுக்கள் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்

வொரு ஸ்தலத்தை ஒப்பித்து அவர்கள் கொடுத்த பணத்தைக்கொண்டு, தேவனுக்காகவும், நம் குலத்தவர்களுக்குக் கிடைக்கும் தேவ அநுக்கிரகத்திற்காகவும் எந்நேரமும் கற்பாறை மேல் காத்திருந்து, 14-திருஸ்தலங்களையும் கருங்கற்களால் கட்டி முடித்துக்கொண்டு வருகிறார்கள். இம் மடத்தினுள் சங். பிரதர் அவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் தம்முடைய திறமையாலும் சொந்த பலத்தாலும் ஆகாமல் தேவதாயாகிய அர்ச். லூர்துநாயகியின் உதவியாலேயே செய்து முடித்திருக்கிறார்கள்.

இவை யெல்லாவற்றையும் விட சங். பிரதர் நமது அநாதப்பிள்ளைகள் விஷயமாய்க் கொண்டிருக்கும் கவலையே விசேஷித்த தெனலாம். ஆகையால் பிரபுக்களாகிய நீங்களும் நம் குலத்தவரான மற்றவரும் ஏகோபித்து சங். பிரதருக்கு உதவி செய்யும்படியாகவும், நமக்காக இம்மாத்திரம் கஷ்டப்பட்டு உழைத்து வரும் அவருக்கு ஆண்டவர் இம்மையில் நீடிய ஆயுளையும் தேகப்பலத்தையுந் தந்து காப்பாற்றுவது மல்லாமல் மறுமையில் நித்திய பேரின்ப வீட்டில் அவரைச் சேர்த்தருள கிருபை புரிய வேணுமாயும் மன்றாடுகிறோம்.

இங்ஙனம்,

தாழைமாநகர், பௌராவர், S. F. V.


## LADIES COOKERY. லேடிஸ் கூக்கரி,

இங்கிலீஷுடம் தமிழும் (விலை (1) ஒரே ரூபாய்தான்.)



அநேகமாய் கூக்கரிகளென்றால் சாமான்ய பெயரல்ல, அவர்களை டாக்டர்களென்று ஐரோப்பியர் புகழுகிறார்கள். ஆனதுகொண்டு அவர்கள் கூக்கரி சாஸ்திரத்தை நன்றாய் பயிலவேண்டியிருப்பதால் இப்புஸ்தகத்தை தற்காலத்திற்கேற்க பெரிய அந்தஸ்துள்ள குடும்பமுதல் சாதாரண குடும்பங்கள்வரையில் உபயோகமாகும் பொருட்டு அனேக இங்லீஷ் அரும் பெரும் கூக்கரிகளிலிருந்து செல்லாம் எடுத்துத் தொகுத்துச் சுலபமான விலைக்கு அச்சிட்டு விற்கப்படுகிறது.

அனேக கூக்கரிகள் அதாவது ஆட்டால் கூக்கரி, பாக்கெட் கூக்கரி, இராமசாமி கூக்கரி, இண்டியன் கூக்கரி இன்னும் அனந்தம் பார்த்திருந்தாலும் இந்த லேடிஸ் கூக்கரியில் அமைத்திருக்கும் விநோதமான தீனி வகைகளைப் பார்த்திருக்கவே மாட்டார்கள். இதில் அடங்கியிருப்பதாவன:—

சூப்புக்குமுன்னால் கொடுக்கும் ஆர்ஸ்டி ஒய்வர்ஸ், சூப்புகள், மீன் வகைகள், ஊசடீஸ்கள், ஜயிண்டுகள், ஷேவிகள், புடீங்கள், ஜல்லிகள், கிரீம்கள், ஐஸ் வகைகள், விதவிதமான கறிகள், விந்தாலிகள், பேஸ்ட்டுகள், கேக்குகள், தித்திப்பு வகைகள், பிஸ்கெட்டுகள், ரொட்டி செய்கிற விதம், ஈஸ்ட் முடிக்கிற பாகம், மிளகுத்தண்ணி பேஸ்டுகள், மசாலை இடித்துவைக்கிற பாகம், விதவிதமான பிக்கில் முடிக்கிற முறை, சட்ணி வகைகள், உப்புக்காச்சுகிற இரண்டுவிதம், காடிக் காச்சுகிறவிதம், பலவிதமான எஸ்ஸென்ஸுகள் முடிக்கிற உபாயம், மீட்டுகளுக்கு உப்பு ஏற்றுகிற முறை, சாசேஜுகள் செய்கிறபாகம், முட்டையைக் கெடாமல்வைக்கிற உபாயம், பாலைக் கெடாமல் 1 மாதம் பத்திரப்படுத்துகிற உபாயம், மீன்களை டின்னில் பாக்செய்கிற முறை, காப்பியை பேஸ்டாக்கி பத்திரப்படுத்துகிற உபாயம், முட்டையில்லாமல் கேக்குகள் முடிக்கிற தந்திரம், இன்னும் அனேக விதமான ரீசிட்டுகள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. இந்த புஸ்தகம் கூடியசீக்கிரம் செலவாகிப்போகும். இப்போது வாங்காதவர்கள் பின்னிட்டு வாங்கவில்லையே என்று விசனிக்காதபடி முந்தியே வாங்கிக்கொள்ள துரிதப்படவும். விலாசம், மஹா விகடதூதன் ஆபீஸ், மதராஸ்.

## English & Tamil Popular Vocabulary and Reader.

இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்புலர் வக்காபிலரி அன்ட் ரீடர். விலை குறைவு.

முன் விற்ற விலை ரூபா 2-8-0 தற்காலம் 1 ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவர்களும் முற்றிலும் இங்கிலீஷ் படிக்காதவர்களும், பெண்களும் சிறு பிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரசையாகவும் ஈரசையாகவும் மூவசையாகவும் வாக்கியங்களாகவும் இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழில் திருப்பி வாக்கியங்களையும் தமிழ்ப்படுத்தி யிருக்கின்றன. (திருஷ்டாந்தரமாக) Acho என்னும் மொழியை தமிழில் எக் என்றும் Cash என்னும் பதத்தை காஷ் என்றும் அவைகளின் அர்த்தத்தையும் எக்-வலி, காஷ்-பணமென்றும் Who are you என்பதை ஊ ஆர் யு; நீ ஆர் அன்றும் இப்படி பற்பலவகையாய் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனமாகவும் A B C & Z வரைக்கும் படங்களுடனும் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பயன் தரத்தக்க அருமையான இங்கிலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

மேற்படி விலாசம், மஹா விகடதூதன் ஆபீஸ், மதராஸ்.





The Good Pastor

# நல்ல ஆயன்


OFFICE OF THE REGISTRAR ... 2-DEC 1914 M. RAS.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம். 12. } டிசம்பர் 1914. { இலக்கம். 12.

## DIAMOND JUBILEE.

## வைர ஜூபிலி.

(முன்தொடர்ச்சி.)

### அமலோற்பவம் வேத சத்தியமாகக் கூறப்படுதல்.

அர்ச். கன்னிமரியம்மாள் ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த சத்தியத்தை எக்காலமும் திருச்சபையானது யாதொரு ஐயமின்றி உறுதியாய் விசுவசித்து வந்தது. அப்படியாயிருக்கக்கொள்ள, அவிசுவாசிகளான சில பதிதர்கள் அச்சத்தியத்தை மறுக்கத் துணிந்தமையால், 1854-ம் வருஷம் திருச்சபையை ஆண்டு நடத்திவந்த நமது கருணை நிறைந்த தந்தையான ஒன்பதாம் பத்திநாதரென்ற பாப்பானவர் அப் பதிதர்களின் வாயை அடக்கவும், சத்திய சபைக் கிறிஸ்துவர்கள் அத் துர்ப்போதனையில் சிக்கிக்கொள்ளாதிருக்கவும் தேவமாதா ஜென்மதோஷ மின்றி யுற்பவித்த சத்தியத்தை விசுவாச சத்தியமாக கிறிஸ்துவ உலகத்துக்கு விளம்பரப்படுத்த லானார். அதெப்படியென்றால், முன்சொன்ன 1854ஆ டிசம்பர்மீ 8உயன்று காலையில், ரோமாபுரியிலுள்ள அர்ச். இராயப்பரின் ஆலயம் மகா விநோதாலங்கிருதமாய்ச் சிங்காரிக்கப்பட்டிருக்க, 50,000 விசுவாசிகளுக்கு அதிகமாகவே அதில் வந்து நிறைய, இராசாக்களும், இராக்கினிகளும், பிரபுக்களும், ஸ்தானாதிபதிகளும், மந்திரி, பிரதானிகளும், சாமாசிகளும் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய வஸ்திராலங்கிருதர்களாய் தங்களுக்காகக் குறிக்கப்பட்டிருந்த ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள். இதற்குள்ளாக பனிக்கட்டிக்கு ஒப்பான சர்பிளிஸ் என்னும் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்ட ஆயிரக் கணக்கான குருப்பிரசாதிகளும், சிரேஷ்டர்களும், தங்களுடைய பட்டத்துக்கு அதியோக்கியமான உடுப்புகளைத் தரித்தவர்களும், சிரசில் மகுடம் பூண்டவர்களுமான மடாதிபதிகளும், மேற்றிராணிமார்களும், கருதினால்மார்களும் குறித்த நேரத்தில் பாப்பானவருடைய வத்திக்கான் அரண்மனையின்கண் போய்ச்சேரவே, 9-ம் பத்திநாதர் சொர்ணமயமானதும், மாணிக்கம், மரகதம், வைடூரியம் முதலிய கற்களாலிழைக்கப்பட்டதுமான உய

ர்ந்த பட்டுபீதாம்பரவஸ்திராபரண அலங்கிர்தராயும், சுக்கிரனையும் மங்கச்செய்யும்படியான வைரக்கற்கள் இழைத்த ஜோதிமயமான கிரீடத்தைச் சிரசில் தரித்தவராயும் சிறந்ததோர் ஆசனத்திலமர, சுந்தரமயமான அலங்கார ஆடை ஆபரணங்களை யணிந்த படைவீரர் அவர் வீற்றிருந்த ஆசனத்தைத் தங்கள் தோளில் ஏந்திச் சுமந்து செல்ல, அவருடைய மற்ற படைவீரர்கள் உத்தியோகஸ்தருடன் ஆயுதபாணிகளாய் அவருடைய திரு ஆசனத்துக்கு முன்னும் பின்னுமாய்ப் புடைசூழ்ந்துவர, முன்சொன்ன கருதினல்மார், மேற்றிராணிமார், மடாதிபதிகள், குருப்பிரசாதிகள் முதலியவர்கள் தங்கள் தங்கள் மூப்பு வரிசைக்கிரமமாயும் அணியணியாயும் சங்கீத வாத்தியங்களுடன் தேவாலயத்துள் பிரவேசித்தார்கள். அவ்விடத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த 50,000 க்கு அதிகமான விசுவாசிகளைப் பரிசுத்த பாப்பானவர் தமது வலதுகரத்தால் ஆசீர்வதித்து ஓட்டோலகராய்ப் பிரதக்ஷணஞ்செய்து திவ்விய நற்கருணை பீடத்துக்கு முன்வந்து சேர்ந்தமாத்திரத்தில், தமது ஆசனத்தினின்றிறங்கி முழந்தாட்படியிட்டுச் சற்றுநேரம் ஜெபித்தபின் பெரிய பீடத்துக்குச் சென்று கருதினல்மார்களின் வணக்காசாரங்களைக் கையேற்று திவ்விய பலிபூசை ஆரம்பித்தார்.

பூசையாரம்பித்துச் சுவிசேஷம் பாடி முடிந்தபின், கர்தினல்மாரில் மூப்போரானவர் பரிசுத்த பாப்பானவரின் சமுகஞ் சென்று, உலகிலுள்ள சகல கர்தினல் மேற்றிராணிமாரும், குருக்களும் விசுவாசிகளும் நெடுநாளாய் ஆசித்து மகா விநயத்துடன் மன்றாடும் விண்ணப்பத்தை அங்கீகரித்து அர்ச். கன்னிமரியாயின் மாசில்லா உற்பவத்தை வேதசத்தியமாகப் பிரசித்தஞ் செய்ய தயை செய்யவேண்டுமென்று விநயத்துடன் பிரார்த்தித்தார். அர்ச். பாப்பானவரும் அவருடைய விண்ணப்பத்தை அங்கீகரித்தவராய், இப்பெருங் காரியத்தை முடிவுசெய்கிறதற்குத் தமக்கு வேண்டிய ஞான ஒளியைப் பெற்றுக்கொள்ளும்படி (Veni Creator) "இஸ்பிரீத்து சாந்துவே எழுந்தருளிவாரும்" என்ற பாடலைத் துவக்கினார். இச்சங்கீதம் பாடி முடிந்ததும், திருச்சபையின் தலைவரும், அர்ச். இராயப்பருடைய பதிலாளியும், சேசுக்கிறிஸ்துநாதருக்குப் பதிலாய் திருச்சபையின் பிரத்தியக்ஷத் தலைவரும், அவருடைய ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பவருமாகிய 9-ம் பத்திநாத பாப்பு அவர்கள் தமக்கு அளிக்கப்பட்டிருந்த தேவ அதிகாரத்தின் பலத்தால் கிறிஸ்துவ உலகத்துக்கெல்லாம் சத்திய பிரமாணசட்டம் அளிக்கும்படி தமது சிம்மாசனத்தினின்று எழுந்து வேதசத்தியம் அடங்கிய பின்வரும் பத்திரத்தை வாசிக்கச் சித்தமானார்.

"இஸ்பிரீத்துசாந்துவின் தேவ ஏவுதலால் நமது ஈகிர்த கருத்து நிறைவேறும்படியாக நமது தனி ஜெபத்தியானங்களையும் ஒருசந்தி யுபவாசங்களையும் திருச்சபையின் பொது ஜெபங்களுடன் பிதாவாகிய சர்வேசுரனுக்கு அவருடைய சுதன்மூலமாய் இடைவிடாமல் சமர்ப்பித்து, மோக்ஷவாசிகளுடைய உதவியையும் மன்றாடி, தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவை பெருமூச்சுடன் பிரார்த்தித்தபின், பிரிபடாத பரம திரித்துவத்தினுடைய தோத்திரத்துக்காகவும், சர்வேசுரனுடைய கன்னித்தாயாருக்கு ஸ்துதி தோத்திரம் உண்டாகவும், கத்தோலிக்கு வேதத்தின் ஓட்டோலகத்துக்காகவும், சத்திய வேத பரம்புதலுக்காகவும் நமது கர்த்தராகிய சேசுக்கிறிஸ்துநாதருடையவும், அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பர் சின்னப்பருடையவும், நம்முடையவும் அதிகாரத்தைக் கொண்டும், *மிகவும் பரிசுத்த கன்னிமரியாயி உற்பவமான அந்த க்ஷணத்திலேயே, சர்வ வல்லவரான சர்வேசுரனுடைய இஷ்டப் பிரசாதத்தாலும், விசேஷ அனுக்கிரகத்தாலும், நரஜென்மத்தின் இரக்ஷகராகிய சேசுக்கிறிஸ்துநாதருடைய பேறுபலனாலும், ஜென்மப்

* என்று சொல்லும்போது பாப்பானவருடைய குரற் சத்தம் சற்று குறைந்தபோதிலும், வேதசத்தியத்தைக் கூறும்போது, அவருடைய இருதயத்தில் கிளம்பின மோக்ஷ சந்தோஷானந்தத்தை அடக்கக்கூடாமல் கண்களினின்று கண்ணீர் முத்துகள்போல் உதிர, அந்தப் பிரமாண்டமான ஆலயத்தில் கூடியிருந்த 50,000 பேருக்கதிக மானவர்களும் வெகு தெளிவாய்க் கேட்கக்கூடியபடி வாசித்தார்.



பாவத்தின் யாதொரு மாசுமின்றி காப்பாற்றப்பட்டாள் என்னும் படிப்பினை சர்வேசுரனால் படிப்பிக்கப்பட்டபடியால், இதைச் சகல விசுவாசிகளும் திடனுள்ள விசுவாசத்துடன் நம்பவேண்டுமென்று நாம் தீர்மானித்துக் கட்டளையிட்டுத் திட்டம் பண்ணுகிறோம். ஆகையால், யாராகிலும் (சர்வேசுரன் அப்படிச் சம்பவியாதபடிக்குத் தடுப்பாராக) நமது தீர்மானத்துக்கு விரோதமாய்த் தங்கள் இருதயத்தில் கருத்துணிவார்களாகில், தங்கள் தீர்மானத்தாலேயே தண்டனைக்குள்ளாகி, சத்திய வேதத்தினின்று அப்புறப்படுத்தப்பட்டு, திருச்சபையின் ஐக்கியத்தினின்று தள்ளப்பட்டார்களென்று அறிந்துகொள்வார்களாக. இதுவுமல்லாமல், இவ்வாறு தங்கள் இருதயத்தில் கருதுவதைத் தங்கள் வாக்காலானாலும் எழுத்தாலானாலும் அல்லது வேறெவ்வித வெளிக்குறிப்பாலானாலுங் காட்டத் துணிவார்களேயாகில் சட்டத்தால் நியமிக்கப்பட்ட தண்டனையாகிற திருச்சபையின் சாபங்களுக்கு ஆளாகிறார்கள்." என்று வாசித்து முடித்தார்.

### இது சர்வேசுரனால் உறுதிப்படுத்தப்படுதல்.

தமது பதிலாளியும் திருச்சபையின் தலைவருமாகிய அர்ச் பாப்பானவருக்குத் தம்மால அளிக்கப்பட்ட தேவாதிகாரத்தைக்கொண்டு பூலோகத்தில் அவர் கட்டின கட்டாகிற அமலோற்பவத்தின் விசுவாச சத்தியம் தம்மாலும் பரலோகத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்று உலகவாசிகளுக்குப் பகிரங்கமாய்க் காட்ட நமதாண்டவர் சித்தங்கொண்டுத் தமது தாயாரின் மூலமாகவே, அதை வெளிப்படுத்தலானார். அதெப்படியென்றால்:

தேவமாதா ஜென்மதோஷமின்றி உற்பவித்தாள் என்றதை வேதசத்தியமாக நம்பி விசுவசிக்க வேண்டுமென்று சகல கிறிஸ்துவர்களுக்குங் கட்டளையிட்டான பிறகு, ஐந்து வருடங்கள் சென்று அதாவது 1859-ம் ௵த்தில் சிறந்த கத்தோலிக்குத் தேசமாக விளங்கின பிரான்ஸிலுள்ள லூர்து என்னும் பட்டணத்திலிருந்த ஒரு சிறு மலைக்குகையில் தேவகன்னிகை பிரசித்தமாய் ஒரு ஏழையான சிறு பெண்ணுக்குப் பலதரம தரிசனமாகி அவளுக்குப் பல இரகசியங்களைத் தெரிவித்ததுமல்லாமல், தமது பேரால் அத்தலத்தில் ஓராலயங் கட்டவேணுமென்று கட்டளையுங்கொடுத்து தமது நாமம் "அமலோற்பவம்" என்று அறிவிக்கவுஞ் சித்தமானாள். அந்நாள் முதல் அத்தலத்தில் நடந்துவருகிற அற்புதங்களுக்கு எண்ணிக்கையில்லை. சத்திய கிறிஸ்துவர்களமாத்திரமல்ல, எண்ணிறந்த அஞ்ஞானிகள், துலுக்கர், பதிதர், பிரிவினைக்காரர், நாஸ்திகரும் முதலாய் அவ்வற்புதங்களுக்குச் சாட்சி கூறுகிறார்கள்.

இவ்வற்புதக்காட்சி முந்திநடந்து அதற்குப் பிற்பாடு அர்ச். பாப்பவர்கள் அதை ஒரு விசுவாச சத்தியமாய் உலகத்துக்குத் தெரிவித்திருப்பாரானால், அவர் விசுவாச சத்தியத்தைப் போதிப்பதில் வழுவா வரமுடையவரென்று விசுவசிப்பதற்கு நம்மிடத்தில் ஒருக்கால் சந்தேகம் பிறக்கக்கூடும். ஆனதினால் அர்ச். பாப்பவர்களைக் கொண்டு முந்தமுந்த தேவமாதா ஜென்மதோஷமின்றியுற்பவித்தாளென்று உலகத்துக்குத் தெரிவிக்கவும், பிற்பாடு அவர் போதித்தது சத்தியமானதென்று ஒப்பிக்க தேவமாதாவைக் கொண்டு அற்புதங்களால் நிச்சயிக்கவும் சர்வேசுரன் திருவுளமானார்.

ஆதலால், அர்ச். கன்னிமரியாயின் அமலோற்பவத்தின்மட்டில் அணுவளவும் சந்தேகங் கொள்ளாமல் மெய்யான பக்தியும் உயிருள்ள விசுவாசமும வைப்போமாக. எவ்வளவுக்கு இந்த விசுவாசம் நம்மிடத்தில் விளங்குமோ அவ்வளவுக்கு அவ்வாண்டவளுடைய இரக்கத்துக்கும் ஆதரவுக்கும் உதவி சகாயங்களுக்கும் நாம் பாத்திரவான்களாவோமென்பதற்கு ஐயமில்லை. அதேனென்றால், இவ்வாண்டவளுடைய அமலோற்பவமே நம்முடைய இரட்சண்யத்துக்குக் காரணமாயிருந்தது. அப்படியாயின், அவளுடைய அமலோற்பவத்தின் பேரில் பக்தி வைக்கிறவர்களான நாம் இக்கண்ணீர் கணவாயிலிருந்து காப்பாற்றப்படாமற் போவோமோ? பரிச்சேதமுமில்லை. இம்மாசம் 8உ அர்ச். கன்னிமரியம்மாள் அமலோற்பவியாய் உற்பவித்தது விசுவாச சத்தியமென்று திருச்சபைக்கு அறிவிக்கப்பட்டுச் சரியாய் 60 ௵ ஆகிறபடியால், அன்றையத்தினம் [illegible]

வைரஜூபிலி கொண்டாட்டம். அத்தினத்தை நாம் ஒரு சாதாரண நாளாகச் செலவழியாது, அமலோற்பவ மாதாவை ஏற்றிப் போற்றித் துதித்தும், நம்முடைய ஆத்துமத்தை நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் பரிசுத்தப்படுத்தியும், திவ்ய நற்கருணை உட்கொள்ளுவோமாக. மேலும் அப்பரிசுத்தத்தனத்தில் நிலைக் கொள்ளவும், நாளுக்கு நாள் அதில் விருத்தியடையவும், கடைசியாக பாக்கியமான மரணமடையவும் வேண்டிய தேவாநுக்கிரகத்தை யடைந்து கொடுக்க அவ்வாண்டவளை நோக்கி மன்றாடுவோமாக.

---

## S. I. CATHOLICS & THE EUROPEAN WAR.

## தென்னிந்தியா கத்தோலிக்கரும் ஐரோப்பிய யுத்தமும்.

---

சென்ற அக்டோபர்மீ 22-ம் தேதியன்று, சென்னை இராயபுரம் "பிரசன்டேஷன் கான்வென்ட்" என்னும் ஐரோப்பிய கன்னியாஸ்திரிமடத்துப் பள்ளிக்கூடத்தின் கண் தென்னிந்திய கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தைச் சேர்ந்த சென்னை நகர்க் கிளைச்சங்கத்தார் கூடிய பொதுக் கூட்டத்தில், சென்னை அர்ச். கபிரியேல் கலா சாலை உபாத்தியாயர்களில் ஒருவராகிய ம-ள-ள-ஸ்ரீ எஸ். செல்வராஜு ரெட்டியார் பி. ஏ. அவர்கள், "தென்னிந்திய கத்தோலிக்கரும் ஐரோப்பிய யுத்தமும்" என்னும் விஷயத்தின்பேரில் செய்த உபந்நியாசத்தின் சாரசங்கிரகம் பின்வருமாறு:—

### யுத்தத்துக்குக் காரணம்.

இவ்வருஷம் ஜூன் மாதம் 28தேதியன்று ஆஸ்டிரியா தேசத்தின் இளவரசரை ஓர் பாதகன் சாராஜீவோ என்னும் நகரில் சுட்டுக்கொன்றதாக நமக்குத் தந்தி சமாச்சாரம் கிடைத்தது. அப்போது இப்பாதகக் கொலையானது இதுவரையில் கண்டும் கேட்டுமிராத இத்தகைய பிரமாதமான யுத்தத்தை உண்டு பண்ணிவிடுமென்று நினைத்தாரெவருமில்லை. ஆயினும் இக்கொலையே இந்த யுத்தத்துக்குப் போதுமான உபகரணமாயிருந்தது. அல்லாமலும் போருக்கு முக்கியமான உட்காரணங்களும் பல உண்டு. நொண்டிக்குதிரைக்கு சறுக்கினது சாக்கு என்னும் பழமொழிக் கொப்ப மேற் சொல்லப்பட்ட ஆஸ்டிரியா இளவரசரின் கொலையை வெளிக் காரணமாகக் கொண்டு, பால்கன் மாகாணங்களில் ஸ்வாதீனம் பெற்று கொஞ்ச நாளைக்கு முன் வெகு சாமர்த்தியமாய்த் துருக்கியோடு போராடி வெற்றிபெற்ற செர்வியாவிலுள்ள ஸ்லாவ் தேசத்தாரின் தூண்டுகோலால் இக்கொலையானது நடத்தப்பட்டதென்று ஆஸ்டிரியர் நம்பி, செர்வியாவில் இக்கொலைக்குக் காரணஸ்தராய் எண்ணப்பட்டவர்களைப் பிடித்து, தக்க விசாரணைசெய்து தண்டிக்க வேண்டுமென்றும், தன் தேச சுவாதீனத்துக்கு மாறான சில நிபந்தனைகளைச் செர்வியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இவைகளுக் குடன்படாவிடில் போருக் காயத்தமாகலாமென்றும் செப்பி ஷை ஆஸ்டிரியர் ஒரு கடிதத்தை எழுதி செர்வியாவுக் கனுப்பினர். சிறிய தேசமாகிய செர்வியா கூடிய வரையில் தாழ்மையாகவும் தன் தேச சுவாதீனத்துக்குப் பழுதில்லாமலும் பதில் உடனே அனித்தபோதிலும், ஆஸ்டிரியாவானது அதற்கிணங்காமல் முரட்டுத்தனமாய் யுத்தம் ஆரம்பித்து விட்டது. செர்வியாவுக்குப் பக்கத் துணையும் பாதுகாவலுமாய் நிற்பது ரஷ்யா. செர்வியா பக்கம் ரஷ்யா இருப்பதுபோல், ஆஸ்டிரியாவுக்கு உதவியாய் ஜெர்மனி நின்றது. ஜெர்மனி 1870 வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தோடு யுத்தம் செய்து ஜயமடைந்ததிலிருந்து வெகு கர்வங்கொண்டு, அது முதல் இதுகாறும் யாரைப் போருக் கழைக்கலாம், காரணம் ஒருசிறிது எப்போ தகப்படுமென்று, போருக்கு வேண்டிய முயற்சிகள் யாவும் வெகு சுறுசுறுப்பாயும் ஊக்கத்துடனும் செய்து வந்திருப்பது உலக மறிந்தவிஷயம். ஐரோப்பாவைச் சேர்ந்த பல தேசத்தார்க் குள்ளும் முதன்மையாக நின்று, கூடுமானால் இப்பூதல மனைத்தையும் ஒரு தனிக் குடையின் கீழ் ஆளவேண்டும் என்னும் பேராசை ஜெர்மனிக்கும், முக்கியமாய் அதின் சக்ரவர்த்தியாகிய கெய்சருக்கும் உண்டு. ஜெர்மனியரோ வெகு புத்தி சாலிகள், பலிஷ்டர், நன்றாய்ப் படித்தவர்கள், சுறுசுறுப்புள்ள உழைப்பாளிகள். லௌகிக சீர்மைகளை அதிகமாய் நாடினவர்கள். ஜனப்பெருக் குடையவர்கள். நாளடவில் தந்தேயத்தை விட்டு வெளி நாட்டிற் குடியேற வேண்டும் என்னும் அவாவுடையவர்கள். தங்கள் வியாபாரத்தை விர்த்திசெய்து, உலகத்தின் முக்கிய பாகங்களை யெல்லாம் தமது வியாபாரஸ்தலமாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் பேராசை கொண்டவர்கள். பூமிமீது யுத்தம் புரிவதில் மிக்கப் பிரக்கியாதி பெற்றவர்கள். கடலின் மேற் கப்பற் சண்டையிலும் பேரெடுக்க வேண்டும் என்னும் ஆவலோடு தங்கள் கப்பற் சேனையைப் பல்விதத்தும் பெருக்கிக்கொண்டு வந்தவர்கள். பின்னூற்கூறிய எண்ணங்கள் நிறைவேற இதர தேசத்தார் இடங்கொடார் எனவுணர்ந்து, போராடியேனும் தங்கள் ஆவலைப் பூர்த்தி பண்ணிக்கொள்வதே சரியென, அதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் யாவும் செய்துவந்தனர். இப் பேராசைக் குடர்தையாயிருந்து, ஜெர்மனி கையில் பம்பரத்தைப்போல் அதன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டப்பட்டு வருவது பேதை ஆஸ்டிரியா! ஆனாலும் இதற் கிடங்கொடாமல் ஜெர்மனியை எதிர்க்க இருக்கும் தேசங்கள் பல. மேலும் ஜெர்மனி, ஆஸ்டிரியா, இத்தாலி ஆகிய இம்மூன்று தேசங்களுக்குள்ளும் ஓர்வித சமாதான ஐக்கிய உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதன்படி இதைச் சேர்ந்தவர்கள், சண்டைகாலத்தில் ஒருவர் மற்றவருக்குத் துணையாயிருந்து போர்புரிய வேண்டியதாம். இதைப் போலவே பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து என்னும் இம்மூன்று தேசங்களுக்குள்ளும் ஒருவித நேச உடன்படிக்கை உண்டு. இவ்வாறு ஐரோப்பாவிலுள்ள முக்கிய தேசங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருப்பதால், ஆஸ்டிரியர் செர்வியர்மேல் தொடுத்த போர், இப்போது நடக்கும் மகத்தான ஐரோப்பிய யுத்தமாக முடிந்தது.

செர்வியாவுக் குதவி செய்ய ரஷ்யா வரவே எப்போதென்று காத்திருந்த ஜெர்மனி யுத்தத்தில் கலந்தது. ரஷ்யர் சேர்ந்தமையால், பிரான்ஸ் சும்மா இருக்கக்கூடாமல் தானும் சண்டையில் தலையிட்டது. ஜெர்மனி பிரான்ஸுடன் போர்புரியும் பொருட்டு, பொதுவானதென்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு, தேச சுவாதீனம்பெற்றுள்ள பெல்ஜியம் என்னும் சிறுநாட்டின் வழியாக தன் சேனைகளைக் கொண்டுபோக முனைவே, அத்தேசத்தார் கூடாதென்று தடுத்தனர். நீதி நெறியைக் கைப்பிடித்தொழுகும் ஆங்கில நாட்டார், யுத்த சட்டமுறைப்படி ஜெர்மனியர் பெல்ஜிய தேசத்துக்குள் நுழையலாகா தென்றனர். ஜெர்மனியர் இதற்கு இணங்காததாலும், தமது சிநேகத் துணைவரான பிரான்ஸ் தேசத்தாருக்குச் சகாயஞ்செய்ய வேண்டியவர்களானதாலும், ஜெர்மனி ஜயமடைந்தால், தங்களைச் சும்மாவிடாதென நன்கறிந்தவர்களானதாலும், நமது ஆங்கிலேயர்களும் துடையாக இப்பெரும் போரில் கை கலக்க வேண்டியவர்களானார்கள்.

மேற்கூறியவற்றால் இப்போருக் காதிகாரணமாயுள்ள தேசம் எது வென்பது சொல்லாமலே விளங்கும். கடந்த மூன்று மாதங்களாய் இந்த யுத்தமானது மிக்க கொரோமாய் நடந்துவருகின்றது. ஆஸ்டிரியரும் செர்வியரும் ஒருபக்கம்; ஆஸ்டிரியரும் ரஷ்யரும் ஒருபக்கம்; ஜெர்மனியரும் ரஷ்யரும் ஒருபக்கம்; ஜெர்மனியரும் பெல்ஜியரும் ஒருபக்கம்; ஜெர்மனியரும் ஆங்கில பிரான்ஸ்காரரும் ஒருபக்கம். இப்படியாக ஒருவர் ஒருவரை எதிர்த்துச் சண்டைசெய்வதால், ஐரோப்பியா முழுமையும் தற்சமயம் போர்க்களமாகவே இருக்கின்றது. இது போதாதென்று உலகத்தின் மற்ற பாகங்களிலும் மேற்கூறிய தேசங்களுக்குச் சொந்தமான நாடுகள் எங்கெங்கே இருக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் போர்நடந்து வருகிறது. ஜப்பான் என்னும் கிழக்குத்தேசம் ஆங்கிலேயரின் சிநேகத் துணையானமையால், அதுவும் இந்தக் கடும்போரிற்கலந்து, சீனாவில் ஜெர்மன் ஆட்சிக்குட்பட்ட ஒரு சிறிய பாகத்தைப் பிடிக்க முயன்றுவருகிறது. இந்த யுத்தத்தினால் உலகமெங்கும் கப்பல் போவது வருவது துர்லபமாய் விட்டமையால், வியாபாரத்திற்கு நேர்ந்திருக்கும் இடைஞ்சல் இவ்வளவவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆயினும் ஆங்கிலேயரின் யுத்தக்கப்பல் பலத்தால், கடல் வழி, ஒருவாறு பகைவர் யுத்த கப்பல்களின் தொந்தரை ஆபத்துக்களினின்றும் நீங்கி, வியாபாரக்கப்பல்கள் மேனாட்டுகளினின்றும் வருகின்றன. இவ்வளவுதானா! யுத்தத்தின் பிரதிபொலி நம் சென்னை நகரிலும் கொஞ்ச நாளைக்குமுன் கேட்க நேர்ந்ததை எவரும் மறவார். "எம்டன்" என்னும் சிறிய ஜெர்மன் யுத்தக்கப்பல் நம் சென்னை நகரின்மீது சில குண்டுகளைப் பிரயோகம் செய்ததானது, தற்கால யுத்தம் இத்தகையதென்று நம்மவர்க்குக் காட்டக் குறியே போதும். அது உண்டுபண்ணிய நஷ்டம் சிறிதே யாயினும், அதனால் நேர்ந்த

திகில் அளவற்றதாம்! அது இன்னம் அநேகரை விட்டு நீங்கிற்றில்லை.

எட்டன் செய்த இச்சிறிய வீரச்செயலே, இவ்வளவு திகிலை உண்டுபண்ணுமானால், ஐரோப்பாவில் தற்சமயம் பெரிய பீரங்கிகளாலும், ஆகாய விமானங்களாலும், இன்னும் தற்கால சாஸ்திர ரீதியாய் செய்துவைத் துள்ள கணக்கற்ற விதவிதமான ஆயுதப் பிரயோகங்களாலும் நடைப்பெறும் யுத்தத்தின் பயங்கரங்களும் கஷ்ட நஷ்டங்களும் எப்படியிருக்கும் என்று யாரால் சொல்லமுடியும்? ஆயிரங் கணக்காய்ச் சாகின்றனர்; எங்கெங்குமே இரத்தப் பிரவாகம்; எங்குமே பிணக்குவியல்; ஆயிரங்கணக்காய் வீரர் பகைவர் கைசிக்கித் தவிக்கின்றனர்; ஆயிரங்கணக்காய் வீரர் போர்க்களத்தில் படுகாயம் பட்டொழிகின்றனர்; போரில் சம்பந்தப்படாத மாந்தரில் அநேகர் படுந்துன்ப கஷ்டங்களுக்கும் பகைவர் கையில் அநுபவிக்கும் அவமான நிந்தைகளுக்கும் கணக்குண்டா? போர் நடவாத ஊர்களில் தெரிந்து தெரியாமல், தந்தையை இழந்த பிள்ளைகளும், கணவனை இழந்தமனைவியரும், மகனை இழந்த தாய்மாரும், காதலனை இழந்த இளமங்கையரும், இப்படியாக பல உறவினர் பந்து மித்திரர்களை இழந்த மாந்தர்படும் துன்ப வருத்தங்களைச் சொல்லவும் முடியுமா? இவ்விதமாய் ஒருவித காரணமுமில்லாமல் தற்சமயம் ஜெர்மனியர் கையில் தன் தேசத்தைப் போராடி முடியாமல் ஒப்புவித்து, இன்னம் சண்டை செய்துகொண்டிருக்கும் அச்சிறிய பெல்ஜியம் தேசத்தின் தற்கால நிலைமையே மிகவும் பரிதாபத்திற் குரியது. அங்கே பிரசித்தி பெற்ற நகரங்களும், இப்பூதலத்தின் ஆபரணங்கள் என்னும் அலங்கார தேவாலயங்களும் இடியுண்டு தீக்கிரையாய் விட்டன; பற்றி எரியும் ஊர்களும் கட்டிடங்களும், இரவைப் பகலாக்கி இரவென்றும் பகலென்றும் வித்தியாசம் சொல்ல இடமின்றி யழிந்தன. அத்தேச மாந்தர் தங்கள் வீடுவாசல் ஆஸ்திபாஸ்தி முதலியவற்றை இழந்து, போகுமிடந் தெரியாமல் நாலா திக்குகளிலும் ஓடி, தங்கள் உயிரைக் காப்பதற்காகப் படும்பாடு இவ்வளவென்று சொல்லி முடியாது. அநேகர் இங்கிலாந்துதேசம் போய் அபயம் புகுந்து அங்கே பராமரிக்கப்படுகின்றனர். அவர்களுடைய பரிதாபத்திற்குரிய நிலைமை எப்போது தீர்ந்து மீண்டும் அவர்களுடைய தேசம் சேர்வார்களோ தெரியவில்லை. தப்பிதமில்லாமல் இப்படித் துன்பப்படுதல் தற்கால நாகரீகத்தின் பயன் போலும்!

## கத்தோலிக்கு இந்தியர்களின் கடமைகள்.

யுத்தம் இவ்வாறு வெகு கடுமையாய் நடக்கிறது. சீக்கிரம் முடியும் என்னும் நம்பிக்கையே கிடையாது. இச்சமயத்தில் இந்திய கத்தோலிக்கராகிய நாம் செய்யவேண்டிய தென்னவென்று சற்று ஆராய்வோம். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே நமது திருச்சபையின் தலைவராயிருந்த பரிசுத்த பிதாவாகிய 10-ம் பத்திநாதர் எப்படியாவது இக்கொடும் போர் நிகழாவண்ணம் தம்மாலியன்றளவு ஆஸ்டிரியாவுக் கெழுதித் தடுக்க முயன்றார். முற்காலத்திலிருந்தது போல்தற்கால பாப்புமார்களுக்கு லௌகீக விஷயங்களில் அவ்வளவு அதிகாரம் இல்லையாதலால், காலஞ் சென்ற நமது பரிசுத்த பிதாவின் முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. இப்போரினால் நேரும் உயிர்ச் சேதமும் துன்பத் துரிதங்களும் இவ்வளவென்று நன்கறிந்த நமது ஞானபிதா, அதை விலக்க பட்டப் பிரயாசையின் அறிகுறியே அவர் சடுதி மரணம்! இந்த யுத்தந் தொடங்கின வுடனே நமக்குக் கிடைத்த நிர்ப்பாக்கிய செய்தி, பாப்பானவரின் மரணம் போரினால் நிகழ்ந்த தென்பதே! தம் பிரயாசை வீண் போனதாலும், இனி நடக்க விருக்கும் பயங்கரமான செய்திகளைக் கேட்க மனமில்லாதவர் போலும், கடைசிவரையில் இப்போர் சீக்கிரம் முடியும்படியாய் வேண்டிக்கொள்ளும்படி தம் ஞானப்பிள்ளைகளாகிய கத்தோலிக்கரை வற்புறுத்தித் தமக்கென்று நமதாண்டவராற் குறிக்கப்பட்ட மோட்ச சம்பாவனையைப்பெறுச் சுகிக்க, நமது பாப்பரசர் பரமபதஞ்சேர்ந்தார். உலகத்துக்கெல்லாம் அரசனுகிய கடவுளின் ராஜப்பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவரையே இந்த கொடும்போர் கொன்றுவிட்டது என்றால், வேறென்னதான் இது செய்யாது? அவருக்குப் பதிலாக இப்போதிருக்கும் நமது பரிசுத்த பிதா 15 ம் ஆசீர்வாதப்பர், இப்போர் விஷயமாய் தாம் பட்டத்துக்கு வந்தநாள் முதல் எடுத்துக்கொள்ளும்பிரயாசையால் "சமாதான பாப்பு" என்றழைக்கப்பட பாத்திரவானுவார் என்று சிலமேனாட்டுப் பத்திரிகைகள் சொல்லுகின்றன. அப்படியே இவர் சிங்காதனம் ஏறியதும் அனுப்பிய முதல் நிருபத்தில், இப்போர் கூடிய சீக்கிரத்தில் முடிவுக்கு வரும்படியாக சர்வேசுரனைப்



பார்த்து உலகெங்குமுள்ள கத்தோலிக்கர் எல்லோரும் ஜெபிக்கவேண்டும் என்று ஆக்கியாபிக்கிறார்.

இந்த யுத்தம் மனிதப் பிரயத்தனத்தால் நேர்ந்ததாயினும், தேவசித்தத்தால் மட்டுமே முடியவேண்டும் என்பது தெள்ளிதில் தெரிகிறதல்லவா? அழிப்பது சுலபம், ஆக்குவதரிது. மனிதர் அழிக்குந் திறனுடையவர்களே யன்றி, ஆக்குமாற்றல் உள்ளவரல்லர். ஆதலால் மனித முயற்சியால் தடுக்க முடியாத இப்பிரமாதப் போரென்னும் பெரும் வெள்ளத்தைத் தேவ உதவியாகிய அணையைக் கொண்டே தடுக்க வேண்டும். ஆகவே, நாமெல்லோரும் நமதனுதின ஜெபங்களில் இக்கருத்துடன் வேண்டிக்கொள்வதே கத்தோலிக்கராய நமது முதற் கடமையாம்.

இரண்டாவது:—இந்தியா தேசத்தவராகிய நம்முடைய கடமைகள் என்னவென்று பார்ப்போம். ஆங்கில நாட்டார் இப்போரிற் றலைமைவகித்து நடத்துகின்றனர் என்றால், அந்நாட்டரசராகிய மாட்சிமை தங்கிய ஜியார்ஜ் சக்ரவர்த்தியின் ஆட்சிக் கடங்கிய தேசங்களனைத்தும், அவர்களுடைய உதவிக்கேக வேண்டிய தவசியமல்லவா? அப்படியே சமர் ஆரம்பமானதும், உலகம் எல்லாம் பரவியுள்ள ஆங்கில ராச்சியத்தில் சிற்றரசர் முதல் சாதாரண ஜனங்கள் ஈறாகவுள்ள சகலரும் உலகின் பல திக்குகளினின்றும் நமதரசருக்கு உதவியாய் நின்று அவர் பக்கம் கடைசிவரையில் போர்புரிய தயாராயிருப்பதாகவும், அதற்கு வேண்டிய பண உதவி, படையுதவி முதலியவைகளை உடனே சேகரஞ் செய்தனுப்புவதாகவும் எல்லோரும் ஒரே வாக்காய் உறுதிமொழி கூறியதுமன்றி, செய்கையாலும் தம் வாக்கை மெய்ப்பித்துவருகின்றனர். ஆங்கில ராச்சியத்தின் ஒரு முக்கிய பாகமாகிய நம்மிந்தியாவிலுள்ள பலஜாதி மாந்தரும், ஜாதி மதபேதங்களை முற்றும் மறந்தவர்களாய் நம்மரசருக் குதவிசெய்ய முன்போந்த விஷயம் நாம் நன்கறிவோம். போரினால் பலவிதத்திலும் துன்பப்படுவோரின் பராமரிப்புக்கென்று நமது நகரிலும் மற்ற இடங்களிலும் ஏற்பாடு செய்துள்ள பல உபகாரநிதிகள் லட்சங் கணக்காய் குவிந்துவிட்டன. நம் தேசத்திலிருந்து ஒரு பெரும் இந்தியசேனை சமர்க்களத்தில் எதிரிகளுடன் தற்சமயம் வெகு சாமர்த்தியத்துடன் போர்புரிந்து வருகின்றது. இவ்வாறு இந்தியாவில் எங்கே பார்த்தாலும் சண்டை பேச்சு; கோவில்களிலெல்லாம் சமர் விரைவில் முடிவெய்தும்படியாய் பிரார்த்தனைகள் நடக்கின்றன. இந்தியா முழுவதுமுள்ள பலஜாதி சங்கங்களும் உடனே கூட்டங்கூடி இச்சமயத்தில் துரைத்தனத்தார் மட்டில் நாம் நடந்துகொள்ளவேண்டிய விதம் என்னவென் றெடுத்துக் காட்டி தங்களுக் கிருக்கும் ராஜபக்திநேச விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றனர். தம்மாலானவரையில் தமது ஜாதியாரிடமோ வகுப்பாரிடமோ பணவசூல் செய்து, மேற்கூறிய பல உபகாரநிதிகளுக் கனுப்புவதுடன், மற்றவர்களையுந் தூண்டுகின்றனர்.

இப்படி இந்துமதஸ்தரும், துலுக்கரும் மற்றவர்களும் செய்து வருகையில், எல்லா மதங்களினும் மேலானதென்றும், ராஜபக்திக்கும் சமாதானத்திற்கும் இருப்பிடமென்றும் எல்லோராலும் புகழப்படும் நமது மெய்ம்மறையைச் சார்ந்த தென்னிந்திய கத்தோலிக்கராகிய நாம் இச்சமயத்தில் என்ன செய்கிறோமென்றறிவது முக்கியமல்லவா? கோவில்களிலெல்லாம் நமது குருமார் ஏற்பாட்டின்படி உலக சமாதானத்திற்காக ஜெபம் செய்துவருகிறோம். ஆனால் நமது ஜனசமூக நன்மைக்காக நமது பிரதிநிதியாய் நின்றுழைத்துவரும் தென்னிந்திய கத்தோலிக்கச் சங்கம் இதுவரையில் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. சமர் துவக்கினதும் ஒரு விசேஷ கூட்டங்கூடி, நமது ராஜ விசுவாசத்தைத் துரைத்தனத்தாருக்கு தெரிவித்திருக்கலாம். நம்மாலானவரையில் சகாயநிதிகளுக்குப் பணம் வசூல் செய்தனுப்பி இருக்கலாம். அல்லது நம்மவரை அந்நிதிகளுக் குதவிசெய்யும்படித் தூண்டி இருக்கலாம். மற்றவர்கள் செய்வதுபோல் நாமும் நம்மாலானதைப் பகிரங்கமாய்ச் செய்யவேண்டிய தவசியமல்லவா?

கடைசியாய் இந்த யுத்தகாலத்தில் நமது கடமைகளை நன்குணர்ந்து, நாமெல்லோரும் ராஜபத்தியில் கொஞ்சமும் பின்னிடையாமல், ஏழைகளாயினும் தனவந்தராயினும் அவரவர் நிலைமைக்குத் தக்க திரவிய உதவி செய்யவேண்டும். மேலும் நம்மவரில் படித்தவர்களாயிருக்கப்பட்டவர்கள் தங்களைச் சுற்றியுள்ள படியாதவர்களுக்கு இப்போரின் விஷயாவிஷயங்களை எடுத்துக்காட்டி, அவர்ளுக்கு இராஜ விசுவாசத்தை யூட்டி அதில் அவர்கள் உறுதியாய் நிலை

நிற்கவேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளல் வேண்டும். முக்கியமாய் எம்டன் செய்த பாண வேடிக்கையிலிருந்து, வெடிச்சத்தம் கேட்கும் போதெல்லாம், "ஜெர்மன் வந்துவிட்டான்" என்னும் பெருந் திகில் கொண்டு வருந்தும் பேதைகளுக்கு வேண்டிய தைரியத்தைச் சொல்லி அவர்களைத் தேற்றல்வேண்டும். முக்கியமாய் தற்சமயம் யுத்தம் எவ்வாறு இருந்தபோதிலும் நமக்கெதிரியாகிய ஜெர்மன் தேசத்தின் காலநிலை முதலியவற்றைக் கவனித்தால், கடைசியில் ஆங்கில நாட்டாரே ஜெயம்பெற்று வெற்றிக்கொடி நாட்டுவோர் என்பது திண்ணம்! ஆதலால் வீண் திகில்கொண்டு, வீண் வார்த்தைகளைப்பேசி, பேதைமாந்தரின் பயத்தைப் பெருக்காமல், நமது பாப்பரசர் நம்மைக் கேட்டுக்கொண்டதுபோல், பிறக்கும்போது சமாதானத்தை இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்தவரும், இறக்கும்போதும் அச்சமாதானத்தை இவ்வுலகத்தில் நிலை நாட்டிச் சென்றவருமாகிய எல்லாம் வல்ல எம்பிரானை, சமாதானக் கடவுளை, சேசுவென்னுந் திருநாமம் பூண்ட தேசோமயானந்தனை அண்டி, அவர் திருவடி கமலங்களை நாவாரத் துதித்து, இந்த பயங்கரயுத்தம் விரைவில் முடி வெய்தும்படியாய் அநுதினமும் வேண்டிக்கொள்வோமாக.

S. Selva Raju.

---

## CHRISTIAN DOCTRINE.

## ஞானோபதேசம்.

### 11-ம் பாடம்.

### தேவதூஷணம்.

(முன் தொடர்ச்சி.)

---

6. **என்பேரில் இரக்கமாயிரு.**-வெகு காலத்துக்குமுன் ஒரு போக்கிரி கெட்ட வழியில் நடந்து சர்வேசுரனைப் பழித்து தேவதூஷணஞ்சொல்லி வந்தான். இந்தப் படுபாவி ஒருநாள் காட்டு மார்க்கமாய்ச் செல்லும்போது கையில் பிடித்திருந்த கத்தியை மேலே உயர்த்தி "பராபரவஸ்துவே, இதோ! இந்த நிமிஷத்தில் இக்கத்தியால் உன்னைத் துண்டுதுண்டாய் நறுக்குவேன்" என்று பைத்தியக்காரனைப் போல உளறினான். ஆ! என்ன அதிசயம்!! அந்நேரத்தில் ஆகாயத்திலிருந்து ஒரு இலை தாழ விழுந்தது. அதை அந்தச் சண்டாளப் பாவி கையில் எடுத்துப் பார்த்தபோது "என்பேரில் இரக்கமாயிரு" என்று பொன் எழுத்தால் எழுதப்பட் டிருந்ததை வாசித்து, அக்ஷணமே நடுநடுக்கத்துடன் முழங்காலிலிருந்து பக்ஷாதாபக் கண்ணீர் சிந்தி வேறே மனிதனாகி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான் (Stolz.)

7. **சலேத் மலையின் தரிசனை.**-சலேத் மலையில் தேவதாயார் இரண்டு இடைப் பிள்ளைகளுக்குத்தரிசனமான சங்கதி சகலருக்குந் தெரிந்த காரியமே. தரிசனைநேரத்தில் தேவமாதாவின் கண்களில் கண்ணீர் ததும்ப "உலகத்தில் அதிகரிக்கும் பாவாக்கிரமங்களைப்பற்றி என் திவ்விய குமாரனுக்கு அதிக கோபம் உண்டாகிறது. பாவாத்துமாக்கள் மனந் திரும்பா விட்டால் தேவகோபத்துக்கு உள்ளாவார்கள். தேவதூஷணமும், ஞாயிறு வாரங்களை மீறுதலும், சுத்த போசனம் ஒருசந்தி நாட்களை அநுசரியாமல் போவதும் மனுக்குலத்தின் முக்கிய பாவங்கள்" என்று அவ்விரு பிள்ளைகளுக்கும் திருக்கன்னிகையறிவித்தாள்.

(Cat. En. Ex.)

8. **இடியே! என்மேல் விழ பார்க்கலாம்.**—சிலவருஷங்களுக்குமுன் இங்கிலாண்டு தேசத்தில் நாட்டிங்காம் என்னும் ஊரில் பயங்கரத்துக்குரிய புயல் அடித்தபடியால் பெருஞ்சேத முண்டானது. அப்போது உண்டான பயங்கரத்துக்குரிய இடி முழக்கத்தால் ஊரார் பயந்து நடுங்கி இந்தப் பெரும் ஆபத்துவேளையில் தங்களைக் காப்பாற்றி இரக்ஷிக்கும்படி சர்வேசுரனைப் பார்த்து மன்றாடினார்கள். ஒரு வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் பயப்பட்டு வேண்டிக்கொண்டு இருக்குஞ் சமயத்தில் அக்கூட்டத்திலிருந்த ஒரு துஷ்டவாலன் மற்றவர்களைப் பார்த்து நகைத்து சர்வேசுரனைப்பழித்து "செபத்தால் என்ன பலன்?" என்று சொல்லி, எழுந்து ஜன்னலைத் திறந்து "ஓ! இடியே, என்மேல் விழ பார்க்கலாம்" என்று தேவதூஷணம் உரைத்த வுடனே, ஆ! பயங்கரம்! அந்த க்ஷணமே இந்தப் பாதகன் மேல் இடிவிழுந்து குருடனாய்க் கீழே விழுந்தான். இவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு



போகப்பட்ட கொஞ்ச நேரத்துக்குப்பிறகு தெளிவு உண்டாகவே, பயந்து நடுங்கி "ஸ்வாமி! என் பாவத்தைப் பொறுத்தருளும்" என்று சொன்னான். Howe.

9. **சேமிக்கப்பட்ட சிலுவை.**—இங் ஐந்து கிலாண்டைச் சேர்ந்த ஒரு ஊரில் புரோட்டஸ்டாண்டுவாலர் ஒரு கத்தோலிக் குஸ்திரீயின் வயலில் வேலைசெய்து விட்டு அவள்வீட்டில் அன்று இராத்திரி தங்கினர்கள். சாப்பிட்டானபின் இவர்கள் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு சிலுவைச் சுரூபத்தைக் கீழே இறக்கி, இது பாப்பு மதத்தாருடைய கடவுள் என்று இகழ்ச்சியாய்ச் சொன்னபின், "இதைக் குழியில் சேமித்துவிடுவோம். மூன்று நாள் உயிர்ப்பதைப் பார்க்கலாம்" என்று, அந்த ஐந்து பேரும் அத் திருச்சிலுவை சுரூபத்தை ஒரு குழியில் போட்டுப் புதைத்துவிட்டு நித்திரித்தார்கள். மறுநாள் அந்தத் துஷ்டர் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டபின் நடந்த சங்கதியையெல்லாம் அந்த வீட்டுக்காரி கேள்விப்படவே, மகாதுக்கங்கொண்டு பங்குஸ்வாமியாருக்கு இந்தப் பாதகர் செய்த தேவதுரோக வேலையைப் பற்றி அறிவித்தாள். இதைக் கேட்டஸ்வாமியாருங் கஸ்தியுற்று "இந்தப் பாதகர் இப்பெருந் தேவதுரோக வேலையை நடத்தினபடியால், அவர்கள் தங்கள் படுக்கையில் சாகமாட்டார்கள்" என்றார். அப்படியே சம்பவித்தது. சில காலத்துக்குப்பின் ஒருவன் தன் வண்டியிலிருந்து விழுந்து செத்தான். வேறொருவன் தன் குரல்வளையை அறுத்துக்கொண்டு மடிந்தான், இன்னொருவன் தன் எருதால் கொல்லப்பட்டான். நாலாவது துஷ்டன் ஒரு குழியில் விழுந்து இறந்தான். கடைசியானவன் உட்கார்ந்திருந்தபடி சடுதியில் மடிந்தான். (Gibson.)

10. **நரகமோ, மோட்சமோ!**-ஒரு ஊரிலுள்ள கிறிஸ்துவர்கள் ஞாயிற்றுக்கிழமை பூசைகாணும்படி கோவிலுக்குப் போகும் வேளையில் ஒரு கல் தச்சன் நடைசாலைக்காக சிற்பிவேலை செய்துகொண்டிருந்தான். கோவிலுக்குப் போனவர்களில் ஒருவன், தச்சனை நோக்கி "என்ன அப்பா! இன்று ஞாயிற்றுக்கிழமை யென்று அறிந்திருந்தும் வேலைசெய்கிறாய்! தேவ கற்பனையை மீறுவது சாவான பாவமாச்சுதே! நரகத்துக்குப் பயப்படுகிறதில்லையா?" என்றதைக் கேட்ட தச்சன் "போ, ஐயா போ, நரகமோ மோக்ஷமோ" என்ற தேவதூஷணம் சொன்ன க்ஷணமே, உயிரற்றுக் கீழே விழுந்தான். ஞாயிற்றுக்கிழமையை ஆசரியாதிருப்பவர்களே! எச்சரிக்கை. (Howe.)



---

## GNANAMANI III. PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 14-ம் அதிகாரம்.

---

சமுத்திரத்தில் நீந்தினாலும் நீந்தலாம்;
ஆனால் சமுசாரத்தில் நீந்துவதோ கஷ்டம்.

தலி! குமாரனாகிய தேவதாஸ் ஒழிந்துவாகிய ருக்மணியை மண முடித்துக் கொள்ளும்படி ஆசித்தசங்கதியைப் பற்றி விஸ்வாச நாயகரும் அவருடைய மனைவியும் கேள்விப்பட்டபோது, இந்தக் கலியாணத்திற்குச் சற்றேனும் இணங்கவே இல்லை. ஆயினும் ஒரு பக்கத்தில் தங்கள் குமாரனுடைய பிடிவாத குணத்தையேற்கெனவே அறிந்திருந்தபடியாலும், ஒரு ஆத்துமஞ் திருச்சபையில் சேர இருப்பதாலும் அதற்கு ஆக்ஷேபனை சொல்லாமல் இருந்தார்கள். தேவதாஸ் நாயகருடைய சிநேகிதரின் பிரேரணையின்மேல் விஸ்வாச நாயகர் தமது பந்துக்களுடன் சேர்ந்து ருக்மணியின் வீட்டுக்குப்போய் அவளுடைய தாய்தகப்பனுடன் பேசி, அவர்களுடைய குமாரத்தியைத் தங்கள் குமாரனுக்குக் கேட்டபோது யாதோர் ஆக்ஷேபனையுமின்றிச் சம்மதித்தார்கள்.

ருக்மணியும் தங்கள் தாய்தகப்பன் உத்தரவின்மேல், நாடோறும் கன்னியர் மடத்துக்குப் போய் மந்திரம் குறிப்பிடங்களைக் கற்றுவந்தாள். அவள் முன் மடத்துப் பள்ளிக்கூடத்தில் படித்தவளும் புத்திசாலியுமா யிருந்ததைப் பற்றி வெகு சொற்பகாலத்தில் தான் கற்க வேண்டியதெல்லாம் மனப்பாடஞ் செய்தாள்.

மடத்துத் தாயாரோ வெனில் ருக்மணி ஞானோபதேசங்களை மனப்பாடமாய்ச் சிறிய பிள்ளைகளைப்போல் கற்றுக்கொள்வது போதாதென்று, கற்றுக்கொண்டவைகளுக்கு வியாக்கியானஞ் செய்து உதாரணங்களால் அவளுக்கு வேத சத்தியங்களை விளக்கிக் காட்டினதைப்பற்றி அந்தப் பெண் குருவானவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் திருப்தியான மறுமொழி கொடுத்ததின்மேல், மரியம்மாள் என்னும் நாமதேயத்துடன் ருக்மணிக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்.

ருக்மணி ஞானஸ்நானம் பெற்றபின், பெண், மாப்பிள்ளை ஆகிய இருதரத்தாரின் பந்துக்கள் கலந்து பேசி, ஆறுமாதத்தில் கலியாணத்தை முடிக்கத் தீர்மானித்தார்கள். தேவதாஸ் நாயகரும் தம்மோடு வந்தவர்களுடன் மதராசுக்குத் திரும்பிப்போனார்.

மடத்துத் தாயாரின் விடாமுயற்சியாலும் பிரயாசையாலும் ருக்மணி வேதத்தையும் அதன் சத்தியங்களையும் அறிந்தபின், தேவத் திரவிய அனுமானங்களையும் அவைகளின் அருத்தத்தையும் தீர்க்கமாய் அறிந்துகொண்டாள். பாவ சங்கீர்த்தனஞ் செய்து, குறிக்கப்பட்ட நாளில் மகா பக்தி விஸ்வாசத்துடன் ருக்மணி சம்மனசுக்களின் விருந்தாகிய பரமதேவ நற்கருணையை உட்கொள்ள பாக்கியம் பெற்றாள். அதுமுதற்கொண்டு ருக்மணி அந்திசந்தி ஜெபங்களைச் செய்வதில் தவறினவள் அல்ல. நாடோறும் திவ்விய பூசை காண்பாள். ஞாயிற்றுக்கிழமை தவறாமல் நன்மை வாங்குவாள். உத்தரிய சபையிலும் செபமாலை சபையிலும் பேர்கொடுத்து அச்சபைகளின் ஒழுங்கு மீறாமல் நடந்துவருவாள். இவளுடைய பத்தி விசுவாசத்தைக் கண்ட விஸ்வாச நாயகருக்கும் அவர் மனைவி கமலமரியம்மாளுக்கும் மெத்த சந்தோஷமுண்டானது.

ருக்மணி புதுநன்மை வாங்கினபின், அடிக்கடி மடத்துக்குப்போய் தாயாரம்மாளையும் மற்ற கன்னியரையும் சந்தித்து வருவாள். ஒருநாள் இவள் தாயாரம்மாளுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, தனக்குக் கலியாணமானபின் தான் நடந்துகொள்ளும் விதத்தைத் தனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அப்போது தாயாரம்மாள் சந்தோஷப்பட்டு நல்லதென்று பக்கத்தில் உட்காரச்சொல்லி, பின்வருமாறு சொல்வார்கள்:—

சமுத்திரத்தில் நீந்துவதிலும் சமுசாரத்தில் நீந்துவது கஷ்டமென்பார்கள் சாதாரண ஜனங்கள். இது சரியான பழமொழி யல்ல. அதெப்படியெனில், எந்த அந்தஸ்திலும் கஷ்டசங்கடம் இருப்பதுபோலச் சமுசார அந்தஸ்திலு முண்டு. பிறராலும் புருஷனாலும் பிள்ளைகளாலும் பல தொல்லைகள் உண்டாவது சகஜமே. ஆனால் இல்லறவாழ்க்கையில் உட்படுவதற்குமுன் செய்யவேண்டியதைக் குறைவற நிறைவேற்றினால், பின்னுக்கு வரும் தொல்லைகளைச் சுளுவில் சகித்துக்கொள்ளலாம்.

ருக்.—கலியாணத்துக்கு முன் செய்ய வேண்டியவை என்ன அம்மா?

தா.—துராசாபாசத்தால் ஏவப்பட்டு,மெய்விவாக அந்தஸ்தை ஆசிக்கக்கூடாது. சின்ன தொபியாசைப்போல, நல்ல கருத்தோடும் செபதப முதலிய புண்ணியங்களோடும் அந்தத் தேவத் திரவிய அனுமானத்தைப் பெறவேண்டியது. விசேஷமாக விவாகஞ்செய்துகொள்ளுகிற நாளன்று மனதிற் கிளம்பும் ஆசா பாசமுதலிய கெட்ட எண்ணங்களை முற்றுந் தள்ளிவிட்டு, கலியாணப் பூசையைப் பக்தி விஸ்வாசத்துடன் கண்டு சர்வேசுரன் தன்னையும் தன் பத்தாவையும் ஆசீர்வதித்து; தாங்கள் தேவசித்தத்திற்கு ஒத்து நடந்து; சமுசாரத்தில் உண்டாகும் குற்றங் குறைகளையும் தொல்லை சங்கடங்களையும் பொறுமையுடன் சகித்துக் கொள்ளும்படிக்கான தேவ இஷ்டப்பிரசாதத்தை 'யருளும்படி சர்வேசுரனை மன்றாடவேண்டியது.

இப்பேர்ப்பட்ட சுகிர்த கருத்தின்றி கலியாணத்தை ஒரு தமாஷான காரியமாகப் பாவித்து, இல்லற வாழ்க்கையில் பிரவேசிப்பவர்களுக்குப் பின்னுக்குச் சண்டை சச்சரவும் சமாதானக் குறைவும் உண்டாகி, ஒருவர் மற்றொருவருடைய குற்றத்தைப் பொறாமல் இருப்பதைப்பற்றி புருஷன் பெண்சாதிக்குப் பாரச் சிலுவையாகவும், பெண்சாதி புருஷனுக்குப் பாரச்சிலுவையாகவும் இருந்து மகா வருத்தத்துடன் தங்கள் காலத்தைக் கழிப்பார்கள்.

ருக்.—அப்படியானால் மெய் விவாகத்திற்கும் ஜெபம் செய்யவேண்டு மென்கிறீர்களோ?



தா.—ஆம், கலியாணத்திற்கு முடிவு கட்டினபின் இருவரும் நாடோறும் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி, மற்றவர்களையுந் தங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, ஒரு சந்தி உபவாசம் பிடித்து அதற்குத் தகுந்த முஸ்திப்பு செய்வது உத்தமம். மேலும் சமுசார அந்தஸ்திலுள்ளவர்களுக்கு ஞானக்கண்ணாடியாய் விளங்கின கன்னித்தாயாரையும் அர்ச். சூசையப்பரையும் இரபேல் சம்மனசையும் பார்த்து பக்தியுடன் மன்றாடவேண்டும்.

ருக்.—பிறகு?

தா.—கலியாணத்திற்கு முந்தின நாள் நல்ல பாவ சங்கீர்த்தனஞ் செய்து, அன்று தங்கள் கருத்துக்காகப் பூசைசெய்து ஒப்புக்கொடுக்கும்படி குருவானவரைக் கேட்டுக்கொண்டு, பக்தியுடன் நன்மை வாங்கவேண்டியது. பிறகு பூசை நேரத்தில் குருவானவர் இருமுறை தங்களுக்காகச் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடித் தங்களை ஆசீர்வதிக்கும்போது, குருவானவருடைய கருத்துடன் ஏகோபித்துத் தேவ ஆசீர்வாதத்தை மன்றாடவேண்டியது. இப்படிச்செய்தால் ஞான விவாகமாகிற தேவத்திரவிய அனுமானத்தையும் அதற்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ருக்.—அப்படிச்செய்தால் பிற்காலத்தில் கஷ்டம்; சங்கடம், சண்டை சச்சரவு முதலியவை குடும்பத்தில் உண்டாகாதோ?

தா.—நீ சொல்லுகிற துன்பங்கள் உண்டாகாது என்று சொல்லேன். ஆனால் நல்ல ஆயத்தத்தோடு சமுசார அந்தஸ்தில் உட்படுபவர்களுக்கு, முன் சொன்ன துன்ப துரிதங்கள் உண்டானபோதிலும் அதைச் சுளுவில் ஜெயிக்கவும் சகிக்கவும் வேண்டிய ஞான உதவியைப் பெற்றுக்கொள்வார்கள்.

ருக்.—நல்லது, தாயாரே! அப்படியே செய்கிறேன். கலியாணத்திற்குப்பின் நான் செய்ய வேண்டியது இன்னதென்று தெரியச்செய்தால் நலமாயிருக்கும் அம்மா!

தா.—மெத்த சந்தோஷத்துடன் மறுமொழி சொல்வேன். சமுசார அந்தஸ்தில் இருப்பவர்களுக்கும் சிற்சில ஒழுங்கு இருப்பது நலம். காலையில் எழுந்திருந்தவுடனே சிறு செபம் சொல்லி, முகம் கழுவிக்கொண்டு திவ்விய பூசைக்குப்போய் அங்கேயே காலை ஜெபம் செய்து, வீட்டுக்குத் திரும்பி வந்து வேலை பார்ப்பது உத்தமம். நீ வாசிப்பப் பெண்ணாயிருப்பதைப் பற்றி ஐந்தரை மணிமட்டும் நித்திரை செய்யலாம். ஆறு அடித்தபின் விசேஷ முகாந்தரமின்றி படுக்கையிலிருப்பது சரியல்ல. நாடோறும் கால்மணி நேரமாகிலும் ஞானவாசகம் வாசிப்பது நன்று.

ருக்.—என்ன புஸ்தகம் வாசிக்கலாம் தாயாரே?

தா.—நித்தியப் பிரசங்கம் என்னப்படும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திர புஸ்தகம், இல்லற உத்தியானம், இன்னும் எத்தனையோ நல்ல புஸ்தகங்கள் உண்டு. அப்புஸ்தகங்களை வாங்கி வாசிப்பதால் அநேக ஞான நன்மை அடையலாம். இரவில் நித்திரைக்குப்போவதற்கு முன் இராச் செபம் சொல்வது நல்ல வழக்கம். குடும்பத்தோடு ஏகோபித்து இச் செபத்தைச் செய்வது மெத்த நன்மையைப் பயக்கும். நல்ல கிறிஸ்துவர்களுக்குள் இந்த நல்லவழக்கம் சர்வ சாதாரணம். தேவதாயாரைக் குறித்து 53-மணி செபமாலையை யெந்தக் காரணத்தை முன்னிட்டும் விட்டுவிடவேண்டாம்.

சனிக்கிழமைதோறும் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தேவ நற்கருணை உட்கொள்ள மறக்கவேண்டாம். இப்போது நான் சொன்னவைகளை மறவாமல் மனதில் வைத்துக்கொள்.

ருக்.—இவ்வளவுதானா தாயாரே?

தா.—இதைச் சரியாய் அனுசரித்தால் போதுமம்மா. அதிக காரியங்களைச் செய்ய முயன்றால் முதலுக்கே மோசமுண்டாகும். அதாவது, காலத்தில் ஒன்றையுஞ் செய்யாமல் விட்டுவிடும்படி சம்பவிக்கும். நானிப்போது சொன்னவைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரித்தால் வேறு புண்ணியக் கிருத்தியங்களை அனுசரிக்கத் தானாகவே உனக்கு உற்சாகமுண்டாகும்.

உனக்குக் கலியாணம் ஆனபின், சகலத்திலும் நீ உன் புருஷனுக்குப் பிரியப்பட்டு நடக்கப் பிரயாசைப்படுவது உன்பேரில் சுமந்த பெருங்கடன். "ஸ்திரீகளே உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்." என்று வேதத்தில் கற்பிக்கப்பட்டிருப்பதுபோல, உன் புருஷனை நீ சிநேகிப்பதுடன்; அவருக்கு அமைந்து கீழ்ப்படிவது உன் கடமை. சில பெண்கள், தங்கள் புருஷன்மார் தாங்கள் கேட்பதையெல்லாங் கொடுத்துத் தங்கள் கருத்திற்கு எதிரிடை சொல்லாதிருக்கு

மட்டும் அவர்கள் சொற்படி செய்வார்கள். ஒரு கோபச் சொல்லோ எதிரிடையான வார்த்தையோ புருஷன் வாயிலிருந்து வந்தவுடனே, முகமாறி, முறுமுறுத்துக் கேட்கும் கேள்விகளுக்கு மாறுத்தரம் சொல்லாமல், சண்டித்தனங் காட்டி, வழக்கம்போல வேளைக்குச் சமைக்காமலும், சமைத்தாலும் உருசிகரமாய்ச் செய்யாமல் வெட்டிக்குச் சமைத்தும் போடுவார்கள். இவர்களை நீ பின்செல்ல வேண்டாம் ருக்மணி. சந்தோஷத்திலும் துக்கத்திலும் உன் கணவனுக்குக் கீழ்ப்படிய கற்றுக்கொள்.

இன்னுஞ் சில ஸ்திரீகள் தங்கள் புருஷர் மேலுள்ள கோபத்தால் வெறிகொண்டு அவர்கள்மேல் சீறி விழுந்து, அவர்களை முகதாவில் திட்டாவிட்டாலும் நாய், பூனை, ஆடு, மாடு முதலியவற்றின்மேல் சாக்குப்போட்டு திட்டி, தூஷித்து, பிள்ளைக் குட்டிகளை நியாயமின்றி யடித்து வைது, இப்படியாக அவர்களுடைய நடையிலும், பேச்சிலும் ஓயாத ஒட்டாரங் காட்டுவார்கள். இதைக் கண்ணுறும் புருஷன் சும்மா இருப்பானோ? அவனுக்கும் ரோஷமும் கோபமுமுண்டே. ஆகச்சே, இருவருக்கும் வாக்குவாத முண்டாகி, ஒருவர் மற்றவரைத் திட்டவும் சபிக்கவும் தொடங்கி, கோபமதிகரித்து, கடைசியில் அடிதடியாய் முடியும். அப்போது அவள் முக்காடிட்டு மூலையில் படுத்துக்கொண்டு, சமையல் செய்யாமலும், யாராவது சமைத்துவைத்து சாப்பிடச் சொன்னால், அராமித்தனமாய்ச் சாப்பிடாமலும் 2, 3, நாள்வரையில் பட்டினியாய்க் கிடந்து, அண்டை அயல் வீட்டுப் பெண்டுகளோடு தன் புருஷனைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் தூற்றிவிட்டு, கடைசியாய்த் தன் தாய் வீட்டுக்குப் போய்விடுவாள். இவள் தன் புருஷன் வீட்டிற்குத் திரும்பி வர சில மாதங்களோ வருஷமோ பிடிக்கும். இவள் முதல் முதல் தன் புருஷனுக்கு எதிரிடை சொல்லாவிட்டால் இத் துன்பமும் சங்கடமும் நேரிடாதே!

ஆகையால் ருக்மணி, நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்: நீ கட்டிக்கொள்ள இருக்கும் வாலன் நல்ல குணசாலி. நானே அவருக்கு உயிரெழுத்துகள் கற்றுக்கொடுத்தேன். எப்பேர்ப்பட்ட நல்லவர்களுக்கும் ஒரு துற்குணமில்லாமற் போகாது. அவர் கொஞ்சம் முன் கோபி, எதைப்பற்றியாகிலும் அவர் உன்னை கோபித்துக்கொள்ளும்போது, முன் சொன்ன பெண்டீர்களைப்போல அவருக்கு எதிரிடை பேசாதே. எரிகிற நெருப்பில் தண்ணீர் வார்த்தால் நெருப்பு என்ன செய்யும்?

ருக்.—அணைந்து போம்.

தா.—அதில் எண்ணெய் வார்த்தால்?

ருக்.—அது ஜ்வாலித்து எரியும்.

தா.—கோபம் நெருப்புக்குச் சமானம். புருஷன் கோபிக்கும்போது மனைவியான் எண்ணெய்க்குச் சமானமாகிய எரிச்சல் வார்த்தைச் சொல்லாமல் ஜலத்துக்கு ஒப்பான சாந்தமான வார்த்தை சொன்னால் அவனுடைய கோபம் எளிதில் அமர்ந்துபோம். ஆனால் அந்தப் பெண்பிள்ளை தன் புருஷனோடு எதிர்த்து வாயாடினால் முன்சொன்னாற்போல சம்பவிக்கும்.

அவர் உன்னை அநியாயமாய்த் திட்டியிருந்தால், கோப நேரத்தில் மௌனமாயிருந்து நீங்கள் இருவரும் சந்தோஷத்துடன் இருக்கும்போது அதைப்பற்றி யவருக்குத் தெரியசெய்தால், சந்தேகமற அவர் தன் தப்பிதத்தைக் கண்டுகொண்டு துக்கப்படுவதுடன், பிற்பாடு அவர் எச்சரிக்கையா யிருப்பார்.

சில பெண்பிள்ளைகள் விசேஷமாக வாலிபப்பெண்கள் தங்கள் புருஷர்கள்மேல் அற்பநியாயமின்றி சமுசயங் கொள்வார்கள்! அவர்கள் தங்கள் சினேகிதர்வீட்டுக்கு வேலையினிமித்தமோ நட்பின் நிமித்தமோ போனால், அவர் அவளோடு பேசுகிறார், இவளோடு சிரிக்கிறார், என்று அண்டை வீட்டுக்காரரோடும், தன் பந்துக்களோடும் ஆவலாதிசொல்லி தூற்றுவதுமன்றி, இருவருக்கும் பேச்சுவார்த்தை யில்லாமல், புருஷன் கேட்கும் கேள்விக்குச் சுடுமூஞ்சி காட்டி, அவளைப்போய்க் கேள், இவளைப்போய் கேள் என்று குத்தலான வார்த்தை சொல்லும்போது, அவனுக்குக் கோபமுண்டாகி, அதனால் விளையுந் தின்மை கொஞ்சமல்ல. நான் உலகத்திலிருக்கும்போது இதெல்லாம் என் கண்ணூடாய்ப் பார்த்திருக்கிறேன். ருக்மணி இப்பேர்ப்பட்ட அநியாய சமுசயத்தால் கெட்டழிந்த குடும்பங்களுக்குக் கணக்கில்லை.

தேவதாஸ் நாயகரோ நற்குணசாலியும் புண்யவத்தனுமான மனிதன். கடந்த மூன்று வருஷகாலமாய் அவர் மதராசில் எப்போதும் சந்தோஷ வேடிக்கையிலும், கலியாணக் காக்ஷி



நடக்கும் இடங்களிலும், மஹான்கள் கூடும் கூட்டங்களிலும் காலம் போக்கினபோதிலும், அவர் நடத்தையில் பரிசுத்தவானாய் இருப்பதாக மதராஸ் குருஸ்வாமியாரவர்களே விஸ்வாச நாயகருக்கு எழுதிய கடிதத்தைச் சென்ற வாரத்தில் அவர் எனக்குக் காட்டினார்.

பார்த்தாயா, ருக்மணி, நீ வாழ்க்கைப்பட இருக்கும் வாலன் எவ்வளவு நன்னடத்தையுள்ளவரென்று? உங்களுக்குக் கலியாணம் ஆனபின் இவ்வூரைவிட்டே பெரியபட்டண ஸ்தலங்களுக்குப் போகவேண்டி நேரிடும். அவரும் இராப்பகலாய்ப் பற்பல இடங்களுக்கும் வீடுகளுக்கும் கலியாணச் சாலைகளுக்கும் நாடகச் சாலைகளுக்கும் போகவேண்டி நேரிடும். பல மனுஷாளுடன் பேசி சம்பாஷிக்க வேண்டியதாகும். "பனைமரத்தடியில் பால் குடித்தாலும் கள்குடித்தான் என்பார்கள்" என்னும் பழமொழிப்பிரகாரம், தேவதாஸ் நாயகர் கிஞ்சித்தென்கிலும் தற்கருத்தின்றி மற்றவர்களோடு பேசி, சிரித்துச் சம்பாஷிப்பதைப் பார்க்குந் துஷ்டர், குற்றமற்ற பேச்சையோ, சிரிப்பையோ, சயிக்கினையையோ விகார அருத்தஞ் செய்துகொண்டு, அங்கங்கு பேசுவார்கள். அந்தப்பேச்சு சந்தேகமின்றி சீக்கிரத்தில் உன் காதுக்கு எட்டும். அப்போது உன் மனம் நொந்து புண்ணாகி, சாப்பிட மனமின்றி, அவரோடு பேச ஆசையின்றி, அவர் கேட்கும் கேள்விக்கு முகத்தைத் திருப்பிக்கொண்டு கடுகடுப்பாய் நீ பேசும்போது அவருக்கு எப்படியிருக்கும் நீயேசொல் ருக்மணி.

ருக்.—இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள்கூட உண்டோ தாயாரே?

தா.—பொறுமையும் சமுசார குணமுமுள்ள ஸ்திரீகள் எதேஷ்டமாயுண்டு. ஆனால் ருக்மணி சிலவிசை யிப்பேர்ப்பட்ட சமுசாரங்களுக்கு நீயும் உட்படலாம்.

ருக்.—நானா தாயாரே!

தா.—நீ அப்பேர்ப்பட்ட பாவத்துக்கு உட்படுவாயென்று சொல்லுகிறதில்லை ருக்மணி; அப்படிச் சிலவிசை துர் அதிஷ்டமாய்ச் சம்பவித்தால் நீ துஷ்டருடைய பொறாமைக்குரிய பேச்சை நம்பாதே; குடும்பத்திலுள்ள சமாதானத்தை அழிக்கப்பார்ப்பது சிலருடைய ஓயாத தொழில். அதில் அவர்கள் சந்தோஷங் கொள்வார்கள். அற்பமும் சொற்பமுமான காரியத்தைப் பெரிதாக்கிக் குற்றமற்ற பேச்சை தோஷமுள்ளதாக்கி, தமாஷுக்காகச் சிரித்த சிரிப்பைப் பெரும்பாவமாகப் பாவித்துவரும் வஞ்சகரை நம்பவேண்டாம். இப்பேர்ப்பட்ட துஷ்டர், புறத்தியார்மேல் புறங்கூறுமலிருந்தால் அவர்கள் கண் நித்திரை கொள்ளாது! அவர்கள் மனது திருப்தி பெறாது! அவர்களுக்குச் சந்தோஷச் சமாதானம் உண்டாகாது.

நீயோ ருக்மணி இப்பேர்ப்பட்ட இரண்டகருக்கு இடங்கொடாதே. தேவதாஸ் நாயகருடைய நடத்தை பங்கப்படும் என்று நான் கனவில் முதலாய் நினையேன். ஆனால் துரதிஷ்டமாய் அவருடைய தங்கமான குணம் மாறி அவருடைய நடத்தை தவறுள்ளதா யிருக்குங்கால் அது குருசுவாமியார் காதுக்கு எட்டாமல் போகாது. தம்மால் கூடிய புத்திமதி சொல்லி அவரைச்சரிப்படுத்துவார். ஆனால் இது ஒருபோதும் சம்பவியாது. அநேக தீங்குகளை விளைவிக்கும் இக் கொடிய சம்சயத்திற்கு ஒருபோதும் உட்படாதே ருக்மணி. வஞ்சகப் பேயர் தங்கள் கதையை நன்றாய் அலங்கரித்து, மெய்யாக நடந்த சரித்திரம்போலப் பக்குவமாய் ஜோடித்துச் சொல்லுவார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடைய வலையில் சிக்கிக்கொள்ளாதே.

ருக்.—இல்லை தாயாரே; இப்பெருந் தோஷத்திற்கு உட்படேன், என்று சொல்லும்போது ஞானவாசகத்துக்கு மணியடித்தபடியால், இப்போது நேரமில்லை, நாளைக்குப் பத்துமணிக்கு இவ்விடம் வந்தால் இன்னுஞ் சில புத்திமதிகளை உனக்குச் சொல்லுகிறேன் என்று தாயார் அம்மாள் சொன்னதைக் கேட்ட ருக்மணி அப்படியே ஆகட்டுந் தாயாரே, என்று மடத்தை விட்டு தன் வீட்டுக்குப் போனாள்.

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### குடி, கடன், செட்டு.

1. மதுவிலக்குச் சங்கத்தின்மேல் இல்லாத அபாண்டங்களைச் சொல்லி அதைக் கேலிசெய்வதும், அச்சபையில் சேரப்போகிறவர்களையும், . சேர்ந்திருப்பவர்களையும் கெடுப்பதும், குடியர்கள்தான்

மதுவிலக்குச் சங்கங்களில்சேரத்தக்கவர்களென்றெண்ணுவதும் ஒழுங்கல்ல.

2. மதுவிலக்குச் சங்கங்கள் தாழ்ந்தவர்களுக்குத்தான் தேவையென்று ஞாயம் பேசுவது ஒழுங்கல்ல (குடியானது ஒரு தொத்து வியாதி. அது எந்த அந்தஸ்தினரையும் பற்றிக்கொள்ளும்)

3. மதுவிலக்குச் சங்கங்களில் சேர்ந்து செய்த சத்தியத்தை மீறுவது ஒழுங்கல்ல.

4. குடியாதவன் தன்னைவிட நல்லவனாயிருப்பதைப்பற்றி காய்மகாரப்படுவதும், அவனை லோபியென்றும் பணஞ்சேர்க்கிறவனென்றும் தூஷிப்பதும் ஒழுங்கல்ல.

5. தான் குடிக்கிறதில்லை யென்று தன்னைப்பற்றிப் பெருமையாய்ப் பேசுவதும், குடிக்கிறவர்களைப்பற்றி இழிவாய்ப் பேசுவதும் ஒழுங்கல்ல.

6. பெண்சாதிமார்கள் தங்கள் புருஷர்களைக் குடிக்கப் போதிப்பது ஒழுங்கல்ல.

7. அற்ப சொற்ப தலைநோய் வயிற்றுவலிக்கும், பொதுவாய் அனைத்திற்கும் குடியே பரமசஞ்சீவி யென்றெண்ணுவது ஒழுங்கல்ல. (சுவாமி யுண்டாக்கிய மூலிகைகள் பல வுள.)

8. பிரசவத்துக்குப்பிறகு பெண்பிள்ளைகளுக்குக் குடிக்கக் கொடுப்பது ஒழுங்கல்ல. (இத் தகாத வழக்கத்தினால் பெண்டுகள் எவ்வளவுக்குப் பிள்ளைகளைப் பெற்று எடுக்கிறார்களோ, அவ்வளவுக்குக் குடிப் பழக்கத்தில் முதிர்ந்து பூராக் குடியர்களாவார்கள்.)

9. தன்னைக் காணவந்தவர்களுக்குச் சாராயம் கொடுப்பது ஒழுங்கல்ல. (காப்பி, டீ, சுருட்டு, தாம்பூலம் கொடுப்பதே நல்ல வழக்கம்.)

10. குடி கிடைப்பதாயிருந்தால் மாத்திரம் அடக்கத்திற்குக் கல்லறைமட்டும் போவதும், அடக்க முடிந்ததும் அனைவரும் சாராயக்கடைக்கு நேரே போவதும் ஒழுங்கல்ல.

11. தான் தட்டுப் போடாமல் இலவசமாய்க் குடித்தால் தோஷமில்லை யென்றெண்ணுவது ஒழுங்கல்ல. (இன்று அவன் தட்டு நாளை உன் தட்டு.)

12. கஷ்டப்படுகிற உடம்புக்குப் பலம் வேண்டுமென்று குடிப்பது ஒழுங்கல்ல. (திரேகத்திற்குப் பலம் பால், முட்டை, கறி, கோதுமை முதலிய பதார்த்தங்களில் கிடைக்குமேயொழிய சாராயத்திலன்று.)

13. சம்பாதிக்கிறவன் குடிக்கச் சுதந்திரமுண்டென்றெண்ணுவது ஒழுங்கல்ல. (சம்பாதனை குடும்பத்தினதேயன்றி தன்னுடையதல்ல.)

14. தன் துர்மாதிரிகையைக் கண்டு தன் பிள்ளைகள் குடித்தால் அதிசயமடைவது ஒழுங்கல்ல. (வினை விதைத்தவன் வினை யறுப்பான்.)

15. திருநாள் பெருநாளென்று சிறு பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சாராயங் கொடுப்பது ஒழுங்கல்ல.

16. சிறு பிள்ளைகளிடம் புட்டி கொடுத்துச் சாராயக்கடைக்கு அனுப்புவது ஒழுங்கல்ல. (அங்கு நடக்கும் தகாத நடத்தை அசங்கியப் பேச்சினால் சிறுவர்கள் கெட்டுப்போக வழியுண்டு. சிறு பிள்ளைகளுக்குக் குடிக்கக் கொடுத்து சபாஷ், பஹதூர் என்று தட்டிக் கொடுப்பது ஒழுங்கல்ல. (அப்படிப்பட்ட பிள்ளைகள் தன்னைப்போலப் பெருங் குடியர்களாகத் தப்பார்கள்.)

17. வாலிபனான தன் பிள்ளை குடித்து வருவதைக் கேட்டால் மரியாதை தப்பிப் போகுமென்று கண்டுங் காணாதது போலிருந்து விடுவது ஒழுங்கல்ல. (தக்க சமயம்பார்த்துக் கண்டிப்பது முறை.)

18. சிறு பிள்ளைகள் சிகரட், பீடி, சுருட்டு பிடிப்பது ஒழுங்கல்ல. (இதனால் இன்னும் பக்குவமடையாத அவர்கள் சரீரம் மெலிந்து வாடிப்போம்.)

19. குடி கெட்டதென்றால் "ச்சீ என்னபேச்சு சொல்லுகிறாய், சுவாமியே சாராயம் செய்துகொடுக்கவில்லையோ?" என்று தேவ தூஷணம் கக்குவது ஒழுங்கல்ல. (அநேக மூட கிறிஸ்துவர்கள் "அந்த மணப்பந்தலிலே, ஆண்டவர் தண்ணீரை, கந்த மதுவாக்கும் கலிலேய கன்னாவூர்" என்னும் பாடலைப்பாடி, அப்படிச் சொல்வதுண்டு. (இது அவிவேகம். கர்த்தர், யூதர்களுக்குள்ளிருந்த வழக்கப்படி, லாகிரியில்லாத திராட்ச ரசத்தைச் செய்துகொடுத்தாரே யொழிய, இக்காலத்தில் ஜனங்கள் குடித்து வெறி மயக்கங்கொள்ளும் சாராய வகைகளையல்ல.)



20. குடியும் தரித்திரமும் ஒரு தாய்க்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளென்பதை மறந்து விடுவது ஒழுங்கல்ல (குடியிருக்குமிடத்தில் தாரித்திரமும், தாரித்திரம் இருக்கும் இடத்தில் குடியும் இருக்கும்.)

21. குடியை விட்டுவிட்டு அபினி, கஞ்சாவை உபயோகிப்பது ஒழுங்கல்ல.

22. குடியாதவீடு விடியாதென்பது ஒழுங்கல்ல.

23. "கடன்மேல் கடனாச்சுது, வீட்டின்மேல் சீட்டாச்சுது, நெய்யில் சுட்ட பணியாரம்" என்பதுபோல் கடனிருந்தும் அதை யொழித்து வெளிப்பட முயலாமல் மேலும் மேலும் கடன் வாங்குவது ஒழுங்கல்ல.

24. கடன் வாங்கி மறந்து போவதும், இன்று நாளையென்று இழுக்கடிப்பதும் ஒழுங்கல்ல. (இதனால் நாணயம் தப்பிப் போகும்.)

25. துணைபோனாலும் பிணைபோவது ஒழுங்கல்ல. (அனேகர் ஜாமினிருந்தே தங்கள் ஆஸ்திபாஸ்திகளை நஷ்டப்படுத்தியிருக்கிறார்கள்)

26. பெருந்தீனி, விருந்து, களியாட்டங்களில் பணத்தை விரயஞ் செய்வது ஒழுங்கல்ல. (இந்தியர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தால், ஜாதிபேற்பாட்டின்படி உயர்ந்தவர் என்னப்படுபவர்கள் பொதுவாய் வீண் சந்தோஷங்களுக்கும் வெளி வேஷத்திற்கும் பணத்தை வாறியிறைக்காமல், எதிலும் செட்டாயிருந்து, நகை நட்டு பூஸ்திதி சேர்த்து வைப்பதில் கருத்துவைத்து, அதிலேயே தங்கள் பெருமையைத் தேடுவார்கள். ஆனால் தாழ்ந்தோர் என்னப்படுபவர்களோ வெனில், 4-காசு கைக்குவருமுன் அதை யெப்படிச் செலவழிப்பதென்று 42-யோசனைகள் செய்து, தங்கள் சம்பாதனையைச் சனுக்கான உடைகளிலும், ஜொலிப்பான நகைகளிலும் குடி விருந்து முதலிய களியாட்டங்களிலும் செலவழித்து நாளைக்கெப்படி யென்பதைக் கவனியாமல், அன்று மலர்ந்து அன்றேவாடி வதங்கிப் போகும் புஷ்பத்திற்கொப்ப வெகு சீக்கிரத்தில்மெலிந்து ஒழிந்துபோவார்கள். கிறிஸ்துவர்கள் எப்போதும் முன் சொல்லப்பட்டவர்களைக் கண்டு பாவிப்பதே புத்தி.)

27. காது குத்துகிறது, முடியெடுக்கிறது, திரட்சி முதலிய சாதாரண சம்பவங்களைப் பெருஞ் சம்பவங்களாகப் பாவித்து வீண் செலவு செய்வது ஒழுங்கல்ல.

28. அவர்கள் என்ன சொல்லுவார்கள் இவர்கள் என்ன நினைப்பார்களென்று விவாக காலங்களிலும் மற்றும் குடும்ப சம்பவங்களிலும் பயித்தியக் காரனைப்போல் சக்திக்கு மிஞ்சிய செலவு செய்வது ஒழுங்கல்ல. (அவர்களும் இவர்களும் உனக்குக் கொடுக்கப்போகிற தொன்றுமில்லை. உன்னால் கூடாத செலவைச் செய்ய நேரிட்டால் "இல்லை" யென்று தைரியமாய்ச் சொல்லப் பழகு.)

29. ஐஸ்வரியவான்களைப் போல் செலவு செய்யவும் நடிக்கவும் தேடுவது ஒழுங்கல்ல.

30. பண ஆசைகொண்டு எப்பொழுதும் மேல் வருமானத்தின் மேலேயே கண்ணாயிருப்பது ஒழுங்கல்ல. (அநேகர் மேல் வருமானம், மேல் வருமானமென்று வெகு மகிழ்ச்சியுடன் பேசுவார்கள். மேல் வருமானமென்பது பொதுவாய், இல்லாததை யும் பொல்லாததையும் சொல்லி ஏழைகளையும் பேதைகளையும் ஏமாற்றிப் பறிக்குங் காசு. சொற்ப விலைக்கு வாங்கினதை யதிக விலைக்கென்று பொய்க் கணக்கு ஏற்படுத்திச் சம்பாதிக்குங் காசு. யாருமில்லாத நேரம்பார்த்து, உளவறிந்து சாமான்களைத் திருடிப்போய் விற்றுச் சேகரிக்கும் காசு. கணக்கில், அளவில், நிறையில், மோசம் செய்து அபகரிக்குங் காசு. கெட்ட பொருளை நல்ல பொருளென்று பசப்பி பேசிவாங்குங் காசு. தயை தாட்சண்யம் பாராமல் மெலிந்தவர்களை வாட்டிப் பறிக்கும் இரத்தக் காசு. தான்செய்ய வேண்டி

வேலையை இன்று நாளையென்று இழுக்கடித்து வந்தவர்களிடம் வட்டிப் பிடுங்கும் காசு. தன்கைகீழ்ப்பட்ட வேலையாட்களை நிர்ப்பந்தித்து எஜமானிடம் கோள் புறணி பேசி, இவனிடம் அவனிடம் வாங்கும் இலஞ்சக்காசு. தன் எஜமானுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து தன் வேலையைச் சரிவர நடத்தாமல் தனக்குக் கீழ்ப்பட்டவர்களிடம் வாங்கும் பரிதானக்காசு. பொது நன்மைக்கு உழைப்பதாக மாய்மாலங் காட்டி, தர்மப் பணத்தில் அபகரிக்கும் காசு. இதுதான் மேல் வருமானம். என்ன கவுரவமான பேர்! அநியாய வருமானம், துரோக வருமானம், திருட்டு வருமானமென்றால் அதன் இலட்சணம் தெரிந்துவிடுமென்றெண்ணி, மேல் வருமானமென்று சிறப்புப் பெயரிட்டழைப்பது, என்ன விந்தை! இப்படிப்பட்ட அநியாய காசைச் சம்பாதிக்கிறவர்கள், உருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவுவதுபோல் எப்போதும், எதிலும் மேல்வருமானத்தின் மேலேயே கண்ணுயிருந்து எப்படியாவது தங்கள் மனச்சாட்சியை-அதுவும் கிறிஸ்துவ மனச் சாட்சியை—சமாதானப் படுத்திக்கொண்டு, தங்களுக்கு அவ்வளவுக்கு மேல் வரும்படி யென்றால் தங்கள் எஜமான்களுக்கும் அயலார்களுக்கும் எவ்வளவுக்குக் கீழ்ப் போம்படி யென்பதைக் கனவிலும் நினையார்கள். இதைப் பாவசங்கீர்த்தனத்தில் கட்டாயம் வெளிப்படுத்தி உத்தரிப்பதவசியம். அப்படி உத்தரிக்கும் பணத்திற்கு மனச் சாட்சியின் பணம் (Conscience Money.) என்று பேர். பாவசங்கீர்த்தனத்தில் இரகசியமாய் இத்தொகையைக் குருசுவாமியாரிடம் கொடுத்துவிட்டால், அவர் ஊர் பேர் ஒன்றும் சொல்லாமல் மனச் சாட்சியின் பணமென்று உடையவனுக்குச் செலுத்திவிடுவார். ஐரோப்பாவில் கிறிஸ்துவ ராஜ்யங்களில் நடப்பதிப்படியே. அப்படி உத்தரிக்க இயலாத பட்சத்தில் குருசுவாமியாருடைய ஆலோசனையின் படி நடப்பது முறை.)

81. சக்தியிருந்தும் தருமம் செய்யாமல் பிசினித்தனம் காட்டுவது ஒழுங்கல்ல. (தருமம் கொடுப்பது கடவுளுடைய பாங்கியில் போடும் பணத்திற்குச் சமானம். அவர்கொடுக்கும் வட்டி 1-க்கு 100. உலகத்தில் எந்த பாங்கியிலும் அப்படிப்பட்ட வட்டி கிடையாது.)

82. பாத்திரமறியாமல் தருமம் செய்வதும் பிச்சை யிடுவதும் ஒழுங்கல்ல.

(அநேகர் குருசுவாமியாரின் நாட்டுச்சீட்டில்லாமல், ஒரு பட்டியைத் தாமே யெழுதிக்கொண்டு ஊர்விட்டு ஊர்போய், இங்கு கோவில் கட்டுகிறேன்; அங்கு சத்திரம் ஸ்தாபிக்கிறேன் என்று ஜனங்களைப் பசப்பி, மயக்கி காசுபணம் சம்பாதிப்பார்கள்; வேறநேகர் அற்பமும் அங்கப்பழுதில்லாதவர்கள், முழு சோம்பேறிகள், தெண்டச்சோற்றுத் தடியன்கள் மாதாவின் பேரிலும் அர்ச்சியசிஷ்டவர்கள் பேரிலும் சிற்சில பாடல்களைப் பாட கற்றுக்கொண்டு, சுத்த தபோதனர்களைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு வேளாங்கண்ணி, மைலாப்பூர், கோவை முதலிய திருஸ்தலங்களுக்கு ஒன்றற்குப்பின் றொன்றாய்ப்போய், இப்படியே தங்கள் ஆயுசு காலத்தைக் கழிப்பார்கள். ஆங்காங்கு கிடைக்கும் தருமத்தைப் பெற்று நன்றாய்த் தின்று குடித்து ஆனந்திப்பார்கள். இன்னம் என்ன குறைச்சல் இவர்களுக்கு! யாவரும் பாடுபட்டு வருந்திப்பிழைக்க இவர்கள் மாத்திரம் ஆடிப் பாடிப் பிழைப்பது என்ன அநியாயம்! இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இடும் தருமம் தருமமாகுமா?)

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர். ப—ர்.]

### திருப்பூர்.

### அர்ச். கத்திரீனம்மாள் கோவில் சிறப்புக் கொண்டாட்டம்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சார்ந்த புக்கிளிபாளையம் பங்குக் குள்பட்ட திருப்பூர் என்னும் பதியில் புதிதாய்க் கட்டி முடிக்கப் பட்டிருக்கும் அர்ச். கத்திரீனம்மாள் தேவாலயம், சென்ற செப்டம்பர் மாதம் 29-ம் தேதி



ஞாயிறுவார மன்று காலை 8-மணிக்கு, பற்பல ஊர்களினின்றும் வந்திருந்த திரளான ஜனங்களும் குருசுவாமிமார்களும் புடைசூழ, வெடிகளதிர, பாண்டுவாத்தியங்கள் முழங்க, மகா சங்கைக்குரிய N. Rondy (Vicar General) சுவாமியாரவர்களால் மந்திரிக்கப்பெற்று, பெரியபாடல் பூசையும் வெகு ஆரவாரத்துடன் நடத்தப்பட்டது. அன்று சாயரட்சை 6-மணிக்குத் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் அதன்பின் வாணவேடிக்கையும் நடந்தேறிற்று. பிறகு இச்சிறப்புக்கொண்டாட்டத்திற்கு அன்புடன் எழுந்தருளிய கனம் தங்கிய சங்கை. N. Rondy சுவாமியார் அவர்களுக்கும், இக்கோவிலை மிகச் சிரத்தையுடன் கட்டி முடித்த பங்குசுவாமியார் சங்கை. இஞ்ஞாசிநாத சுவாமியார் அவர்களுக்கும் மற்றக் குருசுவாமிமார்களுக்கும் ஓர் வந்தனப் பத்திரம் அளிக்கப்பட்டது.

இக்கோவிலைத் தமது கஷ்ட நஷ்டங்களைக் கவனியாது அல்லும் பகலும் ஓயாச் சிந்தையுடன் அதிவிநோதமாய்க் கட்டி முடித்த கனம் பங்குசுவாமியா ரவர்களின் ஊக்கத்தையும் சாமர்த்தியத்தையும் எடுத்துரைக்க எவரால் கூடும்? இவ்வாலயத்தின் அலங்காரமும் அதன் அமைப்பும் நேரில் கண்ணுற்றவர்களுக்கு விளங்குமேயல்லாமல் ஏனையோருக்கு எடுத்துரைக்க முடியாது. இத்தகைய அமைப்புவாய்ந்த ஆலயம், பழைய கட்டிடத்தால் வழிநடப்போர் கண்ணைக் கவராது மறைந்து நிற்பது ஏனோ விளங்கவில்லை. இதை அவ்வூர்வாசிகள் கவனித்தாரில்லைபோலும். இக்குறைவு அதிவிரைவில் நிவர்த்திக்கப்படுமென்று நம்புகிறேன்.

"கண்டு களித்தோன"

---

### தூத்துக்குடி பரதகுல ஐக்யசங்கம்.

(ஷை சங்கத்தின்போது செய்த ஓர் உபந்நியாசம்.)

நமது பரதகுல ஐக்கிய சங்க அக்கிராசனாதிபதியவர்களே, ஸ்ரீமான் கயித்தான் வில்லவராய ரவர்கள் போன்ற நற்குண தனவான்களே, மற்றும் கனவான்களே, சகோதரர்களே,

"வற்றேலை கலகலக்கும்—எஞ்ஞான்றும்
பச்சோலைக்கில்லை ஒலி,"

என்பது நீதிநூல், ஆயினும் நான் ஈங்கு எடுத்துக்கொண்ட விஷயத்திலிருக்கும் குற்றங்களை,



"குணம் நாடிக் குற்றமும் நாடி—அவ
ற்றுல் மிகைநாடி மிக்க கொளல்."

என்னும் விதிப்படி மன்னிக்குமாறு வேண்டுகின்றேன்.

இந்த மகாஜன சபையில் நான் இப்போது பேசவந்ததெல்லாம்,

"உடுக்கை இழந்தவன் கைபோலவாங்கே
இடுக்கண் களைவதா நட்பு."

அதாவது நட்பு நட்பு என்பதற்கு பொருள் ஏதெனின் சபையினிடத்திருக்கும் ஒருவனுக்கு அகஸ்மாத்தாய் அவன் அரையைவிட்டு ஆடை நெகிழ்ந்துவிடுமானுல், அப்பொழுதே அவன் கைகள் சென்று நேரிட்ட அவமானத்தை நீக்கும் விதமேபோல நேசருக்குத் துன்பம் வந்த விடத்து வந்த க்ஷணத்திலேயே அவர்களுக்கு அருகில் விரைந்து சென்று அத்துன்பங்களை ஒழிக்க வழி தேடுவதாம். இதுதான் நமது உறவின் முறையாரை நேசிப்பதற்குச் சரியான இலட்சணம்.

உலகத்தில் ஒருவனுக்குத் துன்பங்கள் வேணும் வேண்டாம் வந்தே தீருகின்றன. மற்றொருவனுக்கு இன்பமும் துன்பமும் கலந்து வருகின்றது. துன்பம் கலவாது இன்பமே கிடைப்பது மிகவும் அபூர்வம். இதரர்களில் அவரவர்களும் இன்பம் வந்தகாலத்தில் அஃதை அளவு மிஞ்ச விடாமல் சுகிக்கவும் துன்பம் வந்தவிடத்தில் மிகவும் பொறுமையோடு சகிக்கவும் தகுந்த லாயக் குடையவர்களாக விருக்கின்றனர். ஆனுல் நம்மில் அநேகர் அஃதையறியாமல் இன்பத்தில் தங்கள் மனம்போனபடி சொக்கிப்போகவும், துன்பம் வந்தமாத்திரத்தில் ஐயோ மோசம் போய் விட்டோமே இனி யெப்படி நாம் முன்னேறுவது என்று அங்கலாய்த்து அதைரியப்படவும் நேரிடுகிறது. இதற்குக் காரணமெல்லாம் உலக வியவகாரங்களில் அவர்களுக்குப்போந்த அனுபோக மில்லாததே அதற்குக் காரணம் நம்மில் பணக்காரர்கள், படிப்பாளிகள், பட்டதாரிகள், உத்தியோகஸ்தர்கள், செல்வாக்குடையவர்கள், இவர்களில் அனேகர் தங்களுக்குத் தேவானுக்கிரகத்தால் கிடைத்திருக்கும் பணத்தை, படிப்பை, பதவியை, செல்வாக்கை, லவலேசமும் நம்மில் ஏழைகளுக்காகச் செலவுசெய்ய நினையாமலிருப்பதே. போனகாலம் போக இப்போது எங்கள் அதிர்ஷ்டகாலமாக நமது ஜனசமூகத்தே ஒருவாறு கனிக்க ஸ்ரீமான் கயித்தான் வில்வராயர், ஸ்ரீ

மான் அந்தோனி சவேரிமுத்து உ று திரீக்,
ஸ்ரீமான் M. X. மச்சாடோ, ஸ்ரீமான் J. N.
மிராந்த, ஸ்ரீமான் பீற்றர் மச்சாடோ இவர்
கள் போன்ற கனவான்கள் முன்வந்திருக்கிறார்
கள். இவர்கள் நற்செயலைக் கண்காணிக்க
இச்சங்கத்தின் பிரசிடெண்டாகிய தாங்கள் பல்
லாண்டு, பல்லாண்டு ஜெயசீலராய் வாழப்போ
கிறீர்கள். ஆகையால் இதனை எங்களுக்கோர்
அதிர்ஷ்டகாலமென்று இன்னும் பலமுறை
சொல்ல விரும்புகிறோம். ஆனால்,

நல்ல காரியத்திற்கு நாலு தடை யென்பார்
கள் அது 1, 2, 3, 4, அல்ல; வடக்கு, தெற்கு,
கிழக்கு, மேற்கு, என நாலு திசையாக்கும். ஆம்
இந்த நாலுதிசையிலிருந்தும் நமது நற்கருமங்க
ளுக்கு அனேக இடுக்கண்கள் வரக்கூடியது,
ஆயினும்

"மடுத்த வாயெல்லாம் பகடன்னான்-உற்ற
இடுக்கண் இடர்பாடுடைத்து."

அதாவது வண்டியை இழுத்துச்செல்லும்
கடா, வேண்டியபோது பக்கங்களில் உராய்ந்
தும், நிலத்தில் மூக்கை ஊன்றியும், கால்களை
மடக்கிவைத்துத் தவழ்ந்தும், சிலவேளை பின்
புக்கியும் தன் கருமத்தை இனிது முடிக்கின்றது.
கேவலம் பகுத்தறிவில்லாத எருமைக்கடாவுக்கு
இந்த அழகான புத்தியும் அரிதான சித்தவை
ராக்கியமும் இருக்குமேயானால் நாம், ஆறறி
வில் ஓரறிவும் குன்றாத மானிடப்பிறவிகள் எத்
தனை புத்தி சாதுரியமும் எத்தனை ஆழ்ந்த அபி
மானமு முடையவர்களா யிருத்தல்வேண்டும்.

அந்தோ பெரியவர்கள் சிறியவர்களைக் கவ
னியாததால், எத்தனை விபத்துக்கள், எத்தனை
இடுக்கண்கள், எத்தனை தொந்தரவுகள் நமது
ஜனசமூகத்கு வந்துவிட்டன. ஆண்பிள்ளைகள்
ஆண்மைக்கு அனுகுணமானதும் பெண்பிள்ளை
கள் பெண்மைக்குப் புறம்போனதுமான எத்த
னைப்பட்ட துர்க்கிருத்தியங்களைச் செய்துவருகி
றார்கள். ஆண்பிள்ளைகள் இன்னனைய கஷ்டகா
லத்தில் முதலாய் தங்கள் வீணச்செய்கைகளை
மறந்தார்களா? பெண்பிள்ளைகள் தாமும் தங்
கள் விருதாச்செலவுகளைத் துறந்தார்களா? இல்
லையே. இஃதனைத்துக்கும் நமது ஜனத்தலைவர்
கள் பொதுவிற்கு என்ன நஷ்டம் வந்தாலும்
யாருக்குவந்த விருந்தோவென அசதியாய், அச
மந்தமாய் இருந்ததல்லவோ காரணம். இன்
னும் எத்தனைகாலம் இஃதை யாம் சகித்திருப்
பது. இதற்கோர் முடிவுவேண்டாமா? இதர ஜா
திக்காரர் சுதேசிய நிதியென்ன, தீபாவளி வகு
லென்ன, பென்னம்பெரிய பொதுநிதிகளை ஏற்
படுத்தித் தங்களையும் தங்கள் பின்சந்ததிகளையும்
தக்க பதவியில் வைத்துக்கொள்ளத் தங்கள்
செலவிலேயே சர்வகலாசாலைகள் ஸ்தாபிப்பத
ற்கு முன்வந்திருக்கும் இக்காலத்திலாவது
நம்மை நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டாமா?
நங்குல படிப்பாளிகளே, பணக்காரர்களே, அந்
தோ! நீங்கள் இன்னும் என்னசெய்து கொண்டி
ருக்கிறீர்கள். அறிவில்லாக் காகங்கள் முதலாய்த்
தமது சுற்றத்தை அவாவுகிறது. காலம்வரும்,
அந்தக் கடைசிகாலத்தில் அநந்த ஞானமுடைத்
தான கடவுள், நமது பரமபிதா, நாம் அவரிடத்
தில் பெற்றுக்கொண்டதன் அளவாகக் கணக்
குக்கேட்க வரும்போது அந்தக் கணித சாஸ்திர
வல்லானிடத்தில் என்னவகை சொல்வோம்?

மரணம் ஒன்றேயல்லாமல் இரண்டல்ல
வே. உயிரும் அப்படியே. ஒருவிசை இறந்தது
வாஸ்தவமானால், மறுவிசை நமக்குச் சமயம்
வாய்ப்பது எங்கே? நமது சகோதரருக்குச்செய்
ய வேண்டிய நன்மை யெல்லாம் இக்காலத்தி
லேயே, இந்நாளிலேயே, இப்போதே, இந்த நா
ழிகையிலேயே, இதோ இந்தக்ஷணத்திலேயே
செய்யவேண்டும். அடுத்தகாலம், அடுத்தநாள்,
அடுத்தவேளை, அடுத்தக்ஷணம், இவை யொன்
றும் நம் பங்கில்லை. நமது சகோதரரில் அநேக
ரைத் தம்மால் அழைத்துக்கொண்ட வல்ல கட
வுள் நம்மை இன்றுவரையும் இங்கே வைத்தி
ருக்கிறார். காரணமென்ன? ஆம் காரணமெல்
லாம் நம் சகோதரருக்கும் நமக்கும் பிரயோஜ
னமாயிருக்கும் பொருட்டுத்தான். சகோதரர்
களே, நாமும் நமது ஜனசமூகத்திற்கு ஒருவித
பிரயோஜனத்தைச் செய்வான் உத்தேசித்தே
இங்கு வந்திருக்கிறோம். அன்னனைய பிரயோஜ
னத்தை அடைந்துகொள்வதற்கான விவகாரங்
களை கள்ளங் கபடில்லாமல் உள்ளும் புறமும்
ஒருகண்ட சீராய்ப் பேசித் தீர்மானிக்க வேண்
டும். என்ன இடைஞ்சல் வந்தாலும் எவ்வளவு
பலியிட வேண்டிய திருந்தாலும் கிலேசப்படா
மல் எல்லாம் கடவுளின் மகத்துவத்திற்கே, அவ
ரது மகிமைக்கே யென்று நாம் எடுத்துக்கொண்
ட விஷயங்களை இனிது தொடங்குவோமாக.
ஆகையால் "முயற்சி திருவினையாக்கும்" என்
னும் மூதுரையோடு எனது உபந்நியாசத்தை
முடிக்கின்றேன்.

J. விக்றோரியா.



# THE WAR.
## ஐரோப்பாவில் யுத்தம்.

இந்தப் பயங்கரமான யுத்தத்தைப்பற்றிய
விசேஷ சம்பவங்களும் செய்திகளும் ஒன்றை
யுங் காணோம். அதன் முன் நிலைமைக்கும் தற்
போதிய நிலைமைக்கும் அவ்வளவு வித்தியாச
மொன்றுமில்லை. மேல் யுத்தக்களத்தில், அதா
வது பிரான்சு தேசத்திலுள்ள எய்ன் பிரதே
சத்தில் ஆங்கிலேய பிராஞ்சிய படைகள் ஜெர்
மனியரை எப்பக்கத்திலும் முன்னுக்கு ஏறவிடா
மல் தாக்கியும், அவர்களுடைய அரண்களையும்
மறைகுழிகளையும் அநேகமாய் அழித்தும் புதிய
மறைக்குழி அரண்களைத் தோண்டாமல் தடுத்
தும் வருகிறார்கள். கலையைப் பிடிக்க ஜெர்மனி
யர் செய்யும் ஏற்பாடுகளும், யுக்தி யோசனை
களும், படும் பிரயாசைகளும் வீணாக்கப்படுகின்
றன. ஆயினும் இவர்கள் தங்களாலான மட்டும்
ஒரு கை பார்க்கலாமென்று எதிர்த்து நிற்கிறார்
கள். இருதரப்பிலும் உயிர்ச்சேத மடைகிறவர்க
ளும் காயப்படுகிறவர்களும் அதிகம். யாருக்
கும் நிலைவரமான வெற்றியில்லை.

கீழ்யுத்தக்களத்தில் ஜெர்மனியர் ருஷியர்
மேல் பலமான வெற்றியொன்று போலாண்டி
லே கொண்டிருப்பதாகவும், அதன் நிமித்தம்
தங்கள் தலைநகரான பெர்லினில் தீபாலங்காரஞ்
செய்து சந்தோஷங் கொண்டாடினதாகவும்
சமாச்சாரம். ருஷியர் ஆஸ்டிரியாவைச்சேர்ந்த
கலீஷியா மாகாணத்தைக் கைப்பற்றி யிருப்ப
துடன் தற்போது இன்னொரு பிரதான விட
மான கிரோக்கோவைப் பிடிக்க அதை வளைந்து
கொண்டிருக்கிறார்களாம். இது விரைவில் பிடி
பட்டுப் போகுமெனப்படுகிறது. இப்பட்டணத்
தை ருஷியர் பிடித்துக் கொள்வார்களே யானால்
ஆஸ்டிரியருடைய பலமே குன்றிப்போகுமாம்.

செர்வியருடைய நிலைமையோ மிக்கக் கே
வலமா யிருப்பதாகவும் இவர்கள் ஆஸ்டிரியரால்
தாக்கப்பட்டு அபஜெயமடைந்து வருகிறதாக
வும், சங்கதி யெட்டியிருக்கிறது. இதன் நிமித்
தம் ருமேனியாவும், பல்கேரியாவும் இன்னும்
கிரீசும் ஐக்கியக் கட்சிக்காரரோடு சேர்ந்து
ஆஸ்டிரியாவின் பலத்தை யடக்கத் தீர்மானித்
திருக்கிறார்களாம். ஜர்மனியருடைய பேச்சை
நம்பி யுத்தத்தைத் தொடங்கின துருக்கி தற்
போது அவஸ்தைப் படுவதாகவும், இதற்கும்
ருஷியாவுக்கும் சண்டை நடப்பதாகவும் எப்
பக்கத்திலும் இதுவரையிலும் யாதோர் வெற்
றியு மடையாமல் அபஜெய மடைவதாகவும்
மேற்சொன்ன ருமேனியா, பல்கேரியா முத
லிய நாடுகளும் அதைத் தாக்கும்படி நேரு
மென்றும் சொல்லப்படுகிறது.

## கபாலமலை.

"கபாலமலை" என்னும் நாமம் பூண்ட
இப்புது ஜெபப் புத்தகம் தற்போது "நல்லா
யன்" அச்சாபீசில் அச்சிடப்பட்டு விற்பனைக்
குத் தயாராயிருக்கிறது. இப்புத்தகத்தின் சிற
ந்த பெயருக்குத் தக்கபடி, நமது இரட்சகரின்
துயரத்துக்குரிய பாடுகளின்பேரில் நமக்குத்
துக்கமனஸ்தாபத்தையும் பக்தியையும் உண்டா
க்கத்தக்க தியானங்களும் ஜெபங்களும் இதில்
அடங்கியுள்ளனவாகையால் வேறெந்த ஜெபப்
புத்தகத்திலுமில்லாத அநேக நூதன ஜெபங்
களை யிதிற்காணலாம். வழக்கமான காலை மாலைச்
செபங்களும். மாதாப் பிரார்த்தனை, திரு நா
மத்தின் பிரார்த்தனை முதலியவைகளும் இதி
லுண்டு.

வாரத்தின் 7-நாட்களில் ஒவ்வொரு நாளி
லுங் திருப்பாடுகளின்பேரில் தியானங்களும்,
திருப்பாடுகளைத் தியானித்துக்கொண்டு பூசை
காணும் வகையும், 7-விதமான மனஸ்தாபப்
பிரகரணங்களும், வாரத்தில் வரும் 7-நாட்க
ளில் ஒவ்வொரு நாளிலும் திவ்விய நன்மை
வாங்குமுன் சொல்லத்தக்க ஆயத்த ஜெபங்க
ளும், தேவ நற்கருணை வாங்கினபின் செய்ய
வேண்டிய நன்றியறிந்த தோத்திரங்களும், வா
ரத்தின் ஒவ்வொரு நாளிலும் தேவநற்கருணை
சந்திக்க 7-வகையான சந்திப்பு ஜெபங்களும்
இதிலடங்கியிருக்கின்றன. மகா துயரத்தை
யுண்டுபண்ணத் தக்கதும் நூதனமானதுமான
சிலுவைப்பாதை யிதிலடங்கி யிருக்கிறது மல்
லாமல், நமது இரட்சகருடைய பாடுகளின் எத்
தனங்களான சிலுவை, ஈட்டி, ஆணி, ஏணி,
முண்முடி முதலானவைகளைப் பற்றியும், திரு
இரத்தம், அவரைப் பொதிந்த பரிவட்ட முத
லான பரிசுத்தப் பண்டங்களைப் பற்றியும் சுருக்
கமான சரித்திரமும் ஜெபங்களும் இதிலடங்கியு
ள்ளன. அல்லாமலும் தபசுகாலத்தின் ஒவ்வொ
ருவாரத்திலுஞ் சொல்லத்தக்க ஜெபங்களையும்,
பிரார்த்தனைகளையும், வியாகுலமாதாவைக் குறி

த்து ஜெபங்கள், புதிய சங்கீதம், பிரார்த்தனைகளையும் இப்புதுப்புத்தகத்திற்காணலாம்.

முக்கியமான அர்ச்சியசிஷ்டவர்களைக்குறித்து ஜெபங்களும் பிரார்த்தனைகளும், அந்தந்தக் காலத்துக்குந் தருணத்துக்கும் அவசியமான வெவ்வேறு ஜெபங்களும், வியாதியஸ்தரும் மற்றவரும் சொல்லத்தக்க பலனுள்ள மனவல்லயச் செபங்களும், பாலர், பெரியவர்களின் அடக்கத்துக்கு வேண்டிய வெவ்வேறு ஜெபங்களும் தேவாரமுதலியனவும் இதிலுண்டு.

“கபாலமலை” என்ற இந்த ஜெபப்புத்தகம் கையிலிருந்தால் வேறெந்த ஜெபப் புத்தகமும் அவசியமிராதென்னலாம். ஏனெனில் மற்ற புத்தகத்திலுள்ள பிரதானமான ஜெபங்கள் இதிலிருப்பதுமன்றி ஏராளமான நூதன ஜெபங்களுமிதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

காலிகோ கட்டிடம், விலை ரூபா. 0-12--0
தோல் கட்டிடம், விலை ரூபா. 1—0—0

வேண்டியவர்கள் “நல்லாயன்” ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ வெகு சொற்பப்பிரதிகள் மாத்திரம் இப்போது அச்சிடப்பட்டிருக்கிறபடியாலும், அவை வெகுவிரைவாய் விற்பனையாகிறபடியாலும் வேண்டியவர்கள் முந்திக்கொள்ளவும்.

---

# MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

---

**பம்பாய் யுத்தநிதி.**—தற்போது பம்பாய் யுத்தநிதியில் ரூ 28, 15,000 சேர்ந்திருக்கின்றது. அதுபோல் நமது சென்னை யுத்தநிதியில் ரூ. 19,20,000 வசூலாயிருக்கின்றது.

**கள் வரும்படி.**—நமது நாட்டில் ஒவ்வொரு வருஷமும் தென்னங் கள்ளினின்றும் பனங் கள்ளினின்றும் ஒரு கோடி ரூபாய்க்குமேல் வரும்படி கிடைக்கின்றது. ஆனபடியால் நம் நாட்டில் குடிக்கிறவர்களுக்குக் குறைவில்லை போலும்.

**ருஷிய ராஜகுடும்பம்.**-ஷை ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஷை சக்கரவர்த்திக்கு மிக நெருங்கிய பந்துக்களுமான பதினொருபேர் சக்ரவர்த்தியோடு சேர்ந்து நிகழும் யுத்தத்தில் போர்புரிந்து வருகிறார்களாம்.

**ஜேர்மன் கைதிகள்.**—போரில் கைதிகளாக்கப்பட்ட ஜெர்மனியர் தங்களுக்குக் கொடுக்கும் உணவை அதனைத் தருபவர் சாப்பிட்டுக் காட்டிய பிறகே சாப்பிடுகின்றனராம். இதற்குக் காரணம் அவ்வுணவில் ஒருவேளை விஷங் கலந்திருப்பார்கள் என்னும் பயம் போலும்.

**நாய்ப்படையின் உபயோகம்.**-நாய்கள் கூடிய ஒரு சிறுபடை யுத்தத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதற்குத் தலைவராக இருக்கின்றவர் மேஜர் ரிச்சர்ட்ஸ் என்பவர். அந்த நாய்கள் தங்களுடைய போர்வீரர்கள் சண்டையில் இளைத்துக்களைத்து ஜாக்கிரதைக் குறைவாக இருக்கும்போது, எதிரிகளின் வரவை மோப்பத்தாலறிந்து தங்களது படைவீரர்க்குக் குறிப்பால் தெரிவித்து வருகின்றனவாம்.

**அர்ச். பாப்பானவரும் யுத்தமும்.**—யுத்தத்துக்கென்றே தமது ஜீவனைப் பலியிட்ட பத்தாம் பத்திநாதரின் ஸ்தானத்தில் இப்போது திருச்சபையை யாண்டு பரிபாலித்துவரும் நமது அன்புநிறைந்த தந்தையாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் தற்போதிய யுத்தத்திற் சம்பந்தப்பட்டிருக்கும் இராசாக்களுக்கும் பிரஜைகளுக்கும் நிகழும் கொடிய யுத்தத்தை அடியோடே விட்டு ஒழித்துச் சமாதானத்தை நாடும்படி ஒருபொது நிருபம் எழுதி அனுப்பியிருக்கிறார்.

**ஐரோப்பாவிலுள்ள அரசர்களின் வ்ரும்படி**

| | ரூ. | அ. |
|---|---|---|
| நிமிஷம் ஒன்றுக்கு ருஷிய சக்கரவர்த்திக்கு | 243 | 0 |
| ஆஸ்ட்ரியா சக்ரவர்த்திக்கு | 105 | 12 |
| இத்தாலியா அரசருக்கு | 65 | 4 |
| ஜெர்மனி சக்ரவர்த்திக்கு | 52 | 8 |
| இங்கிலாண்டு அரசருக்கு | 45 | 12 |
| ஸ்பெயின் அரசருக்கு | 42 | 12 |
| ஸ்வீடன் அரசருகு | 28 | 8 |
| பவேரியா அரசருக்கு | 26 | 4 |
| ரோமோனியா அரசருக்கு | 4 | 8 |

இவ்வளவு வரும்படி வருகிறதாக பிராஞ்சு கணிதசாஸ்திரி யொருவர் கணித்திருக்கிறார். இந்த இவர்களுடைய நிமிஷ வரும்படியைக்கொண்டு ஒருநாளைக்கு எம்மாத்திரமென்றும், மாதத்துக்கு எவ்வளவென்றும் வருடத்துக் கெவ்வளவென்றும் இலேசாய்க் கணித்துக்கொள்ளலாம்.



**உலகத்தில் உள்ள மகா பெரிய இருப்புப்பெட்டி.**—இப்பெட்டி அமேரிக்காவைச் சேர்ந்த நியுயார்க் பட்டணத்திலுள்ள ஒரு கம்பெனிக்காகச் செய்யப்பட்டுள்ளது. இப் பெட்டியின் கதவுகள் ஒவ்வொன்றும் 40-டன் நிறையுள்ளதும் காலடி கனமுள்ள இரும்புத் தகட்டால் செய்யப்பட்டதுமாம். இந்தப் பெட்டியில் 900 கோடி ரூபாய் வரையிலும் வைத்துப் பூட்டுகிறார்கள். இப் பெட்டியைத் திறப்பது திருடர்களுக்கு அசாத்தியம். ஏனெனில் இதன் பூட்டுகள் வெகு சிக்கலான வேலைப்பாடுள்ளவை. இப் பூட்டுகளைத் திறக்க இரண்டு பேர் வேண்டுமாம்.

**உணவுப் பொருட்கள்.**—வெள்ளைச் சர்க்கரை, கோப்பை, கண்ணாடி முதலிய அன்னிய நாட்டுப் பொருள்களுக்கு தற்போது விலை ஏறக் காரணமுண்டு. ஆனால் புளி, மிளகாய், கொத்துமல்லி, பூண்டு முதலிய நம்நாட்டு விளைப்பொருள்களுக்கு விலையேறக் காரணமென்ன? “காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” என்ற பழமொழிப்படி இந்நாட்டு வியாபாரிகள் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தைச் சாக்கிட்டு இவைகளின் அகவிலையையும் விண்ணுக்கு ஏற்றிவிட்டார்கள் போலும். சில தினங்களுக்கு முன்னர் நமது காருண்ய சென்னை கவர்னர், அவர்களுடைய கடைகளையெல்லாம் சுற்றிப்பார்த்து விலைவாசிகளைப்பற்றி எச்சரித்தாரென்றாலும் அதனால் உண்டான பிரயோசனமென்ன?

**எமன்போன்ற எம்டெனின் நாசம்.**—ஐரோப்பாவில யுத்தந் தொடங்கின நாளாய் இந்தியாவில் எம்டன் என்னும் ஜெர்மன் கப்பலால் வர்த்தகத்துக்குண்டான நஷ்டமும் குடிகளுக்குநேர்ந்த பயமும் கொஞ்சநஞ்சமல்ல. “துள்ளினமாடு பொதி சுமக்கும்” என்றபடி எவ்வளவு துள்ளிக் குதித்துத் தின்மைக்கு எம்டன் முன் வந்ததோ அவ்வளவுக்கும் அதின் நாசகாலம் நெருங்கிவந்து அதை அதோகெதியாக்கிவிட்டது. அதெப்படியெனில், கோக்கோஸ் தீவுக்கு அருகில் கீலிங் என்ற இடத்தில் எம்டன் கப்பல் தங்கியிருந்ததை ஆஸ்டிரேலியாவின் சண்டைக்கப்பல் “சிட்னி” அறிந்துகொண்டு, அவ்விடஞ்சென்று அதனோடு சண்டைசெய்து அதிலிருந்தவர்களில் 200 பேரைக்கொன்று 30-பேரைக் காயப்படுத்தி அதையும் தீபிடித்து எரியச்செய்து மணலில் சிக்கிக்கொள்ளவுஞ்செய்துவிட்டது. அதிலிருந்த காப்டனும், பிரான்சீஸ் ஜோசப் என்ற ஜர்மன் இளவசரசரும் சிறையெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**புதுவை குருமடம்.**--இம்மாதம் 19-ம் திகதி சனிவாரம் ஷை மடத்தின் வித்தியார்த்திகளுக்குள்ளே 3-பேருக்குக் குருப்பட்டமும் 2-பேருக்கு (Diaconate.) 6-ம் பட்டமும், ஒருவருக்கு (Subdiaconate.) 5-ம் பட்டமும், 5-பேருக்கு (Minor Orders.) சில்லறைப் பட்டங்களும், நால்வருக்கு (Tonsure.) ஆயத்தப் பட்டமும் புதுவை அதிமேற்றிராணியார் அவர்களால் கொடுக்கப்படுமெனவறிந்து சந்தோஷிக்கிறோம். குருப்பட்டம் பெற விருப்பவர்கள் தச்சூரைச் சேர்ந்த சங். மரிய சவேரிநாதரும், கோலானூரைச் சேர்ந்த சங். பால் ஆரோக்கியநாதரும், கூடலூர் சங். லூர்துமரியே அருள் நாதரும் ஆவர். இம்மூவருக்கும், மற்றும் பட்டங்களைப் பெறப் போகிறவர்களுக்கும் நாம் சுப சோபனங்கூறுவதுடன் இவர்கள் தங்களுடைய பரிசுத்த அந்தஸ்தின் கடைமைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றவும், பல்லாண்டு நம்மாண்டவருடைய திராட்சத் தோட்டத்தில் திடக்காத்திராய் பாடுபட்டு வரவும் தேவ ஆசீர் உண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

**ஒரு தேவத்துரோகக் களவு.**--சென்ற நவம்பர்மீ 22௳ ஞாயிற்றுக்கிழமை இரவு சிலதுஷ்டர் சென்னை, புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார்கோவிலின் வடவண்டை ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்து, உண்டிப் பெட்டி, பீரோ முதலியவைகளை யெல்லாம் உடைத்துத் தேடி, அவைகளில் அகப்பட்ட பணத்தையும், சுரூபங்களுக்குப் போட்டிருந்த முடிக்களையும், திவ்யநற்கருணைப் பெட்டியையும் உடைத்து, அதிலிருந்த திவ்ய நற்கருணைப் பாத்திரங்கள் இரண்டையும் (திவ்ய நற்கருணையை யெல்லாம் பீடத்தின்மேல் கொட்டிப்போட்டு) கதிர் பாத்திரத்தில் வைக்கும் நற்கருணை விமானத்தை நற்கருணையோடும் கொள்ளையாடிக்கொண்டு ஓடிப்போய் விட்டார்கள். இப்படுபாவிகள்

இன்னும் அகப்பட்ட பாடில்லை. இவர்க
ளால் நம்முடைய அன்புக்குரிய இரட்ச
கருக்கு உண்டான நிந்தை அவமானங்க
ளுக்குப் பரிகாரமாக யாதொரு புண்ய
முயற்சியைச் செய்ய "நல்லாயன்" சந்தா
தாரர்கள் அனைவரையுங் கேட்டுக்கொள்
ளுகிறோம்.

இதோர் புதுமையேயன்றி வேறேன்
ன?—சமீபத்தில் சென்னையில் பெய்த கன
மான மழைக்கு சில தினங்களுக்குப்பிறகு
வேப்பேரி, அர்ச். பிலவேந்திரர் ஆலயத்
தைச்சேர்ந்த சுதேச கன்னியாஸ்திரி மட
த்தின் வெளிக்கதவை ஓரிரவில் நடுச்சா
மத்துக்குப்பிறகு சுமார் 2மணி வேளையில்
யாரோ கல்லால் பலமாய் அடிக்கிற சத்
தங் கேட்கப்படவே, ஷை மடத்திலுள்ள
ஏழைப்பிள்ளைகளை விசாரிக்கும் ஒரு பெ
ரிய மனுஷி உடனே, தன் படுக்கையை
விட்டு எழுந்திருந்து கல்லாலடிக்கிறது
யாரென்று அதட்டி கூச்சல்போட்டுவிட்டு
படுத்துக்கொள்ளவே, மறுபடியும் ஷை
சத்தத்தைக் கேட்டு பிள்ளைகளையும் மற்ற
வர்களையும் எழுப்பிவிட்டு இதுயாரென்று
அறியும்பொருட்டுக் கதவைத்திறந்து பார்
பதற்குள்ளாக, பிள்ளைகள் படுத்திருந்த
அறையின் உத்தரங் திடீரென்று முறிந்து
கூரையும் பாதிக்குமேல் விழுந்துவிட்டது!
ஒருவருக்கும் உயிர்ச்சேதமில்லை. ஆ!என்ன
ஆச்சரியம்! தம்முடைய பாதுகாவலி
லிருக்கும் இம்மடத்தாருக்கு அர்ச். சூ
சையப்பர் செய்த பேருபகாரமே இது.
அவருக்கு என்றுந் துதியும் தோத்திரமு
முண்டாகக்கடவது.

காக்காய் வலிப்பு.—இது திடீரென்று
வருவதுண்டு. சாதாரணமாய் இந்த வலி
வருகிறவன் ஒரு சத்தம் போட்டு, கோண
கைகால்களை இழுத்து, வாயில் நுரை
தள்ளிக்கொண்டு கீழே விழுவான். வலி
வந்திருக்கிறவன் தன் நாக்கைக் கடித்துக்
கொள்வதினால் வரும் ரத்தம் அந்த நுரை
யுடன் கலந்திருப்பதுண்டு. வலி வந்திருப்
பவனை மல்லாக்காய்ப் படுக்கவைத்து, தலை
யைக் கொஞ்சம் தூக்கி வைக்கவேண்டும்.
பற்கள் ரொம்பவும் கிட்டிப் போகாம
லிருக்கும் பட்சத்தில் அவன் நாக்கை
மறுபடியும் கடித்துக்கொள்ளாம லிருக்
கும்படி பற்களுக்கு மத்தியில் துணி அல்
லது வேறு ஏதாவதுகொடுக்கலாம். கழுத்
தில் ஏதாவது கட்டியிருந்தால் அதைத்
தளர்த்தி விடவேண்டும். கைகால்கள்
இழுத்துக்கொள்வதைப் பிடித்துநிறுத்தா
மல் காயப்படாமல் மாத்திரம் பார்த்து வர
வேண்டும். வலி நின்றவுடன், அவனுக்குத்
தூக்கக் கலக்கம்போலிருக்கும். அப்படி
யிருக்கும்பட்சத்தில், அவனைக் கீழேபடுத்
துத் தூங்கும்படி செய்யவேண்டும். சிறு
சுறுப்பு உண்டாக்கக்கூடிய காபி, டீ முத
லியவைகளையாவது, வேறு எந்தப் பான
மாவது குடிக்கக் கொடுக்கக்கூடாது.

என்னே ஜெர்மனியருடைய பித்த
லாட்டம்!—ஜெர்மன் இளவரசர் ஒருவர்
"எபர்னி" யென்ற ஊரில் சமீபத்தில் நட
ந்த சண்டையின்போது படுகாயப்படவே,
அவருக்குச் சிகிச்சைசெய்ய ஜெர்மன் டா
க்டர் ஒருவரும் அவ்விடத்தில் இல்லாமை
யால் ஷை இளவரசரின் சாமாசிமார்களில்
ஒருவர் பேர்போன பிராஞ்சு டாக்டரான
"வெர்னன்" என்பவரிடஞ் சென்று, இள
வரசருக்குச் சிகிச்சை செய்யக் கேட்டு
கொண்டதுந்தவிர, அதற்காக அவர் கேட்
குந் தொகையும் யாதோர் ஆக்ஷேபனையு
மின்றிக் கொடுக்கப்படுமென்றுஞ் சொன்
னார். டாக்டரும் அதற்குச் சம்மதித்துச்
சிகிச்சைசெய்து காயத்தைக் குணப்படுத்
தினார். பிறகு என்னதொகையைப் பெற்று
க்கொள்ள ஆசிக்கிறீரென்று டாக்டரைக்
கேட்டதற்கு, அவர் 1,75,000 பிராங்கு
என்றார். இப்பெருந்தொகையையே ஜெர்
மனியர் ஷை ஊரைப் பிடித்தபோது பிரா
ஞ்சியரிடமிருந்து யுத்தஅபராதமாக வசூ
ல் செய்திருந்தார்களாதலால், டாக்டரும்
அதே தொகையைக் கேட்டார். கேட்ட
படியே அத்தொகையுங் கொடுக்கப்பட்ட
தென்றாலும் ஜெர்மனியர் அவ்வூரிலிருந்து
ஏற்கெனவே 50,000 புட்டி "சாம்பேய்ன்"
என்னும் விலை உயர்ந்த உவைன் சாராயத்
தை அபகரித்துக்கொண்டிருந்தார்களாம்.

மைசூர் இந்தியன் கத்தோலிக்குக் கூடும்
பசம்ரக்ஷணை நிதி.—இந்நிதியின் 13-வது
வருஷத்திய விருத்தாந்த விளம்பரப் புத்த
கத்தின் பிரதி ஒன்று ஷை சங்கத்தின்
காரியதரிசியவர்களால் நமது பார்வைக்கு
அனுப்பப்பட்டது. இந்த பரோபகார நிதி
யானது வருஷத்துக்கு வருஷம் விருத்தி
யாகிக்கொண்டு வருவதைப் பார்க்கச் சந்
தோஷமடைகிறோம். இதில் தற்காலம்



சந்தாதாரர்கள் 618 பேர் இருக்கிறார்கள்.
இந்நிதி யாரம்பமானது முதல், நாளது
வரையில் அதாவது சென்ற 13 வரு
ஷங்களில் மரித்த சந்தாதாரர்களின் வா
ரிஸ்தாரர்களுக்கு ரூ—14,179 போஷணைத்
தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
இந்நிதி விசேஷமாய் நாதனற்ற ஏழைக்
குடும்பங்களுக்கு மெத்த அவசியமும் பிர
யோசனமுமானது. சென்ற வருஷத்தில்
மரணமடைந்த மெம்பர்களின் வாரிஸ்தா
ரர்களுக்கு ஒழுங்குபடி கொடுக்கப்பட்ட
போஷணைத் தொகைகளில் மிகவும் பாரிய
தொகை ரூ 173-8-8. இன்னும் அதிக
மெம்பர்கள் சேர்வார்களானால் இந்த
போஷணைத்தொகை இரட்டிப்பாகுமென்
பதற்கோர் ஆட்சேபனையில்லை. ஆகவே,
அதிக மெம்பர்களைச் சேர்ப்பதற்கு இதில்
சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களும்,
ஏற்கெனவே மெம்பர்களாயிருப்பவர்களு
ம், பங்குவிசாரணைச் சுவாமிமார்களும்
அதிக முயற்சி யெடுத்துக்கொள்வது உசி
தமாகும்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர்
சங்கம்.—(ஓர் நிருப நேயர் எழுதுகிறார்.)
தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர்
சங்கத்தின் சென்னை நகர்க்கிளைச் சங்கத்
தார் சென்ற அக்டோபர் மீ 25-ம் தேதி
சென்னை ஐகோர்ட்டு அசிஸ்டண்ட்ரெஜிஸ்
ட்ரார், ஜி. எஸ். ஒயிட்துரையவர்களின்
அக்கிராசனத்தின் கீழ் கூடிய பொதுக்
கூட்டத்தில், "ஐரோப்பிய யுத்தமும்,
கத்தோலிக்கு இந்தியரும்" என்ற விஷ
யத்தின் பேரில் இங்கிலீஷிலும், தமிழிலும்
முறையே மகா-ள-ள-ஸ்ரீ வி. மகாதேவ ஐயர்
பி. ஏ. அவர்களாலும், எஸ். செல்வராஜ்
ரெட்டியார் பி. ஏ. அவர்களாலும் உபந்
நியாசங்கள் செய்யப்பட்டன. (தமிழ் உபந்
நியாசத்தைப்பற்றி 268ம் பக்கம் பார்க்க)
இச்சங்கத்து மெம்பர்களுக்கு பிரிட்டிஷ்
அரசாட்சியின் மட்டிலுள்ள இராஜவிசு
வாசத்தைக் காட்டி பிரிட்டிஷ் இராஜாங்
கத்தார் தற்போது சிக்கிக்கொண்டிருக்
கும் ஐரோப்பிய யுத்தத்தில், இவர்களைச்
சேர்ந்திருக்கும் ஐக்கிய கட்சியாருக்கு
ஜெயம் வருமாறு தாங்கள் கடவுளை
இடைவிடாது வேண்டிக் கொள்வதைப்
பற்றி உறுதிமொழி கூறும் ஓர் பிரேரேப
னையும் கத்தோலிக்கு ஐரோப்பிய சீமா
னாகிய, கனந் தங்கிய சர். வாலிஸ் துரை
யவர்கள் மகா மேன்மைதங்கிய ஜியார்ஜ்
சக்கரவர்த்தியவர்களால் சென்னை ஐகோ
ர்ட்டு என்னும் முக்கிய நியாயஸ்தலத்துப்
பிரதான நீதியதிபராய் நியமனம் பெற்ற
சுப விசேஷத்தைப் பற்றி அவர்களுக்குச்
சுப சோபன வாழ்த்துக் கூறும் ஓர் பிரே
ரேபனையும் கூட்டத்தாரால் ஆமோதிக்கப்
பட்டு, குதூகலத்துடன் அங்கீகரிக்கப்பட்
டன. இராஜ விசுவாச பிரேரேபனையைப்
பற்றி சென்னை கவர்னர் அவர்களின் அந்
தரங்கக் காரியதரிசி யிடமிருந்து வந்த
னங்கூறிய கடிதம் ஷை சங்கக் காரியதரிசி
வரப்பெற்றார்.

ஒரு கெட்ட வழக்கம்.—அநேகர்
ஸ்டாம்புகளைக் கடிதங்களில் ஒட்டும்போ
தும், கவர்களின் (என்வலப்புகளின்) மடிப்
புகளை யொட்டும்போதும் அவஸரத்தில்
ஸ்டாம்புகளையும், கவர்களையும் நாக்கால்
நக்கி நனைத்து ஒட்டிவிடுகிறார்கள். ஸ்டாம்
புகளிலும், கவர்களிலும் பூசியுள்ள பசை
கண்ட கண்ட சாமான்களைப் போட்டுத்
தயார் செய்திருப்பதாகையால் அப்படிச்
செய்வது தேக ஸௌகத்துக்கு நல்லதல்ல
வென்றுசொல்லப்படுகிறது. மேலும் அது
சுசிகரமுமல்ல.

தேனீக்கள், குளவிகள் கொட்டுதலுக்கு.
—தேனீக்கள் குளவிகள் ஆகிய இவைகள்
கொட்டினால், கொட்டினவர்கள் சில சம
யம் மூர்ச்சை போட்டுப் போவதுண்டு.
இருதயம் வேகமாய் அடித்துக் கொள்
ளும். கொட்டின விடத்தைப் பிடித்துக்
கெட்டியாய்ப் பிதுக்கிக் கொட்டுவாயிலி
ருந்து விஷத்தைத் வெளிப்படுத்த வேண்
டும். ஸ்பிரிட்ஸ் ஆவ் வைன் சாராயத்தில்
கொஞ்சம் எடுத்துக் கொட்டின இடத்
தில் தடவி நன்றாய்த் தேய்க்கும்போது
கொட்டுவாயை மறுபடியும் பிதுக்கி உள்
ளிருக்கக்கூடிய விஷத்தை வெளிப்படுத்த
முயலவேண்டும்.

வெற்றி பெறுவது நிச்சயம்.—பிரான்
ஸின் கவர்ன்மெண்ட் முன்பு பாரிஸ் நக
ரில் இருந்து, சில வாரங்களுக்கு முன்
போர்டோ நகருக்கு மாற்றப்பட்ட தென்
பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம்.
அந்நகரிலிருக்கும் பிரிட்டிஷ் தூதரை
ஒருபத்திரிகைப் பிரதிநிதி கண்டு பேசிய
தில், அத்தூதர் அறிவித்த தென்னவெ

னில்:—"முடிவில் பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் வெற்றி பெறுவார்களென்று நான் நிச்சயமாய் நம்பியிருக்கிறேன். புதிது புதிதாகப் பிரிட்டிஷாருக்குச்சேனைகள் வந்து குவிந்துகொண்டே யிருக்கின்றன. லார்டு கிச்சனர் சேர்த்துவரும் சேனை கூடிய சீக்கிரத்தில் 20 லட்சமாகிவிடும். அதைத் தவிர இன்னமும் வேண்டுமானால் உலகம் முழுவதும் பரவியிருக்கும் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் வேண்டிய உதவி கிடைக்கும். ஆகவே, எல்லா விஷயங்களையும் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், எவ்வளவுக் கெவ்வளவு சண்டை நீடித்திருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நாம்வெற்றி பெற்று விடுவோமென்பது ஸர்வ நிச்சயம்.

161414

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்:

## DOMESTIC OCCURRENCES.

### நன்மரண அறிக்கைகள்.

161414

எனதன்புள்ள பந்துமித்திரர்கட்கு பக்ஷமாக தெரிவிப்பதென்னவெனில் 5 புத்திரர் 2 புத்திரிகளைப்பயின்றுமன்றேந்த 36-வது வயதாகிய நிகழும் 1914-ம் வருடம் அக்டோபர்மீ 10-ந்தேதி சனிவாரம் மரணமடைந்தவளும் சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை அர்ச். மதுரநாயகி மாதா கோவில் உபதேசியாராக விருந்த மாஜி ஞானமலையப்பபிள்ளை யவர்கள் குமாரத்தியும் மட்ரூஸ் ரயில்வே சென்ட்ரல் ஸ்டேசன் ரிப்பர்ஸ்மென்ட்ரூம் மானேஜர் ஞானதிக்கம் டேவிட் பிள்ளையவர்கள் சகோதரர் தர்மீகர் நாகை அ. பி. சீமோன் புலவரவர்களின் மனைவியுமாகிய திருக்குடும்பத்தடிமை சேசுரத்தினம்மாளுக்கு நிகழ் வருடம் அக்டோபர்மீ 22-ந் தேதியன்று நடந்தேறிய ஆத்தும வீடேற்ற ஒப்பிஸ் பூசையன்று இரவில் விதேகமஞ்சரி யெனுஞ் செய்யுளின்மீது சென்னை பூலோக வியாசன் பத்திராதிபர் சதாவதானம் பூஞ்சோலை முத்துவீர நாவலர் சென்னை T. I. சாமிக்கண்ணுப்புலவர் சென்னை பெ. மதுரவாசகப்புலவர் சென்னை M. A. ஆரோக்கியசாமிப்புலவர் நாகை அ. சவேரியப்பப் புலவர் சென்னை J. M. மரியதாசப் புலவர் சென்னை கத்திமாநகர் க. ந. செ. எல்லப்பதாஸப் புலவர் முதலிய வித்துவசிரோன்மணிகளால் மன உருக்கமாக உபநியாசஞ் செய்யப்பட்டது. ஆகவே மேற்படி ஆத்தும இளைப்பாறுதலுக்காக ஒரு பர. ஒரு பிரி. ஒரு திரி. வேண்டிக்கொள்ளும்படி தாழ்மையாகப் பிரார்த்திக்கின்ற மரித்த சேசுரத்தினம்மாளின் சோதரன்.

P. T. J. வேளாங்கண்ணிப்பிள்ளை,

தோத்திரம்

கலிங்காபஜார், கல்கத்தா.

### ☞ சுபாசுப விளம்பரங்கள்

அரைக்கலத்துக்குமேற்படாதற்க்கு ரூபாய் 1—0—0-ம், முக்காற் கலத்துக்கு ரூபாய் 1—8—0-ம, முழுக்கலத்துக்கு ரூபாய் 2—0—0-மாகக் கட்டணம் முன்னதாகக் கொடுக்கப் பட்டாலன்றி அவைகள் பிரசுரிக்கப் படமாட்டா வென்பதை நண்பர்கள் அறியக்கோருகிறோம், ப.—ர்,

A. M. D. G.

## விளம்பரம்.

புராந்திம-பச்சிம காண்டம்

இரண்டாம் பதிப்பு.

---

சங். இராஜருஷி சாங்கோபாங்கநாதசுவாமிகள் அருளிச்செய்த, புராந்திம-பச்சிமகாண்டங்கள் அல்லது பழய—புதிய ஏற்பாட்டுச் சரித்திரங்களை இரண்டாம் பதிப்பாக உயர்ந்த கிரவுன் சைஸ் 36-பவுன் காகிதத்தில் 620-பக்கங்களில், சிலபடங்களுடன் அச்சிட்டு முடிந்து இருக்கிறது. இவ்வரியவேதநூலை, வாசிப்பவர்கள் எல்லாரும் நமது வேத உண்மையை அறிந்து சத்திய நெறியில் தேறி ஞான மகிழ்ச்சியை அடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இப்புத்தகம் யாவருக்கும் பயன் படவேண்டி விலை வெகு சரசமாக விதித்திருக்கின்றேன்.

இரு காண்டங்களும் ஒரே புத்தகமாக கட்டப்பட்டு இருக்கிறது. விலை 1—8—0

உள் நாடுகளுக்குத் தபாற்செலவு 0—4—0

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1. "நல்ல ஆயன்" மானேஜர்,
அர்ச். சவேரியார் கோவில்,
ஜார்ஜ்டவுன்-மதிராஸ்.

2 ஆ. ரூசை, அண்ணுதுரை Publisher.
6-வது. அப்பாவுபிள்ளை சந்து,
இராயபுரம்-மதிராஸ்.